
காதல் பிரம்மா
இன்பா அலோசியஸ்


காதல் பிரம்மா
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# காதல் பிரம்மா...

# Kaadhal Brahma...

Author:

## இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்


பகுதி – 1.

பகுதி – 2.

பகுதி – 3.

பகுதி – 4.

பகுதி – 5.

பகுதி – 6.

பகுதி – 7.

பகுதி – 8.

பகுதி – 9.

பகுதி – 10.

பகுதி – 11.

பகுதி – 12.

பகுதி – 13.

பகுதி – 14.

பகுதி – 15.

பகுதி – 16.

பகுதி – 17.

பகுதி – 18.

பகுதி – 19.

பகுதி – 20.

பகுதி – 21.

பகுதி – 22.

பகுதி – 23.
பகுதி – 24.
பகுதி – 25.
பகுதி – 26.
பகுதி – 27.
பகுதி – 28.
பகுதி – 29.
பகுதி – 30.
பகுதி – 31.
பகுதி – 32.
பகுதி – 33.
பகுதி – 34.
பகுதி – 35.
பகுதி – 36.
பகுதி – 37.
பகுதி – 38.
பகுதி – 39.
பகுதி – 40.
பகுதி – 41.
பகுதி – 42.
பகுதி – 43.
பகுதி – 44.
பகுதி – 45.

பகுதி – 46.
பகுதி – 47.
பகுதி – 48.
பகுதி – 49.
பகுதி – 50.

# பகுதி – 1.

“பாவை இஞ்சினியரிங் காலேஜ்” ஹாஸ்டல் அறைகள் அனைத்தும் கிட்டத்தட்ட காலியாக இருக்க, அங்கே இருந்த முப்பத்து ஒன்றாம் அறையில் இருந்த இருவரும் ஒருவருக்கு ஒருவர் முறைத்தவாறு நின்றிருந்தார்கள்.

அதிலும் இந்திரா உச்ச கோபத்தில் இருக்க, ஆத்திரம் குறையாமல் தன் முன்னால் இருந்தவளை முறைத்தாள். அவள் முறைப்பதை கொஞ்சம் கூட கண்டுகொள்ளாமல், பதிலுக்கு தானும் முறைத்தவாறு நின்றிருந்தாள் நம் கதையின் நாயகி, காயத்ரி.

காயத்ரி..., பாவை இஞ்சினியரிங் கல்லூரியில் கம்பியூட்டர் இஞ்சினியரிங் மூன்றாம் ஆண்டு படிப்பவள். ஐந்தேகால் அடி உயரம். பார்ப்பவர் யாரின் மனதிலும் பச்சக்கென ஒட்டிக்கொள்ளும் அழகுக்கு சொந்தக்காரி.

இடையைத் தொடும் கரும் கூந்தல்..., பாலில் கடைந்தெடுத்த வெண்ணை தேகம்..., நடிகை பிந்து மாதவியின் குண்டு கண்கள்..., அதற்கு அழகு சேர்க்கும் வில்லாய் வளைந்த புருவங்கள். கூர்மையான நாசி. இந்த காலத்தில் கூட, வலது மூக்கில் சிவப்புக்கல் மூக்குத்தி பளிச்சிட்டது.

அதுவும் அவளது அழகுக்கு மெருகு சேர்த்தது. அந்த குண்டு கண்கள் எப்பொழுதும் துறுதுறுப்பாய் அலை பாயும்..., சிவந்த அதரங்கள்..., என்னைக் கொஞ்சம் தீண்டேன் என ஆடவருக்கு அழைப்பு விடுக்கும்.

இப்பொழுது அவளது குண்டு கண்களில் கோபம் மட்டுமே கொப்பளித்தது.

“காயத்ரி, உனக்கு மறை கிறை கழண்டுடுச்சா? வேண்டாம்..., நான் சொல்வதைக் கேள்..., நீ செய்யப்போவதில் எனக்கு கொஞ்சம் கூட சம்மதமே இல்லை...” அவள் கோபமாக உரைக்க அதை கண்டுகொள்ளும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

“இப்போ உன் சம்மதத்தை யார் கேட்டா? நான் செய்யத்தான் போறேன்…” வெடுக்கென உரைக்க, அவளை என்ன செய்வது எனத் தெரியாமல் திணறினாள் இந்திரா.

“என்னவோ பிரியாணி செய்யப் போறேன்னு சொல்ற மாதிரி சொல்ற? காயத்ரி, என் சம்மதம் வேண்டாம் சரி…, ஆனா…, நீ சுய உணர்வோடதான் இருக்கியா இல்லையான்னே எனக்கு சந்தேகமா இருக்கு” தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“அதில் உனக்கு என்னடி அப்படி சந்தேகம்” கண்களை உருட்டினாள் காயத்ரி.

“சுய புத்தியில் இருக்கும் யாரும் இதைச் செய்ய மாட்டாங்க, அதான் கேட்டேன்” ஆத்திரமாக உரைக்க, தோழியை முறைத்தாள்.

“நீ என்னதான் முறைத்தாலும் என் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை” அவள் பிடியில் இருந்து இறங்காமல் இருக்க, இந்திராக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

“காயத்ரி, நீ யோசிச்சுதான் பேசறியா? நீ செய்ய நினைக்கிறது சின்னப்பிள்ளை விளையாட்டு கிடையாது…” அவள் புரிந்துகொள்ள மாட்டாளா என்ற எதிர்பார்ப்பு அவளிடம் மின்னியது.

“அது எனக்கும் நல்லா தெரியும் இந்திரா. ஆனா எனக்கு வேற வழியே இல்லை. இதை நான் செய்யலன்னா…, என் அண்ணாவோட ஆத்மா சாந்தி அடையாது…” அவள் கண்ணீர் குரலில் உரைக்க, உள்ளுக்குள் உருகினாலும் அதை வெளியே காட்டாமல் மறைத்தாள்.

“நீ செய்யப்போற இந்த கொலையால் மட்டும் உங்க அண்ணாவோட ஆத்மா அப்படியே குளிர்ந்து போய்டுமா? உங்க அண்ணாவே இப்போ இருந்திருந்தால் இதற்கு சம்மதித்திருக்க மாட்டார்…” அவள் சொல்ல, கண்களில் நீரோடு அவளை ஏறிட்டாள்.

“அதான் நீயே சொல்லிட்டியே..., இருந்திருந்தால்ன்னு..., அவர் இல்லாமல் போனது தானே இங்கே பிரச்சனையே...” காயத்ரியின் குரல் கலங்கியது. ‘ஹையோ ஆண்டவா..., நான் ஒண்ணை சொல்ல வந்தால் அது ரிவர்சில் வேலை செய்யுதே...’ நொந்து போனாள் இந்திரா.

“காயத்ரி..., கொலை செய்யிறதே எவ்வளவு பெரிய ரிஸ்க் அதிலும், நீ கொலை செய்ய நினைப்பது யாரோ ஒரு ஆளை இல்லை..., எஸ்பி பிரம்மா..., பிரம்மா ஐபிஎஸ்..., ஒரு சாதாரண மனுஷனை கொலை செய்தாலே போலீஸ் அடுத்த நாளே அவங்களை மோப்பம் பிடிச்சுடுது, இதில்..., ஒரு எஸ்பியை...” அவளிடம் ஒரு பெரும் உதறலே உதயமானது.

“பிரம்மம்ம்ம்மா..., பேரைப்பார்..., விளக்கமாத்துக்கு பட்டுக் குஞ்சம் மாதிரி, பிரம்மாவாம்...” ஆத்திரத்தில் பல்லைக் கடித்தாள்.

“என்னடி சொன்ன..., விளக்கமாத்துக்கு பட்டு குஞ்சமா..., டிப்பார்ட்மெண்டில் அவரோட பேர் என்னன்னு தெரியும் தானே..., டைகர்..., சவுத் சென்னையே அவரைப் பார்த்து அலறும்..., ரவுடி முதல், அரசியல்வாதி வரைக்கும் ஒருத்தன் அவர் முன்னால் நிக்க முடியுமா?

இது எல்லாம் விட, டிஐஜி, ஐஜியே கூட அவரோட அப்ரோச் பாத்து மிரண்டுதான் போயிருக்காங்க. யாராலும் அவரை கட்டுப்படுத்தவே முடியலை.

“அவர் வந்த இந்த ஐந்து வருஷத்தில் கிரைம் ரேட் எவ்வளவு கம்மியாகி இருக்குன்னு உனக்குத் தெரியுமா தெரியாதா?” அவள் கேட்க, ஒரு நொடி அமைதியாக இருந்தவள், அடுத்த நொடி, கோபமாக அவளை நோக்கினாள்.

“நீ என்னதான் முறைத்தாலும் அதுதான் உண்மை...” இந்திரா அழுத்திச் சொல்ல, அவளது ஆத்திரம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

காட்டுக்குள் டைகர் எப்படி தன் எல்லையை வரையறுத்து, தன் ஆளுகைக்குள் வைத்திருக்குமோ..., அப்படி சவுத்

சென்னையை தன் ஆளுகைக்கு கீழே வைத்திருந்தான். அவனுக்குத் தெரியாமல் சிறு துரும்பு கூட அசைய முடியாது.

“பிரம்மா..., பேரைக் கேட்டாலே சும்மா அதிருதுல்ல...” இந்திரா சிலிர்த்துக் கொண்டு சிலாகிக்க, தன் கைப்பையால் அவளை மொத்தினாள்.

“என் முன்னாடியே அவனை இப்படி சொல்லாதடி...” கிறீச்சிட்டாள்.

பிரம்மா..., இருபத்தொன்பது வயது இளைஞன். ஆறு வருட ஐபிஎஸ் வாழ்க்கையில் இதுவரை ஒரு தோல்வியைக் கூட சந்தித்திராதவன். அவன் எடுத்த கேஸ் எதுவாக இருந்தாலும் அது வெற்றியில் மட்டுமே முடியும்.

‘பிரம்மா இந்த கேசை எடுத்திருக்காராம்..., அப்போ கண்டிப்பா குற்றவாளிகளை சீக்கிரம் பிடிச்சிடுவார்...’ பத்திரிகை அன்பர்கள் கூட அவனைப் புகழ்வார்கள். ‘சட்டம் தன் கடமையைச் செய்கிறதோ இல்லையோ..., இந்த பிரம்மா செய்வான்’ அவனது மீசையை முறுக்கி, அடிக்குரலில் அவன் கர்ஜிக்கையில் எதிரில் இருப்பவரின் மனதில் குளிர் பிறக்கும்.

அவனது கைக்கெட்டும் தூரத்தில் கூட எவனாலும் நெருங்க முடிந்தது இல்லை. எத்தனையோ மிரட்டல்கள், நேரடி தாக்குதல்கள் அனைத்தையும் தூசுபோல் சம்மாளித்து பீனிக்ஸ் பறவையாக, சிம்ம சொப்பனமாகத் திகழ்பவன், அவனைத்தான் கொலை செய்ய தவிக்கிறது இந்த பூஞ்சிட்டு.

அவன் எடுத்துக் கொண்ட கேசை சால்வ் செய்ய எந்த எல்லைக்கும் செல்வான். தப்பு செய்தவர், ஆணாய் இருந்தாலும், பெண்ணாய் இருந்தாலும் அவனது தீர்ப்பு ஒன்றுதான். அதைவிட, ஒரு குற்றவாளியை அவனது குற்றத்தை சம்மதிக்க வைக்க, அவர்கள் வீட்டு பெண்களையும் விட்டு வைக்க மாட்டான்.

பெண்கள் என்றாலே அவன் பார்வையில் மதிப்பு கொஞ்சம் குறைவுதான். அவன் செய்கைக்காக..., மாதர் சங்கங்கள், மனித உரிமை கமிஷன் என அவன்மேல் பாய்ந்தாலும் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாத அஞ்சா நெஞ்சன்.

அவனைப்போய்..., கொலை செய்கிறேன் என நிற்கிறாளே..., அவளை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்று கூட இந்திராக்குப் புரியவில்லை.

“உன்னால் முடியும்னு நீ நினைக்கறியா?” அவள் கேட்க,

“ஒரு பொண்ணு நினைத்தால் என்ன வேண்ணா சாதிக்க முடியும் இந்திரா” தீவிரமாக உரைக்க, தன் தலையிலேயே கை வைத்துக் கொண்டாள்.

“காயத்ரி..., போனவங்க போய்ட்டாங்க..., அதுக்காக உன் வாழ்க்கையை இப்படி சிக்கலில் மாட்ட வைக்கணுமா? உன் எதிர்காலம் என்னவாகும்? அதைப்பற்றி கொஞ்சமாவது யோசித்தாயா?” அப்படியாவது அவள் மசிய மாட்டாளா என கெஞ்சினாள்.

“போனவங்க போயிட்டாங்களா? செத்தது யாரோ இல்லை..., இந்த உலகத்தில் எனக்காக இருந்த ஒரே உறவு, சொந்தம். கடன் தொல்லையால் என் அப்பாவும் அம்மாவும் ஒண்ணா தற்கொலை செய்துகிட்டப்போ, என்னை விட்டு விலகிப் போகாமல், என்னோட பாரத்தை தன் தோளில் சுமந்தவர்.

“பதினைந்து வயது தங்கையின் பாரத்தை, ஏற்றுக் கொண்டவர், என்னை தங்கையா பார்க்காமல், மகளா தாங்கியவர். நான் சோர்ந்து போனபோது எனக்கு தைரியம் சொன்னவர். என் பசிக்கு சோறு போட்டு, என் படிப்புக்கு வேண்டிய அனைத்தையும் பார்த்து...,

“என் எதிர்காலத்துக்காக எல்லாம் பார்த்து, பார்த்து செய்த என் அண்ணாவை...” அவள் இப்பொழுது முகத்தை மூடிக்கொண்டு விம்ம, இவ்வளவு நேரமாக அவளை கடிந்து கொண்டிருந்தவள், வேகமாக தன் தோளில் சாய்த்துக் கொண்டாள் இந்திரா.

அவள் சொன்னது அனைத்தும் இந்திராவுக்கு புரிகிறதுதான். ஆனாலும், தோழியின் எதிர்காலம் என வருகையில் இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுக்க வைக்க அவள் தயாராக இல்லை. அவள் இழப்பு மிகப் பெரியதுதான், அதை மறுப்பதற்கும் இல்லை, அதற்காக, மொத்த வாழ்க்கையையும் அடமானம் வைக்க முடியுமா? இந்திராவால் நினைக்கத்தான் முடிந்தது.

“இந்த காலத்தில் எல்லாரும் சுயநலமா யோசிக்கிறப்போ..., தன்னைப் பற்றிய நினைவே இல்லாமல், எனக்காக, இரவு பகல் பார்க்காமல் உழைத்த ஜீவன்..., அவரைப்போய்...,

“ஒரு ஈ எறும்புக்கு கூட தீங்கு செய்யாதவர்..., அதிர்ந்து கூட பேசத் தெரியாதவர், முப்பது வயசிலும், எனக்காக தனக்காக ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், எனக்காகவே வாழ்ந்த என் அண்ணாவை கொல்ல அவனுக்கு எப்படிடி மனசு வந்தது?

“இதையெல்லாம் விட, விசாரணைக்கு என கூட்டிப் போய்..., கோர்ட்ல ஆஜர் படுத்த போகையில், தப்பிக்க முயற்சி செய்தான்னு, என்கவுண்டர் என்ற பெயரில் ஈவு இரக்கமே இல்லாமல் சுட்டுக் கொன்னானே..., அவனை சும்மா விடச் சொல்றியா?

“ஒரு பாவமும் அறியாத என் அண்ணா செத்துட்டான்..., ஆனா, அவரைக் கொன்னவன், நெஞ்சை நிமித்திட்டு, என் கண்ணு முன்னாடியே, சைரன் வைத்த ஜீப்பில் போகுறதைப் பாக்குறப்போ என் நெஞ்சே கொதிக்குதுடி..., அவனை அப்படியே என் கையாலேயே நசுக்கிக் கொல்லணும்னு வெறியே வருது...” ஆங்காரமாக கத்த, அவளை எப்படி அமைதிப் படுத்துவது என்றே தெரியவில்லை.

அதைவிட, காயத்திரியின் அண்ணன் காமேஷை அவளும் பார்த்திருக்கிறாள். அப்பாவியான தோற்றம், எப்பொழுதும் நெற்றியில் விபூதி இல்லாமல் அவனைப் பார்க்க முடியாது.

வாரம் தவறாமல் காயத்ரியைக் காண வருபவன், அவளுக்குத் தேவையான அனைத்தையும் செய்வான். அவள் கேட்காமலே ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்வதைப் பார்க்கையில், ‘எனக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லையே…’ என எத்தனையோ நாள் ஏங்கி இருக்கிறாள்.

“இது எல்லாம் விட, எதுக்கு அரஸ் பண்ணீங்க…? என்ன விசாரணை…? என்ன கேஸ்…? எப்படியெல்லாமோ கேட்ட பிறகும், டிப்பார்ட்மென்ட் சீக்ரட்னு சொல்லி ஒரு விவரமும் தராமல், என் அண்ணாவை ஒரு வெள்ளைத் துணியில் கட்டிக் கொடுத்தானே…” இப்பொழுது அவள் பெரும் குரலெடுத்து அழ, இந்திராக்கும் கண்கள் கலங்கியது.

அவன் இரண்டு வாரமாக காயத்ரியைக் காண வராமல் போனதும், மூன்றாம் வாரம், செய்தித்தாளில், ஒரு சிறிய கட்டத்துக்குள், பிரபல ரவுடி என்கவுண்டரில் சுட்டுக் கொலை…, என அறிவிப்பு வந்ததைப் பார்த்து, அந்த கல்லூரியில் இருந்த அனைவருமே அதிர்ந்தார்கள் எனச் சொல்லலாம்.

காமேஷ், காயத்ரிக்கு மட்டும் உதவுபவன் கிடையாது. அங்கே இருக்கும் பெண்கள் அனைவரையுமே தன் சகோதரிகளாகப் பாவித்தவன், அவர்களுக்கு ஒரு துன்பம் என்றாலோ, உதவி என்றாலோ முதல் ஆளாக இருப்பவன் அப்படி இருக்கையில்…, யார்தான் வருந்தாமல் இருப்பார்கள்.

“காயத்ரி…, அழாதடி…, போதும் அழுதது. ஏற்கனவே தேவையான அளவு அழுதுட்ட” அவளை ஆறுதல் படுத்தினாள்.

“ஆமாடி…, இனிமேல் நான் அழ மாட்டேன். சிரிக்கணும்…, அதுக்கு அவன் சாகணும்…, அதுவும் என் கையால் சாகணும்…, அவன் செத்தால்தான் எனக்கு நிம்மதி…” தன் விழி நீரைத் துடைத்துக் கொண்டாள்.

“அதுக்கு…, கொலை ஒண்ணுதான் தீர்வா? பெரிய பெரிய ரவுடிகள், அரசியல்வாதிகளாலேயே சாதிக்க முடியாததை,

சின்னப் பொண்ணு நீ எப்படி சாதிக்கப் போற? எனக்கு பயமா இருக்குடி...” காயத்ரியை அவள் நிலையில் இருந்து அசைக்க முடியாததால், அவள்தான் பின்வாங்க வேண்டி இருந்தது.

“அதுக்குதான் கடவுளா பார்த்து எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்..., அதைத்தான் நான் பயன்படுத்திக்கப் போறேன்...” கண்கள் பளபளக்க அவள் உரைக்க அவளை புரியாமலே ஏறிட்டாள்.

“என்னடி புரியலையா..., அந்த டைகர் இப்போ ஆக்சிடெண்ட் ஆகி ஹாஸ்பிடல்ல இருக்கறான். இதுதான் சரியான சந்தர்ப்பம்..., ஹாஸ்பிடல் போய், என் வேலையை முடிச்சுக்கப் போறேன்...” கண்கள் சிவக்க அவள் உரைக்க மேலும் அதிர்ந்தாள் இந்திரா.

“என்னது..., ஹாஸ்பிடல்ல இருக்காரா? பேப்பர்ல எல்லாம் வரவே இலையே...” அவள் அதிர,

“அங்கேதான் இருக்கு அவங்க டிப்பார்ட்மெண்ட் மூளை. இப்போ அவன் டிரேஸ் பண்ணிட்டு இருக்க கேஸ் கொஞ்சம் சென்சிடிவ் என்பதால், விஷயத்தை வெளியே விடாமல் வச்சிருக்காங்க. அதைத்தான் நான் யூஸ் பண்ணிக்கப் போறேன்...”

“மீடியாவுக்கே தெரியாத விஷயம் உனக்கு எப்படி தெரிஞ்சது?” அதிர்வை மறைக்காமல் கேட்டாள்.

“அவன் பின்னாடி நாலு மாசமா ஒரு நிழல் மாதிரி இருக்கேண்டி..., அதை தெரிஞ்சுக்காமல் இருப்பேனா? எங்கே அந்த ஆக்சிடண்டில் செத்து ஒளிஞ்சிடுவானோன்னு நான் எவ்வளவு பயந்தேன் தெரியுமா? அவன் அப்படியெல்லாம் சாகக் கூடாது..., என் கையால்தான் சாகணும்...” பயித்தியம்போல் புலம்பும் அவளை பயமாய் பார்த்தாள்.

“ஹாஸ்பிட்டல்ல செக்கியூரிட்டி அதிகம் இருக்குமே...” இந்திரா தன் சந்தேகத்தைக் கேட்க,

“அதுதான் இல்லை..., அவனோட டிரைவர் கான்ஸ்டபில் கந்தன் மட்டும்தான் இருக்கான். அவனை டைவர்ட் பண்ணிட்டா போதும், மிச்சத்தை நான் பாத்துப்பேன்...”

“என்னடி பண்ணப் போற..., நீ அவரை ஏமாத்தினாலும், அங்கே இருக்கும் சிசி கேமராவை எப்படி ஏமாத்த போற?” அவளுக்கு சுத்தமாக புரியவில்லை.

“ஒரு கம்பியூட்டர் இஞ்சினியரா இருந்துட்டு, ஒரு துக்கடா கேமராவை ஹேக் பண்ணத் தெரியலன்னா எப்படி? அதோட, கத்தியெடுத்து குத்தி கொன்னால்தான் சந்தேகம் வரும்..., சிம்பிளா ஒரு இன்ஜெக்ஷன் போட்டால்...” கேட்டவள், தன் கைப்பையில் இருந்து எடுத்துக் காட்ட, விழிகள் தெறித்து விடும்போல் விழித்தாள் இந்திரா.

“என்னடி இது...? புரொஃபஷனல் கொலைகாரங்களையே மிஞ்சிடுவ போல..., சரி..., உன்னைப் பாத்த உடனே..., வாம்மா..., வந்து இன்ஜெக்ஷன் போட்டு ‘போ’ன்னு கதவைத் திறந்து விடுவாங்களா?”.

“நீயே இவ்வளவு யோசிக்கும்போது..., நான் எவ்வளவு யோசிப்பேன்..., அங்கே வேலை செய்யும் டாக்டரை ஜஸ்ட் செக் பண்ணிட்டு உள்ளே அலவ் பண்ணுவாங்க..., என் வேலை ஈசிதான்...” அசராமல் உரைத்தாள் காயத்ரி.

“டாக்டர் ‘ஐடி’க்கு எங்கே போவ...?” இந்திரா கேட்க, காயத்ரி பார்த்த பார்வையில், “ஏண்டி..., ‘ஐடி’ கூடவா ரெடி பண்ணிட்ட? உன்கூட சகவாசம் வச்ச பாவத்துக்கு எத்தனை அதிர்சியைத்தாண்டி நானும் தாங்குவேன்?

“நாள் முழுக்க உன்கூடவே தானே இருக்கேன்..., எனக்குத் தெரியாமல் இதையெல்லாம் எப்போடி பண்ண?” நெஞ்சில் கை வைத்தவள் அதிர்ந்து கேட்டாள்.

“நைட் நான் தூங்குறது கம்மி...” அவள் சொல்ல, எங்கே மயக்கம்போட்டு விழுந்து விடுவோமோ என அஞ்சினாள்.

“அப்படின்னா...?” காற்றாய் போன குரலில் வினவ, அவள் கண் முன்னால் அந்த ஐடி கார்டை தூக்கிக் காட்ட, இதயம்

அதிர அதைப் பார்த்தவள், பதட்டமாக எச்சில் விழுங்கிக் கொண்டாள்.

“காயத்ரி…, இப்படியெல்லாம் நீ செய்வன்னு நான் கனவில் கூட நினைச்சு பார்த்ததில்லடி…, ஏதோ கொஞ்சம் ஹேக் பண்ணுவ…, இப்போ இந்த போர்ஜரி எல்லாம்…, இது தெரிந்தாலே நீ களி திங்கிறது உறுதி…, உனக்கு கொஞ்சம் கூட பயமாவே இல்லையாடி…” இந்திரா அப்பொழுதே வியர்த்து வழிந்தாள்.

“அவனை மட்டும் கொலை பண்ணிட்டேன்னா…, அடுத்த நிமிஷமே நான் சாகவும் தயாரா இருக்கேன்…” அவள் உரைக்க, வாயடைத்துப் போனாள்.

“உன்னை ஒரு கொலைகாரியா பாக்கவா உங்க அண்ணா இப்படி கஷ்டப் பட்டாங்க…?” அவளை திசை திருப்ப முயன்றாள்.

“நான் நல்லா இருப்பதை, இருந்து பாக்க வேண்டிய அவரை இல்லாமலே பண்ணிட்டானே…, அவனை சும்மா விடலாமா சொல்லு…” அவளைப் பிடித்து உலுக்கு, தன் பேச்சுக்கள் இன்னும் அவளை வெறியேற்றுவதை உணர்ந்தவள் கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

‘இதுக்கு நான் மூடிட்டே இருந்திருக்கலாம்…’ இந்திராயிடம் காலம் கடந்த சிந்தை.

“சரி…, இப்போ எப்படி போகப் போற?” அவள் கேட்க,

“பஸ்தான் சேஃப்…, வண்டியில் போனால், அதை வைத்து டிரேஸ் பண்ண வாய்ப்பு இருக்கு. என் போனைக் கூட நான் கொண்டு போகலை. ஒரு வேளை, அந்த நேரம் அங்கே எந்த நம்பர் எல்லாம் ஆக்டிவ்ல இருந்ததுன்னு பாக்க ஆரம்பித்தால், பிரச்சனை…, சரி நான் கிளம்பறேன்…” தன் கைப்பையை எடுத்துக் கொண்டவள், வெளியேற, செய்வதறியாமல் நின்றிருந்தாள் இந்திரா.

‘என்னா பிளானிங்…, ஆண்டவா…, நீதான் அவளுக்கு நல்ல புத்தி கொடுக்கணும்’ இப்பொழுது காயத்ரிக்காக

கடவுளிடம் மன்றாடுவதைத் தவிர அவளுக்கு வேறு எந்த வழியும் இருக்கவில்லை என்பதால், கடவுளை நாடினாள்.

***

மருத்துவமனையில்..., ஐசியூ அறையில், இமைகளை மூடி படுத்திருந்தான் பிரம்மா. இதயத்துடிப்பை தெரிவிக்கும் மானிட்டர் மட்டுமே அவன் உயிரோடு இருப்பதை உணர்த்த, செயற்கை சுவாசத்தின் உதவியால் மூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

கடந்த ஒரு வாரமாக அவன் இப்படித்தான் இருக்கிறான். அவனிடம் எந்த அசைவும் இருக்கவில்லை. அவனுடனே இருந்து கவனிக்கும் செவிலி ஜான்சி, கண்ணும் கருத்துமாக அவனைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள்.

இடதுகை மணிக்கட்டில் இறங்கிய சலைன் பாட்டிலில், ஸ்ரிஞ்சின் உதவியால் மருந்தை செலுத்தியவள், அது துளித்துளியாய் இறங்குவதை ஒரு நிமிடம் நின்று கவனித்தவள், அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

அவள் அமர்ந்த அந்த நிமிடம், அவனது கை விரல் சற்று அசைய, ஒரு சிறு பரபரப்புக்கு உள்ளானாள். தான் பார்த்தது நிஜம் தானா? யோசித்தவள், மீண்டும் அவனது அசைவுக்காக காத்திருக்க, அவளை அதிக நேரம் காத்திருக்காமல், மீண்டும் அவனது கைவிரல் அசைந்தது.

“ஜீசஸ்...” வாய்விட்டு முனகியவள், வேகமாக சிலுவை வரைந்தாள். “ஹப்பா..., ஒரு வாரம்..., மனுஷன் இருக்காரா இல்லையான்னே தெரியாமல்..., இப்போ...” எண்ணியவள், அடுத்த நிமிடம் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினாள்.

“டாக்டர்...” அலறலாக அழைத்து, மருத்துவர் ஷீபாவின் அறைக்கதவை தள்ளித் திறந்தவள், “டாக்டர்..., எஸ்பி கிட்டே லேசா அசைவு தெரியுது...” அவள் உரைத்த மறு நிமிடம், தேகம் முழுவதும் தீ பற்றிக்கொண்ட உணர்வில்

இருக்கையில் இருந்து எழுந்த மருத்துவர் ஷீபா, தன் வயதையும் மறந்து கிட்டத்தட்ட ஓடினார்.

அவர் ஓடி வருவதைப் பார்த்த கந்தன், இருக்கையில் இருந்து வேகமாக எழுந்து நிற்க, அவரைக் கண்டுகொள்ளாமல் அறைக்குள் நுழைந்தவர், பிரம்மாவை நெருங்கி, அவன் மேல் இமைகளை பிரித்துப் பார்த்துவிட்டு, அவனது நாடித் துடிப்பையும் பரிசோதித்தார்.

“ஜான்சி..., ஒன் ஆர் டூ அவர்ஸ்ல அவருக்கு நல்லா நினைவு திரும்பலாம்..., உடனே என்னை கூப்பிடு. கவனம்..., அதுக்கு மேலே ஆனாலும் இந்த இடத்தை விட்டு நீ அசையக் கூடாது” அவளிடம் அழுத்தமாகச் சொல்ல, தலை அசைத்து கேட்டுக் கொண்டாள்.

அவர் வெளியே வரவே..., “டாக்டர்..., சார் கண் முழிச்சுட்டாரா...” கந்தன் கேட்க,

“அவருக்கு இப்போதான் கொஞ்சம் கொஞ்சமா நினைவு திரும்பிட்டு இருக்கு. ஏற்கனவே சொன்னேனே..., அவரோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை..., மேலே..., அவர் கண் முழித்தால்தான் சொல்ல முடியும்...” தன் அறைக்குத் திரும்பினாள்.

‘ஹப்பா..., செம வில் பவர்...’ அவளால் சிலாகிக்காமல் இருக்க முடியவில்லை.

பெரும் விபத்தில் சிக்கி, அதுவும் பின் தலையில் அடிபட்டு, கபாலமே பிளந்து போய், ஏகப்பட்ட ரத்த விரையத்துக்குப் பிறகும், அவன் மீண்டிருப்பது, நிச்சயம் அவனது மன உறுதியால்தான் என நம்பினார்.

கூடவே..., ‘எல்லாம் நல்லபடியாவே இருக்கணும்...’ மனதுக்குள் சிறு நமைச்சல். முன்தலையில் அடிபட்டால் கூட பரவாயில்லை..., ஆனால், பின்தலையில் அடிபட்டால், அதன் பாதிப்புக்கள் அதிகம் இருக்கும் என்பது அவருக்குத் தெரியுமே.

முதல் கவலையே..., அவனுக்கு கண் பார்வையில் எந்தவிதமான சேதாரமும் இருக்கக் கூடாது என்பதாகத்தான் இருந்தது. அடுத்த நோயாளிகளை பரிசோதித்துக் கொண்டிருந்தாலும், ஜான்சியின் வரவுக்காய் காத்திருந்தார்.

ஐசியூவில், கொஞ்சம் கொஞ்சமாக நினைவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பிரம்மா..., முதலில் கை விரல்களை முழுதாக அசைத்தவன், சட்டென தன் நாசியில் உணர்ந்த மருந்தின் நெடியை உள்வாங்கினான்.

தான் எங்கே இருக்கிறோம் என அவனால் உணர முடிந்தது. சுற்றிலும் இருந்த மயான அமைதி, கூடவே..., விட்டு விட்டு ஒலித்த ‘பீப்’ ஓசை, அறையில் நிலவிய குளிர்..., இவை அனைத்தும், தான் ஐசியூவில் இருக்கிறோம் என தெளிவாக உணரச் செய்தது.

இது..., இதுதான் பிரம்மா..., விபத்து நடந்து, ஒருவார காலத்துக்குப் பிறகு கண் விழித்தாலும், சுற்றுப்புறத்தை கூர்மையாக அலசும் அவனது புலன்கள், இப்பொழுதே இப்படி என்றால், அவன் விபத்துக்கு முன்னால் எப்படி இருந்திருப்பான் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

செவிகளை கூர்மையாக்கி காத்திருந்தான். தன்னைச் சுற்றி எந்த அசைவும் இல்லாமல் போகவே, கண்ணிமைகளைத் திறந்து பார்க்க முயன்றான்.

“ஜீசஸ்...” ஒரு பெண்ணின் குரல் செவியைத் தீண்டுவதும், வேகமாக அவள் விலகிச் செல்வது, கதவைத் திறக்கும் ஓசை, அவளது காலடி தேய்ந்து மறையும் விதம், அனைத்தையும் உணர்ந்தவன், அவள் மருத்துவரை அழைக்கச் செல்கிறாள் என்பதை உணர்ந்தான்.

அவன் எண்ணியது பொய்க்கவில்லை..., அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில், “பிரம்மா..., மிஸ்டர் பிரம்மா...” யாரோ பெயர்சொல்லி அழைப்பதும், மெதுவாக அவன்

கன்னம் தட்டுவதும் புரிய, மெதுவாக விழிகளைத் திறந்தான்.

மசமசப்பாய் ஒரு உருவம் பார்வைக்குக் கிடைத்தது. கூடவே..., “பிரம்மா..., கண் முழிச்சுக்கோங்க..., நான் பேசுறது கேக்குதா...?” அவள் கேட்க, இப்பொழுது பார்வை சற்று தெளிவாக அவளை அவனால் முழுதாக பார்க்க முடிந்தது.

கையை அவன் கண் முன்பாக அசைக்க, மெதுவாக, மிகவும் மெதுவாக அவர் கரத்தை தொடர்ந்தது அவனது கரு விழிகள்..., “தேங்க் காட்...” அவரது வாய் மெதுவாக முனக, அவர் குரலில் இருந்த நிம்மதியை அப்பொழுது கூட அவன் குறித்துக் கொண்டான்.

அவனது பார்வை அறையை சோம்பலாக சுழன்று நோக்க, “பிரம்மா..., உங்களுக்கு ஒரு சின்ன ஆக்சிடெண்ட்..., நீங்க ஐசியூவில் இருக்கீங்க. யூ வில் பி ஆல்ரைட் சூன்...” அவர் சொல்ல, எந்த எதிர்வினையும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

“ம்...” அடித்தொண்டையில் இருந்து மெல்லிய முனகல், நான் உங்கள் பேச்சை கேட்டேன் என்பதுபோல் நலிந்துபோய் ஒலித்தது.

இப்பொழுது ஷீபாவின் புருவமத்தியில் பெரும் முடிச்சு. அவள் தன் பின்னால் பார்த்து கந்தனை அழைக்க, அவன் முன்னால் வரவே, தன் கருவிழிகளை கந்தன் பக்கம் திருப்பியவன், அசையாமல் அவரைப் பார்த்தான்.

“யார்ன்னு தெரியுதா...?” அவள் கேட்க, இமைகளை சட்டென மூடியவன், ‘பிரம்மா யார்...? நானா...? இவன்...’ இமைகளை சுருக்கி, நினைவடுக்குகளை துழாவ, அங்கே வெறும் பூஜ்யம் மட்டுமே விடையாகக் கிடைக்க, அவன் தலையை அசைக்க முயலவே,

அது கொடுத்த வலியில் மெல்லியதாக புருவம் சுருக்க, “பிரம்மா..., ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க..., ரெஸ்ட் எடுங்க..., எல்லாம் நிதானமா பேசிக்கலாம். இப்போதைக்கு

நீங்க நல்லா இருக்கீங்க ஓகே...” செவிலியிடம் திரும்பியவள், “ஜான்சி பாத்துக்கோ...” உரைத்தவர், கண்ணசைவில் கந்தனை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

“டாக்டர்..., சார் நல்லா இருக்கார் தானே...?” பிரம்மாவின் பார்வையும், பாவனையும் அவனை அவ்வாறு கேட்கத் தூண்டியது.

“எனக்கும் அப்படிச் சொல்லத்தான் ஆசையா இருக்கு. பட்..., ஓகே..., அவரோட ரிலேட்டிவ் யாரும் இல்லையா? அவங்களை உடனே வரச் சொல்லுங்க...” அவள் சொல்ல, தன் தாடையை வருடி யோசித்தான்.

“டாக்டர்..., அவரோட சொந்தம் எல்லாம் கிராமத்தில் இருக்காங்க. ஒரே தங்கச்சி, கோயம்புத்தூரில் இருக்காங்க..., அவங்களுக்கு இதுதான் மாசம், அதனால்தான் அவங்க இங்கே வரலை. அவங்க கணவருக்கும் அவங்களை தனியா விட்டுட்டு வர முடியாத நிலை.

“இப்போ நீங்க கண்டிப்பா வரணும்னு சொன்னீங்கன்னா வரச் சொல்றேன். சார் எப்படி இருக்காருன்னு சொன்னால், நான் உடனே டிஜிஜிக்கு தகவல் கொடுக்க வசதியா இருக்கும்...” அவன் கேட்க, முழுதாக ஒரு நிமிடம் பேசாமலே நின்றார்.

“அவரோட ரிலேட்டிவ் போட்டோ..., அவரோட திங்க்ஸ் ஏதாவது இருந்தால் நாளைக்கு எடுத்துட்டு வாங்க. அதுக்குப் பிறகுதான் எதையும் உறுதியா சொல்ல முடியும்...” அவர் சென்றுவிட, அங்கேயே நின்றுவிட்டான் கந்தன்.

தன் அறைக்குத் திரும்பிய ஷீபா..., அசந்துதான் போனார்..., “அம்மாடியோ..., இப்போகூட, இந்த நிலைமையில் கூட ஒருத்தனால் இவ்வளவு நிதானமா இருக்க முடியுமா?” வாய்விட்டே கேட்டுக் கொண்டார்.

‘நாளைக்குப் பார்க்கலாம்…’ எண்ணியவர் வேலையில் தொடர்ந்து ஈடுபட்டாலும், அடிமனதில் பிரண்டும் பிரம்மாவின் நினைவை தவிர்க்க முடியவில்லை.

எப்பொழுது இரவு கடந்து, காலை வரும் என காத்திருந்தார். மறுநாள் காலையில் ஹாஸ்பிடல் வந்தவர், முதல் வேலையாக சென்று பார்த்தது பிரம்மாவைத்தான்.

“குட் மார்னிங்…” அவர் உரைக்க, “குட் மார்னிங்…” உரைத்தவன், நிதானமாக அவரை ஏறிட்டான்.

“நைட் நல்லா தூங்கினீங்களா? கேன் யூ கெட் அப் அண்ட் சிட்…” அவர் கேட்க, மெதுவாக தன் கை ஊன்றி எழ முயன்றான். அவன் சற்று தடுமாறவே, அவனுக்கு உதவ வந்த ஜான்சியை…, அவன் ஒற்றை கையசைப்பில் தடுக்க, ஷீபாவும் அவளை பார்வையால் தடுத்தார்.

பொதுவாகவே ஐசியூவில் இருக்கும் நோயாளிகளை, அதுவும் ஒரு வாரத்துக்குப் பிறகு கண் விழிப்பவர்களை எழுந்து அமரச் சொல்வது எல்லாம் கிடையாது. அவனை பரிசோதிக்கவே அவ்வாறு செய்தார். அதையும் அவன் முயன்று செய்ய, தன் வியப்பை மறைத்தவர், அவனையே பார்த்திருந்தார்.

ஒரு பெரும் தலை சுற்றலும், பின்மண்டையில் சட்டென ஒரு வலியும் தாக்க, தன் வலக்கரத்தால் தலையைத் தாங்கியவன், அப்பொழுதுதான் தன் தலையைச் சுற்றி, பெரும் கட்டு போட்டிருப்பதையே உணர்ந்தான். தன் கரத்தால் தலை மொத்தமும் வருடியவன், சற்று நேரம் எதையும் செய்யவில்லை. இமைகளை அழுத்தமாக மூடி, தன் வலியை தாங்கிக் கொண்டான்.

அவன் முயற்சிகளை அமைதியாக, வியப்பாக ஷீபா பார்த்திருந்தாரே தவிர, அவனை எதுவும் சொல்லவில்லை. சில நிமிடங்கள் மௌனத்தில் கடக்க, “பீல் பெட்டர்?” ஷீபா கேட்க, இமைகளை மூடித் திறந்து ‘ஆம்’ என்றான்.

ஜான்சி, ஷீபாவின் கையில் சில பொருட்களை கொடுக்க, அதைப் பார்த்தாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

“உங்க பேர் என்ன…?” சிறு இடைவெளிக்குப் பிறகு அவர் கேட்க,

ஒரு நொடி கூர்மையாக அவரை நோக்கியவன், “பிரம்மா…, அப்படித்தானே என்னை கூப்ட்டீங்க…?” அவரிடம் திருப்பிக் கேட்க, அசந்து போனார். ‘நான் இவரை கேள்வி கேக்கறனா? இல்ல இவர் என்னை கேள்வி கேக்கறாரா?’ எழுந்த சிந்தையை ஒதுக்கி வைத்தார்.

கந்தனுக்கோ தன் அனுபவத்தையும் மீறி…, இதயம் சற்று நடுங்கியது. ‘இவர் என்ன இப்படி பேசறார்…?’ அவன் மூளைக்குள் வண்டு குடைந்தது.

“இந்த பர்ஸ் யாரோடதுன்னு தெரியுதா?” ஷீபாவின் கேள்விக்கு, அந்த பர்ஸை ஒரு நிமிடம் வெறித்தவன்…, “தெரியலை…” பார்வையை அதன்மீதே நிலைக்க விட்டு, மெதுவாக புருவம் சுருக்கி உரைத்தான்.

“ஓகே…, இந்த போட்டோவில் இருப்பது யார்ன்னு தெரியுதா?” இரண்டாக மடிக்கப்பட்ட புகைப்படத்தைக் காட்ட, அதற்கும் மறுப்பாகவே தலை அசைத்தான்.

அந்த புகைப்படத்தை நேராக விரித்தவர், “இவ உங்களோட தங்கை கௌசிகா…, அவளோட இருப்பது அவளோட கணவன்…, முகேஷ்…” அவர், அவன் முகத்திலேயே பார்வையை பதித்து உரைக்க, அவன் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் இருக்கவில்லை.

கந்தன் அதற்குமேல் அங்கே இருக்கவில்லை…, அங்கே அவரால் இருக்க முடியவில்லை. பிரம்மாவை இப்படி ஒரு நிலையில் அவரால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாமல் வெளியேறினார்.

ஷீபா அசந்துபோய் அமர்ந்துவிட்டார்…, அவன் பார்வையில் முதலில் தெரிந்த வித்தியாசத்தை வைத்தே, எதுவோ சரியில்லை என்பதை அவரது அனுபவ அறிவு சொன்னது. அதற்காகத்தான் பிரம்மாவின் பொருட்களை கொண்டு வரச் சொன்னார்.

அவனிடம் விசாரித்த வரைக்கும், அவரது சந்தேகம் உறுதியானது. ஆனால், அவரை வியப்பில் ஆழ்த்திய விஷயம், அவன் நிலையில் இதற்கு முன்பாக எத்தனையோ பேரை அவள் சந்தித்திருக்கிறாள். கண் விழித்த உடனே, ‘நான் எங்கே இருக்கிறேன்…? நான் யார்…? எனக்கு ஏன் எதுவும் ஞாபகம் இல்லை…’ எத்தனையோ விதமாக புலம்பி, போராடி…, அழுது, சீறி…, பயந்து நடுங்கி…, இப்படியான உணர்வுகளையே வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஆனால் பிரம்மா…, இதில் ஒன்றைக் கூட வெளிப்படுத்தாமல், அவனிடம் இருந்த அழுத்தம்…, நிதானம்…, தன் வேலையை சுலபமாக்குவதை உணர்ந்தாலும், அவனது நிதானத்தை எப்படி எடுத்துக்கொள்ள என்றும் தெரியவில்லை.

“வெல்…, மிஸ்டர் பிரம்மா…, உங்களுக்கே உங்கள் நிலை புரியுதுன்னு நினைக்கறேன். ஆனாலும், நானும் என் கடமையைச் செய்யணுமே…, உங்களுக்கு பின் தலையில் அடி பட்டதால், பழைய விஷயங்கள் எல்லாம் மறந்து போய்டுச்சு.

“அதாவது மெடிக்கல் டெர்ம்ல சொல்றதா இருந்தால் அம்னீஷியா…, மெமரிலாஸ்…” அவள் உரைக்க, அப்பொழுதும் அவன் நிலையில் மாற்றம் இருக்கவில்லை.

அதே நேரம்…, அவனை கொல்லும் எண்ணத்தில் மருத்துவமனைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள் காயத்ரி.

*****

# பகுதி – 2.

வெளியே வந்த கந்தனுக்கு இருக்கையில் அமரவே பிடிக்கவில்லை. தான் சற்று யூகித்த விஷயத்தை யோசிக்க கூட பிடிக்காதவராக நின்றுவிட்டார்.

‘இனிமேல் என்ன ஆகும்...? யாரிடம் சொல்ல? சொல்லலாமா? சொல்ல வேண்டாமா? சொன்னால் என்ன செய்வார்? அவரது தங்கை தாங்குவாளா? மேலதிகாரியிடம் சொல்லிவிடவா? ஏன் சொன்னாய் எனக் கேட்டு இவர் சாடினால் என்ன செய்வது?’ அவர் யோசனை இதுவாகத்தான் இருந்தது.

பிரம்மாவுக்கு பழைய விஷயங்கள், நினைவுகள் எதுவும் இல்லை எனத் தெரிந்த பிறகும் கூட, பிரம்மா என்ன செய்வான் என யோசிக்க வைத்திருக்கிறானே, இதுதான் பிரம்மா.

பிரம்மாவின் குணத்தை முழுமையாக அறிந்தவர் என்பதால், சட்டென தன் நினைப்புக்கு ஏற்ப அவரால் செயல்பட முடியவில்லை. இன்னும் இரண்டே ஆண்டுகளில் ரிட்டையர் ஆகும் வயது அவருக்கு. அப்படி இருந்த பொழுதும், தான் விசாரிக்கும் கேசில் அவரையும் இணைத்துக் கொண்டான் பிரம்மா.

நீ ஒரு சாதாரண டிரைவர், உன் இடத்திலேயே இருந்துகொள், என்று எல்லாம் அவன் பார்க்கவில்லை. பிரம்மா கோபக்காரனே தவிர, குணம் இல்லாதவன் இல்லையே..., எனவேதான் அவனது நிலைக்காக வருந்தினார்.

சில நேரங்களில்..., ‘வெகு அபூர்வமாக கேஸ் பற்றி தன்னிடம் பேசுபவர்..., அவரை மீறி வெளியே கேஸ் பற்றி பேசுகிறோம் எனத் தெரிந்தால், பார்வையாலேயே பஸ்மமாக்கி விடுவார். அப்படி இருக்கையில், அவரைப் பற்றிய இந்த விஷயத்தை, அவரது அனுமதி இல்லாமல் எப்படி வெளியே சொல்வது?

‘என்றாவது ஒருநாள் இது வெளியே தெரிந்தால், இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை என, அவருடனே இருந்த தனக்குத்தான் முதலில் பிரச்சனை வரும் என அறிந்தவர் என்பதால், அதற்கு வேறு பயமாக இருந்தது.

‘இன்னும் இரண்டே வருடங்களில் வேலையில் இருந்து ஓய்வு பெறப் போகும் இந்த நேரத்தில், இப்படி ஒரு சத்திய சோதனைகள் தனக்கு வர வேண்டுமா? எதற்கும் மருத்துவர் வெளியே வந்த பிறகு கேட்டுவிட்டு முடிவெடுப்போம்...’ அவ்வளவு நேரமாக உலாவிக் கொண்டிருந்தவர் இருக்கையில் அப்பொழுதுதான் அமர்ந்தார்.

அறைக்குள்..., “பிரம்மா..., நான் சொல்லிட்டே இருக்கேன், நீங்க இப்படி அமைதியாக இருந்தால் என்ன அர்த்தம்?” அவன் மனதுக்குள் என்ன யோசிக்கிறான் எனத் தெரியாமல், ஷீபா தான் வினவினார்.

“சொல்லுங்க...” என்னவோ கதை கேட்கும் பாவனையில் அவன் கேட்க, அவருக்கு பற்றிக் கொண்டு வந்தது.

நோயாளிகளிடம் தன் விருப்பு, வெறுப்பை காட்டக் கூடாது என்பதையும் மீறி, அவனை அழுத்தமாக வெறித்தார். அவர் பார்வையை கூர்மையாக தாங்கியவன், “எனக்கு தலை ரொம்ப வலிக்குது..., ரெஸ்ட் எடுக்கணும்...” அதையும் அழுத்தமாகவே உரைக்க, சட்டென இருக்கையில் இருந்து எழுந்து கொண்டார்.

“நான் பிறகு வந்து உங்களை பாக்கறேன்...” உரைத்தவர், ஜான்சியிடம் ஒரு பார்வையை செலுத்திவிட்டே வெளியேறினார்.

அவர் வெளியே வரவே, ஷீபாவின் முன்னால் வந்து நின்றான் கந்தன். “டாக்டர், சார்க்கு...” கந்தன் இழுக்க, உள்ளே இருந்தவன்மேல் இருந்த ஆத்திரம், அவர்மேல் திரும்பியது.

“உங்க சார்க்கு பழசெல்லாம் மறந்து போச்சு..., அம்னீஷியா..., போதுமா..., உங்களுக்கு வேற அதை

தனியா சொல்லணுமா? இனிமேல் என்ன செய்யணுமோ செய்ங்க...” வெடுக்கென உரைத்தவர் விலகி நடந்தார்.

ஒரு நொடி திகைத்த கந்தன், இதற்கு முன்பு அந்த மருத்துவமனையில் பிரம்மாவோடு அவருக்கு ஏற்பட்ட அனுபவம் நினைவிற்கு வர, “டாக்டர்..., நீங்க..., அவர்மேல் இருக்கும் கோபத்தில் எதையோ சொல்றீங்கன்னு நினைக்கறேன்...” போலீஸ் என்றால் இறங்கியே பேசத் தெரியாதோ என்னவோ..., சற்று கோபமாகவே உரைத்தார்.

அப்பொழுதுதான் தான் அதிகமாக ரியாக்ட் செய்வது அவருக்குப் புரிய, சட்டென நின்றவர், “கந்தன்..., என் டியூட்டியை நான் சரியா செய்யறேன் அவ்வளவுதான். அவருக்கு பழசெல்லாம் மறந்து போச்சு..., பட்..., மென்டலி, பிசிக்கலி அவர் ஆல்ரைட்..., இன்னும் ரெண்டு வாரத்தில் டிச்சார்ஜ் பண்ணிடலாம்...” உரைத்தவள், தன் அறைக்குள் சென்று மறைந்தார்.

‘ஷீபா..., எதுக்கு இப்படி உணர்ச்சிவசப் படுற...? காம்டவுண்...’ தனக்குத் தானே சொல்லிக் கொண்டவர், பாட்டிலில் இருந்த தண்ணீரைக் குடித்துவிட்டு, தன் வேலையில் கவனமானார்.

ஷீபாவின் அறைக்கதவை தள்ளிவிட்டு உள்ளே வந்த கந்தன், “டாக்டர்..., நான் இப்போ அவர்கிட்டே பேசலாமா?” எதையும் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாமல் அவரிடம் வந்து நின்றார்.

“இப்போ உடனே வேண்டாம்..., கொஞ்சம் தலை வலின்னு சொல்லி ரெஸ்ட் எடுக்கறார்..., தூங்கி எழட்டும்..., பேசுங்க...” அனுமதி வழங்கவே, வெளியேறியவர், ஐசியூ கதவைத் தட்டி ஜான்சியை வெளியே அழைத்தார்.

“அவர் தூங்கறார்...” அவள் உரைக்கவே,

“கண் முழிச்ச உடனே எனக்கு சொல்லுங்க..., பேசணும்...” உரைத்தவர் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

கண் மூடி படுத்திருந்த பிரம்மாவுக்கு அனைத்தும் கேட்டாலும், எதையும் செய்யப் பிடிக்கவில்லை. தன்னைச் சுற்றிலும் இருக்கும் இருட்டு..., உள்ளுக்குள் அவனை சற்று மிரட்டவே செய்தது எனலாம். ஆனால், அதை வெளியே காட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை.

‘இதுதான் என் குணமா? இல்லையென்றால் வித்தியாசமாக நடந்து கொள்கிறேனா?’ அவனுக்குப் புரியவில்லை. தலையில் விண் விண்ணென தெறிக்கும் வலி ஒரு பக்கம் படுத்தி எடுக்க, தலைக்குள் இருக்கும் வெற்றிடம்..., அது கொடுக்கும் அழுத்தம் அதிகமாகவே இருந்தது.

எதை எதையோ சிந்தித்தவன் உறங்கிப் போயிருக்க..., அதற்கு அவனுக்கு கொடுக்கப்பட்ட மருந்தும் ஒரு காரணமாக இருக்கலாம். சற்று நேரத்தில் அவன் கண் விழிக்க, ஜான்சி அவனை நெருங்கினாள்.

“சார்..., ஏதாவது வேணுமா...?” அவனை நெருங்கி வினவ, மறுப்பாக தலை அசைத்தான்.

அவன் சற்று எழுந்து அமர, கந்தனை போய் அழைத்து வந்தாள். அவனது எதிரில் வந்து நின்ற கந்தன், பழக்க தோஷத்தில் விறைப்பாக ஒரு சலூட் வைக்க, இமைக்க மறந்து கூர்மையாக அவரை வெறித்தான். ஜான்சியை பார்வையாலேயே அவன் வெளியே போகச் சொல்ல, வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

கந்தன் சலூட் அடித்த விதத்தை நொடியில் உள் வாங்கியவன், ‘நான் போலீசா?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். அந்த நிலையிலும் அவனது புத்திசாலித்தனமும், புத்தி கூர்மையும் மிளிர்ந்தது என்றே சொல்லலாம்.

“சார்..., என்னைத் தெரியுதா? நான்தான்..., உங்க டிரைவர் கந்தன்..., உங்களோடவே நாலு வருஷமா இருக்கறேன்...” அவன் புரிந்துகொள்கிறானா இல்லையா எனப் புரியாமல் அவர் நிறுத்த, ‘மேலே சொல்...’ என்பதுபோல் பார்த்தான்.

‘ஹப்பா..., எது மறந்தாலும் இந்த வாயை அழுத்தமா மூடி வச்சுக்கிறது மட்டும் மாறலை...’ எண்ணியவர், ஒரு நொடி தடுமாற, அவர் கண்களையே அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிரம்மாவின் கண்கள் கந்தனைப் பார்த்தாலும், மூளையோ..., ‘கண் நேரா பாக்குது..., அப்போ பொய் சொல்லலை..., உடல் மொழியில் பதட்டம் இல்லை..., அப்போ தப்பு செய்தவர் இல்லை..., மரியாதையா பேசறார்..., அப்படின்னா நான் பெரிய பதவியில் இருக்கணும்...’ ஒவ்வொன்றையாக கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையில் கவனம் ஏற, அதைப் பார்த்த கந்தன், ‘ஹையோ, மனுஷன் என்னை ஸ்கேன் பண்றாரே...’ மனதுக்குள் அலறினார்.

அதை நொடியில் மறைத்துக் கொண்டு, “சார்..., உங்க ப்ரண்ட்..., மச்சினர்..., முகேஷ் சார் உங்களோட பேசணும்னு சொன்னார். அவரும் உங்களை மாதிரி கோயம்புத்தூர் எஸ்பி தான்..., நீங்க ரெண்டுபேரும் சேர்ந்தேதான் ட்ரெயினிங் முடிச்சீங்கன்னு கேள்விப் பட்டிருக்கிறேன்...” அவர் உரைத்து முடிக்க,

அவ்வளவு நேரமாக அவரது பேச்சில் கவனமாக இருந்தவன், ‘கேள்வி பட்டிருக்கிறேன்னா..., அப்போ நானாக எதுவும் சொன்னது கிடையாதா?’ மனதுக்குள் குறித்துக் கொண்டான்.

அதைவிட, தன் மௌனங்கள் அவருக்கு ஒன்றும் புதிதுபோல் தெரியவில்லையே...’ எனவும் எண்ணிக் கொண்டான். கூடவே..., ‘உங்களைப் போலவே அவரும் எஸ்பி...’ என்று சொன்னது உறைக்க, ‘அப்போ நான் எஸ்பியா...?’ மற்றவர் வாயால் தான் யார் என உணரும் விதம்..., சற்று கொடுமையாகவே இருந்தது.

இடதுகையின் ஆள்காட்டிவிரல், அவனது இடது புருவத்தை மெதுவாக வருடிக் கொண்டிருக்க, தன்னிச்சையாக அதை

செய்து கொண்டிருந்தவன் சட்டென தெளிந்தான். ‘அப்போ..., இது என் மேனரிசமா?’ தன்னைப் பற்றி தானே படித்தான்..., அந்த அசகாய சூரன் பிரம்மா.

“என்னோட போன்...?” அவன் பார்வையை சுழற்ற,

“இதோ இருக்கு சார்..., நான் சுவிட்ச்ஆப் பண்ணி வச்சிருக்கேன்..., நீங்க பேசுங்க...” அவன் பார்வையின் பொருள் புரிய வேகமாக வெளியே வந்தார் கந்தன்.

‘ஐசியூவில் இருந்து கால் போகாதே..., போன் செய்வது புத்திசாலித்தனமும் இல்லை’ கையில் அலைபேசியை வைத்திருந்தவனுக்கு மூளைக்குள் சட்டென மின்னலடிக்க, அலைபேசியை அப்படியே வைத்துவிட்டான்.

“கந்தன்...” அவன் குரல் கொடுக்கவே, வேகமாக உள்ளே வந்தான். அவன் குரல் உயர்த்தி அழைக்கவே, அதைக் கேட்டவாறே உள்ளே வந்த ஜான்சி, “சார், நீங்க இப்படி சத்தமா கத்தக் கூடாது...” அவனிடம் உரைக்க, புருவத்தை சற்று சுருக்கி ஒரு பார்வை. அவ்வளவுதான், கப்பென வாயை மூடிக்கொண்டு நகர்ந்துவிட்டாள்.

‘ஆண்டவா..., நல்ல வேளை..., மனுஷன் தெளிவா இருக்கும்போது நான் அவர்கிட்டே சிக்கலை...’ மனதுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள். ஏனென்றால் அவனைப் பற்றி இதுவரை கேள்விப்பட்ட விஷயங்கள் அப்படிப்பட்டது ஆயிற்றே.

“என்னை எப்போ ரூமுக்கு ஷிப்ட் பண்றாங்க? ஏதாவது சொன்னாங்களா?” கந்தன் உள்ளே வரவே அவரிடம் கேட்டான்.

“நான் அதைப்பற்றி எதுவும் கேக்கலை சார்..., டாக்டர் இன்னும் ரெண்டு வாரத்தில் டிச்சார்ஜ் ஆகலாம்னு சொல்லி இருக்காங்க” அவன் கேட்காததற்கு பதில் சொல்ல, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

‘இன்னும் ரெண்டு வாரம்...’ மனதுக்குள் கணக்குப் போட்டான். ‘அப்போ..., எனக்கு தலையில் பலமான அடி’

மனதுக்குள் நினைப்பதை பார்வையில் வராமல் தடுத்தான்.

“சார்…, ஐஜி நீங்க கண் முழித்த உடனே தகவல் சொல்ல சொல்லியிருந்தார். இப்போ நான் சொல்லட்டுமா…, இல்ல…” தயங்கி நிறுத்தினார் கந்தன்.

உயர் அதிகாரியிடம் விஷயத்தை மறைப்பது எவ்வளவு தூரம் சரி என அவனுக்குத் தெரியவில்லை. ஆனால்…, முகேஷிடம் பேசிய பிறகு தன் நிலை பற்றி சொல்லிக் கொள்ளலாம் என முடிவெடுத்தவன்,

“சொல்லிடுங்க…” உரைத்தவன், “நான் கண் முழிச்சுட்டேன்னு மட்டும் சொல்லுங்க…, புரியுதா?” அவன் நிதானமாக உரைக்க, அதில் இருந்த மறைபொருளை உணர்ந்து கொண்டார்.

அவனுடனே நாலு வருடமாக இருக்கிறார், அப்படி இருக்கையில் அவனது வார்த்தைகளை புரிந்து கொள்ளவில்லை என்றால்தான் ஆச்சரியம். ஒரு நொடி அவன் கோபமாக சொல்கிறானா, சாதாரணமாகச் சொல்கிறானா எனத் தெரியாமல் அவர்தான் விழி பிதுங்கினார்.

‘அதெப்படிதான் இரும்பாட்டம் ஒரு முகமோ தெரியலை…, இப்போ கூட மாறலையே…’ அவர் எண்ணம் இதுவாகத்தான் இருந்தது.

அவர் தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, “ஏதாவது சொல்லணுமா?” அவன் கேட்க,

“கேஸ் டீட்டெயில் பத்தி ஐஜி கேக்கணும்னு சொன்னார்…” அவஸ்தையாக எச்சில் விழுங்கிக் கொண்டார். இந்த நிலைமையில் இதைச் சொல்வதா வேண்டாமா என அவர் அதிகம் சிந்திப்பதை அவனும் உணர்ந்து கொண்டான்.

‘என்ன கேஸ்…?’ ஒரு வினாடிக்கும் குறைவான நொடி அவனது புருவம் சுருங்கி விரிய, “நான் சொன்னதை மட்டும் செய்ங்க…” ‘இப்போ நீ போகலாம்…’ என்னும் விதத்தில்

உரைக்க, ஒரே பாய்ச்சலில் வெளியே வந்து உட்க்கார்ந்து கொண்டார்.

‘எப்போ பேசினாலும் மனுஷனை வியர்க்க வச்சுடறார்…’ சட்டை பட்டனை கழட்டியவர், சட்டையை பின்னால் தள்ளி…, வாயால் ஊதிக் கொண்டார்.

கந்தன் வெளியே வரவே, ஜான்சி உள்ளே வரவே, “சிஸ்டர்…” பிரம்மா அழைக்க, வியந்த பார்வையாய் அவனை நெருங்கினாள் ஜான்சி. அவள் பார்வைக்குக் காரணம்…, கண் முழித்தது முதல், ஒரு சின்ன புன்னகைக்கோ, பார்வைக்கோ கூட பஞ்சமாக இருந்தவன், முதல் முறையாக அழைக்கவே வியந்தாள்.

கூடவே…, இதற்கு முன்னர் ஒரு முறை அவனை சந்தித்தபொழுது அவன் நடந்துகொண்ட முறையும் அவளது வியப்புக்குக் காரணம்.

“சொல்லுங்க சார்…” அவள் அருகே வரவே…,

“என்னோட திங்க்ஸ்…” அவன் இழுக்க…, “ஒரு நிமிஷம்…” உரைத்தவள், இடப்பக்கம் நகர்ந்து சென்று, ஒரு கவரை எடுத்துக் கொண்டு வந்தாள்.

“ஆக்சிடண்ட் ஆனப்போ நீங்க போட்டிருந்த ட்ரெஸ்…, உங்களோட பர்ஸ் எல்லாம் உள்ளேயே இருக்கு…” அவள் கையில் கொடுக்க, மெல்லிய தலையசைப்போடு பெற்றுக் கொண்டான்.

முதலில் தனது பர்ஸை ஓப்பன் செய்தவன், உள்ளே இருந்த இரண்டு, இரண்டாயிரம் ரூபாய் தாள், மூன்று நூறு ரூபாய் நோட்டு…, என வெளியே எடுத்து பார்த்தவன், அதை விடுத்து, உள்ளே ஓப்பன் செய்ய, ‘ஐபிஎஸ்’ என எழுதப்பட்டிருந்த கேப் அணிந்து, கம்பீரமாக போஸ் கொடுத்திருந்த புகைப்படத்தைப் பார்த்தான்.

‘நான் ஐபிஎஸ் ஆபீசரா…?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். முழுதாக இரண்டு நிமிடம்…, புகைப்படத்தை

அசையாமல் பார்த்தாலும் எதுவும் ஞாபகத்துக்கு வரவில்லை.

ஏற்கனவே கந்தனை போலீஸ் என இனம் கண்டது முதல், அவர் தன்னை மரியாதை தன்மையில் அழைப்பதும், டாக்டர் ஷீலா மரியாதையாக பேசுவதையும் வைத்து, தான் போலீசில் இருக்கலாம் என யூகித்து இருந்தான்தான்.

புகைப்படத்துக்கு அடியில் பர்ஸை மேலும் துழாவ, கத்தையான விசிட்டிங் கார்ட் இருப்பதைப் பார்த்து, ஒன்றை உருவினான்.

‘பிரம்மா ஐபிஎஸ்..., சுப்ரண்டன்ட் ஆஃப் போலீஸ்...’ தன் பதவியை உள்வாங்கிக் கொள்ளவே அவனுக்கு சற்று நேரம் தேவைப் பட்டது. பெரிய பதவி, அதற்கான பொறுப்புகள்..., ‘கந்தன் வேற ஏதோ கேஸ்ன்னு சொன்னாரே...’ எண்ணியவன், சட்டென தன் நெற்றியும், மூக்கும் இணையும் இடத்தை அழுத்தமாக பற்றிக் கொள்ள, வேகமாக அவனை நெருங்கினாள் ஜான்சி.

“சார்..., இப்போவே ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க...” அவனது கோபத்தை பற்றிய பயம் இருந்தாலும், அவன் டென்ஷன் ஆகக் கூடாது என நூறுமுறை சொல்லிச் சென்றிருக்கிறாளே ஷீபா..., அப்படி இருக்கையில், அவன் தீவிரமாக எதையோ சிந்திக்க முயல்கையில் அவள் எப்படி பார்த்துக் கொண்டிருக்கவாம்?

பிரம்மாவுக்கோ இமைகளை மூடினாலே தெரியும் இருட்டு..., அவன் நிதானத்தையும் மீறி கலங்கச் செய்தது. தன் பொருட்கள் அடங்கிய பையை அவளிடம் கொடுத்தவன், இமை மூடி படுத்துக் கொண்டான்.

அவன் கவனித்த வரைக்கும், அனைவருக்கும் தன்மேல் கோபம் இருந்தாலும், யாருமே தன்னை காயப்படுத்த விரும்பாததையும் குறித்துக் கொண்டான். தனக்கு கொடுக்கும் மரியாதையை கொஞ்சம் கூட குறைக்காததும் புரிய, தான் எப்படி உணர்கிறோம் என்றே அவனுக்குத் தெரியவில்லை.

***

மூன்றாவது தளத்தில் இருந்த ஐசியூ அறைக்குச் செல்லும் வழியில், படிகளுக்கு நேர் மேலே, வராண்டாவில் நின்ற காயத்ரி, தலையை மட்டும் நீட்டி, மெதுவாக எட்டிப் பார்த்தாள். ஐசியூக்கு வெளியே கந்தன் இருக்கையில் நிலைகொள்ளாமல் அமர்ந்திருப்பது அவளது பார்வைக்குப் பட்டது.

'இவர் இங்கே இருந்து அசையவே மாட்டாரா...? ஒரு வாரமா இங்கேயே பழியா கிடக்கார்...' அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

அந்த மருத்துவமனையில் ஆறுமணிக்கு மேலே வெளியில் இருந்து யாரையும் உள்ளே அனுமதிப்பது இல்லை. அப்படியே அனுமதித்தாலும், அது அவசரசிகிச்சைப் பிரிவு பக்கம்தான் இருக்குமே தவிர, நோயாளிகள் இருக்கும் வார்ட் பக்கம் நுழைவதே கடினம்.

விசிட்டர் அவர்ஸ் காலை எட்டுமுதல் ஒன்பது, மாலை ஐந்து முதல் ஆறு..., அதற்கு முன்போ பின்போ..., அங்கே இருக்கும் நோயாளிகளை வெளி ஆட்கள் காண முடியாது. பிரம்மாவின் பதவியை கருத்தில் கொண்டு மட்டுமே கந்தனை அவனோடு இருக்க அனுமதித்து இருந்தார்கள்.

அப்படி இருக்கையில், இரவில் வந்து அவனை முடித்துவிடலாம் என அவளால் நினைக்க முடியவில்லை. கந்தனோ..., தன் தலை தாங்கி அமர்ந்திருந்தவர், ஒரு நொடி எதையோ சிந்தித்துவிட்டு, வேகமாக தன் அலைபேசியை எடுத்து யாருக்கோ அழைத்தார்.

அழைப்பு செல்லவே..., காயத்ரி இருக்கும் பக்கம் அவர் திரும்பி நடக்க, சட்டென தலையை பின்னுக்கு இழுத்துக் கொண்டவளது இதயம் எகிறிக் குதித்தது. 'அங்கே இருந்து விலகு...' புத்தி கட்டளையிட,

'இல்லை..., என்னவென்று கேட்டுவிடு...' மறு மனம் ஆணையிட, சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு, அவர் வருகிறாரா என மெதுவாக தலையை நீட்டினாள்.

அவள் இருக்கும் பக்கத்துக்கு சற்று நெருங்கியவர், “ம்..., யாழினி மேம், நான்தான்..., சார் கண் முழிச்சுட்டார்..., நீங்க எப்போ வர்றீங்க?” அந்தப்பக்கம் என்ன சொன்னார்களோ..., அதைக் கேட்டவர்,

“இல்ல..., பயப்படுற மாதிரி எதுவும் இல்லை. தெளிவாகவே பேசறார்..., கேஸ் பத்தி உடனே பேச முடியாது. நீங்க வேண்ணா சும்மா பாக்க வாங்க. சரி நான் வச்சுடறேன்...” தன் அலைபேசியை பாக்கெட்டில் போட்டவர், அங்கே இருந்து திரும்பி நடந்தார்.

எஸ்ஐ யாழினி, பிரம்மா இப்பொழுது விசாரிக்கும் கேசில் உடன் பணியாற்றுபவள். திறமைசாலி, பொறுமைசாலி..., இல்லையென்றால் அவனோடு பணியாற்ற முடியுமா என்ன? அதே அளவுக்கு அவன்மேல் சிறு கோபமும் கொண்டிருப்பவள்.

பிரம்மா இப்பொழுது விசாரிக்கும் கேஸ் அவ்வளவு முக்கியமானது என்பதால், அவளை அழைத்து விஷயத்தை உரைத்தார் கந்தன். முதலமைச்சரே நேரடியாக அழைத்து, பிரம்மாவை அந்த கேசை விசாரிக்கச் சொல்லியிருக்கிறார் என்றால், பிரம்மாவின் திறமையை அறிந்து கொள்ளலாம்.

அவர் அங்கிருந்து நகர்ந்த பிறகுதான் காயத்ரிக்கு இயல்பாக மூச்சு விடவே முடிந்தது.

‘ஏண்டி..., ஒரு சாதாரண டிரைவர்..., அவருக்கே இப்படி பயப்படுற..., இதில் எஸ்பியை நீ கொல்லப் போறியா?’ மனசாட்சி இடித்துரைக்க,

‘நான் அவனை கொன்னே ஆகணும்..., கொல்வேன்...’ இழந்த தைரியத்தை மீட்டுக் கொண்டாள். ஆனால்..., எப்படி உள்ளே போய் அவனைக் கொல்வது என அவளுக்குத் தெரியவில்லை.

ஐசியூக்குள் செல்லவேண்டும் என்றாலே கந்தனை அவள் தாண்டிச் செல்ல வேண்டும். அப்படி இருக்கையில்..., அவரை எப்படி அங்கே இருந்து நகர்த்த முடியும்? குழம்பிக் கொண்டு நின்றிருந்தாள்.

அவள் அங்கே நிற்கும் வேளையே..., அவளைத் தாண்டிச் சென்ற ஒருவன், நேராக கந்தனிடம் சென்று, எதையோ சொல்ல, கந்தன் வேகமாக அங்கே இருந்து கிளம்பிச் செல்வது அவளுக்குத் தெரிந்தது.

கூடவே..., புதிதாக வந்தவன் ஐசியூ கதவைத் தட்டி..., ஜான்சியை அழைத்து, அவளிடமும் எதையோ சொல்ல..., அவளும் லிப்ட்டை நோக்கிப் போவதை உணர்ந்தாள்.

‘எதுவோ சரியில்லை’ என காயத்ரியின் மனம் உரைக்க, அதை மெய்ப்பிப்பதுபோல், வந்தவன்..., லிப்ட்டை திறந்து, இடையில் ஒரு ஸ்டூல் வைத்து அதை நிறுத்திவிட்டு, வர, அவளுக்குப் பின்னால் இருந்து இரண்டு மூன்றுபேர் தடதடவென பிரம்மா இருந்த அறை பக்கம் ஓட, அவளுக்கு ஒரு நொடி நடப்பது என்னவென்றே புரியவில்லை.

வந்தவர்களோ தங்களுக்குள்..., ‘போ..., போ...’ என்பதுபோல் ஜாடையில் பேச, தன் வேலை சுலபமாக முடியப் போகிறது என்பதையும் மீறி..., ‘என் கையால்தான் அவன் சாகணும்..., இப்படியெல்லாம், மத்தவங்க கையால் சாக விட்டு விடுவேனா?’ எண்ணியவள்,

“ஹல்லோ..., நீங்கல்லாம் யார்...? இங்கே என்ன பண்றீங்க?” ஐசியூ கதவை பூனைபோல் திறந்து கொண்டிருந்தவர்கள், அவள் குரல் கேட்கவே சட்டென அதை அப்படியே நிறுத்தி விட்டார்கள்.

“ஏய்..., இது யார்டா...?” ஒருவன் குரல் கொடுக்க,

“ஷ்..ஷ்..ஷ்...” மற்ற அனைவரும் குரல் கொடுத்தவனை அடக்க, பார்வையால் ஒருவரை ஒருவர் நொடியில் பேசிவிட்டு, இருவர் அவளை நோக்கி வர, இருவர் அறைக்குள் செல்ல முயன்றார்கள்.

“உயிர்மேலே ஆசை இருந்தால் பேசாமல் போய்டு...” அவளை நெருங்கி வந்தவர்கள் உரைக்க, கொலை செய்வதற்கே தைரியமாக வந்தவள், அவர்களைப் பார்த்து பயப்படுவாளா என்ன?’

“நான் சத்தம்போட்டு எல்லாரையும் கூப்பிடுவேன்...” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே,

உள்ளே நுழைந்தவர்களோ..., போன வேகத்தில் வெளியேறி..., “அவன் கண் முழிச்சு இருக்காண்டா..., இப்போ எதுவும் முடியாது போங்க...” கிட்டத்தட்ட ஓடிகொண்டே உரைத்தார்கள்.

அந்த இருவரும் ஓடவே..., காயத்ரியின் அருகில் இருந்தவர்களும், ஆளுக்கொரு திசையில் சிதறி ஓட, ஐசியூ வாயிலில் அவளைப் பார்த்தவாறு நின்றிருந்தான் பிரம்மா.

அவர்கள் பின்னால் போகச்சொல்லி அவனது புலன்கள் அனைத்தும் உரைத்தாலும், போக முடியாமல் அவனது உடல்நிலை ஒத்துழைக்க மறுத்தது. கண்கள் ஒரு மாதிரி இருட்டிக் கொண்டு வர, மனதின் வேகத்துக்கு உடல் ஒத்துழைக்க மறுத்தது.

“நீதான் இப்போ பேசினதா...? அவங்க யார்ன்னு முகம் பாத்தியா? உனக்கு அடையாளம் தெரியுமா? கந்தன் எங்கே...?” படபடத்தான்.

“எனக்குத் தெரியாது...” கோபமாக உரைத்தவள் திரும்பி நடக்க, வேகமாக அவள் எதிரில் வந்தார்கள் கந்தனும், ஜான்சியும், ஷீபாவும்.

அங்கே நடந்தது எதுவும் அவர்களுக்குத் தெரியாது என்பதால்..., சிறு குழப்பமும், பதட்டமும் அவர்கள் முகத்தில் போட்டி போட்டது.

“சார்...” கந்தன் அவன் அருகில் விரைய, அவர் முகத்திலோ பெரும் கவலை. ஆனால்..., ஷீபாவின் முகத்திலோ, ஜான்சியின் முகத்திலோ கவலை என்பது மருந்துக்கும் இல்லை, மாறாக..., ‘இது இப்படி ஆகும் என எங்களுக்குத் தெரியும்...’ என்ற முக பாவனை.

“கந்தன்..., அவளை நிக்கச் சொல்லுங்க...” கை நீட்டி காயத்ரியைக் காட்டினான்.

“இதோ சார்...” உரைத்தவர், “இந்தம்மா..., பொண்ணு...” அவள் பின்னால் ஓடிபோய் அவளைத் தடுக்க முயன்றார். ஆனால் அவளோ..., வேகமாக படிகளில் இறங்கியவள், அங்கே ஒரு நொடி கூட நிற்கவில்லை.

அவள் பின்னால் போக முயன்ற கந்தனை, “கந்தன்..., வாங்க...” அவன் குரல் கொடுக்கவே, வேகமாக திரும்பி வந்தவன்,

“சார்..., டிஐஜி கீழே வெயிட் பண்றார்ன்னு என்கிட்டே சொல்லி போகச் சொன்னாங்க, கீழே போனா யாரும் இல்லை, அதான் வேகமா வர்றேன்..., இங்கே எதுவும் பிரச்சனையா சார்..., ஏன் அந்த பொண்ணை நிக்கச் சொன்னீங்க? உங்களுக்கு தெரிஞ்சவங்களா?” அவர் சொல்ல, அவனது பார்வையோ..., தூரத்தில் செல்லும் காயத்ரியின் முதுகையே வெறித்தது.

அவள் கண்களில் தெரிந்த கோபம்..., இப்பொழுது ஷீபாவின் கண்களில் தெரியும் அலட்சியம்..., ஜான்சியின் முகத்தில் இருக்கும் பாவனை..., அதைவிட சற்று நேரத்துக்கு முன்னர் தன் அறைக்குள் நுழைந்தவர்கள், தான் அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு ஓடியதன் காரணம் அவனுக்குப் புரியவே இல்லை.

மறுப்பாக தலை அசைத்தவன், ஷீபாவைப் பார்க்க, அவன் தன்னிடம் எதையோ பேச விரும்புவதை உணர்ந்து, அவன் பின்னால் அறைக்குள் வந்தார்.

“பிரம்மா..., நீங்க ரெஸ்ட் எடுங்க..., எதுவாக இருந்தாலும் ரெண்டு நாள் கழித்து பேசலாம்..., ஈவினிங் உங்களை ரூமுக்கு ஷிப் பண்றோம்...” அவர் சொல்லிக்கொண்டே போக, கூர்மையாக அவரை ஏறிட்டான்.

“இப்போ வந்தவங்களை நீங்கதான் அனுப்பினீங்களா?” அவன் கேட்க, கோபம் கொப்பளிக்க அவனை ஏறிட்டார்.

*****

# பகுதி – 3.

ஷீபாவுக்கு ஒரு நிமிடம் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ஏற்கனவே பிரம்மாவை அவருக்குத் தெரியும்…, அவனோடு முன்னர் ஏற்பட்ட அனுபவங்கள் எதுவும் சொல்லிக்கொள்ளும்படி கிடையாது. அனைத்தும் கோபமான அனுபவங்களே…, அதை வைத்துதான் அவன் மேல் கோபமாக இருக்கிறார்.

அவன் பெரிய அதிகாரியாக இருக்கலாம், அதற்காக…, அவன் என்ன சொன்னாலும் கேட்டுக் கொண்டிருக்க அவரால் முடியுமா?

ஆத்திரமாக அவனை முறைத்தவர், “மிஸ்டர் பிரம்மா…, மைன்ட் யுவர் வேர்ட்ஸ்…, ஒரு உயிரை காப்பாற்றுவதுதான் என் வேலை, அதை விட்டு, உங்களது சந்தேகத்துக்கெல்லாம் என்னால் விளக்கம் கொடுக்க முடியாது” கோபமாகவே உரைத்தார்.

“சார்…, எதுவும் பிரச்சனையா…?” கந்தன் மீண்டுமாக கேட்க,

“டிஐஜி வந்திருக்கார்ன்னு யார் சொன்னாலும் இப்படித்தான் போவீங்களா? அது உண்மையா இல்லையான்னு கன்ஃபாம் பண்ணிக்க மாட்டீங்க? இத்தனை வருஷ அனுபவத்தில் இதை கூடவா கத்துக்கலை? இப்போ நாலுபேர் இங்கே வந்துட்டு போறாங்க. எதுக்கு வந்தாங்கன்னு தெரியலை, ஆனா, நல்ல விதமா நினைக்க முடியலை” அவன் சொல்ல, இதற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“மிஸ்டர் பிரம்மா…, நீங்க இப்போ இருக்கும் நிலைக்கு இந்த கோபம் நல்லதில்லை…” ஷீபா இடைபுக, தன்மேல் இருக்கும் கோபத்திலும், ஒரு சிறந்த மருத்துவராக அவர் தன் கடமையைச் செய்ய, அவர்மேல் இருந்த சந்தேகம் கொஞ்சம் விலகியது என்றே சொல்லலாம்.

‘பிரம்மாவின் திறமையும் வேகமும் அறிந்தவர் என்பதால்…, கந்தனுக்கு கவலை தோன்றவில்லை, கூடவே அவனது

கோபமும் அவரை பாதிக்கவில்லை. ஆனால் அவனது இப்போதைய நிலை கவலை அளித்தது.

கந்தனின் செய்கையில் உள்ளுக்குள் திகைத்துப் போனான் பிரம்மா. ‘நான் இவ்வளவு சொல்கிறேன்..., கொஞ்சம் கூட கண்டுகொள்ளாமல் இருந்தால் என்ன அர்த்தம்?’ எண்ணியவன் அவரிடம் உடனடியாக எதையும் கேட்கவில்லை.

கந்தனை பிறகு கவனிக்கலாம் என முடிவெடுத்தவன், “டாக்டர் ஒரு நிமிஷம்...” அழைத்தவன் அறைக்குள் நுழைய, அவன் பின்னால் சென்றார்.

தன் படுக்கையில் ஏறி அமர்ந்தவன் ஷீபாவின் முகம் பார்க்க, தன்னை மீட்டுக் கொண்டவர், அவன் எதிரில் அசையாமல் நின்றார். அவரைப் பார்த்தவன், “உங்களுக்கு என்மேல் என்ன கோபம்?” நேரடியாக கேட்க, சற்று திகைத்தார்.

‘ம்கும்..., இவன் இப்படி கேக்கலை என்றால்தான் ஆச்சரியம்...’ எண்ணியவர், “இதுக்கு முன்னாடி நாம சந்தித்த இரண்டு மூன்று சந்திப்புகளும் சரியா அமைந்தது இல்லை...” குரல் இப்பொழுது சாதாரணமாகவே இருந்தது.

“அது என்னன்னு கொஞ்சம் சொல்ல முடியுமா?” அவன் கேட்க,

“பிரம்மா, இப்போதான் நீங்க கொஞ்சம் சரியாகி இருக்கீங்க, உடனே இந்த ஆராய்ச்சி எல்லாம் அவசியமா? கொஞ்ச நாள் போகட்டும்...” ஒரு மருத்துவராக அவன் உடல்நிலை அவருக்கு பிரதானமாக இருந்தது.

“இல்ல..., எனக்கு ஏதாவது ஞாபகத்துக்கு வருதான்னு தெரிஞ்சுக்கணும்” அவன் இறுக்கமாக உரைக்க, அவனது பிடிவாதத்தை உணர்ந்தவர், “சொல்றேன்...” உரைத்தவரது சிந்தைகள் அந்த நாட்களுக்கு சஞ்சரித்தது.

**அன்று மதியான நேரம்..., ஷீபா தன் வேலை நேரம் முடிந்து வீட்டுக்கு கிளம்பிக் கொண்டிருக்க, ஒரு விபத்து

கேஸ் அவசரமாக அவர்களது மருத்துவமனைக்கு கொண்டுவரப் பட்டது. மதிய நேரமாகையால், பெரும்பாலான மருத்துவர்கள் அங்கே இருக்கவில்லை.

கூடவே சில போலீஸ் தலைகளும் தென்பட, வரவேற்பறை சிறு பரபரப்புக்கு உள்ளானது. அந்த நேரம் அங்கே வந்த ஷீபாவைப் பார்த்தவன், “டாக்டர்..., இவன் இப்போ..., உடனே பேசியாகணும்..., ஏதாவது செய்ங்க..., குயிக்...” அவரை அவசரப்படுத்தினான்.

“இந்த பக்கம் வாங்க...” வேகமாக கீழே இருந்த எமர்ஜென்சி அறைக்கு அழைத்துச் சென்றவர், அவசரமாக ஆக்சிஜன் மாஸ்க்கை அவனுக்கு பொருத்திவிட்டு, ஒரு இன்ஜெக்ஷன் போட்டார்.

அவனது பல்ஸ் ஏறி இறங்க..., அது பலகீனமாக இருந்தது. “ஹெவி பிளட் லாஸ்..., ப்ரெயின் டெத் ஆக சான்ஸ் இருக்கு...” அவர் சொல்லிக்கொண்டே அவனுக்கு உதவி செய்ய, வேகமாக அவரை விலக்கித் தள்ளினான்.

அவ்வளவுதான், அவரது வார்த்தையை கேட்டவன், அடுத்த நிமிடம் ஷீபாவை பிடிவாதமாக விலக்கிவிட்டு, உக்கிர மூர்த்தியாக அவனை நெருங்கினான்.

“டேய்..., டேய்..., எங்கே வச்சிருக்க...? சொல்லு...” அவனது இமைகள் லேசாக அசைய அவன் கன்னத்தில் வேகமாக அறைந்தான்.

அதைப் பார்த்தவர், “ஹல்லோ..., என்ன பண்றீங்க...? ஹி இஸ் எ பேஷண்ட். ஹி இஸ் பிளீடிங்...” கிட்டத்தட்ட கத்தினார்.

“ஷ்...” ஒற்றை விரலை வாய்க்கு குறுக்காக வைத்தவன், கண்களை உருட்டி பயங்கரமாக முறைத்தான். ‘விலகிப் போ...’ அவன் பார்வையில் எச்சரிக்கை வழிந்தது.

கூடவே..., அவனது ஆக்சிஜன் மாஸ்க்கை உருவ..., அவனது உடல் தூக்கிப் போட்டது. “நோ..., அப்படி செய்யாதீங்க...”

அவனது கையில் இருந்து மாஸ்கை பிடுங்க முயல, தூசிபோல் அதை தள்ளியவன்,

“டேய்..., இப்போ நீ வாயைத் தொறக்கலை..., இந்த மாஸ்கை அப்படியே தூக்கி போட்டுட்டு போயிட்டே இருப்பேன். உன் உயிர் இப்போ என் கையில் இருக்கு. மரியாதையா சொல்லு...” உச்ச கோபத்தில் கத்தியவன், அடுத்த நிமிடம் மாஸ்கை அவன் மூக்கில் வைத்து அவனது சுவாசத்துக்கு உதவினான்.

அவன் உடல் உதற..., “சார்..., என்..னை கா..கா..ப்பாத்துங்க சா..ர்...” உயிர்பயத்தில் கெஞ்சினான்.

“அப்போ நீ வாயைத் தொறக்கணும் சொல்லு...” அவன் செய்கையில் சுற்றி இருந்தவர்களுக்கே குளிர் பிறந்தது. பிரம்மாவின் பார்வை மானிட்டரில் பதிய, அது அவனுக்கு திருப்தியை அளிக்கவில்லை. எந்த நிமிடமும் அவன் உயிர் பிரியலாம்..., அவன் அறிவு உரைக்க, “பாம் எங்கே இருக்கு சொல்லுடா? எத்தனை கிலோ..., என்ன டைப்...? எப்போ வெடிக்கும்?” இப்பொழுது மாஸ்கை விலக்க,

“பிரம்மா..., இட்ஸ் நாட் பேர்...” ஒரு உயிரை காக்கும் நிலையில் இருப்பவருக்கு, அவன் அதை துடிக்க வைக்க, தாள முடியவில்லை.

ஷீபாவின் அலறலை கிஞ்சித்தும் கணக்கில் கொள்ளவே இல்லை அவன்.

“பா..., பா..டி மார்க்..கெட்..., போ..., போ..., ஸ்ட் பாக்..., பாக்..., ஸ்..., ரெண்டு கிலோ..., ப..., ப..., ப...,த்து ம..., ம..ணி..., சார்...” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே மானிட்டர் முடங்க, அவன் தலை தொய்ந்து விழுந்தது.

பட்டென தன் மணிக்கட்டை திருப்பிப் பார்க்க, அதுவோ இன்னும் பதினைந்து நிமிடங்களே எஞ்சி இருப்பதைக் காட்டியது. “ஷிட்..., பாஸ்டர்...” அவன் இறந்துவிட்டான் என்பதையும் மறந்து, மீண்டுமாக அவன் கன்னத்தில் அறைந்தவன், கண்ட்ரோல் ரூமுக்கு அழைத்து விஷயத்தை உரைத்தான்.

“கந்தன்..., பாடியை ஜிஹெச் கொண்டு போங்க...” உரைத்தவன் அடுத்த கட்டமாக அங்கிருந்து நகர முயல, அவன் வழியை மறித்தார் ஷீபா.

“ஒரு கொலையை பண்ணிட்டு எப்படி உங்களால் இப்படி இருக்க முடியுது? கண்ணு முன்னாடி ஒரு உயிர் துடிக்குது, கொஞ்சம் கூட இரக்கமில்லாமல், உங்க வேலை உங்களுக்கு முக்கியம் இல்ல...” ஆத்திரமாக கேட்க, அவரை அசராமல் பார்த்தான்.

அவன் கண்களில் வழிந்த தீட்சண்யம் அவரை உள்ளுக்குள் பயம் கொள்ள செய்தாலும் அவனிடம் கேட்டார். “அவன் தியாகி இல்லை...” கடித்த பற்களுக்கிடையில் வார்த்தையை துப்ப, அவளுக்கு எரிச்சலாக வந்தது.

“நான் ஒரு உயிர் பத்தி பேசறேன்...” மருத்துவரான அவருக்கு ஒரு உயிர் போனது மட்டுமே பிரதானமாக இருக்க, கோபமாக கத்தினார்.

“ஒரு உயிருக்கு பாத்தா..., நூறு உயிர் போய்டும் பரவாயில்லையா...? இப்போ என் வழியை விட்டு விலகுங்க..., இல்ல..., என்னை டியூட்டி செய்ய விடலன்னு உங்க மேலே சார்ஜ்ஷீட் எழுதி, உங்களையும் உள்ளே வைக்க வேண்டி இருக்கும்...” ஒற்றை கையால் அவரை விலக்கித் தள்ளியவன் தன் ஜீப்பில் ஏறி பறந்தான் பிரம்மா.

*இன்று, அவர் சொல்லி முடிக்க, உணர்வுகளை துடைத்த முகத்தோடு அவரை ஏறிட்டான். கூடவே..., இமைகளை சற்று அழுத்தமாக மூடியவன், இடக்கை நடுவிரலால், இடத்து புருவத்தை அழுத்தமாக தேய்த்துக் கொண்டான்.

அவன் என்ன யோசிக்கிறான்’ என்பதுபோல், அவனையே பார்த்துக் கொண்டிருந்தார் ஷீபா. இமை திறந்தவன், “அந்த நேரம் நான் அப்படி நடந்துக்கலன்னா, அவன் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு இருக்கா?” அவன் நிதானமாக கேட்க, அவரது தலை தயக்கமாக மறுப்பாக தலை அசைத்தது.

“பிறகு எதுக்கு இவ்வளவு எமோஷனல்? அந்த பாம் வெடித்து..., நூறுபேர் உங்க ஹாஸ்பிடல் வந்திருக்க வேண்டியவங்க வராமல் போய்ட்டாங்கன்னு ரொம்ப பீல் பண்றீங்களோ?” நக்கலாக வினவ, உள்ளுக்குள் மூண்ட எரிச்சலோடு அவனைப் பார்த்தார்.

“உங்களுக்கு நல்ல விதமாகவே பேசத் தெரியாதா?” அவர் கேட்க, வெகு அசால்ட்டாக தோளை குலுக்கினான்.

கூடவே..., “சரி வேற...” அடுத்த நிகழ்வை அவன் கேட்க, “அது, அதைவிட கொடுமை...” உரைத்தவர்..., அன்றும் அவர் வேலையில் இருக்க, இரண்டு மூன்று குற்றவாளிகளை கூட்டி வர, அனைவருக்குமே கை கால் உடைந்து ஒரு கண் குருடாக்கப் பட்டிருந்தது.

“ஹல்லோ என்ன இது...? உங்களுக்கெல்லாம் மனசாட்சியே இல்லையா?” அவன் முன்னால் நின்று கத்த,

“கொஞ்சமாவது இருக்கப் போய்தான் அவனுங்களை இங்கே கூட்டி வந்தேன்...” உரைத்தவன் தன் போனை நோண்ட, அருகில் இருக்கும் சர்ஜிக்கல் கத்தியை எடுத்து அவனுக்கு ஒரு ஆழமான காயத்தை கொடுத்தால் என்ன என்று ஆத்திரம் வந்தது.

“கை காலை சரி பண்ணிடலாம்..., இந்த கண்ணு...” அவளுக்கு தாங்கவே முடியவில்லை.

“அந்த இன்னொரு கண்ணை விட்டு வைக்க வேண்டி இருக்கேன்னு நான் கொலை வெறியில் இருக்கேன்..., தயவு செய்து...” இடக்கையை நீட்டி ஐந்து விரல்களையும் விறைப்பாக வைத்து அவளை விலகிச் சென்று வேலையை பார்க்கச் சொல்ல,

“ச்சே..., உங்ககிட்டே போய் பேச வந்தேனே...” வெறுப்பை உமிழ்ந்தவர் தன் வேலையைப் பார்க்கப் போனார்.

அவர் கோபத்தில் கொஞ்சம் கூட பாதிக்கப் படாமல், கோபம் கொப்பளிக்க நின்று அந்த குற்றவாளிகளை முறைத்துக் கொண்டிருந்தான். அவங்களோ, நடுங்கிப்போய் கோழிக்

குஞ்சாக எங்காவது பதுங்க இடம் கிடைக்குமா என பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த விஷயத்தை அவர் உரைத்து முடிக்க, “அவங்க என்ன பண்ணாங்களாம்? அதுக்கு நான் ஏன் அப்படி செய்தேனாம்?” என் செயலில் நியாயம் இருக்கும் என்ற அவனது கர்வம் வார்த்தையில் தெறித்தது.

“அதை நீங்களே கண்டு புடிங்க..., ஏன் என்கிட்டே கேக்கறீங்க?” அதென்னவோ அவனிடம் பேசினாலே அவரது பிபி எகிறியது.

“ஹா..ஹா...ஹா...” முதல் முறையாக வாய் விட்டு சிரித்தான். அவனது சிரிப்பை கேட்டு, வெளியே இருந்த கந்தனே உள்ளே ஓடி வந்து வியப்பாக பார்த்தார். அவர் அப்படி பார்ப்பதை உணர்ந்த பிறகுதான், ‘நான் சிரிக்கவே மாட்டேனா?’ எண்ணியவன் சிரிப்பை பட்டென நிறுத்திக் கொண்டான்.

“நான் பாத்தாலும் பாத்தேன்..., இப்படி ஒரு கேரக்டரை பாத்ததே இல்லை. ஒரு பெர்சன்ட் கூட உங்களுக்கு இந்த நிலையை நினைத்து பயமா, குழப்பமா இல்ல...” கேட்ட பிறகுதான், ஒரு மருத்துவராக இப்படி ஒரு கேள்வியை அவனிடம் கேட்டிருக்கவே கூடாது என உணர்ந்தார்.

“எதுக்கு பயம்? என் பெயர், வேலை..., என்னைத் தெரிந்த நீங்க..., எல்லோரும் எனக்குத் தெரியுது. பிறகு எதற்கு பயப்படணும்?” அசராமல் கேட்க, கேட்டவர்களுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது.

கந்தன் வெளியே செல்ல, “சரி..., ரெஸ்ட் எடுங்க..., சாயங்காலம் ரூமுக்கு மாத்தறேன்...” அவரும் கிளம்ப முயன்றார்.

“டாக்டர்..., நான் கேட்டதுக்கு பதில் சொல்லிட்டு போங்க...” அவன் குரலில் என்ன இருந்தது? ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டார்.

“அது ஒரு கேங்..., அதாவது குழந்தைகளை கடத்தி, பிச்சை எடுக்க வைக்கும் கும்பல்...” சின்னக் குரலில் உரைக்க,

“அப்போ அவங்களுக்கு நான் கொடுத்த தண்டனை ரொம்ப கம்மி...” கை முஷ்டி இறுக அவன் உரைக்க, “பிரம்மா..., நீங்க ரொம்ப எமோஷனல் ஆகுறது நல்லதில்லை...” உரைத்தவர், வெளியே செல்லப் போகையில்,

“வெளியே தெரியும் நீங்க..., நீங்க இல்லை பிரம்மா..., ரொம்ப யோசிக்காதீங்க” அவரது பதினைந்து வருட அனுபவம் அப்படி பேசச் சொன்னது.

அவர் சென்றுவிட, அவர் வீசிச் சென்ற வார்த்தைகளின் கனம் தாளாமல், தன் இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டான் பிரம்மா. ‘ஆமா..., இது நான் இல்லை..., அவங்க இவ்வளவு சொன்ன பிறகும் எனக்கு ஏன் எதுவும் நினைவுக்கு வரலை...? இந்த அழுத்தத்தை என்னால் தாங்க முடியவில்லையே’ தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

வெளியே அவன் தன்னை திடனாக காட்டிக் கொண்டாலும், உள்ளுக்குள் விடாமல் துரத்தும் உணர்வுகள், ஒருவித பயம்..., அழுத்தம்..., தலை வலி தெறித்தது. அதை அவன் வெளியே காட்டிக்கொள்ள முயலவில்லை என்றாலும், ஒரு மருத்துவராக அவனை, ஷீபாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

எனவேதான் அவ்வாறு சொல்லிச் சென்றார்.

அவன் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, அவன் கரத்தில் ஏதோ ஒரு ஊசியை ஜான்சி செலுத்த, ‘ஷீபா எதையோ சொல்லியிருக்கிறாள்...’ எண்ணுகையிலேயே அவன் கண்கள் தாமாகவே உறக்கத்துக்குச் செல்ல, உறங்கிப் போனான்.

***

கடற்கரையின் ஓரம் அமர்ந்திருந்த காயத்ரிக்கு உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ‘அவனை அவ்வளவு

அருகில் பார்த்தும் என்னால் எதுவும் செய்ய முடியவில்லையே..., என்கிட்டேயே கேக்கறான்..., அவங்களை பாத்தியான்னு..., பாத்தாலும் உன்கிட்டே சொல்ல மாட்டேண்டா...’ கோபம், கோபம்..., அது மட்டுமே இருந்தது.

அவன் பார்வையில் ஒரு நொடி நடுங்கிய அவளது நிலை, அவனை நேரில் கண்டதும் சில்லிட்ட அவளது தேகம்..., ‘எனக்கு தைரியமே இல்லை..., சுத்தமா இல்லை...’ தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

மதிய வெயில் மண்டையில் இறங்குவது கூட உறைக்கவில்லை. காலையில் சாப்பிடாதது, மதிய வேளையும் நெருங்க, பசி வேறு வயிற்றைகிள்ளியது.

இந்திராயும் தனக்காக காத்திருப்பாள் என்பது புரிய, தன் கைப்பையை எடுத்தவள், பஸ் ஸ்டப் வந்து, பேருந்தில் ஏறி ஹாஸ்டல் வந்து இறங்கினாள்.

அவளை முழுதாக பார்த்த பிறகுதான் இந்திராக்கு நிம்மதியாக மூச்சு விடவே முடிந்தது. “ஹப்பா..., வந்துட்டியா? எவ்வளவு நேரம்டி...? போன் பண்ணலாம்னா அதையும் இங்கேயே விட்டுட்டு போய்ட்ட...” அவள் புலம்பிக் கொண்டிருக்க, தலையில் கை வைத்தவாறு படுக்கையில் அமர்ந்திருந்தாள் காயத்ரி.

“என்னடி ஆச்சு...?” அவள் அப்படி அமர்ந்திருப்பது பொறுக்காமல் கேட்டாள்.

“ஒண்ணுமே ஆகலை...” கலங்கிய குரலில் உரைக்க, ‘ஹப்பாடா’ என மூச்சு விட்டாள் இந்திரா.

“காயத்ரி..., மறுபடியும் சொல்றேன்னு நினைக்காதே. நமக்கு இதெல்லாம் வேண்டாம்டி..., படிப்பை முடிச்சுட்டு, ஒரு நல்ல வேலைக்குப் போய், நம்ம வழியில் போய்டலாம்..., அவரை கடவுள் தண்டிக்கட்டும்...” தோளோடு அணைத்துக் கொண்டாள்.

“அப்போ என்னால் எதுவுமே முடியாதுல்ல…, அவன் நிம்மதியா இருப்பான், நான் இப்படி பயித்தியக்காரி மாதிரி சுத்திட்டு இருக்கணுமா?” எதுவும் செய்ய இயலாத நிலையை அடியோடு வெறுத்தாள்.

“அது அப்படி இல்லடி…, விதி வந்தது…, போய்ட்டாங்கன்னு மனசை சமாதானப் படுத்திக்கோ. அப்படி இல்லன்னா மொத்த நிம்மதியும் போய்டும். நம்மளால் கொலை எல்லாம்.. முடியாது காயத்ரி…” இந்திரா சொல்லச் சொல்ல, அழுகை பொங்கியது.

“நானெல்லாம் வேஸ்ட் பீஸ்…, ஆனா இதை இப்படியே விட மாட்டேன்டி, கண்டிப்பா வேற வழியை யோசிப்பேன்…, அவனுக்கு சாவு பயத்தை காட்டணும்டி…, அது எப்படி இருக்கும்னு அவனுக்குத் தெரியணும்…” புலம்பித் தள்ளினாள்.

“இவன் சுடப்போன அந்த நிமிஷம்…, என் அண்ணா எவ்வளவு தவித்திருப்பான், கெஞ்சியிருப்பான்…, அதையெல்லாம் நினைக்கும்போது, ஒரு நிமிஷம் கூட என்னால் நிம்மதியா இருக்க முடியலை…” சொல்லுகையிலே கண்ணீர் வழிந்தது.

‘இப்படி யோசித்து யோசித்தே கரைந்து போகிறாளே…’ இந்திராவால் எண்ணத்தான் முடிந்தது.

“சரி…, சரி…, முதல்ல சாப்பிடு…, பசியில் இருந்தால் எதையும் தெளிவா யோசிக்க முடியாது” அவளுக்கான உணவை அறைக்கு கொண்டு வந்திருந்தவள் அவளை உண்ண வைத்தாள்.

அவள் சாப்பிட்டு முடிக்கும் வரைக்கும் அமைதியாக இருந்த இந்திரா, அவள் உண்டு முடித்து கை கழுவிவிட்டு வரவே, “அங்கே என்னடி ஆச்சு? உள்ளே போகவே முடியலையா?” அவளுக்கு அங்கே என்ன நடந்தது எனத் தெரிந்தே ஆக வேண்டும்போல் இருந்தது.

“அவனைக் கொல்ல நான் மட்டும் போகலை, எனக்கு பின்னாடியே இன்னும் நாலு பேர் வந்தாங்க. ஆனா,

அவங்களும் எதுவும் செய்யாமல் போய்ட்டாங்க. அவனுங்க எல்லாம் தடி தடியா இருந்தாங்க, அவங்களே கிட்டே போக யோசிச்சாங்க அதுதான்…” யோசனையாக உரைத்தாள்.

“ஏய்…, என்னடி சொல்ற? அங்கே யாராவது உன்னைப் பாத்தாங்களா?” பதறினாள்.

“ம்ச் நீவேற கடுப்பை கிளப்பாதே…, அவனே பாத்துட்டான்…”

“என்னடி சொல்ற…? உன்னை அடையாளம் கண்டுகொண்டால் என்ன செய்வ?” உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

“பாத்துக்கலாம் விடு. அவனைக் கொல்ல இப்போ வேற ஐடியா வச்சிருக்கேன்” அவள் சொல்ல தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“என்ன சொன்னாலும் கேக்க மாட்டியா? அதான் அவரைக் கொல்ல வேற யாரோ ட்ரை பண்றாங்கன்னு சொல்றல்ல…, அவங்களே பாத்துப்பாங்க. நீ உன் வேலையைப் பார்…” காயத்ரி இப்பொழுது கொஞ்சம் பின்வாங்கியிருப்பதுபோல் தோன்றவே உரைத்தாள்.

“இல்லடி…, அவனுக்கு என் கையால் தண்டனை கொடுக்கணும். நான் கராத்தே கத்துக்கப் போறேன்…” அவள் உரைக்க, ‘இது தேறாதே கேஸ்…’ எண்ணிய இந்திரா, முறைப்பாக அவளை பார்த்துக் கொண்டிருந்தாள்.

“கராத்தே ஒரு தற்காப்பு கலை…, கொலை கலை கிடையாது…” அவள் முனக, “அதை நான் என் பங்குக்கு யூஸ் பண்ணிப்பேன்…” அவள் சொல்ல, “ஆ..வ்…” இந்திரா கொட்டாவி விட, ‘செய்து காட்டறேன் பார்’ உள்ளுக்குள் கறுவிக் கொண்டாள்.

இந்திராவோ…, ‘உள்ளுக்குள்ளே இவ்வளவு பயம் வச்சிருக்கா…, கண்டிப்பா பெருசா எதையும் செய்ய மாட்டா…’ தைரியமாகவே எண்ணிக் கொண்டாள்.

***

மாலையில் தனியறைக்கு மாற்றப் பட்டவுடன், முதல் வேலையாக முகேஷுக்கு அழைத்தான் பிரம்மா. ஆயிரம் யோசனைகளுக்கு மத்தியில்தான் அழைத்தான். ‘அவனோடு என் உறவு எப்படிபட்டது? எனக்கு விபத்து நேர்ந்து இத்தனை நாள் ஆகியும் ஏன் என்னை வந்து பார்க்கவில்லை? ஒரு வேளை அவனிடமும் முறைத்துக் கொண்டுதான் இருந்தேனா?

‘தங்கச்சி...’ என்ற பெயரில் இரண்டே இரண்டு மிஸ்ட் கால் இருந்ததே..., அதற்குமேல் அவள் ஏன் அழைக்கவில்லை? அவளிடமும் நான் ஒழுங்காக பேசுவது கிடையாதா?’ மண்டை வெடிக்கும் உணர்வு.

இருக்கும் சூழ்நிலையில் அவனைத் தவிர யாரும் உதவிட முடியாது என்ற எண்ணம் தோன்றவே, தன் யோசனைகள், குழப்பங்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு அழைத்தான்.

முதல் ரிங் முடியும் முன்பே அழைப்பு எடுக்கப்பட, “பிரம்மா..., எப்படி இருக்க? இப்போதான் கண் விழித்தாயா?” ஒரு கம்பீரமான குரல் பாசமாக செவிகளைத் தீண்ட, ‘இந்த குரலை எங்கேயாவது கேட்ட நினைவு இருக்கிறதா?’ தன்னையே கேட்டுக் கொண்டான்.

என்ன முயன்றாலும் நினைவிற்கு வரவில்லை. “ஹலோ..., பிரம்மா..., பேச முடியலையா? பரவாயில்லை..., நீ போன் செய்ததே எனக்குப் போதும்...” தன்னை புரிந்துகொண்டவனாக அவன் உரைக்க, முழுதாக ஒரு நிமிடம் எதையும் பேசவில்லை.

அவனது மௌனம் வித்தியாசமாக இருக்க, “பிரம்மா..., எனி ப்ரோப்ளம்?” அவன் குரலில் இப்பொழுது ஒரு கவனம் வந்திருக்க,

“முகேஷ்..., இஃப் யூ டோன்ட் மைன்ட்..., இங்கே கொஞ்சம் வர முடியுமா?” அவனது சூழல் என்னவென்று புரியாமல், அழைத்தால் வருவானா எனவும் தெரியாமல், தயக்கமாகவே கேட்டான்.

அவன் அப்படிக் கேட்கவே, அடுத்த நிமிடம், “நான் இப்போவே கிளம்பி வர்றேன்..., நைட் உன் முன்னாடி இருப்பேன்” அலைபேசியை வைத்தவனது புருவம் யோசனையில் சுருங்கியது.

‘என்னை கூப்பிடுறான்னா..., கண்டிப்பா ஏதோ பெரிய பிரச்சனை இருக்கு. இல்லைன்னா என்னை கூப்பிடவே மாட்டான்’ முகேஷ் எண்ணியது அதைத்தான்.

அதே நேரம் பிரம்மாவும், ‘நான் இதுவரை யாரிடமும் உதவி என கேட்டதே இல்லையா? அவன் குரலில் இருந்த அதிர்வு, பல மயிலுக்கு அப்பால் என்றாலும் அதை என்னால் உணர முடிந்ததே’ தானும் எண்ணியவன், முகேஷ் வரட்டும் என எண்ணியவாறு படுத்துக் கொண்டான்.

முகேஷ் அலைபேசியில் பேசிவிட்டு அமைதியாக இருப்பதைப் பார்த்த கௌசிகா, “என்னங்க..., யார் போன்ல...? ஏன் அப்படியே நின்னுட்டீங்க?” அவன் தோளைத் தொட்டாள்.

‘இப்பொழுது பிரம்மா அவனை அழைத்தான் எனச் சொன்னால், அடுத்த நிமிடமே, அவனுக்கு என்னவோ ஏதோ என்று உடனே கிளம்பி விடுவாளே, அங்கே என்ன சூழல் என்றும் தெரியாமல், இவளை அழைத்துச் செல்வது சரியில்லை. இவளுக்கு சொல்லாமலே போய்விட்டு வரலாம்..., வந்து சொல்லிக் கொள்ளலாம்...’ என எண்ணியவன்,

“நான் உடனே சென்னை கிளம்பணும் கௌஷி..., அதான்..., உன்னை எப்படி தனியா விட்டுப் போறதுன்னு யோசிக்கறேன்...” அந்த தயக்கமும் இருக்க, அதையே அவளிடம் உரைத்தான்.

வழக்கமாக அவனது கேஸ் பற்றிய விஷயங்களை அவளுக்கு சொல்வது இல்லை என்பதால், அதைப்பற்றி கௌஷிகா கேட்கவில்லை. அது அவனுக்கு வசதியாகவும் போயிற்று.

“இன்னைக்கு ஒரு நாள் அத்தையை இங்கே வரச் சொல்லுங்க..., இல்லையா நான் அங்கே போய் இருந்துக்கறேன். அதான் டியூ டேட்க்கு இன்னும் நாள் இருக்கே..., நீங்க தைரியமா போயிட்டு வாங்க...” அவனது வேலையின் சூழல் புரிந்தவளாக உரைத்தாள்.

“அது சரியா வராது கௌஷி..., நான் பத்மா அக்காவை வரச் சொல்லிட்டு போறேன்...” அவன் உரைக்க, தன் கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

மாமியார் வீடு என ஒன்று இல்லாத கௌஷிகாவை மருமகளாக கொண்டுவர முகேஷின் தாய் வத்சலா விரும்பவில்லை. அவளுக்கு அண்ணன் வீடு இருந்தாலும், அவன் கொட்டிக் கொடுத்து சீர்வரிசை செய்ய முயன்றாலும், ஒரு நல்லநாள், விசேஷம் என சீராட தன் மகனுக்கு மாமியார் வீடு என்று ஒன்று வேண்டும் என அவர் விரும்பினார்.

ஆனால்..., பிரம்மாவைக் காண அவன் வீட்டுக்கு சென்ற முகேஷின் கண்கள் கௌஷிகாவை கண்டவுடன், அவள் தனக்கு வாழ்க்கைத் துணையாக வந்தால் நன்றாக இருக்கும் என எண்ணியது. நண்பனிடமும் தன் எண்ணத்தை வெளியிட, உடனே அவன் ஒத்துக் கொண்டான்.

ஆனால், வத்சலாதான் ஆடித் தீர்த்துவிட்டார். முகேஷ், தனக்கு திருமணம் என்ற ஒன்று நடந்தால், அது கௌஷிகாவோடு மட்டுமே என உரைத்துவிட, அவனது பிடிவாதத்துக்கு முன்னால் அவர்தான் இறங்கிப் போக வேண்டி வந்தது.

திருமணம் முடிந்த ஒரே மாதத்திலேயே..., வார்த்தைகளால் மனைவியை தாய் வதைக்கவே..., முகேஷ் பெரும் கவலை கொண்டான். தாய் இல்லாத அவளுக்கு, தன் தாய், தாயாக இருப்பார் என அவன் எதிர்பார்க்க, அதில் பொய்த்துப் போனதில் துவண்டு போனான்.

வத்சலா என்ன சொன்னாலும், கௌஷிகா எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேசுவது கிடையாது. அங்கே இருக்கும் நிலையை, தன் அண்ணனிடம் கோடிட்டு கூட காட்டியது கிடையாது. அப்படி அவள் சொல்லியிருந்தால், அடுத்த நிமிடமே கௌஷிகாவை, பிரம்மா அழைத்துச் சென்றிருப்பான் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும்.

ஆனாலும், தினமும் அவள் முகத்தில் இருக்கும் கவலையை காண முடியாமல், தனியாக அழைத்து வந்துவிட்டான். அதன் பிறகு தேவையில்லாமல் மனைவியை அங்கே அனுப்புவது இல்லை.

தனக்காக, தன் நலனுக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்யும் கணவன் கிடைப்பது ஒரு பெண்ணுக்கு வரமாயிற்றே. எனவே அவன்மேல் மிகுந்த பாசம் கொண்டிருந்தாள். இப்பொழுதும் வத்சலா இங்கே வந்தால், ‘தலைப்பிரசவம் மாமியார் வீட்டில்தான் நடக்கணும்…, இங்கே அவனுக்குதான் அந்த கொடுப்பினை இல்லையே…’ எனச் சொல்லிக் காட்டியே அவளை ஒரு வழி செய்து விடுவார் என்பதாலேய அவன் மறுத்தான்.

“என்ன…, அம்மணிக்கு திடீர்ன்னு பாசம்…, ஒரு மாசமா கிட்டவே சேக்கலை…, இப்போ…” சரசமாக வினவியவன், அவள் நிறைமாத வயிறு வயிற்றில் இடிப்பதை உணர்ந்து மென்மையாக அணைத்தவன், அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

“யார்…, நானா…? உங்க புள்ளைதான் இப்பவும் நமக்கு குறுக்கே வர்றான்” உரைத்தவள், அவன் மீசையை பிடித்து இழுத்தாள்.

“ஹேய் வலிக்குது…” போலியாக அலறியவன், “போயிட்டு நாளைக்கே வந்துடுவேன். அது வரைக்கும் பத்திரமா இருக்கணும் சரியா?” அவளை விட்டு போக முடியாத வருத்தம் அவனிடம் பளிச்சிட்டது.

“அதெல்லாம் நான் பத்திரமா இருந்துப்பேன். சென்னை தானே போறீங்க…, அப்படியே அண்ணாவை பாத்துட்டு

வாங்க. என்னோட மிஸ்ட் கால் பாத்தால் திருப்பி கூப்பிடாமல் இருக்கவே மாட்டாங்க. ஆனா நான் கால் பண்ணி ஒரு வாரமாச்சு..., இன்னும் கூப்பிடலை, மனசே சரியில்லை” அவள் கவலையாக உரைக்க, அவனையும் அந்த கவலை தொற்றிக் கொண்டது.

“உன் அண்ணாவை பாக்க போகலைன்னாலும், என் ப்ரண்ட்டை பாக்கப் போவேன்..., அதை நீ சொல்லவே வேண்டாம். சரி..., எனக்கு ஒரே செட் ட்ரெஸ் மட்டும் எடுத்து வை..., நான் பத்மா அக்காகிட்டே சொல்லிட்டு வந்துடறேன். கிடைக்கிற ப்ளைட்ல கிளம்பணும்...” வேகமாக சென்றான்.

அடுத்த இரண்டுமணி நேரங்களில் தன் முன்னால் நின்ற புதியவனை ‘இவன்தான் முகேஷா...?’ என்ற பார்வையில் பார்த்துக் கொண்டிருந்தான் பிரம்மா.

“பிரம்மா...” அழைத்தவன், நண்பனை இறுக அணைத்துக் கொண்டான். அடுத்த நிமிடம் என்ன உணர்ந்தானோ, “பிரம்மா..., டாக்டரை பாத்துட்டுதான் வர்றேன்...” அவன் அணைப்பில் இருந்த இறுக்கம், குரலில் இருந்த பாவனை..., தானும் அவனை இறுக அணைத்திருந்தான் பிரம்மா.

இந்த இரண்டு நாட்களில் முதல் முறையாக..., மனதுக்கு நெருக்கமான ஒரு உறவை சந்தித்த உணர்வை உணர்ந்தான் பிரம்மா.

*****

# பகுதி – 4.

சமையலறையில் காலை நேர பரபரப்பில் இருந்தார் கலைவாணி. மகள் நிவேதா பள்ளி செல்ல தயாராகிக் கொண்டிருக்கிறாள் அவளுக்குத் தேவையான, காலை உணவு, மதிய லஞ்ச் என வேலைகள் அடுக்காக இருக்க, அவற்றை செய்து கொண்டிருந்தாலும், கண்களில் கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது.

பெற்ற மகன் விபத்தில் சிக்கி, மருத்துவமனையில் இருந்திருக்கிறான். ஒரு வாரம் வரைக்கும் அதைக் கூட தெரிந்து கொள்ளாமல் தான் இருந்திருக்கிறோம் என்ற நினைவே அவரை கொன்று கூறுபோட்டுக் கொண்டிருந்தது.

தன் கணவனுக்குத் தெரிந்து, அதை தன்னிடம் மறைத்தார் என அவர் எண்ணவில்லை. அப்படி மறைக்க வேண்டும் என எண்ணியிருந்தால், இப்பொழுது கூட தன்னிடம் சொல்லியிருக்க மாட்டார் என்று எண்ணினார். கூடவே, கணவன் தன்னிடம் ஒன்றை..., அதுவும் பிரம்மா பற்றிய விஷயத்தை மறைப்பார் என்று கனவிலும் நம்ப முடியவில்லை.

‘எப்படி இருக்கிறானோ? என்ன செய்கிறானோ? யார் கவனித்துக் கொள்கிறார்களோ?’ நினைக்க நினைக்க துக்கம் தொண்டையை அடைத்தது. ‘அப்படியென்ன பிடிவாதம்? புரிந்துகொள்ள முயலாத ஒரு நிலை? முரட்டு பிடிவாதம்?’ மனம் ஆற்றாமையாக எண்ணிக் கொண்டது.

புறங்கையால் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்தவர், சாம்பாருக்கான காயை பருப்போடு கலந்துவிட்டு, குக்கரில் வைக்க, கிச்சனுக்குள் எட்டிப் பார்த்த மகேஷ்வரன், மனைவியின் நிலை உணர்ந்தவராக அமைதியாக நின்றிருந்தார்.

கலைவாணி, வேலையில் கவனமாக இருந்தாலும், மனைவியின் கரம் அடிக்கடி கன்னத்தில் தழுவி மீள, அவர் அழுகிறார் என்பதை அறிய அதிகநேரம் ஆகவில்லை.

“கலை..., அழறியா...?” தான் கேட்பது அபத்தம் என்று அவருக்கே தெரியும். ஆனாலும், மனைவி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கையில் அதை பார்த்துக் கொண்டிருக்க அவரால் முடியுமா என்ன?

கணவனின் குரலில் கலைந்தவர், கண்களை வேகமாக துடைத்துக் கொண்டு, “அழறனா...? நானா...? எதுக்கு அழணும்? என்னை வேண்டாம்னு சொன்னவனுக்கு வேண்டி நான் அழறதா?” வீம்பாக கேட்டாலும், அடைக்கும் குரலையும், வழியும் கண்ணீரையும் என்ன செய்யவாம்?

“கலை..., நீ வேண்ணா ஒரு எட்டு பாத்துட்டு வர்றியா?” அவரால் தாங்க முடியவில்லை.

“போனா மட்டும்..., என்னை பாத்துட்டுதான் மறு வேலை பாப்பானா?” புடவைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டவர் விசும்பினார்.

“என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி...? அவன்தான் ஏதோ கோபத்தில் இருக்கான்னா..., இந்த நேரத்தில் நீயும் மறு பக்கம் அதை இழுத்து பிடிச்சுட்டு இருக்க” மெல்லியதாக கடிந்து கொண்டார்.

“நான் மட்டும் என்ன வரம் வாங்கிட்டு பிறந்தேன்னே எனக்குத் தெரியலை...? ஒரு நாள் கூட...” மேலே எதையோ சொல்லப் போனவர், கணவனின் முகத்தில் கவிழ்ந்த கவலையில் வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டார்.

“அவன் எப்படி இருக்கானாம்...? உங்களுக்கு ஏதாவது தெரிந்ததா? ஹாஸ்பிடல் போனீங்களா?” ஒரு தாயின் தவிப்பு மிளிர்ந்தது.

“நான் ஹாஸ்பிடல் போனேன் கலை..., ஆனா என்னால் எதையுமே தெரிஞ்சுக்க முடியலை. ரிஷப்ஷன்ல கேட்டதுக்கு, அவரோட அட்டெண்டர் கந்தன் கிட்டே கேளுங்க, இல்லையா..., டாக்டர் ஷீபாவை போய் பாருங்கன்னு சொல்லிட்டாங்க.

“கந்தனை போய் பாக்கலாம்னா…, அந்த மனுஷன் பிரம்மாவை மீறி, வாயைத் தொறந்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டார். ஷீபாவை பாக்கலாம்னா, என்ன சொல்லிட்டு பாக்கனு தெரியலை…” மகன் தங்களை எந்த நிலையில் வைத்திருக்கிறான் என்ற உண்மை முகத்தில் அறைய, கலை முகம் வெளிற நின்றுவிட்டார் கலைவாணி.

“கலை…, நீ வேண்ணா ஷீபாவை போய் பாத்து பேசறியா…? நான் அப்பாயின்மெண்ட் வாங்கறேன்…” எப்படியாவது மனைவியின் முகத்தில் இருக்கும் கவலை போய்விடாதா என்ற எண்ணம் அவரிடம்.

அதைவிட, நரம்பில்லாத நாக்கு எந்தப் பக்கம் வேண்டுமானாலும் வளையும் என்பதுபோல், மனைவியைப் பார்த்தவுடன் அவன் வார்த்தையால் சாடுவதை எத்தனையோ முறை கண்டவர் ஆயிற்றே. எனவே சற்று தயங்கியே கேட்டார்.

“வேண்டாங்க…, ஹாஸ்பிடல் போய்…, அங்கேயும் வைத்து அவன் ஏதாவது சொல்லிட்டா…, என்னால்…” இப்பொழுது பெரிதாக அழ, அவ்வளவு நேரமாக விலகி நின்றிருந்தவர், வேகமாக வந்து மனைவியை தோள் சாய்த்துக் கொண்டார்.

பதினாறு வருடங்களாக விலகித்தான் நிற்கிறார். மனைவியின் அழுகை, புலம்பல், ஆற்றாமை…, அனைத்தையும் ஒரு பார்வையாளராகவே இருந்து கடந்து கொண்டிருக்கிறார். கலைவாணிக்கு ஆறுதல் வேண்டிய நேரத்தில், ஒரு உறவாக அதை சரியாக கொடுப்பவர், விலகியே நிற்கிறார்.

“நான் பண்ணது அவ்வளவு பெரிய பாவமா? சின்ன வயதில்தான் அவனுக்கு விவரம் தெரியாது…, ஆனா இப்போ…, இவ்வளவு பெரிய பதவியில் இருக்கான், இப்போகூட ஒரு நிமிஷம் நம்ம பக்க வாதத்தை கேக்காமல்…, என்னால் அதைத்தாங்க தாங்க முடியலை…” பல வருடங்களாக தான் சாய்ந்து அழுவதற்காகவே கிடைத்த தோளை இப்பொழுதும் அதற்காகவே பற்றிக் கொண்டார்.

“என்னைக்காவது ஒரு நாள், நிச்சயம் புரிஞ்சுப்பான் கலை..., நீ அழாதே...” ஆதரவாக உரைத்தார், அதற்குமேல் அவரால் எதுவும் செய்ய இயலாதே, எனவே அதைச் சொன்னார்.

“இப்படியே சொல்லிச் சொல்லி, பதினாறு வருஷம் ஓடிப் போய்டுச்சுங்க..., இதுக்கு மேலே அவன் புரிஞ்சுப்பான் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை. ஆனா..., ஆயிரம் இருந்தாலும், நான் அவனைப் பெத்த அம்மா தானே, அதுக்காகவாவது அவன் என்கிட்டே பேசலாமேங்க...” ஆதங்கமாக கேட்க, மகேஸ்வரனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“அது அப்படி இல்லம்மா..., அவன் வளர்ந்த இடம் அப்படி..., எட்டு வருஷமா அவனுக்கு போதிக்கப்பட்ட விஷயத்தை அவன் அவ்வளவு சீக்கிரம் கடந்து வர மாட்டான்..., அதற்கு நாள் ஆகும்...” இப்படி சொல்லித்தான், தங்களையே அவர்கள் தேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதையே இப்பொழுதும் சொல்ல, நம்பிக்கையின்றி தலை அசைத்தார்.

கலை..., பிரம்மாவின் தாய்..., மகேஸ்வரன் அவரது கணவன்..., அதாவது கலையின் இரண்டாவது கணவன்தான் மகேஸ்வரன். தாய், மகேஸ்வரனை திருமணம் செய்து கொண்டது பிரம்மாவுக்கு பிடிக்கவில்லை.

அதிலும் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த தன்னையும், இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த தங்கை கௌஷிகாவையும் விட்டுவிட்டு அவர் திருமணம் செய்து கொண்டதை அவனால் ஏற்க முடியவில்லை. அதற்கு அவனது பாட்டி பரிமளாவும்..., சித்தப்பா அருணாச்சலமும் ஒரு மிகப்பெரும் காரணம் என்று சொன்னால் மிகையில்லை. வீட்டின் உள் விஷயங்களை புரிந்துகொள்ளும் அறிவு அவனுக்கு இருக்கவில்லைதான்.

ஆனால், முதல்முறையாக தன் வீட்டில் பார்த்த அந்த ஆடவனை, தாய் திருமணம் செய்து கொண்டதை அவனால்

அவ்வளவு சீக்கிரம் கடந்துவிட முடியவில்லை.

“இல்லங்க..., எனக்கு அந்த நம்பிக்கை விட்டுப்போய் பல வருஷம் ஆச்சு. எனக்கு இப்போ அவன் நல்லா இருக்கான்னு மட்டும் தெரிந்தால் போதும். என்மேல் இருக்கும் கோபத்தில், பொண்ணுங்கன்னாலே ஒரு மதிப்பே இல்லாமல் இருக்கறான். என்னால் அதை சகிச்சுக்க முடியலை” வெதும்பினார்.

“எல்லாம் விதிப்படிதான் நடக்கும் கலை..., நாம வாழ்க்கையில் ஒண்ணு சேர்வோம்னு எப்போவாவது நினைத்தோமா? வாழ்க்கையில் கல்யாணமே வேண்டாம் என்று இருந்த என்னையும், ரெண்டு குழந்தைக்கு அம்மாவான உன்னையும் வாழ்க்கையில் இணைத்தது எது..., அந்த விதி தானே..., அதேபோல் விதியின் போக்கிலேயே இனிமேலும் வாழ்வோம்.

“பிரம்மா என்னைக்காவது ஒரு நாள் உன்னை, தன்னோட அம்மாவா ஏத்துப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. நீ கலங்காதே...” நம்பிக்கையாக உரைக்க, விரக்தியாக சிரித்துக் கொண்டார்.

“போனவர் எனக்கு நல்லது பண்ணிட்டு போனாரா..., கெட்டது பண்ணிட்டுப் போனாரான்னு எனக்கு இன்னும் தெரியலங்க. உங்களுக்கு நல்லதைச் செய்யலைன்னு மட்டும் எனக்கு நல்லா தெரியுது. இன்னும் நான் உங்களுக்கு ஒரு பாரமா இருக்கேன்னு நினைத்தால், என்னால் அதை தாங்கிக்க முடியலை...” கலைவாணி இப்பொழுது தன்னிரக்கத்தில் கரைய,

“கலை..., இப்படி பேசுவதை முதல்ல நிறுத்து. இதைப்பற்றி நீ பேசவே கூடாதுன்னு ஆயிரம் முறை சொல்லிட்டேன். எல்லாம் அந்த ஆட்டி வைக்கிறவன் கையில் இருக்கு, அதன்படி நாம ஆடுறோம், அதை விட்டு, இது இப்படி ஆயிடுச்சேன்னு புலம்புவதில் எந்த அர்த்தமும் இல்லை” முழுதாக கடிந்துகொள்ள, கணவனை விட்டு விலகி நின்றார்.

அவர் சொல்வது புத்திக்கு உறைத்தாலும், மனதுக்குப் புரியாமல், “நான் உங்களுக்கு நல்ல மனைவியா இருக்கிறேனா…, நம்ம பொண்ணுக்கு நல்ல அம்மாவா இருக்கேனா என்பது கூட தெரியலை.

“ஆனா…, என்னை முழுசா புரிஞ்சுகிட்ட நீங்களும், நம்ம பொண்ணும் எனக்கு கிடைத்த வரம்னுதான் சொல்வேன். உங்க பொண்ணுக்கு அப்படியே உங்களோட குணம்…, இல்லன்னா இவ்வளவு சின்ன வயசில் நம்மளை புரிந்திருப்பாளா?” அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே,

“என்ன…, இங்கே என்னைப் பற்றி பேச்சு அடிபடுது?” நிவேதாவின் குரல் கேட்க வேகமாக விலகி நின்றார் கலைவாணி.

“ரெண்டுபேரும் கிச்சன்ல நின்னு கொஞ்சிக்கறீங்களா? உங்களுக்கே இது கொஞ்சம் ஓவரா தெரியலை…?” கேட்டவள், தாயின் கண்களில் இருந்த கண்ணீரைப் பார்த்து சட்டென பேச்சை நிறுத்தினாள்.

கூடவே…, கோபமாக தாயை முறைத்தவள், “எப்போ பாத்தாலும் மூத்த புள்ளை நினைப்பு தானா? இப்போ என்னத்துக்கு உங்க கண்ணு கலங்கி இருக்கு? புரிஞ்சுக்காத புள்ளையை கட்டிக்கிட்டு ஏன்தான் அழறீங்களோ” கோபம் கொள்ளாமல், அலுத்துக் கொள்ளும் மகளை மறு கையால் இழுத்து அணைத்துக் கொண்டார் மகேஸ்வரன்.

தந்தையின் தோளில் தலை சாய்த்தவள், “ஏம்ப்பா அம்மா அழறாங்க?” தந்தையிடம் கேட்டாள்.

“உங்க அண்ணாவுக்கு ஆக்சிடெண்ட்ம்மா…” அவர் சொல்ல,

“என்னப்பா சொல்றீங்க…? அண்ணாக்கு ஆக்சிடெண்ட்ன்னு சொல்லிட்டு இங்கேயே இருக்கீங்க? ஹாஸ்பிடல் போக வேண்டியது தானே…” ‘எங்கள் நிலை தெரிந்தும் இப்படி சொல்கிறாயே…’ என்பதுபோல் இருவரும் பார்த்தார்கள்.

“ஒரு வேளை இந்த ஆக்சிடெண்ட்டே நாம சேர ஒரு வாய்ப்பா இருக்கலாம்ப்பா, அங்கே அண்ணா கூட யாருமே இருக்க மாட்டாங்களே, கண்டிப்பா நம்மளை பாக்கவாவது விடுவாங்க...” அவள் சொல்ல பெரியவர்களது முகத்தில் பெரும் மறுப்பே வெளிப்பட்டது.

“நீ சொல்வது சரிதான்..., ஆனா..., அவனுக்கு ஆக்சிடெண்ட் ஆகி ஒரு வாரம் ஆயிடுச்சு. இப்போ அவன் கொஞ்சம் தேறி இருப்பான். கண்டிப்பா நம்மளை பாக்க அனுமதிக்க மாட்டான். அப்படியே நாம போய், அவனோட ஹெல்த் இன்னும் மோசமா போனால்..., அதான் தயக்கமா இருக்கு” மகேஸ்வரன் சொல்ல, கவலையாக அவரை ஏறிட்டாள்.

“ஒரு வாரமா...? இவ்வளவு நாள் எப்படி தெரியாமல் போச்சு? பேப்பர்ல கூட வரலை...?” தாயின் சந்தேகத்தை, வார்த்தையாக வெளியிட்டாள் நிவேதா.

“அதெல்லாம் அவங்க டிப்பார்ட்மென்ட் வேலையா இருக்கும். அவனைப் பத்தி தெரிஞ்சுக்க நான் ஏதாவது பண்றேன். நீ ஸ்கூல் கிளம்பு..., நான் உன்னை ட்ராப் பண்றேன்...” பேச்சை அத்தோடு நிறுத்தியவர், தானும் கிளம்பச் சென்றார்.

தந்தை செல்லவே..., “என்னம்மா, அண்ணாவைப் பாக்க முடியலையேன்னு வருத்தமா இருக்கா? கவலைப்படாதீங்க..., நானே ஒருநாள் அண்ணாகிட்டே பேசறேன். அண்ணா கண்டிப்பா புரிஞ்சுப்பாங்க...” அவள் சொல்ல, மகளை இழுத்து அணைத்தவர், அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டார்.

“லவ் யூம்மா...” உரைத்தவள், தாயின் தோளில் சலுகையாக சாய்ந்து கொள்ள, ‘இவள் மட்டும் என் வாழ்வில் வராமல் போயிருந்தால்?’ எண்ணிய கலைவாணி, மகளை இன்னும் இறுக அணைத்துக் கொண்டார்.

“அண்ணா நம்ம கூட இருந்தால் நல்லா இருக்கும் இல்லம்மா..., எங்க அண்ணா ஐபிஎஸ்ன்னு சொல்லி, என்

ப்ரண்ட்ஸ்கிட்டே எல்லாம் பெருமைப் பட்டுப்பேன்…” அவள் சொல்ல,

‘அதற்குதான் நமக்கு கொடுப்பினையே இல்லையே…’ எண்ணியவர் எதையும் சொல்லவில்லை.

“சரி…, நீ கிளம்பி வா…, அம்மா டிபன் எடுத்து வைக்கறேன்” மகளை அனுப்பினார். நிவேதாவோ…, நிச்சயம் தன் அண்ணாவை என்றாவது ஒரு நாள் சந்தித்தே ஆகவேண்டும் என நினைத்துக் கொண்டாள். கூடவே…, ‘அண்ணாவுக்கு என்னைத் தெரியுமா?’ தனக்குள் கேட்டுக் கொண்டவள் பள்ளி செல்ல கிளம்பினாள்.

மருத்துவமனையில் பிரம்மாவின் அறையில் இருந்த முகேஷ்க்கு என்ன செய்வது என்று தெரியாத குழப்பம். அவன் எதை எதிர்பார்த்து வந்திருந்தாலும், பிரம்மாவுக்கு பழசெல்லாம் மறந்திருக்கும் என எண்ணி வந்திருக்கவில்லையே.

இருந்தாலும் இப்பொழுது இந்த நிலையை சம்மாளித்தே ஆக வேண்டும் என்ற நிலை. அவனுடனே இருந்து செல்லலாம் என்றாலோ, மனைவியோடு தான் இருக்க வேண்டிய நேரம் என்பதால், இருதலைக்கொள்ளி எறும்பாக தவித்தான்.

அவன் முகத்தில் இருந்தே அவன் மனதைப் படித்தவனாக, “முகேஷ்…, உனக்கு வேலை இருந்தால் நீ கிளம்பு…, நான் இங்கே சம்மாளித்துக் கொள்வேன்” பிரம்மா உரைக்க, ‘ச்சே…, அவனைப்பற்றி தெரிந்தும் எப்படி கவனமில்லாமல் இருந்தேன்…’ தன்னையே நொந்து கொண்டான்.

பிரம்மாவோ, முகேஷ் வந்தது முதல், அவன் முகத்திலேதான் பார்வையை பதித்திருந்தான், ‘பிரம்மாவுக்கா இப்படி? இவன் இதை எப்படி சம்மாளிப்பான்?’ என்ற எந்தவித பதட்டமோ, பயமோ அவன் முகத்தில் இல்லாததை கவனித்தவன், ‘நான் என்ன அவ்வளவு பெரிய ஆளா?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

அவனது மனசாட்சியோ..., ‘நீ பிரம்மாடா..., அனைத்தையும் படைப்பவன்’ உள்ளுக்குள் கதறியது அவனுக்கு கேட்கவே இல்லை.

“பிரம்மா..., கௌஷிக்கு இதுதான் மாசம் தெரியும்தானே..., அதான்...” அவன் சொல்ல, தன் எண்ணத்தில் இருந்து கலைந்தவன், ‘எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை...’ சொல்லத் தவித்த நாவை அடக்கி வைத்தான்.

‘எப்படி இருக்கா? நல்லா இருக்காளா?’ இப்படி எதையும் கேட்க முடியவில்லை. மனதுக்கு தூரமாக அனைவரும் இருப்பதுபோல்..., அதை எப்படி மற்றவர்களுக்கு விளக்க என்றும் அவனுக்குத் தெரியவில்லை.

‘நான் இப்படியே இருந்து விடுவேனா? எனக்கு ஏதாவது நினைவிற்கு வருமா வராதா?’ ‘ஹோ...’ வென மனம் கூச்சலிட, உள்மன குமுறலை வெளியே காட்டாமல் அடக்கினான்.

“முகேஷ்..., நீ கிளம்பு..., நான் பாத்துக்கறேன்...” என்னவோ, அவனுக்கு அப்படித்தான் சொல்லத் தோன்றியது. தன் நிறைமாத கர்ப்பிணியான மனைவியை தனியாக விட்டு வந்திருப்பது மட்டுமே முகேஷின் முகத்தில் ஓட, அவனை அங்கே பிடித்து வைக்க பிரம்மா விரும்பவில்லை.

அவனை முறைத்தவன், “உன்னை இப்படி ஒரு நிலையில் தனியா விட்டுப் போக என்னால் முடியுமா?” உள்ளார்ந்த அன்போடு கேட்க, அதை முழுதாக ஏற்க முடியாமல் தடுமாறிப் போனான்.

சில நிமிடங்கள் மௌனத்தில் கழிய, “முகேஷ்..., இங்கே இருக்கும் சூழல் என்னன்னு எனக்குச் சொல்ல முடியுமா? நான் எந்த இடத்தில் இருக்கேன்னு எனக்குத் தெரியணும் அதான்...” அவன் சொல்ல, “கண்டிப்பா சொல்றேன்...” உரைத்தவன்,

“பிரம்மா..., உனக்கு வலி இப்போ எப்படி இருக்கு?” அவன் கேட்க,

“சில நேரம் தலை விண் விண்ன்னு தெறிக்குது. மற்றபடி நான் ஆல்ரைட்தான்..., ஏன்?” அவன் கேட்பதற்கான காரணம் அவனுக்குப் புரியவில்லை.

“உனக்கு ஆக்சிடெண்ட் ஆனதைப் பற்றி விசாரித்தேன்..., நீ போயிட்டிருந்த ஜீப்க்கு முன்னாடி, போயிட்டு இருந்த லாரியில் மோதி ஆக்சிடெண்ட் ஆகி இருக்கு. பட்..., உன் பின் தலையில் ஏதோ இரும்பு ராடல் அடிச்சிருக்காங்க..., இதைப்பற்றி நீ என்ன நினைக்கற?” வந்த சிறு நேரத்துக்குள்ளாகவே அனைத்தையும் விசாரித்த அவன் வேகம் கண்டு உள்ளுக்குள் வியந்தான்.

“மேபி என்னை தாக்கின பிறகு, நான் நிலை தடுமாறி அந்த லாரியில் மோதி இருக்கலாம்..., ஒரு வேளை..., நான் செத்துட்டேன்னு நினைத்து விட்டுட்டு போய்ட்டாங்கன்னு நினைக்கறேன்” உரைத்தவன், தனக்கு ஏதாவது நினைவுக்கு வருகிறதா என சிந்தித்தான். பலன் என்னவோ பூஜ்யமே.

“உன்னோட லாஸ்ட் கேஸ் என்னன்னு உனக்குத் தெரியுமா?” முகேஷ் கேட்க, தன் நெற்றியை அழுத்தமாக தடவினான்.

“தெரியலை...” இறுக்கமாகவே பதில் கொடுத்தான்.

அதே நேரம், பிரம்மாவின் அலைபேசி ஒலியெழுப்ப, அதை கட் செய்தான். அது மீண்டும் ஒலிக்கவே, அதைப் பார்த்த முகேஷ், “எடுத்து பேசு...” கட்டளையிட்டவன், அதை எடுத்து, ஸ்பீக்கர் மோடில் போட்டுவிட்டு பிரம்மாவின் கையில் திணித்தான்.

“சார்..., நான் தினஒளி பத்திரிகை நிரூபர் மதிவாணன் பேசறேன்..., உங்களுக்கு ஆக்சிடெண்ட் ஆயிடுச்சுன்னு கேள்விப்பட்டோம் உண்மையா சார்..., அந்த சூசைட் கேசை நீங்க மர்டர்ன்னு சந்தேகப் படுவதா லாஸ்ட் டைம் சொல்லியிருந்தீங்க..., அது உண்மையா? விசாரணை எந்த அளவில் இருக்கு?” அவன் அடுக்கடுக்காக கேட்டுக் கொண்டே போக, ஆயாசமாக இருந்தது.

‘ஒருவன் உயிர் பிழைத்து இப்பொழுதுதான் எழுந்து அமர்ந்திருக்கிறான், அவனிடம் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் எப்படி கேக்கறானுங்க பார்...’ முகேஷுக்கு எரிச்சலும் கோபமும் கிளர்ந்தது.

“அதை இப்போ சொல்ல முடியாது..., நான் கேசை முடிக்கும்போது உங்களுக்கு தெரியப் படுத்தறேன்...” அலைபேசியை வைத்துவிட்டான் பிரம்மா.

“பத்திரிகை காரங்கன்னா எந்த நேரம் வேண்ணாலும் போன் பண்ணலாம் போல..., கொஞ்சம் கோபமா பேசினால் அதுக்கும் கண்ணு மூக்கு வச்சு பரப்புவாங்க. இவனுங்களுக்கெல்லாம் எங்கே இருந்துதான் நம்பர் கிடைக்குமோ” முகேஷ் தான் புலம்பினான்.

“பிரம்மா..., நீ இதையே மெயின்டெயின் பண்ணு..., யார் என்ன கேட்டாலும் வாயை திறக்காதே...” முகேஷ் சொல்லிக்கொண்டே போக,

“நானே சொல்லணும்னு நினைத்தாலும் எனக்கு எதுவும் தெரியாது முகேஷ். நான் ஒரு ப்ளெயின் ஸ்லேட் மாதிரி உக்காந்து இருக்கேன். அவன் கேஸ்ன்னு சொன்னானே..., அதுவே எனக்கு என்னன்னு தெரியலை. இதில் நான் எதை சொல்லக் கூடாதுன்னு சொல்ற?

“எதிரில் இருப்பவன் நல்லவனா கெட்டவனா..., எதுவும் தெரியலை. என் கேரக்டர் என்ன...? எப்படிபட்டவன்...? ஒண்ணுமே ஞாபகத்துக்கு வரலை. இதில் நீ வேற யார் என்ன கேட்டாலும் வாயைத் தொறக்காதேன்னு சொல்ற..., கிறுக்கு பிடிச்ச மாதிரி இருக்கு...” மூன்று நாட்களாக வாயை திறந்து தன் உணர்வுகளை வெளிப்படுத்தாதவன், முதல் முறையாக வாய் திறந்தான்.

அவனை அமைதியாக பார்த்த முகேஷ்..., “பிரம்மா..., சாரி..., கூல் டவுன்..., எல்லாம் சரியா போய்டும்...” அவனை அமைதிபடுத்த முயன்றான்.

“எப்படி என்னை அமைதியா இருக்கச் சொல்ற? வெளியே யாரோ என்னை கொலை செய்ய முயற்சி செய்திருக்கான்.

இங்கேயும் நாலுபேர் வர்றாங்க..., யார் என்னன்னு தெரியலை. எவன் எவனோ போன் பண்ணி, கேஸ் பத்தி கேக்கறான்..., நீ சொல்லாதேங்கற..., இதில் எப்படி எல்லாம் சரியா போகும்..., எனக்குத் தெரியலை...” கோபமாக கத்த, அவனை எப்படி அமைதிபடுத்த என்றே தெரியாமல் விழி பிதுங்கினான்.

அதே நேரம்..., கதவு மெதுவாக தட்டப்பட, முகேஷ் ஏதாவது செய்வானா என எதிர்பார்க்க, அவன் அமைதியாக இருக்கவே, தன் சூழலை தான்தான் சம்மாளிக்க வேண்டும் என புரிந்தவனாக, “எஸ்...” குரல் கொடுத்துவிட்டு, இறுக்கமான முகபாவத்தில் அமர்ந்து கொண்டான்.

உள்ளே நுழைந்தவள் “எஸ்ஐ யாழினி சார்...” விரைப்பான சலூட்டுக்கு போய், பிறகு சற்று தளர்ந்தாள்.

உணர்வுகளைத் துடைத்த முகத்தோடு அவளை ஏறிட, “ஹவ் ஆர் யூ சார்...” அவர் வார்த்தைகளில் இருந்த விசாரிப்பு அவள் கண்களில் இல்லாததைப் பார்த்து சோர்ந்து போனான்.

‘என்னைச் சுற்றி இருந்தவர்களிடம் நான் என்னவாக இருந்திருக்கிறேன்’ தன்னைத் தானே கேட்டவனுக்கு பதில்தான் தெரியவில்லை.

“ஏதாவது சொல்லணுமா...?” கிளர்ந்த கோபத்தை உள்ளுக்குள் புதைத்துக் கொண்டு கேட்டான். ஒரு வேளை அலுவலக விஷயமாக தன்னைக் காண வந்திருப்பாளோ என கேட்டான்.

“ஜஸ்ட் அ விசிட் சார்..., டிஐஜி உங்களை கால் பண்ண சொன்னார்...” அவள் சொல்ல, ‘ஹையோ...’ என்று வந்தது.

“அப்போ அதைச் சொல்லத்தான் வந்தீங்க. இல்லன்னா வந்தே இருக்க மாட்டீங்கல்ல?” பட்டென அவன் கேட்க, அவள் முகத்தில் சிறு அதிர்ச்சி விரவி மறைந்தது. நிச்சயம் அவனிடம் இப்படி ஒரு கோபத்தை அவள் எதிர்பார்க்கவில்லை என்று அவளது முகம் காட்டிக் கொடுத்தது.

“சார்…” முகேஷை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவள் தயங்க, “பிரம்மா…, என்னடா இது…? யாழினி நீங்க போங்க…, அவன் ஏதோ மூட்ஆப்ல பேசறான்” அவன் அவளை அனுப்ப, “எஸ் சார்…” மீண்டும் ஒரு சலூட்டோடு விடை பெற்றாள்.

வெளியே வந்தவள் தன் தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டாள். ‘இந்த மனுஷன் எப்போ மனுஷனா இருப்பார், எப்போ பேயா மாறுவார்ன்னு புரியவே மாட்டேங்குதே…’ தன் தலையை உலுக்கிக் கொண்டாள்.

“பிரம்மா, அவகிட்டே இப்படித்தான் பேசுவாங்களா? முன்னெல்லாம் ஏன் வாயே திறக்க மாட்டேங்கன்னு வருத்தப் பட்டேன். இப்போ…, நீ பேசாமல் இருப்பதே நல்லதுன்னு தோணுது…, உன் நிலையை நீ வெளியே காட்டுவது ஆபத்து.

“நீ இப்படியே செய்தால், கூடிய சீக்கிரம் எல்லோரும் கண்டு புடிச்சிடுவாங்க. உன் அழுத்தத்தை மறைக்க, இப்படி வார்த்தைகளை அள்ளித் தெளிக்காதே. முன்னே மாதிரி வாயை திறக்காமல் இருந்தாலே போதும்…, அவ்வளவுதான்” நிச்சயம் அவன் குரலில் கோபம் இருந்தது.

“முன்னே மாதிரின்னு சொன்னியே…, அதான்…, அதுதான்…, நான் யார்ன்னே தெரியாமல் இருக்குற இந்த அவஸ்தை இருக்கே…, ஆ…, பயங்கரமா மிரட்டுது. அப்போ நான் பேச மாட்டேன்…, பேசக் கூடாது…, அதானே…” இருக்கையில் இருந்து எழுந்தவன், ஜன்னல் பக்கம் போய் நின்றான்.

இருக்கையில் இருந்து எழுந்தவன், அவன் தோளை அழுத்தி, “எனக்கு உன் நிலை புரியுது பிரம்மா…” அவன் உரைக்க,

“இல்ல…, உனக்கு என் நிலை ஒரு சதவீதம் கூட புரியாது. உனக்குன்னு இல்லை, இந்த உலகத்தில் யாருக்குமே புரியாது…” அவன் கரத்தை கோபமாக விலக்கி விட்டான்.

“இப்போ வந்துட்டு போனாளே…, அவ கண்ணில் கொஞ்சம் கூட என்னோட நலத்தை பற்றிய விசாரிப்பு இல்லை. பிறகு

ஏன் இங்கே வந்தா? டிஐஜிக்கு போன் பண்ண சொல்லத்தானே..., அப்போ அதை மட்டும் சொல்லிட்டு போக வேண்டியது தானே..., எதற்கு தேவையில்லாமல் ஒரு விசாரிப்பு...” தன் கொதிப்பை அடக்க முடியாமல் திணறினான்.

“பிரம்மா..., நீ இவ்வளவு எமோஷனல் ஆகுறது நல்லதில்லை. கொஞ்சம் அமைதியா இரு. கௌஷி கிட்டே பேசறியா? இந்த உலகத்திலேயே நீ சாதாரணமா, தயங்காமல் பேசும் ஒரே ஜீவன் உன் தங்கை தான். இரு நான் அவளுக்கு போன் போட்டு தர்றேன்...” தன் அலைபேசியை எடுத்து எண்களை அழுத்தினான்.

அவனைத் தடுத்த பிரம்மா..., “இல்ல..., இப்போ வேண்டாம்...”.

“அவளோட மிஸ்ட் கால் பார்த்தால், ப்ரீ ஆன உடனே பேசாமல் இருக்க மாட்டன்னு நான் வரும்போது புலம்பிட்டே இருந்தா. இப்போ நீ பேசினால் ரொம்ப சந்தோஷப்படுவா...” அவன் சொல்ல, அதற்குமேல் மறுக்க முடியவில்லை.

அவளுக்கு அழைத்தவன், “கௌஷி..., பத்மா அக்கா வந்தாங்களா? சாப்டியா? இரு..., உங்க அண்ணாகிட்டே கொடுக்கறேன்” அவன் அலைபேசியை பிரம்மாவிடம் கொடுக்க முயன்றான்.

“அதானே..., கேஸ்ன்னு சொல்லிட்டு சாயங்காலம் கிளம்பும்போதே நினைத்தேன், ஒரு நாள் முன்னாடியே போய் பேச்சிலர் லைஃபை என்ஜாய் பண்ண போனீங்களா? தயவுசெய்து என் அண்ணாவை கெடுத்துடாதீங்க...” அவள் சொல்ல,

“உங்க அண்ணாவை நான் கெடுக்கறதா? அது முடியுமா? நீ பேசு” அலைபேசியை அவன் கையில் திணித்தான்.

“ம்...” அவன் எப்படி அழைப்பது எனத் தெரியாமல், மெதுவாக குரல் கொடுக்க,

“அண்ணே..., எப்படி இருக்கீங்க? என்ன ரொம்ப வேலையா? ஒரு வாரமா போனே பண்ணலை. முன்னெல்லாம் வாரம் தவறாமல் போன் பண்ணுவீங்க. இப்போ நானே கால் பண்ணா கூட அட்டன் பண்ண மாட்டேங்கறீங்க.

“வாரத்துக்கு ஒரு முறையாவது போன் பண்ணுங்கண்ணே. உடம்பை பாத்துக்கோங்க. சமையலுக்காவது ஒரு ஆள் வச்சுகோங்கன்னா கேக்கவே மாட்டேங்கறீங்க. நீங்களே சமைச்சு, சாப்ட்டு..., போங்கண்ணா..., நான் அங்கே வர்றேன்னு சொன்னதுக்கும் வேண்டாம்னு சொல்லிட்டீங்க.

“எனக்கும் கொஞ்சநாள் உங்களோட இருக்கணும்னு ஆசை இருக்காதா? இல்லன்னா கல்யாணமாவது பண்ணிகிங்கன்னு சொன்னா, அதுக்கும் பிடி கொடுக்க மாட்டேங்கறீங்க. உங்களை தனியா அங்கே விட்டிருக்கிறது எனக்கு மனசுக்கு கஷ்டமா இருக்குண்ணா.

“உங்க தங்கச்சிக்கு ஒரு பொறுப்பான அண்ணனா எல்லாம் செய்யணும்னு நீங்க நினைக்கும்போது, உங்க தங்கச்சியா நான் கேக்குறது எப்படி தப்பா ஆகும்? எனக்கு குழந்தை பிறக்க இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு..., குழந்தையை நீங்க பாக்க வர்றப்போ ஒரு நல்ல முடிவா எனக்கு சொல்லணும்.

“இல்லன்னா நானே உங்களுக்கு பொண்ணு பாத்து வச்சிடுவேன்..., பிறகு மாட்டேன்னு சொன்னால் நான் கேக்க மாட்டேன் பாத்துக்கோங்க...” அடைமழையென அவள் பேசிக்கொண்டே போக, என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் திணறிக் கொண்டு நின்றிருந்தான்.

அவள் இவ்வளவு பேசும்பொழுது தான் அமைதியாக இருப்பது நல்லதில்லை எனத் தோன்ற, “பாக்கலாம்மா...” அவன் உரைக்க,

“அண்ணே..., நிஜமாவா...? அப்போ நாங்க பொண்ணு பாக்கட்டுமா? உங்களுக்கு ஓகேயா...?” அவளது உற்சாக குரல் காதில் அறைய, படபடவென மூளைக்குள் ஒரு மின்னல்..., ‘பாக்குறதப் பாரு..., பொறுக்கி...’ காதுக்குள்

கிசுகிசுப்பாக ஒரு குரல் ஒலிக்க, கூடவே..., ஒரு சிவப்புக்கல் மூக்குத்தி மின்னலாக பளீரிட...,

அலைபேசி கைநழுவி கீழே விழ, “ஆ..., ஆ...” வியர்வையில் சட்டென அவன் தேகம் முழுவதும் நனைய, சில நொடிகள் மூச்சுவிட முடியாத அளவுக்கான தவிப்பு... தலையை அழுத்தமாக பற்றியவன், கால் மடக்கி, தரையில் அப்படியே அமர்ந்துவிட்டான் பிரம்மா.

*****

# பகுதி – 5.

பிரம்மாவிடம் சட்டென எழுந்த மாற்றத்தை உணர்ந்த முகேஷ், வேகமாக அவனைத் தாங்கிக் கொண்டான். “பிரம்மா, என்ன பண்ணுது…? தலை வலிக்குதா?” கேட்டவன் வேகமாக அலைபேசியை முடக்கினான்.

“கந்தன்…” குரல் கொடுத்தவன், பிரம்மாவை கைத்தாங்கலாக அழைத்து படுக்கையில் அமர வைத்தான். கந்தன் உள்ளே வரவே, “உடனே டாக்டரை கூட்டி வாங்க…” அவசரப்படுத்த, வேகமாக ஷீபாவை அழைத்துவர விரைந்து ஓடினார்.

அடுத்த நொடியின் துவக்கத்தில் அறைக்குள் இருந்தவள், “பிரம்மா, முதல்ல படுங்க…, செக் பண்றேன்…” வேகமாக அவனது பிபியை செக் செய்தவாறே, “அவர்கிட்டே என்ன சொன்னீங்க? ஏதாவது எமோஷனலா பேசினாரா? அவர்கிட்டே இப்போ எதையும் பேசாதீங்க, ஒரு வாரத்துக்குப் பிறகு பேசுங்கன்னு சொல்லித்தானே அனுப்பினேன்…” முகேஷை கடிந்து கொண்டாள்.

“டாக்டர், நான் எதுவும் பேசலை…, அவனோட தங்கச்சிகிட்டேதான் பேசிட்டு இருந்தான். திடீர்னு தலையைப் பிடிச்சுட்டு உக்காந்துட்டான். உடம்பெல்லாம் வேர்த்து கொட்டிடுச்சு…, ஏதும் ப்ராப்ளமா?” தன் நெற்றியை அழுத்தமாக வருடிக் கொண்டான். அவன் முகத்தில் கவலை அப்பிக் கிடந்தது.

ஷீபாவோ, “பிரம்மா, நான் மறுபடியும் அதைத்தான் சொல்றேன்…, டென்ஷன் ஆகாதீங்க, அது உங்க ஹெல்த்க்கு நல்லது இல்லை. அதுவும் நீங்க இப்போ இருக்கும் நிலையில், ஒருவாரம் முழுக்க நினைவில்லாமல் இருந்து கொஞ்சமா தேறி இருக்கீங்க. அதை நீங்க சுத்தமா மறந்துடறீங்க.

“நீங்க எவ்வளவு அமைதியா இருக்கறீங்களோ, அந்த அளவுக்கு சீக்கிரம் ரெக்கவர் ஆவீங்க. இப்போ நீங்க டென்ஷன் ஆகற அளவுக்கு உங்க தங்கை என்ன

சொன்னாங்க?” அவன் நிலை இப்பொழுது சற்று நார்மலாக இருக்க, ஸ்டெதஸ்கோப்பை கழுத்தை சுற்றி போட்டுக் கொண்டார்.

“என்னை எப்படி டென்ஷன் ஆகாமல் இருக்கச் சொல்றீங்க...?” அவளிடமும் வெடிக்க, அதைப் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாமல், அருகில் இருந்த ட்ரேயில் இருந்து இன்ஜெக்ஷன்எடுத்தவர், அவனது புஜத்தில் சொருகினார்.

“நீங்க டென்ஷன் ஆனால் இங்கே ஏதாவது மாறிடுமா?” அவனிடம் நிதானமாக வினவ, பார்வை அவரையே வெறித்தது.

பிரம்மாவின் இமைகள் தாமாக மூடிக் கொள்ள, அவனை ஒரு பார்வை பார்த்தவர், “முகேஷ்..., அவர் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்..., தொல்லை செய்யாதீங்க...” அறையில் இருந்து வெளியேற, அவர் பின்னால் விரைந்தான் முகேஷ்.

“டாக்டர்..., ஏன் இப்படி...? அவனுக்கு பயப்படுற மாதிரி எதுவும் இல்லையே...” கவலையாகக் கேட்டான்.

அவனைப் பார்த்து மெல்லியதாக புன்னகைத்தவர், “உங்க சர்வீசில் நீங்க பார்க்காத கேஸ்களா...?” அவள் கேட்க, “அதுவும் இதுவும் ஒண்ணா? வாழ்க்கையில் பதினேழு வயதில் இருந்தே தனியா போராடிட்டு இருக்கான். இப்போ இப்படின்னா...? அவன் தங்கைக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்? என்னாலேயே தாங்கிக்க முடியலை...” அவன் அனுபவத்தையும் மீறி குரல் கலங்கவே செய்தது.

“முகேஷ்..., பிரம்மாவுக்கு உடல் அளவில் எந்த பாதிப்பும் இல்லை. ஆனா மனசு..., இப்போ அங்கே இருக்கும் தனிமை, அதுதான் பிரச்சனையே. அவர் அமைதியா, நிதானமா இருந்தால் எல்லாம் சரியா நடக்கும். பொறுமை ரொம்ப முக்கியம். நம்ம அவசரத்துக்கு எதுவும் முடியாது.

“அதை உங்க பிரம்மா புரிஞ்சுக்க மறுக்கிறார். ஒரு விதத்தில் அவரோட வில் பவரை பாராட்டியே ஆகணும். என் அனுபவத்தில் நான் எத்தனை கேசை பாத்திருக்கேன்...,

அவங்க எல்லாம் ரியாக்ட் செய்ததுக்கு, பிரம்மா எதுவுமே இல்லை..., ரெஸ்ட் எடுக்கட்டும்...” இருக்கும் நிலையில் அவரால் வேறு எதுவும் சொல்ல முடியவில்லை.

“அவனுக்கு எப்போ பழசெல்லாம் நினைவுக்கு வரும்? இப்போ அவன் இப்படி நடந்ததுக்கு என்ன அர்த்தம்? இது தொடருமா?” அவன் கேள்விக்கு.

அவனை ஆழமாக பார்த்தவர், “அவருக்கு பழசெல்லாம் எப்போ ஞாபகம் வரும்னு கேட்டால்..., மெடிக்கல் ஹிஸ்ட்டரியில் அதுக்கு பதில் இல்லை. லெட்டஸ் ஹோப் பார் தி பெஸ்ட்...” முடித்தவர் சென்றுவிட்டார்.

மறுநாள் காலையில் கண் விழித்த பிரம்மா அமைதியாக அமர்ந்திருந்தான். வெளியே அப்படித் தெரிந்தாலும், உள்ளே..., ‘அந்த மூக்குத்திக்கு சொந்தக்காரி யார்? எனக்கு நன்கு தெரிந்தவளா? அப்படியென்றால் இப்பொழுது அவள் எங்கே? அவள் கண்களில் தெறித்த கோபத்துக்கான காரணம் என்ன?’ மனம் அதையே சுழன்றது.

தனக்கு முதல் முதலாக நினைவுக்கு வந்த ஒரு விஷயம்..., அதை சுலபமாக தள்ளிவிட அவனால் முடியவில்லை. வழக்கமான அவனது அமைதி முகேஷுக்கு பழக்கம்தான் என்றாலும், இப்போதைய அமைதியை சாதாரணமாக ஏற்க முடியவில்லை. அவன் உள்ளுக்குள் எதையோ ஆராய்ந்தவாறே அமர்ந்திருப்பது அவனது வெறித்த பார்வையிலேயே புரிந்தது.

“பிரம்மா..., என்ன யோசிக்கற...?” அவன் யோசனையை கலைத்தான் முகேஷ்.

“முகேஷ்..., கௌஷிகா மூக்குத்தி போட்டிருப்பாளா?” தன் கேள்விக்கு பதில் சொல்லாமல், தன்னிடம் கேள்வி கேட்ட அவனை வெறித்த முகேஷ்..., “இல்லையே..., ஏன் கேக்கற...?” அவன் திருப்பிக் கேட்க, மறுப்பாக தலை அசைத்தான்.

‘அப்போ..., அந்த மூக்குத்திக்கு சொந்தக்காரிக்கும், அந்த கோபமான வார்த்தைகளுக்கும், அந்த கண்களுக்கும் ஏதோ

தொடர்பிருக்க வேண்டும். அனைத்தும் ஒரே ஆள் தானா...? இல்லையென்றால் வேறு ஆட்களா?' அவனுக்கு அது தெரிந்தே ஆகவேண்டும்போல் இருந்தது.

"பிரம்மா..., ரொம்ப யோசிக்காதே..., நிதானமா இருந்தால் எல்லாம் ஞாபகத்துக்கு வரும்னு டாக்டர் சொன்னாங்க..." அவன் சொல்ல, ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

"முகேஷ்..., எனக்கு தங்கை மட்டும்தானா...?" அவன் திடுமென கேட்க, சத்தியமாக இதற்கு என்ன பதில் சொல்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை.

பொதுவாகவே அவனது தாய் பற்றி பேசினாலே அவன் வெறிபிடித்தவனாக மாறி விடுவான். அப்படியிருக்கையில், இப்பொழுது அவன் கேட்பதற்கு பதில் சொல்லி, பின்னர் அவனுக்கு ஏதாவது நினைவிற்கு வந்து., சற்று பயமாகத்தான் இருந்தது.

அதை மறைத்து, "உங்க அம்மா ரெண்டாவது கல்யாணம் பண்ணிகிட்டாங்கன்னு மட்டும் எனக்குத் தெரியும். மற்றபடி, அவங்க எங்கே என்ன பண்றாங்க என்பது எல்லாம் எனக்குத் தெரியாது..." அவன் வேகமாக உரைக்க, அதில் நிச்சயம் உண்மை இல்லை என்பதை உணர்ந்து கொண்டான்.

"நீ என்கிட்டே அவங்களைப் பற்றி பேச விரும்பியது கிடையாது..." இது மட்டும் முழு உண்மை என பிரம்மாவின் உள்ளுணர்வு சொன்னது.

'ஏன்..., எதற்காக கோபம்? அவங்க ரெண்டாவது கல்யாணம் செய்ததை பிடிக்காத அளவுக்கு நான் கட்டுப்பெட்டியா? இல்லையென்றால் வேறு எதுவும் காரணமா? என்னதான் கோபமாக இருந்தாலும், எனக்கு விபத்து எனத் தெரிந்தும் எப்படி அவர்களால் வராமல் இருக்க முடிகிறது?' காரணம் சொல்ல முடியாத கோபம் எழுந்தது.

'நிச்சயம் அவங்க இங்கேதான் இருக்கணும். இல்லன்னா, அதைச் சொல்லும்பொழுது இவன் என் கண்களை

சந்திப்பதை மறுத்திருக்க மாட்டான்' மனம் அடித்துச் சொன்னது.

"முகேஷ்..., நான் வீட்டுக்கு கிளம்பறேன்னு டாக்டர் கிட்டே சொல்லிடு. டிச்சார்ஜ் பண்ணச் சொல்லு..., இங்கேயே இருக்கறது ஒரு மாதிரி இருக்கு" அவனுக்கு அங்கே மூச்சடைப்பது போல்தான் இருந்தது.

"பிரம்மா..., ரெண்டு வாரம் முழுக்க இங்கே இருக்க சொல்லி இருக்காங்க. நீ என்னன்னா உடனே போகணும்னு சொல்ற, என்ன விளையாடுறியா? உன் பிடிவாதத்தை நான் இதில் அனுமதிப்பதா இல்லை. தலையில் கட்டு பிரித்த பிறகு வீட்டுக்கு போவதுதான் நல்லதுன்னு நான் நினைக்கறேன். அங்கே தனியா..., வேண்டாம்..." வேகமாக மறுத்தான்.

"இல்ல முகேஷ்..., எனக்கு பழகிய இடத்தில் இருந்தா இன்னும் நல்லா இருக்கும்னு நான் நினைக்கறேன்..., பில் ரெடி பண்ணச் சொல்லு. என்னோட ஏடிஎம் கார்ட் பின் நம்பர் மறந்துடுச்சு. உனக்கு ஏதாவது ஐடியா இருக்கா...?" தன் கார்டை அவனிடம் கொடுத்தான்.

"பிரம்மா..., நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்..." நிச்சயம் முகேஷால் அவனை வீட்டுக்கு அழைத்துச் செல்வதை அனுமதிக்க முடியவில்லை.

"முகேஷ், எனக்கு நல்லது செய்வதா இருந்தால் இதைச் செய்" குரல் இறுக அவன் உரைக்க, அதற்குமேல் முகேஷால் மறுக்க முடியுமா என்ன?

"பிரம்மா..., முதல்ல உன் கார்டை உள்ளே வை. பின் நம்பர் கௌஷிக்கு தெரியும், உன்னோட பின் நம்பர் எல்லாம் மெயில்ல சேவ் பண்ணி வச்சிருக்கா. மெயில் ஐடி, பாஸ்வேர்ட் எனக்குத் தெரியும், நான் இப்போவே எடுத்து தர்றேன்..." வேகமாக தன் அலைபேசியில் இருந்து, அவளது மெயில் ஐடியை திறந்து, பின் நம்பர்களை அவனது அலைபேசிக்கு அனுப்பினான்.

"இல்ல முகேஷ்..., அது சரி வராது. இதிலேயே பே பண்ணு. என் தங்கைக்கு வேண்டி, நீ இப்போவே நிறைய

செய்வன்னு நினைக்கறேன்” ஒரு யூகமாக உரைக்க, அவனது புத்திசாலித்தனத்தின்மேல் முதல் முறையாக கோபம் கொண்டான்.

“பிரம்மா...” அவன் அழைக்க, அவனிடம் இருந்த பிடிவாதத்தில், முகேஷ் தான் தாழ்ந்து போக வேண்டி இருந்தது.

ஷீபா எவ்வளவோ மறுத்தும் பிடிவாதமாக அன்று மாலையே வீட்டுக்கு கிளம்பி விட்டான். வளசரவாக்கம் ஏரியாவின் சற்று உள்ளே..., ஒரு தனி வீடு..., கால்டேக்சி அந்த வீட்டின் முன்னால் நின்று ஹாரன் அடிக்க, உள்ளே இருந்து செக்கியூரிட்டி வந்து கேட்டை திறந்து விட்டான்.

வீட்டு வாசலில் இறங்க, “இதுதான் உன் வீடு...” அவனிடம் உரைத்தவன் காரை அனுப்பினான். கந்தனுக்கு ஒரு வாரத்துக்கும் மேலாக ஓய்வற்ற உழைப்பு என்பதால் இரண்டு நாள் விடுப்பு கொடுத்து அவனை அனுப்பினான்.

வீட்டை நிமிர்ந்து பார்த்தவனுக்கு, அப்படியொன்றும் பழகிய நினைவு தோன்றவில்லை. கேட்டில் இருந்த செக்கியூரிட்டி கீயை வைத்து கதவைத் திறந்தவர், அதை அவனது கையில் திணித்துவிட்டு, “சார்...” ஒருவித விறைப்போடு விலகிச் செல்ல, கீயை அசையாமல் பார்த்தான்.

“உள்ளே வா...” அழைத்தவன், அவன் கீயையே வெறிப்பதைப் பார்த்து, “கீயை நீ எப்பவும் உன்னோடதான் வச்சிருப்ப. கிளீன் பண்ண வேண்டி கந்தன்தான் உன் ட்ரஸில் இருந்து எடுத்து கொடுத்திருக்கார்...” மேலே இருக்கும் ரூம்ல, லெப்ட்டில் இருப்பது தான் உன்னோடது. நீ போ..., நான் கீழே இருக்கும் ரூம்ல ப்ரெஷ் ஆகறேன்...” அவனை அனுப்பினான்.

படிகளில் ஏறிய பிரம்மா, வீட்டை சுற்றிலும் பார்வையை செலுத்தினான். கீழ் ஹாலில் சோபா செட், எதிர் சுவரில் ஒரு எல்ஈடி டிவி..., கீழே, வலப்பக்கம் இரண்டு அறைகள்,

இடப்பட்டம் கிச்சன் கதவு திறந்திருக்க, அங்கே சாப்பாட்டு மேஜை இருந்தது.

சுவற்றில் சில அழகான ஓவியங்கள்..., ஒரு பார்வையில் அவற்றை வருடியவன், முகேஷ் சொன்ன அறையின் முன்னால் வந்து நின்றான். கதவின் குமிழை திருகி திறந்தவன் உள்ளே நுழைய, ஒரு இரட்டை கட்டில், வான்நீல விரிப்பில் அவனை வரவேற்றது.

வலப்பக்கம் பாத்ரூம் கதவு தெரிய, சுவற்றில் ஒற்றை கடிகாரம் மட்டுமே இருந்தது. இடப்பக்கம் முழுவதும் வார்ட்ரோப் வரவேற்க, நிதான நடையில் அதை நெருங்கினான். அதில் இருந்த நிலைக் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்க்க, ஒருவாரம் சவரம் செய்யாத முகம் முள் தாடையில் பார்வைக்கு கிடைக்க, தலையைச் சுற்றி, வெள்ளை கட்டு.

கதவைத் திறந்தவன்..., காக்கி யூனிபாம் வரிசையாக தொங்க விட்டிருப்பதைப் பார்த்து, மெதுவாக வருடினான். அடுத்த கதவைத் திறக்க, உள்ளே வெள்ளை நிறத்தில் அனேக டிஷர்ட்..., கூடவே லைட் கலரில் மேலும் பல டிஷர்ட்..., சில சட்டைகள்..., வேறு கலர் பேண்ட் அவ்வளவாக இருக்கவில்லை.

‘நான் லைட் கலர்தான் விரும்புவேனா?’ எதுவும் தெரியவில்லை. தன் அலைபேசியில் கேலரியை திறக்க, காக்கி பேண்ட்டுக்கு மேல்..., டிஷர்ட் அணிந்து போஸ் கொடுத்திருந்தான். தொண்ணூறு சதவீத புகைப்படம் அப்படித்தான் இருந்தது.

‘டியூட்டி நேரம் தவிர, வெளியே போனாலும் காக்கி பேண்ட்டில் தான் போவேன் போல...’ தன்னைப்பற்றி தானே ஒவ்வொன்றாக படிக்கும் விதம்..., அலைபேசியை தூக்கி படுக்கையில் போட்டான்.

அங்கே இருந்த மேஜைமேல் இருந்த புத்தகங்களைப் புரட்ட, அனைத்தும் கிரைம் கதைகள். சில வாராந்திர பத்திரிக்கைகள்..., ஒரு பத்திரிக்கையை

அலங்கரித்திருந்தது அவனது புகைப்படம். கையில் எடுத்தவன், அப்படியே வைத்துவிட்டு நகர்ந்தான்.

அந்த அறையும் அவனுக்கு அந்நியமாகவே தோன்றியது. எதுவும் நினைவிற்கு வரவில்லை. கோபம், வெறுப்பு என கலவையான உணர்வுகள் எழ, அதனால் எந்த பயனும் இல்லை எனத் தெரிந்தவன், படுக்கையில் சென்று அமர்ந்து, அப்படியே படுத்துக் கொண்டான்.

எவ்வளவு நேரமோ தெரியாது. யாழினி டிஐஜிக்கு அழைக்கச் சொன்னது நினைவிற்கு வர, தன் அலைபேசியை எடுத்தவன், காண்டெக்ட் லிஸ்ட்டை தேட..., டிஐஜி என்ற பெயரிலேயே இருந்த எண்ணை அழுத்தினான்.

இரண்டு ரிங் சென்று எடுக்கப்பட, “ஹலோ பிரம்மா..., ஹவ் ஆர் யூ...? டிச்சார்ஜ் ஆயிட்டீங்களா? எத்தனை நான் ரெஸ்ட் எடுக்க சொல்லியிருக்காங்க? எப்போ டியூட்டியில் ஜாயிண்ட் பண்றீங்க?” அவர் கேட்க,

“ஐ’ம் ஓகே சார்..., ஜஸ்ட் நவ் ரீச்ட் ஹோம்..., டூ வீக்ஸ்ல ஜாயின் பண்ணிடுவேன்” அவர் கேட்டதுக்கு மட்டும் பதில் கொடுத்தான்.

“டூ வீக்ஸ்...” அந்தபக்கம் அவர் ஏதோ யோசனைக்குச் செல்வதை இவனால் உணர முடிந்தது. ‘ஷீபா இரண்டு மாதம் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டும் என சொன்னதை இவரிடம் சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பார்’ உள்ளம் அதன் போக்கில் சிந்தித்தது.

“பிரம்மா..., இந்த சிச்சுவேஷன் உங்களுக்கு நல்லாவே தெரியும். ஆளும்கட்சி பிரஷர் தாங்க முடியலை. சூசைட் கேசை, நீங்க மர்டன்னு சொல்லிடு போயிட்டீங்க..., யாருக்கும் பதில் சொல்லி மாளலை...? நாம லேட் பண்ணா, கேஸ் சிபிஐக்கு மாத்த சொல்லி சொல்லிடுவாங்க.

“உங்க கெரியர்ல அப்படி ஒரு பிளாக் மார்க் வர்றதை நான் விரும்பலை. இந்த கேசை நீங்க சால்வ் பண்ணிட்டா எஸ்எஸ்பியா புரமோஷன் கிடைக்க வாய்ப்பு நிறைய

இருக்கு. சோ..., இந்த நேரத்தில் நான் இதை சொல்லக் கூடாது, பட் வேற வழி இல்லை..., கம் பேக் சூன்...” உரைத்தவர் அலைபேசியை வைத்து விட்டார்.

அலைபேசியை வெறித்தவன், ‘ஆளும்கட்சி தலையிடும் அளவுக்கான கேஸ் என்றால்..., கேசே என்னவென்று தெரியாதபொழுது நான் என்ன செய்ய?’ நெற்றியை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

மேஜைக்கு கீழே இருந்த லேப்டாப்பை பார்த்தவன், வேகமாக எழுந்து சென்று அதை உயிர்ப்பித்தான். உயிர்கொண்ட அதுவோ..., உள்ளே நுழைய கடவுச்சொல் கேட்க, சோர்ந்து போனான்.

“ஷிட்..., ஷிட்...” தன் ஆத்திரம் மொத்தமும் வெடிக்க, படுக்கையை குத்தினான். அந்த நேரம் அவனைத் தேடி வந்த முகேஷ்..., “பிரம்மா..., இப்போ உன்னை யார் இதையெல்லாம் நோண்டச் சொன்னது? இதுக்குதான் நான் ஹாஸ்பிடல்லேயே இருக்கலாம்னு சொன்னேன். கேக்காமல் வந்துட்டு, இப்போ..., முதல்ல அதை மூடி வை...” தானே அதை மூடியவன், மேஜைமேல் வைத்துவிட்டு வந்தான்.

“ஹீட்டர் ஆன் பண்ணித்தான் இருக்கு..., முதல்ல போய் குளிச்சுட்டு வா, இட்லி ரெடியா இருக்கு, சாப்ட்ட பிறகு பேசலாம்...” அவனை கைபிடித்து எழுப்பி, பாத்ரூம் பக்கம் தள்ளினான்.

மறுக்க முடியாமல் குளித்து உடை மாற்றி வந்தவன், கிளீன் ஷேவ் செய்து, மீசையை சற்று முறுக்கியிருந்தான். மண்டைக்குள் தெறிக்கும் வலியை அவன் கொஞ்சம் கூட கண்டுகொள்ளவில்லை. மனதின் குழப்பத்துக்கு முன்னால், இது ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை.

அவனைப் பார்த்தவன், “இப்போதான் எங்க பிரம்மா மாதிரி இருக்க..., வா...” கையோடு அழைத்துச் சென்று உண்ண வைத்தான்.

“இங்கே எப்பொழுதும் செக்கியூரிட்டி இருப்பாங்களா?” அவன் உணவை வாயில் போட்டவாறே கேட்க,

“உனக்கு அப்படி ஒரு செக்கியூரிட்டிக்கு அவசியமே இருந்தது இல்லை பிரம்மா. நீ ஒரு ஆள், பத்து யானைக்குச் சமம்” அவன் சொல்ல, அந்த வார்த்தைகளில் தெரிந்த பிரமிப்பில், ஒரு நொடி திகைத்துத்தான் போனான்.

‘அப்படியென்ன ஸ்பெஷல் என்னிடம்...? இந்த உடம்பு மட்டும் எக்காட்டம் இரும்பா இருக்கு. மற்றபடி..., எனக்கு எதுவும் வித்தியாசமா தெரியலையே...’ அவன் சிந்தை இப்படித்தான் போனது.

உணவு உண்டு முடிக்கவே..., “முகேஷ்..., நீ கிளம்பு..., அங்கே அவ தனியா இருப்பா. இப்போ நீ அங்கே இருக்கணும். நான் டியூட்டியில் சேர முன்னாடி அவளை வந்து பாக்கறேன். என்னைக்கு டெலிவரி டேட்...” சோபாவில் அமர்ந்தவன் கேட்க, அவனையே அசையாமல் பார்த்தான்.

“இங்கே உன்னை எப்படி தனியே விட்டுப் போக...” அவன் தயங்கினாலும், மனைவியோடு இருக்க வேண்டும் என அவன் உள் மனம் தவிப்பதை உணர்ந்து கொண்டான்.

“நீயும் என்னோட வந்துடேன்...” அவன் இழுக்க, இப்பொழுது மெல்லியதாக சிரித்துக் கொண்டான் பிரம்மா.

“என் நிலையை யாருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்ட நான் விரும்பலை முகேஷ். அது மட்டுமில்லை..., இந்த நிலைமையில் நான் எங்கேயும் வர விரும்பலை. நீ ஊருக்கு போ..., ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லு..., என்னோட இப்போதைய கேஸ் பத்தி ஏதாவது டீட்டெயில் உனக்குத் தெரியுமா?” அவனுக்குத் தெரிந்தால் நன்றாக இருக்குமே என்று இருந்தது.

“உண்மையைச் சொன்னால்..., மீடியாவுக்கு தெரிந்த விஷயம் கூட எனக்குத் தெரியாது. நீ எப்பவுமே ஒரு சீக்ரெட் பாக்ஸ் தான். இந்த கேசில் உனக்கு ஆர்கனைஸ் பண்ண யாழினி, கந்தனுக்கு தெரியலாம்..., நீ அவங்ககிட்டே கேள்...” அவன் முடித்துவிட,

‘அவர்களிடம் மட்டும் நான் ஏதாவது சொல்லியிருப்பேனா என்ன?’ அவனுக்கு நம்பிக்கையே இல்லை.

மறுநாள் கிளம்புகிறேன் எனச் சொன்னவனை, பிடிவாதமாக இரவு விமானத்துக்கே அனுப்பி வைத்தான். இப்பொழுது அவ்வளவு பெரிய வீட்டில், தான் மட்டும் இருப்பது பெரும் சோர்வைக் கொடுத்தது. சோர்வாக உணர்ந்தானே தவிர, நிச்சயம் பயம் இல்லை.

அதே நேரம்..., சட்டென விளக்குகள் அனைத்தும் ஒளி இழக்க, படுக்கையில் இருந்து இறங்கியவன், நடந்து சென்று, தன் அறையின் ஜன்னல் திரைச்சீலையை விலக்கி வெளியே பார்க்க, மற்ற வீடுகளில் விளக்குகள் ஒளிர்வதைப் பார்த்தவன் புருவம் சுருக்கினான்.

‘அப்படின்னா...?’ நின்ற இடத்திலேயே அவன் கண்கள் மட்டும் சுழல, காதின் ஓரம் வியர்வை ஒரு கோடாக இறங்கியது. கொஞ்சம் கூட அவன் அசையவில்லை.

நின்ற இடத்திலேயே இருந்தவன், தன் புலன்கள் அனைத்தும் கூர்மையாவதை உணர்ந்தான். இமைகளை அழுத்தமாக மூட, செவிகளைத் தீண்டும் மெல்லிய ஷூக்களின் நடமாட்டம்..., அங்கே இரண்டுமூன்றுபேர் இருப்பதை அவனுக்கு உணர்த்தியது.

‘வாசலில் இப்பொழுது செக்கியூரிட்டி இல்லையோ...?’ தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். முகேஷ் வெளியே செல்கையில் அவனாகவே கேட்டைத் திறந்துகொண்டு காரில் ஏறிச் சென்றது நினைவிற்கு வர, செக்கியூரிட்டில் இல்லாததை அறிந்தான்.

“டேய்..., ஆள் தனியாத்தான் இருக்கான்..., எப்படியாவது போட்டுடணும்...” மிக மெல்லியதாக கேட்ட குரல் ஒலியில், தன் அறைக்கதவை திறந்து கொண்டு தைரியமாக வெளியே வந்தான்.

பார்வை இருட்டுக்கு பழகியிருக்க, வெளியே இருந்து வந்த ஒளி, ஜன்னல் வழியாக நுழைந்து மசமசப்பாக பொருட்கள் புலனானது. அடுத்த நொடி, இரண்டுபேர் அவன் முதுகின்

பின்னால் இருந்து தாக்க வர, அருகில் இருந்த கனமான புத்தகத்தை எப்பொழுது கையில் எடுத்தான்..., அதை எப்பொழுது அவர்கள்மேல் வீசினான்..., எனத் தெரியும் முன்பே, இமைக்கும் பொழுதில் அது நடந்திருந்தது.

அதே நொடி..., ஒருவனது கையில் இருந்த கத்தி தூரமாய் போய் விழ, மற்றவனது கத்தி, அவன் கரத்தில் அடைக்கலமாகி இருந்தது. மூன்றாமவன் நெருங்கும் முன்பே, அவன் முழங்காலை இருளில் துல்லியமாக கணக்கிட்டவன், கையில் இருந்த கத்தியை அவனை நோக்கி வீச, “ஆ...” அலறியவன் அதை வாங்கியதை உறுதி செய்தான்.

வந்தவனது கையில் இருந்த கத்தி தானாகவே கீழே விழுந்து இருளுக்குள் தொலைந்தது. அனைவரும் இப்பொழுது ஆயுதமின்றி இருக்க, அடுத்த நிமிடம், இருவர் அவன்மேல் பாய்ந்தார்கள்.

தன்னை நெருங்கியவனது கையைப் பிடித்து ஏதோ ஒரு நரம்பை அழுத்த, “ஸ்..., ஆ...” அவன் கையை உயிர்வலியில் உருவிக் கொண்டு துடிப்பதும், மற்றவனது தாடையில் இறங்கிய இவனது கை முஷ்டி இரண்டு பற்களை தெறிக்கவிட, சூடான ரத்தத்தை அவன் வாய் உள்வாங்கியது.

மூவரும் ஒரு நேரம் ஒன்றாக அவன்மேல் பாய, பிரம்மாவின் இரண்டு கையும், ஒரு காலும் ஒரே நேரத்தில் அவர்களை தாக்க, நிச்சயம் அவர்களை பலமாக தாக்குவதை விட, அவர்களது முக்கியமான நரம்புகளை சுண்டியவன், தன் சக்தியை வீணாக்காமல் அவர்களை பலமிழக்க வைத்தான்.

தன் செய்கையை, தாக்கும் விதத்தைப் பார்த்து, தானே பிரமித்து, திகைத்து நிற்க, பிரம்மா மேலும் சுதாரிக்கும் முன்பே..., மூவரும் ஆளுக்கு ஒரு பக்கம் சிதறி தப்பித்து ஓடினார்கள். ஒரு நிமிடத்துக்குள் என்ன நடந்தது எனத் தெரியாமல் நின்றிருந்தான் பிரம்மா.

‘என்னை எதற்காக கொல்ல வருகிறார்கள்? விடாமல் முயலும் இவர்களது முயற்சிக்குப் பின்னால் இருக்கும் காரணம் என்ன? நான் இப்பொழுது விசாரிக்கும் இந்த கேசில் இருக்கும் உண்மையை யாரோ வெளியே வர விடாமல் செய்கிறார்கள்..., அது ஏன்...? யார்...?’ கேள்விகள் படையெடுக்க, நின்ற இடத்திலேயே இமைகளை மூடி, ஒரு நொடி நின்றுவிட்டான்.

தலையில் வலி வேறு தெறிக்க..., அப்பொழுதுதான் மீண்டான். இமைகளைப் பிரிக்க, வீடு இன்னும் இருளில் மூழ்கி இருந்தது.

பிறகுதான் வந்தவர்கள் மெயின் சுவிட்ச்சை அணைத்திருக்கலாம் என எண்ணியவன், தன் அறைக்குள் நுழைந்து அலைபேசியில் இருந்த டார்ச்சை உயிர்ப்பித்தவன் கீழே சென்று, மெயின் சுவிட்சை ஆன் செய்து விட்டான்.

‘சென்றவர்கள் மீண்டும் வருவார்களா...?’ யோசனை ஓட, ஷீபா கொடுத்த மாத்திரைகளை எடுத்து விழுங்கியவன், மீண்டுமாக கதவுகளின் தாழை சரியாக போட்டுவிட்டு, படுக்கையில் சென்று விழுந்தான்.

‘உறக்கம் வருமா...?’ அவன் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே இமைகள் தாமாக மூடிக் கொண்டது. காலையில்..., எங்கேயோ ஒலித்த அழைப்புமணி ஓசை அவனை கலைக்க, படுக்கையில் இருந்து எழுந்தவன், முதலில் கண்டது, எதிரில் இருந்த கடிகாரத்தையே.

நேரம் ஏழு முப்பது எனக் காட்ட, ‘இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்...’ எண்ணியவன் எழுந்து கீழே வந்து கதவைத் திறக்க, அங்கே நின்றிருந்தார் கந்தன்.

“மார்னிங் சார்..., டிபன்...” உரைத்தவன், அவன் வழி விடவே, நேராக வீட்டுக்குள் வந்து சாப்பாட்டு மேஜைமேல் வைத்தான். அவர் கையில் பால் பாக்கெட் இருக்க, நேராக

கிச்சனுக்குச் சென்று பாத்திரங்களை உருட்டுவது அவனுக்குத் தெரிந்தது.

அவன் கிச்சன் வாசலில் வந்து நிற்க, “வழக்கமா நீங்கதான் காபி போட்டுப்பீங்க. இன்னைக்கு நான் போடலாம்னு...” அவர் இழுக்க, ‘செய்...’ என்பதுபோல் தலை அசைக்க, தன் வேலையைத் தொடர்ந்தார்.

தன் அறைக்குச் சென்றவன், ப்ரெஷ் ஆகி, குளித்து உடை மாற்றி வர, கந்தன் அவனையே ஆச்சரியமாய் பார்த்தான். ‘மனுஷனுக்கு அந்த கம்பீரம் மட்டும் அப்படியே ஒட்டிக்குது...’ மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

அவர் தட்டில் வைத்ததை அமைதியாக உண்டவன், “ஹாஸ்பிடல் போகணும்...” அவன் சொல்ல,

“உங்க ஜீப் ரெடியா இருக்குன்னு மெக்கானிக் சொன்னான் சார்..., நான் போய் எடுத்துட்டு வந்துடறேன்..., நாம அதிலேயே போகலாம்...” மேலே அவன் பதில் சொல்ல, அவர் அங்கே நிற்கவில்லை.

அடுத்த ஒருமணி நேரத்தில் ஜீப்போடு அவர் வர, மஹிந்திரா ஜீப்..., அடர் பச்சை வர்ணத்தில் புதுப் பொலிவோடு நின்றிருந்தது. ‘இது டிப்பார்ட்மென்ட் வண்டி மாதிரி இல்லையே...’ அவன் எண்ணம் இதுவாகத்தான் இருந்தது.

‘ஜீப்...’ பார்வை கேள்வியாக கந்தன்மேல் பாய, அவன் பார்வைக்கான பொருளை உணர்ந்தவர், “சார்..., இது உங்க சொந்த ஜீப்...” அவர் உரைக்கவே, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

ஷீபாவுக்கு அழைத்து, அப்பாயின்மென்ட் வாங்கிவிட்டு, ஜீப்பின் முன் இருக்கையில் ஏறிக் கொண்டான். ஜீப் சாலையில் விரைய, “எப்பவும் நீங்கதான் ஜீப்பை ஓட்டுவீங்களா?” அவன் கேட்க, அவன் கேள்விக்கான பொருள் புரியாமல் விழித்தவர்,

“ஆமா சார்...” வேகமாக பதில் கொடுத்தான்.

“அப்போ..., ஆக்சிடென்ட் ஆன அன்னைக்கு எப்படி நான் ஜீப்பை ஓட்டினேன்...?” அவன் தன் கையில் இருந்த குளிர்கண்ணாடியை துடைத்தவாறு கேட்க,

“அன்னைக்கு நான் ஹால்ப் டே லீவ் சார்..., எனக்கு அன்னைக்கு வெடிங்டே..., பெர்மிஷன் கேட்ட என்னை, நீங்கதான் அரைநாள் லீவ் எடுத்துக்கச் சொல்லி சொன்னீங்க...” அவர் உரைக்க, அதற்கு எந்த பதிலும் அவன் சொல்லவில்லை.

“என்னை சந்தேகப்படறீங்களா சார்...?” தாள முடியாமல் அவர் கேட்டுவிட, “சந்தேகப்பட்டிருந்தால் இந்த ஜீப்பை இப்போ நீங்க ஓட்டியிருக்க மாட்டீங்க...” உரைத்தவன் பார்வையை வெளியே திருப்பிக் கொண்டான். அவருக்கு அந்த பதிலே போதும் என்பதுபோல், நிம்மதியாக வண்டியை செலுத்தினார்.

இடப்பக்கம் இருந்த ஜீப்பின் கண்ணாடியில் தெரிந்த ஒரு பிம்பம் அவன் கவனத்தை கவர, பார்வையை கூர்மையாக்க, அது ஒரு இஞ்சினியரிங் கல்லூரியின் பேருந்து. தன் இடப்பக்க புருவத்தை நடுவிரலால் வருடியவன், பார்வையை அதன்மீதே வைத்திருந்தான்.

அந்த பஸ், அவனை ஏதோ ஒரு விதத்தில் தொல்லை செய்தது. அது இன்னதென்று அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதே நேரம்..., ட்ராபிக் காரணமாக வண்டி நிற்க, அருகில் இருந்த பேருந்து நிறுத்தத்தில் தன் பார்வையை திருப்ப, சட்டென யாரோ மறைந்து கொள்ளும் உணர்வு. ‘யாராக இருக்கும்...?’ கண்கள் அலைபாய, அங்கே வேலைக்குச் செல்பவர்கள், கல்லூரிப் பெண்களின் கூட்டம் என நிரம்பி வழிந்தது.

அதே நேரம்..., ஒரு கூட்டமாக சில பெண்கள், அந்த கல்லூரி வாகனத்தை நோக்கி விரைய, பேருந்தில் ஏறிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் பக்கவாட்டுத் தோற்றம்...,

அதில் பளீரிட்ட மூக்குத்தி..., நொடிக்குள் அவனுக்குள் பெரும் மாற்றம்.

*****

# பகுதி – 6.

பிரம்மாவுக்கு நொடியில் தலைக்குள் மின்னல் வெடிக்க, “ஹ்..., ஹ்...” தலையை அழுத்தமாக பற்றியவன், இமை மூடி, வியர்வையில் நனைந்து சற்று திணறிப் போனான்.

“சார்...” பயந்துபோன கந்தன், வண்டியை ஓரமாக நிறுத்த முயல,

“வண்டியை ஹாஸ்பிடல்க்கு விடுங்க கந்தன்..., நிறுத்தாதீங்க” அவன் சொல்ல, அன்று வரைக்கும் அவனது பேச்சையே கேட்டு பழகியவர், அவன் சொன்னதுபோல் வண்டியை வேகமாக செலுத்தினார்.

ஹாஸ்பிடல் வாயிலில் வண்டியை நிறுத்தியவர்..., “சார்..., பார்க்கிங் போயிட்டு சேர்ந்து போய்டலாம்...” தயங்கி உரைக்க, அவன் மறுப்பானோ என அவன் முகம் பார்த்தார்.

‘சரி...’ என்பதுபோல் அவன் தலை அசைக்க, பெரும் நிம்மதியோடு வண்டியை பார்கிங்கில் நிறுத்தினார்.

பிரம்மாவுக்குமே தனியாகச் செல்லும் அளவுக்கு உடலில் தெம்பு இருக்கவில்லை. அதற்குக் காரணம்..., மூக்கில் இருந்து வழிந்த ரத்தமே. ரத்தம் என்பது அவனது வேலையில் அவன் பார்க்காத ஒரு விஷயம் கிடையாது. ஆனால்..., சட்டென மூக்கில் வழியும் ரத்தமும், தலை சுற்றலும், வலியும் அவனை சோர்ந்து போகச் செய்தது.

ஷீபா சொன்னது போல், இரண்டு வார முழு ஓய்வை அவன் எடுத்திருந்தால் இப்படி ஆகியிருக்காதோ என்னவோ? அவன்தான் யார் பேச்சையும் கேட்பதாக இல்லையே. பிறகு எப்படி அவனுக்கு உடல்நிலை தேறும்?

‘சார், ரெஸ்ட் எடுங்க...’ கந்தனுக்கு நுனிநாக்கு வரைக்கும் வந்த வார்த்தைகளை மிகவும் சிரமப்பட்டு விழுங்கினார்.

கந்தனுக்குக் காட்டாமல் தன் கர்ச்சீப் வைத்து மூக்கை மறைத்தவன், லிப்டில் ஏறி, மூன்றாம் தளத்தில் ஷீபாவின் அறைக்குள் நுழைய, கந்தன் வெளியே நின்று கொண்டார்.

“பிரம்மா..., வாங்க...” அழைத்தவர், அவன் மூக்கில் இருந்து கை எடுக்கவே, அதில் இருந்து வழிந்த ரத்தத்தைப் பார்த்தவர், சட்டென இருக்கையில் இருந்து எழுந்தார்.

‘காட்...’ வாய்க்குள் முனகியவர், “பிரம்மா, அந்த காட்ல படுங்க..., சிஸ்டர்...” அழைத்தவர், ஒரு இன்ஜெக்ஷன் பெயரைச் சொல்ல, அவள் கொடுத்ததை வேகமாக அவன் புஜத்தில் சொருகினார்.

“ரெண்டு நிமிஷம் அப்படியே இருங்க...” உத்தரவிட்டவர், அவன் மூக்கில் வழிந்த ரத்தத்தை பஞ்சால் சுத்தம் செய்தார்.

“பிரம்மா..., நான் சொன்னது எதையுமே நீங்க கேக்கலைன்னு எனக்கு நல்லா தெரியுது...” கோபமாகவே இரைந்தார்.

“எதைக் கேக்கலைன்னு சொல்றீங்க...?” அவனுக்குப் புரியவில்லை.

“பிரம்மா..., நீங்க பொய் சொல்லலாம்..., ஆனா உங்க உடம்பு காட்டிக் கொடுத்துடும். நீங்க ஒரு எக்ஸ்ட்ரீமா டென்ஷன் ஆகியிருந்தால் மட்டுமே இப்படி ப்ளட் வர வாய்ப்பு இருக்கு...” மீண்டுமாக அவன் மூக்கில் வழிந்த ரத்தத்தை பஞ்சால் அழுத்தினார்.

“இல்ல டாக்டர்..., வர்ற வழியில் சட்டுன்னு மூளைக்குள் ஏதோ நினைவு, அது சரியா இல்ல தப்பான்னு அனுமானிக்க முடியலை. அதே நினைவு வருவது இது ரெண்டாவது முறை. அப்படி எதுவோ நினைவுக்கு வரும்போது, தலை ரொம்ப வலிக்குது.. அந்த நினைவுகள் வரும்பொழுது தானாகவே ஒரு பெரும் படபடப்பும், அழுத்தமும், மூக்கில் இருந்து ரத்தமும் வழியுது...” அவன் உரைக்க, அமைதியானார்.

“உங்களுக்கு நினைவுக்கு வருவது பழைய விஷயங்களா?” அவள் கேட்க,

“எனக்குத் தெரியலை…, அது…” ஒரு பெண்ணும், அவளது மூக்குத்தியும் நினைவுக்கு வருகிறது என்று சொன்னால் எப்படி எடுத்துக் கொள்வார்? அதைச் சொல்லலாமா? தயங்கினான்.

“பிரம்மா, என்கிட்டே வெளிப்படையா சொன்னால்தான் நான் உதவி செய்ய முடியும். என்கிட்டே மறைத்தால், நான் எதுவும் செய்ய முடியாது” ஒரு மருத்துவராக உரைக்க, அப்பொழுதும் அவனிடம் அமைதியே நிலைத்தது.

“சரி, எதைப் பற்றி பேசினால்…, இல்ல பார்த்தால் உங்களுக்கு அந்த நினைவு வருது? அது எந்த விஷயம்னு சொன்னால், நாம மேற்கொண்டு முயலலாம்” அவன் அருகில் இருக்கையை இழுத்து போட்டு அமர்ந்தாள்.

“அது…, என் திருமணம்…, பிறகு…, கல்லூரி பேருந்து…, கூட்டமா கல்லூரி பெண்கள்…, இப்படி பாத்தபோதுதான்…” அவனுக்கும் எதுவும் தெளிவாக தெரியவில்லையே, எனவே துண்டு துண்டாகவே உரைத்தான்.

ஷீபாவின் புருவம் சற்று யோசனைக்கு அறிகுறியாய் சுருங்க…, கூடவே ‘இது நடக்க வாய்ப்பே இல்லையே…’ அவனைப் பற்றி கிட்டத்தட்ட நன்கு அறிந்தவர் என்பதால், ஒரு பெண் அவன் வாழ்க்கையில் இருப்பாள் என்பதை அவரால் துளி கூட நம்ப முடியவில்லை. “எனி கெஸ்…?” அவரைக் கலைத்தான்.

“ம்…, உங்க மனசுக்கு நெருக்கமா ஏதோ ஒரு கல்லூரிப் பெண் இருந்திருக்கலாம்…” தன் மனதுக்குள் தோன்றிய எண்ணத்தை மறைத்து, அவர் இயல்புபோல் உரைக்க,

“வாய்ப்பே இல்லை…” அவன் பட்டென உரைத்தான்.

“அப்படி சொல்ல முடியாது பிரம்மா…, உங்களையே அறியாமல்…, உங்களோட ஆழ் மனசில் ஒரு பெண்ணின் உருவம், நினைவு, குரல் பதிந்து போயிருக்கு. அப்படி இல்லாமல், உங்களுக்கு அது முதலில் நினைவிற்கு வர வாய்ப்பே இல்லை” அவர் அடித்துச் சொல்ல, அவனுக்கு நம்பவே முடியவில்லை.

‘பெண்கள் என்றாலே நான் நாலடி தூரத்திலேயே வைத்திருந்திருக்கிறேன். இதில், என் மனதுக்கு நெருக்கமாக பெண்ணா…?’ உள்ளுக்குள் எண்ணிக் கொண்டான்.

அதைவிட, தன் நினைவை மறைத்து, முகேஷிடம், ‘நான் பெண்களிடம் எப்படி நடந்து கொள்வேன்?’ என கேட்டபொழுது அவன் கண்களில் விரவிய பாவனை…, நிச்சயம் அதை பிரம்மாவால் துல்லியமாக கணிக்க முடிந்தது.

‘பொண்ணுங்களா…, நீயா…?’ இதைத்தான் அவன் மனம் நினைத்தது என்பதை உணர்ந்த பிரம்மா அடுத்த கேள்வியை கேட்கவே இல்லை. அதை வைத்துதான் உறுதியாக ஷீபாவிடம் மறுத்தான்.

“டாக்டர்…, தலையில் இருக்கும் இந்த கட்டை பிரிச்சிடுங்க…, ரொம்ப அவஸ்தையா இருக்கு. வெளியே எங்கேயாவது போகலாம் என்றால், இப்படியே போகவும் முடியலை” அவன் தலைக்கட்டை காட்ட,

“பிரம்மா…, என்ன விளையாடறீங்களா? தலைக்கட்டை பிரிக்கிறதா? நோ வே…, அட்லீஸ்ட் இன்னும் ஒரு வாரமாவது முழுதாக அந்த கட்டு இருந்தாகணும். அவசரப்பட்டு பிரித்து, காயம் ஏதாவது செப்டிக் ஆனால் அதில் இருக்கும் ரிஸ்க் என்னன்னு உங்களுக்கு புரியலை.

“நீங்க ரிஸ்க் எடுக்க விரும்புவது உங்க உயிரோட பிரம்மா. இதற்குமேல் எனக்கு என்ன சொல்லன்னு தெரியலை” அவன் முகத்தில் இருந்த பிடிவாதம் அவரை அவ்வாறு சொல்லத் தூண்டியது.

ஷீபா இவ்வளவு சொன்ன பிறகு, பிடிவாதமாக அவனால் தன் தலைக்கட்டை பிரிக்கச் சொல்ல மனமில்லை. சில நொடிகள் அமைதியாக இருந்தவன், “ஓகே…, நெக்ஸ்ட் வீக் வர்றேன்…” அவன் சொல்ல, ஷீபா கொஞ்சம் உறுதியானவராக இல்லாமல் இருந்திருந்தால், மயக்கம் போட்டே விழுந்திருப்பார்.

அடுத்த ஒரு வாரம் எப்படி சென்றது எனத் தெரியவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு கடந்தான் என்பதுதான் உண்மை. அடுத்த வாரம் ஷீபாவின் முன்னால் இருக்க, அதற்குமேல் அவர் மறுக்கவில்லை. அருகில் இருந்த சிசரை கையில் எடுத்துக் கொண்டார் ஷீபா.

“பிரம்மா…, உங்களுக்கு முழுசா ஹேர் கட் பண்ணிட்டோம்…, சோ…, உங்க உருவத்தை பாத்து பதட்டப்படாதீங்க…” உரைத்தவர், தன் வேலையைத் தொடர்ந்தார்.

‘இங்கே எனக்கு மொத்தமா எதுவுமே ஞாபகம் வரலை, இதுக்கே பயப்படலை, இதில் மொட்டை தலையை பார்த்தா பயப்படப் போறேன்?’ தனக்குள் கேட்டுக் கொண்டவன் அமைதியாக இருந்தான்.

“டாக்டர்…, மூக்கில் பிளட் வர்றது ஆபத்தா…?” என்னதான் தைரியமாக காட்டிக் கொண்டாலும், உள்ளுக்குள் இருக்கும் பயத்தை மனிதனால் மறைக்க முடியுமா என்ன?

“ஏன்…, மறுபடியும் பிளட் வந்ததா?” தன் செய்கையை நிறுத்தியவர் அவன் முகம் பார்த்தார்.

“இல்ல…, அன்னைக்கு கேக்க மறந்துட்டேன், அதான் இப்போ கேட்டேன்”

“ஆபத்தான்னு கேட்டால்…, சில நேரம் நீங்க மயக்கத்துக்குப் போய்டலாம். சப்போஸ் நீங்க டிரைவிங்கில் இருக்கும்போது…, இல்ல ஸ்விம்மிங் ‘பூல்’ல இருக்கும்போது மயக்கமாகிட்டா ஆபத்தா போய்டும். பட் கொஞ்ச நாள் போனால் மெடிசின் தொடர்ந்து சாப்பிட்டால் எல்லாம் செட் ஆகிடும்…” அவன் தலைக்கட்டை முழுதாக அகற்றியவர், பின் தலையில் போட்டிருந்த தையலை கட் பண்ணத் துவங்கினார்.

ஒவ்வொரு தையலையும் பிரிக்கும் பொழுதும், சுருக் சுருக்கென வலிக்க, மொத்தம் பத்தொன்பது தையல் இருந்ததை எண்ணினான். ‘பெரிய அடிதான்…’ தனக்குள் சொல்லிக் கொண்டான்.

“டாக்டர்..., ப்ரெயின்ல ஏதாவது டேமேஜ்...” அவன் இழுக்க,

“பின் மண்டையில் பலமான அடி..., ஸ்கல் கொஞ்சம் டேமேஜ் ஆகும் அளவுக்கான அடி. அனேகமா நீங்க கடைசி நிமிஷம் கொஞ்சம் சுதாரித்து இருக்கணும். அப்படி இல்லாமல் போயிருந்தால்..., ஸ்கல் உடைந்து, அங்கேயே உயிர் போயிருக்கவே சான்ஸ் இருக்கு. இல்ல கோமா போயிருப்பீங்க...,

“உங்களை காப்பாற்றும் வாய்ப்பு ரொம்ப கம்மியா இருந்திருக்கும். அதில் இன்னொரு நல்ல விஷயம்..., அடி பட்டவுடன் நீங்க முன்னாடி சரிந்து விழலை அப்படி நடந்திருந்தால், மூளைக்குள் ரத்தம் போய்..., அந்த கிளாட்டை ரிமூவ் பண்ணவே பல மாதங்கள் ஆகியிருக்கும்.

“உங்களுக்கு நினைவு திரும்பவும் இன்னும் நாள் ஆகி இருக்கும். ஸ்கல் டேமேஜ் மூணு மாசத்தில் அதுவே சரி ஆகிடும். பட்..., மறுபடியும் அங்கே சின்ன அடி கூட படக் கூடாது..., கவனமா இருங்க. கொஞ்சநாள் தலைக்கு குளிக்க வேண்டாம்.

“காயம் செப்டிக் ஆயிட்டால் ஆபத்து..., இன்னும் ஒரு வாரத்தில் வெளிக் காயம் ஆறிடும்...” அன்று சொல்லாமல் விட்ட அனைத்தையும் இப்பொழுது சொன்னார்.

“நான் எப்போ வேலைக்குப் போகலாம்...?”.

“ஏற்கனவே சொன்ன மாதிரி முழுசா ரெண்டு மாசம் ரெஸ்ட் எடுங்க. வண்டியில் அலைச்சல், டென்ஷன்..., ப்ரஷ்ஷர்..., இதெல்லாம் கொஞ்சநாள் தள்ளிப் போடுவது பெஸ்ட். அதற்கு மேலேயும் ரெஸ்ட் எடுப்பது நல்லது.

“பட்..., உங்க வேலையை மயின்ட்ல வச்சுதான் டூ மந்த்ன்னு சொல்லியிருக்கேன். இதுவே மத்தவங்கன்னா, சிக்ஸ் மந்த்ஸ் சொல்லியிருப்பேன். ஹெல்த்தி புட்..., டால் எல்லாம் நிறைய சேத்துக்கோங்க..., ‘போன்’(bone) வளர்ச்சிக்கு நல்லது...” அவர் சொல்லிக் கொண்டு வந்தவை அனைத்தையும் பொறுமையாக கேட்டுக் கொண்டான்.

‘டென்ஷன் பிடித்த வேலையில் இருந்துகொண்டு, டென்ஷன் படாதே எனச் சொன்னால்..., அதெப்படி சாத்தியம்...’ அவனுக்குப் புரியவில்லை.

அவன் முன்னால் ஒரு கண்ணாடியைக் காட்ட, படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவன், தன் மொட்டைத்தலை, தனக்கு வித்தியாசமான தோற்றத்தை அளிப்பதைப் பார்த்தான்.

முறுக்கிய மீசையும்..., மொட்டைத் தலையும், அந்த நிலையிலும் தன்னைப் பார்க்க, அவனுக்கே கொஞ்சம் சிரிப்பாக இருந்தது. அவனது இடக்கரம் அவனது தலையை வருட, பின்னந்தலையில் தன் கை அடங்கும் அளவுக்கு இருந்த பிளாஸ்டரை மெதுவாக வருடினான்.

“டிரெஸ்சிங் பண்ண ஒரு மூணு நாள் கழித்து வாங்க. ரிசப்ஷன்ல சொன்னால் அவங்களே ஏற்பாடு செய்வாங்க. என்னை மீட் பண்ணணும்னா நேரா என்னையே பார்க்க வாங்க...” அவர் சொல்ல,

“தேங்க்ஸ் டாக்டர்...” படுக்கையில் இருந்து இறங்கி நின்றான்.

“நான் கொடுத்த மெடிசின் எல்லாம் இன்னும் ஒரு மாசம் கண்டினியூ பண்ணுங்க. ரெண்டு வாரம் கழித்து, ஒரு ரெகுலர் செக்கப்புக்கு வந்துட்டு போங்க. ரொம்ப கஷ்டப்பட்டு எதையும் நினைவுக்கு கொண்டுவர நினைக்காதீங்க” கிளம்பிய அவனுக்கு ஆயிரம் அறிவுரை சொல்லி அனுப்பினார்.

வண்டியில் ஏறியவனிடம், “சார்..., நம்ம டோனியை வீட்டுக்கு கூட்டி போய்டலாமா?” கந்தன் கேட்க, புரியாமல் அவரைப் பார்த்தான்.

அப்பொழுதுதான் தான் செய்த தவறு அவருக்குப் புரிய, “உங்களோட நாய் சார்..., நீங்க வீட்ல இல்லைன்ன உடனே எதுவும் சாப்பிடலை..., சோ..., அதை கேர் சென்டர்ல கொண்டுபோய் விட்டு வந்தேன்.

“இந்த ஒரு வாரத்தில் கூட்டி வரலாம்னா, நீங்களே ரெஸ்ட்ல இருக்கீங்க, தொல்லை செய்ய வேண்டாம்னு செய்யலை. நான் காலையில் வரப்போ அதை கூட்டி வர முடியலை, அதான்...” காரை மருத்துவமனைக்கு வெளியே விரட்டியவாறு கேட்டார்.

அவன் மௌனமே அவனது சம்மதத்தை உரைக்க, காரை சென்டருக்கு திருப்பினார். வண்டிக்குள் இருந்த டவ்வலை எடுத்து தலையில் லேசாக சுற்றிக் கொண்டவன், வாகனத்தில் இருந்து இறங்க, “சார்..., நீங்களா? டோனியை வீட்டில் கொண்டுவந்து விடச் சொல்லியிருந்தால் அப்படியே செய்திருப்போமே..., அதுக்காக நீங்க இவ்வளவு தூரம் வரணுமா?” அந்த சென்டரில் வேலை செய்யும் பையன் வேகமாக முன்னால் வந்தான்.

பிரம்மா அவனைப் புரியாமல் பார்க்க, “சார், என்னைத் தெரியலையா? நான்தான் சுதாகர்...” அவன் சொல்ல அப்பொழுதுதான், தன் குளிர் கண்ணாடியை கழட்டியதை உணர்ந்தவன் வேகமாக அதை அணிந்து கொண்டான்.

எந்த நேரத்திலும் தன் குழப்பத்தை வெளியே காட்டிகொள்ளக் கூடாது என எண்ணிக் கொண்டான். அவர்கள் உள்ளே நடக்க, அங்கே இருந்த நாய்கள் அனைத்தும் புதியவனான அவனைக் கண்டு குரல் எழுப்பி கத்தியது.

“ஸ்..., சும்மா இருங்க...” அவைகளை அடக்கியவாறே, “இந்த பக்கம் வாங்க சார்..., இங்கேதான் விளையாடிட்டு இருக்கான். உங்களைப் பார்த்தால் அப்படியே குஷி ஆயிடுவான்...” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே ஒரு நாயின் குரைப்புச் சத்தம் தனியாக அவனைத் தீண்டியது.

வெட்ட வெளியில், புல் தரையில் பத்துக்கும் மேற்பட்ட நாய்கள் விளையாடிக் கொண்டிருக்க, பிரம்மாவின் வருகையை உணர்ந்ததுபோல்..., போலீஸ் நாய் ஒன்று வாலை ஆட்டியவாறு, குரைப்பும் அல்லாத..., ஒரு சத்தம் கொடுத்தவாறு பாய்ந்து ஓடி வந்தது.

“சார்..., நீங்க குரல் கொடுக்க முன்னாடியே எப்படி வந்தான் பாத்தீங்களா?” கேட்டவன் கேட்டை கொஞ்சம் திறக்க, அது மட்டும் வெளியே வந்தவுடன் கேட்டை அடைந்தான். டோனியோ..., ஒரே பாய்ச்சலில் பிரம்மாவின் மேல் ஏற, குழந்தையை தூக்குவதுபோல் அதை தூக்கிக் கொண்டான்.

“பவ்..., பவ்...” என குலைத்தவாறு..., அவன் முகம் முழுக்க நக்கியது. கீழே விட்டால் எப்படியும் அவன் உயரத்துக்கு இருக்கும்.

“டோனி கூல்...” கந்தன் குரல் கொடுக்க, அவரை அது கண்டுகொள்ளவே இல்லை. அதே வார்த்தையை பிரம்மா சொல்ல, மேலும் அவன் முகத்தை இரண்டு மூன்றுமுறை நக்கிவிட்டு, அவன் காலடியில் இறங்கி நின்று கொண்டது.

“கூட்டு போங்க சார்..., சரியா சாப்பிடவே இல்லை. நல்ல பிரியாணியா வாங்கிக் கொடுங்க...” சுதாகர் சொல்ல, திரும்பி நடந்தான். அவனை உரசியவாறே வந்தது டோனி.

அவ்வப்பொழுது அவன் முகத்தை பார்த்தது..., என்ன நினைத்ததோ..., அவன் வண்டியில் ஏறி அமர்ந்தவுடன்..., பின்னிருக்கையில் ஏறியவுடன், அவன் தோளைச் சுரண்டியது.

“என்ன டோனி...?” அவன் திரும்பி கேட்க, தன் கண்களில் கண்ணீர் வழிய, அவன் தலைக் கட்டுக்குள் தன் மூக்கை நுழைத்து, புசுபுசுவென மூச்சு விட்டு, “பவ்..., பவ்...” என மறுபடியும் கத்தியது.

“சார்..., நீங்க விட்டு போயிட்டீங்கன்னு தவிச்சு போய்டுச்சு. என்ன பாசம் பாருங்க. அழுவுது சார்...” கந்தன் சொல்ல, அதன் கண்ணீர் அவனுக்கும் நெகிழ்வாக இருந்தது.

“காம் டவுன்...” அதன் கழுத்தை வருடி, அவன் சொல்ல..., அப்பொழுதும் அவன் தலைக்கட்டுக்குள் தன் மூக்கை விட்டு உரசியவாறே வந்ததே தவிர அமைதியாக இருக்கவில்லை.

“உங்க தலைக் கட்டை பிரிச்சால்தான் அமைதியா இருக்கும் சார்…, நீங்க என்ன கமென்ட் பண்ணாலும் அப்படியே கேக்கும். எல்லாம் இங்கிலீஷ்ல சொன்னாத் தான் அதுக்குப் புரியும்…” அவன் ஏற்கனவே அதனிடம் ஆங்கிலத்தில் சொன்னாலும், சொல்லத் தேவையில்லை என்றாலும், தானும் தன் பங்குக்குச் சொன்னார்.

“கந்தன்…, இங்கே பக்கத்தில் ஏதாவது காலேஜ்க்கு, கேஸ் விஷயமா நாம வந்திருக்கோமா?” டோனியின் முகத்தை வருடியவாறே அவன் கேட்க,

“இங்கே…, இல்லையே சார்…, பூந்தமல்லி பக்கம் இருக்கும் பாவை இஞ்சினியரிங் காலேஜ்ல தான் கொஞ்ச மாசத்துக்கு முன்னாடி ஒரு கேஸ் விஷயமா போயிருந்தீங்க…” அவர் சொல்ல, மனதுக்குள் குறித்துக் கொண்டான்.

“வேற காலேஜ்…?”.

“இல்ல சார்…, காலேஜ் கேஸ்க்கு நீங்க எங்கேயும் போனது இல்லை சார்…” உறுதியாக உரைக்க,

“இஞ்சினியரிங் காலேஜ் போகலாமா…?” அவன் கேட்க, “சார்…, இப்போ காலேஜ் லீவ்…, இன்னும் மூணு வாரத்துக்குப் பிறகுதான் காலேஜ் திறக்கும்…” அவர் உரைக்க, நேரிடும் தடைகள் அவனுக்கு பெரும் எரிச்சலை கொடுத்தது.

‘அப்போ பாவை இஞ்சினியரிங் காலேஜ்ல ஏதோ இருக்கு…’ எண்ணிக் கொண்டான்.

“அங்கே என்ன கேஸ்…?” அவனுக்கு தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது.

“சார்…, அது…, நீங்க ரொம்ப பெர்சனலா விசாரித்த கேஸ்…, அங்கே…, ஹாஸ்டல்ல இருந்த பொண்ணுங்க குளிக்கிற வீடியோ ஒண்ணு யூடியூபில் அப்லோட் ஆகி, ரொம்ப பிரச்சனையா போய்டுச்சு…, யாழினி தான் உங்களோட

அசஸ்ட் பண்ணாங்க. இதுக்கு மேலே டீட்டெயில் வேணும்னா யாழினி கிட்டேதான் கேக்கணும்…”

‘ஏன்…, என்ன கேஸ்…, டீட்டெயில் எல்லாம் விசாரிக்காமல் நீங்க என்ன செய்வீங்க?’ மனதுக்குள் அவனுக்கு சுள்ளென கோபம் எழுந்தது. அவனுக்குத் தெரியும்தான்…, ஒரு டிரைவரின் வேலை ஜீப் ஊட்டுவது மட்டும்தான் என புத்திக்கு உறைத்தாலும், அவன் நிலை அவ்வாறு எண்ணத் தூண்டியது.

“சார்…, என் வேலை இந்த வண்டியோட போய்டுச்சு. அதுக்குமேலே கேஸ்ல நான் இன்வால்வ் ஆக முடியாது. அதுவும் ரொம்ப பெரிய கேஸ்ன்னா, நான் என்னன்னு கேக்க கூட முடியாது…” என் நிலை அவ்வளவுதான் என அவர் சங்கடமாக உரைக்க, அவனுக்கு ஹையோ, என்று வந்தது.

‘எந்தப் பக்கம் போனாலும் கதவுகள் அடைக்கப்பட்டால் நான் என்னதான் செய்ய?’ அவனுக்கு ஆயாசமாக வந்தது. உடனே பாவை இஞ்சினியரிங் காலேஜ் போகச்சொல்லி அவனது உணர்வுகள் துரத்த, அது முடியாமல், உடல்நிலையும், தலைவலியும் ஒத்துழைக்காமல் வீட்டுக்கே வந்து அடைந்தான்.

அடுத்த இரு வாரங்கள், வீட்டிலேயே கழிய, இடை இடையே மருத்துவமனைக்குச் சென்று ட்ரெஸிங் செய்துவிட்டு வந்தான். அதே நேரம்…, கௌஷிகாவுக்கு குழந்தை பிறந்திருக்கிறது என முகேஷ் சொல்லவே அங்கே செல்ல முடிவெடுத்தான்.

குழந்தையை பார்க்கச் செல்கையில் வெறுங்கையாக செல்ல முடியாது என்பதால், குழந்தைக்கு செயின் வாங்க ஜிஆர்டி செல்ல, அப்பொழுது அவனது தலையைச் சுற்றி கறுப்பு மப்ளர் முழுமையாக மறைத்திருந்தது. முடி கொஞ்சமாக வளர்ந்து விட்டாலும், பிளாஸ்டர் இன்னும் எடுக்கவில்லை என்பதால் அந்த ஏற்பாடு.

அவன் கடைக்குள் நுழையும்பொழுதே அவனை கவனித்துவிட்டாள் காயத்ரி. அவளும் அப்பொழுது அங்கேதான் இருந்தாள். அவளது தோழி இந்திராவுக்கு இன்னும் ஒரு வாரத்தில் திருமண நிச்சயம் என்பதால் அதற்கு நகை எடுக்க அனைவரும் குடும்பத்தோடு வந்திருந்தார்கள்.

“ஏய்..., இது நல்லா இருக்குல்லடி...” இந்திரா கேட்பதில் அவளது கவனம் பதியவே இல்லை. தோழியிடம் சத்தம் இல்லாமல் போகவே, அவளை நிமிர்ந்து பார்த்தவள், காயத்ரி வெறித்த பார்வையாக வேறு எங்கோ பார்ப்பதை உணர்ந்தவள், ‘இவ அங்கே யாரைப் பாக்கறா...?’ எண்ணியவள், அவள் பார்வையைத் தொடர, அங்கே, வரவேற்பு பெண்ணிடம்,

“கிட்ஸ் செக்ஷன்...” பிரம்மா விசாரித்துக் கொண்டிருந்தான்.

‘இவ சும்மா இருந்தாலும், அவளை சொறிஞ்சு விடணும்னே கிளம்பி வருவார் போல...’ தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“ஏய்..., இந்த உலகத்தில்தான் இருக்கியா...? அவரை விடுடி..., விட்டா போய் கோழியை அமுக்குற மாதிரி அமுக்கிடுவ போல..., மனுஷன் உனக்கு பயந்துதான் மாறுவேஷத்தில் வேற சுத்துறார் பார்...” அருகில் தாயும் தந்தையும் இருந்ததால், அவளிடம் அடிக்குரலில் முனகினாள்.

“இதெல்லாம் ஒரு மாறு வேஷமா...? அவனுக்குதான் ஆக்சிடெண்ட் ஆச்சே மறந்துட்டியா?” அதே அடிக்குரலில் கேட்டவள், இந்திராவை முறைத்தாள்.

“பாத்தியா..., நான் மறந்துட்டேன்..., உனக்கு நல்லா ஞாபகம் இருக்கு பாரேன்” போலியாக சிலாகிக்க, அவள் கையை நறுக்கென கிள்ளிவிட்டாள்.

“ஸ்..., எரும..., ஏண்டி கிள்ளிவிட்ட...?” அவள் கிள்ளிய இடத்தை பரபரவென தேய்த்துக் கொண்டாள்.

“இங்கே நகையை பாக்காமல் அப்படி என்னதான் பேசுவீங்களோ…?” தாய் அலுத்துக்கொள்ள, வேகமாக பார்வையை நகையின்மேல் பதித்தாள் இந்திரா.

“இந்து…, நீ நகையைப் பார்…, நான் இப்போ வர்றேன்…” வேகமாக அவன் பின்னால் செல்ல நழுவினாள்.

“ஏய்…, இருடி…, போகாதே…, காயு…” அவளை பெயர் சுருக்கி அழைத்தால் அவளுக்குப் பிடிக்காது…, எனவே அப்படியாவது அழைத்து அவள் நின்றுவிட மாட்டாளா என எண்ணினாள். அந்தோ பரிதாபம், அவள் அழைத்ததை கொஞ்சம் கூட கண்டுகொள்ளாமல் கிளம்பிவிட்டாள்.

அவன் கிட்ஸ் செக்ஷன் பக்கம் போகவே…, ‘இவன் யாருக்கு நகை வாங்க வந்தான்? அவனுக்குதான் இன்னும் கல்யாணமே ஆகலையே…, பிறகு…’ எண்ணியவள், அங்கே அருகில் இருந்த வெள்ளி செக்ஷன் முன்னால் சென்று நின்றுகொண்டாள்.

“எஸ் மேம்…” விற்பனைபெண் கேட்க, “கொலுசு காட்டுங்க…” அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

அவனோ…, கழுத்து செயின், இடுப்புக்கு கொடி, கொலுசு என அனைத்தும் தங்கத்திலேயே வாங்க…, ‘அம்மாடி…, தங்கம் விக்கிற விலைக்கு, எல்லாமே தங்கத்திலா? நல்லா கிம்பளம் வருதா இருக்கும்…’ மனதுக்குள் நொடித்துக் கொண்டாள்.

‘காயத்ரி…, அவன் ஒரு பைசா கூட லஞ்சமா வாங்காதவன்னு உனக்குத் தெரியாது’ மனசாட்சி இடைபுக, அதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“மேம்…, இதையெல்லாம் பாருங்க, பிடிக்கலன்னா வேற காட்டுறேன்” சேல்ஸ் பெண் குரல் கொடுக்க, ‘இவ வேற…’ மனதுக்குள் பொரிந்தவாறே அரைக் கண் பார்வையாக அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கூடவே…, ‘இவன் மட்டும் இப்படி சுதந்திரமா அவனுக்கு பிடித்த மாதிரி இருக்கிறான். எனக்கும் அண்ணன்

இருந்திருந்தால், என் குழந்தைக்கும் என் அண்ணா இப்படித்தானே நகை வாங்கி போட்டிருப்பான்...’ இந்த எண்ணம் எழ விதிர்த்துப் போனாள்.

‘ச்சே..., என்ன நினைத்தேன் நான்..., திருமணம் குழந்தை..., திருமணம் செய்து வைக்கவே என் அண்ணா இருந்திருக்கணுமே..., அவனை கொன்றுவிட்டு, இவன் மட்டும், அவனுக்கு வேண்டியவர்களுக்கு நகை வாங்குவதா..., இவனை எப்படி நெருங்குவது...? கொல்வது...?’ அவள் சிந்தை முழுவதும் அதைப்பற்றியே சுழன்றது.

விற்பனைபெண் மீண்டுமாக அவளை அழைக்க, பிரம்மாவின் கவனம் அவர்கள் பக்கம் சென்றது. முதலில் அசுவாரசியமாகப் பார்த்தவன், காயத்ரி பட்டென தன் முகத்தை திருப்பிக் கொள்ளவே, சற்று கவனமானான்.

கூடவே..., அவள் உடல்மொழியில் தெரிந்த சிறு பதட்டம்..., வேகமாக அவளுக்கு முன்னால் இருந்த நகையை கையில் எடுத்து, அதை தவறவிட்டு, “சாரி...” தடுமாறி அதை எடுத்து வைத்து, என அவளது செய்கை அவனை பெரிதும் கலைத்தது.

அவனுக்கு வலப்பக்கமாக அவள் அமர்ந்திருந்ததால்..., அவள் வலது மூக்கில் போட்டிருந்த மூக்குத்தி அவனுக்கு தெரியாமலே போனது. சிறு புருவ சுழிப்போடு..., தன் வேலையில் கவனமானவனது புலன்கள் அனைத்தும், அவள் இனிமேல் என்ன செய்வாள் என்பதிலேயே பதிந்து இருந்தது.

அவன் தன் வேலையை பார்க்கவே, அவள் தன்னை திரும்பிப் பார்ப்பதும், அவள் தேகத்தில் வெளிப்பட்ட சட்டென்ற ஒரு விறைப்பும்..., ‘யார் இவள்? என்னை ஏன் கவனிக்கிறாள்...? என்னைத் தெரிந்தவளா? அப்படியென்றால் வந்து பேசலாமே..., அவள் தேகத்தில் தெரியும் தடுமாற்றத்தின் காரணம்...?’ மூளை வேகமாக கணக்குப் போட்டது.

“இதையெல்லாம் பில் பண்ணிடுங்க...” அவன் தேர்ந்தெடுத்தவற்றை கொடுக்க, “வெயிட் பண்ணுங்க சார்..., பில் வர பைவ் மினிட்ஸ் ஆகும்...” அவள் பில் போட விலகிச் செல்ல, சட்டென திரும்பி, நேராக காயத்ரியைப் பார்த்தவாறு அமர்ந்து கொண்டான்.

அவ்வளவுதான்..., ‘அவன் என்னை கவனிச்சுட்டான்...’ எண்ணியவள், படாரென தன் இருக்கையில் இருந்து எழுந்து, “நான் பிறகு வர்றேன்...” தன் கைப்பையை அள்ளிக்கொண்டு படிகளில் இறங்கினாள்.

வேகமாக அவளைப் பின்தொடர விரும்பியவனது பார்வையில் விழுந்தது, திரும்பிப் பார்த்தவளின் மூக்குத்தி. அவன் பார்வை அதில் நிலைக்க, கூடவே, இப்பொழுது பதறினால் சுற்றி இருந்தவர்களின் கவனத்தை கலைப்போம் என்பதை உணர்ந்தவன், அங்கே இருந்தவாறே..., அவள் எங்கே செல்கிறாள் என கவனித்தான்.

அவள் அங்கே இருந்த ஒரு குடும்பத்தோடு சென்று அமர்ந்துகொள்ள, மெதுவாக, மற்றவர் கவனம் கலையாதவாறு எழுந்து வந்தவன், அங்கே இருந்த தூணின் அருகில் வந்து நின்று கவனித்தான்.

அவன் தன் பின்னால் வராததே பெரும் நிம்மதியாக இருக்க, ஓட்டமாக ஓடிபோய் இந்திராவின் அருகில் அமர்ந்து கொண்டாள். குப்பென வியர்த்துப் போனது. ‘அவன் வருகிறானா?’ பார்வையை அவள் சுழலவிட, வேகமாக அங்கே இருந்த தூணின் பின்னால் மறைந்து கொண்டான்.

அதன் பிறகு, பில் வந்து பே செய்து..., அனைத்தும் முடிந்த பிறகும்..., அங்கே தாமதிக்க, அவர்கள் பில் செய்து கிளம்பியவுடன், நேராக பில் செக்‌ஷன் வந்தவன், “இப்போ லாஸ்ட்டா பில் பே பண்ணவங்களோட அட்ரஸ் வேணும்...” அவன் கேட்ட விதமும், தோரணையும், அவன் யார் என்பதை பில் போடும் பையனுக்கு உணர்த்த,

“சார்..., சூப்ரவைசர் கிட்டே கேளுங்க சார்..., நான் இப்போ கொடுத்தால் என் வேலையே போய்டும்...” அவன் உரைக்க, அடுத்த நிமிடம் அவன் முன்னால் நின்றவன், விலாசத்தை வாங்கிவிட்டே அங்கிருந்து அகன்றான்.

தன் ஜீப்புக்கு வந்தவன், “கந்தன்..., இந்த அட்ரஸ்ல இருக்குறவங்களோட மொத்த டீட்டெயிலும் எனக்கு வேணும்..., ஏற்பாடு பண்ணுங்க...” அவன் சொல்ல, உடனே தன் வேலையைத் துவங்கினார் கந்தன்.

*****

# பகுதி – 7.

இரண்டு வாரங்கள் கழித்து, வேலையில் சேர கிளம்பினான் பிரம்மா. தன் யூனிபாம் அணிந்து, கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்க்க, அவனுக்கு படு கச்சிதமாக பொருந்தியிருந்தது அது. அவனுக்கே தன்னைப் பார்க்க, அவ்வளவு புதிதாக உணர்ந்தான்.

சில பல மூச்சுக்களை ஆழமாகே வெளியிட்டவன், ‘இதை சம்மாளித்தே ஆகவேண்டும்’ தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன் வெளியே வந்தான். அவன் வெளியே வர அவனுக்காக காத்திருந்தார் கந்தன். இப்பொழுது அவன் தலையில் இருந்தது சிறு பிளாஸ்டர் மட்டுமே.

காக்கி உடையில் அவனது கம்பீரம், அவன் நடந்து வந்த வேகம், முறுக்கிய மீசை…, எப்பொழுது அவனிடம் அவர் வியக்கும் அந்த விறைப்புத் தன்மை…, முகத்தில் உணர்வுகளை வெளிக்காட்டாத பாறாங்கல் இறுக்கம்…, இப்பொழுதும் அவன் அப்படியே இருக்க, அவர் கண்களுக்கு அப்படியே தெரிய, தன் கடந்தகால நினைவுகளைத் தொலைத்தவன் அவன் என சத்தியம் செய்தால் கூட யாரும் நம்ப மாட்டார்கள்.

தலையில் ஐபிஎஸ் முத்திரை பதித்த கேப், காக்கி சட்டையின் தோளில், இரண்டு நட்சத்திரமும், அசோகச்சக்கரமும் இருக்க, வலது பாக்கெட்டின் மேல் அவனது நேம் பேட்ஜ்…, இடையில் கட்டியிருந்த பெல்ட்டில் இருக்கும் துப்பாக்கி…, கையில் தன் முழங்கை நீளத்துக்கு ஒரு குச்சி.

கண்களில் இடம்பிடித்த குளிர்கண்ணாடி அவனது கண்களை மறைக்க, அவன் என்ன மனநிலையில் இருக்கிறான் என்பதை யாராலும் இப்பொழுது அனுமானிக்க முடியாது.

ஜீப் சாலையில் விரைய, ‘அங்கே எப்படி சம்மாளிக்கப் போகிறோம்?’ அவனுக்கு உள்ளுக்குள் பெரும் யோசனை.

நிச்சயம் அவனிடம் யாரும் எந்த கேள்வியும் கேட்கப் போவதில்லைதான், ஆனாலும், தெரியாத காட்டுக்குள் தனியாக சிக்கிகொண்டவனின் மனநிலையில் தத்தளித்தான்.

யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாத ஒரு நிலை..., உள்ளுக்குள் ‘ஹையோ...’ என்றுதான் இருந்தது. ஆனால், வெளியே விறைப்பாக இருக்க அவன் கொந்தளிப்பு கந்தனுக்கு கூட தெரியவில்லை. அவனது அந்த செய்கைதான் கந்தனையே வியக்க வைத்தது.

ஜீப் எஸ்பி அலுவலக வாயிலில் நிற்க, ஜீப்பில் இருந்து இறங்கியவன், விழிகளை மட்டும் உருட்டி, சுற்றுப்புறத்தை நோட்டம் விட்டான். வாசலில் இருந்த காவலர், விறைப்பாக ஒரு சலூட் வைக்க, ஒரு தலையசைப்பில் அதைப் பெற்றுக் கொண்டவன், படிகளில் ஏறினான்.

‘எந்தப்பக்கம் அறை...?’ அவனுக்கு அதுவே தெரியவில்லை. உள்ளே வந்தவன், எந்தப்பக்கம் போவது எனத் தெரியாமல் தேங்கி நின்றான். எங்கே இருந்த காவலர்கள் அனைவரும் இருக்கையில் இருந்து எழுந்து விஷ் செய்ய, தலை அசைத்து அனைத்தையும் ஏற்றுக் கொண்டான்.

“ஹவ் ஆர் யூ சார்...?” “எப்படி சார் இருக்கீங்க?” “இப்போ பரவாயில்லையா?” பல குரல்கள் விசாரிக்க, பார்வைகளை அவர்கள்மேல் நிலைக்க விட்டவன், பதில் சொல்ல மறக்கவில்லை.

அவர்களுக்கு பதில் கொடுத்தவாறே தன் தேடலைத் தொடர்ந்தான். பார்வையை வலப்பக்கம் திருப்ப, ‘பிரம்மா ஐபிஎஸ்..., சூப்ரண்டென்டென்ட் ஆப் போலீஸ்...’ பெயர்பலகை பதித்த கதவைப் பார்த்தவன், அங்கே நடந்தான்.

கதவைத் தள்ளித் திறந்தவன் உள்ளே நுழைய, இடப்பக்கம் ஒரு பெரிய மேஜை போடப்பட்டிருக்க, அதன் பின்னால் ஒரு சுழல் நாற்காலி இருந்தது. மெதுவாகச் சென்று அதை கரங்களால் வருடியவன், அதை ஒரு சுற்று சுற்றி விட்டான்.

மேஜைமேல் அவனது பெயர் பலகை, பென் ஸ்டேண்ட்..., சில ஃபயில்கள் அனைத்தும் ஒழுங்கான வரிசையில் இருக்க, இருக்கையில் அமர்ந்தவன், பேப்பர் வெயிட்டை உருட்டினான்.

அங்கே இருந்த எதுவுமே பழகிய உணர்வை கொடுக்கவில்லை. மனதுக்குள் ஒரு வெற்றிடம் மட்டுமே இருக்க, மண்டைக்குள் பிரளயமே நடந்து கொண்டிருந்தது.

அங்கே இருந்த டிராயரை திறக்க, சில ஃபயில்கள் பார்வைக்கு கிடைக்க அதை மூடிவிட்டான். அதற்கு கீழே இருந்த டோரை ஓப்பன் செய்ய, உள்ளே, ஆஷ்ட்ரே நிறைய சிகரெட் துகள்கள் நிறைந்திருக்க, கூடவே பிராண்டி பாட்டில் ஒன்று உள்ளே இருந்ததைப் பார்த்தவன், சட்டென கதவை மூடினான்.

‘இதென்ன..., அலுவலகத்திலேயே...? நான் சிகரெட் பிடிப்பேனா? தண்ணியும் அடிப்பேனா? வேலை நேரத்திலேயா..., இல்லை...’ அங்கே இருக்கையில் இருக்கவே முடியாத ஒரு அவஸ்தை..., அதை எப்படி விளக்கவென்று தெரியவில்லை.

இத்தனை பேரின் மரியாதைக்கும், கண்ணியத்துக்கும் பாத்திரமாக இருக்கிறோம், நிச்சயம் வேலை நேரத்தில் தண்ணி அடித்திருப்போம் என அவன் கொஞ்சமும் நம்பவில்லை. தன்னை, தன் நிலையை, குணத்தை படித்தான்.

அதே நேரம்..., “சார்...” கதவை தட்டிய யாழினி அறைக்குள் நுழைந்து சலூட் வைத்துவிட்டு, கையில் இருந்த ஃபயிலை அவன் முன்னால் வைத்தாள்.

அவன் பதில் சொல்லாமல் அவளை நிமிர்ந்து பார்க்க, “கல்பனா கேஸ் ஃபயில் சார்..., அன்னைக்கே இதை கேட்டிருந்தீங்க...” சொன்னவள் அங்கே தேங்க..., ‘இன்னும் என்ன’ என்பதுபோல் நிமிர்ந்து பார்த்தான்.

“ஸ்பாட்டுக்கு இன்னைக்கு போகணுமா..., இல்ல நாளைக்கு போகலாமா சார்?” அவளது கேள்வியிலேயே..., அங்கே

போகவேண்டும் என தான் சொல்லியிருப்போம் என்பது புரிய,

“டென் மினிட்ஸ்...” அவன் பதில் கொடுக்கவே, அங்கிருந்து வெளியேறினாள். செல்லும் முன்னர், ஒரு நொடி அவனை வித்தியாசமாகப் பார்த்ததை அவன் உணரவில்லை.

‘இவருக்கு என்ன ஆச்சு...? ஏதோ வித்தியாசம் தெரியுதே’ அவள் யோசனை இதுவாகத்தான் இருந்தது.

அந்த ஃபயிலை பிரித்தவன், முதல் பேப்பரை எடுக்க, உள்ளே..., அழகிய சிவப்பு வர்ண புடவையில், மோகனமாக சிரித்துக் கொண்டிருந்தாள் கல்பனா.

வயது: 26. உயரம்..., படிப்பு..., இன்னாரின் மனைவி..., என விவரங்கள் குறிக்கப் பட்டிருக்க, கேஸ் என்னவிதமானது என்பதைப் பற்றிய குறிப்பும் அங்கே இருக்க, அனைத்தையும் கவனமாக படித்துக் கொண்டான். படித்து முடித்த பிறகு, ‘இது தற்கொலையாக இருக்க தொண்ணூறு சதவீதம் வாய்ப்பு இருக்கு, பிறகு..., நான் எப்படி இதை கொலை எனச் சொன்னேன்?’ தலையை அழுத்தி பிடித்துக் கொண்டான்.

அலைபேசி ஒலியெழுப்பி அவனைக் கலைக்க, “டிஐஜி...” அலைபேசியில் ஒளிர, வேகமாக குரல் கொடுத்தான்.

“சார்...” “பிரம்மா..., டியூட்டியில் ஜாயிண்ட் பண்ணிட்டீங்களா? ஸ்பாட்க்கு போய் இன்னைக்கே இன்வெஸ்டிகேட் பண்ணிடுங்க. உங்ககிட்டே இருந்து குயிக் ரியாக்ஷனை எதிர் பாக்கறேன்...” அவரது குரல் இறுகிபோய் ஒலிக்க, அந்த கேசை முடிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டான்.

“நான் இன்னைக்கே போறேன் சார்..., போயிட்டு வந்து பிறகு ரிப்போர்ட் கொடுக்கறேன்..., எனக்கு ஒரு ஒன் வீக் டைம் கொடுங்க...” உரைத்தவன் அலைபேசியை வைத்து விட்டான். அந்த ஒன் வீக் டைம் கேட்டதையே ஒருவித அவமானமாக உணர்ந்தான். அது ஏன் என அவனுக்கு புரியவும் இல்லை.

‘நிஜமாகவே இதற்கு முன்னர் இருந்த கேஸ் அனைத்தையும் நான் வெற்றிகரமாக சால்வ் செய்தேனா? அது நிஜம்தானா? ஆனால், எனக்கு இப்பொழுது எதுவும் புரியவில்லையே...’ தலையை வலிப்பதுபோல் இருந்தது.

நேரமாவதை உணர்ந்து ஃபயிலை கையில் எடுத்தவன், அந்த சிறிய லட்டியையும் கையோடு வைத்துக் கொண்டான். அவன் அறைக்கு வெளியே வர, வேகமாக வந்த யாழினி, அவன் கரத்தில் இருந்த ஃபயிலை வாங்கிக் கொண்டாள்.

அவன் வாசலில் இறங்க, ஜீப்பின் வெளியே இருந்த கந்தன், வேகமாக உள்ளே ஏறி, ஜீப்பை கிளப்பிக் கொண்டு அவன் முன்னால் வந்து நிறுத்தினான். அவன் முன்னால் ஏறிக்கொள்ள, யாழினி பின்னால் ஏறிக் கொண்டாள்.

விழிகளை அழுத்தமாக மூடிக் கொண்டவன், நடுவிரலால் புருவத்தை அழுத்தமாக வருடியவன், சில நிமிடங்கள் வரைக்கும் எதுவும் பேசவில்லை.

“யாழினி..., கேஸ் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க...?” அவன் திடுமென கேட்க, அவள் முழுதாக அதிர்வது ரிவர் வியூ கண்ணாடி வழியாக அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. கூடவே..., கந்தன் அவன் முகம் பார்க்கத் திரும்பியவர், இறுதி நொடியில் சுதாரித்து பார்வையை ரோட்டில் பதித்தார்.

அனைத்தையும் கவனித்தவன், அழுத்தமாகவே அமர்ந்து கொண்டான். அதைப் பார்த்த கந்தன், ‘என்ன ஆளுய்யா...?’ பிரம்மா ஒவ்வொரு நாளும், ஒரு விஸ்வரூபமாக அவரது கண்ணுக்குத் தெரிந்தான். பிரம்மாவின் ஆளுமை, வேகம், கோபம், அனைத்தும் அவருக்குத் தெரியும்.

ஆனால், நினைவுகள் போன நிலையிலும் அவனது இந்த அழுத்தம் அவரை வியப்பில் ஆழ்த்தியது.

“சார்..., கேஸ் சூசைட் என்பதுதான் என்னோட கருத்து. ஆனால், நீங்க அதை மர்டர்ன்னு சொன்னால், கண்டிப்பா அதில் ஏதாவது வலுவான காரணம் இருக்கும்னு நான்

நம்பறேன்…” அவள் முடித்துக் கொள்ள, கையில் இருந்த குச்சியை விரல்களுக்குள் வைத்து உருட்டியவாறு அமைதியாக இருந்தான்.

மனமோ…, ‘இவள் இவ்வளவு நம்பும் அளவுக்கு நான் வேலையில் கில்லாடியா? ஆனால் எனக்கு இப்பொழுது ஒரு வழியும் தெரியவில்லையே…’ மனம் தவித்தது.

‘இன்னும் எவ்வளவு தூரம்…?’ ஜீப் நிற்காமல் விரைந்துகொண்டிருக்க, நுனிநாக்குவரை வந்த கேள்வியை சட்டென அடக்கினான். தன் வாயில் இருந்து விழும் வார்த்தைகள் விபரீதமாக முடியலாம் என அமைதி காத்தான்.

ஜீப் மார்க்கெட் வழியாக விரைய, அங்கே இருந்த சிக்னலில் ஜீப் நிற்க, அங்கே பிச்சை எடுக்க ஒரு குழந்தையோடு வந்த பிச்சைக்காரி…, “ச்சீ…, நீ இன்னுமா சாகலை…, அன்னைக்கே நீ போய் சேந்திருப்பன்னு நினைத்தேன். நீ இன்னும் அனுபவிப்ப…, நீ நல்லாவே இருக்க மாட்ட…” அங்கே இருந்த சில குப்பைகளைப் பொறுக்கி, அவனை நோக்கி வீசியவள், மேலும் வார்த்தைகளை வீசிவிட்டு கிட்டத்தட்ட ஓட, உறைந்து போய் அமர்ந்துவிட்டான்.

யாழினியை அவன் பார்க்க, ‘எனக்குத் தெரியாது…’ என்பதுபோல் ஒரு அசால்ட் தன்மையில் அவனைப் பார்க்க, துணுக்குற்றான்.

‘யாழினி…, என்ன இது…? யார் இவ…? ஏன் இப்படி கத்திட்டு போறா…?’ வெடிக்கத் துடித்த வார்த்தைகளை அடக்குவது அவ்வளவு சிரமமாக இருந்தது.

அது சிக்னல் என்பதை மீறி வாகனத்தில் இருந்து குதித்து இறங்க, பதறிய, கந்தன் வண்டியை ஓரமாக நிறுத்தச் சென்றார். பிரம்மாவின் பார்வை அந்த பிச்சைக்காரி எங்கே எனத் தேட, அவன் ஓடும் வண்டியில் இருந்து இறங்குவான் என்பதை எதிர்பாராத அவள், தெறித்து ஓடுவது அவன் பார்வையில் விழுந்தது.

பிரம்மாவுக்கு ஆத்திரம் என்றால் அவ்வளவு ஆத்திரம். அவள் பின்னால் விரையத் துடித்த காலை, வெகு சிரமப்பட்டு அழுத்தி தரையில் ஊன்றி நின்றான். அந்த பிச்சைக்காரி, அவனைப் பார்த்தவாறே சந்துக்குள் விரைவது அவனுக்குத் தெரிந்தது.

அவள் பின்னால் ஓடி..., அவளைப் பிடித்து இழுத்து வைத்து, அவளது செய்கைக்கான காரணத்தைக் கேட்க தேகம் மொத்தமும் தவிக்க, அதைச் செய்ய முடியாத நிலை..., அப்படியே சுவற்றில் கையை குத்திக்கொள்ளும் வேகம்.

தன் அமைதியின்மையை வெளிப்படுத்திவிடக் கூடாது என்பது இன்னும் அதிகமாக கவனத்தில் பதிய, சட்டென அங்கே இருந்த கடையின் முன்னால் போய் நின்றான். நிச்சயம் பழைய பிரம்மாவாக இருந்திருந்தால் இப்பொழுது என்ன ஆகியிருக்கும் என கந்தன் பிரம்மை பிடித்து அமர்ந்துவிட்டார்.

யாழினிக்கோ, அப்படி ஒரு ஆச்சரியம்..., ‘பிரம்மா அந்த பிச்சைக்காரியை எதுவும் சொல்லாமல், செய்யாமல் விட்டுவிட்டாரா? இது நிஜமா? நான் கனவு எதுவும் காண்கிறேனா?’ அவளால் நம்பவே முடியவில்லை. இந்த நேரத்துக்கு அந்த பிச்சைக்காரி டெட்பாடி ஆகியிருப்பாள் என அவள் நினைக்க, பிரம்மா இப்படி அழுத்தமாக நின்றால் அவளும் என்னதான் செய்வாள்?

அவன் தன் கடைக்கு முன்னால் நின்றவுடன்..., “சார்..., உங்க பிராண்ட்...” உரைத்த கடைக்காரன், ஒரு பேக்கட் சிகரெட்டை, சுவிங்கம் பாக்ஸ் மேலே வைக்க, கொந்தளித்த மனது மேலும் கொதிப்படைந்தது.

சிகரெட் பாக்கெட்டை தூக்கி ஓரமாக வைத்தவன், சுவிங்கம் பாக்ஸில் இருந்து, ஒரு பேக்கட் சுவிங்கம் எடுத்தான். வேகமாக இரண்டை பிரித்து வாய்க்குள் போட்டு மெல்ல..., அவன் தாடை இறுகிய விதத்தில் கடைக்காரன் பயந்தே போனான்.

“சார்..., இது உங்க பிராண்ட் தான் சார்..., இதுதான் வாங்குவீங்க. இப்போ பிராண்ட் மாத்திட்டீங்களா சார்...?” அவன் திணற, அவனுக்கு பதில் கொடுக்கும் எண்ணம் கூட அவனுக்கு இருக்கவில்லை.

தன் பேக்கட்டில் இருந்து இருபதுரூபாய் தாளை எடுத்தவன், அவன் கையில் திணித்துவிட்டு, ஜீப் இருந்த பக்கம் நடந்தான். ‘ஒரு பிச்சைக்காரி..., அவளுக்கு இருக்கும் கொழுப்பு...’ அவன் மனம் கொந்தளித்தது.

அவன் ஜீப்புக்கு வர, அப்பொழுது..., “யாழினி..., அந்த பிச்சைக்காரி..., சார் புடிச்ச கஞ்சா கேஸ் தானே..., அவளுக்கு ரொம்ப குளிர் விட்டுப் போச்சு..., அதை அடக்கணும். அது சரி..., ஏன் இப்படி கொந்தளிச்சுட்டு போறா...?” கந்தன் அவளிடம் கேட்க,

“வேற என்னதான் செய்வா...? ஒரு பிச்சைக்காரி, அதுவும் பொண்ணுன்னு கூட பார்க்காமல், அப்படி நடந்துகிட்டா...?” எரிச்சலாக மொழிய, அப்படியே ஜீப்பின் பக்கவாட்டில் ஒதுங்கினான்.

கந்தன், இடப்பக்க கண்ணாடியில் பார்க்க, அதில் பிரம்மாவின் உருவம் தெரிய, கூடவே..., அவன் கண்கள்..., ‘அவளிடம் கேள்...’ என கட்டளையிட, “என்ன ஆச்சு...?” வேகமாகக் கேட்டான். பிரம்மாவுக்கு அந்த பிச்சைக்காரி ஏன் அப்படி நடந்துகொண்டாள் என தெரிந்தே ஆக வேண்டும்.

யாழினியின் பேச்சு தொடர, அந்த நாளுக்கே அவள் சென்றுவிட்டாள்.

“கந்தன்..., அன்னைக்கு சிக்னல் கிட்டே பொட்டலம் விக்கிறாங்கன்னு நமக்கு இன்பர்மேஷன் வந்த உடனேயே, நாங்க எல்லோரும் இங்கே வந்தோம். வந்து பார்த்தால், சந்தேகப்படும்படி யாருமே இங்கே இல்லை. பிரம்மா சார் பத்திதான் உங்களுக்கே தெரியுமே..., இந்த இடத்தையே ஸ்கேன் பண்ணிட்டு இருந்தார்...” அவள் சொல்லச் சொல்ல, காட்சி விரிந்தது.

சந்தேகப்படும்படி யாரும் இல்லை என்றாலும், தனக்கு வந்த இன்பர்மேஷன் பொய்யாக இருக்கும் என்ற எண்ணம் சிறிதும் பிரம்மாவுக்கு இல்லை. அவனோடு வந்த ஐந்து காவலர்கள், அனைவரும் ஆளுக்கொரு பக்கம் போய் சலித்துவிட்டு, தோல்வியில் திரும்பி வந்தார்கள்.

பிரம்மாவிடம் சிறு பதட்டம் இல்லை, கேசை கண்டுபிடிக்க வேண்டும் என்ற கவலை இல்லை. நிதானம்..., அவன் பார்வையில் அப்படி ஒரு நிதானம். தன் இரையை காத்திருந்து, பொறுமையாக, ஓடவிட்டு வேட்டையாடும் ஒரு புலியின் நிதானம்.

யாழினியும் அங்கே இருந்த கடைகள்..., தள்ளுவண்டி..., என சந்தேகமான இடங்களில் விசாரிக்க, அவளுக்கும் தோல்வியே கிடைத்தது. “சார்..., எதுவும் இல்ல சார்...” அவர்கள் உரைக்க, அழுத்தமாக தலை அசைத்து மறுத்தான்.

“அப்படி சொல்ல முடியாது யாழினி..., கண்டிப்பா இங்கே பொட்டலம் கை மாத்துறாங்க..., நடக்குது..., எனக்குத் தெரியுது...” வார்த்தைகள் ஒவ்வொன்றும் நிதானமாக வந்து விழ, பார்வையோ..., அங்குலம் அங்குலமாக அலசியது.

அங்கே விரையும் வாகனம்..., போக்குவரத்து நெரிசல், பானிபூரி வண்டி..., அதையும் தாண்டி..., அவன் கண்கள் எதையோ அலச, அவன் பார்வை அங்கே பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவளிடம் நிலைத்தது. அவள் தன்னை பாராமல் பார்ப்பதும், அவள் உடல்மொழியில் தெரியும் பதட்டம், சட்டென அவள் நெற்றியில் பூக்கும் வியர்வை, பிரம்மாவின் இதழ்களில் ஒரு வெற்றிப் புன்னகை.

பிரம்மா இறுக்கமாக இருந்தால் கூட அவனை கணிக்க முடியும். ஆனால், இந்த சிரிப்பு..., அது ஒரு கண்ணிவெடிக்கு சமம் என்பது அவளுக்குத் தெரியும். அவன் இதழ்களில் அந்த புன்னகை உறையும் அந்த நிமிடம், அந்த கேசை அவன் முடித்திருப்பான் என்பதால், யாழினி கவனமானாள்.

“யாழினி…, அந்த பிச்சைக்காரியை இங்கே கூட்டி வாங்க” அவன் சொல்ல, ‘என்னடா இவன்?’ மனதுக்குள் சலித்தாலும், அவன் சொன்னதை மறுக்காமல் செய்தாள்.

சிக்னலில் பிச்சை எடுத்த அவளை நெருங்கியவள், “ஏம்மா…, ஐயா கூப்பிடறார் வா…” யாழினி அழைக்க, அந்த பச்சைக் காரியின் கண்களில் சட்டென ஒருவித பயம் ஒளிர்விட்டது.

“ஏம்மா…, நானே இங்கே வயித்துப் பாட்டுக்கு பிச்சை எடுக்கறேன்…, என்னை ஏம்மா கூட்டி போறீங்க…?” அவள் அங்கிருந்து நகர முயன்றாள்.

அதைப் பார்த்த பிரம்மா, “ஏய்…, வா இங்கே…” விரல் நீட்டி அவளை அழைத்தான். வேறு வழியின்றி, புலம்பியவாறே அவளோடு நடந்தாள். அவளது நடை பின்னிக் கொண்டு வந்தது.

அவன் அருகே நெருங்கியவள்…, “சார்…, எனக்கு எதுவும் தெரியாது சார்…, நான் வேற ஏரியா போய்டறேன் சார்…” விடாமல் புலம்ப, தன் காதுக்குள் விரலை விட்டு ஆட்டியவாறே…, தலையில் இருந்த தொப்பியை நிதானமாக கழட்டி ஜீப்பின் மேல் வைத்தான்.

கைகளை கோர்த்து, தலைக்குமேல் தூக்கி நெட்டி முறித்தவன், “நான் உனக்கு ஏதாவது தெரியுமான்னு கேக்கவே இல்லையே…, சரி போகட்டும்…, பொட்டலத்தை எடு…” தன் விரல்கள் அனைத்தையும் தலைக்குப் பின்னால் வைத்து மொத்தமாக சொடக்கெடுத்தவனாக வினவ, அவள் விழித்தாள்.

அவர்களை சுற்றி இருந்த காவலர்களும் என்ன நடக்கிறது எனப் புரியாமல் வெறிக்க, “என்ன பொட்டலம் சார்…, நீங்க எதை சொல்றீங்க…” பிச்சைக்காரி பதற, அதைப்பற்றி கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவே இல்லை.

“ம்…, மூக்குப்பொடி பொட்டலம்…, என்ன விளையாடுறியா…? இப்போ எடுக்கலை…, இந்த ரோட்டிலேயே உன் ட்ரெஸ் எல்லாம் உருவி…, அப்படியே…, விட்டு…, நானே எடுக்க

வேண்டி இருக்கும்...” கண்களில் கோபம் ஏற, வார்த்தைகளை கடித்து துப்ப, வெலவெலத்துப் போனாள்.

அதுக்குக் காரணம், வெறும் வார்த்தையாக அவன் எதையும் பேசுவதே இல்லை. அவன் சொன்னதை அந்த பிச்சைக்காரி செய்யவில்லை என்றால், கொஞ்சம் கூட தயங்காமல் அதைச் செய்வான் என்பது அவளுக்குத் தெரியும்.

அவனது பேச்சு பெரும் எரிச்சலாக இருந்தது. ஆயிரம் இருந்தாலும் அவளும் ஒரு பெண்..., அப்படி இருக்கையில், இத்தனை ஆண்கள் சுற்றி இருக்க, உன் ஆடைகளை உரிவேன் என அவன் சொன்னால், எப்படி அவளால் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க முடியும்.

ஆனால்..., அவள் அப்படி இருந்துதான் ஆக வேண்டும். இப்பொழுது அவள் சிறிது அசைந்தாலும், அவன் கேள்விக்கும், பார்வைக்கும் தன்னால் பதில் கொடுக்க முடியாது என அஞ்சியவளாக அசையாமல் நின்றிருந்தாள்.

அவனோ..., நிதானமாக ஒரு சிகரட்டை எடுத்து பற்ற வைத்தவன், அதன் புகையை உள்ளே அனுப்பி..., வாயால் நிதானமாக வெளியிட, ‘இந்த நிலையிலும் எப்படி இருக்கறார் பார்...’ மற்றவர்களால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

“சார்..., வேண்டாம் சார்..., நான் நிரபராதி சார்..., பிச்சை எடுத்து பிழைக்கறேன்..., நீங்க என்னைப் போய் சந்தேகப் படறீங்களே...” பிச்சைக்காரியின் பார்வையில் அப்பட்டமான பயம் தெரிய, கால்கள் பின்னால் அடியெடுத்து வைத்தது.

அவளைப் பார்த்தவன், “என்னை நல்லவனாவே இருக்க விட மாட்டீங்களா?” ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன், “யாழினி..., அவளை செர்ச் பண்ணுங்க..., அவகிட்டே பொட்டலம் இருக்கு...” அவன் கட்டளையிட, அவளுக்கு அந்த நம்பிக்கை இல்லை என்றாலும், அவனது கட்டளையை மீற முடியாமல், யாழினி முன்னால் வந்தாள்.

அவள் முன்னால் வரவே..., அவளைத் தள்ளிவிட்டு..., ரோட்டுக்கு குறுக்கே பாய்ந்து அவள் ஓட, அதை சிறிதும் எதிர்பார்க்காத மற்றவர்கள் பின்னால் துரத்த, ஒரு நொடி, அவள் எந்தப் பக்கம் செல்கிறாள் என அனுமானித்தவன், சிகரெட்டை இறுதியாக இரு இழுப்பு இழுத்தவன், அதை தூக்கிப் போட்டுவிட்டு, பக்கவாட்டில் திரும்பி, அவள் வருவதற்கு எதிர் திசையில் அவளை எதிர்கொள்ள தயாராகி ஓடினான்.

அவனைப் பின்தொடர்ந்தாள் யாழினி..., அவளும் இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பார்த்திருக்கவில்லையே. பதினைந்து நிமிட சேஸ்..., ஓட்டம் அனைத்தும் ஒரு கட்டத்தில் முடிவிற்கு வர, வசமாக ஒரு இடத்தில் சிக்கினாள், அந்த பிச்சைக்காரி.

“சார்..., என்னை விட்டுடுங்க சார்..., நான் பொட்டலம் எல்லாம் விக்கிறது இல்ல சார்...” கெஞ்சியவள்..., சட்டென ஒரு கையடக்க கத்தியை எடுத்து அவனை நோக்கி வீச, தான் விலகினால் தன் பின்னால் இருக்கும் யாழினியின்மேல் அது போய் தாக்கும் என்பதை உணர்ந்தவன், கண்ணிமைக்கும் நேரத்தில் அதன் கைப்பிடியைப் பிடித்து தடுத்து கீழே போட்டான்.

அவன் அவ்வளவு சுலபமாக, அனாயசமாக செய்த செயலை, விழி விரிய பார்த்தாள் யாழினி. ‘எதிரில் வரும் கத்தியை எப்படி பிடித்தார்...?’ அவள் யோசனை அதுவாகத்தான் இருந்தது.

“போலீச்காரன்மேல் கை வைக்கும் அளவுக்கு உனக்கெல்லாம் தைரியம் இருக்கா?” கேட்டவன் அடுத்த நிமிடம், பிச்சைக்காரி கன்னத்தில் ஓங்கி அறைவிட, அங்கே இருந்த வீட்டின் சுவரில் மோதி கீழே விழுந்தாள்.

விழுந்தவள் ஆங்காரமாக எழுந்து..., “என்கிட்டே இருந்து பொட்டலத்தை நீ எடு..., நான் உன்கூட வர்றேன்..., இல்லையா வர முடியாது...” அவள் ஆணவமாக பேச அவனுக்கு எங்கே இருந்துதான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ..., மேலும் இரண்டு அறை விட்டவன்,

“யாழினி..., முதல்ல இங்கே வந்து இவளை சோதனை பண்ணுங்க..., இவகிட்டே பொட்டலம் இருக்கு...” அவன் அடித்துச் சொல்ல, பிச்சைக்காரியை நெருங்கவே அவளுக்கு அருவருப்பாய் இருந்தது.

“நீ எடுக்க மாட்ட சார்..., உனக்கு கிடைக்காது...” அவள் அவன் கைகளில் திமிற, “யாழினி மூவ்..., நானே பாத்துக்கறேன்...” உரைத்தவன், அடுத்த நிமிடம், யாரும் எதிர்பாராத விதத்தில் அவள் மேலாடைக்குள் மறைத்து வைத்திருந்த பொட்டலங்களை வெளியே எடுத்தான்.

கூடவே அவள் முடியைப் பிடித்து உலுக்கியவன், “இன்னும் ஒரு வார்த்தை உன் வாயில் இருந்து வந்தால்..., உன்னை இப்படியே, இங்கேயே போட்டுட்டு போயிட்டே இருப்பேன்..., புரியுதா?” தன் துப்பாக்கியை எப்பொழுது எடுத்தான்? அதை எந்த நொடி அவள் நெற்றியில் வைத்து அழுத்தினான் என யாருக்கும் புரியவே இல்லை.

அதைவிட, அவன் கண்களில் வழிந்த கோபம், அவன் அடிக்குரலில் உறும, அடுத்த நிமிடம் வாயை கப்பென மூடிக் கொண்டாள்.

யாழினி முகத்தை திருப்பிக்கொண்டு நிற்க, “நீங்கல்லாம் இந்த வேலைக்கு லாயக்கே கிடையாது. பேசாமல் வீட்ல சமைச்சு சாப்ட்டுட்டு..., புருஷனுக்கு கால் அமுக்கி விட்டுட்டு, புள்ளை பெத்துட்டு வீட்டிலேயே இருக்கணும் புரியுதா...?” அவன் ஆக்ஷனின் உரைக்க அவளுக்கு முகத்தை எங்கே கொண்டுபோய் வைக்கவென்றே தெரியவில்லை.

“சுத்தம் பாக்கறீங்களோ..., இவளை இழுத்துட்டு போய், எங்கே இருந்து பொட்டலம் வாங்குறான்னு விசாரிங்க..., இல்லையா..., நான் விசாரிப்பேன்னு சொல்லுங்க...” அந்த பிச்சைக்காரியை அவள்மேல் தள்ளிவிட்டுச் செல்ல, அவளை அழைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றார்கள்.

“அன்னைக்கு எப்படி இருந்துச்சு தெரியுமா...? ஒரு பொண்ணா நான் அப்படி செய்தாலே..., அதுவும் அத்தனை

பேர் குடியிருக்கும், குடியிருப்பில் வைத்து, அவர்..., அந்த பொண்ணுகிட்டே..., சொல்லவே நாக்கு கூசுது...” அவள் சொல்லி முடிக்க, தன் வாயில் இருந்த சுவிங்கத்தை மென்றவாறு அனைத்தையும் கேட்டிருந்தான்.

‘நானா..., நானா அப்படிச் செய்தேன்..., பிச்சைக்காரியிடம்..., கஞ்சாவை கைப்பற்ற என்றாலும்..., நான் செய்தது...?’ நெற்றிபொட்டை கரத்தால் அழுத்திக் கொண்டான்.

ஜீப்பில் ஏறியவன், “அப்போ நான் அன்னைக்கு அவளை நிறுத்தி விட்டு கெஞ்சியிருக்கணுமோ..., அம்மா..., கொடுத்துடும்மா..., நான் கேஸ் எழுதணும்னு...” திரும்பிப் பார்த்து கேட்க, யாழினி அவனை எதிர்பாராமல் திகைத்து, கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

கந்தன் அவனை வியப்பாய் நோக்க, “ஜீப்பை எடுங்க...” அவன் கத்த, வேகமாக ஜீப்பை கிளப்பினார்.

“நீங்க சொல்றதைப் பாத்தா..., நான் அந்த பிச்சைக்கரிகிட்டே இருந்து பொட்டலத்தை எடுத்ததை விட, நீங்க வேலைக்கு லாயக்கில்லை என்று சொன்னதுதான் அங்கே பெரிய விஷயமே இல்ல...” இப்பொழுது திரும்பி அவள் கண்களைப் பார்க்க, ‘இதற்கு என்ன பதில் சொல்வது’ எனத் தெரியாமல் திணறிப் போனாள்.

இத்தனை மாதத்தில் ஒரு முறை கூட அவனிடம் இப்படி தான் மாட்டியது கிடையாது. இன்று இப்படி ஆகிவிட்டது என்று நொந்து போனாள். ‘இனிமேல் எப்படியெல்லாம் பழி வாங்குவாரோ...’ என்பதுதான் அவளது பெரும் கவலையாக இருந்தது.

அவள் மேலும் கவலைப்படும் முன்னர், அவர்கள் இறங்கவேண்டிய இடம் வர, வேகமாக இறங்கியவள், வாசலில் இருந்த போலீஸ் டேப்பை எடுத்துவிட்டு, வீட்டை திறந்துவிட்டாள்.

“எக்ஸ்ப்ளெயின்...” வீட்டுக்குள் நுழைந்தவன் அவளிடம் கேட்க, “சார்..., பாடி இருந்தது மாடியில் ரூம்ல..., கதவு உள்பக்கமா தாழ் போட்டிருந்தாங்க. ஜன்னலும் பூட்டிதான்

இருந்தது. காலையில் வேலைக்கு வந்த வேலைக்காரி, காபி போட்டு எழுப்ப வந்தப்போ, ரொம்ப நேரமா கதவைத் தட்டியும் திறக்கலை.

“சோ..., அவங்க பேப்பர் போட வந்த பையனை கூப்ட்டு, ஜன்னல் கதவை உடைச்சு உள்ளே பாக்கும்போது..., அவங்க கீழே விழுந்து கிடந்ததைப் பாத்துட்டு, உடனே ஆம்புலன்ஸ்க்கு கால் பண்ணிட்டு, கதவை உடைச்சு..., அவங்களை ஹாஸ்பிடல் கொண்டு போயிருக்காங்க.

“அங்கே வைத்துதான், அவங்க ஏற்கனவே இறந்துட்டாங்கன்னு டாக்டர் சொல்லியிருக்காங்க...” அவள் ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டே போக, அனைத்தையும் கவனமாக கேட்டுக் கொண்டான்.

“விஷம்..., ஆர்...?” அவன் நிறுத்த,

“எலி விஷம் சாப்ட்டிருக்காங்க சார்..., ஜூஸ்ல கலந்து குடிச்சிருக்காங்க. அதுக்கு முன்னாடி..., தூக்க மாத்திரை போட்டிருக்காங்க..., அதுவும் பாலில் கலந்து...” அவள் சொல்லிக்கொண்டே போக, அவனுக்கு தலை சுற்றியதுதான் மிச்சம்.

தன் மீசை நுனியைத் திருகியவன், ‘ரூம் உள்ளே பூட்டி இருக்கு. ஜன்னலும் சாத்தி இருக்கு. ஜூஸ்ல எலி விஷம் கலந்து குடிச்சுட்டு செத்துப் போயிருக்கா, இதில் எங்கே இருந்து கொலை வந்தது? ரூமில் கூட மூணாவது ஒரு ஆள் இருந்த அடையாளம் இல்லை, என பாரன்சிக் ரிப்போர்ட் சொல்லுது..., பிறகு நான் எப்படி அதை கொலை எனச் சொன்னேன்?

‘அன்று நான் அப்படிச் சொல்லியிருந்தால் நிச்சயம் ஒரு வலுவான காரணம் அதற்கு இருந்திருக்க வேண்டும், ஆனால், இப்பொழுது..., அவனை யாரென்றே அவனுக்குத் தெரியவில்லை. அப்படி இருக்கையில், இந்த கேசை எப்படி தீர்க்க?’ குழம்பிப் போனான்.

அவனுக்கே அவன்மேல் நம்பிக்கை இல்லை. கிட்டத்தட்ட தளர்ந்த ஒரு நிலை.

*****

# பகுதி – 8.

தன் மன குமுறலை அடக்கியவாறே..., ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். அருகில் தெரிந்த மரம், அதில் இருந்த காக்காய் கூடு..., அங்கே தன் குஞ்சு காக்காய்களுக்கு தாய் காகம் உணவு ஊட்ட, ஒரு நிமிடம் அதையே பார்த்தவாறு நின்றுவிட்டான்.

“சார்..., பாடி பொஷிஷன்...” கீழே இருந்த சாக்பீஸ் அடையாளத்தைக் காட்டி அவனைக் கலைக்க...,

‘எதுவும் சொல்லாதே..., எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்...’ கத்தி தீர்க்க மனம் குமைந்தது. அதை செய்ய முடியாமல், இமைகளை அழுத்தமாக மூடி, இடக்கரத்தை முகம் முழுவதும் அழுத்தமாக வைத்து தேய்த்தவன், வாயில் இருந்த சுவிங்கத்தை அங்கே இருந்த குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, மீண்டுமாக இரண்டு சுவிங்கத்தை வாயில் போட்டுக் கொண்டான்.

“சார்..., சிகரெட் பழக்கத்தை விட்டது நல்ல விஷயம்...” சொல்லவா வேண்டாமா எனத் தயங்கி அவள் உரைக்க, எப்படி ரியாக்ட் செய்ய எனத் தெரியாமல் நின்றிருந்தான்.

ஆனால், அவள் அப்படியெல்லாம் எந்த பதிலையும் அவனிடம் எதிர்பார்க்கவில்லை. மாறாக..., அறைக்கு வெளியே அவள் நடக்க, ‘நான் சிகரெட் பிடிப்பேனா என்பதும் எனக்கு மறந்துடுச்சு. இப்போ புதுசா புடிக்க பிடிக்கலை...’ அவள் வெளியே போய்விட்ட தைரியத்தில், சுவற்றில் தன் கரத்தால் ஓங்கி குத்தியவன், தொப்பியை கழட்டிவிட்டு, கொஞ்சமாக முடி வளர்ந்திருந்த தன் தலையை அழுத்தமாக பற்றிகொண்டான்.

‘ஆ...’ வெளியே அலற முடியாமல், உள்ளுக்குள் அலறிக் கொண்டான்.

அவன் நின்ற நிலையைப் பார்த்தவள், “சார்..., எனி ப்ராப்ளம்...?” யாழினியின் குரல் முதுகுக்கு பின்னால் கேட்க, தன்னை மீட்டவன், “நத்திங்...” தொப்பியை

தலையில் மாட்டிக் கொண்டு, அறையை விட்டு வெளியே நடந்தான்.

அவனது அமைதி அவளுக்கு பழக்கமானதுதான் என்றாலும், கேஸ் விஷயத்தில் ஆதியோடு அந்தம்..., ஒரு கோர்வையாக விவாதிப்பான். தங்களுக்கு தோன்றாத பல விஷயங்கள் அவனுக்குத் தோன்றும். அவற்றை அவன் சொல்கையில், 'இது ஏன் நமக்குத் தோன்றவே இல்லை' என வியந்து போவாள்.

கையில் பேடை வைத்துக் கொண்டு அவன் பின்னால் சுற்ற, அவனோ ஒரு வார்த்தை கூட சொல்லாமல் நடந்தால் அவளும் என்னதான் செய்ய? "சார்..., நோட்ஸ்..." அவன் முன்னால் சென்று நிற்க, முகத்தை இரும்பாக மாற்றியவன், "நாளைக்கு பாத்துக்கலாம்..." அவளைத் தாண்டிச் செல்ல, ஒரு நொடி அப்படியே நின்றுவிட்டாள்.

அவனோடு பணியாற்றத் துவங்கிய இத்தனை மாதங்களில், முதல் முறையாக நாளைக்கு என ஒரு விஷயத்தை ஒற்றி வைக்கிறான். 'ஒரு வேளை விபத்து நடந்ததால் களைப்பாக உணர்கிறாரா? இல்லையென்றால் வேறு காரணமா?' அவளுக்குப் புரியவில்லை.

வெளியே வந்தவன், "கந்தன்..., என்னை ஹாஸ்பிடல்ல விட்டுட்டு, நீங்க ஆபீஸ் போங்க..., எனக்கு ஷீபாவை பார்க்கணும்..." அவன் சொல்ல, ஜீப்பை மருத்துவமனைக்குத் திருப்பினான்.

அவன் அவளுக்கு பதில் சொல்லாததை, அவள் ஒரு பெரிய விஷயமாகவே எடுக்கவில்லை என்பதை ஓரத்தில் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். அதுவே அவனுக்கு வசதியாகவும் போயிற்று. கூடவே, முன்னர் அவளை ஒரு அளவுக்கு கூட மதித்திருக்க மாட்டோம் என்னும் உண்மையும் முகத்தில் அறைய, ஒரு நிமிடம் அப்படியே நின்றுவிட்டான்.

யாழினியோ அதற்குமேல் அவனை தொல்லை செய்யாமல், "கந்தன்..., என்னை ஆட்டோ ஸ்டேண்ட்ல விட்டுடுங்க. நான்

ஆட்டோ பிடிச்சு போய்க்கறேன்...” அவள் கேட்டவாறே ஆட்டோ ஸ்டேண்டில் விட்டவர்கள் மருத்துவமனைக்கு விரைந்தார்கள்.

“கந்தன்..., இங்கேயே வெயிட் பண்ணுங்க..., நான் போயிட்டு வர்றேன்” லிப்டுக்குள் நுழைந்தான். அவனது உடையைப் பார்த்த சிலர், ஒதுங்கிக் கொள்ள, அவன் அதையெல்லாம் கண்டுகொள்ளும் நிலையில் இருக்கவில்லை.

அவன் காரிடாரில் அடியெடுத்து வைக்க..., அவன் பின்னால் ஓடி வந்த ஒருவன், அவன் முன்னால் வந்து வழி மறித்து, “சார்..., நான்தான்..., மதிவாணன்...” உரைக்க, சட்டென அவனுக்கு நினைவுக்கு வந்தது. தான் கண் விழித்த பிறகு, தனக்கு முதன் முதலில் அலைபேசியில் அழைத்து பேசியவன் அவன்தானே...

‘சொல்...’ என்பதுபோல் அவனைப் பார்த்தான். ஏற்கனவே அவனுக்கு விபத்து நடந்த விஷயத்தை, இந்த மதிவாணன் வெளி உலகுக்கு கிசுகிசு என்ற பெயரில் வெளியிட்டுவிட்டான் என்ற கடும் கோபம் அவன்மேல் இருக்க, முயன்று அதை அடக்கிக் கொண்டு அவனைப் பார்த்தான்.

“சார்..., இப்போ ஸ்பாட்டுக்கு போயிட்டு வர்றீங்களே..., புதுசா எதுவும் தகவல் கிடைத்ததா? இப்பவும் உங்களோட கருத்து அதுவேதானா? இல்லை..., அது தற்கொலையா இருக்கலாம்னு நீங்களும் நினைக்கறீங்களா?” அவன் கேட்டுகொண்டே போக, கோபம் சுள்ளென கிளம்பியது.

“மூவ்...” அவன் கத்திய கத்தலில், அந்த காரிடாரில் நடந்துகொண்டிருந்த அனைவரும் ஒரு நொடி நின்றுவிட்டார்கள். அனைவரின் பார்வையும், அவர்கள் பக்கம் திரும்ப, “சார்..., இந்த கேஸ் உங்களோட முதல் தோல்வியா இருக்குமா...?” அவன் அசராமல் கேட்க, அப்படியே அவனை ஒரு உதை விட்டால் எப்படி இருக்கும் என சிந்தித்தான்.

அங்கே இருந்த குப்பையில் சுவிங்கத்தை துப்பிவிட்டு, “பிரம்மாவோட வரலாற்றில் தோல்வி கிடையாது…” தன் முழு உயரத்துக்கும் நிமிர்ந்து உரைத்தவன், மேலும் இரு சுவிங்கத்தை வாயில் போட்டுவிட்டு ஷீபாவின் அறைக்குச் சென்றான்.

“டாக்டர்…” அவன் கதவைத் தட்ட, “எஸ்…” அவர் குரல் கொடுக்கவே, உள்ளே நுழைந்தான். தன் தொப்பியை கழட்டியவன்…, மேஜைமேல் வைத்துவிட்டு, ஒரு நிமிடம் ஆழமாக மூச்சு விட்டான்.

அவனிடம் எந்த கேள்வியும் கேட்காமல், தன் இருக்கையின் பின்னால் சாய்ந்தவாறு, கையில் இருந்த பேனாவை வைத்து மேஜைமேல் தட்டிக்கொண்டு ‘அவனே பேசட்டும்…’ என அவனையே பார்த்தார்.

“எனக்கு எப்போ எல்லா நினைவும் வரும்…? நினைவு வருமா வராதா? அப்படி வந்தால் எப்பொழுது வரும்…? வராமலே போக வாய்ப்பு இருக்கா? என்னால் இந்த பிரஷரை தாங்க முடியலை. என்னவோ எப்பொழுதும் ஒரு அழுத்தத்தில் இருக்குற மாதிரி இருக்கு. மண்டைக்குள் எதோ யோசனை…, என்னைச் சுற்றி இருப்பவர்கள் உண்மையா இருக்காங்களா…, இல்லையா…, எனத் தெரியாத குழப்பம்.

“எல்லோரும் என்னவோ, என்னிடம் இருக்கும் கேசை நான் சக்சஸா முடிப்பேன்னு சொல்றாங்க. ஆனா…, எனக்கு எதுவுமே தெரியலை. அப்படி ஒரு திறமை என்கிட்டே இருக்கா…, இல்லையா…? அப்படியே…, பயித்தியம் பிடிக்கிற மாதிரி இருக்கு.

“கூட இருக்கும் யாழினியே இப்போ சந்தேகமா பார்க்க ஆரம்பிச்சுட்டா. என்னைப் பார்க்கும் எல்லா பொண்ணுங்களும் ஏதோ ஒரு விதத்தில் என்மேல் கோபமா இருக்காங்க. ஒரு பிச்சைக்காரி கூட…” கையை முஷ்டியாக்கி, மேஜைமேல் பெரும் ஓசையில் குத்த, சலனமே இல்லாமல் அவனைப் பார்த்தார்.

“நான் இவ்வளவு சொல்லிட்டு இருக்கேன்..., நீங்க பேசாமலே இருந்தால் என்ன அர்த்தம்...?” எரிந்து விழுந்தான்.

“உங்க மனசுக்குள் இருக்கும் அழுத்தம் எல்லாம் வெளியே வரட்டும்னு காத்திருக்கேன்..., தட்ஸ் ஆல்...” ஷீபா தோளைக் குலுக்க, அவனுக்கோ உள்ளுக்குள் கொந்தளித்தது.

அவன் முன்னால் தண்ணீர் பாட்டிலை நகர்த்த, வேகமாக அதை எடுத்துக் குடித்தான். “இதற்கு முன்னர்..., இப்படி யாருக்காவது எல்லாம் மறந்து போய்..., பிறகு நினைவுக்கு வந்திருக்கா? அவங்களுக்கெல்லாம் எப்படி ஞாபகம் வந்தது...?” தன் பொறுமையை மீட்டுக் கொண்டான்.

“பிரம்மா..., பழைய விஷயங்கள் மறந்து போன முக்கால்வாசி பேருக்கு அது நினைவுக்கு வந்திருக்கு. சிலருக்கு பழைய நினைவுகள் வராமலே போயிருக்கு. உங்களுக்கு இன்னும் தெளிவா சொல்வதா இருந்தால்...” தன் இருக்கையில் இருந்து எழுந்தவர், தன் பின்னால் இருந்த ராக்கில் இருந்த புத்தகங்களில் எதையோ தேடினார்.

தான் தேடிய புத்தகம் கிடைக்கவே..., “ஆப்பிள் கம்பெனி பவுண்டர் ஸ்டீவ்ஜாப்ஸ்க்கு ஒரு முறை இப்படி நடந்திருக்கு. ஒரு விபத்தில் அவரோட நினைவுகள் எல்லாம் பறி போய்டுச்சு..., ஆனா..., அதையெல்லாம் ஒரே வாரத்தில் அவர் மீட்டுக் கொண்டார்..., இந்த புக்கை படித்தால் உங்களுக்குத் தெரியும்.

“அதே மாதிரி திறமை..., உங்களால் ஹிந்தி, இங்கிலீஷ், கொஞ்சம் கன்னடம் எல்லாம் பேச முடியுது. அதே மாதிரி..., ரெண்டு கையாலும் எழுதறீங்க. இதெல்லாம் நீங்களே..., உங்களை அறியாமல் செய்யும் விஷயம்.

“இதே மாதிரி..., உங்களுக்குத் தெரிந்த கலை..., டிரைவிங்..., இதெல்லாம் மறக்காது. அதாவது அதற்குக் காரணம்..., அது உங்களோட பழக்கம்..., பழக்கம் எப்பொழுதும் மறக்காது...,

இப்போ உங்ககிட்டே..., உங்களுக்கு நீந்த முடியும்னு நான் சொன்னால், நம்பவே மாட்டீங்க...,

“ஆனா..., உங்களை தண்ணிக்குள் தள்ளி விட்டால்..., ஒரு நிமிஷத்தில் நீந்தி வந்துடுவீங்க. அதாவது..., நான் சொல்ல வர்றது என்னன்னா..., ‘என்னால் முடியுமா...? எனக்கு எதுவும் தெரியலை...’ இப்படியெல்லாம் யோசிக்கிறதை விட்டுட்டு, அந்த கேசை இன்னைக்குதான் எடுத்ததா நினைச்சுக்கோங்க.

“நான் இப்படி இருந்திருப்பேனோ...? அப்படி இருந்திருப்பேனோ...? இப்படி பேசுவேனா...? அப்படி நடந்துப்பேனா...? அதையெல்லாம் விட்டுடுங்க. விபத்துக்கு முன்னால் இருந்தது பிரம்மா ஒன்..., இப்போ இருக்குறது பிரம்மா டூ..

“இப்போ இருக்குறது புது மனுஷன்..., மேக் யுவர் ஓன் வே..., உங்களுக்கு நான் ஒரு விஷயம், அதுவும் உங்களைப் பற்றி சொல்வதா இருந்தால், பேச்சு என்பது ரொம்ப அளந்து இருக்கும். வேற..., அந்த பிரம்மாவா நீங்க மாறுவதை நான் விரும்பலை என்றுதான் சொல்வேன்...” அவர் நிறுத்திக் கொள்ள, மையமாக தலை அசைத்தான்.

“இன்னும் தெளிவா சொல்வதாக இருந்தால், எனக்கு அந்த பிரம்மாவை சுத்தமா புடிக்காது. அதுக்காக, நீங்க கெட்டவர்ன்னு சொல்ல வரலை. உங்க வேலைக்கு நீங்க அதிகப்படியான டெடிக்கேட்டிவா இருந்தீங்கன்னு சொல்ல வர்றேன்...” வேகமாக அவர் உரைக்க, அவரையே பார்த்திருந்தான்.

“உங்களுக்கு உங்க திறமை மேலே சந்தேகம் இருக்குல்ல..., ஒரு நிமிஷம்...” மீண்டுமாக தன் மேஜை டிராயரை கலைத்தவர், ஒரு புத்தகத்தை அவன் முன்னால் நீட்டினார்.

“சால்வ் இட்...” அவர் சொல்ல..., அமைதியாக அவரை ஏறிட்டான்.

“முதல்ல உங்களை நீங்க நம்புங்க..., நிதானமா இருங்க..., ம்...” அவர் தலை அசைக்க, பென் ஸ்டேண்டில் இருந்து ஒரு

பேனாவை எடுத்துக் கொண்டான்.

முழுதாக இரண்டு நிமிடங்கள் அந்த பசிலை விழிகள் சுழல படமெடுத்தவன், மூன்றாம் நிமிட முடிவில் அதை எழுதி முடித்திருந்தான். தன் புருவம் மேலேற..., வியந்தவள், அவன் புத்தகத்தை தன்னிடம் நீட்டவே, ஒரு நிமிடம் அதில் பார்வையை ஓடவிட்டு, புத்தகத்தை கீழே வைத்தவர், “கோடு ஒர்க் மேன்...” அந்த வார்த்தைகள் அளித்த நம்பிக்கை, நெஞ்சை நிமிரச் செய்தது.

“தேங்க்ஸ் டாக்டர்...” அவன் சொல்லிவிட்டு இருக்கையில் இருந்து எழ,

“ஒரு நிமிஷம்..., மறுபடியும் அந்த பழைய நினைவு..., ஏதாவது வந்ததா?” அவள் கேட்க, மறுப்பாக தலை அசைத்தான்.

“பிரம்மா..., ஒரே ஒரு சஜஷன்..., இஃப் யூ டோன்ட் மைன்ட்...” அவர் சொல்லவா, வேண்டாமா என அவனைப் பார்க்க, கூடவே இருக்கையை பார்வையால் சுட்டினார்.

“ம்...” அவன் அனுமதி அளிக்கவே..., மீண்டுமாக இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவன் புருவ மத்தியில் சின்னதாக ஒரு முடிச்சு.

அவனைப் பார்த்தவாறே, “இருபத்துநாலு மணிநேரமும் நாம மனசுக்குள் போராட முடியாது பிரம்மா. இந்த நிலையில்..., உங்களுக்கு ஒரு துணை, சப்போட் இருந்தால் நல்லா இருக்கும்..., ஆயிரம் இருந்தாலும், ஒரு பெண் கொடுக்கும் மாரல் சப்போட் எதிலும் கிடைக்காது...” அவள் சொல்ல..., இருக்கையில் அமர்ந்திருந்தவன், சற்று நேரம் எதையும் சொல்லவில்லை.

அதைவிட, அவர் கண்களை ஊடுருவி, அவர் மனதில் இருப்பதை படிக்க முயன்றான். அவர் அந்த வார்த்தைகளை, அந்த டாப்பிக்கை தன்னிடம் பேச, ஏற்கனவே முடிவெடுத்திருந்ததை உணர்ந்து கொண்டவன், தாடையை ஒரு நொடி வருடினான்.

“இந்த நிலைமையில்..., எனக்கு எப்படின்னு தெரியலை...” தோளைக் குலுக்கினான். அவனது அந்த நிதானமே, ஷீபாவை இதைப்பற்றி முழுதுமாக அவனிடம் பேசிவிடத் தூண்டியது.

அவனுக்கோ, அவன் கையில், தான் தேடும் பெண்ணைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் இருந்த பிறகும், அவளைக் காண தைரியமின்றிதான் இருக்கிறான்.

ஒரு விதத்தில், அவளுக்கு தன்னைப் பிடிக்கவில்லை என அவனுக்குத் தெரிகிறது. அப்படி இருக்கையில், அவள் முன்னால் சென்று யாசிப்பதா? அந்த நிலையிலும் இந்த ஈகோ மட்டும் எங்கே இருந்துதான் தன்னைப் பிடித்து ஆட்டுகிறதோ..., அவனுக்குப் புரியவில்லை.

“பிரம்மா..., இந்த உலகத்தில் ஒரு ஆள் கிட்டேயாவது நாம நாமளா இருக்கணும். எல்லார்கிட்டேயும் முகமூடி போட்டுட்டே அலைய முடியாது. இந்த ட்ரெஸ் உங்க உடம்பில் இருக்கும் வரைக்குதான் நீங்க எஸ்பி..., அதை கழட்டிட்டா..., நீங்க சாதாரண ஒரு பிரம்மாவா மாறி ஆகணும்.

“அப்போ நீங்க ஒரு மகன்..., ஒரு அண்ணா..., ஒரு கணவன், ஒரு நண்பன், ஒரு அப்பா..., அவ்வளவுதான். இப்போ..., இன்னும் தெளிவா உங்களுக்கு சொல்வதா இருந்தால்..., ஒரு குழந்தைக்கு ஒரு பொருள் வேண்டும்னா..., அதோட அம்மாகிட்டே கெஞ்சுறதை பாத்திருக்கீங்களா?

“என் செல்ல அம்மால்ல..., என் தங்க அம்மால்ல..., எனக்கு அதை வாங்கித் தர்றீங்களா? அப்படி கேக்குறப்போ..., வாங்கிக் கொடுக்கவே கூடாதுன்னு நினைக்கிற அம்மா கூட, அப்படியே உருகிப் போய் வாங்கிக் கொடுப்பாங்க.

“அதே நேரம்..., அந்த பொருள் அவனுக்கு வேண்டாம்..., ஒத்துக்காது..., அலர்ஜி ஆகும் அப்படின்னு இருந்தால்..., அம்மா சொல்வாங்க..., அது என் அம்முகுட்டிக்கு ஒத்துக்காது..., நான் வேற வாங்கித் தரவா...? அப்போ அந்த குழந்தையும் கேட்டுக்கும்...

“இதையே..., அந்த குழந்தை அடம் பிடித்தால், அம்மாவும் கண்டிப்பாங்க, தண்டிப்பாங்க. உலகத்தில் கலப்படமே இல்லாத தாய், குழந்தை உறவுக்குள்ளேயே ஒரு வார்த்தைகளுக்கு இவ்வளவு மதிப்பு இருக்குன்னா..., வாழ்க்கை துணையிடம்..., எவ்வளவு இருக்கணும்?

“குழந்தையைப் பொறுத்த வரைக்கும் தனி சிந்தை, தனி விருப்பம், தனி கருத்து இப்படி எதுவும் இருக்காது..., ஆனா..., வாழ்க்கைத்துணையிடம் இது எல்லாம் இருக்கும்.

“இப்போ ஆபீஸ்ல இருந்து டயடா வர்றீங்க..., மனைவி கிச்சன்ல வேலையா இருக்காங்க..., அப்போ..., ஏய்..., தண்ணி எடுத்துட்டு வாடி..., அப்படின்னா, தண்ணியை எடுத்துட்டு வந்து, உங்க மூஞ்சியிலேயே ஊத்துற ஆத்திரம் வரும்.

“அதுவே..., உங்க மனைவி பெட்ரூம்ல ரெஸ்ட் எடுத்துட்டு இருக்காங்க. நீங்க டயடா வர்றீங்க..., எம்மா..., கொஞ்சம் தண்ணி தர்றியான்னு கேட்டீங்கன்னா..., ரெஸ்ட் எடுக்குறதை விட்டுட்டு, உடனே தண்ணி எடுத்து கொடுப்பாங்க.

“வார்த்தைகளை நாம போடும் விதத்தில்தான் எல்லாமே இருக்கு. பொண்டாட்டிகிட்டே அதிகாரம் மட்டும்தான் செய்யணும்னு ஏதாவது சட்டமா என்ன? அன்பா இருங்களேன்..., கொஞ்சலாம்..., கெஞ்சலாம்..., எதுவும் தப்பில்லை.

“படுக்கையறைக்குள் நான் பெரியவன், நீ பெரியவன் என்ற எண்ணம் இல்லாமல் இருந்தாலே போதும், எல்லாம் சரியா போய்டும். உங்களுக்காக எல்லாத்தையும் விட்டுட்டு, உங்களை நம்பி வர்ற மனைவிக்காக, உங்க ஈகோவை விட்டுக் கொடுக்கலாம் தப்பில்லை.

“அவகிட்டே நான் கெஞ்சுறதா..., அப்படி நினைத்தால் வாழ்க்கையில் தோத்து போய்டுவீங்க. அவகிட்டே நான் கெஞ்சாமல் யார் கெஞ்சுவான்னு யோசிச்சு பாத்தால் எல்லாம் முடிஞ்சுடும்..., கணவன் மனைவிக்குள் எது

வேண்ணா வரலாம்..., ஈகோவை தவிர...” அவர் நீளமாக பேசி நிறுத்த, அவரை கூர்மையாக பார்த்தான்.

‘கொஞ்சுவது..., கெஞ்சுவதா? என்னால் இந்த நிலையில் கூட யாரிடமும் இறங்கிப் போக பிடிக்கவில்லையே, அப்படி இருக்கையில்...’ எண்ணியவனுக்கு இதழோரம் மெல்லிய புன்னகை.

அதை மறைத்தவன், “பழைய பிரம்மா, இதையெல்லாம் காதுகொடுத்து கூட கேட்டிருக்க மாட்டான் இல்ல...” அவன் நிதானமாக கேட்க, வாய்விட்டே சிரித்தார் ஷீபா.

“யாரோ கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் அவ்வளவு புத்திசாலியெல்லாம் இல்லன்னு சொன்னாங்க..., இப்போ இப்படி போட்டு தாக்கறாங்க...” புன்னகைக்கு இடையில் அவர் பேச, இப்பொழுது அவன் முகத்திலும் ஒரு அழகான புன்னகை.

“பிரம்மா..., இப்படியே வெளியே போய் சிரிச்சு வைக்காதீங்க..., சென்னையில் பாதிபேர் மயக்கம் போட்டுடுவாங்க...” அவள் சொல்ல, அவனது புன்னகை இன்னும் விரிந்தது.

“பழைய பிரம்மாக்கு இந்த அட்வைஸ் எல்லாம் தேவைன்னு நீங்க நினைக்கறீங்களா? இல்ல..., இந்த பிரம்மாவுக்கு அவசியம்னு நினைக்கறீங்களா?” அவன் கேட்க, ஒரு நொடி எதையோ சிந்தித்தவர், தனக்குத் தானே தலை அசைத்துக் கொண்டார்.

“பிரம்மாவுக்கு அட்வைஸ் பண்ணவே முடியாது பிரம்மா..., அவரா தன்னை மாத்திகிட்டாதான்...” இப்பொழுது அவரது பார்வை அவனை அழுத்தமாக ஏறிட, இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

“சீக்கிரமே என் மனைவியோட உங்களை வந்து சந்திக்கறேன்...” அவன் சொல்லிச் செல்ல, அவன் சொன்னதை நம்பவே அவருக்கு சற்று நேரம் பிடித்தது. ஆனால்..., அவன் திருமணம் செய்தால் நன்றாக இருக்கும் என எண்ணிக் கொண்டார்.

கூடவே..., தன்னை வந்து சந்தித்த கலைவாணியின் முகம் அவர் முன்னால் தோன்ற, ‘பாவப்பட்ட தாய்...’ எனத்தான் அவரால் எண்ண முடிந்தது.

ஷீபாவால் இப்போதைய அவனது நிலையை, அவனது தாயிடம் கூட வெளிப்படுத்த முடியவில்லை. அது தன் தொழிலுக்கு செய்யும் மிகப்பெரும் பாதகம். அது மட்டுமல்ல, பிரம்மாவின் விஷயம் அறிந்தவர் மூன்றே பேர்தான். அப்படி இருக்கையில், இந்த விஷயம் கடுகளவு வெளியே கசிந்தாலும், அவனது உயிருக்கு பெரும் ஆபத்து என்பது அவருக்குத் தெரியும்.

அவன் பழைய பிரம்மா என்பதால் தான், அவனை கொல்ல முயல்பவர்கள் பதுங்கி இருக்கிறார்கள். இதுவே, இப்பொழுது இருப்பவன் புது பிரம்மாஎன வெளியே தெரிந்தால், அவன் உயிருக்கு நேரடி ஆபத்து வரும் என்பதால், அமைதி காத்தார்.

கலைவாணியின் அழுகை, அவன் பெண்களை கடுகளவு கூட மதிக்காமல் இருப்பதன் காரணத்தை அவர் விளக்கி முடிக்கையில், எப்படி எடுத்துக்கொள்ள என்றே அவருக்குத் தெரியவில்லை. தான் ஒரு மருத்துவர் என்பதையும் மீறி, ஒரு சாதாரணப் பெண்ணாகத்தான் மாறிப் போனார்.

“என் மகன் எனக்கு கிடைப்பானா?” அவர் கேட்டபொழுது, “நிச்சயம் கிடைப்பான்” என சொல்லி அனுப்பிவிட்டார்.

இப்பொழுது இருக்கும் பிரம்மாவுக்கு தன் தாயைப் பற்றி எதுவும் தெரியாது, அதனால் பேசிவிடுவான். ஆனால்..., அவனுக்கு நினைவுகள் திரும்பி, ‘எதற்காக இப்படி செய்தாய்...?’ என தன்னிடம் கேள்வி கேட்டால், அதை எப்படி சம்மாளிப்பது என அவருக்குத் தெரியவில்லை.

கண்மூடித்தனமான அவனது கோபத்தையும், தான் பிடித்த முயலுக்கு மூணே கால் என அவன் சாதிக்கும் தன்மையையும் முன்பே அறிந்தவர் ஆயிற்றே..., எனவே அனைத்தையும் நிதானமாகவே அணுக முடிவெடுத்தார்.

அதனால்தான்..., தான் ஒரு மருத்துவர் என்பதையும் மீறி, அவனது தாய்க்காக, அவனது வாழ்க்கைத் துணையைப் பற்றி பேசி அனுப்பினார். அவன் பழைய பிரம்மாவாக மாறிவிட்டால், அவனது வாழ்க்கையில் திருமணம் என்ற ஒன்றே இருக்காது என அவரும் உறுதியாக எண்ணினார்.

எனவே..., அவனுக்கு பழைய நினைவுகள் வரும் முன்னர், அவனுக்கு திருமணம் முடிந்துவிட்டால், நிச்சயம் அதை விலக்கித்தள்ளும் அளவுக்கு அவன் அரக்கன் இல்லை என்பது அவரது கணிப்பு. அனைத்தும் நல்லதாகவே நடக்கட்டும்..., என்ற எண்ணத்தோடு தன் வேலைக்குத் திரும்பினார்.

ஜீப்பில் ஏறிய பிரம்மாவுக்கு, ஷீபா சொன்னவையே மனதில் ஓடியது. ‘இருபத்துநான்கு மணிநேரமும் நடிக்க முடியாது பிரம்மா’ இந்த வார்த்தைகள் அவ்வளவு அர்த்தம் பொதிந்தவையாக தோன்றியது.

தான் இப்பொழுது கௌஷிகாவை காணச் சென்றிருந்தபொழுது கூட, அவளும் அவனது திருமணத்தைப் பற்றிதான் அதிகம் கவலைப்பட்டாள். அவளது மாமியார் முகம் அவ்வளவு பூரிப்பாக, சந்தோஷமாக இல்லை என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து போனது.

அவன் குழந்தைக்கு போட்ட நகைகளைப் பார்த்த பிறகுதான், அவரது முகத்தில் சிறு மலர்ச்சியைக் கண்டான். ஆனாலும்..., “எல்லாத்தையும் நாமளே பாக்க வேண்டி இருக்கு..., ஒரு தாய்வீட்டில் சீராட முடியுதா...?” அவர் நொடித்துக் கொண்டபொழுது, கௌசிகாவின் முகத்தில் எழுந்த கவலை..., அவனால் ஏனோ தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“நீ இங்கே நல்லா இருக்கியா கௌஷிகா...?” தன்னை மீறி கேட்டு விட்டிருந்தான்.

“என்னண்ணா இப்படி கேட்டுட்டீங்க...? அவர் என்னை உயிரா பாத்துக்கறார். இப்போ கூட என்னை கவனிக்க

பத்மா அக்காவை என்னோடவே இருக்க வச்சிருக்கார். நீங்க இப்படி கேட்டீங்கன்னு தெரிந்தாலே ரொம்ப வருத்தப்படுவார்.

“நீங்க சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோங்கண்ணா..., எனக்கு நீங்க தனியா இருப்பதுதான் கஷ்டமா இருக்கு...” அவள் மீண்டும், மீண்டும் சொன்னது அதைத்தான். அதிலும், திருமணத்தைப் பற்றி ஒவ்வொரு முறை பேசுகையிலும், அவள் முகத்தில் விரவிய பயம்..., தன் முகத்தை ஆராய்ந்த அந்த பார்வை..., ஏனோ முகத்தை இறுக்கமாக வைத்ததோடு சரி, அவளிடம் எதையும் பேசவில்லை.

முன்னர் திருமணம் பற்றி பேசுகையில் அவளிடம் தான் அதிகமாக கோபம் கொண்டிருக்க வேண்டும் என்பதை யூகித்துக் கொண்டான். இப்பொழுது தான் அமைதியாக இருக்கவே, உடனே தன் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்ற அவளது வேகத்தை அவனால் உணர முடிந்தது.

அதே யோசனையில் அவன் இருக்க..., “சார்..., வீட்டுக்கா..., ஆபீஸ்க்கா சார்...” அவன் அவ்வளவு சோர்ந்து இருக்கவே, வீட்டுக்கு போகவா எனக் கேட்டார்.

“பாவை இஞ்சினியரிங் காலேஜ் போங்க..., காலேஜ் ஆரம்பிச்சிடுச்சு தானே?” அவரிடம் கேட்க,

“காலேஜ் துவங்கிடுச்சு சார்...” உரைத்தவன், அடுத்த அரைமணி நேரங்களில் கல்லூரிக்குள் நுழைந்தார். ஜீப் நுழையும் வேளையே..., ஆங்காங்கே இருந்த மாணவ மாணவியர் ஜீப்பை பார்த்தவுடன், தங்களுக்குள் சட்டென உரையாடுவது அவனது கண்களுக்குத் தெரிந்தது.

அவன் ஜீப்பில் இருந்து இறங்கி..., “கந்தன்..., இந்திராவை பாக்கணும்னு சொல்லுங்க...” அவன் சொல்லிக்கொண்டு இருக்கையிலேயே கல்லூரி முதல்வர் அவனை நோக்கி ஓடி வந்தார்.

“சார்..., அதான் எல்லா குழப்பமும் முடிஞ்சுடுச்சே..., இப்போ இங்கே எந்த பிரச்சனையும் இல்ல சார்...” உரைத்தவர் தன் கைக்குட்டையால் முகத்தை துடைத்துக் கொண்டார்.

‘இது என்ன கேஸ்ன்னு கொஞ்சம் தூசி தட்டணும்...’ மனதுக்குள் குறித்துக் கொண்டான். அவனது பெர்சனல் லேப்டாப் கடவுச்சொல் தெரியாமல், அவனால் உள்ளே இருக்கும் தகவல்கள் எதையும் பெற முடியவில்லை.

யாரிடமாவது கொடுக்கலாம், என்றால், இருக்கும் நிலைமையில் நம்பிக்கையாக யாரிடமும் கொடுக்கவும் முடியவில்லை. சிவாஜி படத்தில் வருவதுபோல் தான் ஏதாவது செய்யப்போய், இருக்கும் மொத்த தகவல்களும் அழிந்துவிடக் கூடாதே என்ற கவலை வேறு.

“சார்..., ஏதாவது தகவல் கிடைத்து வந்தீங்களா?” அவர் குரலை தாழ்த்தி வினவ, ‘அப்படி எதை சொல்கிறார்...?’ உள்ளுக்குள் எழுந்த யோசனையை முகத்துக்கு வராமல் தடுத்தவன், “நான் எனக்கு தெரிந்த ஒரு பொண்ணை பார்க்க வந்திருக்கிறேன்..., கந்தன்...” அவன் குரல் கொடுக்க,

“இந்திரா..., பிரீ பைனல் இயர் ஐடி ஸ்டூடண்ட்டை பாக்கணும்..., உடனே கூப்பிடுங்க...” அவர் சொல்ல, பிரின்சிபால் எச்சில் கூட்டி விழுங்கிக் கொண்டார்.

“சார்..., எதுக்குன்னு...” அவர் இழுக்க, பட்டென தன் குளிர்கண்ணாடியை கழட்டியவன், சூடாகப் பார்க்க, சட்டென இரண்டடி பின்வாங்கினார், “உடனே வரச் சொல்றேன்...” வேகமாக உரைத்தவர், “ராஜன்...” அட்டண்டரை அழைத்து, அவளது பெயரை ஒரு பேப்பரில் எழுதிக் கொடுத்தார்.

அவன் செல்லப் போகையில்..., “போலீஸ்ன்னு சொல்...” பிரம்மா உரைக்க, அவனது கையும் காலும் நடுங்க, “சரி சார்...” உரைத்தவன் கிட்டத்தட்ட ஓடினான்.

அடுத்த பத்து நிமிடங்களில் இந்திராவோடு சேர்ந்து, தன் முன்னால் நின்ற காயத்ரியை ஒரு நிமிடம் இமைக்காமல்

பார்த்திருந்தவன், அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில், தன் முன்னால் நின்றவளை நிதானமாக ஏறிட்டான்.

கூடவே, “இன்னும் ஒரு மாசத்தில் உனக்கும் எனக்கும் கல்யாணம்...” அவன் உரைக்க, அவர்களுக்கு சற்று அருகில் இருந்த இந்திரா மயக்கம்போட்டு விழ, காயத்ரி, தன்னால் ஆனமட்டும் அவனை முறைத்துக் கொண்டிருந்தாள்.

*****

# பகுதி – 9.

கல்லூரி துவங்கி மூன்று நாட்களே ஆகியிருந்த நிலையில், கல்லூரிப் பேராசிரியர் நடத்திய பாடத்தை கவனமாக குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள் காயத்ரி. படிப்பில் அவள் எப்பொழுதுமே கெட்டிதான். அவளைப் பார்த்து, அவள் எடுத்த குறிப்புகளைப் பார்த்துப் படித்து இறுதி நிமிடத்தில் மதிப்பெண் வாங்குபவள் இந்திரா.

“இந்து..., நோட்ஸ் எடுக்காமல் என்னடி வேடிக்கை பாத்துட்டு இருக்க?” அவள் கையை சுரண்ட,

“நான் என்னைக்குடி அந்த ரிஸ்க் எல்லாம் எடுத்திருக்கேன்? இப்போ என் ஆள் கூட டூயட்டில் இருக்கேன் டிஸ்டப் பண்ணாதே...” கண்களில் கனவு மின்ன அவள் உரைக்க, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“உன்னை திருத்தவே முடியாதுடி...” அடிக்குரலில் அவளிடம் புலம்ப,

“ம்கும்..., இப்போ கோல்ட் மெடல் வாங்கி பாஸ் பண்ண உடனே, என்னை கூகிள்க்கு சிஈஓவா போடப் போறாங்களா? ஒரு வருஷம் போனதும் ஒரு பிள்ளையைப் பெத்துட்டு, வீட்டில் உக்காந்து அதைப் பாத்துக்கப் போறேன், பிறகு எதுக்கு படிச்சுகிட்டு, விடு..., விடு...” அவள் அசராமல் உரைக்க, அவளை வேற்றுகிரக வாசியைப் பார்ப்பதுபோல் பார்த்தாள்.

“ஏண்டி..., கூகிள்க்கு சிஈஓ வா..., உனக்கே இதெல்லாம் கொஞ்சம் ஓவரா இல்ல..., பாஸ் மார்க்காவது வாங்குடி..., இந்த டிகிரி ஏதாவது ஒரு விதத்தில் உனக்கு உதவலாம். பொண்ணுங்களுக்கு படிப்பு எப்பவும் முக்கியம், அது உன்னை உன் காலில் நிற்க வைக்கும்...” படிப்பின் முக்கியத்துவத்தை உரைக்க, அவளை பாவமாக ஏறிட்டாள்.

“நான் உன் நோட்ஸ் வாங்கிப் படிக்கேறேன்னு தானே உனக்கு வயித்தெரிச்சல்..., உன்கிட்டே அட்வைஸ்

கேக்குறதுக்கு நான் பாடத்தை கவனிச்சே தொலையலாம், முடியல...” சோகமானவள் பாடத்தை குறிப்பெடுக்க முயன்றாள்.

“நான் விளையாட்டுக்கு சொல்லலடி..., இதுக்கு என் அம்மாவே ஒரு உதாரணம்” அவள் குரல் கலங்கிவிட,

“அம்மா பரதேவதை..., எனக்காக இல்லன்னாலும், உனக்காக நான் படிச்சு பாஸ் பண்ணிடுறேன் தாயே..., என்னை உட்டுடு..., நாலுமாசமா செண்டிமெண்டை பிளியிற..., எனக்கு கிறுக்கு பிடிச்சிடும் போல..., இப்போ மட்டும் என் ஆள் வரட்டும், எப்படி தப்பிச்சு போறேன்னு மட்டும் பார்...” அவள் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே ராஜன் கையில் சீட்டோடு உள்ளே வந்தான்.

அவன் கையில் இருந்த பேப்பரை வாங்கிப் பார்த்த ஆசிரியர், “இந்திரா..., உனக்கு விசிட்டர்...” அவர் சத்தமாக உரைக்க, உற்சாக பந்தாக எழுந்தாள்.

‘ஆண்டவா..., அதுக்குள்ளே என் வேண்டுதல் உனக்கு கேட்டுடுச்சா...’ செய்கையால் கை கூப்பி, கன்னத்தில் போட்டுக் கொண்டவள், தோழியைப் பார்த்து மிதப்பாக புன்னகைக்க, தோழியின் முகத்தில் வழிந்த சந்தோஷத்தில் காயத்ரியின் முகமும் புன்னகையை பூசிக் கொண்டது.

“ராஜன் அண்ணா..., யார்...?” கேட்டவள்..., காயத்ரியைத் தாண்டி வெளியே வர முயல,

“போலீஸ்ம்மா...” அவர் உரைத்துவிட்டுச் செல்ல, பட்டென தோழியின் மடியிலேயே அமர்ந்து கொண்டாள்.

“எரும..., எந்திரிடி...” அவளைத் தள்ளிவிட, பட்டென மறுபடியும் தன் இடத்தில் அமர்ந்து கொண்டாள்.

“காயத்ரி..., நான் போகலை...” உதறலாக உரைக்க, காயத்ரிக்கும் போலீஸ் ஏன் அவளைத் தேடி வந்திருக்கிறது எனப் புரியவில்லை.

போலீஸ் எனச் சொன்னவுடன் வகுப்பறையே ஒரு சலசலப்புக்குப் போக, “இந்திரா..., அவுட்...” ஆசிரியர் குரல்கொடுக்க, அவளோ காயத்ரியின் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“நீயும் வாடி..., எனக்கு தனியா போக பயமா இருக்கு...” கிட்டத்தட்ட கெஞ்சினாள்.

அவள் முகத்தில் என்ன கண்டாரோ..., “காயத்ரி..., நீயும் போ...” அவர் சொல்லவே, தானும் உடன் எழுந்துகொண்டாள்.

அறையை விட்டு வெளியேறியவர்கள், மூன்றாம் தளத்தில் இருந்து, கிரவுண்டைப் பார்க்க, தன் ஜீப்பில் ஒரு காலை ஊன்றி, மறுகாலை தரையில் அழுத்தமாக ஊன்றி நின்றிருந்தான் பிரம்மா. அவனை அந்த உடையில் பார்க்க, அப்படி ஒரு நிமிர்வு அவனிடம்.

அவன் கண்ணில் அணிந்திருந்த குளிர் கண்ணாடியை அறவே வெறுத்தாள்.

அவ்வளவுதான்..., இப்பொழுது திகைத்துப் போனது காயத்ரிதான். “இவன் எங்கடி இங்கே வந்தான்...?” தோழியிடம் கேட்க,

“ஒருவேளை உனக்கு பதிலா என்னை கூப்பிட்டாரோ...?” அப்படி இருக்க வாய்ப்பே இல்லையே என அவள் குரல் ஒலித்தது. பிரம்மா ஒருத்தரை தேடி வந்து, அவர்களை விடுத்து அடுத்தவரை மாற்றி அழைப்பதா? அவனைப்பற்றி தெரிந்த ஒரு குழந்தை கூட அப்படி நினைக்காது என்றே தோன்றியது.

“காயத்ரி, போக வேண்டாம்டி..., எனக்கு பயமா இருக்கு. அங்கே வந்தால், நானே எதையாவது உளறி வச்சுடுவேன்...” அவள் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டவள், அங்கிருந்து அசைய மறுத்தாள்.

“எரும, நீயா அவரை கொலைபண்ணப் பார்த்த, நான்தானே பார்த்தேன். எதுக்கு இப்படி பயந்து சாகற..., வா முதல்ல...”

அதென்னவோ அவனை நேரில் சந்தித்துவிடும் முடிவில் இருந்தாள் காயத்ரி.

“உனக்கு பயமா இல்லையாடி…?” காயத்ரியின் இழுப்புக்கு நடந்தவளாக புலம்பினாள்.

“எதுக்கு பயம்…, அதான் இன்னும் முழுசாத்தானே இருக்கான்…” அவள் நொடித்துக் கொள்ள,

“இது வேறையா…? இருந்தாலும் உனக்கு ரொம்ப தைரியம்டி…” நடுங்கியவாறே அவள் பின்னால் சென்றாள் இந்திரா.

“எல்லாம் கராத்தே கத்துக்கற தைரியம் தான்.. இனிமேல் அவன் என்கிட்டே வாலாட்ட முடியாது…” என்னவோ ஜாக்கிசானின் தங்கை போல் அவள் பெருமைப்பட,

“இருந்தாலும் உனக்கு ஓவர் கான்பிடன்ஸ்டி, அந்த ஓட்டை கராத்தேயை நம்பி சவால் விடுற பாத்தியா? உன் தைரியத்தை மெச்சறேன். அது சரி, அவர் எப்போடி உன் வழிக்கு வந்தார்…, நீதான் அவர் வழியை கிராஸ் பண்ற” அவள் சந்தேகம் கேட்க, காயத்ரி முறைத்த முறைப்பில் கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

“இப்போ நீ பேசாமல் வரல, நீயே போய் பேசுன்னு, நான் அப்படியே திரும்பி கிளாஸ்க்கு போய்க்கிட்டே இருப்பேன்…, எப்படி வசதி…?” காயத்ரி இப்படி கேட்ட பிறகு, வாயைத் திறக்கும் தைரியம் அவளுக்கு வருமா என்ன?

“உன் காலில் வேண்ணாலும் விழறேன்…, வாடி…” கெஞ்சலாகக் கேட்டு அவள் கரத்தை அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்.

‘இவன் ஏதாவது தெரிந்து இங்கே வந்திருக்கிறானா? இல்லையென்றால் சும்மாவா?’ காயத்ரியின் மூளைக்குள் யோசனை ஓடியது. ‘அவன் அழைத்திருப்பது இந்திராவை, அப்படியென்றால் என்னைத் தேடி அவன் வரவில்லை’ எண்ணியவள் சற்று தைரியமாகவே வந்தாள்.

அவர்கள் படியிறங்கி, ஜீப்பின் அருகில் வரும் முன்பே, சில மாணவர் கூட்டம் ஜீப்பை சுற்றி நெருங்கியது. அவர்களை எல்லாம் ஒற்றை பார்வையில் அலட்சியம் செய்தவன், சுவிங்கத்தை மென்றவாறு, கையில் இருந்த சிறு லட்டியை சுழற்றிக் கொண்டிருந்தான்.

“என்னடா மச்சான்..., மறுபடியும் ஏதும் பிரச்சனையா? ஏற்கனவே இங்கே இருந்து ரெண்டு பொண்ணுங்க காணாமல் போய்டுச்சு, இப்போ மறுபடியும் இவர் வந்திருக்கார்...?” கூட்டத்தில் ஒருத்தன் கேட்க, செவிகளை தீட்டிக் கொண்டான்.

“சத்தமா பேசாதடா..., மனுஷன் உன்மேல் பாஞ்சுடப் போறார்...” மற்றவன் அடக்க, சட்டென அவன் கூட்டத்துக்குள் காணாமல் போவது தெரிந்தது.

சுற்றிலும் அத்தனை மாணவர்கள் இருந்தபொழுதும், ஒருவன் கூட தன்னை நெருங்காததை குறித்துக் கொண்டான். கூடவே..., ‘ரெண்டு பொண்ணுங்க காணாமல் போயிட்டாங்களா?’ இடது புருவத்தை நீவியவனது முகபாவத்தில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

‘பிறகு எப்படி பிரின்சிபால் எந்த குழப்பமும் இல்லன்னு சொன்னார்?’ அவனுக்குப் புரியவே இல்லை.

படிகளில் இறங்கும் வேளையிலேயே..., “காயத்ரி..., அவர்கிட்டே எதுவும் எக்கு தப்பா பேசிடாதடி..., கொஞ்சம் பொறுமையா பேசு...” திடுமென அவள் சொல்ல,

“அடியேய்..., அவன் என்னைப் பாக்க வரலை, உன்னைத்தான் தேடி வந்திருக்கான். சோ...” அவள் நின்று முறைக்க, ‘ஹாங்...’ வாய் பிளந்து நின்றுவிட்டாள்.

“ஆமால்ல..., அப்போ ஏதாவது பேசி என்னை காப்பாத்துடி...” இப்பொழுது கெஞ்ச, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“அடச்சீ..., இப்போ எதுக்கு இப்படி சீன் போடற? பயந்து சாகாமல் முதல்ல வா...? அங்கே பார்..., நம்ம சப்போட்க்கு

பசங்க நிறையபேர் நிக்கறாங்க?” உரைத்தவள் தோழியை அழைத்துக் கொண்டு அவனை நோக்கிச் சென்றாள்.

“சார்...” கந்தன் பிரம்மாவை கலைக்க, தன் பார்வையை திருப்பியவன், தான் யாரைப் பற்றி விசாரிக்க வந்தானோ, அவளே அங்கே வருவதைப் பார்த்து ஆனந்த அதிர்ச்சி அடைந்தான்.

அவன் கண்களில் முதலில் தெரிந்தது அந்த சிவப்புக்கல் மூக்குத்திதான். அதை தன் விரல்களால் தீண்ட கைகள் பரபரத்தது. அதன் பிறகே அவள் விழிகளை சந்திக்க, காயத்ரியின் குண்டு கண்கள்..., அதில் வழிந்த கோபம்..., அவன் புருவத்தை உயரச் செய்தது.

அவனுக்கு அந்த கோபம் பிடித்திருந்தது. தன்னைச் சுற்றி இருப்பவர்கள் அனைவரும் ஏதோ ஒரு முகமூடியை போட்டுக் கொள்ள, அவள் மட்டும், எந்தவித முகமூடியும் இல்லாமல், ‘நான் உன்மேல் பெரும் கோபத்தில் இருக்கிறேன்’ என வெளிப்படுத்தும் விதம்..., அவனுக்குப் பிடித்தது.

‘எப்பவும் ரெண்டுபேரும் சேர்ந்தேதான் இருப்பாங்களோ...? அம்மணி ரொம்ப தைரியசாலி போல..., இவ கையை பிடிச்சுட்டு அவ வர்றா...?’ எண்ணங்கள் சுழன்றாலும், பார்வை அவளை விட்டு இம்மியும் அசையவில்லை.

அவர்கள் இருவரும் நெருங்கி வரவே..., கூட்டத்தில் இருந்த மூன்று மாணவர்கள் ஒன்றாக அவர்கள் பக்கம் செல்ல, ‘என்ன இது...?’ என்பதுபோல் அவர்களைப் பார்த்திருந்தான். ‘ஓ..., பாடி காட்ஸ்...’ மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

“காயத்ரி..., ஏதாவது பிரச்சனை என்றால் ஒரு சிக்னல் மட்டும் கொடு, மிச்சத்தை நாங்க பாத்துக்கறோம்...” அவள் அருகே சென்ற மற்றவன், பிரம்மாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு, குரலைத் தாழ்த்தி உரைக்க, அனைவரின் பார்வையும் பிரம்மாவை எரித்தது.

அவன் அணிந்திருந்த குளிர் கண்ணாடி அவன் பார்வையை மற்றவர்களுக்கு மறைக்க, பிரம்மா என்ன மனநிலையில் நிற்கிறான் என்பதை யாராலும் கணிக்க முடியவில்லை.

‘என்னங்கடா இது…? ஒரு கும்பலே முறைக்குது…’ எண்ணினாலும், அவர்களது சிறுபிள்ளைத்தனத்தை எண்ணி மனதுக்குள் சிரித்துக் கொண்டான். ஆனாலும்…, காயத்ரியிடம் பேசியவனது கண்களில் இருந்த ஒருவித உரிமை கலந்த கோபம், அதை அறவே வெறுத்தான்.

அதே நேரம்…, காயத்ரி…, “ரசல்…, தேங்க்ஸ் பார் யுவர் ஹெல்ப்…, தேவைப்பட்டால் கேக்கறேன்…” அவள் பதில் கொடுக்க, அவள் கண்களைத்தான் ஊடுருவினான்.

‘அவள் கண்களில் மயக்கம் தெரிகிறதா…?’ பிரம்மாவின் எண்ணம் அதுவாகத்தான் இருந்தது. ஆனால்…, அப்படி எதுவும் இல்லாமல், சாதாரணமாக இருக்கவே, ‘அப்போ…, இவளுக்கு இன்னும் அவன் மனசில் இருப்பது தெரியாது…’ எதற்காக இந்த நிம்மதி எனத் தெரியவில்லை.

“கந்தன்…, கிளீயர் தி பிளேஸ்…” அவன் உரக்க குரல் கொடுக்க, அந்த இடமே ஒரு நொடி அதிர்ந்து அடங்கியது.

அவனது குரலுக்கு, சற்று தூரத்தில் இருந்த பிரின்சிபால் வையாபுரி ஓடி வந்தவர், “ஸ்டூடண்ட்ஸ்…, கோ டூ யுவர் கிளாஸ்…” அவர் குரல் கொடுக்க, அதற்குமேல் அங்கே தாமதிக்க முடியாமல் கலைந்தார்கள்.

ரசல் மட்டும் சற்று தூரத்தில் இருந்த வராண்டாவில், தூணின் பின்னால் சென்று நிற்பதைப் பார்த்தவன், மனதுக்குள் ஒரு பெரும் எரிச்சலை உணர்ந்தான்.

‘இவன் பெரிய ரட்ச்சகன்…’ அவன் தாடை இறுகியது.

‘என்ன வேண்டும்…?’ என்ற முகபாவனையோடு அவன் முன்னால் வந்து நின்ற காயத்ரி, கோபமாக அவன் முகம் பார்த்தாள். அவள் கோபத்தை புருவம் உயர்த்தி ரசித்தவன், இந்திராவை ஒரு பார்வை பார்த்தான்.

அவளிடம் கேட்க வேண்டிய கேள்விகளுக்கு விடையாக, காயத்ரியே வந்து நிற்கையில், அவனுக்கு இந்திராவிடம் பேச வேண்டிய அவசியமே இருக்கவில்லை. ஒற்றை பார்வையால் அவளைப் பார்த்தவன், தலையை ‘போ…’ என்பதுபோல் அசைக்க, வேகமாக…, சற்று தூரமாக சென்று நின்று கொண்டாள்.

‘ஜஸ்ட் மிஸ்ஸு…’ ஆசுவாசமானாள். இந்திரா தன்னைவிட்டு விலகிச் சென்றதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட அவள் கவலைப்படவில்லை.

காயத்ரி அவனை சூடு குறையாமல் ஏறிட, “இன்னும் ஒரு மாசத்தில் உனக்கும் எனக்கும் கல்யாணம்…” அவன் உரைக்க, அவர்களுக்கு சற்று அருகில் இருந்த இந்திரா மயக்கம்போட்டு விழ, காயத்ரி அவனை தன்னால் ஆனமட்டும் முறைத்துக் கொண்டிருந்தாள்.

“ஏய்…, இந்து…, விழப் போனவள், தன் பக்கம் சாயவே…, வேகமாக தாங்கிக் கொண்டாள்.

“கந்தன்…” அவன் குரலுக்கு…, ஓடி வந்தவர், பிரம்மாவின் பார்வைக்கான பொருள் புரிய, இந்திராவை தாங்கிக் கொண்டார்.

“ஹலோ…, யார் நீங்க…, நானே அவளை பாத்துக்கறேன்” அவள் மறுக்கவே,

“நீ இங்கே வா…, கந்தன் அவளைப் பாருங்க…” கொஞ்சம் கூட மறுக்கவே முடியாத ஒரு குரல். கோபமாக திரும்பியவள், தன் சுடும் விழியால் அவனைச் சுட்டாள். அதைபற்றியெல்லாம் அவன் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவே இல்லை.

கந்தனோ, இந்திராவை தோள் வளைவில் அழைத்துச் சென்று அங்கே இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர வைத்து, ஜீப்பில் இருந்து தண்ணீர் எடுத்துவந்து அவள் முகத்தில் தெளித்தார். சட்டென கண் விழித்தவள், எழுந்து அமர்ந்து மலங்க விழித்தாள்.

கூடவே..., பார்வை தோழியைத் தேட, அவர்கள் சற்று தூரத்தில் இருப்பது தெரிந்தது. எழுந்து அவர்கள் அருகே செல்ல, சுத்தமாக தைரியம் இருக்கவில்லை.

‘பிரம்மாவுக்கு விபத்தில் ஏதாவது மறை கிரை கழண்டுடுச்சா? அவரைக் கொல்லணும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கிறவளை கட்டிக்கணும்னு சொல்றார்? ஒரு வேளை..., அவளைப் பற்றி எதுவும் தெரிஞ்சுகிட்டாரா?’ அவனது குணத்துக்கு, அவன் எப்படியும் இருக்கலாம் என எண்ணினாள்.

தோழி மயக்கம் போட்டதை விட, அவன் வார்த்தைகள் கொடுத்த அதிர்ச்சி அதிகம் இருந்தது. எதை எதிர்பார்த்து வந்தாலும், இப்படி ஒரு விஷயத்தை எதிர்பார்த்து வந்திருக்கவில்லையே, ஒரு நொடி, எப்படி எதிர்வினை புரிவது என்றே அவளுக்குத் தெரியவில்லை.

அடுத்த நிமிடம்..., “இந்த உலகத்திலேயே கடைசி ஆண்மகன் நீயா இருந்தால் கூட, உன்னை நான் கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன்...” அவள் ஒருமையில் கிட்டத்தட்ட கத்த, காற்றை விட வேகமாக அவள் அருகே நெருங்கியவன்,

“இன்னொரு முறை, உன் பேச்சில் மரியாதை குறைந்தது..., என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது...” கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளை துப்ப, முதுகுத்தண்டு சில்லிட்டு போனது அவளுக்கு.

அவனுக்கோ..., அவ்வளவு நெருக்கத்தில் அவளது மூக்குத்தி கண்களை உறுத்தி இம்சிக்க, தன் ஒற்றை விரல் நீட்டி அதை தீண்டிவிடும் வேகம். ஆனால் மனமோ..., உன் நினைப்பு தவறு என இடித்துரைக்க, தன் கண்ணாடியை நிதானமாக கழட்டி சட்டையில் மாட்டியவன்,

அடுத்த நொடி, அவளை விட்டு விலகி நின்றவன், “இந்த உலகத்தில் என்னைத் தவிர எல்லாரும் பொண்ணா மாறினால் கூட, என் மனைவி நீதான், நீ மட்டும்தான். அதை, இந்த ஜென்மத்தில் யாராலும் மாற்ற முடியாது...”

ஹையோ..., அந்த வார்த்தைகள் அவளை பலமாய் தாக்குவது ஏன் என அவளுக்குப் புரியவே இல்லை.

‘என்ன சொன்னார்..., அவரைத் தவிர எல்லாரும் பெண்ணாக மாறினால் கூட, அவரது மனைவி நானா?’ ஒருமுறை மனதுக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். அடிமனம் வரை அந்த வார்த்தைகள் அவளை அசைத்துப் பார்த்தது.

அவள் சிந்தை முடியும் முன்பே..., “வர்ற முகூர்த்தத்தில் நம் கல்யாணம்..., உன் மனசை நீ மாத்திக்கோ...” அவ்வளவுதான், உனக்கும் எனக்கும் பேச்சு முடிந்ததுபோல் அவன் கிளம்ப, அப்பொழுதுதான் அவளது பெயரே தனக்குத் தெரியாது என்பதை உணர்ந்தான்.

“முடியாதுன்னா என்ன செய்வ..., செய்வீங்களாம்...” அவனுக்கு மரியாதை தன்மையை முயன்றுதான் கொண்டுவர வேண்டி இருந்தது. அதே நேரம், அவனது பேச்சை மீறி, அவனை ஒருமையில் அழைத்துவிடும் தைரியம் மட்டும் வரவே இல்லை.

வேகமாக அவள் அருகில் மீண்டுமாக வந்தவன், அவள் கழுத்தில் இருந்த ஐடி கார்டை தன் கைகளால் முறுக்கி அருகே இழுத்தவன்..., அவள் கூட அறியாமல் அவள் பெயரைப் பார்த்தான். ‘இத்தனை பேர் சுற்றி இருக்கையில், இவன் என்ன இப்படி பண்றான்?’ அவள் மனம் அந்த நொடி அதைத்தான் சிந்தித்தது.

‘காயத்ரி...’ பிடெக்..., நொடிக்குள் அனைத்தையும் படம் பிடித்தவன், ‘இந்த பிரம்மாவுக்கு ஏற்ற காயத்ரிதான்...’ பெயர்பொருத்தம் கூட சட்டென அவனுக்கு புரிய, ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு. அவனது நெருக்கத்தில், முதல் முறையாக அவனது முகம் சிறிது மென்மைக்கு மாற, அது கொடுக்கும் இதத்தை ஒரு நொடி உணர்ந்தவள், அடுத்த நொடி, பட்டென தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

‘இவன் கோபமா மூஞ்சியை வச்சாலே பரவாயில்லை...’ அவள் மனம் எண்ணிக் கொண்டது. ஆனால், அவன்

பார்வை அழுத்தமாக தன்மேல் இருக்கையில், எவ்வளவு தூரம் அவளால் தவிர்க்க முடியும்?

“முடியாது என்ற அகராதியே இந்த பிரம்மாவின் வாழ்வில் கிடையாது…” கண்கள் கூர்மையாக உரைத்தவன், என் பேச்சு முடிந்தது என்பதுபோல் கிளம்பிவிட்டான்.

“எனக்கு உன்…, உங்களை பிடிக்கலை…” அவன் முதுகின் பின்னால் குரல் கொடுத்தாள்.

சட்டென அவள் பக்கம் திரும்பியவன், “நான் உன்னை, என்னை லவ் பண்ண சொல்லலையே…, கட்டிக்கோ…” அசையாத பார்வையில், வெகு நிதானமாக உரைக்க, ‘இதென்ன பதில்’ என்பதுபோல் பார்த்திருந்தாள். அதைவிட, கோபத்தில் அவள் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

“உங்களை எனக்கு பிடிக்கலைன்னு சொல்றேன்…, அப்போ கூட…” அவள் மேலும் எதையோ சொல்லப் போக, அவன் பார்த்த பார்வையில் வார்த்தை தொண்டைக்குழியில் சிக்கியது.

“பிடிக்கும்…, பிடிக்க வைப்பேன்…” அந்த குரலும், பாவனையும்…, உச்சந்தலை முதல், உள்ளம் கால் வரைக்கும் அவளுக்கு எரிந்தது.

‘என்ன ஒரு நம்பிக்கை…, பிடிக்குமாமே…, எப்படி…? எப்படின்னு கேக்கறேன்…, உன்னை பாத்துக்கறேண்டா…?’ மனதுக்குள் கருவிக் கொண்டாள்.

“கந்தன்…” குரல் கொடுத்தவன், ஜீப்பில் ஏறி அமர்ந்துகொள்ள, வேகமாக வந்தவர் ஜீப்பை கிளப்பினார். கந்தன் அவன் முகத்தை திருப்பிப் பார்க்க, அதில் அப்பொழுதும் ஒரு இறுக்கத்தையே கண்டவர், ஒரு தகப்பகனாக கவலை கொண்டார்.

அவனுக்கு வரப் போகும் மனைவிக்கு எப்படியான மரியாதை கிடைக்கும் என்பது அவருக்குத் தெரியும். சொல்லப்போனால்…, அவன் திருமணமே செய்துகொள்ள

மாட்டேன்..., என திமிராக சொல்லித் திரிந்தவன் ஆயிற்றே..., அப்பொழுதெல்லாம், வாழ்க்கை என்றால் என்னவென்று புரியாமல் நடந்து கொள்கிறானே..., என எண்ணியிருக்கிறார்.

கூடவே..., கைதியாக வரும் பெண்கள்..., விசாரணைக்கு வரும் பெண்கள் என அனைவரிடமும் அவன் நடந்துகொள்ளும் முறையைப் பார்க்கையில், அவனுக்கு மனைவியாக வரப் போகும் பெண்ணை என்ன பாடு படுத்துவானோ, என கவலையும் கொண்டிருக்கிறார்.

அவர்களிடம் தவறாக நடந்துகொள்வான் என்று இல்லை. ஆனால், மரியாதை என்பது மருந்துக்கும் இருக்காது. தேவையில்லாமல் பார்வையை கூட அவர்கள்மேல் நிலைக்க விடாமல் இருப்பவன், தேவைப்பட்டால், துச்சாதனனாக மாறி அவர்கள் ஆடை வரை உருவி எறிவான் என்பது அவருக்குத் தெரியும்.

‘அந்த’ நிலையிலும் அவன் காக்கும் கண்ணியம் கண்டு, அவனுக்கு கீழே வேலை பார்க்கும் அனைவருமே வியப்பின் உச்சிக்குச் செல்வார்கள் என்றால் மிகையில்லை.

இப்பொழுது இருக்கும் பிரம்மா, எப்படிபட்டவன் என அவரால் கணிக்க முடியவில்லை. ஆனால்..., அவன் முகத்தில் இருக்கும் இறுக்கம் குறையாததில், நல்லவிதமாகவும் எண்ண முடியவில்லை.

“சொல்லுங்க கந்தன்...” அவன்தான் குரல் கொடுக்க, ‘சொல்லவா, வேண்டாமா?’ எனத் தடுமாறிப் போனார். அவனிடம் நல்லதோ, கெட்டதோ..., எதுவும் பேச முடியாது என்பது அவருக்குத் தெரியுமே.

“நீங்க..., அவங்க கிட்டே, நிஜமாத்தான் கேட்டீங்களா...? இல்ல..., சொன்னீங்களா?” அவரால் நம்பவே முடியவில்லை என்பதை அவரது குரல் உணர்த்த, அதற்கு பதில் சொல்லவில்லை.

‘ஹப்பா..., கடிக்காமல் விட்டாரே அதுவே போதும்...’ பெரும் நிம்மதி கொண்டார்.

அவனுக்கோ..., மருத்துவமனையில் இருந்த பொழுது இருந்த டென்ஷன் அனைத்தும் தன்னை விட்டு போன உணர்வு. அந்த குண்டு கண்களில் தாண்டவமாடிய கோபம்..., 'ஏன்..., உனக்கு என்மேல் அப்படியென்ன கோபம்?' மனதுக்குள் கேட்டுக் கொண்டான்.

மறுமுறை அவளைக் காண்கையில் நிச்சயம் அதைப் பற்றி கேட்க வேண்டும் என குறித்துக் கொண்டான். இத்தனை நாட்களில் முதல் முறையாக அவனது ஆழ் மனதில் ஒருவித அமைதி குடிகொண்டது. அவள் அருகில் இருந்தால், எந்த நினைவும் தீண்டாது...' எண்ணியவனுக்கு,

'அதானே..., அவளை ஆராயவே உனக்கு நேரம் போதாதே...' மனசாட்சி குரல் கொடுக்க, உள்ளே தித்தித்தது.

அலுவலகம் சென்றவன், தன் அறைக்குள் தஞ்சம் புக, யாழினி வைத்துவிட்டுச் சென்றிருந்த ஃபயிலை மெதுவாகப் புரட்டினான். அந்த கேசில் ஏதாவது புலப்படுகிறதா...? ஒரு வரியைக் கூட விடாமல் படிக்க, தனக்கு சந்தேகமான இடங்களை பென்சில் கொண்டு அடிக்கோடிட்டான்.

மதிய உணவு வேளை நெருங்கவே..., என்ன செய்வது என்றே பெரும் யோசனை..., வெளியே உணவை சாப்பிட வேண்டாம்..., என ஷீபா அறிவுறித்தியிருக்க, இப்பொழுது வீட்டில் சென்று சமைத்து சாப்பிடும் அளவுக்கு பொறுமை இருக்கவில்லை.

ஒரு பக்கம் பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. இன்று ஒரு நாளும் வெளியே உண்டுவிடலாம்..., எண்ணிக் கொண்டான். காலையில் மெஸ்ஸில் இருந்து வாங்கி வந்தேன் என கந்தன் கொடுத்த உணவை சாப்பிட்டு விட்டான்தான்.

ஆனால்..., ஒரு வாய் உண்ட மறு நிமிடமே..., அது மெஸ்ஸில் வாங்கியது இல்லை என கண்டுகொண்டான். இதற்கு முன்பு அப்படி ஒரு உணவை உண்ட நினைவே அவனுக்கு

இல்லை. முதல் முதலாக உணவு நாளங்கள் அனைத்தும் பூக்கும் உணர்வு.

தான் கண்டுகொண்டதை அவரிடம் வெளிப்படுத்தவில்லை..., மாறாக, ‘இனிமேல் நான் பார்த்துக் கொள்கிறேன்...’ என நாசூக்காக மறுத்திருந்தான். அவனது மறுப்பிலேயே..., அவன் தன்னை கண்டுகொண்டான் என உணர்ந்தவர், எந்த சமாதானமும் செய்ய விளையவில்லை.

அவனிடம் அதெல்லாம் வேலைக்கு ஆகாது என்பது அவருக்குத் தெரியுமே. தன் மனைவி கொடுத்த உணவை கந்தன் உண்டு முடிக்கவே, “கந்தன்..., ஹோட்டல் போகலாம்...” அவன் ஜீப்பில் ஏற, தயக்கமாக அவன் முகம் பார்த்தார்.

‘சொன்னது காதில் விழவில்லையா...?’ என்பதுபோல் அவரைப் பார்க்க, “வீட்ல உங்களுக்கும் சேர்த்து ஒரு பொட்டலம் கொடுத்தாங்க..., ஹோட்டல் சாப்பாடு வேண்டாம்னு ஷீபா டாக்டர் சொல்லியிருக்காங்களே, அதான்..., ஒரு ஒரு வாரம் மட்டும் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க..., பிறகு நீங்க என்ன சொல்றீங்களோ அப்படி...” நிச்சயம் தன்னை கைநீட்டி அடிக்கமாட்டன் என்ற நம்பிக்கையில் மட்டுமே அவர் பேசுவதை உணர்ந்து கொண்டான்.

முன்பானால் எப்படியோ..., ஆனால் இப்பொழுது மறுக்க மனம் வரவில்லை. தயங்கித் தயங்கி அவர் பேசும் விதம்..., தான் உறுதியாக மறுப்பேன் என்று தெரிந்தும், தனக்காக உணவு கொண்டுவந்த அவரது கரிசனை, ஏதோ ஒரு மூலையில் அவனை அசைத்தது.

அமைதியாக பெற்றுக் கொண்டவன், தன் அறைக்குப் போய் உண்டு முடிக்கவே, அவனைத் தேடி இருவர் வந்தார்கள். “பிரம்மா..., எப்படிடா இருக்க? நீ ஹாஸ்பிடல்ல இருந்து வந்துட்டன்னு தெரிந்த பிறகுதான் நிம்மதி ஆச்சு. ஈவினிங் வழக்கமா போற பப் போலாமா...?” சுவாதீனமாக அவன் மேஜைக்கு எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்து

கேட்க, சத்தியமாக அவர்களை யார் என்றே அவனுக்குத் தெரியவில்லை.

நிச்சயம் அவனுக்கு குடிக்கும் பழக்கம் இருக்கிறது என அவனது மேஜை அறையே அவனுக்கு காட்டிக் கொடுத்திருக்க, அவர்களிடம் என்ன சொல்லி மறுப்பது என்றும் தெரியவில்லை.

ஆனால் வந்தவனோ, “பிரம்மா, லாஸ்ட் டைம் வந்தப்போ உன் ராக்ல ஒரு பாட்டில் வச்சேன், எடுத்துக்கவா...?” கேட்டவன் அவன் அருகே வர, தன் சேரை கொஞ்சமாக நகர்த்தினான்.

‘ஓ, அப்போ அது என் பாட்டில் இல்லை’ நிம்மதி கொண்டான்.

அதைவிட, அவர்களை அடையாளம் தெரியாத பதட்டம்..., உள்ளுக்குள் கிளறும் தவிப்பை மறைத்து..., “இப்போ வேண்டாம்..., ஒரு வாரம் போகட்டும்” அவன் உரைத்த மறு நிமிடம் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டார்கள்.

“சரிடா..., இதுக்கு மேலே நாங்க எதுவும் பேச முடியாது. அடுத்த வாரம் பாக்கலாம்...” உடனே கிளம்பிவிட, தன் இருக்கையில் பின்னால் தலை வைத்து சாய்ந்தவன், ‘நான் எப்படி இருந்திருக்கிறேன்...?’ தனக்குள் வினவ, படபடவென அவன் கண்களுக்குள் சில காட்சி விரிந்தது.

கூடவே..., மண்டையைப் பிளக்கும் வலியும்..., தொப்பலாக தேகம் நனைய, ஒரு பப்புக்குள்..., ஒரு பெண்ணோடு நெருக்கத்தில் அவன் இருக்கும் காட்சி மின்னி மறைய, அந்த காட்சி கொடுத்த வெறுப்பில், “நோ...” மேஜைமேல் இருந்த கண்ணாடி டம்ப்ளரை கையால் விசிறியடித்தான் பிரம்மா.

*****

# பகுதி – 10.

ஹாஸ்டல் அறையில் கோபமாக உலாவிக் கொண்டிருந்தாள் காயத்ரி. ‘இவளுக்கு வேற வேலையே இல்லை…’ மனதுக்குள் புலம்பியவாறு அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் இந்திரா. கூடவே, ‘இப்போ காபிங்குற பேர்ல ஒரு சுடுதண்ணியை கொடுப்பாங்களே, அதையாவது குடிக்க போக விடுவாளா மாட்டாளா? இவ புலம்புறதை கேட்டே எனக்கு தலைவலி மண்டையை பொளக்குது?’ அதையும் மனதுக்குள்தான் புலம்ப முடிந்தது.

சத்தமாகச் சொன்னால், அவளை உண்டு இல்லை என செய்துவிட மாட்டாளா? அவளை விழி அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் இந்திரா. “அவனுக்கு எவ்வளவு கொழுப்பு பாத்தியா…? இன்னும் ஒரு மாசத்தில் கல்யாணம்னு என்கிட்டேயே சொல்றான்…” லட்சம் முறையாக அவள் சொல்லிப் புலம்ப,

“காயத்ரி…, இதை கோபத்தில் சொல்றியா…, இல்ல சொல்லிப்பாத்து குஷியாகிக்கறியான்னே எனக்குப் புரியலை…” இந்திரா சொல்ல…, அவ்வளவுதான், தன் கையில் இருந்த அந்த தடிமனான புத்தகத்தால், இரக்கமே இல்லாமல் அவள் தலையில் ஒன்று போட்டாள்.

“அம்மா…, அடிப்பாவி…, நீ அவரை கொல்ல முன்னாடி, என்னை கொன்னுடுவ போலையே…” தன் தலையை தேய்த்துக் கொண்டவள் அலறினாள்.

காயத்ரியோ அவள் முன்னால் கோபமே உருவாக நின்றவள், “உனக்கு எவ்வளவு கொழுப்பிருந்தா அப்படி சொல்லியிருப்ப? என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரியுது…?” அவள் புத்தகத்தை பிடித்திருக்கும் விதம், ஏதோ சூலாயுதத்தைப் பிடித்திருப்பதைபோல் இருக்க, வேகமாக கண்களை கசக்கிக் கொண்டாள்.

“அப்படியே பத்ரகாளியே நேர்ல வந்தா மாதிரி இருக்கடி…” அதை அப்படியே வாய்விட்டு சொல்ல…, மீண்டும் அவளை

அடிக்கப் பாய்ந்தாள்.

“நான் புலம்புறது உனக்கு விளையாட்டா இருக்கா? அவன் எப்படிடி என்னைக் கண்டு புடிச்சான்? அதை ஏண்டி என்கிட்டே சொன்னான்...” தொப்பென அவள் அருகில் அமர,

“என்கிட்டே சொல்ல முடியாதுன்னு அவருக்கு தெரியும் போல, ஐ’ம் கமிட்டட் யூ நோ...” ‘ஈ...’ என இளித்து வைக்க, ‘இவளை அப்படியே குத்தினால் என்ன...?’ என முறைத்தாள்.

“ஒரு வேளை நான் அவனை கொலைபண்ணப் போறேன்னு அவனுக்கு தெரிஞ்சிருக்குமோ?”

“ச்சே ச்சே..., அதுக்கு வாய்ப்பே இல்லை..., சாக விரும்புற யாராவது தன் கையாலேயே ஸ்லோ பாயிசன் சாப்பிடுவாங்களா என்ன...?” அவள் கேட்க, காயத்ரி பார்த்த பார்வையில் வேகமாக தூரமாக அமர்ந்து கொண்டாள்.

“உனக்கு என்னைப் பாத்தால் எப்படி இருக்கு...?” அவள் முறைக்க,

“எனக்கு எப்படியும் இல்லை..., ஆனா அவருக்கு ஒரு மார்க்கமாத்தான் இருக்கு போல...” அப்பொழுதும் உளறி வைக்க, “அடியேய்...” இப்பொழுது அவள்மேல் பாய்ந்திருந்தாள் காயத்ரி.

“ஏய்..., நான் பிரம்மா இல்லடி..., உன் ப்ரண்ட் இந்திரா...” அவள் அலற,

“நீ என் ப்ரண்ட் இல்லடி..., துரோகி...” அவள் கழுத்தை நெரிக்க முயன்றாள்.

“காயத்ரி..., என்னை கொன்னுடாதே..., என் ஆள் பாவம்...” அவள் கையை விலக்கினாள்.

“காயத்ரி..., நாம யோசிப்போம்..., விலகுடி..., எரும..., பொணம் கனம் கனக்கற...” திணறவே விலகி அமர்ந்தாள்.

“இந்து…, அவன் ஏண்டி அப்படிச் சொன்னான்…? சும்மா பயமுறுத்த சொல்லியிருப்பானோ?” அவன்மேல் கோபம் கிளர்ந்தாலும், அவன் சொல்லிச் சென்றதை சாதாரணமாக நினைக்க முடியவில்லை.

“ஆமா…, அவர் உன் அத்தை பையன் பார்…, வந்து விளையாடிட்டு போக” இந்திரா கடுப்பாக, வேகமாக தன் விரல் நகத்தைக் கடித்தாள்.

“எனக்கு என்னவோ பயமா இருக்குடி. எங்க அண்ணாவை ஏதோ செய்து கொன்ன மாதிரி, என்னையும் கொல்லப் போறானா?” அவள் பயத்தில் வினவ,

“பிரம்மா அப்படி செய்வாருன்னு நீ நினைக்கறியா…? உன்னைக் கொல்லணும்னா, அவருக்கு ஒரு தோட்டா போதும்…, இப்படி சுத்தி வளைத்து எதையும் செய்ய மாட்டார்…” அவள் உறுதியாகச் சொல்ல, அவனைப் பற்றி தெரிந்தவளால் மேலே எதுவும் சொல்ல முடியவில்லை.

“அப்போ…, நிஜமாவே என்மேல் ஆசைப்பட்டு கல்யாணம் பண்ணிக்க கேட்டார்ன்னு சொல்றியா?” அவள் எரிந்துவிழ, இந்திராவின் முகத்தில் தவழ்ந்த புன்னகை, அப்படித்தான் என்று சொன்னது.

“எரும…, அப்படி பாத்து தொலையாதடி…, எனக்கு பத்திகிட்டு வருது…”.

“அதானே…, இனிமேல் நான் பாத்தால் உனக்குப் பிடிக்குமா…? பிரம்மா பாத்தால் பிடிக்கும்…” அவளை ஓரவிழியில் பார்த்தவாறு உரைக்க, நிஜமாகவே இந்திராவை கொன்றுவிடும் வெறியில் முறைத்தாள்.

“நான் ரொம்ப கடுப்பில் இருக்கேண்டி…, மேலே, மேலே என்னை எரிச்சல் மூட்டாதே…” அவளுக்கு அப்படித்தான் இருந்தது.

அவள் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட, இந்திராவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. தனக்கே பிரம்மா சொன்னது அவ்வளவு அதிர்ச்சியாக

இருந்தது என்றால், சம்பந்தப்பட்டவள், அவளுக்கு எப்படி இருக்கும்.

அதுவும் அவன்மேல் கொலைவெறியில் இருப்பவள், அவனை கொன்றுவிட துடிப்பவள், அவளது அண்ணனை துடிக்கத் துடிக்க கொன்றவனை அவளால் எப்படி திருமணம் செய்துகொள்ள முடியும்? அப்படி நினைக்க கூட அவளால் முடியாது என்பது புரிந்தது.

இந்திராவின் சந்தேகம் என்னவென்றால், ஒரு வேளை, அவன் செய்தது தவறு எனத் தெரிந்து, அதை திருத்திக் கொள்ள, காயத்ரியை திருமணம் செய்ய விரும்புகிறானோ என எண்ணினாள்.

அப்படி இருந்தால், அதுவும் நல்லதுதான் என்றே தோன்றியது. காயத்ரியைப் பொறுத்த வரைக்கும் அவளுக்கு என இந்த உலகில் இருந்த ஒரே உறவும் இல்லாமல் போய்விட்டது. அப்படி இருக்கையில், அவளுக்கு ஒரு நல்லது நடந்தால், அதை வரவேற்கும் முதல் ஆள் தானாகத்தான் இருப்போம் என்பதில் சந்தேகமே இல்லை.

காயத்ரி வேறு கொலை செய்யப் போகிறேன் என உணறிக் கொண்டிருக்கிறாள், இப்பொழுது அவரே..., இவளை திருமணம் செய்துகொள்கிறேன் என வந்திருக்கையில், இந்த வாய்ப்பை நழுவவிட அவள் தயாராக இல்லை.

எனவே..., “காயத்ரி..., நீதான் அவரை கொலை செய்யப் போறேன்னு சொல்லிட்டு இருக்கியே..., பேசாமல் அவரை லவ் பண்ற மாதிரி நடிச்சு, சான்ஸ் கிடைக்கும்போது போட்டுடேன்..., எப்படி என் ஐடியா...?” எப்படியும் பிரம்மா அப்படியொன்றும் ஏமாளியாக இருப்பான் என அவள் நம்பவில்லை.

அவனது புத்திசாலித்தனத்தின் மேல் இந்திராவுக்கு அபார நம்பிக்கை இருந்தது, எனவே..., இவளை தள்ளி விடுவோம்..., மேலே நடப்பது அவன் பாடு என எண்ணிக் கொண்டாள்.

தோழியை சந்தேகமாகப் பார்க்கவே..., “ஏய்..., ஏண்டி என்னை அப்படிப் பாக்கற? நீயும் ரொம்ப நாளா ட்ரை பண்றியே..., ஏதோ என்னால் முடிஞ்ச ஹெல்ப் பண்ணலாம்னு பார்த்தேன். ஐடியா பிடிக்கலன்னா விடு..., உனக்கு என்ன செய்யணுமோ செஞ்சுக்கோ.

“நான் இப்போ சுடுதண்ணி குடிக்கப் போறேன்..., வர்றியா இல்லையா...?” அவள் கேட்க, அவள் சொன்னதை யோசித்தவாறே அவள் பின்னால் எழுந்து சென்றாள்.

அதைவிட, இரண்டு நாட்களாக ஒரு விஷயம் அவள் மனதை அரித்துக் கொண்டிருக்கிறது, அது என்னவென்றால், அவளது அண்ணன் காமேஷின் நண்பன் என சொல்லிக் கொண்டு வந்த ஒருவன், “உங்க அண்ணாவோட அக்கவுண்ட் நம்பர் தெரியுமா? பாஸ்வேர்ட் தெரியுமா?” எனக் கேட்டுச் சென்றது வேறு மனதை இம்சித்துக் கொண்டிருந்தது.

‘என் அண்ணாவின் அக்கவுண்ட் நம்பர், பாஸ்வேர்ட் அவனுக்கு எதற்கு?’ இந்த வினா எழுந்து இரண்டு நாட்களாக உறங்க விடாமல் செய்து கொண்டிருக்க, இப்பொழுது பிரம்மாவின் குழப்பம் அந்த இடத்தை பிடித்துக் கொண்டது.

‘அண்ணாவுக்கு ஐசிஐசிஐ பேன்க்ல அக்கவுண்ட் இருந்தது தானே..., அதோட டீட்டெயில் எல்லாம் எனக்குத் தெரியுமே. நாளைக்கு பேன்க் போய் விசாரிக்க வேண்டும்...’ மனதுக்குள் குறித்துக் கொண்டாள். அங்கே ஏற்படப்போகும் அதிர்ச்சி தெரியாமல், தோழி கொடுத்த காபியை அருந்தத் துவங்கினாள்.

***

பிரம்மாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அந்த பப்பின் மெல்லிய இருளும், இசையும் அவன் காதுக்குள் வெடிக்க, அவன் இருக்கையின் அருகில், அரை உடையில் நடனமாடிய அந்தப் பெண்..., கூடவே, அவளோடு

நெருக்கத்தில் தான் இருப்பதுபோல்..., அதற்குமேல் எதுவும் அவன் நினைவுக்கு வர மறுத்தது.

‘நானா..., நானா இப்படி...?’ தலைவலி மண்டையைப் பிளந்தது. கூடவே..., அவளோடு தனி அறையிலா இருந்தேன்...? இல்லையென்றால்..., வேறு இடமா?’ அவனுக்கு அது நினைவுக்கு வராமல் போக, உடல் உதறியது.

‘நான் பெண் சகவாசமும் உள்ளவனா?’ ஏனோ அதை சாதாரணமாக ஏற்க முடியவில்லை. இப்போதைய நிலையில் சிகரெட் பிடிப்பதையே அவன் வெறுக்க, இது...? ‘யாரிடம் கேட்க...? மற்றவர்களுக்கு தெரியும் அளவுக்கா நடந்திருப்பேன்?’ தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

அதை அப்பொழுதே அறிந்துகொள்ள வேண்டும் என்ற வேகம்..., ஆனால் எப்படி எனத் தெரியாத குழப்பம்..., எவ்வளவு முயன்றும் தன்னை நிதானத்துக்கு கொண்டு வரவே முடியவில்லை. கையில் கிடைக்கும் எதையும் உடைக்கும் வேகம்..., அப்பொழுது கையில் கிடைத்த டம்ளர் உடைந்து சிதறியது.

அறைக்குள் அடைந்து கிடப்பது மூச்சு முட்ட, வேகமாக அறையை விட்டு கிளம்ப முயன்றான். அதே நேரம்..., அவனது குரல் அறைக்குள் கோபமாக ஒலிக்க, வெளியே இருந்த காவலர்கள் ஒரு நொடி தங்கள் வேலையை நிறுத்தியவர்கள், மீண்டுமாக தங்கள் வேலையைத் தொடர்ந்தார்கள்.

“யாழி..., சார் இன்னும் கேஸ் தாக்கத்தில் இருந்து வரலை போல, இன்னும் இந்த கேஸ் முடியிற வரைக்கும் ஒரே நெருப்பு தானா...? உன் பாடு திண்டாட்டம் தான். நோ பெர்மிஷன், நோ லீவ்..., நேரத்துக்கு வீட்டுக்கு போறது..., எல்லாத்தையும் மறந்துட வேண்டியதுதான்..., உன்னை நினைத்தால் ரொம்ப பாவமா இருக்கு...” உடன் வேலை செய்யும் தனு உரைக்க, அவள் அனுதாபப்படுகிறாளா, இல்லை ஆனந்தப்படுகிறாளா, இல்லை

பொறாமைப்படுகிறாளா என்றே யாழினிக்குத் தெரியவில்லை.

“தனு..., இந்த கேஸ் சக்சஸ் ஆனால் அவ இன்ஸ்பெக்டர் ஆயிடுவா..., அது தெரியுமா? நமக்கு எஸ்ஐ போஸ்ட் வரவே இன்னும் அஞ்சு வருஷம் இந்த சீட்டை தேய்க்கணும்..., கஷ்டப்படாமல் எதுவும் கிடைக்காது...” சஞ்சனா உரைக்க, தனுவின் முகம் பேயறைந்தாற்போல் மாறியது.

அவர்களது பேச்சை கேட்ட பிரம்மா சற்று நிதானித்தான். ‘என்னைப்பற்றி ஏதாவது பேசிக் கொள்வார்களா...? ஏதாவது தெரிந்துகொள்ள முடியுமா?’ எழுந்த எதிர்பார்ப்பை அவனால் அடக்க முடியவில்லை.

“யாழி..., சார் கரெக்டா ஒவ்வொரு கேசுக்கும் ஒரு ஆளை செலக்ட் பண்றார் பார்..., எனக்கு அதுதான் ஆச்சரியமே..., ஒவ்வொரு கேஸ் முடிச்சுட்டு, ஒவ்வொருத்தரையும் ஒரு படி ஏத்தி விட்டுடுறார்..., நானும் ஏதாவது கேஸ்ல என்னை சேத்துப்பார்ன்னு பாக்கறேன்..., எங்கே...” ஒரு பெருமூச்சை வெளியேற்ற, யாழினியின் முகத்தில் பெருமிதம்.

தனு அங்கிருந்து விலகிச் செல்ல, இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். “யாழி..., சார்..., ஆக்சிடண்ட்க்கு பிறகு ரொம்ப கோபமா இருக்குற மாதிரி இருக்கு..., எனக்கு மட்டும்தான் அப்படி தோணுதா..., இல்ல..., அப்படித்தான் நடந்துக்கறாரா...?” சஞ்சனாவின் குரலில் உண்மையான கவலை.

“சஞ்சு..., உண்மையைச் சொல்லணும்னா..., முந்தி இருந்ததை விட, ஏதோ ஒரு மாற்றம்..., அது என்னன்னு சொல்லத் தெரியலை..., பட்..., அவரோட வேகம் குறைஞ்சுட்ட மாதிரி ஒரு ஃபீல்...” அவள் சொல்ல, வியந்து போனாள் சஞ்சனா.

“என்ன சொல்ற...? என்னால் நம்பவே முடியலை. பிரம்மா சாரா...?” அவர்கள் பேசிக்கொண்டே செல்ல, அனைத்தையும் கேட்ட பிரம்மா, அப்படியே மீண்டும் தன் அறைக்குத் திரும்பிவிட்டான்.

அறைக்குள் சென்றவன்..., பஸ்ஸரை ஒலிக்கவிட, வேகமாக அவன் அறைக்கு விரைந்தாள் யாழினி. “சார்...” அவன் முன்னால் நிற்க, டம்ளர் விழுந்து சிதறிய இடத்தை பார்வையால் சுட்ட, அவன் பார்வைக்கான பொருள் புரிந்தவளாக, வேகமாக ஒரு துடைப்பம், முறமுமாக திரும்பி வந்தாள்.

அவள் சுத்தம் செய்வதைப் பார்த்தவன், “ம்கும்...” தொண்டையைக் கனைத்தவன், துடைப்பத்தையும் அவளையும் ஒரு பார்வை பார்த்து, ‘இதை ஏன் நீங்க செய்யறீங்க?’ பார்வையால் அவன் கேட்க, அவள் கையில் இருந்த துடைப்பம் தவறி கீழே விழுந்தது.

அவள் திகைத்து நிமிர்ந்து பார்க்க, ‘என்ன சொதப்பினேன்னு தெரியலையே’ மனதுக்குள் நொந்து போனான். வேகமாக மேஜைமேல் இருந்து சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

அவளோ..., இதற்கு முன்பாக அவனது டேபிளில் காபி சிந்த, அதை வேலைக்கு வரும் அட்டெண்டர் சுத்தம் செய்ய, “ஏன்..., எஸ்ஜ மேடம் கிளீன் பண்ண மாட்டீங்களோ...?” எனக் கேட்டு சாடியிருக்க, அதற்குப் பிறகு அவனது அறையை சுத்தம் செய்வது அவள்தான்.

அப்படியிருக்கையில், இன்று இப்படிப் பார்த்தால், அவளும் என்னதான் செய்வாள்? “வாட்...?” தன் இயலாமையை மறைக்க அவளிடம் சாட, வேகமாக இடத்தை சுத்தம் செய்துவிட்டு ஓடியே போனாள்.

அவனுக்கோ..., எங்கேயாவது முட்டிக்கொள்ளலாம் போல் இருந்தது. தன் கையில் இருந்த சின்ன டைரியில், தன் நினைவுக்கு வரும் விஷயங்களை கோர்வையாக்கி எழுத முயன்றான். கூடவே..., அந்த ‘பப்’க்கு போய் பார்ப்பது என முடிவெடுத்துக் கொண்டான்.

அன்று மாலையே..., உடை மாற்றியவன், காக்கி பேண்டுக்கு மேலாக, வெள்ளை டிஷர்ட்டை அணிந்துகொண்டு வந்தவன், “கந்தன்..., பப்க்கு போங்க...”

தான் வழக்கமாக போகும் பப் என்றால் நிச்சயம் அவருக்குத் தெரியும் என எண்ணினான்.

அதேபோல், அவரும் ஒரு கேள்வி கூட கேட்காமல், வண்டியை விரட்டியவர், “சார்..., நான் கிளம்பவா..., இல்ல...” அவரது கேள்வியிலேயே அவரை அங்கே இருக்கச் சொல்வது இல்லை என்பது புரிய, “கிளம்புங்க...” உரைத்தவன், கூலிங்கிளாசை அணிந்தவாறு, உள்ளே அடியெடுத்து வைத்தான்.

வாசலிலேயே இரு குண்டாக்கள் அவனைத் தடுக்க முயல, அவன் கிளாசை லேசாக இறக்கி, அழுத்தமாக அவர்களை ஏறிட, வேகமாக விலகி நின்றார்கள். வாயில் இருந்து சுவிங்கத்தை துப்பிவிட்டு உள்ளே அடியெடுத்து வைத்தான்.

வெளியே வெகு அமைதியாக இருந்த அந்த கட்டிடம், உள்ளே செல்லச் செல்ல..., காட்டு கூச்சலான இசையோடும், பளபளக்கும் ஒளியோடும் மின்னியது. கூலிங்கிளாசுக்கு பின்னால், அவனது பார்வை அங்குலம் அங்குலமாக அலச, மெதுவாக முன்னேறினான்.

ட்ரிங்க்ஸ் கொடுக்கும் இடம் சென்றவன்..., “கோக்...” அவன் குரல் கொடுக்க, கண்ணாடி டம்ப்ளரில் அவன் கொடுக்க, அதைப் பெற்றுக் கொண்டவன், நடுவில் போடப்பட்டிருந்த சோபாக்களில் ஒன்றை நாடிச் செல்ல, அங்கே இருந்த ஒன்றிரண்டுபேர் நகர்ந்து செல்வதை அவனது கண்கள் குறித்துக் கொண்டது.

அதைப்பற்றி சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை. நிதான நடையில் சென்றவன், சோபாவில் கால்மேல் கால் போட்டு அமர, அங்கே ஒலித்த இசைக்கு ஏற்ப இளவட்டங்கள் தங்களை மறந்து ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆணும் பெண்ணும் வித்தியாசம் இல்லாமல் குடித்துவிட்டு ஆட்டம் போட, பார்வையை நிதானமாக அவர்கள்மேல் செலுத்தினான்.

கூட்டத்தில் சில கயவர்கள், பெண்களின் அங்கங்களில் அத்துமீறி உரச, கை விரல்களை பிசைந்தவாறு தன்னை

கட்டுப்படுத்திக் கொண்டான். ‘பாஸ்டர்ஸ்...’ மனதுக்குள் கொந்தளித்தவன், வெளியே நிதானம் தொலைக்கவில்லை.

‘இந்த பொண்ணுங்க தெரிந்தே இதை அனுமதிக்கிறார்களா...?’ பெண்கள் தன்னை மீறி, குடி போதையில் தள்ளாட, ‘இந்த சமுதாயம் எங்கே போய்க்கொண்டு இருக்கிறது...?’ அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

பார்வைகள் அவர்கள்மேல் படர்ந்து விலகினாலும், தன்னைப் பார்த்தவுடன், ஒருவன் வேகமாக ஒதுங்கிச் சென்று யாருக்கோ செல்போனில் பேசுவது தெரிய, அதையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.

‘வருவதை பார்த்துக் கொள்ளலாம்...’ தன் கையில் இருந்த கிளாசில் இருந்த கோக்கை துளித் துளியாய் பருகினான்.

நேரம் ஓடிக் கொண்டே இருக்க, திடுமென விளக்குகள் அனைத்தும் ஒரு நொடி அணைந்து, நடுவில் இருந்த மேடையில் மட்டும் விளக்கு பளீரிட, நடு நாயகமாக நின்றிருந்தாள் அவள்..., “நிஷா..., நிஷா..., நிஷா...” கூக்குரல்கள் ஒலிக்க, இடக்கண் புருவத்தை, ஆள்காட்டி விரலால் மெதுவாக வருடியவாறு அவளையே பார்த்தான்.

‘என் மூளைக்குள் வெட்டிய மின்னலில் இருந்தது இவள்தானா...?’ யோசனை ஓட, அவள் பார்வை நொடிகளுக்குக் குறைவாக, தான் இருக்கும் பக்கம் பாய்ந்து மீள்வதை உணர்ந்தான்.

‘பிரம்மையா..., அதற்கு வாய்ப்பே இல்லை...’ அவன் உள்ளுணர்வு சொன்னது..., ‘அவள் உன்னைத் தேடி வருவாள்...’ அங்கே இருந்து அசையாமல் அமர்ந்திருந்தான். நிஷாவிடம் ஏதோ ஒரு வித்தியாசம்..., அது என்னவென்று அவனுக்குப் புரியவில்லை.

‘அறைக்கு அழைப்பாளோ..., அப்படியா...?’ ஒரு மனம் தவிக்க, நிதானம் தவறாமல் கோக் மட்டும் காலியாகிக் கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட ஒருமணிநேரம் விடாமல் ஆடியவள்..., சற்று கீழே இறங்க, அவள் மேனியைத் தழுவ நூறு கைகள் நீண்டது. அதற்கு அனுமதிக்காமல் அங்கே இருந்த பாடிகார்ட் தடுத்தாலும், அத்துமீறி தன்னைத் தீண்டும் கரங்களை, பட்டென விலக்காமல், ஒரு வருடலாக விலக்கிவிட, கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்தவன் அசையவே இல்லை.

அதற்குள் மேடையில் மேலும் சில பெண்கள் தோன்ற..., நிஷா நழுவிச் செல்வது தெரிந்தது. நொடியில் மின்னலென அவனைப் பார்த்தவள், ‘வா...’ என்பதுபோல் தலையசைத்துச் செல்ல, நொடியில் தன் இடத்தில் இருந்து எழுந்து நின்றான்.

அவன் கூட்டத்தில் கலக்க, “இடியட்..., டோட் டச்...” ஒரு பெண்ணின் எரிச்சல் குரலும், “டச் பண்ணக் கூடாதுன்னா இங்கே எல்லாம் வரக் கூடாது...” ஒருவனின் தெனாவெட்டுக் குரலும் ஒலிக்க, நொடியில் அங்கே பிரசன்னமானவன், மீண்டும் அந்தப் பெண்ணை தொட முயன்ற மற்றவனது உள்ளங்கையில் ஒரு அழுத்தம்..., அவ்வளவுதான்..., ஷாக் அடித்த உணர்வில் தரையில் விழுந்து துடிக்கத் துவங்கினான் அவன்.

எதுவுமே நடவாததுபோல் கடந்து சென்றான் பிரம்மா..., நொடிக்குள் நேர்ந்த இந்த செய்கையால், யார் என்ன செய்தார்கள் என்பதே யாருக்கும் தெரியவில்லை. ‘தான் என்ன செய்தோம்...? எப்படிச் செய்தோம்?’ ஒரு நொடி யோசித்தவன், நிஷாவை நழுவ விட மனமில்லாமல் வேகமாக முன்னேறினான்.

நிஷா சென்ற பாதையில் அவன் செல்ல, அவனுக்கு குறுக்காக இரு பாடிகார்ட் வந்து வழி மறிக்க, மின்னலென அவன் கையில் முளைத்த துப்பாக்கி அவர்களை மிரட்டும் முன்பு..., “ஹி இஸ் மை கெஸ்ட்...” நிஷா உள்ளே இருந்து குரல் கொடுக்கவே, அவர்கள் விலகிக் கொள்ள, சட்டென துப்பாக்கியை தன் பின்னால் மறைத்தான்.

அவன் உள்ளே செல்ல..., “பிரம்மா..., பிரம்மா..., மை மேன்..., ஆர் யூ ஓகே...?” ஓடி வந்தவள், அவனை அணைத்து, அவளது உதட்டுச் சாயம் அவன் கன்னத்தில் ஒட்டிக்கொள்ளும் அளவுக்கு முத்தமிட, உணர்வே இல்லாமல் நின்றிருந்தான்.

‘ஓங்கி ஒரு அறை விடலாமா..., இல்லையென்றால் தள்ளி விட்டு விடலாமா?’ அவன் எண்ணிக் கொண்டிருக்க,

“இது..., இது..., இதுதான் எனக்கு உங்ககிட்டே பிடித்ததே...” அக்மார்க் ஹிந்தியில் அவள் மொழிய, அதை மொழிபெயர்த்தவன், அவளைப் பார்க்க, அவன் கண்களில் இருந்து கூலிங்கிளாஸ்சை அவள் அகற்ற, அவன் கண்கள் உணர்வுகளை தொலைத்திருந்ததைப் பார்த்தவள், அவன் கை பிடித்து அழைத்து, அங்கே இருந்த இருக்கையில் அமர வைத்தாள்.

அவன் அமரவே..., சட்டென அவன் மடியில் அமர்ந்தவள், அவன் கழுத்தை சுற்றி வளைத்துக் கொள்ள, அப்பொழுதும் அவனிடம் மாற்றம் இல்லை. “அதெப்படி பிரம்மா இவ்வளவு நெருக்கத்திலும், கொஞ்சம் கூட அசையாமல் இருக்கீங்க...? இதுக்காகவே உங்களை சீண்டிப் பார்க்கச் சொல்லுது...” இதழ்கள் அவன் கன்னத்தில் கோலம் வரைய, அவள் சொல்லச் சொல்ல...,

‘அப்போ..., இந்த நெருக்கம் இத்தோடு முடிந்து போவது தானா...? அதற்குமேல் எதுவும் கிடையாதா...?’ எதில் இருந்தோ தப்பிக்கும் உணர்வு, விடுதலையான உணர்வு.

‘நான் ஒழுக்கமானவன்தான்...’ அவன் மனதுக்குள் பெரும் நிம்மதி.

“பிரம்மா சார்..., அதான் அந்த கட்டப்பஞ்சாயத்து ஆள் வந்த அன்னைக்கு சரியா டீட்டெயில் சொல்லி புடிச்சுக் கொடுத்தேனே, இன்னும் வேற யாராவது இங்கே வராங்களா? அவங்க அடையாளம் சொன்னால் நிச்சயம் ஹெல்ப் பண்றேன்...” அவன் சொல்ல, மறுப்பாக தலை அசைத்தான்.

‘ஓ…, அப்போ அந்த கேஸ் விஷயமாகத்தான் இவளைப் பார்க்க வந்திருந்திருக்கிறேன்…’ எண்ணியவனுக்கு…, அந்த வித்தியாசம் உறைத்தது. அது…, அவள் ஒரு திருநங்கை என்பதுதான். ஏனோ அருவருப்பு தோன்றவில்லை…, மௌனமாக அவளை மடி தாங்கியவாறு அமர்ந்திருந்தான்.

“அப்போ என்னைப் பாக்க வந்தீங்களா…?” கண்களில் குறும்பு வழிய, உதட்டை சுழித்து அவள் சொன்ன அழகில், ஒரு நொடி அவளை ரசித்தான். கூடவே…, அவன் தலை மறுப்பாய் அசைந்தது.

“இந்த வாயைத் தொறந்து பேசினால் முத்தா கொட்டிடும்? கேஸ் விஷயம் தவிர வேற எதையுமே பேச மாட்டீங்களா? உங்களை கட்டிக்கப் போறவ ரொம்ப பாவம்…” அவள் அனுதாபப்பட, ‘அப்படியா?’ தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அதைவிட, காயத்ரியின் முகம், அந்த சிவப்புக்கல் மூக்குத்தி, அந்த குண்டு கண்கள், அவன் விழி ஒரு நொடி மயக்கத்தை பிரதிபலிக்க, அதை நிஷா கண்டுகொள்ளவே இல்லை.

“நீங்க எனக்கு எவ்வளவு பெரிய ஹெல்ப் பண்ணியிருக்கீங்கன்னு உங்களுக்கே தெரியாது. ரோட்டில் சீரழிந்திருக்க வேண்டிய என்னை, இங்கே கொண்டுவந்து சேர்த்து…, எனக்கு ஒரு வழி காட்டி…, உங்களுக்கு வேண்டி என் உயிரையும் கொடுப்பேன்…” அவள் சொல்லிக்கொண்டே போக, அவள் தோளை மெதுவாக தட்டியவன், அப்படியே அலேக்காக தூக்கி கீழே விட்டுவிட்டு, இருக்கையில் இருந்து எழுந்துகொண்டான்.

மனதுக்குள் அப்படி ஒரு விடுதலை உணர்வு. முகத்தில் அவனை மீறி மென்மை படர, “தேங்க்ஸ்…” உரைத்தவன் அங்கே இருந்து கிளம்ப, அவனை அணைத்து விடுவித்தாள்.

“டேக் கேர்…” அவள் உரைக்க…, தலையசைத்தவன், அவள் காட்டிய வழியில் வெளியேற, அவனைத் தாக்க பத்துபேர்

கொண்ட கும்பல் வெளியே காத்துக் கொண்டிருந்தது.

*****

# பகுதி – 11.

நள்ளிரவு இரண்டுமணி..., தன் அறையில் ஷவருக்கு அடியே, ஊசிமுனையாய் தாக்கும் நீரின் குளிரை உள் வாங்கியவாறு நின்றிருந்தான் பிரம்மா. இமைகள் இரண்டும் மூடி இருக்க, சுவரில் கைகளை பதித்து, அசையாமல் நின்றான்.

‘எப்படி..., இதெப்படி சாத்தியம்...?’ மனதுக்குள் கேள்வி வண்டாய் குடைந்தது. கிட்டத்தட்ட பத்துபேர்..., அதுவும் கையில் ஆயுதங்களோடு..., கொஞ்சம் கூட அசராமல், அவர்கள் அனைவரையும் தான் பந்தாடிய விதம், அவனால் நம்ப முடியவில்லை.

அவர்களை அடித்து துவம்சம் செய்திருந்தால் கூட இவ்வளவு அதிர்ந்து போயிருக்க மாட்டானோ என்னவோ..., அவர்களை தான் தாக்கிய விதம்..., வர்மக்கலையில் இருந்ததைத்தான் அதிவாய் உள்வாங்கி நின்றிருந்தான். அவனது கைகளில் இருந்த இரு விரல்கள் மட்டுமே ஆயுதமாக, ஒவ்வொருவனும் சாய்ந்த விதம், தான் சாய்த்த விதம், அவனால் அவன் கண்களையே நம்ப முடியவில்லை.

பத்துபேர் தன்னைச் சூழ்ந்தபொழுது அவன் திகைத்து நின்றது ஒரு நொடிதான். பட்டா கத்தியோடு ஒருத்தன் தன் நெஞ்சுக்கு குறி வைத்து பாய, அடுத்த நொடி, அவனது கை தானாகவே நீண்டு, அவன் கையின் நாடித்துடிப்பு பரிசோதிக்கும் இடத்தில் விரலை பதித்து மீள, அவனது ஓலம் அந்த நல்லிரவையே கிழித்தது.

“டேய்..., அவன் கைக்கெட்டும் தூரத்தில் போகாதீங்க...” முதலில் தன் கையில் சிக்கிய இருவர் வேரறுந்த மரமாக வீழ்ந்தபொழுது ஒருவன் உரைத்ததை எண்ணி சிரித்துக் கொண்டான்.

அவர்களது பின்னங்கழுத்துக்கு கீழாக தன் விரல்களால் நொடியில் தாக்க, அவர்கள் அப்படியே விழுந்தபொழுது, ஒரு நொடி திகைத்துத்தான் போனான். சட்டென தன் விரல்களைப் பார்த்தவன், மீண்டுமாக இருவர்

ஆயுதங்களை வீசியபொழுது, அவர்களது நாடித்துடிப்பு பார்க்கும் இடத்தில் விட்ட குத்து..., அவர்கள் நொடியில் துடித்து அலறியது..., நின்ற இடத்தில் இருந்து அசையவே இல்லை.

“கத்தியை வீசுங்கடா...” கிட்டத்தட்ட நான்கு கத்தி பாய்ந்து வர, காற்றை விட வேகமாக அவன் நகர, நான்கு கத்திகளில் இரண்டு, அவர்களது கூட்டாளிகளையே பதம் பார்க்க, மேலும் இரண்டு அவனது கரத்தில் அடைக்கலமாகி இருந்தது.

பாய்ந்து சென்ற கத்தி எப்படி அவன் கரத்தில் அடைக்கலமானது என அவர்கள் உறைந்து நிற்க,

வினாடியில் அவை இரண்டையும் குறி பார்த்து எதிரில் இருந்தவர்களின் காலில் வீச, “ஐயோ..., அம்மா..., ஆ...” அலறலோடு ஓடிப் போனார்கள். கீழே மரம்போல் விழுந்து கிடந்த அவர்களை திருப்ப, அவர்களிடம் சிறிதும் அசைவில்லை.

‘செத்துட்டாங்களா...?’ யோசனையில் மூக்கின் அடியில் விரல் வைக்க, அவர்கள் சீராக மூச்சு விடுவது தெரிந்தது. இருவரையும் ஜீப்பில் அள்ளிப்போட்டுவிட்டு, நேராக ஸ்டேஷன் சென்று, அவர்களை செல்லுக்குள் வைத்துவிட்டு திரும்பினான்.

அவ்வளவு நேரமாக விழி மூடி நின்றவன், தன் இரு கரங்களை விழி திறந்து பார்க்க, விரல்களைப் பார்க்க என்னவோ சாதாரண விரல்களாகத்தான் தெரிந்தது. ஆனால்..., அவை செய்யும் ஜாலம்..., பெரு விரலால், மற்ற நான்கு விரல்களையும் வருடினான்.

ஒரு கட்டத்துக்கு மேல், குளிர் அதிகமாக தாக்க, கூடவே, வெளியே டோனியின் “பவ்..., பவ்...” குரைப்பும் வெளியே கேட்க, ஷவரை நிறுத்திவிட்டு, அங்கே இருந்த டவ்வலை இடையில் கட்டியவாறு வெளியே வந்தான்.

டோனி அவன் கால்களை நக்க, “சிட்...” அவன் உரைக்கவே, அதற்கென போட்டிருந்த கார்பெட் மேல் போய் படுத்துக்

கொண்டது. படுத்துக் கொண்டாலும் பார்வை இரண்டும் அவன்மீதே வைத்திருக்க, அதைப் பார்த்தவன் மெல்லியதாக சிரித்துக் கொண்டான். அந்த வாயில்லா ஜீவனின் பாசம் அவனை வருடிச் சென்றது.

‘காயு எப்படி இருப்பா? என்னை பார்க்கும் பார்வையிலேயே நெருப்பு பறக்கிறது, இதில் அவள் உன்னை காதல் பார்வை வேறு பார்ப்பாளா?’ மனசாட்சி கேட்க, அவன் இதழில் உறைந்த புன்னகை இன்னும் அழகாக விரிந்தது. அதென்னவோ அவள் கோபத்தைப் பார்த்து அவனுக்கு கொஞ்சம் கூட வருத்தமோ, பயமோ இல்லை.

மாறாக, மற்றவர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் தன்னைப் பார்த்து பயந்து விலகி நிற்க, தைரியமாக தன்னை முறைக்கும் அவள்மேல் சுவாரசியம் எழுவதை தடுக்க முடியவில்லை. உடை மாற்றும் முன்னர், அவனது கூலிங்கிளாஸ் பார்வையில் விழ, வேகமாக அதை எடுத்தவன், அதன் பின்னால் இருந்த ‘சிப்’பை லாவகமாக உருவினான்.

அதை போல்டரில் பொருத்தி, தன் அலைபேசியில் கனெக்ட் செய்தவன், காலை முதல், மாலை வரை தன்னை சந்தித்தவர்கள், சாலையில் பயணிக்கையில் தான் பதிவு செய்தவை, ‘பப்’பில் நடந்த நிஷாவுடனான சந்திப்பு, தொடர்ந்த சண்டை..., என அனைத்தையும் ஓடவிட்டு பார்த்தான்.

சண்டை வந்தபொழுது..., அதில் இருந்தவர்களை ஒவ்வொருவராக ஜூம் செய்து பார்க்க, அவர்கள் முகத்தை மறைத்திருந்ததால் யார்..., யாரெனத் தெரியவில்லை. மாறாக, அவர்களது உடல்மொழி, குரல்..., என அனைத்தையும் உன்னிப்பாய் கவனித்தான்.

வந்தவர்களுக்கு தன்னைக் கொல்வது மட்டுமே குறிக்கோளாக இருந்ததை உணர்ந்து கொண்டான். ‘இவனுங்க இப்போ கவனிக்க கேசுக்காக துரத்துறாங்களா? இல்ல..., இதுக்கு முன்னாடி முடிச்ச கேசா...?’ எண்ணியவன்,

தன் மேனரிசமான இடதுபக்க புருவத்தை, இடதுகை நடுவிரலால் அழுத்தமாக வருடிக் கொண்டிருந்தது.

தன் அலைபேசியை எடுத்தவன், மீண்டுமாக சிப்பை கூலிங்கிளாஸ்ஸில் பொருத்திவிட்டு, ஸ்டேஷனுக்கு அழைத்தான். “எஸ்பி ஆபீஸ்…” அட்டெண்டர் குரல் கொடுக்க, “பிரம்மா…” அந்த ஒற்றை வார்த்தையில், அவன் பெரும் பரபரப்புக்கு உள்ளாவதை குறித்துக் கொண்டான்.

“சார்…” அவன் இருக்கையில் இருந்து எழுந்து கொள்வது, பிரம்மாவுக்கு இங்கே புரிந்தது. “இப்போ நான் கொண்டுவந்தவங்க முழிச்சுட்டாங்களா?” அவன் கேட்க, “இல்ல சார்…, பொணம் மாதிரிதான் கிடக்காங்க…” அவன் பதில் அவ்வளவு உவப்பாக இருக்கவில்லை.

‘அவங்களை மயக்கமடைய செய்தேன் என்றால், எழுப்பவும் எனக்குத் தெரியணும்…’ ஒரு பெருமூச்சை வெளியிட்டவன், எதுவாக இருந்தாலும் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணியவன், படுத்துக் கொள்ள முயல, வயிறு ஒலியெழுப்பி தன் இருப்பை உணர்த்தியது.

கிச்சனுக்குச் சென்று வாழைப்பழம் உண்டு, ப்ரிட்ஜில் இருந்த பாலை சூடாக்கி குடித்துவிட்டு படுத்துக் கொண்டான். டோனி வேகமாக அவன் அருகில் வந்து படுக்க முயல, “நோ…, கோ…” அவன் குரல் கொடுக்கவே, அப்பொழுதும் குரைத்துவிட்டே நகர்ந்தது.

என்னவோ அவனை பாதுகாக்கும் முனைப்பு அதனிடம். காலையில் அலாரம் வைத்த மாதிரி ஐந்து மணிக்கு விழிப்பு வர, கண் எரிந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல், தன் அறைக்கு பக்கத்தில் இருந்த அறையில் சென்று புகுந்தான். டோனியும் அவனோடு சென்றது.

வெறும் வயிற்றில் தண்ணீரை குடித்தவன், இலகுவான ஒரு கையில்லாத டிஷர்ட், உள்ளாடையோடு அங்கே இருந்த இயந்திரங்களில் ஒர்க்கவுட் துவங்கினான். த்ரெட்மில், டம்பிள்ஸ்…, உயரத்தில் இருந்த கம்பியில்

தொற்றிக்கொண்டு என கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் செலவிட்டவன், அங்கே இருந்த பால்க்கனியில் பேப்பர் வந்து விழுவதைப் பார்த்துவிட்டு, டவ்வலால் தன்னை துடைத்தவாறு, வெளியே வந்தான்.

டோனி அவனுக்கு முன்பாக ஓடிபோய், பேப்பரை வாயால் கவ்விக் கொண்டு வந்து அவனிடம் கொடுக்க, கையில் வாங்கியவன், அங்கே இருந்த மூங்கில் கூடையில் அமர்ந்து கொண்டு, பேப்பர் படிக்கத் துவங்கினான். அவன் காலுக்கருகில் அமர்ந்துகொண்டது டோனி.

அதன் தலையை செல்லமாக வருடியவன், புஜங்கள் அனைத்தும் கர்லா கட்டைகளாக திமிற, ஈரம் சொட்டிய அவன் தேகம்..., இரும்பாய் பளபளத்தது.

போலீஸ் அக்காடமி நடத்தும் ஆணழகன் போட்டியில், கடந்த மூன்று வருடங்களாக அவன்தான் சேம்பியன் என்பதை, அங்கே இருந்த மெடல்களும், சான்றிதழ்களும் தெரிவிக்க, அவன் உடல் அழகை நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள்.

அப்படிப்பட்டவன் எப்படி புகை, மது..., என உபயோகித்தான் என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. வியர்வை சற்று அடங்கும் வரை பேப்பர் பார்த்தவன், கீழே இறங்கி, பால் காய்ச்சி குடித்துவிட்டு, டோனிக்கும் கொடுக்க, அதுவும் சமத்தாக அருந்தியது.

அவனுக்குத் தெரிந்த விதத்தில் காலை சமையல் முடித்தவன், சாதம் வைத்துவிட்டு, குளிக்கச் சென்றான். ‘இன்னைக்கு அவளைப் போய் பார்க்க வேண்டும்...’ மனதுக்குள் குறித்துக் கொண்டான். என்னவோ அவளைக் கண்களால் ஒரு முறை கண்டுவிடத் தோன்றியது.

கல்லூரிக்கு விடுப்பு எடுத்த காயத்ரி..., பேன்க் செல்ல வெளியே வர, அவளுக்கு முன்னால் வந்து நின்றது போலீஸ் ஜீப். அதில் இருந்து இறங்கிய பிரம்மாவைக் கண்டு திகைத்துப் போனாள். ஜீப்பில் இருந்து இறங்கியவன், தான் தேடிச் செல்லாமலேயே தரிசனம் தந்தவளை பார்வையால் வருடியவாறு நின்றிருந்தான்.

அவனது கூலிங்கிளாஸ் அவனது கண்களை மறைந்தாலும், அவன் தன்னைத்தான் விடாமல் பார்க்கிறான் என அவளுக்குத் தெரியாதா என்ன? அவனைப் பார்க்காதவள்போல் எங்கிருந்து செல்ல முயன்றாள்.

அவள் தன்னைப் பார்த்துவிட்டாள் என்பதை அவளது பரபரப்பான உடல்மொழியும், பார்வையை அவன் பக்கமே திருப்பாமல், எதிர்பக்கம் திருப்பிய செய்கையும் அவனுக்கு தெளிவாக எடுத்துரைக்க, ஜீப்பில் சாய்ந்து நின்றவன் அவளைத் தடுக்கவே முயலவில்லை.

அவனைத் தாண்டி அவள் நடக்க முயல, “உன்னை தூக்கித்தான் ஜீப்பில் ஏத்தணும்னு நீ ஆசைபட்டால் எனக்கு அதில் சந்தோஷம்தான்...” நின்ற இடத்தில் இருந்து அசையாமல் அவன் உரைக்க, அவன் குரலில் இருந்த அழுத்தத்தில் அவளால் அடுத்த அடியை எடுத்து வைக்கவே முடியவில்லை.

அதே நேரம்..., சற்று தூரத்தில் இருந்த மரத்தின் பின்னால் இருந்த ஒருவன், அவர்களையே பார்ப்பதை குறித்துக் கொண்டான் பிரம்மா. இதுதான், இந்த செய்கைதான் பிரம்மாவை தன்னைப் பற்றியே திகைக்க, வியக்கச் செய்வது. ஒரு இடத்தில் இருந்தால், எதிரில் இருப்பவர்களை விட, சுற்றுப்புறத்தை நொடியில் அவன் ஆராயும் விதம். அவர்களது உடல்மொழியை வைத்தே அவர்களை படிக்கும், கணக்கிடும் வித்தை.

‘நான் இப்படித்தானா?’ தன்னையே கேட்டவன், கூலிங்கிளாசை அட்ஜஸ்ட் செய்வதுபோல், ஜூம் செய்து படம் எடுத்தவன், மறந்தும் அவனை நேராகப் பார்க்கவில்லை.

‘அவன் என்னை பாலோ பண்ணலை..., என்னை பாலோ பண்ணுவதாக இருந்திருந்தால் என் பின்னால் வந்திருப்பான். அதை தவறவிடும் அளவுக்கு நான் முட்டாள் இல்லை. சப்போஸ் யாராவது தகவல் சொல்கிறார்கள் என வைத்துக் கொண்டாலும், அவன் கையில் அலைபேசி

இருந்திருக்கும், இது எதுவும் இல்லை...' நொடிக்குள் கணித்தான்.

"என்ன மிரட்டுறீங்களா...?" அவள், அவன் அருகில் வந்து குதிக்க, அவன்மேல் இருந்த கவனத்தை காயத்ரியின்மேல் திருப்பினான்.

"இப்போ பேசுவதைப் பார்த்தால், நீதான் என்கிட்டே சண்டை போடுற மாதிரி இருக்கு..." மீசையை முறுக்கியவாறே அவன் உரைக்க, தன்னால் ஆனமட்டும் அவனை முறைத்தாள்.

"அன்னைக்கு ஏதோ விளையாட்டுக்கு சொல்றீங்கன்னு பாத்தால், இப்படி வந்து நிக்கறீங்க? எனக்குதான் உங்களை பிடிக்கலைன்னு அன்னைக்கே சொன்னேனே..., அப்படி என்ன..., என்னைத்தான் கட்டிப்பேன்னு பிடிவாதம்.

"என்னை கல்யாணம் பண்ணிகிட்டா ரொம்ப வருத்தப் படுவீங்க. உங்களை கொன்னுடுவேன்..." நிச்சயம் அவள் விழிகளில் பொய்யில்லை என்பதை குறித்துக் கொண்டான்.

"என்னை கொல்லணும் அவ்வளவு தானே..., வித் ப்ளஷர்..., ஜீப்பில் ஏறி கூட கொல்லலாம்..." அவன் ஜீப்பின் கதவை கண்களால் சுட்டினான். அவன் இதழோரம் சின்னதாய் இருக்கும் அந்த புன்னகை, இமைகளை படபடவென கொட்டி, அவனை வெறித்தாள்.

'இவன் இப்படி கிடையாதே...' அவள் மனம் உரைக்க, அவனைப் பற்றிய ஆராய்ச்சியை அப்படியே நிறுத்தினாள்.

"என்னையும் என்கவுண்டர்ல போடப் போறீங்களா...?" அவள் வெடிக்க,

'என்னையும்னா..., அப்போ..., இதுக்கு முன்னாடி இவளுக்கு வேண்டிய யாரையோ என்கவுண்டரில் போட்டிருக்கேனா?' கண்கள் கூர்மையான கத்தியென அவளைத் துளைத்தது.

"என்னை தொல்லை செய்யாதீங்க..., செய்தால்..., ரொம்ப வருத்தப் படுவீங்க" அவள் கரம், அவளது கைப்பைக்குள்

நுழைய, நிச்சயம் உள்ளே ஏதோ ஆயுதம் இருக்கிறது என கணித்துக் கொண்டான்.

‘இவளுக்கு என்மேல் அப்படியென்ன கோபம்...?’ அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. ‘யாரை என்கவுண்டர் செய்தேன் எனச் சொல்கிறாள்?’ குழம்பினான்.

மறைந்திருக்கும் எதிரிகளை விட, முன்னால் நிற்கும் அவள் ஆபத்தானவளாக அவனுக்குத் தோன்றவில்லை. நிச்சயம் உன் வண்டியில் ஏற மாட்டேன்..., என அவள் அழுத்தமாக நிற்க, அவளைத் தூக்கி வண்டியில் போட அவனுக்கு ஒரு நொடி போதாது..., ஆனால், கல்லூரி வாசலின் முன்னால் அதைச் செய்ய முடியாமல் அமைதியாக நின்றான்.

“கல்யாணத்துக்கு இன்னும் மூணு வாரம் இருக்கு..., வர்ற இருபத்தி ஒன்றாம் தேதி கல்யாணம்..., இந்த வாரம் வெள்ளிக்கிழமை தாலி வாங்கப் போறோம், ரெடியா இரு...” உரைத்தவன், ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

அவள் கண்களில் வழிந்த கோபத்தை கண்டுகொள்ளாமல், “இப்போ எங்கே போற...?” அடுத்த கேள்வியைக் கேட்க,

‘உனக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது போடா...’ என்பதுபோல் முகத்தை திருப்பிக் கொண்டாள். அதைப் பார்த்தவனுக்கு, சுள்ளென கோபம் ஏற, “எனக்கு பதில் வந்தாகணும்...” அவன் கோபத்தில் அவள் சிறிதும் பாதிக்கப்படவில்லை.

“கந்தன்..., இவ கூடவே இருங்க..., அதுதான் இன்னைக்கு உங்க டியூட்டி...” தன் இருக்கையில் இருந்து அவன் இறங்க, கந்தனும் இறங்கிவிட்டார்.

எங்கே அவர் இன்று தன்னோடு வந்துவிடுவாரோ என அஞ்சியவள், “ஷாப்பிங் போறேன்...” அவன் முகம் பார்க்காமல் உரைக்க, அவன் உன்னை நம்பவில்லை, என்பதுபோல் நடக்கத் துவங்கினான்.

“எங்க சொந்தக்காரங்க வீட்டுக்குப் போறேன்...” அடுத்ததாக அவள் உரைக்க, அப்பொழுதும் அவளைப் பார்க்கவில்லை.

அவன் கந்தனை அங்கேயே விட்டுவிட்டு, ஜீப்பை கிளப்ப, மரத்தின் பின்னால் பதுங்கி இருந்தவன், யாருக்கோ அழைப்பதை உணர்ந்து கொண்டான்.

காயத்ரியை தனியே விட்டுச் செல்வது அவனுக்கு சரியாகப் படவில்லை எனவே, “கந்தன்...” அழைத்தவன், கண்ணாடியை லேசாக கீழே இறக்கியவன், அந்த மரத்தின் பக்கம் கண் காட்டிவிட்டு கண்ணாடியை அணிந்துகொள்ள, ‘புரிந்தது’ என்பதுபோல் அவரும் பார்த்தார்.

“ஹலோ..., நான் பேங்க் போறேன்..., போதுமா..., இவரையும் கூட்டி போங்க...” பல்லைக் கடித்துக் கொண்டு அவள் உரைக்க, ‘எனக்கு கவலையில்லை...’ என்பதுபோல் தோளைக் குலுக்கிவிட்டு ஜீப்பை கிளப்பிக்கொண்டு சென்றே விட்டான்.

அவன் செய்கையை நம்ப முடியாமல் திகைத்துப் போனாள் காயத்ரி. “சார்..., உங்களுக்கு வேற வேலையே இல்லையா...? நீங்க போங்க...” அவள் சொல்ல, ‘எனக்கு காது கேட்காது...’ என்பதுபோல் கந்தன் அசையாமல் நின்றுகொண்டார்.

“ச்சே..., அவர் கூட சேர்ந்தாலே இப்படி ஆயிடுவீங்களா? இன்னைக்கு நான் எங்கேயும் போகலை போதுமா...?” காலை பலமாக உதறிவிட்டு கல்லூரிக்குள் சென்று மறைந்தாள். ஆனால், அங்கே இருந்து விலகாமல் இருந்தார் கந்தன். அந்த கல்லூரிக்கு காம்பவுண்ட் வால் அனைத்தும் அதிக உயரம் என்பதால், அவள் வேறு வழியாக வெளியே செல்வாள் என அவர் நினைக்கவில்லை.

இன், அவுட் இரண்டு ‘கேட்’டும் முன் பக்கமே இருக்க, தன்னைத் தாண்டி போக முடியாது என்பதுபோல், எதிரில் இருந்த டீக்கடையில் சென்று அமர்ந்து கொண்டார். பார்வை அந்த மரத்தின் பின்னால் இருந்தவனையும் கண்காணித்தது.

பிரம்மா இங்கே நிற்கச் சொன்னதற்காக அவர் துளியும் வருந்தவில்லை. மாறாக, அவனுக்கு சின்ன சந்தேகமாவது இல்லாமல், இங்கே தன்னை இருக்க சொல்லியிருக்க மாட்டான் என உறுதியாக நம்பினார்.

மதிய உணவு இடைவேளையில் வெளியே செல்லலாம் என எண்ணி வெளியே வந்தவள், கந்தன் டீக்கடையில் அமர்ந்து தன்னையே பார்ப்பதை உணர்ந்து, அப்படியே திரும்பிப் போய்விட்டாள்.

அங்கே இருந்தது கந்தன் மட்டுமல்ல..., அந்த மரத்தின் பின்னால் இருந்த ஆசாமியும், “டேய்..., அந்த எஸ்பி வந்து காரியத்தையே கெடுத்துட்டான்டா. நான் இங்கேயே தான் இருக்கேன். ஒரு வேளை, அந்த கான்ஸ்டபிளைத் தாண்டி அவ போய்ட்டா..., நாம அவளை மிஸ் பண்ணிடக் கூடாது...” உரைத்தவன் அலைபேசியை பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்.

காயத்ரி வெளியே வர முயல்கையில் அவன் பரபரப்பாவதும், அவள் உள்ளே சென்றவுடன் கடுப்பாவதுமாக, மரத்தின் பின்னால் இருந்தவனது செயல்களை கவனித்துக் கொண்டே இருந்தார் கந்தன்.

மதியம் மூன்றுமணிக்கு மேலே..., இதற்குமேல் அவள் வெளியே செல்ல மாட்டாள் என உணர்ந்தவன் போன்று மற்றவன் கிளம்பிச் செல்ல, உடனே பிரம்மாவுக்கு அழைத்தார் கந்தன்.

“சொல்லுங்க கந்தன்...”.

“சார்..., அவன் கிளம்பிட்டான். காலேஜ் இன்னும் கொஞ்ச நேரத்தில் முடிஞ்சுடும். நான் கிளம்பிடவா இல்ல...” அவர் இழுக்க,

“அவங்க ஹாஸ்டல் போன பிறகு நீங்க கிளம்பி வாங்க...” உரைத்தவன், அலைபேசியை உருட்டியவாறே மீசையை முறுக்கினான்.

‘அப்போ அவனுக்கு அவ உயிர் வேண்டாம்..., அவ கிட்டே இருந்து டீட்டெயில் வேணும். அது கிடைத்த பிறகு என்ன செய்வான்? அவளுக்கு அவனால் ஆபத்து வருமா? அவனைப் பார்த்தால் சரியாகவும் தோன்றவில்லையே..., ஏதாவது செய்தே ஆகவேண்டும்...’ எண்ணிக் கொண்டான்.

அதே நேரம்..., பெரும் தயக்க நடையோடு எஸ்பி அலுவலகத்துக்குள் நுழைந்தாள் நிவேதா. திரைப்படங்களில் போலீசைப் பற்றி பார்த்து, பார்த்து, காக்கி உடையைக் கண்டாலே அவளுக்கு அலர்ஜிதான்.

ஆனால்..., அவளது அண்ணா பிரம்மாவைப் பார்க்க பெரும் ஆவல் கொண்டிருந்தாள். அதைவிட தாயைப் பற்றி அவனிடம் பேசியாக வேண்டும்..., தாயின் அழுகையை நிறுத்த வேண்டும் என்பது மட்டுமே அவளது லட்சியமாக இருந்தது.

அதைவிட தன்னை அவன் பார்க்க விரும்புவானா? என்னைப்பற்றி தெரியுமா? மனம் தவித்தது. அங்கே அப்பொழுது வெளியே வந்த யாழினியைப் பார்த்தவள், “மேம்..., பிரம்மா சார் இருக்காரா...? எனக்கு அவரைப் பாக்கணும்...” சற்று பயத்தோடு கேட்டாள்.

“வாம்மா..., எதுக்காக அவரைப் பாக்கணும்...?” அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

“அதை அவர்கிட்டேதான் சொல்லணும்...” மேலும் பல விதங்களில் கேட்டும், ‘எனக்கு அவரைப் பாக்கணும்...’ என்பதையே மாற்றி மாற்றிச் சொல்ல, வேறு வழியின்றி அவனைத் தேடிச் சென்றாள் யாழினி.

‘அவரைப் பார்க்க முடியாது’ என, பிரம்மாவின் முடிவை அவள் எடுக்க முடியாது. தப்பித்தவறி அவனுக்கு தெரிய வந்தால், தன்னை கொன்று போட்டாலும் போட்டு விடுவான். எனவே, அவனது அறைக் கதவை தட்டிய யாழினி...,

“சார்..., நிவேதான்னு ஒரு சின்னப்பொண்ணு உங்களை பாக்கணும்னு அடம் பிடித்து உக்காந்து இருக்கா. என்ன

விஷயம்னு கேட்டதுக்கும் பதில் சொல்ல மாட்டேங்கறா...?” கிட்டத்தட்ட கைகளை பிசைந்தவாறு உரைத்தாள்.

‘இதைச் சொல்லவா நீயெல்லாம் இங்கே இருக்கிறாய்...?’ எனக் கேட்டு சாடப் போகிறான்..., அவளுக்கு உதறலாகத்தான் இருந்தது. இதற்கு முன்னர் எத்தனை முறை அவனிடம் இப்படியான பேச்சுக்களை கேட்டிருக்கிறாள், நிச்சயம் உதறலாகத்தான் அவன் முன்னால் நின்றிருந்தாள்.

அவனோ..., ‘அனுப்பு...’ என்பதுபோல் கையை அசைக்க, தனக்கு ஏற்பட்ட பெரும் அதிர்ச்சியை அப்படியே நெருப்பை விழுங்குவதுபோல் விழுங்கிவிட்டு, அங்கிருந்து வேகமாக வெளியேறினாள். அவள் செல்லவே, ‘என்னைப் பார்த்தா பேயை பார்த்த மாதிரி பயப்படுறா’ மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

வெளியே சென்ற யாழினி, “போம்மா...” அவள் சொல்ல, தயங்கிய நடையோடு அவன் அறைக்குள் நுழைந்தாள் நிவேதா. கதவைத் திறந்தவள், இடப்பக்கம் இருந்த மேஜைக்கு முன்னர், சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த அவனைப் பார்த்து, இமைக்க கூட மறந்தாள்.

அவனை இதற்கு முன்பாக செய்தித்தாளிலும், டிவியிலும் எத்தனையோ முறை பார்த்திருக்கிறாள்தான். ஆனால், நேரில்..., இவ்வளவு அருகில்..., ஒரு இரும்பு மனிதனாகவே காட்சியளித்தான். முகத்தில் இருந்த உணர்வற்ற தன்மை..., ‘என்னை அவருக்குத் தெரியாதா?’ ஏனோ கண்கள் சட்டென கலங்கிப் போனது.

அவள் கண்கள் கலங்கியதைப் பார்த்தவன், ‘அவளே தெளியட்டும்’ என அமைதி காத்தான். அதற்கு காரணம், உள்ளத்தை எடுத்துக் காட்டும் கண்ணாடிபோல், அவள் முகத்தில் இருந்த ஆர்வமும், தன்னை அவளுக்குத் தெரியவில்லை என, நொடியில் அவள் முகம் வாடியதையும் பார்த்தவனுக்கு, என்ன செய்வது என்றே தெரியவில்லை.

‘ஹையோ..., இந்த சின்னப்பொண்ணு யார்ன்னு தெரியலையே...’ ஏனோ அவனால் அந்த நிமிடத்தின் அழுத்தத்தை தாங்க முடியவில்லை. வாயில் இருந்து சுவிங்கத்தை நிதானமாக மென்றவாறே அவளைப் பார்த்தான்.

“உங்களுக்கு என்னைத் தெரியாது..., ஆனா..., இவங்களைத் தெரியும்” உரைத்தவள், தன் தாயின் புகைப்படத்தை அவன் முன்னால் வைக்க, அதையும் அதே பார்வையில் பார்க்க, அவளுக்கு இப்பொழுது அழுகை பொங்கியது.

“இவ்வளவு பெரிய போஸ்ட்ல இருக்கீங்க..., யார் தப்பு செய்வா, யார் செய்ய மாட்டாங்க..., எல்லாம் உங்களுக்குத் தெரியாதா? விசாரிக்காமலே அவங்களுக்கு தண்டனை கொடுத்துடுவீங்களா? ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கறது என்ன அவ்வளவு பெரிய தப்பா?

“அம்மா தினமும் உங்களை நினைச்சு அழறாங்க..., கௌஷி அக்காவை கண்ணால் கூட பாக்க முடியலைன்னு அவங்க அழறப்போ..., எங்களால் எதுவுமே செய்ய முடியலை..., ஏன் இப்படி பண்றீங்க? நீங்க ஒரு வார்த்தை சொன்னால் கௌஷி அக்கா பேசுவாங்க.

“ஆனா..., நீங்க அதை செய்ய மாட்டீங்க..., போன வாரம் அக்காவை பாக்கப் போயிட்டு, அண்ணா கூட வந்தால் தான் உங்களை பாப்பேன்னு சொல்லி அவங்களை விரட்டிட்டாங்க தெரியுமா?

“எங்கே..., உங்களுக்கு தெரிந்தாலும் பேசாமல் தானே இருப்பீங்க. உங்களுக்கு மனசாட்சியே இல்லையா? ஒரே ஒரு நிமிஷம் நம்ம அம்மா ஏன் அப்படி செய்தாங்கன்னு நிதானமா யோசிங்களேன். அம்மாகிட்டே பேசுங்களேன், அதுக்குப் பிறகும் நீங்க கோபமா இருந்தால், நாங்க உங்க முன்னாடியே வரலை.

“இப்போ கூட, உங்களுக்கு என்னைத் தெரியுமான்னு எவ்வளவு ஆசையா வந்தேன் தெரியுமா? உங்களுக்கு

என்னைத் தெரியவே இல்லை. எனக்கு எப்படி இருக்கு தெரியுமா...? நான் என்னண்ணே தப்பு பண்ணேன்..., ஏன் என்கூட பேச மாட்டேங்கறீங்க...?” கேட்டுவிட்டு தேம்பி தேம்பி அழ, அவனை மீறி அவன் கண்கள் கலங்கி விட்டது.

முதல்முறையாக அந்த இரும்பு மனிதன் அசைந்தான். பட்டென தன் இருக்கையில் இருந்து எழுந்தவன், அங்கே இருந்த ஜன்னல் பக்கம் போய் நின்றுகொண்டான்.

அவள் சொன்னதில் இருந்தே..., நம்ம அம்மா..., கௌஷி பற்றி பேசியது..., அவளது அண்ணா என்ற அழைப்பு..., அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவனது கண்களும் கலங்கிவிட, வேகமாக கூலிங்கிளாசை எடுத்து அணிந்து கொண்டான்.

‘ஒரு மனுஷனோட வாழ்க்கையில் எவ்வளவு சோதனைதான் வரும்?’ அவன் நெஞ்சம் கலங்கியது. ‘ஏன் நான் அப்படி நடந்துகொண்டேன்?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டவனுக்கு விடைதான் தெரியவில்லை.

‘ஒரு சின்னப்பெண்..., தன் தாய்க்காக என் முன்னால் அமர்ந்து கேள்வி கேட்கிறாள்..., அவள் கேள்வி கேட்கும் நிலையில் நான் இருக்கிறேன்’ அவன் தொண்டைக்குழி ஏறி இறங்கியது. தன் உணர்வுகளை தொண்டைக்குழியில் புதைத்தான் மறந்தும் அவள் பக்கம் திரும்பவில்லை.

“நம்ம அம்மாவை நேர்ல பாக்கும்போதெல்லாம் திட்டறீங்களே..., அவங்க மனசு என்ன பாடு படும்னு உங்களுக்கு தெரியவே இல்லையா? இப்போ கூட, உங்களுக்கு ஆக்சிடெண்ட்ன்னு கேள்விப்பட்டு, எத்தனை நாள் சாப்பிடாமல் கிடந்தாங்க தெரியுமா?

“எங்கே உங்களை ஹாஸ்பிடல்ல வந்து பாத்து, உங்க ஹெல்த் மோசமாயிடுமோன்னு பயந்துபோய் வரலை. இல்லன்னா வந்திருப்பாங்க” அழுகையினூடே அவள் உரைக்க, அந்த வளர்ந்த குழந்தையை சமாதானம் செய்ய அவன் கைகள் பரபரத்தது. ஆனால் அதைச் செய்ய முடியாமல் திணறிப் போனான்.

“இங்கே எப்படி வந்த?” முதல் முறையாக வாய் திறந்தான். தன் இருக்கையில் வந்து அமர்ந்து அவளை ஏறிட்டான். கூலிங்கிளாசை கழட்டி டேபிள்மேல் வைத்தவன், அதற்குள் தன்னை மீட்டிருந்தான்.

“டியூஷன் போறேன்னு சொல்லிட்டு உங்களைப் பாக்க வந்திருக்கேன். உங்களைப் பாக்க வர்றேன்னா அம்மா விடவே மாட்டாங்க. அப்பா கூட ஓகே சொல்வாங்க..., ஆனா அம்மா..., நீங்க என்னை அடிச்சுடுவீங்களோன்னு அம்மாவுக்கு பயம்.

“எனக்கும் பயம்தான்..., ஆனா..., இன்னைக்கு நீங்க அடிச்சா கூட பரவாயில்லன்னு வந்துட்டேன். அம்மாகிட்டே பேசுங்கண்ணே..., அம்மா பாவம்ண்ணே..., அப்பா ரொம்ப நல்லவங்கண்ணா..., வீட்டுக்கு வாங்கண்ணா...” அவள் கெஞ்சத் துவங்கவே, அவள் வார்த்தைகள் கொடுத்த அதிர்வில் இருந்து அவனால் மீள முடியவில்லை.

‘இவளை அடிப்பதா...? அந்த அளவுக்கு முரடனா நான்...?’ மனதின் அழுத்தம் கூடியது. “அண்ணா..., இதுக்கு முன்னாடி எப்படியோ..., இனிமேல் நாம ஒண்ணா இருக்கலாம்ண்ணா..., எனக்காக கொஞ்சம் யோசிங்கண்ணா..., உங்களை அம்மா நல்லா கவனிச்சுப்பாங்கண்ணா, வீட்டுக்கு வாங்கண்ணா...” அவள் மேலும் மேலும் கெஞ்ச, அவளுக்காக அதைச் செய்தால் என்ன என்றே யோசித்து விட்டான்.

ஆனால்..., ‘நான் இவ்வளவு தூரம் பிடிவாதமாக அவர்களை தள்ளி வைத்திருந்தேன் என்றால், நிச்சயம் ஏதாவது காரணம் இருந்திருக்க வேண்டும். என்ன நடந்தது எனத் தெரியாமல், எந்த முடிவுக்கும் வர முடியாது.

‘ஒரு வேளை அப்பொழுது தெரியாத விஷயங்கள், இப்பொழுது புது விதமாக எனக்குத் தெரியவருமோ? அதற்குதான் இந்த ஞாபக மறதியா? இதை கண்டு பிடிப்போம்...’ எண்ணியவன், ஆழமாக மூச்செடுத்தான்.

“நிவேதா..., உன் வயசுக்கு நீ அதிகம் யோசிக்கற..., வீட்டுக்குப் போ...” குரல் சாதாரணமாகவே ஒலித்தது.

தான் இவ்வளவு கெஞ்சியும் அவன் மனம் மாறாதது அவளுக்கு அழுகையை அதிகரித்தது. “அப்போ நீங்க மாறவே மாட்டீங்களா? என் ப்ரண்ட்ஸ்கிட்டே எல்லாம், உங்களை என் சொந்த அண்ணான்னு சொல்லிக்கணும்னு எனக்கு எவ்வளவு ஆசையா இருக்கு தெரியுமா?” அவள் கலங்க, இதற்கு ஒரு முடிவு கண்டே ஆகவேண்டும் என தீர்மானித்தான்.

*****

# பகுதி – 12.

தன் முன்னால் இருந்த கேஸ் ஹிஸ்ட்டரியை கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தான் பிரம்மா. ஒரு வாரத்தில் ஐஜியுடனானா மீட்..., கூடவே முதலமைச்சருடனான தன் சந்திப்பு என அவனது அட்டவணை நீண்டிருக்க, அவர்களுக்கு முன்னால் தான் தெரிவிக்கப்போகும் விஷயங்கள் கச்சிதமாக இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

இந்த கேசில் முதலமைச்சர் ஆர்வமாக இருக்கிறார் எனத் தெரிந்த பிறகு, தன் பக்கம் சிறு தவறு நேர்வதைக் கூட அவன் விரும்பவில்லை.

அவன் கேசில் மூழ்கி இருக்க, அவன் அறைக்கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான் அவன். நிச்சயம் ஒரு நாற்பத்தைந்து வயதுக்கு மேல் மதிக்க முடியும். காதின் ஓரம் நரைத்திருக்க அவன் கண்களில் சிறு தீவிரம்.

‘இவன் யார்...? அறைக்கதவை தட்டிவிட்டு, நான் அனுமதிக்கும் முன்பாக எப்படி அறைக்குள் வரலாம்?’ மூளைக்குள் கேள்வி ஓட, அவனை சாதாரணமாக ஏறிட்டவன், எதுவும் சொல்லாமல் அவனைப் பார்த்திருந்தான்.

வந்தவனோ..., தானாகவே அவன் எதிரில் இருந்த இருக்கையில் அமர, இடக்கரத்தால், தன் இடது கண் புருவத்தை மெதுவாக வருடியவன், வாய் திறக்கவில்லை. வாயில் இருந்த சுவிங்கம் தானாகவே அரைபட, அதுவே அவனுக்கு கூடுதல் இறுக்கத்தை அளிப்பதாக இருந்தது.

வந்திருந்தவனோ..., தன் கையில் இருந்த இன்விட்டேஷன் ஒன்றை எடுத்து, அவன் பெயரை எழுதி அவன் கரத்தில் கொடுத்துவிட்டு, “கண்டிப்பா வந்துடுங்க...” உரைத்தவன், என் வேலை முடிந்தது என இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

‘சரி…’ என தலை அசைத்தவன், இருக்கையில் இருந்து எழுந்து, தன்னை அழுத்தமாகப் பார்த்த அவன் பார்வைக்கு அர்த்தம் என்ன எனத் தெரியாமல் குழம்பிப் போனான்.

‘இன்னும் என்ன…?’ என்பதுபோல் பிரம்மா பார்க்க, சிறு முறைப்போடு வெளியேறினான் புதியவன். அவன் செல்லவே…, கையில் இருந்த அழைப்பிதழை மேஜைமேல் வைத்தவன், மீண்டும் கேசில் கவனம் பதிக்க முயன்றான். சட்டென புதியவனின் கோப முகம் அவனை தொல்லை செய்ய, அவன் கொடுத்த அழைப்பிதழை வேகமாக பிரித்து பார்த்தான்.

மணமகள், மணமகன் பெயர்களை விட, தங்கள் நல்வரவை விரும்பும், கோதண்டம்…, சிட்டி கமிஷனர்…, என்ற பெயரில் ஆணியடித்தாற்போல் நின்று போனது.

‘ஐயோ…, வந்தவர் கமிஷ்னரா…? அதனால்தான் அப்படிப் பார்த்தாரா? அனைத்திலும் கவனம் செலுத்திய நான் இதை எப்படி கவனிக்காமல் போனேன்? இப்போ என்ன செய்ய…?’ படபடவென மனதுக்குள் ஒரு பிரளயம். ‘ஹையோ…, எதுவும் தெரியாமல், புரியாமல், இதில் இருந்து எனக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும்…’ அந்த நிமிடம் மனம் அழுத்தத்தில் திணறியது.

‘இதை யாரிடம் சொல்ல…?’ எண்ணியவனுக்கு உடனே நினைவிற்கு வந்தவன் முகேஷ் தான். வேகமாக தன் அலைபேசியை எடுத்தவன் அவனுக்கு அழைக்க, அவன் அழைப்பை ஏற்றவன், “சொல்லு பிரம்மா…, என்ன இந்த நேரம் போன் பண்ணியிருக்க…?” சற்று படபடப்பாய் கேட்டான்.

“முகேஷ்…, இங்கே கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கமிஷ்னர் வந்திருந்தார்…” என உரைத்து, தன் நடத்தை, அவரது கோபம் என அவனிடம் விளக்க, அந்தப் பக்கம் ஒரு பெரும் அமைதி நிலவியது.

“முகேஷ்…” அவனைக் கலைக்க,

“பிரம்மா..., ச்சே..., இதை எப்படி மறந்தேன்?” கேட்டவன், தன் தலையிலேயே லேசாக தட்டிக் கொண்டான்.

“மேல் அதிகாரியை பார்க்கும் பொழுது சலூட் செய்யணும் என்பது விதி. நீ அதைச் செய்யவில்லை என்பதால் அவர் அப்படி பார்த்திருப்பார். உனக்கு ஆக்சிடெண்ட் ஆனது அவருக்குத் தெரியும். சோ..., நடவடிக்கை எடுக்க வாய்ப்பு கம்மிதான். சில நேரம் கோபம் காட்டலாம்..., முதல் வேலையா, உன் மேலதிகாரி எல்லாம், யார் யார் என்பதை தெரிஞ்சுக்கோ.

“இல்ல..., நான் உடனே உனக்கு மெயில் பண்றேன். நான் இதை முதலிலேயே செய்திருக்கணும். கௌஷி நினைப்பில் அப்போ எதுவுமே தோணலை. ஒரு வேளை பிறகு அவர் ஏதாவது கேட்டால் சம்மாளி..., புரியுதா...?” அவன் சொன்ன விவரங்களை முதல் வேலையாக மெயில் அனுப்பியவன், மேலே ஏதாவது தகவல் வேண்டும் என்றால் கேட்கச் சொல்லிவிட்டு அலைபேசியை வைத்தான்.

ஒரு நிமிடம் அமைதியாக இருந்தவன்..., தன் தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டான். தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்கள்..., கேஸ், உயர் அதிகாரிகளை தெரியததாது..., நிவேதாவின் வருகை, காயத்ரியின் கோபம், தன்னை கொல்ல வருபவர்களின் மோட்டிவ்..., இப்படி எதுவும் தெரியாமல், கண்ணைக் கட்டி காட்டுக்குள் விட்ட உணர்வு.

யாரிடமும் தன் மனதில் இருப்பதை வெளியிட முடியாத துன்பம்..., நிச்சயம் பயித்தியம் பிடிக்காதது ஒன்றுதான் குறை. அவனுக்குள்ளே நடக்கும் போராட்டங்களை மற்றவருக்குத் தெரியாமல் அவன் மறைக்கும் முயற்சியில், அவன் மனதின் அழுத்தம் அதிகரித்தது என்றே சொல்லலாம்.

இதில் இருந்து உடனே சிறு விடுதலை வேண்டும் அவன் எண்ணியவுடன், அவனுக்கு உடனே காயத்ரியை பார்க்க வேண்டும்போல் இருந்தது. ஏனோ அவளைப் பற்றி நினைக்கும் பொழுதுதான், தான் அமைதியாக இருப்பது போன்ற எண்ணம்.

அவளை மட்டுமே மனதுக்கு நெருக்கமாக அவனால் உணர முடிந்தது. தன் தங்கை, நண்பர்கள்..., கொலீக்..., யாரோடும் மனம் விட்டு பேச முடியாத ஒரு இறுக்கம். அவன் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால், அவர்கள் நடந்துகொள்ளும் முறையே வேறாக இருக்கும்.

அதுவே பிரம்மாவாக இருக்கப்போய்..., அவன் இவ்வளவு தூரம் சம்மாளிக்கின்றான். காயத்ரியை பார்க்கப் போகலாம் என்றாலோ, வேலை அவனை அழுத்தியது. நாட்கள் விரைய, கேஸ் பற்றிய கேள்விகள் வேறு அவனை துரத்த, ஒரு அமைதியற்ற நிலையை உணர்ந்தான்.

உடனே காயத்ரியை திருமணம் செய்துகொள்ள வேண்டும். அவள் தன் அருகில் இருந்தால், இந்தமாதிரி அழுத்தங்கள் அனைத்தும் தன்னைத் தீண்டாது என இப்பொழுதெல்லாம் தோன்றத் துவங்கி விட்டது.

அவளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்க, அவன் மேஜைமேல் இருந்த தொலைபேசி ஒலித்து அவனைக் கலைத்தது.

“பிரம்மா...” அவன் குரல் ஆளுமையாய் ஒலிக்க, தனிமையில் எவ்வளவு துன்பம், அழுத்தத்தை உணர்ந்தாலும், அதை தன் வேலையில் கலக்காத அவனது ஆளுமை..., நிச்சயம் பிரம்மா சரித்திரமாகப் போறவன்தான்.

“சார்..., உங்களைத் தேடி காயத்ரி, இந்திரான்னு ரெண்டுபேர் வந்திருக்காங்க” அட்டெண்டர் குரல் கொடுக்கவே, அவன் மனதுக்குள் பெரும் உற்சாக ஊற்று.

“அனுப்புங்க...” அவன் தொலைபேசியை வைத்துவிட்டு, அவர்களது வருகைக்காய் காத்திருந்தான்.

“மே ஐ கம் இன் சார்...” இந்திரா கேட்டவாறே அவன் அறைக்கதவை திறந்துகொண்டு உள்ளே வர, அவன் பார்வையோ, அவள் பின்னால் வந்த காயத்ரியிடமே நிலைத்தது.

அவன் பார்வையை உணர்ந்தவள், கோபமாக அவனை முறைத்தவாறே, “இதுக்குத்தான் நான் இங்கே வர மாட்டேன்னு சொன்னேன்..., எப்படிப் பாக்கறான் பார்...” கடித்த பற்களுக்கிடையில் தோழியை குதற, கெஞ்சலாக அவளை ஏறிட்டாள்.

“ஏய் பிளீஸ்டி..., நீ இல்லன்னா நான் இதுக்குள்ளே நுழையவே முடியாது...” அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“ஏன்..., இங்க என்ன அல்ஷேஷனை அவுத்தா விட்டிருக்காங்க? நுழைய முடியாமல் இருக்க?” கடுப்பானாள்.

“நீ வர்றது ஒரு தைரியம்டி..., பிளீஸ்...” மேலும் கெஞ்சவே,

‘உனக்காக...’ என்பதுபோல் அவளைப் பார்த்தவள், அவனைப் பார்த்து முறைத்தாள். அவள் முறைக்கவே, சட்டென ஒற்றைக் கண் சிமிட்டி அவளை அதிர வைத்தவன், இந்திரா அவனைப் பார்க்கும் பொழுது, முகத்தை சாதாரணமாக ஆக்கிக் கொண்டான்.

‘பொறுக்கி..., என்ன வேலை பாக்கறான் பார்..., அவன் டிரஸ்க்கும், அவன் செய்கைக்கும் சம்பந்தமே இல்லை. இவன்லாம் எப்படித்தான் ஐபிஎஸ் படித்தானோ...?’ மனதுக்குள் பொரிந்தவள், வேகமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

தன் முன்னால் இருந்த இருக்கையை காட்டியவன், அவர்கள் அமரவே, ‘சொல்லுங்க...’ என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தான். சுவிங்கத்தை வெகு நிதானமாக எடுத்து வாயில் போட்டுக் கொண்டவன், மெல்லியதாக அதை மெல்ல, அவளுக்கோ திகுதிகுவென எரிந்தது.

‘சரியான மாட்டுக்கு பொறந்தவனா இருப்பான் போல, எப்போ பார் அசை போட்டுக்கிட்டு’ மனதுக்குள் கரித்து கொட்டினாள்.

இந்திரா தோழியைப் பார்க்க, "சொல்லித் தொலைடி, என்னத்துக்கு என் மூஞ்சியை பாக்கற..." வள்ளென விழுந்தாள்.

"அட..., எதுக்கு அவங்களை கடிக்கற, விடு..., அவங்களே சொல்வாங்க. நீங்க சொல்லுங்க..." அவள் தன்னைப் பார்க்க மறுக்கவே, அவளை சீண்டத் தோன்றியது அவனுக்கு.

"அவ, இவன்னு பேசின..., பேசுனீங்க..., பிறகு நானும் அதே மாதிரி பேச வேண்டி இருக்கும்..." அவனை ஒருமையில் அழைத்த பொழுது அவன் கண்களில் நொடியில் துளித்த கோபம், அந்த நேரத்திலும் அவளைத் தாக்க, எகிறினாள்.

"சும்மா இருடி..." அவள் கரத்தை அழுத்தினாள் இந்திரா.

இந்திரா அப்பொழுதும் எப்படிச் சொல்ல எனத் தடுமாற, "ஏதாவது இருந்தால் தானே சொல்வாங்க..., என்னைப் பாக்கணும்னு ஆசைப்பட்டு, நீ அவங்களை இழுத்துட்டு வந்துட்டு..., இப்போ..." கண்களில் விஷமம் சொட்ட, மீசை நுனியை அவன் முறுக்கிவிட, அவள் முகமோ கோபத்தில் சிவந்து போனது.

"என்னது..., நான்..., நான்..., ஏய் எந்திரிடி..., இதுக்கு மேலே என்னால் ஒரு நிமிஷம் இங்கே இருக்க முடியாது..." இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள் காயத்ரி.

"உக்காருடி..." அவளை அடக்கியவள், "சார்..." அவனை பரிதாபமாக ஏறிட்டாள்.

"அதான் வந்த வேலை முடிந்ததே..., கிளம்ப வேண்டியதுதான்..." சிரிப்பை வாய்க்குள் அடக்கி அவன் உரைக்க, காயத்ரி நெருப்பாய் மாற, இந்திரா திணறிப் போனாள்.

"எது...?" ஆத்திரமாக கேட்டவள், அவனை கொலைவெறியில் முறைக்க, "அதான்..., என்னைப் பாக்க வர இது ஒரு சாக்கு..., இப்போ பாத்தாச்சு..., பிறகு என்ன..., கிளம்பிட்ட..." அவன் வெகு அசால்ட்டாக தோளைக் குலுக்க,

அப்படியே ஒரு கத்தியை எடுத்து அவனை குத்தினால் என்ன என்று முறைத்தாள்.

எண்ணியதோடு மட்டுமல்லாமல்..., மேஜைமேல் இருந்த பேனாவை எடுத்தவள், மூடியை உருவி எறிந்துவிட்டு, “இன்னும் ஒரு வார்த்தை இப்படி பேசினீங்க..., இதை அப்படியே தொண்டையில் இறக்கிடுவேன்...” இப்பொழுது அவள் கண்களில் இருந்தது உண்மை வன்மமே.

அதை குறித்துக் கொண்டவன், உள்ளுக்குள் பெரும் திகைப்பை உணர்ந்தான். ‘இது பொய் கோபமில்லை...’ அவன் மனம் அழுத்தமாய் பதிய வைத்தது.

இடையில் இந்திராதான் திணறித் திண்டாடிப் போனாள். அவன் முன்னால் தோழியை கண்டிக்கவும் முடியாமல், அவனிடம் ஒரு அளவுக்குமேல் பேசவும் முடியாமல் விழி பிதுங்கினாள்.

அவன் முகம் பட்டென ஒரு இறுக்கத்துக்குப் போக, “எஸ்பி ஆபீஸ்குள்ளே வந்து, அவரையே ஆயுதம் காட்டி மிரட்டுறியே..., இதுக்கு என்ன தண்டனை தெரியுமா?” பட்டென கரத்தை மேஜைமேல் தட்டி, அழுத்தமாக வினவியவனது பாவனையில், இந்திரா இருக்கையில் இருந்தே எழுந்துவிட, காயத்ரியின் கையில் இருந்த பேனா நழுவி கீழே விழுந்தது.

“சார்..., எனக்குதான்..., நான்தான் ஒரு கம்பிளெயின்ட் கொடுக்கணும்னு, அவளை போர்ஸ் பண்ணி கூட்டி வந்தேன். அவ வர மாட்டேன்னுதான் சொன்னா...” இந்திராவின் குரல் இப்பொழுது நடுங்கியது.

நொடியில் தன் இறுக்கத்தை சற்று தளர்த்தியவன், “என்ன கம்ப்ளெயின்ட்” தன் மீசையை முறுக்கியவன், இப்பொழுது பார்வையை இந்திராவின்மேல் நிலைக்க விட்டான்.

“சார்..., எங்க ஏரியாவில்...” அவள் துவங்கவே..., ‘உட்கார்...’ என்பதுபோல் கையை அசைக்க, அவள் காயத்ரியையும் சேர்த்து அமர வைத்தாள்.

காயத்ரியின் முகமோ இன்னும் சுட்ட இரும்புக் கம்பியாக தகிக்க, மனமோ, ‘உன்னை..., உன் திமிரை அடக்காமல் விட மாட்டேண்டா..., உனக்கு இருக்கு...’ கறுவிக் கொண்டாள்.

“புது வண்டி, வண்டியின் பேட்டரி..., வண்டியில் இருக்கும் பெட்ரோல்..., இப்படி எல்லாம் அடிக்கடி காணாமல் போய்டுது. அதிலும் நைட் புல் டேன்க் போட்ட பெட்ரோல், காலையில் கால் டேன்க் கூட இருக்க மாட்டேங்குது.

“அந்த ஏரியா போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளெயின்ட் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கலை. மறுபடியும் கம்ப்ளெயின்ட் பண்ணா, வண்டி இருக்குதானே..., போங்கன்னு ரொம்ப அசால்ட்டா சொல்லி அனுப்பிடறாங்க, அதான்..., என்னைக்கவதுன்னா பரவாயில்லை, தினமும் அது நடந்தால்..., பொறுக்க முடியலை..., அவங்கதான் கண்டுக்கலை, உங்ககிட்டே சொன்னால், நீங்க ஏதாவது ஆக்ஷன் எடுப்பீங்கன்னுதான் வந்தேன்.

“தனியா வர தயக்கமா இருந்தது..., அதான் இவளையும் கூட்டி வந்தேன்” படபடவென உரைக்க, அவள் சொன்னதை உள்வாங்கிக் கொண்டான்.

“நீங்க போங்க..., நான் பாத்துக்கறேன்...” அவன் குரலில் இருந்த பாவத்தில், இதற்குமேல் அவனிடம் எதுவும் பேச முடியாது என உரைக்க, பட்டென வாயை மூடிக் கொண்டாள்.

“சார்..., அட்ரஸ்...” இந்திரா திணற, அவன் பார்வையில் அவள் கைகள் நடுங்கவே துவங்கிவிட்டது.

“அப்போ நாங்க...” இருக்கையில் இருந்து எழுந்தவள் முன்னால் நடக்க, அவளைப் பின்தொடர்ந்தாள் காயத்ரி. அவர்கள் பின்னால் எழுந்தவன், வாசல் வரை வர, நடுவில் இருந்த தள்ளு கதவைத் திறந்துகொண்டு இந்திரா வெளியேற, காயத்ரி வெளியேறும் முன்னர், பட்டென அவளுக்கு குறுக்காக கை வைத்து தடுத்தான்.

காயத்ரி அவனை முறைக்க, அதைக் கொஞ்சம் கூட கண்டுகொள்ளாமல், “வெள்ளிக்கிழமை தாலி வாங்கப்

போகணும்..., ரெடியா இரு...” அவன் சொல்ல, இந்த ஒரு வாரமாக அவனது தொல்லை இல்லாமல் போகவே, அவன் தன்னை மிரட்டத்தான் சொல்லியிருக்கிறான் என எண்ணியிருந்தவளுக்கு, இப்பொழுது அவன் தாலி வாங்கப் போகவேண்டும் என்று சொல்லவே, தேகம் எரிந்தது.

“நான்தான் அன்னைக்கே என் முடிவை சொல்லிட்டேனே...” அவன் கரத்தை தள்ளிவிட்டுச் செல்லும் தைரியம் இல்லாமல், கோபமாக கத்தினாள்.

“ம்ச்..., நான் கிட்ட தானே இருக்கேன்..., பிறகு ஏன் கத்துற?” கேட்டவன், அவளை நெருங்கி, “உன்னை நிறைய மாத்த வேண்டி இருக்கும் போல” குரல் சற்று கனிய, பார்வையை அவள்மேல் நிலைக்கவிட்டு முனகினான். வாயில் இருந்த சுவிங்கத்தை மென்று, சின்னதாக குமிழியிட, அது உடைத்து சிதற, முகத்தை சுழித்தாள்.

அவன் கையை குறுக்கே வைத்து மறித்ததே சிறு பயமென்றால், அவன் நெருங்க, இன்னும் உள்ளுக்குள் உதறல் எடுத்தது. அதென்னவோ அவனைப் பற்றி கேள்விப்பட்டதில் இருந்து, அவன்மேல் அவ்வளவாக நல்லெண்ணம் இருந்தது இல்லை.

முன்பே அவனது பேட்டி..., குற்றவாளிகள்மேல் அவன் எடுக்கும் நடவடிக்கைகள், அவனது கூர்மையான பார்வை..., அனைத்துமாக சேர்ந்து, அவன்மேல் சிறு பயத்தை முன்பே ஏற்படுத்தி இருந்தது. எப்பொழுது அவளது அண்ணனை என்கவுண்டர் என்ற பெயரில் கொன்னானோ..., அதன் பிறகு, கோபமாக உரு மாறி விட்டது.

அவளது கண்கள் முதல் முறையாக கோபத்தை மீறி, சிறு பயத்தை வெளிப்படுத்த, அவளது கோபத்தை தாங்கி நிற்க முடிந்த அவனால், அவளது பயத்தை தாங்க முடியவில்லை.

“நான் போகணும்...” அதை உரைக்கும் முன்பே, வார்த்தை தந்தியடித்தது.

கிட்டத்தட்ட அவன் தாடை அளவுக்கே வளர்ந்திருந்தாள். அவன் அவளை சற்று குனிந்து பார்த்திருக்க, அவளோ..., சற்று அண்ணாந்து பார்த்திருந்தாள்.

“நீ என்னவோ ரொம்ப தைரியசாலின்னு நினைத்தேன்..., இப்படி நடுங்குது...” சீண்டலாகக் கேட்டவன், அவளது கரத்தை பார்க்க, சுடிதார் துப்பட்டாவை அழுத்தமாக பற்றியிருந்த அவளது கரம் அப்பொழுது நடுங்கிக் கொண்டுதான் இருந்தது.

அவளை நெருங்கி நின்றவன், அரையடி இடைவெளிக்கு மேல் தள்ளியே நின்றாலும், அவனது அகன்ற தோளும்..., அசாத்திய வளர்த்தியும், கத்தி போன்ற பார்வையும், முறுக்கிய மீசையும்..., அவனது ஒரு முரட்டுப் பிடிக்கு தான் இருக்க மாட்டோம்..., அதை எண்ண..., ஹப்பா..., அவளுக்கு சட்டென மூச்சடைத்தது.

இழுத்த மூச்சை அவள் வெளியிட மறக்க..., அவள் கண்கள் மேல்நோக்கி போய், மயக்கம் போடும் நிலைக்குப் போக, “ஹேய்..., மூச்சு விடு...” சட்டென அவள் முகத்தில் பலமாக ஊத, அப்பொழுதுதான் வேகமாக மூச்சுவிட்டாள். அவன் ஊதியதால் எழுந்த சுவிங்கத்தின் வாசனை, நாசியில் நுழைந்து மூளையில் பதிவானது.

வேக வேகமாக அவள் மூச்சு வாங்க, சில நொடிகள் மூச்சடக்கி இருந்திருக்கவே..., சற்று திணறிப் போனாள். அந்த நேரத்திலும், அவன் நுனி விரல் கூட தன்னைத் தீண்டாத விதத்தை அவள் புலன்கள் கவனித்தது ஏன் என அவளுக்குப் புரியவே இல்லை.

“அழகுல மயங்குறதுன்னு கேள்விப் பட்டிருக்கேன்..., அது இதுதானா?” ஒற்றைப் புருவம் உயர்த்தி, மீசையை முறுக்க, வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டாள்.

“நினைப்புதான்...” அப்பொழுதும் அவனுக்கு பதில் கொடுக்க மறக்கவில்லை.

அவனது கண்கள் பளிச்சிட..., “எனக்கு வீட்டில் போர் அடிக்கவே செய்யாது...” அவளை நெருங்கி நின்றதால்,

வார்த்தைகள் கிசுகிசுப்பாகவே வெளிவந்தது.

அவனைப் பார்க்கக் கூடாது என எண்ணியிருந்ததையும் மீறி, அவனை நிமிர்ந்து பார்க்க, “உனக்கு இந்த மூக்குத்தி ரொம்ப அழகா இருக்கு...” உரைத்தவன், அதைத் தீண்ட தன் கைகளை உயர்த்த,

பின்னால் நகரவும் முடியாமல், சைடில் போகவும் முடியாமல், கண்கள் அதிர்ச்சியில் விரிய, கால் கட்டை விரலில் நின்று, சுவரோடு பல்லிபோல் ஒட்டிக்கொள்ள, சட்டென தன் கரத்தை இறக்கினான்.

“என்னைத் தொடுற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க ஆமா...” ஆசுவாசமாக மூச்சுவிட்டவள் முனக,

“தொட்டா என்ன பண்ணுவியாம்...?” வில்லத்தனமாக கேட்டாலும், கரங்களை தன் பேண்ட் பாக்கெட்டுக்குள் திணித்துக் கொள்ள, அவளுக்கு பெரும் நிம்மதி.

“தொட்ட கையை உடைச்சுடுவேன். எனக்கு கராத்தே எல்லாம் தெரியும்...” ஜம்பமாக உரைக்க, பக்கன சிரித்துவிட்டான்.

“என்ன இளிப்பு...?” அவள் கடுப்பாக, “ஹையோ..., எனக்கு பயமா இருக்கே” அவன் போலியாக பதற, தன் கராத்தே ஸ்டையிலை அவனிடம் காட்டினால் என்ன என்று ஒரு நொடி சித்தித்தவள், இருக்கும் இடம் கருதி தன்னை அடக்கிக் கொண்டாள்.

அவனை முறைத்துப் பார்க்க, “ம்..., இது..., இந்த பார்வைதான் உனக்கு சரியா இருக்கு. நீ பயப்பட்டால் அது நல்லாவே இல்லை...” அவன் குரல் கனிவில் சிதற, பார்வையோ காதலில் பொங்கி வழிந்தது.

‘ஹையோ ஆண்டவா..., இவன் வில்லத்தனமா பேசினாலே பரவாயில்லை’ வேகமாக வேண்டுதலை வைத்தது அவள் இதயம். கூடவே, பார்வையை திருப்பிக்கொள் என மனம் கூக்குரலிட, தன் பார்வையை கவ்விக்கொண்ட அவனது

கூரிய விழிகளில் இருந்து, தன் பார்வையை பிரிக்கவே அவளால் முடியவில்லை.

அதைவிட, கத்தி போன்ற அவனது பார்வை..., அருகே பார்க்கையில், தன்னை உள்ளிழுக்கும் சுழலாக அவளை சுருட்டிக் கொண்டது. அவன் பார்வை தன் மூக்குத்தியின்மேல் நிலைத்திருக்க, மூக்கு நுனி கூசியது. அவனுக்கோ, அவள் கோபம் தாண்டி..., தன்னை கவனிக்க வைக்க வேண்டும் என்ற வேகம்.

தன்மேல் கோபம் இருந்தாலும் பரவாயில்லை, வெறுத்துவிடக் கூடாது என்ற வேண்டுதல்..., தன் காதலை கண்களில் வழியவிட்டான். அவனைப் பொறுத்த வரை, அவளை உயிராய் நேசிக்கத் துவங்கி விட்டான். இந்த உலகில் தான் நேசிக்கும் ஒரே ஜீவன் என்ற எண்ணம்..

அது எப்படி வந்தது? எதனால் வந்தது? என்பதைப் பற்றியெல்லாம் அவன் சிந்திக்கத் தயாராக இருக்கவில்லை. இந்த உலகத்திலேயே அவளிடம் மட்டுமே தன்னால் இயல்பாக இருக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் பார்வையை கவ்விக் கொண்டவளுக்கு, அந்த நிமிடம், அவன்மேல் கொலைவெறியில் இருக்கிறோம் என்பதெல்லாம் அவள் நினைவில் இல்லை.

சில நொடிகள் உறைந்துபோன நிலையில் கடக்க, வெளியே கேட்ட சிறு பேச்சு சத்தம் அவனை முதலில் கலைத்தது. “காயு..., இப்போ போ..., வெள்ளிக்கிழமை ஞாபகம் வச்சுக்கோ...” பேச்சு அவ்வளவுதான் என்பதுபோல், அந்த தள்ளு கதவைத் திறக்க, அவ்வளவு நேரமாக மறைந்திருந்த அவளது கோபம் கிளர்ந்தது.

“என்னை அப்படி கூப்பிடாதீங்க..., எனக்குப் பிடிக்காது...” அவள் வெடிக்க,

“மீதியை வெள்ளிக்கிழமை கண்டினியூ பண்ணலாம்...” அடிக்குரலில் அவளிடம் உரைத்தவன், “யாழினி..., வாங்க...”

அவன் குரல் கொடுக்கவே, யாழினி அவன் முன்பாக வந்து நின்றாள்.

யாழினியின் முன்னால் எதுவும் பேச முடியாமல் அவள் நகர்ந்துவிட, யாழினியின் பார்வை சிறு சந்தேகமும், கோபமுமாக அவனை நோக்கியது. அவளது கோபம் புரிய, “என் வுட்பி...” அவன் அவ்வளவுதான் உரைக்க, யாழினி, தான் கேட்டதை நம்ப முடியாமல் உறைந்தாள்.

அதே நேரம்..., இரண்டடி நடந்த காயத்ரி அவனைத் திரும்பி முறைக்க, இதழசைவில் அவன் ஒரு முத்தத்தை அனுப்ப, பேயடித்த உணர்வில் வெலவெலத்து, அங்கிருந்து ஓடியே போனாள். அதைப் பார்த்தவன், பொங்கிய சிரிப்பை, யாழினியைக் கண்டு மறைத்தான்.

யாழினி நம்ப முடியாமல் அவனை வெறிக்க, ‘இவ வேற...’ மனதுக்குள் காய்ந்தவன், “என்ன விஷயம்?” அவளைக் கலைத்தான்.

“சார்..., அன்னைக்கு நீங்க கூட்டி வந்த ரெண்டு அக்கியூஸ்டும் இன்னும் நினைவுக்கே திரும்பலை. அவங்களை செக் பண்ற எல்லா டாக்டர்ஸும் அவங்க நார்மலா இருப்பதாகத்தான் சொல்றாங்க..., ஆனா..., அவங்களுக்கு ஏன் நினைவு திரும்பலைன்னு அவங்களுக்குத் தெரியலை.

“அதில் ஒரே ஒரு டாக்டர் மட்டும்..., இது ஏதோ நாட்டு அடி மாதிரி இருக்குன்னு சொன்னாராம்..., லைக்..., வர்மக்கலை...” உரைத்தவள், நிச்சயம் அது உன் வேலைதான் எனத் தெரியும் என பார்வையால் உரைக்க, தன் இடக்கை நடுவிரலால், இடது புருவத்தை வருடியவாறு கேட்டுக் கொண்டிருந்தான்.

“போய் பாக்கலாம்...” உரைத்தவன், முன்னால் நடக்க, அவன் பின்னால் விரைந்தாள்.

ஜீப் சாலையில் பயணிக்க, ‘அன்னைக்கு ஒரு வேகத்தில் பண்ணிட்டேன். அவங்களை அடிக்கத் தெரிந்த எனக்கு, நிச்சயம் அவங்களை சுய உணர்வுக்கு கொண்டு வரவும்

தெரிந்திருக்கும்..., தெரியும்னுதான் நினைக்கறேன்' தனக்குள் உரைத்துக் கொண்டான்.

அரசு மருத்துவமனைக்கே உரிய நெடியும்..., ஆங்காங்கே சில பிளாக்கும்..., ஏக்கர் கணக்கில் பரப்புமாக அந்த மருத்துவமனை இருக்க, பிரம்மா வேக நடையில் நடக்க, அவனது நடைக்கு ஈடுகொடுக்க, கிட்டத்தட்ட ஓடிக் கொண்டிருந்தாள் யாழினி.

இரண்டாம் மாடியில், அந்த அறைக்குள் இருவரும் ஆளுக்கொரு படுக்கையில் இருக்க, ஒரு நொடி அவர்களை இமைக்காமல் வெறித்தவன், அங்கே இருந்த செவிலியை பார்வையால் வெளியே போகச் சொல்ல, அடுத்த நிமிடம் அவள் வெளியேறினாள்.

தன் பூட்ஸ் காலால், படுத்திருந்தவனின் வலது உள்ளங்காலில் ஓங்கி ஒரு உதை விட, அடுத்த நொடி, "ஹ்..., ஆ..." ஒரு அலறலில் கண் விழித்தான். அதேபோல் மற்றவனையும் உதைக்க, அவனும் கண் விழிக்கவே, அடுத்த நொடி, அவன் பின் தலையில் மின்னல் வெடிக்கும் உணர்வு.

'விக்டர்..., இந்தப் பக்கம்...', 'ரன்...', 'சிக்காதே...' பலவிதமான குரல்கள், இருவர் கீழே விழுந்து கிடக்க, தனக்கு முன்னால், முகத்தில் கர்ச்சீப் கட்டிய இருவர் ஓடிக் கொண்டிருக்க, அவர்களை மூச்சு வாங்க இருட்டுக்குள் விரட்டிக் கொண்டிருந்தான் பிரம்மா.

*****

# பகுதி – 13.

பிரம்மா எவ்வளவு முயன்றும் அவனால் நேராக, திடனாக நிற்கவே முடியவில்லை. தேகம் முழுவதும் வியர்வையில் முக்குளிக்க, மண்டைக்குள் உணர்ந்த வலி, கண்ணுக்குள் அடித்த மின்னல் காட்சிகள்…, முழுதாக அறுபது வினாடிகள் அவன் அவனது கட்டுப்பாட்டில் இல்லை.

நொடியில் சுதாரித்தவன், அருகே இருந்த டாய்லெட்டுக்குள் நுழைந்து, இரு கரங்களால் தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டான். “ஹ், ஆ…” வெளியே அவர்கள் இருக்கிறார்கள் என்ற நினைவால், இதழ்கடித்து தன் முனகலை அடக்கினான்.

சில நொடிகள் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள போராடியவன், அதில் வெற்றியும் பெற்றான்.

கண் விழித்த கைதிகள் இருவரும் முயன்று எழுந்து அமர, தன்னை சற்று நிலை நிறுத்திக் கொண்டு வெளியே வந்தான் பிரம்மா. பிரம்மாவைப் பார்த்த இருவரும் பேயைப் பார்த்த உணர்வில் அலறித் தவிக்க, “ஷ்…, ஷ்…” அவன் ஒற்றை விரல் நீட்டி, கண்களை உருட்டி, உரைத்த அந்த ஒற்றை வார்த்தையில் அவர்களின் உயிர் உறைந்தது.

“சார்…, நீங்க என்ன கேட்டாலும் பதில் சொல்றோம் சார்…, இனிமேல் அடிக்காதீங்க சார்…, வலி உயிர் போகுது…” கைகூப்பி கெஞ்ச, அவர்களைப் பார்த்த பார்வையில் நெருப்பு பறந்தது.

“என்னை ஏன் கொல்ல வந்தீங்க…? யார் உங்களை அனுப்பினா? அவன் பேர் என்ன? அன்னைக்கு ஹாஸ்பிடல்ல வந்ததும் நீங்க தானா?” அருகில் இருந்த இருக்கையை இழுத்துப் போட்டு அதில் தன் வலதுகாலை தூக்கி வைக்க, எச்சில் விழுங்கிக் கொண்டார்கள்.

சுவிங்கத்தை அங்கே இருந்த பாஸ்கெட்டில் குறி பார்த்து துப்பியவன், தன் பாக்கெட்டில் இருந்து மேலும் இரு

சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள, அவன் நிதானத்தில் அவர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

“சார்..., முருகேசன் தான் கூட்டி வந்தான். ஏன்னு எல்லாம் சொல்லலை. காசுக்கு ஆசைப்பட்டு வந்தோம்...” அவர்கள் உண்மையைத்தான் சொல்கிறார்கள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

யாழினியின் பக்கம் திரும்பியவன், “இவங்க கிட்டே வாக்குமூலம் வாங்கிட்டு, ரிமாண்ட் பண்ணுங்க. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு...” உரைத்தவன் அங்கிருந்து வெளியேறினான்.

அறைக்கு வெளியே இருந்த கந்தன், அவன் பின்னால் செல்ல முயல, “நீங்க யாழினியோட இருங்க..., அந்த முருகேசன் எந்த ஏரியா?” அவன் கேள்விக்கு கந்தன் பதில் கொடுக்கவே, வேகமாக மருத்துவமனையை விட்டு வெளியே வந்தான்.

‘எப்படிப் போவது...?’ எண்ணியவன், பார்வையைச் சுழற்ற, அப்பொழுது அங்கே ராயல் என்பீல்ட் புல்லட்டில் ஒருவன் வந்து இறங்கி உள்ளே செல்ல முயல, அவனைத் தடுத்தவன்,

“பைக் கீ கொடு..., எஸ்பி ஆபீஸ்ல வந்து பிறகு வண்டியை வாங்கிக்கோ...” அவன் கேட்க, மற்றவனால் மறுக்க முடியவில்லை.

“சார்..., புது வண்டி சார்..., கொஞ்சம் பாத்து...” பிரம்மாவின் பார்வையில் வாயை மூடிக் கொண்டவன், ‘இன்சூரன்ஸ் கிளெயிம் பண்ணிக்கணும் போல’ மனதுக்குள் முனகியவன், தன் வண்டியை அசுர வேகத்தில் எடுத்துச் செல்லும் பிரம்மாவை வாய் பிளந்து பார்த்திருந்தான்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் முருகேசின் ஏரியாவில் அவன் நிற்க, வண்டியை சற்று ஓரமாக நிறுத்திவிட்டு, பார்வையை மெதுவாக சுழற்ற, அவன் வண்டியை விட்டு

இறங்கும் முன்பே, தன் அருகில் ஒருவன் கோபமான பார்வையோடு வருவதை உணர்ந்தான்.

புல்லட்டில் அமர்ந்தவாறே..., ஹெல்மெட்டை கழட்ட, அதற்குள் அவனை நெருங்கியவன், “நீ இங்க வருவன்னு எனக்குத் தெரியும் சார். உன்னைச் சுற்றி நாங்க இருபதுபேர் இருக்கோம்...” கத்தியை பிரம்மாவின் நெஞ்சுக்கு நேராக வைத்து அவன் சொல்ல, கண்களை சுழற்றி பார்த்த பிரம்மா, அது உண்மைதான் என்பதை உணர்ந்து கொண்டான்.

“எல்லார் கையிலும் பொருள் இருக்கு...” முருகேசன் உரைக்க, கூலிங்கிளாசை நிதானமாக கழட்டி, புல்லட் மேல் வைத்தவன், தனக்கு நேராக இருந்த கத்தியை வெகு நிதானமாக இடக்கரத்தால் விலக்கியவன், உணர்வுகளைத் துடைத்த முகத்தோடு அவனை ஏறிட்டான்.

‘என்ன சொல்ல வந்தியோ சொல்...’ பார்வையால் உரைத்தான். அவனது அந்த நிதானம் முருகேசின் தொண்டைக்குழியை ஏறி இறங்கச் செய்ய, ஒரு துளி வியர்வை, அவன் காதோரம் வழிந்தது.

“எங்களை எல்லாம் திருந்தி வாழ விடவே மாட்டீங்களா?” அவன் கேள்வியில் கோபமும், ஆதங்கமும் ஒருங்கே இருந்தது.

அப்பொழுதும் பிரம்மா தன் நிலையில் இருந்து மாற்றமே இல்லாமல் இருந்தான். “அன்னைக்கு எவ்வளவு கெஞ்சினேன்..., அந்த வீட்டில் கொள்ளையடிச்சது நான் இல்லைன்னு..., அதைக் கேக்காமல்..., என் பொண்டாட்டியை...” அதற்குமேல் சொல்ல முடியாமல் அவன் திணற, மனம் நடுங்கியது பிரம்மாவுக்கு.

ஆனாலும்..., ‘உண்மை இல்லாமல் எதையும் செய்திருக்க மாட்டேன்’ அவன் மனம் உரைக்க, அழுத்தமாக அவனை ஏறிட்டான்.

“அப்படி என்ன செய்தேன்..., சொல் பார்ப்போம்...?” தெனாவெட்டாகவே கேட்டான். அவனுக்கு அறிய வேண்டி

இருந்தது..., அப்படி தான் என்ன செய்தோம் என்று..., அதை முருகேசின் வாயால் கேட்காமல், தனக்கு தெரியப் போவதில்லை என்பதும் தெரியும்.

“என்ன செய்தீங்களா...? ஓ..., அதுக்குள்ளே மறந்து போச்சா? அதானே..., ஒண்ணா ரெண்டா...” ஆத்திரமாக கேட்டவன்,

முருகேசன் அன்றைய நினைவுக்கே சென்றுவிட்டான். அன்று அந்த வயதான தம்பதிகள் இருவரும், அவர்கள் வீட்டில், சிறுக சேர்த்து வைத்திருந்த பணம், நகை கொள்ளை போனதைப் பற்றி, பிரம்மாவிடம் அழுது புலம்ப, கொள்ளை நடந்த விதத்தை வைத்தே அதை யார் செய்திருப்பார் என கணித்துவிட்டான் பிரம்மா.

“கந்தன், ஜீப்பை எடுங்க..., முருகேசை பிடிக்கணும்...” அவன் சொல்ல, மறுக்காமல் ஜீப்பை எடுத்தார்.

ஜீப் சாலையில் அசுர வேகத்தில் பயணித்துக் கொண்டிருந்தது. ஒரு கேஸ் விஷயமாக செல்கையில், அதை முடிக்கும் வரைக்கும் பிரம்மாவிடம் நிதானம் என்பதே இருக்காது. அதை உணர்ந்த கந்தன், ஜீப்பை விரட்டினார்.

ஜீப் சாலையில் விரைய, தன் பார்வையை சட்டென கூர்மையாக்கினான். அருகில் இருந்த ஆட்டோ ஸ்டேண்டில், அவன் ஆட்டோவில் அமர்ந்திருந்த முருகேசைப் பார்த்த பிரம்மா, ஓடும் ஜீப்பில் இருந்து குதித்து அவனை நோக்கி ஓடினான்.

அவன் வருவதைப் பார்த்த முருகேசன் ஆட்டோவைக் கிளப்பிக்கொண்டு செல்ல, நாலுகால் பாய்ச்சலில் சிங்கத்தின் வேட்டையாடும் மனநிலையில் விரட்டினான் பிரம்மா.

ஒரு கட்டத்தில் ஆட்டோவை முந்தி அவன் ஓட, “சார்..., நான் இப்போ எந்த தப்பும் செய்யிறது இல்லை. ஆட்டோ ஓட்டுறேன்..., என்னை விட்டுடுங்க” உரைத்தவன் ஆட்டோவை முறுக்க, அடுத்த நிமிடம் ஆட்டோவுக்கு வெளியே கிடந்தான் முருகேசன்.

“ம்..., ம்..., என்ன சொன்ன..., சரியா கேக்கலை..., திரும்ப சொல்லு...” தன் வியர்வை வழிந்த நெற்றியை பெருவிரலால் வழித்து எறிந்தவாறே பிரம்மா கேட்க,

“அதான் சார்..., நான் இப்போ திருந்திட்டேன்...” திணறினான்.

“திருந்தின நாய் என்னைப் பாத்த உடனே ஏண்டா ஓடின?” கேட்டவன் அவனை மிதிக்கப் போக, பிரம்மாவை தள்ளிவிட்டு எழுந்து ஓடினான் முருகேசன்.

அவனை விரட்ட, ஒரு வழியாக அவர்களுக்கு எதிரில் வந்த போலீசின் கையில் சிக்கினான். அவர்கள் அவனை அடித்து துவைக்க, அங்கே வந்தாள் முருகேசின் மனைவி.

அவளைப் பார்த்தவுடன், “ஏய்..., நீ எதுக்கு இங்கே வந்த..., போ முதல்ல” முருகேசன் கத்தினான்.

“சார்..., அவர் இப்போ எந்த வம்புக்கும் போறதில்லை சார்..., அவரை விட்டுடுங்க...” அவள் பிரம்மாவிடம் கெஞ்ச,

“எங்கேயும் போறதில்லையா? நம்புற மாதிரி இல்லையே...” கேட்டவன், அவள் கை பிடித்து இழுத்து, அவள் முதுகின் பின்னால் சேர்த்து அணைக்க, முருகேசன் கொந்தளித்தான்.

“சார் வேண்டாம்..., அவளை விட்டுடுங்க..., இல்ல..., நான் என்ன செய்வேன்னே தெரியாது...” கட்டிய மனைவியின்மேல் ஒருவன் கை வைத்தால், அதைப் பார்த்துக்கொண்டு எந்த ஆண்மகன்தான் சும்மா இருப்பான்?

“என் கையை எடுத்துடுவியோ..., எங்கே செய் பார்ப்போம்...” அவளை இடையோடு அணைக்க, அவளோ கத்திக் கதறினாள்.

“சார்..., என்னை விட்டுடுங்க..., நீங்க செய்யிறது சரியே இல்லை...” அவள், அவன் கைகளில் திமிர, அதை சுலபமாக அடக்கினான்.

“சரியில்லையா…? இதுவே சரியில்லன்னா அப்போ…” கேட்டவன் அவளை முத்தமிடுவதுபோல் நெருங்க, முருகேசன் அவனை அடிக்கப் பாய, அங்கே இருந்த யாழினியோ அந்த காட்சியைக் காண முடியாமல் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

சுற்றி இருந்த யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் ஏரியா மக்கள் கூட, அந்த காட்சியைப் பார்த்துவிட்டு ஒதுங்கிச் சென்றார்கள். அவர்கள் யாராலும் பிரம்மாவை எதிர்த்து ஒரு வார்த்தை பேச முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்,

இப்பொழுது யார் நியாயம் கேட்கப் போனாலும், அவர்கள் மேலும் அவன் இப்படித்தான் பாய்வான் என்பதால், பெண்கள் வீட்டுக்குள் முடங்க, ஆண்கள் கையாலாகாமல் நின்றார்கள்.

எஸ்பியை அடிக்கப் பாய்ந்த முருகேசனை சுற்றி நின்ற போலீஸ் கீழே போட்டு மிதிக்க, அவன் மனைவி பிரம்மாவின் கைகளுக்குள் புழுவாய் துடித்துக் கொண்டிருந்தாள்.

“டேய்…, நீ இப்போ உண்மையைச் சொல்லலை…” கர்ஜித்த பிரம்மா, அவன் மனைவியை ஒரு பார்வை பார்த்தவன், “யாழினி…, இவளை கூட்டி போய் லாகப்ல வைங்க…, இவன் உண்மையை சொன்ன பிறகு அவளை வெளியே விட்டால் போதும்” அவளை யாழினியின் பக்கம் தள்ளிவிட, முருகேசின் மனைவி அழுது புலம்பினாள்.

மனைவியை பிரம்மா ஜீப்பில் ஏற்றச் சொல்வதைப் பார்த்த முருகேசன், “சார்…, நான்தான் செய்தேன்…, என்னை கூட்டி போங்க…, போதுமா?” அவன் கத்த, முருகேசை ஒரு பார்வை பார்த்தவன், “யாழினி…” அழைத்தவன், ‘அவளை விட்டுவிடு…’ என்பதுபோல் தலை அசைத்துவிட்டு, முருகேசின் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்துச் சென்றான்.

கூடவே..., “பொய் சொன்னாலும் சொல்வ..., உண்மையை சொல்ல மாட்ட இல்ல..., அப்போ வா...” இழுத்துச் சென்று லாக்கப்பில் வைத்து கவனிக்க, அடுத்த அரைமணி நேரத்தில், அவனது தம்பி வந்து தான்தான் அங்கே கொள்ளையடித்தது எனச் சொல்லி, நகைகளையும் ஒப்படைத்தான்.

அதை எண்ணிப் பார்த்த முருகேசன்..., “பொண்டாட்டி மேல கை வைத்தவனை சும்மா விடும் அளவுக்கு நான் பொட்டை இல்லை சார். அதான்..., உங்க கையை மட்டுமாவது வெட்டணும்னு நான்தான் ஆள் அனுப்பினேன்.

“திருந்தி வாழணும்னு ஆசைப்படுறேன். இதுக்கு மேலே என்னை சீண்டிட்டே இருந்தீங்க என்றால்..., என்னைக்காவது ஒருநாள், உங்க உயிர் என் கையால் போகும். அதை சொல்லிட்டு போகத்தான் வந்தேன். நான் தனியா வந்தால் அதுக்கும் ஏதாவது செய்வீங்க என்பதால் தான், இருபது பேரோட வந்தேன்.

“இப்போ புடிச்சி வச்சிருக்க அவங்களை வைத்து என்மேல் கேஸ் போட்டாலும் எனக்கு பரவாயில்லை. அதுக்கு நான் தண்டனையை அனுபவிச்சுக்கறேன். ஆனா இனிமேல்..., கொள்ளை நடந்தால் என்னை வந்து பிடிக்கிறதை விட்டுடுங்க...” உரைத்தவன், தன் கையில் இருந்த ஆயுதத்தை ஒரு பார்வை பார்த்தவன்,

“இந்த ஆயுதம் எல்லாம் எடுக்கக் கூடாதுன்னு முடிவில் இருந்தேன். இதை என்னை எடுக்க வச்சுட்டீங்க...” உரைத்தவன், அதை அருகே கீழே வீசிச் செல்ல, சில நொடிகள் அப்படியே அமர்ந்துவிட்டான்.

“டேய்...” செல்லும் அவனை குரல் உயர்த்தி அழைக்க, “தப்பு செய்த உனக்கே இவ்வளவு கோபம் வரும்னா, அந்த தப்பை தடுக்கணும்னு நினைக்கிற எனக்கு எவ்வளவு கோபம் வரும்?” தன் இடக்கன்னத்தை, இடக்கரத்தால் அழுத்தமாக வருடி, தாடையை தேய்த்தவாறு கேட்க, முருகேசன் வியர்த்தான்.

“என்ன சொன்ன? என் கையை மட்டுமாவது வெட்டணுமா? நான் இந்த இடத்திலேயே நிக்கறேன். கூட்டி வந்திருக்க மொத்த பேரையும் அனுப்பு, என்…” மீசை முடியை பிடுங்கி, காற்றில் ஊதியவன், “ஒரு ம** எடுக்க முடியுதா பாக்கலாம்…” ஹப்பா…, புலியின் கர்ஜனை…, தன் கையில் இருந்த கத்தியை அழுத்தமாக பற்றிக் கொண்டான் முருகேசன்.

பிரம்மா தன்னை சுட்டி கட்டம் கட்டியிருந்த ஒவ்வொருவனையும் பார்வையால் எரிக்க, அவர்கள் அனைவருமே நாலடி பின்னால் நடப்பதும், வியர்வையில் குளிப்பதும் அவனுக்கு அப்பட்டமாய் தெரிந்தது.

“இந்த பிரம்மாவுக்கு நேரா கத்தியை நீட்டிட்டு, நீ அப்படியெல்லாம் சும்மா போய்ட முடியுமா?” இவ்வளவு பேசியும், அவன் வண்டியை விட்டு அசையக்கூட இல்லை.

‘நாம் தீர்ந்தோம்…’ முருகேசன் நினைக்க, அவன் கூட்டி வந்த ஆட்கள் கலைந்து ஓடினார்கள்.

பிரம்மாவோ, “பிரச்சனை வேண்டாம்னு நான் நினைத்தால்தான் இது முடியும். இன்னொரு முறை, நீ எதையாவது செய்திருப்பன்னு எனக்கு டவுட் வந்தா கூட போதும்…” அவனது இடக்கரம், இடையில் இருந்த துப்பாக்கியில் பதிய, அவன் பார்த்த பார்வையில் அப்பொழுதே முருகேசின் உயிர் போய்விடும்போல் இருந்தது.

“இல்ல சார்…, நிஜமாவே நான் திருந்திட்டேன். இனிமேல் திருட்டை பத்தி நினைக்க கூட மாட்டேன். இது என் பையன் மேல சத்தியம்…” கத்தியை அவன் கீழே போட, ‘போ…’ என்பதுபோல் தலை அசைக்க, அடுத்த நிமிடம் அங்கிருந்து அகன்றான் முருகேசன்.

அவன் சென்ற பிறகும், பிரம்மா அந்த இடத்தை விட்டு அசையவில்லை. தான் நடந்துகொண்ட முறை…, உண்மையை வெளிக்கொண்டுவர என்றாலும், அது சரியாகத் தோன்றவில்லை. முருகேசன் தன்னைக் கொல்ல

முயல்வதில் தவறே இல்லை என்று உணர்ந்து கொண்டான். முதல் வேலையாக தன் அலைபேசியை எடுத்தவன், “யாழினி, அவங்களை விட்டுடுங்க” உரைத்தவன் அலைபேசியை வைத்து விட்டான்.

யாழினியால் தன் காதில் கேட்டவற்றை நம்பவே முடியவில்லை. பிரம்மா ஒருவனை சும்மா விடுவதா?’ எதற்கு என்று புரியவில்லை என்றாலும், பிரம்மாவின் வார்த்தைகளை மீறும் தைரியம் அவர்களுக்கு இல்லை, எனவே அவர்களை ரிலீஸ் செய்தார்கள்.

அதன் பிறகு அலுவலகம் செல்ல அவனால் முடியவில்லை. மனதுக்குள் ஒரு வித பாரம்..., காலையில் இருந்த மனநிலை முற்றாக மாறியிருக்க, வீட்டுக்குச் சென்றாலும் தனிமையும், குழப்பமுமே துணையாகும் என்பது புரிய, அவன் நினைவுக்கு சட்டென வந்தவள் காயத்ரிதான்.

அவளைக் காணச் சென்றால், நிச்சயம் கோபப் படுவாள் எனத் தெரியும். ஆனாலும், அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. அன்று சனிக்கிழமை என்பதால்தான் காலையிலேயே தன்னைக் காண வந்திருந்தார்கள். இப்பொழுது ஹாஸ்டலில் இருக்கலாம் எனக் கணித்தவன், புல்லட்டை அங்கே திருப்பினான்.

ஹாஸ்டல் முன்னால் வண்டியை நிறுத்த, ஹாஸ்டல் வார்டன் பிரேமா அலறியடித்துக் கொண்டு விரைந்து வந்தாள். “சார்..., எதுவும் பிரச்சனையா? ஏதாவது கம்ப்ளெயின்ட் வந்ததா?” அன்றைக்கு பிரின்சிபால் கேட்ட அதே கேள்வியை அவளும் கேட்க,

‘ஏற்கனவே இருக்கும் குழப்பம் போதும், இப்பொழுது எதையும் குழப்ப வேண்டாம் என எண்ணியவன், “காயத்ரியை வரச் சொல்லுங்க” உரைத்தவன், விசிட்டர் அறையில் அமராமல், வெளியே இருந்த பெஞ்சில் அமர்ந்தான்.

தானே நேரடியாக அவளது அறைக்குச் சென்ற பிரேமா, “காயத்ரி, எஸ்பி உன்னைப் பார்க்க வந்திருக்கார்..., உடனே

வா...” அவள் அழைக்க, காயத்ரிக்கு பற்றிக்கொண்டு வந்தது.

“நீங்க போங்க, நான் வர்றேன் மேம்...” அவள் நிமிடங்கள் தாமதிக்க முயன்றாள் “நான் வெயிட் பண்றேன்” பிரேமா அங்கேயே நிற்க, இந்திராவை திரும்பிப் பார்க்க, ‘போடி...’ அவள் இதழசைவில் முனக, அவளை முறைத்தவாறே, உடையை சரிபார்த்துவிட்டு கிளம்பினாள்.

“அதோ இருக்கார் பார்...” பிரேமா விலக, கோபமாகவே அவனை நெருங்கினாள்.

“உங்களுக்கு என்னதான் வேணும்...? ஏன் என்னை இப்படி டார்ச்சர் பண்றீங்க?” ஹாஸ்டலில் இருந்த மாணவிகளில் பலர் அவர்களை வேடிக்கை பார்க்க, கோபமுகம் காட்டாமல், இதழ்களை இழுத்து வைத்தவாறே, கத்தினாள்.

“லஞ்ச் சாப்டியா...?” அவள் கோபத்தை கண்டுகொள்ளாமல் அவன் கேட்க, ஒரு நொடி விழித்தாள்.

“இதைக் கேக்கத்தான் வந்தீங்களா...? எங்களுக்கு லஞ்ச் டைம் ஒன் ஓ கிளாக் தான். இன்னும் அரைமணி நேரம் இருக்கு. ஏன்..., எங்க லஞ்சை செக் பண்ணணுமா...?” கடுப்பானாள்.

“ஓகே..., வா போகலாம்...” அவன் முன்னால் நடக்க, ஆத்திரமென்றால் அவ்வளவு ஆத்திரம்.

“நான் எங்கேயும் வரலை...” அவள் நின்ற இடத்திலேயே கத்த, அவனுக்கு சலிப்பாக இருந்தது.

“காயு..., காலையிலேயே சாப்பிடலை..., ரொம்ப பசிக்குது..., சோ...” அவளை எப்படி லஞ்சுக்கு அழைத்துச் செல்வது என்றே தெரியாமல், கெஞ்சவும் முடியாமல் அவன் ஒரு மாதிரி மனநிலையில் நிற்க, திகைத்துப் போய் நின்றுவிட்டாள்.

தன் விரோதியே என்றாலும், பசிக்கிறது என ஒரு பெண்ணிடம் சொன்னால், அவளால் இரங்காமல் இருக்க முடியாது. அப்படி இருக்கையில், தன்னையே சீண்டி,

சுற்றிவந்து பேசும் பிரம்மா பசிக்கிறது எனச் சொன்னால் அவள் என்ன செய்வாள்.

அவனைக் கொல்லும் அளவுக்கு அவன்மேல் கோபம் இருந்தாலும், அவன் கெஞ்சத் தெரியாமல் கெஞ்சிக்கொண்டு நிற்பதில் தடுமாறிப் போனாள். ஆனாலும், அவன்மேல் இருந்த கோபம் கொள்ளை கொள்ளையாய் இருக்க, தன் அண்ணனைக் கொன்னவனின் கையால் தான் ஒரு வேளை உணவு என்றாலும் சாப்பிடுவதா...?

இந்த எண்ணம் எழவே..., “எனக்குப் பசிக்கலை..., நான் எங்கேயும் வர மாட்டேன்” அழுத்தமாக உரைக்க, அவளை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்ல அவன் விரும்பவில்லை.

அவளோ..., “என்னை காயுன்னு கூப்பிடாதீங்க..., எனக்குப் பிடிக்காது” அவள் சொல்ல, மறுப்பாக தலை அசைத்தான். அவளை அவளது தாய் அப்படித்தான் அழைப்பார். எனவே வேறு யாராவது காயு என அழைத்தால், தாயின் நினைவு அதிகமாக வருகிறது என்பதால் மறுத்து விடுவாள்.

அவள் முகத்தில் இருந்த பிடிவாதத்தைப் பார்த்தவன், திரும்பி வந்து, மீண்டுமாக அந்த பெஞ்சில் அமர்ந்து கொண்டான். பசிக்கிறது எனச் சொன்னவன், சாப்பிடப் போகாமல், மீண்டுமாக அமர்ந்துவிட, கையைப் பிசைந்தாள்.

“போகலை...?” அவனிடம் கேட்கக் கூடாது என நினைத்தாலும், அவளால் முடியாமல் கேட்டுவிட்டாள்.

“என்னோட எங்கேயும் வெளியே வர மாட்ட, நான் வாங்கித் தர்ற சாப்பாட்டை சாப்பிட மாட்ட அதானே..., ஓகே..., நான் இங்கே கொஞ்சநேரம் இருக்கலாம் தானே..., இல்ல..., இங்கே இருந்து எழுந்து போயே ஆகணுமா...?” ஆத்திரம்..., ஆத்திரம்..., அவ்வளவு ஆத்திரத்தை, முயன்று அவன் அடக்குவது தெரிந்தது.

இருக்கையில் அமர்ந்தவன், சுவிங்கத்தை வாயில் போட்டுக் கொள்ள, ‘இது என்ன பழக்கமோ…?’ முகம் சுழித்தாள். அவனோ, இமைக்காமல் அவளைப் பார்க்க, அங்கே இருந்து செல்ல கால்கள் பரபரத்தாலும் அது முடியாமல், அவன் பார்வை கட்டிப் போட, அந்த பெஞ்சின் மறு ஓரத்தில் அமர்ந்தாள்.

அவளைப் பார்த்து திரும்பி அமர்ந்தவன், அவள் முகத்தையே பார்த்திருந்தான். சிறிய நெற்றி…, அதில் கலைந்தாடும் கார்குழல்…, அடர்ந்த புருவம்…, அந்த குண்டு கண்கள்…, அதில் இப்பொழுது தெரியும், இயலாமை கலந்த கோபம்…, கன்னத்தில் ஏறும் சிவப்பு…, இப்பொழுது அவன் மனதில் எந்த குழப்பமும், அழுத்தமும் இருக்கவில்லை.

மாறாக காயத்ரி மட்டுமே நிலைத்திருந்தாள். அவளது அடர் மஞ்சள் வர்ண சுடிதார்…, அதில் விரவியிருந்த சின்ன சிவப்பு, பச்சை வர்ண பூக்கள்…, ஷாலை தன் கழுத்தைச் சுற்றி படர விட்டிருக்க, அங்குலம் அங்குலமாக அவன் பார்வை அவளை அளந்தது.

அவளுக்கோ உள்ளுக்குள் எரியும் நெருப்பை மீறி, அவன் பார்வை தன்மேல் படர்வது, உள்ளுக்குள் பெரும் படபடப்பை ஏற்படுத்தியது. அவன் பார்வை விரசமாகவோ…, தவறாகவோ பதிந்திருந்தால் எப்படி உணர்ந்திருப்பாளோ, ஆனால்…, ஒரு கலையை ரசிக்கும் கலைஞனின் பார்வையில் அவன் பார்வை ஒத்திருக்க, கோபம் கொள்ளக் கூட முடியவில்லை.

‘இதற்கு இவனோட வெளியேவே போயிருக்கலாம்…’ அப்பொழுதாவது அவன் கவனம் வேறு எங்காவது சிதறியிருக்கும். ஆனால், இப்பொழுது முழுமையாக தன்மேல் மட்டுமே இருக்க, அவளால் தாள முடியவில்லை.

“ம்ச்…, எல்லோரும் நம்மை கவனிக்கறாங்க…” உரைத்தவள், அவனை முறைக்க,

“எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை…” அவன் அசால்ட்டாக உரைக்க, ‘இவன்கிட்டே சொல்வதே வேஸ்ட்…’

மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

நேரம் அதன் பாட்டுக்கு சென்றுகொண்டிருக்க, சாப்பாட்டுக்கான லஞ்ச் பெல் அடிக்க, பசிக்கிறது எனச் சொன்ன அவனை விட்டு, தான் மட்டும் சென்று சாப்பிடுவது அவளுக்கு சரியாகத் தோன்றவில்லை.

நேரத்துக்குச் செல்லவில்லை என்றால், உணவும் காலியாகிவிடும் என்பதால், அவள் தடுமாற, “போய் சாப்ட்டு வா...” அவன் உரைக்க, அவளுக்கோ இதயத்தின் ஓரம் கசியும் உணர்வு.

‘இப்பொழுது மாட்டேன் என்றால், எனக்காக சாப்பிடாமல் இருக்கியா என்று கேட்பான். சாப்பிடப் போனால், மனசாட்சியே இல்லாமல் செய்வதாகத் தோன்றும்...’ அவள் எண்ணிக் கொண்டிருக்க,

“தப்பா எல்லாம் நினைக்க மாட்டேன் போ...” அவள் மனதைப் படித்தவனாக உரைக்க, “எனக்கு சாப்பிடப் போகத் தெரியும்” வெடுக்கென உரைக்க, மெல்லியதாக புன்னகைத்தான்.

அவன் புன்னகை அவளை வசீகரிக்க, பார்வையை வேகமாகத் திருப்பிக் கொண்டாள். அதே நேரம்..., அவளை கண்காணித்துக் கொண்டிருந்த இரு விழிகள், தன் கையில் இருந்த அலைபேசியால் அவர்களை படம் பிடித்துக் கொண்டது.

‘எதுக்கு இளிக்கறான்னே தெரியலை...’ அவன் புன்னகை மனதை இடறச் செய்ய, மனதுக்குள் பொரிந்தவள், “முதல்ல நீங்க போங்க..., எல்லாரும் என்னை தப்பா பேசுவாங்க. என்னால் அதை அனுமதிக்க முடியாது...” இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள்.

அப்பொழுதும் அவன் அசையாமல் இருக்கவே, அவளுக்கு எரிச்சலாக வந்தது. “நீங்க போனால் போங்க..., இல்லையா இங்கேயே இருங்க..., நான் போறேன்...” உரைத்தவள், அங்கிருந்து செல்ல முயல, நொடியில் அவள் பாதைக்கு குறுக்காக வந்து மறித்தான்.

அவள் அதிர்ந்து விழித்தவள், சுற்றிலும் பார்வையைச் செலுத்தவே, “காயு…, ஒரு நிமிஷம் என்னைப் பார்…” அவன் சொல்ல, முகத்தை திருப்பியவாறு அசையாமல் நின்றாள்.

“என் கண்ணைப் பார் காயு…” அவன் அழுத்தமாக உரைக்கவே, அதற்குமேல் அவளால் முகத்தை திருப்பிக் கொண்டு நிற்க முடியவில்லை.

அவள் அவன் கண்களைப் பார்க்கவே, “நான் கெட்டவன் இல்லை காயு. என் செய்கைக்குப் பின்னால், நிச்சயம் ஏதாவது நிஜமான காரணம் இருக்கும். தேவையில்லாமல் என்மேல் கோபத்தை வளத்துக்கதே…” அவன் உரைக்க, அவளுக்கு மேலும் கோபம் பெருகியது.

‘இவன் செய்கைக்குப் பின்னால் நியாயமான காரணம் இருக்குமாமே. என் அண்ணாவை கொன்னதுக்குப் பின்னால், இவனோட சுயநலம் மட்டும்தான் இருக்கு…, எனக்கு அது தெரியும். நியாயமான காரணம் இருந்திருந்தால், அதை ஏன் மறைக்க வேண்டும்…’ சுள்ளென பொங்கியது அவளுக்கு.

அதற்குமேல் அவன் எதையோ சொல்லப் போக, அங்கே வந்தான் ரசல். “காயத்ரி…, உன்னைத் தேடி போலீஸ் வந்திருக்குன்னு எனக்கு மெஸ்சேஜ் வந்தது, அதான் வந்தேன். என்ன…, ஏதாவது தொல்லை பண்றாரா? ஏதாவது ஹெல்ப் வேணுமா…?” அவன் கேட்டுக் கொண்டே போக, பிரம்மாவின் முகம் இரும்பாய் இறுகியது.

‘இவனுக்கு இங்கே இருந்து யார் மெஸ்சேஜ் அனுப்புவது? இவனது ஒருதலைக் காதல் இங்கே யாருக்கோ தெரியும் அப்படித்தானே…’ ஏனோ அந்த நினைவு அவ்வளவு கசந்தது.

அதைப் பார்த்த காயத்ரி பயந்துதான் போனாள். எங்கே பிரம்மாவால் ரசல்க்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என பயந்தவள், “ரசல், நான் பாத்துக்கறேன்…, நீ போ. இது வேற விஷயம்…” அவள் சொல்லவே, அப்பொழுதும் மனமில்லாமல் நகர,

‘பெரிய இவன்...’ உள்ளே பொங்கிய பிரம்மா..., “ஹல்லோ..., இன்னும் மூணு வாரத்தில் எங்களுக்கு கல்யாணம். நாங்க தனியா பேசும்போது நீயென்ன குறுக்கே...?” விட்டால் அவனை அடித்து துவம்சம் செய்யும் வேகம் அவனிடம்.

ரசல் அதிர்ந்து போவது அவனது பார்வையில் புரிய, அதைக் கவனித்த பிரம்மாவுக்கு அவன்மேல் ஆத்திரம் என்றால், இப்படி அவனிடம் திருமணத்தைப் பற்றி வெளிப்படுத்துவான் என எண்ணியிராத காயத்ரி அதைவிட அதிகம் அதிர்ந்து போனாள்.

எனவே அவள் ரசலின் அதிர்ச்சியை கவனிக்கவில்லை. “காயத்ரி..., இது...?” அவளைக் கலைத்தான் ரசல்.

“ரசல்..., உன்னைப் போன்னு சொன்னேன்...” மேலே பிரம்மா எதையும் உளறி வைக்கக் கூடாதே எனப் பயந்தவள், ரசலை அனுப்ப முயன்றாள்.

அவனோ..., “காயத்ரி..., உனக்கு இதில் சம்மதமா?” அவனால் நம்ப முடியவில்லை.

“நீ இங்கே இருந்து போகலைன்னா நான் என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது...” காயத்ரியை இழுத்து தன் முதுகுக்குப் பின்னால் மறைத்தவன், அவனை இடிப்பதுபோல் நின்றான். அவனது தோற்றத்துக்கு முன்னால், ரசல் சற்று சொங்கி போல்தான் இருந்தான்.

“ஹையோ என்ன பண்றீங்க..., விலகுங்க..., ரசல்..., பிளீஸ்...” எங்கே ரசலையும் கொன்றுவிடுவானோ என்றே அஞ்சினாள். ஆனால் பிரம்மாவுக்கோ, காயத்ரியின் மனதைக் கலைத்து விடுவானோ என்ற கவலை. அவள் தனக்கு சொந்தமாகும் வரைக்கும், தங்களுக்கு நடுவில் அவன் வருவதை பிரம்மா சுத்தமாக விரும்பவில்லை.

“காயு..., நீ உள்ளே போ..., நான் இதை டீல் பண்ணிக்கறேன்...” அவளை விலக்க முயன்றான் பிரம்மா.

“காயத்ரி..., உன்னை இவர் மிரட்டறாரா...? அப்படின்னா தைரியமா சொல், என் மாமா மந்திரிதான்..., இவரை இந்த

ஊரை விட்டே டிரான்ஸ்பர் பண்ண வைக்கறேன்…” தன் ஒருதலைக் காதல் ரசலை இவ்வாறு பேசத் தூண்டியது.

“என்னடா சொன்ன…, என்னை டிரான்ஸ்பர் பண்ண வைப்பியா? எங்கே செய்டா பார்ப்போம்…” சிங்கமென கர்ஜித்து முன்னேற, காயத்ரிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. பட்டென அவன் கரத்தை அழுத்தமாக பற்றினாள்.

அவன் பக்கம் திரும்பியவள், “வெள்ளிக்கிழமை தாலி வாங்க போகணும்னு சொன்னீங்கல்ல…, நாம போகலாம். காலையில் என்னை காலேஜ்ல வந்து பிக்கப் பண்ணிக்கோங்க. இப்போ நீங்க கிளம்புங்க…” அவன் அப்பொழுதும் ரசலை முறைத்துக் கொண்டு நிற்க,

இப்பொழுது அவன் கன்னம் பற்றி தன் முகம் காண வைத்தவள், “நான் சொன்னா கேப்பீங்களா மாட்டீங்களா? இப்போ நீங்க போகலைன்னா…, நான் வர மாட்டேன்…” அவள் சொல்ல, அடுத்த நிமிடம் பிரம்மா அங்கே இருக்கவில்லை. ரசலை ஒரு பார்வை பார்த்தவன், முறைத்தவாறே அங்கிருந்து அகன்றான்.

பிரம்மாவுக்கோ அவளது உரிமையான தொடுகையும், பேச்சும் மனதின் ஓரம் நிறைந்து ஒரு கர்வத்தைக் கொடுத்தது. ‘இந்த பிரம்மாவை ஒருவன் தொட்டுப் பேச முடியுமா?’ ஒரு கர்வம் எழ, அது அவள் முன்னால் சிதறி ஒன்றுமில்லாமல் போவதை ரசித்து தொலைத்தது அவன் மனம்.

தன் பேச்சுக்கு மதிப்பளித்து அவன் விலகியதை நம்ப முடியாமல் அவள் நிற்க, “காயத்ரி…” ரசல் எதையோ பேச வர,

“ரசல்…, இனிமேல் என் வாழ்க்கைக்குக் குறுக்கே நீ வராதே. எனக்கு அது பிடிக்கலை…, புரிஞ்சதா…?” அவன் முகத்தில் அடித்தாற்போல் பேசிவிட்டு விலகிச் செல்ல, ரசல் மனம் உடைந்து போனான்.

தன் அறைக்கு வந்தவளுக்கோ..., தான் எப்படி தாலி வாங்க அவனோடு வருகிறோம் எனச் சொன்னோம் எனத் தெரியாமல், தலையில் கை வைத்து அமர்ந்து விட்டாள். ‘நானா அவனை தொட்டு..., ஆண்டவா..., எனக்கு கிறுக்கா பிடிச்சிருக்கு?’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

இந்த ஊரே எட்டி நின்று பயப்படும் பிரம்மாவை, தொட்டுப் பேசியிருக்கிறோம் அவளால் நம்பவே முடியவில்லை. அதை அவன் அனுமதித்திருக்கிறான் என்பது அதைவிட பிரமிப்பாய் இருந்தது.

அதைவிட, அவ்வளவு கோபத்திலும், தான் சொன்ன ஒரு வார்த்தைக்காக, கொஞ்சம் கூட மறுக்காமல், உடனடியாக பிரம்மா விலகிச் சென்றது, அவனது அந்த செய்கை அவளை மிகவும் தொல்லை செய்தது. பசி சுத்தமாக மரத்துப் போயிருந்தது.

*****

# பகுதி – 14.

மறுநாள் ஐஜி நீலகண்டன் முன்னால் அவன் கேஸ் பற்றி விவரிக்கச் செல்ல, அவனோடு சென்றாள் யாழினி. “யாழினி, ஃபைல் எல்லாம் சரியா எடுத்துட்டீங்களா?” ‘இன்னைக்கு முதலமைச்சர் வர்றாரா இல்லையான்னு தெரியலையே. வர்றதா இருந்தால் தகவல் வராமல் இருந்திருக்காது. ’சிந்தைகள் பலவற்றிலும் சுழல, ஐஜியின் அறைக்குள் நுழைந்தான்.

“சார்…” விரைப்பான சலூட்டுக்குச் சென்று தளர, எதிரில் இருந்த இருக்கையை, கை காட்டினார். அவன் இருக்கையில் அமர, அவனுக்குப் பின்னால் நின்றிருந்தாள் யாழினி.

“கேஸ் எந்த லெவல்ல இருக்கு பிரம்மா?” கேட்டவர், தன் கையில் இருந்த கைக்கடிகாரத்தை திருப்பிப் பார்த்தார்.

அவர் செய்கையைப் பார்த்தவன், ‘இவர் யாருக்காவது காத்திருக்கிறாரா?’ எண்ணியவன் அதை அவரிடம் கேட்கவில்லை. தன் கைவிரலில் இருந்த மோதிரத்தை உருட்டியவாறு அமைதியாக அமர்ந்திருந்தான்.

அவர் முகத்தில் இருந்த சிறு டென்ஷன்…, ‘இப்படி பதட்டப்படும் அளவுக்கு என்ன?’ எண்ணியவன், யாழினியை திரும்பிப் பார்க்க, அவளும் குழப்பமான மனநிலையில் நிற்பது தெரிந்தது.

“சார்…, அது…” அவன் துவங்கவே, “டூ மினிட்ஸ்…” அவர் தன் அலைபேசியை எடுக்க, அமைதியானான்.

யாழினியின் சிந்தையோ…, நேற்று அவன் கேசைப் பற்றி தன்னோடு விவாதித்ததில் சுழன்றது. “யாழினி வாங்க…” அவன் அலைபேசியில் அழைக்க அடுத்த நிமிடம் அவன் முன்னால் நின்றாள்.

“யாழினி…, நீங்க இந்த கேஸ் தற்கொலைதான் என்பதை பலமா நம்பறீங்க இல்ல. அதற்கான காரணத்தை எல்லாம் ஒண்ணு ஒண்ணா சொல்லுங்க…” இருக்கையில் இருந்து

எழுந்தவன், அங்கே இருந்த வெள்ளை போர்டுக்கு முன்னால் சென்று நின்றான்.

அவன் முகத்தில் இருந்த தீவிரத்தில், அவனிடம் மறுத்து எதையும் சொல்லாமல், “சார்..., முதல் காரணம்..., ரூம் உள்ளே இருந்து லாக் பண்ணியிருந்தது. இரண்டாவது..., அந்த அறையில், கல்பனா, அவளோட கணவன் மதன், வேலைக்காரி இவங்க மூன்றுபேரின் காலடித் தடம், கைத்தடம் மட்டும்தான் கிடைத்தது.

“அதோட அவங்க எலி விஷம் சாப்ட்டிருந்தாங்க. அந்த ஜூஸ் பாட்டிலும் அங்கேயே கிடந்தது..., இதைவிட வேற என்ன காரணம் வேண்டும்? அதான் நான் இதை தற்கொலைன்னு நினைக்கறேன்...” அவளுக்கு அவளது கணிப்பில் பெரும் நம்பிக்கை இருந்தது.

“குட்...” அவளை மெச்சியவன், “நான் ஒரு விஷயம் கேக்கறேன். சாகணும்னு முடிவு பண்ணவ..., தூக்கமாத்திரை போட்டே செத்திருக்கலாமே. அதை விட்டு..., பாலில் தூக்கமாத்திரை கலந்து குடித்துவிட்டு, பிறகு..., ஜூஸில் எலி விஷம் கலந்து குடிக்கிறது...

“இது ரெண்டுக்கும் ஒரு எக்ஸ்ட்ரீம் வித்தியாசம் உங்களுக்குத் தெரியுதா?” அவன் கேட்க, சற்று சிந்தித்தவள்,

“ஒரு வேளை..., தூக்கமாத்திரை போட்டும் சாக மாட்டோம்னு அவங்க நினைத்திருந்தால்?” அவள் திருப்பிக் கேட்க, “தேர் மஸ்ட் பீ எ பாசிபிலிட்டி, பட்..., அவங்க எப்படி இறந்தாங்க?” அவன் கேட்க, “கார்டியாஜெனிக் ஷாக்...” வேகமாக உரைத்தாள்.

“அதாவது..., பிபி அளவுக்கதிகமா ஹை ஆகி..., அதனால் மரணம் நேர்ந்திருக்கு. எவ்வளவு நேரத்தில் மரணம் நடந்திருக்கிறதா டாக்டர் சொல்லியிருக்கார்?”.

“டென் செக்கென்ஸ்...” உரைத்தவள், அந்த இடத்தில் தேங்கினாள்.

“யாழினி..., ஐ திங் யூ காட் இட்...” அவன் கூர்மையாக அவளை நோக்க, தான் புரிந்துகொண்டது சரியா தவறா எனத் தெரியாமல் தடுமாறினாள். ‘ச்சே..., இத்தனை நாள் இதை எப்படி கவனிக்காமல் போனோம்? இதையெல்லாம் கச்சிதமா பார்ப்பதால்தான் இவர் பிரம்மா’ தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவளது தடுமாற்றத்தை உணர்ந்தவன், “யாழினி..., பொதுவா, எலி விஷம் சாப்பிட்டால், எவ்வளவு நேரத்தில் மரணம் நேரும்?” அவன் போர்டில் ஒரு கேள்விக்குறியை வரைய,

“சார்..., சிக்ஸ் டூ எயிட் அவர்ஸ்..., பட் சார்..., இது...? இவ்வளவு சீக்கிரம்..., ஒரு வேளை அவங்க நிறைய எலி விஷம் சாப்பிட்டிருப்பாங்களோ?” தன் சந்தேகத்தை கேட்டாள்.

“கல்பனாவோட வயிற்றில் இருபது கிராம் எலி விஷம் இருந்திருக்கு” அவன் சொல்ல, இப்பொழுது பெரும் அதிர்வு அவள் முகத்தில்.

அதை கவனித்தவன், “சரி..., இன்னொரு விஷயம்..., கல்பனாவின் மரணத்துக்கு காரணமான விஷம் எது?”.

“சிங் பாஸ்ப்பைட்...” யோசனையாக உரைத்தாள்.

“யாழினி..., நம்ம கவர்மெண்ட் ரூல்ஸ் படி..., பத்து கிராம் எலி விஷத்தில் ஒரு சதவீதம்தான் சிங் பாஸ்ப்பைட் சேர்க்கலாம். அப்படிப் பார்த்தால்..., கல்பனா சாப்ட்ட இருபது கிராம் எலி விஷத்தில், ஒரு சதவீதம் தான் பாஸ்ப்பைட் இருந்திருக்கணும்.

“ஆனா..., போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்டில், பத்து கிராம் சிங் பாஸ்ப்பைட் அவ வயித்துக்குள் இருந்ததா ரிப்போர் சொல்லுது. அப்படிப் பார்த்தால், அவ வயித்துக்குள் பத்து கிராம் சிங் பாஸ்ப்பைட் எப்படி சாத்தியம்?” அவன் கேட்க, யாழினியின் தலை மறுப்பாய் அசைந்தது.

“சார்..., அப்படின்னா...?” அவள் இழுக்க,

“இப்போ இன்னொரு விஷயம்..., அந்த ஜூஸ் பாட்டிலில் இருந்த எலி விஷத்தில் எவ்வளவு சிங் பாஸ்ப்பைட் இருந்தது?”.

“ரெண்டு சதவீதம்” இப்பொழுது அவளுக்கே இது கொலைதான் எனத் தோன்றத் துவங்கி விட்டது.

“அப்போ எப்படி சார் அவங்க வயித்துக்குள் பத்து சதவீதம் சிங் பாஸ்ப்பைட் இருந்தது?” அவனிடம் திருப்பிக் கேட்க,

“அதைத்தான் நாம கண்டு பிடிக்கணும்..., யார்...? எதுக்கு...? எப்படி...? இதில் எப்படி என்பதுக்கு நம்மிடம் விடை இருக்கு. யார்...? எதுக்கு? என்பதை கண்டு பிடிக்கணும்...” அவன் போர்டில் சில புள்ளிகளை வைக்க, அவனையே பார்த்திருந்தாள்.

“ஐந்து கிராம் சிங் பாஸ்ப்பைட்டே ஒரு மனுஷனை கொல்ல தாராளம் என்னும்போது..., இருபது கிராம் பாஸ்ப்பைட் என்பது..., ஒரு கடுமையான அளவு. அதனால்தான் அவளோட மரணம் சில நொடிகளில் நடந்திருக்கு.

“யாருக்கு அவள்மேல் இவ்வளவு கோபம்? இவ்வளவு கிளவ்வரா யார் ஆக்ட் பண்ணா?” பேனாவின் மூடியை மூடியவன், “அதைக் கண்டுபிடிக்கத்தானே இந்த பிரம்மா இருக்கான்..., லெட்’ஸ் ப்ளே தி கேம்...” அவன் மீசை நுனியைத் திருக, அவன் எப்படி கண்டுபிடிக்கப் போகிறான் என்பதை அறிந்துகொள்ள ஆர்வமானாள்.

அவளது யோசனையை கலைத்தது, நாகேசின் வருகை. ‘இவர் எங்கே இங்கே...?’ அவள் சற்று விலகி நிற்க, ப்ரம்மாவின் முகத்தில் எந்தவிதமான சலனமும் இல்லை.

வந்தவனோ, “என்னய்யா..., அதான் அந்த பொண்ணு தெளிவா எழுதி வச்சுட்டு செத்து போயிருக்கே, அதை வைத்து அவனை உள்ளே தள்ளுவதை விட்டுட்டு, சும்மா..., அது தற்கொலை இல்லை, கொலைன்னு சொல்லி கேசை திசை திருப்பிட்டு இருக்க...” வந்த வேகத்தில் சாடியவன், ப்ரம்மாவின் இருக்கைக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்தான்.

“இந்த கேசில் நீங்க இவ்வளவு ஆர்வமா இருக்கக் காரணம்...? ஓ..., மதன் எம்பி கேண்டிடேட் இல்லை என்றால், அடுத்த இடத்தில் இருப்பது உங்க ஐயா..., மிஸ்டர் செம்பன் பொன்னுத்துரை என்பதாலா?” கேட்டவன் அசராமல் பார்க்க, நாகேஷ் கடுப்பானான்.

“என்ன சார்..., எஸ்பி எல்லாம் பேச விட்டு வேடிக்கை பாக்கறீங்க? அதான் தற்கொலை கடிதம் தெளிவா இருக்கே பிறகு என்ன?” எரிச்சலானான்.

“எது..., கல்பனா தன் கைப்பட எழுதிய தற்கொலை கடிதமா?” கேட்டவன், யாழினியைப் பார்க்க, தன் கையில் இருந்த ஃபயிலில் இருந்து அந்த கடிதத்தை எடுத்துக் கொடுக்க, அதைப் பிரித்தவன்,

‘என் கணவனின் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறேன்..., கல்பனா’. “இந்த லெட்டர்ல மொத்தமே இவ்வளவுதான் இருக்கு. பொதுவா தற்கொலை செய்துக்கிறவங்க, ஏன் செஞ்சுக்கறாங்க, எதுக்கு செஞ்சுக்கறாங்க..., அதற்கான காரணம் என்னன்னு ரொம்ப தெளிவா எழுதுவாங்க.

“ஆனா, இந்த லெட்டர்ல..., ஏன் செஞ்சுக்கறாங்கன்னு எழுதி இருக்காங்க, ஆனா அது முழுமை அடையலை..., அதை உங்களால் தெரிஞ்சுக்க முடியுதா?” அவன் ஐஜியிடம் கேட்க,

“சாகப்போற ஆள் என்ன நாவலா எழுதுவாங்க...” நாகேஷ் நக்கலாக வினவ, அவனை வெறித்தான்.

“மிஸ்டர் பிரம்மா..., எல்லாரும் அப்படி எழுதணும்னு எந்த அவசியமும் இல்லையே” ஐஜி கேட்க,

“இல்ல சார்..., நானும் அப்படி சொல்லவில்லை. ஆனா..., இது கல்பனாவோட கையெழுத்தே இல்லைன்னு சொல்றேன்...” அவன் சொல்ல, அங்கே இருந்தவர்களில் யார் அதிகம் அதிர்ந்தார்கள் என்று சொல்லவும் தேவையில்லை.

“என்ன உளறுறீங்க..., இது கல்பனாவோட வீட்டில், அவளோட ரூமில் இருந்து எடுத்த லெட்டர். அதுவும் அவளோட நோட்டுக்குள்ளே இருந்து எடுத்தாங்க” நாகேஷ் பொங்கினான்.

அவனை நிதானமாகப் பார்த்தவன், ஐஜியின் பக்கம் திரும்பி, “சார்..., கல்பனாவுக்கு கோலம், ரங்கோலி இதில் எல்லாம் நல்ல ஈடுபாடு. சோ, இந்த நோட் புக் எல்லாம், அவளோட ஏதோ ஒரு ப்ரண்ட் கிட்டே இருந்து கடன் வாங்கி வைத்திருக்கிறாள்.

“அது தெரியாத ஏதோ ஒரு அதி புத்திசாலி, இந்த கேசில் முதல் பார்வையில் எந்த தற்கொலைக் குறிப்பும் இல்லை என்பதை தெரிஞ்சுகிட்டு, மதனை இந்த கேசில் சிக்க வைக்க வேண்டி, கையெழுத்து போர்ஜரி செய்யும் யார்கிட்டயோ இந்த புக்கை கொடுத்து, அதே கையெழுத்தில் எழுத சொல்லி இருக்காங்க.

“இதில் பெரிய பியூட்டி என்னன்னா..., நம்ம கெட்ட நேரத்துக்கு, இந்த நோட்டில் யாரோட பேரும் இல்லை...” உரைத்தவன், தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு நோட்டை எடுத்தவன், “இதுதான் கல்பனாவின் சொந்த கையெழுத்து. இதை நான் அவளோட அம்மா வீட்டில் இருந்து எடுத்து வந்தேன்.

“இந்த ஒரு விஷயம் போதும்..., மதனை யார் சிக்க வைக்க முயற்சி செய்கிறார்கள் என்று யூகிக்க..., என்ன நாகேஷ்...” வெகு நிதானமாக கேட்க, பட்டென தன் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

“எனக்கு ஒரு அர்ஜெண்ட் மீட்டிங் இருக்கு..., நான் உடனே போகணும்...” வேகமாக விரைந்தான்.

அவன் செல்வதைப் பார்த்த ஐஜி. “பிரம்மா..., கல்பனாவின் சாவுக்குப் பின்னால் பொன்னுத்துரை காரணமா இருப்பார்ன்னு நினைக்கறீங்களா?” யோசனையாகக் கேட்டார்.

“இல்ல சார்..., சூழ்நிலையை யூஸ் பண்ணிக்க பாத்தாங்க அவ்வளவுதான். இதுக்குப் பின்னால்..., யாரோ..., வெல் பிளான் ஆசாமி இருக்கான், என்னால் உணர முடியுது...” பிரம்மாவின் கண்களில் ஒரு தீவிரம்.

“பிரம்மா..., இப்படிச் சொல்ற நீங்க..., ரெண்டு நாளைக்கு முன்னாடி பத்திரிகை காரங்க கிட்டே..., கல்பனாவின் மரணம் ஒரு தற்கொலைதான்னு ஏன் சொன்னீங்க...?”.

“இந்த ஊர்ல இருக்க எல்லோரையும் ஏமாற்றிவிட்டோம்னு நினைக்கற அவன், என்னையும் ஏமாத்திட்டோம்னு சந்தோஷமா இருக்கட்டுமே. எனக்கு அதுதான் வேணும்...” இப்பொழுது அவன் பார்வையில், இரையை ஓடவிட்டுப் பிடிக்கும் புலியின் விபரீத ஒளி மிளிர்ந்தது.

“ஓகே..., கல்பனாவோட சாவு கொலையா? இல்லை தற்கொலையா? எல்லோரும் அதை தற்கொலைன்னு சொல்லும்போது, நீங்க மட்டும் எப்படி அதை கொலைன்னு சொல்றீங்க? எனி க்ளூ...?” அவர் கேட்க, பிரம்மா காரணங்களை விவரித்தான்.

“ஹி இஸ் டேஞ்சரஸ்..., இதை எப்படி செய்திருப்பான்...? எப்படி கண்டுபிடிக்கப் போறீங்க...?” அனைத்தும் அடைக்கப்பட்ட கதவுகளாகவே ஐஜிக்குத் தோன்றியது.

தன் இருக்கையில் இருந்து எழுந்தவன், ஒரு சலூட்டை வைத்துவிட்டு, “ஜஸ்ட் டிரஸ்ட் மீ சார்...” அவரிடம் விடைபெற்றுத் திரும்பினான். அந்த அவனது தன்னம்பிக்கை..., அவனை பிரமிப்பாக பார்த்திருந்தார் ஐஜி.

***

இன்னும் சற்று நேரத்தில் பிரம்மா வந்துவிடுவான். அவனோடு சேர்ந்து தாலி வாங்கப் போக வேண்டும். முடியாது எனச் சொல்லவும் முடியவில்லை, சொன்னால் கேட்கும் நிலையிலும் அவன் இருக்கவில்லை. ஒரு பக்கம் அவன்மேல் கோபம் கிளர்ந்து எழ, மறு பக்கம், அவனை கொன்றால் என்ன என்ற வேகம் எழுந்து வதைத்தது.

நாட்கள் நெருங்க நெருங்க, தன் வாழ்க்கை தன் கையை விட்டுப் போவது போன்ற எண்ணம். வாழ்க்கை அதன் போக்கில் தன்னை இழுத்துச் செல்லும் உணர்வு.

‘என் அண்ணனை கொன்ற அவனை நான் திருமணம் செய்வதா?’ அவளால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அதிகம் முரண்டுபிடித்தால் கடத்திச் சென்றாவது திருமணம் முடித்துவிடுவான் என்பதுபோல் இருந்தது. திருமணம் என்னும் விஷயத்தையே ஒரு வாரம் முன்பு வரைக்கும் எண்ணியிராதவளுக்கு, திடீரென இன்னும் இருபது நாளில் திருமணம் என்று சொன்னால் அவளும் என்னதான் செய்வாள்?

“காயத்ரி, எதுக்குடி இவ்வளவு டென்ஷன்..., நீ கொலை செய்யப் போன அன்னைக்கு கூட இவ்வளவு டென்ஷனா இருக்கலை” கவலையாகக் கேட்கிறாளா, தன்னை கேலி செய்கிறாளா எனப் புரியாமல், இந்திராவைப் பார்த்தாள் காயத்ரி.

“என்ன கிண்டலா? என் இடத்தில் நீ இருந்தால் தெரியும்” கடுப்பாக உரைக்க,

“உண்மையை சொல்லவா காயத்ரி..., எனக்கு இப்போ உன்னைப் பாக்க அவ்வளவு பொறாமையா இருக்கு. உனக்குப் பிடிக்காத கல்யாணம்..., ஆனா அவர் உன்னைப் பாக்க நாளுக்கு ரெண்டு முறை வர்றார்.

“வெளியே போகலாம்னு கூப்பிடறார். நைட் ஆனால் போனுக்கு மெஸ்சேஜ் வருது..., நீதான் கண்டுக்காமல் இருக்க. ஆனா எனக்கு..., எப்போடா என் ஆள் எனக்கு போன் பண்ணுவார்ன்னு எதிர்பாத்துட்டே இருக்கேன்.

“எங்கேஜ்மென்ட் முடித்து இத்தனை நாள் ஆகுது. ஒரு எட்டு வந்து பாப்பாரான்னு ஏங்கறேன்..., எங்கே..., மனுஷனை கண்ணிலேயே காணோம். இதுதாண்டி..., தானா எதுவும் கிடைத்தால் அதுக்கு மதிப்பே இருக்காதுன்னு சொல்றது இதுதான்...” இப்பொழுது அவள் வார்த்தைகளில் ஒரு

ஏக்கம் இழையோட, அவள் முகத்தை பாவமாய் பார்த்திருந்தாள்.

ஆயிரம் எதிர்பார்ப்போடு காத்திருக்கும் தோழியின் ஆசை அவளுக்குப் புரியாமல் இல்லை. ஆனால், செய்ய வேண்டியவன் அமைதியாக இருக்கையில் காயத்ரி என்ன செய்ய முடியும்? கடந்த சில இரவுகளில் அலைபேசி ஒலிப்பதும், அதை தான் கட் செய்வதும் தொடர்கதையாகிப் போயிருந்தது.

“எடுத்துப் பேசுடி..., ஏதாவது முக்கியமான விஷயமா இருக்கப் போகுது” இந்திரா சொல்லிப் பார்த்துவிட்டாள்.

“என்கிட்டே பேச அப்படி எந்த முக்கியமான விஷயமும் இல்லை...” அலைபேசியை அணைத்து வைத்துவிட்டு உறங்கிப் போவாள். ஆனால், இந்திரா தன் அலைபேசியை ஏக்கமாக பார்ப்பதை உணர்ந்தே இருந்தாள்.

நேற்று நள்ளிரவில் இந்திரா தண்ணீர் குடிக்க எழ, அப்பொழுது தன் படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்தாள் காயத்ரி. “என்னடி இது..., உலக அதிசயமா இருக்கு, நைட் எழுந்து உக்காந்திருக்க?” தன் அறையின் குழல்விளக்கை எரியவிட்டாள்.

காயத்ரிக்கு ஒரு பழக்கம் உண்டு. இரவில் உறங்கிவிட்டாள் என்றால், இடியே விழுந்தாலும் அவளை அசைக்க முடியாது. அதுவும் அவள் ஆழ்ந்து உறங்கிவிட்டால், கும்பகர்ணனுக்கு தங்கையேதான். தப்பித்தவறி இரவில், இந்திரா அறைக்கு வர நேரமாகி, காயத்ரி உறங்கிவிட்டால், அவளை எழுப்பவே முடியாது.

காயத்ரியை அப்பொழுது எழுப்ப வேண்டும் என்றால், அவள் முகத்தில் ஒரு துளி நீராவது தெளிக்க வேண்டும். அப்பொழுதுதான் எழுந்து கொள்வாள். அதோடு..., லட்சத்தில் ஒன்றாக அவள் உறக்கம் கலைந்தாலும், குடிகாரனை விட மிச்சமாக செயல்படுவாள்.

அப்பொழுது அவளிடம் எதைக் கேட்டாலும் அப்படியே கொடுத்து விடுவாள். இந்திராவே கூட, “நீ தூங்கின பிறகு,

உன்னை எவனாவது ரேப் பண்ணா கூட உனக்கு தெரியாதுடி. இப்படியா தூங்குவ?” எனச் சொல்லி கேலி செய்வாள்.

அப்படிப்பட்டவள், இன்று உறங்காமல் இருந்தால் அவள் ஆச்சரியப்பட மாட்டாளா என்ன? “தூங்கவே பயமா இருக்குடி..., விடிந்தால் அவன் வந்து நிப்பான்” பயமாக உரைத்தாள்.

“ஏன்..., நீ தூங்காமல் உக்காந்திருந்தால் பொழுது விடியதுன்னு சாமி ஏதாவது வரம் கொடுத்திருச்சா என்ன? என்கிட்டே சொல்லவே இல்ல” தன் படுக்கையில் அமர, காயத்ரி பார்த்த பார்வையில் கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

அவளோ, “இந்து, ஒரு வேளை எங்களுக்கு கல்யாணம் ஆச்சுன்னா..., நைட்..., நினைச்சுப் பார்...” அவள் தன் நகத்தை கடிக்க, முகத்தை அஷ்டகோணலாக்கினாள் இந்திரா.

“சீ..., உன் நைட் பத்தி நான் யோசிச்சால் நல்லாவே இருக்காதுடி...” அவள் உரைக்க, தன் தலையணையை தூக்கி அவள்மேல் விட்டெறிந்தாள்.

“எரும, எரும..., நான் எதைச் சொன்னால், நீ எதைச் சொல்ற...? என் தூக்க வியாதியைப் பத்தி பேசுறேண்டி. நீ உன்பாட்டுக்கு எதையாவது உளறாதே” எழுந்து போய், அவள் முதுகிலேயே நாலு போட்டாள்.

“அதைபத்தி நீ கவலையே படாதடி..., நீ தூங்கிட்டா உனக்கு எதுவுமே தெரியாது சோ...” கண்ணைச் சிமிட்டி சிரிக்க, “நாயே..., உன்கிட்டே போய் சொன்னேன் பார்..., என் புத்தியை செருப்பால் அடிக்கணும். பேசாமல் தூங்குடி...” தன் தலையணையை எடுத்து வந்து போட்டு படுத்துக் கொண்டாள்.

போர்வைக்குள் நுழைந்தவள், “முதல்ல லைட்டை ஆப்ஃ, எனக்கு தூக்கம் வராது...” அவள் உள்ளே இருந்தே பேச,

“காயு எனக்கு ஒரு சந்தேகம்...” இந்திரா இழுக்க, “என்ன?” போர்வையை விலக்காமல் கேட்டாள்.

“இல்ல..., கல்யாணமே பிடிக்கலைன்னு சொல்ற..., பிறகு எதுக்கு நைட் பத்தி இவ்வளவு கவலைப்படுற?” அவள் கேட்க, பட்டென தன் போர்வையை விலக்கியவள், “அவனை கொல்ல முன்னாடி முதல்ல உன்ன கொல்லணும்டி...” அவள் கண்களில் கொலைவெறி தாண்டவமாட, பட்டென விளக்கை நிறுத்தியவள் போர்வைக்குள் புகுந்துகொண்டாள்.

‘ஹப்பா..., ஜஸ்ட் மிஸ்ஸு..., அது சரி..., என்னதான் இருந்தாலும் கல்யாணம்னு வந்துட்டா, நம்மளை மீறி கனவு வரும் போல...’ எண்ணியவள், மறந்தும் அதை வெளியே சொல்லவில்லை. மெதுவாக தன் போர்வையை விலக்கி காயத்ரியைப் பார்க்க, அப்பொழுதும் அவள் தன்னை முறைத்துக் கொண்டிருப்பது தெரிய, வேகமாக அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

தன் முதுகில் வந்து விழுந்த வஸ்துவை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

காலையில் இந்திரா பேசிய எதுவும் காயத்ரியின் காதில் விழவே இல்லை. எப்பொழுது வந்து நிற்பானோ என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தாள். காலையில் பத்து மணிக்கு கல்லூரி என்பதால், நிதானமாகவே கிளம்புவது அவர்களது வழக்கம்.

கல்லூரிக்குப் பின்னால் ஹாஸ்டல் என்பதால், ஐந்து நிமிடத்துக்கு முன்னால் கிளம்பினால் போதும். நேரமாவதை உணர்ந்து, “காயத்ரி, லேட் ஆகுது, நீ இங்கேயே இரு, நான் கிளம்பறேன். உன் கோபத்தை எல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு, வர்ற வாழ்க்கையை ஏத்துக்கப் பழகு...” சொல்லிவிட்டு சென்றுவிட்டாள்.

ஹாஸ்டலே வெறிச்சோடி இருந்தது. கல்லூரிக்கு கிளம்பிச் சென்று, அவன் அங்கே வந்து, பெரிய சீன் ஆவதை அவள் விரும்பவில்லை. அறைக்கதவை பூட்டிவிட்டு, அவன்

வரவுக்காய் காத்திருக்கத் துவங்கினாள். மனதுக்குள் நடக்கும் பட்டிமன்றத்தை அவளால் தடுக்கவே முடியவில்லை.

அதே நேரம், அவளது அறைக்கதவு தட்டப்படவே, 'வார்டனா...?' எண்ணியவள் அறைக்கதவை திறக்க, அங்கே நின்றிருந்தாள் சாந்தி. சாந்தியும் அந்த கல்லூரியில் படித்தவள்தான். மூன்றாம் வருடம் முதல் செமஸ்டர் முடிந்து, இரண்டாவது செமஸ்டர் படிக்க அவள் வரவில்லை.

அப்பொழுது துவங்கி, நேற்று வரைக்கும் அவளை சந்தித்த நினைவே இல்லை. "உள்ளே வரவா...?" அவள் கேட்ட பிறகுதான், வாசல் கதவை திறந்துவிட்டு அப்படியே நின்றுவிட்டது புரிந்தது.

"உள்ளே வா..., சாந்தி, நீ காலேஜை விட்டு போயிட்டன்னு சொன்னாங்க. நான் ஒரு மாசம் ஆல் இந்தியா டூர் போயிட்டு வரதுக்குள்ளே இங்கே என்னென்னவோ நடந்திருக்கு. யார் யாரோ என்னென்னவோ சொல்றாங்க.

"உன்னையும், வருணாவையும் அதுக்குப் பிறகு பாக்கவே முடியலை. வருணா டிசி வாங்கிட்டதா சொன்னாங்க, உன்னைப் பற்றி அந்த தகவல் கூட கிடைக்கலை..., எங்கே போயிருந்த? என்ன ஆச்சு...?" அவளை உள்ளே அழைத்து அமர வைத்தாள்.

"அதையெல்லாம் இப்போ சொல்ல நேரமில்லை. நீ அந்த பிரம்மாவோட பழகுறது நல்லதில்லை..., அதை சொல்லிட்டு போகலாம்னுதான் வந்தேன். அவன் உன் அண்ணாவை கொன்னவன்..., அவனை நீ அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து மன்னிச்சுட்டியா?

"உனக்கும் அவனுக்கும் கல்யாணம்னு வேற அரசல் புரசலா பேசிக்கறாங்க. உன் அண்ணாவை கொன்ன கொலைகாரனை எப்படி உன்னால் கணவனா ஏத்துக்க முடிந்தது? இது உன் அண்ணாவுக்கு செய்யும் துரோகம்னு உனக்குத் தெரியலையா?" அவள் கேட்டுகொண்டே செல்ல,

ஏற்கனவே குழப்பத்தில் இருந்தவளது மனம், மேலும் கலங்கிய குட்டையானது.

“அவனை பழி வாங்கணும்னு உனக்கு தோணவே இல்லையா? நானாக இருந்திருந்தால், அவனை எப்பொழுதோ கொன்று போட்டிருப்பேன். ச்சீ..., போயும் போயும் அவனோடு உனக்கு வாழ்க்கை அவசியமா? வாழ்நாள் முழுவதும் கல்யாணமே செய்யாமல் இருந்தால் கூட பரவாயில்லை, இது...” அவள் மேலும் உரமேற்ற, மனதுக்குள் குறுகிப் போனாள்.

அதே நேரம்..., கிட்டத்தட்ட ஆறு மாதங்களாக காணாமல் போயிருந்த அவள், திடுமென முளைத்து எதற்காக இதையெல்லாம் சொல்கிறாள் என காயத்ரி சிந்திக்கவே இல்லை. அப்படி சிந்தித்து இருந்தால், தன் வாழ்க்கையில் நேரவிருக்கும் அனைத்து அனர்த்தங்களையும் தவிர்த்திருப்பாள்.

ஆனால் எங்கே..., அவள் மூளைக்குள்தான் ஏற்கனவே சாத்தான் புகுந்திருந்தான், அது கொஞ்சம் அடங்கியிருக்க, அதை விசிறிவிடும் வேலையை செவ்வனே செய்தாள் சாந்தி.

“காயத்ரி..., இது உனக்குக் கிடைத்திருக்கும் சரியான வாய்ப்பு. எப்படியாவது அவனை தீர்த்துக் கட்டிவிடு. உனக்கு எதுவும் ஆகாமல் பார்த்துக் கொள்வது எங்களது கடமை. அவன் உன்னை எதுவும் செய்ய மாட்டான், நீ தைரியமாக அவனைக் கொன்றுவிடு...” ஏற்கனவே காயத்ரிக்கு அவனைப் பிடிக்காது என்பதை அறிந்து வந்திருந்தவள், அதற்குத் தக்க பேசினாள்.

அவள் எதற்காக தனக்கு உதவ வேண்டும்? அவளுக்கும் பிரம்மாவுக்கும் என்ன பகை..., எந்த கேள்வியும் கேட்கும் நிலையில் காயத்ரி இல்லை. ஆனால் அவள் கேட்டிருக்க வேண்டும்..., அப்படி கேட்க விடாமல் செய்தது விதியா?

“அவன் எல்லாம் இருப்பது நம் நாட்டுக்கே கேடு..., அதிகாரம் அவன் கையில் இருந்தால் என்ன வேண்டுமானாலும்

செய்வானா? நாம இப்படியே பொறுமையாக இருப்பதால் தான், அவன் எல்லாம் ரொம்ப ஆட்டம் போடறான்..., அவன் ஆட்டத்தை நம்மளாலும் அடக்க முடியும் என்று காட்ட வேண்டும்...” போதனை நன்றாகவே வேலை செய்தது.

முன்பாவது தனியாக இருக்கிறோம் எனத் தயங்கியவளுக்கு, துணைக்கு ஆள் இருக்கிறது என்ற சந்தோஷத்திலேயே யானை பலம் உணர்ந்தாள். தன் கைப்பையில் இருந்த பட்டன் கத்தியை அவள் கைகள் தாமாகவே வருடியது.

காயத்ரியின் மூளை சாத்தானின் கூடாரமாகவே மாறிப் போனது. வந்தவளை எதிர்த்து ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்பது அவள் நினைவிற்கே வரவில்லை. அப்படியே கேள்வி கேட்டிருந்தாலும், வந்தவள் அதை அழகாக சம்மாளித்திருப்பாள் என்பது வேறு விஷயம்.

ஆனால்..., காயத்ரி எதிர்த்து கேள்வி கேட்டிருந்தால், அடுத்து தூபம் போட வருகையில் யோசித்திருப்பாள். அதை விடுத்து, காயத்ரியின் மௌனம், தனக்கு ஒரு அடிமை சிக்கியதை அவளுக்கு உறுதி படுத்தியது.

அவர்கள் பேசிக் கொண்டு இருக்கையிலேயே, காயத்ரியின் அலைபேசி ஒலியெழுப்ப, எஸ்பி..., என அதில் ஒளிர, வேகமாக அதை கட் செய்தாள்.

“காயத்ரி..., இது ஒரு நல்ல சந்தர்ப்பம்..., நெருங்கிப் பழகி அவனை பழி தீர்த்துவிடு. இப்போ போ..., உனக்கு எந்த உதவி வேண்டும் என்றாலும் என்னைக் கேள்...” அவளை அனுப்பியவள், தானும் அவள் பின்னால் நடந்தாள்.

மனம் முழுக்க குழம்பிய குட்டையாக..., அவனைக் கொல்ல வேண்டும் என்ற வெறி அவளுக்குள் அதிகரித்தது என்னவோ உண்மை. அவன் ஜீப்பை நிறுத்திய இடத்துக்குச் சென்றவள், கந்தன் இல்லாததை கவனித்தாள். அவன் பார்வை ஒரு நிமிடம் அவளை முழுதாக வருட, முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாள்.

வழக்கமாக அவனை யூனிபாமில் பார்த்து பழகியவளுக்கு, முதல் முறையாக காக்கி பேண்டுக்கு மேலே, வெள்ளை டிஷர்ட்டை அவன் அணிந்திருக்க, அவள் அசட்டையையும் மீறி, அவள் கவனத்தில் பதிந்தது. கை ஆர்ம்ஸை அவனது டிஷர்ட் கவ்விப் பிடித்திருக்க, முறுக்கேறிய அவனது புஜம் கவனத்தைக் கவர, பார்வையை வலுக்கட்டாயமாக திருப்பினாள்.

அவள் முரண்டுபிடிக்காமல் வந்ததே அவனுக்கு போதுமானதாக இருக்க, "ஏறு…" உரைத்தவன், வண்டியைப் கிளப்ப…, அவளோ பின்னால் ஏறவா, முன்னால் ஏறவா என தடுமாறிக் கொண்டிருந்தாள்.

"நான் உனக்கு டிரைவர் வேலை பாக்க வரலை…" வாயில் இருக்கும் சுவிங்கத்தை மென்றவாறே உரைக்க, முன்னால் ஏற முயன்றாள். காரில் ஏறியிருக்கிறாள்தான், முதல் முறையாக ஜீப்பில் ஏறுவது வித்தியாசமாக இருந்தது.

"நான் ஹெல்ப் பண்ணவா…?" அவள் தடுமாற்றம் கண்டு, மெல்லிய சிரிப்பில் அவன் வினவினாலும், அதில் அக்கறை அதிகம் இருந்தது.

ஆனாலும் அவனை முறைத்தவாறே இருக்கையில் ஏறி அமர்ந்தாள். மனதுக்குள், 'இவன் என்னவோ நேர்மையான அதிகாரின்னு சொன்னாங்க, எப்போ பார்த்தாலும் இந்த ஜீப்பிலேயே சுத்திட்டு இருக்கான்…' அவள் எண்ணத்தை பார்வை சுழன்று வெளிப்படுத்த, அதைப் பார்த்தவன்,

"இது என் சொந்த காசில் நான் வாங்கின ஜீப்…, என்னோட இன்னோவா காரை ஸ்டேஷன் எஸ்ஐ யூஸ் பண்றான். இருபதுலட்சரூபா ஜீப்பை கவர்மெண்ட் கொடுக்குமா? யோசிக்கவே மாட்டியா?" அவன் கேட்டபொழுது, 'என்னை புரிந்துகொள்ளவே மாட்டாயா?' என்ற ஏக்கம் தொங்கி இருந்ததை அவள் உணர மறுத்தாள்.

அதே நேரம்…, எதேச்சையாக அவளது பார்வை இடப்பக்கம் பாய, அங்கே…, செடிகளுக்குள் மறைந்தவாறு விரைந்து கொண்டிருந்தாள் சாந்தி. அவளது பார்வை, பதட்டமாக

பிரம்மாவின்மேல் பதிந்து மீள்வதைப் பார்த்தவளுக்கு, புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது.

*****

# பகுதி – 15.

ஜீப்பில் ஏறிய காயத்ரிக்கு சாந்தி மறைந்து, பதுங்கி செல்வதைப் பார்த்து குழப்பமாக இருந்தது. அதே நேரம், ‘சாந்தியையும் இவன்தான் மிரட்டி வைத்திருக்கிறானா? அவள் ஏன் இவனைப் பார்த்து பதுங்கிப் போகிறாள்...?’ எண்ணினாலும் மனதின் ஓரம் சிறு நெருடல்.

ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்த பிரம்மா அவளைப் பார்த்தவாறே ஜீப்பை செலுத்த, ‘என் மூஞ்சியில் என்ன படமா ஓடுது..., இப்படிப் பாக்கறான்?’ கடுப்பானாள்.

அவனோ..., “புதுசா என்ன குழப்பம் காயு...?” கேட்டு அவளை அதிரவிட்டான். ‘என் மூஞ்சி அப்படியா மனதை காட்டித் தொலையிது?’ எண்ணியவளுக்கு முகத்தை எப்படி சரியாக வைப்பது என்றே தெரியவில்லை.

‘ஆண்டவா எனக்கு ஹெல்ப் பண்ணு..., நான் இப்போ என்ன செய்யட்டும்?’ மனதுக்குள் புலம்பினாள்.

‘அன்று ரசலை இவனிடமிருந்து காப்பாற்ற வேண்டி வருகிறேன் எனச் சொல்லி அனுப்பியது எவ்வளவு பெரிய பிசகு. இப்போ இவனோட ஜீப்பில் ஒண்ணா போயிட்டு இருக்கேன். இதை என் அண்ணாவோட ஆத்மா பார்த்தால் என்ன நினைக்கும்?’ எண்ணியவளுக்கு தலையை வலித்ததுதான் மிச்சம்.

அதே நேரம்..., வடபழனி கோவிலை அவர்கள் தாண்டவே..., “கோவிலுக்கு போயிட்டு போகலாமா?” அவள் கேட்க, புருவம் மேலேற அவளைப் பார்த்தவன், மறுக்காமல் வண்டியை திருப்பினான். ‘ஆண்டவா, நான் என்ன கேட்டாலும், செய்யறானே. மனம் ஒரு பக்கம் ரசித்து தொலைப்பதை என்ன செய்ய?’ மனதுக்குள் மருகினாள்.

அன்று கோவிலில் யாரோ அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்திருக்க, ஸ்பெஷல் பூஜை, அலங்காரம் என அந்த நேரமும் கோவில் திறந்திருந்தது.

“ஒரு அர்ச்சனை சீட்டு வாங்கிட்டு வர்றேன்…” அவன் முகம் பாராமல் சொல்லிச் செல்ல முயல, “நீ போ…, நான் வாங்கிட்டு வர்றேன்…” உரைத்தவன், சுவிங்கத்தை மெல்ல, அவனை கோபமாக முறைத்தாள்.

‘என்ன…?’ என்பதுபோல் அவன் புருவத்தை உயர்த்த, “வாயில் இருப்பதை முதல்ல துப்பிட்டு போங்க…, எப்போ பாத்தாலும் அசை போட்டுட்டு…” முன்னதை சத்தமாகவும், பின்னதை முனகலாகவும் உரைக்க, கண்கள் பிரகாசிக்க, அவள் சொன்னதை செய்துவிட்டே போனான்.

‘முருகா…, நான் என்ன செய்யணும்னு எனக்கு வழி காட்டு, ஏதோ சுழலுக்குள் சிக்கிட்ட மாதிரி இருக்கு. அவன் நல்லவன் இல்ல…, நீயே இந்த கல்யாணத்தை எப்படியாவது நிறுத்திடு…, என்னால் இந்த கல்யாணத்தை நிறுத்த முடியலை, சொன்னாலும் அவன் கேக்க மாட்டான்’ கண்கள் கலங்கியது.

“காயு…, என்ன நின்னுட்டே தூங்கறியா…?” அவன் குரல் கேட்கவே, கண் விழிக்க, கையில் அர்ச்சனை கூடையோடு, பூ சகிதமாக நின்றான். ‘இவ்வளவு நேரமா நின்னோம்?’ எண்ணினாள்.

“இது உனக்கு…” பூவை அவள் கையில் கொடுக்க, அந்த நேரம் கோயில் மணியும் ஒலிக்க, தான் எப்படி உணர்கிறோம் என்றே அவளுக்குத் தெரியவில்லை.

‘என் கல்யாணத்தை நிறுத்த சொன்னா…, நீ என்ன செய்யிற முருகா?’ மானசீகமாக கடவுளிடம் கேட்டாள். அவள் பூவை தலையில் வைத்துக் கொள்ளாமல் அங்கிருந்து நகர முயல, அவளுக்கு குறுக்காக கை நீட்டி தடுத்தான்.

அவள் என்ன என்பதுபோல் பார்க்க, அவள் கையில் இருந்த மல்லிகைப் பூவில் அவன் கண்கள் பதிய, அதென்னவோ வாய் திறந்து ‘எனக்கு பூ வேண்டாம்’ என சொல்ல மனம் வரவில்லை. கோயில் சந்நிதானத்தில், அவன் கொடுத்த

பூ..., ‘இந்த செண்டிமெண்டை கட்டிக்கொண்டு’ தன்னை நினைத்தே அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

அவள் அமைதியைப் பார்த்தவன், “ஓ..., நானே வச்சு விடணுமா?” இதழோரம் மெல்லியதாக சிரிப்பில் விரிய, கண்களில் ஏறிய ஒளி..., பட்டென பார்வையை திருப்பியவள், தானே பூவை வைத்துக் கொண்டாள்.

பட்டென திரும்பி, அர்ச்சனைத் தட்டோடு உள்ளே செல்ல, ஐயரிடம்..., “சாமி பேருக்கே அர்ச்சனை பண்ணிடுங்க...” அவள் சொல்ல, அமைதியாக அவள் அருகில் நின்றிருந்தான்.

‘முருகா..., ரோஜா வந்தால் நீ என் கல்யாணத்துக்கு சம்மதிக்கிற, வெள்ளை பூ வந்தால் நீ என் கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னு எடுத்துக்கறேன், நீயே சொல்...’ மனமுருக வேண்டினாள். திக்கற்றவருக்கு தெய்வம் தானே துணை.

அப்பொழுது வந்த ஐயர், அவள் கையில் ரோஜா பூவை அள்ளிக் கொடுக்க, ‘முருகா...?’ கண்ணீர் கண்களில் குளம் கட்ட, முருகனையே பார்த்திருந்தாள்.

அதே நேரம்..., எதிரில் ஒரு குடும்பம் வந்து நிற்க, அதில் இருந்த சிறுமியோ, “அண்ணா...” என பிரம்மாவைப் பார்த்து அழைத்தது. அது வரைக்கும் யாரோ வருகிறார்கள் என அசால்ட்டாக இருந்தவன், ‘அண்ணா’ என்ற அழைப்பில் வேகமாக அவள் முகம் நோக்கினான்.

நிவேதா அவன் எதிரில் நின்றிருக்க, அவள் அருகில், எதிர்பார்ப்பை சுமந்த முகத்தோடு நின்றிருந்தார் கலைவாணி. “பிரம்மா..., எப்படிப்பா இருக்க? இன்னைக்கு உன்னை பார்ப்பேன்னு நான் எதிர்பாக்கவே இல்லை” நெகிழ்ந்தவரின் கண்கள் கண்ணீரை வடித்துக் கொண்டிருந்தது.

“ஹேப்பி பெர்த்டேண்ணா...” நிவேதா உரைக்க, ‘எனக்கு இன்னைக்கு பிறந்த நாளா?’ அவனுக்கு சுத்தமாக நினைவில்லை.

‘இன்னைக்கு உன் பிறந்த நாளா? இது யார்...?’ என்பதுபோல் அவனைப் பார்க்க, “வா போகலாம்...” அவன் நடந்தான்.

“பிரம்மா..., இந்த அம்மாகிட்டே ஒரு வார்த்தை பேசிட்டு போப்பா...” கலைவாணி கெஞ்ச, அதைப் பார்த்த காயத்ரிக்கு பெரும் குழப்பம்.

“அவங்க யார்...?” அவனிடம் கேட்க, “எனக்குத் தெரியாது...” அது கோயில் என்பதையும் மீறி, அவன் குரல் உச்ச டெசிபலில் உரைக்க, கலைவாணி குலுங்கி அழ, நிவேதா தாயை அணைத்துக் கொண்டவள், பிரம்மாவை கெஞ்சலாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அவங்க இப்படி அழறாங்க..., நீங்க தெரியாதுன்னு சொல்றீங்க...? அதெப்படி?” காயத்ரி நின்றுவிட்டாள். அவனைப் பார்த்து கலைவாணி அழுது கொண்டிருக்கையில், அவனைப்போல் இரும்பாக அவளால் விலக முடியவில்லை.

“தெரியாதுன்னா, தெரியாதுன்னுதான் சொல்ல முடியும்...” ஏனோ அவனால் அங்கே நிற்க முடியவில்லை. தாயின் அழுகை, தங்கையின் கெஞ்சல் பார்வை, சற்று தூரத்தில் நின்ற அந்த மனிதரின் கனிவான பார்வை..., இவர்களில் யாரையுமே அவனுக்கு நினைவில்லை.

அப்படி இருக்கையில் அவன் என்னவென்று அவர்களிடம் பேசுவான்? இதற்கு முன்னர் அவர்களிடம் தான் நடந்துகொண்ட முறையை நிவேதா சொல்லி கேட்டிருக்க, அவனுக்கு இப்பொழுது எப்படி நடந்துகொள்ள என்றே தெரியவில்லை.

கோபத்தை அணிந்துகொண்டு விலகி நடந்தான். அவன் பின்னால் போக முடியாமல் அவள் முன்னால் வந்து நின்ற கலைவாணி..., “அம்மாடி..., நீ...” அவளிடம் கேட்டவர், பார்வையை மகனின் முதுகின் பின்னால் செலுத்தினார்.

‘இதற்கு என்ன பதில் சொல்வது?’ அவள் தயங்க, “அண்ணாவை கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா?”

நிவேதா இடை புகுந்தவள், அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

‘இந்த சின்ன பொண்ணு கூட, லவ் பண்றீங்களான்னு கேக்கலை, கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களான்னு கேக்கறா. அந்த அளவுக்கு அவரைத் தெரிந்திருக்கு’ அவள் எண்ண,

இப்பொழுது கலைவாணியின் முகம் எதிர்பார்ப்பில் விரிந்து…, ஆசையும், ஏக்கமுமாக அவள் முகத்தைப் பார்க்க, ‘ஆம்…’ என்பதுபோல் தலை அசைத்தாள். அடுத்த நிமிடம் அவளது கரத்தை பற்றிக் கொண்டவர், “அம்மாடி…, அவனை நல்லா பாத்துக்கோம்மா…, சின்ன வயசில் இருந்தே யாரையும் நெருங்க விடாமல் வளந்துட்டான்.

“இனிமேல் அவனுக்கு எல்லாமே நீதான். நான் செஞ்ச பாவத்தால், அவன் எங்கே இப்படியே இருந்துடுவானோன்னு நினைத்து பயந்துட்டு இருந்தேன். ஆனா…, எப்போ உன்னை கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்ணிட்டானோ, எனக்கு இனிமேல் கவலை இல்லை.

“எனக்கு ஒரே ஒரு வாக்கு கொடு…, எந்த சூழ்நிலையிலும், எந்த கஷ்டத்திலும் அவனை விட்டு போக மாட்டேன்னு எனக்கு வாக்கு கொடும்மா…” அவள் முன்னால் கை நீட்டி நிற்க, திகைத்துப்போய் நின்றிருந்தாள்.

ஆனாலும், அவர் கண்ணில் இருந்து வழிந்த கண்ணீர்…, அவரது ஏக்கம்…, யாசிக்கும் விதமாக நின்ற அவரது நிலை…, தன்னை மீறி தன் கரத்தை, அவர் கரத்தில் வைத்தாள். அடுத்த நிமிடம் அவளை அப்படியே தன்னோடு இறுக்கிக் கொண்டார்.

“எனக்கு இது போதும்…, போதும்…, முருகா…, என் வேண்டுதல் வீண் போகலை” தலைக்குமேல் கை குவித்து வணங்கினார்.

“நீங்க…” இவ்வளவு நேரமாக அவர் யார் என்பதை சொல்லவில்லையே.

“நான்..., அவனோட அம்மா...” அவர் சொல்ல, கரண்ட் கம்பியை மிதித்த உணர்வில் ஷாக்கானாள்.

‘பெற்ற தாயையா எனக்குத் தெரியாது என்று சொல்லிச் சென்றான்...’ அவள் எண்ணம் உணர்ந்தவராக, “அந்த கதையெல்லாம் உனக்கு பிறகு சொல்றேன்...” வேகமாக தன் கண்ணீரை துடைத்துக் கொண்டார்.

கூடவே..., தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழட்டி அவள் கழுத்தில் போட, அவர் உருவில் தன் தாயைக் கண்டாள். ஆனாலும், தங்கம் விற்கும் விலைக்கு, குறைந்தது மூன்று பவுன் இருக்கும் அந்த தங்கச் சங்கிலியை அவளால் ஏற்க முடியவில்லை.

“இல்ல..., எனக்கு இதெல்லாம் வேண்டாம்...” அவள் தன் கழுத்தில் இருந்து கழட்டப் போக,

“உன் புருஷனை பெத்தவ என்ற முறையில் சொல்றேன். இதை நீ கழட்டக் கூடாது...” அவர் தடுக்க, தடுமாறிப் போனாள். அதே நேரம், மகேஸ்வரன் வரவே, “என்னங்க..., நம்ம மருமக..., உன் பேர் என்னம்மா...?” அப்பொழுதுதான் அதையே கேட்டார்.

“காயத்ரி...” அவள் உரைக்க, “பேர் பொருத்தம் கூட அம்சமா இருக்குங்க. நாள் நட்சத்திரம் என்னம்மா...?” கலைவாணி கேட்க,

“கலை..., என்ன இது...?” “அம்மா...” என மகேஸ்வரனும், நிவேதாவும் ஒன்றுபோல் கண்டிப்பாய் குரல் கொடுத்தார்கள்.

“அவன் என் பேச்சை கேக்க மாட்டான்தான்..., ஆனாலும்..., என் மன திருப்திக்கு...” அவர் கண்ணீர் விட, அங்கே யார் என்ன சொல்வது எனத் தெரியாத மௌனம். அதைக் கலைத்தவள் காயத்ரிதான். தன் நாள் நட்சத்திரம் சொல்ல..., அவனது நாள் நட்சத்திரத்தை கலைவாணி உரைத்தார்.

காயத்ரிக்கு கேட்க, தெரிந்துகொள்ள ஆயிரம் கேள்விகள் இருந்தது. ஆனால், எதையும் கேட்க முடியாமல், கையில் இருந்த அலைபேசி கரடியாய் கனைக்க, அவனது எண்ணைப் பார்த்தவள், அவர்களை தயக்கமாய் ஏறிட்டாள்.

“அவனாம்மா..., நீ போம்மா..., கலை..., அவளை அனுப்பு...” மகேஸ்வரன் சொல்ல, மனமே இல்லாமல் அவளை அனுப்பினார்.

அவளை அனுப்பும் முன்னர், “அவனை பாத்துக்கோம்மா..., அவனுக்கு அம்மா, அப்பா..., எல்லாம் நீதான்...” அவளை கன்னம் தாங்கி, நெற்றியில் முத்தமிட்டு மனமே இல்லாமல் அனுப்ப, இப்படி ஒரு தாயை ஏன் வெறுக்கிறான் எனப் புரியாமல் குழம்பிப்போய் நடந்தாள்.

‘ச்சே..., பெத்த அம்மாகிட்டே கூட எதற்கு இவ்வளவு கோபம்..., என்ன மனிதன் இவன்...? இப்படி ஒருத்தன் இருக்க வேண்டுமா?’ அவளுக்கு எரிச்சலாக வந்தது.

ஜீப்புக்கு வந்தவள் அவன் முகம் பார்க்க, அதுவோ இரும்பாக இருந்தது. கண்ணை மறைத்து கூலிங்கிளாஸ் இருக்கவே, அவன் என்ன நினைக்கிறான் என அவளுக்குத் தெரியவில்லை.

“அவங்க யார்ன்னு சொல்லுங்க...?” அவன் வாயால் அவளுக்கு அறிய வேண்டி இருந்தது. அவன் சொல்வானா என சோதித்து பார்க்க விரும்பினாள்.

அவனோ..., “அதான் எனக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டேனே..., இன்னும் எத்தனை முறை கேட்டாலும் என் பதில் இதுதான்..., போதுமா?” முதல் முறையாக அவளிடம் அவ்வளவு கோபம் காட்ட, அதிர்ந்து போனாள்.

கூலிங்கிளாசுக்குப் பின்னால் அவன் கண்கள் கலங்கியிருந்ததை அவள் உணரவே இல்லை.

ஜீப் டி-நகரை அடையும் வரைக்கும் இருவரும் எதையும் பேசிக் கொள்ளவே இல்லை. ‘இவனுக்கு இன்னைக்கு

பிறந்தநாள்ன்னு சொன்னாங்களே, விஷ் பண்ணணுமா வேண்டாமா?' அவள் யோசனை இதுவாகத்தான் இருந்தது.

வாழ்த்தும் எண்ணம் சிறிதும் வரவில்லை..., மனதுக்குள் ஒளிந்திருக்கும் கோபம் அவ்வப்பொழுது தலைகாட்டுவதை தடுக்கவும் முடியவில்லை. தெய்வம் தன் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்து விட்டாலும், முழு மனதாக ஒன்ற முடியவில்லை.

'என்னால் உன்னை திருமணம் செய்ய முடியாது போடா...' என முகத்தில் அடித்தாற்போல் ஏன் சொல்ல முடியவில்லை என லட்சம் முறையாக சிந்தித்து விட்டாள். ஒன்று வேண்டும் என்றால் வேண்டும், இல்லை என்றால் இல்லை..., இப்படி ஏன் இருக்க முடியவில்லை?' தனக்குத் தானே கேட்கும் கேள்விக்கு விடை அவளிடம் இருக்கவில்லை.

'இவன்தான் என்கிட்டே எதையுமே சொல்லலையே..., பிறகு ஏன் நான் விஷ் பண்ண வேண்டும்..., தேவையே இல்லை. இவன் எல்லாம் பிறந்ததே வேஸ்ட்..., இதில் அவனுக்கு நான் விஷ் செய்வதா?' கோபம் மனதில் மூள அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

அவனோ..., 'அந்த அம்மாவின் அழுகை போலியாகத் தெரியவில்லை. நிவேதாவின் பாசத்தில் கள்ளத்தனம் இருக்கவில்லை. அங்கே ஒதுங்கி நின்ற மனிதரின் பார்வையில் கலப்படம் இருக்கவில்லை..., ஆனாலும் நான் ஏன் முன்பு அவர்களை ஒதுக்கி வைத்தேன்...?' அவன் எவ்வளவு யோசித்தாலும் எதுவும் நினைவுக்கு வரவில்லை.

'இந்த சூனியம் என்று விலகும்?' மனதுக்குள் வண்டு குடைந்தது. அந்த இறுக்கத்தை யாரிடமும் பகிர முடியாத தன் நிலை..., காயத்ரியிடம் சொல்லலாம் என்றால், எங்கே தன்னை திருமணம் செய்ய மறுத்து விடுவாளோ என்ற எண்ணம்..., அதைச் செய்ய விடாமல் தடுத்தது.

திருமணத்துக்குப் பிறகு அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்று எப்பொழுதோ முடிவெடுத்து விட்டான். அவள்

நினைவுதான் தனக்கு முதலில் வந்தது என்பதால், அவள் கோபத்தை எண்ணி, திருமணத்தை தவிர்க்கவும் முடியவில்லை.

தன் மனதுக்குள் எங்கோ ஓரத்தில் அவள் இருந்திருக்கிறாள் என்ற நினைப்பே, அவனது எதிர்மறை எண்ணங்கள் அனைத்தையும் விரட்டியடித்தது.

யோசனையிலேயே கடையும் வந்துவிட்டது. ஜிஆர்டி கடைக்கு முன்னால் ஜீப்பை நிறுத்தி இறங்க, பணியாளர்கள் வாசலுக்கு வந்து வரவேற்றார்கள். “தாலி வாங்கணும்...” அவன் உரைக்கவே, “கிரவுண்ட் ப்ளோர் போங்க...” வழி காட்டவே, அவளை அழைத்துக் கொண்டு அங்கே சென்றான்.

“வாங்க சார்..., எந்த மாதிரி தாலி வேணும்...” அவனை அழைத்துச் சென்றவர் மேலும் சில கேள்விகள் கேட்க, அவர் கேட்ட எந்த கேள்விக்கும் அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

எந்த வகை தாலி..., மேலும் அவர்கள் கேட்ட எந்த கேள்விக்கும் அவனிடம் விடை இல்லை. ‘இதையெல்லாம் யோசிக்காமல் எப்படி வந்தேன்?’ முகம் மாறாமல் காக்கவே மிகுந்த சிரமப்பட்டான்.

அவளுக்கோ..., ‘ஏன் இப்படி இருக்கறான்? ஒரு வேளை சும்மா விளையாடிப் பார்க்கலாம் என எண்ணிவிட்டானா? இல்லையென்றால், என் அண்ணன் விஷயம் தெரிந்து, என்னை சீண்டிப் பார்க்கிறானா?’ தன் முகம் நோக்கும் பணியாளன் முன்னால் கோபத்தை வெளிப்படுத்த கூட அவளால் முடியவில்லை.

அவன் அசைவின்றி இருப்பதைப் பார்த்தவன், “என்ன சார், லவ் மேரேஜா? சரி விடுங்க..., உங்களுக்கு சொல்லத் தெரியலன்னா, இதில் இருக்கும் மாங்கல்யங்களைப் பாருங்க..., எந்த மாடல்ன்னு சொல்லுங்க, அதையே செஞ்சுடலாம்...” ஒரு ட்ரே நிறைய மாங்கல்யங்களைக் காட்ட, அவனுக்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்ட உணர்வு.

அவன் காயத்ரியை நோக்க..., அவளோ..., தன்னை அவன் அழைத்து வந்து அவமானப்படுத்தி விட்டதாகவே கருதினாள். அவன் முகம் பார்க்கவும் பிடிக்காமல், முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அதே நேரம்..., அவன் அலைபேசி ஒலியெழுப்ப..., “கேஷியர்...” ஒளிர்ந்த எண்ணைப் பார்த்து புருவங்கள் முடிச்சிட்டன.

“ஒரு நிமிஷம்...” உறுமலாக உரைத்துவிட்டு, அலைபேசியோடு அங்கே இருந்து நகர்ந்தான். அவன் செல்லவே..., “என்ன மேடம்..., சார்க்கு ஏதோ கோபம் போல..., எதையுமே சொல்ல மாட்டேங்கறார்...” அவள் மனநிலை புரியாமல் அந்த ஊழியன் கேட்க, அவளுக்கு அப்படியே ஆத்திரம் பொங்கியது.

பொய்யாகக் கூட சிரிக்க முடியாமல், அங்கே இருந்து நகர்ந்தாள். ‘அவனுக்கு எவ்வளவு திமிர்..., அகங்காரம் இருக்கணும்..., என்னை கூட்டி வந்து இப்படி அவமானப் படுத்திட்டான்..., அவனுக்கு இருக்கு..., அவனை பழி வாங்காமல் விட மாட்டேன்...’ மனதுக்குள் கறுவிக் கொண்டாள்.

நான் என்ன மரக்கட்டையா..., அவன் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் செல்ல, என்ன கேட்டாலும் இரும்பாக முகத்தை வைத்துக் கொண்டு தப்பித்துக் கொள்கிறான். அதற்கெல்லாம் பயப்படும் ஆள் நான் இல்லை. அவன் வரட்டும்..., மனம் தீயாய் எரிந்தது.

ஏற்கனவே அவன்மேல் விருப்பம் இல்லாதவள், அவன்மேல் கொலை வெறியில் இருப்பவள் அப்படி இருக்கையில், அவன் அவளை அவமானப்படுத்துவதுபோல் நடந்துகொண்டால் அவளும் என்னதான் செய்வாள்?

சாந்தியின் போதனை, ஏற்கனவே அவன்மேல் இருந்த கோபம், இப்போதைய அவமானம் என அனைத்தும் சேர, அவனை கொன்று போட்டுவிடும் ஆத்திரத்தை அவளால் அடக்கவே முடியவில்லை.

அலைபேசியில் பேசிவிட்டு வந்தவன், அங்கே இருந்த மாங்கல்யங்களைப் பார்க்க, சட்டென மூளைக்குள் ஒரு மின்னல்..., ஒரு பூஜையறையில், ஒரு புகைப்படத்தில், பூமாலைக்குப் பதிலாக, ஒரு தாலி அலங்கரிக்கப் பட்டிருக்க, அதன் வடிவம் அவனுக்கு சரியாகத் தெரிந்தது.

முயன்று தன்னை தடுமாற்றத்தில் இருந்து மீட்டவன், அதே மாதிரி இருந்த தாலியைக் காட்ட, அடுத்த அரைமணி நேரத்தில் அதை வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

காயத்ரி அமைதியே வடிவாக இருக்க, அவனுக்கு என்னவோபோல் இருந்தது. எப்பொழுதும் வாய் ஓயாமல் பேசிக்கொண்டு, கத்திக்கொண்டு இருப்பவள் அமைதியாக இருக்கவே, கூடவே அவள் முகத்தில் இருந்த அளவிட முடியாத கோபம்..., ஜீப்பை ஓட்டியவாறு என்னவென்றும் கேட்க முடியவில்லை.

அந்த நேரம் தனிமை வேண்டும்போல் இருக்க, ஜீப்பை மெரினா பக்கம் திருப்பியவன், ஆளரவமற்ற இடத்தில் நிறுத்தினான். மதிய வெயில் சுள்ளென தாக்க, கூலிங்கிளாசை எடுத்து அணிந்து கொண்டான்.

அவளோ..., தன் கைப்பையில் இருந்த பட்டன் கத்தியை இறுக பற்றிக் கொண்டவள், அவன் பக்கம் பார்த்தாள். ‘வா...’ என்பதுபோல் தலையசைத்து அவளை அழைத்தவன், மணலில் நடந்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் ஆள் அரவமே இல்லை.

இந்த உலகத்தில் யாரையும் எதையும் தெரியாமல் இருந்த பொழுதும், காயத்ரி தன்னுடன் இருப்பது ஒரு இதத்தை கொடுக்க, முதல் முறையாக தன் இறுக்கம் தளர்த்தினான்.

தங்கள் திருமணத்துக்கு சம்மதிக்கவே மாட்டாள், தன்னோடு வரவே மாட்டாள் என எண்ணியிருந்த காயத்ரி தன்னோடு வந்தது..., அவள் வரவில்லை என்றால் பிடிவாதமாக அழைத்து வந்திருப்பான் என்பது வேறு விஷயம்.

ஆனால்..., எந்த தடங்கலும் இல்லாமல் தன்னோடு வந்தது, அவளாகவே கோவிலுக்கு அழைத்தது, தான் வாங்கிக் கொடுத்த பூவை வைத்துக் கொண்டது, இப்பொழுது தாலி வாங்கியது என மனம் தன்னவளை மட்டுமே அப்பொழுது ரசித்தது.

இடையில் தாய் ஏற்படுத்திய குழப்பங்களை சற்று நேரத்துக்கு ஒற்றி வைத்தான். அவளுக்கோ..., அவ்வளவு கோபம், அவன் எதையெல்லாம் சாதகமாக எண்ணினானோ, அதையெல்லாம் மறுக்க முடியாமல் செய்ய வைத்துவிட்டானே என அவன்மேல் கோபம் பெருகியது.

பெற்ற தாயையே தெரியாது எனச் சொல்பவன், தன்னை எந்த நிலையில் வைப்பான் என்ற எண்ணம்..., தாலி வாங்கப்போய், தன்னை அவமானப்படுத்திவிட்டான் என்ற அவளது நினைப்பு, சாந்தி கேட்ட கேள்விகள், போதனை..., என அனைத்தும் சேர, ஒரு பெரும் மனப் போராட்டத்தில் இருந்தாள்.

“காயு..., இன்னைக்கு நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? மனசுக்கு என்னவோ நிறைவா இருக்குற மாதிரி இருக்கு..., உன்கிட்டே நான் ஒண்ணு சொல்லணும்...” சொல்லிக் கொண்டே அவள் பக்கம் திரும்ப, உக்கிர காளியாக அவன் முன்னால் நின்றாள்.

அவள் கோபத்தைப் பார்த்தவன், சிறிது தயங்கினாலும்..., “காயு..., ஐ லவ்...” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே வேகமாக தன் கைப்பையில் இருந்து கத்தியை உருவியவள், கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் வயிற்றில் சொருகினாள்.

“யூ...” அவன் காதலைச் சொல்ல, அவன் உயிரைக் குடித்தாள் அவனது காதலி காயத்ரி. அவனது அந்த வெள்ளை டிஷர்ட் இப்பொழுது சிவப்பு நிறத்துக்கு மாறிக் கொண்டிருந்தது.

*****

# பகுதி – 16.

இந்த உலகத்திலேயே தன் மனதுக்கு நெருக்கமான ஒரு உறவான அவளை, தனியே அழைத்து வந்தவன் தன் காதலைச் சொல்ல, அடுத்த நிமிடம் அவன் உணர்ந்ததோ..., தன் இடப்பக்கம், அடி வயிற்றில் தசை கிழிய, உதிரம் கொப்பளிக்க, ஒரு அசாதாரண வலி.

“காயு..., ஐ..., லவ்..யூ” அவன் காதலை சொல்லி முடிக்கையில், நொடிக்குள் அவள் செயல்பட்டிருந்தாள். அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு ஆத்திரம் கோபம், ஆங்காரம் வந்தது என்றே தெரியவில்லை.

இந்த நொடி அதைச் செய்யவில்லை என்றால், இனிமேல் எப்பொழுதுமே செய்ய மாட்டோம் எனப் புரிய, அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதைக் கூட கவனிக்காமல், அவன் வயிற்றில் கத்தியை இறக்கியிருந்தாள்.

அடுத்த நிமிடம்..., தன் காதில் மோதிய, ‘ஐ லவ் யூ...’ என்ற வாசகமும், கூடவே, தன் முகத்தில் பட்டென தெறித்த சூடான ரத்தமும், அவளை உச்ச அதிர்ச்சியில் உறையச் செய்தது.

முகத்தில் வெந்நீர் ஊற்றிய உணர்வில் கையை வெடுக்கென உருவிக் கொள்ள, நொடியில் அவனது சூடான ரத்தத்தில் குளித்திருந்தது அவளது கரம்.

‘ஹையோ..., என்ன செய்துவிட்டேன் நான்...’ தான் அவனை கத்தியால் குத்தியதே பேரதிர்வென்றால், அவன் காதலைச் சொன்னது..., அவளால் நம்பவே முடியவில்லை. ஏதோ ஒரு கோபத்தில், தன்னை பழிவாகவே அவன் தன்னிடம் திருமண நாடகம் போடுகிறான் என நினைத்தால், அவன் காதலைச் சொன்னதில் திகைத்துப் போனாள்.

அந்த நேரம் அவன் குரலில் இருந்த மென்மை, பரவசம்..., ‘ஹையோ...’ தேகம் முழுவதும் நடுங்க, தன் கையில் சிவப்பு ரத்தம் வழிய, முகத்தில் தெறித்த ரத்தமும் சேர, நடு நடுங்கிப் போனாள்.

“காயூ…” ‘நீயா இப்படி…?’ அவனது அழைப்பு அவளுக்கு இப்படித்தான் கேட்டது.

அவள் கத்தியால் குத்தியவுடன் அவள் கரத்தை நொடியில் பிடித்துவிட்டான். அடுத்த நிமிடம் அவள் கை நரம்பை சுண்டிவிட அவனது அனிச்சை செயல் தூண்டிவிட, அதைச் செய்ய முடியாமல் தேக்கியது அவனது காதல் கொண்ட மனம்.

அவன் கூலிங்கிளாசை தாண்டி அவனது விழிகள் அவளை அதிர்ச்சியாய் நோக்க, அவளோ…, அந்த சிவப்பு ரத்தத்தை காண முடியாமல் நெஞ்சுக்கூடு உலர, மூச்சு விடவும் மறந்து…, திணறினாள்.

காயத்ரிக்கு ஒரு பழக்கம் உண்டு, அவள் சிறு அதிர்ச்சிக்கு உள்ளானாலும் அவளால் மூச்சு விட முடியாது. அப்பொழுது யாராவது அதிரடியாக அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தாலோ, இல்லையென்றால் பலமாக ஊதினாலோ மட்டும்தான் மூச்சு விடுவாள்.

அன்று அவனது அலுவலகத்தில் வைத்து அவளை அவன் நெருங்கியபொழுது அவள் மூச்சுவிட மறந்ததும் அதனால்தான். அதேபோல் இப்பொழுதும் ஆக, அந்த நிலையிலும் அவளுக்காகப் பார்த்தவன், “காயு…, மூச்சு விடு…” அவளை நெருங்கியவன், அவள் முகத்தில் வேகமாக ஊத, சட்டென மூச்சு விட்டாள்.

அவனை தான் கொலை செய்ய கத்தியால் குத்திய அந்த நேரத்திலும், அவன் தனக்காகப் பார்க்க, அவளுக்கு பெரும் தவிப்பு. கூடவே, அவன் தானாகவே, வயிற்றில் இருந்த கத்தியை பலம் கொண்ட மட்டும் உருவ, “ஹ்…, ஹா…” அது கொடுத்த வேதனையில் அவன் மெதுவாக அலற, அவளுக்கு சர்வமும் ஒடுங்கியது.

“ஆ… ஆ…” கிட்டத்தட்ட அலறியிருந்தாள்.

நியாயப்படி அவனை கொல்ல முயன்றவளுக்கு, அவனது வேதனை, வலி பெரும் ஆனந்தை தான் கொடுத்திருக்க

வேண்டும், அதற்கு மாறாக, வெடவெடவென நடுங்கிப் போனாள்.

அவன் கத்தியை உருவியதில் பெரும் குருதிப் பிரவாகமே எழுந்து அவன் வெள்ளை டிஷட்டை நனைக்க, அந்த செங்குருதியைக் கண்டவளுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது.

கத்தியை வலக்கையால் உருவியவன், இடக் கரத்தால் கொப்பளிக்கும் குருதியை அடக்க முயன்றான். கத்தியை அவள் பக்கம் நீட்டியவன், “இந்த காயத்துக்கு நான் சாக மாட்டேன்..., இந்தா..., இரக்கமே பார்க்காமல், இன்னும் அழுத்தமா மூணு முறை குத்து...” உணர்வுகளை துடைத்த முகத்தில் உரைக்க, ஆடிப் போனாள்.

“ஹையோ..., ர..த்..த..ம்...” பதறியவள் முகத்தை மூடிக் கொண்டாள்.

“பயமா இருக்கா..., அப்போ சரி..., இன்னொரு சுலபமான வழி...” உரைத்தவன், தான் டக்கின் செய்திருந்த டிஷர்ட்டை வெளியே உருவ, அவன் என்ன செய்கிறான் என விரல் இடுக்கில் பார்த்தவள்..., கால்கள் தள்ளாட கைகால் நடுங்க, இரண்டடி பின் வாங்கினாள்.

அவன் தான் அழுத்திப் பிடித்திருந்த இடக்கரத்தை விலக்க, குருதி விடுதலை உணர்வில் வெளியேறி பாய்ந்தது. அதைப் பார்த்தவள், “என்ன பண்றீங்க...” பதறியவளுக்கு, அவனை நெருங்கிச் சென்று, அவன் குருதியை தடுக்கும் தைரியம் மட்டும் வரவே இல்லை.

“உன் காலடியில் இருக்கும் மணலை, ஒரு கைப்பிடி அள்ளி, என் காயத்தில் போட்டுடு..., ரொம்ப ஈசியா போய்டுவேன். என் சாவுதானே உனக்கு வேண்டும்” கையில் இருந்த கத்தியை தன் பேண்ட் பாக்கெட்டில் செருகியவன், அவளை நோக்கி நடந்தான்.

அவ்வளவுதான்..., சர்வமும் ஒடுங்க..., அவன் காயத்தில் இருந்து வழியும் குருதியையும், அவன் கண்களில் இருந்த

காதலும், குழப்பமும் அவளைத் தாக்க, அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

அவள் மயங்கிச் சரியவே..., நொடியில் அவளை நெருங்கியவன், அவளைத் தாங்கி மணலில் கிடத்திவிட்டு, தன் கர்ச்சீப்பை எடுத்து, தண்ணீரில் நனைத்து, காயத்தில் வைத்து அழுத்தியவன், அவளது சுடிதார் துப்பாட்டாவை எடுத்து அழுத்தமாக இறுக்கி கட்டிக் கொண்டான்.

என்னதான் அவன் தைரியமான, திடனான ஆண்மகன் என்றாலும், ஒரு எக்ஸ்ட்ரீம் வலியும், குருதி வெளியேற்றமும் அவனையும் சற்று தள்ளாட வைக்க, நொடி நிதானித்து, முகத்தில் தண்ணீரை தெளித்துக் கொண்டான்.

தனக்கு முதலுதவி அவசியம் என்பதும், அவளையும் இப்படியே விட்டுச் செல்ல முடியாது என்பதும் புரிய, வேகமாக கந்தனை அழைத்தான். அவன் அழைக்கவே, உடனே அவர் அழைப்பை எடுக்கவே, “கந்தன், உங்க பைக் எடுத்துட்டு உடனே நான் சொல்ற இடத்துக்கு வாங்க, அவசரம்” அவன் குரலில் இருந்த பரபரப்பில், அடுத்த பத்து நிமிடங்களில் அவன் முன்னால் நின்றார்.

அவன் சட்டையில் தோய்ந்திருந்த ரத்தத்தில் பதறி..., “சார்..., என்ன சார் இது? யார் இப்படி பண்ணது...?” முழு பதட்டம் அவரிடம்.

“அதை பிறகு சொல்றேன்..., முதல்ல இவளை உங்க வீட்டுக்கு அழைச்சுட்டு போங்க..., நான் உங்க பைக்கில் ஹாஸ்பிடல் போறேன். விஷயம் யாருக்கும் தெரியக் கூடாது...” அவனது குரலில் இருந்த அழுத்தத்தில் மேலே ஒரு வார்த்தை அவரால் பேச முடியவில்லை.

ஆனாலும்..., “சார்..., ஜீப்பில் முதல்ல ஹாஸ்பிடல் போகலாம் சார்..., வாங்க...” அவனது களைப்பு அவரை இவ்வாறு பேசத் தூண்டியது.

“கந்தன் ஜஸ்ட் ஒபே மை ஆடர்..., இவ உங்க வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது. உங்க வைஃப் கிட்டே சொல்லி

வைங்க. இது வேண்டாம்...” தன் காயத்தை காட்டியவன், அவரது பைக்கில் ஏறினான்.

செல்லும் முன்னர், அவளைத் தூக்கி ஜீப்பின் பின்னிருக்கையில் கிடத்திவிட்டே சென்றான். அவன் செல்லவே, ‘இந்த பொண்ணா அவரை குத்திச்சு...? ஏன்...? இவளுக்கு அவர்மேலே அப்படி என்ன கோபம்?’ எண்ணினாலும், ‘இந்த பொண்ணை கட்டிக்கப் போறேன்னு அவ்வளவு ஆசையா சொன்னார்..., பாத்தா...?’ சிந்தையை நிறுத்தியவர், ஜீப்பை கிளப்பினார்.

தன் பைக்கை விரட்டியவன், நேராகச் சென்றது ஷீபாவிடம் தான். “பிரம்மா, வாங்க...” அவர் அழைக்க, சற்று தள்ளாடி உள்ளே நுழைய, அப்பொழுதுதான் அவனது டிஷர்ட்டில் இருந்த ரத்தத்தைப் பார்த்தார்.

“என்ன இது...? இப்படியே இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க? காட்..., ஆர் யூ கிரேசி..., முதல்ல பெட்ல படுங்க...” உரைத்தவள், அவன் காயத்தை ஆராய்ந்தார்.

“காயம் ஆழம் இல்லை..., இன்டஸ்ட்ரெயின் கூட பிரேக் ஆகலை” அவன் விளக்க, அவனை ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். அதைவிட, ஒரு மருத்துவராக அவனது காயத்தின் தன்மையை நொடியில் கணித்தவர், வேகமாக மூன்று தையல் போட்டு காயத்தை மூடினார்.

“இதை நானே செய்திருப்பேன்..., பட்..., எப்பொழுதும் இல்லாமல் ஒரு கிடினஸ் அதான்...” படுக்கையில் இருந்து எழுந்தவாறு அவன் உரைக்க, அவனைப் பார்த்தவாறே அமைதியாக இருந்தார்.

“என்ன டாக்டர்..., எதுவும் சொல்லாமல் இருக்கீங்க?” அவன் கேட்க,

“இல்ல..., இந்த காயம் எப்படி வந்திருக்கும்னு யோசிக்கறேன். யாரோ குத்தத் தெரியாதவங்க குத்தின மாதிரி இருக்கு...?” தன் கையில் இருந்த கிளவுஸை கழட்டி வைத்தவர் வெளியே வந்தார்.

“ஏன் சரியா குத்தலைன்னு பீல் பண்றீங்களா?” அவன் கேட்ட தோரணையில் அவருக்கு சிரிப்பே வந்துவிட்டது.

“பிரம்மா, ஒரு விஷயம் சொல்லவா..., உங்களை குத்திய ஆயுதம் ஒரு சின்ன கத்தியா இருக்கலாம். ரொம்ப போர்ஸ் யூஸ் பண்ணாமல் குத்தி இருக்காங்க, சோ..., குத்தியது ஒரு ஆணாக இருக்க வாய்ப்பில்லை. ஒரு சின்னப் பையன், இல்லையா..., ஒரு பெண்ணாக இருக்கலாம்.

“இருக்கலாம் என்ன..., ஒரு பெண்தான் என்பது என் யூகம். அதுவும் உங்களுக்கு ரொம்ப தெரிந்த யாரோ என்றுதான் நினைக்கறேன்...” அவர் சொல்ல, அவரது பார்வை அங்கே இருந்த ஷாலில் படிந்து மீண்டது. அவரது திறமையை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

“டாக்டர்..., பேசாம நீங்க டிப்பார்ட்மெண்டில் சேந்துடுங்க...” உரைத்தவன் படுக்கையில் இருந்த ஷாலை கையில் எடுத்து, அதை நான்காக மடக்கி, தன் டிஷர்ட்டின் மேல் சுற்றிக் கொண்டான்.

அது அவனது டிஷர்ட்டில் இருந்த ரத்தக் கறைகளை மறைக்க, “தேங்க்ஸ்...” சொல்லி வெளியேற முயன்றான். “பிரம்மா..., கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு போகலாமே...” அவர் சொன்னதை அவன் கண்டுகொள்ளவே இல்லை. கிளம்புவதிலேயே முனைப்பாக இருக்க,

“ஒரு நிமிஷம்...” அவர் தேக்கவே, மீண்டுமாக இருக்கையில் அமர்ந்தான்.

“பிரம்மா..., இப்போதான் பெரிய விபத்தில் இருந்து தாண்டி வந்திருக்கீங்க. ஏற்கனவே நிறைய ப்ளட் லாஸ்..., இதில்..., இப்படியெல்லாம்..., யாராக இருந்தாலும் கொஞ்சம் கவனமாகவே இருங்க...” அவர் சொல்ல, குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டான்.

“டாக்டர்..., நான் இன்னும் எவ்வளவு நாள் அந்த டேப்லட் சாப்பிடுவது...? ரொம்ப போர் அடிக்குது...” அவன் சிறுவன்போல், மாத்திரை வேண்டாம், கசக்குது என்னும்

பாவனையில் உரைக்க, இப்பொழுது ஷீபாவின் முகத்தில் ஒரு அழகான புன்னகை.

“இன்னும் ஒன் மந்த் கண்டினியூ பண்ணுங்க. பிறகு ஒரு செக்கப் முடித்த பிறகு ஸ்டாப் பண்றது பத்தி பேசலாம்…” அவர் முடித்துக் கொள்ள,

“டாக்டர்…, ஊருக்கு வெளியே ஏதாவது கிளினிக் ஸ்டார்ட் பண்ணும் ஐடியாவில் இருக்கீங்களா?” அவன் கேட்க, ‘இல்லையே…’ என்னும் பாவனையில் அவனை ஏறிட்டார்.

“இல்ல…, என்கிட்டே இருக்கும் எல்லா அமவுண்டையும் செக்கப்புக்குன்னு சொல்லி புடுங்கறீங்களே அதான் கேட்டேன்…” அவன் சிரியாமல் சொல்ல, கோபமாக அவனை முறைக்க முயன்று தோற்றார்.

“பிரம்மா…, டூ பீ ப்ரான்க்…, உங்களுக்கு பழைய ஞாபகம் எல்லாம் வராமல் இருப்பது நல்லதுன்னு தோணுது…” அவர் சொல்ல, அவன் முகத்தில் சட்டென ஒரு இறுக்கம்.

அதைப் பார்த்தவர், ‘இப்பொழுது தான் இதை சொல்லியிருக்கக் கூடாதோ’ என எண்ண,

“ஏன் டாக்டர்…, எனக்கு பழைய ஞாபகம் வந்தால், இப்போ இருக்கும் ஞாபகம் எல்லாம் மறந்துடுமா?” அவன் குரலில் இருந்த தீவிரம், அவன் ஆழ்மன உணர்வை அவருக்கு படம் பிடித்துக் காட்டியது.

“ச்சே…, ச்சே…, அப்படியெல்லாம் இல்லை…, சில நேரம்…, அதாவது நூறில் ஒரு வாய்ப்பாக…, திடீர்ன்னு மொத்த நினைவும் வந்தால் சான்ஸ் இருக்கு” அவர் முடிக்க, அவன் முகத்தில் இருந்த தீவிரம் குறையவே இல்லை.

“தென்…, ஓகே…” உரைத்தவன், “டாக்டர்…” தயக்கமாய் இழுக்க, “என் மூலம் இந்த விஷயம் வெளியே தெரியாது போதுமா?” “தேங்க்ஸ்…” உரைத்தவன் வெளியே நடந்தான்.

இப்பொழுது அவன் முகத்தில் ஒரு பாறாங்கல்லின் இறுக்கம். ‘என்னை கொல்லும் அளவுக்கு அவளுக்கு என்மேல் என்ன வெறுப்பு…?’ சிந்தை அதில் சுழன்றது.

தன் அலைபேசியை எடுத்தவன், கந்தனை அழைக்க, “சார், எங்கே இருக்கீங்க? நான் வரவா…?” அவனது அழைப்புக்காகவே அவர் காத்திருந்தது புரிந்தது.

“இல்ல…, இது ஜஸ்ட் மைல்ட் தான்…, காயத்ரி எப்படி இருக்கா? கண் முழிச்சுட்டாளா?” அவன் கேட்க,

“இன்னும் மயக்கம் தெளியலை சார்…, என் பொண்டாட்டி கிட்டே அவங்களை கவனமா பாக்கச் சொல்லிட்டுதான் வந்தேன்…”.

“அப்போ சரி…, நான் வீட்டுக்கு போறேன்…, வண்டியை அங்கே வந்து எடுத்துக்கோங்க” உரைத்தவன் அலைபேசியை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

வீட்டுக்குச் சென்றவன், முதல் வேலையாக தன் கூலிங்கிளாசை எடுத்தவன், அதில் இருந்த சிப்பை கழட்டி, தன் மொபைலில் போட்டு பார்க்க, டிநகர் செல்லத் துவங்கியது முதல், காயத்ரி அவனை கத்தியால் குத்தியது வரைக்கும் வரிசையாக படமாக்கப் பட்டிருந்தது.

தன்னை கத்தியால் குத்தும்பொழுது அவள் கண்களில் இருந்த கோபம், தன் காதலை கேட்ட நொடி அவள் கண்களில் தெரிந்த அதிர்ச்சி, தொடர்ந்த அவளது பயம்…, பெரும் அதிர்வு…, தொடர்ந்த அவளது நடுக்கம், தன் செய்கையை நம்ப முடியாத திகைப்பு…, என அனைத்தையும் அளவிட்டான்.

‘அவளுக்கு என்மேல் கோபம் இருக்கு…, ஆனா வெறுப்பில்லை…, எனக்கு அது போதும்…’ மீண்டுமாக தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டவன், அந்த சிப்பில் தேவையில்லாதவற்றை அழித்துவிட்டு, அவள் தன்னை தாக்கியதை மட்டும் எடிட் செய்து எடுத்தவன், சிப்பை ஒரு கவரில் போட்டு எடுத்துக் கொண்டான்.

மதியம் உண்ணாதது வேறு வேறு களைப்பாக இருக்க, கீழே சென்று காலையில் வைத்த சாதத்தில் ரசம் ஊற்றி சாப்பிட்டவன் ஸ்டேஷன் செல்லாமல் படுத்துக்

கொண்டான். மனமோ..., காயத்ரி தன்னை வெறுத்துவிடக் கூடாது என்றே வேண்டிக் கொண்டது.

அவள் தன்னை கொலையே செய்ய முயன்றபொழுதும், அவள்மேல் கோபம் மட்டும் வரவே இல்லை. தன் நேருக்கு நேர் நின்று, மோதும் அவளது தைரியம் பிடித்தது. அவள் கோபத்துக்கான காரணத்தையும் அறிய வேண்டும்..., என எண்ணியவாறே உறங்கிப் போனான்.

அதே நேரம்..., கந்தனின் வீட்டில் கண்விழித்த காயத்ரி, திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள். ‘அவர்..., ஹையோ..., செத்துட்டாரா...? நான்..., இது..., இங்கே எப்படி வந்தேன்...?’ எண்ணியவள் பார்வையைச் சுழற்றினாள். இது ‘யாரோட வீடு...?’ எண்ணியவள் வாசலைப் பார்க்க, அதுவோ பூட்டி இருந்தது.

அப்பொழுதும் அவளது தளிர் மேனி நடுங்கிக் கொண்டிருந்தது. அவள் கைகளைப் பார்க்க, அப்பொழுது அதில் ரத்தம் இருக்கவில்லை. கையை தன் முகத்துக்கு நேராகப் பிடிக்க, அதில் இருந்து ரத்தவாடை வீசுவதுபோல் இருந்தது.

கைகள் வெகுவாக நடுங்க, இறங்கிபோய் கதவைத் திறக்கக் கூட அச்சமாக இருந்தது. ‘என்னைக் கூட்டி வந்து அவனது வீட்டில் சிறை வைத்து விட்டானா?’ எண்ணினாலும், தப்பிச் செல்லும் எண்ணம் எழவில்லை.

‘இன்னும் உனக்கு அவனைக் கொல்ல வேண்டுமா?’ மனசாட்சி கேட்க, “இல்ல..., இல்ல..., வேண்டாம்...” கிட்டத்தட்ட அலறினாள்.

அவளது அலறல் சத்தம் வெளியே கேட்க, வேகமாக கதவைத் திறந்து உள்ளே வந்த சாரதா..., “அம்மாடி..., என்ன..., கண் முழிச்சுட்டியா? ரோட்ல யாருக்கோ அடிபட்டா..., இப்படியா பயந்து போவ? இதுக்கே பயப்படுறவ, எப்படி எஸ்பி சாரை கட்டிக்கிட்டு குடும்பம் நடத்துவ? தைரியமா இருக்க வேண்டாம்...?” கேட்டவர்..., அவள் அருகில் அமர்ந்து அவள் தோளை அழுத்தினார்.

“இல்ல..., நான்..., நான்..., குத்திட்டேன்..., ரத்தம்..., ரத்தம்...” விடாமல் புலம்ப, அவளை இரக்கமாய் பார்த்தார்.

“போலீஸ்காரன் போண்டாட்டியாகப்போற, ரத்தத்துக்கு பயந்தால் ஆச்சா?” அவர் கேட்க, அவர் ஏதோ புரியாத பாஷை பேசுவதுபோல் விழித்தாள்.

‘காயு..., ஐ..., லவ்..., யூ..., யூ...” அந்த யூவில் தொனித்த வலி..., இப்பொழுதும் அவள் காதுக்குள் ஒலிக்க, கைகளால் காதை இறுக மூடிக் கொண்டாள்.

‘இனிமேல் எனக்கு கல்யாணமா...? அவனுக்கு என்ன ஆயிற்று...? எப்படி இருக்கிறான்...? யாரிடம் கேட்க...? என்ன செய்ய...? ஹையோ’வென வந்தது.

கோவிலில் கடவுளின் சம்மதம், தான் அவனது தாய்க்கு செய்து கொடுத்த சத்தியம், அதையெல்லாம் நினைக்கையிலேயே எப்படி உணர்ந்தாள் என சொல்ல முடியவில்லை.

தான் அவனை குத்தியபொழுது கூட அவன் கண்களில் கோபமில்லை, மாறாக சிறு அதிர்ச்சி..., அதையும் மீறி..., நீயா இப்படி.. என்ற அவனது கேள்வி..., முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

அவன்மேல் இருந்த கோபம் எங்கே சென்று மறைந்தது என்றே தெரியவில்லை. மாறாக மனதுக்குள் இருக்கும் தவிப்பு..., அவனை ஒரு நொடி கண்டுவிட்டால் போதும் என்ற நிலை..., இதை என்னவென்று எடுக்கவென்றும் அவளுக்குத் தெரியவில்லை.

படுக்கையை விட்டு இறங்க கூட முடியாமல் கை கால் நடுங்குகையில், எங்கே இருந்து அவனைக் காணச் செல்வது? அவள் விசும்ப, “அம்மாடி, நீ இரு, நான் சாப்பாடு எடுத்துட்டு வர்றேன். நீ எழுந்த உடனே சாப்பாடு கொடுக்கச் சொன்னார் நான் மறந்துட்டேன்...” சொன்னவர் எழுந்து செல்ல துவங்கினார்.

“இது…? இங்கே…?” அவள் தடுமாற, “எஸ்பி சாரோட டிரைவர் கந்தன் இருக்காரே அவரோட வீடுதான். என் வீட்டுக்காரர்தான் உன்னை கூட்டி வந்தார்…” உரைத்தவர், அவளுக்கான உணவை எடுக்கச் செல்ல,

“எனக்கு எதுவும் வேண்டாம்…, நான் போகணும்…” ஒரு பரபரப்பு அவளிடம்.

“இப்படி நடுங்கிட்டு இருக்க…, எங்கே போகப் போற…? இன்னைக்கு இங்கேதான். நீ பேசாமல் இரு…” உரைத்தவர் சென்றேவிட, அவளுக்கோ இறங்கிச் செல்ல முடியாத அளவுக்கு தேகத்தின் நடுக்கம் ஓட அப்படியே அமர்ந்துவிட்டாள்.

அவர் பிடிவாதமாக கொடுத்த உணவை உண்டு முடித்த பிறகுதான், தன் உடை மாறியிருப்பதை பார்த்தவள், திக்கென அதிர, “என் ட்ரெஸ்…” அவள் திணற, “நான்தாம்மா மாத்தினேன்…, ட்ரெஸ் எல்லாம் ரத்தக்கறை அங்கங்கே இருந்ததா அதான். இது என் பொண்ணோட சுடிதார்தான்…” அவர் சொல்ல, அந்த கரிசனையில் கண்கள் கலங்கியது.

தான் செய்துவைத்த செயல் அவருக்குத் தெரிந்தால் இந்த கரிசனை இருக்குமா என எண்ணியவளுக்கு நெஞ்சுக்குள் இருக்கும் பிரளயம் மாறவே இல்லை.

மாலையில் கந்தன் அவன் வீட்டுக்கு தன் வண்டியை எடுக்க ஜீப்போடு வர, அவரது கையில் அந்த கவரைக் கொடுத்தவன், “கந்தன்…, இந்த மெமரி கார்டை அவகிட்டே கொடுத்துடுங்க. அதில் இருப்பதை என்னால் டெலீட் பண்ணியிருக்க முடியும். ஆனா…, என்னைக்காவது ஒரு நாள் அதை நான் ரெக்கவர் பண்ணணும்னு நினச்சுடுவேன்.

“அதை நான் செய்யக் கூடாது…, இது அவகிட்டயே இருக்கட்டும். என்கிட்டே வேற காப்பி இல்லை. அதே மாதிரி, இந்த கல்யாணம் நடக்கும்னும் சொல்லிடுங்க. அவ ஹாஸ்டல் போக விருப்பப்பட்டால் கூட்டி போய் விட்டுங்க…”

வெகு சாதாரணமாக உரைத்துச் செல்ல, அவனைப் பற்றி நன்கு தெரிந்தவருக்கு நம்பவே முடியவில்லை.

இதுவே பழைய பிரம்மாவாக இருந்திருந்தால், இப்படி ஒரு பெண்ணின் அன்புக்காக இவ்வளவு இறங்கிப் போயிருப்பானா? அவள் செய்கைக்குப் பின்னால் இருக்கும் காரணத்தை தெரிந்து கொண்டு, அவளை ஒரு வழி செய்திருப்பான் என எண்ணியவருக்கு, இந்த பிரம்மா புதிதாய் தெரிந்தான்.

‘அவளுக்கு சாப்பாடு கொடுக்கச் சொன்னது..., அவளை பார்த்துகொள்ளச் சொன்னது. அவள் யாரிடமும் எதையும் உளறிவிடக் கூடாது என உரைத்தது..., அனைத்தும் எண்ணியவர், அவள்மேல் அவன் கொண்டிருக்கும் நேசம் புரிய, ‘அந்த பெண் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கிறாளே’ என்று இருந்தது.

வண்டியைக் கிளப்பியவர் தன் வீட்டுக்குச் செல்ல, வாசலிலேயே எதிர்கொண்டார் சாரதா. “அந்த பொண்ணு சாப்ட்டாளா? என்ன செய்யிறா?” கேட்டவாறே உள்ளே நுழைந்தார்.

“ஏதோ கொஞ்சமா சாப்ட்டா..., நடுங்கிட்டே இருக்கா. ரூம்லதான் இருக்கா போய் பாருங்க...” தன் ஷூவை வெளியே விட்டவர், நேராக அவள் இருந்த அறைக்கே சென்றார்.

அவரை அந்த காக்கி உடையில் பார்க்கவே..., திடுக்கிட்டவள், படுக்கையில் இருந்து வேகமாக இறங்கி நிற்க, “நான்..., நான்..., அவர்...” திக்கித் திணறினாள்.

“உன்கிட்டே இருந்து இப்படி ஒரு செய்கையை நான் எதிர்பாக்கலம்மா..., எஸ்பி அவரைப்போய்...” வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டவர், தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து பிரம்மா கொடுத்த கவரை அவளிடம் கொடுத்தார்.

‘என்ன இது...?’ என்பதுபோல் அவள் பார்க்க, “பிரிச்சுப் பாரும்மா...” அவர் சொல்லவே, பிரித்தவள் உள்ளே இருந்த

மெம்மரி கார்டைப் பார்க்கவே,

“பிரம்மா சார் கொடுத்தார்...” உரைத்தவர், “ஹாஸ்டல் போறியா...? இல்ல, இங்கேயே தங்கிக்கறியாம்மா...?” அவர் கேட்க,

“நான் ஹாஸ்டல் போறேன்...” வேகமாக உரைத்தாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவளது ஹாஸ்டலில் அவளை இறக்கி விட்டவர், “கல்யாணம் நிச்சயம் நடக்கும்னு சொல்லச் சொன்னார்...” உரைத்தவர், வண்டியைக் கிளப்பினார்.

‘இதற்குப் பிறகும் திருமணமா?’ தான் கேட்டதை அவளால் நம்பவே முடியவில்லை.

“அவர்..., அவருக்கு...” ஒருவனை கத்தியால் குத்திவிட்டு, எப்படி இருக்கிறான் என கேட்பது எப்படி என்ற தடுமாற்றத்தில் அவ்வளவு நேரம் இருந்தவள், அதைக் கேட்காமல் போனால் இன்று இரவு உறங்கவே முடியாது எனத் தெரிய, கேட்டே விட்டாள்.

அவள்மேல் இருந்த கோபத்தில்..., “சாகலை...” உரைத்தவர் சென்றுவிட்டார். பிரம்மா அந்த மெம்மரி கார்டின் காப்பி தன்னிடம் இல்லை எனச் சொன்னதை அவர் சொல்ல மறந்தே போனார். அவனுடன் இருக்கும் இவருக்கே தன்மேல் இவ்வளவு கோபம் என்றால், அவனுக்கு..., நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது.

ஆனாலும், அவனுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்பதே போதுமானதாக இருக்க, கையில் இருந்த மெம்மரி கார்டை, ‘இதில் என்ன இருக்கு?’ எண்ணியவள், வேகமாக தன் அறைக்குச் சென்றாள்.

அவளைக் கண்ட இந்திரா, “ஏண்டி, காலையில் தாலி வாங்கப் போறேன்னு சொல்லிட்டுப் போனவ, நடுவில் ஒரு போன் பண்ணலை, போனையும் சுவிட்ச்ஆப் பண்ணிட்ட, நான் என்னன்னு நினைக்கிறது...?” கோபமாக கத்தினாள்.

அறைக்குள் நுழைந்தவள், கதவை பூட்டிவிட்டு, “இந்திரா, நான்..., நான்..., அவனை கத்தியால் குத்திட்டேன்டி..., ரத்தம்..., ஒரே ரத்தம்..., என்னால்...” அவள் சொல்லச் சொல்ல கண்களில் கண்ணீர் வழிந்தது.

“என்னடி சொல்ற...? யாரை...? பிரம்மாவையா...? கொன்னுட்டியா? அதான் இவ்வளவு நேரம் தலை மறைவா இருந்தியா? உனக்கு எங்கே இருந்துடி அவ்வளவு தைரியம் வந்தது..., எனக்கு நடுங்குதுடி.

“முதல்ல உள்ளே வா..., இதென்ன காலையில் போட்டிருந்த ட்ரெஸ் கூட மாத்தியிருக்க? ட்ரெஸ் புல்லா ப்ளட் ஆயிடுச்சா? அதையும் தூக்கி கடாசிட்டியா?” அவள் கேட்டுக் கொண்டே போக, காயத்ரியின் விசும்பலில் பேச்சை அப்படியே நிறுத்தினாள்.

“எரும..., நல்ல வார்த்தையே பேச மாட்டியா?” அழுகையினூடே வெடிக்க,

“காயத்ரி..., ஏண்டி அழற...? சொல்லிட்டு அழுடி..., எனக்கு பதறுது” அவளை அழைத்து படுக்கையில் அமர்த்தியவள், தண்ணீர் பாட்டிலை எடுக்க, காயத்ரியோ மூச்சுக்குத் திணறத் துவங்கினாள்.

அதைப் பார்த்தவள், தண்ணீரை கையில் ஊற்றி அவள் முகத்தில் அடித்தவள், “இந்த தண்ணியைக் குடி...” அவள் வாயில் சரித்தாள்.

வேகமாக அதைப் பருகியவள், வேகமாக மூச்சுவிட, “எஸ்பி சார்க்கு எதுவும் இல்லையே...?” இந்திரா பதட்டமாகவே கேட்டாள்.

‘இல்லை என தலையை அசைத்தவள், அந்த மெம்மரி கார்டை தன் மொபைலில் போட்டு வீடியோவை பார்வையிட, அதில் விரிந்த காட்சியில் உச்ச மின்சாரம் உடலில் பாய்ந்த உணர்வில் விதிர்த்து போனாள்.

“காயத்ரி..., என்னடி இது...? இதெப்படி...?” இந்திரா கேட்க, காயத்ரியின் கையில் இருந்த போன் கீழே விழ, அங்கேயும்

அது தன் இயக்கத்தை நிறுத்தாமல் ஓடிக் கொண்டிருந்தது.

காயத்ரியின் மனதிலோ…, ‘அப்படியென்றால் என்மேல் அவனுக்கு சந்தேகம் இருக்கு அப்படித்தானே…, அதை மறைத்து, காதல், கத்தரிக்காய், கல்யாணம்…, எதை மறைக்க? யாரை நம்ப வைக்க?’ அவளுக்குள் இறங்கிய கோபம் ஏறத் துவங்கியது.

*****

# பகுதி – 17.

முழுதாக இரண்டுநாள் கடந்திருந்தது. அந்த வீடியோவைப் பார்த்து அவன்மேல் கோபம் மீண்டுமாக ஏறியிருந்தாலும், அவனைக் கண்ணால் கண்டுவிட்டால் பரவாயில்லை என்னும் எண்ணம், காயத்ரியைப் பிடித்து வாட்டியது. அது எதனால் எனவும் தெரியவில்லை.

தோழியின் அமைதி இந்திராவை வெகுவாக பாதிக்க, இரண்டு நாட்களாக அவளை கடிந்துகொண்டிருந்தவள், முதல் முறையாக தோழியின்மேல் இரக்கப்பட்டாள்.

‘செய்யிறதை எல்லாம் அவசரப்பட்டு செஞ்சுட்டு, இப்போ இப்படி ஃபீல் பண்ணிட்டு உக்காந்திருக்காளே...’ அவளுக்கு கவலையாகப் போயிற்று. சாப்பாட்டுக்கு முன்னால் சோகமே உருவாக அமர்ந்திருந்த அவளை என்ன செய்யவென்று தெரியாமல் விழி பிதுங்கினாள்.

“காயத்ரி, ரெண்டு நாளா நீ ஆளே சரியில்லை. சரியா சாப்பிடலை, தூங்கலை, கிளாஸ் கவனிக்கலை, நோட்ஸ் எடுக்கலை..., உன்னை இப்படி நான் பாத்ததே இல்லடி...,

“உங்க அண்ணா இறந்தப்போ கூட, அதிகமா அழுதுட்டு இருந்தியே தவிர இது..., எனக்கு பயமா இருக்குடி. வேண்ணா எஸ்பி சாரை ஒரு முறை போய் பாத்துட்டு வந்துடலாமா?” அவளிடம் மெதுவாக கேட்டாள். அவள் படும் துன்பம் அவளை அவ்வாறு கேட்கத் தூண்டியது.

“இல்ல..., வேண்டாம்...” வேகமாக மறுத்தவள், எந்த முகத்தோடு அவனைப் போய் பார்க்கவென்று தெரியாமல் திணறினாள். அதைவிட அந்த வீடியோ..., அதைப் பார்த்த பிறகு..., அவளால் எதையுமே செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை.

‘அந்த வீடியோவை வைத்து என்னை பிளாக்மெயில் செய்வானோ...? தனிமையில் அழைப்பானோ...? தாலி கட்டாமல் வாழலாம் என சொல்லிவிடுவானோ?’ மனம்

சாத்தானின் கூடாக பலவற்றையும் சிந்திக்க, அவள் அவளாகவே இல்லை.

“இப்படி பதறுறவ பிறகு ஏண்டி அப்படிப் பண்ண?” கோபமாகத் துவங்கியவள், தோழியின் முகத்தில் கவிழ்ந்த கவலையில் அப்படியே பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

“கொஞ்சமாவது சாப்பிடுடி..., இப்படியே போனால் என்னத்துக்கு ஆவ?” அவளை உண்ண வைக்க முயன்றாள்.

சோற்றை கையில் அள்ளி, வாய்க்கு அருகில் கொண்டு போகலாம்..., வாயைத் திறக்க மாட்டேன் எனச் சொல்பவளை என்ன செய்ய? “அவன் என்னடி செய்வான்...? என்னை ஜெயில்ல போட்டுடுவானா? அங்கே..., படத்தில் எல்லாம் காட்டுற மாதிரி...” அவள் தேகம் நடுங்க, அழுத்தமாக அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“அப்படியெல்லாம் எதுவும் ஆகாதுடி..., அப்படி உன்னை ஜெயில்ல போடுறதா இருந்தால், ரெண்டு நாளா காத்துட்டு இருக்க மாட்டார்..., நீ கண்டதையும் யோசிக்காதே. ஒரு ரெண்டே வாய் சாப்பிடு...” பிடிவாதமாக அவளை உண்ண வைக்க முயன்று கொண்டிருந்தாள்.

பிரம்மாவோ..., கல்பனாவின் வீட்டில் மேலும் ஏதாவது தடையம் கிடைக்குமா என அங்குலம், அங்குலமாக அலசிக் கொண்டிருந்தான். வீட்டைச் சுற்றிலும் பார்வையை செலுத்தியவன், “யாழினி..., நமக்கு ஒரு புட் பிரிண்ட் கிடைத்ததே..., அந்த செருப்போட சைஸ்...”.

“டுவல்வ் சார்...” அவள் உரைக்க,

“கல்பனாவோட கணவன், மதனின் செருப்பு சைஸ்...?”.

“டென் சார்...” “அப்படின்னா நாலாவதா ஒரு ஆளோட பிரசென்ஸ் இங்கே இருந்திருக்கு அப்படித்தானே..., ஆனா கைரேகை எதுவும் இல்லை...” கேட்டவாறே மாடி முழுவதும் அலசியவன், மாடியில் இருந்து குனிந்து கீழே பார்த்தான்.

“பன்னிரண்டு சைஸ்ன்னா..., ஒரு சராசரி ஆண்மகனின் செருப்பு சைஸை விட அதிகமா இருக்கே...” கேட்டவன்,

சுவிங்கத்தை பிரித்து வாயில் போட்டுக் கொண்டான்.

“பால்க்காரன், பேப்பர் காரன்..., பக்கத்து வீட்டில் இருந்து வந்த அவன், இந்த வீட்டு வேலைக்காரி..., எல்லோரையும் மறுபடியும் விசாரிக்கணும்னு வரச் சொல்லுங்க. நாம மதனை போய் பாக்கலாம்..., அதுக்கு முன்னாடி..., இந்த பக்கம் பின்னாடி, கொஞ்ச தூரம் போயிட்டு வரலாம்...” உரைத்தவன், மாடிப்படியில் இருந்து இறங்கி, பின்னால் நடந்தான்.

இப்பொழுது கந்தனை அழைத்தவன், “கந்தன்..., இந்த ஏரியாவை கொஞ்சம் விடாமல் அலசுங்க..., ஏதாவது வித்தியாசமா கிடைத்தாலோ, தெரிந்தாலோ என்னை கூப்பிடுங்க..., யாழினி..., நீங்களும்...” உரைத்தவன், அந்த வீட்டின் பின்னால், பாறைப்பொடி கொட்டி வைத்திருக்கும் இடம் நோக்கி நடந்தான்.

கிட்டத்தட்ட ஒரு மயில் தூரம் வரைக்கும் ஆள் நடமாட்டம் இல்லாத இடம். ஆங்காங்கே சில வீடுகள் தென்பட, அங்கே நடந்தான். அவனைப் பார்த்த அந்த வீட்டில் இருக்கும் ஆட்கள் வெளியே வர, “பக்கத்தில் இருக்கும் மதனை உங்களுக்குத் தெரியுமா?” அவர்களிடம் கேட்டான்.

“நல்லாவே தெரியும் சார்..., பதவியில் இல்லை என்றாலும், எங்களுக்கு ஏதாவது தேவை என்றால், முதல் ஆளா முன்னாடி நின்னு செய்து கொடுப்பார்” அவர்கள் சொல்ல, மௌனமாக கேட்டுக் கொண்டான்.

“கல்பனா இறக்கும் முன்னாடியோ..., இறந்த பிறகோ..., இங்கே யாராவது புது ஆளோட நடமாட்டம்..., இல்ல..., புதிதாக ஏதாவது வண்டி..., இந்தப் பக்கம் போனதை பாத்தீங்களா?”.

“இது கொஞ்சம் லோன்லி ஏரியா சார்..., அதனால் நைட் எட்டு மணிக்கு மேலே இங்கே ஆள் நடமாட்டமே இருக்காது. ஆனா, கல்பனா சாக முன்னாடி சில நாள், நடு ராத்திரி, பைக் போற சத்தம் கேட்டிருக்கேன்...”.

“அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?”.

“அதான் சொன்னேனே சார்..., இது ஒதுக்குப்புறமான இடம். இங்கே ஒரு மூணு வீட்டை தவிர, வேற வீடே கிடையாது. அங்கேயும் வண்டி யார்கிட்டேயும் இல்ல..., அதான் கவனிச்சிருக்கேன்...”.

“அந்த வண்டியோட சத்தம் ஒரே வண்டியோடதா..., இல்ல..., வேற வேற வண்டியோடதா?”.

“ஒரே வண்டி தான் சார்..., எனக்கு நல்லா தெரியும்...”.

“அதெப்படி அவ்வளவு நம்பிக்கையா சொல்றீங்க?”.

“ஒரே பிராண்ட் வண்டிக்கு ஒரே சத்தம் தான் இருக்கும் சார்..., அதுவும் அவ்வளவு ராத்திரியில் அந்த சத்தத்தை தெளிவா கேக்க முடியும், அதுவும் அந்த வண்டியோட சத்தம் கொஞ்சம் வித்தியாசமா வேற இருந்ததா, அதை வச்சுதான் சொல்றேன்...”.

“அது யாருன்னு நீங்க பாக்க நினைக்கலையா?”.

“சார்..., நடு ராத்திரி..., போற வண்டியை கவனிக்கணும்னு தோணலை” அவன் தலையைச் சொறிந்தான்.

“கல்பனா இறந்த பிறகு அந்த வண்டி சத்தத்தை நீங்க கேட்டீங்களா?”

“இல்ல சார்...” அவன் உரைக்க, சுவிங்கத்தை மென்றவன், தீவிரமாய் எதையோ யோசித்தான்.

“ஓகே...” உரைத்தவன் கிளம்பி வர, “சார்...” கந்தனின் குரல் ஒலிக்க, ஓசை வந்த திசைக்கு விரைந்தான். கையில் இருந்ததை அவனிடம் கொடுக்க, “செருப்பு கடை பில்..., இது இங்கே கிடக்குன்னா...? இதில் டேட் கூட தெளிவா இருக்கே..., விசாரிக்கலாம்...” அதை யாழினியிடம் கொடுக்க, அதை அவள் பத்திரப் படுத்தினாள்.

அவன் பார்வையை சுழலவிட, ஒரு இடத்தில் வித்தியாசமாகத் தெரியவே, நடையை விரைவுபடுத்தினான். அவன் பின்னால் ஓடிய கந்தனும்,

யாழினியும் அங்கே செல்ல, “சார்…, எதையோ எரிச்சிருக்காங்க…” அவள் உரைக்க,

“ம்…, கொஞ்சம் சேம்பிள் எடுத்து, பாரன்சில கொடுத்து செக் பண்ணச் சொல்லுங்க…” உரைத்தவன், அருகில் கிடந்த குச்சியை எடுத்து, சாம்பலைக் கிண்ட, இரண்டு இரும்பு கிளிப் வெளியே வந்தது.

“சார்…, செருப்பு பக்கிள்…” கந்தன் குரல் கொடுக்க, “கிளவ்வர்…” எதையோ நினைத்தவன், உரைத்துவிட்டு, “கேஸ் சூடு புடிக்குது…, ஐ லைக் இட்…” சுவிங்கத்தை மென்றவாறு உரைக்க, கந்தனும், யாழினியும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

“மூவ்…” அதையும் கவரில் சேகரித்தவன், “யாழினி…, முதல்நாள் டெத் நடந்தப்போ அங்கே இருந்தவங்க லிஸ்ட் ஒண்ணு எடுத்திருந்தீங்களே அவங்களை எல்லாம் நாம மறுபடியும் மீட் பண்ணணும்…, ஏற்பாடு பண்ணுங்க, ஏதாவது விஷயம் கிடைக்காமல் இருக்காது…” நடையை எட்டி போட்டவாறே உரைத்தான்.

“எஸ் சார்…” அவன் பின்னால் விரைந்தாள்.

ஜீப்பின் அருகே வர, அவனது அலைபேசி பேண்ட் பாக்கெட்டுக்குள் அதிர்ந்தது. அதை எடுத்து பார்க்க, “கேஷியர்…” என்னும் பெயர் ஒலிக்க, கந்தனை ஒரு பார்வை பார்த்தவன், தன் அலைபேசியை குறிப்பாய் காட்ட, அதை யாழினியின் கவனம் கலைக்காமல் பார்த்தவர், ‘யார் என தெரியவில்லை’ என தலை அசைத்தார்.

‘போங்க…’ என்னும் விதமாக தலை அசைத்தவன், அதை ஆன் செய்து செவிமடுத்தான்.

“தம்பி, நான்தான் கணக்கப்பிள்ளை பேசறேன்…, இந்த மாசம் ஊருக்கு வரதா சொல்லியிருந்தீங்களே, அதான் எப்போ வரீங்கன்னு கேக்க போன் போட்டேன்…” அந்தப் பக்கம் ஒரு வயதானவரின் குரல் மிகவும் பணிவாக ஒலிக்க, புருவ மத்தியில் பெரும் முடிச்சு.

‘இவர் யாருன்னு தெரியலையே…?’ இடப் புருவத்தை விரலால் அழுத்தமாக வருடியவன், “ஏதாவது முக்கியமான விஷயமா?” குரலில் எந்த பாவத்தையும் வெளிப்படுத்தாமல் கவனமாகக் கேட்டான்.

“தம்பி…, ஏற்கனவே உங்ககிட்டே சொல்லியிருந்தேனே…, உங்க சித்தப்பா.. நீங்க ஒரு எட்டு வந்தால் நல்லா இருக்கும். கணக்கு வழக்கில் எல்லாம் ரொம்ப தலையிடறார்…, ஒரு அளவுக்கு மேல் என்னால் எதுவும் செய்ய முடியலை.

“இந்த மாசம் மட்டுமே கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் வாங்கிட்டார்…, கொடுக்க முடியாதுன்னு சொன்னால்…, என்னென்னவோ பேசறார். எனக்கும் வயசாயிட்டே வருது” கண்டிப்பாக பேசியே ஆகவேண்டும், நீ வந்தே ஆகவேண்டும் என்னும் பாவம் அவர் குரலில்.

“ஒரு வாரத்தில் வர்றேன்…” அலைபேசியை வைத்து விட்டான்.

மனமோ…, ‘கணக்கபிள்ளை…, கணக்கு…, சித்தப்பா…, ஐம்பதாயிரம்…’ ஒரு இருட்டு அறைக்குள் துழாவும் உணர்வு. ‘என்றைக்கு சரியாகும்…? சுற்றிலும் ஆயிரம்பேர் இருக்க, தான்மட்டும் தனியாக இருக்கும் தன்மை, மனம் ஒருவித அழுத்தத்தை உணர்ந்தது.

“சார்…” அவன் அப்படியே நின்றுவிட, அவனைக் கலைத்தால் யாழினி.

“ஹாங்…, போகலாம்…” ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

ஸ்டேஷன் வந்தவன், முகேஷுக்கு அழைக்க, “சொல்லுடா…” அவன் கேட்கவே,

“கணக்கப்பிள்ளை போன் பண்ணார்…, ஊருக்கு வாங்கன்னு சொன்னார். உனக்கு ஏதாவது அதைப் பற்றி தெரியுமா?” அவனிடம் எந்த அளவுக்கு தன் வீட்டு விஷயத்தை சொல்லியிருப்போம் என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஆனாலும், அவனிடம் கேட்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியும் இருக்கவில்லை.

“பிரம்மா..., இதுக்கு..., நான் உனக்கு பெரிய சாரி தான் சொல்லணும். உங்க ஊர்..., உன் சித்தப்பா, சித்தி அவங்களைத் தவிர எனக்கு யாரையும் தெரியாது. கௌஷிக்கு வேண்ணா தெரியலாம்..., அவகிட்டே கேட்டுச் சொல்லவா?” அவன் கேட்க,

“ம்...” பிரம்மாவால் முனக மட்டுமே முடிந்தது. தான் ஒரு ஆண்மகன் என்பதையும் மீறி, கண்கள் கலங்கும் உணர்வு.

‘அப்படியென்ன ரகசிய பெட்டகமாக இருந்திருக்கிறேன்..., நான் இப்படி இருந்த பொழுதும், என் தங்கையை அவன் திருமணம் செய்திருக்கிறான் என்றால், தன்மேல் எந்த அளவுக்கு அன்பும், நம்பிக்கையும் கொண்டிருப்பான் என்பது புரிந்தது.

அதோடு, தன் தங்கையின்மேல் அவன் உண்மையான பாசம் கொண்டிருப்பான் என்பதும் புரிய, அவன் கண்களில் ஒரு துளி கண்ணீர். இனிமேல் தனக்கு வருபவளிடம் தான் உண்மையாக, வெளிப்படையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

“முகேஷ்..., நான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன்...” பிரம்மா சொல்ல, முகேஷ் அதிர்ந்துதான் போனான்.

இதற்கு முன்னர் தான் திருமணம் பற்றி பேசிய பொழுதெல்லாம், அவன் பார்த்த பார்வைகள்..., ‘நோ...’ அதில் இருக்கும் அழுத்தம், அதன் பிறகு மறந்தும் அவனிடம் கேட்க துணிவிருக்கவில்லை.

கௌஷி பெண் பார்க்கலாம் என உரைக்கும் பொழுதெல்லாம், “உன் அண்ணா சரின்னு சொல்லட்டும், உடனே பார்க்கலாம். முதலில் அவனை கன்வின்ஸ் செய்” என்பது மட்டுமே முகேஷின் பதிலாக இருந்திருக்கிறது.

“பிரம்மா..., நிஜமாவா சொல்ற...? இதை முதல்ல கௌஷி கிட்டே சொல், அவ எவ்வளவு சந்தோஷப்படுவா தெரியுமா? அப்போ பொண்ணு பாத்துட்டியா? என்ன செய்யணும்னு

மட்டும் சொல், எல்லாம் நானும், கௌஷியும் பாத்துக்கறோம்..

“எனக்கு இப்போவே உன்னை நேர்ல பாக்கணும்..., உன் மனசுக்கு பிடித்த பொண்ணையும் அழைச்சுட்டு வீட்டுக்கு வாடா..., எல்லாத்தையும் நேர்ல பேசலாம்...” அவன் உற்சாக குரலில் மொழிய, அவன் சந்தோஷத்தை எண்ணி வியந்து போனான்.

“வர்ற வெள்ளிக்கிழமை ஈவினிங் கிளம்பி வர்றோம்...” அவன் சொல்ல,

“இதை அப்படியே கௌஷி கிட்டே நீயே சொல்லிடு, நான் சொல்வதை விட, நீ சொன்னாதான் நல்லா இருக்கும்..., மீதியை நேரில் பேசுவோம்” அலைபேசியை வைத்து விட்டான்.

பிரம்மாவின் கைகள் தாமாகவே கௌஷியின் எண்ணை அழுத்த, அலைபேசி ஒலித்து முடிக்கும் நேரம் அழைப்பு எடுக்கப்பட, கூடவே..., “த்..., த்..., மாமா போன் பண்றாங்கடா கண்ணா..., என்னன்னு கேப்போமா...? சமத்தா அழாம இருப்பியாம்...” அவளது சமாதானப்படுத்தும் குரலும்,

பின்னால்..., குழந்தையின் சிணுங்கலும், மெல்லிய அழுகையும் ஒலிக்க, இப்பொழுது பேசவா, வைக்கவா என ஒரு நொடி குழம்பிப் போனான். அவன் அலைபேசியை வைக்கப் போகையில், “அண்ணே...” கௌஷியின் பாசமான குரல் செவியை நிறைக்க, தன் முடிவை மாற்றிக் கொண்டான்.

“அண்ணே..., எப்படிண்ணே இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா? வேளைக்கு சாப்பிடறீங்களா இல்லையா? அன்னைக்கு கேட்டப்போ கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னீங்களே, அதுக்குப் பிறகு எதுவுமே சொல்லவே இல்லை. நான் பொண்ணு பாக்கட்டுமாண்ணே, நீங்க ம்ன்னு சொன்னாத்தான் நான் பாப்பேன்..

“சொல்லுங்கண்ணே..., இன்னும் எத்தனை நாள் இப்படியே இருப்பீங்க? பழசை எல்லாம் மறந்துட்டு வெளியே

வாங்கண்ணா..., ஏதாவது பேசுங்க...” அவள் குரலில் ஒலித்தது பாசம் மட்டுமே.

“கௌஷி..., காயத்ரின்னு...” அவன் எப்படிச் சொல்ல எனத் தயங்க,

“அண்ணே..., அண்ணியை கண்டு புடிச்சுட்டீங்களா? நிஜமாவா?” அவள் குரலில் இருந்தது அப்பட்டமான அதிர்ச்சி மட்டுமே.

தன்னை மீட்டவள், “எனக்கு உடனே அவங்களை பாக்கணும். போட்டோ அனுப்புங்கண்ணே. வீட்டுக்கு அழைச்சுட்டு வாங்க..., எப்போ வர்றீங்க...? நீங்க என்ன சொன்னாலும் சரி, அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணம். அவங்க என்ன பண்றாக?

“இருங்க..., நான் இப்போவே என்னைக்கு நல்ல நாள் இருக்குன்னு காலண்டரில் பாக்கறேன்...” அவள் துள்ளி குதிப்பது அவனுக்கு இங்கே தெரிந்தது.

கூடவே அவளது விசும்பல் ஒலியும் சேர, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. “அண்ணே..., எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? நான் இப்படி ஒரு சூழலில் இருக்கலன்னா, இன்னைக்கே கிளம்பி வந்திருப்பேன். எனக்கு..., நீங்க என்னைக்கு வர்றீங்க? சீக்கிரம் வாங்கண்ணே...” அவனை அப்பொழுதே காணவேண்டும் என்ற ஏக்கம் அவளிடம்.

நண்பனும், தங்கையும் ஒன்றுபோல் சிந்திப்பதுபோல் இருந்தது. “வெள்ளிக்கிழமை வர்றோம்ம்மா...” அவன் சொல்ல,

“அண்ணே..., நிஜம்மா..., நான் எதிர்பாத்துட்டே இருப்பேன். வர முடியலைன்னு எந்த சாக்கும் சொல்லவே கூடாது...” அவள் அழுகையினூடே பேச, அவனுக்கும் கண்கள் கலங்கியது.

இவளிடம் எனக்கு பழசெல்லாம் மறந்துவிட்டது எனச் சொன்னால் தாங்க மாட்டாள் என முகேஷ் சொன்னது

எவ்வளவு பெரிய உண்மை, எண்ணியவன் அமைதியாய் இருந்தான்.

“வர்றேம்மா...” அவன் அழுத்தி சொன்ன பிறகே சமாதானம் ஆனாள்.

“குழந்தை எப்படிம்மா இருக்கான்?” அவ்வளவு நேரமாக அவனைப் பற்றி கேட்க வில்லையே என வெட்கப்பட்டான்.

“அவனுக்கு என்ன..., மாமாவை பாக்க முடியலையேன்னுதான் அழறான்...” அதற்கும் அவனையே சாக்கு வைக்க, இப்பொழுது அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை.

அலைபேசியை வைத்த பிறகுதான், ‘இவர்களிடம் ஜம்பமாக வெள்ளிக்கிழமை வருகிறேன் என சொல்லிவிட்டேன்..., காயத்ரியை எப்படி சம்மதிக்க வைக்கப் போகிறேன்? கோவை போகவேண்டும், என்னோடு வா..., எனச் சொன்னால் வருவாளா?’ அவனுக்கு யோசனையாக இருந்தது.

கடந்த இரண்டு நாட்களில், அவள் தன்னைக் காண வருவாள் என அவன் எண்ணியிருக்க, அவள் வராமல் போனது அவனுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. ‘நான் இப்படியே ஒதுங்கிக் கொள்ள வேண்டும்’ என எண்ணியிருப்பாளோ? என்னை தேடியிருப்பாளா? அப்படி இருந்தால் வந்திருப்பாளே..., மனம் முழுக்க ஒரே யோசனை.

அவளைக் காண வேண்டும் என ஒரு மனம் தவிக்க, ‘வேண்டாம்..., அவள் என்ன செய்கிறாள் எனப் பார்ப்போம்...’ என எண்ணினான். அவன் கரமோ, யூனிபாமுக்கு மேலாக, காயத்ரி கத்தியால் குத்தியதால் ஏற்பட்ட காயத்தை, அந்த சிறிய பிளாஸ்டரை மெதுவாக வருடியது.

அதென்னவோ அவள்மேல் கோபம் வராமல், ஒருவித தவிப்பு மேலெழுவது எதனால் என அவனுக்குப் புரியவே இல்லை. ‘அவள் என்னை வெறுத்துவிடக் கூடாது’ அந்த

ஒரு எண்ணம் மட்டுமே மனதை வியாபிப்பதை எப்படி தவிர்க்க என்றும் அவனுக்குத் தெரியவில்லை.

‘உனக்கு நிஜமாவே என்னை பிடிக்களையாடி...?’ கோபமாக கேட்டுவிட மனம் தவிக்க, ‘ஆமா...’ என அவள் சொல்லிவிட்டால்..., அந்த உண்மையை ஏற்க முடியாமல் மனம் முரண்டியது. கூடவே, ‘பிடிக்காதவளை கட்டாயப்படுத்தி திருமணம் செய்வது சரியா?’ அவன் மனம் கேட்க, இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டான்.

அவனுக்குள் இருக்கும் நியாயவாதி அதற்கு சம்மதிக்கவே இல்லை. ‘என்மேல் வெறுப்பு இல்லை என்ற ஒரே காரணத்துக்காக, விருப்பமே இல்லாத அவளை ஒரு வாழ்நாள் பந்தத்துக்குள் இழுத்து போட்டு, இருவரின் வாழ்க்கையையும் நரகம் ஆக்க வேண்டுமா?’ யோசிக்கையில் தலையை வலித்தது.

இறுதியில், ‘அவளைப் போய் பார்த்துவிட்டு, அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை எனத் தெரிந்தால், அடுத்த நிமிடம் இந்த திருமணத்தை நிறுத்தி விடுவேன்...’ உறுதியாக முடிவெடுத்த பிறகுதான் அவனால் அடுத்த வேலையை கவனிக்கவே முடிந்தது.

அடுத்து வந்த நாட்களில் கேஸ் விஷயமாக ஆட்களை சந்திப்பது, ஏற்கனவே விசாரித்தவர்களை விசாரிப்பது என நாட்கள் கடக்க, வியாழக்கிழமை வந்தே விட்டது. அவளைப்போய் பார்க்கவேண்டும் என எண்ணியவனுக்கு, வேலையின் அழுத்தத்தால் அதைச் செய்ய முடியவே இல்லை.

நாளை மாலையில் கோவைக்கு இரண்டு டிக்கெட் விமானத்தில் எடுத்துவிட்டான். அனைத்தையும் செய்துவிட்ட பிறகு, இதற்கு மேலும் அவளை சந்திக்காமல் இருப்பது சரியாகப் படவில்லை. ஏற்கனவே கௌஷி வேறு எந்த சாக்கும் சொல்லக் கூடாது என சொல்லியிருக்கிறாள்.

எந்த நம்பிக்கையில் வெள்ளிக்கிழமை வருகிறேன் எனச் சொன்னோம் என அவனுக்குப் புரியவே இல்லை.

ஒரு வழியாக அவளைக் காணச் செல்ல, காயத்ரியோ ஒரு வாரத்தில் உருக்குலைந்து போனாள் என்றே சொல்லலாம். தினமும் காலையில் செய்திகள் ஒளிபரப்புகையில், அதில் பிரம்மாவின் விஷயம் வருகிறதா என கண்ணும், மனமும் பரபரக்கும்.

‘அவ்வளவுதான்..., முடிந்துவிட்டது...’ என ஒரு மனம் உரைக்கையில், ‘திருமணம் நிச்சயம் நடக்கும் என சொல்லியிருக்கிறான், அதைச் செய்வான்’ என மறு மனம் கொடி பிடிக்கும்.

தன் மனமே தனக்கு எதிரியாக இருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. ‘அவனை ஒரு முறை கண்ணால் கண்டுவிட்டால் போதும்...’ ஒரு வாரமாக அவனைக் காணாமல் இருப்பது, அதுவும் அவ்வளவு பெரிய செயலை செய்துவிட்டு வந்த பிறகு அமைதியாக இருப்பது அவளால் முடியவே இல்லை.

மாலையில் கல்லூரி முடிந்து, ஹாஸ்டலுக்கு வர அவள் நடக்க, அங்கே அவனது ஜீப்பில் ஒரு காலை ஊன்றி, மறு காலை ஜீப்பில் மடித்து வைத்தவாறு அவன் நிற்பதைக் கண்டாள். அவ்வளவுதான்..., அவள் கால்கள் நின்ற இடத்தில் வேரோட, அங்கே இருந்து அசையவே முடியவில்லை.

தன்னுடன் வந்தவள், நின்றுவிடவே திரும்பிப் பார்த்த இந்திரா, அவள் பார்வை சென்ற திக்கில் தானும் பார்த்தவள், வேகமாக காயத்ரியின் அருகில் சென்றாள்.

“காயத்ரி..., போய் பேசு..., போடி..., அவர் உன்னைத்தான் பார்க்க வந்திருக்கிறார்...” அவள் கை பிடித்து இழுக்க, கண்களில் பயத்தை தேக்கி தோழியைப் பார்த்தாள்.

“காயத்ரி, நீ பயப்படுற மாதிரி எதுவும் இருக்காது. அப்படி இருந்திருந்தால் அவர் இவ்வளவு நிதானமா இருப்பார்ன்னு நினைக்கறியா போ...” எல்லாம் நல்லபடியா முடிய வேண்டுமே என அவளும் தவித்துக் கொண்டுதானே இருக்கிறாள்.

அவள் வருவதைப் பார்த்து, இரு காலையும் நிலத்தில் ஊன்றி நின்றவாறே, தன் இரு கரத்தையும் பேண்ட் பாக்கெட்டுக்குள் விட்டவன், பார்வையை அவளை விட்டு நகர்த்தவே இல்லை. அவள் நடந்து வந்த விதம், தன்னைப் பார்த்தவுடன் சற்று அதிர்ந்து போனதும், கூடவே அவள் கண்களில் விரவிய அந்த நிம்மதி..., அவன் மனதை அழுத்திக் கொண்டிருந்த ஒன்று விடைபெற்றுச் செல்வதை உணர்ந்தான்.

“காயத்ரி..., வீணா இங்கே சீன் கிரியேட் பண்ணாதே போ...” இந்திரா அழுத்தி உரைக்கவே, மெதுவாய் அவனை நோக்கி அடியெடுத்து வைத்து நடந்தாள்.

நொடியில் அவளிடம் இருந்த மாற்றத்தை கண்டுகொண்டான். சற்று தேகம் இளைத்து, கண்களின் கீழே மெல்லிய கருவளையம் பூத்திருக்க, கண்களிலோ ஒரு பயம் விரவியிருந்தது.

‘என்னைப் பார்த்து பயப்படுகிறாயா? அந்த மெம்மரி கார்டையும் கொடுத்து, அவ்வளவு தூரம் சொல்லி அனுப்பிய பின்னரும் ஏன் இந்த பயம்?’ அவளை தன் நெஞ்சோடு அணைத்து ஆறுதல் சொல்லும் வேகம்..., பரபரத்த தன் கரத்தை அழுத்தமாக பேண்ட் பாக்கெட்டுக்குள் நுழைத்துக் கொண்டான்.

அவள் பார்வை அவன் கால்களிலேயே நிலைத்திருக்க, தயங்கி..., தடுமாறி பார்வையை அவன் முகத்துக்குத் திருப்பியவள், அவன் கண்கள் உணர்வுகளைத் தொலைத்து வெற்று பார்வையாக இருக்க, அவளுக்குத்தான் உள்ளுக்குள் குளிர் பிறந்தது.

அவன் அருகில் சென்று நிற்க, என்ன பேசவென்று சத்தியமாக அவளுக்குத் தெரியவில்லை. தயக்கமாக அவன் முகம் பார்க்க, சுவிங்கத்தை மென்றவாறே அசையாமல் அவளைப் பார்த்தவன், “என்னடா இவனை கத்தியால் குத்தினோமே..., இப்படி சாகாமல் பிழைச்சு வந்துட்டானேன்னு பாக்கறியா?” அவன் கேட்க, விதிர்த்துப் போனாள்.

“வேண்ணா இன்னொரு முறை ட்ரை பண்ணு..., அசையாமல் அப்படியே நிக்கறேன். ம்..., கத்தி வேணும்ல...” கேட்டவன், தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து அவளது அந்த பட்டன் கத்தியை எடுத்து அவள் பக்கம் நீட்ட, கண்களில் முணுக்கென கண்ணீர் எட்டிப் பார்க்க, இரண்டு எட்டு பின்னால் நகர்ந்தாள்.

அவன் முகத்திலோ எந்த பாவமும் இல்லை. “இந்தா..., உன்னோடதுதான், தேவைப்படும் வச்சுக்கோ...” அவளை நெருங்கி, அவளது கைப்பையை வாங்கி, அதற்குள் கத்தியை தானாகவே வைத்தான். அவனிடம் மறுக்கவோ, விலகிச் செல்லவோ அவளுக்கு கொஞ்சமும் தைரியம் இருக்கவில்லை.

இப்பொழுது அவளது பார்வை அவனிடம் கெஞ்ச, இளகும் தன் மனதை அவளுக்குக் காட்டாமல் நின்றிருந்தான். ‘சாரி சொல்லும் விஷயமாக இருந்தால் சொல்லிவிடலாம். அது தெரியாமல் செய்துவிட்ட செயலுக்கு என்றால் சரி. ஆனால், வேண்டுமென்றே செய்த செயலுக்கு சாரி சொல்ல முடியுமா என்ன?

அவ்வளவு தவிப்பிலும் அவள் மனதுக்குள் ஒரு பெரும் விடுதலை உணர்வும், ஆறுதலும் ஒருங்கே எழுந்தது. ‘அவனை கண்டுவிட்டேன்..., அது போதும்...’ ஆழ்மனதில் நிம்மதி. அதையும் மீறி, பெரும் குற்றவுணர்வு, பயம்.

அவள் முகத்திலேயே கவனமாக இருந்தவனுக்கு அவள் மனதின் உணர்வுகள் அப்படியே புரிந்தது. புரொபஷனல் கொலைகாரர்களுக்கும், சாதாரண மனிதருக்கும் இதுதான் வித்தியாசமே. அவள் கண்களில் தவிப்பை பார்த்தவனுக்கு, உள்ளுக்குள் அவ்வளவு ஆனந்தமாக இருந்தது.

‘எனக்காக இப்படி தவிக்கிறாயா...?’ ஒரு ஆறுதல், அவளுக்கு தன்மேல் நிஜமாகவே பெரும் கோபம், வெறுப்பு, வெறி இருந்திருந்தால், இப்பொழுது அவள் முன்னால் வந்து நிற்கும் வேளையில், ‘ஏன் வந்து தொலைத்தாய்? மறுபடியும் வந்துவிட்டாயா? இங்கே வந்து ஏன் என் உயிரை

எடுக்கிறாய்?' இப்படியான ஏச்சு, பேச்சுக்களை கேட்டிருப்பாள்.

அப்படி இல்லாமல், 'ஹப்பா..., வந்துட்டியா...? உனக்கு ஒன்றும் இல்லையே!' என அவள் கண்களில் விரவும் நிம்மதி நிச்சயம் இருந்திருக்காது என்பது புரிய, தன் திருமணத்தை அந்த நேரம் உறுதி செய்தான்.

"காயு..., நாளைக்கு சாயங்காலம் கோவைக்கு போகணும். தங்கச்சி உன்னை பாக்கணும்னு சொன்னா. கல்யாணத்துக்கு நாள் குறிக்கணும், ட்ரெஸ் எல்லாம் வாங்கணும்..., நீ ரெடியா இரு..., நான் வந்து கூட்டி போறேன். ரெண்டு செட் ட்ரெஸ் எடுத்து வச்சுக்கோ..." அவன் வெகு இயல்பாக உரைக்க, அவளுக்கு என்ன ரியாக்ட் செய்வது என்றே தெரியவில்லை.

அந்த வீடியோவைப் பார்த்து அவன்மேல் அந்த நேரம் எழுந்த கோபம் கூட இந்த ஒரு வாரத்தில் இறங்கிப் போயிருக்க, இப்பொழுது மிச்சமிருந்தது தவிப்பு மட்டுமே.

"சொன்னது காதில் விழுந்ததா?" அவன் சற்று நெருங்கி வர, கால்கள் வேரோட அப்படியே நின்றவள் அவனை வெறித்தாள்.

தலை தாமாகவே 'ஆம்...' என அசைய, "படபடன்னு பேசுவ..., இப்போ இவ்வளவு அமைதியா இருக்க? நம்ப முடியலையே..., வேற எதுவும் பெருசா ப்ளான் பண்றியா? அப்படி இருந்தா சொல்லிடு..., தடயமே இல்லாமல் எப்படி என்னை முடிக்கிறதுன்னு நானே டிப்ஸ் கொடுக்கறேன்" அவள் முன்னால் சற்று குனிந்து உரைக்க, கண்கள் படபடக்க, அவனை ஏறிட்டாள்.

"ஏதாவது சொல்லணுமா?" அவன் மீண்டும் கேட்க, தலை கவிழ்ந்தவள், 'இல்லை...' என மறுப்பாக தலை அசைத்தாள்.

"அப்போ சரி..., நாளைக்குப் பாக்கலாம்..." உரைத்தவன், அவள் தலையில் ஊத, வேகமாக நிமிர்ந்து பார்த்தாள். அவ்வளவு நெருக்கத்திலும் அவளை சாதாரணமாக

தொட்டுப் பேச கூட அவன் முயலாதது அவளுக்கு ஆச்சரியத்தையும், நிம்மதியையும் அளித்தது.

“இந்த ஒரு வாரமா, நான் இருக்கேனா..., இல்ல போய்ட்டேனான்னு பாக்கணும்னு கூட உனக்குத் தோணலையா?” இதைக் கேட்கையில் அவன் குரலில் இருந்தது என்ன? ஆனால், அந்த குரல் அவள் மனதைப் பிசைந்தது மட்டும் உண்மை.

அவள் விழி விரிய அவனைப் பார்க்கையிலேயே..., “நல்லா சாப்பிடு...” உரைத்தவன், பின்னால் அடியெடுத்து வைத்தவாறே சென்று, ஜீப்பில் ஏறி சென்றே விட்டான். அவன் செல்லவே, அவள் அருகில் கிட்டத்தட்ட ஓடி வந்தாள் இந்திரா.

“காயத்ரி..., என்னடி சொன்னார்? ஏன் இப்படி நின்னுட்ட? திட்டிட்டாரா?” அவள் தோளை உலுக்கினாள்.

“நாளைக்கு அவரோட தங்கச்சி வீட்டுக்குப் போகணும், ரெடியா இருன்னு சொல்லிட்டுப் போறார்...” காயத்ரி உரைக்க,

“உஃப்..., இதுக்கா இப்படி இருக்க..., வா..., இனிமேல் முட்டாள்த்தனமா எதையும் செய்து வைக்காதே...” அவளை அழைத்துச் சென்றாள்.

மறுநாள் மாலையில் அவன் வந்தபொழுது, அவனுக்காக தயாராக காத்திருந்தாள். அவனோடு வாடகை காரில் பயணித்தபொழுதும் சரி, விமான நிலையத்தில் செக்கிங் முடிந்து, விமானத்துக்காக காத்திருந்து, விமானத்தில் ஏறும் வரைக்கும் இருவரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

இருவருக்கும் வேறு வேறு இடத்தில் இடம் கிடைக்க, தனியாக அமர வெகுவாக தயங்கினாள். “அதுதான் உன் சீட்..., போய் உட்கார்...” அவன் உரைக்க, நகரப்போன அவனது கரத்தை பற்றி தடுத்தவள், “நீங்க...” ‘நான் தனியாக போக மாட்டேன்.’ என அவனைப் பார்வையால் கெஞ்சினாள்.

அவ்வளவு நேரத்தில், முதல் முறையாக அவன் முகம் சிறு மலர்ச்சிக்குச் செல்ல, “சரி என்னோட வா...” அவளை அழைத்துச் சென்றவன், தன் சீட்டுக்கு அருகில் இருந்தவரிடம் ரிக்வஸ்ட் செய்ய, அவளுக்கு அந்த இருக்கையை விட்டுக் கொடுத்துவிட்டு நகர்ந்து சென்றான்.

அவளுக்கு சீட் பெல்ட்டை தானே மாட்டி விட்டவன், அவளது படபடப்பு உணர்ந்து, அவள் நெற்றியில் லேசாக அரும்பியிருந்த வியர்வைத் துளியை தன் கர்ச்சீப்பால் மெதுவாக ஒற்றிவிட்டு, பணிப்பெண்ணிடம் கேட்டு தண்ணீர் வாங்கிக் கொடுத்தான்.

அவன் செய்கையில் கொஞ்சம் கூட நடிப்போ, செயற்கைத்தனமோ அவளுக்குத் தெரியவில்லை. மாறாக, ஒரு குழந்தை எதையாவது பார்த்து பயந்தால், தன் தாய் அதை அரவணைத்து அதன் பயம் போக்குவாளே, அப்படி இருந்தது.

அந்த கரிசனை அவள் மனதைத் தொட்டு, அசைத்துப் பார்த்தது என்றே சொல்லலாம். விமானம் கிளம்பி, மேலெழும் நேரம், அடிவயிற்றில் ஒரு பயப்பந்து குழல, அவன் இடக்கரத்திற்குள் தன் கரம் கோர்த்தவள், அவன் நெஞ்சில் அழுத்தமாக தன் முகம் புதைத்துக் கொண்டாள்.

சட்டென அவள் நாசிக்குள் அவனது வாசனை..., வியர்வையும், அவன் ஆண்மை வாசனையும் கலந்த ஒருவித சுகந்தம், விலகிவிட முயன்றாலும், விமானத்தின் ஒருவித அசைவும், புதுவிதமான அந்த அனுபவமும் சேர அவனை விட்டு சட்டென விலக முடியவில்லை.

அவனோ அப்பொழுதும் அசையாமல் அமர்ந்திருந்தான். மனதிலோ, தான் அழைத்தவுடன் அவள் மறுக்காமல் தன்னோடு வந்தது பெரும் ஆறுதலாக இருந்தது. கூடவே, இப்பொழுது தனியாக அமர மறுத்தது, தன் தோள் சாய்ந்தது என வானத்தில் மிதந்தான்.

என்னதான் பிடிவாதமாக அவளை திருமணம் செய்வது என்றாலும், அவளுக்கு தன்மேல் அன்பும், நம்பிக்கையும்

வேண்டும் என அவன் நினைப்பது தவறில்லையே.

அவள் விமானம் நேரான பிறகும் அவனை விட்டு விலகி அமரும் எண்ணமின்றி, அப்படியே அமர்ந்து உறங்கிவிட்டாள். எவ்வளவு நேரமோ தெரியாது..., ஆனால், “காயு..., போகலாம்...” அவன் அவளை உலுக்கிய பிறகுதான், அப்படியே அமர்ந்து உறங்கிவிட்டோம் என்பது அவளுக்குத் தெரிந்தது.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம்..., தன்னை எழுப்பாமலே விட்டிருக்கிறான், என்பது புரிய, தன்னை நினைத்தே வெட்கமாகப் போயிற்று. அவனைப் பிடிக்காது, அவன்மேல் கோபம் என்றெல்லாம் சொல்லிவிட்டு, இப்படி அவன் தோளிலேயே படுத்து உறங்கி விட்டோமே, என அவள் தன்னையே நொந்து நின்றுவிட்டாள்.

அவள் நின்றுவிட்டதைப் பார்த்தவன், “காயு, என்ன பண்ணுது? தலை சுத்துதா? வேண்ணா ரெண்டு நிமிஷம் உக்கார், பிறகு போகலாம்...” அவன் சொல்ல, பட்டென அவன் முகம் பார்த்தவள், அதில் இருந்த கனிவில், ‘நீ ஏண்டா நல்லவனா இல்லாமல் போன?’ மனம் கதற, தனக்குள் ஒரு நொடி எழுந்த அந்த நினைவில் விதிர்த்துப் போனாள்.

“போகலாம்...” அந்த நொடியின் கனம் தாளாமல், வேகமாக அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

அடுத்த அரைமணி நேரத்தில், அந்த தனி வீட்டின் முன்னால் நிற்க, ‘இவனது தங்கை எப்படி பழகுவாள்? திடீரென திருமணம் எனச் சொன்னால் என்ன சொல்வாள்? என்னைப் பற்றி அவளிடம் என்ன சொல்லி இருப்பான்...?’ எண்ணம் முதல் முறையாக மற்றவளைப் பற்றி சிந்தித்தது.

அவளது யோசனை முடியும் முன்பே..., “அண்ணே...” ஒரு குரல் ஆர்வமாக ஒலிக்க, கூடவே, சிறுமிபோல் ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்ட அவளையும், “பாத்தும்மா...” கரிசனையில் பதறிய அவனையும் வியப்பாய் பார்த்தாள்.

கூடவே..., ‘என் அண்ணா இருந்திருந்தால் நானும் இப்படித்தானே ஒட்டியிருப்பேன். அவனை இல்லாமல் செய்துவிட்டானே...’ மனதின் ஓரம் முணுக்கென ஒரு நினைவு எழுந்து அழுத்தியது.

*****

# பகுதி – 18.

திருமண மண்டபத்தில் மணமகள் அறையில், முழு அலங்காரத்தில் அமர்ந்திருந்தாள் காயத்ரி. கிட்டத்தட்ட ஒரு மாதம் எப்படி கடந்தது என்றே தெரியவில்லை. இன்னும் சற்று நேரத்தில், பிரம்மாவின் மனைவியாகப் போகிறாள்..., அதை நினைத்தாலே சற்று எரிச்சலாகத்தான் இருந்தது.

இந்த திருமணம் நடக்க வேண்டாம் என எவ்வளவோ வேண்டுதல்கள் வைத்து விட்டாள். தெய்வம் கூட அவளுக்கு எதிராக இருப்பதுபோல் இருந்தது. அவளது எண்ணம் உணர்ந்த இந்திரா, “உனக்கு அவர்தான் என்பது ஆண்டவன் போட்ட முடிச்சு..., அதை நீ மாற்றாதே...” என முடிந்த அளவு சமாதானம் சொல்லிவிட்டாள்.

சில நொடி சமாதானம் ஆகும் அவளது மனம், அடுத்த நிமிடமே, சாந்தி பேசியதில் வந்து நிற்கும். சாந்தி கல்லூரிக்கு வருவதை விட, காயத்ரியை சந்திக்கவென்றே அதிகம் வந்தாள். அதுவும் இந்திராவுக்கு கூட தெரியாமல், தனிமையில் சந்தித்துச் சென்றாள்.

அவளது இந்த செய்கைக்கான காரணம் என்னவென்று ஒரு நொடி கூட அவள் சிந்திக்கத் தயாராகவே இருக்கவில்லை. கடிவாளம் கட்டிய குதிரையாக, கண்கள் நேரில் இருப்பதை மட்டுமே பார்ப்பதுபோல், என் அண்ணாவை கொன்றுவிட்டான்..., என்பது மட்டுமே அவளுக்குத் தெரிந்தது.

தனக்கு ஆதரவாக, ஆறுதலாக சாந்தி இருக்கிறாள் என எண்ணியவளுக்கு, அவளுக்கும் பிரம்மா மேல் ஏதோ கோபம் என எண்ணிக் கொண்டாள். மற்றபடி, சாந்தி, இந்திரா இல்லாத நேரங்களில் மட்டும் வருவதோ, வருகையிலும் போகையிலும் அவள் முகத்தை மறைக்கும் செய்கையோ எதையும் அவள் உணரவில்லை.

சொல்லப்போனால் இப்பொழுது சாந்தி கொடுக்கும் துர்போதனையாலேயே பிரம்மாவின் மேல் கோபம்

கொண்டாள். ஆனால், அவளுக்கு ஒன்று மட்டும் தெளிவாக தெரிந்து போனது. அது, அவளால் பிரம்மாவை கொல்ல முடியாது என்பதுதான்.

இப்பொழுதும் கூட, அவனைப் பற்றி சிந்தித்தாலே, அவனது காதல் சொன்ன கணமும், தன் கைகளில் சிந்திய அவனது ரத்தமும், அதன் வெம்மையும் அவளால் மறக்கவே முடியவில்லை. அதே நேரம், தன் அண்ணாவை கொன்றவனை கணவனாக ஏற்கவும் அவளால் முடியவில்லை.

மனதளவில் தவித்துதான் போனாள்..., எத்தனையோ முறை அவன் நேரில் வந்த பொழுதெல்லாம், தன் விருப்பமின்மையையும், பாராமுகத்தையும் காட்டிவிட்டாள். ஆனால் கூட, மறுமுறை எதுவும் நடவாததுபோல் அவன் தன்னைக் காண வருவதும், ஒரு வார்த்தை கூட பேசாமல் தன் அருகில் அமர்ந்திருப்பதையும் காண்கையில் அவனை தவிர்க்கவும் முடியவில்லை.

தன்னைத் தேடிவந்து, தன் அருகில் அமர்ந்திருக்கும் பொழுதெல்லாம் அவன் முகத்தில் தெரியும் கலக்கம், குழப்பம் ஏன் எனவும் புரியவில்லை. அதை கேட்டுத் தெரிந்து கொள்ளவும் அவளுக்கு விருப்பமில்லை.

சட்டென எழுந்த சலசலப்பில் அவள் கலைய, அவளைச் சுற்றி வகுப்புத் தோழிகள் இருக்க, அவளது அருகில் நின்றிருந்தாள் இந்திரா.

“காயத்ரி..., தயவு செய்து மூஞ்சியை இப்படி வைக்காதடி, எனக்கே கண்கொண்டு பாக்க முடியலை..., இதில் எவளாவது ஏதாவது கேட்டான்னா வம்பா போய்டும், அதுவும் எஸ்பி சார் காதுக்கு போனால் வேற வினையே வேண்டாம்.

“ஏற்கனவே உன் சின்ன மாமியார் தொல்லை தாங்கலை..., ‘என் பையனுக்கு சீமையில் இருந்து பொண்ணு கொடுக்க வரிசையில் நிக்கறாங்க, இந்த கிறுக்குப்பய இவ

முந்தானையில் விழுந்துட்டான்னு நீட்டி முழக்கி பாடிகிட்டு திரியுது.

‘அது பேச்சும் தோரணையும், வாயில் போடும் வெத்தலை பாக்கும், நேர்ல வந்த சொர்ணாக்கா மாதிரி இருக்கு. அது மட்டுமா?

“அவனுக்கு நூறு சவரன் போட வந்தாக…, போனாக…, பொண்ணு சும்மா கிளி மாதிரி இருந்தாக…, ஹப்பா, அது சொல்றதை காதால் கேக்க முடியலை. இதில் உன் முகத்தை வேற இப்படி பாத்துதோ…, ஒரு வழியே பண்ணிடும். கொஞ்சம் சிரிச்ச மாதிரிதான் இரேன்…” சற்று பயத்தோடுதான் அவள் காதுக்குள் உரைத்துக் கொண்டிருந்தாள்.

காயத்ரிக்கோ எதுவும் செய்ய இயலாத ஒரு நிலை, அவளும் திடுமென இப்படி ஒரு குடும்பத்தை எதிர்பார்க்கவில்லைதான், அவனது தங்கையே அவளுக்கு அதிர்வென்றால், சித்தப்பா, சித்தி…, கட்டுக்கடங்காத சொந்தங்கள், விழி பிதுங்கியது.

‘அப்படியென்றால் கோவிலில் பார்த்த தாயும், தங்கையும் யார்?’ அவளுக்குள் அந்த கேள்வி சுழன்றது. அதை அவனிடம் கேட்டுவிடவும் முடியவில்லை, ஏற்கனவே கோவிலில் வைத்தே, ‘எனக்கு அவங்களை தெரியாது’ என அவன் உரைத்திருக்க, அதற்குமேல் அவனிடம் கேட்கும் தைரியம் இருக்கவில்லை.

கௌஷிகாவைக் காணச் சென்ற அன்று, அவள் தங்களை வரவேற்ற விதம், அதிலும் தன்னைக் கண்டவுடன், “அண்ணி…, உள்ளே வாங்க…” அவள் கை பிடித்து உள்ளே அழைத்துச் சென்றவள், காயத்ரியைப் பற்றி எதையும் கேட்கவில்லை.

‘அவள் ஏதாவது கேட்டால் என்ன பதில் சொல்வது?’ என காயத்ரி தவித்துக் கொண்டிருக்க, கௌஷிக்கு அதைப்பற்றி எந்த கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை.

‘நீ என் அண்ணாவின் மனதுக்கு பிடித்தவள், அவனது வருங்கால மனைவி. அவன் சொல்லிவிட்டால் அதற்கு மறு பேச்சே கிடையாது. அவன் ஒன்றைச் செய்தால் அது சரியாகத்தான் இருக்கும், அவனது தேர்வு சோடை போகாது…’ என்ற அவளது பலமான நம்பிக்கையை கண்டு வியந்து போனாள்.

அவள் வீட்டுக்குப் போனவுடன் இரவு உணவை கொடுத்தவள், இரவு உறங்கும் வரைக்கும் அவளோடு பேசிக் கொண்டு இருந்தாள். அனைத்தும் அவளது அண்ணன் புராணம்தான்.

‘எங்க அண்ணா அவ்வளவா பேச மாட்டாங்க…, பட், உள்ளுக்குள்ளே ரொம்ப பாசமானவங்க…” அவனது அன்பு, அக்கறை என உரைத்துக் கொண்டிருந்தாள். அவன் உன்மேல் பாசம் கொண்டவன்தான் என்பதை தனக்கு உணர்த்திவிடும் வேகம் அதில் இருப்பதாகத் தோன்றியது.

அவள் பேச்சில் முக்கியம் இடம் பெற்றது…, ‘என் அண்ணாவை கவனிச்சுக்கோங்க, இனிமேலாவது அண்ணா சந்தோஷமா இருக்கணும்’ என்பதுதான். அவன் சந்தோஷத்துக்கு இதுவரை என்ன வந்தது என காயத்ரிக்கு சுத்தமாகப் புரியவில்லை.

‘அதான் எல்லாரையும் கொன்றுகொண்டு நல்லாத்தானே இருக்கறான்’ மனதுக்குள் நினைத்ததை வெளியே சொல்லவில்லை. உற்சாகமே உருவாய் பேசிக் கொண்டிருக்கும் அவளிடம், எதைப் பற்றியும் குறை சொல்ல முடியவில்லை.

கௌஷிகாவின் வீட்டில் வைத்து, அவள் சாட்சியாக, பிரம்மா கையில் அணிவித்த மோதிரத்தை அவள் எதிர்பாக்கவே இல்லை. அவன் மனதுக்குள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்? அந்த வீடியோவுக்கான அர்த்தம், எதுவும் புரியவில்லை.

ஆனால், அவர்கள் இருவரையும் காணும் பொழுதெல்லாம், தன் அண்ணன் காமேஷின் நினைவு எழுந்து அவளை

வதைத்தது மட்டும் உண்மை. அது கொடுத்த அழுத்தத்தால், அவளால் அங்கே இயல்பாக இருக்க முடியவில்லை.

அவள் மனநிலையை எப்படி அறிந்தானோ..., “தேவையில்லாமல் மனசுக்குள் எதையும் போட்டு குழப்பிக்காதே...” அவனது தங்கை அவளை விட்டு சற்று நீங்கியிருக்க, உடனே வந்து உரைத்தான்.

“அதெப்படி முடியும்...?” அவள் வெடுக்கென கேட்க, அவன் முகத்தில் தோன்றிய இறுக்கம், அவளுக்கு பயத்தை அளித்தது.

‘உனக்கு என்மேல் என்ன கோபம்...?’ அவன் நுனி நாக்குவரை வந்த கேள்வியை அவனால் கேட்க முடியவில்லை. கேட்க தைரியமில்லை என்பதுதான் சரியாக இருக்கும். அவளை தனக்கு சொந்தமானவளாக மாற்றிய பிறகு, அனைத்தையும் கேட்டுக் கொள்ளலாம் என எண்ணினான்.

“இந்த பிரம்மா எப்பொழுதும் தவறான எதையும் செய்தது இல்லை” ஏனோ அதைச் சொல்ல அவனுக்கு தயக்கமாக எல்லாம் இல்லை. அவனைச் சுற்றி இருந்தவர்களின் பயம், கோபம் அனைத்துமே தன் அதிரடியான செய்கைகளால் எழுந்தது தானே தவிர, தனிப்பட்ட விதத்தில் அவர்கள் யாருக்கும் அவன்மேல் கோபம் இல்லையே..., எனவே தைரியமாகவே சொன்னான்.

அதை உரைக்கையில் அவன் குரலில் இருந்த அழுத்தத்தில், நம்பிக்கையில் ஒரு நொடி தடுமாறிப் போனாள். ஆனாலும் அதை ஏற்க முடியாமல், “நினைப்புதான் பிழைப்பை கெடுக்குமாம்..., அப்படி இருக்கு நீங்க பேசறது” கோபமாக உரைக்க, அவளை ஆழமாக ஒரு பார்வை பார்த்தவன் மீண்டும் பேசத் துவங்கும் முன்பு, கௌஷி வரவே, அவளை விட்டு விலகிச் சென்றான்.

புடவை வாங்க மறுநாள் செல்ல, அங்கேயும் அவளுக்குப் பிடித்த புடவையையே எடுக்கட்டும் எனச் சொல்லிவிட்டான். அப்பொழுதும் சரி, அதன் பிறகும் சரி..., அங்கே இருந்து

கிளம்பும் வரைக்கும் அவளிடம் அவன் பேசவே இல்லை. திருமண பத்திரிகை அடிக்க, அவளது பெற்றவர்கள் பெயர், சுற்றம் என கேட்க அதைச் சொல்ல முடியாமல் திணறிப் போனாள்.

அவளது நிலை கண்ட கௌஷி..., “அண்ணா..., இன்னாரோட பொண்ணுன்னு மட்டும் போடுங்க..., இரு வீட்டார் அழைப்புன்னு போடுவதை விட, தங்கள் வரவை விரும்பும்ன்னு போட்டு, எங்கே பேரை போடுங்க..., அது போதும்.

“என் கல்யாணத்துக்கு உங்க பேரை மட்டும் தானே போட்டோம், அப்படியே போடலாம். எதுக்கு தேவையில்லாமல் அவங்களை கஷ்டப்படுத்திகிட்டு” அவள் விஷயத்தை முடித்துவிட, நடப்பவற்றை காயத்ரியால் நம்ப முடியவில்லை.

கிராமத்தில் அனைவருக்கும் தானே அழைப்பு விடுப்பதாக அவள் உரைக்க, மறுக்காமல் கேட்டுக் கொண்டது அதைவிட வியப்பாக இருந்தது.

“அண்ணே நீ ரொம்ப மாறிட்ட..., கல்யாணம்னா பசங்க மாறுவாங்கன்னு தெரியும், ஆனா, இந்த அளவுக்கு மாறுவாங்கன்னு நான் நினைக்கவே இல்லை” கௌஷி உரைத்தபொழுது, முகேஷ், பிரம்மாவின் பார்வைகள் சட்டென பேசிய ரகசியம் என்ன என்று அவளுக்குப் புரியவே இல்லை.

எது எப்படியோ..., அனைத்தையும் கடந்து, இன்னும் சில நிமிடங்களில் அவனுக்கு மனைவியாகக் காத்திருந்தாள். அடுத்த நிமிடம், “பொண்ணை அழைச்சுண்டு வாங்கோ...” ஐயரின் குரல் கேட்க, அவள் அறையில் சிறு பரபரப்பு.

“காயத்ரி..., எழுந்திரி..., போகலாம்...” இந்திரா உரைக்க, அவளது கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

“காயத்ரி..., இனிமேல் அவர் உன் கணவன்..., புருஷனோட கௌரவம் காப்பது ஒரு மனைவியோட கடமை. நேத்து வரைக்கும் என்ன நடந்திருந்தாலும் அதை இந்த

நிமிஷத்தோட மறந்துட்டு, அவரை உன் கணவனா மட்டும் பார்.

“உனக்கு அம்மா இருந்திருந்தால் கண்டிப்பா இதைத்தான் சொல்லியிருப்பாங்க, அதையே நானும் சொல்றேன். இது உன் வாழ்க்கை, விளையாட்டு கிடையாது. சோ..., புரிஞ்சு நடந்துக்கோ. தேவையில்லாத கோபம் எல்லாத்தையும், இந்த ரூமுக்குள்ளேயே விட்டுட்டு, அவரோட மனைவியா அங்கே போ...” சின்னக் குரலில் அறிவுரை வழங்கியவள் அவளை அழைத்துச் சென்றாள்.

தோழி சொன்னது புரிந்தாலும், புத்திக்குத் தெரிவது, மனதுக்குத் தெரியாதே. அடிமேல் அடி வைத்து நடந்தவள், சற்று தூரத்திலேயே லேசாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அவன் முகத்தில் வழிந்த வியர்வை, அவன் கண்களில் இருந்த டென்ஷன் அனைத்தையும் நொடியில் உணர்ந்து கொண்டாள்.

‘ஏன் இப்படி இருக்கான்? நான்தான் இப்படி இருக்கணும், பாத்தா அவன் வியர்த்து வழியறான்..., ரொம்ப பயந்தவன்தான்...’ மனதுக்குள் நொடித்துக் கொண்டாள்.

அந்த நேரம் நிஜமாகவே பெரும் டென்ஷனில் தான் இருந்தான் பிரம்மா. வீடு முழுவதும் சொந்தங்கள்..., யார் யாரோ வந்தார்கள், ஏதோ முறை சொல்லி அழைத்தார்கள்..., சில நேரம் நிறைய அறிவுரை வழங்கினார்கள், சில நேரம் பாசத்தை பொழிந்தார்கள்..., ஆனால் அவர்கள் யாரையும் அவனுக்குத் தெரியவில்லை.

சித்தப்பா என்னும் உறவில் இருந்த பிரகஸ்பதியை ஒற்றை பார்வையிலேயே அவனுக்குப் பிடிக்கவில்லை. அவர் கண்களில் வழிந்த கயமை, நரித்தனம்..., இந்த நிலையிலும் அவனால் இனம் காண முடிந்தது.

‘இவரை எப்படி நான் நெருங்க விட்டேன்? ஏன்?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டவனுக்கு விடைதான் கிடைக்கவில்லை.

சித்தியோ ஒரு படி மேலே போய்..., விட்டால் அவனை இப்பொழுதும் மடியில் போட்டு தாலாட்டுவேன் என நிற்க, அவனுக்கு வெறுப்பாக வந்தது. கௌஷியோ அவர்கள் பார்வையில் படாமல் ஒதுங்கி, பதுங்க, அவனுக்கோ என்ன செய்வது என்றே தெரியவில்லை.

ஒரு கட்டத்துக்கு மேலே முடியாமல், “கல்யாணத்துக்கு வந்தோமா, போனோமான்னு இருங்க..., புரியுதா?” அவன் அடிக்குரலில் சாடிவிட, அவனது சித்தி பெரும் குரலில் ஒப்பாரியே வைக்கத் துவங்கி விட்டாள்.

“நான் உன்னை எப்படி அருமை பெருமையா வளத்தேன்..., ஓடுகாலி புள்ளன்னா பாத்தேன்..., என்னைய இப்படி சொல்லிப் போட்டியே...” இன்னும் நீட்டி முழக்கி என்னென்னவோ சொல்ல, அங்கே விரைந்து வந்தாள் கௌஷி.

சுற்றிலும் இருந்த சொந்தங்கள் அனைத்தும் வேடிக்கை பார்க்க, அவனுக்கு நிலைமையை எப்படி கையாளவென்றே தெரியவில்லை. ஒரு வார்த்தையில் அவர்களை வெளியேற்றிவிட அவனால் முடியும். ஆனால், அதை தன் திருமண நாளில் செய்ய முடியாமல் சூழ்நிலை அவனை கட்டிப் போட்டது.

“அண்ணே..., அதுகிட்டே என்னத்துக்கு வாயைக் கொடுத்தீங்க? அது என்ன செஞ்சாலும் கண்டுக்க மாட்டிங்களே இப்போ என்ன ஆச்சு...?” அவன் தோளைச் சுரண்ட, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

‘அவர்களது நடத்தை, பேச்சு, செயல் எனக்குப் பிடிக்கவில்லை எனச் சொல்ல முடியவில்லை. அவள் பேச்சில் இருந்தே, இதுவரை அவரை தான் தவிர்த்து வந்திருக்கிறோம் எனப் புரிய, செய்து முடித்த செயலை மாற்ற முடியுமா என்ன?

அவன் அமைதியாக இருக்க, “அண்ணே..., என்கிட்டே வந்தால் நீங்க சுட்டுப் பொசுக்கிடுவேன்னு சொன்னதால்,

என்னை இவ்வளவு நேரம் விட்டு வச்சிருக்கு..., நானும் அதான் சாக்குன்னு அது கண்ணில் படாமல் ஒளிஞ்சுட்டு இருக்கேன். தப்பித்தவறி அதுக்கு மூடு மாறுச்சு..., பேசியே என்னை கொன்னுடும்.

“நான் தப்பிச்சுட்டேன்னு பாத்தா, உங்களை இப்படி போட்டு பாக்குதே. அதுக்கு சரியான நேரம் தெரியும்..., இப்படித்தான் செய்யும்...” அவள் பொரும, தன் கோபத்தை எப்படித்தான் கட்டுப்படுத்தினான் என்றே தெரியவில்லை.

அத்தோடு விட்டதா..., “என் மகனுக்கு கல்யாணம்..., நாளையில் இருந்து அவன் அவளுக்கு தானே சொந்தம்..., இன்னைக்கு எனக்கு அவன் மகனாக இருக்கும் கடைசி நாள்...” எனச் சொல்லி அவனோடு தங்க அடம் பிடிக்க, அவனுக்கு கோபம் உச்சத்தில் ஆடியது.

ஒரு வழியாக அதை சம்மாளித்து அனுப்பினால், சித்தப்பா வந்து கழுத்தறுக்க, அவனால் முடியவே இல்லை. அதிலும் அவர் பேசிய சொத்து பற்றிய பேச்சுக்கள்..., அதை சம்மாளித்தால்..., “உன் ஆத்தாக்காரி வராளா?” ஒரு மாதிரி இளியலில் அவன் கேட்க அப்படியே அவர் முகத்தை பெயர்க்கும் வேகம்.

எப்படித்தான் அங்கிருந்து அகன்றான் என்றே அவனுக்குத் தெரியவில்லை. நேற்று இரவில் துவங்கிய டென்ஷன்..., இறங்க மாட்டேன் என சண்டித்தனம் செய்தது. இரவில் ஒரு பொட்டு உறங்க முடியவில்லை. இன்று காலையிலேயே சித்தப்பா அவனை சந்திக்க முயல, அவனுக்கு விழி பிதுங்கியது.

ஒருவித டென்ஷன்..., அதை என்னவென்று வரையறுக்க முடியவில்லை. கௌஷிகாவிடம் கூட தன் நிலையை விளக்க முடியவில்லை. முடிந்த அளவு முகேஷ் எவ்வளவோ அனைத்தையும் தவிர்க்க முயன்றான். ஆனால், அதற்கு பிரம்மா அனுமதிக்கவில்லை.

தன் கௌரவம் கலைந்தாலும், முகேஷை அவர்கள் ஏதாவது சொல்லிவிட்டால், கௌஷிகாவை எப்படி

எதிர்கொள்ளப் போகிறோம் என்ற கவலையிலேயே, அனைத்தையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என அனுப்பிவிட்டான்.

எதுவும் தெரியாமல், முடியாமல், இப்படி ஒரு திருமணம் அவசியமா? என சிந்திக்கும் நிலைக்கே அவன் வந்துவிட்டான். அவன் சிந்தையில் இருக்க, “பொண்ணு வர்றா…? பொண்ணு எம்புட்டு அழகா இருக்கா பாருங்களேன், பையனுக்கு ஏத்த ஜோடிதான்…” அங்கே எழுந்த பேச்சுக்களில் கொஞ்சம் கலைந்தான்.

அவன் பார்வையை அவள் பக்கம் திருப்ப, குத்தும் விழியாக அவனை நோக்கினாள். அவளது பார்வையில் கோபம் இருந்தாலும், அவளை பார்த்ததே சற்று நிம்மதியாக இருக்க, தன் இறுக்கம் சற்று குறைக்க முயன்றான்.

தன்னைப் பார்த்தவுடன் அவன் பார்வையில் தெரிந்த இளக்கம், சிறு ஆர்வம், அனைத்தையும் கவனித்தாலும் தன் பார்வையை காயத்ரி சற்றும் மாற்றிக் கொள்ளவே இல்லை.

“ஏய்…, கொஞ்சம் கண்ணை தட்டி முழிடி…, எனக்கே நீ பாக்குறது பயமா இருக்கு” இந்திரா குரல் கொடுக்க, வேகமாக தன் பார்வையை தாழ்த்திக் கொண்டாள்.

அவன் அருகில் அமர்ந்தவள், மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை. ‘தன் அண்ணனை கொன்றவனின் கையால் தாலி வாங்கப் போகிறோம்’ என்ற நினைவே அவளுக்கு கசந்து வழிந்தது.

அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில் அவள் கழுத்தில் மங்கலநாண் பூட்டியவன், அவளை தன்பக்கம் சாய்த்து, வகிட்டில் குங்குமம் வைக்க, அவள் எப்படி உணர்ந்தாள் என்றே சொல்வதற்கு இல்லை.

அவள் கண்களில் வழிந்த கண்ணீர் அவன் கரத்தில் பட்டு தெறிக்க, அவள் தன் பாதியாகிவிட்டாள் என்ற நிம்மதியை தாண்டி, அவள் கண்ணீர் அவனைச் சுட்டது.

அடுத்த ஒரு மணி நேரத்தில், காலை டிபன் முடித்துவிட்டு, வீட்டுக்கு வந்துவிட்டார்கள். ஊரில் இருந்து வந்த அனைவரையும் மண்டபத்திலேயே விட்டுவிட்டு வந்தார்கள். அவர்களுக்கு ஊரை சுற்றி பார்க்க இரண்டு பஸ் ஏற்பாடு செய்யப் பட்டிருக்க, அவனது வீட்டுக்குச் செல்ல பெரிதாக யாரும் ஆர்வம் காட்டவில்லை.

வீட்டுக்கு வருவேன் என நின்ற சித்தப்பா, சித்தியை அடக்கும் வழி தெரியாமல், அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான். அவர்களோடு கூடவே மேலும் சிலர் சேர்ந்து கொள்ள, முரட்டுத்தனமாக எதையும் செய்யவும் அவனுக்கு முடியவில்லை.

பழைய பிரம்மாவாக இருந்திருந்தால் எப்படியோ..., ஆனால் இப்பொழுது கௌஷிகாவும், முகேஷும் சற்று அடங்கிப் போகச் சொல்லவே, தன் கோபத்தை எல்லாம் ஒற்றி வைத்தான்.

காயத்ரி, தன் தோழி இந்திரா, இன்னும் இருவரை பிடிவாதமாக தன்னோடு இணைத்துக் கொண்டாள். அவர்கள் எவ்வளவோ மறுத்தும் அதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

பிரம்மாவும், “ஈவினிங் ரிஷப்ஷன் முடிந்த பிறகு நீங்க போகலாம், வாங்க” என அழைக்கவே, அவர்களால் மறுக்க முடியவில்லை.

வீட்டுக்கு வந்து, விளக்கேற்றி, பால் பழம் பருகிய பிறகு, கீழே இருந்த ஒரு அறையில் காயத்ரி தோழிகளோடு சென்று அமர்ந்துவிட, தன் அறைக்கு மாடியேறினான் பிரம்மா. அவனுக்கு சற்று நேரம் படுக்க வேண்டி இருந்தது.

இரவு முழுவதும் உறங்காதது, காலையில் சீக்கிரம் கண் விழித்தது, புகை, அலைச்சல் என அவன் உடல் ஓய்வுக்காய் கெஞ்சியது. அவன் அறைக்குள் நுழைந்த மறு நிமிடம், அங்கே வந்தார் அவனது சித்தப்பா.

‘என்ன வேண்டும்...?’ அவன் அழுத்தமான பார்வையில் வினவ அதை கொஞ்சம் கூட கண்டுகொள்ளவே இல்லை.

‘எனக்கு புரியவே இல்லையே…’ என்னும்படியான முகபாவத்தில் உள்ளே வந்தவர், “பிரம்மா…, உன் ஆத்தா காரியை உன் கல்யாணத்துக்கும் கூப்பிடலையா? ஏம்லே…? ஒரு ஜோட்டு பாக்கலாம்னு பாத்தேன்” சுவாதீனமாக உள்ளே நுழைந்தவர் அவனது படுக்கையில் அமர, தாறுமாறாக எழுந்த கோபத்தை கைகளை அழுத்தமாக மூடி அடக்கினான்.

அவரிடம் கோபம் காட்டினால் முடியாது என்பதை உணர்ந்தவன், “கொஞ்சம் வாங்க…” அவரை தன்மையாக அழைத்துக் கொண்டு வெளியேறியவன், “கந்தன்…” அவன் குரலுக்கு பாய்ந்தோடி வந்தார்.

கந்தனை பார்வையால் எரித்தவாறே…, “இவரை கூப்ட்டு போய் கவனிங்க” கண்களால் ஜாடை காட்ட, புரிந்தது என தலை அசைத்தவர், அவனது சித்தப்பாவுக்கு டாஸ்மாக் சமாச்சாரத்தை கண்களில் காட்ட, தன் மனைவி எங்காவது தட்டுப்படுகிறாளா என பார்வையால் ஒரு நொடி துழாவியவர், அடுத்த நொடி, அவனது கரத்தில் இருந்து பாட்டிலை பறித்துக் கொண்டு வீட்டின் பின்னால் விரைந்தார்.

அவர் செல்லவே, “கந்தன்…, இந்த படிக்கு மேலே யாரையும் அனுப்பாதீங்கன்னு உங்களுக்குச் சொன்னால் புரியாதா?” தன் கோபத்தை எல்லாம் அவரிடம் காட்ட, அவர் விழித்தார்.

கூடவே, “சார்…, நான் சொன்னேன் சார்…, அவர்தான் கேக்கலை…, சொந்தக்காரங்களை ஒரு அளவுக்கு மேல் நான் கட்டுப்படுத்த முடியாது சார். நான் சொன்னாலும் கேக்க மாட்டாங்க…” என் வரம்பு அவ்வளவுதான் என அவர் தடுமாற, தன் தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

“அப்போ உங்களால் முடியாது அப்படித்தானே…, விடுங்க நான் பாத்துக்கறேன்” கிட்டத்தட்ட கத்தியவன், காயத்ரி இருந்த அறை நோக்கிச் சென்றான்.

அவன் அங்கே செல்வதைப் பார்த்த கௌஷிகா, வேகமாக அவன் முன்னால் வந்து நின்றாள். “அண்ணே…, இப்போ

எங்கே இந்தப் பக்கம் போறீங்க? யாராவது பாத்தால் அவ்வளவுதான்..., அதைவிட நம்ம சித்தி ஒரு ஆள் போதும்..., கத்தியே சாகடிச்சிடும்..., நீங்க ரூமுக்கு போங்க...” அவனை தடுக்க முயன்றாள்.

“விலகு கௌஷி...” அவன் குரலில் இருந்த கோபத்தில் வேகமாக இரண்டடி பின்வாங்க, அங்கே வந்தான் முகேஷ்.

“பிரம்மா..., என்ன இது? எதுக்கு இவ்வளவு கோபம்?” கேட்டவன் பிரம்மாவின் முகம் பார்க்க, அவன் முகமே சற்று விகாரமாகத்தான் தோற்றமளித்தது.

“எனக்கு இப்போ ரெஸ்ட் எடுக்கணும் அவ்வளவுதான். ஆனா, இங்கே இருக்கும் சூழ்நிலையில் அது என்னால் சுத்தமா முடியாது போல, சோ..., நானே இதை ஹேண்டில் பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்” அவன் இறுக்கமாக உரைக்க, நண்பனின் குரலில் இருந்த பாவனையில் உருகித்தான் போனான்.

நேற்று இரவில் கூட, “எனக்கு பயித்தியம் பிடிச்ச மாதிரி இருக்கு..., என்னையே எனக்குத் தெரியாமல், இதில் மற்றவர்களை தெரிஞ்சுக்க வேண்டிய நிலை, ரொம்ப கொடுமையா இருக்கு...” அவன் சொல்லி புலம்பியிருக்க, நண்பனுக்கு உதவ முடிவெடுத்தான்.

“பிரம்மா..., நீ காயத்ரியை அழைச்சுட்டு போ..., இங்கே எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்” முகேஷ் சொல்ல, கௌஷிக்கு இதயம் தொண்டையில் துடித்தது.

“என்னது..., எல்லாத்தையும் நீங்க பாத்துப்பீங்களா? என்ன விளையாடறீங்களா? எங்க சித்தியை பத்தி உங்களுக்கு தெரியாது...” அவள் சொல்லிக் கொண்டே போக, பிரம்மாவை அனுப்பினான் முகேஷ். அதைப் பார்த்து அவள் முறைக்க, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“ஹையோ..., என்னங்க..., ஏதாவது வம்பு வளக்க போறாங்க..., வேண்டாம்...” அவள் கெஞ்ச,

“உங்க சித்தியை கவனிக்கிறது என்னோட வேலை..., சொந்தக்காரங்களை மடக்குறது உன் வேலை, படியில் காவல் இருப்பது கந்தனோட வேலை அவ்வளவுதான்..., இதுக்கு மேலே பேச்சே கிடையாது” அவன் முடித்துவிட, கௌஷிக்கு தான் பெரும் பதட்டமாகப் போயிற்று.

“இதை முன்னாடியே செய்திருந்தால் அண்ணா ரூமிலேயே இருந்திருப்பான்” அவள் குறைபட,

“அப்படியே அவனை தனியா விட்டுட்டுதான் உன் வீட்டு ஆட்கள் மறு வேலை பாப்பாங்க பார்..., நானும் வந்தது முதல் பாத்துட்டே இருக்கேன், ஒருத்தர் மாத்தி ஒருத்தர், அவனை பிச்சு திங்கறாங்க..., அவனும் எவ்வளவு நேரம்தான் பொறுமையா இருப்பான்? போ...” அவளை அனுப்பினான்.

காயத்ரி இருந்த அறைக்கு முன்பாக சென்று நின்றவன், கதவைத் தட்ட, கதவைத் திறந்தாள் இந்திரா. அங்கே பிரம்மாவை எதிர்பாராதவள் சற்று திகைத்து, “காயத்ரி...” பின்னால் திரும்பி குரல் கொடுக்க, அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்து தலையில் கை வைத்திருந்த காயத்ரி தயக்கமாக எழுந்து வந்தாள்.

அவள் வரவே..., “வா...” அவன் ஒற்றை வார்த்தையில் அழைத்துவிட்டு திரும்பி நடக்க, திக்கென அதிர்ந்து போனாள்.

வேகமாக தோழிகளைப் பார்க்க, அவர்கள் முகங்களில் விரவிய கேலியும், நமுட்டு சிரிப்பும், அவர்களது பார்வைகளின் பரிபாஷையும், ‘ஹையோ ஆண்டவா..., இவன் ஏன் இப்படி பண்றான்...?’ அவளால் எண்ணத்தான் முடிந்தது.

“போடி..., அதான் எஸ்பிசார் கூப்பிட்டாரே..., போ...” இந்திராதான் அவளை கழுத்தை பிடித்து தள்ளாத குறையாக போகச் சொல்ல, “நீங்க...” அவர்களை அவள்தானே பிடிவாதமாக அழைத்து வந்தாள்...,

இப்பொழுது அவர்களை தனியாக விட்டுச் செல்ல தயக்கமாக இருந்தது.

“ஆமா…, எங்களை காக்கா தூக்கிட்டு போய்டும் இவ காவல் இருக்கப் போறா…, போடி…, நாங்களும் ஹாஸ்டல் போயிட்டு, சாயங்காலம் வர்றோம்…” அவர்கள் கிளம்பிவிட, படிகளின் விளிம்பில் அவன் நின்று பார்த்த பார்வையில், வேகமாக அவன் பக்கம் நகர்ந்தாள்.

‘எல்லோரும் என்ன நினைப்பாங்க…’ அவள் தயங்க, “அண்ணி, சீக்கிரம் போங்க…, அண்ணா கோவமா இருக்காங்க…” அவன் கோபத்தை யாராலும் அடக்க முடியாது என்பது கௌஷிக்குத் தெரியுமே, எனவே மெதுவாக அவளிடம் முனகினாள்.

அவளாவது தன் சப்போட்டுக்கு வருவாள் எனப் பார்த்தால், அவளும் அண்ணனுக்கு துணை போகவே, வேறு வழியின்றி அவன் பின்னால் சென்றாள். மனதுக்குள், ‘எதற்காக அழைக்கிறான்…? ஏதாவது சொல்லி கோபம் காட்டவா? அன்று செய்த செயலுக்கு இன்று பழி வாங்குவானோ?’ மனம் பலவாறு சிந்தித்தது.

அப்படி சிந்தித்தாளே தவிர, தன்னை படுக்கையில் தள்ளிவிட்டு, தன் இச்சையை தீர்த்துக் கொள்வான் என்று மட்டும் யோசிக்கவே முடியவில்லை. அது ஏனென்று அவளுக்குப் புரியவும் இல்லை. ஒரு வேளை அவன் கண்களில் அப்படி ஒரு மயக்கத்தையோ, இல்லை வெறியையோ அவள் காணவில்லையோ?

யோசனையிலேயே அவனது அறைக்குள் வந்துவிட்டது புரிய, அவள் அறைக்குள் நுழையவே அவள் முதுகுக்குப் பின்னால் கதவை அறைந்து சாத்தியவன் தாழ் போட்டான்.

அவள் அவனை வெறித்துப் பார்க்கையிலேயே…, தன் பட்டு வேஷ்டி, சட்டையை களைய, தன் கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டவள், அவனுக்கு எதிர் திசையில் திரும்பி நின்றாள்.

அவனிடம் எதை எதிர்பார்த்தாலும், இப்படி ஒரு செய்கையை எதிர்பாராமல் திகைத்துப் போய் இருந்தாள். அவள் இதயமோ தாளம் தப்பி, துடிக்கத் துவங்கியது.

*****

# பகுதி – 19.

காயத்ரி, தன் கண்களை இறுக மூடி, அவனுக்கு முதுகு காட்டி நின்றவள், மறந்தும் அவன் பக்கம் திரும்பவில்லை. ‘எருமை…, கூட்டி வந்துட்டு என்ன வேலை பாக்கறான் பார்…’ பற்களை கடித்துக் கொண்டாள்.

அவ்வளவு நேரமாக, தன்னை படுக்கையில் நாட மாட்டான் என்ற அவளது நம்பிக்கை ஆட்டம் காண, இதயமோ அவள் விலாவை மீறி வெளியே விழுந்துவிடும்போல் இருந்தது.

‘பின்னால் இருந்து அணைத்துவிடுவானோ…, எல்லை மீறி விடுவானோ? அதற்கெல்லாம் நான் அனுமதிக்கவே மாட்டேன். ஒரு பெண்ணின் முன்னால் அவன் எப்படி இப்படி நடந்து கொள்ளலாம்…?’ கோபம் விறுவிறுவென ஏற, அதே நிலையில் அவன் பக்கம் திரும்பினாள்.

திரும்பிய வேகத்தில், “ச்சீ…, இதுக்குத்தான் கூட்டி வந்தீங்களா? ஒரு பொண்ணு முன்னாடி எப்படி நடந்துக்கணும்னு தெரியாது?” அப்பொழுதும் தன் விழிகளை அவள் திறக்கவே இல்லை.

அவனோ, “எனக்கு இதுதான் முதல் கல்யாணமா…, அதான் தெரியலை” பெரும் நக்கல் குரலில் உரைக்க, பட்டென விழி திறந்தாள்.

“நீங்க தலைகீழா நின்னாலும் என் சுண்டு விரலைக் கூட தொட நான் அனுமதிக்க மாட்டேன்…” அவள் கோபமாக குரல் கொடுத்தவாறே, அவன் நின்ற இடத்தைப் பார்க்க, அதுவோ வெறுமையாக இருந்தது.

‘இவன் எங்கே போனான்…?’ எண்ணியவள் அறை முழுவதும் தேட, “இப்போ நான் ரொம்ப டயடா இருக்கேன் என்னால் எதுவும் முடியாது…, நைட் பாத்துக்கலாம்…, இல்ல…, நீ ரொம்ப ஆர்வமா இருக்கான்னா…” அவன் இழுக்க, அவளுக்கு வந்ததே ஆத்திரம்.!

“என்ன நக்கலா…? இப்போ எதுக்கு என்னை இங்கே அழைச்சுட்டு வந்தீங்க? யாராவது பாத்தால் என்ன

நினைப்பாங்க? என்னால் இங்கே இருக்க முடியாது..., நான் போறேன்...” அவள் கிளம்ப முயல,

“இப்போ நீ போனா மட்டும் அவங்க நினைப்பெல்லாம் இல்லாமல் போய்டுமா என்ன? உள்ளே என்னவோ கசமுசா...” இழுத்தவன், குறும்பாய் அவளைப் பார்த்து சிரிக்க,

“பேசாதீங்க..., எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு...” வார்த்தைகள் கிடைக்காமல் அவள் புசு புசுவென மூச்சு விட, அவனோ தன் இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டான்.

அதே நேரம்..., “இந்த காலத்து புள்ளைகளுக்கு எல்லாத்திலும் அவசரம்தான்..., பட்ட பகல்ல புள்ளையை ரூமுக்குள்ளே கூட்டி போயிட்டானாமே...” வெளியே, வீட்டின் பின்னால் இருந்து குரல் கேட்க, அவனை ஆனமட்டும் முறைத்தாள்.

அவனோ..., அவளது முறைப்பை கண்டுகொண்டதாகவே இல்லை. அவன் உறக்கத்துக்குச் செல்ல, “கேட்டீங்கல்ல..., என்ன சொல்றாங்கன்னு” அவள் கத்த, சட்டென கண் விழித்தவன்,

“காயு, எனக்கு ஒரு ஒன்ஹவராவது தூங்கணும், சோ...” அவன் கண் விழிக்கையில், விழிகள் இரண்டும் சிவந்துபோய் இருக்க, பட்டென தன் வாயை இறுக மூடிக் கொண்டாள்.

அவன் அடுத்த நிமிடம் உறங்கிவிட்டது தெரிய, ‘இவனுக்கு மட்டும் எப்படி தூக்கம் வருது?’ அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை. அவள் அறைக்குள், அவனோடு இருக்கிறாள் என்ற காரணத்தாலேயே, பலர் அவனிடம் பேச வருவதை தவிர்த்தார்கள்.

அதை அவள் உணரவில்லை என்றாலும், முகேஷும், கௌஷிகாவும் தெளிவாக உணர்ந்தார்கள். அவர்களது சித்தி, சித்தப்பாவுக்கு வேப்பிலை அடிக்கப் போய்விட, அவர்களை கண்காணிக்கும் வேலை அவர்களுக்கு இருக்கவில்லை.

வீடு வந்திருந்த சொந்தங்கள் அனைவரும் ஓய்வெடுக்கச் செல்ல, அப்பொழுதுதான் கௌஷிகாவும், முகேஷும் சற்று ரிலாக்ஸ் ஆனார்கள். அவர்கள் மாடியில் இருந்த மற்ற அறைக்கு வர, வெளியே சத்தம் கேட்கவே, அறைக்கதவை திறக்கவா வேண்டாமா என எண்ணியவாறு நகத்தை கடித்தாள்.

குழந்தையின் அழுகுரல் கேட்க, குழந்தையை தூக்கிக் கொள்ளவேண்டும் போல் இருந்தது. ஆனால், கதவைத் திறந்தால் என்ன சொல்வானோ என பயமாக இருக்க பேசாமல் அமர்ந்து கொண்டாள்.

அவன்மேல் கோபம் இருந்தாலும், அவன் வார்த்தையை மீறும் தைரியம் இருக்கவில்லை. மாடியேறி வந்த கௌஷி, “என்னங்க, அண்ணாவை ஒரு வார்த்தை கூப்பிடுங்க..., நேரம் போயிட்டே இருக்கு..., நாமளும் எவ்வளவு நேரம் சம்மாளிப்பது?” அவளுக்கு கவலையாக இருந்தது.

ஆனால், சொந்தங்களின் தொல்லையில் இருந்து தப்பிச் செல்லத்தான் அவன் இவ்வாறு செய்கிறான் என்பதை அவளிடம் எப்படிச் சொல்வது எனத் தெரியாமல் திணறியவன், “கௌஷி, உங்க அண்ணாவுக்கு என்ன செய்யணும்னு தெரியும், விடு...” பேச்சை முடிக்க, உள்ளே திணறிப் போனாள்.

‘ச்சே..., வெளியே வந்து இவர்கள் முகம் எப்படிப் பார்ப்பேன்? அதுவும் அண்ணா..., ஹையோ...’ நெயில்பாலிஷ் போட்டிருந்த நகங்கள் அனைத்தும் அவளது எரிச்சலுக்கு இரையாகிக் கொண்டிருந்தது.

பெட்டில் போர்வைக்குள் சுருண்டு உறங்கிக் கொண்டிருந்த பிரம்மாவைப் பார்க்க, அவ்வளவு ஆத்திரமாக வந்தது.

‘எதைப்பத்தியாவது கவலைப் படுறானா பார்..., நிம்மதியா தூங்கறான்...’ மனதுக்குள் எரிச்சல் பட மட்டுமே முடிந்தது.

எவ்வளவு நேரம்தான் அந்த இருக்கையிலேயே அமர்ந்திருக்க முடியும்? கால்கள் ஒரு மாதிரி மரத்துப் போக,

மெதுவாக எழுந்து நடந்தாள். அவளது கொலுசின் ஒலியில் அவன் மெதுவாக புரண்டு படுக்க, பார்வை அவன் பக்கம் பாய்ந்தது.

மின் விசிறியின் ஓட்டத்துக்கு ஏற்ப முன்சிகை காற்றில் அசைந்தாட, இடக்கை தலைக்கு அடியில் இருக்க, வலக்கை அவன் வயிற்றில் இடம் பிடித்திருந்தது. வெள்ளை உள்பனியன் மட்டும் அணிந்திருக்க, உரமேறிய அவனது நெஞ்சும், தோள் தசைகளும் உருக்கி வார்த்த இரும்பாக, காட்சியளித்தது.

அவனது அகன்ற தோளும், அவனது ஆறடி உயரமும், அதற்கேற்ற உடல் வாகும், இப்பொழுதுதான் அவள் பார்வைக்கு பட்டது. அவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, சட்டென புருவம் நெரிய, முகத்தில் தடதடவென சில குழப்பமும், கோபமும் உதயமாக, நிச்சயம் கனவில் ஏதோ தேவையில்லாத காட்சியை காண்கிறான் என்பது புரிந்தது.

தன்னை மீறி, அவனை அசைத்து அவன் கனவில் இருந்து வெளிவர உதவுவோம் என எண்ணியவள் கை நீட்ட, இப்பொழுது அவன் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை..., குழந்தைகள்தான் இப்படியான சேட்டைகள் செய்வதை பார்த்திருக்கிறாள், வளர்ந்த முழு ஆண்மகன் கூடவா...? அவளுக்கு வியப்பாக இருந்தது.

இப்பொழுது சற்று இடப்பக்கமாக சரிந்து படுத்தவன், குழந்தைபோல் கன்னத்துக்கு அடியில் கை வைத்துக் கொள்ள, லேசாக வாய் பிளந்துகொள்ள, அவன் ஆழ்ந்து உறங்குவதைக் கண்டவளுக்கு, அவன்மேல் பரிவு எழுந்தது.

‘எத்தனை நாள் தூங்கலையோ...’ எண்ணியவள், அங்கே இருந்து நகர, மீண்டுமாக அவள் கொலுசு ஒலிஎழுப்ப, அவன் அசைவதை உணர்ந்தவளுக்கு, ‘சின்ன சத்தத்துக்கும் விழித்து விடுவானோ? அப்போ என்னைப் பற்றி அறிந்தால்?’ ஒரு நொடி மூச்சு விடவே மறந்தாள்.

அங்கே இருந்த மேசை, ராக்கில் இருந்த புத்தகங்கள் என ஒவ்வொன்றாய் பார்த்தவளுக்கு, உறக்கம் கண்களை சுழற்ற, உறங்கவும் அச்சமாகத்தான் இருந்தது. அவன் எழுந்து தன்னை எழுப்பும் வேளையில், தான் எழுந்துகொள்ளவில்லை என்றால் என்ன நினைப்பான், என எண்ணியவள் முடிந்த அளவு உறக்கத்தை விரட்ட முயன்றாள்.

கையில் இருந்த புத்தகத்தில் கவனத்தை செலுத்தியவள், சோபாவில் அமர்ந்து அப்படியே உறங்கிப் போனாள். எவ்வளவு நேரமோ தெரியாது..., கதவைத் தட்டும் ஓசையில் கலைந்த பிரம்மா, விழிகளைத் திறந்தவுடன் கண்டது காயத்ரியைத் தான்.

தலையை ஒரு பக்கமாக சாய்த்து, ஒழுங்கற்ற விதத்தில் அவள் சோபாவில் உறங்கிப் போயிருக்க, “எப்படி தூங்குது பார்..., பெட்ல படுக்க மாட்டாளோ?” வாய்விட்டே உரைத்தவன், மீண்டுமாக கதவு தட்டப்பட, வேகமாக சென்று கதவைத் திறந்தான்.

அங்கே சங்கடமான முகபாவத்தில் நின்றிருந்த கௌஷிகா, “சாரிண்ணா, லன்ச் டைம் ஆயிடுச்சு..., அதான்...” அவன் முகம் பார்க்காமல் உரைக்க,

“இப்போ வர்றோம் நீ போம்மா...” அவளை அனுப்பியவன் கதவை பூட்டினான்.

‘புது இடம், கதவைத் தட்றாங்க..., எதுவும் கண்டுக்காமல் இப்படி தூங்கறா..., சரியான கும்பகர்ணிதான்...’ எண்ணியவன், பாத்ரூம் சென்று முகம் கழுவி, உடை மாற்ற, அப்பொழுதும் அவள் கண் விழிக்கும் பாட்டை காணோம்.

அவள் அருகில் சென்றவன், “காயு...” அவளை அழைத்தவாறே, மடிந்திருந்த அவளை நேராக சோபாவில் சாய்த்து அமர வைக்க, அவன் தொட்டதைக் கூட அவள் உணரவில்லை. மேலும் இரு முறை அழைத்துப் பார்த்தவன், அவள் கண்விழிக்கவில்லை என்றவுடன்,

ஜக்கில் இருந்து கையில் சிறிது நீர் எடுத்தவன், கொஞ்சமாக அவள் முகத்தில் தெளிக்க, நீர்த்துளி முகத்தில் விழுந்த வேகத்தில், திடுக்கிட்டு கண் விழித்தாள்.

அவள் அருகில், அவன் முகம் இருக்க, அடித்து பிடித்து எழுந்தவள், கால் இடறி ஒரு மாதிரி சம்மாளித்து நின்றாள். மடியில் இருந்த புத்தகம் நழுவிக் கீழே விழ, அதைப் பிடிக்க முடியாமல் வலக்கை சுத்தமாக மரத்துப் போயிருந்தது.

அவள் விழப் போகையில் அவளை தாங்கிப் பிடிக்கவோ, விழுந்த புத்தகத்தை பிடிக்கவோ அவன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவன் கைகளை கட்டிக்கொண்டு அசையாமல் நிற்கவே, இதுதான் சாக்கென்று தன்னை தொடாமல், கண்ணியமாக அவன் விலகி நின்ற விதம் அவள் மனதை தொட, ‘கொஞ்சூண்டு நல்லவன் தானோ?’ மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

அவன் சற்று விலகி நின்றவாறே அவளை விழியெடுக்காமல் பார்க்க, ‘ஹையோ, எவ்வளவு நேரமா கூப்பிட்டு பார்த்தான்னு தெரியலையே..., இப்போ என்ன சொல்லப் போறானோ..., எரும, எரும, இப்படியா தூங்குவ, உன்னை யாருடி தூங்கச் சொன்னா?” அவனைப் பார்க்கவும் முடியாமல், தன் செய்கை விளைவித்த சங்கடத்தில் நெளிந்தாள்.

“போய் ப்ரெஷ் ஆகிட்டு வா..., சாப்பிடக் கூப்ட்டாங்க...” அவளது சங்கடத்தையோ, தடுமாற்றத்தையோ கண்டுகொண்டாலும் எதுவும் சொல்லவில்லை.

ஒருவித விடுதலை உணர்வோடு கிட்டத்தட்ட ஓடியவள், முகத்தில் நீரடித்து கழுவிய பிறகுதான், தான் இருப்பது அவனது அறை என்ற நினைவே வந்தது. அங்கே இருந்த சோப்பை உபயோகிக்க மனமில்லை என்றாலும், வேறு வழியின்றி அந்த சிந்தால் ஒயிட் சோப்பை கைகளில் குழைத்து, முகத்தில் போட்டு கழுவினாள்.

முகம் கழுவிய பிறகே டவ்வல் பற்றிய நினைப்பு வர, உள்ளே இருந்த டவ்வலைப் பார்த்தவள், அதில் முகம்

துடைக்கவா, வேண்டாமா என்ற பட்டிமன்றத்தில் நேரம் கடக்க, “காயு..., இன்னும் என்ன பண்ற?” அவனது குரல் வெளியே கேட்க, முகத்தை வேகமாக அதில் துடைத்துவிட்டு வெளியே வந்தாள்.

அவள் வெளியே வரவே, கையில் ஒரு புது வெள்ளை டர்க்கி டவ்வலோடு அவன் நிற்க, அதைப் பார்த்தவள், ‘எல்லாத்தையும் இப்படி சொதப்புறியேடி இப்போ என்ன சொல்லி சம்மாளிக்க...?’ அவனை ஏறிட்டு பார்க்க முடியாமல் அவள் திணற, அவன் முகத்திலோ நிறைவாய் ஒரு புன்னகை.

கையில் இருந்த டவ்வலை தூக்கி படுக்கையில் போட்டவன், கைகளை குறுக்காக கட்டிக் கொண்டு அசையாமல் நிற்க, அவனைத் தாண்டிச் செல்லவும் முடியாமல், அவனை நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல் திணறியவள், தான், அவன் முகம் பார்க்காமல் அவன் விலக மாட்டான் என்பது புரிய, மெதுவாக ஏறிட்டாள்.

‘கேலியா சிரிக்கப் போறான்...’ அவள் எண்ணியதுக்கு மாறாக, கண்களில் சிறு மின்னல் தெறிக்க, வாயில் அரைபட்ட சுவிங்கத்தோடு விழுங்கும் பார்வை பார்த்திருந்தான். அதில் காமமோ, ஆசையோ இருக்கவில்லை, மாறாக சிறு சுவாரசியம்..., வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டாள்.

ஆனாலும் கடைவிழியோரம் அவன் பார்ப்பது தெரிகிறதுதானே. அவன் பார்வையில் குப்பென மூச்சடைக்க, “போ..போ..கலாம்” திணறினாள்.

பதில் எதுவும் சொல்லாமல் அவன் திரும்பி நடக்க, அவன் இதழ்களின் ஓரம் ஒட்டியிருந்த குறும்பு புன்னகை கண்களுக்குள் நழுவியது. மாடியில் இருந்து கீழே இறங்க, அவள் பக்கம் திரும்பி பார்த்தவன், “சித்தி, சித்தப்பா ஏதாவது சொன்னால் காதில் போட்டுக்காதே...” இப்பொழுது அவன் முகம் ஒரு பாறைக்கு ஒத்திருந்தது.

சற்று நேரத்துக்கு முன்னர், கண்களில் மின்னலும், இதழோரம் குறும்பு புன்னகையுமாக நின்றவன் இவனா? என அவளுக்கே சந்தேகமாக இருந்தது.

சாப்பாட்டு மேஜையை நெருங்கவே, “அண்ணே…, அண்ணி…, உக்காருங்க” கௌஷிகா உரைக்க, அதற்கு முன்பாகவே சில சொந்தங்கள் சாப்பாட்டு மேஜைக்கு அருகில் கீழே அமர்ந்து உணவு உண்டு கொண்டிருக்க, யாரையும் காயத்ரியால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

அவர்கள் அனைவரும் தங்களுக்குள் கிசுகிசுக்க, “அண்ணி…, அண்ணனை எதிர்த்து ஒத்த வார்த்தை யாரும் பேச மாட்டாங்க…, நீங்க உக்காருங்க” கௌஷிகா அவள் கரம் பிடித்து பிரம்மாவின் அருகில் அமர வைக்க, அவளுக்கு, கௌஷிகாவின் முகம் பார்க்கவும் தயக்கமாக இருந்தது.

அவள் செய்கையைப் பார்த்த கௌஷி, தன் அண்ணாவை மெல்லமாக இடித்து, அவளை குறிப்பாய் காட்ட, ‘நீ போ…’ என்னும் விதமாக தலை அசைத்தவன், காயத்ரியை நெருங்கினான்.

“உன் புருஷன் கூடத்தானே இருந்த…, கண்டவன் கூடையும் இருக்கலையே?” அடிக்குரலில் சிங்கமாய் கர்ஜித்தவனது வார்த்தைகளும், நெருப்புத் துண்டமாக வந்து விழ, துடித்துப் போனாள். அவனைப் பொறுத்த வரைக்கும் பிரம்மாவின் மனைவி அனைத்தையும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்.

அவளுக்கோ…, அவனிடமிருந்து இப்படி ஒரு வார்த்தையை எதிர்பாராமல் நெஞ்சில் இடி விழுந்த உணர்வில் நிலை குலைந்து போனாள். ஏற்கனவே அத்தனைபேரின் பார்வைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம் என்னும் சங்கடமான உணர்வில் அவள் இருக்க, அவனும் இப்படி பேசினால்?

ஆயிரம்தான் அவன்மேல் கோபம் இருந்தாலும், தனக்கு ஒரு சங்கடம் என்றால், கொண்டவனின் துணையைத்

தானே பெண்ணின் மனம் நாடும். அதற்கு காயத்ரி மட்டும் விதிவிலக்கா என்ன?

கண்களில் வலியோடு அவனை ஏறிட, “வா..., வந்து சாப்பிடு...” அழைத்தவன், இருக்கையில் அமர, அங்கேயே நின்றால் அதற்கும் ஏதாவது சொல்வானோ என பயந்தவள், அவன் இருக்கைக்கு பக்கத்தில் சென்று அமர்ந்தாள்.

கண்கள் தானாகவே கலங்கிப் போனது. அங்கே இருந்தவர்கள், கௌஷிகாவை நினைத்து, கண்ணீரை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டவளுக்கு, உணவு தொண்டையை விட்டு இறங்க மறுத்தது.

‘என்ன இப்படி பேசறான்..., இதுதான் இவனது குணமா, அப்படியென்றால் இத்தனை நாள் தெரிந்தது அவன் குணம் இல்லையா?’ மனம் அதிர்ந்தது.

‘இப்படி பேசும் இவனோடு எப்படி வாழ்க்கை முழுவதையும் வாழப் போகிறேன்?’ மனம் வெகுவாய் கலங்க, அவன்மேல் கொலைவெறியில் இருக்கிறோம் என்பதும், அவனை தனக்குப் பிடிக்காது என்பதும் அவள் நினைவுக்கு வரவே இல்லை.

“சாப்பிடு...” அவள் சாப்பாட்டை விரல்களால் பிசைந்தவாறு அமர்ந்திருக்க, அதற்கும் அவளிடம் கடித்தான்.

“அண்ணே..., சும்மா அண்ணியை மிரட்டாதீங்க..., அவங்க சாப்பிடுவாங்க, நீங்க முதல்ல சாப்பிடுங்க...” காயத்ரியின் முகத்தில் இருந்த கலக்கத்தில், அவளைப் பார்க்கவே கௌஷிகாவுக்கு பாவமாக போயிற்று.

அவன் உணவை முடித்துக் கொண்டு வேகமாக சென்றுவிட, அப்பொழுதும் ஒரு வாய் கூட உண்ண முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள் காயத்ரி.

“அண்ணி..., கொஞ்சமாச்சும் சாப்பிடுங்க, ஈவினிங் ரிஷப்ஷன் இருக்கு, அது எப்போ முடியும்னு சொல்லவே

முடியாது. இப்போவே கொஞ்சம் சாப்பிடுங்க” அவளது கெஞ்சலில் மனமிரங்கி கொஞ்சமாக சாப்பிட்டாள்.

அவள் சாப்பிட்டுக் கொண்டிருக்க, “இங்க பாத்தியளா கூத்த, அண்ணிக்காரிக்கு வெஞ்சாமரம் வீசில்ல சாப்பிட வைக்கா..., பொல்லாத அண்ணி வாச்சிருக்கா..., இவளுக்கே இப்படின்னா, கொஞ்சம் பெரிய இடத்தில் இருந்து அண்ணி வந்திருந்தா தரையில் நடக்க விட்டிருக்க மாட்டா போலையே...” சித்திக்காரி குரல் கொடுத்தவாறே வர, கௌஷிகாவின் மேனியே நடுங்கியது.

“அண்ணி..., இவங்க பேச்சை காதிலேயே வாங்காதீங்க...” பிரம்மா சொன்னதையே அவளும் சொல்ல, அது என்ன அவ்வளவு சுலபமா என்ன?

“கொஞ்சம் வெள்ளைத் தோலா இருந்தால் அரசனே கடத்திகிட்டு போவான், நம்ம பிரம்மா மட்டும் வீராப்பா இருப்பானா என்ன? இந்த காலத்து சிறுக்கிக எல்லாம் தெளிவாத்தான் இருக்காளுக, நாமதான் கேணச்சிகளா இருந்துட்டோம்...” தன் நாலரையடி உயரத்துக்கு, எண்பதுகிலோ உடம்பை தூக்க முடியாமல் சுமந்துகொண்டு அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

“காயு...” பிரம்மாவின் அழைப்பு அந்த வீட்டையே அதிர வைக்க, “அண்ணி, நீங்க போங்க...” கௌஷிகா அவளை கிளப்பினாள்.

“இது எத்தனை நாள்ன்னு பாக்கேண்டி..., பத்தே நாள்ல உங்க அண்ணாவை முந்தானையில் முடிஞ்சுகிட்டு, உன்னை இந்த வீட்டு படியேற விட மாட்டா பார்..., அப்போ தெரியும், இந்த சித்தி சொன்னது எம்புட்டு நிசம்னு...” அவர் பேச, கௌஷிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

அவள் பார்வை தானாகவே காயத்ரி இருந்த பக்கம் நகர, கௌஷிகாவின் சித்தி பேசிய பேச்சுக்களை கேட்டு அதிர்ந்துபோய் அப்படியே அமர்ந்துவிட்டாள். கூடவே, ‘நான்

அப்படி இல்லை...' என்ற பரிதாப பார்வையையும் கௌஷிகா பக்கம் செலுத்த,

"அண்ணி..., அண்ணா திருப்பி கூப்பிட முன்னாடி கிளம்புங்க" கிட்டத்தட்ட கை பிடித்து எழுப்பினாள் என்றே சொல்லலாம்.

'இந்த சித்தி எப்படி இந்த நேரம் இங்கே வந்துது? இவரை எங்கே?' மானசீகமாக கணவனை பொரிந்தவள், 'இது ஏழரையை கூட்டாமல் அடங்காதே' மனதுக்கு அச்சமாக இருந்தது.

காயத்ரி அதற்குமேல் அங்கே இருக்கவில்லை..., வேகமாக எழுந்தவள், கை கழுவிவிட்டு விரைய, "தின்ன இலையை எவ எடுப்பாளாம்? இங்கே நீ என்ன வேலைக்காரியா? இப்போவே அவளுக்கு இருக்க ஏத்தம்..., எல்லாம் அந்த கிறுக்குப்பயலை சொல்லணும்..." குடும்பத்தில் கலகம் மூட்டுவது மட்டுமே அதன் குறிக்கோளாக இருந்தது.

"அஞ்சல..., செத்த புள்ளைகளை சும்மாத்தான் விடேன்..., என்னத்துக்கு எப்போ பாத்தாலும் கரைச்சு கொட்டிகிட்டு இருக்க..." உறவுக்கார பெண்ணொருத்தி பரிந்து பேச,

"எவடி அவ..., என் குடும்பத்துக்குள் மூக்கை நுழைக்கிறவ, இவன் ஜட்டி கூட போடத் தெரியாமல் இருந்தப்போ நீதான் வந்து பாத்துகிட்டியா? எல்லாம் செஞ்சது நாண்டி..., இப்போ மட்டும் பரிஞ்சுகிட்டு வாறியளோ, இவங்களை பாக்கத்தான் நான் புள்ளையே பெத்துக்கலை தெரியுமா?" அம்மம்மா..., கேட்டவள் கதறி ஓடும் வரைக்கும் விடவே இல்லை.

மீண்டுமாக அவன் அறைக்கு வந்தவளுக்கு, கண்கள் கலங்கி வெந்நீரை வடிக்க தயாராக இருந்தது. அதைப் பார்த்தவன், "ம்ச், அதான் அது பேசுறதை கண்டுக்காதன்னு சொல்லிட்டேனே, பிறகும் இப்படி கலங்கினா?" ஆறுதல் சொல்லவே முடியாத, தெரியாத ஒரு முகபாவத்தில் அவன் உரைக்க, அவன் முகத்தைப் பார்த்தவள், கோபமாக பார்வையை திருப்பிக் கொண்டாள்.

“இவ்வளவு சொல்றேன்..., இன்னும் மூஞ்சியை இழுத்து வச்சிருந்தால்?” இருக்கும் பிரச்சனையில் இது வேறு அவனுக்கு கோபத்தை கிளப்பியது. அவனிடம் பதில் பேசாமல், தனக்கென கொடுத்திருந்த அறைக்கு சென்று அமர்ந்து கொண்டாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் காயத்ரியை அலங்கரிக்க அழகு நிலையத்தில் இருந்து பெண்கள் வர, அதற்கும் ஒரு பாட்டு பாடிவிட்டே ஓய்ந்தது.

முழு அலங்காரத்தில், கழுத்தில் இரு வைர நகை ஜொலிக்க, கீழே இறங்கி வந்த காயத்ரியை, “இது உன் ஆத்தா வீட்டு நகையா...? இப்படி டாலடிக்குது..., கில்ட்டா.. (கவரிங்)” என விசாரிக்க, விழித்தாள் காயத்ரி.

சற்று நேரத்துக்கு முன்னர், கௌஷிகா தான் அந்த நகைகளை கொடுத்திருந்தாள். அவர்களது பரம்பரை நகை எனவும், அவளது பாட்டி, தன் வருங்கால பேத்திக்கு கொடுக்கச் சொல்லி கொடுத்ததாகவும் சொல்லியிருந்தாள்.

கூடவே, ‘சித்தி கேட்டால், இது உங்க குடும்ப நகைன்னு சொல்லுங்க. மாத்தி சொன்னீங்கன்னா..., என் பாட்டியை பிடிச்சு இப்போ இழுக்கும்’ எனச் சொல்லிச் சென்றிருக்க, பதில் கொடுக்க முடியாமல் தேங்கினாள்.

அப்பொழுது அங்கே வந்த பிரம்மா..., சித்தியை அழுத்தமாக ஒரு பார்வை பார்க்க, அவன் பார்வையில் என்ன உணர்ந்ததோ..., “உன் நல்லதுக்குதான் கேக்கேன்..., நான் என்ன வாரிகிட்டா போகப் போறேன்” அது நீட்டி முழக்க,

அவன் பார்வை அதன் மேனியில் இருந்த தங்க நகைகளில் பதிய, சித்தி அதிர்ந்து போவது அதன் முகத்திலேயே தெரிந்தது.

‘அம்மாடி..., ஒத்த பார்வையால் அதை மூச்சடக்க வைக்கறானே...’ அவனை வியந்துதான் போனாள் காயத்ரி. சித்தியோ சத்தமில்லாமல் அங்கிருந்து நகர்ந்தது. ‘இந்த

நகையெல்லாம் உனக்கு ஏது?’ என அவன் கேள்வி கேட்டால், அவரால் பதில் சொல்ல முடியுமா என்ன?

“கௌஷி…” பிரம்மா குரல் கொடுக்க, அவனைத்தான் பார்த்திருந்தாள் காயத்ரி. நேவிபுளூ பேண்ட், கோட்டில், அதன் நெடுக்காக மெல்லிய தங்க கோடுகள் பாய்ந்திருக்க, உள்ளே வெள்ளைக்கலர் சட்டையும், பிரவுன் கலர் டை, அதில் கோல்டன் கிளிப் என அட்டகாசமாய் இருந்தான்.

நேற்றுவரை காக்கி பேண்ட், வெள்ளை சட்டை, டிஷர்ட், காக்கிச் சட்டை என மட்டுமே பார்த்து பழகியதற்கு, இந்த தோற்றம் முற்றிலும் வித்தியாசமாக இருந்தது.

முன்நெற்றியில் அலையலையான கேசம், பின்னால் ஒட்ட வெட்டப் பட்டிருக்க, கிளீன் ஷேவ்…, அடர்த்தியான மீசை, நுனியில் முறுக்கி விடப் பட்டிருந்தது. முகத்தில் அசாத்திய இறுக்கம்…, முன்நெற்றியில் முத்தாய், சில வியர்வை முத்துக்கள்.

அவன் உள்ளுக்குள் பெரும் டென்ஷனில் இருப்பதை அவளால் உணர முடிந்தது. ‘ஏன் இப்படி இருக்கான்…? எப்பொழுதும் டென்ஷனா இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?’ யோசனையாய் பார்த்திருக்க, கையில் இருந்த சுவிங்க பாக்ஸை திறந்து, இரண்டு மூன்று சிவிங்கத்தை வாயில் போட்டுக் கொண்டான்.

“ம்ச்…, என்ன பழக்கம் இது…?” தன்னை மீறி வார்த்தைகள் வெளிவந்த பிறகுதான், என்ன இப்படி கேட்டுவிட்டோம் என அவள் தடுமாற, “இட் ஹெல்ப்ஸ் மீ எ லாட்…” அவன் உள்ளங்கையில் இருந்த பாக்ஸை காட்டி உரைக்க, அவன் குரலில் இருந்த பாவனைக்கு என்ன அர்த்தம் என அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

“அண்ணே, ஒரு நிமிஷம்…” குரல் கொடுத்த கௌஷிகா, குழந்தையை ஒரு கையிலும், குழந்தைக்குத் தேவையான பொருட்கள் அடங்கிய பேகை மறு கையிலுமாக தூக்கியவாறு விரைந்து வர, குழந்தையை வாங்க கை நீட்டினாள் காயத்ரி.

“அண்ணி..., வேண்டாம்..., இப்போதான் பால் குடித்தான், உங்க புடவையில் வாமிட் பண்ணிடுவான்..., நானே வச்சுக்கறேன்” அவள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, குழந்தை எதுக்கழித்து வாந்தி எடுக்க, முகேஷ் கையில் இருந்த மெல்லிய துணியால் குழந்தையின் வாயைத் துடைத்தான்.

“இங்கே தா..., அவனை நான் வச்சுக்கறேன்..., போகலாம்...” குழந்தையை வாங்கிக் கொண்டான் முகேஷ்.

“நீங்க ரெண்டு பெரும் முன்னாடி போங்க, பிரம்மா...” அவர்களை அனுப்பிய முகேஷ், பிரம்மாவை தேக்கினான்.

“பிரம்மா, ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்க? ஜஸ்ட் ரிலாக்ஸ்..., மேடையில் பக்கத்திலேயே கந்தன் இருப்பார்..., எல்லாத்தையும் அவர் கவனிச்சுப்பார். அதே மாதிரி மேடையில் யாரும் நின்னு பேசப் போறதில்லை..., பிறகு ஏன்...” பெண்களின் கவனம் தங்கள் பக்கம் பாய்ந்துவிடக் கூடாது என, அவன் டையை சரி செய்வதுபோல் மெதுவாகவே பேசினான்.

“முகேஷ்..., எதையுமே சொல்றது ரொம்ப ஈசி..., செய்வது ரொம்ப கஷ்டம்” பிரம்மா உரைக்க, ஒரு பெருமூச்சை வெளியேற்றுவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

“சரி வா..., கொஞ்ச நேரம் சம்மாளி...”.

அவர்கள் காருக்கு விரைய, சொந்தங்கள் அனைத்தும் அதற்கு முன்பாகவே மண்டபம் சென்றிருந்தார்கள். “அண்ணி..., இந்த புடவையில் நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க, இந்த ஹேர்ஸ்டையில் ரொம்ப பொருத்தமா, எடுப்பா இருக்கு, என் கண்ணே பட்டுடும் போல...” அவள் உரைக்க, காயத்ரியின் கண்கள், தன்னவனைத்தான் நாடியது.

அவள், அவனை ரசித்த அளவுக்கு, பிரம்மா அவளை ரசித்ததாகத் தெரியவில்லை, அவ்வளவு ஏன்..., ஒரு பார்வை கூட பார்க்கவில்லை. அவளுக்கு அது பெரும்

வருத்தத்தை அளித்தது. என்னதான் இருந்தாலும், அவன்மேல் கோபம் கொண்டிருந்தாலும், தன் அலங்காரத்தை அவன் ரசிக்க வேண்டும் என விரும்பினாள்.

பெண்ணவள் அலங்காரம் செய்வதே கொண்டவனை கவரத்தானே..., இப்பொழுது என்னவென்றால், அவனது ஒரு பார்வைக்கே பஞ்சமாக இருந்தால் அவளும் என்னதான் செய்வாள்? அவனது மனக் குழப்பங்களை அவள் அறிய வழியில்லைதான்..., ஆனால், அவன் முகத்தில் கவிழும் டென்ஷன், இறுக்கம் அவளுக்கு புரிகிறது தானே.

மண்டபத்தை நெருங்கி..., ஆயிரம் கண்கள் தங்களை வெறிக்க, தன் முகத்தை இயல்பாக வைக்கவே அவன் திணறிப் போனான். ‘இங்கே இருக்கும் யாரையும் எனக்குத் தெரியாது...?’ அந்த நினைவே அவனுக்கு கொடுமையாக இருந்தது. கேமராமேன் வேறு விடாமல் அவர்களை படம் பிடிக்க, டென்ஷன் ஏறியது.

தன் டென்ஷனை மறைப்பது பெரும் பாடாக இருக்க,தன் வலப்பக்கம் இருந்தவளது இடக் கரத்தை, எட்டிப் பிடித்தவன் ஒரு மாதிரி இறுக்கிக் கொள்ள, அதில் இருந்த அழுத்தத்தில் சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

தெரியாத கூட்டத்துக்குள் ஒரு ஐந்து வயது பாலகன் மாட்டிக் கொண்டால் அவன் முகமும், கண்களும் ஒரு மிரட்சியை வெளிப்படுத்துமே..., அப்படி ஒரு தோற்றத்தை அவன் முகம் கொடுக்க, திடுக்கிட்டு போனாள்.

“ஒரு நிமிஷம்...” தங்களை படம்பிடித்துக் கொண்டிருந்த கேமராமேனை தடுத்தவள், “என்ன ஆச்சு...? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?” அவள் கேட்க, தாயின் முந்தானைக்குள் ஒளிந்துகொள்ளும் குழந்தைபோல் மாறியது அவன் முகம்.

அவன் டென்ஷனாக இருப்பதை பார்க்க முடியாமல், அவனது வலக்கரத்தை தன் இரு கரங்களால் பற்றிக் கொண்டவள், காதல் மனைவியாக இருந்திருந்தால், என்ன

செய்திருப்பாளோ, இவள்தான் அவன்மேல் கொலைவெறியில் இருப்பவள் ஆயிற்றே,

எனவே..., “இவ்வளவு டென்ஷனா இருக்க வேண்டிய அவசியமே இல்லை. இத்தனைபேர் முன்னாடி எல்லாம் உன்னை..., உங்களை குத்த மாட்டேன் போதுமா? தைரியமா வா..ங்க...” அவள் ஒரு தோரணையாக உரைக்க, அவன் முகத்தில் இருந்த இறுக்கம் விலகி ஓடியது. கூடவே முகத்தில் மிக மெல்லிய புன்னகையும்.

அதைப் பார்த்த காயத்ரியின் முகம் புன்னகைக்க, புகைப்படக்காரர் அந்த தருணத்தை அழகாய் படம் பிடித்தான். அதே நேரம், முகேஷும், கந்தனும் ஒருவரை ஒருவர் பார்த்து நிம்மதி பெருமூச்சு விட, அவர்களை வன்மம் நிறைந்த விழிகளோடு படம் பிடித்தன இரு விழிகள்.

*****

# பகுதி – 20.

பிரம்மாவின் இறுக்கம் காயத்ரியின் பேச்சால் சட்டென கொஞ்சம் இறங்கியிருக்க, அதே மனநினையில் மேடையேறினார்கள் பிரம்மாவும், காயத்ரியும். அவர்கள் மேடையேறவே காத்திருந்தாற்போல், விருந்தினர்களின் வருகை மேடையை ஆக்கிரமிக்க, மேடையேறி வருபவர்களை என்னவென்று அறிமுகம் செய்வது என்ற டென்ஷன் பிரம்மாவுக்கு ஏறியது.

தன் உயரதிகாரிகள், உடன் பணி புரிபவர்கள் என அனைவரையும் இப்பொழுது அவனுக்குத் தெரியும்தான்..., ஆனால், அவனது திருமணத்தை அறிந்து, அறிவிப்பை உணர்ந்து வந்த அவனது நண்பர்கள், உடன் ஐபிஎஸ் பயின்ற கொலீக் என யாரையும் அவனுக்கு அடையாளம் தெரியாதே.

அவர்களையும் ஓரளவு புகைப்படத்தை காட்டி முகேஷ் ஏற்கனவே சொல்லியிருந்தான் தான். ஆனால், அனைவரையும் ஒரே நேரம் அவனால் நினைவில் வைத்திருக்க முடியாதே.

அந்த நேரத்தில்தான் உதவிக்கு வந்தான் முகேஷ்..., அவன் உடன் பயின்ற நண்பர்கள் வந்த பொழுதெல்லாம், தன் கையில் ஏந்திய குழந்தையோடு, அவர்களோடு வந்தவன், அவர்கள் பிரம்மாவிடம் கேலியில் ஈடுபடும் பொழுதெல்லாம் அழகாய் சம்மாளித்தான்.

முகேஷின் நடத்தை, காயத்ரிக்கு பெரும் வித்தியாசத்தை தோற்றுவித்தது. அதிலும் அவர்கள் எதையாவது கேட்கும் பொழுதெல்லாம், பிரம்மாவை பேச விடாமல், இடையில் புகுந்து அவன் உரையாடிய விதம், பிரம்மாவின் முகத்தில் இருக்கும் ஒருவித டென்ஷன்..., அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

ஒரு கட்டத்தில்..., “அவங்க எல்லாம் உங்களோட படிச்சவங்க தானே?” அவனிடம் சந்தேகம் கேட்க, “ஆமா...” அவளது

சந்தேகத்தை அவனால் உணர்ந்துகொள்ள முடிகிறதே, அப்படி இருக்கையில் என்ன சொல்லி சம்மாளிக்க?

“நான், முகேஷ் எல்லாம் ஒரே பேட்ச் தான்…” குரல் இறுகவே பதில் கொடுத்தான். அந்த குரலில் தெரிந்த ஒருவித அழுத்தம், அதற்குமேல் அவனிடம் அவளை எதையும் கேட்க அனுமதிக்கவில்லை. அவள் அறிந்து வைத்திருக்கும் பிரம்மாவுக்கும், இவனுக்கும் ஆயிரம் வித்தியாசம் அவளுக்குத் தெரிய அமைதியானாள்.

“ஓ…” அவள் அத்தோடு முடித்துக் கொண்டாள். மற்றவர்களுக்கு வேண்டி அவன் புன்னகை முகமாக வைத்துக் கொண்டாலும், அவனை அணுவணுவாய் தெரிந்து வைத்திருப்பவளுக்கு அவன் சரியாக இல்லை என்று தெரியாதா என்ன?

நண்பர்கள், போலீஸ் டிப்பார்ட்மெண்டில் இருந்து வந்தவர்களையாவது சளைக்காமல் சம்மாளித்து விட்டான். ஆனால், உறவினர்கள் மேடையேற, முகேஷ், கௌஷிகாவை மேடைக்கு அனுப்ப முயன்றான்.

“ம்ச்…, என்னங்க நீங்க…, இப்போ நான் மேடையில் ஏறி நின்றால் அது சரியா வராது… எல்லாரும் கேலி பேசுவாங்க. சித்தி பாத்தால் அவ்வளவுதான், அதுவும் நிக்கேன்னு சொன்னாலும் சொல்லும், நான் போகலை” அவளுக்கு பிரம்மாவின் மறதி விஷயம் தெரியாது என்பதால் பிடிவாதமாக மறுத்தாள்.

“கௌஷி…, நான் சொன்னதைச் செய்…, உங்க அண்ணன் இருக்கும் டென்ஷனில் எதையாவது சொல்லி வைக்கப் போறான். ஏற்கனவே அவங்களுக்கும், அவனுக்கும் டேர்ம்ஸ் சரியில்லைன்னு உனக்கே தெரியுமே” எதைச் சொன்னால் அவள் போவாள் என அவனுக்குத் தெரியாதா?

சொந்தங்கள் அனைத்தையும் அன்று இரவே ஊருக்கு அனுப்புவதாகத்தான் ஏற்பாடு. சித்தப்பா, சித்தியை எப்படி அனுப்பப் போகிறோம் என்பது மட்டுமே அவளது தலைவலியாக இருந்தது.

இத்தனை வருடங்களில், அவளைக் காக்கும் கேடையமாக அண்ணன் இருந்தான். இன்று, அவனது நாள்..., இந்த நேரமும் அவர்களது டென்ஷனை அவன்மேல் சுமத்த அவள் விரும்பவில்லை.

சித்தப்பா வேறு ஒரு பக்கம் குடித்துவிட்டு, “அவன் என் மகன்...” என வருபவர் போனவர் எல்லோரிடமும் உதார் விட்டுக் கொண்டிருக்க, இது அண்ணன் காதுக்குப் போனால் என்ன செய்வானோ என உள்ளுக்குள் உதறிக் கொண்டிருக்கிறது.

“என்னங்க..., சித்தப்பாவை கொஞ்சம் பின்னாடி எங்கேயாவது கூட்டி போங்க. இல்லையா, கந்தனிடம் சொல்லி அவரை ஏதாவது பண்ண முடியுமா பாருங்க..., எனக்கே ரொம்ப அசிங்கமா இருக்கு..., இதுக்குத்தான் என் கல்யாணத்துக்கு இவங்களை எல்லாம் அண்ணா கூப்பிடவே இல்லை போல..

“நாமதான் அவங்க கல்யாணத்துக்காவது சொல்லியே ஆகணும்னு சொல்லி தப்பு பண்ணிட்டோம்..., அண்ணா செய்வதுதான் சரி..., இப்போ...” அவளுக்கு கண்கள் கலங்கும்போல் இருந்தது.

ஒரு நகரத்தின் எஸ்பி, அவனது திருமணத்தில், அவனது சொந்த சித்தப்பா இப்படி நடந்துகொள்கிறார் என்றால்..., வேலை செய்யும் இடத்தில் அவனது கௌரவம் என்னவாகும் என்ற கவலை அவளுக்கு.

“எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்..., நீ முதல்ல மேடைக்கு போ...” அவளை அனுப்ப முயன்றான்.

மேடைக்கு செல்லப் போனவளது பார்வை எதேச்சையாக வாசல் பக்கம் நகர, அங்கே தயக்க நடையோடு வந்துகொண்டிருந்தார் கலைவாணி. கண்களிலோ பெரும் எதிர்பார்ப்பு வழிந்தது..., கூடவே அவரது பார்வை அலைமோத, அவர் அருகில் இருந்த நிவேதா, அவர் கரத்தை சுரண்டி,

“அம்மா..., அக்கா...” உரைத்தவள் கௌஷிகா நின்ற இடத்தை கைகளால் சுட்டினாள்.

வாசலைப் பார்த்த கௌஷிகாவின் கண்களில் அவர்கள் விழ, இதழ்களோ, ‘அம்மா...’ முனகியவளது வாய், தன்னை மீறி கலங்கத் துவங்கியது.

மேடைக்குப் போகிறேன் எனச் சொன்னவள், அங்கே செல்லாமல் வாசலைப் பார்த்தவாறு நின்றுவிட, ‘இவள் என்ன இன்னும் இங்கேயே நிற்கிறாள்’ என எண்ணிய முகேஷ், அவள் பார்வை சென்ற திக்கில் தானும் பார்த்தான்.

“கௌஷி, உங்க அம்மாதானே...” அவன் கேட்க, விழிகளில் குளம் கட்டிய நீரோடு, ‘ஆம்...’ என தலை அசைத்தாள்.

ஏழு வயதுவரைக்கும் அவர் முந்தானைக்குள் பாதுகாப்பாய் வளர்ந்தவள் தானே..., அவளுக்கு தன் தாயை தெரியாமல் போகுமா? திடுமென ஒரு நாளில் தந்தையின் மரணமும், மறு நாளே, தாய்க்கு வேறு ஒருவனோடு திருமணம் முடிந்து விட்டது என சென்றுவிட்டார்..., என மட்டுமே அவளுக்குத் தெரியும்.

அதன் பிறகும் எத்தனையோ நாள், வருடங்கள் அவளைக் காணவும், அவளிடம் பேசவும் தவம் இருந்திருக்கிறார் தான். அப்பொழுதெல்லாம் தடுப்பவன் பிரம்மாதான். அவரிடம் ஒரு வார்த்தை கூட பேச அனுமதிக்க மாட்டான்.

“கௌஷி..., அவங்களை கூப்ட்டியா...?” தனக்குத் தெரியாமல் அழைத்திருப்பாளோ என்ற சந்தேகம் அவனுக்கு. கூடவே, அவளது அண்ணனை மீறி எதையும் செய்ய மாட்டாளே எனவும் இருந்தது.

‘இல்லை...’ என்பதுபோல் தலை அசைத்தவள், “இவங்க எதுக்கு இங்கே வர்றாங்கன்னு தெரியலையே...?” பயத்தோடு உரைத்தாள்.

“கௌஷி..., அவங்க உன் அம்மா...” கண்டிக்கும் குரலில் உரைக்க, அவளுக்கு என்ன சொல்வது என்றே

தெரியவில்லை.

கலைவாணியின் கண்களோ, மகளைத் தழுவி, அவள் அருகில் இருந்த முகேஷை கவனித்து, இறுதியாக அவள் கரத்தில் அடைக்கலமாகியிருந்த இரண்டு மாத குழந்தையிடம் நிலைத்தது. அவரது கண்களில் இருந்தது அப்பட்டமாக ஏக்கம் மட்டுமே.

முகேஷ் அவர் அருகில் செல்லத் துவங்கவே..., “என்னங்க வேண்டாம்...” அவனைத் தடுத்தாள்.

“கொஞ்சமாவது மனசாட்சியோட பேசு கௌஷி..., அவங்க அப்படி என்ன பாவம் பண்ணாங்கன்னு நீயும், உங்க அண்ணாவும் அவங்களை இப்படி வதைக்கறீங்கன்னு புரியலை..., நீ பேசலைன்னா போ..., நான் அவங்க கிட்டே போறேன்..., குழந்தையை கொடு...” அவள் கரத்தில் இருந்து தன் மகனை வாங்கிக் கொண்டான்.

கண்களில் இருக்கும் கண்ணீரை வழிய விடக் கூட முடியாமல், சுற்றிலும் இருந்த சொந்தங்கள் தடுக்க, ‘என்ன ஆகப் போகிறதோ...?’ அவளுக்கு பயமாக இருந்தது.

தாயைக் கண்டாலே எரிந்துவிழும் அண்ணா..., அவளுக்கு மட்டும் தாயிடம் போகவும், பேசவும் ஆசையில்லையா என்ன? கழுத்து வரைக்கும் ஆசை இருக்கிறதுதான். ஆனால், அவளது அண்ணாவை மீறி அவளால் எதுவும் செய்ய முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, தாய், சித்தப்பாவின் கண்ணில் விழுந்துவிடக் கூடாதே என்ற கவலை எழுந்து ஆக்கிரமித்தது. அவர் தாயைப் பற்றி பேசும் பொழுதெல்லாம் அவர் கண்களில் வழியும் ஒருவித விபரீத ஒளி, கயமை..., அதை சிறு வயதிலேயே இனம் கண்டிருக்கிறாள்.

வயதுக்கு வந்த பிறகு, அப்பம்மா இறந்த உடனேயே, பிரம்மா அவளை சென்னையில் ஹாஸ்டலில் சேர்த்து விட்டான். விடுமுறைக்கு கூட அவளை ஊருக்கு செல்ல அனுமதிக்க மாட்டான். பள்ளி முடித்து, கல்லூரியில்

அடியெடுத்து வைத்த பிறகு, ஹாஸ்டல் விட்டால் தோழிகளின் வீடே அவளுக்கு அடைக்கலமாக இருந்திருக்கிறது.

அதென்னவோ முதலில் இருந்தே தாயின்மேல் அவளுக்கு கோபம் இருந்ததில்லை, ஏக்கம் மட்டுமே இருந்திருக்கிறது.

அதைவிட, வருத்தம் கொள்ளை கொள்ளையாய் இருந்திருக்கிறது. திருமணம் செய்துகொண்ட தாய், தன்னை ஏன் உடன் அழைத்துக் கொள்ளவில்லை என்ற எண்ணம் கழுத்தளவு இருந்திருக்கிறது. அவளது வருத்தத்தை போக்க இருந்தார் அப்பம்மா மாரியம்மாள்.

அவள் சிந்தையை கலைத்தது அவள் தாயைச் சுற்றி எழுந்த சிறு கூட்டம். கலைவாணியைப் பார்த்த அவரது சொந்தங்கள் சில அவரை சூழ்ந்துகொண்டு பேச, அவரோ கண்ணீர் வழிய அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்.

அங்கே சென்ற முகேஷ்..., அவர் அருகில் நிற்க, அவனிடம் அனுமதி எல்லாம் வேண்டாமலேயே அவன் கரத்தில் இருந்து குழந்தையை அள்ளிக் கொண்டார். தன் நெஞ்சோடு அணைத்தவர், கண்ணீர் வடித்தார்..., கூடவே, அவனைப் பார்த்து கையெடுத்து கும்பிட, சங்கடப்பட்டுப் போனான்.

“ஹையோ அத்தை..., என்ன செய்யறீங்க...” அவரது கையைப் பிடித்து இறக்கி விட, அவருக்கோ பேச்சே வரவில்லை.

“ரெண்டு மாசம் ஆயிடுச்சு இல்ல...” போன மாதம் அவளைக் காணச் சென்றும், குழந்தையைக் கூட கண்ணில் காட்டாமல் அப்படியே திருப்பி அனுப்பி விட்டாளே..., ‘அண்ணாவோட வந்து பாருங்க...’ என அவள் சொன்ன பதிலில், அவரால் எதுவும் செய்ய இயலாமல் போயிற்று.

கௌஷியின் திருமணத்துக்கு அவருக்கு அழைப்பு இல்லை. தான் அழைக்கா விட்டாலும், அவர் வருவார் என்பதை அறிந்த பிரம்மா, “அவளுக்கு அம்மா அப்பா

இல்லைன்னு சொல்லித்தான் இந்த கல்யாணம் நடக்குது. அங்கே நான் உங்களை பாக்கக் கூடாது...” அவன் சொல்லிச் சென்றதை உயிர் உள்ளவரை அவரால் மறக்க முடியுமா என்ன?

பெற்ற மகளின் திருமணம்..., அதைக் கண்ணால் காண முடியாமல், தான் உயிரோடு இருக்கும் பொழுதே..., இறந்துவிட்டதாகச் சொல்லி திருமணத்தை நடத்துகிறான் என்றால்..., பிரம்மா தன்மேல் கொண்டுள்ள கோபம் அவருக்கு புரிகிறது தானே.

அவனது திருமணத்துக்கு அழைக்கவில்லை என்றாலும், தன்னைத் தேடிவந்து வராதே..., எனச் சொல்லவில்லையே என்ற தைரியத்தில்தான் கிளம்பி வந்துவிட்டார்.

அவரது சொந்தங்களை எதிர்கொள்ள அவருக்கு தயக்கமெல்லாம் எதுவும் இல்லை. அவர்களுக்கு கலைவாணியைப் பற்றி நன்றாகவே தெரியும். அவரது இரண்டாவது வாழ்க்கைக்கான காரணம் என்னவென்றும் அவர்களுக்குத் தெரியும் என்பதால், தயங்காமல் வந்தார்.

“மாப்ள..., கௌஷி எப்படி இருக்கா? அவளை யார் பாத்துக்கறா? என் வீட்டில் ஒரு ரெண்டு மாசம் கூட்டி வந்து விடுங்களேன்...” கலைவாணியின் வார்த்தைகளில் இருந்தது அப்பட்டமான கெஞ்சல் மட்டுமே.

அதற்கான பதிலை அவன் சொல்ல முடியாதே. இப்பொழுது கூட தன் தாயின் அருகில் வர மறுப்பவள் எப்படி அவர் வீட்டுக்கு போக சம்மதிப்பாள்? அவனுக்கு கௌஷியை அனுப்ப முழு சம்மதம்தான், உதவி வேண்டுபவள் அவளாக இருக்கையில், தன்னால் எதுவும் செய்ய முடியாத நிலை.

“நான் சொல்லிப் பாக்கறேன் அத்தை...” அவர் மனம் புண்படாமல் ஆறுதலாகவே உரைத்தான்.

அவன் சொல்லிக் கொண்டே இருக்க, அவரது பார்வையோ தன் கைகளுக்குள் இருந்த அந்த பூக்குவியலிலேயே இருந்தது. குழந்தை அப்படியே கௌஷியின் வார்ப்புதான்.

“கௌஷி மாதிரியே இருக்கான் இல்ல…” அவர் நெக்குருகி கேட்க, அவனால் இயல்பாகவே இருக்க முடியவில்லை. போலீஸ்காரனுக்குள்ளும் இருப்பது ரத்தமும், சதையுமான இருதயம் தானே…, அங்கே மட்டும் பாசம் இருக்காதா என்ன?

“நீங்க உக்காருங்க…, நீ எப்படிம்மா இருக்க?” அவருக்கான இருக்கையை காட்டியவன், நிவேதாவிடம் கேட்டான்.

“நான் ரொம்ப நல்லா இருக்கேன் மாமா. நான் பாப்பாவை தூக்கிக்கவா? எனக்கு ஆசையா இருக்கு. கீழே எல்லாம் போட மாட்டேன்…” எங்கே அவன் மறுத்து விடுவானோ என வேகமாக உரைத்தாள்.

அவளது மாமா என்ற அழைப்பில் உருகிப் போனான். “அதுக்கென்னம்மா, தாராளமா தூக்கிக்கோ…, சித்திக்கு இல்லாத உரிமையா?” அவன் சொல்ல, நிவேதாவின் முகத்தில் பெரும் பளபளப்பு.

“நான் சித்தில்ல…, என் மகனா இது…?” அந்த குழந்தைக்குள் இருக்கும் குமரி துள்ளி வெளியேறினாள்.

“அம்மா…, பாப்பாவை என்கிட்டே கொடுங்கம்மா…, எவ்வளவு அழகா இருக்கான் பாருங்களேன்…, கண்ணை தொறக்கப் பாக்கறான். அழாமல் எவ்வளவு சமத்தா இருக்கான்…” தாயின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து, குழந்தைக்காக கை நீட்டினாள்.

மகளது கோரிக்கையை தாயால் மறுக்க முடியுமா? அவள் மடியில் குழந்தையை வைக்க, அவனோ மெல்லியதாக சிணுங்க, பதறிப் போனாள்.

“ஐயோ அம்மா அழறான்…, வேண்டாம் தூக்குங்க…”.

“முதல்ல அப்படித்தான் அழுவான்…, பிறகு செட் ஆயிடுவான்…” முகேஷ் தான் சமாதானம் செய்தான். அந்த தாயையும் மகளையும் பார்க்க அவனுக்கு பரிதாபமாக இருந்தது.

சரியாக அதே நேரம்..., “ஏய் தே*** நீ இங்கேதான் இருக்கியா...? என் கண்ணில் படாமல் போய்டுவியோன்னு பாத்தேன்..., தினவெடுத்த நாய்..., என்கிட்டே இருந்து தப்பிச்சுட்டல்ல...” இன்னும் காது கூசும் வார்த்தைகளில் பிரம்மாவின் சித்தப்பா கத்திக் கொண்டு முன்னே வர, கலைவாணியோ இருக்கையில் இருந்து அசையவே இல்லை.

முகேஷுக்கு அதிர்ச்சி என்றால் அப்படி ஒரு அதர்ச்சி..., ‘இவர் என்ன இப்படி பேசறார்...’ அவன் நினைக்க, நிவேதாவின் கரத்தில் இருந்து குழந்தையை நொடியில் வாங்கிய கலைவாணி..., “நிவேதா, நீ அப்பாகிட்டே போ...” முதல் வேலையாக அவளை அங்கே இருந்து அனுப்பினார்.

அவளும் மறு வார்த்தை பேசாமல் அங்கிருந்து நகர, “ஓ..., என்னைப் பாத்தால் உனக்கு ஆம்பளையா தெரியலையோ..., என்கிட்டே இல்லாதது என்னடி அவன்கிட்டே இருக்கு...” விட்டால் கலைவாணியை அடித்து துவம்சம் செய்யும் வேகம் அவரிடம்.

முகேஷ் கலைவாணியை மறைத்தாற்போல் முன்னால் வந்து நின்றவன், “மாமா, நீங்க நிதானத்தில் இல்லை, முதல்ல போங்க...” மற்றவர்களது கவனம் இங்கே பதிய வேண்டாம் என குரலை தாழ்த்தியே உரைத்தான். ஆனாலும் அதில் இருந்த அழுத்தம், அங்கே இருந்தவர்களுக்கு புரியவே செய்தது.

“ஓடுகாலி நாய்க்கு நீங்க என்ன சப்போட்டா..., விலகுங்க தம்பி, அவளை நாக்கைப் பிடுங்குற மாதிரி நாலு கேள்வி கேட்டால்தான் என் மனசு ஆறும்” அவனை தள்ள முயன்றார்.

அந்த நேரம் அஞ்சலை அங்கே இல்லை..., இல்லையென்றால் நடந்திருக்கும் கூத்தே வேறாக இருந்திருக்கும். அவரும் அவர் பங்குக்கு வார்த்தைகளை அள்ளித் தெளித்திருப்பார்.

அவர் அவ்வளவு பேசிய பிறகும் கலைவாணி அழுத்தமாக நின்றிருந்தாரே தவிர ஒரு வார்த்தை பேசவில்லை. அதற்குள்ளாகவே அங்கே கூட்டம் கூட, மேடையில் இருந்தே அதை கவனித்து விட்டான் பிரம்மா.

அருகே இருந்த கௌஷியைப் பார்க்க, அவளோ விட்டால் அங்கேயே அழுதுவிடுவேன் என்பதுபோல் நிற்க, “கௌஷி அங்கே...” அவன் பார்வையால் சுட்டினான்.

அவள் அமைதியாக நிற்கவே, “கௌஷி, நான் உன்கிட்டதான் கேக்கறேன்” இருக்கும் டென்ஷனை அவளிடம் காட்டினான்.

“அண்ணே..., அம்மா வந்திருக்காங்க..., பிளீஸ்ண்ணா..., எதுவும் சொல்லிடாதீங்க” அவனும் போய் எதுவும் பெரிய பிரச்சனை ஆகிவிடக் கூடாதே என்ற கவலையில் அவளிடம் கெஞ்சினாள்.

‘அம்மா...’ மனதுக்குள் எண்ணியவன், மேலே எதையும் யோசிக்கவில்லை. கந்தனை பார்வையால் அழைத்தவன், அவரிடம் என்ன சொன்னானோ..., அவர் வீடியோகிராபார் அருகில் செல்ல, கழுத்தில் இருந்த மாலையை கழட்டியவன் கீழே செல்ல முயன்றான்.

அவன் நகரத் துவங்கிய வேளை, அவனைத் தடுத்த காயத்ரி, “அவங்க உங்க அம்மா..., எதுவா இருந்தாலும் பாத்து பண்ணுங்க” அவன் கோபம் உணர்ந்தவளுக்கு அப்படித்தான் சொல்லத் தோன்றியது. அவனோ மனைவியை ஒரு பார்வை பார்த்தவன், வேகமாக கீழே இறங்கினான்.

வரவேற்பு மேடையில் இருந்து மாப்பிள்ளை கீழே இறங்கிச் சென்றால் என்னவாகும் எனத் தெரியாதா..., அவன் கீழே இறங்கிய மறு நிமிடம், ஆர்கெஷ்டிராவில் இருந்து மேடை ஏறிய பாடகன் அப்பொழுது வெளியாகியிருந்த புத்தம் புது பாடலை பாடத் துவங்க, சிலர் மேடையிலேயே ஆடத் துவங்கினர்.

கந்தன் கூல்டிரிங்கை கொண்டுவந்து காயத்ரியிடம் கொடுக்க, ஒரு சிறிய பிரேக் எடுத்துக் கொண்டதாகத்தான் மற்றவர்களுக்குத் தோன்றியது. அந்த நேரத்தில் பிரம்மாவின் சாதுர்யத்தை காயத்ரியால் மெச்சாமல் இருக்க முடியவில்லை.

‘என்ன டென்ஷன் என்றாலும் எல்லாத்தையும் கவனிச்சு செய்யறான். எப்படித்தான் இவனால் மட்டும் முடியுதோ?’ எண்ணியவள் பார்வையை அவன்மீதே வைத்திருந்தாள்.

நொடியில் தாயின் அருகே, கூட்டத்துக்குள் விரைந்த பிரம்மா, “என்ன இங்கே…?” கேட்டவனது பார்வை, அங்கே இருந்தவர்களின் முகபாவத்தை வேகமாக அலசியது.

“முகேஷ்…” நண்பனை அழைக்க, “உங்க சித்தப்பா ரொம்ப தப்பா பேசுறார்டா…” அவன் அவ்வளவுதான் உரைத்தான்.

அவ்வளவுதான்…, தன் சித்தப்பாவை உறுத்து விழித்தவன், “இப்போ, இந்த நிமிஷம்…, நீங்க இந்த இடத்தை விட்டு போயாகணும்…” அவ்வளவுதான், ‘இல்லையா நான் போக வைப்பேன்…’ என்னும் அழுத்தத்தில் வார்த்தைகளை கடித்து துப்ப, அவருக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

“ஏண்டா பேச மாட்ட…, எவளோ பெத்து போட்ட உன்னை என் புள்ளை மாதிரி வளத்தேனே…, நீ இதுவும் பேசுவ, இதுக்கு மேலேயும் பேசுவ” அவர் எகிற, கை முஷ்டியை இறுக்கியவன், நாகரீகம் கருதி அவரை அறையாமல் விட்டான்.

ஆனால் தன் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல், அவர் பின்னகழுத்தில் அழுத்தமாக தன் விரல் பதிக்க, அடுத்த நிமிடம் அவர் உணர்விழந்து சரியத் துவங்கவே, “முகேஷ்…” அழைத்தவன், அவரை அவன் கையில் கொடுத்துவிட்டு, “தூக்கி எங்கேயாவது ஓரமா போடு…” அவன் காதுக்குள் உரைக்க, வெலவெலத்துப் போனான்.

“டேய் கொன்னுட்டியா…?” பதறிப் போனான்.

“ம்ச்..., காலைல தெளிஞ்சுடும்..., ஆனா இவர் கண்முழிக்கிறது ஊர்லயாதான் இருக்கணும்..., இந்த ஆள் இனிமேல் என் கண்ணிலேயே படக் கூடாது. சித்தியையும் சேர்த்துதான் சொல்றேன்...” அங்கே அப்பொழுதுதான் வந்த அஞ்சலையை அவன் பார்த்த பார்வையில், அவள் நடுங்கிப் போனாள்.

“டேய் பாதகா...” அவர் கத்த துவங்கிய நொடி, “ஷ்..., இனிமேல் நான் பேச மாட்டேன்..., ஆனா...” அவன் கையை முறுக்கிக் காட்ட, தன் கணவனின் நிலையைக் கண்டவருக்கு பேச்சு வருமா என்ன? கப்பென வாயை மூடிக் கொண்டார்.

கலைவாணியால் நம்பவே முடியவில்லை..., தன் மகன் தனக்காக ஒன்றை செய்திருக்கிறானா? இது உண்மையா? தான் காண்பது கனவா இல்லை நனவா? இமைகளை சிமிட்டக் கூட மறந்து அவனை வெறித்தார். கண்களிலோ மாலை, மாலையாக கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

அதற்குள் நிவேதா சென்று மகேஸ்வரனை அழைத்து வந்திருக்க, கூட்டத்தை விலக்கிவிட்டு முன்னால் வந்தார். பிரம்மாவோ..., “உங்களை யார் இங்கே கூப்பிட்டா? நான்...” “அண்ணே...” அவன் மேலே பேசும் முன்பு, கௌஷிஅவன் கரத்தை பிடித்து தடுத்தாள்.

“அவங்களை போகச்சொல்...” அவ்வளவுதான்..., என்வேலை முடித்தது என கிளம்பப் போனான்.

“அண்ணே..., கன்கிராட்ஸ்...” நிவேதா அவனைத் தடுக்க, மற்றவர்களிடம் முகம் முறித்தாற்போல் அவளிடம் செய்ய முடியவில்லை. அவள் தன்னை நோக்கி நீட்டிய சிறிய பரிசுப் பொருளையும் தவிர்க்க முடியவில்லை.

“தேங்க்ஸ்ம்மா...” சற்று கோபம் தணிய அவன் கூலாவது அவனது முகத்திலேயே தெரிந்தது. பெரும் தயக்கத்துக்கு இடையில், அவன் கரம் பற்றியவள், “தேங்க்ஸ்ண்ணே...” குரல் நடுங்க, சந்தோஷமும், பரவசமுமாக அவள்

நிற்கையில், அவள் கரத்தை விலக்கிவிட்டு அவன் எப்படிச் செல்லவாம்?

கௌஷிக்கு தான் நடப்பதை நம்ப முடியவில்லை. ‘தன் அண்ணனா இப்படி நிற்கிறான்? அதுவும் தாயிடம் அவன் முகம் காட்டி நிற்கிறானா? அவர் மகளிடம்..., தன் தங்கையிடம் உரையாடுகிறானா? அவளை தொட்டு பேச அனுமதிக்கிறானா?’ கண்களில் கண்ணீர் நிறைந்து பார்வையை மறைத்தது.

“நிவேதா..., அவனை போக விடு..., எல்லாரும் அவனுக்காக காத்திருக்காங்க” மகேஸ்வரன் அவளை கலைத்தார்.

“நாங்க வர்றோம்ண்ணா...” நிவேதா அவன் கரத்தை விலக்க, அவன் மனம் ஒரு நொடி அசைந்து போனது.

“முகேஷ்..., வந்தவங்களை சாப்ட்டு போகச் சொல்...” பிரம்மா சொல்ல, கௌஷிகா மயக்கம் போட்டு விழாத குறைதான்.

அவன் நகர, “அண்ணே..., நான் அம்மாவோட போகட்டுமா...?” ஏக்கமாகவே கேட்டாள் கௌஷிகா. இதற்கு அவன் என்னவென்று பதில் சொல்வதாம்? மையமாக தலை அசைத்தவன், அங்கிருந்து மேடைக்கு விரைந்தான்.

அவனுக்கு தன்னையே பிடிக்காத ஒரு நிலை. சட்டென முகத்தில் அடித்தாற்போல் ‘போ’ என சொல்லிவிட்டு, இறுதியாக நிவேதாவுக்காக இறங்கிப் போன விதம்..., என்னவோ அனைத்தும் தவறாக நடப்பதுபோல் ஒரு பிரம்மை.

இங்கிருந்து ஓடிப்போய்விட மனம் தவிக்க, அது முடியாமல் மேடையை நோக்கி நகர்ந்தன அவன் கால்கள். ஆனால், மண்டையே வெடித்து சிதறும் அளவுக்கு டென்ஷன்.

அதே நேரம், அவன் கீழே இறங்கிய மறு நிமிடம், அவர்களை கோபமாக பார்த்துக் கொண்டிருந்த பார்வைக்கு சொந்தக்காரியான சாந்தி மேடையேறி இருந்தாள்.

சற்று ஒதுங்கி நின்றிருந்த காயத்ரியை நெருங்கியவள், “நீயே வந்து இப்படி புதை குழிக்குள் விழுந்துட்டியே. கண்ணைத் தொறந்துட்டே கிணத்துக்குள் விழறவளை இப்போதான் நான் பாக்கறேன்.

“அண்ணனை கொன்னவனோட வாழ்ந்து, அவனுக்கே பிள்ளை பெற்று, அவனுக்கு கீழேயே இருந்து…, உங்க அண்ணாவோட சாவுக்கு ரொம்ப நல்ல நியாயம் செய்துட்ட. உன்கிட்டே இருந்து இப்படி ஒரு செயலை நான் எதிர்பாக்கலை…” புன்னகை முகமாக அவள் விஷம் கக்க, ஏற்கனவே குழப்பத்தில் இருந்தவள் குறுகிப் போனாள்.

ஏற்கனவே இவையெல்லாம் அவள் சிந்தித்ததுதான்…, ஆனால், அதையே அவள் வாயால் கேட்கையில் அவளுக்கு எப்படி இருக்குமாம்? அவன்மேல் குறையும் கோபங்கள் அனைத்தும் விசிறிவிடப் படுகையில் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

“பிளீஸ் சாந்தி…, நான் ஏற்கனவே ரொம்ப குழப்பத்தில் இருக்கேன், இதில் நீ வேற…” அவளால் தாங்க முடியவில்லை. அவளது தோழிகள் அனைவரும் வருவதைப் பார்த்த சாந்தி, அதற்குமேல் அங்கே நிற்காமல் கிளம்பிவிட்டாள்.

செல்லும் முன்னர்…, “உன்னால் சந்தோஷமாக இருக்க முடியும் என்றால் பார்க்கலாம்…, நான் மறுபடியும் வருவேன்…” சொன்னவள் மறு பக்கம் படிகளில் இறங்க, அவளுக்கு நேர் எதிரில் பிரம்மா. இந்திரா கேங் வருவதை கவனித்தவள், பிரம்மாவின் வருகையை கவனிக்க மறந்திருந்தாள்.

அவனை நேருக்கு நேர் பார்க்க, அவ்வளவுதான்…, முகத்தில் ஒரு பெரும் பீதியும், ஒரு அன் ஈஸி உடல்மொழியும், முகத்தை மறைக்க முடியாத தடுமாற்றமும் சேர, கிட்டத்தட்ட ஓட, புருவம் நெரித்தான்.

‘யார் இவள்…?’ எண்ணியவன், காயத்ரியின் அருகில் வந்து அதே கேள்வியைக் கேட்டான்.

“ஏன்..., அவளையும் கொல்லணுமா?” அவள் சுள்ளென விழ, அவளை கூர்மையாக ஒரு பார்வை பார்த்தவன், “நம்ம வாழ்க்கையை நாமதான் வாழணும் காயு...” அழுத்தமாகவே உரைத்தவன், மேடையில் போட்டிருந்த இருக்கைக்குத் திரும்பினான்.

வந்து சென்றவளைப் பார்க்க, அவனுக்கு அவ்வளவு சரியாகப் படவில்லை. நேரம் செல்ல, காயத்ரியிடம் இருந்திருந்த இலகுத்தன்மை தொலைந்து போயிருந்ததை உணர்ந்து கொண்டான்.

ஏற்கனவே இருக்கும் குழப்பம் போதாது என, பெற்றவர்கள் குழப்பம், இப்பொழுது காயத்ரியின் சிடுசிடுப்பு, அவனுக்கு எப்படி இருக்கும்..., எப்பொழுது அங்கே இருந்து செல்வோம் என திணறிப் போனான். தலைவலியோடு, மனவலியும், குழப்பமும் சேர தன் கோபத்தை மற்றவரிடம் காட்டிவிடக் கூடாதே என முயன்று அமைதி காத்தான்.

ஒரு வழியாக அனைத்தும் முடிந்து, அவர்கள் அவன் வீடு வருகையில் நேரம் நள்ளிரவைத் தொட்டிருந்தது. அவன் இருந்த களைப்பில் உடை கூட மாற்ற முடியாமல், தன் ஷூ, கோட்டை கழட்டியவன், டையை தளர்த்திவிட்டு அப்படியே படுக்கையில் விழுந்தான்.

காயத்ரிக்கோ..., அந்த இரவைக் குறித்த பயம் தொற்றிக் கொள்ள, எங்கே தன்னை நாடி விடுவானோ என தவித்துப் போனாள். “காயு...” அவன் அவளை படுக்கச் சொல்லி வாய் திறக்க,

அவளோ..., “உன் சுண்டுவிரல் நகம் என்மேல் பட்டால் கூட, உன்னைக் கொல்ல மாட்டேன்..., நான் செத்துப் போய்டுவேன்..., என்ன புரியுதா?” கிட்டத்தட்ட வெடித்திருந்தாள்.

அவ்வளவுதான்..., அவனுக்கு எங்கே இருந்துதான் அவ்வளவு கோபமும், ஆத்திரமும் வந்ததோ..., பட்டென படுக்கையில் இருந்து எழுந்தவன், “நீ சாகாதே..., என்னைக் கொன்னுடு..., ஏற்கனவே என்னை கொல்ல முடியாமல்

தோற்றுப் போனவள் தானே நீ..., இரு...” வேகமாக பார்வையை சுழற்றியவனது கண்களில் பட்டது, ஆப்பிள் வெட்ட வைத்திருந்த கத்தி.

தட்டு நிறைய பழங்களுக்கு நடுவில் அது வீற்றிருக்க, வேகமாகப் போய் அதை எடுத்து வந்தவன், அதை அவள் கையில் அழுத்தமாகத் திணித்து, அவளது கணுக்கையை அதே அழுத்தத்தில் பற்றினான்.

“வயித்தில் குத்தினால் எல்லாம் அவ்வளவு சீக்கிரம் நான் சாக மாட்டேன். இங்கே..., இங்கே..., இப்படி இறக்கணும் கத்தியை...” ஒரே வீச்சில் அவன் நெஞ்சுக்கு நேராக கத்தியை இறக்கியிருந்தான் பிரம்மா. அது கொஞ்சம் கூட பிசகாமல் அதன் இலக்கை நோக்கி பாய்ந்திருந்தது.

*****

# பகுதி – 21.

பிரம்மாவின் கோபத்தை விழி விரிய பார்த்துக் கொண்டிருந்தாள் காயத்ரி. அந்த இரவைப் பற்றிய பயத்தில் அவனிடம் கத்திவிட்டாள்..., ஆனால் அதற்காக அவன் காட்டிய கோபம்..., அவனது பேச்சு அடிவயிறுவரை குளிர் பரவச் செய்தது.

அவனது பேச்சும்..., அவனது பார்வையும், கூடவே அவன் கத்தியை எடுத்து வந்த வேகமும்..., அவள் அதிலேயே திணறிப் போயிருக்க, “வயித்தில் குத்தினால் எல்லாம் அவ்வளவு சீக்கிரம் நான் சாக மாட்டேன். இங்கே..., இங்கே..., இப்படி இறக்கணும் கத்தியை...” ஒரே வீச்சில், அவள் எதிர்பாராத நேரத்தில், தன் நெஞ்சுக்கு நேராக கத்தியை இறக்கியிருந்தான் பிரம்மா.

“ஆ...” பெரும் குரலில் அலறியவள், அவனது பிடி இரும்பாக இருந்ததையும், அவன் விளையாட்டுக்கு எதையும் செய்யவில்லை என்பதும், இறுதி நொடியில் மட்டுமே அவளுக்குப் புரிந்தது.

தன்னை சற்று சுதாரித்து, தான் அழுத்தமாக பற்றியிருந்த கத்தியின் பிடியை, அவன் நெஞ்சில் முழுவீச்சில் பதியப்போன இறுதி நிமிடம் விடுவித்திருக்க, தான் தாமதமாகி விட்டதை, அவன் நெஞ்சுப் பகுதியில் இருந்து வழிந்த குருதி உறுதி செய்தது.

தன் பலம் கொண்டமட்டும் அவன் கையில் இருந்து தன் கையை உதறிக் கொண்டவள், கால்கள் தள்ளாட, வேகமாக பல அடி பின்னால் வைத்தாள். தேகம் மொத்தமும், கிடுகிடுவென ஆடிக் கொண்டிருந்தது.

அவனோ..., “ஏன் கைப்பிடியை விட்டுட்ட..., இன்னும் அழுத்தமாக பிடித்திருந்தால், கத்தி அரையடி ஆழம் இறங்கி இதயத்தை அப்படியே பிளந்திருக்கும், அந்த நொடியே செத்துப் போயிருப்பேன், உனக்கும் விடுதலை கிடைத்திருக்கும்...” இரும்பு குரலில் உரைக்க, அவளுக்கோ அவனை ஏறிட்டே பார்க்க முடியவில்லை.

“ஹையோ ரத்தம்..., ஏன் இப்படி பண்ணீங்க...?” ஏற்கனவே ஒருமுறை தான் செய்த செயலையே அவளால் ஜீரணிக்க முடியாமல் இருக்க, இப்பொழுது நடந்தது...,

ஒரு நொடி தான் தாமதித்து இருந்தாலும், அவன் சொன்னது நடந்திருக்கக் கூடிய சாத்தியக்கூறு இருக்க..., எழுந்த உதறலை அவளால் மறைக்கவே முடியவில்லை. தள்ளாடி, தடுமாறி, தரையில் அப்படியே அமர்ந்துவிட்டாள். தேகம் மொத்தமும் நடுங்கிக் கொண்டிருந்தது.

“எதை சொல்ற..., ஓ..., ஏன் உன் முழங்கையை பிடிக்காமல், உன் விரல்களை கத்தியோட அழுத்தமாக பிடித்திருக்க வேண்டும் என சொல்றியா? ஆமா..., அதைச் செய்யாமல் போனது என் தப்புதான்.

“இப்போ கூட எதுவும் கெட்டுப் போகலை..., கத்தியை கையில் எடுத்துக்கோ, என் உயிரை இந்த நிமிஷமே குடிச்சுடு. உனக்கு என் உயிர்தானே வேணும்..., அதை எடுத்துக்கோ...” அவன் வெடிக்க..., சிதறிக் கொண்டிருந்தாள்.

அந்த நொடி..., அவளது கரங்கள் தாமாகவே தாலியை பற்றிக் கொள்ள, உள்ளம் பதறியது. அவன் இல்லாமல் போனால்..., தான் ஒரு விதவை...’ அந்த நினைவு கொடுத்த விதிர்ப்பு..., அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

‘உன் சுண்டுவிரல் நகம் கூட என்மேனியில் பதியக் கூடாது...’ எனச் சொன்னபொழுது தெரியாத உண்மை..., அவன் செத்துப் போனால்..., என எண்ணும்பொழுது புரிய, தன் புரிதலில் அவளால் மகிழ முடியவில்லை.

அவன் நெஞ்சுபகுதியில் இருந்து ரத்தம் வெளியேறி அவனது சட்டையை மெதுவாக நனைக்கத் துவங்க..., “ர..த்..த..ம்...” அவள் சொன்னபொழுது, தேகத்தோடு சேர்த்து குரலும் நடுங்கியது. கூடவே அவள் முகம் ரத்தப்பசையின்றி வெளிறிப் போக, மூச்சு விட முடியாமல் திணறத் துவங்கினாள்.

அவ்வளவு நேரமாக அவளது முகத்தை கோபமாகப் பார்த்து கத்திக் கொண்டிருந்தவன், இறுதியாக அவள் குரலில் இருந்த நடுக்கத்தில் தன்னை சற்று கட்டுப்படுத்த, கூடவே..., அவளது நிலை அப்பொழுதுதான் புரிந்தது.

“ஏய்..., காயு..., மூச்சு விடு..., இவளோட...” ஒரே பாய்ச்சலில் அவளை நெருங்கியவன், அவள் கன்னத்தை தன் கரத்தால் தாங்கி..., வேகமாக, அழுத்தமாக அவள் முகத்தில் ஊதினான்.

அடுத்த நிமிடம் அவள் மூச்சு விட, தன் கரத்தை விலக்கிக் கொண்டவன், அதற்குமேல் அவளிடம் கோபமாக பேச முடியாமல், படுக்கையில் சென்று விழுந்தான். தன் இடக்கரத்தை கண்களுக்கு குறுக்காக வைத்தவன், அவளை படுக்கச் சொல்லவும் இல்லை..., விளக்கை நிறுத்தவும் இல்லை.

அவளது பார்வையோ அவனது ரத்தம் வழியும் நெஞ்சிலே நிலைத்து இருந்தது. ‘காயம் எவ்வளவுன்னு தெரியலையே..., ரத்தம் வேற விடாமல் வழியுது, மருந்து வேற வைக்கலை...’ அவள் மனம் புலம்ப, அந்த நேரம், அவனை கொல்ல தான் அலைந்தோம் என்பதெல்லாம் சுத்தமாக மூளையை எட்டவே இல்லை.

‘நீ ரொம்ப நல்லவடி..., நீயே கத்தியால் குத்திட்டு, மருந்து போடலைன்னு ரொம்ப அக்கறை படுற பார்...’ மனசாட்சி இடித்துரைக்க, அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை.

உலகத்திலேயே யாருக்கும் இப்படி ஒரு முதல் இரவு நடந்திருக்காது. கணவன் மனைவியை கொடுமைப் படுத்தும் இரவுகள் கூட இருந்திருக்கலாம், இங்கே..., மனைவியே கணவனை கத்தியால் குத்தி விட்டாள்...’ நினைக்க நினைக்க, நெஞ்சம் நடுங்கியது.

அவனை அழைத்து மருந்து போடச் சொல்லக் கூட அச்சமாக இருந்தது. நேற்றுவரை அவனது கோப முகத்தை ஒரு சதவீதம் கூட பார்த்ததில்லை. ஆனால், கழுத்தில் தாலி

ஏறிய பிறகு, அவனது முழு கோபத்தை மட்டுமே எதிர்கொள்கிறோம் எனப் புரிய, எது அவனது உண்மை முகம் எனத் தெரியவில்லை.

முன்பெல்லாம் அவள் கோபமாக என்ன சொன்னாலும் அமைதியாக அமர்ந்திருப்பான், இல்லையா சற்று கோபமாக எதையாவது சொல்வான், ஆனால் இது...? இவனோடு இப்படியே சம்மாளிக்க முடியுமா?

‘அவன் மனதில் தான் கொலைகாரியாக மட்டுமே பதிந்திருக்கிறோமோ?’ அந்த நினைவு கொடுத்த துன்பத்தை அவளால் தாங்க முடியவில்லை.

அவள் இருந்த இடத்திலேயே உறைந்திருக்க, அவனோ மனதுக்குள் தன்னையே திட்டிக் கொண்டான். ‘உன் டென்ஷன் உன்னோடு..., அதை அவளிடம் காட்டுவியா? அவ என்ன உன் அடிமையா? முழு நாளும் அவளிடம் இப்படியே காயத்தான் அவளை திருமணம் செய்து கொண்டாயா?’ தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அவளது வெளிறிய முகமும், அவள் கண்களில் இருந்த தவிப்பும், தேகத்தில் ஓடிய நடுக்கமும் அவனுக்கு பல கதைகள் சொன்னது. ‘என்மேல் கோபமாக இருப்பவள், என்னைக் கொல்ல நானே சந்தர்ப்பம் கொடுத்தால் செய்ய மறுப்பதேன்? அப்படியென்றால்...’ எண்ணியவனின் மனதில் ஒருவித இதம் பரவ, இமைகளை மூடிக் கொண்டான்.

சில நிமிடங்கள் கடந்த பிறகுதான், காயத்ரி என்னும் சிலைக்கு உயிர்வர, அவனைத் திரும்பி பார்த்தாள். அவன் உறங்கிவிட்டது, அவனது நெஞ்சுக்கூடு ஏறி இறங்குவதில் புரிய, அடிமேல் அடி வைத்து படுக்கையை நெருங்கினாள்.

நேரம் நள்ளிரவை எட்டிக் கொண்டிருந்தாலும், உறக்கம் என்பது மருந்துக்கும் எட்டவில்லை. அவனது சட்டையில் ரத்தம் இன்னுமே உறையாமல் இருப்பது போன்ற பிரம்மை. ரத்த வாடை, அவள் நாசியை தீண்டும் உணர்வு..

‘இப்படியே ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தால் என்ன ஆவது...?’ அவளுக்கோ, அவனது காயத்தை கண்ணால் கண்டுவிடாமல் ஒரு பொட்டு கூட உறங்க முடியாது என்பது புரிந்து போனது.

அவனை நெருங்கிச் செல்லவும் பெரும் தயக்கம்..., அவனை நெருங்கி, அதற்கும் அவன் ஏதாவது சொல்லிவிட்டால்...? உள்ளம் தவித்தாலும், எப்படியோ போகட்டும் என அவளால் இருக்க முடியுமா என்ன? ஒரு டிபிகல் தமிழ்ப்பெண்..., கொண்டவன்மேல் கோபம் இருந்தாலும், அதை முழுதாக அவனிடம் காட்ட முடியாமல் தவித்தாள்.

ஏற்கனவே அவனை கொல்ல முயன்ற குற்ற உணர்வில் வேறு இருக்கிறாள், அதற்கே இன்னும் மன்னிப்பு கேட்கவில்லை, அதற்குள் இப்படி ஒரு நிகழ்வு..., தன் தயக்கம் விலக்கி, அவன் உறங்கிவிட்டான் என்ற நம்பிக்கை கொடுத்த தைரியம், மெதுவாக அவனை நெருங்கி, அவன் சட்டையைத் தொட கரம் நீட்டினாள்.

அவளது கொலுசு ஏற்படுத்திய மெல்லிய ஒலியிலேயே உறக்கம் கலைந்தவன், அசையாமல் படுத்துக் கொண்டான். பிரம்மாவுக்கு இரவின் ஆழ்ந்த உறக்கக்கத்தில் கூட இதயமும், உணர்வுகளும் விழித்துக் கிடக்கும், ஒரு குண்டூசி விழும் ஒலிக்கு கூட கண் விழித்து விடுவான்.

அவனுக்கு நேர் எதிரான குணம் கொண்டவள் காயத்ரி..., இரவு உறங்கிவிட்டால் இடியே விழுந்தாலும் கண் விழிக்க மாட்டாள். எதிரெதில் துருவங்கள் ஈர்க்கும் என்பது, குணத்துக்கு மட்டுமல்ல, பழக்கங்களுக்குமோ?

அவனுக்கு சற்று தூரத்திலேயே நின்றுவிட்டவள், கரத்தை நீட்டுவதும், மடக்குவதுமாக இருக்க, அவள் செய்கையை அரை விழிப் பார்வையாக பார்த்திருந்தான். அவன் எப்படியோ போகட்டும், போய் படுத்துவிடுவோம் என அவளால் நினைக்க முடியவில்லை.

உள்ளம் முழுவதும் தவித்துக் கிடக்கையில், அவளால் சும்மா என்றாலும் படுக்கையில் படுத்துவிட முடியுமா

என்ன? சற்று நேரம் அவளது விலகலுக்காக காத்திருந்தவன், அவள் நகரவில்லை எனவே, “தூங்கலையா நீ…?” இமைகளை பிரிக்காமல், அந்த இரவின் நிசப்தத்தில் அவன் குரல் திடுமென ஒலிக்க, துள்ளி விலகினாள்.

பட்டென விலகி, அவனுக்கு மறுபக்கம், படுக்கையில் சென்று, அவனுக்கு முதுகுகாட்டி அமர்ந்தாள். அவள் விலகிவிடவே, கைநீட்டி விளக்கை நிறுத்தியவன், இரவு விளக்கை ஒளிரவிட்டான். இருள் சற்று பார்வைக்குப் பழக, இப்பொழுது அறை முழுவதும் மங்கலான நீலவர்ண ஒளியில் குளித்திருந்தது.

சற்று நேரம் அசையாமல் இருந்தவள், சில நிமிடங்கள் கடக்க, தன் கழுத்தில் இருந்த நகை உறுத்தவே அனைத்தையும் ஒவ்வொன்றாக கழட்டி வைத்தாள். இறுதியாக மிச்சமிருந்தது மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலியே.

தன் இரு கை பெருவிரலால் கோர்த்து, தன் முகத்துக்கு நேராக பிடித்துப் பார்த்தவள், மெதுவாக திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் உறங்கிக் கொண்டிருக்கிறானா? விழித்திருக்கிறானா என அவளால் உணர முடியவில்லை.

‘அதெப்படி நான் போனதை தெரிஞ்சுகிட்டான்…? ஒரு வேளை தூங்காமல் முழிச்சிருந்தானோ? இல்லையே…, நல்லா தூங்கிட்டுதான் இருந்தான் எனக்குத் தெரியும். சின்ன அசைவுக்கும் முழிச்சுக்கறான்…’ மனம் திக்கென அதிர்ந்தது.

‘போலீஸ்காரன் என்பதால் இப்படி இருக்கானோ?’ தாலியை இரு கரத்தால் பொத்தி, தன் நெஞ்சுக்குள் பொதிந்து கொண்டாள். இன்னும் அவளது பார்வை அவன் நெஞ்சின் மீதே இருந்தது.

படுக்கையில் அமர்ந்து அவள் அசைந்து கொண்டிருக்க, அவனோ விழித்துக் கிடந்தான். அவன் பக்கம் சற்று அசைவதும், பின்னர் பின்னால் நகர்ந்து கொள்வதுமாக

அவள் போராட, கண்களின் மேலிருந்த கையை எடுத்தவன், அவள் பக்கம் பார்த்தான்.

“ஏன் ஒரு மாதிரி உருண்டுகிட்டே வர்ற…? என்னன்னு சொல்லு…” அவ்வளவு நேரமாக அவளது நடுக்கத்தையும், போராட்டத்தையும் கண்டதாலோ என்னவோ, சற்று கனிவாகவே கேட்டான்.

அவனது குரலில் இருந்த கனிவு அவளுக்கு சிறு நம்பிக்கையை அளிக்க, “கா..கா..யம்…” வெறும் காத்துதான் வருது…, என்னும்படியான பாவனை…,

“ஜஸ்ட் அரை இன்ச்…, மார்புக்கூட்டை கத்தி நெருங்கலை, ஆனா பக்கச் சதையை கிழிச்சிருக்கு, சோ ப்ளட் வந்துட்டு இருக்கு. இன்னும் கொஞ்ச நேரத்தில் நின்னுடும் போதுமா…, இப்போ தூங்கு…” அவன் கொடுத்த விளக்கங்களை விழி விரிய பார்த்துக் கொண்டிருந்தவள், இன்னும் கொஞ்ச நேரத்தில் ரத்தம் நின்னுவிடும் என்று சொன்னதை ஏற்க முடியவில்லை.

‘அப்படின்னா…, இன்னும் ரத்தம் வழிஞ்சுட்டு இருக்குன்னு அர்த்தம் தானே…’ ரத்தம் வழிவது அவ்வளவு ஈசியான விஷயமா என்ன?

‘அரை இன்ச் ஆழ காயம்…, மார்பு எலும்பை நெருங்கவில்லை…’ அவன் என்னவோ சாதாரணமாக சொல்லிவிட, கத்தி மேல் சதையை கிழித்தாலே தன்னால் அந்த காயத்தின் வலியை தாங்க முடியாது என்னும்போது, அரை இன்ச் ஆழ காயத்தை அவன் கண்டுகொள்ளாமல் இருப்பது…, அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை.

ஒரு கை நெஞ்சோடு தாலியை பற்றிக் கொள்ள, மறு கை படுக்கை விரிப்பை அழுத்தமாக பற்றிக் கொண்டது. அவள் முகத்திலேயே கவனமாக இருந்தவன், “ம்ச்…, என்ன…? கொஞ்ச நேரமாவது தூங்கினால் தான் காலையில் ஸ்டேஷன் போக முடியும்…” சிறு பிள்ளைக்கு சொல்லும் பாவனை.

“கா..யத்தை..., ரத்தம்..., மருந்து...” காயத்தில் ரத்தம் வழிகிறது, மருந்து போட்டுக்கொள் என கோர்வையாக சொல்ல முடியாமல் திக்கித் திணற, அவனுக்கோ அது தெளிவாகப் புரிந்தது.

“நீதானே குத்தின..., நீயே மருந்து போட்டு விடு..., அந்த டிராவில் மெடிக்கல் கிட் இருக்கு...” சொன்னவன், சட்டை பட்டங்களை கழட்டிவிட்டு, சட்டையை கழட்டி அருகில் வைத்தான். உள்ளே இருந்த வெள்ளை பனியன் மொத்தமாக ரத்தத்தில் குளித்திருக்க, அவன் வார்த்தைகள் கொடுத்த அதிர்வை மதிக்கும் நிலையில் அவள் இல்லை.

வேகமாகப் போய் அந்த ‘கிட்’டை எடுத்து வந்தவள், அவன் அருகில் அமர, ‘பனியனுக்கு மேலே எப்படிப் போடவாம்...?’ நினைப்போடு, தலையைத் திருப்பாமல், விழிகளை மட்டும் உருட்டி அவனைப் பார்க்க, அவனோ, விழிகளை அழுத்தமாக மூடிக்கொண்டு படுத்திருந்தான்.

ஒரு பெரும் நிம்மதி பெருமூச்சு எழுந்தது. கூடவே, ஒரு பெருமூச்சும் எழ, “எப்படிப் போடறதாம்...?” தனக்குள்ளாகவே முனக, அது அவனது செவியை சரியாகத் தீண்டியது.

“நல்ல முதல் ராத்திரி..., என்னை தூங்க விடக் கூடாதுன்னு முடிவே பண்ணிட்ட போல...” கேட்டவன், தன் உடையை களைய..., ஒரு நொடி அவளுக்கு மூச்சடைத்தது.

வெட்டிவைத்த படிக்கட்டு தேகம்..., முயன்று தன் விழிகளை அவனது காயத்தில் பதிக்க, சற்று வாய் பிளந்து, காயத்தில் இருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பஞ்சை எடுத்து அதன்மேல் அழுத்த, அவளுக்கு மனம் வலித்த அளவுக்கு, அவனுக்கு வலிக்கவில்லை போல..., அவனிடம் அசைவே இருக்கவில்லை.

‘என்ன செய்த நினைத்த நீ..., என்ன செய்து கொண்டிருக்கிறாய்...’ உள்ளே ஒரு மனம் குரல் கொடுக்க, அதை அவள் கேட்கும் நிலையில் இருக்கவில்லை.

அவன் காயத்தில் டிஞ்சர் வைத்து மெது மெதுவாக அழுத்த, அவன் புருவம் சற்று சுருங்கியதே தவிர அவனிடம் வேறு மாற்றம் இருக்கவில்லை. ‘ஹப்பா..., இரும்பு மனுஷன்தான்...’ வியந்தாள்.

பின்னர் மருந்து போட்டு, அதன்மேல் ஒரு பிளாஸ்டர் ஒட்டி முடித்தவள், கிட்டை தூக்கி டிராயரில் வைத்துவிட்டு வந்தாள். அதன் பிறகு படுக்கையில் படுக்கவா? இல்லையென்றால் அங்கே இருந்த சோபாவில் படுக்கவா? என மனதுக்குள் பட்டிமன்றம் நடத்தியவள், அவனோடு படுத்தால், நிச்சயம் அவன் உறங்க மாட்டான் என்பது புரிய, சோபாவில் போய் படுத்துக் கொண்டாள்.

அவளுக்கு உறக்கம் சுத்தமாக வரவில்லை, அப்படியிருக்கையில் படுக்கையில் ஒரே நிலையில் படுக்க அவளால் முடியாது என்பதாலேயே அவ்வாறு செய்தாள். சற்று நேரமாகியும் அவள் படுக்கையில் படுக்கவில்லை என்பதை உணர்ந்தவன், விழி திறந்து பார்க்க, அந்த நேரம் சரியாக அவளும் அவனைத்தான் பார்த்தாள்.

அவள் விழிகளை பட்டென மூடிக் கொண்டு, அவனுக்கு முதுகு காட்டி படுக்க, “இப்போ நீயா இங்கே வந்து படுக்கலைன்னா..., நான் படுக்க வைக்க வேண்டி இருக்கும்...” அவன் சொல்ல, அவளிடம் அப்பொழுதும் அசைவிருக்கவில்லை.

“தொட்டா ஒட்டிக்கும்னு நினைக்கிறவ பிறகு ஏண்டி காயத்துக்கு மருந்து போட்ட? அவளும், அவளோட ஒரு பிளாஸ்டரும்...” சொன்னவன், காயத்தில் அவள் போட்ட பிளாஸ்டரை பிய்க்க முயல, அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை உணர்ந்தவள், வேகமாக சோபாவில் இருந்து இறங்கி நின்றாள்.

“அதான் உருண்டுகிட்டே வர்றேன்னு சொன்னீங்கல்ல..., எனக்கு தூக்கம் வர்ற வரைக்கும் அப்படித்தான் செய்வேன்..., அதான்...” சொல்லிக் கொண்டே வந்தவள், அவன் முகத்தில் அந்த இரவின் ஒளியில் தெரிந்த பிரகாசத்தில் வார்த்தைகளை நிறுத்தி விட்டாள்.

“வந்து படு...” உரைத்தவன், படுத்துக் கொண்டான்.

அவன் படுக்கவே, ‘இதுதான் சாக்குன்னு என்னை ஒட்டிக்க வேண்டாம்?’ அவள் சொல்ல நினைத்த வார்த்தைகள் தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டது. ஏற்கனவே ஒரு முறை சொன்னதற்கே அவனது செய்கை வேறாக முடிந்திருக்க, மீண்டும் ஒருமுறை அவளால் சொல்ல முடியுமா என்ன?

அவனோ..., “ட்ரெஸ் மாத்திக்க..., அப்படியே தூங்க முடியாது...” அவன் சொல்லவே, அப்பொழுதுதான் தன் உடை பற்றிய கவனம் பதியவே, அங்கே கொண்டுவந்து வைத்திருந்த தன் சூட்கேசில் இருந்து ஒரு நைட்டியை உருவினாள்.

‘ஹையோ..., தூக்கத்தில் எந்த கோலத்தில் இருப்பேன்னே தெரியலை, எதுக்கும் சுடிதாரே போட்டுப்போம்...’ முடிவெடுத்தவள், பாத்ரூமுக்குச் சென்று, சுடிதாரை அணிந்துவிட்டு வந்தாள்.

அமைதியாக வந்து படுத்துக் கொண்டவள், அந்த இரவில் நடந்த ஒவ்வொன்றும் கண்களுக்குள் உலா போக, அவனுக்கு முதுகு காட்டி படுத்து, விழி மூட முயன்றாள்.

அவ்வளவு நேரமாக மனதில் இருந்து விடைபெற்றுச் சென்றிருந்த குழப்பங்கள் அனைத்தும் ஓடி வந்து ஒட்டிக் கொண்டது. ‘தாலி கட்டிவிட்டான் என்ற ஒரே காரணத்துக்காக உன்னால் அவனோடு வாழ்ந்துவிட முடியுமா?

‘ஆயிரம் இருந்தாலும் அவன் உன் அண்ணனைக் கொன்றவன்..., அவனோடு மனம் ஒத்த வாழ்க்கை, தாம்பத்யம்.. அனைத்தும் சாத்தியமா? கணவனாக அவன் உன்னை நெருங்கினால் என்ன செய்வாய்?

‘இப்பொழுது அவன் செய்ததுபோல், உயிர் பயத்தை காட்டினால் அதற்கு வணங்கி அவனோடு வாழ்ந்து விடுவாயா? அப்படி வாழ்வது ஒரு வாழ்க்கையா? மனதை

தீண்டாமல், உடலால் தீண்டுவது ஒரு வாழ்வா? என்னால், என் மனதுக்குள் அவனுக்கு இடம் கொடுக்க முடியுமா?

‘இப்பொழுது இருப்பது ஜஸ்ட் ஒரு குற்ற உணர்ச்சிதான்..., இந்த குற்ற உணர்ச்சியோடு போராடுவதுதான் என் வாழ்வா...? இந்த குற்றவுணர்ச்சி போய்விட்டால்...? இவனை ஏன் திருமணம் செய்துகொண்டேன்...? உறுதியாக ஏன் மறுக்கவில்லை...?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டவளுக்கு விடைதான் கிடைக்கவில்லை.

எப்பொழுது உறங்கினாள்..., எப்படி உறங்கினாள் என எதுவும் தெரியாது. காலையில் ஜன்னல் வழியாக வந்த சூரிய கதிர்கள் முகத்தில் தாக்க, அப்பொழுதுதான் விழிப்பு வந்தது.

விழி திறந்தவள், பட்டென படுக்கையில் எழுந்து அமர்ந்தாள். நேரமோ..., காலை ஒன்பது என அறிவிக்க, ‘ஆண்டவா..., அண்ணி என்ன நினைத்தாங்களோ? இங்கே என்ன செய்யணுமோ தெரியலையே..., நான் பாட்டுக்கு தூங்கிட்டேன்...’ எண்ணியவள் பார்வையை சுழற்ற, பாத்ரூமில் தண்ணீரின் சலசலப்பு கேட்கவே, பிரம்மா குளிப்பதை உணர்ந்து கொண்டாள்.

தன் சூட்கேசில் இருந்து ப்ரெஷ், பேஸ்ட்டை எடுத்துக் கொண்டு, தங்கள் அறையில் பால்க்கனியில் வைக்கப்பட்டிருந்த சின்க் நோக்கி நகர்ந்தாள். வேகமாக பல் துலக்கி, முகம் கழுவியவள், ‘குளிக்காமல் கீழே போக முடியாதே...’ நகம் கடித்தவாறு, உள்ளே வந்து அமர்ந்தாள்.

சரியாக அதே நேரம்..., இடையில் கட்டிய டவ்வலோடு அறைக்குள் வந்தவன், அவளைப் பார்த்துவிட்டு ஒரு நொடி தேங்கினான். அவளோ, அவனைப் பார்த்தவுடன், சட்டென எழுந்த ஒரு வித பயத்தோடு சோபாவில் இருந்து எழுந்து நிற்க, அவனுக்கு மனதுக்கு கஷ்டமாகப் போயிற்று.

‘கணவன் மனைவிக்கு நடுவில் பயம் இருக்கலாமா?’ தன் ஈரத் தலையை இடக்கை விரல்களால் வேகமாக அளைந்தவாறு அவள் அருகில் வந்து நின்றான்.

அவளுக்குப் பின்னால் சோபா இருந்ததால் அவளால் பின்னால் நகர முடியவில்லை. அவள் கண்களில் இன்னும் பயம் மிச்சமிருக்க, தன்னை நெருங்கியவனது நெஞ்சில், இரவில் அவள் போட்ட பிளாஸ்டர் நனைந்திருப்பதைப் பார்த்தாள்.

தன் பார்வையை வேகமாக விலக்கிக் கொண்டவள், தலையைத் திருப்பி, சைடில் பார்த்தாள். “ஒரு விஷயம்..., உன் பெர்மிஷன் இல்லாமல் என் சுண்டுவிரல் கூட உன்மேல் படாது. தேவையில்லாமல் பயப்படாதே..., அதே மாதிரி..., இந்த ரூமுக்குள் உன் இஷ்டப்படி நீ இருக்கலாம்.

“மற்றவர்கள் முன்னாடி என் மரியாதை குறையாமல் அழைத்தால் போதும். ரொம்ப கஷ்டப்பட்டு அறைக்குள் அப்படி அழைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை..., நேத்து நான் அப்படி பிகேவ் பண்ணியிருக்க கூடாது. ஏதோ டென்ஷன்..., அதான்...” அவன் சொல்ல, மெதுவாக பார்வையை மட்டும் திருப்பி அவனைப் பார்த்தாள்.

அவன் முகபாவனையோ, இதற்குமுன் இப்படி ஒரு விளக்கம் கொடுத்து பேசியதே இல்லை, என்பதுபோல் இருந்தது.

அவளுக்கோ..., அவனை நிமிர்ந்து பார்க்கவும் முடியவில்லை. தன்னை தொட்டுவிடும் தூரத்தில் அவன் நிற்கவில்லை என்றாலும், ஒரு முழு ஆண்மகன், இடையில் கட்டிய ஒற்றை துணியோடு, அரை நிர்வாண கோலத்தில் நிற்கையில் அவள் எப்படி அவனை நிமிர்ந்து பார்ப்பதாம்?

அந்த அகன்ற தோளும்..., தினவெடுத்த புஜங்களும்..., உருக்கு கை ஆர்ம்ஸ்சும்..., சிக்ஸ்பேக் தேகமும்..., பார்வையை திருப்பினாலும், ஓர விழியில் பட்டு இம்சிக்கிறதே..., கல்லூரி ஹாஸ்டலில், ஹ்ரிதிக் ரோஷனின் சிக்ஸ்பேக் உடல்வாகை ரசித்தது நினைவிற்கு வந்து இமிசிக்க, ‘அவனை விட அழகா இருக்கானே...’ ரசிகை குமுறிக்கொண்டு வெளியே வர விதிர்த்துதான் போனாள்.

தன் பேச்சுக்கு அவளிடம் எதிர்வினை எதுவும் இல்லாமல் போக, அவள் முகத்தில் என்ன கண்டானோ..., கண்களில் ஒரு குறும்பு குடியேற, “காயு, ஒரு வேளை..., நீயா வந்து என்னை டச் பண்ணிட்டா என்ன பண்றதாம்?” ஒற்றை புருவம் உயர, மீசை நுனியை முறுக்கியவாறு அவன் கேட்க,

‘ஹையோ..., என் மூஞ்சி எதையாச்சும் காமிச்சு கொடுத்துடுச்சா?’ அவள் பயந்துபோய் அவனைப் பார்க்க, அவன் கண்களிலும், இதழ்களிலும் இருந்த குறும்பில், திருதிருத்தாள்.

“ஆமா..., இவர் பெரிய மன்மத கு..., அ..., மன்மதன்..., நினைப்புதான்...” வார்த்தைகளை சிதறத் தெரிந்தவள், இறுதி நிமிடம் சுதாரித்து, வார்த்தைகளை மாற்றி, வேகமாக அவனுக்கு முதுகு காட்டி திரும்பிக் கொண்டாள்.

ஒரு மாதிரி கடகடவென சிரித்தவன், “என்ன..., என்ன சொன்ன...? கேக்கலை...” அவளை சீண்டியவன், “கேட்டதுக்கு பதில் சொல்லு...” அதிலேயே நின்றான்.

பதில் சொல்லாமல் நிச்சயம் விட மாட்டான் என்பது புரிய, “அது நடக்கும்போது பாத்துக்கலாம்...” வீராப்பாக பதில் கொடுத்தாள்.

“தண்டனை என் இஷ்டம்தான் ஓகேயா...?” அவன் கேட்க, திடுக்கிட்டு அவன் பக்கம் திரும்பினாள்.

அவள் கண்களில் விரவிய அதிர்ச்சியைப் பார்த்தவன், “உன் அனுமதி இல்லாமல் உன் உடம்பை தீண்ட மாட்டேன்னு சொல்லிட்டேன்...” நான் சொன்னால் செய்வேன்..., என்ற உறுதி அதில் தொனிக்க, ‘சரி...’ என்பதுபோல் மையமாக தலை அசைத்தாள்.

அவன் விலகிச் செல்ல, அவர்களது அறைக்கதவு லேசாக தட்டும் ஓசை..., ‘யார் அது..., குரல் கொடுக்காமலே தட்றாங்க...?’ எண்ணியவள் அறைக்கதவை திறக்க, அவளைத் தடுக்க பிரம்மா முயலும் முன்பே, அறைக்கதவை திறந்திருந்தாள்.

அடுத்த நொடி உள்ளே பாய்ந்திருந்தது அந்த ஜெர்மஸ் ஷெப்பர்ட் போலீஸ் நாய்..., சரியாக அவள் உயரம்..., அவள்மேல் பாய முயல, அடுத்த நொடி..., "ஆ..., ஆ..., ஐயோ..., நாய்..." நாலுகால் பாய்ச்சலில் பிரம்மாவை நோக்கி பாய்ந்திருந்தாள் காயத்ரி.

நாய் எனச் சொன்னால் சும்மாவே டோனிக்கு பிடிக்காது. இதில், தன் எஜமானின் அறைக்குள், உரிமையாக இருப்பவள், தன்னை நாய் என அழைத்தால் சும்மா இருக்குமா...?

"பவ்..., பவ்..., பவ்..." காட்டு கூச்சலில் கத்த, அவளோ, பிரம்மாவை நெருங்கிய வேகத்தில், அவன் கழுத்தில் கரங்களைக் கோர்த்து கட்டிக் கொண்டவள், கால்களால் அவள் இடையை கட்டிக் கொண்டாள். அப்படியே ஒரு குரங்குக்குட்டி தன் தாயை கட்டிக் கொண்டு அமர்ந்திருக்குமே, அப்படி ஒரு நிலை.

"டேய் பீமா..., முதல்ல அந்த நாயை பிடி..." அவன் கழுத்தில் தன் முகத்தை அழுத்தமாக புதைத்துக் கொண்டாள்.

பிரம்மாவுக்கோ எது அதிர்ச்சி என தெரியாத நிலை. அவள் தன்னோடு இப்படி ஒட்டிக் கொண்டது ஒரு அதிர்வென்றால், அவள் அழைத்த அந்த 'பீமா...' பேரதிர்வை கொடுத்தது. அவனது எஸ்பி அலுவலகத்திலும் சரி, அவனுக்கு கீழே வேலை பார்ப்பவர்களும் சரி, 'சார்' என்பதைத் தவிர வேறு மாதிரி அழைத்ததில்லை.

உயரதிகாரிகள் மட்டுமே 'பிரம்மா' என்று அழைத்து இருக்கிறார்கள் இது, அந்த அழைப்பு..., அவனுக்கு ஒரு மாதிரி பரவசத்தை கொடுத்தது என்றே சொல்லலாம். சில நொடிகள் அவன் தன்னில் மூழ்கி இருக்க, அவளோ, "ச்சூ..., ச்சூ..., நாயே போ..." டோனியை விரட்ட முயல, அதுவோ மேலும் டென்ஷன் ஆனது.

டோனியோ அவள் மீண்டும் நாய் எனச் சொல்ல, அவன்மேல் பாய முயல, "ஆ..., ஆ..." அவன் செவிப்பறை

கிழியும் அளவுக்கு கத்த, டோனியோ அவளுக்கு மேலே கத்தியது.

இருவரையும் சம்மாளிக்க திண்டாடிப் போனான். “ஏய் சும்மா இருடி” அவளை அடக்க, பயத்தில் இருப்பவளுக்கு அவன் சொல்வது காதில் ஏறவில்லை.

“டோனி..., நோ..., கொயட்...” அவன் பேச்சையும் அந்த நேரம் அது கேட்க மறுத்தது.

ஏற்கனவே அவள் இப்படி வந்து தொற்றிக் கொள்வாள் என எதிர்பாராதவன், டோனியும் அவனைச் சுற்றி குலைத்தவாறே அவளை போலியாக கடிக்க முயல, அவளது அலறல், நாயின் ஜம்ப்..., என எல்லாம் சேர, அவனது இடையை தழுவியிருந்த டவ்வல் விடை பெற்றிருந்தது.

“அண்ணே..., என்னண்ணே..., டோனி என் சத்தம் போடுது...” படிகளில் கௌஷிகா வரும் ஓசை கேட்க, தான் நிற்கும் நிலையும், காயத்ரி தொற்றி இருப்பதும், ஒரு நிமிடத்தில் நிலைகுலைந்து போனான்.

டோனி உள்ளே வந்தபொழுது அறைக்கதவு வேறு முழுதாக திறந்து விட்டிருக்க, முதலில் அதை பூட்டுவது மட்டுமே முக்கியமாகப் பட, காயத்ரியை சுமந்தவாறே, டோனியை சம்மாளித்தவாறு, வேகமாகச் சென்று, பட்டென கதவை தாழ் போட்டான்.

“பீமா..., நாயை வெளியே அனுப்பாமல் ஏன் கதவை பூட்டுற...?” அவள் வெடிக்க,

“முட்டக்கண்ணி..., டோனியை பயம் காட்டாமல் இருடி. நீ பண்ணி வச்ச வேலையில் என் துண்டு வேற விழுந்து அரைமணி நேரமாகுது. முதல்ல நீ உன் திருவாயை மூடு...” தன் கழுத்தில் புதைந்திருந்தவளை பிடிவாதமாக விலக்கி, அவள் கன்னம் தாங்கியவன் அவள் இதழ்களுக்கு நெருக்கத்தில் நூலளவு இடைவெளியில் உரைக்க, அவன் நெருக்கம் ஏற்படுத்திய அதிர்ச்சியில் வார்த்தைகளை நிறுத்திக் கொண்டாள்.

அப்பொழுதுதான் அவன் சொன்ன விஷயங்கள் மூளையை எட்ட, வாய் பிளந்தவள் விழிகளை இறுக மூடிக் கொண்டாள். “என்னது பப்பி ஷேமா இருக்கியா...?” கேட்டவள், தான் உளறுவது புரிய, கண்களோடு சேர்த்து வாயையும் கப்பென மூடிக் கொண்டாள்.

அவள் செய்கையில் பொங்கிய சிரிப்பை வாய்க்குள் அடக்கியவன், “டோனி சிட்..., சிட்...” கண்டிக்கும் குரலில் உரைக்க,

“ம்..., ம்...” ஒரு மாதிரி குரல் கொடுத்தாலும், அவனுக்கு கட்டுப்பட்டு தரையில் அமர்ந்து கொண்டது.

டோனி குரல் கொடுப்பதை நிறுத்தி அமர்ந்துவிட்ட பிறகும், அவளால் கீழே இறங்க முடியவில்லை. “அண்ணே...” கௌஷிகாவின் குரல் அறைக்கு வெளியே கேட்க,

“கௌஷி..., இவ டோனியை பாத்து கொஞ்சம் பயந்துட்டாம்மா, வேற எதுவும் இல்லை..., நீ போ..., நாங்க வர்றோம்...” அவன் குரல் உயர்த்தி உரைக்க, மீண்டுமாக அவன் கழுத்தில் தன் முகத்தை அழுத்தமாக புதைத்துக் கொண்டாள்.

அவன் யூஸ் செய்த ஆப்டர் ஷேவிங் லோஷனின் மணம் நாசியை நிறைக்க, அவனது உரமேறிய நெஞ்சும்..., அதன் அழுத்தமும், இறுக்கமும் அப்பொழுதுதான் அவளைத் தீண்டியது. அவனுக்கோ..., அவளது மென்மையான ஸ்பரிசம்..., கொடியாக தன்னை பின்னிக் கொண்டிருக்கும் நிலை..., ஒரு ஆண்மகன் தூண்டப்படாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

“ஏய்..., நான் ட்ரெஸ் மாத்துறதா இல்லையா...?” அவள் காதுக்குள் கேட்க, அவளோ, முகத்தை இன்னும் அவனுக்குள் புதைத்தவள், அவனை விட்டு விலகமாட்டேன் என்பதுபோல், மறுப்பாக தலை அசைத்து, கையையும் காலையும் இறுக பின்னிக் கொண்டிருந்தாள்.

“இறங்கு காயு...” அவன் இதழ்கள், அவள் காதுமடலில் மெல்லியதாக தீண்டி, மூச்சுக்காற்று சூடாக பதிய, மூக்கால்

உரசியவன், கிசுகிசுப்பாய் உரைக்க, அவள் இதயத்துடிப்பு அதிகரிப்பதை அவனால் நன்கு உணர முடிந்தது.

“ஏய்..., பாவம் டோனி..., மிரண்டுபோய் பாக்குது...” நிலைமை தீவிரமாவதை தடுக்க, இலகு குரலில் அவன் உரைக்க, அப்பொழுதுதான், அவன் கழுத்தை கட்டிக்கொண்டு, அவன் இடையையும் காலால் வளைத்துக் கொண்டு, மொத்தமாக அவன்மேல் அப்பிக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது.

“சாரி...” அவனிடம் உரைத்தாலும், அவனை விட்டு எப்படி இறங்குவது எனத் தெரியாத தடுமாற்றம்..., அவனோ..., ‘இது வேலைக்கு ஆகாது...’ என எண்ணியவன், தன் இடையை சுற்றியிருந்த அவள் கால்களை விலக்கி விட, அடுத்த நொடி, தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு, அவன் இறக்கி விட்ட இடத்தில் அப்படியே நின்றாள்.

அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில், “ஏய்..., நான் உனக்கு பீமனா?” அவன் கேட்க, அப்பொழுதுதான் முகத்தில் இருந்து தன் கரத்தை எடுத்தவள், அனிச்சையாக அவள் பார்வை அவன் இடைக்குச் செல்ல, அவன் டவ்வலோடு நின்றதை பார்த்த பிறகே நிம்மதியானாள்.

அதன் பிறகே அவன் கேள்வி மூளையைத் தீண்ட..., ‘ஆண்டவா..., இத்தனை நாள் மனசுக்குள்ளேயே நினைச்சுப்பேன்..., இன்னைக்கு உளறிட்டேன் போலையே...’ எண்ணியவள், நாவை பற்களால் கடித்துக் கொண்டாள். கூடவே, ஒரு அசடு வழியும் சிரிப்பும்..., சிக்கிக் கொண்டோமே என்ற முக பாவனையும்..

“இல்ல..., சும்மா..., தெரியாமல்...” அவள் திணற,

“எங்கே..., என் கண்ணைப் பார்த்து இன்னொரு முறை சொல் பார்ப்போம்...” அவன் சவால் விட, இதயம் அதிர அவனைப் பார்த்தாள். மரியாதை குறைவாகவே அவனை அழைக்கக் கூடாது எனச் சொன்னவன், இதை எப்படி எடுத்துக் கொள்வானோ? என்ன செய்வானோ? சிறு பயம் மனதைக் கவ்வ, அவனை ஏறிட்டாள்.

அவன் கண்களைப் பார்த்தவள் குழம்பிப் போனாள். அதில் கொஞ்சம் கூட கோபமில்லை. மாறாக, தன் செய்கையை ரசிக்கும் ஒரு மனோ முகபாவம், ‘டேய் பீமா..., உனக்கு இந்த பேர் புடிச்சிருக்கா?’ அவளால் நம்ப முடியவில்லை.

“ம்..., சொல்லு...” அழுத்திக் கேட்டவன் தன் இடக்கை விரலால், தன் இடக்கண் புருவத்தை அழுத்தமாக வருடினான். அதென்னவோ அடிக்கடி அவன் செய்யும் இந்த மேனரிசம் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். தன்னை மீறி அவனை பார்த்தவள், அவன் ஒற்றை புருவத்தை உயர்த்த, “பீமா...” மந்திரத்துக்கு கட்டுப்பட்டவளாக உரைத்திருந்தாள்.

“அவ்வளவு பெரிய உருவமாகவா இருக்கேன்?” கேட்டவன், தன் பாடி பில்டிங் ஆக்ட்களில் ஒன்று இரண்டை அவள் முன்னால் செய்து காட்ட, ‘ஐ’பட விக்ரம்போல் சட்டென உருமாறிய அவன் தேகத்தை கொஞ்சம் கூட லட்ஜையே இல்லாமல் வெறித்தாள்.

அவள் வாயோ..., “ஹப்பா..., பீமா..., போதும்...” அவ்வளவு நெருக்கத்தில் அவன் செய்கை, அவளுக்கு நிச்சயம் மூச்சடைத்தது. அவள் மனமோ, ‘இது மொத்தமும் எனக்கே எனக்கா?’ அதன் போக்கில் சிந்திக்க திடுக்கிட்டாள்.

அவன் அதிகமாக அசைந்திருக்க, இரவில் அவள் போட்ட பிளாஸ்டர் ஈரத்தில் நனைந்திருந்த காரணத்தால், தானாகவே கழன்று விழுந்தது. கூடவே அதிகப்படியான அவனது அசைவு, காயத்தில் சிறு ரத்தம், நீரை வடிய வைக்க, “ம்ச்..., காயத்தில் ரத்தம் வருது..., முதல்ல இந்த வித்தையை நிறுத்துங்க” உரைத்தவள், முதலுதவி பெட்டியை எடுத்து வர முயன்றாள்.

சட்டென அவளுக்கு குறுக்காக கை நீட்டி தடுத்தவன், “என்னது வித்தையா? உனக்கு ரொம்ப தைரியம்தான்...” அவளை இடிப்பதுபோல் நெருங்கி நிற்க, தன் பார்வையை அவன்மேல் இருந்து திருப்பவே மிகுந்த சிரமப்பட்டாள்.

அவள் அப்படி சொன்னதன் காரணமே, எங்கே மீண்டுமாக ஓடிபோய் அவன்மேல் தொற்றிக் கொள்வோமோ என்ற

பயத்தால்தான். அங்கிருந்து அகல முயன்றதன் காரணமும் அதுவே. அப்படி இருக்கையில் இதற்கு என்ன பதில் சொல்வதாம்?

இப்பொழுது அவனிடம் கொஞ்சம் கூட பயம் இருக்கவில்லை. தான் வாயாடினாலும், உடல் அளவில் தன்னை நெருங்கவோ, இதுதான் சாக்கென ஒட்டிக் கொள்ளவோ மாட்டான் என்ற நம்பிக்கை.

தன் பார்வை அவன்மேல் ஆர்வமாக பதிந்த அளவுக்கு, அவன் பார்வை ஒரு சதவீதம் கூட அவள் மேனியில் இந்த நிமிடம் வரைக்கும் இடம் மாறவில்லை. அவன் கண்களில், ஒரு பெண்ணோடு தனித்திருக்கிறோம் என்ற எண்ணமோ, அந்த சூழலை பயன்படுத்தும் ஆசையோ இருக்கவில்லை.

இத்தனைக்கும் அந்த அறைக்குள் அவளை அவன் என்ன செய்யவும் முழு உரிமை உண்டு. அப்படி இருக்கையில் கூட, தன் வார்த்தைக்கும், உணர்வுக்கும் மதிப்பளித்து, கைகளை கட்டிக்கொண்டு, தன்னை விரலால் கூட தீண்டாமல் விலகி நிற்கும் விதம், அவன்மேல் அவள் மனம் சாயத் துவங்கி விட்டதோ?

அவன் கரத்தை தாண்டிச் சென்றவள், “முதல்ல காயத்தை காட்டுங்க” சொன்னவள் மீண்டுமாக காயத்துக்கு மருந்திட்டு, பிளாஸ்டர் போட்டு விடத் துவங்கினாள்.

“பொண்டாட்டிங்க முதலிரவில் கணவனுக்கு காதல் காயம் கொடுப்பாங்களாம். பரவாயில்லை எனக்கும் கிடைச்சிருக்கு” அவன் சொல்ல, விதிர்த்துபோல் அவனை விட்டு விலகி நின்றாள். அவள் முகம் மெல்லமாக வெளிற, ‘ச்சே..., இதை இப்போ சொல்லியிருக்கவே வேண்டாம்’ எண்ணினான்.

“ஹோய்..., நீயா என்னைத் தொட்டால் தண்டனை கொடுப்பேன்னு சொல்லியிருக்கேன். நீ என்னன்னா..., குரங்கு குட்டி மாதிரி என்மேல் தொத்திகிட்டு, என் மானத்தையே வாங்கப் பாத்தல்ல, இதுக்கு என்ன

தண்டனை கொடுக்கலாம்?” அந்த நேரத்தின் கனத்தை குறைக்க முயன்றான்.

அது சரியாக வேலை செய்தது. “எ..ன்..ன…?” அவள் திணற,

“இதுக்கு தண்டனை கொடுத்தே ஆகணும்…” மீண்டும் உரைத்தவன், அவள் ‘என்ன’ என்று பார்க்கும் பொழுதே…, சுவிங்க டப்பாவை எடுத்து, சில சுவிங்கங்களை உள்ளங்கையில் தட்டி, வாயில் போட்டுக் கொள்ள, அவன் செய்கையை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘அவன் சுவிங்கம் சாப்பிடுவதில் என்ன தண்டனை…?’ அவள் யோசித்து முடிக்கும் முன்னர், அவள் கன்னத்தில் கை வைத்து, நொடியில் அவளை தன் பக்கம் இழுத்தவன், அடுத்த நிமிடம், தன் இதழ்களை அவள் இதழ்களில் பதித்து மீட்டான்.

“பீமா…” அவள் உரைத்தபொழுது, அவள் இதழ்களுக்குள் இடறியது சுவிங்கம்.

*****

# பகுதி – 22.

ஒரு நொடிக்குள் நடந்து முடிந்துவிட்ட செய்கை..., கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அவன் இதழ் தீண்டி விலகியிருக்க, "பீமா..." அதிர்ச்சியாக கத்தியவளின் வாய்க்குள் இடறியது சுவிங்கம்.

அவ்வளவுதான்..., ஒரே பாய்ச்சலில் டாய்லெட்டுக்குள் போய் அதை துப்பிவிட்டு ப்ளஷ் செய்தவள்..., வேகமாக வாயை கொப்பளித்தாள். 'என்ன வேலை பண்ணிட்டான்...' ஒரு பக்கம் கோபம் கிளர்ந்தாலும், அவன் இதழ் தீண்டிய வெம்மை..., நொடிக்குள் மேனியில் பரவிய ஒரு உணர்வு..., நிலைகொள்ளாமல் தவித்தாள்.

முயன்று தன்னை மீட்டவள், கோபமாக வெளியே வந்து அவன் முன்னால் நின்றாள். அவளை வெகு சாதாரணமாக ஏறிட்டவன், "காயு, குளிக்கலை?" வெகு சாதாரணமாக கேட்டவன், "முதல்ல போய் குளிச்சுட்டு வா, கீழே எல்லாரும் வெயிட் பண்ணிட்டு இருப்பாங்க..., சீக்கிரம்..." கூலாக உரைத்தவன், யூனிபாம் சட்டையை அணிந்து கொண்டான்.

"என்ன இது...? என்னவோ என் பெர்மிஷன் இல்லாமல் என்னை..., என்னை..." அவன் பார்வையில் ஏறிய சுவாரசியத்தில் அவளது வார்த்தைகள் தந்தியடிக்க, வார்த்தைகளை நிறுத்திக் கொண்டாள்.

"அது மட்டுமா சொன்னேன்...? நீயா வந்து டச் பண்ணா, தண்டனை என் இஷ்டம்னு சொன்னேனா இல்லையா...? அதுதான் இது..." அவள் முகத்தை நோக்கி குனிய, வேகமாக பின்னால் நகர்ந்தாள்.

"அதுக்கு..., சுவிங்கத்தை..., சீ..., எச்சி..., உவக்..." அவள் இதழ்களை புறங்கையால் வேகவேகமாக துடைத்துக் கொள்ள, சுவாரசியம் குறையாமல் அவளைப் பார்த்தான்.

"புருஷன் எச்சில் அமிர்தம் தெரியுமா...?" அவன் விளக்கத்தில் அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

"எனக்குப் பிடிக்கலை..." பட்டென உரைக்க,

“ஓ..., அப்போ திருப்பிக் கொடுத்துடு..., எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை” அவன் தோளைக் குலுக்க..., ஒரு ‘பே’ என்ற லுக்கில் நின்று கொண்டிருந்தாள்.

அவளது பாவனையில் அவனுக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வர, இப்பொழுது சிரித்தால் அதற்கும் டென்ஷன் ஆவாள் என்பதால், முகத்தை சீரியசாகவே வைத்திருந்தான்.

“உன்கிட்டே மனுஷி பேசுவாளா...?” அவள் திரும்பி நடக்க, ஒரு இயலாமை கலந்த கோபம் அவளிடம்.

அதைப் பார்த்தவன், “காயு..., எனக்கு பனிஷ்மென்ட் கொடுக்க வேண்டாம்?” குரலில் அப்படி ஒரு சீண்டல். அதை உணர்ந்தவளுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வர,

“எனக்கு கராத்தே தெரியும்..., இனிமேல் என்கிட்டே வச்சுக்காதீங்க..., பிறகு நான் என்ன செய்வேன்னே தெரியாது...” வீராப்பாக உரைத்தாள்.

“ஹையோ..., என்கிட்டே சொல்லவே இல்ல..., இப்படி பண்ணலாம்..., நாம ஒத்தைக்கு ஒத்தை பைட் பண்ணலாம்..., வின் பண்றவங்க, பெயில் ஆகுறவங்களுக்கு பனிஷ்மென்ட் கொடுக்கலாம்..., எப்படி என் ஐடியா?” அவன் கேட்க, அவனை சந்தேகமாகப் பார்த்தாள்.

கூடவே புத்திக்குள் ஒரு கவனம் ஏற, “உனக்கு கராத்தே தெரியுமா?” அலாட் மோடுக்குப் போயிருந்தாள்.

“நான் பாடி பில்டர்ம்மா..., எனக்கு கராத்தே எல்லாம் தெரியாது...” தன் ஆர்ம்ஸை முறுக்கிக் காட்டியவாறு அவன் சொல்ல, சந்தேகமாகவே அவனைப் பார்த்தாள்.

உண்மையிலேயே அவனுக்கு கராத்தே தெரியுமா இல்லையா என்பது அவனுக்குத் தெரியாதே. நேற்று இரவுக்குப் பிறகு, தனக்கு எல்லாம் மறந்து போனது என்ற நினைவே அவனுக்கு இருக்கவில்லை. தங்களுக்கான

தனிமையில், அவள் உடன் இருக்கையில் தன் மூளை வேறு எதையுமே சிந்திக்காததை உணர்ந்து கொண்டான்.

“என்னை நம்பலாம்...” அவன் அழுத்தி உரைக்க, அவனது தேக்குமர தேகத்தை அளவிட்டது அவளது பார்வை.

‘ஹையோ..., இவன் ஒரு அறை விட்டாலே நான் தாங்க மாட்டேனே..., இதில் இவனோட கராத்தே...’ வேகமாக தலையை உதறிக் கொள்ள, “உன் கராத்தே பலம் அவ்வளவு தானா...?” கேலி செய்தான்.

அதில் சிலிர்த்தவள், “நான் ரெடி..., எப்போ வச்சுக்கலாம்...” அவள் நெஞ்சை நிமிர்த்தி கேட்க, “எப்போ வேண்ணா...” சொன்னவனது பார்வை வெகு சுவாரசியமாக அவள் மேல் பதிய, தன் சுடிதாரின் துப்பட்டா எங்கே என வேகமாக பார்வையை சுழற்றினாள்.

“போய் குளிச்சுட்டு வா...” அவன் திரும்பிக்கொள்ள, ஒரு குழப்பமான மனநிலையிலேயே பாத்ரூமுக்கு நகர்ந்தாள். அடுத்த ஐந்து நிமிடத்தில் வெளியே வந்தவள், உள்ளேயே சுடிதார் டாப்பை அணிந்து வந்தவள், பேண்ட்டை எப்படி அவன் முன்னால் போடுவது என தடுமாறினாள்.

அதைப் பார்த்தவன்..., “ஒவ்வொரு முறையும் நீ அந்த பாத்ரூமுக்குள் புகுந்துக்கறது ரொம்ப கஷ்டம்..., வேண்ணா அந்த பாலக்கனி பக்கம் போய் மாத்தேன்...” அவன் சிரிக்காமல் சொல்ல, உக்கிரகாளியாக அவனை முறைத்தாள்.

“தெரியுதுல்ல..., ஒரு சுடிதார் பேண்ட் போடுற கேப்பில் உன்னை வந்து ரேப் பண்ற ஐடியா எல்லாம் எதுவும் இல்லை. அதே மாதிரி ஒளிஞ்சு மறைந்து பாக்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை..., புரியுதா?” அந்த புரியுதாவில் இருந்த அழுத்தம்..., அவன் கப்போர்டுக்குள் எதையோ தேடத் துவங்க, தன் பேண்டை வேகமாக அணிந்து கொண்டாள்.

தலையை ஒரு சிறு கிளிப்பில் அடக்கியவள், அவனைப் பார்க்க, “வா...” அழைத்தவன் அறைக்கு வெளியே

நடந்தான்.

“டோனி…” அவன் குரல் கொடுக்க, அது வேகமாக முன்னே நடக்க, “ஆண்டவா, அது இவ்வளவு நேரமா இங்கேயா இருந்தது…?” அவளுக்கு ஒரு மாதிரி எரிச்சலாக, கோபமாக வந்தது.

“இந்த நா…” ‘நாய்’ என அவள் உரைக்கும் முன்னர் அவள் வாயை மூடியவன், “அதுக்கு என் அளவுக்கு அறிவோ ரசனையோ கிடையாது” உன் பயத்துக்கும், கோபத்துக்கும் அவசியமே இல்லை என மறைமுகமாக உரைத்தவன், படிகளில் இறங்கத் துவங்கினான்.

அவன் சென்ற பிறகும், நின்ற இடத்திலேயே சில நொடிகள் நின்றுவிட்டாள். ‘அப்படின்னா…? என்னை அவர் ரசித்தேன்னு சொல்றாரா?’ குழம்பிப் போனாள். சட்டென தெளிந்தவள், அவன் பின்னால் படிகளில் இறங்கினாள்.

அவர்கள் படிகளில் இறங்கும்பொழுதே குழந்தையின் அழுகை அவர்களைத் தீண்ட, அவள், அவன் முகத்தைப் பார்க்க, அதில் திடுமென ஒருவித இறுக்கம் படர்ந்திருந்தது. காயத்ரி, கௌஷிகாவின் கையில் இருந்த குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

சாப்பாட்டு மேஜையை நெருங்க, “அண்ணே…, என்ன இது…, யூனிபாமில்…, இன்னைக்கு ஸ்டேஷன் போறீங்களா?” அதிர்ச்சியாக கேட்டாள் கௌஷிகா.

‘புதுசா கேக்கற…’ என்னும் பார்வையை அவள் பக்கம் திருப்பியவன், “இம்பார்டெண்ட் கேஸ் போயிட்டு இருக்கு…, இப்போதைக்கு லீவ் எடுக்க முடியாது” அவ்வளவுதான் உரைத்தான்.

கௌஷி, முகேஷைப் பார்க்க, ‘நான் எதுவும் செய்வதற்கு இல்லை…’ என்பதுபோல் தோளைக் குலுக்கினான்.

“அண்ணி…, நீங்களாவது சொல்லக் கூடாதா…?” அவள் காயத்ரியை துணைக்கு அழைக்க,

‘நான் என்ன செய்ய…?’ என்பதுபோல் திருதிருத்தாள்.

அவள் முழியைப் பார்த்த கௌஷி, ‘இவங்க லவ் பண்ணிதானே கல்யாணம் பண்ணிகிட்டாங்க…?’ முதல் முறையாக அவள் மனதில் கேள்வி பிறந்தது.

இரண்டு மாதத்துக்கு முன்னாடி வரைக்கும் அவளது அண்ணன் திருமணம் என்ற ஒன்றை செய்து கொள்வானா? மாட்டானா? என தவித்துக் கொண்டிருந்தவள். திருமணம் என்றாலே அவனது பார்வையும், பேச்சும் நறுக்கு தெறித்தாற்போல் இருக்கும்.

அப்படிப் பட்டவன், ஒரு மாதத்துக்கு முன்னால் ஒரு பெண்ணைப் பற்றி பேசியபொழுது, முதலில் அவளைத் தாக்கியது சுனாமி அதிர்ச்சிதான். ஆனால், மனதுக்குப் பிடித்த பெண்ணை பார்த்த பிறகு மனம் மாறிவிட்டதாகவே அவள் எண்ணினாள்.

ஆனால் இப்பொழுது…, அவன் உடனே வேலைக்குச் செல்வதும், தன் கேள்விக்கு காயத்ரியின் அதிர்ச்சியும்…, அவளால் அதை சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

அவன் சாப்பிட அமரவே…, “கௌஷி, முதல்ல சாப்பாட்டை போடு, மீதியை பிறகு பேசலாம்…” முகேஷ் உரைக்க, அவனுக்கு தட்டை எடுத்து வைத்தாள்.

“அண்ணி…, நீங்களும் உக்காருங்க…, என்னங்க…, குழந்தையை அண்ணிகிட்டே இருந்து வாங்கிக்கோங்க” அவள் சொல்லவே, குழந்தையை வாங்கிக் கொண்டான்.

“உக்காரு முகேஷ்…” பிரம்மா அழைக்க, “நாங்க சாப்ட்டோம்…, நீ சாப்பிடு” உரைத்தவன் அவனுக்கு எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

“பிரம்மா…, நான் இன்னைக்கே கிளம்பலாம்னு இருக்கேன். கௌஷி வேண்ணா ரெண்டு நாள் இருந்துட்டு வரட்டும்…” முகேஷ் சொல்ல, பிரம்மாவின் பார்வை கௌஷிகாவிடம் தாவியது.

‘நீ என்னம்மா சொல்ற…?’ பார்வை அவளிடம் கேட்க,

“அண்ணே..., நான் இல்லன்னா அவங்களுக்கு சாப்பாட்டுக்கு எல்லாம் ரொம்ப கஷ்டம், நானும் இன்னைக்கே கிளம்பறேன்...” வேகமாக உரைத்தாள்.

“கௌஷி..., என்ன இது...? நான் சம்மாளிச்சுப்பேன்...” அவன் சொல்ல, அவளோ மறுப்பாக தலை அசைத்தாள்.

காயத்ரிக்கோ என்ன சொல்வது என்றே தெரியாத தடுமாற்றம். ஆனாலும், அந்த வீட்டின் பெண்ணாக அவள் பேசியே ஆக வேண்டும் என்பது புரிய, “அண்ணி..., ஒரு வாரமாவது இருந்துட்டு போங்க..., இங்கே எல்லாம்..., எனக்கு எப்படின்னு தெரியாதே..., பிளீஸ்...” தயக்கமாக துவங்கினாலும், உரிமையாகவே சொல்லியிருந்தாள்.

“ஆமா கௌஷி..., நானும் அதையேதான் சொல்றேன்...” முகேஷும் சேர்ந்துகொள்ள, அவளுக்கோ மனமே இல்லை.

“இல்லங்க..., குழந்தைக்கும் இடம் மாறினது ஒத்துக்கவே இல்லை, அழுதுட்டே இருக்கான்..., நைட் முழுக்க தூங்கவே இல்லை. இன்னும் இருந்தால் அவனுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துட்டால் கஷ்டமா போய்டும்” அவள் உரைக்க, யாருக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“கௌஷி, நீ கிளம்பு...” பிரம்மா முடித்துவிட, “என்னங்க...” காயத்ரிதான் மறுப்பாக குரல் கொடுத்தாள்.

“அதான் அவ இவ்வளவு சொல்றால்ல..., கிளம்பட்டும்...” அவன் உரைத்த பிறகு அவள் எப்படி மறுப்பதாம்? பிரம்மா பாதி சாப்பாட்டில் எழுந்துவிட, குழந்தையை கௌஷிகாவின் கையில் கொடுத்துவிட்டு அவன் பின்னால் ஓடினான் முகேஷ்.

வாசலில் இறங்கிய அவனை, “பிரம்மா...” அழைத்து தேக்க, “முகேஷ்..., நிஜமாவே இந்த சிச்சுவேஷனை எப்படி ஹேண்டில் பண்றதுன்னு எனக்குத் தெரியலை. சாரி...” அவன் சொல்ல, அவன் தோளை அழுத்தினான்.

“உண்மையை சொல்லவா..., நீ எப்பவுமே இப்படித்தான் சொல்லியிருப்ப, அது அவளுக்கும் தெரியும், அதான் அவ

பீல் பண்ணல..., நீ பீல் பண்ணுவியேன்னுதான் நான் எழுந்து வந்தேன். ஏன்னா..., நீதான் இப்போ புதுசா இருக்க...” அவன் சொல்ல, பற்களை இறுக்கமாக கடித்தவாறு அசையாமல் அவனைப் பார்த்தான்.

“உள்ளே வா...” அவன் அழைக்க, மறுத்துவிட்டு செல்லும் தைரியம் அவனுக்கு இல்லை. அவர்கள் உள்ளே வர, “சாரி அண்ணி..., அவங்க இப்படி பேசுவாங்கன்னு நான் எதிர்பாக்கலை...” இதை சொல்லிக் கொண்டிருந்தவள், சாட்சாத் நம் காயத்ரியேதான்.

“ஹையோ அண்ணி..., என் அண்ணா பத்தி எனக்கு நல்லாவே தெரியும். நீங்கதான்..., கொஞ்சம் பொறுமையா இருங்க அண்ணி..., எனக்கு என் அண்ணாவோட வாழ்க்கை சந்தோஷமா இருக்கணும்..., ரொம்ப செல்பிஷ்ஷா யோசிக்கறேன்னு தெரியும், ஆனாலும் எனக்கு வேற வழி இல்லை...” அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

‘என்னடா இது..., இப்படி பயம் காட்டுகிறாளே...’ என்றுதான் இருந்தது. ஏற்கனவே குழப்பம், கோபத்தில் இருப்பவளிடம் இப்படிச் சொன்னால் அவளும் என்னதான் செய்வாள்?

ஆனால் அதென்னவோ பிரம்மாவைப் பார்த்தால் அவளுக்கு அப்படியொன்றும் பயமாகவெல்லாம் இல்லை. அவளிடம் நேற்று கோபம் காட்டியிருந்தாலும், தங்களது தனிமையில் அவன் பிடிவாதமாக எதையும் சாதித்துக் கொள்ளாததால் எழுந்த நம்பிக்கையோ என்று அவளுக்குப் புரியவில்லை.

“அண்ணி, நீங்க என்னைக்கு காலேஜ் போறீங்க? நீங்களும் இன்னைக்கே போறீங்களா?” அடுத்த விசாரணைக்கு அவள் தாவ, நிச்சயம் திருதிருத்தாள்.

காயத்ரிக்கு கல்லூரி பற்றிய நினைவே அவள் சொல்லும் வரைக்கும் இல்லை என்றே சொல்லலாம். அவளது பாட புத்தகங்கள், இன்னும் சில பொருட்கள் அனைத்தும் அவளது கல்லூரி அறையில்தான் இருந்தது. ஆனாலும்,

இன்றைக்கே கல்லூரிக்குச் சென்றால், தோழிகள் கேட்கும் கேள்விக்கு தன்னால் பதில் சொல்ல முடியும் என்றே தோன்றவில்லை.

அதிலும், இந்திரா தன்னை ஒரு வழி செய்து விடுவாள். ஏற்கனவே அவள் கொடுத்த அறிவுரைகள் ஏராளம். அப்படி இருக்கையில், தேவையில்லாமல் அவளையும் கவலை கொள்ள வைக்க காயத்ரி தயாராக இருக்கவில்லை.

“நான்..., நெக்ஸ்ட் வீக் போகலாம்னு இருக்கேன்..., ஹாஸ்டல் போய் என்னோட திங்க்ஸ் எல்லாம் ஹாஸ்டல் ரூம்ல இருக்கு, அதை மட்டும் எடுத்துட்டு வரணும்...” அவள் சொல்ல, நிம்மதி பெருமூச்சு விட்டாள் கௌஷிகா.

உள்ளே வந்த ஆண்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். “கௌஷி..., நான் கிளம்பறேன்..., மதியம் லஞ்ச்க்கு முடிந்தால் வர்றேன்...” தன் ஜீப் கீயை அதன் இடத்தில் இருந்து எடுத்துக் கொண்டான்.

“அதென்ன முடிந்தால்..., கண்டிப்பா வரீங்க...” அவள் சொல்ல,

மனைவியை ஒரு பார்வை பார்த்தவன், ஒற்றை தலையசைப்பை கொடுக்க, அவள் மனம் ஏன் நிரம்பித் ததும்புகிறது என அவளுக்குப் புரியவே இல்லை. நியாயப்படி பார்த்தால் அவன்மேல் கோபம்தான் வர வேண்டும், ஆனால் இது...?

அவள் குழப்பத்தை கலைத்தாள் கௌஷிகா. “அண்ணி..., உங்களுக்கு சமைக்கத் தெரியுமா?” அவள் கேட்க, தன் பேய்முழியை தலை குனிந்து மறைத்துக் கொண்டவள், ஒரு மாதிரியாக தலை அசைத்தாள்.

“கௌஷி..., அவங்களை ரொம்ப இன்டர்வியூ பண்ணாதே, அவங்களை பிரீயா விடு..., குழந்தையை கொடு, அவன் தூங்கிட்டான் நான் படுக்க வைக்கறேன்...” குழந்தையை அவள் கைகளில் இருந்து வாங்கிக் கொண்டவன் அறைக்குச் சென்றான்.

பெண்கள் தனித்து விடப்பட, “அண்ணி..., மதியம் வத்தக்குழம்பு பண்ணிடவா..., வெள்ளரிக்கா கூட்டு பண்றேன்..., நாளையில் இருந்து எப்படியும் உங்க சமையல் தானே...” உரைத்தவள் கிச்சனுக்குச் செல்ல, சாப்பாட்டு மேஜைமேல் இருந்த அனைத்தையும் ஒதுங்க வைத்தவள், சிங்கில் இருந்த பாத்திரங்களை கழுவத் துவங்கினாள்.

இப்போதைக்கு கிச்சனில் அவளுக்குத் தெரிந்த ஒரே வேலை அதுதானே. நாளைமுதல் சமையலைப் பற்றி நினைத்தாலே மலைப்பாக இருந்தது. பதினொன்றாம் வகுப்புமுதல் ஹாஸ்டல் வாசம்..., பிறகு எங்கே சமையல் கற்றுக்கொள்ள?

“அண்ணி..., உங்க அம்மா..., அப்பா..., சாரி உங்களுக்கு கஷ்டமா இருக்குமோன்னு முன்னாடி அதைப் பற்றி கேக்கவே இல்லை...” அவள் பேச்சில் மலையளவு தயக்கம் இருக்கவே செய்தது.

“அவங்க ரெண்டுபேரும் சூசைட் பண்ணிட்டு செத்துப் போய்ட்டாங்க..., பிறகு எனக்குன்னு இருந்தது எல்லாம் என் அண்ணா மட்டும்தான். நாலு ஏழு மாசத்துக்கு முன்னாடி அவனும்...” அவள் அழுகையில் குலுங்க, இப்பொழுது ஏன் அதைக் கேட்டோம் என தவித்துப் போனாள்.

“அழாதீங்க அண்ணி..., அதான் இப்போ உங்களுக்கு நாங்க இருக்கோமே, எங்க அண்ணா உங்களை நல்லா பாத்துப்பாங்க...” அவள் ஆறுதல் சொல்ல, தன் அண்ணனின் நினைவை விட, அவனை பிரம்மா அநியாயமாக கொன்றுவிட்டானே என்பது அதிகம் தாக்கியது.

தன் அண்ணாவை கொன்றவனின் வீட்டிலேயே நான் இப்பொழுது இருக்கிறேன்..., அந்த நினைவே அவள் நெஞ்சை அறுத்தது. ‘எப்படி என்னால் இதைச் செய்ய முடிந்தது...? ஒவ்வொரு நிமிடமும் துன்பமாக இருக்கிறதே...’ அந்த நினைவே கொடுமையாக இருந்தது.

பிரம்மா அருகில் இருக்கும்பொழுது சற்று விலகியிருக்கும் அந்த நினைவு, அவன் விலகும் நேரம் துளைப்பதை என்ன செய்ய? ஏதேதோ பேசியவாறு அவர்கள் இருவரும் சமையலை முடிக்க, வத்தக்குழம்பு, ரசம், கூட்டு, பாயாசம் என ஒரு விருந்தே சமைத்தாள் கௌஷிகா.

அவை அனைத்தையும் சுவை பார்த்தவளுக்கு, அவ்வளவு அருமையாக இருந்தது. “ரொம்ப டேஸ்டா சமையல் பண்ணியிருக்கீங்க” அவள் சொல்ல, “சமையல் செய்ய ஜஸ்ட் இண்டரெஸ்ட் இருந்தால் போதும், அதெல்லாம் பிரம்மாதமே இல்லை. நான் குளிச்சுட்டு, வர்றேன்..., பையன் எழுந்தால் எதுவும் செய்ய முடியாது...” அவள் சென்றுவிட, மீண்டும் காயத்ரியின் உள்ளம் சாத்தானின் கூடானது.

அறையில் தனிமையில் மூச்சடைக்கும் உணர்வு..., பிரம்மாவின்மேல் கோபம் பெருமளவு வளர்ந்திருந்தது. படுத்தால் எப்பொழுது எழுவோம் என அவளுக்கே தெரியாத காரணத்தால், அப்படியே அமர்ந்து கொண்டாள்.

நேரம் இரண்டு முப்பதைக் கடந்த நேரம் பிரம்மா வர, அவன் முகம் பார்க்கவும் மறுத்தாள். ஒரு நொடி புருவம் சுருக்கியவன், “என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்க? காலையில் நல்லாதானே இருந்த? ஒரு வேளை நான் பக்கத்தில் இல்லன்னு...” அவன் வார்த்தைகளை முடிக்கும் முன்பே,

“எனக்கு இங்கே இருக்க பிடிக்கலை...” வெடித்திருந்தாள்.

அவ்வளவு நேரமாக அவன் முகத்தில் இருந்த இளக்கம் மறைந்து போக, “காலையில் வரைக்கும் எந்த பிரச்சனையும் இல்லை, இப்போ மட்டும் என்ன? எனக்கு தெரிஞ்சாகணும்” தன் கையை பேண்ட் பாக்கெட்டில் நுழைத்துக் கொண்டவன், அழுத்தமாக கேட்டான்.

“ஏனா..., என் அண்ணனை கொன்னவன் வீட்டிலேயே இருக்கேன்னு நினைக்கும்போது, எப்படி நிம்மதியா இருக்க முடியும்? அவன் கையாலேயே தாலி வாங்கிட்டேன்னு

நினைக்கும்போது, எனக்கே என்னை பிடிக்கலை..., போதுமா...?” அவள் கேட்க, ஒரு நொடி அவன் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியைத் தவிர அவனிடம் வேறு எந்த மாற்றமும் இருக்கவில்லை.

அவனுக்குத்தான் எதுவுமே நினைவில்லையே..., அதில் இதுமட்டும் எப்படி நினைவில் இருக்குமாம்? “யார் அவன்...?” கேட்கையில் குரல் இரும்பாக வெளியேறியது.

“அதானே..., வருஷத்துக்கு ஒரு என்கவுண்டர் செய்யிறவனுக்கு அது ஞாபகத்தில் இருக்காதுதான்...” அவளது ஒருமை அழைப்பு அவனை சுள்ளென தாக்கியது.

“மரியாதை..., மரியாதை...” அவர் கர்ஜிக்க,

“இந்த ரூமுக்குள் அது அவசியம் இல்லைன்னு யாரோ சொன்னதா ஞாபகம்”.

“அது உன் புருஷன் கிட்டே பேசுறதா இருந்தால் மட்டும்தான். ஒரு போலீஸ்காரன் கிட்டே பேசுறதா இருந்தால் அது முக்கியம்...” குரல் உயர்த்தாமல் கோபத்தை அப்படியும் காட்ட முடியுமா? மிரண்டுதான் போனாள்.

“அவன் பேர்...” இப்பொழுது நீ சொல்லியே ஆகவேண்டும் என்னும் குரல்..., கட்டளையாகவே ஒலித்தது.

‘சொல்லமுடியாது போடா...’ என அவளுக்கு சொல்ல ஆசைதான். ஆனால், இந்த எஸ்பி பிரம்மாவிடம் அது சத்தியமாக முடியும் என்றே தோன்றவில்லை.

“காமேஷ்..., இப்போ ஞாபகத்துக்கு வருதா? விசாரணைன்னு கூட்டி போய், கோர்ட்டுக்கு போகும் போது, அவன் தப்பிக்க முயற்சி பண்ணான்னு என்கவுண்டர் பண்ணீங்களே, அதே காமேஷ் தான்..., உங்களுக்கெல்லாம் மனசாட்சியே கிடையாதா?

“இந்த டிரெஸ்ஸ போட்டுட்டா மனசாட்சியை கழட்டி வச்சுடுவீங்களா? என்ன கேஸ்ன்னு கேட்டதுக்கு கூட பதில் கொடுக்கலையே..., சீக்ரெட்..., பொல்லாத சீக்ரெட்..., அதைத் தூக்கி குப்பையில் போடுங்க..., ஒரு அப்பாவியை

இப்படி கொன்னுட்டு..., அவ தங்கச்சியவே மிரட்டி, கல்யாணம் பண்ணி இருக்கீங்களே..., உங்களுக்கெல்லாம் வெக்கமா இல்லை...” அவள் கேட்க, உணர்வுகள் தொலைத்து இரும்பாகத்தான் நின்றிருந்தான்.

அந்த நொடி, தலைக்குள் சம்மட்டியாய் ஒரு வலி..., ‘சார்..., எப்படியாவது அந்த காமேஷ் கிட்டே இருந்து என்னைக் காப்பாத்துங்க..., எனக்கு பயமா இருக்கு’ ஒரு பெண்ணின் அழுகுரல்..., தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

மூச்சுக்கு திணறும் ஒரு நிலை..., சட்டென உடல் முழுவதும் வியர்க்க, அவனது பிபி தாறுமாறாய் எகுறுவதை அவனே உணர்ந்தான். “ஹ..க்...” தரையில் மண்டியிட்டவன், தன்னை நிலைக்கு கொண்டுவர போராடினான்.

கண் முன்னால் அவன் துடிக்கையில், அவ்வளவு கோபத்திலும் அவளால் அசையாமல் நின்று அவனைப் பார்க்க முடியவில்லை. வேகமாக அங்கே இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்தவள், அதைத் திறந்து, அவன் தோள் தொட்டு உலுக்கி..., அவன் வாயில் சரித்தாள்.

அவனுக்கு என்ன நடக்கிறது என அவளுக்குப் புரியவில்லை. ஆனால், “நீங்க இதுக்கும் திமிராவே பதில் சொல்லலாம்..., இப்படி நடிக்கணும்னு எந்த அவசியமும் இல்லை...” கோபம் குறையாமல் அவள் உரைக்க, அப்பொழுது அவன் பார்த்த பார்வையின் பொருள் அவளுக்கு புரியவில்லை.

அந்த நேர தாக்கம் விடுபட, எழுந்து நின்றவன், “நான் ஒரு விஷயம் செய்திருந்தேன் என்றால், அதில் நிச்சயம் ஒரு நியாயம் இருந்திருக்கும்” அவன் உறுதியாகச் சொல்ல, அவளுக்கு ஆத்திரம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

“வெளியே சொல்ல முடியாத அளவுக்கு நியாயமோ...?” அவள் எள்ளலாக வினவ, அவளுக்கு எதைச் சொல்லி புரிய வைக்க என்று அவனுக்குத் தெரியவில்லை.

இப்பொழுது அவனுக்கு பழசெல்லாம் மறந்துவிட்டது எனச் சொன்னால், எவ்வளவு தூரம் அவள் நம்புவாள் என்பதும்

தெரியாமல், தன் எண்ணத்தை கை விட்டவன், “ஆமா...” உறுதியாகவே சொன்னான்.

‘ஒரு கொலையும் செஞ்சுட்டு, எவ்வளவு திமிரா பேசறான் பார்...’ அவளது எண்ணம் அதுவாகத்தான் இருந்தது.

“உங்க நியாயத்தை நீங்களே வச்சுக்கோங்க..., ஆனா..., ஒரு கொலைகாரனின் வீட்டில், அவன் படுக்கை அறையில் இருப்பது எனக்கு மூச்சு முட்டுது. என்னை விட்டுடுங்க..., என்னால் இங்கே இன்னும் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது...” அவள் உரைக்க, அசையாமல் அவளைப் பார்த்திருந்தான்.

“சரி..., தாராளமா போ..., ஒரே ஒரு விஷயம்..., நான் கட்டிய அந்த தாலியை கழட்டி என்கிட்டே கொடுத்துட்டு போ...” அவளுக்கு முன்னால் அவன் கை நீட்ட, தன் சுடிதாருக்குள் மறைந்திருந்த தாலியை வெளியே எடுத்தாள் காயத்ரி.

*****

# பகுதி – 23.

கிச்சனுக்குள் போராடிக் கொண்டிருந்தாள் காயத்ரி. கௌஷிகா முந்தினநாள் மாலையே கோவை கிளம்பியிருக்க, நேற்று இரவுக்கு, அவள் வைத்துச் சென்றிருந்த குழம்பை வைத்து அட்ஜஸ்ட் செய்தாயிற்று. இன்று காலை, நிச்சயம் அவள் சமைத்தே ஆக வேண்டும்.

அவளுக்கு நன்றாகத் தெரிவது என்றால், சுடுதண்ணீர் மட்டுமே வைக்கத் தெரியும். டீ காபி கூட சரியாக போடத் தெரியாது. அவளை முழு சமையல் செய்யச் சொன்னால், அவளும் என்னதான் செய்வாள்?

அதே நேரம்..., இன்னும் தான் அந்த வீட்டில் இருப்பதை எண்ணி ஆத்திரமாக வேறு இருந்தது. நேற்று மதியம், அவனிடம் போட்ட சண்டையும், தன் உள்ளக் குமுறல்களை அவனிடம் கொட்டிய பிறகு, மனதில் எழுந்த ஒருவித அமைதியும், இப்படியாக கலவையான உணர்வில் தத்தளித்தாள்.

‘அவன் தாலியைக் கழட்டி கொடுத்துவிட்டுப் போ...’ என்று சொன்னவுடன், ஆத்திரமாக அதைக் கழட்டத்தான் போனாள்..., ஆனால், அதை அவளால் செய்ய முடியவில்லை.

எதைக்கண்டு தயங்கினாள், ஏன் தயங்கினாள்..., எதுவும் புரியவில்லை. ‘நான் ஒரு விஷயம் செய்திருந்தேன் என்றால், அதில் நிச்சயம் ஒரு நியாயம் இருந்திருக்கும்’ என்று பிரம்மா சொன்னபொழுது அதில் தொனித்த நேர்மையை, உண்மையை ஒரு நொடி என்றாலும் அவள் உணர்ந்து கொள்ள முடிந்ததே.

நிச்சயம் அதில் பொய் கடுகளவும் இல்லை என்பது அவளுக்குப் புரிந்தது. அதே நேரம், அவளது அண்ணனை இரநூறு சதவீதம் அவள் நம்புகிறாளே, அந்த நம்பிக்கையை அவளால் தொலைக்க முடியுமா என்ன?

எனவேதான் அவனிடம் பிடிவாதமாக பேசினாள். ‘ஒரு வேளை, வேறு எங்காவது தவறு நடந்திருக்குமோ...?’ அரை நொடி என்றாலும் அதையும் சிந்தித்தாளே.

அனைத்தையும் விட, தன் கழுத்தில் தொங்கிய திருமாங்கல்யத்தை வெகு சாதாரணமாக கழட்டி அவன் கையில் கொடுத்துவிட அவளால் முடியவில்லை. அந்த தாலி அவள் கழுத்தில் ஏறும் முன்பு அவள் செல்வி, ஏறிய பிறகு அவள் திருமதி.

அது இயற்கையாக இறங்கினால் அவள் விதவை..., ஆனால் இது..., அவள் அதைச் செய்தால் இந்த சமுதாயம் அவளுக்கு வைக்கும் பெயர், வாழாவெட்டி. அதன் பிறகு உடன் இருப்பவர்கள் அவளை எவ்வாறு பார்ப்பார்கள்?

அதையெல்லாம் விட..., தாலியை கழட்டி அவனிடம் கொடுத்துவிட்டு, அவனுக்கும், தனக்கும் இனிமேல் எதுவும் முற்றாக இல்லை என அவளால் ஒதுங்கிவிட முடியுமா? திடுமென அந்த கேள்வி எழுந்த நொடி, தன் கையை வேகமாக விலக்கிக் கொண்டாள்.

“உங்களை அவ்வளவு சீக்கிரம் சும்மா விட்டுட்டு போக மாட்டேன். என் அண்ணனின் சாவுக்கு ஒரு முடிவு தெரியாமல் இங்கே இருந்து போறதா இல்லை. உங்க நிம்மதி இனிமேல் என் கையில்தான்..., நீங்க எப்படி நிம்மதியா இருக்கறீங்கன்னு நானும் பாக்கறேன்.

“இந்த ஆறு மாசம் நான் பட்ட வேதனை, துன்பத்தை நீங்களும் அனுபவிக்கணும்..., அனுபவிக்க வைப்பேன்...” கோபமாக சொல்லிவிட்டு வெளியேறிவிட்டாள்.

அந்த நொடி, பிரம்மா தனக்குள் எப்படி உணர்ந்தான் என்றே சொல்வதற்கில்லை. அவளது கோபம், ஆத்திரம் தாங்காமல், தாலியை கழட்டி கொடுத்துவிட்டு போ’ என சொல்லிவிட்டான்தான். ஆனால், அவள் தாலியை தன் கரத்தால் பற்றிய அந்த நொடி, அவன் உள்ளுக்குள் ஆவி துடித்ததே...,

எங்கே தாலியை கழட்டி கொடுத்துவிட்டு போய்விடுவாளோ என உள்ளம் பதறியதே, அதை வெளியில் காட்ட முடியாமல் வெளியே உறைபனியாக நின்ற அந்த நொடி, அவனுக்கு குளுமையாகவா இருந்திருக்கும்?

அடுத்த நொடியே, உன்னைப் பழிவாங்க இங்கேயே இருப்பேன் அவள் சொன்னபொழுது, அந்த வார்த்தைகளில் இருந்த கனத்தை விட, அவள் இங்கிருந்து என்னை விட்டு போகமாட்டாள் என மனம் முழுவதும் ஒரு நிம்மதி விரவிப் படர்கிறதே,

அது அந்த ஒரு வார்த்தையும், நிம்மதியும் அவனுக்குப் போதும். உடனிருந்தே அவள் கொன்றால் கூட பரவாயில்லை என்றுதான் அவன் மனம் சொன்னது. எனவே நிம்மதியாகவே அங்கிருந்து சென்றிருந்தான்.

அதன் பிறகு அவன் உணவு உண்டு வேலைக்குச் சென்ற பிறகும் சரி, மாலையில் கௌஷிகாவை வழியனுப்ப வந்த பொழுதும் சரி, அவனிடம் ஒரு வார்த்தை பேசவில்லை, அதை அவனும் எதிர்பார்க்கவில்லை.

நேற்றைய இரவில், ஒரு பொட்டுகூட அவனை, அவள் உறங்க அனுமதிக்கவில்லை என்றே சொல்லலாம். அவனது வீக்னஸ்..., அவளுக்கு பலமாகப் போயிற்று. ஆனால் அதிலும், இறுதியில் தான் தோல்வியைத் தழுவிய விதம்..., அதை இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சை அடைத்தது.

இரவில் ஒரு சிறு ஒலிக்கும் அவன் உறங்க மாட்டான் என்பதை உணர்ந்த அவள், உடைகளை கப்போர்டில் அடுக்குகிறேன் என கொஞ்ச நேரம் அவனுக்கு சோதனை வைக்க, மீதி கொஞ்ச நேரம், புத்தகம் படிக்கிறேன் என ரீடிங் லேம்ப் ஒளியில், மேகசின்களை வாசித்தாள்.

இடை இடையே, சுவிட்சை வேண்டும் என்றே ஓசைபட அணைத்து, ஆன் செய்ய, அந்த ஒலிக்கே அவன் கண் விழித்து பார்ப்பதை உணர்ந்து கொண்டாள்.

அவனுக்கோ..., முந்தினநாள் போல் அவளை படுக்கச் சொல்லவும் பயமாகத்தான் இருந்தது.

அவன் மனதுக்குள் இருக்கும் சிறு உறுத்தல், அவனை, அவளிடம் கடுமை காட்ட அனுமதிக்கவில்லை. ஆயிரம் இருந்தாலும் நேரடியாக பாதிக்கப்பட்டவள் அவள்..., எனச் சொல்லி தன்னையே அவன் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஒருமணிநேரத்துக்கு மேல் அவளுக்கு படிக்கவும் முடியாமல் போர் அடிக்க, கொலுசு ஒலிக்க அறையில் நடக்க, அவனால் ஆழ்ந்த உறக்கத்துக்குச் செல்ல முடியவில்லை.

விபத்துக்கு முன்னால் எப்படியோ..., ஆனால் விபத்துக்குப் பிறகு அவனால் இரவில் ஆழ்ந்த உறக்கம் என்பதே இல்லை என்றுதான் சொல்லலாம். புலன்கள் எப்பொழுதும் விழித்துக் கிடக்கும்.

‘அவள் வேண்டும் என்றே நடக்கிறாள்...’ என தன்னையே சமாதானம் செய்தவன், அவளது கொலுசின் ஒலியை கேட்டவாறே உறங்கத் துவங்க, சற்று நேரத்தில் அவள் நடையை நிறுத்தவே, ‘எங்கே போய்விட்டாள்’ என விழித்து எழுந்தான்.

அவள் அவனை அசையாமல் பார்க்க, அவன் கண்கள் ஒரு நொடி கடிகாரத்தில் பதிந்து மீண்டது. நேரம் நள்ளிரவைத் தாண்டி சில நிமிடங்கள் ஆகியிருக்க, பாத்ரூம் சென்று வந்தவன், தண்ணீரை குடித்துவிட்டு படுத்துக் கொண்டான்.

அவளோ..., ‘இன்னும் என்ன செய்யலாம்...?’ என சிந்திக்க, மூடியிருந்த ஜன்னலை அவள் ஓசைபட திறக்க, அந்த ஒலியை இன்னதென்று இனம் கண்டவன், தன் தலையணைக்கு அடியில் இருந்த துப்பாக்கியை விருட்டென எடுத்து, அவள் பக்கம் நீட்டியிருந்தான்.

அவனைப் பார்த்தவாறே ஜன்னலை திறந்து கொண்டிருந்தவள், அவனது அதிரடி செய்கையில் தானாகவே கையை ஹென்ஸ்அப் மோடுக்கு மாற்றியிருந்தாள். எத்தனை சினிமாவில்

பார்த்திருக்கிறாள், துப்பாக்கியை நீட்டினால் கையை தலைக்குமேல் தூக்கிவிட வேண்டும் என அவள் மூளையில் ரிஜிஸ்டர் ஆகி இருந்ததே.

கையை மேலே தூக்கியவாறு அவள் நின்ற தோற்றம்..., அவனுக்கு அந்த நிலையிலும் சிரிப்பை தோற்றுவிக்க, இதழ்களுக்குள் மெல்லியதாக சிரித்துக் கொண்டான்.

“நீயா...? ஜன்னலை ஏன் திறக்கற...? மூடு..., என்னை கொலைபண்ண வர்றவன் ஈசியா வர வழி பண்ணாதே...” மீண்டும் துப்பாக்கியை தலையணைக்கு அடியில் வைத்தவன் படுத்துக் கொண்டான்.

எதுவுமே நடவாததுபோல், வெகு சாதாரணமாக கேட்டுவிட்டு அவன் படுத்துக் கொண்டு, விட்ட தூக்கத்தை மீண்டுமாக தொடர,

அவள்தான் வெலவெலத்துப்போய் நின்றிருந்தாள். ‘அடப்பாவி..., ஒவ்வொரு சத்தத்தையும் மண்டைக்குள் ரெக்கார்ட் பண்ணி வச்சிருக்கான் போல...’ எண்ணியவள் அதற்குமேல் ரிஸ்க் எடுக்க தயாராக இருக்கவில்லை. ஜன்னலை மூடியவள், படுக்கையில் வந்து படுத்தாள்.

அன்று, வேண்டும் என்றே அசைந்து அசைந்து படுக்க, ஒரு கட்டத்துக்கு மேல் அவனது பொறுமை பறந்துவிட்டது என்றே சொல்லலாம். அவளை விருட்டென தன் பக்கம் இழுத்தவன், அவள்மேல் அழுத்தமாக படுத்துக் கொண்டான்.

அவ்வளவுதான்..., எழுபத்தைந்து கிலோவுக்கு மேல் இருக்கும் அவன், மொத்தமாக அவள்மேல் கவிழ்ந்தால் அவள் என்னத்துக்கு ஆவாள்? அவள்மேல் படுத்தது மட்டுமா..., தன் முகத்தை அவள் கழுத்தில் அழுத்தமாக புதைக்க, அவன் தாடை ரோமம் ஏற்படுத்திய எரிச்சல் கலந்த குறுகுறுப்பில் திணறிப் போனாள்.

அவனோ, அவள் கழுத்தில் முகம் புதைத்தவன், அடுத்த நொடி மூச்சை ஆழமாக இழுத்து சுவாசிக்க, சாதாரணமாக

மூச்சு விட்டவனின் சுவாசத்தில் கலந்தது அவளது வாசனை.

‘பொண்ணோட கூந்தலுக்கு மட்டும் மணம் இருக்கிறதா என வாதாடினானே அந்த நக்கீரன், பெண்ணின் மேனிக்கே அந்த வாசனை இருக்கா என வாதாடி இருக்கணும், தப்பு பண்ணிட்டான்’ அந்த சில நொடிகளுக்குள் அவன் சிந்தை ஒரு காவியத்தையே சுழண்டு வந்தது.

பிறகுதான் தன் செய்கைக்கான காரணம் புத்திக்குள் உறைக்க, “என்னை தூங்க விடாமல் தொல்லையா பண்ற..., இப்போ எப்படி அசையிறன்னு பாக்கறேன்...” அவன் அங்கே இருந்தே பேச, அவன் இதழ் அசைந்து ஏற்படுத்திய உணர்வில் திண்டாடினாள்.

“டேய் பீமா..., மூச்சு விட முடியலை, எந்திரிடா...” உரமேறிய அவனது நெஞ்சு, அவளது மெல்லிய தேகத்தை அழுத்தினால் அவளால் தாங்க முடியுமா? அவனை தன்மேல் இருந்து விலக்கித் தள்ள, அசைந்து அவள் போராட, அவள் மென் தேகத்தின் தீண்டல் அவனை அசைத்துப் பார்த்தது.

அவளை கலவரப்படுத்தவே அதைச் செய்தான் என்றாலும், அவனுக்கோ இளமையின் முறுக்கு வீறிட்டு எழுந்தது.

அவள் கழுத்தில் இருந்து எழுந்த ஒருவித வாசனை..., ஒரு நொடி தன்னை மறந்து ஆழமாக மூச்செடுத்தான். அப்பொழுதுதான் அவளது பேச்சு அவனைத் தீண்ட, “இன்னொரு முறை இப்படி பண்ண..., விலகவே மாட்டேன்” பட்டென விலகி அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான்.

“என் தூக்கம் சுத்தமா போச்சு...” அவன் தேகம் மெல்லியதாக சூடாகி இருக்க, சற்று எரிச்சலாகவே மொழிந்தான். அதன் பிறகு அவள் அசையாமல் படுத்தாலும், அவனால் உறங்கத்தான் முடியவில்லை. அவளுக்கான ஒருவித தேடல் தலைதூக்க, முயன்று தன்னை அடக்கிக் கொண்டான்.

அவளுக்கோ அந்த படுக்கையில் படுக்கவே முடியவில்லை. அதே நேரம் எழுந்து செல்லவும் பயமாக இருந்தது. ‘எருமைமாடு..., ஒரு சட்டை போட்டு தூங்க மாட்டான்..., எப்படி வந்து விழறான்...?’ அவனது மேலாடையற்ற நிலையை மனதுக்குள் சபித்தாள்.

கூடவே, அவன் மூச்சுக்காற்று இன்னும் அவள் கழுத்தை தீண்டும் உணர்வு. அவன் இரும்பு தேகத்தின் அழுத்தம் இன்னும் அவள் மேனியில் மிச்சமிருக்க, ஒரு மாதிரி படபடத்துப் போனாள். நியாயப்படி அவன் செய்கைக்கு அவளுக்கு கோபம் வர வேண்டும்.

ஆனால், கோபம் என்ன? அவள் மூளைக்கு எதுவுமே தோன்ற மறுத்தது.

அவள் பார்த்த வரைக்கும், அவர்களது அறைக்குள் அவனது உடை ஒற்றை அரைக்கால் கால்ச்சட்டை மட்டுமே. மேல்ச்சட்டை என்பது அறைக்குள் சுத்தமாக அவன் அணிவதே இல்லை. அவன்மேல் பெரும் கோபம் என்றாலும், தன்னை மீறி அவள் பார்வை அவன் தேகத்தில் பதிவதை அவள் எப்படி தடுக்கவாம்?

இப்பொழுது தன்மேல் மொத்தமாக கவிழ்ந்திருந்த, அவனைத் தள்ளிவிட அவனது புஜங்களை நகர்த்த முயன்றபொழுது, இரும்பாகத் தெரிந்த அவனது முறுக்கு கையின் ஸ்பரிசம்..., உள்ளங்கையில் இன்னும் மிச்சமிருக்க, அவள் மூச்சுக்காற்றின் வெம்மையும், இதழ்களின் அசைவும் இன்னும் கழுத்தில் இருக்கும் உணர்வு.

எப்படி மூச்சடைக்காமல் இன்னும் மூச்சு விடுகிறாள் என்றே அவளுக்குத் தெரியவில்லை. ஒரு சின்ன விஷயத்துக்கும் மூச்சடைக்கும், இப்பொழுது எதுவும் இல்லையே என எண்ணியவள், எப்பொழுது உறங்கினாள் என அவளுக்கே தெரியவில்லை.

காலையில் அதிசயமாக அவனது அலைபேசி அலாரம் ஒலிக்கும்பொழுதே அவளுக்கும் விழிப்பு வந்துவிட, அவன்

தன் ஜிம் அறையில் தஞ்சம் புகும் வரைக்கும் அசையாமல் படுத்திருந்தவள், பிறகு எழுந்து கீழே வந்துவிட்டாள். காபி போடலாம் என்றாலோ, அதை எப்படி, என்ன அளவில் கலக்கவென்று தெரியவில்லை.

பாலை கொதிக்க வைத்தவள், சீனி எங்கே எனத் தேடி எடுத்து, தேவைக்கு போட்டு கலக்கி வாயில் கவிழ்த்துக் கொண்டாள். அது வயிற்றுக்குள் சென்ற பிறகுதான் ஒரு நிம்மதி. ஜிம்மில் தன் உடற்பயிற்சியை முடித்தவன், கிச்சனுக்கு வர, வாயில் இருந்த பாலை மடக்கென விழுங்கிவிட்டு, அவனைப் பார்த்தாள்.

அவனோ..., பால் பாத்திரத்தையும் அவளையும் ஒரு பார்வை பார்த்தவன், வியர்வை வழிந்த தன் முகத்தை டவ்வலால் துடைத்துக் கொண்டான். 'உனக்கு என் கையால் எதுவும் கொடுக்க முடியாது போடா...' பார்வையால் உரைத்தவள், அவனுக்கு முதுகு காட்டி திரும்பிக் கொண்டாள்.

அவள் பார்வைக்கான பொருள் புரிய, அவனுக்குள் மெல்லிய ஏமாற்றம்..., பாலை ஊற்றி டம்ப்ளரில் கொடுத்திருந்தால் நிச்சயம் மகிழ்ந்திருப்பான்..., இது..., தானாக எடுத்து குடிக்கவும் மனமற்று திரும்பிவிட்டான். அவன் சென்றுவிட்டதை உணர்ந்தவள், அதன் பிறகே திரும்பினாள்.

பிரிஜில் காய்கறி இருந்தாலும், என்ன செய்ய எனத் தெரியாமல், முதலில் ஒரு உப்புமா ட்ரை செய்வோம் என எண்ணியவள்..., தன் அலைபேசியை உயிர்பித்து, யூ டியூபில் செய்முறையை பார்வையிட்டவள், அதைச் செய்து முடிக்கையில், அது பாயாசம் லெவலில் பல் இளித்தது.

உப்பு வேறு ஏறுக்கு மாறாக எகிறியிருக்க, 'இதை சாப்பிட முடியாது, குடிக்கணும் போல...' எண்ணியவள், தான் முதல் முதலில் செய்ததை வேஸ்ட் செய்ய மனமில்லாமல், ஒரு கிண்ணத்தில் எடுத்துப் போட்டு, கொஞ்சம் சக்கரையைத் தூவி, ஒரு வழியாக குடித்திருந்தாள்.

‘அவன் வேறு வருவானே…’ எண்ணியவளுக்கு அதை அவனுக்கு கொடுக்க முடியும் என்றே தோன்றவில்லை. கூடவே, படிகளில் அவன் வரும் ஓசை கேட்க, மிச்சமிருந்த அந்த உப்புமா பாயாசத்தை அவன் கண்ணுக்குத் தெரியாமல் டிஸ்போஸ் செய்வதற்குள் திணறிப் போனாள்.

மீதமிருந்ததை ஒரு கிண்ணத்தில் கொட்டி, கீழே இருந்த கப்போர்டுக்குள் மறைத்தவள், அவன் கிச்சனுக்குள் வரும் முன்பாக அங்கே இருந்து கிட்டத்தட்ட தப்பித்து அறைக்கு ஓடியிருந்தாள்.

“ச்சேய்…, கொலை பண்ணவன் கூட பாடியை டிஸ்போஸ் பண்ண இவ்வளவு தடுமாறியிருக்க மாட்டான். அந்த உப்புமாவை டிஸ்போஸ் பண்ணதுக்குள்ளே ஹார்ட் நெஞ்சுக்கூட்டை விட்டு வெளியே வந்து விழுந்திருக்கும் போல…” வாய்விட்டே புலம்பிக் கொண்டாள்.

காலை உணவை மேஜைமேல் எதிர்பார்த்தவன் அது இல்லாமல் போகவே, கிச்சனுக்கு சென்று பார்க்க, அங்கே ‘சிங்க்’கில் அவள் உப்புமா செய்த பாத்திரம் அவனைப் பார்த்து சிரிக்க, ‘உப்புமாவை கண்ணில் கூட காட்டலை…’ எண்ணியவனுக்கு காலையில் இருந்து பால் கூட குடிக்காதது சற்று களைப்பாகவே உணர்ந்தான்.

உடற்பயிற்சி முடிந்தவுடன், தினமும் பால் குடித்து பழகியவன், காலையில் ஒரு ஆம்ப்ளேட் இல்லாமல் காலை உணவை துவங்காதவன், இன்று எதுவும் இல்லை என்றவுடன் மனம் சோர்ந்து போனது.

அவள் இல்லாதபொழுது தானாகவே சமைத்து சாப்பிட்டவன்தான்…, இப்பொழுது செய்ய தயக்கம் என்றெல்லாம் இல்லை…, ஆனால், அவள் ஒருபக்கம் தனக்கு சமைத்துக் கொள்ள, தான் ஒரு பக்கம் தனக்கு சமைத்துக் கொள்ள வெறுப்பாக இருந்தது.

அவள் சமைக்காமல் இருந்திருந்தாலாவது அவளுக்கும் சேர்த்து தானே சமைத்திருப்பான், இப்பொழுது அவள் தனக்கு மட்டும் சமைத்து சாப்பிட்டது ஒரு மாதிரியாக

இருந்தது. வீட்டில் இருப்பவன் விரோதியாகவே இருந்தாலும், வயிற்றுப் பசிக்கு உணவு கொடுக்காத அவளது செய்கை, ஏற்க முடியாமல் மனம் முரண்டியது.

கிச்சனுக்குள் இருந்து வெளியேறியவன், சாப்பாட்டு மேஜைமேல் இருந்த ஒரு ஆப்பிளை எடுத்து கடித்துக் கொண்டு வெளியே நடந்தான். அன்று கந்தன் வந்திருக்க, அவன் ஆப்பிளை கடித்தவாறே வெளியே வந்ததைப் பார்த்து புருவம் உயர்த்தினார்.

‘இவர் சாப்பிடலையா...?’ எண்ணியவரது பார்வை அவன் அறியாமல் அவன் முதுகின் பின்னால் துழாவியது. அதென்னவோ அவனை கத்தியால் குத்தியது காயத்ரிதான் என்பதை அறிந்த பிறகு அவரால் காயத்ரியைப் பற்றி நல்லவிதமாக எண்ண முடியவில்லை.

அவனிடம் வாய் திறந்து அதைக் கேட்கவும் அவருக்கு பயமாக இருக்கவே, வாயை இறுக்கமாக மூடிக் கொண்டார். ஜீப்பில் ஏறியவனுக்கு, அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் செல்ல மனம் வரவில்லை.

“கந்தன்..., ஒரு நிமிஷம்..., போனை மிஸ் பண்ணிட்டேன்..., எடுத்துட்டு வர்றேன்” உரைத்தவன், ஜீப்பில் இருந்து இறங்கி வீட்டுக்குள் விரைந்தான். மாடிப்படிகளை இரண்டு இரண்டாக கடந்தவன், அறைக்கதவை வேகமாகத் திறக்க, படுக்கையில் நகம் கடித்துக்கொண்டு அமர்ந்திருந்தவள், பட்டென எழுந்து நின்றாள்.

“கதவை லாக் பண்ணிக்கோ..., டோனியை அவிழ்ந்து விட்டிருக்கேன், அவன் காவல் இருக்கும்போது எந்த பயமும் இல்லை...” உரைத்தவன், தன் கடமை முடிந்தது என கிளம்ப, “என்னது..., நாயை அவுத்து விட்டிருக்கீங்களா? அது என்னை கடிக்கவா?” அவள் கோபமாக கேட்கும் பொழுதே அங்கே வந்தது டோனி.

பட்டென வாயை மூடிக் கொண்டவள், டோனியை பயப் பார்வை பார்த்தாள். அவன் அதை கண்டுகொள்ளாமல், “டோனி..., ப்ரண்ட்...” உரைத்தவன், அவள் கரத்தை பிடித்து

அதற்கு அறிமுகப்படுத்த, அதுவோ முகத்தை திருப்பிக் கொண்டது.

அதன் செய்கையைப் பார்த்தவள், ‘இந்த நாய்க்கு இருக்க கொழுப்பை பாரேன். இவன் நாய் தானே..., இவனை மாதிரிதான் இருக்கும்’ மனதுக்குள் கறுவினாள்.

“டோனி..., ஷேக் ஹேன்ஸ்...” அவன் சொல்ல, போனால் போகிறதென்று கை கொடுத்தது. “குட்...” பாராட்டியவன், “அவனோட கொஞ்சம் பழகு..., பெடிகிரி உள்ளே இருக்கும், அவனுக்கு கொடு..., உன்னோட பழகிடுவான்” என் வேலை முடிந்தது என கிளம்பிவிட்டான்.

“நான் இவனுக்கே சாப்பாடு போட மாட்டேன்னு சொல்றேன்..., இதில் நாய்க்கு” வாய்விட்டே முனகியவள், “கோ...” டோனியைப் பார்த்து கத்தினாள். அவளது கோபம் உணர்ந்தவனாக, அறையின் வாயிலில் சென்று படுத்துக் கொண்டது.

என் எஜமானனின் கட்டளையை கேட்பேன் என்பதுபோல் இருந்தது அதன் நடத்தை. “உன்னைய...” பக்கத்தில் அதை அடிக்க ஏதாவது கிடைக்குமா எனத் தேடியவள், அப்படி தான் அடித்து, அது தன்னை கடித்துவிட்டால் என்ற எண்ணம் எழ, அறைக்குள் புகுந்து கதவை அடைத்துக் கொண்டாள்.

‘காலையில் சாப்பிட்டிருப்பானா? மதியம் சாப்பிட வருவானா?’ எண்ணம் எழ, ‘அவன் சாப்பிட்டால் என்ன, இல்லையென்றால் உனக்கென்ன...?’ தன்னைத்தானே குட்டிக் கொண்டவள், மதியம் ஏதாவது சமைப்போம் என கீழே இறங்கி வந்தாள்.

அவள் வெளியே வர, டோனியும் அவளோடு வந்தது. ‘இது வேற...’ எண்ணினாலும் எதுவும் சொல்லாமல் நடந்தாள்.

மதியம் சாதம் வைக்க அரிசியை பாத்திரத்தில் போட்டவள், அதையும் சற்று பாயாசமாகத்தான் ஆக்கினாள். குழம்பு வைக்கும் ரிஸ்க் எடுக்க விரும்பாமல், கஞ்சியில் சிறிது உப்பு சேர்த்து ஸ்பூனால் குடித்துவிட்டு மாடியேறினாள்.

டோனிக்கு சாப்பாடு போடச் சொன்ன விஷயத்தை அவள் சுத்தமாக மறந்து போனாள். அதுவோ அவள் காலை சுற்றி சுற்றி வந்தது. அவளோடு அறைக்குள் நுழைய முயல, “அவுட்...” அவள் கத்த, வெளியிலேயே அமர்ந்து கொண்டது.

வீட்டுக்குள் ஒற்றை அறைக்குள் அமர்ந்து இருக்க போர் அடிக்க, கீழே வந்து டிவி பார்த்தவாறு அமர்ந்தாள். சற்று நேரத்தில் அவன் வர, ‘ஹையோ, சாப்பாடு கேப்பானோ?’ சற்று உதறலாக இருந்தது.

வந்தவன் நேராக சாப்பாட்டு மேஜைமேல் சென்று அமர்ந்தவன், தனக்கு சாப்பாடு போடுவாளா? என காத்திருந்தான். அவள் டிவியின் முன்னால் இருந்து அசையும் வழியைக் காணோம். அவன் எழுந்துகொள்ள, டோனியோ தன் தட்டை தூக்கிவந்து அவன் முன்னால் வைத்தது.

அப்பொழுதுதான் அதற்கு உணவு வைக்காததே அவளுக்கு நினைவிற்கு வர, தயக்கமாக எழுந்து நின்றாள். அவனது முகமோ இரும்பாய் இறுகிப் போக, அவளை பார்த்தானே ஒரு பார்வை..., நடுங்கிப் போனாள். கூடவே தான் செய்தது தவறு என்ற எண்ணம் எழ, அவளால் அவன் முகம் பார்க்கவே முடியவில்லை.

கிச்சனுக்குள் சென்றவன், பிடிகிரி எடுத்து வந்து டோனியின் பிளேட்டில் தட்டிக் கொடுத்தவன், பாக்கெட்டை டைனிங் டேபிள்மேல் வைத்துவிட்டு விருட்டென வெளியேறினான்.

அவள் தன்னை மனிதனாகக் கூட மதிக்காத உணர்வு..., ‘ச்சே..., ஒருத்தான் மற்றவனை வேண்டும் என்றே கொல்வானா? அதிலும் போலீஸ் டிப்பார்ட்மெண்டில் ஒருவனை என்கவுண்டர் செய்வது என்றால் அவ்வளவு சுலபமான விஷயமா என்ன?

‘ஒவ்வொரு தோட்டாவுக்கும் அவன் கணக்கு காட்ட வேண்டும். அப்படி இருக்கையில், வெகு சாதாரணமாக ஒருவனை கொன்றுவிட்டு அவனால் அந்த உடையை

மீண்டுமாக அணிந்திருக்க முடியுமா என்ன? அவன் தவறு செய்திருந்தால், துறை நடவடிக்கை தொடர்ந்து, மனித உரிமை கமிஷன் என எவ்வளவு விஷயங்களை அவன் எதிர்கொள்ள வேண்டி இருந்திருக்கும்.

‘இப்படி எதையும் புரிந்துகொள்ள முயலாமல்..., ஒருதலையாக, தனிச்சையாக அவள் செயல்படும் விதம்..., அவனுக்கு பெரும் மன அழுத்தத்தை கொடுத்தது.

“சார், லஞ்ச் வாங்கவா?” அவன் கோப முகத்தையும் மீறி, அவன் சாப்பிடாமல் இருப்பது மனதை வருத்தவே, கந்தன் கேட்டார்.

“வேண்டாம்...” உரைத்தவன், எஸ்பி அலுவலகம் வரவே, வேகமாக இறங்கிச் சென்றுவிட்டான். இரவில் எப்படியும் அதே நிலைதான் வீட்டில் இருக்கும் என்பதால், வீட்டுக்கு வர மாட்டேன் என மெச்செஜ் அனுப்பிவிட்டு, தன் இருக்கையை சாய்த்தவாறு அப்படியே அமர்ந்து உறங்கத் துவங்கினான்.

கந்தன் வழக்கம்போல் இரவில் தன் வீட்டுக்கு கிளம்பிச் சென்றவர், காலையில் அவன் வீட்டுக்கு வர, வாசலில் ஜீப் இல்லாததைப் பார்த்தவர், அவனுக்கு அழைத்தார்.

“கந்தன்..., நான் ஸ்டேஷன்லதான் இருக்கேன்..., நீங்க வாங்க...” உரைத்தவன் அலைபேசியை வைத்துவிட்டான்.

ஸ்டேஷனில் எப்பொழுதும் ஒரு செட் உடை அவன் வைத்திருப்பான் என்பதால், அங்கேயே குளித்து உடை மாற்றியவன், தன் வேலையைத் தொடர்ந்தான். சொல்லப்போனால் அடுத்த இரண்டு நாட்கள், குளிக்க மட்டுமே தன் வீட்டுக்குச் சென்றான் எனச் சொல்லலாம்.

அவளிடம் பேசுவதையோ, அவள் முகம் பார்ப்பதையோ மறுத்தான். டோனிக்கு அவள் உணவு வழங்குவதை அதன் பிளேட்டை பார்த்து உணர்ந்து கொண்டவனுக்கு, ‘அவனையாவது கவனிக்கிறாளே...’ என எண்ணிக் கொண்டான்.

அவளுக்கோ, அவன் வீட்டில் அவனை இருக்க விடாமல் தான் செய்துவிட்டோமோ என்ற எண்ணம் எழுந்து பாடாய் படுத்தியது. அவன் கோபமாக பேசினாலாவது பரவாயில்லை, இந்த பாராமுகம் அவளை அதிகம் வதைத்தது.

அன்று அவன் வீட்டுக்கு வந்து குளித்துக் கிளம்ப, “என் அண்ணனை கொன்னது நீ, ஆனா என்னமோ தான் தப்பு பண்ண மாதிரி முறிக்கிட்டு போற, ஏன்..., நான்தான் உன்னை வீட்ல இருக்க விடாமல் பண்றேன்னு எல்லாரும் சொல்லவா?” கோபமாக இடையிட்டது அவளது குரல்.

இரண்டு நாட்களாக ஒருவன் இருக்கிறானா? சாப்பிட்டானா? என்று கூட ஒரு வார்த்தை கேட்காமல், இப்பொழுது அவள் இப்படி பேச்சைத் துவங்க, தன் கட்டுப்பாட்டையும் மீறி, அவனுக்கு கோபம் சுள்ளென பெருகியது.

“இன்னொரு முறை உங்க அண்ணனை கொன்னேன்னு சொன்ன..., என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. ஆமா..., அப்படியே அருவாள வச்சு, உன் அண்ணனை நடு ரோட்டில் ஓடவிட்டு வெட்டிக் கொன்னேன் பார்..., பொல்லாத அண்ணன்...” எகிறிக்கொண்டு வந்தவன், அவள் கண்களில் பயத்தை பார்க்கவே அப்படியே அடங்கிப் போனான்.

அவனுக்கோ, செய்யாத தவறுக்கு தண்டனை அனுபவிப்பதை போன்ற தோணல், அவனுக்கு அனைத்தும் ஞாபகம் இருந்திருந்தால் எப்படியோ, ஆனால் இப்பொழுது..., எதுவும் தெரியாமல்..., கடந்த இரண்டு நாட்களாக காமேஷ் பற்றிய விஷயம் கிடைக்குமா என அலசிவிட்டான்.

‘டாப் சீக்ரெட்...’ ஃபயில்களை கூட அலசிவிட்டான். என்கவுண்டர் லிஸ்டை பரிசோதிக்க, அதில் இருந்தும் மாயமாகி இருந்தது காமேஷின் டீட்டெயில்கள். ‘இதெப்படி சாத்தியம்...?’ அவனுக்கு மண்டை காய்ந்தது மட்டும் உண்மை.

‘இதை யாரிடம் கேட்க...?’ அவனுக்கு எந்த வழியும் புலப்படவில்லை. அதிலும் அவனது தகவல்கள் அனைத்தும் மாயமாகி இருக்கிறது என்றால், இதன் பின்னணியில் அரசியல் இல்லாமல் இருக்காது என்பது அவனது வலுவான எண்ணம்.

சொல்லப்போனால் இந்த இரண்டு நாளில், அவளது கோபத்துக்கான பின்னணியை முழுதாக ஆராய்ந்து, அதற்கான விடையை அவளுக்கு கொடுத்துவிட வேண்டும் என அவன் போராடியிருக்க, அதன் பலன் பூஜ்யம் என்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

இரண்டு நாட்களாக கல்பனாவின் கேஸை விசாரிக்காமல், காமேஷின் கேஸ் பின்னால் செல்ல, ஒரு நுனியை கூட கண்டுபிடிக்க முடியாமல் சோர்ந்து போனான் என்பதுதான் உண்மை. அந்த டென்ஷனில் அவன் சுற்றிக் கொண்டிருக்க, அவளது பேச்சு பெரும் கோபத்தை கொடுத்தது.

“புரியாதவங்க கிட்டே கூட பேசிடலாம்..., ஆனா, புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறவங்க கிட்டே பேசவே முடியாது. நீ ரெண்டாவது ரகம்...” ‘ச்சீ போ...’ என்னும் விதமாக அவள் முகத்துக்கு நேராக கையை ஆட்டியவன், வேகமாக வெளியேறினான்.

அன்று அலுவலகத்தில் பிஸியாக இருக்க, அன்நோன் நம்பரில் இருந்து அழைப்பு வர, சற்று புருவம் நெரிய அதை ஒரு நொடி வெறித்தவன், வேகமாக அழைப்பை ஏற்றான்.

“என்ன எஸ்பி சார்..., மூடின கேஸை மறுபடியும் தோண்டுற போல, வேண்டாம் விட்டுடு. இல்ல...” அவன் மிரட்ட, வாயில் மென்ற சுவிங்கத்தோடு சுவாரசியமாக கதை கேட்கும் பாவனையில் இருந்தவனோ, பேசுபவனின் குரலில் இருக்கும் சிறு பதட்டம், அதை மறைக்க அவன் முயலும் விதம் என அனைத்தையும் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

கூடவே... ‘வெளியே யாருக்கும் தெரியாத விஷயம், என்னுடன் இருக்கும் யாழினிக்கே நான் சொல்லாத விஷயம், கந்தனுக்கு கூட அறிவிக்காமல் ஒற்றையாக தேடும் விஷயம், இவனுக்கு எப்படித் தெரியும்?’ மூளை அதன் போக்கில் கணக்கிட்டது.

‘இதைப் பற்றி வெளியே விசாரித்ததை எவனோ கவனிக்கிறான். யார் அவன்? நிச்சயம் சாதாரணமானவனா இருக்க வாய்ப்பில்லை’ இடக்கை அவன் புருவத்தை அழுத்தமாக வருட, மற்றவன் பேச்சை கவனித்தான்.

“ஹலோ..., ஹலோ...” பிரம்மா பதில் சொல்லாமல் போகவே, அவன் லைனில் இல்லையோ என கத்தினான்.

“ம்..., சொல்லு..., இருக்கேன்...” வெகு நிதானமாக கேட்க, எதிரில் இருந்தவனுக்கு ஒரு நொடி என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“உன் பொண்டாட்டி உனக்கு உயிரோட வேணுமா வேண்டாமா? இந்த நிமிஷம், நான் நினைத்தால் அவளை கொன்னுடுவேன் தெரியுமா?” அவன் சொல்ல, ஒரு நொடி தான் சுவிங்கம் மெல்வதை நிறுத்தினான்.

அடுத்த நிமிடம், தன் டேபிள்மேல் இருந்த லேண்ட்லைன் போனில் இருந்து காயத்ரியின் அலைபேசிக்கு அழைப்பு விடுக்க, அது ரிங் போய்க்கொண்டே இருந்ததே தவிர, அதை அவள் எடுக்கவே இல்லை. மீண்டும் மீண்டுமாக முயல, அது தோல்வியைத் தழுவ முதல் முறையாக அவன் மனதுக்குள் ஒரு பயம்...,

“குலைக்கிற நாய் கடிக்காது..., வைடா போனை...,” அவன் உரைத்த கெட்ட வார்த்தைகளைக் கேட்டு மற்றவன் திகைத்துப் போனான்.

அடுத்த நிமிடம், தேகம் முழுவதும் தீ பற்றிய உணர்வில் இருக்கையில் இருந்து எழுந்தவன், ஜீப்பை நோக்கி பாய்ந்திருந்தான். “கந்தன் ஃபாஸ்ட்...” அவன் உரைக்க, அவன் வேகம் உணர்ந்து ஜீப்பை ராக்கெட் வேகத்தில் செலுத்தத் துவங்கினார்.

“வீட்டுக்கு போங்க...” அவன் அலைபேசியில் மீண்டும் மீண்டும் அழைப்பதும், அவனது முகத்தில் இருந்த பெரும் பதட்டத்தையும் பார்த்தவருக்கு, தன்னையும் அந்த பயம் தொற்றிக் கொண்டது.

‘காயு, போனை எடு...’ மானசீகமாக அவன் மனம் மன்றாட, அது அவளுக்கு கேட்குமா என்ன?

*****

# பகுதி – 24.

ஜீப் சாலையில் விரைய, “கந்தன்…, வேகம்…” அவன் உரைத்தது அவ்வளவுதான். அவன் அவசரம் புரிந்தவர்போல், ஜீப்பை அதி வேகத்தில் செலுத்தினார். பொதுவாக அவன் சாலையில் செல்கையில் சைரனை ஒலிக்க விட அனுமதிக்க மாட்டான்.

இன்று அவனது அனுமதி இன்றியே சைரனை ஒலிக்கவிட்டவர், ஆக்சிலேட்டரை அழுத்தினார். ‘ஏதாவது பிரச்சனையா சார்…’ அவருக்கும் கேட்க ஆசைதான். ஆனால், அப்படியான கேள்விகளை அவன் எப்பொழுதுமே விரும்பியதில்லை என்பதால் அமைதியாக தன் வேலையை மட்டும் செய்தார்.

அவனோடு இருக்கும் இத்தனை வருடங்களில், முதல் முறையாக அவன் முகத்தில் பதட்டத்தை காண்கிறார். என்கவுண்டர் செய்யச் செல்லும் பொழுது கூட, முகத்தை உணர்வுகள் தொலைத்த விதத்தில் வைத்திருப்பவன், முதல் முறையாக பதட்டமாக இருக்கிறான்.

நிச்சயம் இதற்குப் பின்னால் காயத்ரிதான் இருக்கிறாள் என்பதில் அவருக்கு சந்தேகமே இல்லை. ‘புதுசா கல்யாணமான ஜோடிங்க மாதிரியா இருக்காங்க?’ தனக்குத் தானே எண்ணிக் கொண்டார்.

அவன் திருமணம் முடித்த அடுத்த நாளே ஸ்டேஷன் வந்து நிற்க, அவனைத் துளைத்த அநேகம் பார்வைகளை அவன் கண்டுகொள்ளவே இல்லை. கந்தனுக்குத்தான் கவலையாக இருந்தது. ஆயிரம் இருந்தாலும் அவரும் இரு குழந்தைகளுக்கு தந்தை ஆயிற்றே.

தான் பெற்ற பிள்ளைகளின் வாழ்வு இப்படி தாமரை இலை தண்ணீராக இருந்தால் அவர் தாங்கிக் கொள்வாரா என்ன?

பிரம்மாவின் உணர்வுகள் சற்று நேரம் அவன் பேச்சை கேட்க மறுத்தது என்றே சொல்லலாம். போன் செய்து தன்னிடம் பேசியவனின் பேச்சை அவன் அவ்வளவு

சுலபமாக நம்பத் தயாராக இல்லை. ஆனால், தன் அழைப்பை அவள் எடுக்காதது மட்டுமே பதட்டத்தை கொடுத்தது.

‘வீட்டுக்குள்ளேயே ஏதாவது ஆகி இருக்குமோ? இல்லையென்றால் தவறான முடிவுக்கு எதுவும்…’ அந்த தன் யோசனை அவனுக்கே பிடிக்காமல் அப்படியே நிறுத்தி விட்டவன், விடாமல் அழைத்தான்.

வீட்டில் காயத்ரியோ…, தன் அருகில் விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த அலைபேசியை முறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். ‘பெரிய இவனாட்டம் கத்திட்டு போன, இப்போ மட்டும் எதுக்கு போன் பண்றியாம்…? அதெல்லாம் எடுக்க முடியாது போ…, என்ன செய்வன்னு நானும் பாக்கறேன்…?’ மனதுக்குள் எண்ணியவள், நகத்தை கடித்து துப்பிக் கொண்டிருந்தாள்.

மனதின் ஓரத்தில், ‘ஏன் இத்தனை முறை போன் பண்றான்? ஏதும் அவசரமா இருக்குமோ? எடுப்போமா?’ எண்ணியவள், அந்த முடிவை உடனே மாற்றிக் கொண்டாள்.

‘முடியாது… எடுக்க மாட்டேன் போ… உன்னால் என்ன முடியுமோ செஞ்சுக்கோ’ பிடிவாதமாக அமர்ந்து கொண்டாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் வீட்டின் போர்டிகோவில் ஜீப் நிற்க, அது நிற்கும் முன்பே வீட்டுக்குள் பாய்ந்திருந்தான். வீட்டின் கதவு வேறு திறந்திருக்க, மனம் ஒரு நொடி அதிர்ந்துதான் போனது.

“காயு…” ஹாலில் இருந்து கத்தியவன், கிச்சனுக்குள் பார்த்துவிட்டு, அடுத்த நொடி மாடிக்கு தாவி ஏறினான். அவனது குரல் அவளை எட்டிய அடுத்த நிமிடம், அதிர்ந்து போனாள்.

‘வீட்டுக்கே வந்துட்டானா?’ எண்ணியவள் அடுத்த நிமிடம், அறைக்குள் இருந்து அலைபேசியோடு அவள் வெளியே வர, படிகளில் தாவி வந்தவன், வந்த வேகத்தில் அவள் மேல்

மோதிவிடாமல் இருக்க, பட்டென நின்று, வேகவேகமாக மூச்சு வாங்கினான்.

ஒரு நிமிடம் முழுதாக அவளை தலைமுதல் பாதம் வரை அலசியவன், அவளுக்கு எதுவும் இல்லை, நன்றாக இருக்கிறாள் என மூளை அவனுக்கு உணர்த்திய பிறகே அடுத்த நினைவு வந்தது.

அவள் கரத்தில் இருந்து ஒலித்துக் கொண்டிருந்த அலைபேசியைப் பார்த்தவன், சுள்ளென எழுந்த கோபத்தில், அவள் கரத்தில் இருந்த அலைபேசியை பிடுங்கி தரையில் விசிறியடித்தான்.

“உனக்கெல்லாம் எதுக்குடி போன்...? என் உயிரை வாங்கணும்னே பிறப்பெடுத்தியா? கொல்றதுன்னா ஒரேடியா கொன்னுடு..., இப்படி கொஞ்சம் கொஞ்சமா சாகடிக்காதே...” கத்தியவனுக்கு மண்டைக்குள் பெரும் இடி இடிக்கும் உணர்வு.

“ஸ்...” தலையை ஒரு நொடி பற்றிக் கொண்டவன், அடுத்த நொடி, தங்கள் அறைக்குள் புகுந்து கதவை அடித்து சாற்றியிருந்தான். பெரும் ஓசையில் அது பூட்டிக் கொள்ள, உறைந்துபோய் நின்றிருந்தாள்.

அந்த சிறு இடைவேளைக்குள், அவன் மூக்கில் இருந்து வழிந்த ஒற்றைத் துளி ரத்தம், அவள் பார்வைக்குத் தப்பவில்லை. அதை முழுதாக கவனிக்கும் முன்பாக, அவன் அறைக்குள் நுழைந்திருந்தான்.

அதிலும் பிரம்மாவின் பதட்டம், கோபம்..., அவன் உதிர்த்த வார்த்தைகள், அவன் வந்த வேகம்..., அவனது யூனிபாம் தொப்பலாக நனைந்திருந்த விதம், ஏதோ விபரீதம் என்பதை மட்டுமே அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

அதிலும் இறுதியாக அவன் தலையைப் பிடித்த விதம்..., பெரும் வலியை தாங்கிக் கொள்ளும் விதமான அவனது முகபாவனை..., அவளால் வெளியே நிற்க முடியவில்லை.

‘மூக்கில் ரத்தம் வருது… நான் பார்த்தது சரியா இல்லையா?’ பதறிப் போனாள். அந்த பதட்டம் எதனால் வந்தது என அவள் ஆராய தயாராக இருக்கவில்லை, அடுத்த நிமிடம் தானும் அறைக்குள் பாய்ந்திருந்தாள். வெளியே சிதறியிருந்த தன் அலைபேசியை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

அறைக்குள் அவன் இருக்கும் சுவடே இல்லை. ‘பால்க்கனியில் இருப்பானோ…?’ எண்ணியவள், வேகமாக அங்கே சென்று பார்க்க, அதுவோ வெறுமையாக இருந்தது.

பாத்ரூமுக்குள் புகுந்திருந்த பிரம்மாவின் நிலையோ சொல்ல முடியாத விதத்தில் இருந்தது என்றே சொல்லலாம். அவனது மூக்கில் இருந்து வழிந்த சில துளி ரத்தம்…, தலையில் சம்மட்டியால் யாரோ அடிக்கும் உணர்வு, அவனால் தாங்கிக்கொள்ள முடியவே இல்லை.

‘உடனே மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்…’ அவனது மனம் உணர்த்த, முகத்தை கழுவியவன், வேகமாக வெளியே வந்து, தான் இரண்டு நாட்களாக போடாமல் விட்டிருந்த மாத்திரையை வேகமாகப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டு, நீரை வாயில் சரித்துக் கொண்டான்.

இதற்கு முன்னர் டென்ஷன் ஆனால் தலை வலிக்கும்தான்…, இப்படி ரத்தம் வழிவது இல்லை. முதல்நாள் மருத்துவமனையில் வந்த பிறகு, வீட்டில் இதுவே முதல் முறை. என்னதான் திடனான ஆண்மகன் என்றாலும் உயிர் பயம் என்பது அனைவருக்கும் பொதுவல்லவா.

சில நிமிடங்கள் இமை மூடி அழுத்தமாக நிற்க, அவனது செய்கையை பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு இதை என்னவென்று நினைப்பதாம்? கண்கள் தானாகவே கலங்க, ‘போனை எடுக்காமல் விட்டிருக்கக் கூடாது. ஒரு போலீசான அவன் விடாமல் அழைக்கிறான் என்றால், ஏதும் விஷயம் இல்லாமல் இருக்குமா என்ன?

‘அவனிடம் பேச விருப்பமில்லை என்றால், ஆன் செய்துவிட்டு பேசாமலாவது இருந்திருக்கலாம். அவன் இத்தனை முறை அழைத்தும் அவள் எடுக்கவில்லை என்றால், அவன் என்னவென்று நினைத்திருப்பான்?’ காலம் கடந்த நினைவு.

அவன் மாத்திரையை போட்டுவிட்டு அப்படியே அசையாமல் நிற்க, அவளுக்கோ அந்த நிமிடங்கள் நெருப்பின்மேல் நிற்கும் உணர்வைக் கொடுத்தது. அவன் அடிக்கடி எதிர்கொள்ளும் இந்த தலைவலி, அவன் இப்பொழுது போட்டுக்கொள்ளும் மாத்திரை..., அவள் இதயம் தாறுமாறாய் எகிறியது.

‘அவனுக்கு என்னவோ செய்கிறது..., என்ன அது?’ தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வேகம். அவனோ, ‘இவளுக்கு உண்மையை சொல்லிவிடுவதுதான் உத்தமம். இல்லையென்றால், இன்னும் என்னவெல்லாம் விபரீதத்தை இழுத்து வைப்பாளோ’ எண்ணியவன் ஆழமாக மூச்செடுத்தான்.

‘சொல்லிவிட்டால் என்ன செய்வாள்? சந்தோஷப்படுவாளா? கேலி செய்வாளா? கோபம் கொள்வாளா?’ ஏனோ இந்த அழுத்தத்தை இதற்குமேல் தாங்க முடியாது என்ற எண்ணம். தன்னைப்பற்றிய உண்மை அவளுக்கு முழுதாக தெரிய வேண்டும் என இருந்தது.

தலைவலி இப்பொழுது சற்று இறங்கியிருக்க, ஆசுவாசமாக உணர்ந்தான். அவனை நெருங்கியவள், அவனை அழைக்கவா, வேண்டாமா என சிந்தித்தவாறே, அவன் தோளைத் தொட கையை நீட்டுவதும், மடக்குவதுமாக திணறிக் கொண்டிருந்தாள்.

உள்ளம் பதறிக் கொண்டிருந்தாலும், அவன் கோபத்தை எதிர்கொள்ளும் தைரியம் அவளுக்கு சுத்தமாக இல்லை என்றே சொல்லலாம். அதற்காக அவனை அப்படியே விட முடியுமா? தனக்கு முகம் காட்ட மறுக்கும் அவன் செய்கை, கையில் இருந்த கர்ச்சீப்பை பாக்கெட்டுக்குள் திணித்த வேகம், அனைத்தையும் கண்டுகொண்டாள்.

இறுதியாக முடிவெடுத்தவள், அவன் தோளைத் தொட, விருட்டென அவள் பக்கம் திரும்பியவன், அழுத்தமாக அவளை ஏறிட்டான். பார்வையோ, ‘என்ன...?’ என கேட்டுக் கொண்டிருந்தது.

“உங்களுக்கு என்ன பண்ணுது...? என்ன மாத்திரை அது...?” அவளால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

“ம்..., கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டு இருக்கேன்னு சொன்னால் சந்தோஷப் படுவியா...? அப்படின்னா ஆமா..., போதுமா...?” முகம் இரும்பாய் இறுகி இருக்க, குரலும் அப்படியே வெளிவந்தது.

“எ..எ..என்ன...? முதல்ல ஹாஸ்பிடல் வாங்க..., போகலாம்...” அவன் குரலில் மருந்துக்கும் இளக்கம் இல்லாமல் இருக்க அவள் என்னவென்று நினைக்க? பதைத்துப் போனாள்.

அவன் அசையாமல் போகவே..., “பிளீஸ்..., உண்மையை சொல்லுங்க” அவள் குரல் அவனிடம் கெஞ்சிற்று.

“இப்போ நான் சொன்னால் மட்டும் நீ நம்பிடுவியா என்ன? என் வார்த்தைகளை நம்பாதவளுக்கு நான் எதையும் சொல்லப் போவதில்லை” அழுத்தமாகவே நின்றுகொண்டான்.

இப்படிச் சொன்னால் அவள் என்ன நினைப்பதாம்? ஏற்கனவே சிறு பயத்தில் இருந்தவளுக்கு, முழு பயம் தொற்றிக்கொள்ள, கண்களும் சேர்ந்து கலங்கியது.

“இப்போ சொல்லப் போறீங்களா இல்லையா...?” குரல் சற்று நடுங்கியது.

‘என் பதிலை எப்பொழுதோ சொல்லிவிட்டேன்...’ பார்வையாலேயே உரைத்தவன், சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள முயல, வேகமாக அவன் கரத்தை தடுத்தாள்.

“முன்னாடியே சொல்லியிருக்கேன்..., நீயா என்னைத் தொட்டால் பனிஷ்மென்ட் கொடுப்பேன்னு...” அவன் சொல்ல, அதைக் கண்டுகொள்ளும் நிலையில் அவள்

இருக்கவில்லை. அவன் தோள் உரசும் அளவுக்கான நெருக்கம்..., அதை அவன் கண்டுகொண்ட அளவு, அவள் உணரவில்லை.

இப்பொழுது அவன் கண்களில் மட்டும் சிறு மாறுதல், அதை அவள் உணரவில்லையா, இல்லை அதை அவன் அவளிடம் வெளிப்படுத்தவில்லையா என்பது தெரியவில்லை. ஆனால், ‘சொல்லாமல் விட மாட்டேன்...’ என பிடிவாதமாக அவள் நின்றாள்.

இவனிடம் கேட்டால் வேலைக்கு ஆகாது என்பதை உணர்ந்தவள், “சரி கிளம்புங்க, ஹாஸ்பிடல் போகலாம்..., நான் அவங்க கிட்டேயே கேட்டுக்கறேன்” இன்னுமே அவன் கரம் அவள் கரத்தில் சிறை பட்டிருந்தது.

“அவங்ககிட்டே நான் ஏற்கனவே சொல்லி வைத்திருக்க மாட்டேன்னு என்ன நிச்சயம்...?” வினவியவன், அவளை விட்டு விலகி நின்றான்.

அவளுக்கு பாறையில் மோதும் உணர்வுதான் எழுந்தது. ‘இவனாகவே சொல்லாமல், செய்யாமல், என்னால் எதுவும் செய்ய வைக்க முடியாது’ அவளுக்கு அந்த நொடி புரிந்து போனது.

அவள் முகத்தில் ஒரு அடிபட்ட பாவனை வெளிப்பட, அதை அவனால் தாங்க முடியவில்லை. வேகமாக அவளை விட்டு விலகி, சோபாவில் சென்று அமர்ந்து கொண்டான். ‘நான் எங்கும் வர முடியாது?’ இரும்பாகவே அமர்ந்திருந்தான்.

“என்னங்க..., நான் சொல்றது உங்களுக்கு கேக்குதா இல்லையா? வாங்க..., உடனே ஹாஸ்பிடல் போகலாம்...” அவளால் அவனை அப்படியே விட முடியவில்லை. உள்ளம் மொத்தமும் கலங்கித் தவித்தது.

‘இங்கே இருந்து அசையவே மாட்டேன்...’ பிடிவாதம் முகத்தில் தெறிக்க, இமை மூடி சோபாவில் சாய்ந்து கொண்டான். அவனது பிடிவாதத்தின் முன்னால் தோற்றுக் கொண்டிருந்தாள் காயத்ரி.

‘எதையாவது செய்து அவனை உடனே ஹாஸ்பிடல் அழைத்துச் சென்றே ஆக வேண்டும்…’ பரிதவித்தவள், தன் அலைபேசி வேறு அப்பொழுது இல்லாமல் போக, அவனது அலைபேசி எங்கே என்று பார்வையால் துழாவியவள், அது கட்டில்மேல் கிடக்கவே, வேகமாக அதைச் சென்று எடுத்தாள்.

அவனது அலைபேசியை எடுத்தவள், அவன் இருந்த மருத்துவமனையின் போன் நம்பரை கூகிளில் தேடி எடுத்தவள், ரிஷப்ஷனுக்கு அழைத்து, ஆம்புலன்சை வரச் சொல்ல, பாய்ந்து வந்தவன் அலைபேசியை அவள் கையில் இருந்து பிடுங்கி, அழைப்பை துண்டித்தான்.

“இப்போ ஆம்புலன்ஸ் வந்தால் மட்டும் நான் அதில் ஏறிடுவேனா? வர முடியாதுன்னு சொன்னால் என்ன செய்வாய்…?” இப்பொழுது அவன் குரலில் கோபத்தின் அளவு குறைந்திருந்தது.

“கட்டி தூக்கிட்டுப் போவேன் போதுமா…?” கதறியவள், அவன் நெஞ்சில் விழுந்து கதறத் துடித்த வேகத்தை அடக்கி, கட்டிலில் பொத்தென அமர்ந்து, முகத்தை கரத்தால் மூடிக் கொண்டாள். அவனது அந்த பிடிவாதம், அதை அவலால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவளையே அசையாமல் பார்த்தவன், “கிளம்பு…” உரைத்துவிட்டு, விலகிச் சென்று, தன் யூனிபாம் சட்டையை வேகமாக கழட்டிவிட்டு, ஒரு வெள்ளை டிஷர்ட்டைஎடுத்து அணிந்து கொண்டான்.

‘கிளம்புறதா…? எங்கே…? என்னை அனுப்பிவிடப் போகிறானா?’ உள்ளம் தவித்தாள். அவனைப் பிடிக்காதவள், அவன் அனுப்பிவிடப் போகிறானோ என பதறுவது எதனால்? அதை அவள் சிந்திக்கவே இல்லை.

அவன் அங்கே இருந்த சோபாவில் அமர, அவள் அசையாமல் இருப்பதைப் பார்த்தவன், “நான் என்ன சொன்னாலும் கேக்கக் கூடாதுன்னு முடிவோட இருக்கறியா…? சொன்னது காதில் விழல, கிளம்பு…,

இன்னொரு முறை என்னை சொல்ல வைக்காதே...” அடக்கப்பட்ட கோபத்தில் அவன் பொருமுவது புரிய, அவளுக்கு அதற்குமேல் எதையும் கேட்கும் தைரியம் இருக்கவில்லை.

அறைக்குள் அவன் இருப்பதையும் பொருட்படுத்தாமல், படுக்கைக்கு அந்தப் பக்கம், அவனுக்கு முதுகு காட்டி நின்று உடை மாற்றியவள், நொடியில் கிளம்பியிருந்தாள்.

‘நான் ரெடி...’ என அவள் சொல்லும் முன்பாகவே சோபாவில் இருந்து எழுந்தவன், அழுத்தமான நடையோடு அவளை நெருங்கினான்.

“இந்த வீட்டை விட்டு வெளியே, என்னோடு வரும்பொழுது, நான் என்ன சொன்னாலும், அதை ஏன் எதுக்குன்னு கேள்வியே கேட்காமல் அப்படியே செய்யணும்..., புரியுதா?” அவன் இரும்பு குரலில் உரைக்க, மறுப்பே இல்லாமல் கேட்டுக் கொண்டாள்.

மறுத்து எதையும் கேட்டுவிடும் தைரியம் இல்லை என்றே சொல்லலாம். இதயத்துக்குள் அவ்வளவு நேரமாக இருந்த பதட்டம் முற்றாக விலகி ஓடுவதை அறிந்து திகைத்துத்தான் நின்றாள். ‘அப்போ என்னை அனுப்பிவிடப் போவதில்லை’ ஆசுவாசமாக உணர்ந்தாள்.

“அதே மாதிரி..., இப்போ நீ வெறும் காயத்ரி இல்லை..., இந்த சிட்டியின் எஸ்பியோட மனைவி. உன் எதிரில் இருப்பவர்களின் மேல் உன்னோட மூணாவது கண் விழிப்போட இருக்கணும். உன்கிட்டே பேசுறவங்க உண்மையை பேசுறாங்களா? பொய் பேசுறாங்களான்னு கண்டுபிடிக்கத் தெரியணும்.

“எதிரில் இருப்பவர்களின் வார்த்தைகளை படிப்பதை விட, அவங்களோட கண்ணை படிக்க முயற்சி செய்..., ஏன்னா..., கண்ணுக்கு எப்பொழுதும் பொய் சொல்லத் தெரியாது..., எந்த நிமிஷமும் இதை உன் ஞாபகத்தில் வச்சுக்கோ...” அவ்வளவுதான் என முன்னால் நடந்தான்.

இப்பொழுது அவன் முகம் பார்க்கவே அவளுக்கு அவ்வளவு அச்சமாக இருந்தது. இறுகிய பாறையை ஒத்திருந்தது அவனது முகம். குரலில் இருந்த இறுக்கம்..., உள்ளுக்குள் குளிர் பிறந்தது என்றே சொல்லலாம்.

அமைதியாக அவன் பின்னால் வர, வெளியே வந்தவன், “கந்தன், நான் ஹாஸ்பிடல் கிளம்பறேன்..., நீங்க வண்டியில் ஸ்டேஷன் போய்டுங்க...” உரைத்தவன் ஜீப்பில் ஏற, மறு பேச்சின்றி தானும் ஏறி அமர்ந்தாள்.

தன் அலைபேசியை எடுத்தவன், ஷீபாவை அழைத்தான். “இப்போ நீங்க ப்ரீயா? ஒரு அரைமணிநேரம் அப்பாயின்மென்ட் வேணும்..., ஆமா..., நேர்ல சொல்றேன்...” அவரோடு பேசியவன் அலைபேசியை வைத்து விட்டான்.

மருத்துவமனிக்கு வந்து சேரும் வரைக்கும் இருவரிடமும் பேச்சு என்ன, பார்வைப் பரிமாற்றம் கூட இருக்கவில்லை. பார்கிங்கில் ஜீப்பை நிறுத்தியவன், அவளை அழைத்துக் கொண்டு லிப்டுக்குள் நுழைந்தான். காரணமின்றியே அவள் மனம் திடுமென அதிர்ந்து கொண்டிருந்தது.

‘இவனுக்கு எதுவும் பெரிய வியாதியா? இல்லையென்றால் அந்த ஆக்ஸிடென்ட் ஆனதால் ஏற்பட்ட பாதிப்பா?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டவளின் கண்கள் அலைபாய்ந்தது.

அவன் ஷீபாவின் அறையை நெருங்கவே, “சார், உள்ளே இருக்கும் பேஷன்ட் வந்த உடனே நீங்க போகலாம்..., அப்படி உக்காருங்க” இருக்கையை காட்டிய ஜான்சி, தன் இடம் சென்றாள்.

காயத்ரியை இருக்கையில் அமரச் சொன்னவன், சுவிங்கத்தை வாயில் எடுத்து போட்டுக் கொண்டு, பேண்ட் பாக்கெட்டில் கை நுழைத்தவாறு நின்றுகொண்டான்.

அடுத்த பத்து நிமிடங்கள் கடக்க, “சார்..., நீங்க போகலாம்...” ஜான்சி உரைக்க, ஒரு தலையசைப்போடு ஷீபாவின் அறைக்குள் நுழைந்தான்.

“வாங்க பிரம்மா..., உக்காருங்க...” அவர்களுக்கு இருக்கையை காட்டியவர், அவர்கள் அமரவே ‘சொல்லுங்க...’ என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“ஷீ இஸ் மை ஒய்ஃப் காயத்ரி...” முதலில் மனைவியை அறிமுகப்படுத்த, “ஹலோ டாக்டர்...” அவள் சொல்ல, ஒரு புன்னகையில் அவளோடு அறிமுகமாகிக் கொண்டார்.

“டேப்லட் இப்போ எடுத்துக்கறீங்களா? தலைவலி ஏதாவது அதற்குப் பிறகு வந்ததா?” அவர் ஒரு மருத்துவராக கேட்க,

“கொஞ்சம் தலைவலி இருக்கு..., உரைத்தவன், தான் கையில் மறைத்து வைத்திருந்த தன் கர்ச்சீப்பை குறிப்பால் காட்ட, அதைப் பார்த்தவர், சற்று அதிர்ந்து, “பிரம்மா, ஏற்கனவே நான் உங்களுக்கு சொல்லியிருக்கேன், நீங்க டென்ஷன் ஆகக் கூடாது..., அப்படி ஆனால், நீங்க நார்மலாகுற நாளும் தள்ளிப் போகும்.

“இதற்குதான் சொன்னேன்..., முழுசா மூணு மாசம் ரெஸ்ட் எடுத்துட்டு வேலைக்குப் போங்கன்னு. அதைக் கேட்காமல் இப்போ..., கண்டிப்பா உடனே நான் எழுதித்தர்ற ஸ்கேன் போய் எடுத்துட்டு வாங்க. இன்னைக்கு உங்களுக்கு எந்த எக்ஸ்கியூசும் கிடையாது...” கிட்டத்தட்ட அவனை கண்டிக்கும் விதத்தில் பொரிந்தார்.

அவர்கள் பேசுவதை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் காயத்ரி. அவளுக்கு, அவன் தான் மறைத்து வைத்திருந்த கர்ச்சீப்பை காட்டியதும் தெரியவில்லை, அவர் எதற்காக கோபப்படுகிறார் என்பதும் புரியவில்லை. அங்கே ஒரு பார்வையாளராக மட்டுமே அவளால் இருக்க முடிந்தது.

“ஓகே..., இன்னைக்கு ஸ்கேன் எடுக்கறேன்” உரைத்தவன், அவர் எழுதிக் கொடுத்த ஸ்லிப்பை வாங்கிக் கொண்டு வெளியேறினான். செல்லும் முன்னர் அவன் பார்வை தன் மனைவியை ஒரு நொடி தொட்டு மீள, கூடவே ஷீபாவை பார்த்தவன் மெல்லியதாக தலை அசைக்க, அவன் சொல்ல வருவதை நொடியில் புரிந்து கொண்டார்.

‘நீங்க போங்க, நான் பார்த்துக் கொள்கிறேன்’ என பார்வையால் உரைக்க, அங்கிருந்து வெளியேறினான். தன் தவிப்பில் இருந்தவளுக்கு அவர்களது பார்வை பரிமாற்றம் புரியவில்லை.

அவன் எப்பொழுது வெளியே செல்வான் எனக் காத்துக் கொண்டிருந்த காயத்ரி, ஷீபாவிடம், எதை எப்படிக் கேட்கவென்று தெரியாமல் திணறிப் போனாள்.

“சொல்லுங்க காயத்ரி..., உங்க மேரேஜ் லைப் எப்படிப் போகுது” அவளைக் கலைத்தார் ஷீபா.

அவ்வளவு நேரமாக வாசல் பக்கமே, பிரம்மா செல்வதையே பார்த்துக் கொண்டு, அங்கே கவனமாக இருந்தவள், அவர் கேள்வியில் கலைந்து வேகமாக அவர் முகம் பார்த்தாள்.

கூடவே, இதற்கு என்ன பதில் சொல்வது?’ எனத் தெரியாத ஒரு தடுமாற்றம் அவளிடம். கல்யாணம் முடிந்த இந்த ஒரு வாரத்தில், அவனிடம் சண்டை போட்டதை தவிர பெரிதாக எதுவும் நடந்துவிடவில்லை, இதில் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் அவள் என்ன பதில் சொல்வதாம்?

“டாக்டர்..., அவர்..., அவருக்கு...?” என்னவோ அவனுக்கு என்னவென்று தெரிந்துகொள்ளும் ஆர்வம்தான் அதிகம் இருந்தது. கூடவே சிறு பயமும்!

“சொல்றேன்..., அதைச் சொல்லத்தானே உங்களை இங்கே அழைத்து வந்திருக்கிறார் மிஸ்டர் பிரம்மா...” அவர் வயதுக்கு, அவனை அவர் மரியாதையாக அழைக்கும் விதம், அவள் மனதைச் சுட்டது.

‘இவங்க வயசுக்கு, இவங்களே அவரை மரியாதையா அழைக்கும்போது, நான் அவரை வா, போ என அழைக்கிறேனே...’ மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

“ஒரு விஷயம் சொல்லவா...? பிரம்மா, அவரோட வாழ்வில் ஒரு பெண் வருவாளா என்பதே என்னைப் பொறுத்த வரைக்கும் மிகப்பெரிய கேள்விக்குறியா இருந்தது.

அவரோடு, என்னோட சந்திப்புக்கள் எதுவுமே சரியானதா இருந்தது இல்லை.

“அதற்காக அது தவறான சந்திப்புகள்னு சொல்ல வரலை, என் வேலைக்கும், அவர் வேலைக்கும், என் நியாயங்களுக்கும், அவர் நியாயங்களுக்கும் எப்பொழுதும் மலையளவு வித்தியாசம் இருந்திருக்கு. ஒரு விஷயம் நியாயம்னு தெரிந்தால், அதை எந்த நிலைமையிலும் செய்யாமல் விட மாட்டார்.

“அது இன்னொரு உயிருக்கு ஆபத்து என்றால் கூட அதை கொஞ்சம் கூட தயங்காமல் செய்வார். என்னைப் பொறுத்த வரைக்கும், அந்த உயிரை காப்பாற்றுவது மட்டுமே பிரதானமா இருக்கும். அதனால் வந்த கோபங்கள்தான்.

“சொல்லப்போனால் அந்த பிரம்மாவை எனக்கு சுத்தமா புடிக்காது..., ஆனால் இப்போ இருக்கும் பிரம்மாவை...” இழுத்தவர், கையில் இருந்த பேனாவை கீழே வைத்துவிட்டு, கரங்களை மேஜைமேல் வைத்து கோர்த்துக் கொண்டவர், அவளை விழிஎடுக்காமல் பார்த்தார்.

“எ..என்ன டாக்டர்..., எனக்குப் புரியலை...? அந்த பிரம்மா..., இப்போ இருக்கும் பிரம்மா...? அவர் உயிருக்கு...” அவள் பதைத்துப்போய் வினவ,

“நோ..., நோ..., நான் சொல்ல வந்த விஷயமே வேற. இதை நீங்க எப்படி எடுத்துப்பீங்க என்பது தெரியலை. பட், அவரைப் பற்றி முழுதாக நீங்க தெரிந்தே ஆகணும். ஏன்னா..., இந்த உலகத்தில் ‘இப்போ’அவர் ஒருத்தரை முழுசா நம்பறார்ன்னா..., அது நீங்க மட்டும்தான்...” அவர் நிறுத்த, திகைத்துப்போய் அவரைப் பார்த்தாள்.

‘அவன் என்னை நம்புவதா...?’ அவளால் நம்பவே முடியவில்லை.

“எனக்குப் புரியலை...” அவர் சொல்ல வருவதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

“சொல்றேன்..., பிரம்மாவுக்கு ரெண்டு மாசத்துக்கு முன்னாடி ஒரு ஆக்சிடெண்ட் ஆச்சு, உங்களுக்குத் தெரியுமா?” அவர் கேட்க, ‘ஆம்’ என தலை அசைத்தாள்.

“அந்த விபத்தில்..., பின்தலையில் பலமான அடி, அதில், அவர் தன்னோட பழைய ஞாபகங்கள் எல்லாத்தையும் மறந்துட்டார். ஹீ இஸ் எ அம்னீஷியா பேஷண்ட் நவ்...” அவர் சொல்லி முடிக்க,

“வாட்...” கிட்டத்தட்ட அலறியவள் தன் இருக்கையில் இருந்து எழுந்தே விட்டாள். அவளால் கொஞ்சம் கூட நம்ப முடியவில்லை, கூடவே நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அவன் தன்னை திருமணம் செய்ய கேட்டது துவங்கி, திருமணநாள், ரிஷப்ஷன், அவனது தாயை தெரியாது என உரைத்தது, என அனைத்தும் அவள் கண்களுக்குள் உலா போனது.

“காயத்ரி, காம் டவுன்..., உக்காருங்க...” தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்தவர், அவள் தோளை அழுத்தி இருக்கையில் அமர வைத்தவர், தண்ணீரை எடுத்து குடிக்கக் கொடுத்தார்.

மறுக்காமல் வாங்கிப் பருகியவள், “அப்படின்னா..., அவருக்கு இப்போ எதையுமே, யாரையுமே ஞாபகம் இல்லையா?” பதைப்பாகவே கேட்டாள்.

‘எதையுமே ஞாபகம் இல்லாதவனைப் போய், தான் கத்தியால் குத்தியதும், இப்பொழுது வார்த்தைகளால் வதைப்பதும், அவனைப் பாடாய் படுத்துவதும் நினைவுக்கு வர, அவளுக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை.

அதைவிட, இந்த நிலைமையில், அவனை கத்தியால் குத்திய தன்னை அவன் திருமணம் செய்து கொண்டதை நினைக்கையில், ‘அவன் என்ன நினைப்பில் இதைச் செய்திருப்பான்?’ தன் கழுத்தில் கிடந்த தாலியை பார்த்துக் கொண்டாள்.

“இப்போ அவர் ஒரு ப்ளெயின் ஸ்லேட்..., இப்போ நடக்கும் சம்பவங்கள், மனிதர்களைத்தான் அவருக்குத் தெரியுமே தவிர, அந்த விபத்துக்கு முன்னர் அவர் வாழ்க்கையில் இருந்த மனிதர்கள், சம்பவங்கள், நிகழ்வுகள் இப்படி எதுவும் அவர் நினைவில் இருக்காது.

“இந்த நிலைமையில் பிரம்மாவா இருக்கப்போய் இப்படி திடனா தைரியமா இருக்கறார். அதுவும் வெளிப் பார்வைக்கு மட்டுமே...” அவர் நிறுத்த, அதிரும் இதயத்தை தடுக்க முடியாமல் அவரை ஏறிட்டாள்.

“டாக்டர்,,” அவள் அழைக்க, “எஸ்..., ஜஸ்ட் இம்மாஜின்..., இப்போ தூங்கிட்டு இருக்கீங்க..., முழிச்சுப் பாக்கும்போது உங்களுக்கு எதுவுமே ஞாபகம் இல்லை என்றால் உங்களது நிலை..., கூட இருக்கும் பிரம்மாவை யார்ன்னு தெரியாது..., அவர் நல்லவரா கெட்டவரா தெரியாது..., சுத்தி இருக்குறவங்க யார்ன்னு தெரியாது என்னும்போது உங்களோட நிலை என்ன?

“ஒரு சாதாரண மனுஷிக்கே இப்படின்னா, போலீசில், ஒரு பொறுப்பான இடத்தில் இருக்கும் அவரது நிலை..., பழகியவர்கள், பாக்குறவங்க, பேசுறவங்க, எதிரில் வர்றவன், போறவன்..., கூடவே இருக்குறவன் யார் நல்லவன், யார் கெட்டவன்..., இப்படி எதுவுமே தெரியாத ஒரு நிலை.

“தான் விசாரித்த கேஸ் பத்தியே அவருக்கு எதுவும் தெரியாது, யாரிடமும் கேட்கவும் முடியாது. கேட்டால்..., அவரது நிலையை அவங்க தப்பாவும் பயன்படுத்த வாய்ப்புகள் அதிகம். அது பிரம்மா கிட்டே நடக்காது என்றாலும், ஒவ்வொரு நிமிஷமும் ரொம்ப கவனமா இருக்க வேண்டிய அவரது நிலையை யோசிச்சு பாருங்க...” அவர் சொல்லச் சொல்ல, அவனது நிலை பூதாகரமாக அவளை மிரட்டியது.

கூடவே..., ‘அவர் உங்களை மட்டும்தான் நம்பறார்...’ என அவர் உரைத்த வார்த்தைகள் நினைவுக்கு வர, தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை.

“அவருக்கு பழசெல்லாம் எப்போ ஞாபகம் வரும்?”

“இத்தனை நாள்ன்னு அதை வரையறுக்கவே முடியாது. சில நாளும் ஆகலாம், சில வாரம், மாதம், வருடம்..., எப்போ வேண்ணா ஞாபகம் வரலாம்”.

“அப்படி ஞாபகம் வரப்போ, இப்போ இருக்க நினைவுகள் எல்லாம் மறந்துடுமா?” அதைக் கேட்கையில் அவளது பிபி எக்குத்தப்பாய் எகிறியது.

“இல்லைன்னு முடிவா சொல்ல முடியாது..., சில கேஸ்களில் அப்படி நடந்திருக்கு, சில கேஸ்களில் அப்படி நடக்கலை. உங்க பிரம்மா எப்படின்னு அவருக்கு எல்லாம் ஞாபகம் வந்த பிறகுதான் சொல்ல முடியும்” அவர் சொல்ல, தேகம் மொத்தமும் பதறியது.

‘என்னை மறந்துடுவானா?’ அந்த கேள்வி கொடுக்கும் துன்பம், அதை அவளால் தாங்க முடியவில்லை. ஏன் அதைப்பற்றி மட்டும் சிந்திக்கிறோம் என அவளுக்குத் தெரியவில்லை.

அவள் முகத்தில் இருந்த பாவத்தில் இளகியவர், அவள் கரத்தை அழுத்தி, “லெட்டஸ் ஹோப் பார் தி பெஸ்ட்..., ஒரு மனைவியா உங்களுக்கான இடம் அவர் மனதில் தனி..., அதை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிடவோ, அழிக்கவோ முடியாது...” அவளுக்கு நம்பிக்கை அளிக்க முயன்றார்.

அதிரும் இதயத்தை தடுக்கும் வகை தெரியாமல், “அவருக்கு சில நேரம் ரொம்ப தலைவலி...” கேட்கும் முன்பே, கண்களில் கண்ணீர் வழிந்தது. அது எதனால் என அவளுக்குத் தெரியவில்லை.

“பிரம்மா எதையுமே ரொம்ப ஸ்ட்ரெஸ் பண்ணி ஞாபகப்படுத்திக்க ட்ரை பண்ண கூடாது. அவர் ரொம்ப யோசித்தாலோ, கோபப்பட்டாலோ, ரொம்ப சத்தமா, டென்ஷனா பேசினாலோ அவருக்கு தலைவலி வரலாம். அவர் எவ்வளவு கூலா இருக்காரோ, அவ்வளவு சீக்கிரம் அவரோட ஹெல்த் இம்ப்ரூவ் ஆகும்...”

“முக்கியமான விஷயம்..., சில நேரம் அந்த எக்ஸ்ட்ரீம் டென்ஷனால், மூக்கில் இருந்து ப்ளட் வரலாம்..., அதோட மயக்கமும் சேர்ந்தால், அது அவரோட உயிருக்கே கூட ஆபத்தா முடியும்...” அவர் நிறுத்துகையில், காயத்ரியின் மூளை மரத்துப் போனதுபோல் உணர்ந்தாள்.

அவள் அசையாமல் இருக்கவே, அவள் தோளைத் தொட்டு உலுக்கவே, திடுக்கிட்டு நிமிர்ந்தவள், பரிதவிப்பாய் அவரைப் பார்க்க, “காயத்ரி, நீங்க தைரியமா இருந்து, அவரை பாத்துப்பீங்க என நினைத்து உங்ககிட்டே உண்மையை எல்லாம் சொன்னால், இப்படி அதிர்ந்துபோய் உக்காந்து இருக்கீங்க.

“இப்போ உங்களால் மட்டும்தான் அவரை பாத்துக்க முடியும், வெளியே அவர் எப்படி இருந்தாலும், வீட்டில் அவரைப் பாத்துக்க நீங்க இருந்தால், எல்லாம் சரியா நடக்கும், எதுக்கு டென்ஷன் ஆகறீங்க. இப்போ நீங்க அவரை புரிஞ்சுக்காமல் எதையோ செய்யப் போய்தான், அவர் உங்களை இங்கே அழைச்சுட்டு வந்திருக்கார்.

“உண்மையை தெரிந்த பிறகு, நீங்க அவரை புரிஞ்சுப்பீங்கன்னு எதிர்பாக்கறார். அதையேதான் நானும் சொல்றேன்..., அவர் இப்போ ஒரு பேஷண்ட், ஒரு பேஷண்டை எப்படி பாத்துப்பீங்களோ அப்படி அவரை பாத்துக்கோங்க.

“ரெகுலரா டேப்லட் சாப்பிட வைங்க..., அவரை டென்ஷன் ஆகாமல் பாத்துக்கோங்க. ஹெல்த்தி புட்..., உடற்பயிற்சி, எல்லாம் சேர்ந்தால், சீக்கிரமே அவருக்கு எல்லாம் நினைவுக்கு வந்துடும். சோ கூல்...” அவளை அமைதிப்படுத்த, அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை.

‘நினைவுக்கு வந்துவிட்டால்..., என்பதுதானே என் கவலையே...’ அவள் நினைக்க, “பழைய விஷயங்கள் நினைவுக்கு வராமலே போய்ட்டா?” அவளால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

“நிச்சயம் அதற்கும் வாய்ப்பு இருக்கு..., ஆனா, அவருக்கு பழைய விஷயங்கள் நினைவுக்கு வராமல் இருக்கும் வரைக்கும், அந்த மனிதனால் நிம்மதியாக இருக்க முடியாது என்பது மட்டும் உண்மை. ஒரு சின்ன பொருள், அதையே நாம கை மறதியா வச்சுட்டா, அது கிடைக்கும் வரைக்கும் டென்ஷனாவே தேடிட்டு இருப்போம்.

“அப்படி இருக்கும்பொழுது, நம்மோட நினைவுகளையே தொலைத்துவிட்டோம் என்றால், அதோட தேடல், தவிப்பு, பயம் எல்லாம் எவ்வளவு இருக்கும்...?” அவர் சொல்ல, தன் சுயநலத்தை எண்ணி நொந்து போனாள்.

“அவருக்கு பழசெல்லாம் மறந்துடுச்சுன்னு யாருக்கும் தெரியாதா?”.

“எனக்கு, அவரோட டிரைவர் கந்தன், முகேஷ்..., இப்போ நீங்க..., இந்த ரகசியம் உங்களை விட்டு வெளியே போகாதுன்னு நினைக்கறேன்...” அவர் சொல்ல, மறுப்பாக தலை அசைத்தாள்.

அவர்கள் பேசி முடிக்கையில் அவன் ரிப்போர்ட்டோடு வர, அதை வாங்கி பரிசோதித்தவர், “பிரம்மா..., இன்னொரு முறை நீங்க இவ்வளவு டென்ஷன் ஆகவே கூடாது. அது உங்கள் மூளையை இன்னும் அதிகமா பாதிக்கும், நான் இப்போ வேற டேப்லட் எழுதித் தர்றேன், அதை கண்டினியூ பண்ணுங்க...” எழுதிக் கொடுக்க அதைப் பெற்றுக் கொண்டவன், இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

மனைவியின் முகத்தை ஒரு நொடி பார்த்தவன், “என்ன டாக்டர், ரொம்ப பயம் காட்டிட்டீங்க போல, ஹேய், ஐ’ம் பெர்பெக்ட்லி ஆல் ரைட் ஓகே..., சப்போஸ் அவங்க ஏதாவது பயம் காட்டியிருந்தால், அந்த அளவுக்கெல்லாம் எதுவும் இல்லை. எந்திரி போகலாம்...” அவளது இறுக்கத்தை குறைக்க முயன்றான்.

“பிரம்மாவோட மனைவியை நான் பயம் காட்டுறதா? அது முடியுமா என்ன? நீங்க சொல்லச்சொன்ன உண்மையை மட்டும்தான் சொன்னேன், யூ டேக் கேர்..., இன்னைக்கு ஒரு

நாள் ரெஸ்ட் எடுங்க” அவரும் இலகுவாகவே பதில் சொன்னார். ஆனால் காயத்ரியின் முகம் மட்டும் தெளியவே இல்லை.

‘இவர் பேசுவதைப் பார்த்தால், டாக்டர் கிட்டே நான் உண்மையை எல்லாம் தெரிந்து கொண்டிருப்பேன்..., என பேசுவது மாதிரியே இருக்கே. டாக்டர் கூட பேசும்போது, அவர் அதுக்காக அழைத்து வந்திருப்பார், எனத்தானே சொன்னாங்க..., அதானே..., இவராவது என் பிடிவாதத்துக்கு இணங்குவதாவது?’ எண்ணிக் கொண்டாள்.

“ஓகே டாக்டர்...” அங்கிருந்து கிளம்பினர்.

ஷீபாவிடம் விடைபெற்று திரும்பியவன், சுவிங்கத்தை மென்றவாறே ஜீப்புக்கு விரைந்து அதைக் கிளப்பினான். காயத்ரியின் முகத்தில் இருந்த கலக்கம், அவன் மனதை அழுத்தியது.

‘என்னை மறந்துவிடுவானோ?’ என்ற எண்ணம் கொடுத்த அதிர்வில் அவள் முகம் ஒரு மாதிரி கசங்க, அதைப் பார்த்தவனுக்கு, அதை எப்படி எடுத்துக்கொள்ள என்றே தெரியவில்லை.

“சாரி..., உன்னை ஏமாத்தி கல்யாணம் பணிகிட்டேன்னு நீ யோசிக்கிறது எனக்குப் புரியுது. என் நிலைமை தெரிஞ்ச உடனே சந்தோஷத்தில் அப்படியே துள்ளிக் குதிப்பன்னு எதிர்பார்த்தேன்..., நீ என்னன்னா இப்படி இருக்க?

“என் அண்ணனை கொன்னல்ல அதான் இப்படி ஆச்சுன்னு’ என்னை கடுப்பேத்துவன்னு பார்த்தேன், இப்படி ஏமாத்திட்டியே. இப்போ நீ சந்தோசம் தானே படணும், ப்ரே பண்ணிக்கோ..., கூடிய சீக்கிரம் எனக்கு ஞாபகம் வந்து, என்னை விட்டு தப்பிச்சு போயிடணும்னு..., என்ன நான் சொல்றது...?” அவன் கேட்க, அவளுக்கோ அழுகை நெஞ்சை முட்டியது.

‘அப்போ ஞாபகம் வந்துட்டால் என்னை அனுப்பிடுவேன்னு சொல்றானா?’ அவள் நெஞ்சம் அதிர்ந்து அடங்கியது.

அவனுக்கு முகம் காட்டாமல் திருப்பியவள், இமைகளை அழுத்தமாக மூடி, இதழ் கடித்து தன் அழுகையை அடக்கிக் கொண்டாள். அவன் முன்னால் அழுதுவிடக் கூடாது என்ற எண்ணம்..., 'எதற்கு இந்த அழுகை வந்துத் தொலைகிறது' அவளுக்குப் புரியவே இல்லை.

அவள் முகம் தெரியவில்லை என்றாலும், அவள் நெஞ்சுக்கூடு விம்மித் தணிவது அவனுக்குத் தெரிகிறது தானே. கைவிரல்கள் பத்தையும் அழுத்தமாக மூடி, மடியில் வைத்திருப்பதும் தெரிய, அவள் கரத்தை தன் காரத்துக்குள் எடுத்துக் கொள்ள அவன் கைகள் பரபரத்தது.

'என்னதாண்டி உன் பிரச்சனை?' கேட்டுவிட நாக்கு துடித்தது. ஆனால்,, எதையும் செய்ய அவன் விரும்பவில்லை. உன் சுண்டுவிரல் நகம் கூட என்மேல் படக் கூடாது' எனச் சொன்னவளை எப்படி அவன் தீண்டி விடுவதாம்?

அவள் தவிப்பதை ஒரு பார்வையாளனாக கண்டு நிற்கும் நிலை..., அவனுக்கு பெரும் வலியைக் கொடுத்தது. அவள் மௌனமாக வழியும் தன் கண்ணீரை துடைத்துக் கொள்ள, அதற்குமேல் எப்படி அவன் அமைதியாக இருப்பதாம்?

"காயு..." அவன் அழைக்க, அந்த அழைப்பில் இருந்த கனிவில் பட்டென திரும்பி அவன் முகம் பார்த்தவள், அதே வேகத்தில் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"என்னை ஹாஸ்டல்ல விடுங்க..." அவளுக்கு அப்போதைக்கு அழ வேண்டும், வாய் விட்டு அழ வேண்டும். அது அவனோடு வீட்டுக்குச் சென்றால் முடியும் என்று தோன்றவில்லை.

இப்பொழுது கூட அவன் நெஞ்சுக்குள் சாய்ந்து கதறிவிட அவள் மனம் தவிக்கிறதுதான், ஆனால், அவனை அந்தப் பாடு படுத்திவிட்டு, அவனிடமே எப்படி ஆறுதல் தேடவாம்?

"ஓ..., அங்கே போய் செலிபரேட் பண்ணப் போறியா? அதுவும் சரிதான்..." அவள் மன வருத்தம் புரிந்தாலும், அதை அதிகரிக்கும் விதத்திலேயே பேசினான். அவனுக்குத்

தெரியவேண்டும்..., அவள் மனதில் தான் கொஞ்சமாவது இருக்கிறோமா எனத் தெரிய வேண்டும்.

அவனிடம் விளையாடும் மனநிலையில் அவள் இல்லையே..., கூடவே, நடுவீதியில் ஓடும் ஜீப்பில் அவள் என்ன செய்ய? வீட்டிலாவது வாய்க்கு வந்ததைச் சொல்லி அவனிடம் சண்டை பிடிக்கலாம், இது...,

“ஆமா..., என்னை கொண்டுபோய் விடுங்க...” தன் அழுகையை அடக்கி உரைக்கத்தான் முடிந்தது. அவள் முகம் தெரியவில்லை, ஆனால் குரலில் இருக்கும் கலக்கம் சுட, சிறு நிம்மதி அவனிடம்.

“வீட்டுக்கு வர்ற ஐடியா இருக்கா...? இல்ல..., இந்த பயித்தியக்காரனோட இருக்க முடியாதுன்னு முடிவு பண்ணிட்டியா...?” அவன் கேட்டு முடிக்க, அவளது கைப்பை பாய்ந்து வந்து அவன் நெஞ்சில் மோதி, அவன் மடியில் விழுந்தது.

“வாயை மூடுங்க...” வெடித்தாள்.

“அட..., அடுத்து என்னன்னு யோசிக்கலாமேன்னு கேட்டால்..., இப்படி கோபப்படுறியே..., ஷீபா என்ன..., இந்த பயித்தியக்காரன் கூட இருக்காதே, இங்கே இருந்து ஓடிடுன்னு சொன்னாங்களா என்ன? இவ்வளவு கோபமா இருக்க...?” என்னவோ..., அவளைச் சீண்டி விளையாட அவனுக்குப் பிடித்துத் தொலைத்தது.

“ஜீப்பை நிப்பாட்டுங்க..., நான் இறங்கி நடந்தே போய்க்கறேன்...” அங்கே அமர்ந்து அவன் பேச்சை கேட்டுக் கொண்டிருக்க அவளால் முடியவில்லை. அப்படியே அவன் டிஷர்ட்டை பிடித்து இழுத்து, அவனை கட்டிக்கொண்டு, ‘இப்படியெல்லாம் பேசாதடா...?’ வெடிக்கத் தூண்டும் உணர்வை அவள் எப்படி அடக்க?

அவள் குரலில் இருந்த ஒருவித கெஞ்சலில் சட்டென தன் பேச்சை நிறுத்திக் கொண்டான். அவள் முகம் காண முடியாமல், அவள் உணர்வுகளை அவனால் அனுமானிக்க முடியவில்லை. ஜீப் ஹாஸ்டல் முன்னால் நிற்க, அவனைத்

திரும்பியும் பாராமல் விடுவிடுவென தன் அறைக்கு நடந்தாள்.

அவள் மேலே செல்லும் வரைக்கும் அவள் முதுகையே வெறித்தவன், ஒரு பெருமூச்சோடு ஜீப்பை கிளப்பிச் சென்றான். அன்று சனிக்கிழமை என்பதால் இந்திரா அறையில் இருக்க, திடுமென வந்து நின்ற தோழியைப் பார்த்து திகைத்தாள்.

“காயத்ரி…” சந்தோஷமாக குரல் கொடுத்தவள், அவள் முகத்தில் இருந்த அழுகையில் வேகமாக படுக்கையில் இருந்து இறங்கி, அவள் அருகே வந்தாள்.

“என்னை எதுவும் கேக்காதே…” உரைத்தவள், தன் படுக்கையில் சென்று விழுந்து குலுங்கி அழத் துவங்கினாள் காயத்ரி.

*****

# பகுதி – 25.

கல்லூரி விடுமுறையான அன்று, ரிலாக்ஸாக அமர்ந்து போனை நோண்டிக் கொண்டிருந்த இந்திரா, தன் அறைக்குள் திடுமென வந்து நின்ற காயத்ரியை சற்றும் எதிர்பார்க்கவே இல்லை.

அதிலும் அப்படி ஒரு தோற்றத்தில் நிச்சயம் இல்லை என்றே சொல்லலாம். அவளிடம் என்னவென்று கேட்டுவிட தவிக்க, அவளோ, 'என்னை எதுவும் கேட்காதே' என உரைத்தவள், அடுத்த நிமிடம் படுக்கையில் விழுந்து குலுங்க, எப்படி இந்திராவால் அமைதியாக இருக்க முடியும்?

'இவ ஏன் இப்படி அழுதுட்டு இருக்கா? என்ன செஞ்சுவச்சுட்டு வந்திருக்கான்னு தெரியலையே? ஒரு வேலை எஸ்பிசார் ஏதாவது சொல்லிட்டாரோ? இவ அவ அண்ணன்மேல் இருக்கும் பாசத்தில் எதையாவது உளறி வச்சுட்டாளா?' சில பல நிமிடங்கள் அதே சிந்தையிலேயே இருந்தாள்.

காயத்ரி கேட்டுகொண்டாள் என்பதற்காக சில நிமிடங்கள் அமைதியாக இருக்க, காயத்ரியின் அழுகை குறையும் வழியைக் காணோம். காயத்ரிக்கோ, பிரம்மாவுக்கு நினைவுகள் அனைத்தும் மறந்துவிட்டது என்பதை ஜீரணிக்கவே முடியவில்லை.

அதிலும், அவனுக்கு நினைவுகள் திரும்பினால், தன்னை மறந்துவிடுவானோ என்ற நினைவு கொடுக்கும் துன்பம், அதை கொஞ்சம் கூட சகிக்க முடியவில்லை. அதைவிட, தனக்கு ஏன் இவ்வளவு வலிக்கிறது என எண்ண, அதில் ஒளிந்திருந்த உண்மையை மனத்தால் ஏற்கவும் முடியவில்லை.

எந்த நினைவும் இல்லாத அவனை தான் கத்தியால் குத்தியதை நினைக்க, அதுவேறு நெஞ்சை அறுத்தது. 'என் அண்ணனை கொன்றுவிட்டாயே' எனச் சொன்னபொழுது

அவன் பார்த்த அந்த பார்வையின் பொருள் அப்பொழுது புரியவில்லை. ஆனால், இப்பொழுது புரிகிறதே.

விம்மி விம்மி அவள் அழ, சற்று நேரம் பொறுத்த இந்திரா, ஒரு கட்டத்துக்குமேல் முடியாமல் அவளை நெருங்கினாள். “காயத்ரி, என்னடி ஆச்சு, எதுக்கு இப்படி அழற, சொல்லிட்டு அழுடி..., எனக்கு ரொம்ப பயமா இருக்கு” அவள் தோளை உலுக்கினாள்.

“கொஞ்ச நேரம் என்னை தனியா விடேன்...” அவளிடம் வெடிக்க,

“ஏய்..., நீ பாட்டுக்கு வந்ததில் இருந்து அழுதுட்டு இருந்தால் நான் என்னதாண்டி நினைக்கட்டும், எஸ்பி சார் கூட சண்டை போட்டுட்டு வந்துட்டியா? இல்லன்னா மறுபடியும் அவரை குத்திட்டியா?” அவள் கேட்க, அருகில் இருந்த தடிமனான புக்கை எடுத்து அவள் தலையிலேயே ஒன்று போட்டாள்.

‘எரும..., என் புருஷனை நானே கொல்வேனா?’ பார்வையால் கேட்டவள், பதில் சொல்லவில்லை.

“கொலைகாரப் பாவி..., என்னை ஏண்டி கொல்லப் பாக்குற? கேட்டதுக்கு பதில் சொல்லுடி...” தலையை பரபரவென தேய்த்துக் கொண்டாள்.

எப்படி அவளிடம் உண்மையைச் சொல்வதாம்? பிரம்மாவுக்கு பழசெல்லாம் மறந்து விட்டதாம்..., என அவ்வளவு சுலபமாக அவளிடம் சொல்லிவிட முடியுமா? சத்தியமாக முடியாது.

அவன்மேல் இருந்த கோபம் ஒரு பக்கம் அமிழ்ந்து கிடக்க, அவனது ரகசியத்தை, அவன்மேல் இருக்கும் கோபத்தைக் காரணம் காட்டி கூட அவளால் வெளியே சொல்ல முடியவில்லை.

“என்னை திட்டிட்டார் அதான்...” அவள் எதையோ சொல்லி சம்மாளிக்க,

“திட்டுறதுக்கெல்லாம் அசருற ஆளா நீ..., பதிலுக்கு நூறு வார்த்தை பேச மாட்ட..., இதெல்லாம் நம்புற மாதிரியா இருக்கு? உன் பெர்சனலை வெளியே சொல்ல மாட்டேன்னு சொல்லு ஒத்துக்கறேன்..., அதை விட்டுட்டு, அம்மா திட்டிட்டாங்க, ஆட்டுக்குட்டி திட்டிட்டாங்கன்னு கதை விடாதே” முறைப்பாக உரைக்க, தன் அழுகையை நிறுத்தியவள் எழுந்து அமர்ந்தாள்.

“என்கிட்டே எதையும் கேக்காதே இந்து..., என்னால் எதையும் சொல்ல முடியாது” தன் அழுகையை விழுங்கிக் கொண்டாள்.

“சரி நீ சொல்ல வேண்டாம். நான் ஒண்ணு கேக்கவா..., நீ இன்னும் எஸ்பி சார் மேல கோபமாகத்தான் இருக்கியா...?” அவள் தாடையைப் பிடித்து திருப்பினாள்.

“எனக்குத் தெரியலை..., என் அண்ணாவைப் பத்தி நினைத்தாலே அவர் மேலே கோபம்தான் வருது. என்னால் அதை கண்ட்ரோல் பண்ண முடியலை” அவள் சொல்ல, இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் அமைதியானாள்.

“சரி..., அப்போ நினைக்காதப்போ...” அவளை ஊடுருவினாள்.

அவன் அருகே இருக்கையில், அவள் நினைவில் எதுவும் வருவது இல்லையே. அதை எண்ணியவள் அமைதியாக, இருக்க, தோழியின் அருகில் அமர்ந்தாள் இந்திரா.

“உன்னை நீயே ஏமாத்திகற காயத்ரி, வாழ்க்கையில் சில விஷயங்களை ரொம்ப ஆராயக் கூடாது. அப்படி ஆராய்ந்தால் நம்மளால் நிம்மதியா இருக்க முடியாது. இந்த ஜென்மத்தில், உனக்கு எஸ்பி சார் தான் கணவனா வரணும்னு கடவுள் முடிவு பண்ணிட்டார், அதை யார் நினைத்தாலும் மாத்த முடியாது.

“உன் மனசாட்சியில் கை வைத்து ஒரு நிமிஷம் யோசி..., அவரை ஏன் நீ கல்யாணம் செஞ்சுகிட்டன்னு...” இந்திரா அழுத்தமாக உரைக்க, அவ்வளவு நேரமாக அவளை

முறைத்துக் கொண்டிருந்தவள், வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டாள்.

‘இவளுக்கு ஏதாவது தெரியுமோ...?’ மனம் எதையோ நினைக்க, சட்டென அதை கடிவாளமிட்டு அடக்கினாள். தன் மனதுக்குள் தான் பொத்தி வைத்திருக்கும் விஷயம், அவளுக்கும் கடவுளுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம் ஆயிற்றே.

“நடந்ததையே நினைத்து புலம்பாமல், நடக்க வேண்டியதைப் பார். முதல்ல எந்திரி, முகத்தைக் கழுவு..., லஞ்ச் சாப்பிடறியா? இல்ல வீட்டில் போய் சாப்பிடுறியா? அதையெல்லாம் விடு, முதல்ல வீட்டுக்குப் போறியா?” அதற்குமேல் அவளிடம் எதையும் விவாதிக்க அவள் தயாராக இருக்கவில்லை.

‘என்ன... வீட்டுக்குப் போகாமல் இருக்கவா? ஹையோ, அவர் தனியாக வேறு வீட்டுக்குப் போயிருக்காரே, என்ன நிலைமையில் இருக்காரோ? டாக்டர் வேற அவரை நல்லா பாத்துக்கணும், டென்ஷன் ஆக விடக் கூடாதுன்னு சொன்னாங்களே...’ எண்ணியவள் மனம் பதற படுக்கையில் இருந்து எழுந்து விட்டாள்.

“இல்ல..., நான் வீட்டிலேயே போய் சாப்ட்டுக்கறேன். அதுக்கு முன்னாடி பேன்க் போகணும்..., அங்கே கொஞ்சம் வேலை இருக்கு...” உரைத்தவள், எழுந்து சென்று முகம் கழுவி வந்தாள்.

“என்னது பேன்க் போறியா? தனியாவா போற? அதெல்லாம் வேண்டாம், முதல்ல நீ வீட்டுக்கு கிளம்பு. வர வர என்ன செய்யிற, ஏது செய்யறேன்னே தெரியலை” கடுப்பானாள்.

“இல்லடி, இந்த வேலையை நான் முடிச்சே ஆகணும். இதுக்கு மேலே தள்ளிப்போட முடியாது” அவள் பிடிவாதமாக இருக்க, இந்துவிற்கு தலை சுற்றியது.

“சரி, இப்போ என்ன, பேன்க் போகணும் அதானே, நானும் வர்றேன்..., உன்னை தனியா விட மனசில்லை. இங்கேயே

இருக்க போர் அடிக்குது…” அவளும் கிளம்ப, அவளையும் அழைத்துக் கொண்டாள்.

பேன்க் சென்று அவளுக்குத் தேவையான விவரங்களை எப்படி கேட்க? அப்படியே கேட்டாலும் உடனே தகவல் சொல்வார்களா?’ எண்ணியவள் அதை இந்திராவிடம் உரைக்க, “காயத்ரி, ஒரு வார்த்தை கூட தமிழில் பேசாதே…, அப்படியே இங்கிலீஷில் பேசு…, டீட்டெயில் எப்படி கொடுக்குறாங்கன்னு மட்டும் பார்.

“நீ ஹிந்திக்காரின்னு சொன்னால், மறு பேச்சே கேக்காமல் ஒத்துப்பாங்க, விசாரி…” அவள் கொடுத்த ஐடியாவின் படி செயல்படுத்த, அடுத்த பத்தாவது நிமிடம், இருவரும் மேனேஜர் முன்னால் இருந்தார்கள்.

“சார்…, என் அண்ணா காமேஷ் இஸ் நோ மோர்…, எனக்கு அவரோட அக்கவுண்டை குளோஸ் பண்ணனும்…, அதுக்குதான் வந்திருக்கேன். இது அவரோட டெத் சர்டிபிகேட்…, இது நான் அவரோட தங்கை என்பதற்கான ரேஷன்கார்ட் செராக்ஸ்…” அவள் ஒவ்வொன்றையும் கொடுக்க, அனைத்தையும் பெற்றுக் கொண்டார்.

“இப்போ உடனே குளோஸ் பண்ண முடியாது…, நீங்க லெட்டர் கொடுத்துட்டு போங்க, அடுத்த வாரம் வாங்க, நாம முடிக்கலாம்” அவர் சொல்ல, அவர் இந்த அளவுக்கு இறங்கியதே போதும் என்று இருந்தது.

“அதுக்கு முன்னாடி, அவரோட அக்கவுண்டில் எவ்வளவு அமவுண்ட் இருக்குன்னு கொஞ்சம் சொல்ல முடியுமா?” அவள் கேட்க,

“ஒரு நிமிஷம்…” உரைத்தவர், தன் முன்னால் இருந்த கணினியை சற்று நேரம் உற்று பார்த்தவர், “டுவன்ட்டி லேக்ஸ் இருக்கும்மா…” அவர் சொல்ல, தன் அதிர்ச்சியை முழுதாக அவளால் மறைக்க முடியவில்லை.

“எ..எவ்வளவு…?” தான் கேட்டது சரியா, இல்லை தவறா என அவளுக்குத் தெரியவில்லை. எனவே மீண்டும் கேட்டாள்.

“டுவன்ட்டி லேக்ஸ்...” அவர் மீண்டும் உரைக்கவே, தோழியை ஒரு நொடி திரும்பிப் பார்த்தவள், “நாங்க அடுத்த வாரம் வர்றோம்...” உரைத்தவள், பேங்கை விட்டு வெளியே வந்தாள். மனதுக்குள் பெரும் பிரளயம்..., ‘இதெப்படி சாத்தியம்?’ அவளுக்கு எதுவும் புரியவில்லை.

சற்று நேரம் இருவரும் அமைதியாகவே நடந்தார்கள். இந்திரா எதையுமே கேட்கவில்லை. சில விஷயங்களை அவளாகவே புரிந்து கொள்வது நல்லது என்பது இந்திராவின் எண்ணம்.

சொல்லப்போனால், பிரம்மா, காமேஷை என்கவுண்டர் செய்தபொழுது அவளுக்கும் பெரும் அதிர்ச்சிதான்..., ஆனால், பிரம்மாவைப் பற்றி ஓரளவுக்கு தெரிந்திருந்ததால், காமேஷின் பக்கம் ஏதாவது தவறு இருக்கலாமோ என எண்ணியிருந்தாள்.

அதைவிட, காயத்ரி ஊரில் இல்லாத அந்த ஒரு மாதமும், அவனது வருகை ஹாஸ்டல் பக்கம் அதிகம் இருந்ததை அவளே கண்டிருக்கிறாள். அதுவும் அந்த சாந்தியோடு சில நேரம் பேசிக் கொண்டிருந்ததையும் கண்ணால் பார்த்திருக்கிறாள்.

அந்த சாந்தியைப் பற்றியே ஹாஸ்டலில் நல்ல அபிப்பிராயம் இருந்தது இல்லை. ‘இந்த அண்ணா ஏன் அவளோட பேசறார்?’ என அவளே எண்ணியிருக்கிறாள். அதையெல்லாம் காயத்ரியிடம் அவள் பகிர்ந்தது இல்லை.

ஆயிரம் இருந்தாலும், காமேஷ் அவளது அண்ணன்..., அதுவும் அவளுக்காக ஒவ்வொன்றையும் பார்த்து, பார்த்து செய்பவன், அவனைப் பற்றி உரைத்து, தங்கள் நட்புக்கு இடையில் விரிசல் வருவதை இந்திரா விரும்பவில்லை என்றே சொல்லலாம்.

“இந்திரா..., என்னடி இது...? அண்ணாகிட்டே ஏது இவ்வளவு பணம்? எனக்கு என்னவோ பயமா இருக்குடி..., அன்னைக்கு யாரோ, அண்ணாவோட ப்ரண்ட்ன்னு சொல்லிட்டு

என்கிட்டே வந்து, ‘பேன்க் போனீங்களா?’ அப்படின்னு கேட்டுட்டு போனாங்க...,

“இங்கே என்னன்னா இவ்வளவு பணம் இருக்கு..., ஒரு வேளை அவரோட பணமா இருக்குமோ?” யோசனையாகக் கேட்டாள்.

“அது அவரோட பணம்ன்னா, ஏன் இத்தனை மாசமா வந்து கேக்காமல் இருக்காராம்?” அவள் திருப்பிக் கேட்க, ‘அதானே...’ என்று இருந்தது.

ஆனால் நிச்சயம் அந்த இருபது லட்சம் சம்பாதிக்கும் அளவுக்கு தன் அண்ணன் பெரிய வேலையில் இருக்கவில்லை என்பது அவளது எண்ணம். ஒரு கம்பெனியில் அக்கவுண்டட்டாக இருந்தான் என்பது வரைக்கும்தான் அவளுக்குத் தெரியும்.

கம்பெனி பெயரைக் கேட்ட பொழுதெல்லாம் அவன் எதை எதையோ சொல்லி சம்மாளித்தது இப்பொழுது நினைவுக்கு வந்து இம்சித்தது.

“காயத்ரி..., எஸ்பி சார் கிட்டே எதுக்கும் நீ இதைப்பற்றி பேசுவது நல்லது” அவள் சொல்ல, திக்கென அதிர்ந்தாள். ஏற்கனவே அவனுக்கு எதுவும் நினைவில் இல்லை, இதில் புதிதாக இதையும் சொல்லி அவனை டென்ஷன் செய்ய வேண்டுமா?’ என்று இருந்தது.

“நான் பாத்துக்கறேன்...” அவள் சொல்ல,

“உன் நல்லதுக்குதாண்டி சொல்றேன்..., ஒரு வேளை மறுபடியும் அவன் வந்து, அது என் பணம், அதைக் கொடுன்னு கேட்டால் என்ன செய்வ?” என்றதோடு பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

அவர்கள் ஆட்டோ பிடித்து ஹாஸ்டல் வர, அவளுக்காக காத்திருந்தார் கந்தன். அவரைப் பார்க்கவே, “இந்திரா..., நான் ‘மண்டே’ல இருந்து காலேஜ் வருவேன்..., இப்போ வீட்டுக்கு கிளம்பறேன்...” உரைத்தவள், வண்டியில் ஏறிக் கொண்டாள்.

“சரிடி..., பாத்துக்கோ...” அவளுக்கு விடை கொடுத்தாள்.

ஜீப்பில் இருந்த கந்தனோ, அவளைப் பார்ப்பதும், எதையோ சொல்ல வந்து தயங்குவதுமாக இருக்க, அதை உணர்ந்தவள், “சொல்லுங்க..., எதையோ கேக்க வந்து தயங்கறீங்க...?” அவரை சொல்லத் தூண்டினாள்.

“அம்மாடி..., சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. இதை நான் சொல்றதா வேண்டாமான்னு கூட தெரியலை. இதை நான் உங்ககிட்டே சொன்னேன்னு தெரிந்தாலே சார் ரொம்ப கோபப்படுவார். ஆனா, என்னால் சொல்லாமல் இருக்க முடியலை.

“புருஷன் மேலே என்னதான் கோபமா இருந்தாலும், வீட்ல இருக்க பொண்ணு, அவருக்கு ஒரு வாய் சாப்பாடு போட மாட்டீங்க? சார் எத்தனை நாள் காலையில், மதியம் எல்லாம் பட்டினின்னு எனக்குத் தெரியும். ராத்திரி எப்படின்னு எனக்குத் தெரியாது.

“கல்யாணத்துக்கு முன்னாடி அவர் வெளியே சாப்ட்டா அது சாதாரணம். ஆனா, அப்போ கூட அவர் வீட்டில் சமைச்சுத்தான் சாப்ட்டார். கல்யாணத்துக்குப் பிறகு அவர் வெளியே சாப்ட்டா உங்களைத்தான் தப்பா பேசுவாங்க...” அவர் சொல்லிக்கொண்டே போக, இதயத்துக்குள் பெரும் வலி.

‘அவர் சாப்பிடவே இல்லையா...?’ அவள் எண்ணிக் கொண்டிருக்க, கந்தன் இன்னும் எதையோ சொல்லிக் கொண்டிருக்க, வேகமாக கவனித்தாள்.

“கல்யாணம் முடிஞ்சு ஹோட்டல்ல சாப்ட்டால், உங்களை எல்லாரும் தப்பா பேசுவாங்கன்னு, சாப்பிடும் நேரத்துக்கு ரவுண்ட்ஸ் போகலாம்னு என்னை கூப்ட்டு கிளம்பிடுறார். இல்லையா, அவரே ஜீப்பை எடுத்துட்டு போய்டறார்.

“நீங்க என்னதான் செய்தாலும் உங்களை யாரும் ஒரு வார்த்தை பேச அவர் அனுமதிப்பாரா என்ன? ஒரு வாரத்தில் எத்தனையோ நாள் காலையில் வெறும் ஆப்பிள் மட்டும் சாப்ட்டுட்டு அவர் வேலை பாக்கும்போது, மனசு

கேக்கலை. அவர் அனுமதித்தால் நானே அவருக்கு தினமும் ஒரு வாய் சாப்பாடு கொண்டு வருவேன்.

“ஆனா..., அடிபட்டிருக்கும்போதே அதற்கு அவர் அனுமதிக்கலை. இப்போவா அனுமதிப்பார். அவர் விஷயத்தை நான் கவனிக்கறேன்னு தெரிந்தாலே என் வேலையை மாத்திடுவார்..., அதுக்கு பயந்துட்டுதான் அமைதியா இருக்கேன்.

“கட்டுன புருஷன்னு மதிக்க வேண்டாம்..., ஒரு சக மனுஷன்னு நினைச்சாவது சாப்பாடு போடும்மா..., இதுதான் வாழ்க்கைன்னு ஆயிடுச்சு, இன்னும் ரெண்டு திக்கில் இருந்து என்ன சாதிக்கப் போறீங்க?

“ஏதோ சொல்லணும்னு தோணிச்சு சொல்லிட்டேன்..., இதுக்கு மேலே, உங்க பாடு...” இயந்திரகதியில் உரைத்தவர், சாலையில் கவனமாக, அனைத்தையும் கேட்டவளுக்குதான், என்ன செய்வது என்றே தெரியவில்லை.

‘எனக்கு சமைக்கவே தெரியாதே..., இதை எப்படி அவர்கிட்டே சொல்ல, அது தெரியாமல் தானே ட்ரையல் பாக்கும் எல்லாத்தையும் நானே சாப்ட்டுட்டு இருக்கேன். இதில் அவர் வேற பட்டினியா கிடக்காரா?’ தன் தவறுகளின் அளவு கூடிக்கொண்டே செல்வதுபோல் இருந்தது.

“எஸ்பி சார் இரும்பு மனுஷன்..., அவரையே இன்னைக்கு கலங்க வச்சுட்டீங்களே. மனுஷனோட புருவத்தில் இருக்கும் முடி கூட அசைந்து நான் பாத்ததில்லை, அப்படிப்பட்டவரை, இன்னைக்கு மொத்தமா பதற வச்சுட்டீங்க...” சற்று கோபமாகத் துவங்கியவர், ரிவர்ஸ் வியூ கண்ணாடி வழியாக அவளைப் பார்க்க, அவள் கண்களில் வழிந்த கண்ணீரில் வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டார்.

“அவர் வீட்ல இருக்காரா...? நீங்க எப்போ வந்தீங்க?” அவனை அப்பொழுது எதிர்கொள்ளும் தைரியம் அவளுக்கு சுத்தமாக இருக்கவில்லை.

“என்னை போன் பண்ணி வரச் சொல்லி உங்களை அழைச்சுட்டு வரச் சொன்னார்…” எனக்கு அவ்வளவுதான் தெரியும் என அமைதியாகிவிட, ‘ச்சே…, இந்த போலீஸ்காரங்களே இப்படித்தான் போல, எதையாச்சும் முழுசா பேசறாங்களா பார்?’ ஒரு பக்கம் ஆத்திரமாக வேறு வந்தது.

‘என்னை கல்யாணம் பண்ணிக்க கேட்டப்போவே எனக்கு பழசெல்லாம் மறந்துடுச்சுன்னு அவருக்கு சொல்லதுக்கு என்னவாம்? அவருக்கு பழைய ஞாபகம் எல்லாம் இருந்திருந்தால் என்னை திருமணம் செய்ய முடிவெடுத்திருப்பாரா என்ன?

‘அதுசரி…, பழைய ஞாபகம் இல்லை என்றால், என்னை எப்படி அவருக்குத் தெரியும்?’ அவள் மூளை இப்பொழுதுதான் செயல்படத் துவங்கியது.

‘இதை எப்படித் தெரிந்து கொள்வது? கேட்டால் பதில் சொல்வாரா?’ அவளுக்குத் தெரிந்தே ஆகவேண்டும்.

ஜீப் வீட்டின் முன்னால் நிற்க, தயக்கமாக இறங்கி உள்ளே சென்றவளை வரவேற்றது வெறுமையான வீடே. மாடிக்கு தங்கள் அறைக்குச் செல்ல, அங்கே பிரம்மா விசிறியடித்த தன் அலைபேசி இல்லாததைப் பார்த்தவள், ‘ரெஸ்ட் எடுக்காமல், அதையெல்லாம் எடுத்துட்டு எங்கே போனார்…?’ எண்ணியவளுக்கு,

‘ஹையோ…, போனை நோண்டுவாரோ…? எதையாவது பாத்துடுவாரா?’ மனம் புதிதாய் அதிரத் துவங்கியது. அப்படியே படுக்கையில் சென்று அமர்ந்தவள், நகத்தை கடித்து துப்பத் துவங்கினாள்.

வெளியே…, அவளது அலைபேசியை எடுத்துக் கொண்டு சர்வீஸ் செண்டர் சென்றிருந்தான் பிரம்மா. அலைபேசி இல்லாமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது என்பது அவன் அறிந்த விஷயமாயிற்றே. அதிலும், அவளது அலைபேசியை தான் உடைத்திருக்கக் கூடாது என்பது அவனது எண்ணமாக இருந்தது.

அவளது அலைபேசியை அவன் வாங்கிக் கொடுத்திருந்தால் பரவாயில்லை, அது அவளுடைய பொருள், அதை தான் உடைத்தது தவறு என்பதால் அதை தானே எடுத்து வந்திருந்தான். சிதறிய பாகங்களை வீட்டில் வைத்தே பொருத்திப் பார்த்துவிட்டான்.

போன் ஆன் ஆவது தெரிந்தாலும், டிஸ்ப்ளே வரவில்லை. எனவே அது போய்விட்டது அவனுக்குப் புரிந்தது. டிஸ்ப்ளே மாற்றுவதற்குப் பதிலாக புது போனே வாங்கிவிடலாம் என்பது அவனது எண்ணம். ஆனால், அதில் இருக்கும் டேட்டா எல்லாம் அவளுக்கு எவ்வளவு முக்கியம் என்பது அவனுக்குத் தெரியாதே..., எனவே முதலில் அதை மாற்றுவது என முடிவெடுத்தான்.

சாம்சங் சர்வீஸ் செண்டருக்கே நேரடியாகச் சென்றவன், போனை அவர்களிடம் காட்டிய உடனே, “சார்..., டிஸ்ப்ளே போய்டுச்சு..., இது ரன்னிங் மாடல் என்பதால் ஸ்டாக் இருக்கு..., ஒரு ஹால்ப் அவர் ஆகும்...” அவர்கள் உரைக்கவே,

“வெயிட் பண்றேன்...” அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவன் சாதாரணமாக அமர்ந்திருப்பதாக இருந்தாலும், பார்வையும், செவியும் கூர்மையாக வேலை பார்த்துக் கொண்டிருந்தது. கூலிங்கிளாஸுக்குப் பின்னால் அவன் பார்வை சுழன்று கொண்டிருந்தது.

அங்கே இருந்தவர்களில், ஒரு இளைஞனின் நடத்தையின் இருந்த சிறு மாறுதல், அவன் உள்ளுணர்வு சொன்னது, அவன் அலைபேசியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து ஓடப் போகிறான் என..., அந்த நொடி, அதேபோல் அவன் ஓட முயல, அடுத்த நொடி, அந்தக் கடையின் தரையில் அவன் உருண்டிருந்தான்.

பிரம்மா எப்பொழுது இருக்கையில் இருந்து எழுந்தான், எப்பொழுது அவனுக்கு குறுக்காகப் போனான், எப்பொழுது அவன் காலை இடறினான்..., எதுவும் மற்றவர்களுக்குத்

தெரியவில்லை. கண்ணிமைக்கும் நொடிக்குள் அனைத்தும் நடந்திருந்தது.

வாயு வேகம் எனச் சொன்னால் சரியாக இருக்குமா? ஒரு நொடி உலகம் அதன் இயக்கத்தையே முடக்கியதுபோல் இருந்தது. சுற்றி இருந்தவர்கள் கூட உறைந்து போனார்கள், பிரம்மா நின்ற தோரணை, அவன் வேகம், அவன் சுவிங்கத்தை மென்றவாறு நிற்க, அவனது நிதானத்தில் தெறித்த ஆளுமை, அனைவரும் இமைக்க மறந்து அவனை வெறித்தார்கள்.

“அம்மா…” அவன் விழுந்த வேகத்தில், அவன் முகம் தரையில் மோதி, மூக்கில் இருந்து குருதி கொப்பளிக்க, கடை ஊழியர்கள் அனைவரும், கீழே விழுந்திருந்தவனை அடிக்கப் பாய்ந்தார்கள்.

“மூவ் அவே…” பிரம்மாவின் கர்ஜனை அவர்கள் அனைவரையும் தேக்க, கீழே விழுந்திருந்தவனின் அருகில் சென்றான்.

“திருடுறது தப்பில்ல…” வெகு நிதானமாக கேட்டவன், அவன் அருகே மண்டியிட்டு அமர, கீழே விழுந்திருந்தவன், குருதி வழியும் தன் முகத்தை கையால் மறைத்தவன், “சார், தெரியாமல் பண்ணிட்டேன் சார்…, என் கேள் ப்ரண்ட்க்கு பெர்த்டே வருது…, அதுக்கு போன் தான் வேணும்னு கேட்டா…, என்கிட்டே அவ்வளவு காசில்லை, அதான்…,

“என்னை விட்டுடுங்க சார்…, இனிமேல் இப்படி தப்பு பண்ண மாட்டேன் சார்…” மற்றவர்கள் பார்வையில் தான் ஒரு திருடனாக அடையாளம் காணப்படுவதில் குறுகிப் போனான்.

“கிளீயர்…” தங்களைச் சுற்றி இருந்தவர்களைப் பார்த்து உரைக்க, அதற்குமேல் அங்கே யார் இருப்பதாம்? மக்கள் விலகிச் சென்றாலும், கடை ஊழியர்கள் ஒன்றிரண்டுபேர் அங்கே இருக்க, அவர்களையும் அவன் பார்த்த பார்வையில் விலகிச் சென்றார்கள்.

அனைவரும் விலகவே, அவனை கை பிடித்து எழுப்பியவன், "முகத்தை துடை..." பிரம்மா சொல்ல, தன் பேக்கட்டில் இருந்த கர்ச்சீப்பை எடுத்து முகத்தை துடைத்துக் கொண்டான்.

அங்கே இருந்த இருக்கையை நோக்கி அவனை அழைத்துச் சென்றவன், அவனை அமர்த்தி தானும் அமர்ந்தான். "ரொம்ப அவமானமா இருக்குல்ல?" சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டவன் வினவ, மற்றவன் அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

"சில அவமானத்தை நாம வாழ்நாள் முழுக்க மறக்கக் கூடாது..." அவன் சொல்ல, வேகமாக அவனை நிமிர்ந்து பார்த்தான்.

"நிஜமாத்தான் சொல்றேன்..., இந்த அவமானம்..., உன்னை இனிமேல் தப்பு செய்ய விடாது. இன்னொரு விஷயம்..., உண்மைக் காதலுக்கு ஒரு ரோஜாப்பூவே அதிகம்..., நீ போ..." அவன் சொல்ல, மற்றவனோ, தன் பார்வையை மெதுவாகச் சுழற்றி, சுற்றி இருப்பவர்களைப் பார்த்தான்.

"உன்னை யாரும் தடுக்க மாட்டாங்க..., போ..." அவன் உறுதியாக உரைக்க, மெதுவாக இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

ஒரு எட்டு எடுத்து வைத்தவன், பட்டென அவன் காலில் விழுந்து, "சார், இனிமேல் சாகுற வரைக்கும் திருடணும்னு நினைக்க கூட மாட்டேன்" உரைத்தவன், அங்கிருந்து ஓடியே போனான்.

அவன் செல்லவே, கடை ஊழியர்கள் அவனை நெருங்கி, "சார், என்னசார்..., அவனை அப்படியே விட்டுட்டீங்க? ரெண்டு நாள் உள்ளே வச்சிருக்கணும் சார்..." குறை பட்டார்கள்.

"ஒரு மனுஷனுக்கு தண்டனை கொடுப்பது அவன் திருந்துறதுக்குதானே தவிர, ஒரு குற்றவாளியை உருவாக்க இல்லை. அவனைப் பொறுத்த வரைக்கும், இந்த மன்னிப்பே பெரிய தண்டனைதான். உங்களுக்கு உங்க

போன் கிடைச்சுடுச்சு தானே..., நீங்க போகலாம்...” உரைத்தவன் அங்கே இருந்த செய்தித்தாளை கரத்தில் எடுத்துக் கொண்டான்.

‘இங்கே ஏதாவது நடந்ததா? எனக்குத் தெரியவே செய்யாதே’ என்னும் ஒரு முகபாவம் அவனிடம் வெளிப்பட, ஒருவர் மற்றவரை பார்த்தவாறு நின்றார்கள்.

அவன் முகத்தில் இருந்த இறுக்கத்தில், அதற்குமேல் அங்கே நின்று அவனிடம் கேள்வி கேட்க யாருக்கும் தைரியம் இருக்கவில்லை.

“டேய்..., அதெப்படிடா..., சும்மா மின்னல் மாதிரி தெறிச்சார்...” “சான்சே இல்லடா...” “எதிர்பாக்கவே இல்லடா...” வித விதமான குரல்கள் அவன் செவிகளைத் தீண்டினாலும் அதையெல்லாம் அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அரைமணி நேரத்தில் அவன் கொடுத்த போன் வர, “இதில் இருக்கும் டேட்டா எதுவும் எரேஸ் ஆகலையே...?” போனை ஆன் செய்தவாறே அவன் கேட்க,

“இல்ல சார்..., டிஸ்ப்ளே தான் போயிருந்தது..., இந்த போன் உங்களோடதா..., இல்ல...” அவன் இழுக்க, ‘உனக்கு எதற்கு அது...?’ என்பதுபோல் அவனை ஆராயும் பார்வை பார்த்தான்.

“இல்ல சார்..., எதேச்சையா யூடியூப் ஆப்லைன் வீடியோ பக்கம் கை போச்சு, பாத்தா புல்லா உங்க பேட்டி, உங்க போலீஸ் பாடி பில்டிங் காம்பட்டிஷன் வீடியோவா இருந்தது அதான்..., சாரி சார்..., யூசுவல் செக்கப் தான் பண்ணேன்...” கூலிங்கிளாசை அவன் கழட்டிய வேகத்தில், மிரண்டு எச்சில் விழுங்கியவன், நடுங்கிப் போனான்.

தன் பர்சில் இருந்து கார்டை எடுத்துக் கொடுத்தவன், ‘போ...’ என்பதுபோல் தலை அசைக்க, விட்டால் போதும் என அவன் ஓடியே போனான்.

பிரம்மாவுக்கோ உள்ளுக்குள் திகைப்பு. ‘என் வீடியோவா...?’ எண்ணியவன், அவளது போனை ஆராயக் கூடாது என்னும் எண்ணத்தையும் மீறி, கைகள் தாமாகவே யூடியூப் ‘ஆப்’பை அழுத்தியது.

கிட்டத்தட்ட பத்து வீடியோவுக்கும் மேல், அவனது பேட்டி, இண்டர்வியூ, அவன் கெஸ்ட்டாக போயிருந்த டாக் ஷோ நிகழ்ச்சியின் வீடியோ என ஒவ்வொன்றாக அவனது பார்வைக்குக் கிடைத்தது.

‘முட்டக்கண்ணி..., அப்போ நீ என்னை முன்னாடியே சைட் அடிச்சியா? இல்ல ஒன் சைட் லவ்வா...? அதனால்தான் உன் அண்ணனை கொன்னவன் என்ற கோபத்தையும் மீறி, என்னை கல்யாணம் செஞ்சுகிட்டியா?’ பெருவிரல் அவன் இடப்புருவத்தை அழுத்தமாக வருடியது.

இமைகளை சற்று மூடிக் கொண்டவன், காயத்ரியின் செய்கைகள், கோபம், தான் டென்ஷனாக இருந்தபொழுது அவளது அனுசரணை, அவள் தொடக்கூடாது எனச் சொன்னபொழுதும் தான் தொட்டதற்கு அவளது எதிர்வினை என யோசிக்க, அவனுக்கு எதுவோ புரிவதுபோல் இருந்தது.

அதிலும் இன்று காலையில் தன் மூக்கில் ரத்தம் வழிவதையும், தான் துடிப்பதையும் பார்த்த அந்த நொடி, அவள் பதைத்துப் போனதும், தவியாய் தவித்ததும், மருத்துவரிடம் போய்விட்டு வந்தபொழுது அவளது அமைதியும், அழுகையும்... ‘ஓ கட்... இஸ் ஷீ லவ்ஸ் மீ?’ என்னவோ உள்ளம் முழுவதும் ஒரு பரவசம்.

கூடவே..., அவள் மனதில் தான் இருக்கிறோம் என்ற எண்ணம் கொடுத்த சந்தோசம்..., ‘என்னை மனசுக்குள் வச்சுகிட்டுதான், வெளியே சும்மா கோபம் காட்டுறியா? இதில் உன்னை தொடக் கூடாதுன்னு கண்டிஷன் வேற, தொட்டா என்னடி செய்வ?’ அவளை சீண்டிப் பார்க்கும் வேகம்.

‘முட்டக்கண்ணி..., உனக்கு இருக்குடி...’ மனதுக்குள் பொங்கிய உற்சாகத்தோடு வீட்டுக்கு கிளம்பினான் பிரம்மா. வீட்டில், தன் அலைபேசியின் நிலை என்னவோ என தவித்துக் கொண்டிருந்தாள் காயத்ரி.

*****

# பகுதி – 26.

வீட்டிற்கு வந்த பிரம்மா அலைபேசியை அவள் கரத்தில் கொடுத்தவன், அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவள் அலைபேசியில் தன் வீடியோக்களைப் பார்த்துவிட்டு, அவள் தன்மேல் காதல் கொண்டு அதையெல்லாம் தன்னுடன் வைத்திருக்கிறாளோ? என்றுதான் எண்ணத் தோன்றியது.

அதே நேரம், 'ஒரு வேளை என்னை கொலை செய்ய வேண்டி, என் நடவடிக்கைகளை கண்காணிக்க இப்படி செய்திருப்பாளோ?' அதையும் அவன் எண்ணத் தயங்கவில்லை. அவளது அடுத்த செய்கையை வைத்த அதை தீர்மானிக்க முடியும் என்பதால் அமைதியாக சென்று அமர்ந்து கொண்டான்.

அலைபேசியை கையில் வாங்கிய அடுத்த நிமிடம், பரபரப்பாக எதையோ ஆராய்வதும், அவள் தேடுவது கிடைத்தவுடன் அவள் கண்களில் விரவிய நிம்மதியும், அவனுக்கு பல கதைகள் சொல்ல, 'இவள் மனதுக்குள் நான் இருக்கிறேன்' அவன் உறுதியாக எண்ணிக் கொண்டான்.

அவளுக்கோ, அவன் சில வேளைகள் உணவு உண்ணாமல் தவிர்க்கிறான், அவனது உடல்நிலை கொடுத்த அதிர்ச்சி, அவனது நினைவுகள் போய்விட்டது என அதிர்ச்சி என அனைத்துமாக சேர தவித்துப்போய் அமர்ந்திருந்தாள். அவளது முகத்தில் வந்து போகும் உணர்வுகளை ஓரவிழிப் பார்வையாக கவனித்துக் கொண்டுதான் அமர்ந்திருந்தான்.

அவனிடம் எதையாவது பேசலாம் என்றால், அவன் இறுக்கமாக இருப்பதுபோல் இருக்க, அவனை நெருங்கவே அவளுக்கு அச்சமாக இருந்தது. கூடவே, 'அவருக்கு நினைவுகள் வந்துவிட்டால் என்னவாகும்?' என்ற எண்ணம் வேறு எழுந்து இம்சிக்க, அமைதியின்றி தவித்தாள்.

அவளது நிலையை உணர்ந்தவன், அவளாகவே தெளியட்டும் என விட்டுவிட்டு படுக்கையில் சென்று

பேசாமல் படுத்துக் கொண்டான். அவளுக்கோ பசி வயிற்றை கிள்ளியது.

‘இவர் சாப்ட்டாரா இல்லையான்னு வேற தெரியலையே…’ தவித்தவள், எதையாவது செய்யலாம் என கிச்சன் பக்கம் செல்ல, தானும் அவள் பின்னால் ஓசை படாமல் சென்றான்.

தினமும் சமைக்கிறாள், ஆனால் தனக்கு உணவு பரிமாற மாட்டேன் என்கிறாள். அப்படி என்ன செய்கிறாள் என அறிந்துகொள்ள வேண்டி இறங்கி வந்தான்.

பிரிட்ஜை திறந்தவள், உள்ளே இருந்த காய்கறிகளை வெளியே எடுத்து வைத்துவிட்டு, “வேகமா செய்யிறதுன்னா என்ன டிஷ் செய்யலாம்?” வாய்விட்டே முனகியவள், தன் கையில் இருந்த போனில் யூடியூப் ஆப்பை கிளிக் செய்து, ஆராயத் துவங்கினாள்.

அவள் கண்கள் அதில் மேய, “ஆண்டவா பசிச்சுத் தொலையுதே” வாய்விட்டே முனகியவள், கண்களை பிரிஜுக்குள் மேயவிட்டு, கைக்கு கிடைத்த வெள்ளரிக்காயை எடுத்து கடித்துக் கொண்டது. இருக்கும் பசியில் உடனடியாக எதையாவது வயிற்றுக்குள் அனுப்பவில்லை என்றால், அது தன்னை காரித்துப்பும் என்பதால் அவ்வாறு செய்தாள்.

அவள் முதுகில் பின்னால் கரத்தை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு, அவள் என்ன செய்யப் போகிறாள் என பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பேசியதைக் கேட்டவனின் புருவ மத்தியில் முடிச்சு விழ, அவளையே பார்வையால் தொடர்ந்து கொண்டிருந்தான்.

நேரம் இரண்டு மணியை நெருங்கிக் கொண்டிருக்க, அவனுக்கும் பசியெடுத்தது. அவள் வெள்ளரிக்காயை சிறிது கடித்துவிட்டு, அதை கிச்சன் மேடைமேல் வைத்துவிட்டு, போனை ஆராய்வதும், ஒவ்வொரு டிஷ் செய்யப்படுவதை பார்த்தவாறே, தீவிரமாக எதையோ ஆராய்வதுமாக இருக்க, ‘இவளுக்கு சமைக்கவே

தெரியாதா?' கண்களை கூர்மையாக்கி அவளை வெறித்தவன், மெதுவாக அவள் பக்கம் நகர்ந்தான்.

அவ்வளவு நேரமாக போனில் கவனமாக இருந்தவள், தன் பின்னால் யாரோ வருவதுபோல் இருக்க, திடுக்கிட்டு திரும்புகையில், அவளுக்கு நெருக்கமாக, அரையடி தூரத்தில் நின்றிருந்தான்.

மேல்சட்டை இல்லாத வெற்று தேகம்..., அகலமான அவனது தோள்களுக்கு மத்தியில் சற்று பூஞ்சையாகத்தான் தெரிந்தாள். கண்கள் நொடிகளுக்குள் அவன் தேக்குமர தேகத்தில் பதிந்து மீள, அவளுக்கு மூச்சடைத்தது.

இறுதியாக அவள் கடித்திருந்த வெள்ளரிக்காய் துண்டு பற்களுக்குள் சிறை பட்டிருக்க, அதை வாய்க்குள் எடுத்துக்கொள்ளும் எண்ணமின்றி அவனை வெறித்தாள். சும்மாவே அறைக்குள் அவனது இருப்பும், வெற்று தேகமும் அவளை இயல்பாக இல்லாமல் இருக்கச் செய்யும்.

இது..., கை எட்டும் தூரத்துக்கான நெருக்கம், திரண்ட புஜங்கள், அவனிடமிருந்து வந்த பிரத்தியேக வாசனை, அவளுக்கு மூச்சடைத்தது.

அவள் இமை கொட்டி முடிக்கும் முன்பே, அவள் கன்னம் தாங்கியவன், அவள் பற்களுக்குள் சிக்கியிருந்த வெள்ளரித் துண்டை தன் இதழ்களுக்குள் இடம் மாற்றியிருந்தான்.

அவன் செய்கையில் பதறி, கையில் இருந்த அலைபேசியை அவள் தவறவிட, அதை கேட்ச் செய்தவன், "ரொம்ப பசி..." அதை மென்றவாறே உரைக்க, வேகமாக வாயை மூடியவளது வாய்க்குள் சுழன்றது அவனது சுவிங்கம்.

அதை வேகமாக மென்ற பிறகுதான், 'இது வெள்ளரிக்காய் இல்லையே...' அவள் மூளை உரைக்க, உணர்ந்த விஷயத்தை ஜீரணிக்கவே முடியவில்லை. வேகமாக அவனைத் தன் கரத்தால் விலக்கியவள், டஸ்ட்பின்னில் சுவிங்கத்தை துப்பிவிட்டு, வாஷ் பேசினில் வாய் கொப்பளித்தாள்.

அவள் செய்கையை கண்களில் சிரிப்போடு பார்த்துக் கொண்டிருக்க, “ஐய..., எச்சி..., அதைப்போய்...” அவள் சிறு கோபமாக கத்த, “இல்லையே..., ரொம்ப டேஸ்ட்டா இருக்கு...” காயை மென்று முழுங்கியவாறே அவன் உரைக்க, ‘என் வெள்ளரிக்காயா அது...?’ ‘பே...’ என்ற முழியில் இப்பொழுது நின்றிருந்தாள்.

‘நான் எதைச் சொன்னால், இவர் எதை சொல்றார் பார்...’ அவள் முகம் சட்டென சிவந்து போக, கூடவே அவன் அதை ரசனையாக மென்ற விதத்தில், பார்வையையும் அவனிடமிருந்து பிரித்து, ஸ்டவ்வை வெறித்தாள்.

இதயம் அதன் போக்கில் திடும் திடுமென அதிர, “எச்சி...” வாய்க்குள் முனகினாள். கை கிச்சன் மேடையை அழுத்தமாக பற்றிக் கொண்டது. கால்கள் பலமிழப்பதுபோல் இருக்க, முயன்று அழுத்தமாக நின்று கொண்டாள்.

அப்பொழுதும் அசையாமல் நின்றானே தவிர அவளை நெருங்கி வரவும் இல்லை, அங்கே இருந்து அகலவும் இல்லை. ‘அவர் இங்கே இருந்து போய்ட்டா பரவாயில்லை...’ அவள் மனம் உரைக்க, அதை எப்படி அவனிடம் சொல்லவாம்?

“காயு..., எனக்குப் பசிக்குது...?” அவளைக் கலைத்தான்.

அவ்வளவுதான்..., சில நொடிகளாக அவளைப் பின்னியிருந்த மயக்கம் விலக, வேகமாக அவன் முகம் நோக்கியவளது முகத்தில் இருந்தது அப்பட்டமான தவிப்பு மட்டுமே.

விரோதியே என்றாலும் பசிக்கிறது எனச் சொன்னால் ஒரு பெண்ணால் தாங்கிக் கொள்ள முடியாது. இதில் அவன்..., அவளது கணவன், மனதுக்குள் பொத்திவைத்து ரகசியமாய், மானசீகமாய் காதலித்த காதலன் அப்படி இருக்கையில், அவள் எப்படி சகிக்க?

கடந்த நான்கு ஐந்து நாட்களில் அவள் ட்ரையல் பார்த்த, செய்த உணவுகள் அனைத்தும் அவளுக்கே பிடிக்கவில்லை

என்னும்போது, எப்படி அதை அவனுக்கு சமைத்துக் கொடுக்க? அவனிடம் உண்மையை சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் நின்றிருந்தாள்.

அவள் மனநிலை புரிந்தாலும் அதை உள்ளுக்குள் மறைத்தவாறே..., “புருஷன்னு வேண்டாம்..., ஒரு மனுஷன்னு நினைத்து கூட சாப்பாடு போட மாட்டியா...?” கேட்டவன், அங்கிருந்து விலக முயல, அவன் கோபமாக செல்கிறான் என நினைத்தவளால் அதற்குமேல் அமைதியாக இருக்க முடியவில்லை.

அவனுக்கு அவள் மனதுக்குள் தான் இருக்கிறோமோ இல்லையா? என உறுதியாக தெரிந்தே ஆக வேண்டும். எனவேதான் அவளிடம் பிடிவாதமாக பேசினான். தன்மேல் கோபம் இருந்தால், உனக்கு சாப்பாடு போட மாட்டேன்’ என சொல்வாள்.

இல்லையா... நிச்சயம் உண்மை நிலையை தன்னிடம் விளக்குவாள் என எண்ணினான். எனவே அவ்வாறு செய்தான். அவன் நினைத்தது பொய்த்துப் போகவில்லை. அவன் அங்கிருந்து நகரவே,

சட்டென அவன் கரம் பிடித்து தடுத்தவள், “எனக்கு சமைக்கத் தெரியாது..., டீ காபி கூட போடத் தெரியாது..., அதான் உங்களுக்கு சாப்பாடு போடலை...” அந்த குரலில் இருந்தது முழு தவிப்பு மட்டுமே.

அவளை ஒருவித ரசனையாக அவன் பார்க்க, அவளுக்குள் என்னவோ ஒரு மாற்றம். அதை மறைத்தவள், “நான் சாப்பாடு போடலன்னா, நீங்க சாப்பிடாமல் இருப்பீங்களா? உடம்பை பாத்துக்க மாட்டீங்களா...? ஏன் இப்படி பண்றீங்க?” அந்த நேரம், அவள் கண்களில் அவன் கண்டது, தன்மேல் அவள் வைத்திருக்கும் அப்பட்டமான காதலைத்தான். அவனிடம் தன்னை மீறி கேட்டவளுக்கோ அவன் நெஞ்சில் சாயும் வேகம்.

அவன்மேல் அவளுக்கு பெரும் கோபம் இருக்கிறதுதான், அதுவும் அவனை கொலை செய்யும் அளவுக்கு இருக்கிறது.

ஆனால் அதைவிட அவன்மேல் வைத்திருக்கும் நேசம் உண்மையானது ஆயிற்றே. அதை வெளியே வரவிடாமல் எவ்வளவுதான் அவளால் மறைக்க முடியும்? அவள் நேசம் வெடித்து வெளியேற தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த நொடி, அவன் இழுத்து அணைத்துக் கொண்டால் நிச்சயம் அவன் நெஞ்சுக்குள் புதைந்து கதறியிருப்பாள். கூடவே தன் நிலையை உணர்த்தியிருப்பாளோ? ஆனால், அவள் அனுமதியின்றி அவளைத் தொட்டு தழுவிக்கொள்ள அவன் தயாராக இல்லையே.

“அஞ்சு நாளா நீ என்ன சாப்ட்ட…?” அவனிடமிருந்து அப்படி ஒரு கேள்வியை அவள் எதிர்பார்க்கவே இல்லை. வேகமாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள். அதில் இருந்த தீவிரத்தில், பதில் சொல்லவில்லை என்றால் இன்னும் கோபமாவான் என்பது புரிய, அவன் கரத்தை விடுவித்தவள்,

“நாலஞ்சு டிஷ் ட்ரை பண்ணேன்…, அது சொதப்பினாலும் அட்ஜஸ்ட் பண்ணிட்டு அதையே சாப்ட்டேன்…” முனகினாள்.

“அப்போ அதையே எனக்கும் போட வேண்டியது தானே…” அவன் உரைக்க, வெடித்து வெளியேறத் துடித்த அழுகையை அடக்க முடியாமல், கிச்சனில் இருந்து வெளியேறியவள், அருகில் இருந்த அறைக்குள் புகுந்து சட்டென கதவடைத்துக் கொண்டாள்.

அவளது கண்களில் வழிந்த தவிப்பு, பரிதவிப்பு, காதல், அனைத்தையும் மீறி, அவள் அண்ணன்மேல் அவள் கொண்டிருக்கும் பாசம் பெரிதாக இருப்பது அவனுக்குப் புரிய, தன் கேசத்தை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

‘என்னைவிட, உன் அண்ணனை உனக்கு அவ்வளவு பிடிக்குமாடி?’ அந்த முரட்டு ஆண்மகனுக்கும் பொறாமை எட்டிப் பார்த்தது.

‘என்மேல் இருக்கும் காதலை விட, கோபம் ஒருபடி மேலே இருக்கா? என்னை லவ் பண்ணவளுக்கு நான் எப்படிப் பட்டவன் என்பது மட்டும் தெரியாமல் போயிடுச்சா? இல்ல

புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பண்றியா? எனக்கு என்னவோ ரெண்டாவதுதான் காரணமா தோணுது’ அவளது அண்ணன் பாசத்தை, தன் காதல் வென்று ஆகவேண்டும் என்று தோன்றியது.

அவளுக்கோ, அவனது அந்த அனுசரணை, பேச்சு…, தன்னை தன் குறையோடு அவன் ஏற்றுக்கொள்ளும் விதம்…, கண்கள் கலங்கி அழுகை வெடித்தது.

அறைக்குள் புகுந்து, கதவில் சாய்ந்தவள், அப்படியே கால் மடக்கி அமர்ந்து கால்களுக்கு நடுவில் முகம் புதைத்து விம்மி அழுதாள். மூன்று வருடக் காதல் அவளை வெடித்து கிளம்பச் செய்தது. மூன்று மாதங்களுக்கு முன்பு வரைக்கும் தன் காதல் நிறைவேறவே போவதில்லை என எண்ணிக் கொண்டிருந்தவளுக்கு, இன்று அவனே அவள் கணவன்.

ஆனால், அந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியாத தன் நிலை, அதை வெளியே கூட பகிர்ந்து கொள்ள முடியாத சூழல், அனைத்துமாக அவளை நிலை குலையச் செய்தது. அவன்மேல் இப்பொழுது கடும் கோபத்தில் இருக்கும் பொழுதும், கொலை செய்ய முயற்சி செய்தது தெரிந்தும், தன்மேல் அவன் கொள்ளும் நேசம், இதை எப்படி அனுமதிக்க, அனுபவிக்க என அவளுக்குத் தெரியவில்லை.

அவனை முதல் முதலாக தான் பார்த்த தருணம், அவனைப் பற்றிய செய்திகளை கல்லூரித் தோழிகள் உரைக்கையில் உள்ளுக்குள் ரசித்த விதம், எட்டு வயது சிறுமியை ஒருவன் பாலியல் வன்கொடுமை செய்திருக்க, அதை எப்படிச் செய்தான் என கேட்க அழைத்துச் சென்றிருந்தார்கள்.

அந்த நேரம்…, அதே இடத்தில் அவனை என்கவுண்டர் செய்துவிட்டான் எனத் தெரிந்த பொழுது தான் கொண்ட பெருமிதம். “பிரம்மாடா…” மீசையை முறுக்கி, கண்களை உருட்டி சிங்கமாய் கர்ஜிக்கும் அவனது தோரணை, ஹப்பா…, அனைத்தையும் ஆராதித்தாளே…, பூஜை செய்தாளே…, அனைத்தும் ஒரு நாள் தலைகீழாகிப் போனது.

அவனை உள்ளுக்குள் உருகி உருகி நேசித்த பொழுதெல்லாம், ‘அவர் எனக்கு கிடைக்க மாட்டார்…’ அவள் மனம் அடித்துச் சொல்லும் பொழுதெல்லாம், அதை அவளால் சகிக்க முடிந்ததே இல்லை.

பிரம்மா…, அவர் தனக்கு வேண்டும்…, அந்த ஆளுமை, கம்பீரம், கோபம், முரட்டுத்தனம், அவனை ஆயிரம்பேர் முரடன், கோபக்காரன், பாறை என உரைக்கும் பொழுதெல்லாம், அதை அவள் பாதகமாக எண்ணியதே இல்லை, அவனது வெற்றி என்றே கொண்டாடினாள்.

எப்பொழுது அவன் தன் அண்ணன் காமேஷை என்கவுண்டர் செய்துவிட்டான் எனத் தெரிந்ததோ, அந்த நொடியே அனைத்தும் தலைகீழாக மாறிப் போனது. அப்படித்தான் அவள் நினைத்துக் கொண்டிருந்தாள்.

அது…, அவன் தன்னை திருமணம் செய்துகொள் என கேட்ட பொழுது முழுதாக ஆட்டம் கண்டது. அவன்மேல் இருந்த கோபத்தில் மறுத்தாலும், அவனை விட்டு விலகி ஓடிவிட முடியாமல், அவளுக்குள் இருந்த காதலி தானே தடுத்தாள்.

அவனுக்கு பழசெல்லாம் நினைவில்லை, அதனால் தன்னை திருமணம் செய்து கொண்டான். அப்படி ஆகாமல் போயிருந்தால், இன்றும் அவன் தனக்கு கிடைத்திருக்க மாட்டான். அதைவிட பழைய நினைவுகள் வந்தால், அவன் நினைவில் தான் இருப்போமா இல்லையா? என நினைக்கையிலேயே நெஞ்சம் பதறுகிறதே, என்ற உண்மையை ஏற்க முடியாமல் இதயம் வலிக்கிறதே.

அப்படியென்றால் இன்னும் அவர் என் மனதுக்குள் இருக்கிறார் என்றுதானே அர்த்தம். ஆனால், என் அண்ணாவை கொன்றவரோடு நான் எப்படி வாழ, அது என் அண்ணாவுக்கு நான் செய்யும் துரோகம் இல்லையா? அவளால் முடியவே இல்லை.

தன் மனதோடு போராடும் இந்த நிலை…, அடிமனம் வெறியாய் தன்னவனை நேசிக்க, வெளிமனம் விலகப்

போராட, அவன் காட்டும் நேசம், அவன் உருகி நிற்கும் நிலை, ஹையோ..., என வந்தது.

இப்பொழுது கூட, எனக்குப் பசிக்குன்னு சொன்னாரே..., எண்ணியவள், பட்டென எழுந்து கொண்டாள். ‘அவர் பசிக்குதுன்னு சொன்ன பிறகும் இங்கே உக்காந்து அழுதுட்டு இருக்கேன்...’ எண்ணியவள், பாத்ரூம் சென்று முகத்தை கழுவிக் கொண்டாள்.

கண்ணாடியில் தன் பிம்பம் பார்த்தவள், ‘அவரோடு முழுதாக கலந்துவிட மட்டும் தானே என்னால் முடியாது, அதற்கு தானே என் மனம் மறுக்கிறது. அவரோடு ஒரு தோழியாக என்னால் இருந்துவிட முடியாதா என்ன...?’ எண்ணியவள் முகத்தை அழுத்தமாக துடைத்துக் கொண்டாள்.

‘அவருக்கு எப்படி என்னைத் தெரியும்? எப்படி என்னை திருமணம் செய்து கொண்டார்?’ அவளுக்கு தெரிந்தே ஆகவேண்டும்போல் இருந்தது. முதலில் கிச்சனுக்குச் சென்று எதையாவது செய்வோம் என எண்ணியவள் வெளியே வர, அவன் கிச்சனில் எதையோ செய்துகொண்டிருப்பது தெரிந்தது.

‘அவரே சமைக்க ஆரம்பிச்சுட்டாரா?’ எண்ணியவள், அவனை சமைக்க விட மனமில்லாமல், அவன் அருகில் நெருங்கினாள்.

“நா..நா..ன் செய்யவா?” அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை.

அவள் குரல் கேட்கவே, வேகமாக திரும்பிப் பார்த்தவன், அழுது சிவந்திருந்த அவள் கண்களைப் பார்த்து, சற்று சோர்ந்து போனான். ‘என்னால் இதற்கு எதுவும் செய்ய முடியவில்லையே’ அவனுக்கு தன்மீதே கோபம் வந்தது.

‘நிச்சயம் இதை என்னவென்று கவனிப்பேன்...’ எண்ணியவன், தன் கோபத்தை சட்டென கைவிட்டான்.

“ஜஸ்ட் தக்காளி சாதம் தான் செய்யறேன்..., நீ போய் உக்கார்” உணர்வுகளைத் துடைத்த குரலில் உரைக்க, அவளால் அங்கிருந்து நகர முடியவில்லை.

“காய் ஏதாவது...” அவள் தடுமாற, அவள் பக்கம் திரும்பியவன், “என்கிட்டே ஏதாவது கேக்கணுமா?” நேரடியாக கேட்க, ஒரு நொடி தடுமாறிப் போனாள்.

‘இல்லை என சம்மாளிக்கவும் முடியாமல், ஆம் என ஒத்துக்கொள்ளவும் முடியாமல் கிச்சன் மேடையில் இருந்த பாத்திரத்தின் விளிம்பை விரலால் கீறியவாறு நின்றிருந்தாள்.

“காயு, என்னைப் பார்...” அழுத்தி உரைக்க, வேகமாக அவன் முகத்தைப் பார்த்தாள்.

‘கேள்...’ என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தான்.

“நீங்க எப்படி என்னை கல்யாணம் பண்ணிகிட்டீங்க?” அவள் தட்டுத் தடுமாறி, உள்ளுக்குள் சிறு பயம் கலந்து அவள் கேட்க,

“ஏன்..., தாலி கட்டித்தான்...?” வெகு சாதாரணமாக உரைக்க, அவனை போலியாக முறைத்தவளது இதழ்களில் மெல்லிய புன்னகை எட்டிப் பார்த்தது.

“ம்ச்..., அது இல்லை. இப்போ..., உங்களுக்கு எல்லாம் ஞாபகம் இருந்திருந்தால், என்னை..., எப்படி..., இல்ல..., என்னை கல்யாணம் பண்ணியிருக்க மாட்டீங்க தானே..., வேற...” அவள் கேட்டு முடிக்கும் முன்பே,

“நான் பழைய பிரம்மாவா இருந்திருந்தால் கல்யாணமே பண்ணியிருக்க மாட்டேன்னு என்னை சுத்தி இருந்த எல்லாருமே நினைச்சிருக்காங்க, சோ..., நான் கல்யாணமே பண்ணியிருக்க மாட்டேன்” பார்வை வெகு கூர்மையாக அவளை ஊடுருவியது.

வேகமாக அவன் பார்வையை தவிர்த்தவள், “அப்படின்னா..., இப்போ மட்டும் என்னை எப்படி கல்யாணம்

பண்ணீங்க…?” அவளுக்கு அது தெரியவில்லை என்றால் நிம்மதியாக இருக்க முடியாது என்றே தோன்றியது.

“சிம்பிள்…, ஹாஸ்பிடல்ல நான் கண் விழித்த மறு நாள், கௌஷிகா கல்யாணத்தைப் பத்தி பேச்செடுத்த அந்த நிமிஷம்…, மூளைக்குள் ஒரு ப்ளாஷ், தலைக்குள் ஒரு இடி…, கூடவே, ஒரு சிவப்புக்கல் மூக்குத்தி, தூரத்தில் எங்கேயோ…, ‘எப்படி பாக்கறான் பார்…’ன்னு ஒரு குரல், அதுதான் ஞாபகத்துக்கு வந்தது.

“எனக்கு நினைவுக்கு வந்த முதல் விஷயம்…, அதை தேடினேன். அப்போதான் நகைக்கடையில் உன்னைப் பாக்க முன்னாடி, உன் மூக்குத்தி என் கண்ணில் பட்டது…, கவுண்டர்ல உன் ப்ரண்ட் இந்திராவோட அட்ரஸ் வாங்கினேன்.

“அதை வைத்து, அவளை காலேஜ்ல வந்து பாக்க வந்தால்…, அவளோட சேர்ந்து நீயே வந்த…, அதுக்குப் பிறகு நடந்தது உனக்கே தெரியும்…” ஏதோ கதை சொல்வதுபோல் அவன் சொல்லிக்கொண்டே போக, தான் எப்படி உணர்கிறோம் என்றே அவளுக்குத் தெரியவில்லை.

‘அவன் சொல்வதைப் பார்த்தால், அவனது அடிமனதில், ஏதோ ஒரு மூலையில் தான் இருந்திருக்கிறோம் என்பது தானே புலப்படுகிறது’ அவள் சிந்தை அதுவாகத்தான் இருந்தது.

அவன் கண்கள் முதல் முறையாக அவளை விழுங்கும் பார்வையாக உருமாற, அவன் கண்களோடு கட்டுண்ட அவள் பார்வையை அவளால் பிரிக்கவே முடியவில்லை. இத்தனை நாட்களில், ஒற்றை அறையில் இருவரும் இருந்த பொழுதும், தான் உடை மாற்றும் நேரத்தில் கூட அவனிடம் இப்படி ஒரு பார்வையை அவள் கண்டதில்லை.

‘உன்னை அப்படியே சாப்பிடுவேன்’ என்பதுபோல் அவன் பார்க்க, ‘இத்தனை நாள் இல்லாமல் என்ன இது புதிதாக?’ அவளுக்குப் புரியவே இல்லை. ஆனால், அந்த பார்வை ஒரு பக்கம் பிடித்து வேறு தொலைத்தது. ‘இவனுக்கு

உணர்வுகள் கிடையாதோ?’ என்று ஒருமுறை எண்ணியிருக்க, அப்படி இல்லை என நிரூபிப்பதுபோல் இருந்தது.

அவன் பேச்சும், அவன் பார்வையும் அவளை தடுமாறச் செய்ய, அவன் நெஞ்சில் அழுத்தமாக முகம் புதைக்க மனம் தவியாய் தவித்தது. அவள் எண்ணம் புரியாமல் அவன் சொல்லிக் கொண்டே போக, சில பல நொடிகள் கழித்தே அவன் பேச்சில் கவனத்தை திருப்பினாள்.

“காயு, உன்னோட அந்த மூக்குத்தி..., ஐ ஜஸ்ட் லவ் இட்..., வித் யுவர் பெர்மிஷன்...” அவன் இன்னும் சொல்லிக் கொண்டிருக்க, அதற்குமேல் அவன் சொல்வது எதுவுமே அவளுக்குப் புரியவில்லை.

“எ..ன்..ன...?” அவன் தன்னை நெருங்கி வரவே, சிந்தையில் இருந்து கலைந்தவள் கேட்டாள்.

“உன் மூக்குத்தி..., ஒரே ஒரு முறை தொட்டு பாத்துக்கவா...?” அவன் குரலும், முகமும் இப்பொழுது கனிந்து, குழைந்து இருந்தது. ஏற்கனவே அவன்மேல் வெறித்தனமான விருப்பத்தில் இருப்பவளிடம் இப்படிக் கேட்டால் அவள் என்ன செய்வாள்?

அவனது தீண்டலை சாதாரணமாக அவளால் ஏற்றுவிட முடியுமா என்ன? அவன் தன்னைத் தீண்டி, அதில் தான் மயங்குவதை அவன் உணர்ந்து கொண்டால் எவ்வளவு பெரிய அசிங்கம்..., அதே நேரம், முதல் முறையாக அவனது கோரிக்கை, அதை மறுத்துவிடவும் தைரியம் இல்லை.

நெஞ்சம் விம்மித் தணிய, மறந்தும் அவன் முகத்தை ஏறிடாமல், இதழை உள்ளுக்குள் பற்களால் கடித்தவாறு, அசையாமல் நின்றாள். அவளது மௌனமே அவனுக்கு போதுமானதாக இருக்க, அடிமேல் அடி வைத்து அவளை நெருங்கினான்.

அவனது அழுத்தமான காலடிகள் தன்னை நோக்கி நெருங்குவதை ஓர விழியில் கண்டு கொண்டவள்,

இவ்வளவு நேரமாக விரலால் கீறிக் கொண்டிருந்த மேடையை அழுத்தமாக கரத்தால் பற்றிக் கொண்டாள்.

வெகு நிதானமாக அவன் தன் கரத்தை நீட்டி அவள் மூக்குத்தியை வருட முயன்ற அந்த நொடி, குக்கர் விசில் விட, பதறி விலகினாள் காயத்ரி. அவளை நோக்கி நீட்டிய தன் கரத்தை பின்னுக்கு இழுத்துக் கொண்டவன், அவளை அழுத்தமாக ஏறிட்டான்.

“இஃப் நோ மீன்ஸ் யூ ஷுட் டெல் மீ..., முடியாதுன்னா முடியாதுன்னு சொல்லிடு..., அதை விட்டு...” அவன் குரல் இறுக்கத்துக்குச் செல்ல, அவளால் எதுவும் சொல்லவே முடியவில்லை.

‘வாய் திறந்து மறுக்க முடியாமல் தானே அமைதியாக இருந்தாள். அவன் கேட்டு ஒன்றை அவளால் மறுக்க முடியுமா? இப்பொழுது இப்படி ஆகுமென்று அவள் என்ன கனவா கண்டாள்? இதழ்களுக்குள் சுவிங்கம் பரிமாறிக்கொள்ளும் பொழுது மட்டும் என்னிடம் அனுமதியா கேக்கறார்? அப்போ இதுக்கு மட்டும் என்னவாம்?’ காதலி குதர்க்கமாக எண்ணிக் கொண்டாள்.

அவன் வேகமாக விலகிச் சென்றிருக்க, குக்கர் மீண்டும் இரண்டு விசில் விடவே, வேகமாக அதை அணைத்து வைத்தாள். இரண்டு வெங்காயத்தை வெட்டி, அதில் தயிர் ஊற்றி உப்பு போட்டு கிண்டிவிட்டு, குக்கரை விசில் ஆறவிட்டு திறந்தவள், சாப்பாட்டு மேஜைமேல் அனைத்தையும் எடுத்து வைத்துவிட்டு அவனைத் தேடிச் சென்றாள்.

சாப்பாட்டு மேஜை முன்னால் அவன் இல்லாமல் போகவே, அவனைத் தேடிச் அறைக்குச் சென்றாள். அவனோ..., மனம் குமைந்து கொண்டிருந்தான். ‘அவள் மனதில் நான் இருந்த பிறகும், அவள் நேசத்தை மறைக்கிறாளே...’ அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது.

‘அப்படின்னா..., அவளோட அண்ணனின் சாவுக்கு நீதி கிடைக்காமல் என்னோடு சேர மாட்டாளா?

அப்படியென்றால் என்மேல் அவளுக்கு நம்பிக்கை இல்லையா? அப்படி நம்பிக்கை இல்லாதவள் ஏன் என்னை திருமணம் செய்தாள்? என்னை தவிக்க விடவா?’ அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அதுவும் அவள் தன்னை விரும்பியிருக்கிறாள் என்ற உண்மை தெரிந்த பிறகு, அவளை கட்டிக்கொள்ள அவனது ஒவ்வொரு அணுவும் தவிக்கிறதே. அவளோ, தன்னை காதலித்த பிறகும், ‘என்னைத் தீண்டாதே’ என சொல்லும் அளவுக்கு இருக்கிறாளே.

திருமணம் முடிந்த ஒவ்வொரு ஆண்மகனின் எதிர்பார்ப்பு..., தன்னவளை முழுதாக தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஏக்கம்..., அதிலும் அவனுக்கு ஒரு படி மேலாக, அவளை மட்டுமே தெரியும் என்னும்பொழுது, அவளையே முழுதாக சார்ந்திருக்கத் தோன்றியது.

அந்த வீட்டை விட்டு வெளியே இறங்கிவிட்டால், இன்றும் அவனால் ஒரு நொடி கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. வீட்டுக்குள் வந்துவிட்டால் அவனுக்கு வேறு எந்த சிந்தைகளும் இருந்தது இல்லை. அவளோடு பேசுகிறானோ இல்லையோ..., வீட்டுக்குள் வந்துவிட்டால் அவன் சிந்தைகள் அவளைத் தவிர எதையும் யோசிப்பதில்லை.

‘அவளுக்கு அப்படியெல்லாம் எதுவும் இல்லையா? ஏன்? மனதார விரும்பும் என்னை தவிர்க்க அவளால் எப்படி முடிகிறது?’ அவனுக்குப் புரியவே இல்லை.

‘ஒரு வேளை அவளுக்கு இன்னும் நான் டைம் கொடுக்க வேண்டுமோ...?’ அவன் யோசித்துக் கொண்டிருக்க, அறைக்குள் வந்தாள், கட்டிலில் படுத்திருந்த அவனைப் பார்த்தாள்.

‘இவர் என்ன சாப்பிடாமலே படுத்துவிட்டார்...’ எண்ணியவள், தயக்கமாக அவனை நெருங்கினாள்.

“சாப்பிட வாங்க...” அவனை அழைக்க, எதுவும் முரண்டு பிடிக்காமல் எழுந்து அவளோடு வந்தான். அவனது அமைதி

அவளை வெகுவாக பாதித்தது. அவன் கோபமாக என்றாலும் எதையாவது பேசிவிட்டால் பரவாயில்லை என மனம் தவித்தது.

“சாப்பாடு எப்படி இருக்கு…?” அவன் எதிரில் அமர்ந்தவள் உணவை உண்ண, அங்கே இருந்த மௌனத்தை கலைத்தான் பிரம்மா.

‘இந்த கேள்வியை, தான் அவனிடம் கேட்டிருக்க வேண்டும்…, இங்கே என்றால், அவன் சமைத்து கொடுத்து, அவளிடம் கேட்கிறான்…’ மனம் குறுகுறுக்க, அவனுக்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் தவித்துப் போனாள்.

“நல்லா இல்லன்னாலும் சொல்லலாம்…, நான் ரொம்ப பெர்பெக்ட்டா எல்லாம் சமைக்க மாட்டேன்…” அவன் உரைக்க,

“ரொம்ப நல்லா இருக்கு…” முனகியவள், அந்த நேரம் டோனி தன் பிளேட்டை தூக்கிக் கொண்டு வர, அதன் தட்டில் கொஞ்சம் சாதம் போட, அதைப் பார்த்தவன், “என் சாப்பாட்டை நாய்தான் சாப்பிடும்னு சொல்றியா?” அவன் கேட்க திடுக்கிட்டுப் போனாள்.

*****

# பகுதி – 27.

டோனியின் பிளேட்டில் சாதத்தை போட்டு விட்டவளுக்கு அதை எடுக்கவும் முடியவில்லை, சாதத்தை அதற்கு கொடுக்கவும் முடியவில்லை. அவள், அவன் உரைத்த அந்த கோணத்தில் யோசிக்கவே இல்லையே. பொதுவாக அதற்கு பிடிகிரி கொடுப்பதுதான் வழக்கம், அது காலியாகியிருக்க டோனிக்கு எதைக் கொடுப்பது எனத் தெரியாத குழப்பத்தில் ஏற்கனவே இருந்தாள்.

எனவே, இப்பொழுது அது தட்டை தூக்கிக்கொண்டு வர, எதையும் யோசிக்காமல் செய்துவிட்டாள். பிரம்மா கேட்ட பிறகுதான், தான் செய்ததற்கு அப்படி ஒரு கோணம் இருப்பதையே உணர்ந்தவள், தவித்துப் போனாள்.

அவன் முகத்தை சிறு பயமாய் ஏறிட, அவள் கோபமாகப் பார்த்தால் கூட எதிர்கொள்ள முடியும் அவனால், அந்த பயத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“ம்ச்..., இப்போ எதுக்கு இப்படி பயப்படுற...? நான் என்ன சிங்கமா கரடியா? மனுஷன் தாண்டி” இயலாமையால் வெளிப்பட்ட கோபம் சிதற, அவள் கண்களில் முணுக்கென கண்ணீர் வழிந்தது.

“அடுத்த ஆயுதத்தை கையில் எடுத்தாச்சா? அந்த கண்ணீரை எங்கேதான் வச்சுட்டு இருப்பீங்கன்னே தெரியலை. ஏண்டி..., நிஜமாவே உனக்கு என்னைப் புடிக்கலையா? என்னை விட்டு போயிடணும்னு ஆசைப்படுறியா? அதையாவது சொல்லித் தொலை.

“மனுஷனை நிம்மதியா ஒரு வாய் கூட சாப்பிட விடாமல் ஏன் இப்படி இம்சை பண்ற?” பேசிக்கொண்டே போனவனது குரல் உச்ச கட்டத்தை எட்ட, அவள் மனதை பயம் கவ்விக் கொண்டது.

‘ஹையோ..., இவர் டென்ஷன் ஆகக் கூடாது, சத்தமா பேசக் கூடாதுன்னு டாக்டர் சொன்னாங்களே...’ தவித்துப் போனாள். தான் அமைதியாக இருந்தால் இன்னும்

கோபப்படுவான் என்பது புரிய, டோனியின் முன்னால் தட்டை வைத்தவள், தண்ணீரை எடுத்து அவனுக்குக் கொடுத்தாள்.

“உங்களை விட்டு போறேன்னு நான் சொன்னேனா?” சும்மாவே அவனை விட்டு போக அவள் விரும்பவில்லை. இதில் அவனது முழு நிலை தெரிந்த பிறகு அவனை விட்டுப் போவதா? அது அவளால் முடியுமா? அவனுக்கு பழைய நினைவுகள் திரும்பி, அவனாக அவளை போகச் சொன்னால் தவிர, அவனை விட்டு அவள் போகவே மாட்டாள்.

அவள் செய்கையில் அவனது கோபம் குறைவதை அவன் முகம் எடுத்துக் காட்ட, “நீங்க எப்பவுமே கோபமாவே இருக்கீங்க. எனக்கு என்ன சொல்ல, பேசன்னு தெரியலை..., இப்போ கூட..., டோனிக்கு பிடிகிரி காலியா போச்சு, அதான் சாதம் வச்சேன்.

“அதையும் நீங்க இப்படிச் சொன்னால் நான் என்ன செய்ய? எனக்குத் தெரியலை...” தன் நிலையை உணர்த்திவிடுவது என முடிவெடுத்தவள், வேகமாக உரைத்தாள்.

“அதுக்கு...? நான் கஷ்டப்பட்டு சமைச்சதை போடுவியா?” அவன் குரலில் கோபமில்லை என்றாலும், அவளுக்கு சாதாரணமாகவும் தோன்றவில்லை.

“எப்போ பாத்தாலும் போலீஸ் மாதிரி கேள்வி கேக்காதீங்க. இந்த வீட்டுக்கு வெளியேதான் நீங்க போலீஸ்...” அவன் முகத்தில் இருந்த இளக்கம் தைரியம் கொடுக்க, படபடவென பொரிந்துவிட்டாள்.

“அப்போ வீட்டுக்குள்ளே...” அவன் இடையிட, “எ..ன்..ன...?” புரியாமல் கேட்டாள்.

“வீட்டுக்கு வெளியேதான் போலீஸ்ன்னு சொன்ன, அப்போ வீட்டுக்குள்ளே நான் யார்ன்னு கேட்டேன்...” இப்பொழுது அவன் மனநிலை முழுதாக மாறியிருக்க, அவன் பார்வை அவளை இம்சிக்க, அவன் இதழ் ஓரம் அவளை எட்டும் ஒரு புன்சிரிப்பும் தவழ்ந்தது.

தன்னைத் துளைக்கும் அவன் பார்வையை வேகமாக தவிர்த்தவள், “பிரம்மா மட்டும்தான்…” முனகினாள். அவன் கேட்க வருவது புரிந்தாலும், அதற்கு அவளால் பதில் கொடுக்க முடியவில்லை.

‘நீ என் கணவன்’ என அவனுக்கு பதில் கொடுக்க ஒரு நொடி போதாது. அதற்குப் பிறகு, கணவனுக்கான எதிர்பார்ப்புகளை அவன் வளர்த்துக் கொண்டால், இருக்கும் மனநிலையில் அது அவளால் சுத்தமாக முடியாது என்றே தோன்றியது.

“அப்போ அவ்வளவுதான் இல்ல…” கேட்டவன் உணவை அளைய அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“நீ சொல்ல வேண்டியதை சொல்லிட்ட, அப்போ நான் சொல்ல வேண்டியதையும் சொல்லிடறேன். உனக்கு நான் வெறும் பிரம்மாவாகவே இருந்துட்டுப் போறேன். ஆனா எனக்கு நீ மனைவிதான். அதாவது உனக்கு என்மேல் எல்லா அதிகாரமும் இருக்குன்னு சொல்ல வந்தேன்.

“நீ நினைப்பதுபோல் என் மனைவிக்கான எந்த உரிமையையும் நான் உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ள தயாராக இல்லை. என்னைப் பார்த்து பயப்படுவதை முதல்ல நிறுத்து. என்னால் அதை தாங்கிக்க முடியலை. உன் விருப்பம் இல்லாமல் நான் எதையும் செய்ய மாட்டேன்” அவன் உறுதி கொடுக்க,

“ஆமா, இப்படித்தான் அன்னைக்கும் சொன்னீங்க…, ஆனா…” உரைத்தவள், அவன் அருகில் இருந்த சுவிங்கம் பாக்ஸை பார்வையால் சுட்ட, மெல்லியதாக சிரித்துக் கொண்டான்.

“அது நீ பண்ணதுக்கு பனிஷ்மென்ட்…, நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன், நானா உன்னைத் தொட மாட்டேன். நீயா தொட்டால்…, எனக்குப் பிடித்த விதத்தில் உனக்கு பனிஷ்மென்ட் கொடுப்பேன்…” அவன் தோளைக் குலுக்கி உரைக்க, அவள் விழிகள் சாசர் போல் விரிந்தது.

“அன்னைக்கு சரி..., இன்னைக்கு...” வேகமாக கேட்டவள், நாவை கடித்துக் கொண்டு வார்த்தைகளை நிறுத்தினாள். கண்களில் சுவாரசியம் கூட, தன் முகம் பார்க்க மறுத்தவளை, “காயு...” அழைக்க, விழியை மட்டும் மெதுவாகத் திருப்பி அவனைப் பார்த்தாள்.

“அதான் இன்னைக்கு ஹாஸ்பிடல் போகலாம் வான்னு’ சொல்லி என்னை இழுத்துட்டு போனியே...” ஒரு மாதிரி இழுத்து உரைக்க, ‘எல்லாத்தையும் கணக்கு வச்சுதான் பண்ணுவியா?’ அவள் மனதில் செல்லக் கோபம் எழ, அவனை முறைத்தாள்.

அவனோ, சிறிதும் அலட்டிக் கொள்ளாமல், “அது கூட இல்லன்னா, நான் எவ்வளவு தூரம் ப்ராமிஸை காப்பாத்துவேன்னு தெரியலை” ஒரு மாதிரி குரலில் அவன் உரைக்க, அவளுக்கு மூச்சடைத்தது.

அதைப் பார்த்தவன், “ஏய் முட்டக்கண்ணி..., மூச்சு விடு...” டேபிள் மேலே இருந்த டம்ப்ளரில் இருந்த தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் தெளித்தான்.

“போடா பீமா...” அவள் வாயை விட, “என்னைப் பாத்தா உனக்கு பீமன் மாதிரியா இருக்கு...?” கேட்டவன் இருக்கையில் இருந்து வேகமாக எழ முயல, அவளும் ஓடுவதுபோல் பாவனை காட்டினாள். அந்த நிமிடத்தை இருவரும் ரசித்தார்கள்.

“ஆனாலும் நீ கூப்ட்டா அதுகூட கிக்காதான் இருக்கு...” கண்களில் போதையோடு அவன் உரைக்க, உள்ளுக்குள் உருகிக் கொண்டிருந்தாள்.

“உக்காந்து சாப்பிடு...” உரைத்தவன், தன் உணவை முடித்துக் கொண்டு சென்றுவிட, அவன் வைத்த உணவை ரசித்து உண்டாள். பிரம்மா அறையில் இருக்க, அவன் ஓய்வெடுக்கிறானா இல்லையா எனக் காண வந்தவள், அவன் எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்க, அவனை நெருங்கினாள்.

“ரெஸ்ட் எடுக்காமல் என்ன பண்றீங்க?” அவள் கேட்க,

“இல்ல..., நான் எப்படி உன்னை கல்யாணம் பண்ணிகிட்டேன்னு கேட்டியே, நீ எப்படி என்னை கல்யாணம் பண்ணிகிட்டன்னு கேக்காமல் விட்டுட்டோமேன்னு யோசிச்சுட்டு இருந்தேன். சரி விடு, எப்படி இருந்தாலும், இப்போ நீ என் மனைவி...” அவள் தடுமாற்றத்தை கவனித்தவாறே உரைத்தவன், தன் கையில் இருந்த ஏடிஎம் கார்டை அவளிடம் கொடுத்தான்.

“இதை எதுக்கு என்கிட்டே கொடுக்கறீங்க?” அவள் புரியாமல் கேட்க,

“நீதானே என் பொண்டாட்டி அதான்...” கார்டை அவள் கரத்தில் திணித்தான்.

“வீட்டுக்குத் தேவையானது எல்லாம் வாங்கு. அப்படியே..., டெய்லி என் பர்ஸ்ல ஐநூறு ரூபாய் இருக்கான்னு செக் பண்ணி வச்சுடு...” உரைத்தவன் கட்டிலில் சென்று அமர, திகைத்துப்போய் நின்றிருந்தாள்.

‘என்ன இது..., கார்டை அப்படியே என்கிட்டே கொடுத்துட்டார். அதோட, அவரோட பர்ஸை நான் செக் பண்ணி வைக்கிறதா?’ அவளுக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை.

சற்று நேரத்தில் தெளிந்தவள், “என்கிட்டே என்னோட கார்ட் இருக்கு...” அவள் உரைக்க, அவன் பார்த்த பார்வையில் சட்டென தடுமாறி தெளிந்து, “கார்ட் நம்பர் தெரியாமல் நான் எப்படி யூஸ் பண்றதாம்...?” அவனது கோபத்தை வளர்க்க அவள் தயாராக இல்லை.

“உன்னோட பெர்த் இயர்தான்...” உரைத்தவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொள்ள, ‘என்னோட பெர்த் இயர் இவருக்கு எப்படித் தெரியும்?’ எண்ணியவள் அதை அவனிடம் கேட்கவில்லை.

“வந்து படு...” அழைக்க, ‘என்னமோ கூடவே தூங்குற மாதிரி கூப்பிடறார்’ எண்ணியவள் பார்வையால் அதை வெளிப்படுத்த,

“நீயும் என்னோட படுக்கலைன்னா என்னை தூங்க விட மாட்ட” உரைத்தவன், அவள் என்னவென்று உணரும் முன்பே, அவளை கைபிடித்து இழுத்து படுக்க வைத்திருந்தான்.

இதயம் தொண்டைக்குள் துடிக்கும் உணர்வு..., விழிகளை அழுத்தமாக மூடிக் கொண்டவள், “இந்த கார்டோட நான் ஓடிப் போய்ட்டா என்ன பண்ணுவீங்க?” வீம்புக்காய் கேட்டு வைத்தாள்.

அவள்மேல் மொத்தமாக கவிழ்ந்தவன், அவள்மேல் படராமல், கை, காலை ஊன்றி தன்னை பேலன்ஸ் செய்தவன், அவள் முகத்தை சுவாரசியமாக ஏறிட, அவன் மூச்சுக்காற்று அவள் முகத்தில் மோத, அவள் இதயம் படபடக்க, அவள் நெஞ்சுக்கூடு ஏறி இறங்கியது.

அவளது அந்த செய்கை இருவருக்கும் இடையில் இருந்த மெல்லிய இடைவெளியை குறைக்க முயல, அவள் தேகம் அவன்மேல் மெல்லியதாக தீண்டி விலகிக் கொண்டிருந்தது.

ஆண்டவா... அந்த நிலையை எப்படி வர்ணிக்க? தொட மாட்டேன் எனச் சொன்னவன் அந்த வாக்கை இம்மியும் மீறவில்லை ஆனால், தொடாமல் உருக வைக்கிறானே. இமைகளை இன்னும் அழுத்தமாக மூடிக் கொண்டவளது இதழ்கள் உலர்ந்து போக, தன் நாவால் மெல்லியதாக இதழ்களை ஈரம் செய்தாள்.

அவ்வளவு நெருக்கத்தில், அவளது இந்த செய்கையைப் பார்த்து அவன் தூண்டப்படாமல் இருந்தால்தான் ஆச்சரியம். “என் உதடு கூட காஞ்சுபோன மாதிரிதான் இருக்கு...” அவன் இதுவரை பேசியிராத கஸ்கி வாய்சில் உரைக்க, பட்டென விழி திறந்தாள்.

தன்னை அப்படியே மொத்தமாக சுருட்டிக்கொள்ளும் பார்வை. அவளுக்கு மூச்சடைக்காமல் போனால்தான் ஆச்சரியம். இழுத்து வைத்த மூச்சை அவள் விட மறுக்க,

“உப்…” காற்றை அழுத்தமாக அவள் முகத்தில் ஊத, வாயை அகலமாகத் திறந்து மூச்சு வாங்கினாள்.

அப்பொழுதும் அவன் அவள்மேல் இருந்து அசையாமல் இருக்க, “பீமா… என்ன இது?” அவஸ்தையாக முனகினாள்.

“உன்னை டச் பண்ணா என்னன்னு கேளு, இல்லையா…” அவள்மேல் விழப் போவதுபோல் கையை இறக்க, “பீமா…” அலறியவள், அவனைத் தன் கரத்தால் தடுத்தாள்.

அடுத்த நொடி, அவன்மேல் மொத்தமாக அவள் படுத்திருக்க, கைகளை தன் தலைக்கு அடியில் வைத்துக் கொண்டு, அவளைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தான். கூடவே, “இப்போ நீதான் என்மேல் படுத்திருக்க” அவன் சொல்ல பதறிபோய் விலகினாள்.

அவளைத் தடுக்காமல் பார்த்து சிரித்தவன், “ஏய், முட்டக்கண்ணி என்னையே வச்சுக்கோன்னு சொல்றேன்…, அதைக் கேக்காமல் பைசா பெறாத கார்டை தூக்கிட்டு ஓடுறதைப் பத்தி பேசற. இந்த மாதிரி பேசினால், உன் வாயையும் நான் அடைக்க வேண்டி இருக்கும்” அவன் சொல்ல, அதற்குமேல் ஏன் பேசப் போகிறாள்?

அவனது வலப்பக்கம், அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டவளுக்கு தேகத்தில் ஓடிய மெல்லிய நடுக்கத்தையும், சிலிர்ப்பையும் அடக்கும் வழி தெரியாமல், விழிகளை இறுக மூடி படுத்துக் கொண்டாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, காலையில் வழக்கம்போல் எழுந்தவன், தன் ஒர்க்கவுட்டில் இருக்க, கேட்டின் அருகே யாரோ தயங்கி நிற்பது போன்ற உணர்வு. ‘டோனி எங்கே…’ எண்ணியவன், தன் பார்வையை கூர்மையாக்கி செலுத்த, அதுவோ கேட்டின் அருகே தன் வாலை ஆட்டியவாறு நின்றது.

‘டோனி இப்படி நிக்கிதுன்னா? யாரோ தெரிஞ்சவங்களா? தெரிஞ்சவங்கன்னா ஏன் வெளியிலேயே நிக்கறாங்க?’ யோசனையிலேயே நின்றானே தவிர, அங்கே இருந்து நகரவே இல்லை.

காலையில் எழுந்த காயத்ரி, வாசல் தெளித்து கோலம் போட வெளியே வர, டோனி அவளை அழைக்கும் விதமாக குலைத்து குரல் கொடுத்தது. “டோனி கொயட்...” அவள் சத்தம் போட, அதுவோ அவளது சுடிதார் துப்பட்டாவை பிடித்து இழுத்தது.

சும்மாவே அவளுக்கு டோனி என்றால் பயம்..., அதற்கு சாப்பாடு போடுவது கூட சற்று தூரத்தில் இருந்தே செய்வாள். இப்பொழுது அது சுடிதார் துப்பட்டாவை பிடித்து இழுத்தால் அவளும் என்னதான் செய்வாள்? ஆனால், தான் போகாவிட்டால் விடாது என்பதை அறிந்தவள், “வர்றேன் விடு...” அதன் வாயில் இருந்து துப்பட்டாவை உருவிக் கொண்டாள்.

கேட்டின் பக்கம் அவளை நகர்த்திவிட்டு, கேட் கீயை எடுத்துக் கொண்டு வந்து அவள் காலடியில் போடவே, “யாருடா..., உனக்கு தெரிஞ்சவங்களா?” கேட்டவள், அந்த உயரமான கேட்டில் இருந்த சிறு திறப்பின் வழியாக பார்க்க, அங்கே நின்றிருந்தவர் கலைவாணி.

“அத்தை...” வாய்விட்டே முனகியவள், வேகமாக பூட்டின் உள்ளே சாவியை நுழைத்து திறந்தவள், “காலிங்பெல்லை அடிச்சிருக்கலாமே அத்தை..., உள்ளே வாங்க...” அவரை அழைத்தாள்.

“நான் உன்னைப் பாக்கத்தான் வந்தேன். எப்படிம்மா இருக்க? என் புள்ளை உன்னை நல்லா பாத்துக்கறானா?” வாசல் தாண்டி உள்ளே வர மறுத்தவர், அங்கேயே நின்று அவள் முகத்தை ஆராய்ந்தார்.

அவரது பார்வைக்கான பொருள் புரியாமல், “நான் நல்லா இருக்கேன் அத்த..., நீங்க முதல்ல உள்ளே வாங்க...” வற்புறுத்தினாள்.

“இல்லம்மா, நான் உள்ளே வந்தால் அவனுக்குப் பிடிக்காது. நான் இங்கேயே இருக்கேன்...” வாய் உரைத்தாலும், ஒரு பார்வை அவனை பார்த்துவிட மாட்டோமா என அவரது

கண்கள் அலை பாய்ந்தது. அதை அவளும் உணர்ந்து கொண்டாள்.

“அதெல்லாம் நான் பாத்துக்கறேன்..., நீங்க உள்ளே வாங்க...” அவரை கை பிடித்து அழைத்துச் சென்றாள். காயத்ரி பிடிவாதமாக அழைக்கவே, சற்று பயத்தோடு வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தார். கலைவாணியை திருமணத்தின் பொழுது பார்த்தது. அதன் பிறகு இன்றுதான் பார்க்கிறாள்.

அதுவும் அவனது தாய் என்ற பிறகு, அவன் பேசவில்லை என்றாலும், அவளால் பேசாமல் இருக்க முடியவில்லை. அவர் கண்களில் இருக்கும் கலக்கத்தையும், ஏக்கத்தையும் எப்படி கண்டுகொள்ளாதவள்போல் நடிக்க?

“உக்காருங்க அத்த..., காபி போடறேன்...” ஜம்பமாக உரைத்துவிட்டு கிச்சனுக்குள் வந்து விட்டவளுக்கு பாலை ஸ்டவ்வில் வைத்த பிறகு, எவ்வளவு தூள் போடுவது என்பதில் பெரும் தடுமாற்றம்.

கலைவாணிக்கோ ஹாலில் இருக்கவே முடியவில்லை. சட்டென பிரம்மா வந்துவிட்டால் அவனை எப்படி எதிர்கொள்வது என்ற பயம். தானும் கிச்சனுக்குள் நுழைய, காயத்ரியின் யோசனையைப் பார்த்தவர், தானே காபி கலக்க, கையைப் பிசைந்தவாறே நின்றாள்.

“என்னம்மா..., சமைக்கத் தெரியாதா?” அவர் தணிவாய் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள். சமைக்கத் தெரியாது எனச் சொன்னால் ஏதாவது சொல்வாரோ என்ற பயம் இருந்தாலும், உண்மையை சொல்லி விடுவதே மேல் எனத் தோன்றியது.

கலைவாணிக்கோ..., காயத்ரியை அதிகம் பிடித்தது. மகன் தன்னை மதிக்கவில்லை என்றாலும், மாமியாரை மதிக்கும் மருமகள், அவளை அப்படித்தான் கண்டார். இந்த காலத்து பெண்கள் யாருக்கு அதிகம் சமைக்கத் தெரிகிறது? எல்லாம் காலப்போக்கில் கற்றுக் கொள்வார்கள் என்பது அவரது எண்ணம்.

“சமையலுக்கு, மேல் வேலைக்கு மட்டுமாவது, கொஞ்சநாள் யாரையாவது வைக்கலாமேம்மா, சமையல் கத்துகிட்ட பிறகு வேண்ணா அவங்களை நிறுத்திக்கலாம். பிரம்மா சம்மதித்தால் நானே தினமும் வர்றேன். எனக்கு அதில் ஒண்ணும் பிரச்சனையே இல்லை” அவர் ஆலோசனை வழங்கினார்.

“இல்ல அத்த..., அது சரியா வராது. நான் சீக்கிரமே சமைக்க கத்துக்கறேன்” படபடவென உரைத்தாள்.

“காலேஜ்க்கும் போயிட்டு, வீட்டு வேலை, சமையல் வேலை, படிப்பு, எல்லாத்தையும் எப்படி சம்மாளிப்ப? உன் படிப்பு முடியும் வரைக்குமாவது ஏதாவது ஏற்பாடு செய்தே ஆகணும். வேண்ணா நானே ஆள் ஏற்பாடு பண்ணவா?” அவர் கேட்க,

“நான் அவங்ககிட்டே கேட்டுட்டு சொல்றேன் அத்த...” அவர்கள் பேசுவதை மாடிப்படியின் ஓரம் நின்று கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.

‘வீட்டில் பெரியவங்க இருக்கணும்னு அதனால்தான் சொல்றாங்க போல’ மனதுக்குள் எண்ணியவன், ‘இவங்கமேலே நான் ஏன் அவ்வளவு கோபமா இருந்தேன்? அவங்க ரெண்டாவது கல்யாணம் செய்ததாதா? நான் அவ்வளவு பிற்போக்குவாதியா என்ன?’ மனதை வண்டாய் கேள்வி குடைந்தது.

அனைத்தையும் ஆராய மனம் விரும்பினாலும், நேரமின்மை அவனை ஆட்டிப் படைத்தது என்றே சொல்லலாம். அதே நேரம்..., “அம்மாடி..., அவன் உன்னை நல்லா பாத்துக்கறானா? உன்னை எதுவும் சொல்றது இல்லை தானே...”

“ஏன் அத்த வந்ததில் இருந்து அதையே கேட்டுட்டு இருக்கீங்க? அவர் என்னை நல்லாத்தான் பாத்துக்கறார்...” ஏற்கனவே சொன்ன அதே பதிலை அழுத்திச் சொல்ல, அவர் கண்களில் மெல்லிய நீர்ப்படலம்.

“எங்க வாழ்க்கை சாதாரணமா இருந்திருந்தால் இந்த நேரம் நான் இங்கே வந்து நின்னும் இருக்க மாட்டேன்..., இதே கேள்வியை நான் உன்கிட்டே கேட்டும் இருக்க மாட்டேன். இந்த வீட்டு விஷயம் உனக்கு தெரிந்துதான் ஆகணும், ஆனா இப்போ இல்ல..., இன்னொரு நாள் சொல்றேன். அவனுக்கு காபி எடுத்துட்டு போய் கொடு...” அவள் கையில் கப்பை திணித்தார்.

“மறுநாளே இங்கே வரணும்னு ஆசைதான்..., ஆனா..., எதையோ எண்ணிக் கொண்டவர், அதை அப்படியே விடுத்து, “இன்னைக்கு ரெண்டுபேருக்கும் லீவ், வீட்டில் இருப்பீங்க, பாத்துட்டு போகலாமேன்னு வந்தேன். வழக்கமா இந்த வீட்டுக்குள் விடவே மாட்டான்.

“இந்த டோனி கூட அவன் பேச்சை கேட்டுட்டு என்னை விரட்டும். இன்னைக்கு என்னவோ அதிசயமா அவன் மாறியிருக்க மாதிரி, இதுவும் மாறியிருக்கு...” உரைத்தவர், அதன் தட்டில் பாலை ஊற்ற, வாலை ஆட்டிக்கொண்டு பாலை குடிக்கத் துவங்கியது டோனி.

“நீங்களும் வாங்க அத்தை..., அவரை பாத்துட்டு போங்க...” அவள் அழைக்க,

“இல்லம்மா..., காலையிலேயே அவன் கோபத்தை கிளற வேண்டாம். நான் உன்னை தூரமா இருந்து பாத்துட்டு போகலாம்னுதான் வந்தேன். இப்போ இந்த வீட்டுக்குள் வந்ததே போதும்..., நீ அவனுக்கு காபி கொடு, நான் காலைக்கு வேண்டியதை சமைக்கறேன்...” அவர் வேலையைத் துவங்க முயல, வேகமாக அவரைத் தடுத்தாள்.

“உங்களுக்கு எதுக்கு சிரமம் அத்தை..., நானே பாத்துக்கறேன்...” உரைக்கையிலேயே குரல் உள்ளே போய்விட்டது. அவர் சென்றுவிட்டால், நிச்சயம் என்ன சமைப்பது என்பது அவளுக்குத் தெரியவே செய்யாது. அதை எப்படி வெளிப்படையாக அவரிடம் சொல்வதாம்?

“நொடியில் முடிச்சுடுவேம்மா..., நீ போ...” அவளை பிடிவாதமாக அனுப்ப, அவள் வரும் ஓசை உணர்ந்து, வேகமாக தன் ஜிம் அறைக்குள் புகுந்து கொண்டான்.

அரைக்கால் சட்டையும், வியர்வையில் தொப்பலாக நனைந்த உள் பனியனோடு அவன் நிற்க, அறைக்குள் வந்தவளது பார்வை, பிடிவாதமாக அவன் தேக்குமர தேகத்தில் பாய, அதை தடுக்க முயலாமல் திணறித் திண்டாடிப் போனாள்.

அவன் பனியனை பிடித்து இழுத்து, அவன் வியர்வை வழியும் அகன்ற தோளில் தன் முகத்தை புதைத்துக்கொள்ள எழுந்த ஆவலை அடக்க மிகுந்த சிரமப்பட்டாள். ‘ஏண்டா என்னை மயக்குற மாதிரி இருந்துத் தொலையிற?’ மனதுக்குள் அவனை சாடியவள், கையில் இருக்கும் காபியை அவனிடம் கொடுக்க மறந்தாள்.

“இது எனக்கா...? கொடுக்குற ஐடியா இருக்கா...?” அவள் முகத்தின் முன்னால் விரலால் சொடக்குப் போட்டவன், தானாகவே அவள் கரத்தில் இருந்து கப்பை வாங்கிக் கொண்டான். கூடவே, “என்னை தொட்டுப் பேசக் கூடாதுன்னு நான் எந்த கண்டிஷனும் போடலை...” திடுமென அவன் உரைக்க, அங்கிருந்து நகரப் போனவளின் கால்கள் அப்படியே வேரோடியது.

‘ஹையோ..., என்னைக் கண்டுகொண்டானே...’ சட்டென இடக்கரத்தின் விரல்கள் அவள் பற்களுக்குள் அரைபட, வேகமாக அவனுக்கு முதுகு காட்டி நின்றாள்.

அவள் சங்கடத்தை கண்டுகொள்ளாமல், “காபி நீயா போட்ட...?” பேச்சை மாற்றினான். அவள் அவஸ்தையை ரசிக்கத் துடித்த அவனது மனம், கூடவே அவள் சங்கடப்படுவதையும் விரும்பவில்லை. எனவேதான் அவள் கவனத்தை திருப்பினான்.

அவன் பேச்சை மாற்றிய பிறகுதான் அவளால் மூச்சு விடவே முடிந்தது. அவன் பக்கம் திரும்பாமலே, “எதுவும் தெரியாத மாதிரி கேக்காதீங்க. உங்க அம்மா

வந்திருக்காங்க. அவங்கதான் காபி போட்டாங்க. கீழே வந்து அவங்ககிட்டே ஒரு வார்த்தை பேசலாம்தானே…” அவள் கேட்டு முடிக்கையில், அவன் இரும்பு தேகத்தில் மோதி நின்றிருந்தாள்.

எப்பொழுது தன் கையைச் சுண்டினான்…, ஒரே சுழற்றலில் அவன் தேகத்தோடு அவள் மென்மை தேகம் உரச, அவன் நாடியில் அவள் தலை மோதி இருந்தது. சில நிமிடங்களுக்கு முன்னர், அவனோடு ஒட்டிக்கொள்ள நினைத்த அதே நிலை.

அவளது கரம் அவன் தினவெடுத்த தோளில் பதிந்திருக்க, விரல்களை மெதுவாக அசைத்து கரத்தை விலக்கிக் கொள்ளக் கூட முடியவில்லை. அப்படியே ஒரு நொடி, அழுத்தமாக பற்றி அவன் தேக்குமர தேகத்தை உணர்ந்து விடுவோமா?

நான்கு வருடங்களாக எண்ணத்தில் ஏங்கிய காதலன் கைகளுக்குள் தான்…, நெஞ்சம் விம்மித் தணிய, அவள் தேகம் அவன்மேல் பட்டு உரச, மூச்சுவிடவும் மறந்தாள். அவளை தன் இரும்புக்கரத்தால் இறுக்கிக் கொள்ள அவன் கரங்கள் பரபரத்தது. ஆனால் அதைச் செய்ய முயலாமல் தன் மூச்சுக்காற்று சுடும் நெருக்கத்தில் இருந்த அவள் தலையை வெறித்தான்.

கூடவே, தன் தோளில் இருந்த அவளது கரத்தின் மெல்லிய நடுக்கம், அவள் இளம் தேகத்தின் மெல்லிய தீண்டல், கலைந்திருந்த அவள் கூந்தல், அந்த இளம் காலை வேளையில் சிறு வெம்மையாக வெளியேறி, தன் நெஞ்சைச் சுடும் அவளது மூச்சுக் காற்றின் வெம்மை…, தீயாய் தகிக்கத் துவங்கியது அவன் இளமை.

“என்னைத் தொடாதீங்கன்னு சொல்லியிருக்கேன்… முதல்ல என்னை விடுங்க” கோபமாக உரைக்க முயன்ற வார்த்தைகள் கிசுகிசுப்பாய் வெளியேறி அவளை சோதிக்க, பட்டென இதழ்களை அழுத்தமாக மூடிக் கொண்டாள்.

“நான் உன்னைத் தொடவே இல்லையே… பிறகு எப்படி விட?” மெதுவாக அவள் காதுக்கருகில் குனிந்து, மீசை ரோமம் அவள் காதில் உரச கேட்க, சற்று கிறங்கிப் போனவள், அவன் வார்த்தைகள் கொடுத்த அர்த்தத்தில், வேகமாக அவனை விட்டு விலகி நின்றாள்.

“என்ன கேட்ட?” அவன் கேட்க, அவள் மூளை சுத்தமாக வேலை நிறுத்தம் செய்திருக்கையில் அவள் எதைச் சொல்வதாம்? ஒரே பாய்ச்சலில் அங்கிருந்து விலகி, அறையை விட்டு ஓடியே விட்டாள்.

கீழே உடனே செல்ல முடியாமல், தங்கள் அறைக்குள் புகுந்தவள், ‘அவர் நெருக்கத்தில், நான்தான் இப்படி தகிக்கிறேனா? அவருக்கு ஒன்றும் இல்லையா…?’ நினைப்பை அவளால் தடுக்க முயலவில்லை. அந்த நிமிடம், அந்த முரட்டு மனிதனின் இதழ் தீண்டல் எப்படி இருக்கும் என அறிந்துவிட அவள் மனம் தவித்தது எனச் சொன்னால் மிகையில்லை.

தன் அருகாமையில் சற்று தளர்ந்தாலும், அவனது கட்டுப்பாடுகள் தகராத விதம் அவளை அசரவைத்தது என்றே சொல்லலாம். ‘எப்படி அவரால் இவ்வளவு உறுதியாக இருக்க முடிகிறது? அவரது மனதை நான் பாதிக்கவில்லையா?’ காதலி உள்ளுக்குள் தவிப்பதை அவள் என்ன செய்ய?

அந்த நேரம், தன்னைத் தொடக் கூடாது என சொன்னது தான்தான் என்பது வசதியாக அவளுக்கு மறந்து போனது. பிரம்மாவோ, பிரம்மை பிடித்துதான் நின்றிருந்தான். தன் மனைவியின் அருகாமை தன்னை இவ்வளவு வசமிழக்கச் செய்யும் என்று அவன் கற்பனை கூட செய்ததில்லை.

அதுவும் நாட்கள் செல்லச் செல்ல, அவளது அருகாமைக்காக தன் மனம் அதிகம் ஏங்குவதை, தன் உணர்வுகள் அடங்க மறுப்பதை, அவளைப் பற்றி நினைத்தாலே, தன் உணர்வுகள் உருவம் கொள்வதை அவனால் தடுக்க முடியவில்லை.

தன் நெருக்கம் அவள் மனதில் இருக்கும் காதலை வெளிக்கொண்டு வருமோ என அவன் எதிர்பார்க்க, அதற்கு மாறாய் அவள் விலக முயல்வதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

காயத்ரி எவ்வளவு நேரம் அங்கேயே இருக்க முடியும்? கீழே கலைவாணி இருக்கிறார் என்ற காரணத்தால், வேகமாக அவள் கீழே சென்று அவரோடு இணைந்து கொண்டாள்.

வீட்டில் இருந்த ரவையை வைத்து கிச்சடியும் சட்டினியும் செய்திருந்தவர், “மாவு இல்லம்மா..., இருந்திருந்தால் இட்லி சட்டினி வைத்திருப்பேன்” வாய்க்கு ருசியாக சமைத்து போட முடியவில்லையே என்ற மனக்குறை அவரிடம்.

“பரவாயில்லை அத்தை..., எங்களுக்கு இதுவே போதும்...” அவள் எவ்வளவோ மறுத்தும் கேளாமல் மதியத்துக்கு வெஜிடபிள் சாதம் வைத்து விட்டே அங்கிருந்து அகன்றார். அவ்வளவு நேரமும் பிரம்மா மாடி அறையை விட்டு கீழே இறங்கி வரவே இல்லை.

கலைவாணியின் கண்கள் சில நேரம் வந்துவிட மாட்டானா? என ஏக்கமாகவும், வந்துவிடுவானோ என பயமாகவும் மாடிப்படியில் பதிந்து மீள்வதைக் கண்டு காயத்ரிக்கு பாவமாகப் போயிற்று. ‘நிச்சயம் அவரிடம் இதைப்பற்றி பேச வேண்டும்’ என மனதுக்குள் குறித்துக் கொண்டாள்.

“அப்போ நான் கிளம்பறேம்மா..., நிவேதா தேட ஆரம்பிச்சுடுவா?” அவர் கிளம்ப முயல, “சாப்ட்டு போங்க அத்தை...” அவள் சொல்ல, மறுத்தவர்,

“நான் வேலைக்கு ஆள் ஏற்பாடு பண்றேன். நாளையில் இருந்து வரச் சொல்றேன். எதுக்கும் பிரம்மா கிட்டே ஒரு வார்த்தை கேட்டுடு...” அவன் சம்மதமின்றி அவரால் எதையும் செய்ய இயலாதே.

தன் அலைபேசி எண்ணை அவளிடம் கொடுத்தவர், அவளது எண்ணை பெற்றுக் கொண்டு அங்கிருந்து சென்றார். அவர் செல்லவே, கோபமாக தங்கள் அறைக்கு வந்தவள்,

“வீட்டுக்கு வந்தவங்களை, வாங்கன்னு ஒரு வார்த்தை கூப்பிட மாட்டீங்களா? இப்படித்தான் ரூமுக்குள் சமஞ்ச புள்ளை மாதிரி உக்காந்து இருப்பீங்களா? நீங்க வருவீங்களா, வருவீங்களான்னு? எவ்வளவு ஏக்கமா எதிர்பாத்தாங்க தெரியுமா?” படபடவென பொரிந்தாள்.

அவள் பேச்சை காதிலேயே வாங்காதவன் அமைதியாக இருக்க, “உங்களுக்கு அப்படியென்ன கோபம்? என்னதான் இருந்தாலும் அவங்க வயசுக்கு மரியாதை கொடுக்க மாட்டீங்க?” கலைவாணியின்மேல் தவறு இருக்கும் என அவளால் நினைக்க முடியவில்லை, எனவே அவனிடம் சாடினாள்.

“உன்னைப் பொறுத்தவரைக்கும் எல்லா தப்பையும், எப்பவும் நான் மட்டும்தானே செய்வேன். ஆயிரத்தில் ஒரு சதவீதமாவது என்னை நம்பக் கூடாது? எனக்கு எதுவும் ஞாபகத்தில் இல்லை என்றாலும், ஒரு விஷயத்தை என்னால் அடித்துச் சொல்ல முடியும்.

“நான் ஒரு விஷயம் செய்திருந்தால், அதில் ஏதாவது காரணம் இல்லாமல் இருக்காது. இப்போ அவங்ககிட்டே பேசிட்டு, எனக்கு எல்லாம் ஞாபகம் வந்த பிறகு மறுபடி மாறிட்டா..., அது அவங்களுக்கு நல்லதில்லை. அவங்க மனசில், நான் இப்படியே இருந்துட்டு போறேன்...” அவன் உணர்வுகளை துடைத்த குரலில் சொல்லி முடிக்க, அவன் பேச்சில் வாயடைத்துப் போனாள்.

“யானைக்கும் அடி சறுக்கும்ன்னு பழமொழியே இருக்கு தெரியுமா?” தன்னை மீட்டவள் கேட்க,

“நான் பிரம்மா...” இப்பொழுது அவன் கண்கள் விபரீத ஒளியில் மின்ன, இடக்கரமோ மீசை நுனியை முறுக்கியது. அவன் தோற்றம் கண்டு பயம் வரவில்லை, மாறாக, அவனது முறுக்கிய மீசையை தொட்டுப்பார்க்க மனம் ஏங்கியது.

*****

# பகுதி – 28.

தன் ஸ்டேஷனில் இருந்து வந்த பிரம்மா வெறிபிடித்த மனநிலையில் இருந்தான். அதற்குக் காரணம், இன்று அவனது அலுவலகத்துக்கு வந்த ஐஜி, “பிரம்மா..., அன்னைக்கு நான் ரகசியமா விசாரிக்கச் சொன்ன கேஸ் விஷயம் என்ன ஆச்சு? இன்னைக்கு வரைக்கும் நீங்க டீட்டெயில் கொடுக்கவே இல்லையே, அதான் தேடி வந்தேன்...” அவர் உரைக்க, தன் முகத்தில் உணர்வுகளை வெளிப்படுத்தாமல் கவனமாக மறைத்தான்.

“உங்க நிலைமை எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனா..., இதுக்கு மேலே காத்திருக்க முடியாது அதான்...” அவர் சொல்ல, ‘என்னவாக இருக்கும்?’ சிந்தித்தவனுக்கு நிச்சயம் எதுவும் புரியவில்லை.

‘அவரிடமே கேட்டு விடுவோமா?’ ஒரு நொடி எண்ணியவன் உடனே அந்த எண்ணத்தை கைவிட்டான்.

“இதற்குமேல் வெயிட் பண்ண முடியாதுன்னு நினைக்கறேன். இல்லன்னா நீங்க அமைதியா இருப்பதைப் பார்த்தால் கேசை முடிச்சுட்டீங்களோ? அவங்களை கைது பண்ண காத்திருக்கீங்களா?” அவர் அவன் திறமையின்மேல் மதிப்பு வைத்து வினவ, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

தன்மேல் தன் டிப்பார்ட்மென்ட் வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை, அதை ஒற்றை நொடியில் அவனால் தகர்த்துவிட முடியாது. ‘ஏதாவது செய்..., செய்.. யோசி...’ கைவிரலை இறுக்கமாக மூடி மேஜைமேல் மிக மெதுவாக குத்தியவன், வெளியே உறைபனியாகவே இருந்தான்.

ஐஜி பதிலுக்காக அவன் முகம் பார்க்க, “ஜஸ்ட் கிவ் மீ டூ டேஸ் சார்...” திடனாகவே உரைத்திருந்தான்.

“இது போதும்...” ஐஜி கிளம்பிவிட, அவனால் அங்கே இருக்க முடியவில்லை. ஜம்பமாக இரண்டே நாளில் அவர் கேட்டதை செய்கிறேன் என சொல்லியாகி விட்டது. ஆனால்

அவர் கேட்ட விஷயம், அது என்னவாக இருக்கும் என ஒரு ஐடியாவும் இல்லை. அப்படி இருக்கையில் அவனால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?

தன் மேஜைமேல் இருந்த டெஸ்க்டாப்பை இயக்கியவன், அதில் இருக்கும் தகவல்களை ஆராய்ந்தான். அப்படி ஆராயும்பொழுதே நிச்சயம் அதில் எதையும் தான் வைத்திருக்க மாட்டோம் என உறுதியாக எண்ணினான். அப்படியே, தான் தகவல்களை வைத்திருந்தாலும், அதை பாஸ்வேர்ட் போட்டு லாக் பண்ணியிருப்போம்..., ஆனால் அதில் அப்படி ஒன்று கூட இல்லை.

அப்படியிருக்கையில் அதில் என்ன இருக்குமாம்? ஐஜி தன்னிடம் தனியாக கேட்டதை, தன் உயிர் போகும் நிலை வந்திருந்தாலும் யாரிடமும் பகிர்ந்திருக்க மாட்டோம் என்பது அவனுக்கே தெரியும். தலையைப் பிடித்தவாறு அமர்ந்துவிட்டான்.

அப்படியே அமைதியாக இருக்கவும் முடியாமல், மூளையை எதுவோ அடைக்க, உடனே ஏதாவது செய்தாக வேண்டும்போல் இருந்தது.

தன் அலைபேசியை எடுத்தவன் காயத்ரியை அழைக்க, கல்லூரியில் இருந்தவள் தன் அலைபேசியை சைலண்டில் போட்டிருந்ததால் அவளுக்கு கேட்கவில்லை.

அவள் அழைப்பை ஏற்காமல் போகவே, 'ம்ச்..., அவ இன்னைக்கு வீட்டில் இருக்க மாட்டாளே' அப்பொழுதுதான் நினைவிற்கு வர, வீட்டுக்கு கிளம்பிவிட்டான்.

வீட்டுக்கு வந்தவன், தன் அறையை நூறு முறையாக அளந்தான். 'என்னவாக இருக்கும்? அது எங்கே இருக்கும்? அனைத்தையும் நான் என் மூளையை நம்பி மட்டுமே வைத்திருந்தேனா?' நெற்றியை பலமாக தட்டிக் கொண்டான்.

சட்டென அவனுக்கு ஒன்று புரிந்தது. தன் வீட்டில் எப்பொழுதும் வேலைக்கு ஆட்கள் இருந்தது இல்லை, தன் பெர்சனல் லேப்டாப்பை அவ்வளது பாதுகாப்பாக

வைத்திருப்பது..., அதன் பாஸ்வேர்டை கௌஷிகாவுக்கு கூட சொல்லாமல் இருந்தது என ஒவ்வொன்றாக கனெக்ட் செய்ய, நிச்சயம் தான் எதிர்பார்க்கும் விஷயம் லேப்டாப்பில் இருக்கும் என உறுதியாக நம்பினான்.

வேகமாக தன் மேஜை இழுப்பறையைத் திறந்து தன் லேப்ட்டாப்பை வெளியே எடுத்தான். தனக்குத் தோன்றிய, கெஸ் செய்த பாஸ்வேர்ட் அனைத்தையும் உபயோகிக்க, அதுவோ..., இன்னும் ஒரு முறை முயன்றால் உன் டேட்டாவை அழித்து விடுவேன் என மிரட்டியது.

அவ்வளவுதான்..., கொதித்துப் போனான். கடந்த சில நாட்களாக அவனை தீண்டியிராத அந்த உணர்வு..., மூளைக்குள் ஒரு பேரதிர்வு, சம்மட்டியான வலி, ஒரு சூனியத்துக்குள் தான் இருப்பது போல் தோன்ற, அறையில் இருந்த பொருட்கள் அனைத்தும் மூலைக்கு ஒன்றாய் சிதறியது.

மாலையில் வீட்டுக்கு வந்த காயத்ரி கேட்டது அவனது அலறலைத்தான். “என்னங்க...” கையில் இருந்த பேகை சோபாவில் விசிறியவள், படிகளில் ஓடினாள். தன் அறைக்குள் நுழைந்தவளுக்கு, ஒரு நொடி, அவள் அரை சூறாவழியில் சிக்கி, சின்னாபின்னமாகியிருப்பதுபோல் தோன்றியது.

அதன் நடுவில், பிரம்மா தலையைப் பிடித்தவாறு நின்றிருக்க, “என்னங்க., என்ன ஆச்சு? ஏன் இப்படி...?” அவனை இரும்பு மனிதனாகவே பார்த்து பழகியவளுக்கு, இந்த தோற்றம் மனதைப் பிசைந்தது.

அவளை புரியாத பார்வை பார்த்தவன், “எனக்கு இப்போ ஞாபகம் வந்தாகணும். இந்த மண்டைக்குள் இருப்பது எல்லாம் தெரியணும்...” அவன் தன் தலையை கையால் அறைய, வேகமாக தடுத்தாள்.

“கொஞ்சம் அமைதியா இருங்க..., எல்லாம் சரியாகிடும்” அவன் கன்னம் தாங்கினாள்.

“இல்ல…, எதுவும் சரியாகப் போவதில்லை. இன்னும் ரெண்டு நாளில் ஜஜி என்ன சொன்னார்ன்னு நான் கண்டுபிடித்து, டீட்டெயில் கொடுத்தாகணும். இல்லன்னா இந்த பிரம்மா இருப்பது வீண்…” அவனது கெரியரில் ஒரு தோல்வியையும் அவனால் தாங்கிக்கொள்ள முடியாது என எண்ணினான்.

“அப்படியெல்லாம் எதுவும் ஆகாது…, உங்களால் முடியும்…” அவனுக்கு நம்பிக்கையளிப்பது மட்டுமே அந்த நேரத் தேவையாக இருந்தது.

“மூணுமணி நேரமா போராடுறேன்…, என்னால் ஒரு விஷயத்தையும் கண்டுபிடிக்க முடியலை. இந்த லேப்டாப்…, அது கூட சதி பண்ணப் பாக்குது. எனக்கு மண்டையே வெடிக்கிற மாதிரி இருக்கு…” அவளது அருகாமையோ, அவள் கன்னம் தாங்குவதோ…, அவள் தன்னை படுக்கையில் அமர வைப்பதோ, எதுவும் அவனைத் தீண்டவே இல்லை.

“பீமா…” அவனை தனக்குள் புதைத்துகொள்ளும் வேட்கை.

“நான் ஏன் இப்படி இருக்கேன்னே தெரியலை. தலை ரொம்ப வலிக்குது” முழு எரிச்சலில், தவிப்பில் உரைக்க, அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அவன் தோளை அழுத்தி அமர வைத்தவள், “ம்ச், பீமா டென்ஷன் ஆகாதீங்க” தன் சுடிதார் துப்பாடாவை உருவி, வியர்வை வழிந்த அவன் முகத்தை அழுத்தமாக துடைத்தாள்.

“இப்போ எனக்கு இருக்குறது டென்ஷன் மட்டும்தான்” என்னவோ அவனால் அவனையே கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

“நான் உனக்கு போன் பண்ணேன்… நீ எடுக்கவே இல்லை…” என் தேவையின்பொழுது உன்னை நாடினேன் அவன் சொல்ல, அந்த நொடி, எதையும் யோசிக்காமல் அவன் முகத்தை இழுத்து, தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

ஒரு குழந்தை அழுகையில், அதன் தாய் அதை அரவணைத்துப் பாதுகாப்பாளே அந்த மனநிலை மட்டுமே அவளிடம் இருந்தது.

“எனக்கு என்ன செய்யன்னே தெரியலை...” பிரம்மா சற்று உடைந்துபோய் உரைத்த அந்த வார்த்தை அவளை நொறுக்கிப் போட்டது என்றே சொல்லலாம். தன் அணைப்பை அவள் இன்னும் அதிகரிக்க, அதையெல்லாம் அவன் உணரும் நிலையில் இல்லை.

இதுவே மற்ற நேரமாக இருந்திருந்தால் எப்படி நடந்திருப்பான் என்பது புரிய, அவள் கண்கள் கலங்கும் உணர்வு. “இப்போ என்ன..., அந்த லேப்ட்டாப்பை ஓப்பன் பண்ணணும் அவ்வளவு தானே..., நான் ஓப்பன் பண்ணித் தர்றேன்...” அவன் முகத்தை தன் மேனியில் இருந்து பிரித்தவள், அவன் கண்களை ஏறிட்டு உரைத்தாள்.

“உன்னால் முடியுமா...?” சட்டென அவன் கண்களில் ஒளி தெரிய, அதை நடத்திக் காட்டுவது என முடிவெடுத்தாள்.

“உங்க பொண்டாட்டியை நீங்க என்னன்னு நினைச்சீங்க..., என்னால் எந்த சிஸ்ட்டத்தையும் ஹேக் பண்ண முடியும். உங்க லேப்ட்டாப்பை நான் ஓப்பன் பண்றேன்..., நீங்க வாங்க...” அவனை கைபிடித்து அழைத்துச் சென்றவள், அவனை சுழல் நாற்காலியில் அமர்த்திவிட்டு, அவன் எதிரில் இருந்த கணினியை இயக்கினாள்.

“காயு..., டேட்டாஸ் எனக்கு பத்திரமா வேணும்...” முதல் முறையாக சற்று பொறுமையாக உரையாடினான்.

“அதான் நான் பாத்துக்கறேன்னு சொல்லிட்டேன் தானே. நீங்க சுவிங்கம் சாப்பிடுங்க” உரைத்தவள், மேஜைமேல் இருந்த சுவிங்க பாக்ஸில் இருந்து சில சுவிங்கங்களை எடுத்து அவன் வாயில் திணித்தாள்.

கீபோர்டில் அவள் கரங்கள் விளையாட, எதை எதையோ செய்தவள், அடுத்த அரைமணி நேரத்தில் அவனது லேப்ட்டாப்பை ஓப்பன் செய்துவிட்டாள். அந்த அரைமணி நேரம், அவள் சற்று கூட நிமிரவே இல்லை.

அவனை கவனிக்கவும் இல்லை. அவனோ, அவள் வேலையில் கவனம் பதிக்காமல், அவள்மேல் தான் கவனம் பதித்திருந்தான். அறையில் ஃபேன் சுழன்றாலும், மனதில் இருக்கும் டென்ஷனின் பலனோ என்னவோ, அவள் மேலுதட்டின்மேல் முத்துமுத்தாய் வியர்வைத் துளிகள் அரும்பி இருந்தது.

அவள் தோளில் வழிந்த துப்பட்டாவை வேலைக்கு இடைஞ்சலாக இருப்பதால் அவள் உருவி எறிந்திருக்க, அவளுக்கென அளவெடுத்து தைத்தாற்போல் இருந்த அந்த சுடிதாரின் வழியாக வழிந்த அவள் பொங்கும் அழகை தயக்கமே இல்லாமல் வெறித்தான்.

“அவ்வளவுதான், முடிஞ்சது..., இதுக்குப்போய் இவ்வளவு ஆர்ப்பாட்டமா?” கேட்டவள், அவனிடம் பதில் இல்லாமல் போகவே, வேலை செய்யும் முனைப்பில், அவன் மடியிலேயே தான் அமர்ந்து விட்டதை அப்பொழுதுதான் கவனித்தாள்.

சட்டென அவள் எழ முயல, அவள் இடையில் கை கோர்த்து தன் நெஞ்சோடு இறுக்கியவன், “டூ மினிட்ஸ் பிளீஸ்...” உரைக்க, அதற்குமேல் அவள் விலகுவாளா என்ன?

“போகணும்...” அவன் அருகாமை தேகத்தை அதிரவைக்க, முனகினாள்.

அவள் நடுக்கத்தை ரசித்தவாறே, “தேங்க்ஸ்...” உரைத்தவன், தன் கர்ச்சீப்பை எடுத்து அவள் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைக்க, அவன் செய்யும் பணிவிடையில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தாள்.

“வேலையைப் பாருங்க...” அவனிடமிருந்து தப்பிக்கும் மார்கம் பார்த்தாள்.

“அதைத்தானே பாக்கறேன்...” அவன் சரசமாக உரைக்க, அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ‘அரைமணி நேரத்துக்கு முன்னாடி இருந்த நிலை என்ன...,

இப்போ பாக்குற வேலையென்ன?' எண்ணியவள் வெளியே எதையும் சொல்லவில்லை.

அவள் தேகம் நடுங்க, அதை உணர்ந்தவன், "உனக்கு பிடிக்காத எதையும் செய்ய மாட்டேன்..." அவன் உறுதிகொடுக்க, அவளுக்குத்தான் இயல்பாக இருக்க முடியவில்லை. அவனோ, அப்பொழுதுதான் அவள் தனக்கு செய்த அனைத்தையும் யோசித்தவாறு அவளையே பார்த்திருந்தான்.

அவன் பார்வைக்கான பொருள் புரியாமல், தான் அவனை அணைத்ததற்கு என்ன தண்டனை தரப் போகிறானோ என எண்ணியவாறு தடுமாறிப் போனாள்.

அவனது மூச்சுக்காற்று கன்னத்தில் சூடாகப் பாய, அதன் வெம்மையில் நிச்சயம் உருகிக் கொண்டிருந்தாள். இத்தனை நாட்களில், இவ்வளவு நெருக்கத்தில் அவன் முகத்தை பார்த்ததாக நினைவில்லை. அந்த கூர்மையான விழிகள், அழுத்தமான இதழ், முரட்டு மீசை, ஹப்பா, சட்டென மூச்சடைத்தது.

"காயு, என்ன இது? மூச்சுவிடு..." உரைத்தவன், அவள் முகத்தில் அழுத்தமாக ஊதினான்.

"என்னை கிட்ட பார்த்தாலே உனக்கு மூச்சு முட்டுதா? அப்போ இதுக்கு ஏதாவது செய்யணுமே..." உரைத்தவனது கரம் அழுத்தமாக அவள் இடையில் பதிய, அவள் இதயம் தாறுமாறாக துடித்தது.

'இவருக்கு இப்படியெல்லாம் பேசத் தெரியுமா?' மனம் அதிர, அவனை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. அவ்வளவு நெருக்கத்திலும் கட்டுப்பாட்டை இழக்காத அவன் திடனையும் கவனிக்கவே செய்தாள்.

ஆனாலும், மனதுக்குள் எழும் நடுக்கத்தை எப்படி மறைக்க? அவள் தடுமாற்றமும் தயக்கமும் உணர்ந்தவன், "சரி போ..." அவளை கீழே இறக்கி விட்டு, தன் லேப்ட்டாப்பை ஆராயத் துவங்கினான்.

‘டி’ போல்டருக்குள், எக்கச்சக்க போல்டர்கள் கொட்டிக் கிடக்க, ஒவ்வொன்றாக ஆராயத் துவங்கினான். அவன் முடித்த பல கேஸ்களின் டீட்டெயில், அவனுக்கு கீழே இருக்கும் ஸ்டேஷன்களின் முக்கிய கேஸ்கள், விசாரணை குறிப்புகள் என கொட்டிக் கிடந்தது.

அதில் ஐஜியின் கேஸ் எது எனத் தேடியவன், தன் விபத்துக்கு ஒரு வாரத்துக்கு முன் தேதியிட்ட போல்டரை ஓப்பன் செய்ய, அவன் தேடியது அதுதான் என உணர்ந்து கொண்டான்.

அந்த கேஸ் டீட்டேயிலைப் படிக்கையில்..., ஒரு போதைப்பொருள் கும்பலைப் பற்றிய விசாரணையும், கிட்டதட்ட பத்துகோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருளை அவர்கள் கடத்த முயல்வதும், அதை யார் மூலம் செய்யப் போகிறார்கள்..., என்ற தன் விசாரணையையும் அவன் கண்டுகொள்ள, ‘பிரதாப்...’ இந்தப் பெயரை படித்த மறு நிமிடம்,

குப்பென அவன் தேகம் வியர்வையில் நனைந்தது. கூடவே, பின்மண்டையில் மின்னல் தெறிக்க, அவனது ஜீப் அந்த இரவில் சாலையில் பயணிப்பதும்..., அவனுக்குப் பின்னால் ஒரு ஆடி கறுப்பு வர்ண கார் பின்தொடர்வதும்..

அது யார் கார் என்பதை கண்டுகொண்ட பிரம்மாவின் ஜீப் வேகம் குறைய, “பிரதாப்..., நீ...” அவன் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, அந்த பிரதாப் தன் பின்னால் மறைத்திருந்த இரும்பு கம்பியை எடுத்து தன்னைத் தாக்க வருவது புரிய,

நேரடியாக அந்த அடி தன் மண்டையில் விழுதால், தன் கபாலம் பிளந்து, தான் மோட்சம் செல்வது உறுதி என்பதை சில நொடியில் உணர்ந்தவன், ஜீப்பை ஒடித்து திருப்ப, அதை எதிர்பாராத பிரதாப்பின் அடி, பிரம்மாவின் பின்மண்டையை பதம் பார்த்தது.

கூடவே, அவனது ஜீப் அவனது கட்டுப்பாட்டை இழந்து, முன்னால் சென்ற லாரியில் மோத, தான் ரத்த

வெள்ளத்தில் சரிவதை கண்டு கொண்டான். கடந்து முடிந்த சம்பவத்தின் தாக்கத்தில் இருந்து வெளியேறியவன், வேகமாக தன் மாத்திரையை விழுங்கினான்.

காலெண்டரில் தேதி பார்க்க, அந்த டிரக் டீல் முடிய இன்னும் ஒரு நாள் மட்டுமே இருப்பதை உணர்ந்தான்.

அடுத்த நிமிடம், இருக்கையில் இருந்து எழுந்தவன், தன் அலைபேசியில் மற்றவர்களுக்கு ஆணைகளை பிறப்பிக்கத் துவங்கினான். அன்று இரவு முழுவதும் மட்டுமல்ல, மறுநாள் முழுவதும் அவன் வீட்டுக்கு வரவே இல்லை.

அவள், அவனுக்கு அழைக்க, “வேலைக்கு நடுவில் தொல்லை செய்யாதே” அவன் கடித்துக் குதறியிருக்க, காயத்ரியால் நிம்மதியாக இருக்கவே முடியவில்லை. கந்தனுக்கு அழைத்தவள், “அண்ணே..., அவங்க ரொம்ப டென்ஷன் ஆகறாங்களா? கொஞ்சம் பாத்துக்கோங்க...” அதற்குமேல் எதுவும் சொல்லாமல் அலைபேசியை வைத்து விட்டாள்.

கந்தனது லிமிட் அவளுக்குத் தெரியுமே. அவளாவது நேரடியாக பிரம்மாவிடம் பேசிவிட்டாள். கந்தனால் அவன் அருகே கூட நெருங்க முடியாது அவளுக்குத் தெரியும்.

ஆயிரம்தான் அவன்மேல் கோபம் இருந்தாலும், காதல் கொண்ட மனம், அவன் உடல்நிலையை எண்ணி தவிப்பதை என்ன செய்ய? இரவில் உறக்கம் கூட தூரப் போனது.

சவுத் சென்னைக்கு வரும் முக்கியமான இடங்களில் தேடுதல் வேட்டையை துவங்கியவனுக்கு, ட்ரக்ஸ் எப்படி உள்ளே கொண்டுவரப் போகிறார்கள் என்பது மட்டும் புரியவே இல்லை.

“டெம்போ, கேஸ் வண்டி, கண்டெயினர் என அனைத்து வாகனங்களையும் அவர்கள் டீம் அலச, சற்று ஒதுங்கி நின்றே அனைத்தையும் கவனித்தவன், விழிகளை கூர்மையாக்கி அலசிக் கொண்டிருந்தான்.

அவன் மனமோ..., ‘இல்ல..., இல்ல..., இப்படி வராது..., வேற எப்படியோ...’ நெற்றிப் பொட்டை அழுத்தமாக பற்றிக் கொண்டான். பிரதாப்பின் ஒர்க்கிங் ஸ்டையில் எப்படி இருக்கும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அத்தோடு, அந்த பிரதாப் யார் என்பதை விசாரித்து அறிந்த பிறகு, சற்று அதிர்ந்துதான் போயிருந்தான்.

‘இந்த கேஸ் எந்த அளவில் நிற்கும்...?’ அவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் தான் எடுத்துக் கொண்ட வேலையை பாதியில் விட அவன் தயாராக இருக்கவில்லை.

அந்த நேரம், அவனது கவனம் பள்ளிச் சீருடை அணிந்து, இரண்டு இரண்டு பேராகச் செல்லும் அந்த மாணவர்கள் பக்கம் திரும்பியது. சட்டென அவர்களிடம் தெரிந்த அந்த வித்தியாசத்தை உணர்ந்து கொண்டான்.

ஒன்றேபோல் புதிய உடை, அவர்களின் ஒருவித அசாத்திய வளர்ச்சி, அவர்களது செயற்கையான பேச்சு..., அடுத்த நிமிடம் அவர்களை மடக்கியவன், அவர்களை ஆராய, அவர்கள் வைத்திருந்த பை துவங்கி, போட்டிருக்கும் உள்ளாடையின் பட்டி வரைக்கும் போதைப்பொருள் நிரம்பி வழிந்தது.

அதைப் பார்த்த அனைவரும் திகைக்க, கூடவே, “சார், ஸ்கூல் பசங்க..., அவங்க யூனிபாம் வச்சே பாலிடிக்ஸ் பண்ணிடுவாங்க. பெரிய பிரச்சனை ஆகும்” கந்தன் உரைக்க, அவரை அழுத்தமாக ஏறிட்டவன், ‘அதற்காக..., அப்படியே விட முடியுமா?’ பார்வையால் கேட்டான்.

“யூனிபாமை பார்த்தால் தானே பிரச்சனை..., எல்லாத்தையும் உருவிட்டு ஜட்டியோட உக்கார வைங்க. யூனிபாம் எல்லாத்தையும் ஒதுக்குங்க..., யாருக்கும் தெரியாமல் கொளுத்துங்க” கட்டளையிட்டவன், “பிரஸ்ஸை வரச் சொல்லுங்க..., இதை இப்படியே விட முடியாது...” அடுத்தடுத்து கட்டளையிட்டான்.

தொடர்ந்த நிமிடங்களில் பிளாஷ் நியூஸ் முழுவதும் ஆக்கிரமித்தவன் பிரம்மாதான். சிக்கியவர்கள் அனைவரையும் ஐஜி அலுவலகத்தில் கொண்டுபோய் சேர்த்தவன், பிரதாப்..., அவனது கூட்டாளிகள் என அனைவரையும் மடக்கியிருந்தான்.

பிரதாப்பை பார்த்த ஐஜி திகைத்துப் போனார். அதற்குக் காரணம், அவன் அவரது மனைவியின் சொந்த தம்பி என்பதாலேயே அந்த அதிர்ச்சி. மீடியாக்கள் அதை வைத்து அவரை துளைக்க, “சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்...” என்பதோடு பேச்சை முடித்துக் கொண்டார்.

அனைவரையும் ரிமாண்ட் செய்ய உத்தரவிட்டவர், பிரம்மாவை அழைத்தார். “பிரம்மா..., இதை பெர்சனலா என்கிட்டே சொல்லியிருக்கலாமே” அவரால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

‘அப்படிச் செய்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பது எனக்குத் தெரியும்’ மனதுக்குள் எண்ணிக் கொண்டவன், “நான் உங்ககிட்டே தான் நேரா வந்தேன் சார். அதுக்கு முன்னாடியே பிரெஸ் பீப்பிள் இங்கே எப்படி வந்தாங்கன்னு எனக்குத் தெரியலை” விறைப்பாக நின்று அவன் உரைக்க, அவனை நம்புவதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

“யூ மே கோ...” அவர் உரைக்க, அவருக்கு சலூட் அடித்து திரும்பியவனது கரம் மீசையை முறுக்க, ‘பிரம்மாடா...’ மனதுக்குள் உரைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து நடந்தான்.

அதே நேரம்..., காயத்ரியை சந்திக்க வந்திருந்தாள் சாந்தி. அதுவும் அவள் வீட்டுக்கு வராமல், அருகில் இருக்கும் காபி ஷாப் வரச் சொல்லியிருந்தாள். சாதாரணமாக இருந்திருந்தால் எப்படியோ? பிரம்மாவைப் பார்த்து சாந்தி மறைவது, பிரம்மா கொடுத்த அறிவுரை, மணமேடையில் வைத்தே சாந்தியைப் பார்த்த அவன், அவளைப் பற்றி சந்தேகமாக வினவியது என அனைத்தும் சேர, முதல் முறையாக சற்று கவனமானாள்.

அவளை சந்திக்க வந்த சாந்தி எடுத்த உடனேயே..., “காயத்ரி, பேன்க் போனியே மேனேஜர் என்ன சொன்னார்? உங்க அண்ணா அக்கவுண்டை குளோஸ் பண்ண ஒத்துகிட்டாரா?” தன் கள்ளத்தனத்தை அவள் மறைக்க முயல, அதை கண்டுகொண்டாள் காயத்ரி.

“நான் பேன்க் போனது உனக்கு எப்படித் தெரியும்? அதைவிட என் அண்ணனோட அக்கவுண்டை குளோஸ் பண்ணப்போறன்னு யார் உனக்குச் சொன்னா?” சாதாரணமாகவே கேட்டாள். கணவனிடம் கற்றுக்கொண்ட பாடம் கை கொடுத்தது.

“அ..து..., இந்திராதான் சொன்னா..., சரி..., உன் மேரேஜ் லைப் எப்படிப் போகுது?” வேகமாக பேச்சை மாற்றினாள். கூடவே, அலைபேசியை மேஜைக்கு அடியில் வைத்து யாருக்கோ மெஸ்சேஜ் அனுப்ப, அதையும் கவனித்தாள் காயத்ரி.

‘இவள் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள்?’ அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும், அவள் எவ்வளவு தூரம் செல்வாள் என அறிந்துகொள்ள வேண்டி இருந்தது.

‘ஒரே பார்வையில் எல்லாரையும் எப்படி அளவிடறார்?’ கணவனைப் பற்றி எண்ணாமல் இருக்க முடியவில்லை.

“அப்போ சரி..., நான் கிளம்பறேன்..., சும்மாதான் உன்னைப் பார்க்க வந்தேன்” அவள் எழுந்துகொள்ள, தானும் அவளோடு வெளியே நடந்தாள்.

அதே நேரம்..., வாசலில் போலீஸ் ஜீப் வந்து நிற்க, தன் துப்பட்டாவை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள் சாந்தி. ஜீப்பில் இருந்து இறங்கிய பிரம்மா உள்ளே வர, அவன் பார்வை சுழன்ற நொடிகளில், அங்கே சந்தேகத்துக்கிடமாக ஐந்துபேர் இருப்பதை அவன் கண்கள் கண்டுகொண்டன.

“நான் போயிட்டு வர்றேன் காயத்ரி..., எனக்கு அவசரமா வேலை இருக்கு” சாந்தி கழண்டுகொள்ளப் பார்க்க,

“என் கணவருக்கு உன்னை இன்ட்ரோ கொடுக்கறேன் வா...” அவள் அழைக்க, அழைப்பு வராத அலைபேசியை எடுத்துப் பேசியவாறே அங்கிருந்து அகல முயன்றாள். ஆனால் அதைச் செய்ய விடாமல் அவள் கரத்தை பற்றிக் கொண்டவள், பிரம்மா தன்னை நெருங்குவதைப் பார்த்தாள்.

அதற்குமேல் அங்கே இருந்து செல்ல முடியாமல், தன் முகத்தைச் சுற்றியிருக்கும் துப்பட்டாவின் தைரியத்தில் அவனை தயக்கமாக எதிர்கொண்டாள். “என்னங்க..., என் காலேஜ் மேட்..., சாந்தி...” அவளை அறிமுகப்படுத்த, சுவிங்கத்தை மென்றவன், கூலிங்கிளாசுக்குப் பின்னால் அவளை அலசினான்.

ஒற்றை தலையசைப்பை கொடுத்தவன், ‘போகலாம்...’ என்பதுபோல் திரும்பி நடக்க, தான் அறிமுகப்படுத்தியதற்கு ஒரு பதிலும் சொல்லாமல் போகிறானே என அவன் பின்னால் ஓடினாள் காயத்ரி.

அவன் அவ்வாறு செல்லவே, நிம்மதி பெருமூச்சு விட்ட சாந்தி, கண்களை திருப்பி பார்த்தவள், தங்கள் ஆட்கள் சற்று ஒதுங்கியிருப்பதை கண்டுகொண்டு, தான் தேடி வந்த விஷயம் தோல்வியில் முடிந்துவிட்டதே என அலுத்தவாறு அங்கிருந்து சென்றாள்.

“ஒரு ஆளை அறிமுகப்படுத்தினால் ஜஸ்ட் ஒரு ஹாயாவது சொல்லணும். இதென்ன இப்படி ஒரு பழக்கம்?” ஒரு வேளை, தான் யாரை அறிமுகம் செய்து வைத்தாலும் இப்படித்தான் நடந்து கொள்வானோ என்ற கோபம் அவளுக்கு.

சட்டென தன் நடையை நிறுத்தியவன், “உன்னை சந்திக்கணும்னு நினைத்தவள், நல்லவளா இருந்திருந்தால் உன் வீட்டுக்கே வந்து பேசியிருப்பாள். அதை விட்டு, உன்னை இங்கே கூப்ட்டு பேசியிருக்கான்னா, அது நல்லவிஷயமும் இல்லை, அது நல்லதுக்கும் இல்லை, புரியும்னு நினைக்கறேன்...” சுவிங்கத்தை அரைத்ததை விட, வார்த்தைகளை அப்படி அரைத்தான்.

“ஏன் அப்படி…? நானாக அவளை இங்கே வரச் சொல்லியிருக்க கூடாதா?” வீம்புக்கே கேட்டாள்.

“அப்படிப் பார்த்தால் முதல்ல நீ இந்திராவைத்தான் இங்கே அழைத்து பேசியிருக்கணும். அவளை வீட்டுக்கு வரச் சொன்னதாகத்தான் எனக்கு ஞாபகம். ஒரு வேளை நீயாக அதைச் செய்திருந்தால், நீ அவளை தவிர்க்க நினைக்கறன்னு அர்த்தம்” நெற்றியடியாக உரைக்க, அவன் புத்தி கூர்மையை வியந்தாள்.

“இனிமேல் அவ உன்னைப் பார்க்க வந்தால் பேசாதே…, அது நல்லதுக்கு இல்லை…, அதேபோல், இப்படி வெளியே போவதாக இருந்தால் என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு போகணும்…, புரியுதா?” இப்பொழுது அவன் குரலில் சூடேற, திகைத்துப் போனாள்.

“அவ எதுக்கு உன்னை பார்க்க வந்தா?” திடுமென அவன் கேட்க தடுமாறிப் போனாள்.

“சும்மாதான்…” உரைத்தவள் விடுவிடுவென வெளியே நடந்துவிட்டாள். அவளால் எப்படிச் சொல்ல முடியும்…, அவள் அண்ணனது அக்கவுண்டில் இவ்வளவு பணம் இருக்கிறது என…, அதைத் தேடி சில பருந்துகள் வட்டமிடுகிறது என…,

ஏற்கனவே அவளது அண்ணன் விஷயத்தில் அவள் ஒன்றை நினைத்தால், அவன் வேறு ஒன்றை சொல்கிறான். அப்படியிருக்கையில் தன் அண்ணாவை அவனிடம் அவளால் விட்டுகொடுக்க முடியுமா? எனவே விஷயங்களை மறைத்தாள்.

ஆனால், அதை அவனிடம் உரைத்திருக்க வேண்டும் என அவள் புலம்பும் காலம் வருவதை அவள் உணரவே இல்லை.

*****

# பகுதி – 29.

ஜீப் தங்கள் வீடு இருக்கும் பக்கம் நுழைய, ‘இவர் எப்படி அங்கே வந்தார்? என்னை எப்படி பார்த்தார்?’ யோசனை சுழன்றாலும் அவனிடம் எதையும் கேட்கும் தைரியம் இருக்கவில்லை. கூடவே, அவன் விசாரிக்கச் சென்ற கேஸ் என்னவானது என தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது.

கந்தன் எதையோ சொல்லத் துடிப்பதும், அது முடியாமல் பாதியில் நிறுத்துவதுமாக இருக்க, ‘இவருக்கு இருக்க பயத்தைப் பாரேன்...’ மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

பிரம்மாவிடம் சாதாரணமாகவும், அசாதரணமாகவும் நெருங்கும் உரிமை தனக்கு மட்டுமே இருக்கிறது என்ற கர்வம்..., சின்னதாய் அவன் கொடுக்கும் தண்டனைகள்..., இதழ்களை நொடியில் பதித்து விலகுகையில், இதழ்மாற்றும் சுவிங்கத்தின் தித்திப்பு..., இப்பொழுதெல்லாம் பிடிக்கத் துவங்கி விட்டது.

முதலில் எல்லாம் ‘எச்சி’ என உரைத்தவள், இப்பொழுது இதழ் தீண்டும் நொடிகளில் ஒருவித தேடலைத் தொடர்வது எதனாலாம்? சிந்தனை தித்திப்பாய் சுழல, நடப்புக்குத் திரும்பியவள்,

“அண்ணே..., போன விஷயம் என்ன ஆச்சு? காயா பழமா?” பார்வை பிரம்மாவிடம் இருக்க, கேள்வி கந்தனிடம் இருந்தது.

‘ஏண்டி..., என்கிட்டே கேட்க மாட்டியா?’ எண்ணியவனது ஒற்றை புருவம் ஏறி இறங்க, சுவிங்கத்தை மென்றவன், முகத்தில் எதையும் வெளிப்படுத்தவே இல்லை.

“என்னம்மா நீங்க..., டிவி பாக்கவே இல்லையா? டிப்பார்ட்மெண்ட்டே ஆடிப் போச்சுல்ல? ஐஜி மச்சானையே தூக்கினால் சும்மாவா?” அவர் உற்சாக மிகுதியில் உரைக்க, அதிர்ந்து போனாள்.

“என்னண்ணே சொல்றீங்க?” அவளால் நம்பவே முடியவில்லை. அவனது துணிச்சல் அவளுக்குத்

தெரியும்தான். ஆனால் இது? உயரதிகாரியின் உறவினனையே கைது செய்திருப்பது? அதுவும் அவரே அந்த கேசை பற்றி விசாரிக்கச் சொல்லியிருக்கையில், அவனது தைரியத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.

“அட..., ஆமாம்மா..., ரெண்டுநாள்..., ஐயா ஒரு பொட்டு தூங்கலை. பலகோடி ரூபாய் பொருள்..., கை மாறினால் அதை பிடிப்பது ரொம்ப கஷ்டம். அய்யாதான்..., நாங்கல்லாம் அசந்துட்டோம்..., அத்தோட...” அவர் மேலே எதையோ சொல்லப் போக,

“கந்தன்...” அவனது அழைப்பு அவரை வாய் மூடச் செய்தது.

‘இவருக்கு பழசெல்லாம் மறந்துடுச்சுன்னு எந்த மடையன் சொன்னான்? இப்ப கூட சும்மா சூறாவளியா சுழட்டுறாரே...’ அவரால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

ஜீப் வீட்டின் முன்னால் நிற்க, “நீங்க கிளம்புங்க..., காலையில் வந்தால் போதும்” அவரை அனுப்பியவன் வீட்டுக்குள் வர, அவன் பின்னால் தானும் நுழைந்தாள்.

அவள் வீட்டுக்குள் நுழையவே, ஒரே இழுப்பில் அவளை தன் கையணைப்புக்குள் வளைத்தவன், அவள் அதிர்ந்து நோக்குவதை கண்டுகொள்ளாமல், தன் கையில் இருந்த தொப்பியை அவள் தலையில் மாட்டினான்.

“தேங்க்ஸ்..., இந்த வெற்றி உன்னால்தான் கிடைத்தது. அதுவும் சரியான நேரத்தில்..., இல்லன்னா இந்நேரம் ஒரு கேசில் தோத்துப் போயிருப்பேன், தேங்க்ஸ் அகெயின்...” தொப்பியில் லேசாக முட்டியவன், அவள் இடையை மென்மையாக வளைத்துக் கொண்டான்.

காயத்ரியின் இதயம் எம்பி குதிக்க, “என்ன இது..., விடுங்க...” அவன் அருகாமை வதைக்க நெளிந்தாள். அவனது நெருக்கம் படபடப்பை அளிக்க, கூடவே மனம் அதை ரசிப்பதை எங்கே அவன் கண்டுகொள்வானோ என்ற பயம் தோன்றவே அவ்வாறு உரைத்தாள்.

“ம்ச்..., உன் கற்பு எதுவும் கரஞ்சுடாது...” அவள் இடை நொறுங்கும் அளவு இறுக்கியவன் சுள்ளென விழ, அவள் கண்கள் கலங்கிப் போனது.

‘என் கற்பை காப்பாற்றி வைத்திருப்பதே உனக்காகத்தான்...’ அவள் மனம் எண்ணியதை அவன் உணரவே இல்லை. அவனுக்கோ..., தன்னை மனதுக்குள் நேசிப்பவள், அதை வெளிப்படுத்தினால் என்ன என்ற கோபம்.

தன்மேல் இருக்கும் காதலை விட, அவன் அண்ணன்மேல் வைத்திருக்கும் பாசம் அதிகம் இருக்கிறதே என்ற பொறாமை. தன் அருகாமையை மனதுக்குள் ரசிக்கும் அவள், வெளியே காய்வதை அவனால் ரசிக்க முடியவில்லை. எனவே கோபம் காட்டினான்.

“ச்சே..., ஆ..., ஊ...,ன்னா கண்ணில் தண்ணி விட்டுடு. என் கண் முன்னாடி இருக்காதே போ..., ஒரு சின்ன சந்தோஷத்தை கூட என்னை அனுபவிக்க விடாதே, என்ன ஜென்மமோ...” அவளை உதறியவன், அவள் தலையில் இருந்த தொப்பியை உருவிக் கொண்டு வெளியேறத் துவங்கினான்.

ஏற்கனவே இரண்டு நாள் உறங்காமல் இருப்பவன், இப்பொழுதும் வெளியே சென்றால்...? அதுவும் அவனது கோபம்..., ‘வீட்டுக்கு வந்தவரை இப்படிதான் பாத்துப்பியா...?’ தன்னையே கடிந்தவள், வேகமாக அவன் பின்னால் ஓடினாள்.

ஜீப்பில் அவன் ஏற முயன்ற நிமிடம், அவன் கை பிடித்து தடுத்தவள், “முதல்ல வீட்டுக்குள்ளே வாங்க...” அவன் உடல்நலம் மட்டுமே அப்பொழுது முக்கியமாகத் தோன்றியது. அவள் பிடித்திருந்த தன் கரத்தைப் பார்த்தவன், ‘தண்டனை கொடுப்பேன்’ என கண்களால் உரைக்க, ‘எனக்கு சம்மதம்...’ என்பதுபோல் பார்த்திருந்தாள்.

“உனக்கு ரொம்ப தைரியம்தான்..., பிரம்மாவோட கையையே புடிக்கிறியா?” கோபம் சற்று இறங்க, தன் கரத்தை அவளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு நின்றிருந்தான்.

“இந்த பிரம்மா..., பிரம்மான்னு புலம்புறதை முதல்ல நிறுத்துங்க..., பெரிய பிரம்மா...” நொடித்துக் கொண்டவள், அவனை வீட்டுக்குள் இழுத்துச் செல்ல முயல, அவன் நின்ற இடத்தில் இருந்து ஒரு இன்ச் கூட அவனை நகர்த்த முடியவில்லை.

“என் வெயிட் உனக்குத் தெரியலை...” இடக்கையால் தன் மீசை முறுக்க,

“என்ன..., ஒரு எம்பத்தஞ்சு கிலோ இருப்பீங்களா?” அவள் திருப்பிக் கேட்க, அவன் கண்களில் மின்னல்.

பேச்சு பேச்சாக இருந்தாலும், அவனை வீட்டுக்குள் இழுத்துச் செல்ல முயன்று கொண்டுதான் இருந்தாள். ஒரு கட்டத்தில் தன்னால் அவனை வீட்டுக்குள் அழைத்துச் செல்ல முடியாது என்பது புரிய, அவளால் தாங்கவே முடியவில்லை.

அவள் முகம் மாறிய மறு நொடி..., அவள் இழுப்புக்கு சென்றான். சற்று இலகுவாக நடப்பதும், முரண்டு பிடிப்பதும் என அவன் விளையாட, ஒரு கட்டத்தில் அவளுக்கு இணையாக நடக்க முயல, அவன் அவ்வளவு இலகுவாக வருவான் என எதிர்பாராதவள், தடுமாறி விழப் போனாள்.

அதை உணர்ந்தாற்போல், மறு நொடி, அவளை அலேக்காக கைகளில் தூக்கிக் கொண்டான். அதே நேரம்..., கீழே கிடந்த ரிமோட் காலில் மிதிபட, டிவி ஆன் ஆனது.

அதில் ஒளிர்ந்த செய்திச் சேனலில், “பலகோடி ரூபாய் பொருமானமுள்ள போதைப்பொருளை, இரண்டுநாள் தேடுதல் வேட்டையில் கைப்பற்றினார் எஸ்பி பிரம்மா. இந்த கடத்தல் சம்பவத்தில், ஐஜியின் மைத்துனன், பிரதாப் ஈடுபட்டார் என்பது நாட்டையே உலுக்கியது” அவள் மேலும்

சொல்லிக்கொண்டே போக, வீடியோ கிளிப் ஓடியதை தன்னை மறந்து பார்த்திருந்தாள்.

“ஐஜி இதை எப்படி எடுத்துகிட்டார்...? உங்களுக்கு எதுவும் பிரச்சனை வராதா?” அவள் குரலில் கவலை இருந்தது.

“தப்பு செய்தது யாராக இருந்தாலும் தண்டனை அடைந்தே தீரணும்..., அது இந்த பிரம்மாவோட தீர்ப்பு..., மேலதிகாரிக்கெல்லாம் பயந்தால், இந்த வேலையில் ஒரு நாள் கூட இருக்க முடியாது” அவன் தோளைக் குலுக்க, அவன் முகம் நோக்கினாள்.

அவள் முகம், அவன் முகத்துக்கு வெகு அருகில் இருக்க, அப்பொழுதுதான் அவன் கரத்தில் தான் இருப்பதையே உணர்ந்தாள். ‘கீழே விடுங்கன்னு சொன்னா அதுக்கும் கோச்சுப்பாரோ...’ எண்ணியவளது கரங்கள் தாமாகவே உயர்ந்து அவன் கழுத்தை வளைத்துக் கொண்டது.

‘இறங்க நினைக்கிறவ செய்யிற வேலையாடி இது?’ மனசாட்சி குரல்கொடுக்க, அதை காற்றில் விட்டாள்.

“பிரதாப் யார்ன்னு உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?”.

“கேஸ் துவங்கினப்போ பிரதாப் யார்ன்னு ஞாபகம் வந்துச்சு. அதை வைத்துதான் அவனை மடக்கினேன். ஆனா, ஐஜியோட மச்சான்னு பிறகுதான் தெரியும்”, அவன் சொல்ல,

“உங்களுக்கு எல்லாம் ஞாபகம் வந்துடுச்சா?” அதிர்வாக கேட்டாள்.

“இல்ல..., சில நேரம் பிட்டு பிட்டா ஞாபகம் வரும், அப்படித்தான் இதுவும், அதோட..., இந்த கேசை நான் டீல் பண்றேன்னு தெரிஞ்சு, அவன்தான் என்னை பின் மண்டையில் அடிச்சு ஹாஸ்பிடல் போக வச்சான். என்னை தொடணும்னு நினைக்கிறவனையே நான் சும்மா விட மாட்டேன்.

“இதில் என்னை ஒருத்தன் உரசிப் பாத்திருக்கான்..., சாவோட விளிம்பு வரைக்கும் போக வச்சிருக்கான்னா நான்

சும்மா விடுவேனா? அதான்..., கரெக்ட்டா ஸ்கெட்ச் போட்டு, அவனை சிக்க வச்சேன். அவ்வளவு சீக்கிரம் அவனை வெளியே எல்லாம் வர விட மாட்டேன்.

“ஸ்பாட் அரெஸ்ட்..., அவன் கொடவுனிலும் ட்ரக்ஸ் இருந்தது. சோ...” சொல்லிக்கொண்டே போனவனது கண்களில் ஒளிர்ந்த கர்ஜனை, உள்ளுக்குள் குளிரெடுத்தது.

பிரதாப்தான் அவனது விபத்துக்கு காரணம் என அறிந்தவள் துடித்துப் போனாள். அவள் கரம் அவன் சிகைக்குள் நுழைந்து, அவன் பின் தலையில் தையல் போட்டிருந்த இடத்தை வருட, இமைகளை மூடிக் கொண்டான்.

அவள் கரம் சிகைக்குள் ஊரும் விதம்..., அது கொடுக்கும் இதம்..., அந்த உணர்வை ஆழ்ந்து அனுபவித்தான். அவளோ, அவன் காயம்பட்ட வடுவை வருடியவள், “நிறைய தையல் போட்டிருக்காங்க இல்ல” அவள் கேட்க,

அவளை தன் கைகளில் இருந்து கீழே விட்டவன், “ஆளுக்குத்தக்கான தண்டனை கொடுக்கறாங்க. அவன் பதிமூணு தையல் போட வச்சா, நீ...” உரைக்க வந்தவன் வார்த்தைகளை முடிக்கவில்லை.

அவள் அதிர்ந்துபோய் அவன் முகம் பார்க்க, அவளை விட்டு விலகி நின்றவன், வேகமாக தன் சட்டையையும், உள் பனியனையும் கழட்டியவன், அவளுக்கு முதுகு காட்டி நின்றான். எதற்காக இப்படிச் செய்கிறான் எனப் புரியாமல் அவனைப் பார்த்திருந்தாள்.

“என் முதுகில் ஏதாவது காயத்தின் வடு இருக்கா...?” அவன் கேட்க, அவன் பரந்த முதுகில் பார்வையை பதித்தவள், “இ..இல்லை...” தடுமாறினாள்.

“இங்கே பார்...” தன் வயிற்றின் இடப்பக்கம் சிறிதாக இருந்த தழும்பைக் காட்ட, அது தன்னால் உருவானது என்பதை உணர்ந்தவளது உள்ளம் சில்லிட்டுப் போனது.

அவனோ..., “போர்ல கூட முதுகில் காயம் பட்டு, சாகக் கூடாது என்பது சத்ரியன் விதி. அதேபோல்..., முன்பக்கம் காயம் கொண்டால், வீரத்தின் அடையாளம். துரோகிதான் முதுகில் குத்துவான். எதிரி நேரில் மோதுவான்.

“நீ முதுகில் என்னை குத்தியிருந்தால் அந்த இடத்திலேயே உன்னை கொன்னு புதைச்சிருப்பேன். ஆனா..., நேருக்கு நேரா நின்னு..., இங்கே குத்தின பார்..., ஐ லவ் இட்...” அவள் கன்னம் தாங்கி அருகே இழுத்தவன், இரு இதழ்களுக்கும் இடையில் நூலளவு இடைவெளியில் தன் நெருக்கத்தை நிறுத்தினான்.

“எனக்கு முதல் முதல்ல ஞாபகம் வந்த இந்த மூக்குத்தி..., உன் குரல்..., முழுசா கோபப்படத் தெரியாத உன்னோட கண்ணு..., நினைக்கிறப்போ..., சத்தியமா மண்டைக்குள் கிண்ணுன்னு இருக்கு. அப்படியே உன்னை...” எங்கே அந்த இடைவெளியை நிரப்பிவிடுவானோ என்ற பயத்தில் அவள் இமைகளை இறுக மூடிக்கொள்ள, அவ்வளவு நெருக்கத்தில் அவள் முகத்தையே பார்த்திருந்தான்.

இமைகளை அழுத்தமாக மூடி, இதழ் துடிக்க அவள் நின்ற தோற்றம் அவனை மொத்தமாக புரட்ட, அப்படியே அவள் இதழ்களை கவ்விக்கொள்ள மோகம் கிளர்ந்து எழுந்தது. ஆனாலும், ஏதோ ஒன்று தடுக்க, இமைக்காமல் சில நொடிகள் அவளைப் பார்த்திருந்தான்.

ஒற்றை விரலால் அவள் மூக்குத்தியை அழுத்தமாக வருட, முகம் முழுக்க சூடாகிப் போனது. “காயு...” எங்கே அழுத்தி அழைத்தால் அவள் பெயருக்கு வலிக்குமோ என அவன் அழைக்க, விழி திறந்து அவனைப் பார்த்தாள்.

அவன் கண்கள் அவளிடம் எதையோ யாசிக்க, உள்ளுக்குள் மொத்தமும் புரளும் உணர்வு. “குளிச்சுட்டு வந்து ரெஸ்ட் எடுங்க..., உங்க கண்ணில் தூக்கம் அப்படியே இருக்கு...” முயன்று தன்னை நிலை நிறுத்தியவள், மென்மையாக உரைக்க, நிராசையாய் அவளை விட்டு விலகினான்.

“என் கண்ணில் இருக்கும் தூக்கம்தான் உனக்கு தெரிந்ததா காயு...?” கேட்டவன், தங்கள் அறைக்குச் செல்ல, அப்படியே பொத்தென சோபாவில் அமர்ந்துவிட்டாள்.

அவனோடு கலந்துவிட அவளுக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? ஆனால், காமேஷின் விஷயம் சீனப் பெருஞ்சுவராய் அவள் மனதில் நிற்கையில், அதைத் தாண்டி அவளால் செல்ல முடியவில்லையே. கலங்கிய கண்களை சுண்டி எறிந்தவள், அவனுக்கு உணவு தயாரிக்கத் துவங்கினாள்.

சமைக்கும் பொழுதே..., ‘அண்ணா விஷயத்தை எப்படியாவது கண்டு பிடிக்கணும். அவர் கிட்டே கேட்டால் தேவையில்லாத சண்டை வரும். சோ..., நானே ஏதாவது செய்யணும்...’ எண்ணியவள், மறு நாளே அதற்கான வேலையில் ஈடுபட்டாள்.

“காயத்ரி..., நீ விபரீதத்தை விலைக்கு வாங்குறன்னு நான் சொல்லச் சொல்ல கேக்காமல் உங்க அண்ணா ரூமுக்கு போயிட்டு, இப்படி பேயறஞ்ச மாதிரி வந்து உக்காந்துட்டு இருக்க..., இதுக்கு என்ன அர்த்தம்? அங்கே அப்படி என்னதான் ஆச்சு? சொல்லித் தொலைடி.

“உன்னோட எனக்கு இதே போராட்டமா போச்சு..., எதையாவது உளறிட்டு போய் தொலைய வேண்டியது. நீ வந்து சேரும் வரைக்கும் என் உயிர் என் கிட்டே இருக்காது. இதில் வந்து சேர்ந்த பிறகு இப்படி ஒரு எக்ஸ்பிரஷன் வேற..., முடியலடி.

“இப்போ நீ சொல்லப் போறியா..., இல்ல அண்ணாவுக்கு போன் பண்ணட்டுமா? இப்படி மாங்கா மாதிரி இருகாதடி வாயைத் தொற” அவளை வார்த்தையால் சாடிக் கொண்டிருந்தாள் இந்திரா.

இந்திராவின் ஹாஸ்டல் அறையில் தேகம் நடுங்க அமர்ந்திருந்தாள் காயத்ரி. தன் அண்ணன் அறைக்குச் சென்றால் ஏதாவது தகவல் கிடைக்குமா என எண்ணியவள் அங்கே சென்றிருக்க, அவள் அறைக்குள்

நுழைந்த அடுத்த நிமிடம், அன்று அவளிடம் அக்கவுண்ட்ஸ் பற்றி விசாரித்தவன் அங்கே உதயமானான்.

“ஹாய் சிஸ்டர்..., காமேஷோட திங்க்ஸ் எல்லாம் எடுக்க வந்தீங்களா?” அவன் கேட்க, ‘இவன் எப்படி இங்கே...?’ எண்ணியவளது புலன்கள் கூர்மையானது.

“ஆமா...”, உரைத்தவள் காமேஷின் உடைமைகளை ஒரு மூட்டையாக கட்ட, “சிஸ்டர்..., நான் மறுபடியும் கேக்கறேன்னு தப்பா நினைக்காதீங்க. காமேஷோட அக்கவுண்டை குளோஸ் பண்ணிட்டீங்களா?” அவன் கேட்க,

“அந்த தகவல் உங்களுக்கு எதுக்கு?” அவனிடம் பேசினால் ஏதாவது உண்மை தெரிய வருமா என அவள் மனம் எதிர்பார்த்தது.

“அவன் அக்கவுண்டில் இருக்கும் காசு, ஒரு டீலிங்க்கு வேண்டி நாங்க வாங்கியிருந்தோம். அவன் இல்லாததால் அதை முடிக்க முடியலை. அந்த பார்ட்டிக்கு, நாங்க காசை திருப்பிக்கொடுக்கணும். காசைக் கேட்டு தொல்லை பண்றாங்க. நீ கொஞ்சம் தயவு பண்ணா நல்லா இருக்கும்” கெஞ்சினான்.

“அண்ணா எங்கேயோ அக்கவுண்டண்டா தானே இருந்தாங்க..., பிறகு எப்படி...? சரி..., எவ்வளவு பணம்?” அவள் கேட்க, திகைத்துப் போனான்.

“அது..., அதான்..., அவன் அக்கவுண்டில் இருக்கும் பணம்...” தடுமாறினான்.

அவன் சொல்லிக்கொண்டே இருக்க, கூடவே இரண்டு மூன்றுபேர் அங்கே வர, காயத்ரிக்கு உதறல் எடுத்தது. “இங்கே பாரும்மா..., பேசாமல் பணத்தை கொடுத்துட்டு போயிட்டே இரு. தேவையில்லாத பிரச்சனை வேண்டாம்” அவர்கள் அவளை நெருங்க, இதயம் தொண்டைக்குழியில் துடித்தது.

‘என்னங்க..., இப்போ நான் என்ன செய்ய? எங்கே போனாலும் என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு

போ’ன்னு நீங்க சொன்னதை நான் கேக்கவே இல்லையே…’ காலம் கடந்த நினைவு.

“டேய்…, அதெல்லாம் தங்கச்சி பக்காவா பண்ணிடும்டா. அக்கவுண்ட் குளோஸ் பண்ண பணம் எல்லாம் அவ அக்கவுண்டுக்கு தானே வந்திருக்கும், அதை அப்படியே உன் அக்கவுண்டுக்கு டிரான்ஸ்ஃபர் பண்ணிடுவா…, பண்ணிடுவ தானே…” கேட்டவன் ஒரு மாதிரி இளிக்க, தன் நடுக்கத்தை அவளால் மறைக்கவே முடியவில்லை.

“அதெப்படிடா முடியும்…? அவ அக்கவுண்டில் என்னை ஆட் பண்ணி, ரெண்டு நாளுக்கு பிறகு தானே பணத்தை அனுப்ப முடியும்…?” மற்றவன் உரைக்க,

“அப்போ ரெண்டு நாள் தங்கச்சி நம்மளோடவே இருக்கட்டும்…” அவன் சாதாரணமாக உரைக்க, நடுநடுங்கிப் போனாள்.

“சோழா…, எஸ்பி பொண்டாட்டிடா…, நீ என்னவோ ரொம்ப சாதாரணமா சொல்ற?”

“அவனுக்கு ஒரு சின்ன டவுட் வந்தாலும் போதும்…, நாம கூண்டோட கைலாசம்தான்” மற்றவன் உரைக்க, ஒருவர் மற்றவரை பார்த்துக் கொண்டார்கள்.

“காமேஷ் போய் ஏழு எட்டு மாசத்துக்கு பிறகுதான் நாம வெளியே வந்திருக்கோம். இப்போ எஸ்பி சார்க்கு நம்மளை நேரில் பார்த்தால் கூட அடையாளம் தெரியாது. இதில் தேடி வந்து தூக்குவாரா…? போடா” அவர்கள் பிளான் செய்வதைப் பார்த்தால், உள்ளுக்குள் செத்துக் கொண்டிருந்தாள்.

“டேய்…, தூக்குடா அவளை…” அவர்கள் ஆவேசமாக, அதே நேரம்…, தூரத்தில் ஒரு விசில் சத்தம் கேட்க, “போலீஸ்…, கிளம்புங்கடா” அனைவரும் தெறித்து ஓடினார்கள். காயத்ரிக்கு போன உயிர் வந்து சேர்ந்தது. வந்தவனோ, ஓடிச் சென்றவர்களை பிடிக்க எந்த முனைப்பும் காட்டாதது அவளுக்கு வியப்பை அளித்தது.

கேள்வியாக அவரை நோக்க, “அம்மா..., ஐயா லைன்ல இருக்காங்க பேசுங்க...” அவள் இதுவரை பார்த்திராத ஒரு போலீஸ் அலைபேசியை அவளிடம் நீட்ட, நடுங்கும் கரத்தால் அதை பெற்றுக் கொண்டாள்.

“ஹலோ...” குரல் குழற அவள் அலைபேசியில் குரல் கொடுக்க,

“நான் சொல்லும் எதையுமே கேக்கக் கூடாதுன்னு இருக்க. என்மேல் உனக்கு அவ்வளவுதான் நம்பிக்கை அதானே...” கோபமாக ஒலித்த பிரம்மாவின் குரல் பட்டென அறுந்துபோக, அலைபேசியை வந்தவரிடம் நீட்டினாள்.

“நீங்க எப்படி இங்கே வந்தீங்க...?” அவளால் இருந்த இடத்தில் இருந்து எழவே முடியவில்லை. அந்த அளவுக்கு மிரண்டு போயிருந்தாள்.

“நான் உங்களுக்கு காவலுக்கு இருக்குற போலீஸ், ரத்தினம்மா...” அவன் சொல்ல, தான் எப்படி உணர்கிறோம் என்றே இவளுக்குத் தெரியவில்லை.

“எவ்வளவு நாளா...?”

“ரெண்டு மாசமா...” அவன் சொல்ல திருமணம் முடிந்தது முதல், இவனை தனக்கு காவலாக அமர்த்தியிருப்பதை உணர்ந்து கொண்டாள். அவன் அக்கரையில் நெஞ்சம் நனைந்தாலும், மனதுக்குள் இருக்கும் பிடிவாதம் அவளை இறங்க விடவில்லை.

“நீங்க வர ஏன் இவ்வளவு நேரம்...?” சற்று நேரத்தில் அவள் அனுபவித்த துன்பம் அவளை அவ்வாறு கேட்க தூண்டியது.

“அய்யா சொன்னபடிதாம்மா செய்தேன். இப்போ காலேஜ் போகணுமா? இல்ல வீட்டுக்கா...?” அவன் கேட்க, எழுந்து நடக்க முடியும் என்றே தோன்றவில்லை. அதற்குமேல் அவன் தன்னிடம் எதையும் பேச தயாராக இல்லை என்பதை புரிந்து கொண்டாள்.

“வாங்கம்மா போகலாம்...” அவன் அழைக்க, அதற்குமேல் அங்கே இருக்க முடியாமல் கிளம்பிவிட்டாள். அதென்னவோ

அவன் வருவதற்கு முன்னால், அங்கே இருந்து எப்பொழுது கிளம்பலாம் என எண்ணியவள், ஒரு போலீசை கண்டவுடன் யானை பலம் கொண்டதன் அர்த்தம் புரிய, கணவன்மேல் தான் கொண்டிருக்கும் நம்பிக்கை புரிய, சிலிர்த்துத்தான் போனாள்.

அதையும் மீறி, காமேஷின் பிரச்னைக்கு ஒரு முடிவு தெரியாமல் தன்னால் எதையும் செய்ய முடியாது என்றே தோன்றியது. இப்பொழுது அவனது லேப்டாப் சரியான பிறகும், தன் அண்ணனின் கேஸ் விஷயம் பற்றிய எந்த கேள்விக்கும் அவன் பதில் சொல்லாதது அவன்மேல் அளவுகடந்த கோபத்தை அளித்தது.

அந்த கோபத்தால்தான் அவளாகவே தகவல் அறிய இறங்கிவிட்டாள். இப்பொழுது அது தன்னை ஆபத்தில் இழுக்க, அந்த புதைகுழிக்குள் தன்னால் அமிழ முடியுமா என எண்ணியவளுக்கு, ‘பிரம்மா இருக்க பயமேன்’ என்ற எண்ணமே எழுந்தது.

திரும்பவும் ஆபத்தை இழுத்துக் கொள்கிறோமே என்ற எண்ணம் எழவே இல்லை. ஒரு பக்கம் தைரியம் வந்தாலும், பிரம்மா, ரத்தினத்தை ஏற்பாடு செய்யாவிட்டால் என்ன ஆகியிருக்கும் என்ற எண்ணம் கொடுத்த அதிர்வாலேயே ஹாஸ்டலுக்கு வந்தவள் அப்படியே அமர்ந்துவிட்டாள்.

வீட்டுக்குப் போனால் பிரம்மா என்ன சொல்வான் என்ற எண்ணம் கொடுக்கும் அவஸ்தையை எப்படி சம்மாளிக்க என்றே தெரியவில்லை. அங்கே நடந்த விஷயங்களை இந்திராவிடம் சொன்னால் நிச்சயம் தன்னைக் கடித்துக் குதறிவிடுவாள் என்பதால், எதுவும் சொல்லாமல் அமைதி காத்தாள்.

அதேபோல் எதையும் சொல்லாமல் போனாலும் அவளை சம்மாளிக்க முடியாது என்பதால், “அண்ணா ரூமுக்கு போயிருந்தப்போ யாரோ என்னை பாலோ பண்ணிட்டு வந்த மாதிரி இருந்தது..., அதான்...” பாதி உண்மையும், பாதி பொய்யுமாக உரைக்க பொங்கிவிட்டாள்.

“என்னது..., யாரோ பாலோ பண்ணாங்களா? அண்ணாவுக்கு சொன்னியா இல்லையா? இனிமேல் தனியா எங்கேயாவது போ..., உன்னை பொளந்துடுறேன். முதல்ல வீட்டுக்கு கிளம்புடி. இல்ல..., நீ தனியா போக வேண்டாம். கந்தன் அங்கிள்க்கு போனைப் போட்டு வரச் சொல்லி அவரோட போ...” அவள் சொல்ல தோழியை முறைத்தாள்.

“அவர் என்ன என் வீட்டு வேலைக்காரர்ன்னு நினைச்சியா? நான் பஸ்லேயே போய்க்கறேன். என் பாடிகார்ட் என்னோட வருவார்” அவள் சொல்ல வாய் பிளந்தாள்.

வீட்டுக்கு வந்தவளை வரவேற்றது பிரம்மாவின் கோப முகமே. ‘இன்னைக்கு என்ன இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கார்...’ எண்ணியவள் தன் பதட்டத்தை மறைத்தவாறு வீட்டுக்குள் நுழைய, அவளையே அசையாமல் பார்த்திருந்தான்.

அவள் உடை மாற்றி, காபி போட கிச்சனுக்கு வர, “சிஐடி வேலை பாத்து அம்மணி என்ன கண்டு புடிச்சீங்க?” அவன் நக்கலாக வினவ, கோபமாக அவனை முறைத்தாள்.

“ஏன்..., உங்களோட திருட்டுத்தனத்தை கண்டுபுடிச்சுடுவேன்னு பயப்படுறீங்களா? அது மட்டுமில்லை என் பின்னாடியே ஸ்பை வச்சிருக்கீங்க? நான் உங்க பொண்டாட்டியா இல்ல உங்க கஸ்டடியில் இருக்கும் கைதியா?” அவள் கோபத்தில் பொரிய,

“என்னைப் பாத்தா உனக்கு எப்படித் தெரியுது...?” உக்கிரமூர்த்தியாக அவன் நிற்க, பால் பொங்கி வழிந்து அடுப்பை அணைத்தது.

*****

# பகுதி – 30.

பால் பொங்கி வழிய, கேஸை உடனடியாக நிறுத்தியவள், அவன் கோபமுகம் கண்டு உள்ளுக்குள் நடுங்கிப் போனாள். எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவனது கோபத்தை கண்டிருக்கிறாள்தான் ஆனால் இது? தவறு செய்யாதவனின் நியாயமான கோபம்.

“இப்போ கேட்ட அதே கேள்வியை என் கண்ணைப் பாத்து திரும்ப கேள் பார்ப்போம்?” அவளை நெருங்கியவன் நெருப்பு விழிகளால் அவளைச் சுட்டான்.

அவள் பார்வையை வேகமாக திருப்பிக் கொள்ள, “என்னைப் பார்” அவள் புஜத்தை அழுத்தி தன் பக்கம் திருப்பியவனது கண்கள் நெருப்பை கக்கியது.

“சா..சா..ரி...” அவன் அழுத்தி பிடித்த தோள் வலியெடுக்க, புருவம் நெரித்து வலியைப் பொறுத்தவள் முனகினாள்.

“சுத்தி நின்ன நாலுபேரும் உன்மேல் பாய்ந்திருந்தால் என்ன செய்திருப்ப?” அவள் மன்னிப்பை வேண்டவே தன் கோபத்தை சற்று குறைத்தவன், அடங்க முடியாமல் கேட்டான்.

“எனக்கு கராத்தே தெரியும்” ரோஷமாக உரைக்க,

“ஓ..., அப்படியா..., வா என்னோட...” கிட்டத்தட்ட அவளை இழுத்துச் சென்றவன், மேலே தான் ஒர்க்கவுட் செய்யும் அறைக்குச் சென்று அவளை தள்ளினான். தான் அணிந்திருந்த டிஷாட்டை கழட்டியவன், அவளது சுடிதார் துப்பட்டாவை உருவி எறிந்தான்.

அவன் செய்கையைப் பார்த்து அவள் அதிர்ந்து நிற்க, “என்னவோ கராத்தே தெரியும்னு சொன்னியே காட்டு...” உரைத்தவனது நெற்றி நரம்பு புடைக்க, கைவிரல்கள் அனைத்தயும் மொத்தமாக இறுக்கி நின்றிருந்தான். அவனது கோபம் எல்லை மீற துடிப்பது புரிய, அவன் உடல்நிலைதான் அவள் கவனத்துக்கு வந்தது.

“டென்ஷன் ஆகாதீங்க...” அந்த நிலையிலும் அவளால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

“அட்டாக்...” அவள் உரைத்ததை காற்றில் விட்டவன் கர்ஜிக்க, வெறிகொண்ட சிங்கத்தின் முன்னால் ஒற்றையாக நிற்பது போன்ற பிரம்மை.

“இ...” ‘ல்ல...’ அந்த சொல்லைக் கூட அவளால் முழுதாக சொல்ல முடியவில்லை.

“சொன்னதை செய்...” இன்று உன் திறமையை சோதிக்காமல் விட மாட்டேன் என நின்றிருந்தான். அவளே இப்பொழுதுதான் ஆரெஞ் பெல்ட் வாங்கியிருக்கிறாள்.

சற்று நேரத்துக்கு முன்னர் நடந்த செய்கையின் பொழுது கூட, தனக்கு கராத்தே தெரியும் என்பதே அவள் நினைவில் இருந்து அழிந்து போயிருந்தது. அவனிடம் வீம்புக்கு என பேசிவிட்டதுதான் அந்த வார்த்தைகள். ஆனால், அதை அவன் இவ்வளவு பெரிய விஷயமாக பார்ப்பது எதனால் என அவளுக்குப் புரியவில்லை.

ஆனாலும் அவன் ஒன்றைச் சொன்னால் அதில் ஏதாவது காரணம் இருக்கும் என்பது புரிய, ஆழமாக மூச்செடுத்து தன்னை நிலைக்கு கொண்டு வந்தாள்.

அதற்குமேல் தவிர்க்க முடியாமல் ஒரு முடிவுக்கு வந்தவள், அவனை அட்டாக் செய்யப் பாய, அடுத்த நிமிடம் அவன் செய்த செய்கையில் விதிர்த்துப் போனாள். ஒரு பெண்ணை எங்கே தொடக்கூடாதோ..., அந்த இடத்தில் அவன் கரம் பதிந்து மீள, திகைத்துப் போனாள்.

“ச்சே..., இதுதான் உங்க அட்டாக்கா...” வேகமாக பின்னடைன்தவள் வெடிக்க, கொஞ்சம் கூட தன் நிலையில் மாற்றமே இல்லாமல் நின்றிருந்தான்.

“உன் எதிரில் நின்னவங்க எல்லாம் வெறிபிடித்த நாய்கள். அவங்க பாய்ந்திருந்தால் இதுதான் உன் எதிர்வினையா? இந்த கராத்தேயை வைத்துக் கொண்டுதான் உன்னை நீ காப்பாத்திக்கப் போறியா?

“இப்போ உன்னைத் தொட்டவன் உன் புருஷன்..., அதுக்கே இப்படி ஒரு எதிர்வினை என்றால், அந்த நாலுபேருக்கு...?” அவன் கூர்மையாக கேட்க, அனைத்தும் நடந்திருக்கும் சாத்தியக்கூறுகள் கண்முன் விரிய, விதிர்த்துப் போனாள்.

“ஒரு பொண்ணை தாக்கணும்னா ஆண்கள் கையாளும் தந்திரம்..., அவளோட பலவீனத்தில் அடிப்பது. அதைத்தான் இப்போ நான் செய்தேன். எங்கே..., இப்போ மோது பார்ப்போம்...” அவளைத் தீண்டிய தாக்கம் கொஞ்சம் கூட இன்றி, இரும்பாக நின்றான்.

முகம் பாறைபோல் இருக்க, இப்பொழுது அவள் கண்ணுக்கு ஆசானாகத் தெரிந்தான். ஆனாலும், ஒரு பெண்ணான அவளால் அவன் கொடுத்த அழுத்தத்தை சாதாரணமாக கடந்துவிட முடியவில்லை.

அவள் தேங்கி, தயங்கி நிற்க, “செய்யப்போறியா இல்லையா...? இன்னைக்கு வரைக்கும் நீ அந்த கராத்தே கிளாஸில் என்ன படிச்சன்னு எனக்குத் தெரியணும்..., ம்..., வா..., ஒரு பொண்ணுக்கு அடிப்படை மன தைரியம் கொடுக்காமல் என்ன மண்ணாங்கட்டி கிளாஸ் எடுக்கறான். வா...” ஒரு முடிவோடு நின்றான்.

அவன் பேச்சில் சினந்தவள், அடுத்த நிமிடம் அவனைத் தாக்க முயல, அவளது அட்டாக் அனைத்தையும் தூசிபோல் தட்டிக் கொண்டிருந்தான் பிரம்மா. நின்ற இடத்தில் இருந்து ஒரு இன்ச் கூட அவன் நகரவே இல்லை. அதை அவளும் கவனித்தாள்.

கத்துக்குட்டியான அவளுக்கு ஐந்து நிமிடங்களுக்கு மேல் அவனோடு போராட முடியவில்லை. புசுபுசுவென மூச்சுவாங்க அவள் நின்றுவிட, ‘இவ்வளவுதானா உன் கராத்தே...’ என்பதுபோல் பார்த்திருந்தான்.

அவளால் அவன் முகத்தை பார்க்கவே முடியவில்லை. அவனோடு சண்டையிட்டு தோற்றிருந்தால் கூட பரவாயில்லை. ஆனால், அவன் அவளது தாக்குதல்களை தடுத்தானே தவிர, ஒரு சிறு எதிர்வினை கூட

செய்யவில்லை. அப்படி செய்திருந்தால், ஒற்றை அடியில் தான் வீழ்ந்திருப்போம் என்பது புரிய அவமானமாக உணர்ந்தாள்.

அவனைவிட்டு விலகியவள்..., அங்கே இருந்த தண்ணீர் பாட்டிலைப் பார்க்க, வேகமாக அதை எடுத்து குடிக்கப் போனாள். அப்பொழுதுதான் சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டவன், அவள் செய்கையை வேகமாக தடுத்தான்.

“வியர்வை ஆறின பிறகுதான் தண்ணி குடிக்கணும். உடனே குடிக்கக் கூடாது...” உரைத்தவன், “தாகம் அடங்கணும்னா...” கேட்டவன், தன் சுவிங்கத்தை அவளுக்கு இடம்மாற்ற, அவனை வேகமாக தள்ளி விட்டாள்.

“என்ன மனுஷன் நீங்க...? எனக்குத் தெரியும்..., எல்லாம் இதுக்குத்தானே...” தன் வாயில் இருந்த சுவிங்கத்தை தரையில் துப்ப, அவள் தன் முகத்திலேயே அதை துப்பிய உணர்வில் ஸ்தம்பித்து போனான்.

“ஏய்..., என்னடி சொன்ன...? எல்லாம் இதுக்குத்தான்னா...? அப்படி நான் நினைத்திருந்தால் இந்த இரண்டு மாதத்தில் உன்னைத் தொட எனக்கு எவ்வளவு நேரம் ஆகி இருக்கும்? உன் உணர்வுகளை மதிக்கணும் என்பதால்தான் விலகி இருக்கிறேன், அது உனக்கு தெரியவே இல்லல்ல...? உன்னைப்போல் மனசுக்குள் ஒண்ணை வச்சுட்டு வெளியே நடிக்கிறவன் நான் கிடையாது...” மேலே எதையோ சொல்லப் போனவன், வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டான்.

“இப்போ சொல்றேன் கேட்டுக்கோ, இனிமேல் நீயா என்னை கிஸ் பண்ணாத வரைக்கும், உன்னை நான் தொட மாட்டேன்...” அவளை விட்டு தூரமாக விலகியவன், “நாளைக்கு காலையில் இருந்து உனக்கு நான் கிளாஸ் எடுக்கறேன். காலையில் அஞ்சு மணிக்கு ரெடியா இரு...” உரைத்தவன் அங்கிருந்து வெளியேற, அப்படியே தரையில் அமர்ந்துவிட்டாள்.

அவன் சொல்லத் துவங்கி, சொல்லாமல் விட்ட விஷயம் இன்னதென்று புரிய, மனதுக்குள் நடுக்கம் பரவியது. ‘என் மனதுக்குள் நான் அவரை பொத்தி வைத்திருக்கும் விஷயம் அவருக்கு எப்படி தெரியும்?’ அவளால் மேலே சிந்திக்க முடியவில்லை.

இறுதியாக அவன் சொல்லிச் சென்ற விஷயம் வேறு நெஞ்சை அறுக்க, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள். ‘அவர் என் நல்லதுக்குத்தானே செய்தார். அவரை வீழ்த்த முடியாத என் கோபம், அவர் முன்னால் நேர்ந்த அவமானம், அதை இப்படி கொட்டி விட்டேனே. இதை எப்படி சரி செய்யப் போகிறேன்?’ அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்த நேரம் டோனி வந்து அவள் முகத்தை நாவால் நக்க, “நான் தப்பு பண்ணிட்டேன் டோனி…” அதனிடம் சொல்லி அழ, மீண்டுமாக அவள் முகத்தை நக்கியது.

கூடவே, ‘பவ்…, பவ்…’ என குரைத்து, அவள் சுடிதாரைப் பிடித்து இழுக்க, அது எங்கேயோ அழைப்பதை உணர்ந்து அதன் கூடவே சென்றாள்.

கிச்சனுக்குள் டோனி நுழைய, அங்கே சென்றவளுக்கு, பிரம்மா சப்பாத்தி போட்டுக் கொண்டிருக்கும் காட்சியே காணக் கிடைத்தது. ‘நான் செய்கிறேன்…’ அவனிடம் சொல்ல எண்ணினாலும், வார்த்தைகள் வெளிவரத் தடுமாறியது.

“அவுட்…” பிரம்மா போட்ட சத்தத்தில், அவள் வெலவெலத்துப் போக, டோனியோ, அவள் பின்னால் வந்து பதுங்கியது.

டோனி அவளை அழைத்து வந்ததற்கு காரணம் இதுதான்…, அதுக்கு சப்பாத்தி என்றால் மிகவும் பிடிக்கும். அவன் அதை செய்வதைப் பார்த்து அவனிடம் கேட்க, அவன் இருந்த மூடில் அதை துரத்திவிட்டான். அவளை அழைத்து வந்தால், தனக்கு எடுத்துக் கொடுப்பாளோ என எண்ணியே அவளை அழைத்து வந்தது.

முன்புக்கு மாறாக அவன் அதிகமாக கத்தவே, அவள் பின்னால் வந்து ஒடுங்கியது. கூடவே, அவள் காலை வேறு சுரண்ட, அவளுக்கு பார்க்கவே பாவமாகப் போயிற்று.

“இருடா...” கீழே குனிந்து அதன் காதில் முனகியவள், பிரம்மா சப்பாத்தியை எடுத்துக்கொண்டு வெளியே வர, வேகமாக வாசலை விட்டு விலகி நின்றாள். அவனை நெருங்கவே முடியாத அளவுக்கு அவன் முகம் இறுகிக் கிடக்க, கையைப் பிசைந்தவாறு நின்றிருந்தாள்.

அவன் சாப்பாட்டு மேஜை முன்னால் சென்று அமர்ந்து உண்ணத் துவங்கவே, அவள் உள்ளே சென்று பார்க்க, அங்கே சப்பாத்தி இருக்கும் அறிகுறியே இல்லை. வழக்கமாக அவன் எதையாவது சமைத்தால், அவளுக்கு என்று வைக்காமல் போக மாட்டான்.

இன்று அவளுக்கும் இல்லாமல் போகவே, அவள் கண்கள் தாமாகவே கலங்கியது. ‘என்னை வெறுத்து விட்டாரா?’ அவளால் அந்த நினைப்பை கூட தாங்கிக்கொள்ள முடியவில்லை.

‘அவர்மேல் இவ்வளவு ஆசை, காதல் வைத்திருப்பவள், போய் பேச வேண்டியது தானே...’ மனசாட்சி குரல்கொடுக்க, அவளால் அதையும் செய்ய முடியவில்லை.

“பவ்..., பவ்...” டோனி தன் இருப்பை அவளுக்கு தெரிவிக்க, “டேய், அவர் எனக்கே எதுவும் வைக்கலை, இதில் நீ வேற..., ஜேம் இருக்கு சாப்பிடுறியா?” தன் கலக்கத்தை ஒதுக்கிவிட்டு அதனிடம் கேட்க, ‘அதை நீயே தின்னு...’ என்னும் விதமாக முகத்தை திருப்பிக் கொண்டது.

“உனக்கு ரொம்படா..., இரு, அவர் மிச்சம் வச்சால் தர்றேன். நான் சப்பாத்தி செய்தால் நீயே திங்க மாட்ட...” சின்னக் குரலில் உரைத்தவள், அப்படியே நின்றுவிட்டாள்.

அவளுக்கு அப்பொழுது இருக்கும் மனநிலையில் சாப்பாடு எல்லாம் உள்ளே இறங்காது. அதற்காக டோனியை பட்டினி போட முடியாதே. அதற்கு பிடிகிரி எடுத்து கொடுக்க,

அதுவோ, ‘எனக்கு சப்பாத்திதான் வேணும்’ என உண்ணாவிரதம் இருந்தது.

தன் உணவை முடித்த பிரம்மா, தட்டை கிச்சனில் வைக்க வந்தவன் அவளை கண்டுகொள்ளவே இல்லை. தட்டை அங்கே வைத்துவிட்டு மேலே செல்ல, வெளியே வந்து பார்க்க, அவளுக்காக இரண்டு சப்பாத்தி மேஜைமேல் இருப்பதைப் பார்த்தாள்.

அவ்வளவுதான்..., நின்றிருந்த கண்ணீர் உடைப்பெடுக்க, தன்மேல் அவ்வளவு கோபம் இருந்தபொழுதும் தன் பசியை உணரும் கணவன்மேல் காதல் பெருகியது.

டோனி சாப்பாட்டு மேஜைக்கருகில் சென்று, பின்னங்காலால் நின்று பிரம்மா வைத்துவிட்டுச் சென்றிருந்த சப்பாத்தியைப் ஆசையாக பார்க்கவே, தனக்கென ஒருவாய் உண்டவள், மீதியை டோனிக்குப் போட, அந்த நேரம் தண்ணீர் குடிக்க அங்கே வந்த பிரம்மா, அதை வெற்று பார்வை பார்த்தான்.

‘நான் வைத்த சப்பாத்தியை நாய்க்கு போடுறியா?’ ஒரு நொடி அவளைப் பார்த்தவன், விருட்டென அங்கிருந்து செல்ல, தன் தலையிலேயே கை வைத்துக் கொண்டாள்.

அவன் எண்ணியது இன்னதென்று அவளுக்குத் தெரியாதா என்ன? ‘ஹையோ, இருக்கும் பிரச்சனை போதாதுன்னு இது வேறா?’ அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வேகமாகச் சென்று அவனிடம் விளக்கம் சொல்ல முயல, அவனோ, காதில் இயர்போனை மாட்டிக் கொண்டு படுத்திருப்பதைப் பார்த்தவள், எதுவும் சொல்லாமல் தானும் படுத்துக் கொண்டாள்.

மறு நாள் முதல் காலை ஐந்து மணிக்கு எழுந்து அவளுக்கான கராத்தே வகுப்பை எடுக்கத் துவங்கிவிட்டான். “இப்படி அட்டாக் பண்ணு. இப்படி வந்தால் இந்த மாதிரி தடு..., கைக்கு இன்னும் போர்ஸ்

அதிகமாக்கு..., இது போதாது...” அவன் பேச்சுக்கள் அனைத்தும் இந்த அளவில்தான் இருந்தன.

சமையலுக்கு, மேல் வேலைக்கு என ஒரு வயதான பெண்மணியை கலைவாணி அனுப்பியிருக்க, மறுப்பு சொல்லாமல் சேர்த்துக் கொண்டான்.

அனைத்து வேலைகளையும் அவர் பார்த்துக் கொள்ள, கல்லூரிக்குச் செல்வது, தன் பாடங்களைப் படிப்பது, அவனோடு பயிற்சியில் ஈடுபடுவது, இவை மட்டுமே அவளது வேலையாகிப் போனது. அவனது யூனிபாம் அனைத்தும், வழக்கமான லாண்டரிக்குச் செல்ல, அவன் உடைகளைப் பற்றிய கவனிப்பும் அவளுக்கு இல்லாமல் போனது.

அவன் கேட்டுக்கொண்டவாறு தினமும் அவனது பர்சில் ஐநூறு ரூபாய் இருக்கிறதா என செக் செய்யும் வேலையை மட்டும் செவ்வனே செய்தாள். ஆனால் அவனோடு பேசாமல், அவனது சீண்டலை அனுபவிக்காமல், அவன் பார்வை கூட அவள் பக்கம் பாயாமல் இருக்க வெறுமையை உணரத் துவங்கினாள்.

சண்டையில் தோற்றால் தண்டனை தருவேன் என அவன் சொன்னதெல்லாம் பழங்கதை ஆனது. கடைக்குச் செல்கையில் அவனுக்காக என காயத்ரி தேடி வாங்கும் சுவிங்க டப்பாக்கள் அவள் கைப்பையை நிறைக்கத் துவங்கி இருந்தது.

அவற்றில் சிலவற்றை அவள் சுவைக்கையில், பிரம்மா கொடுக்கும் சுவிங்கத்தின் சுவை அதில் இல்லை என அவள் மனமும், நாவும் உரைக்கையில் கண்களில் கண்ணீர் தேங்கும். அந்த உணர்வை அவளால் இன்னதென்று வரையறுக்க முடியவில்லை.

மூன்று வேளையும் நல்ல சாப்பாடு சாப்பிட்டாலும், நாளுக்கு நாள் அவள் உடல் தேய, “வீட்டில் எஸ்பி சாரோட பிரச்சனையா காயத்ரி?” ஒருநாள் இந்திரா கேட்டே விட்டாள்.

அவள் கேட்கவே காத்திருந்தவள்போல், அவள் தோள் சாய்ந்து கதறித் தீர்த்துவிட்டாள். “அவர் என்னோட பேசவே மாட்டேங்கறார். எனக்கு என்ன செய்யன்னே தெரியலை…” அழுகையினூடே அவள் புலம்ப, திகைத்துப் போனாள்.

“காயத்ரி, நான் ஒண்ணு கேட்டால் தப்பா நினைக்காதே. உங்களுக்கு நடுவில் எல்லாம் சரியா இருக்கு தானே…?” அவள் கேட்க, அவளை விட்டு விலகியவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

அவளது அழுகையும் மறுப்பான தலையசைப்பும் இந்திராவை திகைக்க வைக்க, “என்னடி சொல்ற? நீ அண்ணா ஆட்டுகுட்டின்னு எதையாவது உளறி வச்சுட்டியா? அதான் எஸ்பிசார் பேசலையா?” அவளைப் பிடித்து உலுக்கினாள்.

அதற்கும் அவள் தலை அசைக்க, “இப்படி மாடு மாதிரி மண்டையை ஆட்டுறதை விட்டுட்டு முதல்ல வாயைத் தொறந்து பதில் சொல்லு…”.

அவள் கேட்டுக் கொண்டிருக்க, அங்கே வந்தான் ரசல். அவர்கள் இருவரும் அமர்ந்திருந்தது கல்லூரி வளாகம் என்பதால், காயத்ரி அழுவதைப் பார்த்துவிட்டு அங்கே வந்தான்.

“இந்திரா…, காயத்ரி ஏன் அழறா? அந்த எஸ்பி ஏதாவது டார்ச்சர் பண்றாரா?” அவன் கோபமாக படபடக்க, தன் கணவனைப் பற்றி பேசவே, கோபமாக இருக்கையில் இருந்து எழுந்த காயத்ரி, “என் விஷயத்தில் தலையிடாதேன்னு நான் உன்கிட்டே பலமுறை சொல்லிட்டேன் ரசல். இனிமேல் என் புருஷனை பத்தி தப்பா பேசுறதா இருந்தால், உன் கூட பேசுறதை நான் இத்தோட நிறுத்திக்கறேன்.

“இந்திரா வாடி போகலாம்…” கிட்டத்தட்ட அவனிடம் கத்தியவள், அங்கே இருந்த ஒன்றிரண்டுபேர் பார்ப்பதையும் கண்டுகொள்ளாமல் விடுவிடுவென நடந்துவிட்டாள். அவள் செல்லவே, “உனக்கு ஏன் இந்த

தேவையில்லாத வேலை...” அவனிடம் சாடிய இந்திரா, காயத்ரியின் பின்னால் ஓடினாள்.

“ஏய்..., அவன் கிடக்கான் கிராக்..., அவன் பேசுனதை எல்லாம் கண்டுக்காதே, ஹாஸ்டலுக்கு வா..., உன்னை கவனிக்க வேண்டி இருக்கு” தோழியை அழைத்துக் கொண்டு அறைக்கு விரைந்தாள்.

காயத்ரி தன் கைப்பையை கட்டிலில் வைக்க, சரியாக பூட்டப்படாத அதில் இருந்து சில சுவிங்க பாக்ஸ் கீழே விழ, “காயத்ரி..., உனக்கு லவ் சுத்தமா முத்திடுச்சு போல. எஸ்பிசார் சாப்பிடுற சுவிங்க பாக்ஸ் எல்லாம் தூக்கி ஹேண்ட்பேக்ல வச்சிருக்க...?” கேட்டவள், கீழே விழுந்த டப்பாக்களை எடுக்க, திகைத்துபோய் அவளைப் பார்த்தாள்.

“இந்து..., நீ என்ன சொல்ற...?” தடுமாறினாள்.

“அதான் எஸ்பிசாரையே கல்யாணம் பண்ணிகிட்டியே, இன்னும் ஏண்டி உன் லவ்வை என்கிட்டே மறைக்கிற?” அவள் கேட்க,

“உனக்கு எப்படி...?” அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

“எல்லாம் எனக்குத் தெரியும்டி. கூகிள்ல நீ தேடும் விஷயமும், யூ டியூபில் நீ பாக்கும் வீடியோவும் எனக்குத் தெரியாதுன்னு நினைக்கறியா? உன் மெயில் பாஸ்வேர்ட் எனக்குத் தெரியும்னு உனக்கு தெரியுமா இல்லையா?” அவள் அசால்ட்டாக வினவ,

“பக்கி..., என் பெர்சனல் எல்லாம் நீ எப்படி பாக்கலாம்...?” அவளிடம் பாய்ந்தாள்.

“ஒரு ரியல் ஹீரோவை நீ மட்டும்தான் கூகிள்ல தேடுவியா?” அவள் கண்ணாடிக்க,

“இந்து...” அதிர்ந்து போனாள். “அடச்சீ..., புத்தி போகுது பார்..., உன் மொபைல்ல எதேச்சையா எதையோ தேடப் போனா..., நீ தேடின எல்லாத்தையும் லிஸ்ட் போட்டு

காட்டுது. அதுக்கு நான் பொறுப்பாக முடியாது…” உரைத்தவள்,

“எனக்கு எல்லாம் தெரியும் காயத்ரி. எஸ்பி சார் மேலே ஒரு கிரேஸ் இருக்குன்னு எனக்கத் தெரியும். உன் அண்ணாவோட கேஸ் வந்தப்போதான், நீ அவரை லவ் பண்றன்னு நான் கன்பாம் பண்ணேன்” அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“அப்போ எப்படி…?” அவள் புரியாமல் கேட்க,

“நீ எப்போ அழுதாலும் மறக்காமல் சொல்ற ஒரே விஷயம்…, ‘அவர் இப்படி பண்ணுவார்ன்னு நான் எதிர்பாக்கவே இல்லை. அவரை நான் எப்படி நினைச்சிருந்தேன் தெரியுமா?’ அதை நீ சொல்றப்போ அதில் இருந்த வலி…,

“உன் இடத்தில் நான் இருந்திருந்தால் எனக்கும் வலிச்சிருக்கும். ஆனா, இப்படி ஒரு வார்த்தை என் வாயில் இருந்து வந்திருக்காது. அப்போதான் நினைச்சேன், உனக்கு அவர்மேலே இருப்பது காதல்ன்னு. அதான், அவர்மேல் உனக்கு அவ்வளவு கோபம் இருந்தப்போ கூட, அவரை கல்யாணம் பண்ணிக்கோன்னு சொன்னேன்.

“வாழ்க்கையில் சில விஷயங்களை நாம கேள்வி கேக்கவே முடியாது காயத்ரி. இப்படி நடக்கணும் என்பது விதி. அது நடந்துடுச்சு. அதையே நினச்சுட்டு இருக்காமல் வாழ்க்கையை வாழப்பார் நான் அதைத்தான் சொல்வேன்.

“உன் அண்ணனோட கடந்தகாலத்தை தேடுற நீதான், இப்போ எஸ்பி சார் உன்கிட்டே பேசலைன்னு அழற. உங்க அண்ணா பாஸ்ட்…, எஸ்பி சார் பிரசன்ட், பாஸ்டை நினைச்சு, பிரசன்டையும், பியூச்சரையும் தொலச்சுடாதே.

“எல்லாத்தையும் மறந்துட்டு உன் வாழ்க்கையை வாழப்பார். ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்றேன். நீ இந்த நாலு வருஷத்தில் எப்போல்லாம் இங்கே ஹாஸ்டல்ல இல்லையோ, அப்போல்லாம் உன் அண்ணாவோட நடமாட்டம் இங்கே அதிகம் இருந்தது. அதுவும் அந்த சாந்தி

கூட நானே அவரை அடிக்கடி பார்த்திருக்கேன்...” அவள் சொல்ல, நம்ப முடியாமல் அவளை ஏறிட்டாள்.

“எனக்குத் தெரியும் நீ நம்ப மாட்டன்னு, அதான் இவ்வளவு நாள் சொல்லை. இப்போ சொல்லாமல் இருப்பது தப்புன்னு தோணிச்சு. இன்னொரு விஷயம், நெக்ஸ்ட் மந்த் எனக்கு மேரேஜ்..., கண்டிப்பா நீ வரணும். வீட்டுக்கு வந்து பத்திரிகை வைக்கறேன்...” அவள் சொல்ல, அனைத்தும் பின்னால் போக, தோழியின் திருமணம் முன்னால் நின்றது.

பிரம்மா, கல்ப்பனாவின் கேஸ் பின்னால் ஓடத் துவங்கினான். எந்த பக்கம் போனாலும் பெரும் தடையை உணர, ஒரு பெரும் திருப்பமாக, அவனது கையில் இருந்த பெயர் எழுதாத அந்த நோட்டு புத்தகத்துக்கு சொந்தக்காரியை கண்டு பிடித்து விட்டான்.

ஸ்டேஷனில், “யாழினி, இன்னைக்கு அந்த பொண்ணு சித்ரா வீட்டுக்கு போகணும், கந்தனை வண்டியை எடுக்கச் சொல்லுங்க...” அவன் சொல்ல, அவள் சற்று தேங்கவே, கேள்வியாக அவனை ஏறிட்டான்.

‘என்ன...?’ அவன் பார்வை அவளிடம் கேட்க,

“சார், இதை சொல்லவா வேண்டாமான்னு தெரியலை. கொஞ்ச நாளா, நீங்க முன்னை விட ரொம்ப டென்ஷனா இருக்கற மாதிரி இருக்கு அதான்...” அதைக் கேட்டு முடிக்கும் முன்பே, அவள் முகம் கலவர பூமியாக காட்சி அளித்தது.

கடந்த இரு வாரமாக அவளைத்தானே ஸ்டேஷனில் வாட்டி வதைக்கிறான். ‘அவனைப்போய் பார்த்தாயா? என்ன பதில் சொன்னான்? அந்த பில் எந்த கடையோடது என கண்டுபிடிக்க இத்தனை நாளா? கல்ப்பனாவின் கணவன் என்ன பதில் சொன்னான்? அவனிடம் பேசி, ஒரு தகவல் கூடவா கிடைக்கவில்லை...” அப்பப்பா..., அவள் இங்கே இருந்து ஓடிபோனால் பரவாயில்லை என எண்ணத் துவங்கி விட்டாள்.

“உங்களை வேலை பார்க்கச் சொன்னால் நான் டென்ஷனா இருக்கறேனா?” அவன் அதற்கும் எரிந்து விழ, அவ்வளவுதான் அரண்டே போனாள்.

“நாம கிளம்பலாம் சார்...” அவள் பின்னடைய, மானசீகமாக தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். அவனுக்கும் தெரிகிறதுதான்..., தான் வழக்கத்தை விட டென்ஷனாவதும் புரிகிறதுதான். அதை எப்படி கட்டுப்படுத்தவென்று அவனுக்கே தெரியாமல் போக, அவன் என்ன செய்வான்?

தன் குழப்பங்களை ஒதுக்கியவன், யாழினியோடு கிளம்பி சித்ராவின் வீட்டுக்குச் சென்று அந்த நோட்டு புத்தகம் பற்றி விசாரிக்க, “சார், கல்பனாவுக்கு சமையல், கோலம் இதில் எல்லாம் ரொம்ப இன்ரெஸ்ட், ஆப்டர் மேரேஜ் என் வீட்டுக்கு வந்தவ, இதையெல்லாம் பாத்துட்டு, எழுதிட்டு தரேன்னு வாங்கிட்டு போனா”.

“அவளோட கேரக்டர் எப்படி? எல்லாரோடவும் எப்படி பழகுவாங்க? அவளோட ப்ரண்ட்ஸ் யாரெல்லாம்...” அவன் விசாரணையைத் துவங்க,

“என்னை விட அவளுக்கு மிதுனா தான் ரொம்ப ப்ரண்ட். அவங்கதான் எப்போ பார்த்தாலும் சேர்ந்தே இருப்பாங்க. என்னோட வீடு அவ வீட்டு பக்கம் என்பதால் காலையிலேயும் சாயங்காலமும் என்னோட வருவா. உங்களுக்கு அதுக்கு மேலே வேற டீட்டெயில் வேணும்னா அவகிட்டே கேளுங்க”.

“அவங்க இப்போ எங்கே இருக்காங்க. அட்ரஸ்...?”.

“அவ இப்போ அமெரிக்காவில் அவளோட ஹஸ்பண்டோட இருக்கா. என்கிட்டே அவளோட ஸ்கைப் அட்ரஸ் இருக்கு, நீங்க நேரா பேசிப் பாருங்க. நானும் அவளுக்கு மெச்செஜ் அனுப்பறேன்...” அவள் சொல்ல, அவன் யாழினியைப் பார்க்க நன்றி சொல்லி அதை பெற்றுக் கொண்டாள்.

அன்று அவன் ஸ்டேஷனில் இருக்க, அம்பாள் ஆதரவற்ற பள்ளியில் இருந்து அதன் நிர்வாகி அவரைக் காண

வந்திருப்பதாகச் சொல்லவே, அவரை அழைத்து பேசினான்.

அவன் அறைக்குள் நுழைந்தவருக்கு கிட்டத்தட்ட எழுபது வயது இருக்கலாம். தன் உதவியாளரோடு உள்ளே வர, தன் எதிரில் இருந்த இருக்கையைக் காட்டினான்.

அவரே பேசட்டும் என அவரைப் பார்த்திருக்க, “தம்பி, உங்க விபத்துக்குப் பிறகு உங்களை வந்து பாக்கணும்னு நினைச்சுட்டே இருந்தேன். நடுவில் கொஞ்சம் உடல்நிலை சரியில்லை, அதான் வர முடியலை. இப்போ உடம்பு எப்படி இருக்கு?” நீண்டநாள் பழகியவர்போல் அவர் கேட்க, தன் நினைவைத் தூண்ட முயன்றவனாக அவர் முகம் பார்த்தான்.

“உங்களுக்கு இங்கே தேடி வரது பிடிக்காதுன்னு தெரியும். ஆனா..., இப்போ ஏன் வந்தேன்னா..., நம்ம இல்லத்தோட வெள்ளிவிழா ஆண்டு இது. ஒரு சின்ன விழாவுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கோம். நீங்க வந்து எங்க பிள்ளைங்களை பாத்தீங்கன்னா ரொம்ப சந்தோஷப்படுவேன்” உரைத்தவர் உதவியாளரிடம் கண்ணைக் காட்ட, ஒரு அழைப்பிதழை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

“அழைப்பிதழில் உங்க பேரை போட எனக்கு ஆசைதான்..., ஆனா உங்களுக்கு பிடிக்காதே..., அதான் செய்யலை. விழாவுக்கு வரலை என்றாலும், முந்தினநாள் நீங்க கண்டிப்பா வரணும். உங்க மனைவியையும் அழைச்சுட்டு வந்தால் ரொம்ப சந்தோஷப்படுவேன்...” அவன் பேச்சை அவர் எதிர்பார்த்ததாகவே இல்லை.

‘இந்த இல்லத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நான் இவர்களுக்கு என்ன செய்கிறேன்?’ அவனுக்கு எதுவும் புரியவில்லை.

“எல்லா வருஷமும் இந்த நாள் உங்களை அழைப்பேன்..., இதுவரை நீங்க வந்ததில்லை. அடுத்த வருஷம் நான் இருப்பேனோ இல்லையோ தெரியாது...”

“நான் கண்டிப்பா வர்றேன்...” அந்த முதியவரை இதற்குமேல் பேச வைக்க அவன் விரும்பவில்லை. அவர் ஒவ்வொரு வார்த்தையை பேசும் முன்பும் மூச்சிரைக்க, அவர் நிலையை அவனால் நன்கு உணர முடிந்தது.

அவன் வருகிறேன் எனச் சொல்லவே, அவரது மங்கிய கண்களில் சட்டென ஒரு பிரகாசம். “ரொம்ப சந்தோசம் தம்பி..., அப்போ நான் கிளம்பறேன்...” தட்டுத் தடுமாறி எழுந்து செல்ல, நிச்சயம் அங்கே போக வேண்டும் என குறித்துக் கொண்டான்.

வீட்டுக்கு வந்தவன், “செவ்வாய்கிழமை காலேஜுக்கு லீவ் போடு, ஒரு இடத்துக்குப் போகணும்...” அவளிடம் உரைக்க, தன்னிடம்தான் பேசினானா ஒரு நொடி குழம்பிப் போனாள்.

செவ்வாய்க்கிழமை காலையில், தன் யூனிபாம் தவிர்த்து, வெள்ளை நிற டிஷர்ட்டை அவன் அணிந்துகொள்ள, ‘எப்போ பாத்தாலும் ஒரே கலர்...’ அவளால் எண்ணத்தான் முடிந்தது.

‘எங்கே செல்கிறோம்...?’ கேட்க நினைத்தவள், அவனாக சொல்லாத பொழுது தானாக கேட்க முடியாமல் அமைதியானாள்.

அம்பாள் இல்லத்துக்குள் ஜீப் விரைய, அவனை கேள்வியாக நோக்க அவன் முகம் இரும்பாக இருப்பதைப் பார்த்தவளின் மனம் பெரும் கவலை கொண்டது. கிட்டத்தட்ட ஒரு மாதமாகி விட்டது, அவன் முகம் இயல்பாக இருந்து.

‘கொஞ்சம் இளகிவிட மாட்டானா?’ அவள் மனம் ஏக்கமாக எண்ணிக் கொண்டது. அவனது மனநிலையை மாற்ற, அவளுக்கு ஒரு நொடி கூட ஆகாது என்பது அவளுக்கே தெரியவில்லை.

அவன் ஜீப் நிற்கவே, வேகமாக வந்தான் அன்று அந்த முதியவரோடு பார்த்த அவன். “சார், நான் அரங்கன்..., ஐயாவுக்கு உதவியா இருக்கேன். ஐயா உங்களை கூட்டி

வரச் சொன்னங்க...” ஒரு கட்டிடம் இருக்கும் பக்கம் அவனை அழைக்க, உள்ளே சென்றவனுக்கு பெரும் ஆச்சரியம்.

ஒரு வயது நிரம்பாத குழந்தை துவங்கி, பதினைந்து வயதுவரை இருந்த சிறுவர் சிறுமியர் அனைவரது கரங்களிலும் ஒற்றை ரோஜா. கூடவே ஒரு மேஜைமேல் கேக் இருக்க, அவன் நுழைந்த அடுத்த நிமிடம், அனைவரும் ஒன்றாக பிறந்தநாள் வாழ்த்து உரைக்க, ‘இன்றைக்கு என் பிறந்த நாளா?’ எண்ணிக் கொண்டான்.

காயத்ரியின் முகமோ வாடிப் போனது. ‘பிறந்தநாள்ன்னு என்கிட்டே சொல்லவே இல்லையே...’ அவள் மனம் நினைக்க, கண்கள் கலங்கும்போல் இருந்தது.

அனைவரும் மலர் கொடுக்க, தள்ளாடி நடந்து வந்த ‘ஐயா’ அவனுக்கு மலர் செண்டை வழங்கி இருக்கையில் அமர வைத்தவர், “இவர்தான் நம் தென்மாநில எஸ்பி பிரம்மா அவர்கள். எல்லோருக்கும் இவரை எஸ்பியா தெரியும் என்றால், எனக்கு ஒரு கொடையாளியா இவரை நன்றாகத் தெரியும்.

“மாதம் தவறாமல் நம் இல்லத்துக்கு தேவையான அரிசியை வழங்கும் கொடையாளி இவர்தான். அதுவும் கடந்த பத்து வருடமா இதை செய்துட்டு வர்றார்...” அவர் மேலும் சொல்லிக்கொண்டே போக, அவனால் இருக்கையில் அமர முடியவில்லை.

ஒரு வழியாக அனைத்தும் முடிய, “எல்லா வருஷமும் இந்த நாள் மூணு வேளையும் சாப்பாடு போடுவது நீங்கதான். இன்னைக்கு ஒரு நாள் எங்களோட சாப்பிடணும்...” அவர் சொல்ல அவனால் மறுக்க முடியவில்லை.

சாப்பாட்டு ஹாலுக்குச் செல்ல, அங்கே இருந்தார் அவனது தாய். அவனைப் பார்த்த நிவேதா, “அண்ணா..., இன்னைக்கு நீங்க வந்தீங்களா? பத்து வருஷமா உங்களை இங்கே எதிர்பாத்துட்டே இருந்தோம்” உரைத்தவள்,

“ஹேப்பி பெர்த்டே அண்ணா..., நீங்க இங்கே வருவீங்கன்னு தெரியாது. தெரிந்திருந்தால் கிப்ட்

வாங்கிட்டு வந்திருப்பேன்...” உற்சாக பந்தாக துள்ளியவள், அவனை விட்டு அகலவே இல்லை. அதே நேரம் அங்கே வந்தாள் நிஷா.

“பிரம்மா...” அழைத்தவள் ஓடிவந்து அவன் கரத்தை பற்றிக் கொள்ள, திடுக்கிட்டாள் காயத்ரி.

“யாருண்ணா இவங்க...?” தான் நினைத்த கேள்வியையே நிவேதா கேட்க, செவிகளை கூர்மையாக்கினாள்.

“இவங்க..., நிஷா..., எனக்கு தெரிஞ்சவங்க...” உரைத்தவன், தூரமாய் நின்று தன்னைப் பார்க்கும் தாயைத்தான் ஓரவிழியால் கவனித்துக் கொண்டிருந்தான்.

‘இவங்க எங்கே இங்கே...? நிஜமாகவே இந்த உதவியை நான் செய்கிறேனா? இல்லையென்றால் என் பெயரால் இவர்கள் செய்கிறார்களா?’ அவன் சிந்தை அதுவாகத்தான் இருந்தது.

“பிரம்மா, நீங்க எங்கே இங்கே...? இதுக்கு முன்னாடி நான் உங்களை பார்த்ததே இல்லையே...” கேட்டவள் அப்பொழுதும் அவன் கரத்தை விடவே இல்லை. காயத்ரிக்கு உள்ளே எரிந்தது. தான் பற்றிக்கொள்ள வேண்டிய கரத்தை அவள் பற்றிக்கொண்டு நின்றால் அவள் மகிழவா செய்வாள்?

“நீயெங்கே இங்கே...?” அவன் அவளிடம் கேட்க,

“அவங்க இங்கே வாலண்டியரா இருக்காங்க. வாங்க சாப்பிடப் போலாம்” அங்கே வந்த அரங்கன் அழைக்க, அப்பொழுது பேச்சு தடை பட்டது.

“நிவேதா, நீ போ...” அவளை போகச் சொல்லவே, மனமே இன்றி அங்கிருந்து அகன்றாள். அவளை அனுப்பிவிடவே, “நானும் போகணுமா?” காயத்ரி வெடுக்கென கேட்க, சட்டென தன் இடப்பக்கம் இருந்தவளை திரும்பிப் பார்த்தவனது விழிகளில் முதல் முறையாக ஒரு இளக்கம்.

“பிரம்மா, இவங்கதான் உங்க மனைவியா? ஹாய்...” நிஷா தானாகவே அறிமுகமாகிக் கொள்ள, ‘உனக்கு

இப்பொழுதுதான் என்னைத் தெரிந்ததா?' என்னும் விதமாக அவளை வெறித்தாள்.

நிஷாவைப் பொறுத்த வரைக்கும், முதல் பார்வையில் யாரும் அவளை திருநங்கை என நம்பவே மாட்டார்கள். அப்படி இருக்கையில் காயத்ரியும் அதை உணர்ந்து கொள்ளாததில் ஆச்சரியம் இல்லை.

“நீயும் வா நிஷா...” அவன் அழைக்க,

“நீங்க உக்காருங்க..., நான் பரிமாறுறேன்...” அவள் சொல்ல, காயத்ரிக்கு உணவு உண்ணப் போகவே பிடிக்கவில்லை. இரண்டு எட்டு வைத்தவன் அப்பொழுதுதான் காயத்ரி அசையாமல் அங்கேயே இருப்பதைப் பார்த்துவிட்டு, “வா...” அழைத்தான்.

அவனுக்கு மேஜை போடப் பட்டிருக்க, அதைத் தவிர்த்துவிட்டு, குழந்தைகளோடு கீழே அமர்ந்து கொண்டான். நிஷா, நிவேதா, கலைவாணி என அனைவரும் பரிமாற, உணவை முடித்தார்கள். சற்று நேரம் ‘ஐயா’வோடு உரையாற்றியவன் கிளம்ப முயல, அங்கே வந்தாள் நிவேதா.

“அண்ணா., வீட்டுக்கு வாங்கண்ணா...” அவள் அழைக்க, என்ன சொல்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை. தன்னை நெருங்க பயந்து தூரமாக நிற்கும் கலைவாணியின் செய்கை வேறு அடிமனதை உலுக்க, நிவேதாவின் கள்ளமில்லாத பாசத்தை மறுக்கவும் மனமில்லை.

“பார்க்கலாம்மா..., போ...” தன்மையாகவே சொல்ல, “இன்னுமே உங்க கோபம் போகலையா?” அப்பாவியாக அவள் வினவ, பாசமாக அவள் தலை கோதினான்.

ஒரு அளவுக்குமேல் நிவேதாவால் எதுவும் சொல்ல முடியாமல் போகவே, தாயின் அருகே சென்றுவிட்டாள். அவன் ஜீப்புக்கு வர, அங்கே வேகமாக வந்தாள் நிஷா. அப்பொழுதுதான் சுவிங்கத்தை எடுத்து அவன் வாயில் போட, “பிரம்மா, கிளம்பிட்டீங்களா...?” அவனை

நெருங்கியவள், அவன் கையில் இருந்த சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

காயத்ரியின் நிலை சொல்ல முடியாத அளவுக்கு மோசமானது. என்னவோ தனக்குச் சொந்தமானதை அவள் எடுத்துக் கொண்ட உணர்வு. அவளை அப்படியே இழுத்து நாலு அறை விட்டால் என்ன என்று வந்தது. முயன்று தன்னை கட்டுப்படுத்தியவாறு நின்றாள்.

“பாய் நிஷா..., பார்க்கலாம்...” அவன் ஜீப்பில் ஏறிக் கொள்ள, காயத்ரியின் முகமோ கோபத்தால் சிவந்து விட்டது. அவன் ஜீப்பில் ஏறி அமர்ந்த பிறகு, அவனை அருகே இழுத்த நிஷா, கண்ணிமைக்கும் நேரத்தில் தன் இதழை அவன் கன்னத்தில் பதிக்க, காயத்ரி கொதித்துப் போனாள்.

எதையோ சொல்ல அவள் துவங்கப் போக, அவள் பக்கம் திரும்பாமலே, அவள் கரத்தை பிடித்து அழுத்தியவன், “நிஷா, பப்ளிக்...” சிறு கண்டிப்பாய் உரைத்தான்.

“அதனால்தான் நீங்க ஜீப்புக்குள்ளே ஏறின பிறகு கிஸ் பண்ணேன்..., டிஸ்கோ பிளேசா இருந்திருந்தால் இவ்வளவு நேரம் வேஸ்ட் பண்ணியிருக்க மாட்டேன்...” அவள் சாதாரணமாக சொல்லி தோளைக் குலுக்க, அதற்குமேல் அவளிடம் கண்டிப்பு காட்ட முடியவில்லை.

அவன் பிடித்த தன் கரத்தை வெடுக்கென உதறிய காயத்ரியின் கன்னத்தில் ஒரு துளி நீர் இறங்கியது. தனக்குரியவன், தனக்கு மட்டுமே உரியவன், அவனை தன் முன்னாலேயே ஒருத்தி தழுவி முத்தமிடும் காட்சி, ரசிக்கக் கூடியதா என்ன?

அவனது பிறந்தநாளை சொல்லவில்லை, சொந்த தங்கையிடம் பேசுவதை விட, வேறு எவளோ ஒருத்தியிடம் தன் முன்னாலேயே அவ்வளவு நெருக்கமாக பேசுவது, என அனைத்தும் சேர, மனம் ரணகளமாய் தவித்தது.

பிரம்மாவோ நீண்ட நாட்களுக்குப் பிறகு உற்சாக மனநிலையில் இருந்தான். காயத்ரியின் அந்த உரிமை

கோபம் அவ்வளவு பிடித்தது. அவள் முகத்தை திரும்பி பார்க்க, வெளியே வேடிக்கை பார்க்கும் சாக்கில் முகத்தை திருப்பிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ஜீப்பை வீட்டில் நிறுத்தியவன், உடை மாற்றிவிட்டு செல்ல வேண்டி வீட்டுக்குள் வர, அவன் டிஷர்ட் காலரை அழுத்தமாக பற்றி அருகே இழுத்து, அவன் கண்களை பார்த்து, “நீ எனக்கு மட்டும்தான் சொந்தம் புரியுதா?” சிறு அழுகையும், பெரும் உரிமையுமாகச் சொல்ல, தன் வாழ்நாளிலேயே பெரும் போதையை அனுபவித்தான் பிரம்மா.

*****

# பகுதி – 31.

காயத்ரியின் வாயில் இருந்து இப்படி ஒரு வார்த்தையை நிச்சயம் அவன் எதிர்பார்க்கவே இல்லை. அப்படியே வானத்தில் பறப்பது போன்ற பிரம்மை. அவளுக்கு உரியவனாக, உடமையானவனாக தன்னை நினைக்கிறாள் என்னும் எண்ணம் கொடுத்த உணர்வு..., அதை ஆழ்ந்து அனுபவித்தான்.

அவன் கண்கள் அவள்மேல் இருக்கும் மயக்கத்தை அப்பட்டமாக வெளிப்படுத்த, பெரும் கோபத்தில் இருந்தவள் அதை உணரவே இல்லை. அவனது மயக்கத்தை அறியாமல், “உனக்கு பிறந்தநாள்ன்னு ஏன் என்கிட்டே சொல்லலை? தெரியாதுன்னு பொய் சொல்லாதே..., அது தெரியாமலா என்னை இல்லத்துக்கு அழைச்சுட்டு போன?” தன் பிடியை அவள் விலக்கிக் கொள்ளவே இல்லை.

கேள்வியை கோபமாக கேட்டாலும் அவள் கண்களிலோ கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

“எனக்கு நிஜமாகவே தெரியாது. எனக்கு ஞாபகம் இல்லை. அத்தோட அன்னைக்கு கோயிலில் வச்சுதான் எனக்கு பிறந்தநாள்ன்னு அந்த அம்மா சொன்னாங்க. இப்போ இன்னைக்கு இவங்க பிறந்தநாள் கொண்டாடுறாங்க. அதே நேரம் அந்த அம்மாவும் அங்கே இருக்காங்க. என்ன நடக்குதுன்னு நானே குழம்பிப் போய் இருக்கேன்” அவன் சொன்னதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

உண்மையில் அவனது நட்சத்திரப் பிறந்தநாளை அன்று கோயிலிலும், அவனது சட்டிபிகேட் பிறந்தநாளை இன்று அந்த ஹோமிலும் கொண்டாடினார்கள் அதுதான் உண்மை. ஒரு ஊகமாக அதை பிரம்மா கண்டுபிடித்து விட்டாலும், இந்த நேரம் அதை அவளிடம் விளக்கிக் கொண்டிருக்க முடியவில்லை.

“யார் அவ...? எல்லாம் மறந்த பிறகும் அவளை மட்டும் மறக்கவே இல்லை போல? பப்ளிக்ல இழுத்து வச்சு கிஸ்

அடிக்கறா..., அப்படியே கன்னத்தை கட்டிட்டு இருக்க...? எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?” தன்னையும் மீறி, அவள் அடிமனக் காதல் பொங்கி வெளியேறிக் கொண்டிருந்தது.

அதை வெகுவாய் ரசித்தவன், “ஏய்..., அவ கிஸ் பண்ணதுக்கு நான் என்ன செய்ய? வேண்ணா நீயும் கிஸ் பண்ணிக்கோ..., நான் எதுவுமே சொல்ல மாட்டேன்” அவன் சரசமாக உரைக்க அப்படியே பொங்கிவிட்டாள்.

“என்னது..., அவ கிஸ் பண்ணுவா..., அதை நீயும் பேசாமல் வாங்கிட்டு இருப்ப, அதைக் கேட்டால்..., நானும் கிஸ் பண்ணணுமா...?” அவனை விலக்கியவள்,

“பெத்த அம்மாவைத் தெரியலை, அவங்க பாசம் புரியலை, தங்கச்சி அப்படி கெஞ்சுறா..., அவளோட வீட்டுக்கு போக மனசில்லை, இதில்..., ச்சே..., என்ன மனுஷன் நீங்க...? இதில் நொண்டி குதிரைக்கு வழுக்கியது சாக்குன்னு எனக்கு எல்லாம் மறந்துடுச்சுன்னு கதை வேற...” அவள் சொல்லிக்கொண்டே போக, அவன் முகம் இறுகத் துவங்கியது.

“நான் உனக்கு ஆயிரம் முறை சொல்லிட்டேன்..., என்னை திரும்ப சொல்ல வைக்காதே. என் பிறந்தநாள்ன்னு அப்போ தெரியாது..., இப்போ தெரிஞ்சுடுச்சு அப்போ கூட, ஒரு விஷ் பண்ணலை, ஒரு கிப்ட் கொடுக்கலை,

“பிச்சைக்காரன் மாதிரி கிஸ் கொடுன்னு வாயைத் தொறந்து கேட்டா, அதைக் கூட கண்டுக்காமல் அட்வைஸ் மட்டும் வாய் கிழிய பண்ணத் தெரியுது. ஆமா..., நான் இப்படித்தான்..., எனக்கு எந்த பீலிங், சென்டிமெண்ட் எதுவும் கிடையாது.

“இத்தனை வருஷம் அப்படித்தான் இருந்தேன்..., இனிமேலும் அப்படித்தான் இருப்பேன். உனக்கு என்னைப் பிடிக்கலன்னா இப்படியே போய்டு. உன்னை லவ் பண்றானே ரசல் அவனைப் போய் கல்யாணம் பண்ணிக்கோ.

“உனக்கு நான் இருக்குறது தடையா இருந்தால், அதான் என்னை கொல்லணும்னு நினைக்கறியே அதை செஞ்சுடு. இல்ல..., அதைச் செய்ய தைரியம் இல்லன்னா..., ஒரு நிமிஷம் இரு...” அங்கே இருந்த டிராயரில் இருந்து ஒரு வெள்ளை காகிதத்தை எடுத்தவன், அதன் அடியில் வேகமாக தன் கையொப்பம் இட்டான்.

“இதில் என்ன வேண்ணா எழுதிக்கோ..., மியூச்சுவல் டிவோஸ்க்கு நான் சம்மதிக்கறேன்னு வேண்ணா எழுதிக்கோ..., இந்த நிமிஷமே நீ இங்கே இருந்து வெளியே போறதா இருந்தாலும் நான் தடுக்கவே மாட்டேன். உலகத்திலேயே ரொம்ப கொடுமையான விஷயம் எதுன்னு தெரியுமா..., மத்தவங்க கிட்டே கையேந்தி நிக்கிறது...” கையில் இருந்த காகிதத்தை அவள் கரத்தில் திணிக்க, அதை கையில் வாங்க முடியாமல் உறைந்து போனாள்.

அவனோ..., கோபம் குறையாமல், “அதைவிட கொடுமையானது என்னன்னு தெரியுமா..., நாம கேட்டதை அவங்களால் கொடுக்க முடியும்னு தெரிஞ்சும், அதை அவங்க இல்லன்னு சொல்லி மறுக்கும்போது ஏற்படுற வலி இருக்கே..., அது அதைவிட கொடுமை.

“நான் செத்தா கூட உன்கிட்டே இந்த வார்த்தையை சொல்லக் கூடாதுன்னு நினைத்தேன். ஆனா, நீ சொல்ல வச்சுட்ட. உன்னால் என்னோட வாழ முடியாதுன்னு நீ பீல் பண்ணா..., தாராளமா இங்கே இருந்து போய்டு...” அவன் சொல்ல, முகத்தை மூடிக்கொண்டு அழத் துவங்கி விட்டாள்.

“ஐ'ம் கெட்டிங் மேட்..., என்ன யோசித்தாலும் இந்த மூளைக்குள் எதுவும் ஞாபகம் வர மாட்டேங்குது..., அதை நினைத்தால் ஒவ்வொரு நிமிஷமும் செத்துப் பிழைக்கறேன். ஒரு மனுஷன் எவ்வளவுதான் தாங்குவேன்? வெளியே போனா எவன் எந்த நிமிஷம் எந்த ரூபத்தில் வருவான்னு தெரியலை.

“முதல் முறையா ஞாபகம் வந்த ஒரு நினைவு கொஞ்சம் நிம்மதியைக் கொடுக்கும்னு நினைத்தால், அது அதைவிட மோசமா போயிட்டு இருக்கு. என்னைப் பற்றி எல்லோரும்

சொல்றதைப் பாத்தா..., எல்லாம் என் ஞாபகத்துக்கு வந்தால், உன்னை எப்படி ஹேண்டில் பண்ணுவேன்னே எனக்குத் தெரியலை.

“பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருக்கு. ஒரு நிமிஷம் நிம்மதியா இருந்தால், மறு நிமிஷம் அதையெல்லாம் உறிஞ்சு குடிக்கிற மாதிரி ஒவ்வொரு கேள்வி வேற..., ச்சே..., இருக்கும் நிலையில் எனக்கு பொறந்தநாள் எல்லாம் ஒருகேடு...” வேகமாக மாடியேறியவன், வேகமாக உடை மாற்றிவிட்டு வெளியேற, நொறுங்கிபோய் நின்றிருந்தாள்.

அவன் அள்ளி வீசிச் சென்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளை புழுவாய் துடிக்க வைத்தது. ரசல் அவளை விரும்புகிறான் எனச் சொன்னது ஒரு அதிர்வென்றால், அவன் கையொப்பம் இட்டு கொடுத்த காகிதம் தரையில் விழுந்து காற்றில் ஆடி உயிரை வதைத்தது.

‘அவரை விட்டு போவதா?’ அவளால் அதை நினைத்து பார்க்க கூட முடியவில்லை.

சில நாட்களுக்கு முன்பாக, இந்திராவின் மூலம் தன் அண்ணனைப் பற்றி அவள் அறிந்த விஷயங்கள், அவள் ஊரில் இல்லாதபொழுது அவள் ஹாஸ்டலில் காணாமல் போன சில மாணவிகளின் நிலைக்கும், தன் அண்ணனுக்கும் சம்பந்தம் இருக்குமோ? என்ற அவளது சந்தேகம்..., அதை அறிந்தது முதல், பிரம்மாவை தான் தவறாக எண்ணிவிட்டோமோ என கலங்கிப் போயிருந்தாள்.

அவன் தன்னோடு இணைய முயன்றால் தடுக்கக் கூடாது, அவனோடு வாழ்ந்துவிட வேண்டும் என அவள் முடிவெடுத்திருக்க, ‘உன்னால் என்னோடு வாழ முடியாவிட்டால் போய்விடு’ என அவன் சொன்னதைக் கேட்டு செத்து பிழைத்தாள்.

அவள் உயிரோடு இருக்கும் வரைக்கும் அவனை விட்டுச் செல்ல அவளால் முடியாது. அப்படியிருக்கையில் அவன் சொன்னதைக் கேட்டு அவளால் மகிழ முடியுமா என்ன?

பிரம்மா தன் ஸ்டேஷன் வர, அவனுக்காகவே காத்திருந்தாள் யாழினி. “சார், மிதுனா கால் பண்ணியிருந்தாங்க..., உங்ககிட்டே பேசணும்னு சொன்னாங்க” அவள் உரைக்க, தன் டென்ஷனை ஒதுக்கிவிட்டு அறைக்கு விரைந்தான்.

“நான் வந்த உடனே கால் பண்ணுவேன்னு சொன்னீங்களா? இல்லன்னா நைட் கால் பண்ண சொன்னாங்களா?” கேட்டவன் தன் இருக்கையில் அமர,

“இல்ல சார்..., நீங்க எப்போ வந்தாலும் கால் பண்ண சொன்னாங்க” அவள் உரைக்க, வேகமாக அவளுக்கு அழைத்தான்.

“வந்து நோட்ஸ் எடுங்க...” உரைத்தவன், திரையில் வரப்போகும் மிதுனாவுக்காக காத்திருந்தான்.

அவள் திரையில் தெரிய, “ஹலோ சார்...” அவள் உரைக்க, அதை ஒரு தலையசைப்பில் ஏற்றவன், “சித்ரா உங்ககிட்டே விஷயத்தை சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கறேன். சோ..., நான் நேரடியா விஷயத்துக்கு வர்றேன்..., கல்ப்பனாவை பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா?

“காலேஜ்ல அவங்க எப்படி? குறிப்பா நான் எதை கேக்கறேன்னா..., அவங்களை யாராவது விரும்பினாங்களா? இல்ல, அவங்க யாரையாவது விரும்பினாங்களா? அதைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? நீங்க சொன்னால் இந்த கேஸுக்கு ரொம்ப யூஸ்புல்லா இருக்கும்” அவன் சுவிங்கத்தை வாயில் போட்டுக் கொண்டு அவள் பதிலுக்காக காத்திருந்தான்.

சற்று நேரம் சிந்தித்த மிதுனா..., “காலேஜ்ல அவ யாரையும் விரும்பலை, ஆனா ரெண்டு முறை அவளை ஒரு பையனோட நான் ஒரு மால்ல பார்த்தேன். அவகிட்டே அதைபத்தி விசாரிச்சப்போ, அவளுக்கு தெரிஞ்சவன்னு மட்டும் சொன்னா.

“ஆனா நான் பாக்கும்போது அவங்க கொஞ்சம் நெருக்கமா நடந்துகிட்ட மாதிரி இருந்தது. ஒரு வேளை அது என்

பிரம்மையா கூட இருக்கலாம்” அவள் சொல்ல, பிரம்மா சிறு பரபரப்புக்கு உள்ளானான்.

“மிதுனா, நான் சில போட்டோக்களை அனுப்பறேன். நீங்க பார்த்தவன் அந்த போட்டோல இருந்தால், அந்த போட்டோவை மட்டும் எனக்கு அனுப்புங்க, மீதியை நான் பாத்துக்கறேன்…”.

“ஓகே சார்…” அவள் காத்திருக்கவே, கணினியில் இருந்த சில புகைப்படங்களை அவளது பார்வைக்கு அனுப்ப, அதில் இருந்த ஒரு புகைப்படத்தை பார்த்த யாழினி,

“சார்…, இது அந்த பால்காரன் போட்டோ…” அவள் சொல்ல, ஒற்றை கையசைப்பில் அவளைத் தடுத்தவன், “நீங்க பாத்துட்டு சொல்லுங்க…” மிதுனாவிடம் சொல்லிவிட்டு, அவளது பதிலுக்காக காத்திருக்கத் துவங்கினான்.

அவன் அனுப்பிய பத்து புகைப்படங்களில் இறுதியாக இருந்த புகைப்படத்தைப் பார்த்த மிதுனாவின் கண்கள் விரிய, அந்த புகைப்படத்தை இவனுக்கு அனுப்பியவள், “இவனைத்தான் அவளோட நான் பார்த்தேன் சார்…” அவள் சொல்ல, யாழினி திகைக்க, அவனோ, ‘இதைத்தான் எதிர்பார்த்தேன்…’ என்பதுபோல் மீசையை முறுக்கினான்.

“தேங்க்ஸ் மிதுனா. வேற ஏதாவது ஹெல்ப் வேணும்னா கேக்கறேன்…” கணினியை முடக்கியவன், யாழினியின் பக்கம் திரும்பினான்.

“சொல்லுங்க யாழினி…, இப்போ இந்த கேசில் குற்றவாளி யார்…?” அவளிடம் கேட்க, பதில் சொல்ல முடியாமல் நின்றிருந்தாள்.

“இதெப்படி சார்…? அவன் அன்னைக்கு காலையில்தான் வந்தேன்னு நம்மகிட்டே சொன்னானே…”.

“நம்மகிட்டே சொன்னதெல்லாம் உண்மையா இருக்கணும்னு அவசியமே இல்லையே” அவன் உரைக்க, இதை எப்படி எடுக்க என்று அவளுக்குத் தெரியவில்லை.

“இந்த கேஸ் முடியப் போகுது யாழினி. ரெண்டு நாளில் குற்றவாளியை ஒப்படைக்கிறோம்னு ஐஜி கிட்டே சொல்லிடுங்க..., அதுக்கு முன்னாடி, லிஸ்ட் ல இருக்கும் எல்லாரையும் அந்த மீட்க்கு வரச் சொல்லுங்க.

“அது மட்டும் இல்லை, அன்னைக்கு கல்ப்பனாவின் வீட்டில் அவங்க பாடியை பாத்தப்போ இருந்த மூணுபேரையும் சேர்த்தே வரச் சொல்லுங்க. இன்னொரு குற்றவாளி பெங்களூரில் இருந்து வர வேண்டி இருக்கு...” அவன் சொல்ல, அவன் யாரைச் சொல்கிறான் என அவளுக்கு புரிந்து போனது.

அடுத்த இரண்டு நாட்கள் அவன் வீட்டுக்கு செல்லாமல், கல்ப்பனாவின் கேசை முடிக்கும் முனைப்பில் இருக்க, வீட்டில் தவித்துக் கொண்டிருந்தாள் காயத்ரி. அவனுக்கோ, அவளைப் பற்றிய நினைப்பு கொஞ்சம் கூட இல்லை என்றே சொல்லலாம்.

அவனைப் பொறுத்த மட்டில், கல்பனாவின் விஷயத்தை முடித்துவிட்டு, அவனது தாயின் விஷயத்தை ஆராய வேண்டி இருந்தது.

அன்று பத்திரிகை அன்பர்கள், கல்பனாவின் கணவன், அவனது லிஸ்டில் இருந்த குற்றவாளிகள் என அனைவரும் ஆஜராகி இருக்க, அழைக்கப் பட்டவர்களின் முகங்களில் பெரும் ஆர்வமும், கலவரமும் போட்டி போட்டது.

பத்திரிகை அன்பர்கள் ஒருவருக்கு ஒருவர் கிசுகிசுக்க, அங்கே புயல்போல் நுழைந்தான் பிரம்மா. உயர் அதிகாரிகளுக்கு ஒரு விறைப்பான சலூட் வைத்தவன், தளர்ந்து தன் இருக்கையில் சென்று அமர, “பிரம்மா..., கல்பனா கேஸ், கொலையா தற்கொலையா? என்ற கேள்விக்கு இன்னைக்கு பதில் சொல்வதா சொல்லியிருக்கீங்க. பிளீஸ் புரொசீட்” ஐஜி உரைக்க தன் இருக்கையில் இருந்து எழுந்தான்.

“முதல்ல ஒரு விஷயம் சொல்லிக்கறேன். கல்பனாவின் மரணம், தற்கொலை இல்லை, கொலை...” அவன் சொல்ல,

பத்திரிக்கையாளர்கள் மத்தியில் பெரும் சலசலப்பு.

அங்கே இருந்து எழுந்த ஒருவன், “சார், கொஞ்ச நாளைக்கு முன்னாடி அது தற்கொலைன்னு நீங்கதான் சொன்னீங்க”.

“சில நேரம் குற்றவாளிகளை கண்டு பிடிக்க நாங்க சில வழிமுறைகளை கையாள்வது இயற்கை தானே…” உரைத்தவன்,

“முதல் கட்ட விசாரணையில் அது ஒரு தற்கொலை என்ற முடிவுக்குத்தான் வர முடிந்தது. ஆனால், கல்பனாவின் வயிற்றில் இருந்த விஷம்…, சிங்க்பாஸ்பேட்…, அதுவும் பத்து கிராம் என்பது ஒரு எலி விஷத்தால் சாத்தியமே இல்லாதது என்பது தெரிய வந்தது.

“அதாவது…, யாரோ ஒரு ஆள்…, வலுக்கட்டாயமாக அவ உடம்புக்குள் அந்த விஷத்தை அனுப்பியிருக்காங்க என்ற கோணத்தில் விசாரணை திரும்பியது.

“விசாரணையை நாங்கள் முடுக்கிய பிறகுதான், அவங்க வீட்டைச் சுற்றி, பன்னிரண்டு இன்ச் செருப்பு அடையாளம் உள்ள காலடித் தடங்கள் எங்களுக்கு கிடைத்தது. கூடவே, கல்பனா சாவதற்கு முன்னாடி, அவங்க வீட்டுக்கு பின் பக்கம், ஒரு பைக்கின் சத்தம் நடு ராத்திரி கேட்டதா அங்கே இருக்குறவங்க சொன்னாங்க.

“இதையெல்லாம் விட, கல்பனாவுக்கு திருமணத்துக்கு முன், ஒரு காதலன் இருந்தான், அவன் அவங்க வீட்டுக்கு வழக்கமா பால் போடும் குருவோட தம்பி, நரேஷ் என்பது தெரிந்தது. நரேஷ்…” அவன் அழைக்க, இருக்கையில் இருந்து அவன் எழுந்து நின்றான்.

எழுந்து நின்றவன், “சார்…, நான் அன்னைக்கு காலையில் நாலு மணிக்குதான் பெங்களூரில் இருந்து வந்தேன். நீங்க சொல்வதைப் பார்த்தால், நான் என்னவோ பஸ்ஸில் இருந்துட்டே கல்பனாவை கொன்ன மாதிரி சொல்றீங்க? என்கிட்டே பஸ் டிக்கெட் கூட இருக்கு பாக்கறீங்களா?” அவன் கேட்க,

“உங்ககிட்டே டிக்கெட் இருக்காதுன்னு நான் சொல்லவே இல்லையே…, ஆனா, ஒரு ஆளை உங்களுக்கு இன்ட்ரடியூஸ் பண்ணணும்னு நினைத்தேன். யாழினி…” அவன் உரைக்க, ஒரு நபரை அவர்கள் முன்னால் அழைத்து வர, நரேஷின் முகம் பேயறைந்தாற்போல் மாறியது.

ஆனாலும் அதை சம்மாளித்தவன், “இவனை எனக்கு தெரியவே தெரியாது” அவன் சாதிக்க,

“ஓ…, சரி உங்களுக்கு தெரியாதுன்னு சொல்லிட்டீங்க…, இங்கே இருக்க யாருக்காவது இவரைத் தெரியுதா?” அவன் கேட்க பார்வையாளர்கள் மத்தியில் பெரும் அமைதி.

“யாழினி…, அதை எடுத்துட்டு வாங்க…” அவன் உரைக்க, வேகமாக சென்று ஒரு ஹெல்மெட்டை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள். அதை நரேஷின் தலையில் மாட்டியவன், அதன் கண்ணாடியை மட்டும் மேலே ஏற்றிவிட்டு, “இப்போ யாருக்காவது அடையாளம் தெரியுதா?” கேட்க, பார்வையாளர்கள் மத்தியில் இருந்து மூவர் எழுந்து நின்றார்கள்.

“சொல்லுங்க…” அவன் உரைக்க,

“சார், அன்னைக்கு கல்பனாவின் பாடியை போஸ்ட்மார்டம் எடுத்துட்டு போக முன்னாடி, இவன் ஒரு ஸ்போட்ஸ் பைக்கில் வந்து ‘இங்கே என்ன இவ்வளவு கூட்டம், என்ன ஆச்சுன்னு எல்லாம் விசாரிச்சுட்டு போனான்”, அவர்கள் சொல்லவே, நரேஷ் தலை கவிழ்ந்தான்.

“உங்களுக்கு ஒரு விஷயம் மறந்துடுச்சு போல, நான் வேண்ணா ஞாபகப்படுத்தவா?” கேட்ட பிரம்மா அவனை குத்தும் விழிகளால் ஊடுருவ, வியர்த்து வழிந்தான் நரேஷ்.

“நீங்க சொன்ன அதே நாளில், நரேஷ் என்ற பெயரில் ட்ராவல் பண்ணினது உங்க ப்ரண்ட் கோபால்…, அதை அந்த பஸ்ஸில் ட்ராவல் பண்ண பேசஞ்சர், கண்டெக்டர் கன்பாம் பண்ணியிருக்காங்க, இதுக்கு என்ன சொல்றீங்க?” பிரம்மா நிதானமாக கேட்க, அவன் திணற, பார்வையாளர்கள் மத்தியில் ஒரு பெரும் ஆர்வம்.

“பூட்டியிருந்த ரூமுக்குள் நான் எப்படி போயிருப்பேன்? நான் என்ன காற்றா அவ ரூமுக்குள் ஜன்னல் வழியாக நுழைய? அதுவும் அவளோட ரூம் ஜன்னல் எல்லாம் கூட மூடித்தான் இருந்ததாக உங்க ரிப்போர்ட் சொல்லுது…” நரேஷ் தைரியமாகவே உரைத்தான். அவன் செய்த செய்கையின்மேல் அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை.

அவன் அவ்வாறு சொல்லவே…, “சார்…, ஒரு ரெண்டு நிமிஷம் நான் நரேஷ் கிட்டே தனியா பேசணும்…” பிரம்மா கேட்க, ஐஜி அதற்கு அனுமதி வழங்க, நரேஷின் அண்ணன் குரு எழுந்து கத்தினான்.

“அவனை அடித்து செய்யாத குற்றத்தை செய்தான்னு ஒத்துக்க வைக்கப் போறீங்களா? இதுக்கு நான் அனுமதிக்கவே மாட்டேன்…” அவன் கொந்தளிக்க,

“உன் தம்பி மேலே என் சுண்டுவிரல் நகம் கூட படாது போதுமா?” கேட்டவன், நரேஷின் தோள்மேல் கைபோட்டு அழைத்துக் கொண்டு அருகில் இருந்த அறைக்குச் செல்ல, அறைக்குள் இருந்த கேமரா உயிர்பெற்று இங்கே திரையில் விரியத் துவங்கியது. அனைவரின் கவனமும் அங்கே சென்றது.

அறைக்குள் நுழைந்த பிரம்மா, “சொல் நரேஷ்…, கல்பனாவை ஏன் கொன்ன?” அங்கே இருந்த மேஜைமேல் ஜம்ப் செய்து அமர்ந்தவன் அவனிடம் கேட்க, அவனது நிதானத்தைப் பார்த்து யாழினிக்கு பெரும் வியப்பாக இருந்தது.

‘என்ன மனுஷன்யா…’ அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

“நீங்கதானே போலீஸ், அதை நீங்களே கண்டு புடிங்க. அந்த விஷயத்தை நானே என் வாயால் சொல்லாமல் இந்த உலகத்தில் இருக்கும் யாராலும் அதை நான்தான் செய்தேன் என்று நிரூபிக்க முடியாது” வெளியே தங்களை பார்க்கிறார்கள் எனத் தெரியாமல் திமிராக பதில் கொடுத்தான்.

“ஒரு பொண்ணு உன்னை காதலித்துவிட்டு மற்ற ஒருவனை கல்யாணம் செய்ததுக்கு, ஒரு அப்பாவி பொண்ணுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?” அவன் வினவ,

“என்ன சொன்னீங்க…, அவ அப்பாவியா? மினிஸ்டர் பொண்டாட்டியா ஆகணும்னு, லவ் பண்ண என்னை கழட்டி விட்டுட்டு, அவங்க அப்பாதான் கட்டாய கல்யாணம் செய்து வைக்கறார்ன்னு என்கிட்டே நீலிக்கண்ணீர் விட்ட அவ அப்பாவியா?

“அவளை மறக்கவும் முடியாமல், வாழவும் முடியாமல் நான் தவிச்சுட்டு இருந்தா, இங்கே அவ, அவ புருஷனோட சந்தோஷமா இருக்கறா. அதுவும் என்னை பொய் சொல்லி ஏமாத்திட்டோம் என்ற குற்ற உணர்ச்சி அவளுக்கு கொஞ்சம் கூட இல்லை, அதான்…, அவளை கொலை செய்யவே முடிவெடுத்தேன்.

“ஆனா எப்படி செய்தேன்னு நீ இல்லை…, உன் அப்பனே வந்து கேட்டாலும் பதில் சொல்ல முடியாது போடா…” தெனாவெட்டாக உரைக்க, அங்கே இருந்த கந்தன் அவனை அடிக்கவே பாய்ந்து விட்டார்.

“கந்தன், கூல்…, அவன் பேசட்டும்…” பிரம்மா சுவிங்கத்தை மெல்ல, யாழினிக்கே பிபி எகிறியது.

பிரம்மா அவளிடம் கண்ணைக் காட்ட, “சார், இவன் இப்படி கேட்டால் பதில் சொல்ல மாட்டான். நம்ம கஸ்ட்டடியில் எடுத்து விசாரிப்போம்…” அவள் சொல்லவே,

“என்ன சொன்னீங்க…, உங்க கஸ்டடியா…, இப்போ பாருங்க…” உரைத்தவன், தானாகவே சென்று சுவற்றில் பலம் கொண்ட மட்டும் மோத, மண்டை உடைந்து ரத்தம் வழிந்தோடியது.

அவனது அந்த செய்கையை கந்தன், யாழினி எதிர்பாராமல் திகைக்க, பிரம்மாவின் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை.

அறைக்கதவை திறந்துகொண்டு வெளியே ஓடியவன், “அண்ணே..., அன்னை அடிச்சு குத்தத்தை ஒத்துக்க சொல்றாங்க...” போலியாக அவன் அழுது நடிக்க, அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான் குரு. கூடவே அங்கே இருந்த டிவி திரையை சுட்டிக் காட்ட, உயரழுத்த மின்சாரத்தை மிதித்த உணர்வில் திகைத்தான்.

அவர்கள் தனியாக பேசிய அறையில் பொருத்தப்பட்டிருந்த சிசி கேமரா வழியாக, அவன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கே இருந்த அனைவருமே கேட்டுவிட்டார்கள். அதை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த நேரம் வெளியே வந்த பிரம்மா..., “சார், குற்றத்தை அவன் வாயாலேயே ஒத்துகிட்டதை நீங்க எல்லாம் கேட்டிருப்பீங்க” நடுநாயகமாக நின்று உரைக்க,

“அதை நிரூபிக்க நீ இன்னொரு ஜென்மம் எடுக்கணும்...” கூச்சலிட்டான் நரேஷ்.

“அப்படியா..., இப்போவே நிரூபித்தால்...” கேட்டவன், யாழினியின் பக்கம் தன் கையை நீட்ட, ஒரு சாட்டை அவன் பக்கம் நீட்டினாள். அதை விரித்து நரேஷின் முகத்துக்கு நேராக விரிக்க, அதைப் பார்த்தவன், தகர்ந்துபோய் தரையில் அமர்ந்துவிட்டான்.

உலகத்தில் யாராலும் தான் செய்த தவறை நிரூபிக்க முடியாது என நினைத்தவன், அதை முறியடித்து பிரம்மா, பெரும் விஸ்பரூபமாகத் தெரிந்தான். அவனது புத்திசாலித்தனம், ஒரு நொடியில் தன் திட்டத்தை ஒற்றை பேப்பரில் விரித்ததை ஜீரணிக்க முடியவில்லை.

வீறுகொண்டு எழுந்தவன், அவனை அடிக்கப் பாய, “சார்...” யாழினி பதறி குரல் கொடுத்தாள். அந்த குரல் அவனைத் தீண்டும் முன்பே, தன்னை நோக்கிப் பாய்ந்தவனை, ஒற்றை அடியில் வீழ்ந்த்தியிருந்தான் பிரம்மா.

“அரஸ்ட் ஹிம்...” கமிஷனர் குரல்கொடுக்க, இரு காவலர்கள் வந்து நரேஷை பிடித்துக் கொண்டார்கள்.

“பிரம்மா..., அவன் இதை எப்படிச் செய்தான்? பிளீஸ் எக்ஸ்பிளேயின்” கமிஷனர் உரைக்க, கையில் இருந்த ரிமோட்டை இயக்கிய பிரம்மா, “இந்த கொலை வெல் பிளாண்ட் ஒன். இதை கொலைன்னு நாங்க முடிவுக்கு வந்தாலும், அதை எப்படி செய்தான்னு பெரிய குழப்பமே இருந்தது.

“அதற்கு எனக்கு உதவியது இந்த புள்ளிகள்தான்..., கல்பனாவின் படுக்கை முழுவதும் ஜூஸ் சிதறி இருந்தாலும், இந்த ஐந்து துளிகளும், அவள் படுக்கையில் இருந்த ஜன்னலை நோக்கி போவதை நீங்க பார்க்கலாம். ஆனா படுக்கையறை ஜன்னல் உள்ளே மூடி இருந்தது. அப்போதான் அங்கே இருந்த இரண்டு அடி வெண்டிலேட்டர் எங்க கவனத்துக்கு வந்தது.

“கொலையாளி எங்களை கன்பியூஸ் செய்ய பன்னிரண்டு இன்ச் செருப்பு வாங்கி, அவங்க வீட்டு பின் வாசல் வழியாக நிறைய நாள் நோட்டம் பார்த்திருக்கான். அதற்கான சந்தர்ப்பம் அன்னைக்கு கிடைக்கவே, தூக்க மாத்திரை உதவியால் தூங்கிட்டு இருந்த கல்பனாவின் அறைக்கு வெளியே ஜன்னல் சிலாப்பில் உக்காந்து வெண்டிலேட்டர் ஜன்னலை ரிமூவ் பண்ணான்.

“அதுக்குப் பிறகு, நாலு அடி நீள குழாயை அவளோட அறைக்குள் விட்டவன், அதில் ஒரு நூலையும், நுனியில் சின்ன இரும்பு துண்டையும் கட்டி அவள் வாய்க்கு நேராக கொண்டு வந்தவன், விஷத்தை பைப் வழியா அவள் வாயில் துளித்துளியா விட்டான்.

“ஏற்கனவே தூக்கத்தில் இருந்த கல்பனா, உறக்கத்திலேயே அது என்னன்னே தெரியாமல் விழுங்கத் துவங்கி இருக்காங்க. அடுத்த பத்தே செக்கென்ட், அவங்க துடித்து இறந்துட்டாங்க. அவன் பைப் எல்லாத்தையும் ரிமூவ் பண்ணிட்டு, வீட்டுக்கு பின்னாடி போய் எரிச்சுட்டு, நல்ல பிள்ளை மாதிரி மறுநாள் பால் கொடுக்க வந்தான்...,

“அங்கே இருந்த சூழலைப் பார்த்துட்டு, எதுவுமே தெரியாதவன் மாதிரி மத்தவங்களோட கலந்துகிட்டான்.

அவன் செய்கைமேல் அவனுக்கு இருந்த அசாத்திய நம்பிக்கையால் இங்கேயே சுத்திட்டு இருந்தான். பட் இப்போ..., நம்ம கஸ்டடியில் சிக்கிட்டான்...” அவன் முடித்துக் கொள்ள, அரங்கமே கைதட்டலால் நிறைந்தது.

உயரதிகாரிகள் அனைவரும் அவனுக்கு கை கொடுத்து தங்கள் வாழ்த்தை உரைக்க, ஒரு விரைப்பான மனநிலையோடு அனைத்தையும் ஏற்றான். பத்திரிக்கையாளர்கள் அனைவரும் அவனைச் சூழ்ந்துகொண்டு கேள்விகளால் துளைத்து, பாராட்ட, அதற்கும் ஒற்றை கையசைப்பும், தலையசைப்பும் மட்டுமே அவனது பதிலாக இருந்தது.

“அம்மா..., ஐயா சாதிச்சுட்டாருல்ல...” கந்தன் யாழினியிடம் கேட்க, “ரெண்டு நாள் தூங்காமல் உழைத்திருக்கார் கந்தன். ‘இதை எப்படி செய்திருப்பான்?’ன்னு தன்னையே கேட்டு, நூறு ஸ்கெட்ச் போட்டிருப்பார்.

“சாப்பாடு, தூக்கம் எதுவும் இல்லை..., ஒரு கேசுக்காக இவ்வளவு உழைப்பாங்களான்னு நானே ஆச்சரியப்பட்டேன். இப்படி உழைப்பதால்தான் அவர் பிரம்மா...” அவள் உரைக்க, கந்தனுக்கே சிலிர்த்தது.

பிரம்மாவுக்கோ, இரண்டு நாட்களாக மனதின் ஓரத்துக்குச் சென்றிருந்த காயத்ரியின் நினைவு மனதை ஆக்கிரமிக்கத் துவங்கியது.

தான் கேசை வெற்றிகரமாக முடித்த சந்தோசம் கொஞ்சமும் அவன் மனதை தொடவில்லை. மாறாக, ‘அவள் வீட்டில் இருப்பாளா? இல்லையென்றால் சென்றிருப்பாளா?’ அந்த வினா மட்டுமே அவனை ஆக்கிரமித்தது.

அனைத்து களேபாரமும் ஓய, அவனைத் தேடி வந்த கமிஷ்னர், “பிரம்மா, நாளைக்கு ஈவினிங் என் வீட்டில் ஒரு கெட்டுகதர் பார்ட்டி, பிளஸ் இந்த வெற்றியை நாம கொண்டாடுறோம். உங்க மனைவியோட நீங்க வந்துடுங்க” அவர் அழைப்புவிடுக்க, “sure சார்...” அவர் கரத்தை பிடித்து குலுக்கினான்.

அவன் வலக்கரத்தின்மேல் தன் இடக்கரம் வைத்தவர், “பிரம்மா, ஆர் யூ நாட் வெல்...” அவன் கரம் அவ்வளவு வெம்மையாக இருந்தது.

அதைக் கேட்டவாறே அங்கே வந்த யாழினி, “சார், அவர் தூங்கி, சாப்ட்டு ரெண்டு நாள் ஆச்சு...” உரைக்க, அவனை கண்டிப்பாய் ஏறிட்டார்.

“பிரம்மா, கேஸ் எவ்வளவு முக்கியமோ, அதைவிட நம்ம ஹெல்த் ரொம்ப முக்கியம். முதல்ல வீட்டுக்கு கிளம்புங்க..., கந்தன்..., முதல்ல இவரை வீட்டுக்கு அழைச்சுட்டு போங்க, நாளைக்கு ஈவினிங் வரைக்கும் நல்ல ரெஸ்ட் எடுத்துட்டு, பார்ட்டிக்கு பிரெஷ்ஷா வாங்க..., போங்க...” அவனை அனுப்ப முயன்றார்.

“ஐ வில் டேக் கேர் சார்...” அவரை அனுப்பினான்.

அவர் செல்லவே, “யாழினி, இந்த கேஸில் எனக்கு ரொம்ப சப்போர்ட்டா இருந்தீங்க. தேங்க்ஸ்...” அவள் கரத்தை குலுக்கியவன், “நீங்களும் ரெஸ்ட் எடுங்க..., போங்க..., கந்தன், நாளைக்கு சாயங்காலம் வீட்டுக்கு வந்தால் போதும், போங்க...” அவரையும் அனுப்ப முயல, தேங்கி நின்றவர் அவன் முகம் பார்த்தார்.

அவன் கண்களில் ஏறியிருந்த சிவப்பு அவனது களைப்பையும், உடல் வெப்பத்தையும் பறைசாற்ற, “சார், ஹாஸ்பிடல் போயிட்டு, உங்களை வீட்டில் விட்டுட்டு நான் கிளம்பறேன்...” போக மனமின்றி நின்றார்.

“நான் சொன்னதை செய்ங்க...” குரல் இறுக உரைக்க, அவனது பேச்சை அவரால் மீறவும் முடியவில்லை. பிரம்மாவுக்கோ, காயத்ரி வீட்டில் இல்லையென்றால் அவரிடம் என்ன சொல்வது எனத் தெரியாத குழப்பம். வீட்டுக்குச் சென்று அவள் இல்லாத வீட்டில் இருக்க முடியும் என்றே தோன்றவில்லை.

யாழினியும், கந்தனும் கிளம்ப, அங்கிருந்த இருக்கையில் சோர்ந்து அமர்ந்துவிட்டான். அவனது சோர்ந்த தோற்றம்

கந்தனின் மனதை வருத்த, வேகமாக காயத்ரிக்கு அழைத்தார்.

இரண்டு நாட்களாக அவனைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்தவள், கந்தனின் அழைப்பை உடனே ஏற்றாள். “அண்ணே..., அவர் எங்கே? ஏதாவது முக்கியமான கேஸா...?” கேஸ் இல்லாமல் அவன் இப்படி வீட்டுக்கே வராமல் இருக்க மாட்டான் என உறுதியாக நம்பினாள்.

“கேஸ்தாம்மா..., ஆனா முடிஞ்சுடுச்சு. இப்போ ஐயாவுக்கு உடம்பு சரியில்லை, ஆனா..., வீட்டுக்கு வராமல் இங்கேயே இருக்கார். எனக்கு என்ன செய்யன்னு தெரியலை...” அவர் தயங்குவது, பயப்படுவது அவளுக்குப் புரிந்தது.

“நீங்க போனை அவர்கிட்டே கொடுங்க...” அவள் சொல்ல, “அம்மா..., அது...?” அவனை நெருங்கவே பயப்பட்டு பதறினார்.

அவர் பயத்தைப் பார்த்து நொந்தவள், “அண்ணே..., எப்படியாவது அவரை வீட்டுக்காவது அழைச்சுட்டு வாங்க பிளீஸ்...” நிச்சயம் பதறிப் போனாள்.

“ஐயா என்னை போக சொல்லிட்டாரும்மா...” அவர் மென்று முழுங்கினார்.

“அண்ணே, அவரோடவே இருந்து வீட்டுக்கு அழைச்சுட்டு வர்றீங்க..., அவ்வளவுதான்...” அலைபேசியை வைத்து விட்டாள்.

‘ஐயாகிட்டே மிதி வாங்க வைக்காமல் விட மாட்டாங்க போல...’ மனதுக்குள் நொந்தவர், ஜீப்பில் ஏறி அமர்ந்திருந்து, பிரம்மாவின் வருகைக்காக காத்திருக்கத் துவங்கினார்.

பிரம்மாவுக்கோ அவ்வளவு நேரம் இருந்த உடல் உறுதி அனைத்தும் வடிந்து போக, இருக்கையை விட்டு எழவே முடியவில்லை. மனதுக்கும் உடலுக்கும் சம்பந்தம் உண்டு என அவன் புரிந்த நொடி அதுவாகத்தான் இருக்கும்.

அவனால் எழுந்து சென்று, ஜீப்பை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு செல்ல முடியும் என்றே தோன்றவில்லை. அங்கேயே இருக்கவும் முடியாமல் இருக்கையில் இருந்து எழுந்தவன், ஜீப்புக்குச் செல்ல, அங்கே இருந்த கந்தனைப் பார்த்து, கோபமும் நிம்மதியும் ஒருங்கே எழுந்தது.

‘நீங்க இன்னுமா போகலை…?’ பார்வையால் அவரிடம் கேட்க,

“சார், என் பைக் வீட்டில் நிக்கிது…, எப்படியும் நான் வீட்டுக்கு வந்துட்டுதான் போகணும், அதான்…” தன் காத்திருப்புக்கு அவர் காரணம் சொல்ல, அமைதியாக மறு பக்கம் ஏறி அமர்ந்தான்.

‘ஹாஸ்பிடல் போகலாமா…?’ என அவரால் கேட்க முடியவில்லை. எப்படியும் காயத்ரி ஏதாவது ஏற்பாடு செய்திருப்பாள் என நம்பினார்.

ஜீப் வீட்டுக்கு விரைய என்ன மனநிலையில் இருந்தான் என்று அவனால் கணிக்கவே முடியவில்லை. ‘வீட்டில் அவள் இருக்கணும்…’ அவன் மனம் அடித்துக் கொண்டது. அவள் முகம் காணாமல் இருக்க முடியும் என்றே தோன்றவில்லை.

ஜீப் வீட்டை நெருங்க நெருங்க, அந்த உணர்வு அதிகரித்ததே தவிர கொஞ்சமும் குறையவில்லை. ஜீப் போர்டிகோவில் சென்று நிற்க, “நான் கிளம்பறேன் சார்…” கந்தன் வாசலோடு கழண்டு கொண்டார்.

அவர் செல்லவே, தன் தொப்பியை கைகளில் அள்ளிக் கொண்டவன், வாசல் கதவில் கை வைக்க, அதற்கு முன்பாகவே கதவைத் திறந்த காயத்ரி, அவனை வரவேற்றாள்.

நம்ப முடியாத திகைப்பில் அவளை வெறித்தவன், தான் காண்பது கனவா? நனவா? எனத் தெரியாமல் குழம்பிப் போனான்.

*****

## பகுதி – 32.

தன் முன்னால் நிற்கும் பிம்பம் உண்மையா பொய்யா என பிரம்மாவால் உணர முடியவில்லை. உடலும் மனமும் தெளிவாக திடனாக இருந்திருந்தால் ஒரு நொடியில் உணர்ந்திருப்பான். ஆனால், உடல்நிலை சற்று படுத்தி எடுக்க அவனால் தெளிவாக எதையும் யோசிக்க முடியவில்லை.

அவனைப் பார்த்த காயத்ரி அதிர்ந்து போனாள். அவன் தோற்றத்தில் மாற்றம் இல்லை என்றாலும், அவன் கண்களில் வழிந்த சோர்வு, உடலில் தெரிந்த களைப்பு, அவளால் நொடியில் உணர்ந்துகொள்ள முடிந்தது. “பீமா…, ஏண்டா இப்படி இருக்க?” அவன் கை பிடித்து உலுக்க, அப்பொழுதுதான் அவனுக்கு சுய உணர்வே வந்தது.

“காயு…” நம்ப முடியாமல் அழைத்தவன், அவள் கரத்தை ஒரு நொடி அழுத்தமாக பற்றிக் கொண்டான். அதில் தெரிந்த நிம்மதி, சட்டென அவன் உடல் தளர்வதை அவளால் நன்கு உணர முடிந்தது. அந்த இறுக்கம் சொன்ன சேதி, அதில் இருந்த நேசம், அதை அவளால் தெளிவாக உணர முடிந்தது.

‘இவரை விட்டு நான் போவதா?’ எண்ணியவள், அவன் கை பிடித்து உள்ளே அழைக்க, உள்ளே வருகையில் சற்று தடுமாறிப் போனான்.

“பீமா பாத்து…” அவன் ஆறடி உயரத்துக்கும் அவன் தோற்றத்துக்கும் சட்டென அவளால் அவனை தாங்கிக் கொள்ள முடியாமல் தள்ளாடினாள்.

அவளது பீமா என்ற அழைப்பு அந்த நேரத்திலும் அவனை உயிர்பிக்க, அவள் முகத்தை வெறித்தான். ‘அவளுக்கு தன்மேல் வெறுப்பு இருக்கிறதா?’ எண்ணியவன் பார்வையால் அவளைத் தழுவினான்.

அவனைத் தாங்கியவாறே உள்ளே வந்தவள், அவனை அங்கே இருந்த சோபாவில் அமர வைத்தாள். “பொன்னமாக்கா…, அந்த குளுக்கோசை கொஞ்சம்

எடுத்துட்டு வாங்க...” கிட்டத்தட்ட அலறியவள், அவர் கொண்டு வரவே, டம்ப்ளரை வாங்கி வேகமாக அவன் வாயில் சரித்தாள்.

ஒரே மடக்கில் அதைக் குடித்தவனுக்கு அதன் பிறகுதான் சற்று தெம்பே வந்தது. “சாப்பிடாமல் கொள்ளாமல் அப்படி என்ன வேலை உங்களுக்கு?” அவனை கடிந்தவள், அவன் நெற்றியில் கை வைத்துப் பார்க்க, நெருப்பாய் சுட்டது. தன் அலைபேசியை எடுத்து அருகில் இருக்கும் மருத்துவரை அழைத்தாள்.

“டாக்டர், அவருக்கு ரொம்ப பீவரா இருக்கு..., கொஞ்சம் சீக்கிரம் வரீங்களா?” அவள் படபடக்க,

“நான் ஹாஸ்பிடல்ல இருந்து கிளம்பிட்டேன். இன்னும் அரைமணி நேரத்தில் அங்கே இருப்பேன்” அவர் உரைக்கவே அலைபேசியை வைத்தவள், சோர்வாய் கண் மூடியிருந்த அவனை நெருங்கினாள்.

“என்னங்க..., எந்திரிங்க..., ரூமுக்குப் போகலாம்...” அவள் அழைக்க,

“ரொம்ப டயடா இருக்கு காயு..., நான் இப்படியே படுத்துக்கறேன்” நிச்சயம் அவனால் எழுந்து செல்ல முடியும் என்றே தோன்றவில்லை.

அவளுக்கு அப்படியே உருகிப் போயிற்று. ‘எல்லாம் என்னால் தானே...’ கண்கள் கலங்க, அதை அடக்கியவள், மீண்டுமாக அவன் நெற்றியில் கை வைத்துப் பார்க்க, சூடு சற்றும் குறையாமல் இருக்க துடித்துப் போனாள்.

“பொன்னம்மாக்கா..., கஞ்சி ரெடியா...? நீங்க ஊத்தி வைங்க..., நான் இப்போ வர்றேன்...” குரல் கொடுத்தவள், “என்னங்க..., எந்திரிங்க...” அவன் புஜத்தில் கை கொடுத்து எழுப்ப முயன்றாள்.

அவள் முயற்சியைப் பார்த்து மெல்லியதாக சிரித்தவன், “என்னை தூக்கிடுவியா நீ...?” தன் முகத்துக்கு அருகில்

இருந்த அவள் முகம் பார்த்து கேட்க, அனல் தன் வரைக்கும் அடிப்பதைப் பார்த்து நொந்து போனாள்.

“உடம்பை பாக்காமல் அப்படியா வேலை பாப்பீங்க?” குரல் நடுங்க அவனிடம் கேட்க,

“யாருக்காக உடம்பை பாத்துக்கணும்…? நான் இருந்தாலும், இல்லன்னாலும்…” மேலே சொல்லப் போனவனை வாயில் கை வைத்து தடுத்தவள், “இப்படியெல்லாம் பேசாதீங்க, என்னால் அதை தாங்கிக்க முடியாது” உரைத்தவளுக்கு, அவன் நெஞ்சில் சாய்ந்துகொள்ள நெஞ்சம் தவித்தது.

அதை தவிர்த்தவள், அவன் உடல்நிலை நினைவுக்கு வர, “கொஞ்சம் ட்ரை பண்ணி எந்திரிங்க…, இங்கே ஹால்லயே இருக்க முடியாது. இப்போ டாக்டர் வந்துடுவார்…” அவனை சற்று அணைத்தாற்போல் எழுப்பினாள்.

அவள் தேகம் தன் மேனியில் உரசும் ஸ்பரிசத்தை ரசித்தவனாய், “நிஜமாவே எந்திரிக்க முடியலை காயு…, எப்படி அந்த கேசை முடிச்சேன்னே எனக்குத் தெரியலை. பாதியிலேயே விழுந்துடக் கூடாதேன்னு கண்ட்ரோல் பண்ணிட்டு நின்னுட்டு இருந்தேன்…” தன் களைப்பை சற்று ஒற்றி வைத்தவனாக சோபாவில் இருந்து எழ முயன்றான்.

அவன் கைகளும், தேகமும் சற்று நடுங்க, இறுக்கமாக அவனை அணைத்துக் கொண்டவள், “ஜஸ்ட் டென் ஸ்டெப் தான்…”, ஒரு குழந்தையை சமாதானப்படுத்தும் விதத்தில் அவள் உரைக்க, எழுந்து நின்றவன், ஒரு நொடி அவளையே அசையாமல் பார்த்தான்.

“என்ன…? நிக்க முடியலையா…?” அவனை தன் கைகளில் அள்ளிக்கொள்ள முடியவில்லையே என்ற தவிப்பில் அவள் வினவ, தான் எப்படி உணர்கிறோம் என்றே அவனுக்குத் தெரியவில்லை.

‘இவளையா அவ்வளவு காயப்படுத்துவிட்டு சென்றோம்?’ அவன் மனம் கேள்வி கேட்க, “சாரி காயு…, உன்னை ரொம்ப ஹெர்ட் பண்ணிட்டேன்ல?” அவன் வினவ, அவன் எதைச்

சொல்கிறான் என்று அவளுக்குப் புரிந்தாலும் போலியாக அவனை முறைத்தாள்.

“இப்போ எதுக்கு தேவையில்லாதது எல்லாம் பேசறீங்க...? வாங்க” அவனை அழைக்க, அவனோ அசையாமல் நின்றிருந்தான்.

அதைப் பார்த்தவள், “எல்லாத்திலும் பிடிவாதம்..., இப்போ என்ன..., உங்க பொண்டாட்டியை தானே திட்டுனீங்க, அதையெல்லாம் நான் பெருசா எடுத்துக்கலை போதுமா? முதல்ல வாங்க...” அவன் கரத்தை தன் தோளில் மாலையாக போட்டுக் கொண்டவள், அவனோடு கூட நடந்தாள். அவன் தேகத்தின் சூடு, யூனிபாமை மீறி தாக்க, அவளுக்கு பயம் பிடித்துக் கொண்டது.

அடிமேல் அடி வைத்து அறைக்குள் நுழைந்து அவனை படுக்கையில் விட, தன் சட்டையை கழட்ட முயன்றான். அவன் முயற்சியைப் பார்த்தவள், அவன் சட்டை பட்டனைக் கழட்டி அவன் சட்டையை அகற்றியவள், கீழே அமர்ந்து அவன் ஷூவை கழற்றத் துவங்கினாள்.

“காயு, நான் பாத்துக்கறேன் விடு...” அவனது மறுப்பை அவள் கண்டுகொள்ளவே இல்லை. களைப்பு மிகுதியால் அப்படியே படுக்கையில் விழ, அவன் சாக்ஸை அகற்றிவிட்டு, அவன் பேண்ட் பெல்ட்டை கழற்ற முயன்றாள்.

அது மிகவும் இறுக்கமாக இருக்கவே, ‘எப்படி கழற்ற’ என தடுமாறினாள்.

அவள் தடுமாற்றம் உணர்ந்தவன், தானாகவே பெல்ட்டை கழற்ற, “பேண்ட்டை மாத்திடறீங்களா? ரொம்ப இறுக்கமா இருக்கு...” அவள் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அவன் தடுமாறி எழுவது புரிய, “இல்ல வேண்டாம், நீங்க படுத்துக்கோங்க..., நான் பாத்துக்கறேன்...” அந்த நேரம் ஒரு குழந்தையை பராமரிக்கும் மனநிலையில்தான் அவள் இருந்தாள்.

அவனது சாட்ஸை எடுத்து வந்தவள், அவனது பேண்ட்டை மாற்றிவிட்டு அதை அணிவிக்க, பிரம்மாவின் கடைவிழியோரம் ஒரு துளி நீர் உருண்டது. ஒரு ஆண், தன் மனைவிக்கு பணிவிடை செய்கையில் நிச்சயம் அதில் துளி தடுமாற்றமாவது கலந்துவிடும்.

ஆனால், தன்னவள் தன்னை குழந்தைபோல் தாங்க, தன் கோபத்தை அவள்மேல் கொட்டுவதை எண்ணி வருந்தினான். அவனை மீறி துளி நீர் வழிந்துவிட, அதைப் பார்த்து பதறியவள், “ரொம்ப முடியலையா...? டாக்டர் இப்போ வந்துடுவார்..., ஒரு அஞ்சே நிமிஷம்...” அவன் கண்ணீரை துடைத்தவள் கேட்க, அவள் கரத்தை பற்றிக் கொண்டான்.

“உன்னோட இந்த அக்கறைக்கு நான் தகுதியே இல்லாதவன்...” அந்த நிலையிலும் உரைக்க, அவளுக்கு அழுகைதான் வந்தது.

“இப்படியெல்லாம் பேசாதீங்கன்னு இப்போதானே சொன்னேன்..., ஒரு நிமிஷம்..., இருங்க இப்போ வந்துடறேன்...” உரைத்தவள், கிச்சனுக்குச் சென்று ஒரு பாத்திரத்தில் நீரும், ஒரு வெள்ளைத் துணியும் கொண்டு வந்து, அவன் நெற்றியில் துணியைப் பிழிந்து வைத்தவள், பொன்னம்மா கொண்டுவந்த கஞ்சியை வாங்கி, ஸ்பூனில் புகட்ட, அதை புறங்கையால் தள்ளி விட்டான்.

“கொஞ்சம் குடிங்க..., தெம்பு வேண்டாமா...?” அவனை கண்டிக்க, “ஒரு மாதிரி வியித்தை புரட்டுது...” வாய்க்கசப்பில் கஞ்சியை அவனால் குடிக்க முடியவில்லை.

“அப்படித்தான் இருக்கும்..., இன்னும் ரெண்டு வாய் குடிங்க...” அவன் தலை தாங்கியவள், அனைத்தையும் அவன் குடித்து முடிக்கும் வரைக்கும் விடவில்லை.

அதே நேரம் மருத்துவர் வர, பொன்னம்மா அவரை அழைத்து வந்தாள். “என்ன பிரம்மா..., உடம்பை பாக்காமல் உழைக்கறீங்க போல...?” கேட்டவர், அவனை பரிசோதித்து விட்டு, “பீவர் கொஞ்சம் ஜாஸ்திதான்...” சொன்னவர், ஒரு

ஊசியை அவன் புஜத்தில் இறக்கிவிட்டு, “லைட்டா அவருக்கு சாப்பிட கொடுத்துட்டு, இந்த மாத்திரையை கொடுங்க. நல்லா ரெஸ்ட் எடுத்தாலே சரியாயிடும்...” உரைத்துவிட்டு சென்றுவிட்டார்.

அவனுக்கு மாத்திரையை கொடுத்தவள், “கொஞ்ச நேரம் தூங்குங்க...” உரைத்துவிட்டு, தான் அங்கே இருந்தால் அவன் நிம்மதியாக தூங்க மாட்டான் என்பது புரிய அங்கிருந்து செல்ல முயன்றாள்.

சட்டென அவள் கரத்தைப் பிடித்து தடுத்தவன், “காயு, இங்கேயே உக்காந்துக்கறியா? நீ இங்கே இல்லன்னா, எல்லாம் கனவு மாதிரி இருக்கும்..., நிம்மதியா தூங்க முடியாது. ரெண்டு நாளா, வேலையில் இருந்தாலும், நீ வீட்டை விட்டு போயிருப்பியோன்னு ரொம்ப யோசனையாவே இருந்தது...” களைப்பா, இல்லையென்றால் மனதின் பலவீனமா? மருந்தின் வேலையா...? இன்னதென்று தெரியாமல், மனதில் இருப்பதை அவன் உரைக்க, அப்படியே அவன் அருகில் அமர்ந்துவிட்டாள்.

“நான் உங்களை விட்டு எங்கேயும் போக மாட்டேன். உங்க நிம்மதியை கெடுக்கவாவது இங்கேயே இருப்பேன் போதுமா...?” குரல் அடைக்க வினவியவள், அவன் வலக்கரத்தை பற்றிக் கொண்டு அவன் முகம் பார்த்திருந்தாள்.

மருந்தின் வீரியத்தில் உறங்கத் துவங்கியிருந்தான் பிரம்மா. அவன் உறங்கிவிடவே, அதை உணர்ந்தவள், மெதுவாக அவன் சிகை கோத, “காயு...” ஆழ்ந்த உறக்கத்திலும் அவன் மெதுவாக முனக, ‘இவ்வளவு கான்ஷியஸா இருந்தால் எப்படிடா உன்னை நெருங்குவது? நீ தூங்கிட்டன்னு நினைத்து கூட உன்னை என்னால் தொட முடியலை’ மனதுக்குள் உரைத்தவள், அவன் முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

தன் தயக்கம் மீறி, அவன் நெற்றியில் பட்டும் படாமல் இதழ் பதிக்க, அதை உணராமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்

பிரம்மா. அதைப் பார்த்தவளுக்கு அவ்வளவு வருத்தமாக இருந்தது. தன் சிறு அசைவுக்கும் கண் விழிப்பவன், தான் முத்தம் கொடுத்ததைக் கூட உணராமல் கிடந்தால், அவளால் சந்தோஷப்பட முடியுமா என்ன?

உறக்கத்தில் வியர்வை வழிய விழிப்பு வந்துவிட, கண் விழித்தவன் கண்டது, தன் நெஞ்சில் தலைவைத்து உறங்கும் காயத்ரியைத்தான். தன் தலையைத் திருப்பி நேரம் பார்க்க, அதுவோ, மாலை நான்கு மணியைக் காட்டியது.

‘இவ்வளவு நேரமா தூங்கிவிட்டேன்...?’ எண்ணியவனுக்கு, மதியம் நடந்தவை அனைத்தும் கண் முன்னால் ஓடி ஒரு முக மலர்ச்சியை தோற்றுவித்தது.

கூடவே, ‘மதியம் சாப்டாளா இல்லையான்னு தெரியலையே...?’ எண்ணியவன், அவளை தன்மேல் இருந்து அகற்றி, நேராக படுக்க வைத்துவிட்டு, எழுந்து சென்று முகம் கழுவி வந்தான். சற்று களைப்பாக உணர்ந்தாலும் காய்ச்சல் விட்டிருந்த காரணத்தால் உடல் நடுக்கமோ, சோர்வோ பெரிதாக தெரியவில்லை.

“எப்படி தூங்கறா பார்..., அவளா முழிக்காமல் இடியே விழுந்தாலும் அசைய மாட்டா...” வாய்விட்டே முனகியவன் கீழே இறங்கி வந்தான்.

பொன்னமா உணவுப் பாத்திரங்களை சாப்பாட்டு மேஜைமேல் எடுத்து வைத்துவிட்டு சென்றிருக்க, அனைத்தையும் திறந்து பார்த்தவன், தனக்கென வைத்திருந்த கஞ்சியை குடித்துவிட்டு இருக்கையில் வேகமாக கீழே இறங்கி வந்தாள் காயத்ரி.

“ஏன் இவ்வளவு அவசரமா வர்ற...? மெதுவா...” அவள் வந்த வேகத்தைப் பார்த்து உரைத்தான்.

“நீங்க இங்கேதான் இருக்கீங்களா? எங்கே வேலைக்கு போய்ட்டீங்களோன்னு பயந்துட்டேன். இப்போ பீவர் எப்படி இருக்கு...?” அவன் அருகில் வந்தவள் கேட்க, அவள்

கரத்தை எடுத்து தன் நெற்றியில் வைத்தவன், ‘நீயே பார்த்துக்கொள்’ என சொல்லாமல் சொன்னான்.

“நெற்றியில் சூடு பரவாயில்லை…, டயடா இருக்கா? கஞ்சி போதுமா? இன்னும் கொஞ்சம் வைக்கவா…?” கேட்டவள் தன் கையை விலக்கிக்கொண்டு பாத்திரத்தை எடுக்க முயல,

“இங்கே ரொம்ப சுடுது…, ஏன்…?” தன் இடக்கரத்தை கழுத்தில் வைத்தவன் அவளிடம் சந்தேகம் கேட்க,

“எங்கே…?” பதறியவள் வேகமாக அவன் கழுத்தில் கை வைத்துப் பார்க்க, அங்கேயும் சூடு சாதாரணமாக இருப்பதை உணர்ந்தவள் அப்பொழுதுதான் அவன் கண்களை ஏறிட்டாள்.

கண்களில் சிறு குறும்பு கூத்தாட அவளை வெறித்தவன், “ஹாக் மீ…” ‘என்னை கட்டிகோயேன்…’ அவன் கண்கள் யாசிக்க, சட்டென அவளால் அதைச் செய்துவிட முடியவில்லை.

அவன் கழுத்தில் இருந்து கையை எடுத்துவிட்டு, ஒரு இயலாத பார்வை பார்க்க, “சரி சாப்பிடு…, நான் சும்மாதான் சொன்னேன். நெற்றியில் சூடு பரவாயில்லைன்னு சொன்னியா…, ஒவ்வொரு இடத்திலும் சூடு எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்க மொத்தமா ஒரு ஐடியா கொடுத்தேன் அவ்வளவுதான்” தன் கஞ்சியில் கவனமாக, அவளுக்குத்தான் மூச்சுமுட்டும் உணர்வு.

அன்றொருநாள்…, ‘ஒருத்தரிடம் ஒரு விஷயத்தை கேட்பதே பிச்சைன்னா, அதை அவங்க கொடுக்காதது எவ்வளவு பெரிய தண்டனை தெரியுமா?’ என அவன் கேட்டது மூளைக்குள் உலா போக, ‘இப்பொழுது அவனை அணைக்கவா வேண்டாமா?’ என மனதுக்குள் பட்டிமன்றம் நடந்தது.

“காயு, நின்னுட்டே தூங்கறியா…? சாப்பிடு…” அவளைக் கலைக்க, அமைதியாக அமர்ந்து உண்ணத் துவங்கினாள்.

அப்பொழுது வீட்டின் அழைப்புமணி ஒலியெழுப்ப, “நீ சாப்பிடு, நான் பாக்கறேன்” தன் உணவை முடித்துக் கொண்டவன் எழுந்து சென்றான். கதவைத் திறக்க, அங்கே நின்றிருந்தாள் இந்திரா.

“ஹலோ எஸ்பி சார்..., எப்படி இருக்கீங்க?” வெளியே நின்றவள் கேட்க, “ம்..., ஐ’ம் குட்..., உள்ளே வாங்க. காயு..., உள்ளேதான் இருக்கா...” அவளுக்கு வழிவிட்டு விலகி நின்றான்.

அவள் உள்ளே வரவே, “நீங்க பேசிட்டு இருங்க..., நான் இப்போ வர்றேன்” அவர்களுக்கு தனிமை கொடுத்து விலகிச் செல்ல,

“சார்..., ஒரு நிமிஷம், நான் உங்களைத்தான் பார்க்க வந்தேன்” அவனைத் தேக்கினாள்.

‘என்னையா...?’ அவன் புலன்கள் கூர்மைபெற, காயத்ரியை ஏறிட்டான்.

“அட, நீங்க பயப்படுற மாதிரி எதுவும் இல்லை. எனக்கு மேரேஜ்..., இன்விட்டேஷன் கொடுக்க வந்தேன்...” உரைத்தவள் தன் கைப்பையில் இருந்து ஒரு அழைப்பிதழை எடுத்து அவன் பெயர், காயத்ரியின் பெயர் எழுதி அவன் பக்கம் நீட்டினாள்.

“உங்க ப்ரண்ட் கிட்டேயே கொடுத்திடுங்க. காயு...” அவளை அழைக்க, “அவ உங்ககிட்டேதான் கொடுப்பேன்னு சொல்லிட்டா..., நீங்களே வாங்குங்க” நொடித்துக் கொண்டாள் மனையாள்.

“ஏய், சாப்பிடுறியா? வந்து சாப்பிடு...” காயத்ரி அழைக்க, இந்திராவிடமிருந்து அழைப்பிதழை பெற்றுக் கொண்டவன், “போய் சாப்பிடுங்க...” அவளை அனுப்பினான்.

“மதிய சாப்பாடே இப்போதான் சாப்பிடுறியா? நல்ல கும்பகர்ணி மாதிரி தூங்கிட்டியா? நீ இன்னும் அந்த பழக்கத்தை விடலியா லூசே..., எஸ்பி சார்க்கும்

இப்போதான் சாப்பாடு போட்டியா...?" ஒரு நல்ல தோழியாக அவளை கடிந்து கொண்டாள்.

"இல்லங்க..., நான்தான் தூங்கிட்டேன்..., அதான் லேட்..." காயத்ரிக்கு முன்பாக அவன் உரைக்க, இரு பெண்களும் அவனை ஆச்சரியமாக ஏறிட்டார்கள்.

"உங்க பொண்டாட்டியை நான் எதுவும் சொல்லலை போதுமா? ஹப்பா, பொண்டாட்டியை சொன்ன உடனே எப்படி சப்போட்டுக்கு வர்றார் பார்" கேலிபோல் உரைக்க,

"உனக்கு பொறாமைடி..." காயத்ரி அவளை வாரினாள்.

"இங்கே நான்தான் ஜோக்கரா...?" அப்பாவியாக அவள் வினவ, பிரம்மாவின் முகத்தில் மெல்லிய புன்னகை என்றால், காயத்ரி வெளிப்படையாகவே சிரித்தாள்.

"இந்து, சாப்பிடு..." காயத்ரி மீண்டும் அழைக்க, "இல்லடி, நான் அப்போவே சாப்ட்டேன்..., நீ முடிச்சுட்டு வா..." அவள் அருகில் சென்று அமர, பிரம்மா மாடியேறி தன் அறைக்குச் சென்றான்.

தோழிகள் இருவரும் அரட்டையில் மூழ்க, சற்று படுத்தவன், தன்னை மீறி கண்ணயர்ந்து விழிக்கையில் ஒரு மணி நேரம் கடந்திருந்தது. அப்பொழுதுதான் நாளை மாலையில் கமிஷனர் பார்ட்டிக்கு அழைத்தது நினைவுக்கு வர, 'காயத்ரிக்கு புதிதாக உடை எடுத்தால் நன்றாக இருக்குமே' என்று தோன்றியது.

அவள் அணியும் சுடிதார் எதுவும் பிரம்மாதமாக இருந்து அவன் பார்த்ததில்லை. அதற்காக மோசம் என்றும் சொல்லிவிட முடியாது. ஒரு பார்ட்டிக்கு அணிந்து செல்லும் அளவுக்கு கிராண்டாக இல்லை என்பது அவனது எண்ணம்.

அவள் சேரி அணிந்து அவன் பார்த்ததே இல்லை. திருமணம், வரவேற்புக்கு அணிந்ததோடு சரி. வேறு புடவை அவள் வைத்திருக்கிறாளா இல்லையா என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. அவன் உடைகளிலேயே பெரிதாக வர்ணங்களில் அவன் எடுப்பதில்லை. அப்படி

இருக்கையில், அவளுக்கு தான் எப்படி உடை எடுப்போம் என்பதும் அவனுக்குப் புரியவில்லை.

அவன் யோசனையிலேயே இருக்க, அங்கே வந்த காயத்ரி, “என்னங்க, அவ கிளம்பறாளாம், உங்ககிட்டே சொல்லிட்டு போகணும்னு வெயிட் பண்றா, கொஞ்சம் கீழே வரீங்களா?” அவனை அழைத்தாள்.

“காயு..., கடைக்குப் போகலாமா?” அவன் திடுமென கேட்க,

“என்ன திடீர்ன்னு...?”.

“நாளைக்கு கமிஷனர் வீட்டில் ஒரு பார்ட்டி அதான்..., நீயும் என்னோட வர. சுடிதார் போடறியா? இல்ல சேரியா?” அவன் சாதாரணமாக கேட்க அவள் விழித்தாள்.

“உங்க அபிசியல் பார்ட்டிக்கு நான் எதுக்கு...?” அவள் தயங்க,

“அவர் உன்னையும் கூட்டி வரணும்னு சொல்லியிருக்கார். நீ வரலன்னா கமிஷனர் பொண்டாட்டி என்னை ஒரு வழி பண்ணிடுவாங்க. நீயும் என்னோட வர்ற...” அதற்குமேல் அவளால் மறுக்க முடியவில்லை.

“போகலாம்..., ஆனா, இப்போதான் உங்களுக்கு ஜுரம் கொஞ்சம் விட்டிருக்கு, உடனே அலையணுமா? நாளைக்கு பாத்துக்கலாம்” அவளுக்கு அவனது உடல்நிலைதான் முன்னால் நின்றது.

“ஒரு சாதாரண ஜுரம்..., அதுவும் இப்போ இல்லை பிறகு ஏன்?”.

“ஆமா, ரொம்ப சாதாரணமா சொல்லிட்டீங்க..., கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரைக்கும் என்ன பாடு பட்டீங்கன்னு எனக்குத்தான் தெரியும்” அவள் உரைக்க, அவளை விழுங்கும் பார்வை பார்த்தான்.

அவ்வளவு நேரமாக அவன் முகம் பார்த்து பேசியவள், அவன் பார்வை மாற்றம் புரிய, சட்டென தன் பார்வையை விலக்கி வேறு இடம் பார்க்க, அவனோ தன் பார்வையை

விலக்கிக் கொள்ளவே இல்லை என்பதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

நிற்கவும் முடியாமல், அங்கிருந்து செல்லவும் முடியாமல் ஒரு அவஸ்தையான உணர்வு அவளைத் தாக்க, “இந்து வெயிட் பண்றா” முனகினாள்.

அவள் தன்னை பார்க்கவில்லை என்றாலும் அவளது முழு கவனமும் தன்மீதுதான் இருக்கிறது என்பது புரிய, ஒரு ஆண்மகனாக அந்த நேரம் அவன் உணர்வுகள் அவன் பேச்சை கேட்க மறுத்தன. மது போதைதான் மனிதனை கிறங்கவைக்கும் என யார் சொன்னது? பாராமல் பார்க்கும் அவள் பார்வை கொடுக்கும் போதை அதிகம் என்பதை அந்த நேரம் உணர்ந்தான்.

இத்தனை மாதங்களில் அவள்மேல் அவன் தாபம் கொண்டதில்லை. முதல் முறையாக அதை உணர்ந்தான். தன்னை தானாகவே அவள் ஏற்றுக்கொண்ட விதம், வீட்டை விட்டு செல்லாத அவள் பாங்கு, அவள் தன்மேல் கொண்டிருக்கும் நேசம் புரிய, அதை முழுதாக அனுபவிக்கத் துடித்தது அவன் ஆண்மை.

அவளுக்கோ..., அவனைப் பார்க்க முடியாத தடுமாற்றம்..., அதை ரசித்தவாறே, படுக்கையில் இருந்து எழுந்து வந்தான். “போகலாம்...” அழைத்தவனது குரல் கரகரக்க, ‘மீண்டும் அவனுக்கு ஜுரமா?’ என அஞ்சினாள்.

அவன் கீழே வரவே, அவர்களுக்காகவே காத்திருந்த இந்திரா, “எஸ்பி சார், நீங்க மனுஷங்களை பாத்தே எடை போடுவீங்களாமே..., என் ஆளையும் பாத்துட்டு சொல்லுங்க...” தன் அலைபேசியில் இருக்கும் தன் வருங்கால கணவனின் புகைப்படத்தை அவனிடம் காட்டினாள்.

“இப்படி ஒரு பொய்யை உங்ககிட்டே யார் சொன்னது?” அவன் தன் மனைவியை பார்த்தவாறே அவள் கையில் இருந்து அலைபேசியை வாங்கிக் கொண்டான்.

“எல்லாம் உங்க தர்ம பத்தினிதான்..., கிளி ஜோசியம், குருவி ஜோசியம் மாதிரி, பிரம்மா ஜோசியம்...” அவள் போட்டுக் கொடுக்க, அவள் இடுப்பில் நறுக்கென கிள்ளி வைத்தாள் காயத்ரி.

“ஹையோ பிசாசே கிள்ளாதே...” அவளிடம் அடிக்குரலில் அலறியவள், பிரம்மாவின் முகத்தை ஆர்வமாகப் பார்த்தாள்.

“ரொம்ப நல்லவருங்க...” ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்டான்.

“ஹப்பா..., இது போதும்..., நான் கிளம்பறேன்...” அவள் செல்லவே, “நீங்க உண்மையைத்தான் சொன்னீங்களா? எதையோ மறைக்கிற மாதிரி இருக்கு” அவன் முகம் பார்த்தவள் கேட்டாள்.

“உன் ப்ரண்ட் லைபில் பெருசா சுவாரசியம் இருக்காது, அதே நேரம் பிரச்சனையும் இருக்காது. அவ ட்ரை பண்ணா அவனை மாத்தலாம்...” உரைத்தவன் மனைவியைப் பார்க்க, அவள் முகத்தில் சிறு அதிர்ச்சி.

“நீ பயப்படுற மாதிரி எதுவும் இல்லை. நிஜமாவே அவன் ரொம்ப நல்லவன்தான். இப்போ ஆன்சைட் புரோகிராமுக்கு வேண்டி இன்னும் நாலு மாசத்தில் கிளம்ப வேண்டி இருப்பதால், அவசரமா கல்யாணம் பண்றாங்க. எல்லாம் விசாரிச்சுட்டேன்...” தன் முகத்தை அழுத்தமாக துடைத்துக் கொண்டான்.

தன் தோழி என்பதால் மட்டுமே அவன், இந்திராவின் கணவனைப் பற்றி விசாரித்திருப்பான் என்பது புரிய, “தேங்க்ஸ்...” உணர்ந்து உரைத்தாள்.

அவளது நன்றியை புறம்தள்ளியவன், “சரி கிளம்பலாமா...?” கடைக்குப் போக வேண்டியதை நினைவு படுத்தினான். தன் மறுப்பு அங்கே எடுபடாது என்பது புரிய, அவனோடு கிளம்பிவிட்டாள்.

கடைக்குச் சென்றவர்கள் முதலில் அவளுக்கு வேண்டிய புடவை எடுக்க, வெறும் பார்வையாளனாக மட்டும் அங்கே நின்றிருந்தான். “இது ஓகேயா? இதை எடுக்கவா? எது உங்களுக்கு பிடிச்சிருக்கு?” அவள் தனக்குப் பிடித்த புடவைகளை எடுத்து வைத்துவிட்டு கேட்டாள்.

“என்கிட்டே கேட்டால், எனக்கு எல்லோ, ஒயிட், புளூ தான் தெரியும்...” அவன் தோளைக் குலுக்க, ஒவ்வொரு புடவையாக தன் தோளில் வைத்துக் காட்டத் துவங்கினாள்.

அவனுக்குப் பிடித்த புடவையை எடுத்து அணிந்துகொள்ள வேண்டும் என அவள் விரும்புவது புரிய, அவள் முகத்துக்கு எந்த நிறம் எடுப்பாக தெரிகிறது, எது அழகாக இருக்கிறது என முதல் முறையாக ஆராயத் துவங்கினான்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் போராடி, ஒரு டிசைனர் புடவையை அவளுக்காக செலக்ட் செய்து முடித்தான். “இதுக்கு பிளவுஸ் வேணும்..., எங்கே கிடைக்கும்...?” அங்கே இருந்த பணிப் பெண்ணிடம் வினவ, “கிரவுண்ட் புளோர் மேம்...” அவள் சொல்லவே,

“அங்கே லாஸ்ட்டா போகலாம்..., உங்களுக்கு ட்ரெஸ் எடுப்போம்..., செவன்த் புளோர் போகலாம்...” அவள் முன்னால் செல்ல, வேகமாக அவளைத் தடுத்தான்.

“நான் போடுறது ஒன்லி காக்கி பேண்ட்..., அது என்கிட்டே எக்கச்சக்கம் இருக்கு, எதுவும் வேண்டாம்...” அவனது மறுப்பை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“ஒன் டைம் எனக்காக மாத்திக்கலாம் தானே...” கெஞ்சலாக கேட்க, அதற்குமேல் அவன் மறுப்பானா என்ன?

லிப்டுக்குள் நுழைந்து கும்பலில் முண்டியடித்து நிற்க, அவன் முகம் பார்த்தவளுக்கு அவன் முன்பை விட சோர்வாக இருப்பதுபோல் தோன்றியது.

‘இதுக்குத்தான் இன்னைக்கு வேண்டாம்னு சொன்னால் கேட்டா தானே, ஜுரம் மறுபடியும் அடிக்குதா?’ எண்ணியவள், கூட்டத்தை சாக்கிட்டு, மேலும் அவனை

நெருங்கி, தன் கரத்தை அவன் நெஞ்சில் மெதுவாக வைத்துப் பார்த்தாள்.

நிச்சயம் அவனுக்கு ஜுரம் அடிக்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது. ‘சீக்கிரமே எடுத்துட்டு கிளம்பணும்…’ அவனுக்கு உடை எடுக்காமல் அவளுக்கு செல்லவும் மனம் வரவில்லை. எனவே, வேகமாக உடை எடுக்க முடிவெடுத்தாள்.

ஆண்கள் பகுதியில் சற்று கூட்டம் இருக்க, அவன் இடக்கரத்துக்குள் தன் வலக்கரம் கொண்டு, அவன் புஜத்தொடு சேர்த்து பற்றிக் கொண்டவள், அவன் கரத்தை தன் நெஞ்சில் வைத்துப் பார்க்க, அது கதகதப்பாய் இருப்பதை மேலும் அறிந்து துவண்டாள்.

சாதாரணமாக அவனை நெருங்குபவர்களின் மனநிலையையே கணிப்பவனுக்கு, மனைவியின் செய்கைகள் புரியாதா என்ன? கூட்டத்தை சாக்காக வைத்துக் கொண்டு, தன் மேல் சாய்ந்துகொண்டு அவள் தன் உடல் நிலையை பரிசோதித்ததும்,

இப்பொழுது தன் கரத்தை ஆதரவுக்காக பற்றிகொள்வதுபோல், அவனது ஜுரம் அதிகரிக்கிறதா? என கணிப்பதையும் எண்ணி தனக்குள் சிலிர்த்துக் கொண்டான். ஆயிரம் வேலை இருந்தாலும், தன் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்றால், நொடிக்கொருமுறை அதன் தாய் குழந்தையை பரிசோதித்துப் பார்ப்பதுபோல், அவள் தன்னை கவனிப்பது புரிய, அவள் கரத்தின்மேல் தன் கரத்தை வைத்தான்.

கூடவே…, “ஜுரம் இப்போ கொஞ்சம் இருக்கு…, சீக்கிரம் முடிச்சுட்டு போகலாம்” அவள் பக்கம் சரிந்தவன் மெதுவாக உரைக்க,

“அந்த ஸ்டூல்ல நீங்க உக்காருங்க…” தன்னை அவன் கண்டுகொண்டானே என்ற வெட்கம் இம்சிக்க, ஸ்டூலை எடுக்கச் செல்ல முயன்றாள்.

“ஏய்..., நான் போலீஸ்க்காரன்..., என்கிட்டேயேவா...? இந்த நேரம் பத்துபேர் வந்தால் கூட அடிப்பேன் தெரியுமா?” அவன் மீசையை முறுக்க,

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. உங்களுக்கு ஜூரம் அடிக்குது, உங்களை நான் பாத்துக்கணும்..., எனக்கு அவ்வளவுதான் தெரியும்” உரிமையாய் அவள் உரைக்க,

“நீ என்மேல் கோபமாவே இரு காயு..., இப்படியெல்லாம் செய்தால்...” தன் வலக்கரத்தால் தலையை அழுத்தமாக கோதியவன், “ச்சே..., சுவிங்க பாக்ஸ் எடுத்துட்டு வர மறந்துட்டேன்...” சன்னமாக முனகினான்.

அவன் வார்த்தைகள் கொடுத்த தாக்கம் புயலாய் அவளைப் புரட்டிப் போட்டது. இத்தனை மாதங்களில் முதல் முறையாக தன் தாபத்தை வாத்தைகளால் வெளிப்படுத்துகிறான். இத்தனை நாளில், தன் இதழ் தீண்டி விலகும் நொடிகளில் கூட, தன்மேல் அவன் சலனம் கொண்டிருக்கிறான் என அவள் உணர்ந்தது இல்லை.

பார்வையால் கூட அதை வெளிப்படுத்தாதவன், முதல் முறையாக தன் தடுமாற்றத்தை உரைக்க, அவளுக்குள் அனைத்தும் தடம்புரளும் உணர்வு. முன்பு அவன்மேல் கோபமாக இருந்தாள், எனவே அவன் நெருக்கத்தை ஏற்க அவள் மனம் விரும்பவில்லை. அப்பொழுதே கூட, பிடிவாதமாக அவன் நெருங்கியிருந்தால் அவனை தவிர்த்திருப்பாளா என்பது கேள்விக்குறியே.

அப்படியிருக்கையில், இப்பொழுது அவனோடு வாழ்ந்துவிட அவள் எண்ணும் நேரம், அவன் தன்னிடம் தடுமாறினால் அவளுக்கு எப்படி இருக்கிறது? அவனோடு ஒட்டிக்கொள்’ மனம் முரண்ட, இருக்கும் சூழல் தடுக்க, சேல்ஸ்மேன் அவர்களை நெருங்கவே, அவனை விட்டு விலகி நின்றவள், தன் கைப்பையில் இருந்து ஒரு சுவிங்க பாக்சை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

“இதென்ன புதுசா இருக்கு...?” கேட்டவனுக்கு பதில் சொல்லாமல், அவனது சைஸ் பேண்ட் செக்ஷனுக்கு

நகர்ந்தாள். இதயத்தின் படபடப்பு அடங்க சற்று நேரமானது.

“மேம்..., சாருக்கா...? எந்த கலர் வேணும்?” சேல்ஸ்மேன் அவளைக் கலைக்க, தன் கவனத்தை முயன்று துணியெடுக்க செலுத்தினாள். ஆனாலும், தன் கணவனை ஓர விழியில் கவனிக்க மறக்கவில்லை. காபிபொடி கலர் பேண்ட், இளம் பிங்க் வர்ண சட்டையில், பிரவுன் கட்டங்கள் இருக்கும் சட்டையை தேர்வு செய்ய, அவளுக்குப் பின்னால் நின்றவன் புருவம் உயர்த்தினான்.

“இதைப் போட்டால் எனக்கே என்னை அடையாளம் தெரியாது...” அவள் காதில் கிசுகிசுக்க, அவன் வயிற்றில் செல்லமாக தன் கரத்தால் குத்தினாள். அவனுக்கென ஒரு செட் சாட்ஸ், டிஷர்ட், உள் பனியன், உள்ளாடை, கர்ச்சீப் என வாங்க, “இனிமேல் எனக்கு ட்ரெஸ்சே எடுக்கப் போறதில்லையா? எல்லாத்தையும் இன்னைக்கே வாங்கற?” அவன் கேலி செய்ய, அவள் எதையும் கண்டுகொள்ளவில்லை.

அவனிடம் இருக்கும் உடைகள் சற்று புதிதாக இருக்கும். ஆனால், உள்ளாடைகள், கர்ச்சீப் என அவற்றை வாங்க மறந்து விடுவான். அவனுக்கு அந்த நேரம் ஒன்று நிச்சயமாகத் தோன்றியது..., அவள் தன்னை கவனிக்கும் அளவுக்கு, தான் அவளை கவனிக்கவில்லை என.

அடுத்த அரைமணி நேரத்தில் அவளுக்கான ஜாக்கெட், அத்தியாவசிய பொருட்களை வாங்கிவிட்டு வீட்டுக்கு வந்தார்கள். வீட்டுக்குள் நுழைந்தவள், “ஜுரம் ரொம்ப இருக்கா?” கையில் இருந்தவற்றை சோபாவின்மேல் போட்டவள் அவனிடம் கேட்டாள்.

தன் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தவளை ஒரே இழுப்பில் தனக்கு நெருக்கமாக இழுத்தவன், “நான் எப்பவாவது என்னை தொடக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனா? பிறகு ஏன் என்கிட்டே கேட்டுட்டு இருக்க? கேரிஆன்...” அவள் முன்னால் சற்று குனிய, அவளுக்கோ இதயம் தொண்டைக்குழியில் துடித்தது.

முன்பானால் எப்படியோ? இப்பொழுது அவனை சாதாரணமாக தொடவே அச்சமாக இருந்தது. ஏற்கனவே ஒரு முறை தன் செய்கையால், தன் மனதை உணர்ந்தவன், இப்பொழுது தன் மன மாற்றத்தையும் உணர்ந்து கொள்வானோ?’ அடிமனம் தவித்தது.

அவள் அவனை ஏறிடத் தயங்க, அவன் என்ன உணர்ந்தானோ? “இப்போ நீ என்னை டச் பண்ணா..., உன்னை கண்டிப்பா ‘பெட்’டுக்கு கூப்பிட மாட்டேன்” அவன் உறுதியளிக்க, அதைக் கேட்ட அவளுக்கு கண்கள் கலங்கியது.

தன் கண்ணீரை அவன் கண்டால், நிச்சயம் கோபப்படுவான் என்பது புரிய, தன் கண்ணீரை அடக்கியவள், அவன் நெற்றியில் கை வைத்துப் பார்க்க, இப்பொழுது அவனுக்கு ஜுரம் அதிகம் இருந்தது. உடனடியாக அவனுக்கு இட்லி கொடுத்துவிட்டு, மருந்து கொடுத்து உறங்க வைத்தாள்.

மறுநாள் காலையில் ஸ்டேஷன் போக நின்றவனை பிடிவாதமாக அனுப்ப மறுத்துவிட்டாள். “நீங்க இன்னைக்கு ஆபீஸ் போகக் கூடாது. இல்ல, போய்த்தான் ஆகணும்னா நான் தடுக்கலை” அவள் விலகி நிற்க, ஏனோ அவள் வார்த்தையை மீறி அவன் செல்ல முயலவில்லை.

அவனது அந்த செய்கை அவளை இன்னும் அவன்மேல் காதல் கொள்ளத் தூண்டியது. ஊரையே ஆட்டிப் படைப்பவன், தன் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நின்றால், அவளுக்கு எப்படி இருக்கும்? காலை முழுவதும் ஓய்வெடுக்கவே, மாலையில் புத்துணர்ச்சியாக உணர்ந்தான். பார்ட்டிக்குச் செல்ல இருவரும் கிளம்பத் துவங்கினார்கள்.

தன் உடையை மாற்றியவன் கண்ணாடியில் பார்க்க, அங்கே வேறு ஒரு பிரம்மா இருப்பதைப் பார்த்தான். ‘இது நான்தானா?’ அவனால் நம்பவே முடியவில்லை. உடனடியாக காயத்ரியின் கமெண்ட் என்னவாக இருக்கும்

என தெரிந்துகொள்ள விரும்பியவன், அறைக்கதவை திறந்துகொண்டு உள்ளே சென்றான்.

ஜாக்கெட், உள் பாவாடையோடு நின்று புடவையை தன்மேல் சுற்றிக்கொள்ள முயன்றவள், திடுமென அவன் அறைக்குள் வரவே தடுமாறிப் போனாள்.

அவனோ, அவளது தடுமாற்றத்தை கண்டுகொள்ளாமல், “காயு..., நான் எப்படி இருக்கேன்? எனக்கு என்னவோ வித்தியாசமா தெரியறேன். ஓகேயா?” இத்தனை நாள் ஒரு போலீஸ்காரனாக மட்டுமே இருந்தவன், ஒரு ஹீரோ லுக்கில் மிளிர்ந்தான்.

அவள் கண்கள் ஆச்சரியத்தில் விரிய, “ரொம்ப அழகா இருக்கீங்க...” உணர்ந்து உரைக்க,

“எல்லோரும் வித்தியாசமா பாக்கப் போறாங்க. நான் வழக்கமா போடுறதையே போட்டுக்கவா?” என்னவோ முதல் முறையாக பேண்ட் அணிபவன் போன்று, காலை தூக்கிப் பார்த்துக் கொண்டு, சட்டை காலரைப் பிடித்து முகத்துக்கு நேராக தூக்கி பார்த்தான்.

“பீமா..., அதான் அழகா இருக்குன்னு சொல்லிட்டேன் தானே..., இதுக்கு மேலே மாத்தணும்னா மாத்துங்க...” அவன் முகம் பிடிக்காததை அணிந்தாற்போல் ஒரு பாவனையை வெளிப்படுத்த சிறு கோபம் கொண்டாள்.

“நீ சொல்லிட்ட..., விடு..., சீக்கிரம் கிளம்பி வா...” கீழே செல்ல, அப்பொழுதுதான் அவளால் இயல்பாக மூச்சு விடவே முடிந்தது. இத்தனைக்கும் அவன் அவள் நிலையை கொஞ்சமும் கண்டுகொள்ளவில்லை. அதற்கே அவளால் முடியவில்லை.

கீழே வந்தவனோ, ஒரு நொடி அப்படியே இமைகளை அழுத்தமாக மூடிக்கொண்டு, தன்னவள் நின்ற நிலையை மனக்கண்முன் கொண்டுவர, அவன் ரத்தவோட்டம் முழுதாக சூடாகும் உணர்வு. தன் மெல்லிய உணர்வுகளை அவனே உணர்ந்த தருணம் அது.

அடுத்த அரைமணி நேரத்தில் தன் அலங்காரம் முடித்தவள் கீழே இறங்கி வர, அவளைப் பார்த்தவன் வாய் பிளந்தான். அவள் அழகிதான், ஆனால் இப்பொழுது பேரழகியாக அவன் கண்களுக்குத் தெரிந்தாள்.

*****

# பகுதி – 33.

அந்த டிசைனர் புடவை புளோட்டிங்கில் அவள் மேனியைத் தழுவியிருக்க, ஜாக்கெட்டில் இருக்கும் தங்க நிற ஜரிகையும், வைரம்போல் மின்னும் கற்களும் கண்ணைப் பறித்தது. ஒற்றையாக பறந்த முந்தானை, அவள் முன்னழகை மறைத்தாலும், அதன் வேலையை முழுதாக செய்ய மறுத்தது.

அவன் பார்வை தடுமாறி அவள் அழகில் பதிந்து மீள மறுக்க, மூச்சடைத்தது. 'அம்மாடி..., கொல்றாளே...' அவன் எண்ணம் அதுவாகத்தான் இருந்தது. இத்தனை மாதங்களில் ஒற்றை அறையில் இருந்தாலும், ஒரு கணவனுக்குரிய உரிமையிலோ, ஒரு ஆண்மகனுக்கான தேடலிலோ கூட அவளை அவன் பார்த்ததில்லை.

நேருக்குநேர் அவள் கண்களைப் பார்த்து பேசி பழகியவன். அவள் இதழ் தீண்டும் வேளையில் கூட, அவள் மேனியை முழுதாக தழுவிக்கொள்ள அவன் முயன்றதில்லை. முதல் முறையாக தன்னவளை, உரிமைப் பார்வை பார்க்கிறான்.

அடர் பிங்க் வர்ண புடவை..., அதைச் சுற்றி இருந்த வெள்ளை கற்கள், தங்க நிற ஜரிகை..., அப்படியே ஆளை அசரடித்தது. அவனால் தன் பார்வையை திருப்பிக் கொள்ளவே முடியவில்லை.

"என்னங்க..., போகலாமா...?" தன் கொசுவத்தில் இருந்த நூலை அகற்றியவளாக அவனிடம் கேட்க, அப்பொழுதும் அவனால் தெளிய முடியவில்லை. அவள் கேள்விக்கு பதில் சொல்லும் நிலையில் கூட அவன் இல்லை.

அவனிடம் பதில் இல்லாமல் போகவே, வேகமாக அவனை நிமிர்ந்து பார்க்க, 'உன்னை அப்படியே சாப்பிடுவேன்...' என்பதுபோல் பார்த்திருந்தான் பிரம்மா. அதிலும் அவன் பார்வை பதிந்திருக்கும் இடம் மிகவும் அபாயகரமாக இருக்க, சரியாக இருந்த மேலாக்கை மீண்டுமாக நேராக்கினாள்.

அவள் செய்கையில் கலைந்தவன், சுவிங்கத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு, புயலாய் அவள் பக்கம் நெருங்க, அவனது சுவிங்கத்தை எதிர்பார்த்தன அவளது இதழ்கள். தன்னவனின் பார்வையில் முதல் முறையாக தேடலைக் காண்கிறாள். உள்ளுக்குள் எதுவோ தடம் புரளும் உணர்வு.

தன் செய்கையை சட்டென உணர்ந்த பிரம்மா, சட்டென நின்று, ஆழமாக மூச்செடுத்தவன், தன் பின்னந்தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

‘அவள் தன்னை முத்தமிடாமல், தானாக அவளைத் தீண்டுவதில்லை’எனச் சொல்லியிருந்தது அப்பொழுது நினைவுக்கு வர, அந்த நொடியை அறவே வெறுத்தான்.

‘என்னை உயிரோட கொல்லணும்னே இப்படி பண்றா போல...’ கடுப்பாக எண்ணியவன், அந்த அழகை ஸ்பரிசிக்க முடியாத ஏக்கத்தில் வெந்தான் எனச் சொன்னால் மிகையில்லை.

எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்த அவளது இதழ்கள், தான் எதிர்பார்த்தது நேராமல் போகவே, மெதுவாக அவனை நிமிர்ந்து பார்க்க, “போகலாம்...” சட்டென திரும்பி நடந்தான். பெரும் ஏமாற்றத்தை உணர்ந்தாள் காயத்ரி எனச் சொன்னால் மிகையில்லை.

அவன் கண்களில் வழிந்த ரசனை, எதிர்பார்ப்பு, ஆச்சரியம் என அனைத்தையும் கண்டவள், இறுதியாக அதில் தெரிந்த நிராசையை ஏற்க முடியவில்லை.

‘ஏன்...?’ அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை. தன் உள்ளத்தில் எழுந்த கேள்வியை அவளால் வாய்விட்டு அவனிடம் கேட்கவும் முடியவில்லை. அவனுக்கு பின்னால் சென்றவள், அவனோடு ஜீப்பில் ஏறிக் கொண்டாள்.

தன்னவனை ஆசையாக எதிர்பார்க்கும் அவள் செய்கை..., தவறாக எல்லாம் தோன்றவில்லை. தன்னவன்மேல் தான் ஆசை கொள்ளாமல் யார் கொள்வார்களாம்? அவன் முகத்தை தயக்கமாக நோக்க, சட்டென அவன் முகத்தில்

கவிழ்ந்த இறுக்கம், கூடவே ஏறிய டென்ஷன், பார்த்துவிட்டு பேசாமல் இருக்க முடியவில்லை.

“வெளியே வந்தால் ஏன் எப்பவும் டென்ஷனாவே இருக்கீங்க? கொஞ்சம் ரிலாக்ஸா இருங்க. உங்களை யார் என்ன சொல்லப் போறாங்க?” உரிமையாக கடிந்துகொண்டாள் என்றே சொல்லலாம்.

அவளை வெறுமையாக ஒரு பார்வை பார்த்தவன், “கமிஷனர் வைஃப் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் பண்ணியிருந்தாங்க. அவங்க பேச்சில் ஒரு சின்ன கோபம் தெரிந்தது. அது ஏன்னு தெரியலை” உரைத்தவன் தன் நெற்றியை அழுத்தமாக வருடினான்.

அவன் உணர்வுகளில் பழுது இருக்க வாய்ப்பு இல்லை என்பதால், அவனை ஏறிட்டவள், “இதுக்கு முன்னாடி அவங்க அப்படி பேசியிருக்காங்களா?” தன்னை மீறி கேட்ட பிறகுதான், அவனுக்கு பழைய விஷயங்கள் எல்லாம் மறந்து போய்விட்டது என்பதே அவளுக்கு ஞாபகம் வந்தது.

அவனை சங்கடமாக ஏறிட, அவனோ இறுகிய யோசனையை சுமந்த முகத்தோடு சாலையிலேயே கவனமாக இருந்தான். ‘அவன் கரத்தை பற்றிக்கொள்’ அவள் மனம் கூச்சலிட, கியர் கம்பியின்மேல் இருந்த அவன் கரத்தை மெதுவாக பற்றிக் கொண்டாள்.

அவ்வளவு நேரமாக சாலையிலேயே கவனமாக இருந்தவன், சட்டென அவள் முகம் நோக்க, ‘எல்லாம் சரியாயிடும்…’ அவள் கண்கள் உரைக்க, “எனக்கு எதுவும் ஞாபகத்துக்கே வராதா?” அவளிடம் கேட்கையில், படித்ததை எல்லாம் மறந்துவிட்டேன், என பரீட்சை ஹாலில் ஆசிரியரிடம் சொல்லும் மாணவனைப்போல் தெரிந்தான்.

“ம்ச்…, எல்லாம் சீக்கிரமே ஞாபகத்துக்கு வந்துடும். அப்படியே எதுவும் ஞாபகம் வரலைன்னாலும் உங்களால் சம்மாளிக்க முடியும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு…” அவனுக்கு அந்த நேரம் தேவையானது ஆறுதல் மட்டுமே என்பது புரிய, அதை மறுக்காமல் கொடுத்தாள்.

அவன் இடக்கரத்தை முழுதாக பற்றிக் கொண்டவள், ஆதரவாக வருடினாள். அதில் ஒரு ஆறுதல் கொடுக்கும் தன்மையே இருக்க, அதை அவனும் உணர்ந்து கொண்டான். அந்த நேரம் அவனுக்கு அந்த ஆதரவும், ஆறுதலும் தேவையாகவே இருந்தது.

ஜீப் பங்க்ஷன் நடக்கும் இடத்தை நெருங்கவே, ஜீப்பை பார்க்கிங்கில் நிறுத்தியவன், “காயு, கம்...” அழைத்தவன், “இந்த ட்ரெஸ் ஓகே தானே” இதற்குமுன் இப்படியான உடைகள் அணிந்த அறிகுறியே தன் கப்போர்டில் இல்லை என்பதால் மீண்டுமாக கேட்டான்.

‘இதற்கு பதிலை ஏற்கனவே சொல்லிவிட்டேன்’ என கண்களால் உரைத்தவள் சிறு கோபமாக அவனை ஏறிட, “சரி..., வா...” முன்னால் நடந்தான்.

கமிஷனரைப் பார்த்தவன் நேராக அவரிடம் செல்ல, “பிரம்மா, நீதானா இது? என்னால் நம்பவே முடியலை...” அவன் தோற்றத்தை நிச்சயம் ஒரு வியப்பாய் பார்த்தார்.

‘எல்லாம் இவதான்...’ குறிப்பாய் உரைத்து தன் மனைவியைப் பார்த்தவன், அவள் தோளில் மெல்லியதாக கை போட்டுக் கொண்டு உரிமையாய் நின்றான்.

“வாம்மா..., நீதான் இவனை மாற்றியதா? ஒரே காக்கி வெள்ளையில் மட்டுமே இவனைப் பாத்துட்டு, இப்படிப் பாக்கவும் நல்லாத்தான் இருக்கான்...” நெடுநாள் பழகியவராக அவர் உரைக்க, தன் கணவனின் உரிமை செய்கையில் சற்று நெளிந்தவளாக, மெல்லியதாக சிரித்து வைத்தாள்.

பிரம்மா ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அதை அவரும் எதிர்பார்த்ததாகவே தெரியவில்லை. தனக்கு பின்னால் திரும்பிய கமிஷனர், “ஆண்டாள்...” குரல் கொடுக்க, சிலீவ்லெஸ் ஜேக்கட்டில் புடவை அணிந்திருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி வேகமாக அவர் அருகில் வந்தார்.

கமிஷனர் கோதண்டம் உரைக்கும் முன்பாகவே பிரம்மாவைப் பார்த்த ஆண்டாள், "பிரம்மா..., நிஜமாவே நீதானா...? இல்ல நான் ஏதாவது கனவு காங்கறேனா? கலர் பிரம்மா..." பெரும் ஆச்சரியத்தோடு வினவ, அவரை ஆராயும் பார்வை பார்த்தான்.

"எப்படி இருக்க? ஆக்சிடென்ட்க்கு பிறகு இந்தப் பக்கம் வரவே இல்லை. உன் மேரேஜில் ஜஸ்ட் பாத்தது. உன்னை வர வைக்கவே இப்படி ஒரு பார்ட்டி. இல்லன்னா நீ இந்த பக்கம் வருவியாக்கும்?" அவர் உரிமையாக கோபித்துக் கொள்ள, ஒரு புன்னகைக்கு கூட பஞ்சமாக நின்றிருந்தான்.

"பூஜாவை பாத்தியா...?" அவர் திடுமென கேட்க,

'யார் அந்த பூஜா? இவர்களது மகளோ?" அவன் எண்ணுகையிலேயே, பூஜாவே அங்கே பிரசன்னமானாள்.

"ஹாய் யங் மேன்..., ஹவ் ஆர் யூ?" அவன் பக்கம் கைகளை நீட்ட, அவள் நுனி விரலைப் பற்றி மெதுவாக கை குலுக்கியவன், தன் கைகளை விலக்கிக் கொண்டான்.

"அட, கை கொடுத்துட்டீங்க..., வைஃப் வந்துட்ட தைரியமா?" அவனைச் சீண்ட, அவன் கண்களில் கூர்மை ஏறியது.

"ஹப்பா ஆரம்பிச்சுட்டார்..., அதெப்படிதான் இருபத்திநாலு மணி நேரமும் போலீசாவே இருக்கீங்களோ?" புருவம் ஏற்றி, இதழ்களில் புன்னகை தவழ, கண்களில் சுவாரசியம் ஏற்றி அவள் உரைக்க, காயத்ரி அவளை ஆராய்ந்தாள் என்றால், பிரம்மா மனதுக்குள் அனைத்தையும் கணிக்கத் துவங்கி இருந்தான்.

"கல்யாணத்துக்குப் பிறகு ஆட்கள் மாறுவாங்கன்னு கேள்விப் பட்டிருக்கேன், அதுக்குன்னு இப்படியா?" அவளும் அவனது தோற்றத்தை குறிப்பிட, தன் பார்வையை மெதுவாக சுழற்றியவனுக்கு, அங்கே இருந்த பலரின் பார்வை தன்மேல் சுவாரசியமாகப் பதிவதை உணர்ந்தான்.

"பூஜா, அவனை வெறுப்பேத்தாமல் சும்மா இரு..." அவளை அடக்கினார் கோதண்டம்.

அவளோ, “என்கிட்டே சிக்கியிருக்க வேண்டியவர்..., ஜஸ்ட் மிஸ்...” இடக்கையின் உள்ளங்கையில் வலக்கரத்தை குத்திக்கொள்ள, அவள் வார்த்தைகளில் இருந்த ஆற்றாமை கண்களில் சிறிதும் இல்லை.

‘நிச்சயம் அவள் விளையாடுகிறாள்’ என்பதை அதற்குள் புரிந்து கொண்டிருந்தான்.

காயத்ரிக்கோ அடிமனதில் ஒரு பெரும் நமைச்சல்..., ‘எல்லாருக்கும் இவர்மேல் ஒரு கண்...’ கடுப்பாக எண்ணிக்கொள்ள, அவள் முகமோ சட்டென வாடத் துவங்கியது.

அதைப் பார்த்தவன், ‘இந்த லூசு வேற...’ எண்ணியவனுக்கு அந்த நேரம் எதையும் செய்ய முடியவில்லை. கூடவே அனைவரின் பார்வையும் அவன்மேல் சுவாரசியமாக பதிவதைப் பார்த்தவளுக்கு, அவன் என்ன நினைப்பானோ என்ற பயம்.

“சாரி...” அவன் கரத்தை மெதுவாக சுரண்டியவள், அவன்பக்கம் சாய்ந்து முனக,

“உனக்கு புடிச்சிருக்குல்ல..., அது போதும்...” ‘எனக்கு வேறு யாரைப் பற்றியும் கவலை இல்லை’ என நெஞ்சை நிமிர்த்தி நிற்க, அவனுக்கான தனது முக்கியத்துவம் உணர்ந்து உருகிப் போனாள்.

“பிரம்மா, பார்ட்டியை துவங்கிடலாம்..., எல்லோரும் வந்துட்டாங்கன்னு நினைக்கிறேன்” உரைத்தவர், அவனையும், காயுவையும் கையோடு அழைத்துச் சென்றார்.

“ஹாய் எவ்ரிபடி...” அழைத்து அனைவரின் கவனத்தையும் திருப்பியவர், “இந்த பார்ட்டி, நம்ம பிரம்மா கேசை சக்ஸஸ் பண்ணியதுக்கு மட்டும் இல்லை. புது மாப்பிள்ளைக்கு ஒரு வெல்கம் பார்டின்னு கூட சொல்லலாம், சீயர்ஸ்...” ஒரு கிளாஸை தூக்கி மற்றவர்களிடம் காட்ட, “சியர்ஸ்...” அங்கே இருந்த அனைவரும் குரல் கொடுத்தார்கள்.

“சார், என்ன இது...?” சட்டென அனைவரின் சென்டர் ஆப் அட்ராக்ஷன் கிடைக்கப்பெற, தயக்கமாக இழுத்தான்.

“உன்னை என் மருமகனாக்கிக்க ஆசைப்பட்டேன்..., அது முடியலை, ஜஸ்ட் மகனா இருந்துட்டு போ..., டிப்பார்ட்மெண்டில் என் அடுத்த வாரிசு நீதான்” கிளாஸை அவன் கரத்தில் கொடுத்துவிட்டு, தானும் ஒன்றை எடுத்துக் கொள்ள, நிச்சயம் அவன் இப்படி ஒரு செய்தியை அவர் வாயில் இருந்து எதிர்பார்க்கவே இல்லை.

தன் அதிர்ச்சியை மறைத்தவன், “நிச்சயமா சார்...” உரைத்தவன், கிளாஸை வாயில் வைத்து மெல்லியதாக சிப்பினான்.

காயத்ரிக்கோ தாங்க முடியாத அதிர்ச்சி என்றே சொல்லலாம். கோதண்டம் பூஜாவுக்கு அவனைப் பார்த்தார் என்பது ஒன்று என்றால், அவன் கரத்தில் போதை பானம்..., அதை அவன் குடித்தால் என்னவாகும் என்ற பயம்..., மெதுவாக அவன் கரத்தை மறுப்பாக அசைத்தாள்.

அதற்குள் மற்றவர்கள் அவனுக்கு வாழ்த்து சொல்ல வர, அவர்கள் பக்கம் திரும்பியவன், அனைவரோடு உரையாடத் துவங்கினான். சில நிமிடங்கள் கடக்கவே, அங்கே வந்த ஆண்டாள், “காயத்ரி..., காயத்ரி தானே உன் பேர்..., சிலபேர் உன்னை மீட் பண்ண காத்திருக்காங்க..., வா...” அழைக்க, வேகமாக தன் கணவனை திரும்பிப் பார்த்தாள்.

‘போ...’ அவன் உரைக்க, அவர்களோடு சென்றவளுக்கு இதயத்துக்குள் மெல்லிய படபடப்பு. பிரம்மாவோ, ‘கூட்டுபோய் என்ன செய்யப் போறாங்கன்னு தெரியலையே...’ எண்ணியவன், தன் பார்வையை அவர்கள்மேல் வைக்கத் துவங்கினான்.

“ஹாய்..., மேரேஜ் லைப் எப்படிப் போகுது...?” “மிலிட்டரி கேம்ப்க்கு உள்ளே இருக்குற மாதிரி இருக்குமே” “பேசவே காசு கேப்பாரே..., அப்போ மத்ததெல்லாம்?” கேட்ட ஜஜியின் மனைவி கண்களை சிமிட்ட, குப்பென வியர்த்துப் போனது.

“ஏய் கருணா சும்மா இரு...” அவரை அடக்கிய ஆண்டாள், காயத்ரியின் பக்கம் திரும்பினார்.

“அவங்க சொல்றாங்கன்னு நீ எதையும் பீல் பண்ணிக்காதே..., பிரம்மா கொஞ்சம் ஸ்ட்ரிக்ட் அதைத்தான் இப்படி பேசுறாங்க...” அவளுக்கு ஆதரவாக பேச, சுற்றி இருந்த பத்துபேருக்கு நடுவில் சிக்கிக்கொண்டு தவித்தாள்.

அவள் கண்கள் தன் கணவன் இருந்த பக்கம் பாய, அவனோ, தன் போலீஸ் அன்பர்களோடு எதையோ உரையாடிக்கொண்டு இருப்பது தெரிந்தது. கையில் இன்னும் அந்த கிளாஸ் இடம் பெற்றிருக்க, அது குறைந்ததாகவே தெரியவில்லை.

“ஆண்டாள், பூஜா எப்படியோ தப்பிச்சுட்டா..., பாவம் காயத்ரி” ஐஜியின் மனைவி விடாமல் பேச, அவர் பேசுவதன் பின்னணியை உணர்ந்து கொண்டாள். அவளது தம்பியைத்தனே போதைபொருள் வழக்கில் பிரம்மா கைது செய்து ஜெயிலில் அடைத்தான்.

“கருணா, பூஜா மிஸ் பண்ணிட்டாளேன்னு நான் நினைக்கறேன். நீ என்னன்னா இப்படி பேசுற...” அடங்க மறுக்கிறாளே என்று இருந்தது அவருக்கு.

“என்னது மிஸ் பண்றதா? சரியான டைம் டேபிள்..., கோடுபோட்டு வாழணும்னு நினைத்தால் இந்த காலத்தில் முடியுமா? வீட்டுக்கு வந்தால் கொஞ்சமாவது சிரிச்சு பேசணும், புருஷன் நம்ம முந்தானையை பிடிச்சுட்டு சுத்தணும்..., இங்கே அதெல்லாம் நடக்க வாய்ப்பே இல்லை.

“எப்போ பாத்தாலும் யூனிபாமுக்கு போடுற கஞ்சியை உள்ளுக்கு நாலு கிளாஸ் குடிச்ச மாதிரி திரிஞ்சால் எப்படி குடும்பம் நடத்துறதாம்?” அவர் சொல்லிக்கொண்டே போக, அவர் பேசுவதைக் கேட்டு கொஞ்சம் கூட காயத்ரி பாதிக்கப் படவே இல்லை.

தன் கணவன் தன்னிடம் நடந்துகொள்ளும் முறை அவளுக்குத் தெரியுமே. வீட்டில் இருக்கும் வேளைகளில்,

தன்மேல் கோபமாக இருந்தாலும் தான் இருக்கும் இடத்தில்தானே அவனும் இருப்பான். நொடி நிமிடங்களுக்குள் அவன் இதழ்தீண்டி விலகும் விதம், அவன் கண்களில் வழியும் நேசம், காதல் அவளுக்குத் தெரியாததா?

“அதைபத்தி கவலைப் பட வேண்டியது காயத்ரி, அவளே பேசாமல் இருக்கா, உனக்கேன்..., பேசாமல் இரு...” இப்பொழுது ஆண்டாள் குரல் உயர்த்தி கண்டிக்க, அங்கிருந்து அகன்றாள் கருணா.

அவள் செல்லவே, “அவ தம்பியை பிரம்மா உள்ளே தள்ளிட்ட கோபத்தை இவ கிட்டே காட்டிட்டு போறா. பிரம்மாவுக்கு தெரிந்தால் தெரியும் சங்கதி” ஒருத்தி உரைக்க, மற்றவர்களும் அதை ஆமோதித்தார்கள்.

“காயத்ரி, இதையெல்லாம் நீ பிரம்மாகிட்டே சொல்லிட்டு இருக்காதே” வேகமாக உரைத்தார் ஆண்டாள். பிரம்மாவுக்கு கருணா இப்படி பேசினாள் எனத் தெரிந்தால், நிச்சயம் அவன் வேலையைக் காட்டுவான் என்பது அவருக்குத் தெரியும்.

“இல்ல..., நான் எதுவும் சொல்லலை...” அவள் உரைத்த பிறகே நிம்மதியாக மூச்சு விட்டார்.

“இந்த பார்ட்டி அந்த போதைப்பொருள் கேஸ் முடிந்தப்போவே வைத்திருக்க வேண்டியது. குற்றவாளி நம்ம ஐஜி மச்சான் என்பதால்தான் அப்போ வைக்கலை..., இப்போ இவங்களை கூப்பிடாமலும் இருக்க முடியாது. இப்படி ஒரு சிச்சுவேஷன் வரும்னு நினைக்கவே இல்லை” உண்மையான வருத்தம் அவர் குரலில்.

சற்று தூரத்தில் சேரில் அமர்ந்து மொபைலை பார்த்துக் கொண்டிருந்த தன் மகள் பூஜாவை அழைத்தவர், “பூஜா, காயத்ரிக்கு கொஞ்சம் கம்பெனி கொடு, நான் அஞ்சு நிமிஷத்தில் வர்றேன்...” வந்தவர்களை சற்று கவனிக்க வேண்டி இருந்ததால் அங்கிருந்து அகன்றார்.

“வாங்க காயத்ரி..., என்ன கருணா ஆண்ட்டி செம ரெய்டு போல..., அவங்க நல்லவங்கதான், சிச்சுவேஷன் மனுஷங்க குணத்தை மாத்துது...” நான் நடந்தவற்றை கவனித்தேன் என்பதை மறைமுகமாக உணர்த்த, மௌனமாக கேட்டுக் கொண்டாள்.

“கண்ணாலேயே பிரம்மாவை ஸ்கேன் பண்ணிட்டே இருக்கீங்க..., அவ்வளவு லவ்வா...?” அவள் திடுமென கேட்க, ‘மற்றவர் பார்க்கும் அளவுக்கா நடந்து கொள்கிறோம்’ திடுக்கிட்டாள்.

“நீங்க என்ன சைக்காலஜி படிக்கறீங்களா?” காயத்ரி கேட்க,

“இல்ல..., டாக்டர்...” சாதாரணமாக உரைக்க, வியப்பாய் அவளை நோக்கினாள்.

‘இவளிடம் எதையும் பேசலாம்...’ என்ற நம்பிக்கையை அவள் கண்கள் உணர்த்த, “நீங்க அவரை.. கல்யாணம் பண்ணிக்க...” அதை எப்படி கேட்கவென தெரியாமல் தடுமாறி கேட்க,

“அப்படி ஒரு ஆசை அம்மா அப்பாவுக்கு ரொம்ப இருந்தது. நானும் பிரம்மாவும் பேசினோம்..., ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன், அந்த பதிலில், அந்த நிமிஷமே தெரிஞ்சுடுச்சு..., எனக்கானவர் அவர் இல்லைன்னு..., நானே வீட்ல சொல்லிட்டேன்..., இது செட்டே ஆகாதுன்னு, அவங்களும் புரிஞ்சுட்டு டிராப் பண்ணிட்டாங்க...” நடந்தவற்றை நொடியில் விளக்கிவிட, காயத்திரியின் மனதில் பெரும் நிம்மதி.

“அப்படி என்ன கேள்வி கேட்டீங்க...?” அவளால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை.

“உங்களுக்கு என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதமான்னு கேட்டேன்” உரைத்தவள், அவன் சொன்ன பதிலைச் சொல்ல யோசிப்பது அவள் முகத்தில் இருந்தே தெரிய, அவள் பதிலுக்காக காத்திருந்தாள்.

“இந்த பதிலை நான் இப்போ சொன்னா நீங்க எப்படி எடுத்துப்பீங்கன்னு தெரியலை” இந்த நேரத்தில் அது வேண்டாமே..., என்னும் மன்றாடல் அதில் இருந்தது.

“பரவாயில்லை சொல்லுங்க...” அவள் தயக்கத்தை தகர்த்தாள்.

“என் வாழ்க்கையை ஒரு பொண்ணை நம்பி ஒப்படைக்கும் அளவுக்கு நான் முட்டாள் இல்லை’ன்னு சொன்னார். எனக்கு இந்த பதிலை எப்படி எடுக்கன்னே தெரியலை. நான் கேட்ட கேள்விக்கும், அவர் சொன்ன பதிலுக்கும் இருந்த அந்த வித்தியாசம்...,

“அவருக்கு நான்தான்னு, கடவுள் நினைத்திருந்தால் ஏதோ ஒரு விதத்தில் நான் அவரை ஈர்த்திருப்பேன். பட்..., அவர் நின்ன தோரணையும், சொன்ன பதிலும்..., அவர் பார்வையும்..., இப்போ ரொம்ப மாறிட்டார்..., அந்த பழைய பிரம்மாவை என்னால் கொஞ்சம் கூட இம்மேஜின் பண்ணிக்கவே முடியலை...” ஒரு மருத்துவராக அவள் பார்வை இருந்ததால் அவளால் அந்த வித்தியாசத்தை கணிக்க முடிந்ததோ எனத் தெரியவில்லை.

அந்த நேரம்..., பிரம்மா அவளிடம் கொடுத்த பதிலை கேட்ட காயத்ரிக்கு அடிமனதில் பெரும் பிரளயம். ஏற்கனவே, ‘எனக்கு பழைய நினைவுகள் திரும்பினால் உன்னை எப்படி நடத்துவேன் என எனக்குத் தெரியலை’ எனச் சொன்னதும் நினைவுக்கு வர, பூகம்பத்தையே உணர்ந்தாள்.

‘எல்லாம் நினைவுக்கு வந்துவிட்டால் என்னை விலக்கி விடுவாரோ?’ அந்த கேள்வி கொடுக்கும் வலியை தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை.

“உங்க லைப் எப்படிப் போகுது?” பூஜா காயத்திரியைக் கலைக்க, “ம்..., குட்...” தன் யோசனையை கைவிட்டவள் உரைக்க,

அவள் முகம் பார்த்த பூஜா, “நான் ஏதோ உங்களை கன்பியூஸ் பண்ணிட்டேன் போல, அவர் சொன்னது எனக்கான பதில். பட்..., உங்களுக்கான பதில் அவர்கிட்டே

வேறையா இருக்கும். அது உங்களுக்கும் தெரியும்னு நினைக்கறேன்” அவள் கரத்தை தட்ட, காயத்ரியால் முழுதாக தெளிய முடியவில்லை.

அவன் சொன்ன ‘ஐ லவ் யூ’ அவனுக்கு முழுதாக நினைவுக்கு வந்த பிறகு என்றால் பரவாயில்லை. இப்பொழுது அவன் சொன்ன ஐ லவ் யூக்கான மதிப்பு எவ்வளவு என்று அவளுக்குத் தெரியவில்லையே.

மேலும் சில நேரம் உரையாடியவர்கள்..., ஆண்டாள் அழைக்கவே அவரோடு சென்றார்கள். “பேசிட்டே சாப்பிடுங்க..., ஸெல்ப் சர்வீஸ் தான்..., எடுத்துக்கோங்க..., பிறகு எவ்வளவு நேரம் வேண்ணா பேசுங்க” ஆளுக்கு ஒரு தட்டை அவர்களிடம் கொடுத்தார்.

அந்த நேரம் பூஜாவுக்கு மருத்துவமனையில் இருந்து அழைப்பு வரவே, “எனக்கு ஒரு எமர்ஜென்சி கேஸ்..., நான் போகணும்...” விடைபெற்றுச் சென்றாள்

காயத்ரி சாப்பாட்டை எடுக்கும் நேரம் எங்கிருந்துதான் வந்தாளோ, கருணா, காயத்ரியின் பிளேட்டில் அளவுக்கு அதிகமாக பிரியாணியை எடுத்து வைக்க, “இல்ல..., எனக்கு இவ்வளவு வேண்டாம்...” அவளது மறுப்பை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“இங்கே செர்வ் பண்ற எல்லாத்தையும் சாப்ட்டாகணும்...” கருணா உரைக்க, அவளுக்கு அழுகையே வரும்போல் இருந்தது.

அங்கே இருந்த ஒரு இருக்கையில் சென்று அமர்ந்தவள், தட்டு நிறைய இருந்த பிரியாணியை வெறித்தாள். அங்கே மேலும் சிலர் வந்து அமரவே, தானும் உணவை உண்ணத் துவங்கியவளுக்கு பாதி சாப்பாட்டை உண்பதற்குள் மூச்சு முட்டியது.

யாருக்கும் தெரியாமல் சென்று கொட்டிவிடலாம் என்றால், அதற்கும் மனம் வரவில்லை. அந்த சாப்பாட்டுக்காக அவள் பட்ட துன்பங்கள் நினைவுக்கு வர, நிச்சயம் அவளால் அதை செய்யவே முடியாது என்று தோன்றியது.

மற்றவர்கள் ஐஸ்கிரீம் உண்ணச் செல்ல, அவளது பக்கத்து இருக்கையில் யாரோ அமர்வதை உணர்ந்தாள். சட்டென திரும்பிப் பார்க்க, தன் கையில் இருந்த ஒரு காலி பிளேட்டை அவள் கரத்தில் கொடுத்தவன், அவள் கரத்தில் இருந்து தட்டை வாங்கிக் கொண்டான்.

அவள் திகைப்பாய் பார்க்க, “நான் நாய்க்கு போட எடுத்துட்டு போகலை, நான்தான் சாப்பிடப் போறேன். எனக்கு எச்சி எல்லாம் தெரியாது…” உரைத்தவன், அடுத்த நிமிடம் அங்கிருந்து அகன்றிருந்தான். அன்று ஒரு நாள் அவன் செய்த சப்பாத்தியை தான் நாய்க்கு போட்டதால்தான் அவ்வாறு சொல்கிறான் எனப் புரிய, கவலையாகப் போயிற்று.

மற்றவர்கள் பார்ப்பார்கள்…, பார்த்தால் என்ன நினைப்பார்கள்…? எந்த கவலையும் அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. நிதானமாக தன் உணவை முடித்தவன், கை கழுவச் செல்ல, அவன் செல்வதைப் பார்த்தவள், தானும் அவன் பின்னால் சென்றாள்.

தான் கை கழுவியவன், காயத்ரி தன் பின்னால் நிற்கவே, அவள் கை கழுவிவிட்டு வரும் வரை அங்கேயே காத்திருந்தான். கை கழுவிவிட்டு வந்தவளோ, சற்றும் தயங்காமல், ஒரு நொடி அவனை அணைத்து விடுவிக்க, இனிமையாக அதிர்ந்து போனான்.

அவன் பார்வை வேகமாக சுழல, கை கழுவும் இடம் வீட்டுக்கு பின்புறம் என்பதால் அப்பொழுது அங்கே யாரும் இருக்கவில்லை. நிம்மதியாக மூச்சு விட்டவன், அவள் எங்கே எனப் பார்க்க, அதற்குள்ளாக அங்கிருந்து அகன்றிருந்தாள்.

அவர்களது முதல் அணைப்பு…, நொடி நிமிடமே என்றாலும், சட்டென அவள் ஒட்டிக்கொண்ட விதம், சிறகில்லாமல் பறந்தான். அவன் அழகிடம் தன் மேனியில் உரசி ஏற்படுத்திய இதம்…, கை கழுவியதை மறந்து நின்றிருந்தான்.

யாரோ வரும் ஓசையில் கலைந்தவன், மீண்டுமாக கை கழுவி விட்டு வந்தவனது கண்கள் தன்னவளை தேடியது. ஆண்டாளிடம் பேசிக் கொண்டு இருந்தவளை, தயக்கமே இல்லாமல் பார்த்தான். ஒற்றை முந்தானை காற்றில் ஆட, காற்று கலைத்த முடியை ஒதுக்கியவாறு பேசிக் கொண்டிருந்தவளின் அழகு அவனை இம்சிப்பதாய்.

“கட்டிப் புடிச்சவ ஒரு முத்தம் கொடுத்திருக்கலாம்” வாய்விட்டே புலம்ப, “சார்…” அருகில் சென்ற காவலர், அவனிடம்தான் ஏதோ சொல்கிறான் என முன்னால் வர, “நத்திங்…” உரைத்தவன், கமிஷ்னரின் அருகில் சென்றான்.

அவரிடம் உரையாடினாலும் அவன் கவனம் முழுவதும் காயத்ரியிடமே இருந்தது. அவள் பார்வையும் சில நொடிகள் இடைவெளியில் அவன் பக்கம் பாய, அவன் மூச்சுக்காற்றில் உஷ்ணம் ஏறியது.

நள்ளிரவை நெருங்கும் நேரம் பார்ட்டி ஓய, அவர்களிடம் விடைபெற்று கிளம்பினார்கள். ஜீப்பில் ஏறியவனது பார்வை முழுவதும் அவளிடமே நிலைத்திருந்தது. சற்று களைப்பாகத் தெரிந்தாலும், அவளது அந்த தோற்றம் அவனை வசீகரித்தது.

அவளது ஒற்றை மேலாக்கு நழுவியிருக்க, அவன் தன்னைப் பார்க்கிறான் என்பதிலேயே திணறிக் கொண்டிருந்தவள், அவன் பார்வை தன் அழகிடங்களில் தழுவி, நழுவி, மீள முடியாமல் தவிப்பதை உணரவில்லை. அவனுக்கோ, தன்னைக் கொல்லும் அவள் அழகை வஞ்சனையே இல்லாமல் ரசித்தான்.

ஒரு கட்டத்தில் அவளால் இயல்பாக இருக்க முடியாமல், தவிப்பாக அவன் பக்கம் ஓரவிழியால் நோக்க, அப்பொழுதுதான் அவன் பார்வை பதியும் இடத்தைக் கண்டு விதிர்த்துப் போனாள். கைகள் தாமாக முந்தானையை சரி செய்ய, அவனது உஷ்ணப்பெருமூச்சு ஜீப்பையே நிறைத்தது.

சாலையில் வாகனங்கள் அறவே அற்றுப் போக, ஜீப்போ..., வெகுவாய் வேகம் குறைந்து, சாலையில் உருண்டுகொண்டிருந்தது. ‘வீட்டுக்கு போய்ட்டா பரவாயில்லை...’ அவள் நினைக்க,

‘வீட்டுக்குப் போய்விட்டால் ரசிக்க முடியாதே...’ அவன் மனம் எண்ணியது. கூடவே, அந்த இரவில், அவள் தேவை இல்லாமல் தூங்க முடியாது என்னும்படியான ஒரு நிலை. தன் இளமையின் தேடலை முதல் முறையாக உணர்ந்தான்.

எவ்வளவுதான் பெருமூச்சு விட்டாலும் தேகத்தின் வெம்மை குறையுமா என்ன? காயத்ரியின் பார்வை வெளியே இருந்தாலும், அவளது கவனம் முழுவதும் அவனிடம் இருக்க, அதை உணர்ந்தவனுக்கு, அவளை தன்னோடு இழுத்து அணைத்துக் கொள்ளும் வேகம்.

அவ்வளவு நேரமாக உருண்டுகொண்டிருந்த ஜீப் தன் இயக்கத்தை நிறுத்திவிட, உடலைத் தீண்டிய குளுமையான காற்றும், அலையின் ஓசையும் தாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதை அவளுக்கு உணர்த்த, ‘வீட்டுக்குப் போகாமல் இங்கே ஏன்...?’ கேள்வியாக அவனை திரும்பிப் பார்த்தாள்.

‘நீ வேண்டும்...’ அவன் பார்வை அவளிடம் அதைத்தான் சொன்னது.

அதற்கு மாறாக, “நீ ஜீப்பை எடுத்துட்டு வீட்டுக்கு கிளம்பு..., சைரன் போட்டுக்கோ, நான் பிறகு வர்றேன்” உரைத்தவன், ஜீப்பில் இருந்து இறங்கி, மணலில் விடுவிடுவென நடந்துவிட, அந்த நிலையிலும், தன் பாதுகாப்பை நாடும் அவன் செய்கை நெஞ்சை நனைக்க, கூடவே அவன் பிடிவாதமும், உறுதியும் அவளை நிலைகுலையச் செய்தது.

எந்த நேரத்திலும் அவன் கேட்டதை தான் செய்யாமல், அவன் தன்னை நெருங்கப் போவதில்லை என்பது புரிய, கண்கள் கலங்கியது. ‘அப்படியென்ன பிடிவாதம்...?’ பெண்மையின் நாணம் அவளை இப்படித்தான் நினைக்கத் தூண்டியது.

தன் வெட்கம் விலக்கி அவனைத் தழுவி, தன் இதழை அவன் கன்னத்தில் கூட பதிக்க முடியும் என்றே தோன்றவில்லை. அதே நேரம், அவனை அப்படியே விட்டுச் செல்லவும் அவளுக்கு மனம் இல்லை. அதைவிட, அவனை விட்டுச் செல்லவே மனமில்லை என்பதுதான் சரியாக இருக்கும்.

சற்று நேரம் தேங்கியவள், அவனை அழைத்துவிடும் நோக்கத்தில் தானும் இறங்கி அவன் சென்ற திசையில் சென்றாள். கடலின் ஓரம், கைகளை பேண்ட் பாக்கெட்டுக்குள் விட்டவாறு, ஆகாயத்தை பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். எதில் இருந்தோ தப்பிக்கப் போராடுவதுபோல் இருந்தது அவன் செய்கை.

“வாங்க வீட்டுக்குப் போகலாம். ரொம்ப இருட்டா இருக்கு” அவன் அருகே நெருங்கியவள் அழைத்தாள்.

“உன்னை போன்னு சொன்னேன். நான் என்ன சின்னப் பிள்ளையா? இருட்டை பாத்து பயப்பட? எனக்கு வரத் தெரியும்..., இப்போ நான் அங்கே வந்தால் சரியா வராது. ஏன்னா...?” அவன் மேலே என்ன சொல்லியிருப்பானோ..., அவன் சட்டை காலரைப் பிடித்து இழுத்தவள், தன் கால் கட்டை விரலில் நின்று, எட்டி அவன் இதழ்களில் மெல்லியதாக இதழ் ஒற்றி பிரிய முயன்றாள்.

விலக முயல மட்டுமே அவளால் முடிந்தது. அடுத்த நொடி தன் வலிய கரங்களால் அவளை இறுக அணைத்தவன், தன் சூடான இதழ்களை முரட்டுத்தனமாக அவள் இதழ்களில் புதைத்தான்.

இத்தனை நாட்களாக இதழை மயிலிறகாய் தீண்டி விலகியவன், இன்று வன்மமாய் சுவைத்தான். அவள் கீழுதடு அவன் இதழ்களுக்குள் சிக்கிக்கொள்ள, உச்ச அதிர்ச்சியில் உறைந்து போனாள். திணறத் திணற ஒரு முத்த யுத்தம்.

அவள் இதழ்தேனில் மூழ்கி முத்தெடுக்க, அவள் மூச்சுக்காற்றுக்கு திண்டாடிப் போனாள். இடைவெளி

விட்டால் கிடைக்காதோ அவள் இதழ்த்தேன் என எண்ணியவன், தன் மூச்சுக்காற்றை வழங்கி, மேலும் மூழ்க, அவன் முத்தமிடும் வேகத்தில் மயங்கிப் போனாள்.

அவன் சட்டைக் காலரை பற்றியிருந்த அவள் கரங்கள் இரண்டும் அவன் முதுகை வளைத்துக் கொள்ள, ஒரு கட்டத்தில் அவன் பின்னந்தலையில் ஆதரவாக பயணித்து நெரித்தது.

சற்று நேரத்துக்கு முன்னர் அவள் மேனியில் அவன் பார்வை பயணித்த இடங்களை அவன் கரங்கள் தீண்டி அழுத்தமாக வருட, “ம்..., ம்ஹும்...” அவன் இதழ்களுக்குள் முனகியவள் மெல்லியதாக தன் மறுப்பை தெரிவிக்க, அவளை முழுதாக உணரத் துடித்தவன் அதை கண்டுகொள்ளவே இல்லை.

புலன்கள் அனைத்தும் உயிர்ப்பிக்கப்பட்டு இன்னும் இன்னும் அவளோடு மூழ்கிவிடு’ அவனுக்கு கட்டளையிட, அவன் கரங்கள் உணர்த்தும் செய்தியும், இதழ்கள் கொடுக்கும் அமுதமும் மொத்தமாய் அவளை கொள்ளையிடத் தூண்டியது.

அவன் கரங்கள் எல்லை மீறத் துவங்கிய அந்த நொடியில், தாங்கள் இருக்கும் இடம் அவளுக்கு நினைவுக்கு வர, அவன் தேடலுக்கு குழையும் தன் தேகத்தை இரும்பாக்கி, மனதை தெளிவாக்க முயன்றாள்.

ஒரு கட்டத்தில் அவன் கரங்கள் பயணித்த இடங்களை, அவன் இதழ்கள் தீண்ட முயல, தன் சக்தி மொத்தத்தையும் திரட்டியவள், தன்னை அவனிடமிருந்து பிய்த்து எடுத்தாள்.

நேராக நிற்க முடியாமல் கால்கள் தள்ளாட, அவன் வேட்கை பார்வையில் உருகிப் போனாள். ‘வா...’ அவன் கண்களில் வழிந்த ஏக்கம், கட்டளை, அவளால் அடிபணிய முடியவில்லை.

“பப்ளிக் பிளேஸ்ல..., இப்படித்தான் பிகேவ் பண்ணுவாங்களா...?” அவனை விட்டு சில அடி தூரங்கள்

விலகி நின்றவள் கத்த, அடங்க மறுத்த தன் உணர்வுகளோடு போராடி நின்றிருந்தான் பிரம்மா.

*****

# பகுதி – 34.

நள்ளிரவைத் தாண்டிய அந்த ஏகாந்தமும், பீச்சின் குளுமையும், அமாவாசை முடிந்து மூன்று நாளே ஆகியிருக்க, அந்த கடற்கரை மொத்தமும் இருளில் மூழ்கி இருந்தது. அலையின் பேரிரைச்சலும், காற்றின் தீண்டலும் மட்டுமே அங்கே இருக்க, பிரம்மா, உணர்வுகளின் பிடியில் சிக்கி தத்தளித்தான்.

சில நொடிகளுக்கு முன்னர் தன் கரங்களில் குழைந்தவள், தன் செய்கைக்கு ஆதரவளித்தவள், நொடிகளுக்குள் மாறிய விதம் அவனுக்குப் புரியவே இல்லை.

ஒரு பெண்ணாக சுற்றுப்புறம் உறைக்க, தங்கள் ஏகாந்த தனிமையை வெளிச்சம் போட முடியாமல் அவள் தயங்க, இருள் கொடுத்த தைரியத்தில் தன்னவளை உணர்ந்துவிடத் தவித்தான் பிரம்மா.

“காயு..., பிளீஸ்...” இதுவரை கெஞ்சியே பழகியிராதவன், முதல் முறையாக அவளிடம் கெஞ்ச, அவன் கைகளுக்குள் ஓடிபோய் புகுந்துவிடவே தவித்தாள். ஆனால், இருக்கும் சூழல் அதை தடுக்க,

“முதல்ல இங்கே இருந்து போகலாம்...” ‘வீட்டுக்குப் போகலாம் வாங்க’ என அழைக்க அவள் நாணம் தடுக்க, அந்த சூழ்நிலையை காரணம் காட்ட முயன்றாள்.

“ஏன்..., இந்த இடத்துக்கு என்ன...? என்னை அணு அணுவா கொல்றடி. சாயங்காலத்தில் இருந்து வெறி புடிச்சுப்போய் இருக்கேன். ஆனா நீ...” அவளை கொள்ளையிட முடியாத ஏக்கம், கோபமாகவே வெளிப்பட்டது.

“யார் கொல்றாங்க..., நீங்களா? நானா...?” மாலைமுதல் அவன் பார்வை அவளை உருக வைக்கையில் அவன் இப்படிச் சொன்னால் அவளும் என்னதான் செய்ய?

“நான் என்னடி பண்ணேன்...? எல்லாம் நீதான்..., சும்மா இருந்தவனை கட்டிப் புடிச்சு, முத்தம் கொடுத்து உசுப்பேத்தி விட்டுட்டு, இப்போ நல்லவ மாதிரி பேசுற...” வார்த்தைகள்

தடித்து தடுமாறி விழுவதை அவன் கவனிக்க மறந்தான். தன்னவளை மொத்தமாக கொள்ளையிட முடியாத விதம், வார்த்தையாக வெளிவந்தது.

“நான் என்னவோ ரோட்ல போன எவனையோ கட்டிபிடிச்சு முத்தம் கொடுத்த மாதிரி பேசறீங்க. நீங்களும் ஒரு ஆம்பளை தானே..., அதான் இப்படிப் பேசறீங்க..., இதையே நீங்க பண்ணா அது காதல், நாங்க பண்ணா கேவலம் இல்ல...” சொல்லிக்கொண்டிருக்கையிலேயே அவள் குரல் நடுங்கி, அவள் கண்ணீரை அவனுக்கு காட்டிக் கொடுக்க, தன் நெற்றியில் கை வைத்துக் கொண்டான்.

“காயு..., நான்...” தான் சொன்னதை அவள் தவறாக புரிந்துகொண்டதை உணர்ந்து, மறுத்து பேசப் போக,

“எதுவும் பேசாதீங்க..., அப்படி பேசினால் நான் இப்படியே போய் இந்த கடலில் விழுந்துடுவேன்” அவன் சொன்ன வார்த்தைகளை அவளால் சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

அவனோடு ஒன்றாக வாழ்ந்து, அவன் குணம் முழுதாக அறிந்த பிறகு அவன் இப்படி பேசியிருந்தால் எப்படி எடுத்திருப்பாளோ? ஆனால் இப்பொழுது அவன் வார்த்தைகளை சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை என்பது மட்டும் உண்மை.

அவள் வார்த்தைகள் கொடுத்த தாக்கத்தில் திகைத்துப் போனான். அவ்வளவு பெரிய வார்த்தைகளை அவள் உதிர்க்கும் அளவுக்கு தான் என்ன செய்தோம்? அவனுக்கு சுத்தமாகப் புரியவில்லை. ஒரு பெண்ணிடம் நீ என்னை அடித்துவிட்டாய், கோபப்படுத்திவிட்டாய் என்று சொன்னால் கூட அவளால் தாங்கிக்கொள்ள முடியும்.

ஆனால், தன்னவனை உரிமையாய் நெருங்கும் விதத்தை அவன் கேள்வி கேட்டால் அவளால் அதை தாங்கிக் கொள்ளவே முடியாது. மீண்டும் ஒரு முறை மறந்தும், அவளால் அவனை நெருங்க முடியாது. அப்படி ஒரு நிலையில் இருந்தாள் காயத்ரி.

பிரம்மாவுக்கோ அவளை எப்படி சமாதானம் செய்வது என்றே தெரியவில்லை. அவள் தன்னை நெருங்க வேண்டும், உரிமையாய் பழக வேண்டும் என்றுதான் அவன் விரும்புகிறான். ஆனால், உணர்வுகளின் பிடியில் தான் உரைத்த வார்த்தைகள் அவளை இவ்வளவு காயப்படுத்தும் என அவன் அறியவில்லையே.

வேகமாக ஜீப்புக்குத் திரும்ப, அங்கே தன் முகத்தை கைகளுக்குள் புதைத்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள் காயத்ரி. சற்று நேரத்துக்கு முன்னர் இருந்த நிலையும், இப்பொழுது இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்க, அவனுக்கு வெறுப்பாக வந்தது.

ஜாண் ஏறினால் முழம் சறுக்குவதுபோல், அவர்கள் உறவு ஒரு படியை தாண்டினால், அடுத்த நிமிடமே நாலு படி சறுக்கினால் அவனும் என்னதான் செய்ய?

குலுங்கி அழும் அவள் முதுகையே பார்த்திருந்தவனுக்கு, அவளை இழுத்து தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டு தன்னை விளக்கிவிடும் வேகம். அதைச் செய்ய முடியாமல் தடுத்தது அவளது வார்த்தைகள்.

அவன் ஜீப்பில் ஏறியதையும், தன் அருகில் அமர்ந்ததையும் உணர்ந்தவள், அவன் ஏதாவது சொல்வானா? செய்வானா? காதல் கொண்ட மனம் அவனது ஆறுதலையே விரும்பியது. சற்று நேரத்துக்கு முன்னர் தான் சொன்ன வார்த்தைகள் எதுவும் அவள் ஞாபகத்திலேயே இல்லை.

அவள் தன்னை நிமிர்ந்து பார்ப்பாளா என அவன் காத்திருக்க, அது நடக்காமல் போகவே, ஜீப்பை விருட்டென கிளப்பிக் கொண்டு சென்றான். ஜீப் அந்த ஆளரவமற்ற சாலையில் அம்பாய் பாய, அவன் வேகத்தில் மிரண்டாள் என்றே சொல்லலாம்.

அரைமணிநேரம் பயணிக்க வேண்டிய தூரத்தை பத்தே நிமிடத்தில் கடந்தவன், வீட்டுக்கு வந்த வேகத்தில், ஜீப்பில் இருந்து இறங்கப் போனவளிடம், “என்னை பேசக் கூடாதுன்னு சொல்லிட்ட, ஆனா ஒரே ஒரு விஷயம்…,

உன்னை எடுத்துக்கொள்ள முடியலையே என்ற என் கோபம் எப்படியோ வெளியேற, நீ அதை தப்பா புரிஞ்சுகிட்ட.

“என்னை கிஸ் பண்ணுன்னு சொன்ன நானே, நீ அதை செய்தப்போ, மொத்தமா அனுபவிக்க முடியாத கோபத்தில் எதையோ சொல்லப்போய், அது எப்படியோ முடிஞ்சுடுச்சு. இந்த உலகத்திலேயே என் நிழலைக் கூட தொடும் உரிமை உனக்கு மட்டும்தான் இருக்கு. அதை ஏன் நீ புரிசுக்க மாட்டேங்கற?” அவன் பெரும் முயற்சி செய்து, கொடுத்த தன்னிலை விளக்கத்தை கண்டு கொள்ளாதவளாக, ஜீப்பில் இருந்து இறங்கிச் சென்றாள்.

அவள் செல்லவே, தன்னை புரிந்துகொண்டாளா இல்லையா? என்னும் பெரும் வினாவோடு தன் அறைக்குச் சென்றான். அவன் வந்ததை கண்டுகொள்ளாமல் புடவையை உருவி கட்டிலில் எறிந்தவள், டவ்வலை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அடுத்த பத்து நிமிடங்களில் வெளியே வந்தவள், தன் கூந்தலைக் கலைத்து, நகைகளை கழட்டி என தன் வேலைகளை இயந்திரமாகச் செய்ய, அவனுக்கு அவளை எப்படி அணுக என்றே தெரியாமல் குழம்பிப்போய் நின்றிருந்தான்.

அவன் எதையோ சொல்லத் தவிப்பது புரிந்தாலும், அவன் முகம் பார்க்க மறுத்தாள். அவளது அந்த செய்கை அவனை மேலும் காயப்படுத்தியது எனச் சொன்னால் மிகையில்லை.

“இன்னும் நான் என்ன சொன்னால் உன் கோபம் போகும்?” வாழ்நாளிலேயே அவன் இப்படி கெஞ்சலாக பேசியே இருக்கமாட்டான் என்னும் விதத்தில் அவன் குரல் ஒலிக்க, அவளுக்குள் சிலபல தடுமாற்றங்கள்.

‘எதுக்குப் போகணும்…? அது போகாது…’ மனதுக்குள் வீம்பாக எண்ணிக் கொண்டாள். மனதின் ஓரம் அவன் அப்படி கெஞ்சிக்கொண்டு நிற்பது பிடித்து தொலைத்தது.

அவளது அந்த பிடிவாதம் அவனை கொந்தளிக்கச் செய்ய, எதுவும் செய்ய இயலாமல், உடை கூட மாற்றாமல் தானும் படுத்து விழிகளை மூடினான். உறக்கம் இருவருக்கும் கண்ணாமூச்சி ஆட, ஒரு வழியாக உறங்கிப் போனார்கள்.

காலையில் கண் விழித்தவனுக்கு, நேற்றைய இரவு நடந்தவை எல்லாம் நினைவுக்கு வர, சோர்வாக எழுந்து ஸ்டேஷனுக்கு கிளம்பினான். நேரம் பத்து மணியைக் காட்ட, ‘இவ காலேஜ் போயிட்டாளா?’ எண்ணியவன் கீழே இறங்கினான். கிச்சனுக்குள் பாத்திரம் உருளும் சத்தம் கேட்கவே, அவள் அங்கே இருப்பதை உணர்ந்து கொண்டான்.

பொன்னம்மாவை இன்று காலையில் வர வேண்டாம் என ஏற்கனவே அவள் சொல்லியிருந்ததால், அவராக இருக்க வாய்ப்பில்லை என்றே எண்ணினான். உள்ளே செல்லவா? வேண்டாமா? என மனதுக்குள் பட்டிமன்றம் நடத்தியவன், காலையிலேயே அவளது கோபத்தை கிளற வேண்டாம் என தயக்கமாக அங்கே இருந்த சாப்பாட்டு மேஜைக்கு முன்னால் அமர்ந்து கொண்டான்.

‘என்னத்த சமைக்கிறாளோ...?’ எண்ணுகையிலேயே அவள் சமையல் கலையை எண்ணி மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

உள்ளே, பால் காய்ச்சியவள், இட்லி ஊற்றி, சாம்பாருக்கு தாளிக்க கேசை பற்ற வைத்தவள், வாணலியை அடுப்பில் ஏற்றும் முன்பு, மேலே இருந்த கடுகு டப்பாவை எடுக்க முயன்றாள்.

அது மட்டும்தான் அவளுக்குத் தெரியும். அவள் அணிந்திருந்த சுடிதார் துப்பட்டாவில் கப்பென நெருப்பு பற்றிக்கொள்ள, ஒரு நொடி அவளுக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

துப்பட்டாவை கழுத்தை சுற்றி போட்டிருந்தவளால், சட்டென அதை உதறி எறியவும் முடியவில்லை. உதற முயன்றாலோ, அது கழுத்தில் சுற்றிக் கொண்டு வர மறுத்தது. எனவே,

நெருப்பை கையால் அணைக்க முயல, சிந்தட்டிக் துப்பட்டாவில் மளமளவென பற்றிய நெருப்பை அவளது வெறும் கையால் அணைக்க முடியுமா என்ன?

“ஸ்..., ஆ..., நெருப்பு..., பீமா..., பீமா...” அடுத்த நொடி பெரும் குரலில் கத்த துவங்கியிருந்தாள். அதற்குள்ளாகவே, அவளது சுடிதார் டாப்பில் நெருப்பு பற்றத்துவங்கியிருக்க, கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் உடை முழுவதும் நெருப்பு சூழ்ந்தது.

ஏற்கனவே நெருப்பின் வாசனையை உணர்ந்த பிரம்மாவின் நாசி ஏதோ விபரீதத்தை அவனுக்கு அறிவுறுத்த, அவள் குரல் கொடுத்த நொடியில் “காயு...” அலறியவன், அவளுக்கு முன்பாக நின்றிருந்தான். அந்த நேரத்திலும் அவளது பீமா என்ற அழைப்பு அவனை வருடிச் சென்றதை எதில் சேர்ப்பது என அவனுக்குத் தெரியவில்லை.

நொடியில் நிலைமையின் விபரீதம் புரிய, அருகே இருந்த இட்லி மாவை தூக்கி அவள்மேல் கொட்டியவன், அடுத்த நொடி, அவள் மேனியில் இருந்த உடையை கிழித்து எறிந்திருந்தான். கீழே கிடந்த துணியில் எரிந்த நெருப்பை காலால் மிதித்து அணைத்தவன், மறு நொடி, வலியால் துடித்துக் கொண்டிருந்த காயத்ரியை கைகளில் அள்ளிக் கொண்டான்.

“ஆ..., பீமா எரியுது..., ஆ...” அலறினாள்.

கீழே விருந்தினர் அறையில் இருந்த பாத்ரூம் டப் நீரில் அவளை அமிழ்த்தியவன், வலியில் துடித்த அவளை வேகமாக உலுக்கினான். “காயு..., காயு..., ஏண்டி இப்படி பண்ண...?” அவளாகவே எதையோ செய்து கொண்டாளோ என எண்ணியவன், கோபமாகவே கேட்டாலும், அவன் வாய் விடாமல் புலம்ப, அவள் உடம்பில் எங்கே எங்கே நெருப்பு காயம் இருக்கிறது என ஆராய்ந்தன அவன் விழிகள்.

“ஸ்..., அம்மா..., எரியுதே..., பீமா..., ஏதாவது பண்ணுடா...” கைகளை நீருக்குள் அமிழ்த்திக் கொண்டாள்.

“காயு…, உனக்கு எப்படிடி மனசு வந்துது?” அவளது அழுகையும் துடிப்பும் அவனை துவளச் செய்ய, எதுவும் செய்ய இயலாத நிலையை அடியோடு வெறுத்தான்.

ஆனாலும், அவன் முதல்கட்ட ஆராய்ச்சியில், அவளது இரு கைகளும் முழங்கை வரைக்கும் தீக்காயத்தால் வெந்திருக்க, முகத்திலும் சிறு காயம் இருப்பதைப் பார்த்தான். கூடவே, இடது தோளில் சிறு காயம் தெரிய, வேகமாக அவள் தேகம் முழுவதும் ஆராய்ந்தான்.

“ஸ்…, உஃப்…, உஃப்…” அவள் கைகளை வாயால் ஊத,

“காயு, கையை தண்ணிக்குள்ளே வை…, வெளியே எடுக்காதே…” குரல் கரகரக்க, அவள் கரத்தை நீருக்குள் அமிழ்த்தினான்.

பாத்ரூம் டப்புக்குள் அவள் இருக்க, வெளியே தரையில் மண்டியிட்டு அமர்ந்தவனது கண்களில் கண்ணீர் வழிந்தது. அவன் வாய் அவள் பெயரை விடாமல் உச்சரிக்க, கண்ணீர் அவன் பார்வையை மறைக்க, தன்னவளை பரிதவிப்புடன் வருடியது அவன் பார்வை.

அவனது எஸ்பி என்ற அடையாளம் மறைந்து, காயத்ரியின் கணவனாக மட்டுமே அப்பொழுது இருந்தான். பாத்ரூம் தரையில் அமர்ந்திருக்கிறோம் என்ற எண்ணம் சிறிதும் அவனுக்கு இல்லை. அவள் வலியில் இருந்து விடுபட வேண்டும் என்பது மட்டுமே அவன் எண்ணமாக இருந்தது.

அவனது அழைப்பும், தண்ணீர் சிகிச்சையும் சேர, அப்பொழுதுதான் அவன்மேல் கவனம் வைத்தாள். அந்த நேரம் காயத்ரி கண்டது, அழுது வடியும் பிரம்மாவின் முகத்தைத்தான். கூடவே, கைகள் இரண்டும் தீயாய் எரிய, முகமும் காந்தியது. கண்களும் எரிந்தது.

கைகள் இரண்டும் நீருக்குள் இருந்தாலும், அதன் தகிப்பை அவளால் தாங்க முடியவில்லை. “காயு…, ஏண்டி இப்படிப் பண்ண…? ஏன்…?” தான் அவள் பேச்சை மீறி பேசியதால் இப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாளோ என அஞ்சினான்.

அவன் கரங்கள் இரண்டும், அவள் மேனியில் வேறு எங்காவது காயம் இருக்கிறதா என தொட்டு உணர, பார்வையும் அவள் மேல் பாய்ந்தது. அப்பொழுதுதான், சட்டென அவளால் அந்த வித்தியாசத்தை உணர முடிந்தது.

காயம் கொடுத்த எரிச்சலால் அவள் கண்களில் தாமாகவே கண்ணீர் வழிய, அதைப் பார்த்தவன், “ரொம்ப எரியுதா? இப்போ ஹாஸ்பிடல் போய்டலாம்” அவளை தண்ணீரில் இருந்து தூக்க முயன்றான்.

அவளோ, கைகளை தன் மார்புக்கு குறுக்காக வைத்து தன்னை மறைத்தவள், அவன் முகம் காண மறுக்க, அவனுக்கு சுள்ளென கோபம் பெருகியது.

“இந்த நிலைமையில் கூட நான் உன்மேல் பாஞ்சுடுவேன்னு நினைக்கறியா? என்னை இதுக்கு மேலே நீ கேவலப்படுத்தவே முடியாது. என் சர்வீசில் இந்த மாதிரி ஆயிரம் உடம்பை நான் பாத்திருக்கேன், புரியுதா?” கோபம் கட்டுக்கடங்காமல் பெருக வெடித்தான்.

அவளோ பரிதவிப்பாய் அவன் முகம் பார்த்தவள், இதுவரை சூரியனுக்கு கூட காட்டாத தன் நிலையில், தன்னவன் முன்னால் இருப்பதை எண்ணி பெரும் சங்கடத்துக்கு உள்ளானாள். அவர்களுக்குள் எல்லாம் சரியாக இருந்து, தாம்பத்ய உறவுநிலை கடந்து இப்படி ஒரு சூழல் வந்திருந்தால் எப்படியோ..., ஆனால் இப்பொழுது..

அவன் முன்னால் இப்படி ஒரு நிலையில் இருப்பதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. நேற்றைக்கு ஒற்றை இதழ் முத்தத்துக்கே அப்படிச் சொன்னவன், இதற்கு என்ன சொல்வானோ? என்ற பயமும் சேர, இமைகளை அழுத்தமாக மூடி, கைகள் இரண்டையும் தன் மார்புக்கு குறுக்காக வைத்து மறைத்தாள்.

“இப்போ உன்னை உடனே ஹாஸ்பிடல் கூட்டு போகணும். என் கடமையை செய்ய விடு...” இயந்திரத்தன்மையில் உரைத்தவன், தன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு,

விருட்டென வெளியே சென்று, கையில் ஒரு டவ்வலோடு உள்ளே வந்தான்.

நீருக்குள் கை ஊன்றி கூட எழ முடியாமல் அவள் தடுமாற, இறுகிய முகத்தோடு அவளை நீருக்குள் இருந்து தூக்கிவிட்டு, அவள் மேனியில் டவ்வலை சுற்றியவன் அவள் மார்பில் அதை முடிச்சிட்டான்.

கூடவே, “சுடிதார் பாட்டம் ரிமூவ் பண்ணணும்..., ஈரத்தோட எங்கேயும் போக முடியாது...” அவன் சொல்ல, மறுத்துப் பேச முடியாத நிலையில் விக்கித்துப் போனாள்.

இரு கைகளும் உள்ளங்கை, விரல் துவங்கி, முழங்கை வரைக்கும் வெந்திருக்க, அதை வைத்துக் கொண்டு அவளால் நிச்சயம் எதையும் செய்ய முடியாது என்று தெரிந்து போனது.

இப்பொழுது அவள் பதிலுக்காக எல்லாம் அவன் காத்திருக்கவில்லை. கொஞ்சம் கூட தயங்காமல் அவள் உடை களைந்தவன், ஒரு நைட்டியை எடுத்து வந்து அவளுக்கு அணிவித்தான். கூடவே, “இந்த சின்னத் துணியெல்லாம் இப்போ போட முடியாது..., இல்ல போடணும்னா செய்யறேன்” கடமையைச் செய்யும் போர் வீரனாக அவள் முன்னால் நிற்க, அவளுக்கு கண்ணீர் கட்டுக்கடங்காமல் பெருகியது.

அவன் செய்கையில் போர்க்கால வேகம் இருக்க, அவள் இருக்கும் நிலையெல்லாம் அவன் கண்ணுக்கு மட்டுமல்ல, கருத்திலும் பதியவில்லை. இந்த நொடியே அவளது வலி போக வேண்டும், உடனடியே செய்ய வேண்டும்..., அது மட்டுமே அவன் கவனத்தில் இருந்தது.

சிலபல நொடிகளுக்குள்ளேயே அவளை அவன் தயார் செய்ய, அவன் வேகத்தில் வியப்பின் உச்சிக்கே சென்றாள் என்றுதான் சொல்லலாம். அடுத்த பத்தாவது நிமிடம் ஜீப்பில் பயணித்தார்கள்.

“ரொம்ப எரியுதா...? பத்து நிமிஷத்தில் ஹாஸ்பிடல் போய்டலாம்” உரைத்தவன், அருகே இருந்த

மருத்துவமனைக்கு உடனே அழைத்துச் சென்றான்.

அது ஒரு கிளினிக் என்பதால் பெரிதாக கூட்டம் எதுவும் இருக்கவில்லை. “எமர்ஜென்சி பஸ்ட்எய்ட் மட்டும் பண்ணுங்க..., பிறகு நாங்க வேற ஹாஸ்பிடல் பாத்துக்கறோம்” படபடத்தான்.

“சார்..., நான் டாக்டரை கேக்காமல் எதுவும் செய்ய முடியாது...” செவிலி உரைக்க, கொலைவெறியில் அவளை நெருங்கியவன்,

“ஒரு டிரெஸ்ஸிங் பண்ண எந்த டாக்டர் வேணும்? முதல்ல மருந்தை போடு” விட்டால் துப்பாக்கியை எடுத்து சுட்டுவிடுவேன் என அவன் நிற்க, அதற்குமேல் பேசுவாளா என்ன?

“என்ன மேடம், எப்படி ஆச்சு...? உள்ளே வாங்க...” வேகமாக உள்ளே அழைத்துச் சென்ற செவிலி, அவள் கைகளுக்கு மருந்திட, அவர்களோடு கூடவே உள்ளே வந்தவன், “லெப்ட் ஷோல்டர்ல ஒரு காயம் இருக்கு..., வேற எங்கே இருக்குன்னு பாருங்க...” அவன் உரைக்க, சங்கடமாக அவனை ஏறிட்டாள் காயத்ரி.

அவன் ஏற்கனவே போட்ட சத்தமும், அவனது யூனிபாமும் சேரவே, செவிலி அவனை வெளியே போகச் சொல்லவில்லை. முதலில் காயத்ரியின் காயங்களுக்கு மருந்திட்டவள், அதன் பிறகே அவனைப் பார்த்த செவிலி, “என்ன சார் இப்படி சொட்ட சொட்ட ஈரத்தோட வந்திருக்கீங்க?” அவள் கேட்ட பிறகுதான் காயத்ரியே அதை கவனித்தாள்.

“ம்ச்..., என்னை பிறகு ஆராயலாம்..., முதல்ல அவளைப் பாருங்க” சுள்ளென விழுந்தான். அதற்குமேல் அவள் பேசுவாளா என்ன?

காயத்ரியின் நைட்டியின் சிப்பை விலக்கி, அவளது இடப்பக்க தோளை அவள் ஆராய, மருந்திட்ட தன் கரத்தால், உடையை சீராக்க முயன்ற காயத்ரி, “ஸ்...” கை எரிச்சலில் முனகினாள்.

“மேம்..., கொஞ்சம் பிரீயா விடுங்க..., கையை ஸ்ட்ரெயின் பண்ணா இன்னும் எரியும்...” அவள் தோளிலும் மருந்திட்டாள்.

“வேற எங்கேயாவது எரியுதா?” காயத்ரியிடம் கேட்டவன், “என்ன நர்ஸ் நீங்க, இப்படித்தான் வேலை பாப்பாங்களா? காயம் வேற எங்கேயாவது இருக்கான்னு பாருங்க...” டென்ஷன், டென்ஷன்..., அது மட்டுமே அவனிடம் வெளிப்பட்டாலும், அதில் தெரிந்த காயத்ரியின் மீதானா காதல், அக்கறை பளிச்சிட, தன்னவனை ஆசையாகப் பார்த்தாள்.

“மேம்..., வேற எங்கேயாவது எரிச்சல் இருக்கா?” செவிலி கேட்க, பட்டென தன் தலையிலேயே அறைந்து கொண்டான். ‘இதுக்கு நீ கேக்காமலே இருக்கலாம்’ என்னும்படியான ஒரு முக பாவம். அந்த நிலையிலும் காயத்ரிக்கு சிரிப்பு வந்தது.

கை முழுவதும் எரிச்சல் சற்று மட்டுப்பட, அவன் செய்கையைப் பார்த்தவள் மெல்லியதாக சிரித்தாள்.

“நீ படிச்சுதான் இந்த வேலைக்கு வந்தியா...?” செவிலியிடம் சாட, நோயாளியை இப்படியா கவனிப்பார்கள் என்ற கோபம் பளிச்சிட்டது.

“கண் தான் எரியுது..., வேற எங்கேயும் காயம் இருக்குற மாதிரி தெரியலை” பரிதாபமாக விழித்துக் கொண்டிருந்த செவிலியை காப்பாற்ற குறுக்கே பாய்ந்தாள்.

“எவ்வளவு சார்ஜ் ஆச்சு...?” கேட்டவன், அவள் பதில் சொல்லும் முன்பாகவே, இரநூறு ரூபாயை எடுத்துக் கொடுத்தவன், “வா..., நாம ஷீபா டாக்டர் ஹாஸ்பிடல் போகலாம். கண் ரொம்ப எரியுதா? கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ. கண்ணை மூடிக்கோ, திறக்காதே...” ஒரு குழந்தையை சமாதானம் செய்வதுபோல் உரைத்தான்.

அடுத்த அரைமணி நேரத்தில் ஷீபாவின் மருத்துவமனையில் இருந்தவன், அங்கே இருந்த ஸ்பெஷலிஸ்ட் டாக்டரிடம் அவளைக் காட்டி, கை எரிச்சல்

குறையவும், காயம் சரியாகவும் மாத்திரை மருந்து எழுதி வாங்கிவிட்டு, அவள் கண்ணையும் காட்டினான்.

“ஒரு ரெண்டு நாள் ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகுங்க..., ஃபயர் புகையால் இன்னர் பார்ட்ல ஏதாவது இன்பெக்ஷன் இருக்கான்னு செக் பண்ணிடலாம்” மருத்துவர் உரைக்க, ‘சரி’ என வேகமாக தலை ஆட்டினான்.

பிரம்மாவின் முகம் பாறைபோல் இருக்க, அவன் மனதுக்குள் என்ன நினைக்கிறான் என்றே அவளுக்குத் தெரியவில்லை. இரு கைகளும் ஒன்றுபோல் தீக்காயத்துக்கு இரையாகி இருக்க, குறைந்தது இரண்டு மூன்று நாட்களுக்காவது அவன் துணை தனக்கு முழுதாக வேண்டும் என்பது அவளுக்கு புரிந்து போனது.

விரல்களை மெதுவாக அசைத்தாலே காயம் பெரும் வலியைக் கொடுக்க, அதை வைத்துக் கொண்டு அவளது அவசர தேவைக்கு கூட எதுவும் செய்ய முடியாதே என எண்ணி கலங்கிப் போனாள்.

“எத்தனை நாள்ல சரியா போகும் டாக்டர்...” அவள் கேட்க,

“புல் ரெஸ்ட்ல இருந்தால் பத்து நாளில் காயம் கொஞ்சம் ஆறிடும். ஆனாலும் முழுதாக ஆற நாள் ஆகும்” அவர் சொல்ல, திடுக்கிட்டு போனாள்.

செவிலியை அழைத்து, காயத்ரிக்கான அறையை ஒதுக்கச் சொன்ன மருத்துவர் அவர்களை அனுப்ப, அறைக்கு வந்து சேர்ந்தார்கள். பிரம்மா இன்னும் ஈர உடையிலேயே இருக்க, செவிலி வெளியே செல்லவே, “வீட்டுக்குப் போய் ட்ரெஸ் மாத்திக்கோங்க...” அவன் முகம் பார்த்து உரைக்க முடியாமல், தரை பார்த்தே உரைத்தாள்.

“எனக்குத் தெரியும்...” வள்ளென விழுந்தவன், அறைக்கதவை இறுக பூட்டி தாழ் போட்டுவிட்டு, பெரும் கோபமாய் அவளை நெருங்கினான்.

“இப்படி ஒரு காரியத்தை செய்ய உனக்கு எப்படி மனசு வந்தது...? என்னோடு வாழாமல் இருக்க, உயிரை விடவும்

தயாராகிட்டியா? இல்லையென்றால் என்னை பழிவாக இப்படியெல்லாம் செய்யிறியா? மனசு வலிக்குதுடி.

“உனக்கு இந்த காயம் வலிக்குமேன்னு நினைத்தாலே என்னால் தாங்க முடியலை, ஆனா நீ..., என்னைப் பழிவாங்க இப்படி..., ச்சே...” ஆத்திர மிகுதியில் கொந்தளித்தவன், வார்த்தைகளை கவனமாக கையாள வேண்டும் என நேற்று இரவு எடுத்த முடிவு நினைவுக்கு வர, வேகமாக கதவைத் திறந்து வெளியேறினான்.

காயத்ரியோ அதிர்ந்து போய் அமர்ந்து விட்டாள். ‘என்னது..., அவரைப் பழிவாங்க இப்படி...’ அவளால் நினைக்கவே முடியவில்லை. அவனோடு ஒன்றாக வாழ வேண்டும் என அவள் தவித்திருக்க, அவனோடு வாழ விரும்பாமல் தான் இப்படி செய்துவிட்டோம் என நினைத்துக் கொண்டானே, அவன் நினைப்பை எப்படி மாற்றவென தெரியாமல் தடுமாறினாள்.

வெளியே வந்தவனுக்கோ, ஆத்திரம் என்றால் அப்படி ஒரு ஆத்திரம், கோபம்..., அதை எப்படி கட்டுப்படுத்த என்றும் தெரியவில்லை. அங்கேயே இருந்தால் அவளை அதிகம் காயப்படுத்திவிடுவோம் என்பது புரிய வெளியே இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

அறைக்குள் அவள் தனியாக இருப்பாளே என்ற நினைவு கொல்ல, தன் அலைபேசியை எடுத்து யாழினிக்கு அழைத்தான். “எஸ் சார்...” அவள் அந்த பக்கம் அலைபேசியை எடுத்த பிறகுதான், அவளிடம் விஷயத்தை எப்படிச் சொல்ல எனத் தெரியாமல் தடுமாறிப் போனான்.

“யாழினி..., செட்டிநாடு ஹாஸ்பிடல் வரைக்கும் கொஞ்சம் வர முடியுமா? பெர்சனல்” இதற்குமுன் அவளிடம் ஏதாவது உதவி கேட்டிருக்கிறோமா? இப்பொழுது இதைக் கேட்டால் என்ன நினைப்பாள்? என்னும் நினைவே கொடுமையாக இருக்க அதை அடக்கியவன் அவள் பதிலுக்காக காத்திருந்தான்.

“இன்னும் அரைமணி நேரத்தில் அங்கே இருப்பேன் சார்...” அந்த பக்கம் அவள் அதிர்ந்து போயிருப்பது அவளது பேச்சிலேயே தெரிய, அலைபேசியை பேசாமல் வைத்து விட்டான்.

அவள் பரபரப்பாக வந்து சேரும் வரைக்கும் அங்கே இருந்த இருக்கையை விட்டு அவன் அசையவே இல்லை. “சார்...” அவன் முன்னால் ஒரு சாதாரண சுடிதாரில் அவள் நிற்க, ஒரு நொடி புருவம் சுருக்கி அவன் அவளைப் பார்க்கவே,

“நீங்க பெர்சனல்ன்னு சொன்னீங்க அதான்...” அவன் பார்வைக்கு அவள் விளக்கம் கொடுக்க, தலையை அசைத்தவன், “என் வைஃப்க்கு சின்ன பயர் ஆக்சிடெண்ட், நான் வீட்டுக்கு போயிட்டு வர்ற வரைக்கும் அவளுக்கு துணைக்கு இருக்க முடியுமா?” இப்படி கேட்க வேண்டி இருக்கிறதே அவன் வருந்துவதை அவன் குரல் எடுத்துக் காட்ட, அவன் முகமோ, அதீத கவலையை பிரதிபலித்தது.

‘ஹப்பா..., மனுஷன் இப்போதான் முகத்தில் எதையோ காட்டறார். இல்லன்னா’ “யாழினி, முடியாதுன்னா சொல்லிடுங்க..., நான் வேற யாரையாவது பாத்துக்கறேன்” அவள் தன் கேள்விக்கு பதில் சொல்லாமல் போகவே அவளைக் கலைத்தான்.

“நோ சார்..., மேம் எங்கே...” மானசீகமாக தன் தலையிலேயே அடித்தவள் விஷயத்துக்கு வந்தாள்.

தன் கையை அறை பக்கம் காட்டியவன், வெளியே இருக்கையிலேயே அமர்ந்து கொண்டான். அவன் செய்கையை புரியாமல் பார்த்தவள், ‘வீட்டுக்கு போறேன்னு சொல்லிட்டு இங்கேயே உக்காந்துட்டார். ட்ரெஸ் வேற ஈரமா இருக்கு’ எண்ணியவள் மறந்தும் அவனிடம் எதையும் கேட்கவில்லை. அவனிடம் கேட்டு யார் வாங்கி கட்டிக் கொள்வதாம்?

அறைக்குள் நுழைந்தவளை வர வேற்றது காயத்ரியின் அழுத முகமே. அறைக்கதவு திறக்கப்படவே, ‘பிரம்மாவோ’ என ஆவலாக எதிர்பார்த்தவள், உள்ளே வந்த யாழினியை

நிச்சயம் எதிர்பார்க்கவில்லை. ‘என்னை விட்டுவிட்டு போய்விட்டாரா?’ எண்ணியவள் தவிக்க,

“மேம்..., சார் வெளியேதான் இருக்காங்க கூப்பிடவா?” அவள் தவிப்பை கண்டுகொண்டவளாக யாழினி கேட்டாள்.

‘இந்த போலீஸ்காரங்களே இப்படித்தானோ? மனசுக்குள் நினைப்பதையும் படிக்கிறது?’ எண்ணியவள் மனம் நிம்மதியடைய, மறுப்பாக தலை அசைத்தாள்.

“என்ன ஆச்சு மேம்...” கட்டிலுக்கு அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தவளாக கேட்டாள்.

“சமைக்கும்போது தெரியாமல் நெருப்பு பத்திகிச்சு. அதை கையால் அணைக்க ட்ரை பண்ணேன்..., அதான்...” தன் முட்டாள்தனத்தை நொந்தவளாக பதில் கொடுத்தாள்.

“சாரை நான் இப்படி பாத்ததே இல்லை. என்ன பிரச்சனை வந்தாலும் சும்மா கண்(gun) மாதிரி நிப்பார். இப்போ என்னனா அப்படியே ஓஞ்சு போய் நிக்கறார்...” யாழினி உரைக்க, தன்னவனை கண்களால் காண உள்ளம் பரபரத்தது.

அவளது உடையாக பச்சை வர்ண மருத்துவமனையின் உடை தழுவியிருக்க, அந்த ஒற்றை உடையில் படுக்கையில் இருந்து இறங்கி வெளியே செல்லும் தைரியம் இருக்கவில்லை. பின்னால் மொத்தமே இரு பட்டன் மட்டுமே போடப் பட்டிருக்க, காற்றுக்கு உடை கலைந்தால், அதை தடுக்க கூட முடியாதே என்ற அவளது எண்ணம், படுக்கையை விட்டு அசைய விடவில்லை.

சற்று நேரம் பொறுத்த பிரம்மா, அறைக்கதவை தட்டிவிட்டு உள்ளே வந்தவன், “நான் வீட்டுக்கு போயிட்டு வர்றேன்...” அவள் முகம் பாராமல் உரைத்தவன், “யாழினி, பாத்துக்கோங்க...” அவளிடம் உரைக்க, யாழினி மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

அவன் செல்லவே, “என்னவோ கைக்குழந்தையை என்கிட்டே விட்டுட்டு போற மாதிரி பரிதவிக்கறார்...” கேலி

செய்ய, காயத்ரியின் மனம் பனிச்சாரலாய் நனைந்தது. கூடவே, அவன் தன் முகம் காண மறுக்கும் செய்கை, அதை தாங்கவும் முடியவில்லை.

“மேம்..., நீங்க படுத்துக்கோங்க..., நான் இங்கேயே இருக்கறேன்...” யாழினி உரைக்க, அமைதியாக படுத்துக் கொண்டாள். எவ்வளவு நேரமோ தெரியாது, அவள் கண் விழிக்கையில் அவள் அருகில் அமர்ந்திருந்தான் பிரம்மா.

கை ஊன்றி எழ முயன்றவள், தன் காயத்தை ஒரு நொடி மறந்திருக்க, அவள் எழ முயற்சி செய்கையிலே ஒரு மழலையை தூக்கி அமர வைப்பதுபோல் அமர வைத்திருந்தான் பிரம்மா.

‘பாத்து செய்ய மாட்டியா...?’ என்னும் கண்டிப்பு அவன் பார்வையில் தெரிய, அவன் நெஞ்சுக்குள் ஒடுங்கிக் கொள்ளும் வேட்கை அவளிடம்.

“கை எரிச்சல் இப்போ பரவாயில்லையா? கஷ்டமா இருக்கா?” அக்கறையாக அவன் வினவினாலும், அதில் இருந்த சிறு ஒதுக்கம், இறுக்கம் அவள் நெஞ்சை சுட்டது.

“பீமா..., நான் ஒண்ணும்...” அவள் தன்னிலை விளக்கம் கொடுக்க முயல,

“பசிக்குதா சாப்பிடுறியா...?” அவள் அருகில் இருந்து அகன்று உணவு இருக்கும் பக்கம் நகர்ந்தான்.

“பீமா..., ஒரு நிமிஷம்..., அது...” அவள் மீண்டும் துவங்கவே,

“ரெஸ்ட் ரூம் போகணுமா? நான் வரவா இல்ல சிஸ்டரை கூப்பிடவா?” உன் பேச்சை நான் கேட்கவே மாட்டேன் என்பதுபோல் நடந்து கொண்டான்.

அவனது அந்த பேச்சு மனதை தாக்க, “என் பக்கம் என்ன நியாயம்னு கேக்கவே மாட்டீங்களா?” பரிதாபமாக கெஞ்ச,

“நீ நேத்தைக்கு கேட்டியா...? நான் அவ்வளவு சொன்ன பிறகும் இப்படி பண்ணி வச்சிருக்கன்னா...?” தன் தலையை

அழுத்தமாக கோதி, தன் கோபத்தை கட்டுப்படுத்த முயன்றான்.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை..., இது..., தெரியாமல்...”

“நெருப்பு பிடிக்கிறது உனக்கு தெரியலைன்னு என்னை நம்ப சொல்றியா? நான் ஒண்ணும் விரல் சூப்புற பப்பா இல்லை. அதுவும் கை இவ்வளவு தூரம் வெந்து போயிருக்கு. மனசில் எவ்வளவு வன்மம் இருந்திருந்தால், இப்படி ஆகும் வரைக்கும் அசையாமல் இருந்திருப்ப?

“அப்படி இந்த உலகத்தில் எந்த ஆம்பளையும் ஆசைப் படக் கூடாததையா நான் ஆசைப் பட்டேன். என் பொண்டாட்டியை தொடணும்னு நான் ஆசைப்படக் கூடாதா? அதுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? வேண்டாம்..., என்னை பேச வைக்காதே...” அவன் கழுத்து நரம்புகள் புடைக்க, அவன் அழுத்தமாக அவளைத் திரும்பிப் பார்க்க, அவன் டென்ஷன் ஆவதை அவளால் தாங்க முடியவில்லை.

வார்த்தைகளை அவள் வெளியிட முடியாதவாறு அவன் தோற்றம் மிரட்டவே, ‘என்னை புரிஞ்சுக்கோயேன்...’ அவள் பார்வை அவனிடம் கெஞ்சியது. அதை பிடிவாதமாக படிக்க மறுத்தவன், “ரெஸ்ட் ரூம் போகணுமா? பெட் பேன் வைக்கவா...?” அவன் முன்னே வர, வேகமாக படுக்கையில் இருந்து இறங்கி நின்றாள்.

‘எனக்கு கால் நல்லாத்தான் இருக்கு’ வேகமாக பாத்ரூமை நோக்கி நகர்ந்தவள், ஆள்காட்டி விரலுக்கும், கட்டை விரலுக்கும் நடுவில் கொண்டியைப் பிடித்து திறக்க முயன்றாள். விரல் நுனி வரைக்கும் நெருப்பில் பொசுங்கியிருக்க, எரிந்தது.

வேகமாக அவள் அருகே வந்தவன், தாழை விடுவித்து அவளை உள்ளே போகச் சொன்னவன், “உள்ளே தாழ் போட ட்ரை பண்ணாதே. ஏதாவது ஹெல்ப் வேணும்னா என்னைக் கேள்..., இல்லன்னா சொல், சிஸ்டரை வரச் சொல்றேன்...” கதவை பூட்ட விடாமல், அவளிடம் உரைக்க, அமைதியாகவே நின்றிருந்தாள்.

“என்ன…?” அவள் அசையாமல் நிற்க வெடுக்கென கேட்டான்.

“உங்களுக்கு கஷ்டமா இருந்தால் நீங்க வீட்டுக்கு போங்க…, நான் பாத்துக்கறேன்” அவன் சிஸ்டரை வரச் சொல்லவா எனக் கேட்டது அவளுக்கு ரசிக்கும்படியாக இல்லை எனவே இறுக்கமாகவே பதில் கொடுத்தாள்.

அவள் அவ்வாறு சொல்லவே…, அவளை தள்ளிக்கொண்டு உள்ளே வந்தவன், நொடியில், நாசூக்காக அவள் உடை விலக்கி, அந்த வெஸ்டர்ன் டாய்லெட்டில் அவளை அமர வைத்தவன், “நான் பிரம்மா…, புரியுதா?” உனக்கு எல்லாம் நான் செய்வேன் என்பதுபோல் அவளுக்கு முதுகுகாட்டி அவன் நிற்க, அவன் நிற்கையில் எப்படி அவள் தன் அவசர தேவையை நிறைவேற்றுவதாம்?

‘பிரம்மா…’ அவன் பெயரை உச்சரிக்கையிலேயே மிரட்டும் அந்த செய்கை, அதில் தெரியும் ஆளுமை…, எப்பொழுதையும்போல் அவளை கொள்ளை கொண்டது. அவனது பெயரை மனதுக்குள் கூட சாதாரணமாக அவளால் உரைத்துவிட முடிந்ததில்லை.

அவள் நிலை உணர்ந்தவன், தானாகவே வெளியே சென்று கதவை பூட்டிக் கொள்ள, நிம்மதியாக மூச்சு விட்டவளுக்கு, இப்படி ஒரு கணவனை எண்ணி நெஞ்சம் விம்மியது. ‘இந்த அன்பை முழுதாக அனுபவிக்காமல் அவனை தவிக்க விட்டு, நீயும் தவிக்கிறாயே?’ தன்னையே கடிந்து கொண்டவள், அவன் வெளியே காத்திருப்பது புரிய, வேகமாக எழுந்து வெளியே வந்தாள்.

அவளுக்கான உணவோடு தயாராக இருந்தவன், ஸ்பூனால் உணவை எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டான். அப்பொழுதும் அவன் யூனிபாமை மாற்றியிருக்கவில்லை. அதை உணர்ந்தவள், “அந்த ஈர டிரெஸ்ஸ இன்னும் மாத்தவே இல்லையா? ஏற்கனவே உங்களுக்கு ஜுரம் வந்து ரெண்டு நாள்தான் ஆகுது. இப்படியே இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?” அவள் கேட்க, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவன் முகத்தில் தெரியும் இறுக்கம்..., அது சிறிதும் குறையாததை கண்டவளுக்கு எப்படி அவனை அணுகுவது என்றே தெரியவில்லை. அவன் கரத்தை பற்றிக் கொள்ளலாம் என்றால், இரண்டும் வெந்துபோயிருக்க, அதைச் செய்ய முடியாமல் திணறினாள்.

டெஸ்ட் ரிசல்ட் எல்லாம் வர, அதில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை என அறிந்த பிறகுதான் சற்று நிம்மதியானான். ஆனாலும், கை எரிச்சலில் அவள் படும் துன்பம்..., தலை முடியை கூட ஒதுக்க முடியாமல், கையை அவசரத்துக்கு உபயோகிக்க முடியாமல் என அவள் திணற, உள்ளுக்குள் துடித்துப் போனான்.

அன்றைய நாள் எப்படியோ ஓடிப் போக, மறுநாள் காலையில் இன்னும் அதிக எரிச்சலை அனுபவித்தாள். கை எரிச்சல் தாங்காமல், “பீமா, ரொம்ப வலிக்குது...” அவனிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வாளாம்? தன்னை மீறி புலம்ப, அப்படியே அவளை இறுக கட்டிக்கொண்டு தன்னோடு புதைத்துக் கொள்ள எழுந்த ஆவலை அப்படியே அடக்கினான்.

ஆனால் அவன் எண்ணியதை அவனது முகம் எடுத்துக் காட்ட, ‘எல்லாம் உன்னால் தானேடி...’ கடிக்கத் துடித்த நாவை அடக்கினான்.

கையை அழுத்தமாக கட்டிக் கொண்ட அவன் செய்கை, கூடவே, அவன் கண்களில் வந்து போன வலி, தொண்டைக்குழி ஏறி இறங்க தன் உணர்வுகளை கட்டுப் படுத்தியவன், “காலைல போடவேண்டிய டேப்லட் சாப்ட்டா கொஞ்சம் சரியா போகும். ஆயின்மெண்ட் போட்டு விடறேன்...” உரைத்தவன், பஞ்சில் ஆயின்மெண்டை எடுத்துப் போட, அவன் பணிவிடையை ஏற்க முடியாமல் தடுமாறிப் போனாள்.

“பீமா, நர்ஸை வரச் சொல்றீங்களா?” சங்கடமாக வினவ,

“என்னை என்னதான்டி செய்யச் சொல்ற? உன் வலியை வாங்கிக்க முடியும்னா எப்பவோ அதை செய்திருப்பேன்.

இப்போ...” அவன் அழுத்திய விதத்தில் ஆயின்மெண்டின் மூடி தெறித்து தூரப்போய் விழ, ஆயின்மெண்ட் மொத்தமும் படுக்கையில் சிதறியது.

“பீமா...” அவன் படும் துன்பம் தாளாமல் அழைக்க, பற்களை அழுத்தமாகக் கடித்து, அவன் தன் வார்த்தைகளை தடுப்பது தெரிந்தது.

அதே நேரம் அறைக்கதவு தட்டப்பட, செவிலி உள்ளே நுழைந்தாள். “ப்ரெஷ் பண்ண ஹெல்ப் பண்ணவா? பாடி வாஷ் பண்ணி விடறேன்” அவள் சொல்ல, அவன் மறுக்கும் முன்பே, “வாங்க...” அவளை அழைத்திருந்தாள் காயத்ரி.

அவன் மறுப்பாக அவளைப் பார்க்க, காயத்ரி மறந்தும் அவனைப் பார்க்கவில்லை. “சார், கொஞ்சம் வெளியே இருங்க...” செவிலி உரைக்க, ஒரு இயலாத மனநிலையில் வெளியேறினான்.

அடுத்த ஒரு மணி நேரம், காயத்ரிக்கு பல் துலக்குவது முதல், காலைக்கடன்கள் முடிக்க, தலை முடியை ஒதுக்கி, வெந்நீர், டவ்வல் பாத் எடுக்க வைத்து, என அனைத்தையும் முடித்துவிட்டே அவள் வெளியேறினாள்.

அதற்குள்ளாக காலை உணவை வாங்கி வந்தவன், இட்லியை கட் பண்ணி, ஃபோர்க் போட்டு அவள் அருகில் வைக்க, அவன் முகத்தையே அசையாமல் பார்த்திருந்தாள்.

“நீங்க சாப்ட்டீங்களா...?” அவள் கேட்க,

“ஷ்...” ‘சாப்பிடு...’, என்னும் விதத்தில் அவன் உரைக்க, அசையாமல் அமர்ந்திருந்தாள்.

அவள் பிடிவாதம் கண்டு சலிப்பாய் உணர்ந்தவன், “இப்போ அந்த நர்ஸை வரச் சொல்லணுமா?” எரிச்சலாய் கேட்டான்.

அவன் கோபம் அவளுக்குப் புரிய, “ஏன், நீங்க ஊட்ட மாட்டீங்களா?” அவனிடம் திருப்பிக் கேட்டாள்.

“சத்தியமா உன்னை புரிஞ்சுக்க முடியலடி. அப்படியே மண்டை காய வைக்கிற. மனசுக்குள் இருப்பதை வெளியே

சொல்லித்தான் தொலையேன். காலையில் எல்லாம் அவதானே செய்தா..., இப்போ மட்டும் என்ன?" சுள்ளென விழுந்தாலும், உணவு தட்டை தன் கரத்தில் எடுத்துக் கொண்டான்.

அவளுக்கு உணவை ஊட்டியவன், தன் கையில் ஈரம் தொட்டு, அவள் வாயைத் துடைக்க, அவன் கரத்தை இறுக பற்றிக்கொண்டு, அவன் நெஞ்சில் சாய அவள் தேகம் பரபரத்தது. அவனோ, தன் பணிவிடையை முடித்தவன், விலகிச் சென்று அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

"நீங்க சாப்பிடலையா...?" அவள் கேட்க, 'எனக்குத் தெரியும்...' என்பதுபோல் இறுக்கமாக அவன் அமர்ந்திருக்க, படுக்கையில் இருந்து இறங்கியவள், உணவுப் பொட்டலம் இருந்த கவரை, கை வலியை பொறுத்துக் கொண்டு பிரிக்க முயன்றாள்.

அதைப் பார்த்தவன், "ஏய்..., ரெஸ்ட் எடுக்காமல் என்ன பண்ற...?" அவளை அலேக்காக தூக்கியவன் படுக்கையில் சென்று அமர்த்தினான். அப்படியே அவன் தோளில் சாய முயல, வேகமாக அவளை விட்டு விலகி நின்றான். அவன் செய்கையில் மனம் துவண்டாலும், அதை மறைத்தவள்,

"அப்போ முதல்ல சாப்பிடுங்க..." பிடிவாதமாக உரைக்க,

மறுக்காமல் சென்று உணவை உண்டவன், மறந்தும் அதன் பிறகு அவள் அருகே நெருங்கவில்லை. அவளுக்கோ..., அவன் நெஞ்சில் சாய்ந்து கொள்ளும் எண்ணம்..., அவன் நெஞ்சுக்கூட்டின் ஆறுதல் வேண்டும், அவன் இதயத் துடிப்பின் தாலாட்டு வேண்டும்..., மனம் தவித்தது.

மதியம் தக்காளி சாதம் வாங்கி வந்து ஊட்டியவன், மீண்டுமாக அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவளுக்கோ, அவன் தன் அருகே வேண்டும் கண்கள் தன் விருப்பத்தை அவனிடம் வெளிப்படுத்த, அவன் அசைந்து கொடுக்கவே இல்லை.

இன்னுமே அவள் வேண்டும் என்று செய்துவிட்டாள் என்றுதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். எனவே அவளை மன்னிக்க அவன் தயாராக இருக்கவில்லை. மாலை வரைக்கும் அவளிடம் ஒரு வார்த்தை பேசாமல், கடமையே கண்ணாக இருக்க, அதற்குமேல் அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

“பீமா, ஏண்டா இப்படி பண்ற...?” அழுகையும், விம்மலுமாக அவள் வெடிக்க, அவளை அசையாமல் பார்த்தான். அவளது ‘பீமா’ என்ற அழைப்பு அவள் வாயில் இருந்து வரும் வேளைகளில் எல்லாம், அவள் நெகிழ்ந்து போயிருப்பதை கண்டு கொள்பவன் தானே..., இப்பொழுதும் அவள் நிலை புரிய,

“நான் என்ன பண்ணேன்...? உன்னை விட்டு நான் தள்ளி இருக்கணும்னு நீதானே ஆசைப்பட்ட..., அப்படித்தான் இருக்கிறேன். இன்னும் நெருங்கினால் நீ விபரீதமா எதையாவது செய்துகிட்டா அதை தாங்கும் சக்தி எனக்கு இல்லை” ஒரு இயலாமை கலந்த கோபம் அவனிடம்.

“லூசு மாதிரி உளறாதே பீமா. உன்னை புடிக்காமல்தான் உன்னோட இத்தனை மாசம் குடும்பம் நடத்துறேனா? அதுவும் நீயே ‘போ’ன்னு சொன்ன பிறகு கூட போகாமல் இருக்கேனே ஏன்...? கொஞ்சம் கூட யோசிக்கவே மாட்டியா?” படபடவென பொரிந்தாள்.

“நேத்து ஏண்டி பிறகு அப்படி பேசின?” வேகமாக அவள் அருகே வந்தான்.

“பப்ளிக் பிளேஸ்ல அப்படிப் பண்ணா, உங்களை கொஞ்சுவாங்களா?”.

“எதுடி பப்ளிக் பிளேஸ்...? இது என்னோட சொந்த பிளேஸ்டி...” அவள் முகத்துக்கு நேராக குனிந்தவன், பார்வையை ஒரு நொடி இடம் மாற்றி, அவள் விழிகளை கவ்விக் கொண்டு, கிசுகிசுப்பாய் உரைக்க, ஒரு நொடி புரியாமல் விழித்தவள், புரிந்த பிறகோ முகம் சிவந்தாள்.

“ச்சீ…” அவள் முகத்தை திருப்பிக் கொள்ள, அவளை விட்டு அகன்று நின்றான்.

அவன் விலகலை உணர்ந்தவள், கேள்வியாகப் பார்க்க, “இப்போ இப்படி பேசுவ, அடுத்த நிமிஷமே மாறிடுவ…, நான் எதுக்கும் விலகியே இருக்கறேன்” மேலும் இரண்டு அடி பின்னால் நகர்ந்தான்.

அதைப் பார்த்து கண் கலங்கியவள், “இப்போ உன் தோள்ள சாஞ்சுக்கணும் போல இருக்கு…, இதுக்கு நான் என்ன செய்ய?” விசும்பலாக வினவ, அடுத்த நொடி, காற்றுகூட புக முடியாத அளவுக்கு அவள் முகத்தை தன் நெஞ்சில் புதைத்திருந்தான்.

“நீ சாஞ்சுகிட்டா வேண்டாம்னு சொல்வேனா?” அவள் பின்னந்தலையை தாங்கியவன், இரு கரங்களுக்குள் அவளை பொதிந்து கொள்ள, சுகமாய் அவன் நெஞ்சில் புதைந்து போனாள். அந்த உரமேறிய நெஞ்சின் இதம், அந்த கதகதப்பு, பாதுகாப்பு, ஆறுதல்…, இன்னும் தன் முகத்தை அழுத்தமாக புரட்ட, அவன் வாசனையை ஆழ்ந்து அனுபவித்தாள்.

“சாரி…, நான் வேணும்னு பண்ணலை…, எதிர்பாராமல்தான் நெருப்பு பத்திகிச்சு” அவள் முனக,

“சரி…” உடனே ஒத்துக் கொண்டான்.

“நேத்து நீங்க அப்படி பேசினது கஷ்டமா இருந்துச்சு…” மெல்லியதாக விசும்பியவள், இன்னும் அவனுக்குள் புக முயன்றாள்.

அவள் செய்கையை ரசித்தவாறே, “நீ வேணும்னு தோணினால் என்னால் கண்ட்ரோல் பண்ணிக்க முடியலை. கொஞ்ச நாளைக்கு முன்னாடி வரைக்கும் அப்படி இல்லை. ஆனா இப்போ…, முடியல காயு…” அவன் தன் நிலையை விளக்க, வேகமாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

அதில் வழிந்த காதல்…, பரிதவிப்பு, ஒருவித தேடல்…, “என்னை வீட்டுக்கு கூட்டி போய்டுங்க…” ‘என்னை

எடுத்துக்கொள்...’ என்னும் விதமாக உரைக்க, அதை உணர்ந்தவன், அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

“இதை ஏன் நேத்து சொல்லலை...?” அவன் குறைபட, அதை அவள் எப்படிச் சொல்வதாம்? கண்களில் நீர் நிறைய, அவன் நெஞ்சுக்குள் தஞ்சம் புகுந்தாள்.

அதே நேரம் அறைக்கதவு தட்டப்பட, அவளை விட்டு விலகியவன், கதவைச் சென்று திறக்க, உள்ளே வந்த கலைவாணி, காயத்ரியை ஒரு பார்வை பார்த்தவர், அவள் கண்களில் வழிந்த கண்ணீரைக் கண்டு துணுக்குற்றார்.

அடுத்த நிமிடம் அவரது கரம் இடியென பிரம்மாவின் கன்னத்தில் இறங்கியது.

*****

# பகுதி – 35.

அறைக்குள் வந்த கலைவாணி இப்படி ஒரு செய்கையைச் செய்வார் என்று காயத்ரி சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவரை அழுத்தமாக ஏறிட்ட பிரம்மா சட்டென விலகி நிற்க, “அத்த…, ஏன் இப்படி பண்ணீங்க?” படுக்கையில் இருந்து இறங்கியவள் வேகமாக ஓடி வந்தாள்.

அவளை ஒற்றை கையில் தடுத்தவர்…, “கொஞ்ச நேரம் நீ ஒரு வார்த்தை கூட பேசக் கூடாது புரியுதா? நான் என் பையன் கிட்டே பேச வந்தேன்” அவர் கோபமாக அவளை ஏறிட, வேகமாக பின்னடைந்தாள். பார்வையோ தன் கணவனை பரிதாபமாக ஏறிட்டது. கண்களிலோ பெரும் கண்ணீர்.

அவளைப் பார்த்தவன், எதுவும் சொல்லாமல் கலைவாணியை ஏறிட, “ஏண்டா நீயெல்லாம் மனுஷனா? இவ்வளவு பெரிய படிப்பு படித்து, ஒரு சிட்டியவே ஆட்டி வைக்கிற நீ, ஒரு தாயோட மனசையோ, ஒரு பொண்ணோட மனசையோ புரிஞ்சுக்காமல் நடந்துக்கிறன்னா…, அந்த படிப்பு குப்பைக்கு சமம்…” கிட்டத்தட்ட அந்த அறையே அதிரும் அளவுக்கு குரல் கத்தினார்.

பிரம்மாவால் அவரது செய்கையை கொஞ்சம் கூட ஜீரணிக்க முடியாத அதிர்ச்சியில் நின்றான் என்றே சொல்லலாம். இப்படி ஒரு நிலையில் அவனுக்கு விபத்து நடந்த பிறகு நின்றதாக அவனுக்கு ஞாபகமே இல்லை. அதற்கு முன்னர் எப்படி என அவனுக்குத் தெரியவில்லை.

அவரைவிட்டு வேகமாக விலகி நின்றவன், தாடை இறுக அவரை வெறித்தான். கூடவே அவரது பேச்சு ஏற்படுத்திய அதிர்ச்சியை உள்வாங்கியவன், பேசும் நிலையில் இருக்கவில்லை. அவர் வாயாலேயே தனக்கும், அவருக்குமான உறவு நிலையை அறிந்துகொள்ள முயன்றான்.

“பத்துவயசில் நீ புரிசுக்கலன்னா அது அறியாத வயசுன்னு பொறுத்துகிட்டேன். பதினைஞ்சு வயசில் நீ புரிஞ்சுக்காதப்போ பக்குவமில்லாத பருவம்னு விலகி நின்னேன்..., இருபது வயசில் என் முகம் பார்த்து, அவ்வளவு பெரிய கேள்வியை கேட்டப்போ..., இருபத்தைஞ்சு வயசில் தெளிஞ்சுடுவன்னு நினைத்தேன்.

“ஆனா..., இருபத்தேழு வயசிலும் நீ அப்படியே இருந்தப்போ..., என் எதிர்பார்ப்பு, காத்திருப்பு எல்லாம் கானல் நீராயிடுமோன்னு பயந்திருக்கிறேன். என் செய்கையால், கல்யாணமே வேண்டாம்னு நீ நின்னப்போ, ஒரு அம்மாவா துடிதுடிச்சு போயிருக்கேன்.

“எத்தனையோ நாள் உனக்கு பிடிக்காதுன்னு தெரிந்தும், உன் முன்னால் வந்து, உன் பேச்சை எல்லாம் கேட்டதுக்கு காரணம் உன்மேல் இருந்த பாசம் தானே தவிர, வேற எதுவும் இல்லை. ஒரு கல்யாணம் ஆயிட்டா என் புள்ளை மாறிட மாட்டானான்னு நானும் ஒரு சராசரி தாயா ஏங்கி இருக்கேன்.

“ஆனா இப்போ..., எப்போ இந்த பிள்ளைக்கு நெருப்பு பத்திகிச்சுன்னு கேள்விப் பட்டேனோ அப்போவே முடிவு பண்ணிட்டேன்..., இதுக்கு மேலே அவளை உன்னோட இருக்க விட மாட்டேன். உன் கோபம் எல்லாம் என்மேல தானே, அதற்கான தண்டனையை எனக்கு கொடு, இவளை ஏன் தண்டிக்கிற?” அவரது கேள்விக்கு என்ன பதில் சொல்வது என அவனுக்குத் தெரியவில்லை.

“அந்த விபத்துக்குப் பிறகு உன்னிடம் தெரிந்த மாற்றம், அதனால் கொண்ட தைரியத்தால் தான், டாக்டர் ஷீபா கிட்டே உன் கல்யாண விஷயமா பேசினேன். அவங்க எதையும் சொல்லவில்லை என்றாலும், உன்னை பதினஞ்சு வருஷம் நிழல்போல் தொடர்ந்தவள்டா நான், என்கிட்டே எதையாவது மறைக்க முடியுமா?

“பழைய சம்பவங்கள் உனக்கு எதுவும் ஞாபகம் இல்லையோ என்ற சந்தேகம் எனக்கு இருந்த பிறகு கூட, உன்கிட்டே ஒட்டி உறவாட நான் வரலையே ஏன்? ஒரு

வேளை உனக்கு முழு நினைவு வந்தால், எப்படி நடந்து கொள்வாயோ என்ற பயம் கிடையாது...

“அதை சாக்கா வச்சு, இவளை நீ எதுவும் சொல்லிடக் கூடாது என்ற பயத்தால்தான் ஒதுங்கி இருந்தேன்...” அவர் சொல்ல, பெரும் அதிர்ச்சி அவனைத் தாக்க சிலைபோல் நின்றிருந்தான். தன்னைப்பற்றிய அவரது கணிப்பு, திகைத்துப் போனான்.

“நீ என்னதான் முன்கோபியா, முரடா இருந்தாலும், என்னைக்கும் உன் கடமையில் இருந்து தவற மாட்டன்னு நினைத்தேன், அனா..., நீ, உன்னை நம்பி வந்தவளை இப்படிதான் வாழ வைப்பியா?” அவர் கோபத்தின் கொந்தளிப்பில் கேட்க, அவரது குற்றச்சாட்டை சகிக்க முடியாமல் துவண்டான்.

அவன் நிலை உணர்ந்த காயத்ரி, “அத்தை..., அவங்க எதுவும்...” “உன்னை பேசாதேன்னு சொன்னேன்...” அவள் பேச வருவதை கிஞ்சித்தும் கண்டுகொள்ளாமல் அவர் உரைக்க, தடுமாறிப் போனாள்.

பரிதாபமாக அவனை ஏறிட, ‘எதுவும் சொல்லாதே, விலகிப் போ...’ பார்வையால் அவளிடம் கட்டளையிட, அவள் இதற்குமேல் என்ன செய்யவாம்?

கலைவாணியோ, “நீ கல்யாணம் பண்ணிக்க போறன்னு தெரிஞ்சப்போ கொஞ்சம் நிம்மதி அடைந்தேன்.

“ஆனா..., உன்கிட்டே முழுசா மிச்சம் இருக்குறது மிருகம் மட்டும்தான்னு நிரூபிக்கற, இப்பவே இப்படி நடந்துக்கற நீ..., பழைய மனுஷனா மாறினால் என்ன செய்ய மாட்ட..., போதும்டா..., நீ நல்லா இருக்கணும்னு நான் நினைத்து, இவளை பலி கொடுத்த வரைக்கும் போதும்..., இவளை நான் அழைச்சுட்டு போறேன்.

“நீ பழைய மாதிரி தனிக்காட்டு ராஜாவாகவே இரு...” கோபம் குறையாமல், மூச்சு விடாமல் உரைத்தவர், காயத்ரியை தன் கையால் பற்றிக் கொண்டார்.

“என் புள்ளைக்கு ஆசை ஆசையா அந்த படைக்கும் கடவுள் பிரம்மாவோட பேரை வைத்தேன்..., ஆனா நீ..., அழிக்கிற வேலையை மட்டும்தாண்டா சரியா செய்யிற. அப்படி என்னடா உனக்கு பொல்லாத கோபம்? பத்து வயசு பையனையும், ரெண்டு வயசு பொண்ணையும் விட்டுட்டு கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு கல்நெஞ்சக்காரியாடா நான்?” அவனிடம் நேரடியாக கேட்க, பதில் சொல்ல அவனால் முடியவில்லை.

“சரி..., கல்யாணம் பண்ணிகிட்டேனே..., ஊரைவிட்டு ஓடி, எவனையாவது இழுத்துட்டு போய் கட்டிகிட்டனா? உன் அப்பன் சாக முன்னாடி என்னை அந்த மனுஷன் கையில் ஒப்படைச்சுட்டு போனாருடா. உன் அப்பாவே அதைச் செய்தால், அதுக்கு பின்னாடி என்ன காரணம் இருக்கும்னு ஒரு நிமிஷமாவது யோசிச்சு பாத்திருக்கியாடா?

“உன்னை வளத்தாங்களே என் மாமியார்..., என்னைக்காவது ஒரு நாள் என்னைப் பற்றி தப்பா பேசி நீ கேட்டிருக்கியா? இதையெல்லாம் உன்கிட்டே போய் சொல்லிட்டு இருக்கேன் பார். நீ நல்லா இருந்தபொழுதே என் பேச்சை கேக்க மாட்ட..., இப்போ மட்டும் கேட்டுடுவியா என்ன?

“நீ மிருகமா இருந்தப்போவும் என் பேச்சை கேக்கலை..., இப்போ கொஞ்சமாவது மனுஷனா இருக்கன்னு நினைத்தால், இப்பவும் நீ மனுஷனா நடந்துக்கலை. இத்தனை வருஷம் ஒரு அம்மாவா நான் யோசிச்சது போதும், ஒரு மனுஷியா இப்போ இவளை கூட்டி போறேன்” காயத்ரியின் தோள் பற்றி இழுத்துக் கொண்டு வெளியே செல்ல முயன்றார்.

அவ்வளவு நேரமாக கலைவாணி பேசியதை கேட்டுக் கொண்டிருந்த பிரம்மாவின் மூளைக்குள் பெரும் சைரன் ஒலிக்க, கூடவே, “அதான் புள்ளைங்களை விட உனக்கு புருஷன்தான் வேணும்னு போய்ட்டல்ல..., பிறகு இன்னும் ஏன் எங்களைத் தேடி வர்ற...?” ஒரு சிறுவனின் குரலும்,

“அண்ணே..., அம்மா..., அம்மா..., அம்மா கிட்டே போறேன்...” ஒரு சிறுமியின் குரலும் காதுக்குள் ஒலிக்க, குப்பென வியர்த்துப் போனான்.

“பிரம்மா..., உன் ஆத்தா, உன் அப்பனுக்கு செய்வினை வச்சு மனசை மாத்திட்டாடா. இல்லன்னா என் அண்ணன் இப்படி செய்திருப்பானா? வந்தவன் யாருன்னு எங்க யாருக்கும் தெரியலை, பொசுக்குன்னு அவ கையை புடிச்சு அவன்கிட்டே கொடுத்துட்டு செத்துப் போய்ட்டான்...

“அவகிட்டே சேராதீங்க..., உங்களையும் ஏதாச்சும் பண்ணிடுவா?” அவனது சித்தப்பாவின் குரல் விஷமமாக ஒலிக்க, அதில் தெரிந்த ஒருவித வன்மம், அவனால் இப்பொழுதும் இனம் காண முடிந்தது.

அவன் சற்று திணறி ஒரு மாதிரி மூச்சு வாங்க, அதைப் பார்த்த காயத்ரி, “என்னங்க...” ஓடிபோய் அவனை தன் தோளில் சாய்க்க முயன்றாள். அவனோ, அவளை விட்டு வேகமாக விலகியவன், ‘இப்பொழுது உணர முடியும் என்னால் ஏன் அப்பொழுது எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை?’

‘ஒரு வேளை வேண்டும் என்றே விலக்கி வைத்தேனா?’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

“பாத்தியாம்மா..., இப்போகூட எப்படி பிடிவாதம் பிடிக்கறான்னு..., சில ஜென்மங்களை திருத்தவே முடியாது...” உரைத்தவரது கண்களில் கண்ணீர் தடம். கூடவே, மகன் இப்படி புழுவாய் தவிக்கிறானே என ஒரு மனம் பதைக்க, வேகமாக அவனை நெருங்கினார்.

காயத்ரியோ..., “என்னங்க..., டாக்டரை கூப்பிடவா? டேப்லட் ஏதாவது போட்டுக்கறீங்களா? என்ன பண்ணுது...?” அலறியவள் அவனை நெருங்க, விருட்டென அங்கிருந்து வெளியேறியவன், வராண்டாவில் கிட்டத்தட்ட ஓடினான்.

இடையில் எங்கே விழுந்து விடுவோமோ..., என அஞ்சினாலும், தன் ஓட்டத்தை அவன் நிறுத்தவில்லை. தன் ஜீப்புக்குச் சென்றவன், அதை அசுர வேகத்தில்

செலுத்தினான். எங்கே செல்கிறோம், என்ன செய்யப் போகிறோம் எதுவும் தெரியவில்லை.

மனம் முழுவதும் கொந்தளித்துப்போய் கிடந்தது. கலைவாணி பேசிய பேச்சுக்கள் அனைத்தும் அவன் மனதை குத்திக் கிழித்தது. ‘நான் என்னவாக இருந்திருக்கிறேன்?’ வழக்கமாக எழும் வினா அப்பொழுது எழுந்து பூதாகரமாக மிரட்ட, அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

‘இதற்கு ஒரு முடிவை கண்டே ஆகவேண்டும்... எல்லாம் என் நினைவுக்கு வர வேண்டும்...’ மனம் வெறித்தனமாக அதையே நினைத்தது.

‘ஒரு விபத்தில் போன நினைவுகள், மறு விபத்தில் வந்து விடுமா?’ மனம் பேயாட்டம் போட்டது. அந்த நினைவு கொடுக்கும் அழுத்தம்..., அதன் வீரியம், அவனால் சகிக்க முடியவில்லை. ஜீப் சாலையில் சைரன் ஒலியில் பறக்க, பல வாகனங்கள் அலறி வழி விட்டன.

எதையும் கவனிக்கும் நிலையில் அவன் இல்லை. ‘இதற்குமேல் பொறுத்துக்கொள்ள முடியாது...’ அவன் முழு சிந்தையும் அதுவேதான். அவனது அலைபேசி விடாமல் இசைத்துக் கொண்டிருக்க, அவன் அதை கிஞ்சித்தும் கண்டுகொள்ளவில்லை.

அவன் அறையை விட்டு வெளியேறிய மறு நிமிடம், “அத்தை..., ஏன் இப்படிப் பண்ணீங்க...?” அவள் கண்ணீர் குரலில் கேட்க, கலைவாணியும் தன் அதிர்ச்சி மீளாமல் நின்றிருந்தார்.

“காலையில் சமைக்கும்போது தெரியாமல் நடந்த ஆக்சிடெண்ட் தான் இது..., அவரே துடிச்சு போய் இருந்தார். அவரைப்போய் இப்படி சொல்லிட்டீங்களே?” காயத்ரி கதற, ‘தவறு செய்து விட்டேனா?’ திகைத்து நின்றுவிட்டார்.

“அவர் டென்ஷனே ஆகக் கூடாதுன்னு டாக்டர் சொன்னாங்க..., இப்போ அவர் இவ்வளவு டென்ஷனோட போறாரே..., எனக்கு ரொம்ப பயமா இருக்கு” அவளால்

மருத்துவமனையின் உடையில் இருப்பதால், வெளியே செல்ல முடியாத நிலையில் துடித்தாள்.

ஆனாலும் அவனைப் பற்றி அறிந்தவர் என்பதால், “அதெல்லாம் அவனுக்கு எதுவும் ஆகாது...” அவளை சமாதானப் படுத்தினார்.

அவளது அலைபேசி வீட்டில் இருந்ததால், அவரிடம் இருந்த போனில் இருந்து அவனது எண்ணை அழுத்த, ரிங் போனதே தவிர அதை அவன் எடுக்கும் வழியைக் காணோம்.

உடனடியாக கந்தனுக்கு அழைத்தவள், “அண்ணே..., அவங்க ஸ்டேஷன் வந்தாங்களா? அங்கே இருக்காங்களா?” தன் கதறலை அடக்க முயன்று தோற்றவளாக கேட்க, அந்தப்பக்கம் அவர் திகைத்துப் போனார்.

“சார் அங்கேதான் இருக்குறதா யாழினி சொன்னாங்களே...” அவர் இழுக்க,

“அண்ணே..., அவங்க எங்கே இருக்காங்கன்னு கொஞ்சம் பாருங்க, போனையும் எடுக்கலை..., பிளீஸ்...” அவரைவிட்டால் அப்பொழுது அவளுக்கு யாரிடமும் சொல்லத் தோன்றவில்லை.

“நான் பாக்கறேம்மா...” உரைத்தவர், ‘இந்தம்மா என்ன செஞ்சு வச்சதுன்னு தெரியலையே..., நம்மளை கோர்த்து விடுறதே இவங்களுக்கு வேலையா போச்சு...’ மனதுக்குள் அரற்றினாலும், பிரம்மாவுக்கு ஏதும் இல்லாமல் சாதாரணமாக அவள் இப்படி அழ மாட்டாள் என்பதால் வேகமாக செயல்பட்டார்.

யாழினியின் உதவியால் கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கொடுத்தவர், அவன் ஜீப்பில் இருக்கும் வாக்கி டாக்கிக்கு கனெக்ட் செய்தார்.

“கண்ட்ரோல் ரூம்..., பிரம்மா..., பிரம்மா...” அவனது ஜீப்பில் வயர்லஸ் அலற, அவ்வளவு நேரமாக புயல் வேகத்தில் சென்று கொண்டிருந்தவனின் கவனம் சற்று தெளிந்தது.

அதையும் அசட்டை செய்யும் மனநிலையில்தான் இருந்தான். ஆனால், நேரடியாக அவனுக்கான அழைப்பு என்கையில் ஏதும் சேதி இல்லாமல் இருக்காது என்பதால், ஜீப்பை சற்று ஓரம் கட்டியவன், “பிரம்மா ஹியர் ஓவர்...” தன் பொறுமையை பிரம்மாபிரத்தியனம் செய்து அவன் இழுத்து நிறுத்தி குரல் கொடுக்க, அதைக் கேட்ட பிறகே கந்தனால் இயல்பாக முடிந்தது.

ஆனால் அடுத்த நிமிடமே, ‘இப்போ இவருக்கு என்ன பதில் சொல்வது?’ அவர் மூளை உறைந்துபோய் இருக்க, அதை ஆப்பரேட் செய்யும் ஆப்பரேட்டரோ, கந்தனது நிலை உணர்ந்தவர் போல்,

“கண்ட்ரோல் ரூமுக்கு ஒரு அவசர கால்..., வேளச்சேரி பக்கம் ஒரு விபத்தில் இரண்டு காலேஜ் பொண்ணுங்க இறந்துட்டதால் நிலைமை கட்டுக்கடங்காமல் போயிட்டு இருக்கு, நீங்க உடனே அங்கே போகணும் ஓவர்...” நொடியில் நிலைமையை சம்மாளிக்க, கந்தன் அவனுக்கு ஒரு கோயிலே கட்டும் நன்றிப் பெருக்கில் அவனைப் பார்த்தார்.

“நான் இப்போவே போறேன் ஓவர்...” உரைத்தவன், மறு நிமிடம் தன் குமுறலை ஒதுக்கிவிட்டு அங்கே விரைந்தான். அடுத்த ஒருமணி நேரத்தில், பேருந்தை நிறுத்திவிட்டு ஓடிய டிரைவரை கைது செய்து, மாணவர்களை கலைந்து போகச் சொல்லி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

ஆனாலும் அவனால் வீட்டுக்குச் செல்லும் மனநிலையை கொண்டுவர முடியவில்லை. அவன் அங்கே வரும் முன்பாகவே கந்தன் அங்கே சென்றிருக்க, ஜீப்பை ஓட்டும் வேலையை அவர் கையில் எடுத்துக் கொண்டார்.

அவர் ஜீப்பை கிளப்பவே, “பீச்சுக்கு போங்க...” இறுக்கமாகவே உரைத்தவன், இருக்கையில் தளர்ந்து அமர்ந்தான்.

மனமோ..., ‘அனைத்தையும் துல்லியமாக கணித்து, கவனித்து செயல்படும் நான், என் தாயை ஏன் அவ்வளவு

வெறுத்து ஒதுக்கி வைத்தேன்?’ அந்த வினா மட்டுமே மண்டையை வண்டாக குடைந்தது.

‘அதை அறிந்தே ஆகவேண்டும்...’ தீர்மானம் மனதுக்குள் வலுவாக விழ, அதை எங்கே இருந்து எப்படி துவங்குவது எனத் தெரியவில்லை.

‘என் சொந்த ஊருக்குச் சென்றால் தெரிய வருமா?’ யோசனை, யோசனை அது மட்டுமே. ஊரைப் பற்றி நினைத்த உடனேயே, அவனது சித்தப்பா, சித்தி முகம் நினைவுக்கு வர, கூடவே சித்தியின் பேச்சும் சேர்த்தே மனதை தாக்க, அங்கே சென்றாலும் உண்மைகள் வெளிவருமா என அவனால் தீர்மானமாக நினைக்க முடியவில்லை.

ஜீப் பீச்சில் நிற்க, இருக்கையில் இருந்து இறங்கியவன், வேகமாக மணலில் நடந்தான். மனதின் வேகம் கால்களுக்கு வந்ததோ என்னவோ..., வேகம் என்றால் அப்படி ஒரு வேகம்.

கால் வலியெடுக்க, மணலில் தொப்பென அமர, அந்த மாலை நேர பீச்சின் இதமான காற்று கூட அவன் மனதின் கொதிப்பை அடக்கவில்லை. அதே நேரம் அவனது அலைபேசி ஒலியெழுப்பி அவனை கலைக்க, நிதானமாக அதை எடுத்து பார்த்தான்.

ட்ரூ காலரில் ‘மகேஸ்வரன்’ என்ற பெயர் மின்னி மறைய, புருவம் நெரிய அதைப் பார்த்தவன், சிறு யோசனையோடு அதை எடுத்தான்.

எதுவும் பேசாமல் அவன் அமைதி காக்க, “நான் மகேஸ்வரன் பேசறேன்” தன்னை அறிமுகப்படுத்தியவரின் குரல், அவனுக்கு முற்றும் அந்நியமாகவே இருந்தது.

“பேர் சொன்னவுடன் தெரியும் அளவுக்கு நான் பெரிய ஆள் எல்லாம் இல்லை. கலைவாணியோட கணவன்னு சொன்னால் உங்களுக்கு தெரியும்னு நினைக்கறேன்...” சற்று இடைவெளி விட்டவர், அவன் ஏதாவது சொல்வானா

எனப் பார்க்க, அவன் எதுவும் சொல்லாமல் அமைதி காத்தான்.

அவனது அமைதியே அவருக்கு பெரும் நம்பிக்கையை அளிக்க, மெதுவாக பேச்சைத் துவங்கினார்.

“பதினஞ்சு வருஷமா உங்க முன்னாடியே வராதவன், இப்போ ஏன் போன் செய்தேன்னு பாக்கறீங்களா? கலைவாணி அங்கே வந்து என்ன செஞ்சுட்டு வந்தான்னு எனக்குத் தெரியாது. ஆனா…, இந்த பதினஞ்சு வருஷத்தில் முதல் முறையா அவ இவ்வளவு உடைஞ்சு நான் பாக்கறேன்” அவர் பெரும் வேதனையில் பேசுவதை அவனால் தெளிவாக உணர முடிந்தது.

“நடந்த விஷயங்களின் உண்மை தன்மையை நீங்களா ஒரு நாள் புரிஞ்சுப்பீங்கன்னு எதிர்பார்த்தேன்…, ஆனா…” அவர் இடைவெளி விட, அது ஏற்படுத்திய பாதிப்பு அவரை விட, அவனுக்கு அதிகம் இருந்தது.

“ஒரு விஷயத்தை நாம புரிஞ்சுக்கணும்னா, அதைபற்றிய உண்மையை ஆராய்ந்து தெரிஞ்சுக்கணுமே தவிர, அதைபற்றிய ஒரு முடிவுக்கு வந்த பிறகு ஆராய்ந்தால், நம் தேடல்கள் எல்லாம், நம் முடிவுக்கு சாதகமானதை தேடுமே தவிர, அதன் உண்மை நிலையை அறிய முடியாது” உனக்கு நான் சொல்ல வேண்டியது எதுவும் இல்லையே என்ற விதத்தில் அவர் குரல் ஒலிப்பதாகத் தோன்ற, அவனது குழப்பம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

“உங்களோட எல்லா கோபமும், உங்க அம்மா என்னை சாரி…, ரெண்டாவது திருமணம் செய்து கொண்டதால் என்றால், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்க விரும்பறேன். உங்க அம்மாவா என்னைத் தேடி வந்து கல்யாணம் செஞ்சுக்கலை.

“நானும் ஆசைப்பட்டு அவளை கட்டிக்கலை. என் உயிருக்குயிரான நண்பன், தான் மரணப் படுக்கையில் இருப்பதாகவும், உடனே தன்னை வந்து சந்திக்கும்படியும் சொன்னான். அந்த நிமிஷம் வரைக்கும் என் வாழ்க்கையில்

ஒரு பொண்ணுக்கு இடமே இல்லைன்னு வாழ்ந்துட்டு இருந்தவன் நான்...” அவர் அங்கே அதிக இடைவெளி விட, பிரம்மாவின் புருவம் நெரிய, செவிகள் கூர்மையானது.

“மறுநாள் காலையில் நான் அங்கே போனப்போ..., அவனோட மனைவியின் கையை என்கையில் பிடிச்சு கொடுத்துட்டு, இனிமேல் இவளை நீதான் பாதுகாக்கணும்னு சொன்னப்போ எனக்கு என்ன சொல்றது, செய்யிறதுன்னு தெரியலை.

“ஏன் இப்படி ஒரு விபரீத முடிவுன்னு நான் கேட்டதுக்கு அவன் சொன்ன ஒரே பதில்..., சொந்த தம்பிகிட்டே இருந்து, ஒவ்வொரு நாளும் அவளை காப்பாற்றுவது அவளால் முடியாத காரியம் என்றும், அவளை இங்கே இருந்து கூட்டிக்கொண்டு போய்டுன்னு சொன்னப்போ..., என்னால் என் காதையே நம்ப முடியலை.

“நீயே இதைச் செய்திருக்கலாமேன்னு நான் கேட்டேன்..., ஆனா...” அவர் குரல் தடுமாறி தழுதழுக்க, தன் மனதில் எழுந்த கேள்வியை அவர் தொட்டுவிட, பெரும் பரபரப்புக்கு உள்ளானான்.

“கட்டுன பொண்டாட்டியை நம்பாமல், ஒரு தறுதலை தம்பியை, ஒரு நம்பிக்கை துரோகியை கடைசி நிமிஷம் இனம் கண்டு, அவனை அழிக்கப் போனப்போ, அவனுக்கே தெரியாமல் விஷம் கொடுத்து, அவனை மரணப் படுக்கையில் தள்ளிட்டான்னு சொன்னதைக் கேட்டு ஆடிப் போயிட்டேன்” அவர் சொல்லி முடிக்கையில், மணலில் அமர்ந்திருந்தவன் தன்னை மீறி எழுந்து நின்றிருந்தான்.

“என்ன சொன்னீங்க...?” தான் கேட்டது உண்மையா...? அவன் ரத்தம் கொதித்தது.

“இதில் கொடுமையான விஷயம்..., ஒரு தாய்க்கு ரெண்டு பிள்ளை இருந்தால் ரெண்டையும் ஒண்ணாவே நினைக்கணும். அதை விட்டு, இளைய பிள்ளை மேலே கண்மூடித்தனமான பாசம் வச்சுட்டா, அவன் செய்யும் எந்த தப்பும் அவர் கண்ணுக்கு தெரிந்தாலும், அதை கண்டிக்க

முயலாமல், அதுக்கு துணை போவது பெரும் அழிவுக்கு வழி வச்சுடும்.

“அதில் என் நண்பன் பலியாகிட்டான்...” அதைச் சொல்கையிலே துக்கம் தாளாமல் அவர் குரல் கரகரக்க, தன்னை எப்படி கட்டுப்படுத்திக் கொண்டான் என்றே தெரியவில்லை.

ஆனாலும் தான் தெரிந்துகொள்ள வேண்டியதை தெரியாமல் விட அவனால் முடியவில்லை. “உங்கள் வாதத்துக்கே வந்தாலும் இரண்டு சின்ன குழந்தைகளை தனியாக விட்டுச் சென்றது எந்த விதத்தில் நியாயம்?” நிச்சயம் அவன் இதை கோபத்தில் கேட்கவில்லை.

“அப்படி விட்டுட்டு போகும் அளவுக்கு கல்நெஞ்சக் காரர்களா நாங்கள்? மனைவிக்கு வழி சொன்ன நண்பன் குழந்தைகளை தனியாக விடச் சொல்லியிருப்பானா என்ன?” அவனிடமே திருப்பிக் கேட்க அமைதியானான்.

“தன் சொத்தை எல்லாம் மூணாகப் பிரித்து மனைவி, இரண்டு குழந்தைகள் பெயரில் எழுதி வச்சுட்டான், அது அப்போ எனக்கே தெரியாது. ஆனா, தன்பங்கு சொத்தை வித்தே அளித்த உங்க சித்தப்பாவுக்கு அது தெரிந்திருக்கு, நீங்களும் எங்களோட வந்துவிட்டால், அந்த சொத்தை ஆள முடியாது என்ற பயம்.

“தன் தாயை மிரட்டி குழந்தைகளை தங்களோடவே வச்சுக்க முடிவு பண்ணிட்டான். அந்த நேரம், உங்க பாட்டியும், குழந்தைகளை தர முடியாது என்று ஒரே பிடிவாதம். அதையெல்லாம் விட, உங்க அப்பாவின் மரணத்தை சாக்கா வைத்து, உங்க சித்தப்பா உங்ககிட்டே சொன்ன பொய்கள், அதை நம்பிய நீங்க.

“நான் அழைத்த பொழுது எங்களோட வர முடியாதுன்னு சொல்லிட்டீங்க. அதன் பிறகு எத்தனையோ வருடங்கள் உங்களை அழைத்துச் செல்ல நாங்க போராடி இருக்கிறோம். பத்து வயதில் இருந்த உங்க பிடிவாதம், வளர வளர வளர்ந்ததே தவிர குறையவில்லை.

“அதற்கு உங்க சித்தப்பாவும் சித்தியும் ஒரு காரணம்...” அவர் பெருமூச்சு விட, கேட்டுக் கொண்டிருந்த அவனுக்கு எப்படி இருந்ததாம்?

“இப்போ இவ்வளவு சொல்லும் நீங்க இத்தனை வருடமாக எங்கே இருந்தீங்களாம்” அவனுக்கு தெரிந்த பதில்தான்..., ஆனாலும் கேட்டான்.

“என் குரலையோ, என்னையோ நேரிலோ அலைபேசி வழியாக உணர்ந்தாலோ உங்களது எதிர்வினை ஒன்றுதான்..., அதை இப்போ நான் சொல்ல விரும்பவில்லை. நீங்க இன்னைக்கு என் அழைப்பை ஏற்றதே எனக்கு பெரும் வியப்புதான்...” ஆச்சரியம் அவர் குரலில் விரவி வழிந்தது.

பிரம்மாவுக்கோ..., தான் அறிந்த விஷயங்கள் கொந்தளிப்பின் உச்சத்துக்கு கொண்டு சென்றது. ‘என் தகப்பனை கொன்றவன், என் மனதில் நஞ்சை விதைத்தவன், அவனை நான் சும்மா விடுவதா?’ மனதுக்குள் குறித்துக் கொண்டவன், தன் மனதின் கொதிப்பை மறந்தும் வெளிக்காட்டவில்லை.

“இன்னும் ஒரே ஒரு விளக்கம்..., எங்க பொண்ணு நிவேதா எங்களோட சொந்த பொண்ணு இல்லை..., எங்களோட வளர்ப்பு பொண்ணு. அவளுக்கு ஐந்து வயதாக இருக்கும்பொழுது அவளை ஒரு ஆஷ்ரமத்தில் இருந்து தத்து எடுத்துகிட்டோம்.

“இதை ஏன் இப்போ சொல்றேன்னா..., ‘பிடிக்காமல் கல்யாணம் செஞ்சுகிட்டவங்களுக்கு குழந்தை எப்படி வந்ததுன்னு சில வருஷத்துக்கு முன்னாடி கேட்டீங்களாம்...” உரைத்தவர் அலைபேசியை வைத்துவிட, உலகமே தன்மேல் காறி உமிழ்ந்த உணர்வில் விக்கித்து நின்றுவிட்டான் பிரம்மா.

*****

# பகுதி – 36.

பிரம்மா தன் வாழ்நாளிலேயே இப்படி ஒரு நிலையை தொட்டிருக்க மாட்டான் என்றே தோன்றியது. ‘ஒரு தாயிடம் கேட்கும் கேள்வியா அது?’ அவனது செய்கையை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

‘இப்படி ஒரு கேள்வியை நானா என் தாயிடம் கேட்டேன்? அந்த அளவுக்கு மிருகமா நான்?’ தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். தனது அத்தனை கேள்விகளையும் தாங்கிக் கொண்டு தன்னையே நாடும் தாய்..., அவனால் இனிமேல் அவர் முகம் பார்க்க முடியுமா? அவனுக்குத் தெரியவில்லை.

தன் தாய் தன்னை அடித்ததில் இப்பொழுது அவனுக்கு சிறிதும் கோபம் இல்லை. ‘இப்படி ஒரு கேள்வி கேட்ட என்னை அப்பொழுதே அவர் தண்டித்திருக்கலாம்’ மனம் இப்படித்தான் எண்ணியது.

மீண்டும் அவனது அலைபேசி ஒலியெழுப்ப, அதில் ஒளிர்ந்த காயத்ரியின் எண்ணைக் கண்டு சோர்ந்து போனான். அவளை இப்படி ஒரு நிலையில் தனியாக விட்டு வந்ததை நினைக்கையில் மனம் பாரமாகிப் போனது.

இதற்குமேல் அவளை தவிக்க விட மனமின்றி, அலைபேசியை ஆன் செய்து காதில் வைக்க, “டேய் பீமா எங்கடா இருக்க? இப்போ நீ வீட்டுக்கு வரல..., நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது...” அந்த நிலையிலும் அவளது அழைப்பு அவன் முகத்தில் சிறு புன்னகையை தோற்றுவித்தது.

கூடவே, வீட்டுக்கு வா’ என்ற அவளது அழைப்பு புருவம் நெரிய வைக்க, “நீ எப்போ வீட்டுக்கு போன? யார் போகச் சொன்னா?” சற்று கோபமாகவே கேட்டான்.

“எஸ்பி பொண்டாட்டியை யார் தடுக்க முடியும்?” அவளது எதிர் கேள்வியில், ‘ஹப்பா..., இவ ஜம்பம் தாங்க முடியலை’ மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

“வீட்டுக்கு வாங்க...” அவளது அழைப்பில் இருந்த பதட்டம், பயம், அவன் நெஞ்சை சுட, “வர்றேன்...” உரைத்தவன் உடனே கிளம்பி விட்டான்.

அவன் வீட்டுக்குச் செல்ல, அவனை வரவேற்றது கலைவாணியின் அழுத முகமே. கூடவே மகேஸ்வரனும், நிவேதாவும் அங்கே இருக்க, அவனால் தன் தாயின் முகம் பார்க்கவே முடியவில்லை.

“அண்ணே..., அம்மா செஞ்சதுக்கு நான் உங்ககிட்டே சாரி சொல்லிக்கறேன். அம்மா ஏதோ கோபத்தில் செஞ்சுட்டாங்க. அம்மா ரொம்ப பாவம்ண்ணா...” நிவேதாதான் அவன் அருகில் வந்து உரைத்தாள். கலைவாணிக்கு மகன் அருகே செல்லவே அச்சமாக இருந்தது.

நிவேதாவின் தலையை பாசமாக வருடியவன், ஏனென்றே புரியாமல் அவளை தன் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவன் செய்கையில் ஆச்சரியமானவள், “அண்ணே...” அவனை அழைக்க,

“அம்மா மேலே எனக்கு எந்த கோபமும் வருத்தமும் இல்லை...” அவளிடம் உரைத்தவன், மறந்தும் தாயின் முகம் நோக்கவில்லை, நோக்கும் தைரியமும் இருக்கவில்லை.

அவன் வாய் உரைத்த செய்தியை நம்புவதா? அவன் முகத்தில் கவிழ்ந்திருக்கும் இறுக்கத்தை நம்புவதா? எனப் புரியாத தயக்கத்தில் இருந்த கலைவாணி, அவன் சொன்னதே போதும் என்பதுபோல், விலகியே நின்றிருந்தார்.

தாயிடம் மன்னிப்பு வேண்ட மனம் தவித்தாலும், இந்த புதிய பிரம்மாவை விட, பழைய பிரம்மா அதைச் செய்தால்தான் சரியாக இருக்கும் என அவன் மனம் உரைக்கவே, அமைதியாக நின்றுவிட்டான்.

“அண்ணா..., அண்ணியை நாங்க வீட்டுக்கு கூட்டி போகட்டுமா? இங்கே அவங்களை நீங்க மட்டும் எப்படி பாத்துப்பீங்க?” நிவேதா கவலையாக கேட்க,

பெரியவர்களின் பேச்சை அவள் கேட்டிருப்பாள் என்பதை உணர்ந்து கொண்டான்.

“நான் அவகிட்டே கேட்டு சொல்றேம்மா…” பொறுமையாக அவன் உரைக்க, பெரியவர்கள் இருவரும் பார்வையாளர்களாகவே நின்றிருந்தார்கள்.

நிவேதாவை சற்று விலக்கியவன், “நான் அவளை பாத்துட்டு வர்றேன்…” அவளிடம் உரைத்துவிட்டு மாடியேறினான். அவன் தங்கள் அறைக்குள் வரவே, ஒரே பாய்ச்சலில் அவனை நெருங்கியவள், “எங்கேடா போன…? ஏன் போன? நான் செத்துட்டேன் தெரியுமா? போன் பண்ணா எடுக்க மாட்டியா?” அழுகையும், கோபமும் கலக்க கேட்டவளது செய்கையோ அதற்கு மாறாக, அவன் தாய் அறைந்த கன்னத்தில் அவள் இதழ்களை பதித்துக் கொண்டிருந்தன.

அவள் கேள்விக்கு பதில் சொல்லாமல், அப்பா அடிச்சுட்டாங்கன்னு தாயிடம் முறையிடும் குழந்தையை சமாதானம் செய்யும் தாயின் செய்கையை ஒத்திருக்கும் மனைவியின் சமாதானத்தை ரசித்துக் கொண்டிருந்தான் பிரம்மா.

அவன் கொஞ்சம் நகர்ந்தாலும் நிச்சயம் அவளால் அவனை பிடித்து வைக்க முடியாது எனத் தெரிந்தும், தாயை ஒட்டிக்கொள்ளும் சேயாக அவளோடு இணைந்து, அவள் இடை தாங்கி, தன் உயரத்துக்கு அவளை தூக்கிக் கொண்டான் பிரம்மா.

தன் காயம் கொண்ட கரத்தை அவன் தலைக்கு மேல் தூக்கி, முழங்கைகளை அவன் தோளில் தாங்கியவள், அவனோடு அழுத்தமாக புதைந்து கொண்டாள். சற்று நேரம் அவளது கோபத்தையும், சமாதானத்தையும் ஏற்றுக் கொண்டவன், அவளை கீழே விட, அவனை விட்டு விலகாமல் அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

“பழசெல்லாம் ஏன் ஞாபகத்துக்கு வரலைன்னு ரொம்ப வருத்தமா இருக்கா?” அவன் அமைதி கொடுத்த பாதிப்பு

அதிகமிருக்க மெதுவாகக் கேட்டாள்.

“ம்…” அவன் மெதுவாக முனக,

“எனக்கு…, உங்களுக்கு எதுவுமே ஞாபகம் வர வேண்டாம்னு தோணுது…” அதை அவள் சொல்கையில் அவனது தேகம் ஒரு விறைப்புக்குச் செல்ல, அதை உணர்ந்தவள், “ஏன்னா…, அப்படி எல்லாம் ஞாபகம் வந்துட்டா என்னை விட்டு தூரமா போய்டுவீங்களோன்னு பயமா இருக்கு…” அவள் குரலில் அப்பட்டமான பயம் தெரிய தவித்துப் போனான்.

“ஒரு வேளை நீங்க என்னை மறந்துட்டா…? என்னால் அதை தாங்கிக்க முடியாது” அவள் வேகமாக உரைக்க, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“ஒரு வேளை அப்படி நான் உன்னை மறந்துட்டா என்ன செய்வ?” அவன் வாய் திறக்க, வேகமாக அவனை விட்டு விலகி நின்றவள், அவனை பயப் பார்வை பார்த்தாள்.

அவன் பார்வை கூர்மையாய் அவளைத் துளைக்க, “தெரியலையே…, என்னால் அதை யோசிக்க கூட முடியலை. உங்களுக்கு எதுவும் நினைவுக்கு வர வேண்டாம்னு தான் நினைக்கத் தோணுது. அந்த முரட்டு பிரம்மா, முன்கோபி பிரம்மா…, என்னால் கற்பனை செய்யக் கூட பயமா இருக்கு” அவளது பயம் எல்லாம், அவளது அண்ணன் காமேஷ் பற்றி அவனுக்குத் தெரிய வந்தால், அவன் தன்னை எப்படி நடத்துவான் என்பதில் நிலைப்பதை உணர்ந்து கொண்டவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

‘இதற்கெல்லாம் பதில், என் கடந்தகால நினைவுகள் வந்தால்தான் தெரியும்’ மனதுக்குள் எண்ணிக் கொண்டவன் மறந்தும் அதை வெளியே சொல்லவில்லை.

நினைவுகள் வந்தாலும் நிச்சயம் தான் பழைய பிரம்மாவாக நடந்துகொள்ள மாட்டோம் என்ற நம்பிக்கை இருந்தாலும், ஆயிரத்தில் ஒன்றாக அப்படி ஆகி விடுவோமோ என அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

அதை விடுத்தவன், “அவங்க உன்னை, அவங்களோட கூட்டி போக ஆசைப்படறாங்க, அவங்களோட போறியா?” அவன் நடப்புக்குத் திரும்ப, மறுப்பாக தலை அசைத்தாள்.

“இங்கே நானே சம்மாளிச்சுக்கறேன்..., அவங்களோட போகலை...” அவள் உறுதியாக உரைக்க, கீழே சென்றவன், அவளது மறுப்பை உரைக்கவே, அனைவரும் கிளம்பினார்கள்.

மகேஸ்வரன் சற்று பின்தங்க, “ஊரில் நடந்த விஷயங்கள் யாருக்கு நல்லா தெரியும்?” அவர் முகம் பார்த்து அழுத்தமாக வினவ, “உங்க கணக்கபிள்ளைக்கு எல்லாம் தெரியும்...” உரைத்தவர் அதற்குமேல் அவனிடம் எதையும் பேசவில்லை.

அவர் செல்லவே, தன் அலைபேசியை எடுத்தவன், கௌஷிகாவுக்கு அழைத்தான். முதல்கட்ட நலம் விசாரிப்புகள், குழந்தை நலம் என கேட்டவன், “கௌஷி..., நீ அம்மா கிட்டே பேசு...” அவன் உரைக்க, அவன் சொன்னதை அவளால் நம்பவே முடியவில்லை.

“அண்ணே..., நீங்க இப்போ...” சந்தோஷமா, அதிர்ச்சியா எனத் தெரியாத விதத்தில் அவள் திணற, தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

“அம்மாகிட்டே பேசு கௌஷி..., அவங்களை வந்து பார்..., அவங்க இத்தனை வருஷம் பட்ட கஷ்டம் போதும்...” உரைத்தவன், அதற்குமேல் அவளிடம் பேசவில்லை.

தன் அறைக்கு வந்தவன், படுக்கையில் அமர்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்த காயத்ரியைப் பார்த்தவன், “நீ ஏன் அவங்களோட போகலை?” அவள் அருகில் அமர்ந்தான்.

“நான் ஏன் போகணும்? நீங்க முதல்ல போய் குளிச்சுட்டு ட்ரெஸ் மாத்திட்டு வாங்க. சாப்பிடலாம்...” அவனை அனுப்பினாள்.

‘அனைத்தையும் ஒண்ணு ஒண்ணாக சரி செய்யணும்’ எண்ணியவன், அவள் சொன்னதை செய்யப் போனான்.

மறு நாள் முதல், காலையிலேயே அவன் வீட்டுக்கு வரும் கலைவாணி, சமையல் முதல் கிளீனிங் வாஷிங் என அனைத்தையும் பொன்னம்மாவோடு சேர்ந்து கவனித்துக் கொள்ள, காலை, மாலை, இரவு என அவளுக்கு உணவு ஊட்டுவதை பிரம்மாவே மனமுவந்து செய்தான்.

இரண்டு நாட்கள் வரைக்கும் குளிக்கும் எண்ணம் இல்லாதவள்போல் அவள் நடந்துகொள்ள, "குளிக்கறியாம்மா..., கையை கவர் போட்டு கட்டிக்கலாம். நான் ஹெல்ப் பண்றேன்..." கலைவாணி கேட்க, மறுப்பாக தலை அசைததவள், தன் அறையில் சென்று அமர்ந்து கொண்டாள்.

அதென்னவோ அவரது எல்லா உதவிகளையும் ஏற்க முடிந்த அவளால், தனிப்பட்ட அவரது உதவியை அவளால் அனுமதிக்க முடியவில்லை. ரெஸ்ட்ரூம் செல்கையில் தன்னால் முடிந்த அளவு, தானே பார்த்துக் கொண்டாள்.

கையில் தண்ணீர் படாமல் பார்த்துக் கொள்வது வேறு கொஞ்சம் கடினமாகத்தான் இருந்தது. ஆனால், அனைத்தையும் பல்லைக் கடித்துக் கொண்டு சம்மாளித்தாள் என்றே சொல்லலாம்.

குளிக்கச் செல்வது என்றால், நிச்சயம் ஒரு ஆளின் முழு உதவியும் அவளுக்குத் தேவையாக இருக்கும். உடை மாற்றுவது, குளிப்பது, மீண்டும் உடை உடுத்துவது என அவர் முன்னால் ஒரு கைப்பாவையாக இருக்க முடியும் என்றே தோன்றவில்லை.

இரண்டு நாட்கள் வரைக்கும் அவள் செய்கையை கவனித்தவன், "குளிக்கிற ஐடியாவே இல்லையா? அதான் உன் மாமியார் உதவி செய்வாங்களே பிறகு ஏன்...?" கண்களில் ஒரு விபரீத ஒளி ஒளிர, அவன் கேட்க, அவன் முகம் பார்க்கவும் தடுமாறிப் போனாள்.

அவள் பதில் சொல்ல தடுமாற, அதை காற்றில் விட்டவன், "அம்மா வேண்டாம்னா, உன் ப்ரண்ட், இந்திரா இருக்காளே..., அவளை வேண்ணா ஹெல்ப்க்கு வரச்

சொல்ல வேண்டியது தானே...” அவள் அருகே அமர்ந்தவன், தன் முகம் காண மறுத்த அவளை, அவள் நாடியைப் பிடித்து திருப்பி, தன் முகம் காண வைத்தான்.

இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டவள், அவனை ஏறிட மறுத்தாள். “ஏய் முட்டக்கண்ணி..., பாருடி...” அவள் கன்னம் தாங்கி, பெருவிரலால் அவள் மூக்குத்தியை வருட, பட்டென விழி திறந்தவள், தன்னையே விழுங்குவதுபோல் பார்த்துக் கொண்டு, இதழின் ஓரம் குறும்பு புன்னகை தவழ, தன் முகம் பார்த்தவனைக் கண்டு திகைத்துப் போனாள்.

“ரெண்டு நாளைக்குள்ளேயே உன் கிட்டே கூட வர முடியலை. ரூமுக்குள்ளே வந்தாலே ஒரு பேட் ஸ்மெல் வேற அடிக்குது. இதில், கை சரியாகற வரைக்கும் குளிக்காமல் இருந்தால்...” அவன் இழுக்க, அவனை விட்டு விலக முயன்றாள்.

“சொல்லிட்டு போடி...” இப்பொழுது அவள் இடையோடு கட்டிக் கொண்டான்.

“அப்படியொண்ணும் கஷ்டப்பட்டு யாரும் என் கிட்டே வர வேண்டாம்” எழ மறுத்த குரலை முயன்று மேலெழுப்பி அவள் உரைக்க, “அப்போ..., பிளான் பண்ணிதான் செய்யிற...” இன்னுமாக அவளை தன் அருகே இழுக்க, இதற்கு அவள் என்ன சொல்வதாம்?

“ம்ச்..., விடுங்க...” கைகளால் அவனை விலக்கித் தள்ள முடியாமல் முனகினாள்.

“சொல்லு..., இப்போ குளிக்கறியா இல்லையா...?” அவன் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறி திண்டாடிப் போனாள்.

“பதில் சொல்லு...” அவன் அவளை விடாமல் துளைக்க, “தெரியாது...” இப்படித்தான் பதில் சொன்னாள்.

‘இதென்ன பதில்...?’ என்பதுபோல் அவளைப் பார்க்க, தன் குண்டு கண்கள் மேலும் அகலமாக, ஒரு நொடி அவனை ஏறிட்டவள், பார்வையை வேகமாக திருப்பிக் கொண்டாள்.

“அப்போ நான் டிசைட் பண்ணவா…?” அவன் குரல் ஏன் இவ்வளவு உருகிக் கரைகிறதாம்? அவள் அமைதியை கடைபிடிக்க, அறைக்கதவை தாழிட்டுவிட்டு வந்தவன், அவள் கரங்கள் இரண்டையும் பாலித்தீன் கவரால் பொதிந்தவன், அவளது உடை மாற்ற முயல, அவ்வளவு நேரம் அமைதியாக இருந்தவள், மறுப்பாய் தலை அசைத்தாள்.

“ம்ச்…, என்னதான் உன் பிரச்சனை…? அம்மா வேண்டாம், இந்திரா வேண்டாம், நானும் செய்யக் கூடாதுன்னா…? ஹாஸ்பிட்டல்ல இருந்து நர்ஸை வரச் சொல்லவா?” அவன் சற்று கோபமாக உரைக்க, திணறி திண்டாடிப் போனாள்.

சில விஷயங்களை அவ்வளவு சுலபமாக ஒரு பெண்ணால் கையாண்டுவிட முடியாது. அதுவும் ஒரு ஆணின் முன்னால், அது கொண்டவனே என்றாலும், தங்களுக்குள் உறவுநிலை சரியாக இருந்திருந்தால் எப்படியோ? ஆனால் இங்கே…, இன்று வரைக்கும், அவன் அவனாகவும், அவள் அவளாகவும் இருக்கையில், வெகு சுலபமாக அவளால் அந்த சூழ்நிலையை கையாள முடியவில்லை.

ஒருவரும் ஒருயிராய் வாழ்ந்திருந்தால் எப்படியோ…, ஆனால் இது…, ஒரு அவஸ்தையான மனநிலையையும் மீறி, கண்கள் கலங்கிப் போனது. ‘என் தாய் இருந்திருந்தால்…?’ ஒரு நொடி அவளால் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை.

அவளைப் பெற்றவர்கள் மேல் அவளுக்கு அளவு கடந்த கோபம் உண்டு. கடன்தொல்லையால் இந்த உலகை விட்டு போக முடிவெடுத்தவர்கள், ஏன் அவளையும் உடன் அழைத்துச் செல்லவில்லை என்ற பெரும் கோபம் அவளுக்கு எப்பொழுதும் உண்டு.

அதையெல்லாம் விட, ஒரு கணவனாக, ஒரு ஆண்மகனாக தன்னை ‘அப்படி’ பார்க்கையில் அவன் மனநிலை என்னவாக இருக்கும்? அதை நிச்சயம் தவறென அவள் எண்ணவில்லை. அது இல்லாமல் போனால்தான் அவள் பயப்பட வேண்டும்.

ஆனால், இப்படி ஒரு சூழலில், தன் உணர்வுகளை, மனதை கட்டுப்படுத்த அவன் எவ்வளவு போராட வேண்டி இருக்கும் என எண்ணுகையிலேயே கண்ணீர் பெருகியது.

அந்த நேரம் அவன் தன்னை முழுதாக கொள்ளியிட்டால் கூட அவள் மறுக்க மாட்டாள். நிச்சயம் அவன் அதைச் செய்ய மாட்டான் என்பது அவளுக்கு உறுதியாகத் தெரியும். இத்தனை மாதங்களில், எத்தனையோ தருணங்களில், அவன் முன்னால் உடை மாற்றும் சூழல்களில் கூட, சற்று தடுமாறினாலும், தன்னை நெருங்க அவன் முயன்றதில்லை என்பதை கண்கூடாக கண்டிருக்கிறாளே.

இப்பொழுது நிகழப்போவது அதையெல்லாம் விட ஆயிரம் மடங்கு அவனுக்கு சோதனையை அளிக்கும் விஷயம். அதை எப்படி அவளால் செய்ய முடியும்? அதைவிட, அவனைத் தவிர வேறு யாருக்கும் தன் பெண்மையின் ரகசியங்களை வெளிப்படுத்த அவளால் முடியாது.

ஒரு பெண்ணின் மனம்..., இப்படித்தான் சிந்தித்தது. அதை எப்படி அவன் உணர்வான்?

ஆனால் இப்பொழுது அதையெல்லாம் மீறி..., தாய் வேண்டும் என மனம் அடம் பிடிப்பதை அவள் என்ன செய்ய? அவளது தயக்கத்தை உணர முடிந்த அவனால், அவளது மெல்லிய உணர்வுகளை படிக்க முடியவில்லை.

அவள் தயங்குவது மட்டுமே பிரதானமாகத் தெரிய, சுள்ளென கோபம் பெருகியது. ‘என்னிடம் அவளுக்கு என்ன தயக்கம்...?’ ஒரு ஆணால் எப்பொழுதும் பெண்ணின் நுண்ணிய மனநிலையை படிக்க முடியாது என்பதை நிரூபித்தான்.

அன்று அவனுக்கு காய்ச்சல் அடித்தபொழுது, அவள் தன் உடை மாற்றுகையில் தயக்கம் என்பதே சிறிதும் இன்றி அவனால் முடிந்தது, ஏன் அவளால் முடியவில்லை என்பது மட்டுமே அவனது எண்ணமாக இருந்தது.

அவள் செய்தால் அது பணிவிடை, தான் செய்தால் அதற்கு பெயர் வேறா?’ அவன் மனதில் கோபம் வியாபிக்கத்

துவங்கியது. “நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன், இதேபோல் ஆயிரம் உடம்பை நான் பார்த்திருக்கிறேன்” சுள்ளென அவன் உரைக்க, இதற்கு அவள் என்ன பதில் சொல்வதாம்?

அதன் பிறகு அவளால் எதுவும் சொல்லவோ, மறுக்கவோ முடியவில்லை, விரும்பவில்லை. தன் இமைகள் இரண்டையும் அழுத்தமாக மூடிக் கொண்டவள், குளித்து முடித்து, உடை மாற்றும் வரைக்கும் கூட தன் இமைகளை பிரித்துக் கொள்ளவில்லை.

குளிக்கையில், இத்தனை வருடங்கள் தான் மட்டுமே உணர்ந்த தன் மேனியில் அவன் கரங்கள் பயணிக்கையில், கிளர்ந்தெழும் உணர்வுகளை மீறி கண்களில் கண்ணீர் பெருகியது. மூடிய இமைகளுக்குள் இருந்து கண்ணீர் வழிவதை கண்டு கொண்டவனுக்கு, கோபம் மேலும் பெருகியதே தவிர குறையவில்லை.

‘தான் இவ்வளவு சொல்லியும் இப்படி நடந்து கொள்கிறாளே’ என்று இருந்தது அவனுக்கு. அவள் தன் வாழ்க்கையாக என்னை உணர்ந்தால் இந்த அழுகைக்கு அவசியமே இல்லையே என்று ஆத்திரமாக வேறு வந்தது.

அவள் தலை துவட்டி, அவளுக்கு உடை மாற்றியவன், “இந்த கண்ணீருக்கு என்ன அர்த்தம்...?” இறுகிய குரலில் அவன் கேட்க, அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அவள் இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டதன் காரணம், அவன் தடுமாற்றம், திணறலை தன்னால் பார்த்துகொண்டு இருக்க முடியாது என்பதால் தானே தவிர வேறு எதுவும் இல்லையென்று அவள் எப்படி சொல்வதாம்?

“பதில் சொல்ல மாட்டல்ல..., ஏன்? எனக்கு உன்மேல் எந்த உரிமையும் இல்லையா?” ‘முழு உரிமையும் உனக்கு மட்டும்தாண்டா...’ அவள் மனம் கதறியதை அவன் கேட்டிருக்க வாய்ப்பில்லை.

தன் சொந்தஊர் செல்லவேண்டிய வேலையைக் கூட, அவளைக் கவனிக்க வேண்டும் என்பதால் தள்ளி

வைத்தான். வாரம் ஒருமுறை அவளை தலை குளிக்க வைப்பது, தினமும் உடல் குளிக்க வைப்பது என அனைத்தையும் அவனே செய்தான்.

கிட்டத்தட்ட ஒரு மாதம் வரைக்கும் அவள் கரத்தில் நீர் பட அவன் அனுமதிக்கவில்லை. மருத்துவர், இனிமேல் தண்ணீர் படலாம் எனச் சொல்லும் வரைக்கும் தன் வேலையை, செய்கையை அவள் மறுத்தாலும் அவன் கை விட்டதில்லை.

அவள் அருகாமையில் முன்னர் இளகுபவன், இப்பொழுது இறுகிப் போக, தவித்துப் போனாள். அவனது இறுக்கம், தன்னை ஆள முடியவில்லையே என்பதால் வந்ததா?' சில நேரம் மனம் குரங்காய் சிந்திக்கையில் துவண்டு போனாள்.

கலைவாணியே அவன் செய்கையை எண்ணி பூரித்துப் போனார். 'என் பிள்ளை நல்லவன்...' அவர் மனம் எண்ணிக் கொண்டது. அதைவிட, கௌஷிகா அவரிடம் பேசியதை அவரால் நம்பவே முடியவில்லை. பிரம்மா சொல்லாமல் அவள் தன்னிடம் பேசியிருக்க மாட்டாள் என்பது அவருக்குத் தெரியுமே.

ஆனாலும், மகனாக தன்னிடம் பேசாமல், அவனிடம் பேசிவிட அவரால் முடியவில்லை. தன் முகம் காண மறுத்து செல்லும் அவனிடம் என்ன பேசுவதாம்?

பிரம்மாவோ காயத்ரி தனியாக தன் வேலையை செய்யத் துவங்கிய மறு நாள், தன் சொந்த ஊருக்கு கிளம்பிப் போனான். அவனது சித்தப்பா அளவுக்கு அவன் ஒன்றும் புனிதன் இல்லையே. அதோடு, தாயின் கடந்த காலத்தில் இருந்த உண்மை நிலை அவனுக்குத் தெரிந்தே ஆகவேண்டி இருந்தது.

கந்தன் ஜீப் ஓட்ட, அமைதியாக அவர் அருகில் அமர்ந்து கொண்டான். மனமோ கொந்தளித்துக் கொண்டு இருந்தது. பழையவை அனைத்தும் நினைவுக்கு வந்தே ஆகவேண்டும் என ஒரு மனம் தவித்துக் கிடக்க, அவன் மனநிலையை இன்னதென்று அவனால் வரையறுக்கவே முடியவில்லை.

“நீங்க அங்கே வந்திருக்கீங்களா கந்தன்?” அங்கே நிலவிய அமைதியை அவன் கலைக்க,

“ம்..., ஒரு முறை வந்திருக்கேன் சார்..., உங்க சித்தப்பா குடிச்சுட்டு யாரையோ போட்டு அடிச்சுட்டாருன்னு..., அந்த பிரச்னையை சால்வ் பண்ண போயிருந்தோம்...” அவர் சொல்ல, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

மூன்று மணி நேரப் பயணம்..., ஒரு முடிவுக்கு வர, சுற்றிலும் இருந்த ஏகாந்தத்தை, தென்னை மரத்தின் குளுமையை ஒரு நிமிடம் தன்னை மீறி அனுபவித்தான். கிராமத்துக்குள் ஜீப் நுழைந்த அடுத்த நொடியே, “பெருமாள் பையன் வர்றான்...” சில பெரியவர்களின் குரல் அவனைத் தீண்டினாலும் பெரிதாக கண்டுகொள்ளவில்லை.

ஜீப் அவன் வீட்டை நோக்கி பயணிக்க, ஒரு தோப்புக்கு மத்தியில் இருந்த குடிசையை காட்டிய கந்தன்..., “சார்..., அதோ தெரியுதே குடிசை..., அங்கே இருக்கும் ஒரு பெரியவரை நீங்க ஆசான்னு சொல்லுவீங்க...” தன் கையை அங்கே நீட்ட, புருவ மத்தியில் முடிச்சோடு அவரை ஏறிட்டான்.

“என்ன சொல்றீங்க...? என்ன ஆசான்...?” ‘ஆசான் என்றால் குரு தானே..., ஒரு வேளை...’ வேகமாக கணக்குப் போட்டவன், தன் வர்மக்கலையின் ரகசியம் அவராக இருப்பாரோ என எண்ணியவன், ஜீப்பை நிறுத்தச் சொல்லவே, ஜீப்பை நிறுத்தினார்.

பிரம்மா அப்பொழுதும் காக்கி பேண்ட், பூட்ஸ்..., வெள்ளை டிஷர்ட்டில் இருக்க, தன்னை மறித்த புற்களை காலால் மிதித்தவாறு மெதுவாக முன்னேறினான். அவர் வீட்டின் முன்னால் வந்து நின்றவனுக்கு, அவரை எப்படி அழைப்பது என்ற தடுமாற்றம்.

அவன் வரவை உணர்ந்தவர் போன்று, உள்ளே இருந்து நெற்றி நிறைய சந்தனமும், மேல்சட்டை அணியாத, வெள்ளை வேஷ்டி மட்டும் அணிந்த ஒரு பெரியவர் வெளியே வந்தார். பார்வைக்கு அறுபது வயது மதித்தாலும்,

நிச்சயம் என்பது வயதாவது அவருக்கு இருக்கும் என்பதை கணித்தான்.

“பிரம்மா...?” அவர் அழைப்பில் சிறு மலையாள வாசம் வீச, “ரொம்ப மாசத்துக்குப் பிறகு உன்னைப் பாக்கறேன். கல்யாணத்துக்கு வந்து சொல்வாய் என எதிர்பார்த்தேன்...” உரைத்தவர், வீட்டின் திண்ணையில் அமர,

“ஆசான்..., நான்...” அவன் தடுமாற,

“உன்கிட்டே ஒரு வித்தியாசம்..., பார்வையில் ஒரு பரிட்சயம் இல்லாத தன்மை, விபத்தில் என்ன ஆச்சு...?” நொடியில் தன் நிலையை கணித்த அவரைக் கண்டு பெரிதாக அவன் வியந்து போகவில்லை.

அவரிடம் சொல்லலாமா? வேண்டாமா என ஒரு நொடி யோசித்தவன், “எனக்கு பழைய சம்பவங்கள் எதுவும், மனிதர்கள் யாரும் என் ஞாபகத்தில் இல்லை...” அவன் தயங்கி உரைக்க, தன் வேஷ்டி மடிப்பில் இருந்து ஒரு பையை எடுத்து, அதில் இருந்து வெற்றிலையை எடுத்து வாயில் போட்டு மெல்லத் துவங்கினார்.

தன் எதிரில் அமருமாறு அவர் கையை அசைக்க, தயங்காமல் அவர் எதிரில் சம்மணமிட்டு அமர்ந்தான்.

வெற்றிலைச்சாறை விரலிடுக்கில் துப்பியவர், அவன் பின்னந்தலையில் ஏதோ ஒரு நரம்பை சட்டென சுண்ட, உலகமே சுழண்டு, கண்கள் இருண்டு, சுரீர் என்ற வலியை அவன் உணர, கை நீட்டி தன் அருகே இருந்த செம்பில் இருந்த தண்ணீரை கை நிறைய ஊற்றி, அவன் முகத்தில் பட்டென அடிக்க, தலையை உதறியவன், இமைகளை ஒரு நொடி மூடி, வேகமாக கண் திறந்தான்.

நினைவுகளில் என்னென்னவோ வந்து போக, அனைத்தும் கலங்கலாகவே தெரிந்தது. அவன் முகத்தையே சற்று நேரம் பார்த்தவர், “வீட்டுக்கு போயிட்டு, ரெண்டு நாள் இங்கே தங்குற மாதிரி வா” அவர் சொல்ல, மறுக்காமல் அதைச் செய்தான்.

மறுநாள் அவரது வீட்டுக்கு வர, அவனது சிகிச்சை துவங்கியது. ஏதேதோ பச்சிலை, கஷாயம்..., அவன் தலை முழுவதும் கஷாய எண்ணெய் என அவனுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கவே, அடுத்த இரண்டு நாட்களில் எழுபத்தைந்து சதவீதம் தெளிந்தான் என்றே சொல்லலாம்.

எதிரில் இருந்த அவரைப் பார்த்தவன், “ஆசானே..., வணக்கம்...” உரைத்தவன், வேகமாக எழுந்து அவர் காலைத் தொட்டு வணங்கினான்.

“இனிமேல் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா உன் நினைவுக்கு வந்துவிடும். ஒரு விஷயம் நினைவுக்கு வந்தால், அதை கோர்வையாக சேர்த்து அடுத்த விஷயங்களை தெரிந்துகொள்...” அவனுக்கு ஆசி வழங்கி விடை கொடுத்தார்.

அந்த நொடிமுதல், அவன் நினைவடுக்கில் அழிந்திருந்தவை அனைத்தும், கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் பதியப்பட்டது.

*****

# பகுதி – 37.

பத்து வயதில், தன் பள்ளி நண்பர்கள் அனைவரும், ‘உங்க அம்மா ஓடிப் போய்ட்டாங்களாடா?’ எனக் கேட்டு கேலி செய்வதும், அவர்களிடம் இருந்து தப்பிக்க, ஊருக்கு வெளியே, மந்திரவாதி என இந்த ஆசானைச் சொல்லி பயந்திருந்த ஊர் மக்களைத் தாண்டி, தைரியமாக அங்கே வந்தவன் அவன்.

தைரியமாக தன் வீட்டின் அருகே வந்த பிரம்மாவை பல நாள் கவனித்தவர், அவனிடம் மெதுவாக பேச்சு கொடுக்க, அப்பொழுதே அவன் வாயில் இருந்து அவரால் ஒரு வார்த்தை வாங்க முடியவில்லை.

தன் பெயரை மட்டுமே உரைத்தவன், தன்னைப்பற்றி அதற்குமேல் எதுவும் சொன்னதில்லை. அவன் மனதில் இருக்கும் கோபம், குறைகளை தானாகவே அறிந்தவர், தனக்குப் பிறகு தன் கலை அழிவதை விரும்பாமல், அவனுக்கு அதை சொல்லிக்கொடுக்க விரும்பினார்.

அவனிடம் ஒரே ஒரு வாக்கு மட்டுமே அவர் வாங்கியிருந்தார். அந்த கலையை தவறாக எந்த நேரத்திலும் பயன்படுத்தக் கூடாது எனச் சொல்ல, மறுக்காமல் வாக்கு கொடுத்தான்.

அதை இந்த நொடி வரைக்கும் காப்பாற்றியும் வருகிறான். “என்ன பிரம்மா..., எல்லாம் நினைவுக்கு வந்துடுச்சா?” அவர் அமைதியாக கேட்க, மெதுவாக தலை அசைத்தான்.

நிமிர்ந்து எழுந்தவன், அவர் முன்னால் நின்று, “உங்களுக்கு கொடுத்த வாக்கை, ஒரே ஒரு முறை மீறினால் என்மேல் கோபப்பட மாட்டீங்களே?” அவன் கேட்க, அவனை இடுங்கிய கண்களால் வெறித்தவர்,

“அருணாச்சலமா...?” அவர் அவ்வளவுதான் கேட்டார்.

“எனக்கு முழு உண்மையும் தெரிய வரப்போ..., அவனை உயிரோட விடுவேனா என்று எனக்கே தெரியலை. அதைவிட, இத்தனை நாள் எப்படி அவனை விட்டு

வைத்தேன் என்றும் தெரியலை...” அடக்கப்பட்ட கோபத்தில் அவன் உரைக்க, மெதுவாக எழுந்தவர், அவன் தோளை தட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

அவரது சம்மதம் கிடைக்கப் பெற்றவனாக ஜீப்புக்கு விரைந்தவனது நடையில் பெரும் மாறுதல். நொடியில் ஜீப்பை அடைந்தவன், “கந்தன்...” உரக்க குரல் கொடுக்க, “சார்...” அந்த அழைப்பில் தெரிந்த மாறுதலை நொடியில் உணர்ந்து கொண்டவர், வியப்பாய் பதில் குரல் கொடுக்க, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

ஜீப் அவன் வீட்டின் முன்னால் நிற்கவே, வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த அவனது சித்தி, “வாங்க..., ஐயாவுக்கு இப்போதான் வழி தெரிஞ்சதா...? எவளோ பெத்து போட்டு போன உன்னை, இத்தனை நாள் வளத்ததுக்கு, எனக்கு நல்ல பிரதிபலன் காட்டிட்ட.

“அதானே..., எவ ரத்தம் உன் உடம்பில் ஓடுது..., அது சும்மா இருக்குமா?” இன்னும் என்ன பேசியிருப்பாளோ, அதற்குள், “கணக்கு...” முற்றத்தில் இறங்கியவன் குரல் கொடுக்க, “தம்பி...” எங்கிருந்தோ குரல் கொடுத்தவர், அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில் அவன் முன்னால் நின்றார்.

“இந்த அம்மாவை உடனே தோட்டத்து வீட்டுக்கு போகச் சொல்லுங்க. நான் திரும்பி வரப்போ இங்கே இருந்தால்..., வீட்டோட சேர்த்து அவங்களையும் கொழுத்திடுவேன்” செய்வேன் என்ற குரலில் உரைக்க, நிச்சயம் ஆடிப் போனாள்.

பொதுவாகவே இப்படிப் பேசினால் அடங்கிப் போபவன், முதல் முறையாக எதிர்க்கவே நம்ப முடியாமல் திகைத்தாள். பிரம்மாவோ, ‘இப்படி பேசிப் பேசித்தானே என்னை எதையுமே யோசிக்க விடாமல் செய்துவிட்டார்கள்’ மனம் கொந்தளித்தது.

அந்த அறியாத வயதில் தாய் வீட்டை விட்டுச் சென்றதை அவனால் ஏற்க முடியவில்லை. பள்ளியில் சக மாணவர்களின் கேலி, சொந்தங்களின் அனுதாபம், சுற்றி

இருந்தவர்களின் ஏளனப் பார்வை..., இவை அனைத்துக்கும் தன்னைப் பெற்றவள் தானே காரணம் என கூனி குறுகிப் போனான்.

அப்பொழுதெல்லாம் அவனை அரவணைத்தது அவனது பாட்டிதான். “கோவப்படாதே ராசா...” என தன்னை சமாதானம் செய்யும் பாட்டி, ஒரு முறை கூட தன் தாயை குறை சொன்னதே இல்லை என்பதை இப்பொழுது சிந்திக்கத் தெரிந்த அளவுக்கு அப்பொழுது தெரியவில்லை.

“நான் இல்லையென்றால் உன்னை யார் கவனிப்பா...?” என சித்தி உரைக்கையில் கோபம் எழுந்தாலும், “அவளா இருக்கப்போய் உன்னை வீட்டை விட்டு துரத்தாமல் இருக்கறா” என பாட்டி ஒத்து ஊதுகையில், அவன் அவரை பொறுத்துப் போனான்.

வெளியே ஆயிரம்பேர் என்ன சொன்னாலும் எனக்கு ஒன்றும் இல்லை’ என திரிய முடிந்த அவனால், வீட்டுக்குள் சித்தி, சித்தப்பா பேசுவதை சகித்துக் கொள்ள முடிந்ததில்லை. தாயைத் தேடும் தங்கையை காண்கையில், அதுவேறு ஒரு பக்கம் பெரும் பிரளயத்தை அளித்தது.

இப்படி தங்களை அவர்கள் பேச்சுக்கு ஆளாக்கிச் சென்ற தாயின்மேல் பெரும் கோபத்தை தானாகவே வளர்த்துக் கொண்டான். அந்த கோபம்தான், அவர் தன்னை தேடி வருகையில் எல்லாம் வார்த்தையாக வெளிப்பட்டது.

கல்லூரி சேர்ந்த பொழுது சென்னையை விட்டே சென்றவன், ஊருக்கு வந்தபொழுது, “உன் ஆத்தாளுக்கு அஞ்சு வயசில் ஒரு பொம்பளைப்புள்ளை இருக்கு. அது தெரியுமா உனக்கு... இங்கே உங்களை பாக்க வந்து பாசமழை பொழியிறவ, அங்கே அவனோட குடும்பம் நடத்திட்டு இருக்கா...” சித்தப்பா அன்று உரைக்க, அதேநாள் தன்னைக் காண வந்த தாயிடம் அப்படியே கொட்டிவிட்டான்.

அந்த நாளை இப்பொழுது நினைத்தவனுக்கு ரத்தம் கொதித்தது. ‘எல்லாருமா சேர்ந்து என்னை எப்படி மாத்திட்டாங்க…’ அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கணக்குவோ திகைத்து நின்றுவிட்டார். அவர் அசையாமல் இருப்பதைப் பார்த்தவன், “பாலா…, ரத்னம்…” குரல் கொடுக்க, அங்கே வந்தவர்களைப் பார்த்து, “இந்த அம்மாவை இழுத்துட்டுபோய் தோட்டத்து வீட்டில் விட்டுட்டு வாங்க…” அவன் உக்கிர மூர்த்தியாக நிற்க, அதற்குமேல் அவளால் அங்கே நிற்க முடியவில்லை.

அவள் வேகமாக அங்கிருந்து வெளியேற, வீட்டுக்குள் சென்றவன், அங்கே கிடந்த சாய்வு நாற்காலியில் சென்று தொப்பென அமர்ந்தான். ‘இப்போ அந்த ஆள் வருவான்…’ அவன் பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருக்க, கணக்கபிள்ளை தயக்கமாக உள்ளே வந்தார்.

அவரை ஏறிட்டவன், “இந்த வீட்டுக்குள், இப்போ யார் இருந்தாலும், வெளியே போயாகணும்…, போய் சொல்லிட்டு வாங்க…” உரைத்தவன் இமைகளை மூடி படுத்துக் கொண்டான்.

உள்ளே சென்ற கணக்கப்பிள்ளை, அனைவரையும் ஒருமணிநேரம் கழித்து வேலைக்கு வரச் சொல்வது காதில் விழ, அசைவின்றி அமர்ந்திருந்தான்.

கண்களை மூடி சாய்ந்திருந்தவன், அவர் உள்ளே வந்ததை உணர்ந்து, “எங்க அப்பா எப்படி செத்தார்? எங்க அம்மா ஏன் இங்கே இருந்து போனாங்க? எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். இப்போ பாட்டி உயிரோட இல்லை, சோ…, நீங்க தைரியமா உண்மையை சொல்லலாம்” பட்டென விழி திறந்தவன், ‘எனக்கு உண்மை வேண்டும்’ என அவரை அழுத்தமாக ஏறிட்டான்.

“தம்பி…” அவர் தயங்கவே…,

“என் சித்தப்பனால் ஒண்ணும் புடுங்க முடியாது. இப்போ உண்மையை சொல்லப் போறீங்களா இல்லையா?” பழைய

பிரம்மா பீரிட்டு வெளியேறினான்.

“அது..., நான்...” அவர் தன் மேல் துண்டால், கன்னத்தில் வழிந்த வியர்வையை ஒற்றி எடுக்கவே, அவர் வாய் திறக்கவில்லை என்றால், அடித்து உதைத்தாவது உண்மையை வெளியே கொண்டுவரும் வேகத்தில் அவரை முறைத்தான்.

அவன் கோபத்தில் மிரண்டவர், “தம்பி..., உங்க அம்மா நம்ம சாதின்னாலும், அம்மா அப்பா இல்லாததால் இங்கேதான் வேலை பாத்தாங்க. அப்போவே உங்க சித்தப்பனுக்கு அவங்க மேலே ஒரு கண்ணு. பொறுப்பில்லாமல், ஊதாரியா திருஞ்ச அவரை ஊரே மதிக்கலை. அதில், உங்க அப்பா மேலே ஒரு கோபம்.

“பெரிய அய்யா இறந்த உடனேயே..., பெரியவர் பொறுப்பெடுத்து எல்லாம் நடத்த துவங்கினார். சின்னவர் எனக்கு சொத்தெல்லாம் வேணும்னு கேட்டு வாங்கி, அதை அழிச்சது வேறு கதை. பெரியவருக்கு கல்யாணம் செய்ய முடிவு பண்ணப்போ, கலையை கட்டிக்கறேன்னு சொல்லிட்டார்.

“பெரிய அம்மாவுக்கு இதில் சம்மதமே இல்லை. ஆனாலும், அவர் கேட்ட பிறகு மறுக்க முடியுமா? கட்டி வச்சாங்க. ஆனாலும், நம்ம புள்ளைக்கு இவ ஈடான்னு மனசுக்குள் ஒரு கோபம் இருந்திருக்கும் போல...” அதை ஒரு யூகமாக உரைக்க, மனதுக்குள் குறித்துக் கொண்டான்.

“பெரியவரும், கலையும் சந்தோஷமாத்தான் இருந்தாங்க. ஆனா, தான் ஆசைப்பட்ட பொண்ணை அண்ணன் வேணும்னே கல்யாணம் கட்டிகிட்டான்னு அவர் மேலே வஞ்சம் வளத்து, அவர் இல்லாத நேரம்..., கலை கிட்டே சின்னவர் தப்பா நடந்துக்க பாத்தார்.

“பலமுறை உங்க பாட்டிக்கு விஷயம் தெரியாமல் இருந்தது. கலைக்கு இந்த விஷயத்தை வெளியே சொல்ல பயம். அப்படி சொன்னா..., அண்ணனை கொன்னுடுவேன்னு

மிரட்ட வேற செய்யவே, அவங்களுக்கு என்ன செய்யன்னு தெரியலை.

“ஒரு கட்டத்தில் அது கை மீற, உங்க பாட்டியே பாத்துட்டாங்க. உடனே அவரை கண்டிச்சு, வேற கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க. அப்போவாவது திருந்துவார்ன்னு பாத்தாங்க. உங்க பாட்டியும், ‘இதையெல்லாம் பெரியவன் கிட்டே சொல்லாதே’ன்னு சொல்ல, கலைக்கு என்ன செய்யன்னு தெரியலை.

“சின்னவளும் பிறந்த பிறகும் அவர் தொல்லை பொறுக்க முடியாமல், லேசா உங்க அப்பா காதில் விஷயத்தை போட, அன்னைக்கு உங்க அப்பா, உங்க அம்மாவை கை நீட்டி அடிச்சுட்டார். ‘என் தம்பி தறுதலைதான், அதுக்காக அம்மாவுக்கும், தாரத்துக்கும் வித்தியாசம் தெரியாதவன் இல்லை’ன்னு சொல்ல, கலை உடைஞ்சு போய்ட்டா.

“உன் பாட்டி வேற அன்னைக்கு முழுக்க உங்க அம்மாவை கரைச்சு கொட்ட, அது உன் சித்தப்பன் காதுக்கும் போய்டுச்சு. சும்மாவே ஆடுனவன், அண்ணன்காரன் தன்னை நம்பறான்னு தெரிஞ்ச உடனே, இன்னும் குளிர் விட்டுப் போச்சு.

“உன் பாட்டிக்கும் ஒரு அளவுக்கு மேலே புள்ளையை கண்டிக்கவும் முடியலை, காட்டிக் கொடுக்கவும் முடியலை. கலை அவங்க பாத்து கட்டி வச்ச பொண்ணா இருந்தா இப்படி செஞ்சிருப்பாங்களா?” அவர் தன் போக்கில் சொல்ல, தன் பாட்டியை இப்பொழுது மனதுக்குள் வெறுத்தான்.

“உங்களுக்கு பத்து வயசு இருக்கும்போதுதான் அது நடந்துது…, உங்க அப்பா, ஒரு கல்யாணத்துக்கு போயிட்டு வர ரெண்டு நாள் ஆகும்னு சொல்லவே, கலை தானும் கூட வர்றேன்னு ஒரே அழுகை. பாப்பா சின்னவளா இருக்கான்னு சமாதானம் பண்ணிட்டு விட்டுட்டு போனார்.

“போனவருக்கு மனசு கேக்காமல் அன்னைக்கே திரும்பி வந்தா…, உங்க சித்தப்பா தைரியமா வீட்டுக்குள் வந்து…,

உங்க அம்மாவை தொடப் பாக்க, தடுத்த உங்க பாட்டியையும் அடிச்சு போட்டுட்டான்.

“ஊரில் இருந்து திடீர்னு வந்த உங்க அப்பாவுக்கு அதைப் பாக்கவே, தன் தம்பியா இப்படின்னு அதிர்ச்சின்னா..., கட்டுன பொண்டாட்டியை நம்பாமல் போனோமேன்னு ஒரு பக்கம் உடைஞ்சு போய்ட்டார். மறு நாளே, அவனை கொல்லாமல் விட மாட்டேன்னு போனவர்தான்...,

“பாம்பு கடிச்சிருச்சுன்னு உங்க சித்தப்பா தூக்கிட்டு வந்து போட, வீட்டு விஷயம் வெளியே தெரியாமல் போகவே, யாரும் சந்தேகப் படலை. உங்க அப்பா சொல்லி, நான்தான் மகேசுக்கு தகவல் கொடுத்தேன். அப்போ கூட, உங்க அப்பா அப்படி ஒரு முடிவை எடுப்பார்ன்னு நான் நம்பலை.

“விஷம் ஏற முன்னாடி..., தன் சொத்தை எல்லாம் பொண்டாட்டி பிள்ளைக்கு எழுதினவர், உங்க எல்லாரையும் மகேஷ் கையில் புடிச்சு கொடுத்துட்டு செத்துப் போய்ட்டார்.

“நீங்க எல்லாரும் மொத்தமா மகேஷ் கூட போனால் சந்தேகம் வரும்னு, உங்க சித்தப்பாதான், பாட்டியை திட்டி, பேசி, மிரட்டி புள்ளைங்களை கொடுக்க முடியாதுன்னு சொல்ல வைக்க, உங்க பாட்டியை மீறி கலையால் எதுவும் செய்ய முடியலை.

“வட்டா வட்டம் வந்து என் புள்ளைங்களை கொடுத்துடுங்கன்னு நின்னு அழும். ஒரு கட்டத்தில் நீங்களே அவங்களோட போக மாட்டேன்னு சொல்லவே, உங்க சித்தப்பாவுக்கு துளிர் விட்டு போச்சு. மகேஸ்வரனும் லேசுபட்ட ஆள் இல்லை,

“புள்ளைங்களுக்கு ஏதாவது ஒண்ணு ஆனால், அவன்தான் முழுப் பொறுப்புன்னு போலீஸ்ஸ்டேஷன்ல வச்சு எழுதி வாங்கிட்டுதான் உங்களை இங்கே விட்டு வச்சான். வாரம் தவறாமல் போன் போட்டு என்கிட்டே உங்களை எல்லாம் பத்தி விசாரிச்சிடுவான்.

“இந்த வீட்டு உப்பைத் தின்னு வளந்த எனக்கு யாரையும் மீறி பேசும் தைரியம் இருந்தது இல்லை. உங்களுக்கு உங்க

அம்மா மேலே சொல்ல முடியாத கோபம் வரப்போ எல்லாம், இதையெல்லாம் உங்ககிட்டே சொல்லணும்னு நினைப்பேன்.

“ஆனா..., உங்க பாட்டி அதுக்கு விட்டதில்லை. தனக்கு கொள்ளி போட ஒரு புள்ளையாவது வேணும்னு சொல்லி என் வாயை அடச்சுடுவாங்க. இப்போ கூட, நீங்களா கேக்கப் போய்தான் சொன்னேன்..., இல்லன்னா, நான் சொல்லியே இருக்க மாட்டேன்” அவர் நடுங்கிபோய் உரைக்க, வெடிக்கத் துவங்கிய தன் கோபத்தை, இருக்கையை எட்டி உதைத்து தீர்த்துக் கொண்டான்.

அவர் செய்வதறியாமல் நிற்க, “என் வீட்டில் இருந்து எவண்டா என் பொண்டாட்டியை வெளியே விரட்டினான்...?” குடிவெறியில் தள்ளாடி நடந்து வந்த சித்தப்பாவை பார்த்த பிரம்மாவுக்கு, கோபம் தலைக்கேறியது.

‘என் அப்பாவை கொன்னது மட்டுமில்லாமல், என் மனதில் நஞ்சையா விதைத்தாய்?’ எண்ணியவன், அவர் இடக்கை மணிக்கட்டை சுண்ட, கை முறுக்கிக் கொள்ள, வலியில் துடித்தான் அருணாச்சலம்.

“என் அப்பாவை நீதான் கொன்னியா?” வீடே அதிர கேட்டான்.

அதிர்ச்சியில் திகைத்த அருணாச்சலம், கணக்கை முறைக்க, அவர் சற்று நடுங்கித்தான் போனார். அதை கண்டுகொள்ளாத பிரம்மா, அடுத்த நொடி, கையை கத்திபோல் சித்தப்பாவின் இடுப்பில் இறக்கிய பிரம்மா, பின்கழுத்திலும் ஒரு வெட்டு போட, காக்காய் வலிப்பு வந்தவன்போல் அவன் உடல் வெட்டத் துவங்கியது.

கீழே விழுந்தவனது இடக்கை முறுக்கி, வாய் ஒரு பக்கம் இழுத்துக் கொள்ள, இடுப்பின் கீழே எந்த அசைவும் இருக்கவில்லை. கண்களில் மட்டும் ஒரு உயிர் பயம் தெரிய, வாய் திறந்து அவனால் எதுவும் பேச முடியவில்லை.

கண்களில் வலியும், பெரும் பயமும் குடிகொண்டிருக்க ‘என்னை கொன்றுவிடு…’ அவன் கண்கள் யாசித்தான்.

“உன்னை கொன்னுட்டா அது உனக்கு விடுதலை. இப்போ நான் உனக்கு கொடுத்திருப்பது தண்டனை…, இதை நீ ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு நாளும் அனுபவிக்கணும். ஏன் என் அப்பாவைக் கொன்னோம்…, ஏன் என்னை இப்படி மிருகமா மாத்தினோம்னு ஒவ்வொரு நிமிஷமும் நீ வருத்தப்பட்டு சாகணும்…” அவன் அருகில் மண்டியிட்டவன் அடிக்குரலில் கர்ஜிக்க, கணக்குவின் முதுகுத்தண்டு சில்லிட்டது.

அருணாச்சலத்தின் கண்களோ, உயிர்பயத்தை வெளியிட, அவன் அதை கொஞ்சமும் கண்டுகொள்ளவில்லை. கண்கள் இரண்டும் தீயாய் எரிக்க, வஞ்சினமாய் முறைத்தவன், அவனை கொல்ல முடியாத ஆத்திரத்தை கண்களில் வெளியிட்டான்.

“கணக்கு…, இனிமேல் இவனுக்கு பணம் கொடுக்காதீங்க. அந்த அம்மா கேட்டால், என்கிட்டே கேக்கச் சொல்லுங்க. இங்கே இதுவரை சுருட்டிய பணத்தை வைத்து இவனுக்கு வயித்தியம் பாக்கட்டும்…, இந்த நாயை தூக்கிட்டுபோய் அங்கே வீசிட்டு வாங்க…” உரைத்தவன், உள்ளே சென்று மறைந்தான்.

கணக்கு அருணாச்சலத்தை இரண்டு ஆட்களை வைத்து அள்ளிக்கொண்டு போகவே, அவ்வளவு நேரமாக வெளியே ஒதுங்கி நின்றிருந்த கந்தன் வீட்டுக்குள் வந்தான்.

அறைக்குள் சென்ற பிரம்மாவோ, தன் அறைக்குள் நுழைந்து, உடை கூட மாற்றாமல் அப்படியே ஷவரின் அடியில் சென்று நின்றான். மனதின் கொந்தளிப்பு அடங்கியதா எனக் கேட்டால், இல்லை என்றே சொல்லலாம்.

தாயின்மேல் இருந்த வெறுப்பால், தான் எப்படியெல்லாம் நடந்து கொண்டோம் என்பது கண்முன் நிழலாட, அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவன் இதுவரை தவறாக எதையும் செய்யவில்லைதான்..., ஆனால், ஒரு பெண்ணிடம் அவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டிருக்கக் கூடாது என அவன் மனம் உரைத்தது.

தன் கீழே வேலை பார்க்கும் பெண் காவலர்களை, வேலை சரியாக செய்யவில்லை என்றால் சட்டென கை நீட்டி அடித்திருப்பது வரைக்கும் நினைவுக்கு வர, அவன் கண்களில் தானாக கண்ணீர் வழிந்தது.

அவன் உள்ளே சென்று வெகு நேரம் ஆகவே..., “சார்..., சார்...” அவனது அறைக்கதவை ஓங்கித் தட்ட, சொட்டச் சொட்ட நனைந்தவனாக வந்து கதவைத் திறந்தவன், “இருக்கேனா செத்துட்டேனான்னு பாக்க வந்தீங்களா?” சுள்ளென விழ, வேகமாக பின்வாங்கினார்.

அப்பொழுதுதான் சட்டென உணர்வுக்கு வந்தவன், “சாரி, வெயிட் பண்ணுங்க வர்றேன்...” உரைத்தவன் கதவை மூடிக்கொண்டு கதற, திகைத்து நின்றிருந்த கந்தனுக்கே தாங்க முடியவில்லை.

‘இப்படி மிருகமாக மாறிப் போனேனே..., என்னை இப்படி மாற்றி விட்டானே...’ அவனால் எண்ணத்தான் முடிந்தது.

கந்தனோ, ‘எப்படி இருந்த மனுஷன்...’ ஒரு பெருமூச்சை வெளியேற்றியவர் விலகிச் சென்று அவனுக்காக காத்திருந்தார்.

கணக்கு அங்கே வந்து அவனுக்காக காத்திருக்க, வெளியே வந்தவன், “என்ன சொன்னாங்க அந்த அம்மா...?” குரல் இறுக கேட்க,

“வழக்கமா உங்க சித்தப்பா குடிச்சுட்டு எங்கேயாவது விழுந்து கிடந்தால் தூக்கிட்டு போய் விடுவது வழக்கம்தான்...” அத்தோடு முடித்துக் கொள்ள, அருணாச்சலத்தின் உயிரை குடிக்க முடியவில்லையே என மிகவும் வருந்தினான்.

“நான் கிளம்பறேன்..., ஏதாவதுன்னா போன் பண்ணுங்க...” உரைத்தவன், தன் வீட்டில் இருந்த உடையில் ஒன்றை போட்டிருந்தான். சோர்ந்து போய் நடக்கும் அவனைக் கண்டு வருந்தினாலும், ‘அனைத்தையும் திருத்தி, சரி செய்து விடுவான்’ என நம்பியவராக தன் வேலையைப் பார்க்கப் போனார்.

அவருக்கும் கலை அந்த வீட்டில் மீண்டுமாக வந்து வாழவேண்டும் என எதிர்பார்த்து காத்திருப்பவர் தானே. முன்னர் இருந்த பிரம்மா உண்மை அறியாதவன் இப்பொழுது இருப்பவனுக்கு அனைத்து உண்மைகளும் தெரியும் எனவே நம்பிக்கையோடு சென்றார்.

ஜீப் தோப்பின் வழியாக பயணிக்க, “ஒரு நிமிஷம்...” அவன் கேட்கவே, கந்தன் ஜீப்பை நிறுத்த, இறங்கிச் சென்றவன், தலையில் கை வைத்து அப்படியே நின்றுவிட்டான்.

அங்கே இருந்து வெளியேறிய பிறகுதான், காயத்ரி நினைவுக்கு வந்தாள். அவளோடான திருமணம், பேச்சுக்கள், கோபம், சீண்டல், என எதுவும் மறக்கவில்லை என்றாலும், ‘இனிமேல் அவளிடம் எப்படி நடந்து கொள்வேன்?’ என்னும் எண்ணம் பூதாகரமாக அவனை மிரட்டியது.

காமேஷ் பற்றி எண்ணியபொழுதே அவன் நினைவுக்கு வந்த வாசகம், ‘மாமாப்பய...’. அந்த எண்ணம் எழுந்த மறு நொடி, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். பழைய பிரம்மாவுக்கு வாய் பேச தெரியாது. அப்படியே திறந்தால், நூறு கெட்ட வார்த்தைகள் வந்து விழும்.

‘இதை எப்படி மறைக்க?’ தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

‘எந்த தைரியத்தில் நீ திருமணம் செய்தாய்?’ தன்னையே கேட்டுக் கொண்டவனுக்கு விடை தெரியவில்லை. காயத்ரியின் முகம் மனதுக்குள் மின்னி மறைய, மனம் ஒரு நிலைக்கு வருவதை திகைப்பாய் உணர்ந்தான்.

கூடவே…, காரணமின்றி மனம் குழம்பித் தவித்தது. ‘வாழ்க்கை எப்படிப் போகும்?’ கேள்விகள் மட்டுமே அவன் முன்னால் இருந்தது. அந்த மிருகத்தின் வாயிலாக தன் தாய் எவ்வளவு மன உளைச்சல்களை அடைந்திருப்பார்? அது தெரியாமல், நான் என்னவெல்லாம் பேசிவிட்டேன்.

‘இப்பொழுது காமேஷின் பின்புலம் தெரியவந்த பிறகு…, காயத்ரியை என்னவெல்லாம் சொல்வேன்? அப்படி நடக்கக் கூடாது…’ மனம் ஒரு பக்கம் பலமாய் ஆசைப்பட, எப்படி சாதிக்கப் போகிறோம் என நினைத்தாலே சோர்ந்து போனான்.

அவனது மனப் போராட்டம் புரிந்த கந்தனுக்கு, அவனிடம் போய் பேச ஆசைதான். ஆனால், அதை எப்படி எடுத்துக் கொள்வான்? என நினைக்கையில் தயக்கமாக இருந்தது.

அவன் மேலும் பலமணி நேரங்கள் அங்கிருந்து அசையாமலும், தன் குழப்பம் விலகாமலும் போகவே, மெதுவாக அவனை நெருங்கினார். “சார்…” அவனை அழைக்கவே, விருட்டென திரும்பி அவரைப் பார்த்தவன், தன் தேவையற்ற கோபத்தை ஒதுக்கினான்.

‘இதென்ன கோபப்படுவது மட்டுமே என் குணமாக மாறிப் போயிற்றா? இடையில் சில மாதங்கள் நான் அப்படி இல்லை தானே, அப்படியென்றால் இனிமேலும் என்னால் முடியும்…’ எண்ணியவன் ஆழமாக மூச்செடுத்து அவரை நோக்கினான்.

“வாழ்க்கையை எப்பொழுதும் அதன் போக்கில் வாழப் பழகணும். நாளைக்கு எப்படி இருக்கும்னு யோசித்தால், இன்னைக்கு இருப்பதை நாம் கோட்டை விட்டுடுவோம்…” அவனுக்கு அறிவுரை பிடிக்காது என்பது தெரிந்தும், தன்னால் முடிந்ததை செய்ய முயன்றார்.

அவர் சொன்னதை கேட்டுக் கொண்டவன், ‘போகலாம்…’ என்பதுபோல் நடந்துவிட்டான். ஜீப்பில் ஏறியவன், “காயு கிட்டே எதுவும் சொல்லிக்க வேண்டாம்” உரைத்தவன் அதன் பிறகு எதுவும் பேசவில்லை.

இரவு எட்டு மணிக்கு வீட்டுக்கு வந்தவனை எதிர்கொண்ட காயத்ரி, என்னவென்று கேட்கும் முன்பே, மாடிக்கு சென்று மறைந்தான். அவன் நடையில் இருந்த வித்தியாசம்..., இன்னதென்று அவளுக்குப் புரியவில்லை.

ஆனால் அவனது பாராமுகம் நெஞ்சை சுட, அவனை நாடி செல்லப் போனவளை வேகமாக தடுத்தார் கந்தன். இதற்கு முன்னர் அவர் இவ்வாறு செய்தது இல்லை என்பதால், நின்றவள் அவரை கேள்வியாக ஏறிட்டாள்.

“அம்மாடி..., இந்த காலத்து பிள்ளைங்களுக்கு அட்வைஸ் பண்ணா புடிக்காதுன்னு எனக்குத் தெரியும். ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியலை. கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு பையனுக்கு ஒரு கஷ்டம்னா அவன் அம்மாகிட்டே வருவான். அதுவே கல்யாணத்துக்குப் பிறகு அவனுக்கு ஒரு கஷ்டம்னா, அவனோட மனைவியைத்தான் முதலில் தேடுவான்.

“ஆனா..., இன்னைக்கு அவர்..., தனியா கண்கலங்கி நின்னதைப் பாத்து என்னால் தாங்கிக்கவே முடியலை. கல்யாணத்துக்கு முன்னாடி, நீங்க அவரை கத்தியால் குத்தினப்போ கூட அவர் அவ்வளவு கலங்கி நான் பாக்கலை.

“அந்த வீடியோவை ஒரு பென்டிரைவில் போட்டு, உங்ககிட்டே கொடுத்துட்டு, அதோட காப்பி தன்கிட்டே இல்லைன்னு சொல்ல சொன்னப்போ, உங்கமேலே அவர் வைத்த அன்பை சொல்லாமலே புரிஞ்சிருக்கேன். ஆனா நீங்க..., நான் வர்றேமா...” உரைத்தவர் கிளம்பிவிட்டார்.

‘அவர் அழுதாரா ஏன்...?’ கந்தனிடம் கேட்கலாம் என்றால், அவளது அந்த கேள்வியில் இருந்து தப்பிக்க வேண்டியே அவர் விரைந்துவிட்டார்.

அவர் உரைத்துச் சென்ற விஷயம்..., அந்த மெம்மரி கார்ட்..., அதை முழுதாக தன்னிடம் ஒப்படைக்கச் சொன்ன அவனது குணம், அதில் ஒளிந்திருந்த அவன் நேசம், நினைக்கையில் தன்னை நினைத்தே அவளுக்கு வெட்கமாக இருந்தது.

தன் அண்ணனை நினைத்து, தாலிகட்டிய கணவனான அவனை தான் விலகியிருக்கச் சொல்ல, தன்னை யாரென்று அறியும் முன்பே, முதல் நினைவில் நேசம் கொண்டு மணந்த அவன் எங்கே..., தான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்...?

ஒரு நொடி யோசித்தாள். அவன் தனிமையை போக்க வேண்டும் என எண்ணியவள், வேகமாக மாடியேறினாள். தங்கள் அறைக்குள் பார்க்க, அவன் அங்கே இருக்கவில்லை.

‘எங்கே சென்றார்...?’ பால்க்கனியில் பார்க்க, அங்கேயும் அவனில்லாமல் போகவே திகைத்தாள். வேகமாக அவன் உடற்பயிற்சி செய்யும் அறைக்குள் எட்டிப் பார்க்க, அங்கே வெறும் தரையில், சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த அவனைக் கண்டு திகைத்துப் போனாள்.

“என்னங்க...” பதறியவள் அவனை நெருங்க முயல, நிமிர்ந்து அவன் பார்த்த அந்த ஒற்றை பார்வையில், அவனை நெருங்கும் தைரியம் அடியோடு அற்றுப் போனது.

‘யார் நீ...?’ என்னும் பார்வை..., அவளை அகற்றி நிறுத்தும் அந்த பார்வையை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“அவுட்...” இரும்பாய் வெளியேறிய அவன் குரலில், அடுத்த அடியை எடுத்து வைக்கும் யோசனையை அடியோடு கை விட்டாள். அங்கே நிற்கவும் முடியவில்லை. அவன் கண்கள் சிவந்திருந்த விதம் வேறு நெஞ்சை உலுக்க, பரிதவித்தாள்.

‘பீமா...’ அவனை உருக வைக்கும் அந்த அழைப்பை உரைத்துவிட நாவு ஒத்துழைக்கவில்லை. அவள் கண்களில் வழிந்த அப்பட்டமான பயம் அவனை உலுக்க, பார்வையை அவளை விட்டு திருப்பினான்.

“உன்னை போகச் சொன்னேன்...” அவன் மீண்டும் உரைக்க,

“நீங்க தனியா..., வாங்க...” அவள் குரல் நடுங்கியது. அவன் மீண்டுமாக தன் பார்வையை அவள்மேல் திருப்ப, மனமின்றி அங்கிருந்து அகன்றாள்.

அவன் மனமோ..., தனக்கு என்ன வேண்டும் எனத் தெரியாமல் திணறியது. தன் கோபங்களை, முரட்டுத்தனத்தை அவளிடம் கொட்டி விடுவோமோ என அஞ்சினான்.

அவளது முந்தைய செய்கைகள், தன் கவனிப்பு..., அவளது மறுப்பு என ஒரு பக்கம் உலா போக, இனிமேலும் தன்னால் அப்படி இருக்க முடியுமா? தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அவள்மேல் தான் கொண்ட நேசம் முழுவதும் உண்மை. அவள் இன்றி தன்னால் வாழ முடியாது என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

‘அவள் என்ன நினைக்கிறாள்?’ அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. நினைவுகள் திரும்ப வந்ததில் கொஞ்சம் கூட அவனால் மகிழ முடியவில்லை.

இப்போதைய அவர்களது வாழ்க்கை..., அதை அப்படியே தொடர்வதில் அவனுக்கு சிறிதும் விருப்பம் இல்லை. அந்த நினைவுகள் கொடுக்கும் அழுத்தம், அதையும் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தனிமை அதைவிட கொடுமையாக இருந்தது. அங்கே மூச்சுமுட்டும் உணர்வை அனுபவித்தான்.

பழைய நிலையை விட, புதிய நிலைமை மோசமாகத்தான் இருந்தது. பழைய பிரம்மாவுக்கும், புது பிரம்மாவுக்கும் இடையில் ஊசலாடியது அவன் உள்ளம்.

ஒரு கட்டத்தில், ஷீபாவின் அறிவுரைதான் அவன் நினைவுக்கு வந்தது. ‘மனைவியிடம் சில விஷயங்களில் கெஞ்சலாம் தப்பில்லை...’ அவர் சொன்னதை நினைத்தவனுக்கு சற்று தெளிவு பிறந்தது. அவனுக்கு அந்த தெளிவு வருகையில், நேரம் கிட்டத்தட்ட பதினொன்று.

முன்னர் தனிமையில் அனைத்தையும் சம்மாளிக்க முடிந்த அவளால், துணை இருக்கையில் அவள் அருகாமையை

நாடியது.

‘புது பிரம்மாவை புதுப்பித்தால் என்ன? பழைய பிரம்மாவை மறந்து விடுவோம்’ எண்ணியவன், உறுதியாக எழுந்தான். அதை நினைத்த பிறகுதான், அவனால் நிம்மதியாக முடிந்தது.

தன் அறைக்குத் திரும்பியவன், ‘முட்டக்கண்ணி தூங்கிட்டு இருப்பாளே’ எண்ணியவனுக்கு அவனை மீறி, இதழ்களில் மெல்லிய புன்னகை. அவன் அறைக்கதவைத் திறக்க, படுக்கையில் அமர்ந்திருந்தாள் காயத்ரி.

கதவைத் திறக்கும் ஒலியில் வேகமாக அவன் முகத்தைப் பார்க்க, அதுவோ இறுகிப்போய் இருந்தது. ஏதாவது கேட்கலாம் என்றால், அவனது முக இறுக்கம் பயத்தை கொடுக்க, அமைதியாக ஏறிட்டாள். அவன் முகம் இறுக்கமாக இருப்பதாகத்தான் அவளுக்குத் தோன்றியது.

அவள் அருகே அமர்ந்தவன், அவள் முகத்தை அழுத்தமாக, ஆழமாகப் பார்க்க, கேள்வியாக அவனை ஏறிட்டாள்.

“என்னால் இந்த பிரஷ்ஷரை தாங்க முடியலை. எவ்வளவோ எனக்குள் போராடிப் பாத்துட்டேன். ஆனா..., பொதுவா எனக்கு தனிமை பழகிப்போன ஒன்றுதான். மனசு முதல் முறையா துணை தேடுது...” அவன் நிறுத்த, அவன் சொல்ல வருவதன் முழு அர்த்தம் புரியாமல் அவனை வெறித்தாள்.

அவள் பார்வையை வைத்தே அவள் மனதைப் படித்தவன், “எனக்கு இப்போ நீ வேணும்னு தோணுது. எனக்குத் தெரியும், உனக்கு என்னைப் பிடிக்காது, என்மேல் கோபம், பயம்..., எல்லாம். ஆனா, மனசு உன்னைத்தான் தேடுது நான் என்ன செய்யட்டும்?” அவளையே அசையாத பார்வை பார்த்தவன், நிதானமாக கேட்டான்.

அவன் கேட்ட விஷயம் காதில் விழுந்து, மூளையை அடையவே சற்று நேரம் பிடிக்க, கிரகித்த விஷயம், அவன் கேட்டதை நம்ப முடியாமல் விழிகளை விரியச் செய்தது. தன் தனிமையைப் போக்க, தன்னை அவன் நாடுவது, ஒரு

மனைவியாக அவளுக்கு சிறு கர்வத்தை கொடுத்தது என்றே சொல்லலாம்.

ஏற்கனவே அவன்மேல் பெரும் காதலாக இருப்பவள், அவன் கேட்டு மறுப்பாளா என்ன? அவள் மனமோ, ‘இதற்கு முன்னர் முத்தம் கொடுக்கும்போது யாரைக் கேட்டாராம்?’ மூளைக்குள் மின்னலடிக்க,

“உன்னை கிஸ் பண்றது என் லவ்வை உனக்கு புரிய வைக்க. நீ என்னை டிஸ்டப் பண்ற, உன் அழகு என்னை சலனப்படுத்துதுன்னு சொல்ற விஷயம். அதுக்கு உன் சம்மதம் வேண்டாம்” அவள் மனதைப் படித்தானா? இல்லையென்றால் அவனாக உரைத்தானா என அவளால் பிரித்தறிய முடியவில்லை.

மனமோ திக்கென அதிர, கூடவே, “இப்போ மட்டும் என்னவாம்?” கேள்வி சட்டென அவளிடமிருந்து பறந்தது.

“இது அப்படியில்லை..., உன்னை முழுசா ஆள எனக்கு உன் சம்மதம் முக்கியம்” அதற்கு பதில் கொடுக்க, அவனது வெளிப்படையான பேச்சும், பார்வையும், அவன் சம்மதம் கேட்டு நிற்கும் நிலையும், மனதின் ஓரம் தித்திப்பாய் இறங்க, தன் சம்மதத்தை எப்படி தெரிவிக்க எனத் தெரியாமல் தடுமாறினாள்.

கூடவே, இதையும் தன் மனதைப் பார்த்தே படிப்பானோ எனத் தடுமாறியவள், வேகமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

அவனோ, “சம்மதம் இல்லன்னாலும் சொல்லிடு..., எழுந்து போய்டறேன்...” அவன் உரைக்க, அவன் கேட்டு அவள் இதை மறுக்கவா? எனக்கு நீ வேண்டும் என தன்மேல் வந்து பாயாமல், ‘நீ வேண்டும்’ என கெஞ்சி நிற்கையில் அவளால் மறுக்க முடியுமா என்ன?

அவன் செய்கையை அவனாலேயே நம்ப முடியவில்லை. பழைய பிரம்மாவின் வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு இடமே இல்லை என உறுதியாக இருந்தவன். அப்படியே இருந்திருந்தாலும், அவள் உணர்வுகளுக்கோ, மனதுக்கோ

ஒரு சதவீதம் கூட மதிப்பு கொடுத்திருக்க மாட்டோம்’ என்ற உண்மையும் புரிய, அவள் முன்னால் இப்படி அமர்ந்திருப்பது அந்த நேரம் நிச்சயம் கோபத்தை அளிக்கவில்லை.

அவள் அருகில் எப்பொழுதும் தான் உருகுவதை அவன் மனம் கண்டு கொண்டது. ‘என்னால் இவளிடம் கோபப்பட முடியாது’ என்ற உண்மையை உணர்ந்து கொண்டான். அதைவிட, அவளிடம் இப்படி கெஞ்சிக்கொண்டு இருப்பதும் பிடிக்கவே செய்தது.

‘நீ என் உடமை’ என அவள்மேல் பாய மனம் ஒத்துழைக்கவில்லை, அதுவே சொன்னது..., நிச்சயம் அவளை காயப்படுத்த மாட்டோம் என..., அவள் முகத்தையே பார்த்திருந்தான்.

அவன் அவ்வாறு சொல்லவே, வேகமாக பார்வையை அவன்மேல் திருப்ப, அவன் முகத்தில் மெல்லிய இளக்கம். அதைப் பார்த்தவளுக்கு, அவன் முகத்தில் முழு நிம்மதியைக் காண வேண்டும் என்ற வேகம். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என எண்ணினாள்.

மனம் திடும் திடுமென அதிர, அவன் பார்வையும், பேச்சும், மெல்லிய அருகாமையும் கொடுத்த பரபரப்பில் சற்று நடுங்கிப் போனாள். மனம் முழுவதுமாக அவன் நெருக்கத்தை எதிர்பார்த்து ஏங்க, தன் பார்வை அதை அவனுக்கு உணர்த்திவிடக் கூடாது என முகத்தை மென்மையாக திருப்பிக் கொண்டாள்.

அவனோ..., அவள் உடல்மொழியின் சம்மதம் புரிந்தாலும், “எனக்கு இந்த அமைதி போதாது...” அவள் வாய்மொழியாக சம்மதம் எதிர்பார்த்தான்.

‘மத்ததெல்லாம் புரியும், என் சம்மதம் மட்டும் புரியாதா?’ மனதுக்குள் எண்ணியவள்,

“எனக்கு அப்படியெல்லாம் சொல்லத் தெரியாது. இங்கேயும் அப்படியே போலீஸ் புத்தியை காட்டணுமா? வேண்ணா லெட்டர் எழுதி கொண்டு வாங்க. சைன் பண்ணிக்

கொடுக்கறேன்...” உரைத்தவள், படுக்க முயல, அடுத்த நொடி, அவனது இறுகிய அணைப்புக்குள் இருந்தாள்.

“என்ன சொன்ன..., போலீஸ் புத்தியா? மறுபடி சொல்லு பார்ப்போம்” கேட்டவன், பதில் சொல்ல அவள் இதழ்களை சுதந்திரமாக விடவில்லை.

மறு நொடி அவன் கரங்கள் இரண்டும் தடைகளை விலக்க, அவன் கரத்துக்கு அணை போட முயன்றாள். அது தோல்வியில் முடிய, “முரடா, என்ன அவசரம்...?” அவன் வேகத்தில் மிரண்டாள்.

அவள் மேனியில் தன் உரிமையை அவன் கரங்கள் நிலைநாட்ட, “ம்ஹும்...” அவன் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

“ஏய்..., கையை விடு...” அவன் கேட்க, “முடியாது...” அவள் வெட்கம் கொண்டு, பிடிவாதமாக மறுக்கவே, முரட்டுத்தனமாய் எதையும் அவளிடம் சாதிக்க அவன் விரும்பவில்லை.

ஒரு கட்டத்தில் அவளோடு போராட முடியாமல், தன் முயற்சியை கை விட்டவன், அதிரடியாய் அவளுக்கு நெருக்கமாக மாற, “அம்மா...” அவளது அலறலில், வேகமாக அவளை விட்டு விலகினான்.

*****

# பகுதி – 38.

அவள் தன்னை உணரவிடாமல் வெட்கம் கொண்டு அவனைத் தடுக்க, முதல் உறவில் அவள் வெறுப்பை பெற்றுக்கொள்ள முடியாமல், தன் இளமையின் அடங்காத தேவையை மட்டுமாவது தீர்த்துக் கொள்வோம் என நினைத்தவன் அவளுக்கு நெருக்கமாக மாற, அவளது 'அம்மா…' என்ற அலறலில், நொடியும் தாமதிக்காமல் அவளை விட்டு விலகி எழுந்தான் பிரம்மா.

அவனது விலகலை நிச்சயம் அவள் எதிர்பார்க்கவில்லை. திகைத்துப்போய் அவனைப் பார்க்க, அவளுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தவன், தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். கூடவே, ஒரு தோற்றுப் போனவனின் உடல்மொழி அவனிடம்.

அவனது அந்த நிலையை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. சில நொடிகளில் தன்னை மீட்டுக் கொண்டவள், அவனைப் பார்க்க, அவன் இப்பொழுது தன் கைகளால் தலையைத் தாங்கியவாறு அமர்ந்திருந்தான்.

'ஏன் விலகிட்டார்…? இப்போ ஏன் இப்படி உக்காந்திருக்கார்?' அவள் எண்ண, அவனோ…, அவளிடம் தோற்றுப் போன உணர்வில் சற்று தகர்ந்துதான் போனான். உச்சத்தில் நின்ற உணர்வுகள் சட்டென வடிந்து போக, மனதின் கொதிப்பு அதிகரித்தது.

'எழுந்து செல்…' அவன் மனம் கூச்சலிட, அவனது அந்த நிலையை அவளால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

"என்னங்க…" மென்மையாக அவனை அழைக்க, எழுந்து செல்லும் முடிவை சட்டென ஒற்றி வைத்தான்.

"இதுக்கு நீ முடியாதுன்னே சொல்லியிருக்கலாம்…, இப்போ…" என்னவோ கசந்த உணர்வில் அவன் உரைக்க, அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

அவன் சொல்லவருவது புரியவில்லை என்றாலும், அவன் குரலில் வழியும் இயலாமை புரிகிறது தானே.

“என்னன்னு சொன்னாத்தானே தெரியும்...” அவள் ஒன்றும் வேண்டும் என்று எதையும் செய்யவில்லையே..., புரியாமல் கேட்டாள். தன் அமைதி அவனை இன்னும் காயப்படுத்தும் என்பது புரிய, தன் வெட்கத்தை ஒதுக்கி அவனிடம் கேட்டாள்.

“ம்ச்..., என்னை உனக்கு சுத்தமா புடிக்கலையா காயு. பிடிக்காமல்தான் நீ இப்போ..., நான் என்ன உன்னை ‘ரேப்’பா பண்றேன்? எனக்கு பெண்சுகம் மட்டும்தான் வேணும்னா, அது எனக்கு தாராளமா வெளியே கிடைக்கும். ஆனா எனக்கு...” எதையோ அவன் வார்த்தையில் வடிக்க முடியாமல் திணறுவது அவளுக்குப் புரிந்தது.

‘நான் எதுவும் செய்யவில்லையே..., விலக்கித் தள்ளவும் இல்லையே..., பிறகு ஏன் இப்படி பேசறார்?’ மனதுக்குள் எண்ணியவள், “இப்போ என்னதான் ஆச்சு?” அவன் தவிப்பது தாளாமல், போர்வைக்குள்ளாகவே நகர்ந்து, தன்னை மறைத்துக் கொண்டவள், அவன் அருகே அமர்ந்தாள்.

“எனக்கு நீ வேணும்..., முழுசா..., மொத்தமா...” கிட்டத்தட்ட கத்தியவன், அவள் தோளை அழுத்தமாக பற்றினான். அவன் கோபத்தின் வெளிப்பாடு அவன் கைகளின் பிடியில் தெரிய, அவள் சற்று புருவம் நெரிக்கவே, பட்டென கரத்தை எடுத்து விட்டான்.

வார்த்தைகளை பாதியில் முடிக்கும் விதம் தெரியாமல், “ஆனா இப்படி இல்லை. ‘என்னவோ போ’ன்னு நீ இருக்கற. என்னால் அதை தாங்கிக்க முடியலை. உனக்கு என்ன புடிக்கும்னு எனக்குத் தெரிய வேண்டாமா? நம்மளோட நெருக்கத்தில் நீ என்னை பீல் பண்ணனும். ஆனா நீ..., என்னை தடுக்கற.

“உன் மனசுக்குள் நான் இருந்தால் நீ இப்படி பீல் பண்ண மாட்ட. இந்த பெயின்..., நான் தோத்துப் போற மாதிரி

இருக்கு. ஓகே..., இன்னைக்கு எதுவும் வேண்டாம் போதுமா...?” இயலாமையும் ஆற்றாமையும் போட்டி போட, கோபமாக முடித்தான்.

தன் உச்ச நிலையில் கூட, தனக்காகப் பார்த்து, தன்னை விட்டு விலகிய அவனது செய்கையில் மொத்தமாக வீழ்ந்து போனாள். ஒரு பெண்ணாக, தன் மனநிலையை மதிக்கும் இதைவிட வேறு அவளுக்கு என்ன வேண்டும்? இதையெல்லாம் விட, ‘உனக்கு என்ன புடிக்கும்னு எனக்குத் தெரிய வேண்டாமா?’ அவனது கேள்வி..., உருகித்தான் போனாள்.

தன் தேவை மட்டுமே பிரதானம்..., என எண்ணாமல், தனக்காக அவன் பார்ப்பது நெஞ்சை வருட, தன் வெட்கம் மீறி, தயக்கம் தாண்டி, மெதுவாக அவனை நெருங்கியவள், அவன் முதுகோடு ஒண்டிக் கொண்டாள். கூடவே, அவளது கரம், அவன் இடையை வளைக்க, நம்ப முடியாத திகைப்பில் அவளை திரும்பிப் பார்த்தான்.

“காயு...” ஒருவித எதிர்பார்ப்பு அவன் அழைப்பில் வழிந்தது.

“இப்போ நான் என்ன செய்யட்டும்...?” குரலில் வெட்கம் வழிய, அவன் முதுகில் முகத்தை புதைத்துக் கொண்டவள், மென்மையாக முனகினாள்.

பட்டென அவள் பக்கம் திரும்பியவன், அந்த இரவு விளக்கின் ஒளியில் அவள் முகம் காண முயன்றான். அவளோ, தன் முகத்தை அவனது உரமேறிய நெஞ்சில் அழுத்தமாக புதைத்துக் கொள்ள, அவன் உணர்வுகள் மெல்லமாய் தீ பற்றிக் கொள்ள, அவள் கூந்தலுக்குள் கை நுழைத்தவன், மேலும் அவள் முகத்தை தன் நெஞ்சோடு அழுத்தினான்.

அவன் வெற்று நெஞ்சும்..., அவன் நெஞ்சில் படர்ந்திருந்த ரோமங்கள் ஏற்படுத்திய குறுகுறுப்பையும் ரசித்தவள், தன் கரத்தால் அவன் வெற்று முதுகை வளைத்துக் கொண்டாள்.

“உனக்கு நான் செய்யிறது பிடிக்கலையா...?” அவள் காதுக்குள் அவன் கிசுகிசுக்க, அவன் இதழ்கள் செவிமடல்

தீண்டிய விதமும், அவன் மீசை முடியின் குறுகுறுப்பையும் ஒருங்கே ரசித்தவள், அவன் கேள்வியைக் கேட்டு மெல்லியதாய் சிலிர்த்துப் போனாள்.

“நான் உன்னை தொடக் கூடாதா? பாக்கக் கூடாதா?” அவன் இதழ்கள் கன்னத்தில் அழுத்தமாகப் பதிய, கரங்கள் இரண்டும் அவள் வெற்றிடையில் கோலம் போட்டது.

‘கொல்றானே...’ அவள் தவிப்பாய் எண்ண, “சொல்லு...” அவள் செவிமடல் அவன் இதழ் தீண்டலுக்கு இரையாகிக் கொண்டிருக்க, அவள் உடலின் ரத்தவோட்டம் தாறுமாறாய் எகிறியது.

பதில் சொல்லாமல் அவன் விடவே மாட்டான் என்பது அவளுக்கு தெரியுமாகையால், “ஹையோ..., எனக்குத் தெரியலை...” தன் முகத்தை இன்னும் அவன் நெஞ்சில் அழுத்தி, அவள் இதழ் அசைத்து உரைக்க, அந்த இதழசைவில் தன்னை தொலைத்தான்.

“காயு..., சாரி..., ரொம்ப வலிச்சதா...?” அவன் அக்கறையாக வினவ, அவன் நெஞ்சில் வலிக்காமல் குத்தியவள், “காட்டுமிராண்டி, பதில் சொல்லமாட்டேன் போ...” பெரும் வெட்கம் வந்து கவ்வ, அவனை விட்டு விலக முயன்றாள்.

படுக்கையறையில், இவ்வளவு நெருக்கத்தில் அவன் கரத்தில் உருகிக் கரைகையில், இத்தனை கேள்விகள் கேட்டால் அவளும் என்னதான் செய்ய?

அதை சுலபமாக தடுத்தவன், “இதுக்கேவா...?” கேட்டவன், தன் நெஞ்சில் புதைந்திருந்தவளின் கன்னம் தாங்கி, தன்னை விட்டு பிரித்தவன், அவள் கண்களுக்குள் ஊடுருவ, அவ்வளவு நெருக்கத்தில், தன்னை ஊடுருவும் அவன் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவள் விழி மூட, அடுத்த நொடி, அவன் முரட்டு இதழ்கள் அவள் பூவிதழைத் தீண்டியது.

மொத்தமாய் அவள் இதழை கவ்வி சுவைத்தவன், தன் முரட்டுத்தனத்தை ஒற்றை முத்தத்தில் காட்ட, அவன் வேகத்துக்கு அவளால் ஈடுகொடுக்க முடியவில்லை. அவன்

இதழ்தீண்டல் மொத்தமாய் அவளை உருக வைக்க, அந்த உணர்வை தாங்க முடியாமல் அவன் சிகைக்குள் கை கோர்த்து நெரித்தாள்.

‘அவனை விலக்கு’ மனம் போராட, கரங்கள் இரண்டும் மேலும் அவனை தன்னோடு இறுக்கியது. அவன் நெஞ்சோடு இன்னும், இன்னும் அழுத்தமாகப் புதைய, அவள் பஞ்சு தேகம் கொடுக்கும் இதத்தை ரசித்தவாறே அவள் இதழ்களுக்குள் தொலைந்தான்.

அவன் தனக்கு கிடைக்கவே மாட்டான் என முன்னர் மனதுக்குள் போராடியவளுக்கு, இன்று அவன் தன் கரங்களுக்குள். தன் கோபம் கடந்து, ஈகோ கடந்து, தனக்காக அவன் உருகும் விதம் அவளை புரட்டிப் போட, அவன் தேடலுக்கு சிறு ஆர்வமும், தயக்கமுமாக இசைந்தாள்.

அவளது ஒத்துழைப்பு அவனைத் தூண்ட, அவளை சரித்து, அவள்மேல் படர்ந்தவன், அவள் இதழை மென்று தின்றுவிடும் வேகத்தில் இருந்தான். “ஸ்…” அவன் பற்கள் கொடுத்த காயத்தை மெல்லியதாக முனகி வெளிப்படுத்தினாள்.

கரங்கள் இரண்டும் தன்னவளை மெதுவாக உணரத் துடிக்க, அப்பொழுதுதான், அவன் மட்டுமே தனக்கு ஆடையாகிப் போனதை உணர்ந்து திகைத்தாள். அவளை விட்டு கொஞ்சமாக அவன் விலக முயல, ஒரு கரத்தால் அவனை இழுத்து தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

“ம்ஹூம்…” அவள் மெல்லியதாக மறுக்க, பட்டென அவள் இதழ்களில் இருந்து விலகியவன், “ஏன்…?” கேட்டவன் அவள் கழுத்து வளைவில் முகம் புதைக்க, உடல் முழுவதும் பரவிய அந்த உணர்வை அடக்கும் வழி தெரியாமல், படுக்கை விரிப்பை கொத்தாக பற்றிக் கொண்டாள்.

அதைப் பார்த்தவன், அவள் கரத்தை எடுத்து தன்மேல் படர விட, அந்த தேக்கு மர தேகத்தை முழுதாக உணர முடியாமல், அவன் பார்வையில் வழிந்த வேட்கை அவளை சுட்டது.

“பீமா...” அவள் அருகே சரிந்து படுத்தவனது பார்வை, தன்மேல் முழுதாக பதிய, அதன் வேகம் தாளாமல், அவன் விழிகளை தன் கரத்தால் மூடினாள்.

அவனோ..., நீ கண்ணைத்தானே மூடினாய்..., இப்பொழுது பார்..., என அவனது கரங்கள் அவள் மேனியில் முழுதாக பயணிக்க, அவன் பார்வை பயணித்ததையே தாங்க முடியாதவளுக்கு, அவன் கரங்கள் தன் மேனியில் உரிமையாய் பயணிக்க, சட்டென அதை தடுக்க முயன்றாள்.

“இதெல்லாம் எனக்கு சொந்தம்டி...” அவள் காதில் உரைத்தவன், கரங்களின் அழுத்தம் கூட்ட, அவன் அடாவடியில் திணறி திண்டாடிப் போனாள்.

“மெதுவா...” அவன் கரங்களின் வேகமும் அழுத்தமும் அதிகரிக்க, அவன் கரத்தை தடுக்க முயன்று தோற்று, அவனிடம் முனக, அடுத்த நிமிடம் அவள் இதழ்கள் அவன் இதழ்களுக்குள் சிறை பட்டது. கூடவே, அவன் கரங்கள் பயணித்த இடங்களில், அவன் இதழ்கள் இறங்கி பயணிக்க, தவித்துப் போனாள்.

“ம்ஹும்..., வேண்டாம்..., முடியலை...” அவளது போலி மறுப்புக்கள் எதையும் அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவள் மேனியில், பற்களால் மெல்லிய காயம் செய்ய, “ஸ்...” சன்னமாய் முனகியவள், அவன் கொடுத்த காயத்துக்கு முனகினாளா, அவன் கொடுத்த உணர்வுகளின் கனம் தாளாமல் முனகினாளா எனத் தெரியவில்லை.

அவன் அவளை அழைத்துச் செல்லும் உலகுக்குள் கரைந்து காணாமல் போய்க்கொண்டிருந்தாள். உயிர் தீண்டும் வித்தையை அவன் அறிந்திருக்க, அவள் மேனியில் அவன் இதழ்கள் பயணிக்காத இடங்கள் அற்றுப் போனது.

“பீ..மா...” ஒரு கட்டத்தில் இதற்குமேல் தாங்க மாட்டேன் என அவள் நிலை மாற, “முடியலடா..., பீமா...” மொத்தமாய் என்னை கொள்ளையிடு என்னும் விதமாக அவள் துடிக்க, அவளை உருக வைத்தவன், அவள் இதழ் தீண்டி, “காயு...,

முடியலன்னா சொல்லிடு..., கத்தாதே...” எங்கே அவளுக்கு வலிக்குமோ என அவன் பதற, அவன் உணர்வுகளும் மொத்தமாய் முடித்துவிடு என கட்டளை இட்டுக் கொண்டிருந்தது.

அந்த மெல்லிய இருளிலும், அவன் கண்கள் அவள் கண்களை ஊடுருவ, அவ்வளவு நெருக்கத்தில் அவன் முகத்தையும், பார்வையையும் கண்டவளுக்கு, அவன்மேல் பித்து அதிகரித்தது.

அவன் முடியை கொத்தாக பற்றியவள், “தேவையில்லாத நேரம் என் வாயை அடைக்கத் தெரியுது..., இப்போ தெரியாதா...?” உச்ச உணர்வில் அவள் கேட்க, அதைப் புரிந்து கொண்டவனோ, அடுத்த நிமிடம் அதை செயல்படுத்தியிருந்தான்.

அவ்வளவு நேரம் அவள் உணர்ந்தது அவனது சூறாவளி வேகமே. மறு நிமிடம் அவளுக்கு நெருக்கமாக மாற, அவளது மெல்லிய அலறல், அவன் இதழ்களுக்குள் ஒலித்து அடங்கியது.

“அம்மா...” அவன் வேகத்தில் மிரண்டவள், “பீமா..., மெதுவா..., மெதுவா...” இதையே விடாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் நெருக்கம் ஏற்படுத்திய தகிப்பு, உடல் முழுவதும் பரவிய அந்த இதம்..., அவன் வேகம், அவன் வெற்று முதுகில் தன் நகக்கண்களை பதித்தாள்.

அவன் ஆடும் சதிராட்டம்..., அவன் வேகம்..., அம்மம்மா..., அந்த நேரம், அவன் முகம் காட்டும் உணர்வுகள், அதன் வர்ண ஜாலம்..., அவன் கண்களில் இருக்கும் மயக்கம், நிறைவு..., தன் மெல்லிய வலியையும் மீறி, அவனுக்காக எதையும் செய்யத் துடித்தது அவள் மனம்.

ஒரு கட்டத்தில், அவள் தேகம் மெல்லியதாய் நடுங்க, தனக்குள் ஏற்படும் பிரளயத்தில் எங்கே மூர்ச்சையாகி விடுவோமோ என அஞ்சினாள். “பீமா...” சன்னமாய் அலறியவள், தன் இதழ்களை தீண்டிய அவன் இதழ்களை பற்களால் அழுத்தமாக பற்றிக்கொள்ள முயல, அவள்

நிலை உணர்ந்து, தன் திரண்ட தோள்களில் அவளது பல் தடத்தை வாங்கிக் கொண்டான்.

அவள் சற்று சோர்ந்து போக, முகத்திலோ ஒரு திருப்தியான புன்னகை உதயமானது. அவன் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை. “ஆர் யூ ஓகே?” அவளை கொஞ்சமாய் கைகளில் அள்ளியவன் கேட்க, “பீமா, என்னை என்னடா பண்ண?” வெட்கமாய் முனகியவள், செல்லமாய் அவனை அடித்தாள்.

சில நொடிகள் அவள் அடியை வாங்கிக் கொண்டவன், தன் செயலை மீண்டுமாகத் துவங்க, மெல்லிய முனகலில் தன்னவனை முழுதாக வாங்கிக் கொண்டாள். “காயு…” தன் உச்ச நிலையில் அவள் பெயரைப் புலம்பியவன், முழு மூச்சில் அவளோடு கலந்தான். தன் வேட்கையும், வேகமும் தணிய, அவளை விட்டு விலகியவன், அவளை அள்ளி தன்மேல் போட்டுக் கொண்டு, முத்தமழை பொழிந்தான்.

மீண்டுமாக அவன் இதழ்கள் அவள் இதழ்களை தீண்டி சுகிக்க, அவள் இதழ்கள் இரண்டும் மரத்துப் போன உணர்வு. இதழ்கள் இரண்டும், மெல்லியதாய் எரிந்தாலும், அவன் தேடல், இதழ் அமுதம் பருகும் விதம், அவனது அடங்காத வேட்கை, ‘இதழ்தானே வேண்டும் வைச்சுக்கோ…’ மனம் முனக, அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

தன்மேல் இருந்தவளில் முகம் முழுக்க அடங்காது முத்தமிட, அவன் செய்கையில் உருகிக் கொண்டிருந்தாள். தன் பெண்மையை இதற்குமேல் அவனால் அங்கீகரிக்க முடியாது என்றே தோன்றியது.

“தேங்க்ஸ் காயு…” அவன் உரைக்க, அவன்மேல் முழுதாக படுத்துக் கொண்டவள், அவன் தேக்குமர தேகத்தை மெதுவாக ஒரு விரல் கொண்டு தீண்டினாள். அவ்வளவு நேரமாக அவன்தான் அவளை கொள்ளையிட்டு, தன் உலகுக்கு அழைத்துச் சென்றான்.

அவன் கொடுத்த, அள்ளித் தெளித்த உணர்வுகளை தாங்கிக் கொண்டவளுக்கு, அவன் தேகத்தை உணரும்

அவகாசமோ, நினைப்போ இருக்கவில்லை. அவனது ஜிம் பாடிமேல் எப்பொழுதுமே அவளுக்கு ஒரு மோகம் உண்டு.

ஓரவிழிப் பார்வையாக எத்தனையோ நாள் ரகசியமாக ரசித்திருக்கிறாள். அவன் உரமேறிய நெஞ்சை ஒரு முறையாவது தீண்டிப் பார்க்க வேண்டும் என விரும்பியிருக்கிறாள். ஆனால் இப்பொழுது, அவன் அருகில் இருந்த பொழுதும் அதை முழுதாக அவளால் செய்துவிட முடியவில்லை.

மெல்லமாக அவனைத் தீண்டியவள், எங்கே அவன் தன்னை கண்டு கொள்வானோ என்ற எண்ணம் தோன்றவே, பட்டென கரத்தை விலக்கிக் கொண்டாள். கூடவே, அவன் முன்னால் தான் இருக்கும் நிலை வெட்கம் கொள்ளச் செய்ய, மெதுவாக, தயக்கமாக, வெட்கம் கவ்வ அவன் முகம் நோக்கினாள்.

‘என்ன...?’ அவன் கண்களால் வினவ, அதை தவிர்த்தவள், தன் பார்வையைச் சுழற்றி, தன் ஆடை எங்கே எனத் தேடினாள்.

அவள் தேடலை கண்டு கொண்டவன், அவள் வெற்றிடையை இறுக்கி, கணவனாக சில்மிஷம் செய்ய, சங்கடமாக நெளிந்தவள், முகத்தை அவன் கழுத்தடியில் புதைத்துக் கொண்டாள்.

அவனோ..., தன் வாழ்வில் இப்படி ஒரு நாள் வரவே போவதில்லை என எண்ணியிருந்தவனுக்கு, அவளது ஒத்துழைப்பு, நெருக்கம், வெட்கம் என அவன் வேட்கையைத் தூண்ட, அவளை விட்டு விலகும் எண்ணமே இல்லாமல் இருக்க, சங்கடமாக நெளிந்தாள்.

அவனுக்கோ, அடங்காத இளமை, மீண்டும் தன்னவளைக் கேட்க, கைகளை நகர்த்தி, மீண்டுமாக அவள் மேனியின் மென்மைகளை பரிசோதிக்க, திணறிப் போனாள். கீழுதட்டை அழுத்தமாக கடித்துக் கொண்டு, “என்னங்க..., ரெஸ்ட் ரூம் போகணும்...” அவன் முகம் பார்க்க முடியாமல் முனகினாள்.

“போ…” தன் கரங்களை அவள்மேல் இருந்து விலக்கிக் கொள்ளாமல், கண்களால் சிரிக்க, அவன் நெஞ்சில் குத்தியவள், ‘பிளீஸ்…’ பார்வையால் கெஞ்சினாள். அவன் மறுப்பாக தலை அசைக்கவே, போர்வையால் தன்னை போர்த்தியவள், எழ முயல, அவனோ அப்பொழுதும் அசையவே இல்லை.

இருவர் தாராளமாக போர்த்திக்கொள்ளும் அந்த போர்வையை சுற்றிக் கொண்டு அவள் எப்படி எழுந்து செல்வதாம்? அவள் தவிப்பாய் அவனைப் பார்க்க, “போர்வை எனக்கு வேணும்…” அவன் அவள் கரத்தில் இருந்து பிடுங்கப் பார்க்க, விதிர்த்துப் போனாள்.

சற்று நேரத்துக்கு முன்னர் வரைக்கும் அவன் மட்டுமே தனக்கு ஆடையாக இருந்தான் என்பது எல்லாம் மறந்து போனது. அவனோ, அவள் தவிப்பான முகத்தை பார்த்தவாறே, மேலும் என்னென்னவோ பேசி அவளை சிவக்கச் செய்ய, “பீமா…” இப்பொழுது கெஞ்சினாள்.

“எழுந்து போக, என்கிட்டே என்ன வெட்கம்?” அவள் தாடை பிடித்து தன் கண்களைக் காணச் செய்தவன் வினவ, அவன் பார்வையை தவிர்த்தவள், மெதுவாக, மறுப்பாக தலை அசைத்தாள். ‘எழுந்து போகும் நிலையிலா என்னை வச்சிருக்க தடியா’ மனதுக்குள் அவனை, செல்லமாக திட்டிக் கொண்டாள்.

“எப்படிப் போறதாம்?” அவன் பிடிவாதம் உணர்ந்தவளுக்கு, மனதுக்குள் லேசான பயம் எட்டிப் பார்க்க, அதை உணர்ந்தவன், தன் அருகே இருந்த டவ்வலை எடுத்து அவள் கரத்தில் கொடுத்தான்.

அவனுக்கு செல்லக் கோபம், தன் முன்னால் அவள் இயல்பாக இருக்க வேண்டும் என்ற கோபம், அவள் முழுதாக தனக்கு மட்டுமே என்ற கோபம், அதை உணர்ந்தவளுக்கு, தன் மனநிலையை அவனுக்கு எப்படி சொல்லி புரிய வைக்க எனத் தெரியவில்லை.

அவனோடான முதல் நெருக்கம்..., பெண்மையின் பொக்கிஷங்களை முதல் முறையாய் உணர்ந்தவனுக்கோ, அதை தவிர்க்க முடியாத ஏக்கம், கூடவே..., “நான் அவ்வளவு கெட்டவன் இல்லை...” ஒரு மாதிரி குரலில் உரைக்க, சற்று கலங்கித்தான் போனாள்.

“ம்ச்..., இப்படி பேசாதீங்க..., எனக்கு வெக்கமா இருக்காதா...? இப்படியெல்லாம் பழகிக்க நாள் ஆகும்...” அவன் இறுக்கம் தாளாமல், வேகமாக உரைக்க, அவன் கண்களில் மின்னல் தெறித்தது.

“ஓ..., வெட்கம்..., ஓகே..., ரெஸ்ட் ரூம் போகணும்னு சொன்னல்ல..., வா...” உரைத்தவன், அவள் என்னவென்று உணரும் முன்பே, கைகளில் அள்ளியிருந்தான்.

“ஹையோ..., என்ன பண்றீங்க...? கீழே விடுங்க..., நான் போய்க்கறேன்...” அவளது மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை. டாய்லெட் வாசலில் அவளை இறக்கியவன், “நானும்...” கண்களில் குறும்பு வழிய அவன் இழுக்க,

“ம்ஹூம்...” முகம் நாணத்தில் சிவக்க, ‘வேண்டாமே...’ கெஞ்சும் பார்வையால் மறுத்து அவன் முகம் பார்க்க, அதில் வழிந்த குறும்பில் திகைத்து, “போடா...” உரைத்தவள் வேகமாக கதவை அடைத்தாள்.

“ஏய்...” குரல் கொடுத்தவன், கதவை பட்டென அடித்து, “வெளியே வந்துதானே ஆகணும்...” அவன் கத்த, திக்கென அதிர்ந்தாள். ஆனாலும், அவன் அப்படியொன்றும் செய்துவிட மாட்டான் என்ற நம்பிக்கை பிறக்கவே, தன்னை சுத்தம் செய்தவள், கொஞ்சமாக உடம்பு குளித்துக் கொண்டாள்.

அவன் முரட்டுத்தனத்தின் மிச்சங்கள் உடலில் சிறு வலியாக இம்சிக்க, ‘சரியான முரடு...’ அவனுக்கு பாராட்டு பத்திரம் வழங்கிக் கொண்டு, வெட்கமாக புன்னகைத்தாள்.

அவள் வெளியே வர நேரமாகவே, “காயு...” அவன் சற்று பதட்டமாக குரல் கொடுக்கவே, “இதோ வர்றேங்க...”

வேகமாக குரல் கொடுத்தவள், தயக்கமாக கதவைத் திறந்தாள்.

“செய்யிறதை பாதியில் விடும் பழக்கம் எனக்கு இல்லை…” உரைத்தவன், மீண்டுமாக அவளை கைகளில் அள்ள, அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள். அவளை படுக்கையில் விட்டவன், “டூ மினிட்ஸ்…” அவள் காதுக்குள் உரைக்க, அவள் என்னவென்று பார்க்க, அவன் கண்கள் சொன்ன சேதியில் சிவந்து போனாள்.

பாத்ரூம் சென்றவன், வேகமாக ஒரு குளியல் போட்டுவிட்டே வெளியே வர, அவளோ, அவனுக்கு முதுகு காட்டி படுத்திருந்தவள், அவன் வரும் அரவம் கேட்கவே அசையாமல் படுத்துக் கொண்டாள்.

படுக்கையில் ஏறியவன், அவள் முதுகில் ஒட்டிக் கொண்டு, “காயு, தூங்கிட்டியா…?” கேட்டவனது கரங்கள், அவள் இடையில் அழுத்தமாகப் பதிந்து, அவளை தன் பக்கம் திருப்பியது. அவள் இமைகளை அழுத்தமாக மூடிக் கொள்ள, அவள் முகத்தையே அசையாமல் பார்த்திருந்தான்.

அவனிடம் எதிர்வினை எதுவும் இல்லாமல் போகவே, மெதுவாக அவள் விழிகளைத் திறக்க, அவன் கண்களில் வழிந்த எதிர்பார்ப்பில் திணறிப் போனாள். வெற்று தேகங்களின் உரசல், தீக்குச்சி இல்லாமலே மனங்களில் தீ மூட்ட, அவள் நெஞ்சம் விம்மித் தணிந்தது.

அவள் அருகில் இன்னும் நெருங்கியவன், “காயு…” குழைவாய் அழைத்து, அவள் மூக்குத்தியில் இதழ் பதிக்க, இமைக்க மறந்து அவனை வெறித்தாள். ‘பிரம்மாவா இது…? அவரது குரலா இது? சிங்கமாய் கர்ஜித்து, நெருப்பாய் சுற்றிக் கொண்டிருப்பவன், தன்னிடம் குழையும் விதம், அதற்காகவே எதையும் செய்ய தயாராக இருந்தாள்.

“காயு…” மீண்டுமாக அவளை அழைக்க, “இங்கேதான் இருக்கேன்” அவளுக்கு குரல் எழும்ப மறுத்தது.

அவள் கரத்தை எடுத்து தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டவன், அவள் விழிகளை அசையாமல் பார்த்தவாறே, அவள் இதழ்களை இம்சிக்க, அவன் கன்னத்தை இறுக பற்றிக் கொண்டாள். மீண்டுமாக ஒரு முத்தப் போராட்டம்..., மூச்சு திணறத் திணற அவன் முத்தமிட, ஒரு கட்டத்தில் மூச்சுவிட முடியாமல், அவன் கன்னம் தாங்கி, பிடிவாதமாக அவனை விலக்கினாள்.

அவன் கண்களில் வழிந்த வேட்கை சுட, பார்வையை அவன்மேல் இருந்து திருப்ப, “வேண்டாமா...?” கேட்டவன், அவள் கழுத்தில் முகம் புதைத்து, குறுகுறுப்பூட்டியவன், இதழ்களை அவள் மேனியில் இறக்க, அவன் சிகைக்குள் கரம் கோர்த்தவள் அவன் செய்கையை தடுக்க முயன்றாள்.

“ம்ஹும்...” மறுப்பா, அழைப்பா எனத் தெரியாமல் அவள் முனக, அவள் மேனியில் மெதுவாக பல்த்தடம் பதிய கடித்தான். “ஸ்..., காட்டுமிராண்டி கடிக்காதடா...” கிளர்ந்தெழும் உணர்வுகளை அவளால் தாங்க முடியவில்லை.

அவள் கோரிக்கையை உடனே ஏற்றவன், தன் செய்கையை மாற்ற, ‘இவர் கடித்தாலே பரவாயில்லை...’ அவன் முகத்தை தன் மேனியில் அழுத்திக் கொண்டாள்.

“வேண்டாம்...” அவனது முன்னேற்றம் உணர்ந்தவள், பலமில்லாத குரலில் மறுக்க, “நான் வேண்டாமா...?” அவள் காதுமடலில் இதழ் பதித்தவன், “சொல்லுடி...” கரங்கள் அதன் வேலையை சரியாய் செய்தது.

அவனது அந்த உரிமை அழைப்பு அவளைத் தீண்டி தூண்ட, “வேண்டாம்னுதான் இப்படி உங்களோட இருக்கேனா?” மெல்லிய கோபத்தில் அவள் கேட்க, அவன் கண்களில் கரை காணா உணர்வு வந்து போனது.

முதல் கூடலுக்குப் பிறகு அவனது வேகம் சற்று தணிந்திருக்க, தன்னவளுக்கு தன்னை உணர்த்த, உணர வைக்க முயன்றான். அவள் கரத்தை எடுத்து, மீண்டுமாக

தன் கன்னத்தில் அழுத்த, அவன் தாடை ரோமம் ஏற்படுத்தியகுறுகுறுப்பில் அவள் தேகம் சிலிர்த்தது.

அவள் கண்கள் அவன் உரமேறிய தோளில் பதிய, அதைக் கண்டுகொண்டவன், எப்பொழுதும் அவள் பார்வை தன் வெற்று தேகத்தில் தடுமாறிப் பாய்வதை கண்டுகொண்டிருந்தவன், அவள் கரத்தை தன் தோளுக்கு இடம் மாற்ற, அவன் தன்னை கண்டுகொண்டான் என்ற உணர்வில் தன் கரத்தை உருவிகொள்ள முயன்றாள்.

அதை உணர்ந்தவன், “எனக்கு உன்மேல் முழு அதிகாரமும் உரிமையும் இருக்கு என்றால், உனக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா என்ன?” கேட்டவன் அவள் கரத்தை விலக அனுமதிக்கவில்லை.

கூடவே, “இந்த உடம்பை யார் பாக்க இப்படி வளத்து வச்சிருக்கேனாம்?” அவனது அந்த வெளிப்படையான பேச்சு வேறு இம்சிக்க, அவனை ஏறிட்டு பார்க்கவும் தயங்கினாள்.

அவள் கரத்தை தன் அகன்ற நெஞ்சில் வைத்து அழுத்தியவன், “ம்..., சும்மா தொட்டுப் பாரேன்” அவளை ஊக்கினான். சிறு ஆர்வமும், பெரும் தயக்கமும் போட்டி போட, அவன் கண்களை ஏறிட்டாள்.

“இந்த உலகத்திலேயே என்னைத் தொட்டு உணரும் உரிமை உனக்கு மட்டும்தான் இருக்கு. இந்த உலகத்தில் என் நிழலை நெருங்க ஒருவன் நினைத்தாலே நான் அனுமதிப்பது இல்லை. ஆனா..., என் நிழலை மட்டும் இல்லை, என் நிஜத்தை கூட உனக்குத்தான் கொடுக்கணும்னு நினைக்கறேன். சோ...” அவள் கண்களை ஆர்வமாய் பார்த்தான்.

எத்தனையோ பரிசுகள், பட்டங்கள் என அவன் வாங்கிக் குவித்தாலும், தனக்கு உரிமையானவள் தன்னைக் கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருக்காதா என்ன? அவள் தயக்கம் அப்பொழுதும் உடையாததைக் கண்டவனுக்கு கோபம் எழுந்தது.

“ஏன் காயு..., நீ ரசிக்கிற அளவுக்கு நான் இல்லையோ...?” எதைச் சொன்னால் அவள் தயக்கம் உடையும் என்று அவனுக்குத் தெரியாதா என்ன?

அதைக் கேட்டவளின் தயக்கம் விலக, மெதுவாய்..., மிக மெதுவாய் அவன் படிக்கட்டு தேகத்தில், அவள் விரல்கள், பட்டும் படாமல் பயணித்தது. இரும்பாய் ஒரு தேகம்..., பெரும் பிரமிப்பும், ஆசையுமாக ரசித்தாள். எத்தனையோ நாள், ஒரு முறையேனும் தொட்டுப் பார்க்க தவித்த அவனது கட்டுடல்...,

அவன் தன் கரத்தை விலக்கிக் கொண்டது கூட தெரியாமல், அவன் பக்கம் முழுதாக திரும்பிப் படுத்தவள், அவன் வெற்று தேகத்தில் விரல்களை ஓடவிட்டாள். அவள் முகத்தில் வந்து போகும் பிரமிப்பு, ஆசை, தயக்கம் என அனைத்தையும் இரவு விளக்கின் ஒளியில் ரசித்தான்.

அவளுக்கு பிடித்த மாதிரி தான் இருக்கிறோம்..., தன் கம்பீரத்தை அவள் விரும்புகிறாள், ரசிக்கிறாள் என்பதில் சிறு கர்வமே எழுந்தது. எவ்வளவு நேரமோ தெரியாது..., அவன் தேகம் மொத்தத்தையும் தன் கரத்தால் தொட்டு உணர்ந்தாள்.

“பிடிச்சிருக்கா...?” அவன் கேள்வியில் கலைந்தவள், கைகளை விலக்கிக்கொள்ள முயல, தன் உடலோடு அழுத்தியவன், “கிஸ் மீ...” அவன் கோரிக்கையில் திகைத்து, திணறிப் போனாள்.

அவன் அவளை எத்தனையோ முறை முத்தமிட்டிருக்கிறான்..., ஆனால் இது...? அவள் முகத்தில் மறுப்பைக் காணவே, அவள் முகத்தை தன் நெஞ்சில் அழுத்தியவன், “காயு பிளீஸ்..., ஐ வான்ட்...” அப்பட்டமான கெஞ்சல், அவளால் மறுக்க முடியவில்லை.

தன் இதழ்களை மெல்லியதாக அசைத்து, “ம்ச்...” அவன் நெஞ்சில் முத்தம் ஒன்றை பதிக்க, அவன் இரும்பு தேகம் மெல்லியதாய் சிலிர்ப்பதை அறிந்தவள், அவனை மேலும்

சிலிர்க்க வைக்க, தன் இதழ்களை அவன் தேகம் முழுக்க ஓடவிட்டாள்.

‘இவன் எனக்கு மட்டுமே உரியவன், எனக்கு மட்டும் சொந்தம்…’ எண்ணியவள், தயக்கம் துறக்க, அவன் உலகுக்குள் புகுந்தாள். அவள் முத்தத்தில் கிறங்கியவன், “காயு…, காயு…” பிதற்றியவன், அவளை நிமிர்த்தி அவள் இதழ்களை கவ்விக் கொண்டான்.

இறுதியாக அவள் கரம் பற்றி, அவன் நிலையை அவளுக்கு முழுதாய் உணர்த்த, முதலில் அவன் முத்தத்தில் கவனமாக இருந்தவள், பிறகே அவன் நிலையை, செய்கையை உணர்ந்தாள். அறிந்த பிறகோ, விதிர்த்துப் போனாள்.

“பீ..மா…” அவன் இதழ்களுக்குள் முனக, “என்கிட்டே என்னடி தயக்கம்…?” கேட்டவன், அவள் தயக்கம் விலக வைக்க, “பீமா…, இல்ல…, பயமா…” உளறியவள், அவனோடு ஒண்டிக் கொண்டாள்.

அவன் வெகு இயல்பாக இருக்க, அவளுக்குத்தான் பெரும் திணறலும் திண்டாட்டமுமாகிப் போனது. “உன் பீமா தாண்டி…” அவள் காதுக்குள் முனகியவன், மெல்லியதாக கிறங்கிப் போக, அவன் கண்களில் அதைப் பார்த்தவள், தன் வெட்கத்தை சற்று தள்ளி வைத்தாள்.

அந்த நிமிடம் அவனை அவ்வளவு பிடித்தது. அவன் தேவையை மட்டும் கொள்ளாமல், தனக்காக பார்க்கும் அவன் செய்கை, அந்த முரட்டு மனிதனின் மறு பக்கம், அவனது இயல்பு, நடத்தை, கட்டிலில் அவளை, அவள் உணர்வுகளை சரிசமமாய் மதிக்கும் விதம்…, அவனை தானாகவே முத்தமிட்டாள்.

எப்பொழுது அவள் செய்கையை தனதாக்கினானோ தெரியாது…, ஒரு கட்டத்தில் முத்தமிட்டு ஓய்ந்தவன், அவளுக்கு நெருக்கமாக மாற, இப்பொழுது அவன் வேகத்தில் அவள் திணறினாலும், அவனுக்கு ஏற்றவளாக தன்னை மாற்ற முயன்றாள்.

ஒரு அழகான தாம்பத்தியம் அங்கே பகிரப் பட்டது. அவன் நெருக்கம் தகிக்க, அவனை இழுத்து அணைத்தவள், அவன் இதழ்களை கவ்விக் கொண்டாள். அவன் உச்ச வேகத்தில், மூச்சடக்கி முக்குழிக்க, அவளை கொள்ளை கொண்டான்.

அந்த கூடலின் முடிவில், தானாகவே அவன் நெஞ்சில் புதைந்து, அவன் தேக்குமர தேகத்தை கைகளால் வளைத்துக் கொண்டாள். அந்த இரவு முழுவதும் அவளைக் கொண்டாடித் தீர்த்தான் அந்த பிரம்மா.

சூரிய உதயத்தில், மொத்தமாக களைத்து சோர்ந்தவள், “பீமா, போதும்..., முடியலை...” அவனிடம் மெல்லியதாக கெஞ்சிய பிறகே அவளை விட்டு விலகினான். களைப்பில் அவள் கண்கள் தாமாகவே மூடிக் கொள்ள, சூரியன் கிழக்கே உதித்தான்.

*****

# பகுதி – 39.

விடியற்காலையில், களைப்பில் அவள் விழிகள் மூடி உறக்கத்துக்குச் செல்ல, அவளை விட்டு விலகி எழுந்தவன், ஓய்வெடுக்கும் எண்ணமின்றி ஸ்டேஷனுக்கு கிளம்பினான். குளியலறை கண்ணாடியில் தன் முகம் பார்த்தவனுக்கு, தன் முரட்டுத்தனம் சற்று தொலைந்ததுபோல் தோன்றியது.

‘காயு…’ அவளை எண்ணும்பொழுதே, மனம் காற்றாய் மாறுவதையும், எண்ணங்கள் வேறு எதையும் சிந்திக்க மறுப்பதையும் உணர்ந்தவன், முதல்முறையாக புன்னகைத்தான். அவன் பிரம்மாவாக இருந்த வரைக்கும் இதழ் பிரித்து சிரித்ததாக அவனுக்கு நினைவே இல்லை.

கண்களில் வழியும் கனல், இதயத்திலும் எப்பொழுதும் ஆறாமல் இருக்கும். அதில், அவனைச் சுற்றி இருப்பவர்கள் எப்பொழுதும் பொசுங்கித்தான் போவார்கள். அவனிடம் ஒரு வார்த்தை பேசவே, அவர்கள் நாள் முழுவதும் யோசிப்பார்கள் அது அவனுக்கும் தெரியும்.

அவனுடன் இருந்த யாழினியே கூட, அவன் முகம் பார்க்கவே முன்னர் அஞ்சியது என்ன…, இப்பொழுது அவனோடு சாதாரணமாக உரையாடுவதை எண்ணியவனுக்கு, தன் நினைவுகள் போனதில் முதல் முறையாக சந்தோசம் அடைந்தான்.

அப்படிமட்டும் ஆகாமல் இருந்திருந்தால், இன்னும் ஒரு முரட்டு சிங்கமாகவே தான் இருந்திருப்போம். அம்மாவின் விஷயம் தெரியாமலே போயிருக்கும். கண்மூடித்தனமான கோபத்தை அவர்மேல் வளர்த்துக் கொண்டதை மாற்றியிருக்கவே மாட்டோம்’ ஷவருக்கு அடியில் யாசனை மொத்தமும் அதையே சுற்றி வந்தது.

“பீமா…” அவளது அழைப்பு காதுக்குள் ஒலிக்க, பிரம்மாவை விட, பீமாவை கொள்ளை கொள்ளையாய் பிடித்து தொலைத்தது.

‘எல்லாத்துக்கும் காயு தான் காரணம்…’ அவனால் அப்படித்தான் நினைக்க முடிந்தது. நேற்று மட்டும் அவன் வாழ்க்கையில் காயு இல்லாமல் போயிருந்தால், அதை நினைத்துப் பார்க்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை.

“காயு…” மனம் விட்டு ஆசையாக சொல்லிப் பார்த்துக் கொண்டான். அதே நேரம், சட்டென காமேஷின் நினைவு வர, கைகள் இரண்டும் பீமனினின் கஜாயுதமாய் முறுக்கேற, சட்டென காயுவின் முகம் மனதுக்குள் மின்னி மறைய, சட்டென தன் வேகத்தை கை விட்டான்.

‘இல்லை…, நான் இப்படி மாறக் கூடாது…, அவன் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், என் காயு வேறுதான்…’ மனதுக்குள் உரு போட்டான்.

அதென்னவோ அவன் முகத்துக்கு முன்னால் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவனால் தண்டிக்காமல் இருக்க முடியாது. சட்டம் அதன் கடமையை செய்யத் தவறினாலும், முழு மூச்சாக, எதைப் பற்றியும் கவலைப் படாமல் தீர்ப்பெழுதி விடுவான்.

காமேஷையும் அப்படி முடித்துவிட்டான்தான். ஆனால், அவனைச் சுற்றி இருந்தவர்கள், அதை செய்யத் தூண்டியவன்…, நினைக்க நினைக்க ரத்தம் கொதித்தது. ‘அந்த அரசியல்வாதியை முடிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால்…?’ ரத்தம் கொதிகலனுக்குள் இருக்கும் வெந்நீராய் கொதித்தது.

“பீமா…” அவன் செவிகளுக்குள் அந்த அழைப்பு விழுந்த மறு நிமிடம், பட்டென தன் வேகம் தணிந்தான்.

வேகமாக குளித்து வெளியேறியவன், காயுவவைப் பார்க்க, அவளோ போர்வைக்குள் சுருண்டிருந்தாள். ‘நைட் ரொம்ப கஷ்டப்படுத்திட்டமோ?’ எண்ணியவனுக்கு ‘ஆமாம்…’ என்ற பதிலே கிடைத்தது.

அவளை நெருங்கிச் செல்ல எழுந்த ஆவலை அடக்கியவன், வேகமாக உடை மாற்றினான். அவள் அருகில் சென்றால், நிச்சயம் இன்று ஸ்டேஷன் செல்ல மாட்டோம் என்பது

அவனுக்குத் தெளிவாகத் தெரியும். எனவே அந்த முடிவை கைவிட்டான்.

உடை மாற்றியவன் நேரம் பார்க்க அதுவோ பத்து எனக் காட்டவே, தன் தொப்பியை அதன் இடத்தில் இருந்து எடுத்தவன், காயுவை விட்டுச் செல்ல மனமே இல்லாமல், அவளை நெருங்கியவன் அவள் முகம் பார்க்க, தலைமுடி மொத்தமாக கலைந்து, முகம் முழுக்க விகசிக்க, களைப்பும், சோர்வுமாக தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவளது சிவப்பு மூக்குத்தி அவனை சுண்டி இழுக்க, குனிந்து அழுத்தமாக முத்தமிட்டவன், இதழை பிரிக்க முடியாமல், அவள் கன்னத்தில் இறக்கினான். அவனது எந்த செய்கைக்கும் அவள் அசைந்து கொடுக்கவே இல்லை.

“சரியான கும்பகர்ணி…, இவளுக்கு நான் பீமனாம்…” வாய்விட்டே கொஞ்சிக் கொண்டவன், அடங்காத தாபத்தில், அவள் இதழை மென்மையாக தீண்டினான். அது அவன் வேகத்தை இன்னும் கூட்ட, இன்னும் அழுத்தமாக இதழ் பதித்தவன், அவள் கீழுதட்டை மென்மையாக சுவைத்தான்.

தன் இதழ்களில் பதிந்த ஈரத்தில், கொஞ்சமாக உறக்கம் கலைய, “ம்…” மெதுவாக முனகியவள், உறக்கத்திலேயே அவன் சிகைக்குள் கரம் கோர்த்துக் கொண்டாள்.

அவன் சிகையில் இருந்த ஈரமும் சேர, இன்னும் கொஞ்சம் உறக்கம் கலைந்தாலும், அவளால் முழுதாக உறக்கம் கலைய முடியவில்லை. அவள் உறக்கம் சற்று கலைந்ததை பார்த்தவன், இன்னும் கொஞ்சம் வேகம் கூட்ட, அவன் செய்கைக்கு இசைந்தவள், அவன் இதழ் தீண்டலில் மயங்கினாள்.

கரங்கள் இரண்டும் தாமாகவே அவள் மேனியில் இடம் மாற, அவளுக்குள் மூழ்க துடித்தது அவன் இளமை.

உறக்கம் அவளை இழுத்துச் செல்ல, விழி திறக்க முடியாமல் திணறினாள். அதை உணர்ந்தவன், அவளை விட்டு விலகவே, அவளோ, “இன்னும் வேணுமா…?” தன்

களைப்பை மீறி, அவன் தேவை அவளை கேட்கத் தூண்ட, நிச்சயம் திகைத்துத்தான் போனான்.

‘ஒரு இரவு முழுவதும் உறங்காமல் தன்னைத் தாங்கியவள், அதீத களைப்பிலும், சோர்விலும், உறக்கத்திலும் கூட தன் தேவை தீர்க்க முயல்கிறாளே’ என எண்ணியவன், இப்படி ஒரு மனைவியை அடைய என்ன தவம் செய்தோம் என்றே தோன்றியது.

அவன், அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க, அவளோ, உறக்கத்தை தொடர்ந்து கொண்டிருந்தாள். ‘இவ்வளவு தூக்கத்திலும் என் தேவை உனக்கு பெரிதாடி…?’ மனதோடு கேட்டவன், “இல்லம்மா, தூங்கு…, நான் ஆபீஸ் போயிட்டு வர்றேன்…” அவளிடம் உரைத்தவன் எழுந்து கொண்டான்.

தான் சொன்னது அவளுக்கு கேட்டதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப் படவில்லை. கீழே வந்தவன், பொன்னம்மா சமைத்து வைத்திருந்த உணவை எடுத்துக் கொண்டு அவளுக்குத் தேவையானதை கட்டில் அருகில் வைத்தவன், தன் உணவை உண்டு விட்டு கிளம்பிவிட்டான்.

வெளியே வந்தவனை வரவேற்றது கந்தனின் முகமே. “மார்னிங் சார்…” அவர் உரைக்க, அவனது கைகள் தாமாகவே பேண்ட் பாக்கெட்டில் சிகரெட்டை தேடி எடுக்க, கையில் இருந்ததோ சுவிங்க டப்பா.

‘முட்டக்கண்ணி…, சிங்கத்தை சுவிங்கம் சாப்பிட வச்சிருக்க…’ கால்கள் அவளைத் தேடிச் செல்லத் தவிக்க, அவளுக்கு ஓய்வு முக்கியம் என்பதை மனதுக்குள் பதிய வைத்தவன், சுவிங்கத்தை வாயில் போடவும் மறக்கவில்லை.

நேற்று இரவில் பெரும் மனசோர்வில் வீட்டுக்கு வந்தவன், இன்று முகம் முழுவதும் பிரகாசமாக வெளியே வரவே, கந்தன் பெரும் நிம்மதியை அடைந்தார். அதுவும் அவன்

முகத்தில் உறைந்திருந்த அந்த புன்னகை..., அவன் நினைவு தவறி இருந்த பொழுது கூட அவர் காணாதது.

கந்தன் அவன் முகத்தையே மீண்டும் மீண்டுமாக பார்க்க, அதை கவனித்தாலும் கண்டுகொள்ளாமல், குளிர் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டான்.

அலுவலகத்தில் வந்து நிலுவையில் இருக்கும் கேஸ்..., தன் கண்ட்ரோலில் இருக்கும் ஸ்டேஷன்களின் ரிப்போர்ட் என அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தாலும், காயத்ரி மனதின் ஓரம் இருந்து இம்சித்தாள்.

அதே நேரம் அவனது அலைபேசி ஒலியெழுப்ப, அதில் ஒளிர்ந்த கௌஷிகாவின் எண்ணைப் பார்த்தவன் வேகமாக அதற்கு செவிமடுத்தான்.

“கௌஷி..., எப்படிம்மா இருக்க? முகேஷ் எப்படி இருக்கான்? குட்டி என்ன சொல்றான்?” அவன் இருந்த மனநிலையில் பேச்சு தானாகவே வந்து விழுந்தது.

“அண்ணே..., இது நீங்கதானா? நான் வேற யாருக்கும் போட்டுடலையே...” அவள் நம்ப முடியாமல் வியப்பாக கேட்ட பிறகுதான், தான் அதிகம் பேசிவிட்டதையே அறிந்தான்.

“உன் அண்ணாவேதான்..., சொல்லும்மா...” அவன் அளவுக்கதிகமான பாசம் கொட்டி வளர்த்த ஒரே ஜீவன். தாயின் பாசத்தையும் தான்தான் அவளுக்கு கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்து நடந்துகொண்டவன். அதிகம் பேசவில்லை என்றாலும், நீ என் உயிர் என ஒவ்வொரு செய்கையிலும் தெரிவிப்பான். எனவேதான் அவளுக்கும் அவன்மேல் கொள்ளை பாசம்.

“எப்படிண்ணே இருக்கீங்க...? அண்ணி எப்படி இருக்காங்க...?” கேட்டவள் சற்று இடைவெளி விட, அவள் எதையோ கேட்க வருவதை சட்டென புரிந்து கொண்டான்.

“கேக்க வந்ததை கேளு கௌஷி...” அவன் நேரடியாக கேட்க, ஒரு நொடி தயங்கினாளே தவிர திகைக்கவில்லை. “அண்ணே..., அம்மாகிட்டே பேசச் சொன்னீங்களே..., அது...,

நிஜமா...?” அவள் தயங்கி, தயங்கி கேட்க, ஒவ்வொரு முறை அவள் தாயைப் பற்றி கேட்பதும், அதற்கு தன் பதிலும் நினைவுக்கு வர, இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டான்.

“பிரம்மா என்னைக்கும் யோசிக்காமல் பேச மாட்டான் கௌஷி...” அவன் குரலில் தெரிந்த இறுக்கத்தில் குழம்பிப் போனாள்.

“எனக்குத் தெரியும் அண்ணா..., நேத்து சித்தி வேற போன் பண்ணியிருந்தாங்க, என்னென்னவோ சொன்னாங்க எனக்கு சுத்தமா எதுவும் புரியலை...” அவள் வார்த்தையை முடிக்கும் முன்பே,

“இனிமேல் அவங்களைப் பத்தி பேசாதே..., ஏன்..., யோசிக்க கூட செய்யாதே” கிட்டத்தட்ட வார்த்தைகளை அவன் கடித்து துப்ப, கௌஷிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

பொதுவாகவே கௌஷிகா அவர்களது சித்தி, சித்தப்பாவிடம் அவ்வளவாக ஒட்டுவது கிடையாது. வாயைத் திறந்தாலே, தன் தாயை கரித்துக் கொட்டும் அவர்களை ஆரம்பத்தில் இருந்தே அவளுக்கு பிடிக்காது.

ஒருமுறை கோபத்தில் அவள் சித்தியை எதிர்த்து பேசிவிட, ஒரு வாரத்துக்கு அவளை கோபமாகவே நடத்தி, வார்த்தைகளால் வதைக்க, அவரிடம் அதற்குமேல் மறந்தும் அவள் வாய் திறப்பதில்லை. இப்பொழுது அவராகவே போன் செய்து, பிரம்மா தங்களுக்கான அனைத்து உரிமையையும் பறித்துக் கொண்டதாகச் சொல்லவே, அவளுக்கு எதுவும் புரியவில்லை.

பொதுவாக பிரம்மாவும் அவரது வாய்க்கு பயந்தே அவரோடு எதையும் விவாதிக்க நிற்க மாட்டான். இந்த அவனது செய்கையை நம்ப முடியாமல்தான் கேட்டாள்.

கூடவே, அவனது கோபத்துக்கான காரணமும் புரியாமல், “நான் ஏதாவது தப்பா கேட்டுட்டனா அண்ணே...?” கலங்கினாள்.

“நீ கேக்கலை…, நான் பண்ணிட்டேன்…, ரொம்ப பெரிய தப்பு. இத்தனை வருஷம் ஒரு விஷப் பாம்புக்கு பால் ஊத்தி வளத்திருக்கேன்…” சொல்லத் துவங்கியவன், அவன் அறிந்த விஷயங்கள் அனைத்தையும் உரைத்து முடிக்க, அந்தப்பக்கம் கௌஷிகா தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

அவளை அழ விட்டவனது கண்களும், இங்கே சற்று கலங்கித்தான் போனது. “எனக்கு அம்மாவை பாக்கணும்…” அவள் தேம்ப, “போய் பாரும்மா…” அடைத்த தொண்டையை சரிபண்ணிக் கொண்டான்.

“அவர்கிட்டே இதையெல்லாம் சொல்லவா வேண்டாமா அண்ணா…?” அவள் கேட்க, “சொல்லிடும்மா…, முகேஷ் மாதிரி ஒருத்தன் கிட்டே தாராளமா சொல்லலாம். இத்தனை வருடம் அவன் கேள்வி கேட்காமல் இருந்ததே ஆச்சரியம். சொல்லிடு…”.

“நான் அம்மாவை பாக்க வர்றேன். என்னால் இதற்குமேல் இங்கே இருக்க முடியாது” அவள் இன்னும் அழுகையை நிறுத்தாமல் இருக்க, அப்பொழுதுதான் தனக்கு நினைவுக்கு வந்தது அவர்களுக்குத் தெரிந்தால் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என எண்ணினான்.

சட்டென முடிவெடுத்தவன், “உண்மையெல்லாம் உனக்கு தெரிந்ததாக காட்டிக்காதே கௌஷி…, அதைவிட அவங்களோட ரொம்ப ஒட்டாதே…” திடுமென அவன் உரைக்க, திகைத்துப் போனாள்.

“ஏன் அண்ணா…?” அவள் குழம்பினாள்.

“மகேஸ்வரனுக்கும், நிவேதாவுக்கும் என்ன பதில் சொல்லப்போற கௌஷி?” அவன் கேட்க, அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

“நீங்க சொல்ல வர்றது புரியலைண்ணா…” அவள் சொல்ல,

“உனக்கு தானாகவே புரிய வரும்மா…, இப்போ நான் சொன்னதை மட்டும் செய்” அவன் அலைபேசியை வைக்க முயன்றான்.

“அண்ணா..., நான் ரெண்டு வாரம் கழிச்சு வர்றேன். இங்கே ஒரு சின்ன விசேஷ வீடு இருக்கு..., அங்கே போகாமல் வந்துட்டா அத்தை திட்டுவாங்க” அவள் சொல்ல, திடுமென முளைத்த விசேஷ வீட்டை எண்ணி சிரித்துக் கொண்டான்.

‘அவ பிரம்மாவோட தங்கச்சி ஆச்சே...’ எண்ணியவன் அலைபேசியை வைத்தான். கௌஷிகாவும், ‘அண்ணா சொன்னால் விஷயம் இல்லாமல் இருக்காது. நான் அங்கே போனால், கண்டிப்பா சொதப்பி வைப்பேன்..., கொஞ்ச நாள் போகட்டும்...’ எண்ணிக் கொண்டாள்.

அதே நேரம் மதிய உணவு வேளையில் கண் விழித்த காயத்ரிக்கு, உடல் எல்லாம் அடித்துப் போட்ட வலியில் தகித்தது. அந்த வலியையும் மீறி, அலையலையாக ஒரு உணர்வு கிளர்ந்து படர, இரவின் மிச்சங்கள் இம்சிக்க, மெல்லிய புன்னகை இதழ்களில் உதயமானது.

‘சரியான முரடன்...’ கட்டிலில் எழுந்து அமர்ந்தவள், பார்வையைச் சுழற்ற, அவன் இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை.

ஒரு பக்கம் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டவளுக்கு, மனதின் ஓரம் சிறு ஏமாற்றத்தையும் உணர்ந்தாள். கூடவே, அந்த முரட்டு மனிதனின் ஒவ்வொரு செய்கையும், கெஞ்சலும், கொஞ்சலும் கண்ணுக்குள் உலா போக, ரகசியமாய் சிரித்துக் கொண்டாள்.

அதைவிட, அவனது தேவையை மட்டும் தீர்த்துக் கொள்ளாமல், தன் தேவையை படுக்கையில் உணர வைத்த விதம், தன்னை அவன் உணர்ந்துகொண்டதும், அவனை உணர்த்தியதும், மனதை வருட, அவன்மேல் நேசம் பொங்கியது.

முந்தின இரவில் நடந்த அனைத்தையும் எண்ணிக் கொண்டிருந்தவளுக்கு, உடனே குளிக்க வேண்டும் என்பது புரிய, வேகமாக எழுந்து குளிக்கச் சென்றாள். பிரம்மாவே ஹீட்டரை போட்டுவிட்டுச் சென்றிருக்க, ஷவரின் அடியில்,

நின்றவளுக்கு அவன் கொடுத்த ரகசிய காயங்கள் எரிந்தது.

காயங்கள் எரிந்தாலும், அது எப்பொழுது, எப்படி ஏற்பட்டது என்பதும் சேர்த்தே நினைவுக்கு வர, அந்த காயங்கள் கூட தித்தித்தது. தன்மேல் இருந்து வழிந்து ஓடிய நீரைக் கண்டவள் திகைத்தாள். 'இதென்ன..., இப்படி...?' வீட்டுக்கு தூரமாக இன்னும் இரண்டு நாள் இருக்கிறதே, எண்ணிக் கொண்டாள்.

ஆனால்..., சற்று அதிகப்படியான உடல் வலியும், வழிந்த உதிரமும் தன் வழக்கமான மாதாந்திர நிகழ்வுதான் என்பதை உணர்த்த, 'அவர் பண்ண வேலைக்கு உடனேவா...' தன் தலையிலேயே தட்டிக் கொண்டவள், வெட்கமாய் புன்னகைத்துக் கொண்டாள்.

'என் பீமா...' மனதுக்குள் கொஞ்சிக் கொண்டாள். அவனை உடனே காணவேண்டும் போலவும், அவன் முகத்தை எப்படி ஏறிடுவேன் என்பது மாதிரியும் ஒரு எண்ணம் எழுந்து இம்சித்தது.

ஒரு வழியாக குளித்து முடித்தவள், வெளியே வந்து உடை மாற்றினாள். அவளது அலைபேசி இசைக்க, அதை எடுத்தவள், "இந்து..., என்னடி இந்த நேரம் கால் பண்ணியிருக்க...? மேரேஜ் லைப் எப்படி இருக்கு? சாரி..., உன் மேரேஜ்க்கு வர முடியலை..." அவள் பேசிகொண்டிருக்க, அந்தப் பக்கம் பேச்சே இருக்கவில்லை.

அதை உணர்ந்தவள், "ஹல்லோ..., இந்து..., என்னடி பேச மாட்டேங்கற?" சங்கடமாக இழுத்தாள்.

அவளது ஒரே உற்ற தோழி, அவளது திருமணத்துக்கு போகவில்லை சரி, அவளுக்கு ஒரு வார்த்தை அழைத்து பேசவும் இல்லையென்றால் அவளும் என்னதான் செய்வாள்? அவள் கோபப்பட்டு பேசாமல் இருப்பதன் நியாயம் புரிய, சற்று தவித்துதான் போனாள்.

தனக்கு கையில் தீக்காயம் ஏற்பட்டது..., அது சரியாக எடுத்துக் கொண்ட கால அளவு, கலைவாணியின் வருகை,

அவரது கோபம், பிரம்மாவின் மௌனம், என அவள் அதிலேயே உழல, அவளுக்கு வேறு சிந்தையே இருக்கவில்லை.

கை காயத்தோடு திருமணத்துக்கு செல்ல முடியாது என்பது ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், ஒரு போன் செய்ய எங்கே போனாய் என அவள் கேட்டால் என்ன பதில் சொல்வது?

“இந்து, சாரிடி..., இங்கே கொஞ்சம் பிரச்சனை அதான் உனக்கு போன் பண்ண கூட மறந்துட்டேன். சாரிடி..., சாரி..., ஏதாவது பேசுடி...” இந்திரா அமைதியாக இருக்கவே கெஞ்சத் துவங்கினாள்.

“எனக்கு உன் கதையெல்லாம் கேக்க நேரமில்லை..., வருணாவைப் பார்த்தேன். அதுவும் பர்தா எல்லாம் போட்டுட்டு காலேஜுக்கு வந்திருந்தாள். முக்கியமா உன்னைத்தான் பாக்க வந்தா..., நீ இல்லைன்னு சொன்ன உடனே என்னைப் பார்த்துட்டு போனா.

“அவளுக்கு..., உன்னை பிரம்மா சார் கல்யாணம் பண்ணிகிட்டாருன்னு சொன்ன உடனே நம்பவே முடியலையாம். உன்கிட்டதான் பேசணும்னு தவியா தவிச்சா. உன் வீட்டுக்கு வர பயப்படுறா..., உன்னால் காலேஜுக்கு வர முடியுமான்னு கேட்டா..., அதான் கால் பண்ணேன்” என்னவோ ஒட்டாத குரலில் பேச, காயத்ரிக்கு கண்கள் கலங்கியது.

“ஏன் இந்து இப்படி பேசுற...? என்னவோ பிடிக்காதவ கிட்டே பேசுற மாதிரி பேசுறியே..., நான்தான் சாரி சொல்லிட்டேனே...” அவள் சொன்ன விஷயத்தை விட, அவள் குரல்தான் காயத்ரியை அதிகம் பாதித்தது.

“நீ ஹாஸ்டல் வர முடியுமான்னு கேட்டா..., அவளுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?” அவள் காயத்ரியை கண்டுகொள்ளவே இல்லை.

“நீ காலேஜுக்கு போறியா...? எப்போ இருந்து?” அவள் கேள்விக்கு இந்திரா பதில் சொல்லாமல் போகவே,

“நாளைக்கு வர்றேன்னு சொல்லு…” உரைத்தவள் அலைபேசியை வைத்துவிட்டாள். இந்திரா தன்னோடு பேசாதது மனதுக்கு கஷ்டமாக இருந்தாலும், நாளைக்கு அவளை நேரில் பார்த்து பேசினால், நிச்சயம் சமாதானம் ஆவாள் என எண்ணியவள், பிரம்மா வைத்துவிட்டுச் சென்றிருந்த உணவை எடுத்து உண்டாள்.

அவன் அக்கறையில் மனம் நனையவே செய்தது.

அதே நேரம்…, முந்தின நாள், கலைவாணி சொல்லியிருந்தவை மனதுக்குள் உலா போக, ‘அவருக்கு பழையவை அனைத்தும் நினைவுக்கு வர வேண்டாம்’ என எண்ணிக் கொண்டாள்.

‘பிரம்மா இப்போ மனிதனாக இருக்கிறான். அவன் சுய நிலைக்குத் திரும்பினால், உன் நிலை என்னவாக இருக்கும் என்பதுதான் என்னோட கவலையே’ அவர் உரைத்ததை சாதாரணமாக அவளால் கடந்துவிட முடியவில்லை.

இத்தனை வருடங்களாக பிரம்மா, அவர்மேல் காட்டும் வெறுப்பு. சிறு தவறையும் தாங்கிக்கொள்ள முடியாத அவனது செய்கை, நினைத்ததை நடத்தி முடிக்க அவன் எந்த எல்லைக்கும் செல்வான் என்பதை, ஐஜியின் மச்சான் விஷயத்திலேயே அவள் அறிந்தவள் ஆயிற்றே.

அப்படி இருக்கையில், காமேஷின் விஷயம் நினைவுக்கு வந்தால் எப்படி நடந்துகொள்வான் என்றே அவளால் கணிக்க முடியவில்லை. சாந்தியையும் அவளால் முழுதாக நம்ப முடியவில்லை. பிரம்மாவை கண்டவுடன் அவள் மறைந்து கொள்வது, அவள் முகத்தில் தெரியும் கலவரம், இவையெல்லாம் தவறு இல்லாதவர்களிடம் வர வேண்டியது இல்லையே.

வருணா வேறு இப்பொழுது வந்திருக்கிறாள் என்றால்…, அதற்கு என்ன அர்த்தம்? இத்தனை மாதங்களாக எங்கே சென்றிருந்தாள்? அவள் காணாமல் போனதற்கும், எனக்கும் என்ன சம்பந்தம்? ஏன் என்னைப் பார்க்க

வேண்டும் என சொல்கிறாள்? அவளுக்கு எதுவும் புரியவே இல்லை.

உடல் வலியாக இருக்கவே, பால்க்கனியில் சென்று அங்கே இருந்த மூங்கில் கூடையில் அமர்ந்தவள், வெளியே வேடிக்கை பார்க்கத் துவங்கினாள். அருகே இருந்த புத்தகத்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். புத்தகம் மடியில் இருந்தாலும், கவனம் அதில் பதியவில்லை.

தன் அலுவலகம் வந்த பிரம்மா, சில நொடிகள் தன் இருக்கையில் அழுத்தமாக அமர்ந்திருந்தான். இத்தனைநாள் மனதுக்குள் அடைத்திருந்த அழுத்தங்கள் விடைபெற்றிருக்க, ஆழமாக மூச்சுவிட்டுக் கொண்டான். மனம் அவ்வளவு தெளிவாக இருப்பதால், சுதந்திரமாக உணர்ந்தான்.

இத்தனைநாள், யார் தனக்கு எதிரி, நண்பன், துரோகி என தெரியாமல் இருந்தவனுக்கு இன்று அனைத்தும் தெரியுமே. தன்னை சட்டென பட்டை தீட்டிக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. இத்தனை நாட்கள், தனக்கு கீழே இருக்கும் ஸ்டேஷன்களுக்கு விசிட் செய்யவில்லை என்பது நினைவுக்கு வர, ஒரு ரவுண்ட் போகலாம் என முடிவெடுத்தான்.

தன் அறைக்குள் இருந்து வெளியே வந்தவன், “யாழினி…” குரல் கொடுத்துவிட்டு, அவள் வருகிறாளா என்று கூட பாராமல், வேகமாக படிகளில் இறங்கி, ஜீப்பில் ஏறி அமர்ந்தான். அவன் அழைப்பில் ஒரு நொடி திகைத்து, தன்னை அழைத்துவிட்டு, அவன் நடந்துவிடவே, கையில் இருந்த ஃபயிலை மேஜைமேல் வைக்க கூட நேரமின்றி, தூக்கி போட்டுவிட்டு அவன் பின்னால் ஓடினாள்.

அந்த நடையில் இருந்த மிடுக்கு, கம்பீரம், வேகம்… தன் கண்களை வேகமாக கசக்கி அவனைப் பார்த்தாள். இந்த பிரம்மாவை கடந்த சில மாதங்களாக மிஸ் செய்திருந்ததை அந்த நொடி உணர்ந்தாள். ‘என்ன மனுஷன் மறுபடியும் நெருப்பாயிட்டார்’ அவள் மனம் திடும் திடுமென அதிர்ந்தது.

‘இத்தனை நாள் நல்லாத்தானே இருந்தார், இப்போ என்ன ஆச்சு?’ அவனுக்குப் பின் இருக்கையில் மூச்சு வாங்க அமர்ந்தவள், அவனை முதுகுக்குப் பின்னால் கூட பார்க்க பயந்தவளாக, பார்வையை கந்தன் மேல் செலுத்தினாள்.

“எனி நியூ கேஸ்? எனி விசிட்டர்? எனி கொரி?” அவன் கேள்விகளை அடுக்க, தன்னை மீறி அவனை ஒரு நொடி வெறித்தவள், பதில் சொல்லவில்லை என்றால் அதற்கும் கத்துவான் என்பதால், “நோ… நோ… நோ சார்…” படபடவென மொழிந்தாள்.

கந்தனுக்கு இதழ்களுக்குள் கொஞ்சமாக எட்டிப்பார்த்த புன்னகையை சட்டென தனக்குள் புதைத்துக் கொண்டார். ‘இதுதான் எங்க பிரம்மா சார்’ நெஞ்சை நிமிர்த்தி தனக்குள் சொல்லிக் கொண்டார். அவனை பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு மேலோங்க, தன் விழிகளை மட்டும் கொஞ்சமாக உருட்டி அவனைப் பார்த்தார்.

தலையைத் திருப்பி பார்த்தால், ‘ரோடு முன்னாடி இருக்கு’ என அவன் சொல்லவும் தயங்க மாட்டான் என்பதாலேயே அவ்வாறு செய்தார். அவர் பார்க்கையில், பிரம்மாவின் பார்வை சாலையோரங்களில் நடக்கும் நிகழ்வுகளை அலசிக் கொண்டிருந்தது.

அவன் பார்வை, சாதாரண பார்வையாக இல்லாமல், அங்குலம் அங்குலமாக அலசும் பார்வை பார்த்திருந்தான். பார்க்கும் பார்வையில் கூட சிறு அசட்டை காட்டாத அவன் செய்கை, அவனை அப்படிப் பார்க்கவே அவருக்கு அவ்வளவு சந்தோஷமாக இருந்தது.

அவர் பார்க்கையிலேயே, “கந்தன் ஸ்டாப், யாழினி…” குரல் கொடுத்தவன், ஜீப் முழுதாக நிற்கும் முன்பே, குதித்து இறங்கி, அந்த சாலையோர நிழல்குடையை நெருங்கினான். நேரம் காலை பதினொன்று என்பதால், அந்த பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் அவ்வளவாக இல்லாமல் இருக்க, கல்லூரி மாணவிகள் மூவரும், அவர்களுக்கு அருகில் இரு வாலிபர்களும் நிற்பது தெரிந்தது.

அவனது காக்கி உடையைப் பார்த்தவுடன் அந்த வாலிபர்களில் ஒருவன் நழுவ முயல, ஒரு பெண்ணின் கையைப் பிடித்து இழுக்க முயன்ற அவனை சட்டென எட்டிப் பிடித்தான் பிரம்மா.

தன் குளிர்கண்ணாடியை கழட்டிய பிரம்மா, தனக்குப் பின்னால் நின்ற யாழினியை முறைக்க, சட்டென விதிர்த்துப் போனவள், அவன் கோபத்துக்கான காரணம் புரிய, வேகமாக முன்னால் வந்தாள்.

“என்னம்மா... இவன் ஏதாவது பிரச்சனை பண்றானா? எதுவா இருந்தாலும் சொல்லுங்க. பயப்படாதீங்க...” அந்த மாணவிகளின் முகம் பெரும் கலவரத்துக்குப் போக அந்த மாணவிகளின் அருகே சென்று ஆதரவாக அவள் தோளை தொட்டாள்.

“அதெல்லாம் அதுவும் இல்லை மேம்... ஏய் தபு சொல்லுடி...” தோழிகள் இருவரும் தபுவை சூழ்ந்து கொண்டார்கள்.

“ஒரு நிமிஷம்... உங்களுக்கு எதுவும் பிரச்சனை வந்துடும்னு பயப்படாதீங்க. உங்க பேர் கூட வெளியே வராது. அவ்வளவு ஏன் இங்கே நடக்கும் விஷயம் உங்க வீட்டுக்கு கூட தெரியாது. அதுக்கு நான் கேரண்டி, இப்போ சொல்லுங்க...” தன் கூலிங்கிளாசை கழட்டி சட்டையில் மாட்டியவன், மறு கரத்தால் மற்றவனின் கரத்தை முறுக்கினான்.

மற்றவன் வலியில் முனக, அதை கொஞ்சம் கூட அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“சார்... உங்களைப் பற்றி எங்களுக்கே தெரியும்...” அவர்கள் சொல்ல, அதை அவன் அசட்டை செய்துவிட்டு, அந்த மாணவிகளின் முகம் பார்த்தான்.

“சொல்லுங்க...” அவன் கேட்க,

“தபு... சொல்லுடி...” அவன்மேல் வைத்த நம்பிக்கையில் மற்றவர்களும் தபுவை சொல்லச் சொன்னார்கள்.

“சார், இவன் ரொம்ப நாளா என்னை லவ் பண்றேன்னு சொல்லி பின்னாடியே சுத்தறான். எனக்கு பிடிக்கலைன்னு சொன்ன பிறகு கூட கேக்க மாட்டேங்கறான். இவன் விஷயம் எங்க வீட்டுக்குத் தெரிந்தாலே, உடனே ஏதாவது ஒரு மாப்பிள்ளை பாத்து கல்யாணம் பண்ணி வச்சுடுவாங்க.

“எனக்கு நிறைய படிக்கணும்னு ஆசையா இருக்கு... எப்படியாவது இவனுக்கு சொல்லி புரிய வச்சீங்கன்னா எனக்குப் போதும்...” சொல்வதற்குள்ளாகவே அழுது விட்டாள்.

“எவ்வளவு நாளா?” அவன் கேட்க, “சார், ரெண்டு வருஷமா சுத்தறான். முன்ன எல்லாம் கொஞ்சம் கம்மியா இருந்தது, இப்போ ரொம்ப எல்லை மீறி போறான்...” தபுவின் தோழி இடையில் புகுந்து சொன்னாள்.

“ஓ...” சில நொடிகள் அமைதி காத்தவன், “உன் பேர் என்ன?” அவனிடம் கேட்க, “மாதவன் சார்...” அவன் சொல்ல, அவனது வீட்டு அட்ரஸ், அலைபேசி எண், அவன் டிரைவிங் லைசன்ஸ் என அனைத்தையும் வாங்கிக் கொண்டான்.

“இப்போ ஜஸ்ட் வார்னிங் மட்டும்தான். இதுக்குமேலே ஒரு நாள் நீ இவங்களை தொல்லை செய்தன்னு தெரிஞ்சது...” ஓங்கி அவன் முதுகை அடிக்கப் போவதுபோல் பாவனை செய்துவிட்டு, மாதவனின் முதுகை லேசாக தட்டினான்.

“நல்ல பிள்ளையா போ... போ...” அவன் கன்னத்தை தட்ட, அங்கே இருந்து ஓடியே போனான். அவன் செல்லவே, “யாழினி, உங்க நம்பரை இவங்க கிட்டே கொடுங்க...” அவளிடம் சொன்னவன்,

“எதுவா இருந்தாலும், அது எந்த நேரமா இருந்தாலும் இவங்களை நீங்க காண்டெக்ட் பண்ணுங்க... அடுத்த நிமிஷம், அங்கே நாங்க இருப்போம்” சொன்னவன் அங்கிருந்து அகன்று விட்டான்.

ஜீப்பில் ஏறியவன், “யாழினி, அவன்மேல் ஒரு கண் இருக்கட்டும். அவனோட ஒவ்வொரு நிமிஷமும் எனக்குத்

தெரிஞ்சாகணும். அவன் அப்படியெல்லாம் சும்மா இருக்க மாட்டான்…” பிரம்மா சொல்வது எப்பொழுதுமே சரியாக இருக்கும் என்பதால், யாழினி அந்த வேலையை சரியாக துவங்கினாள்.

“பெரிய மாதவன் மேடின்னு நினைப்பு… *** ராஸ்கல்…” அவன் சன்னமாக முனக, வாய்பிழந்து அவனைப் பார்த்தாள்.

சற்று நேரத்தில், அருகே இருக்கும் ஸ்டேஷன் செல்ல, சொல்லாமல் கொள்ளாமல் வந்து நின்ற பிரம்மாவைப் பார்த்து வெலவெலத்துப் போனார்கள். அதே நேரம், அங்கே செல்லுக்குள் ஒருவனை வைத்து லாடம் கட்டிக் கொண்டிருக்க, அவனது அலறல், அந்த இடத்தையே நிறைத்துக் கொண்டிருந்தது.

“ஸ்… பரமா, தனா அவனை விடுங்க…” அந்த ஸ்டேஷன் எஸ்ஐ பிரம்மாவைப் பார்த்துவிட்டு அடிக்குரலில் செல்லுக்குள் பார்த்து குரல் கொடுக்க, அவ்வளவு நேரமாக போட்டு அடித்த அந்த அவனை செல்லுக்குள் போட்டுவிட்டு, வேகமாக மற்றவர்கள் அனைவரும் வெளியேறினார்கள்.

“என்ன கேஸ்…?” இருக்கையில் அமர்ந்தவன், வழக்கமான தன் செய்கையான, இடக்கை நடு விரலால், இடது புருவத்தை அழுத்தமாக வருடியவனது காது, வெளியே எவரிடமோ கதறிக் கொண்டிருந்த பெண்மணியின் குரலில் நிலைத்தது. கூடவே, ஸ்டேஷனுக்கு வெளியே தெரிந்த மக்களின் முகபாவம், அவர்களின் பேச்சு என ஆழ்ந்து கவனித்தான்.

“சார், டியூஷன் சென்டர் வச்சு நடத்திட்டு, அங்கே படிக்கச் வந்த பிள்ளை கிட்டே தப்பா நடந்திருக்கான்…” எஸ்ஐ சொல்ல,

வெளியே… “ஐயா, என் பிள்ளை நாலு வருஷமா அந்த சென்டரை நடத்துறான். இன்னைக்கு வரைக்கும் ஒரு பிள்ளையை கூட தப்பா ஒரு பார்வை அவன் பாத்தது

இல்லை. உண்மையா இல்லையான்னு, அங்கே படிச்ச பிள்ளைங்களையே நீங்க கேட்டுப் பாருங்க.

“என் புள்ளை அப்படிப்பட்டவன் கிடையாது. அவனை விசாரிங்க, ஆனா அடிக்காதீங்கைய்யா. அவனுக்கும் கூடப்பொறந்த தங்கை இருக்கா, அவளையும் அப்பா ஸ்தானத்தில் இருந்து அவன்தான் பாத்துக்கறான். அப்படிப் பட்டவன், இப்படி ஒரு காரியத்தை செய்யவே மாட்டான்” அந்த எழுத்தாளரின் காலிலேயே அந்த பெண்மணி, விழுந்துவிட, அதையும் கவனித்தான்.

எதிரில் அந்த எஸ்ஐ சொன்னது ஒரு காதிலும், வெளியே அந்த பெண்மணியின் குரல் மற்றொரு காதிலுமாக ஏறி, அவன் மூளைக்குள் விஷயங்கள் பதிவாகிக் கொண்டிருந்தது. விழிகளை சில நொடிகள் அழுத்தமாக அவன் மூடிக்கொள்ள, சுற்றி இருந்தவர்கள் எச்சில் விழுங்கிக் கொண்டார்கள்.

அவனது அந்த செய்கைக்கு அர்த்தம் அவர்களுக்குத் தெரியுமே... இந்த கேசில் ஏதோ தீர்ப்பு எழுதப் போகிறான்... அனைவரின் மனமும் தவியாய் தவித்தது.

“என்ன சொல்றான்?” பிரம்மா விழிகளை உருட்டி அவனைப் பார்க்க,

“நான் அப்படி செய்யவே இல்லை, அவ பொய் சொல்றான்னு சாதிக்கறான்”.

“ஓ... அவன் வாயில் இருந்து உண்மையை வர வைக்க ட்ரீட்மென்ட் நடக்குது...” வெகு நிதானமாக உரைத்தவன், “எங்கே அவனை வெளியே கூட்டி வாங்க...” அவன் சொல்ல, எஸ்ஐக்கு கால்கள் ஆட்டம் கண்டது.

அதற்கு காரணம், வெளியே அழைத்து வந்தால் அவனை அங்கேயே கொன்று போடுவானோ என்றே நினைத்தான். யாழினிக்கும் மனதுக்குள் பெரும் கலவரமே நடக்கத் துவங்கியது. இப்படியான விஷயங்களில் அவன் நெருப்பை விட மோசமாக செயல்படுவான் என்பது அவர்களுக்குத் தெரியுமே.

வேகமாக செல்லுக்குள் சென்று, அவனை கைத்தாங்கலாக கூட்டி வர, அங்கே இருந்த போலீசைப் பார்த்தவன், அங்கே இருந்த இருக்கையை குறிப்பாக காட்ட, ‘இது நிஜமா?’ என்பதுபோல், பிரம்மா பார்வையால் சுட்டிக்காட்டிய அந்த இருக்கையை நகர்த்திப் போட்டு, அவனை உக்கார வைத்தார்கள்.

“தண்ணி கொடுங்க…” அவன் சொல்ல, மற்றவனுக்கு தண்ணீர் கொடுக்கப் பட்டது. ‘அவன் தண்ணி குடிக்கும்போதே சுட்டுடுவானோ?’ அனைவரும் கலவரமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதைவிட, அங்கே இருந்த அனைவருமே கிட்டத்தட்ட மயக்கம் போடும் நிலைக்கே சென்றுவிட்டார்கள் என்றே சொல்லலாம். பிரம்மா குற்றவாளிக்கு தண்ணீர் கொடுப்பதா?’ அவர்கள் எண்ணம் அதுவே. நீரை வாங்கி வேகமாகப் பருகியவன், விக்கி விக்கி அழத் துவங்கினான்.

“சார், என்னை கொன்னு வேண்ணா போடச் சொல்லுங்க, ஆனா இப்படி ஒரு பழியை என்மேல் சுமத்த வேண்டாம். இந்த ஸ்டேஷன்ல இருக்கும் எந்த கேஸ் வேண்ணா என்மேல் சொல்லட்டும், நான் அதை ஒத்துக்கறேன். ஆனா இது…” அவன் கண்ணீர் விட, அவனைப் பார்த்ததை விட, அனைவரின் பார்வையும் பிரம்மாவிடமே இருந்தது.

“சார்… என்கிட்டே படிக்க வர்ற ஒவ்வொரு பிள்ளையும் என் தங்கை மாதிரிதான் நான் பாக்கறேன்…” சொல்லிவிட்டு அவன் அழ, குற்றவாளியை பிரம்மா பேச விடுகிறானா? அங்கே கொஞ்சம் விட்டிருந்தால் எத்தனைபேர் மயக்கம் போட்டிருப்பார்கள் என்றே தெரியவில்லை.

அப்படி மயக்கம் போட்டால் பிரம்மாவின் விசாரணையை கவனிக்க முடியாது என்பதால், முயன்று சம்மாளித்து நின்றார்கள். பிரம்மா அவனையே அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான். குறுக்கே எந்த கேள்வியோ, விசாரணையோ எதுவும் இருக்கவில்லை.

“அவங்க நல்லா படிக்கணும், அவங்க வாழ்க்கை நல்லா இருக்கணும், என் அம்மா, அப்பா ஆதரவு இல்லாமல், ஆனாதரவா தவிச்ச மாதிரி, யாரும் பின்னாடி தவிக்கக் கூடாதுன்னு, அவங்க வாழ்க்கையிலும் அக்கறை காட்டினதுக்கு இவ்வளவு பெரிய பழியா?” அவன் முகத்தை மூடிக்கொண்டு அழ, உணர்வுகளை துடைத்த முகத்தோடு அவனையே பார்த்திருந்தான்.

“யாழினி, அந்த பொண்ணை வரச் சொல்லுங்க” நடந்தே ஆகவேண்டும் என்னும் ஒரு குரல், “ஹாங்... இதோ சார்...” அங்கிருந்து வெளியே ஓடினாள். அடுத்த பத்தாவது நிமிடம், அந்த பெண்ணின் உறவுகளும், அந்த பெண்ணும் அங்கே வர, அந்த பெண்ணின் உறவுகளை வெளியே நிறுத்தச் சொன்னவன்,

அந்த மாணவியையும், அவள் பெற்றவர்களையும் உள்ளே அழைத்தான். “என்ன சார், இந்த பொறுக்கிக்கு வேண்டி, எங்க பொண்ணை இங்கே வரச் சொல்லியிருக்கீங்க...” பெற்றவர் எதையோ சொல்லப் போக,

“ஷ்...ஷ்...ஷ்...” அவ்வளவுதான் சொன்னான். அவனது தோரணையைப் பார்த்தே பட்டென வாயை அவர் மூடிக்கொள்ள, அந்த மாணவியை அருகே அழைத்தான்.

“நீ உங்க அம்மா அப்பாகிட்டே சொன்னதை, இப்போ இங்கே இவர் முகத்தைப் பார்த்து சொல்லு... இந்த இடத்திலேயே இவனை இப்படியே போட்டுடறேன்” தன் பெல்ட் கவரில் இருந்த துப்பாக்கியை தூக்கி பட்டென மேஜைமேல் வைத்தவன், ஆள்காட்டி விரலால் அதை மெதுவாக தட்டிக் கொண்டிருந்தான்.

அவன் ‘கன்’னை எடுத்த வேகத்தையும், அதை மேஜைமேல் பட்டென வைத்த ஓசையையும் கேட்டே நடுங்கிப் போனாள்.

அவள் உண்மையைச் சொன்னால், நிச்சயம் அங்கே அவன் சொன்னது அங்கே நடக்கும் என்பது புரிய, அனைவரின் கவனமும் அந்த மாணவியிடம் சென்றது.

தன் மாஸ்டர் ரத்தம் தோய்ந்த முகத்தோடு, உடல் முழுக்க லட்டி காயங்களோடு அமர்ந்திருப்பதைப் பார்த்தவள் உள்ளம் நடுங்கி நின்றிருக்க, அவளால் வாயைத் திறந்து எதையுமே சொல்ல முடியவில்லை.

பிரம்மாவின் பார்வை யாழினியை ஏறிட, வேகமாக அந்த மாணவியை நெருங்கியவள், “சொல்லும்மா, உன்னை இவன் தப்பா தொட்டானா? எங்கே தொட்டான்? என்ன செஞ்சான்? மிரட்டினானா? தனியா வரச் சொன்னானா?” ஒவ்வொன்றாக கேட்க, தன் கரத்தால் பட்டென தன் காது இரண்டையும் மூடிக் கொண்டாள்.

“என்ன செஞ்சான்னு மட்டும் சொல்லும்மா... இந்த மாதிரி நாய்களை எல்லாம் உயிரோட விடவே கூடாது. உன் வார்த்தைக்கு வேண்டிதான் காத்திருக்கேன்” ஆக்ரோஷமான பிரம்மா, துப்பாக்கியை எடுத்து மற்றவனின் நெற்றிப் பொட்டில் வைத்து அழுத்த முயல,

“ஆ... ஆ...” அலறினாள். அந்த மாஸ்டரின் பார்வை பிரம்மாவை நேருக்கு நேர் ஏறிட்டது.

மாஸ்டர் மீண்டும் தன் பார்வையை திருப்பி, அவளை ஏறிட, அவரது பார்வை அவளை கொன்று கூறு போட்டது. அவனது காயம், பிரம்மாவின் துப்பாக்கி, யாழினியின் கேள்வி என அனைத்தும் அவளை நடுங்கச் செய்ய, ‘ஓ’வென கதறியவள்,

“நான் பொய் சொல்லிட்டேன்... அவரை விட்டுடுங்க... நான் ஒரு பையனோட பழகறதை அவர் கண்டிச்சார், அப்பவும் நான் கேக்காமல் போகவே, வீட்டில் சொல்லிடுவேன்னு சொல்லவே, அந்த கோபத்தில் இப்படி பண்ணிட்டேன்...” அவள் மடிந்து அமர்ந்து அழ, பிரம்மா தன் துப்பாக்கியை விலக்கிக் கொண்டான்.

அங்கே இருந்த யாருமே இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பார்க்கவே இல்லை. என்கவுண்டரில் செத்துப்போகப் போகிறான் என எதிர்பார்த்திருந்த குற்றவாளி, நிரபராதி

என தெரிய வருகையில், அவர்கள் எப்படி அதிராமல் இருக்க?

“குட்... வெரி குட்...” தன் துப்பாக்கியை எடுத்து அழகு பார்க்க, அந்த ஸ்டேஷன் எஸ்ஐ, விட்டால் அங்கேயே மயக்கம் போட்டு விழும் நிலைக்கே சென்றுவிட்டான்.

“என்னடி சொன்ன?” அந்த மாணவியின் தாய் ஓடி வந்து அவளை அடிக்க முயல, யாழினி குறுக்கே விழுந்து தடுத்தாள்.

அந்த எஸ்ஐ இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பாராமல் திகைக்க, “உங்க பொண்ணை கூட்டி போங்க. உங்களை குத்தம் சொல்ல நான் விரும்பலை, இந்த காலத்தில் யாரையுமே நாம நம்ப முடியாது. ஆனா... இந்த விஷயத்தை உங்ககிட்டே உங்க பொண்ணு சொன்னப்போ, என்ன மாடுலேஷனில் சொல்லியிருந்தான்னு நீங்க கவனிச்சு இருந்தீங்கன்னா இதையெல்லாம் தவிர்த்து இருக்கலாம்” அதற்குமேல் அவர்களிடம் எதையும் பேச அவன் தயாராக இருக்கவில்லை.

அவர்கள் சென்றவுடன், அந்த ஸ்டேஷன் எஸ்ஐயை பார்த்தானே ஒரு பார்வை, தன் வேலை, நாளை முதல் தனக்கு இல்லை என்ற முடிவுக்கே அவன் வந்துவிட்டான்.

“நீங்க இவரை அரஸ்ட் பண்ணீங்களா, இல்ல ஸ்டேஷனுக்கு வரச் சொன்னீங்களா?”

“ஸ்டேஷனுக்கு வரச் சொன்னோம் சார்...” அவன் எச்சில் விழுங்கினான்.

“இவர் அப்படி தப்பு செய்திருந்தால், நீங்க கூப்பிட்டு அனுப்பியவுடன், என்னை அரஸ்ட் பண்ணிக்கோன்னு வந்து நிப்பாரா, இல்ல எங்கேயாவது ஓடி ஒளிய முயற்சி பண்ணியிருப்பாரா?” இருக்கையை தள்ளிவிட்டு அவன் எழ, அங்கே நின்ற அனைவருமே இரண்டடி பின்னால் நகர்ந்தார்கள்.

“நீ’ல்லாம் என்ன ****க்கு ட்ரெயினிங் எடுத்த? போலீஸ்காரனுக்கு உடம்பு முழுக்க கண் இருக்கணும், காது இருக்கணும், மூளை இருக்கணும். நீ செய்து வச்ச வேலையால், இனிமேல் இவர் எப்படி அந்த சென்டருக்கு போவாருன்னு வேண்டாம்?

“ஒவ்வொரு வீடா போய் இவர் நல்லவன்னு சொல்லுவியா? வெளியே மீடியா இருக்கானா? அவனைக் கூப்பிட்டு, அந்த பொண்ணு பேர் வெளியே வராமல், இவர் போட்டோவை போட்டு சரியா நியூஸ் வர வை, நீ செய்த வேலைக்கு அதுதான் உனக்கு பனிஷ்மென்ட்…” விட்டால் அங்கேயே அவனை அடித்து தள்ளிவிடுவேன் என்று நின்றான்.

சொல்லப்போனால் இன்றைக்கு அந்த எஸ்ஐ பிரம்மாவின் கையால் செமத்தியாக வாங்கிக் கட்டப் போகிறான் என்றுதான் யாழினி எண்ணினாள். ஆனால், அவ்வளவு கோபத்திலும் இருந்த அவன் நிதானம், அசையாமல் கூட அப்படியே நின்றுவிட்டாள்.

யாழினியின் மனதுக்குள் பிஜிஎம்மில் ஏ ஆர் ரஹ்மான் செமத்தியாக மியூசிக் வாசிக்க, பிரம்மா அந்த நிமிடம் விஸ்வரூபமாகத் தெரிந்தான்.

“எல்லாம் நீயே பேஸ் பண்ணு… இவர் அம்மாவை உள்ளே கூப்பிடு. இவர் ட்ரீட்மென்ட்க்கு ஆகுற மொத்த செலவும் உன்னோடதுதான்… செய்…” அந்த இடத்தை விட்டு அசைய மாட்டேன் என்பதுபோல் நின்று கொண்டான்.

அந்த மாஸ்டர் அவனைப் பார்த்து கையெடுத்து கும்பிட, அவன் கரத்தை பிடித்து கீழே இறக்கி விட்டான். அடுத்த நிமிடம் அனைத்தும் ஒவ்வொன்றாக அரங்கேற, பத்திரிகை மீட், அவனை மருத்துவமனை அனுப்பியது என எல்லாம் நடக்க, அங்கிருந்து அவன் அசையவே இல்லை.

‘இவருக்கு மட்டும் எப்படி அவன் தப்பு பண்ணலை என்ற சந்தேகம் வந்தது?’ அவளால் கணிக்கவே முடியவில்லை. அதை எப்படி செய்தான் என அவனிடம் கேக்கவும் அச்சமாக இருந்தது. எனவே தன் வாயை இறுக மூடிக் கொண்டாள்.

அவன் ஜீப்புக்கு வர, “சார்… எப்படி சார்… இன்னைக்கு அவன் செத்தான்னு நான் நினைத்தேன். ஆனா…” கந்தன் ஜீப்பை நகர்த்தியவாறு கேட்க, யாழினி தன் செவிகளை கூர்மையாக்கிக் கொண்டாள்.

“நானும் அவனை நாலு போடலாம்னுதான் வரச் சொன்னேன். ஆனா… வந்தவனோட முகத்தில் ஒரு சின்ன பயமோ, குற்றவுணர்ச்சியோ இல்லை, அதைவிட, என்னைக் கொன்னாலும், நான் செய்யாத தப்பை ஒத்துக்க மாட்டேன் என்ற பிடிவாதம் தெரிஞ்சது” அதற்குமேல் அவன் எதையும் சொல்லவில்லை.

‘ஒருத்தனோட முகத்தை வைத்தே இவ்வளவு கணிக்க முடியுமா?’ அவள் எண்ண,

“ரெண்டு பக்கமும் விசாரிக்காமல் நாம முடிவை எடுக்க முடியாதே” வெகு சாதாரணமாக முடித்துவிட, அவன்மேல் இருந்த பிரமிப்பு மட்டும் அவளுக்கு குறையவே இல்லை.

இதற்கு முன்னர் இப்படியான விஷயங்களுக்காக அவன் செய்த என்கவுண்டர்கள் யாழினியின் கண்ணுக்குள் உலா போக, அந்த நிமிடம் பிரம்மாவின் செய்கையில் அவ்வளவு நம்பிக்கை வந்தது. அவனது இந்த சூறாவளி வேகத்தை இன்றுதான் காண்கிறாள், அவளது தேகத்தில் இருந்த முடிகள் அனைத்தும் சிலிர்த்துக் கொண்டது.

‘இந்த அதிரடியை கொஞ்ச நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தார்?’ எண்ணிக் கொண்டாள். மதியம் வெகு தாமதமாகிவிடவே, யாழினியை ஸ்டேஷனில் விட்டுவிட்டு, தன்னவளைக் காண ஆவலாகவே சென்றான் பிரம்மா.

யாழினி தன்னை பாராமல் பார்ப்பதும், அவள் முகத்தில் வந்து போகும் உணர்வுகளும், எண்ணங்களும் புரிந்தாலும் அதையெல்லாம் பெரிதாக நினைக்கவே இல்லை. ‘இவளுக்கு தெரியும் என் மாற்றம், காயுக்கு தெரியுமா?’தனக்குள் கேட்டுக் கொண்டான்.

பால்க்கனியில் இருந்து அப்படியே உறங்கிவிட்டவளின் கவனத்தைக் கலைத்தது பிரம்மாவின் ஜீப்பின் வருகை.

‘அதுக்குள்ளே ரெண்டு மணி ஆகிடுச்சா…?’ எண்ணியவள் நேரம் பார்க்க, அதுவோ நான்கு எனக் காட்ட வேகமாக கீழே வந்தாள்.

கதவைத் திறந்தவள் சற்று ஒதுங்கி நிற்க, அவள் முகத்தையே அசையாமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். அவன் உள்ளே வராமல் போகவே, தயக்கமாக நிமிர்ந்து அவனைப் பார்க்க, தொப்பியை வலக்கையில் பிடித்திருந்தவன், இடக்கரத்தை பேண்ட்டுக்குள் விட்டுக் கொண்டு, நிலைப்படியில் சாய்ந்து நின்று அவளையே கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வை அவளை விழுங்கிக் கொண்டிருந்தாலும், சட்டென ஒரு வித்தியாசத்தை அவள் உணர்ந்தாள். சாதாரணமாகவே அவனிடம் ஒரு கம்பீரம் இருக்கும். ஆனால் இது…, அதையெல்லாம் மீறி, நெஞ்சை நிமிர்த்தி, விரைப்பான ஒரு தோரணை…, பார்வையில் இருக்கும் வித்தியாசம்…, அவள் அடிமனதை சட்டென அசைத்தது.

“எ..ன்..ன…, அப்படிப் பாக்கறீங்க…?” அவள் திணற, அதை ரசித்தவாறே, “என் பொண்டாட்டியை நான் பாக்கறேன்…” அவன் உள்ளே வர, அந்த குரலிலும் ஏதோ வித்தியாசம் இருப்பதுபோல் இருந்தது. அவளது கண்களில் படரும், குழப்பம், பயத்தை பார்த்தவன், தன் மாற்றத்தை உணரும் அவளை அசையாமல் பார்த்திருந்தான்.

அவளுக்கோ, அடிமனதை சில்லிட வைக்கும் ஒரு பயம் ஏனென்றே புரியாமல் கிளர்ந்து மேலெழ, வேகமாக அங்கிருந்து அகன்றாள். அவள் செல்லவே, அவளுக்கு முன்பாக வந்து நின்றவன், ‘எங்கே போகிறாய்…?’ என புருவம் உயர்த்த, அந்த கண்களில் இப்பொழுது தெரியும் மயக்கத்தில் மூழ்கினாள்.

‘இந்த கண்கள் கொஞ்ச நேரத்துக்கு முன்னர் இப்படி இல்லையே…’ நினைத்ததை அவளால் சொல்ல முடியவில்லை.

அவனோ..., ‘பிரம்மாவை பார்த்து நீ பயப்படுகிறாயா...? உனக்கு வித்தியாசம் புரிகிறதா...?’ மனதோடு கேட்டுக் கொண்டான். மனிதர்களை சட்டென எடை போடும் வல்லமை படைத்தவன் அவன். அப்படி இருக்கையில் அவன் முன்பே அப்பட்டமாக அவள் குழம்பினால் அவனுக்குத் தெரியாதா என்ன?

“சாப்பாடு எடுத்து வைக்கறேன்...” அவள் நகர முயல, அவள் இடையை வளைத்தவன், தன்னோடு இறுக்கிக் கொண்டு, “பசிக்கலை..., ஆனா பசிக்குது” அவள் மூக்குத்தியில் இதழ் பதித்தவாறே உரைக்க, அவன் இதழ் தீண்டலை ரசித்தாள். கூடவே அவன் பேச்சின் அர்த்தம் புரிய, அப்பொழுதுதான் தன் நிலை அவளுக்கு ஞாபகம் வந்தது.

‘ஐயோ..., இதை எப்படி இவர்கிட்டே சொல்ல...?’ மெல்லியதாய் அதிர்ந்து விழிக்க, அவள் கண்களில் என்ன கண்டானோ, அவளை விட்டு விலகி நின்றவன், “காலையில் தூக்கத்தில் அப்படி கேட்டவளுக்கு இப்போ மட்டும் என்ன தயக்கம், பயம்...?” அவனைப் பொறுத்த வரைக்கும், அவள் இந்த பிரம்மாவோடுதான் வாழ்ந்தாக வேண்டும்.

முழு நேரமும் அவனால் பீமாவாக நடித்துக் கொண்டிருக்க முடியாது. பதினைந்து வருட பழக்கம், நான்கு மாத இடைவெளியில் மறந்து, மறைந்து போய்விடுமா என்ன? அவன் அவளை எந்த நிலையிலும் விரும்புவதுபோல், அவளும் இருக்க வேண்டும் என அவன் விரும்பினான்.

“அது..., நான்...” அவன் கோபம் கண்டு அவள் மிரள, அதைப் பார்த்தவன், “சரி, சாப்ட்டு கிளம்பறேன்..., உன்னை பிறகு கவனிக்கறேன்...” இரு பொருள்பட அவன் உரைக்க, காயத்ரிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

முதலிரவு முடிந்த கணவனிடம், இன்னும் மூன்றுநாள் உன் மனைவியை நெருங்கக் கூடாது என அவனிடம் எப்படிச் சொல்வதாம்? திணறினாள்.

உணவை முடித்தவன் ஸ்டேஷன் கிளம்பிச் செல்ல, காயத்ரிதான் திண்டாடிப் போனாள். இரவு தன்னை நெருங்கும் அவனை ‘எப்படி, என்ன சொல்லி சம்மாளிக்க?’ அவளது எண்ணம் அதுவாகத்தான் இருந்தது.

அன்று அவன் வர தாமதமாகவே, கட்டிலில் சென்று படுத்தவள், வேகமாக எழுந்து அமர்ந்தாள். ‘மதியம் என்ன சொன்னார்...? காலையில் என்னவோ சொன்னேன்னு சொன்னாரே..., என்ன அது?’ அவள் எவ்வளவு சிந்தித்தும் அவளது நினைவுக்கு அது வரவே இல்லை.

‘ஐயோ..., நைட் வந்து அவர் என்னைத் தொட்டால், தூக்க கலக்கத்தில் என்ன செய்வேன்னே தெரியலையே..., பேசாமல் சோபாவில் போய் படுத்துபோம், கண்டிப்பா அங்கே வந்து என்னை தொல்லை செய்ய மாட்டார்...’ எண்ணியவள், சோபாவில் சென்று படுத்துக் கொண்டாள்.

இரவில் சற்று தாமதமாக வீட்டுக்கு வந்தவன், முதலில் தேடியது தன் மனைவியைத்தான். படுக்கையில் அவள் இல்லாமல் போகவே, வேகமாக அவன் விளக்கைப் போட, சோபாவில் படுத்திருந்த அவளைப் பார்த்து, சுள்ளென கோபம் கிளர்ந்தது.

‘என்னை தவிர்க்கத்தான் இப்படி செய்யறாளா? ஏன்...? அப்படியென்றால் நேற்று நடந்ததற்கு அர்த்தம் என்ன? அழும் குழந்தைக்கு மிட்டாய் கொடுக்கும் செய்கையா? அவள் மனதுக்குள் நான் இருப்பதை எப்பொழுதுதான் வெளிப்படுத்துவாள்...?’ தாறுமாறாக கோபம் எகிற, அங்கே இருந்தால் அவளை ஏதாவது காயப்படுத்தி விடுவோம் என்பதால் சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

தன் மொத்த கோபத்தையும் திரட்டி, அறைக்கதவை அவன் தன் முதுகின் பின்னால் அடித்து சாற்ற, ‘படார்’ என கேட்ட சத்தத்தில், திகைத்து கண் விழித்தாள் காயத்ரி.

*****

# பகுதி – 40.

பிரம்மா கதவை அறைந்து சாற்றிய சத்தத்தில் கண் விழித்தவள், பட்டென எழுந்தாள். ‘ஹையோ..., கோச்சுகிட்டு போறாரா...?’ எண்ணியவள் வேகமாக கீழே வர, அவனோ அதற்கு முன்பாகவே அங்கே இருந்து சென்றிருந்தான்.

‘அப்படி என்னதான் மூக்குக்கு மேலே கோபம் வருதோ?’ அலுப்பாக எண்ணியவள், அவன் அலைபேசிக்கு முயல, அவனோ அதை கண்டுகொள்ளவே இல்லை. அவன் மனநிலை என்னவாக இருக்கும் என அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆனால், என்னவென்று விளக்கம் கேட்க மறுப்பவனிடம் என்ன சொல்வதாம்? மதியம் வேறு அவன் பார்த்த பார்வையும், நின்ற தோரணையும் வேறு கண்ணுக்குள் எழுந்து கலவரமூட்ட, சில பல நிமிடங்கள் அவளால் இயல்பாய் இருக்கவே முடியவில்லை.

இறுதியாக, ‘சரி எப்படி இருந்தாலும் வீட்டுக்கு தானே வரணும், அப்போ பாத்துக்கலாம்’ எண்ணியவள் உறங்கச் சென்றாள். நாளைமுதல் கல்லூரிக்கு வேறு செல்ல வேண்டும் என்பதால், முயன்று உறங்கினாள்.

இறுதி செமஸ்டர் என்பதால், ப்ராஜெக்ட், வைவா என நாட்கள் அவளுக்கு ரெக்கை கட்டித்தான் பறந்தது. இறுதி செமஸ்டர் என்பதால், ப்ராஜெக்ட்க்கு வேண்டி லீவ் போட்டவள்தான், கை காயத்தோடு போராடி முடித்திருந்தாள். அந்த வேலை வேறு அப்படியே இருக்க, அதையும் முடிக்க வேண்டும் என மனதுக்குள் குறித்துக் கொண்டாள்.

‘வருணா ஏன் என்னைப் பார்க்க விரும்புகிறாள்? அவள் பர்தா போட்டு வரக் காரணம் என்ன?’ அரை உறக்கத்திலும் அந்த கேள்வி மனதை வண்டாய் குடைந்தது.

ஒரு வழியாக உறங்கி கண் விழித்தவள், கல்லூரிக்கு கிளம்பிச் செல்லும் வரைக்கும் பிரம்மா வீட்டுக்கு வரவே இல்லை. ‘இவரை வச்சுகிட்டு என்ன செய்யிறதுன்னே தெரியலை. ஆ..., ஊ ன்னா கோச்சுகிட்டு ஸ்டேஷன்ல போய் உக்காந்துக்கறார்..., எண்ணியவள் அவனைத் தேடிச் செல்லும் வகையின்றி, கல்லூரிக்குச் சென்றாள்.

தன் வகுப்பறைக்குச் சென்றவள், இந்திராவைப் பார்த்துவிட்டு வேகமாக அவளை நெருங்கினாள். “இந்து...” அவள் கரத்தை பற்றிக் கொள்ள, அவள் தன் கையை உருவிக் கொண்டவள், முகத்தையும் திருப்பிக் கொண்டாள்.

அதைப் பார்த்தவள், “எனக்குன்னு இந்த உலகத்தில் இருக்கும் சொந்தம் நீ ன்னுதான் நான் நினைச்சுட்டு இருக்கேன். இப்போ என்னன்னா நீயே இப்படி விலகிப் போனால் நான் என்னடி செய்யட்டும்? உன் கோபம் நியாயமானதுதான், அதை நான் இல்லன்னே சொல்லலை.

“ஆனா என் நிலைமையை கொஞ்சம் யோசிச்சுப் பார்..., கையில் அடிபட்டு, அவருக் கோவிச்சுகிட்டு, அவங்க அம்மாவோட பிரச்சனை, என்கிட்டே பேசலை, இப்படி என்னை சுத்தி இருந்த பிரச்சனையில் உனக்கு கால் பண்ணவே சுத்தமா மறந்துட்டேன்.

“நான் அப்படி செய்திருக்கவே கூடாது..., உன் மேரேஜ் அன்னைக்கு, என்னை நீ ரொம்ப எதிர்பார்த்திருப்பன்னு எனக்குத் தெரியும். ஆனா, என்னோட சூழ்நிலை அப்படி..., நான் வேணும்னு வராமல் இருந்திருப்பேன்னு நினைக்கறியா? அப்படின்னா சரி, அப்படியே நினச்சுக்கோ” தான் இவ்வளவு சொல்லியும் அவள் அசையவில்லையே என சற்று கோபமானாள்.

நட்பின் அடிப்படையே நம்பிக்கைதான்..., அந்த நம்பிக்கையே அவளுக்கு தன்மேல் இல்லையென்றால், அவள் கோபித்துக் கொள்ளட்டும் என எண்ணியவள், அவள் அருகில் இருந்து எழுந்து செல்ல முயன்றாள்.

அவள் முதலில் பேசத் துவங்கிய உடனேயே தன் கோபம் கலைந்த இந்திரா, அவள் எழுந்து செல்ல முயலவே, அவள் கரத்தை பற்றி தடுத்தாள்.

“என்னவோ சொன்ன..., இப்போ கோபமா போற...” அவள் போலியாக கோபம் காட்ட, தோழியை இறுக அணைத்துக் கொண்டாள்.

மெல்லியதாக கண் கலங்கியவள், “ஹேப்பி மேரிட் லைப் இந்து...” அவள் கன்னத்தில் இதழ் ஒற்றியவள், “மேரேஜ் லைப் எப்படிப் போகுது? அண்ணா உன்னை நல்லா பாத்துக்கறாங்களா? அத்தை மாமா எப்படி பழகறாங்க? எதுவும் பிரச்சனை இல்லையே...” அவள் கரத்தை பற்றிக் கொண்டு விடாமல் கேட்டாள்.

ஒரு பெண் மற்றொரு குடும்பத்துக்குள் அடியெடுத்து வைக்கையில் அவள் மனதுக்குள் பெரும் பயம் இருக்கவே செய்யும். அதை சரி செய்யும் பொறுப்பு கொண்டவனுக்கும், அவனைப் பெற்றவர்களுக்கும் உண்டே..., அது இந்திராவுக்கு சரியாக அமைந்ததா என அறிந்துகொள்ள வேண்டி இருந்தது.

“என்னடி பெரிய மேரேஜ்..., அவர் என்னோட ஒரு வாரம்தான் இருந்தார். அந்த ஒரு வாரமும் ஒரே கெஸ்ட் வீடு, விருந்துன்னே சுத்திட்டு இருந்துட்டோம். மனசு விட்டு பேசிக்க கூட நேரம் கிடைக்கலை. கிடைத்த நேரத்தில், என்னை தெரிஞ்சுக்கவே அவருக்கு நேரம் போதலை...” அவள் இறுதியில் இமை சிமிட்ட,

“லூசு..., நீ இன்னும் மாறவே இல்லை...” அவள் கையை கிள்ளினாள்.

“என்னத்த மாறுறது..., கழுத்தில் இருக்கும் இந்த தாலி ஒண்ணுதான் எக்ஸ்டிரா..., மத்தபடி, அதே காலேஜ், அதே ரூம்..., அதே நீ..., அதே நான்...” பெருமூச்சு ஒன்றை வெளியிட்டாள்.

“என்னடி இப்படி சொல்ற...? அண்ணா கிளம்பிட்டாங்களா? எப்போ? போன் பண்றாங்க தானே...?” கவலையானாள்.

“அவர் கிளம்பி ஒரு வாரமாகுது. நான் நேத்துதான் காலேஜ்க்கு வந்தேன். அவர் வர்ற வரைக்கும் அம்மா வீட்டிலேயே இருந்துக்கோன்னு அத்தை வீட்டில் சொல்லிட்டாங்க. அவங்க பொண்ணு டெலிவரிக்கு வேற வந்திருக்கா…, அவளை கவனிக்கவே அவங்களுக்கு நேரம் இல்லை.

“மத்தபடி அவங்களும் பெருசா என்னை கண்டுக்கலை, நானும் அப்படியே இருக்கறேன். இந்த டே நைட் பிரச்சனை இருப்பதால் அவரால் சரியா என்கிட்டே பேச முடியலை. நைட் ரொம்ப லேட்டா வேலை முடிச்சு வர்றார்.

“அந்த புராஜெக்ட் வேலையை ஒரே மாசத்தில் முடிச்சு கொடுக்கணும்னுதான் அவரை அங்கேயே கூப்பிட்டு இருக்காங்க. பிறகு, சும்மா விடுவாங்களா என்ன? ஒரு வாரத்தில் ரொம்ப டல் ஆயிட்டார். இதில் புலம்பல் வேற. நானா என்னை உடனே கட்டிக்கோங்கன்னு சொன்னேன்?

“அவங்க அம்மாதான் எல்லாம் பண்ணாங்க…, இப்போ புலம்பி என்ன பண்ண? ஒரு மாசத்தில் முடிச்சுட்டு வர்றேன்னு சொல்லியிருக்கார்…, எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை…, பார்ப்போம்…” அவள் முடித்துக் கொள்ள, அவன் ஒரு மாதத்தில் வருவான் என்பதை காயத்ரியாலும் நம்ப முடியவில்லை.

காயத்ரி அமைதியாக இருக்கவே, “நீ எதுக்குடி முகத்தை தொங்கப் போட்டுட்டு உக்காந்து இருக்க? எல்லாம் விதிப்படிதான் நடக்கும். எனக்கும் காலேஜ் முடியிற வரைக்கும் பிரீயா இருக்க ஒரு வாய்ப்பு…, விடு” அவள் நிலைமையை அதன் தன்மையில் ஏற்றுக்கொள்ள, அது ஏன் தனக்கு மட்டும் முடியவில்லை என எண்ணிக் கொண்டாள்.

“சரி…, என்னவோ வருணா வந்தான்னு சொன்னியே…, என்னவாம்?”.

“அதை என்கிட்டே சொல்ல மாட்டேன்னு சொல்லிட்டா…, உன்கிட்டதான் பேசணுமாம், நீ அவகிட்ட கேட்டு

தெரிஞ்சுக்கோ..., பதினோரு மணிக்கு ஹாஸ்டல் வர்றேன்னு சொன்னா..., முதல் ஹவர் முடிஞ்சவுடனே, ப்ராஜெக்ட் விஷயமா வெளியே போகணும்னு பெர்மிஷன் கேட்டுக்கு நம்ம ரூமுக்கு போய்டு..., அவ வருவா...” இந்திரா சொல்ல, அவள் சொன்னதை அப்படியே செய்தாள்.

தங்கள் ஹாஸ்டல் அறையில் வருணாவுக்காக அவள் காத்திருக்க, அடுத்த பத்து நிமிடங்களில், பர்தா அணிந்துகொண்டு, அவர்கள் அறைக்குள் நுழைந்தாள் வருணா.

“ஹாய் காயத்ரி, எப்படி இருக்க? சாரி, நீ வந்து ரொம்ப நேரமாச்சா? நான் கொஞ்சம் பாத்து வர வேண்டி இருந்ததா அதான் லேட்...” உரைத்தவள், மறக்காமல் கதவை தாழ் போட, அவளது முன்னேற்பாட்டை புரியாமல் பார்த்தாள்.

“எஸ்பி சார் உன்னை ஏதாவது கார்னர் பண்ணி கல்யாணம் பண்ணிகிட்டாரா காயத்ரி?” எந்தவிதமான தயக்கமோ, முன்னறிவிப்போ இல்லாமல் அவள் பட்டென கேட்க, நிச்சயம் திகைத்துத்தான் போனாள்.

ஒரு விதத்தில் சொல்லப்போனால், தங்கள் திருமணம் அப்படித்தான் நடந்தது. அதை அவளிடம் சொல்ல மனமின்றி, தன் திகைப்பை மறைத்தவள், “அப்படியெல்லாம் இல்லையே..., ஏன் அப்படிக் கேட்ட?” தன்னை சம்மாளித்தவாறே கேட்டாள்.

“என்னால் நம்ப முடியலை. அனேகமா உன்னை வச்சு, உங்க அண்ணாவோட கேங்கை பிடிக்க ட்ரை பண்றாருன்னு நினைக்கறேன். எஸ்பி சார் அவ்வளவு ஈசியா யாரையும் விட்டுட மாட்டார்” பிரமிப்பா, பயமா, நன்றியா என பிரித்தறிய முடியாத குரலில் அவள் உரைக்க, நிச்சயம் குழம்பிப் போனாள்.

‘என் அண்ணாவோட கேங்கா?’ அவளுக்கு புரியவே இல்லை.

“நீ யாரை, எதை சொல்ற வருணா? எனக்கு புரியலை”.

“எஸ்பி சார் உன்கிட்டே எதையும் சொல்லல...?” அதிர்வாக வருணா கேட்க, காயத்ரிக்கு அடிமனம் பதறியது.

“சொல்றதை கொஞ்சம் தெளிவா சொல்லு...” படபடத்தாள்.

“நீ எதுக்கும் எஸ்பி சார் கிட்டே கொஞ்சம் கவனமா இரு காயத்ரி. அவர் காரணம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார். அந்த அரசியல்வாதியை எதுவும் செய்ய முடியலைன்னு, உன்னை வச்சு முடிக்கப் பாக்கறாரோ என்னவோ?

“உன்னை அவர் கல்யாணம் பண்ணிகிட்டாருன்னு தெரிஞ்ச அடுத்த நிமிஷமே, என்னால் அங்கே இருக்கவே முடியலை. உன்னை கவனமா இருக்கச் சொல்லணும்னே, எங்க அப்பா தடுத்தும் கேக்காமல் ரிஸ்க் எடுத்து வந்திருக்கேன்.

“சொல்லப்போனா எஸ்பி சாரே என்னை கொஞ்ச நாளைக்கு இந்தப் பக்கம் வர வேண்டாம்னு சொல்லியிருந்தார்...” அவள் சொல்லிக்கொண்டே போக, காயத்ரிக்கு மண்டையே வெடித்துவிடும்போல் இருந்தது.

அவளைத் தடுத்து கேட்கும் முன்பே, “அந்த எஸ்பி சார் மனுஷனே கிடையாது. பக்கா மிருகம்..., டியூட்டிக்கு வேண்டி எந்த ரிஸ்கையும் எடுக்க தயங்கவே மாட்டார். பட் நல்லவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனா, மனசுக்குள் ஒண்ணை முடிவு பண்ணிட்டா..., கருவறுக்குறதுன்னு ஒரு விஷயம் சொல்வாங்களே..., அப்படி அறுக்காமல் விட மாட்டார்.

“எனக்கென்னவோ அவர் உன்னை கல்யாணம் பண்ணது சாதாரணமா படலை, அவர்கிட்டே இருந்து எப்படியாவது தப்பிச்சுடு. உங்க அண்ணா செய்ததுக்கு நீ எந்த விதத்திலும் பொறுப்பாக முடியாது. போய்டு..., இங்கே இருந்து போய்டு...” அவள் உச்ச பதட்டத்தில் புலம்ப, ஆடிப்போனாள்.

“வருணா..., நீ கொஞ்சம் அமைதியா இரு. முதல்ல என்ன விஷயம்னு தெளிவா சொல்லு..., எனக்கு இங்கே

நடந்ததெல்லாம் தெரிஞ்சாகணும்” அவளுக்கு உண்மையை அறிய கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை அவள் நழுவ விட தயாராக இருக்கவில்லை.

தன் கைப்பையில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து அவளிடம் கொடுக்க, மடக் மடக்கென முழு பாட்டிலையும் காலி செய்தவளது முகத்தில் பெரும் கலவரம்.

“உனக்கு எந்த உண்மையுமே தெரியாதா? அப்போநான் சந்தேகப் பட்டது சரியா போச்சு...” அவள் உளற, காயத்ரிக்கு மண்டையே வெடித்துவிடும்போல் இருந்தது.

“உங்க அண்ணா என்ன வேலை பாத்தான்னு கூட தெரியாதா?” அவள் வியக்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

“நீ இஞ்சினியரிங் சேர்ந்த பிறகு, ஒவ்வொரு செமஸ்டருக்கும் சில நாள்கள், இல்லன்னா மாசம் ஊர் சுத்தி பாக்கப் போவ தெரியுமா? அப்போ இங்கே என்ன நடந்ததுன்னு உனக்கு யாருமே சொன்னது இல்லையா? இப்போ ரெண்டு வருஷமா உன் கூடவே இருக்காளே இந்திரா அவளுமா சொன்னதில்லை?” கேள்வியாக நிறுத்தினாள்.

“சிலபேரை காணோம்னு சொல்லியிருக்கா. சிலர் திடீர்னு டீசி வாங்கிட்டு, சொல்லாமல் கொள்ளாமல் போய்ட்டாங்கன்னு சொல்லியிருக்கா..., நீ அதையா கேக்கற?” நம்பிக்கை இல்லாமல் கேட்டாள்.

“ஆமா..., அதுக்கு பின்னாடி உங்க அண்ணா இருந்தான்..., அது உனக்குத் தெரியுமா?” பட்டென கேட்க, இருக்கையில் இருந்து எழுந்தே விட்டாள். இந்த கல்லூரியில் பெண்கள் காணாமல் போவதற்கும், அவள் அண்ணாவுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

“என்ன..., எல்லாரையும் எங்க அண்ணாதான் கடத்தினான்னு சொல்றியா?” கோபமாகக் கேட்டாள்.

“இப்படி கோபமா கேட்டால் உண்மை இல்லாமல் போய்டாது காயத்ரி. பாதிக்கப்பட்ட நானே உன் கண் முன்னாடி

இருக்கறேன். நான் சொல்வதை நம்ப மாட்டியா? எனக்கென்ன தலையெழுத்தா..., இப்படி வந்து பேசணும்னு.

“நமக்கு நல்லா தெரிஞ்சவ, நீயும் ஒரு பெண் என்பதால் உனக்கு உதவி செய்ய வந்தேன் பார்..., எனக்கு தேவைதான்..., நீ என்னவோ போ, எனக்கென்ன, நான் இப்படியே கிளம்பறேன்” அவள் தன் கைப்பையை எடுத்துக்கொண்டு கிளம்ப முயல, வேகமாக அவளைத் தடுத்தாள்.

“வருணா, பிளீஸ்..., என்னன்னு முழுசா சொல்லிட்டு போ...” அவள் கையைப் பிடித்து அமர வைத்தாள்.

கொஞ்சம் சமாதானமாகி அமர்ந்தவள், சிறு இடைவெளி விட்டு, “நம்ம காலேஜ் கரஸ்பாண்டென்ட் மிஸ்டர் பன்னீர் என்றாலும், அது மினிஸ்டர் பரந்தாமனோட காலேஜ் என்பது உனக்குத் தெரியும்தானே...?” அவள் கேட்க, ஆம் என தலை அசைத்தாள்.

மினிஸ்டர் ஒவ்வொரு செமஸ்டருக்கும் நம்ம காலேஜுக்கு விசிட் வருவாரே, வர்றப்போ..., ஒவ்வொரு கிளாஸ் ரூமுக்கு கூட விசிட் பண்ணுவார், அது ஏன்னு தெரியுமா?” குரலில் கோபம் ஏற அவள் வினவ, இப்பொழுது மறுப்பாக தலை அசைத்தாள்.

இதயமோ ஏறுக்கு மாறாக அடித்துக் கொண்டது. “அவர் விசிட் வர்றது காலேஜில் இருக்கும் நிறை குறைகளை மாணவர்கள் கிட்டேயே நேரடியா கேட்டு தெரிஞ்சுக்கன்னு சொல்வாங்களே...” காயத்ரி மெதுவாக உரைக்க, வருணாவின் முகம் கோபத்தில் சிவந்து போனது.

“என்னது..., அந்த நாய் குறைகளை மாணவர்கள் கிட்டே கேட்டு தெரிஞ்சுக்க வந்துதா?” கிட்டத்தட்ட கத்தியவள், தன் கைப்பையை அழுத்தமாக தன் நெஞ்சோடு பற்றிக் கொண்டவளது தேகம் மெல்லியதாக நடுங்க, காயத்ரி அவள் கரத்தை அழுத்தினாள்.

“உன்னை மாதிரிதான் நானும் நினைச்சுட்டு இருந்தேன். ஆனா, உண்மையான காரணம் என்ன தெரியுமா? அவன்

எந்த பொண்ணுகிட்டே போய் பேசறானோ, அந்த பொண்ணு அடுத்த வாரத்தில் அவன் பண்ணை வீட்டுக்கு போயாகணும்..., அதுக்குதான்...” அவள் குரல் நடுங்க சொல்லி நிறுத்த,

“என்ன...” தான் கேட்டதை நம்ப முடியாமல் திகைத்தாள். கூடவே, “உ..உனக்கு யார் சொன்னா?” தடுமாறிப் போனாள்.

“அந்த நாய் என்கிட்டேயும் வந்து குறையை கேட்டுதே...” சொன்னவள் முகத்தை மூடிக்கொண்டு அழ, “வருணா...” தாவி அவளை தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டாள்.

‘இதில் என் அண்ணா எங்கே வந்தான்...?’ மூளை ஒரு பக்கம் தறிகெட்டு சிந்திக்க, “வருணா..., கூல்..., இவ்வளவு எமோஷனல் ஆகாதே” அவளை தேற்றவும் மறக்கவில்லை.

“அந்த பொண்ணுங்களை மடக்கி வழிக்கு கொண்டுவந்து அவன் பண்ணை வீட்டுக்கு அழைச்சுட்டு போறது யார் தெரியுமா? உன் அண்ணா காமேஷ் தான்...” சற்று நேரத்தில் தெளிந்தவள் உரைக்க, உடல் வெடவெடக்க, தான் கேட்டதை நம்ப முடியாமல் ஆடிப்போனாள் காயத்ரி.

“நீ என்ன சொல்ற வருணா?” குரல் அடைக்க, கண்கள் கலங்க அவள் கேட்க,

“இதுக்கு நம்ம ஹாஸ்டல்ல ஹெல்ப் பண்ணது யார் தெரியுமா? அந்த சாந்திதான்” அடுத்த அணுகுண்டை வீச, மண்டைக்குள் சில பொக்ரைன் அணுகுண்டுகள் வெடித்தது.

“சாந்தி..., இதில் எப்படி...?” காயத்ரி திணற, “அவங்க லவ்வர்ஸ்...” வெறுப்பை உமிழும் முகத்தோடு வருணா சொல்ல, அடுத்த அணுகுண்டு வெடித்தது.

“இதில் வினோதம் என்ன தெரியுமா...? பல பொண்ணுங்க வேற வழியே இல்லாமல், அவன் வீட்டுக்கு போயிட்டு, அவன் கொடுத்த பணம், வசதி என வாங்கிகிட்டாங்க..., அதை சகிச்சுகிட்டாங்க...” ஆத்திரமாக உரைக்க,

மனதுக்குள் இறங்கும் இடிகளை காயத்ரியால் தாங்க முடியவில்லை.

‘என் அண்ணனா அப்படி…? என்னை தூசி கூட நெருங்காமல் பார்த்துக் கொண்டவனா இப்படி செய்தான்? மற்ற பெண்களும் ஒரு அண்ணனுக்கு தங்கை என்பதை அவன் எப்படி மறந்தான்?’ அவள் கண்களில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

சற்று நேரம் அழுதவள், “ஏன் யாருமே போலீஸ்ல கப்ளெயின்ட் பண்ணலை?” தன்னை சரி செய்ய போராடினாள்.

“ஹாஸ்டல் பொண்ணுங்களுக்கு, அவங்க குளிக்கிற வீடியோ, ட்ரெஸ் மாத்துற வீடியோன்னு போனால், அவங்க எப்படி வெளியே வருவாங்க. அதை எடுத்தது எல்லாம் சாந்தி. அவ அதை எப்படி, எப்போ நேரம் பார்த்து செய்தாள் என்பதுதான் ஆச்சரியமே” அவள் முடிக்க, தகர்ந்து போய் அமர்ந்திருந்தாள்.

“காணாம போன பொண்ணுங்க…” கேட்கையிலே அவள் குரல் நடுங்கியது.

“ஒத்துவராத பொண்ணுங்களை கடத்தி, விஷயத்தை முடிச்சுட்டு, என்ன செய்தாங்களோ யாருக்குத் தெரியும்?” வருணா அசால்ட்டாக உரைக்க, காயத்ரிக்கு சர்வமும் நடுங்கியது.

“நீ…, நீயெப்படி…? உனக்கு…” அவளால் உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்ததா என கேட்கவும் முடியவில்லை.

“எனக்கும் அந்த மாதிரி வீடியோ வந்த உடனே என்ன செய்யிறதுன்னே தெரியலை. ரெண்டு நாள் விடாமல் போன் வேற…, நான் தற்கொலை பண்ணிக்கலாம்னு நினைத்த அந்த நேரம்…, நீதான் என் முடிவில் இருந்து என்னை மாற வச்ச…” அவள் சொல்ல, புரியாமல் ஏறிட்டாள்.

“என்ன புரியலையா…? நீதான் பிரம்மா சாரைப் பத்தி சொல்லி, அவர் ஒவ்வொரு கேசையும் முடித்த விதத்தையும்,

அவரோட தைரியத்தையும், திறமையையும் விவரிக்க, எனக்கு ஒரு சின்ன நம்பிக்கை கிடைச்சுது. நான் அவரைப் பார்க்கப் போனேன்…" அவள் சொல்ல, வருணாவின் நினைவுகள் அந்த காலத்துக்குப் பயணித்தது.

அவள் அன்று தனியாக, தைரியமாக எஸ்பி அலுவலகம் செல்ல, அவளை எதிர்கொண்டவர் கந்தன் தான். "என்னம்மா தனியா வந்திருக்க, யாரைப் பாக்கணும்?" அவளை விசாரித்தார்.

"எஸ்பி சாரை பெர்சனலா பாக்கணும்…" அவள் பார்வையை சுழலவிட, அவள் நின்ற தோரணையே பரிதாபத்தை வரவழைக்க, அவளை யாழினியிடம் அழைத்துச் சென்றார்.

"யாழினி, இந்த பொண்ணு ஐயாவை பாக்கணுமாம்…, என்னன்னு கேட்டு அனுப்புங்க" உரைத்தவர் அங்கிருந்து அகன்றார்.

"என்னம்மா விஷயம்…?".

"அதை அவர்கிட்டேதான் சொல்லணும்…, கொஞ்சம் அர்ஜன்ட், ஹெல்ப் பண்ணுங்க பிளீஸ்" கெஞ்சினாள்.

அவன் அறைக்குள் சென்றால் கடித்துக் குதறுவான் என்பதால், போனை எடுத்து அவனுக்கு தொடர்பு கொண்டு விஷயத்தை உரைத்தவள், அவளை உள்ளே அனுப்பினாள்.

தன் அறைக்குள் பெரும் தயக்கத்தில் நுழைந்த அவளை இருக்கையில் சாய்ந்து அமர்ந்தவாறு அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவளது உடல்மொழி, அவள் வியர்வையில் குளித்திருந்த விதம், கண்களில் வழிந்த பயம், எச்சில் விழுங்கிய தன்மை, போனை அணுகுண்டை தாங்கியிருப்பதுபோல் தாங்கி, பயமாய் பார்த்த விதம், அனைத்தையும் நொடியில் கணக்கிட்டான்.

தன் எதிரில் இருந்த இருக்கையை சுட்டிக் காட்டியவன், அவள் அமர்ந்தவுடன், "போன்ல யார் பிளாக்மெயில் பண்றாங்க? ஏதாவது வீடியோ அனுப்பினாங்களா? என்ன

சொன்னாங்க? எங்கே வரச் சொன்னாங்க? பேசின குரல் உனக்கு தெரிந்த குரலா இருந்ததா?

“போன் நம்பர் டிஸ்பிளே ஆச்சா..., இல்ல பிரைவேட் நம்பர்ன்னு வந்ததா?” அடுக்கடுக்காக கேட்டவன், தன் அலைபேசியை விரல்களுக்குள் வைத்து சுழற்றியவாறே, அவள் முகத்தை படித்துக் கொண்டிருந்தான்.

“சா..ர்...” அந்த வார்த்தையை உதிர்த்த மறு நிமிடம் அவள் பொங்கி அழ, வாய் வார்த்தையாக கூட அவளை அழாதே எனச் சொல்லாமல், அவளை அழ விட்டான்.

அவளாகவே அழுது ஓய்ந்து நிமிர, “கேட்டதுக்கு பதில்...” அவள் அலைபேசிக்கு வேண்டி கை நீட்டினான்.

“யார்ன்னே தெரியல சார்..., நாலு நாளைக்கு முன்னாடி எனக்கு ‘வாட்ஸ்ஆப்’ ல நான் குளிக்கிற...” மேலே சொல்ல முடியாமல் தேம்பியவள், அது வந்த அடுத்த அஞ்சாவது நிமிஷம் ஒரு நம்பர்ல இருந்து கால்...” அவள் மேலே சொல்லும் முன்பு தடுத்தவன், எனக்குத் தெரியும் என்பதுபோல் அசால்ட்டாக அமர்ந்திருந்தான்.

அவள் அலைபேசியை தயக்கமாக அவன் கரத்தில் கொடுக்கவே, “அந்த வீடியோவில் இருந்தது நீதானா...? கண்பாமா தெரியுமா? அந்த வீடியோ எங்கே எடுத்ததுன்னு கெஸ் பண்ண முடிஞ்சதா...? வீடியோ இருக்கா..., இல்ல டெலீட் பண்ணிட்டியா?” அவன் கேட்க,

“முதல்ல அனுப்பினதை எல்லாம் டெலீட் பண்ணேன்..., இப்போ மறுபடியும்...” அவள் இழுக்கவே, வீடியோவை ஓடவிட, தன் உயிரே போகும் நிலையில் அமர்ந்திருந்தாள்.

‘அதைப் பார்த்துவிட்டு இவன் என்ன சொல்வானோ...? எப்படி பார்ப்பானோ?’ அவள் புழுவாய் தவிக்க, அவன் முகத்தை ஏறிடவும் அஞ்சினாள்.

“இது ஹாஸ்டல் ரூம்ல எடுத்தது..., மொபைல் கேமரா இல்லை..., ஹை குவாலிட்டி கேமரால எடுத்திருக்காங்க...,

சோ...” அவன் இன்னும் சொல்லிக்கொண்டே போக, அவன் சொன்னவை எதையும் அவள் கேட்கவே இல்லை.

கால் ஹிஸ்டரியை தேடி எடுத்தவன், இறுதியாக வந்த ஐந்து நம்பர்களை குறித்துக் கொண்டான். “இனிமேல் வர்ற கால் எல்லாம் ரெக்கார்ட் பண்ணிடு. அவங்க என்ன சொன்னாலும் ஒத்துக்கோ..., எங்கே கூப்பிட்டாலும் போ...” அவ்வளவுதான் நீ செல்லலாம் என அலைபேசியை அவள் கையில் கொடுக்க, திகைத்துபோய் எழுந்தாள்.

“சார்..., அவங்க...” அவள் இழுக்க,

“நான் சொன்னதை செய். இனிமேல் நீ பிரம்மாவின் பாதுகாப்பில் இருக்க, உனக்கு எந்த ஆபத்தும் வராது..., தைரியமா போ...” அதில் தெரிந்த உறுதியில் கொஞ்சம் நம்பிக்கை வரப் பெற்றவளாய் அங்கிருந்து கிளம்பினாள்.

ஆனால், அவன் எப்படி தன்னை பாதுகாப்பான்? என்பது அவளுக்குத் தெரியாமல் திணறி திண்டாடிப் போனாள். ‘அவங்க என்ன கேட்டாலும் செய்’ ன்னு ரொம்ப ஈஸியா சொல்லிட்டார்..., எப்படி செய்வேன்? அவர் வராமல் போனால்...?’ அவள் அப்படி தவிக்க, அவளது அலைபேசிக்கு வரும் அழைப்புகள் அனைத்தையும் கண்காணித்துக் கொண்டிருந்தான் பிரம்மா.

அவள் அலைபேசிக்கு ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு ஆள், நம்பர் என அழைப்பு வர, அதில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பந்தப் பட்டிருப்பதை அறிந்தான். அதைவிட, அவள் எந்த கல்லூரி என அவளது ஐடி கார்டை வைத்தே அறிந்தவன், ஒரே நாளில் கல்லூரியைப் பற்றி அக்குவேறு ஆணிவேராக அலசினான்.

வருணாவுக்கு அவர்கள் இரண்டு நாள் கெடு கொடுக்க, மறுநாள் காலையில் அவர்களது கல்லூரியில் இருந்தான் பிரம்மா. முதல்வர் வையாபுரி அவனைப் பார்த்து மிரண்டு போனார் என்றே சொல்லலாம்.

அவருக்கு அங்கே நடக்கும் விஷயங்கள் பிடிக்கவில்லை என்றாலும், ஒரு ஊழியராக எதையும் அவரால் செய்ய

முடியவில்லை. அதைவிட, கல்லூரியின் கௌரவம் காப்பது அவரது கடமை என்பதால் அனைத்தையும் மூடி மறைக்க துணை போனார்.

“இங்கே காலேஜில் இருந்து காணாமல் போன பொண்ணுங்களை பத்தி விசாரிக்க வந்திருக்கேன்...” அவன் தோரணையாக கால்மேல் கால் போட்டு அமர, வியர்த்து வழிந்தார்.

அவர் உடனடியாக தாளாளரை அழைக்க, அடுத்த ஐந்தாவது நிமிடம், அவனது அலைபேசிக்கு உயரதிகாரியிடம் இருந்து அழைப்பு வந்தது.

“எந்த அடிப்படையில் நீங்க அங்கே போயிருக்கீங்க பிரம்மா? யார் கம்ப்ளெயின்ட் கொடுத்தது? என்ன கேஸ்...?” அவர் கேள்வி கேட்க, அதை எதிர்பார்த்தே வந்ததால், பெரிதாக அவன் கோபம் கொள்ளவில்லை.

‘அதுக்குள்ளே மந்திரி சூடாயிட்டார் போல..., இனிமேல் நீ ஆட்ட முடியாதுடா’ மனதுக்குள் பொங்கியவன், மேலே வெகு நிதானமாக முதல்வரை நோக்கினான்.

“சார்..., எனக்கு தெரிஞ்ச பையனுக்கு அட்மிஷன் வேணும், கேக்கலாம்னு வந்தேன். நீங்க என்ன சார் என்னவோ கேக்கறீங்க? இங்கே ஏதாவது தப்பு நடக்குதா என்ன?” அவன் பிளேட்டை திருப்பி போட, யார் திகைத்தார்கள் என்றே தெரியவில்லை.

“ஓ..., யூ கேரியான்...” அவர் அலைபேசியை வைத்துவிட, அவன் கனல் கக்கும் விழிகளோடு வையாபுரியை முறைத்தான்.

“நான் கேட்ட லிஸ்ட் உடனே வரணும்..., இல்ல...” கேட்டவன் தன் கால் சாக்ஸில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை வெளியே எடுக்க, வெலவெலத்துப் போனார்.

“சார்..., எனக்கு எதுவும் தெரியாது...” அவர் மிரள,

“எனக்கு இந்த கதையெல்லாம் வேண்டாம்..., நான் கேட்டது வருமா வராதா?” துப்பாக்கியை எடுத்து அவன்

அழகுபார்க்க, தன் முன்னால் இருந்த கணினியை இயக்கி, சில பிரிண்ட்அவுட்களை எடுத்துக் கொடுக்க, வெடுக்கென பிடுங்கியவன் அங்கிருந்து வெளியேறினான்.

‘எத்தனை பொண்ணுங்க..., இவங்களுக்கு எல்லாம் மனசாட்சியே இல்லையா? ஒருத்தன் சிக்கினால் போதும்..., மொத்தமா வச்சு தீட்டிடுவேன்’ பல்லைக் கடித்தான்.

அதே நேரம், பிரம்மா காலேஜுக்கு வந்து சென்றான் என்பதை அறிந்த பரந்தாமன், ஆடிப்போனான் என்றுதான் சொல்ல வேண்டும். அவனுக்கு பிரம்மாவைப் பற்றி நன்றாகவே தெரியும். அவன் ஒரு கேசுக்குள் நுழைந்துவிட்டான் என்றால், அதன் வேரோடு ஆராயாமல் ஓயமாட்டான் என்பதை அறிந்ததாலேயே திணறிப் போனான்.

அவனுக்கு சிறு சந்தேகம் கூட வராமல்தான் இத்தனை வருடங்கள் தன் ஆட்டத்தை அரங்கேற்றினான். தான் தேர்ந்தெடுக்கும் மாணவிகளின் பின்புலம், அவர்களது வசதி என அனைத்தையும் கணக்கிட்டுத்தான் காய்கள் நகர்த்தினான்.

அப்படியிருக்கும்போது..., நேற்றுவரை அவனுக்கு சந்தேகம் வரவில்லை. இன்று சந்தேகம் வருகிறது என்றால் எப்படி? சிந்தித்தவனுக்கு எதுவும் பிடிபடவில்லை.

எப்படி இருந்தாலும், அவன் தன்னைத் தீண்ட முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அவனது அந்த கல்லூரி, பன்னீர் பெயரில் இருப்பதால், சட்டப்படி அவன் தன்னை நெருங்க முடியாது என்ற மிதப்பு கொஞ்சம் இருக்கவே செய்தது.

ஆனாலும், கேசை விசாரிப்பது பிரம்மா என்பதால், கொஞ்ச நாள் இந்தியாவை விட்டு விலகி இருக்க முடிவெடுத்தான். இறுதியாக வருணாவை தொட்டுவிட்டு, செல்ல எண்ணியவன், அன்று இரவே வருணாவை தூக்கிவர ஆள் அனுப்பினான்.

அந்த வேலைக்கு பொதுவாக செல்பவன் காமேஷ் என்பதால் அவனையே அனுப்பினான். ஆனால் தன் முகம் தெரியாமல் இருக்க அவன் எப்பொழுதும் ஒரு கர்ச்சீப்பை முகத்துக்கு கட்டிக் கொள்வது வழக்கம்.

அன்றும் அப்படித்தான்..., சாந்தி அவளை வெளியே அழைத்து வருவதற்காக அவன் காத்திருக்க, வருணாவின் அறைக்குச் சென்ற சாந்தி, “உன்னை பாக்க வெளியே யாரோ வந்திருக்காங்க...” உரைத்தவள், அவளை கையோடு வெளியே கூட்டி வர, அடுத்த நிமிடம், காமேஷின் உடன் இருந்த நண்பர்கள் அவள் மூக்கில் துணி வைத்து மயக்கி, காருக்குள் ஏற்றினார்கள்.

அவள் இன்னதென்று உணரும் முன்பே அனைத்தும் நடந்திருக்க, மயங்கி கிடந்தாள். இறுதியாக அவள் எண்ணியது..., ‘பிரம்மா அவளை எப்படி காப்பாற்றுவான்?’ என்றுதான்.

அவர்கள் கார் கிளம்பிய மறு நிமிடம், அவர்களது காரை, ஒரு கால்டேக்சி பின்தொடர்ந்தது. உள்ளே இருந்த காவலர்கள், உடனடியாக பிரம்மாவுக்கு தகவல் கொடுக்க, “கார் எந்தப் பக்கம் போகுது...? கேட்டவன் அடுத்த நிமிடம் தன் ஜீப்பில் பாய்ந்திருந்தான்,

காருக்குள் இருக்கும் வருணாவுக்கு எந்த ஆபத்தும் நேராமல், அதே நேரம், காருக்குள் இருப்பவர்களையும் அவன் பிடித்தாக வேண்டிய நிலை. காரை அடுத்த பதினைந்து நிமிடங்களில் பின்தொடர்ந்தவன், அவர்களை மடக்க சரியான சந்தர்ப்பம் பார்க்க, அது சீக்கிரமே அவனுக்கு வாய்த்தது.

இரண்டு போலீஸ் வாகனங்களை அவன் வண்டிக்கு எதிராக வர வைத்தவன், பின்னால் சென்று மடக்கினான். இறுதி நிமிடத்தில்தான் போலீஸ் அவர்களை வளைத்ததை அறிந்தவர்கள், செய்வதறியாமல் திகைத்தார்கள்.

காரை ஓட்டியவன் அதை நிறுத்திவிட, “கெட் டவுண்...” கையில் துப்பாக்கியை எடுத்த பிரம்மா கர்ஜித்தான்.

காமேஷோ..., “விக்டர்..., ஜானி..., உயிரே போனாலும் இவன் கையில் சிக்கக் கூடாது..., இறங்கி நின்ன உடனே, ஆளுக்கொரு திசையில் ஓடுங்க, இவ இப்படியே கிடக்கட்டும். இவளுக்கு நம்மளைப் பத்தி எதுவும் தெரியாது, சோ கவலை இல்லை...” வேகமாக உரைத்தவன், காரில் இருந்து இறங்கினான்.

அடுத்த நிமிடம், மற்றவர்களும் இறங்க, “விக்டர்..., ஜானி..., ரன்...” ஓங்கி குரல் கொடுத்தவன் ஓடத் துவங்கவே, சட்டென அவர்கள் ஓடுவார்கள் என்பதை அறியாத காவலர்கள் அனைவரையும் விரட்ட, இரு காவலர்களை அழைத்து வருணாவை மருத்துவமனையில் சேர்க்கச் சொல்லி இருந்தவன், அவளைப் பற்றிய கவலை இன்றி, முகமூடி அணிந்திருந்த அவனை குறிவைத்து முன்னேறினான்.

அடுத்த ஒரு மணி நேர சேசிங்கில், காமேஷை பிடித்திருந்தான் பிரம்மா. அவனை கஸ்டடியில் மாற்றியவன், முதல் வேலையாக வருணாவைத் தேடி வந்தான். அவளது பெற்றோரை அழைத்து, விஷயத்தை சொல்லி, அவளை ஊரை விட்டு அனுப்பச் சொன்னவன், கொஞ்ச நாள் அவள் இங்கே வராமல் இருப்பது நல்லதென உரைத்தான்.

அவர்கள் சென்னையில் இருந்த அந்த மூன்று நாளில், பிரம்மாவின் ருத்ரதாண்டவ நடவடிக்கையை பார்த்தார்கள் என்றே சொல்லலாம். காணாமல் போன மாணவிகளின் பெற்றவர்களிடம் எப்படி, எப்பொழுது கம்ப்ளெயின்ட் வாங்கினானோ தெரியாது, ஒட்டுமொத்தமாக இருபது முப்பது கம்ப்ளெயின்ட் வர, கல்லூரி தாளாளர், முதல்வர் என அனைவரையும் கைது செய்தான்.

பரந்தாமன் அதற்குள்ளாக வெளிநாடு தப்பியிருக்க, பிரம்மாவால் அவனை எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால், பன்னீர் வகையாக சிக்கிக் கொண்டான். கல்லூரி, ஹாஸ்டல் என பிரம்மா ஒவ்வொரு முறையும் விசாரணைக்குச் செல்ல, கல்லூரியே அல்லோகலப் பட்டது.

கல்லூரியை இழுத்து மூடும் நடவடிக்கையிலேயே அவன் இறங்க, அப்பொழுதுதான் காமேஷின் கைதை அறிந்த காயத்ரி சென்னை திரும்பி இருந்தாள். அவனது வக்கீல் மூலமாக அவனைப் போய் சந்திக்க முயல, அதை காமேஷ் ஒத்துக்கொள்ளவே இல்லை.

அதைவிட பொய் கேஸ் போட்டு தன்னை கைது செய்து விட்டார்கள் என கதைவிட, அதை காயத்ரி அப்படியே நம்பினாள். வருணா மூலமாக, அவளை வெளியே அழைத்து வந்தது சாந்தி என்பது தெரியவர அவளைத் தேடத் துவங்கினான்.

அன்று ஹாஸ்டலில் சாந்தி இருப்பதாக தகவல் கிடைக்கவே, அவளை கைது செய்ய வந்த பிரம்மாவைப் பார்த்த மாணவிகள் அச்சம் கொண்டார்கள் என்றே சொல்லலாம்.

அதே நேரம்..., கூட்டத்தை அவன் கண்கள் அலச, அதில் இருந்த காயத்ரி, “பொறுக்கி, எப்படிப் பாக்கறான் பார்...?” அவன்மேல் இருந்த கோபத்தில் வாய்விட்டே முனக, சட்டென அவள் பக்கம் திரும்பியவன், முட்டைக் கண்களில் தன்னை முறைத்தவாறு இருந்த அவளைக் கண்டு புருவம் நெரித்தான்.

அவள் மூக்கில் இருந்த மூக்குத்தி ஒரு நொடி சுண்டி இழுக்க, ‘இவ..., அந்த மாமா பயலோட தங்கச்சில்ல...’ ஒரு நொடி சிந்தித்தவன், மறு நொடி அங்கிருந்து அகன்றிருந்தான். ஆனாலும், அந்த சிவப்புக்கல் மூக்குத்தி அவனையும் மீறி மனதில் பதிந்தது.

ஏதோ ஒரு விதத்தில் காயத்ரி அவனை வசீகரித்தாள். அதுவும் அந்த சிவப்புக்கல் மூக்குத்தி, அவனை அசைத்துப் பார்த்தது என்றே சொல்லலாம்.

தன்னை மீறி தன் மனம் அவள் பின்னால் செல்ல முயல்கிறது என்பதால், அவளை தன்னை விட்டு அகற்றி வைத்திருக்க வேண்டும் என்பதால் மட்டுமே, காயத்ரி

காமேஷின் தங்கை எனத் தெரிந்த பிறகும், விசாரணைக்கு என அவளை கஷ்டடியில் எடுக்க அவன் முயலவே இல்லை.

இதுவே மற்ற யாராவது காயத்ரியின் இடத்தில் இருந்திருந்தால், விசாரணைக்கு என அவளையும் அழைத்து தன் ஸ்டையிலில் நிச்சயம் விசாரித்து இருப்பான். ஆனால், காமேஷுக்கும் அவளுக்கும் இந்த நிழல் உலக விஷயத்தில் தொடர்பு இல்லை என்பதாலும் அவளை அதில் இருந்து விலக்கி வைத்தான்.

ஆனால் எந்த நிலையிலும், எத்தனையோ முறை கல்லூரிக்குச் சென்ற பொழுதெல்லாம், அவளைப் பார்க்கவோ, பேசவோ முயன்றது இல்லை. ஆனால், அவனையும் மீறி, அவள் தன் பார்வையில் விழுகிறாளா என அவன் கண்கள் அலைபாய்ந்தது மட்டும் உண்மை.

இந்த உண்மையெல்லாம் அவர்களுக்குத் தெரியாதே. எனவே வருணா தனக்குத் தெரிந்த அவனது பக்கத்தை மட்டும் காயத்ரியிடம் சொன்னாள்.

காமேஷின் வாயில் இருந்து எந்த உண்மையையோ, ரகசியங்களையோ அவர்களால் அறிய முடியவில்லை என்றே சொல்லலாம். காமேஷுக்குத் தெரியும், வாயை திறக்காமல் இருந்தால், அவனுக்கு தண்டனை கூட கிடைக்க வாய்ப்பு கம்மி.

அதுவே அவன் வாயைத் திறந்தால், மந்திரி ஆட்கள் ஒரு பக்கம் என்றால், அவனோடு இருந்தவர்களே அவனைக் கொல்ல முயல்வார்கள். சொல்லப்போனால், அவன் பேசாமல் இருப்பதுதான் அவனுக்கு நல்லது என அவன் கண்டிருந்தான்.

ஆனால், அவன் வாயைத் திறக்காததால் காணாமல் போன பெண்கள் என்ன ஆனார்கள்? அவர்கள் எங்கே போனார்கள்? என பிரம்மாவால் கண்டுபிடிக்க முடியவில்லை.

தவறெல்லாம் செய்துவிட்டு, அப்ரூவராக மாறாமல் அடம் பிடித்த காமேஷை அடியோடு வெறுத்தான் பிரம்மா.

அதைவிட, “நீ என்னை உள்ளே போட்டாலும் பத்து நாளில் வெளியே வருவேன் பாக்கறியா?” அவன் சவால் விட, அவனை அங்கேயே கொன்று புதைக்கும் வெறி அவனிடம்.

காமேஷ் பற்றிய பின்புலத்தை விசாரித்தால், ஒட்டுமொத்த சென்னைக்கும், விஜபி கஸ்டமர் டெலிவரி செய்யும் வேலையை செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

அவனது இலக்கு எல்லாம், கல்லூரிப் பெண்கள்தான். அதிலும், காசுக்காக எதையும் செய்ய தயாராக இருக்கும் பெண்கள், வறுமையால், வேறு வழியின்றி தவிக்கும் பெண்களை, வார்த்தை ஜாலத்தால் ஏமாற்றி, தன் தொழிலுக்கு பயன்படுத்தினான்.

‘காலேஜ் பொண்ணுங்க சார்..., கைபடாத பொண்ணுங்க. கண்ணுல காசை காட்டுங்க, நான் பொண்ணைக் காட்டுறேன்’ அவனது டிரேட்மார்க் வசனம் இதுதான். பரந்தாமன் இதற்காகவே அவனை உடன் வைத்திருந்தான்.

அதைவிட, பரந்தாமன் தொட்ட பெண்களை, அதை வைத்து மிரட்டி மேலும் பல ஆயிரங்களை, லட்சங்கள சம்பாதித்தான். அவன் தனியாக எதையும் செய்ய முடியாது என்பதால், கூட்டுக்கு சில ஆட்களை அவனே வைத்திருந்தான்.

அவர்களுக்கு ஆயிரங்களில் பணம் கொடுப்பவன், மீதியை தானே வைத்துக் கொள்வான். அவனிடம் நிறைய பணம் இருப்பதை அறிந்த சாந்திதான், அதை அடைய இப்பொழுது முயன்று கொண்டிருந்தாள். அவளுக்கு விழுந்த அடியென்றால், அது பிரம்மா காயத்ரியை மணந்ததுதான்.

காமேஷைப் பற்றி இதையெல்லாம் அறிந்தவன், அவன் வெளியே வந்தால், இன்னும் பல நல்ல பெண்களின் வாழ்க்கை நாசமாகும் என்பதை அறிந்து, அவனை என்கவுண்டர் செய்ய முடிவெடுத்தான்.

எப்பொழுதுமே நியாயத்தின் பக்கம் அவன் நிற்க தயங்காதவன், பிறகு இப்பொழுது மட்டும் பயப்படுவானா

என்ன? அவனை கோர்ட்டுக்கு கொண்டு சென்றாலும், வருணா கம்பிளெயின்ட் கொடுக்காமல் எதுவும் செய்ய முடியாது.

இப்படி பலவற்றையும் ஆராய்ந்தவன், கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியில், ஜீப்புக்குள்ளேயே அவனை சுட முயல, அதை உணர்ந்த காமேஷ் இறங்கி ஓடினான். அதுதான் அவன் செய்த மிகப்பெரும் தவறு. அடுத்த நொடி குறி பார்த்து அவனை சுட்டு வீழ்த்தியவன் அதன் பிறகே ஓய்ந்தான்.

அதை அறிந்த வருணா திகைத்துப் போனாள். அவன் சென்னைக்கு வரக் கூடாது என்பதையும் மீறி அவனைக் காண வர, மனித உரிமை கமிஷனில் காமேஷின் வழக்கு செல்லப் போவதாக அறிந்தவன், அதைப்பற்றி கொஞ்சம் கூட கண்டுகொள்ளவே இல்லை.

வருணா திகைக்க, அவனோ..., “இதெல்லாம் சின்ன விஷயம்..., இவன் கேங்க்க்கு ஒரு ஸ்கெட்ச் போட்டிருக்கேன். அவன் பணத்துக்கு வேண்டி, கூட்டாளிங்க எல்லாம் அவன் தங்கச்சியை சுத்துவாங்க..., அப்போ தூக்கிடுவேன்.

“பன்னீர் வெளியே வரணும்னா மறு ஜென்மம் எடுக்கணும். பரந்தாமன் கண்டிப்பா சிக்குவான்..., கருவாடு தின்கிற பூனை அவ்வளவு சீக்கிரம் காய் சாப்பிடாது. நீ மட்டும் அவன் கண்ணில் படாதே போய்டு..., இனிமேல் சென்னையை நீ மறந்துடு...” அவன் நின்ற தோரணையும், சொன்ன விதமும், வேரோடு பிடுங்கி எறியும் வெறியை அவனில் காண, திகைத்துப் போனாள்.

அன்று சென்றவள்தான்..., இப்பொழுது அவன் காயத்ரியை மணந்து கொண்டான் என்பதை அறிந்து, அவளை பழி வாங்கத்தான் திருமணம் செய்து கொண்டானோ..., அவளை எதுவும் செய்துவிடக் கூடாது என்பதாலேயே அவளைஎச்சரிக்க வந்தாள்.

அவள் அனைத்தையும் சொல்லி முடிக்க, தன் அண்ணன் இப்படிப் பட்டவன் என்பது தெரிய வந்ததால் அப்படி அழுதாளா? இல்லையென்றால், தன் கணவன் சுயநினைவுக்கு வந்தால், தன்னை எப்படி நடத்துவான் என்பதை எண்ணி அழுதாளா தெரியாது..., குமுறி அழுதாள் காயத்ரி.

*****

# பகுதி – 41.

காயத்ரியால் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவே முடியவில்லை. ‘காமேஷ் இப்படிப்பட்டவனா?’ கேள்வி நெஞ்சை அறுக்க, தாள முடியாமல் தவித்தாள்.

தன் மேல் உயிரையே வைத்திருந்தவன், தனக்காக என்ன செய்யவும் தயாராக இருந்தவன், தன்னை கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொண்டவன், அவனது மறுபக்கம் உணர்ந்து துவண்டு போனாள்.

அவனுக்கு பணம் சம்மாதிக்க வேண்டும் என்ற வேகமும், வெறியும் இருந்தது அவளுக்கு நன்றாகவே தெரியும். அதற்காக இப்படியா? ஒரு பெண்ணின் கற்பை சூறையாட துணை போவது அவனுக்கு அத்துணை எளிதாக இருந்ததா?

அவன் ஒரு முறை கூட என்னை நினைத்துப் பார்க்கவே இல்லையா? ஒரு தங்கையின் அண்ணனான அவனுக்கு எப்படி ஒரு பெண்ணின் மனமும், நிலையும் புரியாமல் போனது?’ அவளுக்கு நினைக்க நினைக்க நெஞ்சம் புண்ணானது.

தன்னுடன் படிக்கும் அனைவரிடமும் வெகு இயல்பாக பழகி, அவர்கள் வீட்டு விஷயம் வரைக்கும் அறிந்து வைத்திருந்ததன் பின்னணி இதுவா? இதற்காகவா அப்படி நடந்துகொண்டான்? அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

‘என் அண்ணாவை வேண்டும் என்றே கொன்றுவிட்டார் என்று அவர்மேல் எவ்வளவு கோபமாக இருந்தேன்? அவரையே கொல்லும் அளவுக்கு போனேனே..., எல்லாம் அவனுக்காகவா?’ கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

இந்த பாவத்துக்கு அவரிடம் மன்னிப்பை கூட வேண்ட முடியாதே. படித்து படித்து சொன்னாரே..., ‘நான் ஒன்றை செய்திருந்தால் அதில் நியாயமான காரணம் இல்லாமல் இருக்க முடியாது’ என்று மீண்டும் மீண்டும் சொன்னாரே,

அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் அவரை எவ்வளவு வெறுத்தேன், கோபம் கொண்டேன். அதற்கெல்லாம் அடிப்படையே இல்லாமல் போய்விட்டதே.

இப்பொழுது அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்? அவருக்கு காமேஷ் பற்றிய நினைவுகள் வந்தால் என்ன செய்வார்? எப்படி நடந்து கொள்வார்? என்னை வெறுத்துவிடுவாரா? அவர் வாழ்க்கையில் இருந்து விலக்கி விடுவாரா?' மனம் கலங்கித் தவித்தது.

அவ்வளவு நேரமாக அவளுக்கு எதிரில் அமர்ந்து, அவளை பார்த்துக் கொண்டிருந்த வருணா, "காயத்ரி, அழாதே..., இந்த விஷயமெல்லாம் உனக்குத் தெரியாதுன்னு நான் சந்தேகப் பட்டது சரியா போச்சு" அவள் தோளை உலுக்க, புறங்கையால் முகத்தை துடைத்துக் கொண்டாலும், கண்ணீர் நிற்காமல் வழிவதை அவளும் என்ன செய்ய?

"சாரி வருணா..., நான் இப்படி..., அண்ணா..." ஒவ்வொரு வார்த்தையும் உதிர்க்கும் முன்னர் திணறி திண்டாடிப் போக, அவளால் வார்த்தைகளை முழுதாக உரைக்கவும் முடியவில்லை.

"காயு, உங்க அண்ணா செய்த தப்புக்கு நீ என்ன செய்வ? அதைவிட, பிரம்மா சார் அவனை கைது செய்யும் வரைக்கும், உங்க அண்ணாதான் அது என்பது எனக்குத் தெரியவே தெரியாது. அவர் சொன்னப்போ கூட என்னால் நம்பவே முடியலை.

"அது உன் அண்ணாவா இருக்கவே முடியாதுன்னு நான் அடித்துப் பேசினேன். ஆனா, அவரோட கஸ்டடியில், உன் அண்ணா அவ்வளவு திமிரா பேசியதை கேட்டப்போ, என்னால் என் காதையே நம்ப முடியலை" அவள் உரைக்க, காமேஷின் தங்கை தான் என நினைக்கவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது.

"எனக்கு ஒரு பெரிய டவுட் என்னன்னா..., உன் அண்ணாவோட கூட இருந்த ஆட்கள் எல்லாம் இன்னும் வெளியே வரலையோ..., ஏன் கேக்கறேன்னா, கொஞ்ச நாள்

அவங்க வெளியே வர மாட்டாங்க, பிறகுதான் வேலையை காட்டுவாங்கன்னு சொன்னார். அப்படி அவங்க வரத்தான் காத்திருக்காரோ...” அவள் தன் சந்தேகத்தை வெளியிட, நடுங்கும் மனதை சீர்செய்ய வழியின்றி சில்லிட்டு போனாள்.

அவனுக்கு எல்லாம் மறந்துவிட்டது என்பதால்தான் தன்னை திருமணம் செய்து கொண்டான் என அவளிடம் எப்படிச் சொல்லவாம்?

“எதற்கும் நீ கவனமா இரு. அவர்கள் அனைவரும் பிடிபட்ட மறு நிமிடம், ‘என்னை விட்டு போய்டுன்னு’ அவர் சொன்னாலும் ஆச்சரியப்படதுக்கு இல்லை. மனுஷன் பொண்ணுங்களை செல்லா காசா கூட மதிக்க மாட்டார். அவ்வளவு அலட்சியம்...” அவள் சொல்லிக்கொண்டே போக, ஏற்கனவே அதை நினைத்து கலங்கிக் கொண்டிருப்பவள், மேலும் கலங்கினாள்.

‘அப்படி சொல்லிவிடுவாரா?’ அதை அவளுக்கு நினைக்கவே பிடிக்கவில்லை. ‘அவருக்கு எதுவும் நினைவுக்கு வர வேண்டாம்’ மனதில் வேண்டுதல் பிறந்தது.

அவர்களது கூடலும், அவனது நேசமும், காதல் வழியும் கண்களும், அவன் காதல் சொன்ன கணங்களும் நினைவுக்கு வர, அதையெல்லாம் தன்னால் மிஸ் செய்ய முடியாது என்றே தோன்றியது.

ஏற்கனவே ஒரு முறை அவன்மேல் மனதோடு காதல் கொண்டு, அது நிறைவேறவே செய்யாது என மறுகி, எதிர்பாராத நிமிடத்தில், தன் காதல் கை கூடியிருக்க, இதற்குமேல் அவனை தன் வாழ்க்கையில் இருந்து பிரித்துப் பார்க்கவே நஞ்சம் நடுங்கியது.

‘அவர் இல்லாத வாழ்வா...? அவர் இல்லாமல் மரணம் மட்டுமே எனக்கு துணையாகுமே தவிர, அவரை விட்டு வேறு எதற்காகவும், பிரிய நான் தயாராக இல்லை’ மனதோடு உரைத்துக் கொண்டாள்.

“பொண்ணுங்களை அவர் மதிக்கவில்லை என நான் அவரைப் பற்றி குறை சொன்னாலும், இன்னொரு முக்கியமான விஷயம், ஒரு நொடி கூட அவர் தப்பான ஒரு பார்வை யாரையுமே பாத்தது இல்லை. நம்ம ஹாஸ்டலுக்கே எத்தனையோ முறை வந்திருக்கார், ஆனா எந்த பொண்ணுகிட்டேயாவது அனாவசியமா பேசி நான் பார்த்ததே இல்லை.

“அந்த விஷயத்தில் மனுஷன் ஜெம்… எந்த நேரத்திலும் அவர்கூட எங்கே வேண்ணா போகலாம். அதே மாதிரி, நம் ரகசியம் காப்பதில் அவரை அடிச்சுக்கவே முடியாது.

“இத்தனை நாள் ஆன பிறகும், நான் ஏன் காலேஜை விட்டுப் போனேன்னு யாருக்குமே தெரியாதே. உங்க அண்ணா ஆட்களுக்கு மட்டும்தான் என்னைத் தெரியும். அனாவசியமா நான் ரிஸ்கில் சிக்க வேண்டாம் என்பதால் மட்டுமே என்னைப் போகச் சொன்னார் என்பது என் யூகம்” அவள் முடிக்க அனைத்தையும் பொறுமையாக, பெருமையாக கேட்டிருந்தாள்.

“காயத்ரி…” தன் பேச்சு எதற்கும் அவள் பதில் சொல்லாமல் போகவே அவளை உலுக்கினாள்.

“நா..நான் பாத்துக்கறேன் வருணா. ரொம்ப தேங்க்ஸ்…, அண்ட் சாரி…” குழறும் குரலை சரி செய்யும் வித்தை தெரியாமல், தெளியாமலே உரைத்தாள்.

“தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம்…, ஆயிரம் இருந்தாலும் நீயும் ஒரு பெண்” அவள் சொல்ல, ‘இந்த எண்ணம் ஏன் காமேஷுக்கு இல்லை?’ அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

“சரிடி நான் கிளம்பறேன். எங்கே யார் கண்ணுலயாவது விழுந்துடுவேனோன்னு ரொம்ப பயமா இருக்கு. நீ பாத்து இருந்துக்கோ. நான் என்னதான் இப்படி சொன்னாலும், என்னை காப்பாற்றிய அவர்மேல் எனக்கு கழுத்து வரைக்கும் நன்றி இருக்கு, அதை மறக்கவே முடியாது.

“அதே மாதிரி..., நான் மறுபடியும் சொல்றேன், என்னதான் கோபப்பட்டாலும், ஒரு சின்ன தப்பான பார்வை கூட கிடையாது தெரியுமா? எந்த நேரம் ஆனாலும் அவரைப் பாக்க தைரியமா போகலாம். மனுஷன் அந்த கோபத்தை மட்டும் விட்டால் நல்லா இருக்கும்” அவள் சொல்ல, அவள் நெஞ்சம் பெருமிதத்தில் நிறைந்தது.

“ஒரு விஷயம் தப்புன்னு பட்டால், அதை செய்தது அவரோட அம்மாவா இருந்தால் கூட விட மாட்டார் போல. அன்னைக்கு செக்கியூரிட்டிக்கு இருந்த போலீஸ் சின்ன தப்பு பண்ணிட்டாருன்னு, ஒரு மாசம் சஸ்பென்ட் பண்ணிட்டு, ‘நீ இதுக்கு விளக்கம் கொடுத்த பிறகு டியூட்டியில் ஜாயிண்ட் பண்ணால் போதும்’ன்னு சொல்லிட்டார்.

“பாத்துட்டிருந்த எல்லோருக்கும் அள்ளு கழண்டுடுச்சு. எனக்கு அவரை நேருக்கு நேர் பாக்கவே பயம்தான். நீ இத்தனை மாசமா அவரோடவே எப்படித்தான் இருக்கறியோ? சிங்கத்துகூடவே இருக்குற மாதிரி இல்ல? மனுஷன் பேசுவாரா?

“உன்னை கொஞ்சமாவது நல்லா நடந்துறாரா? வாயைத் தொறந்தாலே கடிச்சு குதறுவாரே. பார்வையாலேயே நெருப்பை பத்த வைப்பாரே. கிட்டே போனாலே பொசுக்கிடுவாரே...” அவள் சொல்லிக்கொண்டே செல்ல, தன்னவனை நினைத்துக் கொண்டாள்.

தன்னுடனே இருக்க நினைக்கும் அவனது செய்கை, பார்வையாலேயே தன்னை தொடரும் நிலை, கண்களால் காதலை வழியவிடும் தன்மை, நொடிகளுக்குள் அவன் ஏற்படுத்தும் நெருக்கம், இதழ் தீண்டி பிரிகையில் இம்சிக்கும் அவன் பார்வை, தன்மேல் அவன் கொள்ளும் அக்கறை, அவன் சமைக்கும் சமையலிலும், தனக்கு எடுத்து வைக்கும் பாங்கு..., ‘அவரா அப்படி?’ அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

‘நான்தான் அவரை படுத்தி வைப்பேன்...’ மனதுக்குள் எண்ணிக் கொண்டாள். கூடவே, மனதுக்குள் முன்னர் லேசாக இருந்த பயம், வேர்விட்டு முளைவிட்டு எழத்

துவங்கியது. கலைவாணி சொன்னபொழுது சிறு செடியாக இருந்த அந்த பயம், அவனது கூடலால் மறந்து போயிருக்க, இப்பொழுதோ சடாரென விருட்சமாகி எழுந்து நின்று அவளைப் பிடித்து உலுக்கியது.

‘அவர் என்னை விட்டு போகக் கூடாது. அவருக்கு எதுவும் நினைவுக்கு வர வேண்டாம். அவர் என் பீமாவாக மட்டும் இருந்தால் போதும். பிரம்மா வேண்டாம்’ மனம் ஜெபிக்கத் துவங்கியது.

முன்னர் அவனது அந்த முரட்டுத்தனத்தையும், அடாவடியையும், அந்த தைரியத்தையும், நிமிர்வையும் மட்டுமே ரசித்திருந்தோம் என்பது சுத்தமாக மறந்து போனது.

அவனது சிறு பார்வை மாற்றத்தையும், நிமிர்வையுமே தாங்க முடியாத பொழுது, அவன் முழு பிரம்மாவாக உரு மாறினால் தன்னால் தாங்க முடியாது என்றே தோன்றியது.

“காயத்ரி, அப்போ நான் கிளம்பட்டுமா? பாத்துக்கோ…, எதுவா இருந்தாலும் என்னை கூப்பிடு. என்னால் முடிந்த உதவியை நான் செய்யறேன்” அவள் சொல்ல, மௌனமாக தலை அசைத்து அவளை அனுப்பி வைத்தாள்.

அவள் சென்று வெகு நேரமாகியும் அங்கிருந்து அசையும் எண்ணம் கூட இன்றி சிலையாகிப் போனாள். ஹாஸ்டல் சென்ற காயத்ரி, மதிய உணவு இடைவேளை முடிந்தும் வகுப்புக்கு வராமல் போகவே அவளைத் தேடி வந்த இந்திரா, அவள் அமர்ந்திருந்த நிலையைப் பார்த்து திகைத்துப் போனாள்.

அவள்மேல் இருந்த கோபம் அனைத்தும் வடிய, “காயத்ரி, என்னடி ஆச்சு? வருணா எங்கே? அவ அப்படி என்னதான் சொன்னா? அவ எஸ்பி சாரைப் பத்தி என்ன சொன்னாலும் நம்பாதே…, அவ…” இந்திரா பேசிக் கொண்டே செல்ல, அவளை தாவி அணைத்திருந்தாள் காயத்ரி.

“இந்து…” அழைத்தவள் கதற, இந்திராவுக்கு சுத்தமாக எதுவும் புரியவில்லை.

‘இவளுக்கு இதே வேலையா போச்சு. என்னை கிறுக்காக்கணும்னே இப்படியெல்லாம் செய்வா போல. ஆ..., ஊ..ன்னா இப்படி ஒரு அழுகையை மட்டும் நல்லா கத்து வச்சிருக்கா’ மனதுக்குள் புலம்பியவள், அழும் தோழியை இறுக அணைத்துக் கொண்டாள்.

“குரங்கே என்னன்னு சொல்லுடி..., இனிமேல் என்ன ஆச்சுன்னு நானா என் வாயால் கேக்க மாட்டேன். சொல்றதுன்னா சொல்லு, இல்ல, இப்படியே அழுது தொலை...” அவளை உலுக்கினாள்.

“இந்து..., என் அண்ணா..., அவன்..., நீ ஏதோ சொன்னப்போ கூட எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனா இப்போ...” சற்று நேரம் அழுது கரைந்தவள், வருணா மூலம், காமேஷ் பற்றி தான் அறிந்த விஷயங்களை உரைக்க, அப்படியே தொப்பென அமர்ந்து விட்டாள்.

“என்னடி சொல்ற? இங்கே நடந்த பிரச்னைக்கு எல்லாம் பின்னால் உன் அண்ணா இருந்தானா? அந்த சாந்தி ஒரு மாதிரின்னு நினைத்தேன். அவகூட ஏன் பேசுறாருன்னு நினைத்திருக்கேன். இப்படி, இவ்வளவு பெரிய விஷயத்தை செய்வாருன்னு நினைக்கவே இல்லையே...” திக்கென அதிர்ந்தவள் அப்படியே அமர்ந்து விட்டாள்.

இந்த ஹாஸ்டலில் அனைவருக்கும் உதவி செய்த காமேஷ், நெற்றியில் விபூதி அழியாமல் கண்ணியமாய் சுற்றும் காமேஷ், பெண்களைக் கண்டு வழியாமல், ஒதுங்கி நிற்கும் காமேஷ்... அந்த முகத்துக்குப் பின்னால் இவ்வளவு பெரிய கயமை இருந்ததா?’ நினைக்கவே அவளுக்கு திக்கென இருந்தது.

“என்னடி இது... கோபக்கார மனுஷங்களை விட, இப்படி நல்லபிள்ளை வேஷம் போடும் ஆம்பளைங்களை நம்பவே முடியாது போல” தன்போக்கில் உரைத்தவள், அப்பொழுதுதான் தான், காயத்ரியின் அண்ணாவைப் பற்றி பேசுகிறோம் என்பதையே உணர்ந்தாள்.

ஆயிரம் இருந்தாலும், காமேஷ் அவளுக்கு அண்ணன். அவளை நல்லமுறையில் பார்த்துக் கொண்டவன், காயத்ரிக்காகவே உயிர் வாழ்ந்தவன். அவனைப் பற்றி தவறாகப் பேசினால், ஏற்கனவே நொந்து போயிருக்கும் அவள், மேலும் வருத்தம் கொள்வாளே என நினைத்தாள்.

ஆனால், இந்து சொன்னதை அவள் பெரிதாக கவனித்ததாகவே தெரியவில்லை. “எங்க அண்ணாவால் எப்படி இதையெல்லாம் செய்ய முடிந்தது? ஒரு வேளை, வருணா இடத்தில் நான் இருந்திருந்தால்? என்னையும்...” அவள் முகத்தை மூடி அழ, அவளுக்கு என்னவென்று ஆறுதல் சொல்வதாம்?

அதனால்தான், அந்த பயத்தால்தான் அந்த நேரங்களில் காயத்ரியை அவன் வெளியூர் அனுப்பி வைத்திருக்கிறான் என்பதை இப்பொழுது இருவருமே யூகித்துக் கொண்டார்கள்.

‘அவனுக்கு வந்தால் ரத்தம், மத்தவங்களுக்கு வந்தால் தக்காளிச்சட்டினியா?’இந்து சற்று கோபமாகவே எண்ணிக் கொண்டாள். கூடவே, அவனுக்கு மரண தண்டனை என்பது, தண்டனையே இல்லை என்று தோன்றியது.

‘அவனையெல்லாம் சித்திரவதை செய்து கொன்றிருக்க வேண்டும். ஒற்றை தோட்டாவில் உயிரைப் பறிப்பது, அவனுக்கான எஸ்கேப் என்றே தோன்றியது. ஆனால் நடந்து முடிந்தவற்றை அவளால் மாற்ற முடியாது. ஆனால், இனிமேல் நடப்பவற்றை நேராக்க முடியுமே.

காயத்ரியோ, “இந்து, இது தெரியாமல், நான் அவரை...” முகத்தை மூடிக்கொண்டு அழ, இந்திராவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ஆனாலும் தோழியை தேற்றுவது தன் கடமை என்று தோன்றியது.

“அம்மா தெய்வமே..., அதெல்லாம் எப்பவோ முடிஞ்சுடுச்சு. நீ தேவையில்லாமல் குட்டையை குழப்பாமல், எஸ்பி சார் கூட வாழும் வழியைப் பார். கூடவே, இந்த கோஷ்டி உன்னை சுத்துதுன்னு அவர்கிட்டே சொல்லிடு.

“நீ மறைக்க, மறைக்க ஆபத்து உனக்குத்தான். பின்னாடி ஏதாவது சிக்கல்ல மாட்டின பிறகு வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லை சொல்லிட்டேன்” அவள் கண்டிப்பாக உரைக்க, அதைச் செய்ய முடியாத தன் நிலையை வெறுத்தவளாக, அதை தோழியிடம் சொல்ல மனமின்றி தன்னை மறைத்தவள், அங்கிருந்து கிளம்பினாள்.

தனக்காக காத்திருக்கும் ஜீப்பை தேடிச் சென்றவள், “அண்ணே, போகலாம்” உரைத்தவள் சீட்டில் சாய்ந்து விழி மூடிக்கொள்ள, அவளது முகத்தைப் பார்த்தவருக்கு எதுவோ சரியில்லை என்பது புரிந்தாலும், அமைதியாகவே காரை செலுத்தினார்.

மனமோ..., ‘இவங்க ரெண்டுபேரும் எப்போ சந்தோஷமா சேர்ந்து வாழ்வாங்க? வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கிக்கறாங்களே, ஏன் வெளிப்படையா பேசி இருக்க மாட்டேங்கறாங்க? மனசுவிட்டு பேசி வாழ முடியாதது எல்லாம் ஒரு வாழ்க்கையா?’ துயரமாக எண்ணிக் கொண்டவர், ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்.

நேற்று முன்தினம் காலையில் அவ்வளவு சந்தோஷமாக வீட்டைவிட்டு வந்தவன், நேற்று இரவு வீட்டுக்கே செல்லாததை என்னவென்று எடுத்துக் கொள்வது என அவருக்குத் தெரியவில்லை.

காயத்ரியும் பிரம்மாவைப் பற்றிதான் எண்ணிக் கொண்டிருந்தாள். கோபமாக வீட்டை விட்டுச் சென்ற அவனது முகம், கண்ணுக்குள் நிழலாட, அவனைப் பார்த்தே ஆகவேண்டும் என மனம் தவித்தது.

அலைபேசியில் அவனிடம் பேசும் தைரியமற்று, ‘பிளீஸ் கம் டு ஹோம்’ குறுஞ்செய்தியை அனுப்பியவள், பதில் ஏதாவது வருகிறதா என காத்திருந்தாள். சில நிமிடங்கள் கடந்த பிறகும் பதில் வராமல் போகவே, புதிதாக உற்பத்தியான கண்ணீரை வழியவிட்டவள், இருக்கும் இடம் கருதி தன்னை கட்டுப்படுத்தினாள்.

தன் அலைபேசியில் வந்து விழுந்த குறுஞ்செய்தியைப் பார்த்தவன், புருவம் நெரித்தான். ‘நேத்தைக்கு தனியா போய் படுத்துகிட்டவ இப்போ மட்டும் எதுக்கு மெஸ்சேஜ் அனுப்பறாளாம்?’ சிறு கோபமாக எண்ணிக் கொண்டாலும், அவளது அழைப்பை தவிர்க்க மனம் வரவில்லை.

சிறிது நேரத்துக்கு முன்புதான், தன்னையே அலசி, அவள் இடத்தில் இருந்து யோசித்தவன், அவள் பக்கம் இருக்கும் பயத்தை புரிந்து கொண்டிருந்தான். ‘ஒரு இரவுக்குள் அவளைப் போட்டு அந்த பாடு படுத்தினால் உன்னைப் பார்த்து பயப்படாமல் என்ன செய்வாள்?’ தன்னையே திட்டிக் கொண்டான்.

‘என்னால் அவளை விட்டு விலக முடியவில்லையே நான் என்ன செய்ய?’ அவன் மனசாட்சியிடம் கேட்க, ‘உன் வேகத்தை தாங்கும் சக்தியும், உடல் வலுவும் அவளுக்கு வேண்டாமா? மறுநாள் இரவிலும் நீ உன் வலுவை அவளிடம் காட்டினால் அவள் என்ன ஆவாள்? அதான் பயந்துபோய் சோபாவில் படுத்துக் கொண்டாள்’ மனசாட்சி மனைவிக்கு சாதகமாகவே பரிந்து வர, சுவிங்க டப்பாவை ஆசையாய் வருடினான்.

அருகே இருந்த பில்டர் சிசர் பாக்கெட் அவனை கவர்ந்து இழுத்தாலும், அந்த சுவிங்க டப்பாவை விட்டு அதை தேர்ந்தெடுக்க மனம் வரவில்லை. அவனுக்கு தன்னைக் குறித்தே ஆச்சரியமாக இருந்தது. ஒரு பெண்ணுக்காக தன் பழக்கத்தை மாற்றிக் கொள்வான் என யாராவது அவனிடம் சொல்லியிருந்தால், அவர்களை கொன்று புதைத்திருப்பான்.

ஆனால் இப்பொழுது, அவளுக்காக..., அவள் மனநிலையை கருத்தில் கொண்டு, அந்த சிகரெட் பாக்கெட்டை கையில் எடுக்காமல் விட்டு வைத்திருக்கிறான்.

அந்த சிந்தையில் அமர்ந்திருந்தவனைதான், தகவல் வந்து கலைத்தது. கந்தன் ஜீப்பை எடுத்துக்கொண்டு சென்றிருந்ததால், யாழினியை அழைத்தவன், “சரவணனோட புல்லட் கீயை கொஞ்சம் வாங்கிட்டு வாங்க”

சொன்னவன், அவள் கொண்டுவந்து கொடுத்த கீயை எடுத்துக் கொண்டு உடனடியாக வீட்டுக்கு கிளம்பி விட்டான்.

காயத்ரி வீட்டில் வந்து சேரும் முன்னர், தான் வீட்டில் இருக்க வேண்டும் என எண்ணியவன், வண்டியை சாலையில் பறக்கவிட்டான். வீட்டுக்கு வந்தவன், ஷூவை மட்டும் கழட்டி வெளியே விட்டவன், தொப்பியை அதன் இடத்தில் வைத்துவிட்டு, சட்டையை கழட்டி சோபாவில் வைத்தவன், உள் பனியனோடு கிச்சனுக்குச் சென்றான்.

பிரிஜ்ஜில் இருந்து பாலை எடுத்து சூடாக்கியவன், சூடாக டீ தாயாரித்து முடிப்பதற்கும், அவர்கள் வருவதற்கும் சரியாக இருந்தது.

பிரம்மாவின் ஷூவை வைத்தே அவன் வீட்டுக்கு வந்துவிட்டதை கணித்தவள், ஜீப்பில் இருந்து இறங்கி வீட்டுக்குள் ஓடினாள். அவளுக்கும் சேர்த்து டீயை கப்பில் ஊற்றியவன், கைக்கொரு கப்பாக எடுத்துக் கொண்டு வெளியே வர, ஓடிபோய் அவன் நெஞ்சில் விழும் வேகத்தில் வந்தவள் சட்டென நிதானித்தாள்.

அவன் கையில் வைத்திருக்கும் காப்பிக் கோப்பைகள் எல்லாம் அவள் கண்ணுக்குத் தெரியவில்லை. மாறாக, தனக்குப் பின்னால் கந்தன் வரவே, தன்னை கொஞ்சம் மீட்டுக் கொண்டாள்.

அவள் வந்த வேகத்தையும், அழுகையில் வீங்கியிருந்த அவள் முகத்தைப் பார்த்தவன் சற்று திடுக்கிட்டாலும், கந்தன் வாசலில் வந்து நிற்கவே, அவள் கையில் கப்பை திணித்தவன், கந்தனை நோக்கி நடந்தான்.

அவன் வரவே, “சார்..., நான் வெயிட் பண்ணவா இல்ல கிளம்பிடவா?” அவனிடம் கேட்க, “நீங்க புல்லட்டை எடுத்துட்டு கிளம்புங்க...” சாவி வண்டியிலேயே இருக்க அவர் கிளம்பிவிட்டார்.

வாசல் கதவை அடைத்தவன் உள்ளே வர, தன் கையில் இருந்த கப்பை கீழே வைத்தவள், “பீமா...” கேவலாக

அழைத்து, பாய்ந்து வந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

அவள் இப்படி எதையாவது செய்வாள் என்பதை கணித்த பிரம்மா, தன் வலக்கையில் இருந்த கப்பை தூரமாக நீட்டிப் பிடித்தவன், தன் நெஞ்சில் வந்து விழுந்தவளை, இடக்கையால் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

ஒரு மாதிரி, திகைப்பா, பரவசமா, நம்ப முடியாத விதமா, இன்னதென புரியாத ஒரு நிலையில் ஒரு நொடி உறைந்து போனான். அன்றைய இரவில், ஒரு மாதிரி மனநிலையில், மொத்தமாக அவளுக்குள் அவன் கரைந்து போனது என்னவோ உண்மை.

ஆனால், அவளது இந்த அடைக்கலம், தன்னிடம் ஆறுதல் தேடிய விதம், நம்ப முடியாமல் திகைத்துப் போனான். பிரம்மாவின் நிழலையே ஒருவராலும் தொட்டுப் பார்க்க நினைக்க கூட முடியாது. அப்படி இருக்கையில், தன் நெஞ்சோடு அவள் ஒட்டிக்கொள்ள, தன் விறைப்பு மாறி, சற்று நெகிழ்ந்து போனான்.

‘இதைவிட வேறு என்ன வேண்டும்?’ மனதுக்குள் எண்ணிக் கொண்டான். அந்த நேரம் அவள்மேல் அவனுக்கு எந்த கோபமும் இருக்கவில்லை. கையில் இருந்த கப்பை அவசரமாக இடம் பார்த்து வைத்தவன், தன் நெஞ்சில் ஒட்டிக் கொண்டவளை, இரு கைகளால் இடையோடு வளைத்து கைகளில் அள்ளிக் கொண்டான்.

அவ்வளவு நேரமாக அவன் நெஞ்சுக்குள் புதைந்திருந்தவள், கைகளை அவன் கழுத்தை சுற்றி இறுக கட்டிக் கொண்டு, கால்களையும் அவன் இடையோடு தூக்கி பின்னிக் கொண்டாள். ஒரு குழந்தையை நெஞ்சோடு அள்ளிக் கொண்டால், நம்மை கட்டிக் கொள்ளுமே, அப்படி இருந்தாள்.

அவன் கழுத்தில் ஆழமாக முகம் புதைத்தவள், தேம்பி அழ, அவளை அணைத்தவாறே அங்கே இருந்த சோபாவில் அமர்ந்தவன், “காயு...” மென்மையாக அழைத்தான்.

அவன் அழைப்பு இன்னும் தவிக்க வைக்க, “என்னை உங்களுக்கு புடிக்குமா?” அவன் கழுத்தில் இருந்தே கேட்டாள்.

அந்த கேள்விக்கான காரணம் புரியவில்லை என்றாலும், அவள் மனதை எதுவோ அழுத்துவது புரிய, “இந்த கேள்விக்கு அவசியமே இல்லை. புடிக்காமல்தான் இப்படி தூக்கி வச்சுகிட்டு உக்காந்து இருக்கேனா?” அவள் தலையை தாங்கி, தன் முகம் காண வைத்தான்.

நேற்று இரவு முதல், அவள் நெருக்கத்துக்காக ஏங்கிய அவன் மனம், அது கிடைக்காமல் பொங்கி வெடித்த அவன் கோபம், இப்பொழுது காற்று கூட புக முடியாத அந்த நெருக்கத்திலும், அவன் உணர்வுகள் வெடிக்காமல், அவன் மனம் அவள்பால் நேசத்தில் பொங்கித் ததும்புவதை வியப்பாய் உணர்ந்தான்.

இந்த மனநிலை அவனுக்கு முற்றிலும் புதியது. அவள் கண்களில் இருந்து வழியும் கண்ணீர் அவன் நெஞ்சை சுட, பெருவிரலால் அவள் கன்னம் இரண்டையும் வழித்தவன், விடாமல் வழியும் அவள் கண்ணீரை அடக்கும் வழி தெரியாமல் மறுகினான்.

“என்ன ஆச்சு…? எதுக்கு இந்த அழுகை…?” அவள் முகத்தை மீண்டுமாக தன் நெஞ்சோடு வைத்து அழுத்திக் கொண்டான்.

அதற்கு பதில் சொல்ல மறுத்தவள், “உங்களுக்கு எதுவும் ஞாபகம் வர வேண்டாம்” அவள் திடுமென உரைக்க, ஒரு நொடி அவள் தலையை வருடுவதை நிறுத்தியவன், “ஏன்…?” தன் குரல் மாறுபாட்டை வெளியே வர விடாமல் தடுத்தவன், சாதாரணமாகவே கேட்டான்.

“சொல்ல மாட்டேன்…” உரைத்தவள், அவன் கழுத்தை மீண்டுமாக கட்டிக் கொள்ள, அவள் மனம் சட்டென அவனுக்கு புரிந்து போனது.

‘இன்னைக்கு இவளை யார் குழப்பியது? இவளுக்கு காவலா போன ரமேஷ் எதுவும் சொல்லலையே. அந்த

சாந்தி இன்னும் இங்கேதான் இருக்காளா? அவ உண்மையெல்லாம் எதையும் சொல்ல மாட்டாளே. அவ ஏன் இவ பின்னாடி சுத்துறான்னு கண்டு புடிக்க முடியலையே…’ தனக்குள் எண்ணிக் கொண்டான்.

தனக்கு நினைவு வந்த உடனேயே, சாந்தியை எங்கு வைத்து கண்டாலும் கைது செய்யச் சொல்லி உத்தரவு போட்டு விட்டான். அவளை எங்கே தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை என காவலர்கள் சொல்லியிருந்தார்கள்.

அவள் ஏன் காயத்ரியை சுற்றுகிறாள் என அவனுக்கு அறிந்தே ஆக வேண்டும். ‘இவ தேவையில்லாமல் எதிலும் சென்று சிக்கிவிடக் கூடாது’ காயத்ரியின் பாதுகாப்பு மட்டுமே முக்கியமாக இருந்தது.

“யாராவது புதுசா உன்னை வந்து பார்த்தாங்களா?” வருணாவின் நினைவு சட்டென எழ, தன் புலன்கள் அனைத்தும் கூர்மையாவதை அடக்கியவாறு அமர்ந்திருக்க, காயத்ரியின் தேகம் நடுங்கி, அவள், அவன் கழுத்தை இன்னும் அதிகமாக இறுக்க, அவனது சந்தேகம் உறுதியானது.

‘வருணா… அவ எப்படி இங்கே வர முடியும்? அவ பெங்களூர் போயிட்டாளே…, இங்கே எப்படி? ரொம்ப பயந்தவளாயிற்றே…’ மனம் வேகமாய் கணக்குப் போட்டது.

காயத்ரியின், ‘உங்களுக்கு எதுவும் ஞாபகம் வர வேண்டாம்’ என்னும் கோரிக்கை, ‘சொல்ல மாட்டேன்’ என்னும் மறுப்பு அனைத்தும் காமேஷோடு தொடர்புடையவையாக மட்டுமே இருக்க முடியும் என்பது புரிய, அவன் தேகம் விறைத்தது.

காயத்ரி, காமேஷின் தங்கையாக மட்டுமே இருந்திருந்தால் எப்படி நடந்திருப்பானோ, ஆனால், அவனது மனைவி என்று ஆன பிறகு, அவள் உயிரோடு கலந்த பிறகு, அவளை அவ்வளவு சுலபமாக அவனால் விட்டுக் கொடுக்க முடியுமா என்ன?

காயத்ரிக்கோ, மனதுக்குள் பெரும் பயம் பிடித்து ஆட்டியது. காமேஷின் தங்கை தான் என்பது அவன் நினைவுக்கு

வந்தால், தன்மேல் அவன் வைத்திருக்கும் பாசம் மறைந்துவிடுமோ என அஞ்சினாள். தன்னை சரியான விதத்தில் பார்க்க மாட்டானோ என்னும் குழப்பம், தன்னையும் காமேஷ் மாதிரி, கீழாக நினைத்து விடுவானோ என்ற பயம், அவளை வாய் திறக்க அனுமதிக்கவில்லை.

அதையெல்லாம் விட, என் நினைவுகள் இல்லாத நேரத்தில், என்னை மயக்கி திருமணம் செய்து கொண்டாயா?' என அவன் கேட்டால்? அப்படி ஒரு நிலையை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

தான் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை என்றாலும், அவள் உடல் நடுக்கம் அவனுக்கு தேவையான பதிலை அளிக்க, அவள் முதுகை ஆதரவாக வருடினான்.

அவளோ..., “நீங்க..., நான்..., என்னை புடிச்சு தானே கல்யாணம் பண்ணிகிட்டீங்க? நான் எதுவும்...” கேள்வியை முடிக்க கூட முடியாமல் விக்கி, விக்கி அழ, அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

‘நீ இப்படிக் கேட்டால்..., நாம் அன்று வாழ்ந்த வாழ்வுக்கு அர்த்தம் என்ன? இத்தனை மாதங்கள் நம்மை கட்டி வைத்திருப்பது, நாம் ஒருவர் மேலே ஒருவர் கொண்ட நேசம் தானே. நான் எவ்வளவு கோபக்காரனாக இருந்தாலும், என்மேல் காதல் கொண்டு என்னோடு வாழும் உன்னை எப்படி குற்றம் சொல்வேன் என நீ எதிர்பார்க்கலாம்?

‘ஏன்..., உன் காதலை என்னிடம் சொன்னால் என்ன? பெண்ணுக்கு காதல் வரக் கூடாதா? அப்படி வந்தால் அதை அவள் சொல்லக் கூடாதா? உன் பிரம்மாவை உனக்கு உணர்த்தாமல் விட மாட்டேன். பீமாவை மட்டுமல்ல, இந்த பிரம்மாவையும் நீ விரும்புவாய்..., நான் அதைச் செய்வேன்' மனதுக்குள் உறுதி பூண்டான்.

கூடவே, அவள் முகத்தை நிமிர்த்தி தன் முகம் காண வைத்தவன், “இங்கே பார், இந்த உலகத்தில் யார் என்ன சொன்னாலும், நீயும், நானும் கணவன் மனைவி என்பதை

மாற்ற முடியாது. உனக்கும் எனக்கும் நடுவில் எந்த விஷயமும் வர முடியாது புரியுதா.

“அதே மாதிரி..., அதென்ன எனக்கு எதுவும் ஞாபகம் வரக் கூடாதுன்னு சொல்ற? ஒரு வேளை, எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வந்து, இப்போ இருக்கும் நினைவுகள் எல்லாம் பொய்ட்டா..., நீ என்ன செய்வ? என்னை விட்டு போய்டுவியா?” அவன் கேட்க, மறுப்பாக தலை அசைத்தவள்,

“என்னை வெறுத்துடுவீங்களா?” குழந்தைபோல் கேட்க, அவள் கன்னத்தில் அழுத்தமாக இதழ் ஒற்றினான்.

“உன்னை வெறுக்குற அளவுக்கு நீ என்ன செய்தியாம்?” அவன் கேட்க, அவள் கண்ணுக்குள் உலாவும் கலவரம் அவன் அடிமனதை அசைத்தது.

‘இந்த விளையாட்டை முடிக்க வேண்டும்...’ தீர்மானித்தான். ஆனாலும், அதை உடனே செய்துவிட அவனால் முடியவில்லை. அவள் மனதில் சட்டென ஒரு குற்றவுணர்வு படிவதையோ, தன்மேல் ஒரு விரிசல் விழுவதையோ அவன் சுத்தமாக விரும்பவில்லை.

‘உண்மை தெரிந்தால், எங்கே தான் அவளை காயப்படுத்தி விடுவோமோ என அவள் அஞ்சக் கூடாது. என்னை விட்டு ஒதுங்கிச் சென்றுவிடும் நிலையையும் நான் உருவாக்கிவிடக் கூடாது. என்னை விட்டு அவள் பிரிந்து செல்லவே முடியாத ஒரு நிலையை நான் உருவாக்க வேண்டும்.

‘அவள் என்மேல் வைத்திருக்கும் காதலை அவள் வெளியிட வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் நான் என்ன பிரம்மா...?’ அவளிடம் சற்று விளையாடிப் பார்க்கவும் ஆசைப் பட்டான்.

பிரம்மாவின் விளையாட்டு விபரீதம் ஆகுமா?

*****

# பகுதி – 42.

பிரம்மாவுக்கு காயத்ரியை சந்தித்தவர்கள் யார் என தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது. எனவே, இந்திராவை சந்திக்க அவளது கல்லூரிக்கே வந்தான். அப்படி வரும் வேளையிலேயே, சில நாட்களாக அவர்களை குழப்பிக் கொண்டிருந்த கேசை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிட்டே வந்திருந்தான்.

அது என்னவென்றால், பிரம்மா இருக்கும் ஏரியாவில், அடிக்கடி ஆட்டோ விபத்து நடப்பது அவன் பார்வைக்கு வர, அதை எப்படி எடுக்கவென்றே அவனுக்குப் புரியவில்லை. இதுவே பைக் விபத்து என்றால், அவர்கள் ரேஸ் வைத்திருப்பார்கள் என எண்ணியிருப்பான்.

ஆனால், ஆட்டோ விபத்து… அதை எந்த கணக்கில் சேர்க்க, சில நாட்களாக சிந்தித்தான். அவன் கல்லூரிக்கு வந்து கொண்டிருந்த நேரத்தில், விருட்டென அவனைத் தாண்டி இரு ஆட்டோக்கள் விரைய, அவ்வளவு குழப்பத்திலும் அவன் கவனம் அந்த ஆட்டோவின் மீது பதிந்தது.

‘ஆட்டோவுக்குள் ஆட்களும் இல்லை, பிறகு ஏன் இவ்வளவு வேகம்?’ எதுவோ சரியில்லை என அவன் மனதுக்குத் தோன்றியது.

“கந்தன், சைரனை போட்டு, அந்த ஆட்டோவை ஃபாலோ பண்ணுங்க” அவன் கண்கள் கூர்மையாக அங்கே செல்லும் ஆட்டோமேல் பதிய, மறு வார்த்தை இன்றி அவன் சொன்னதைச் செய்தார்.

அவன் ஒரு விஷயத்தை செய்யச் சொன்னால் அதில் நிச்சயம் ஏதாவது விஷயம் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். எனவேதான் அவ்வாறு செய்தார். சைரன் ஒலிக்கத் துவங்கிய மறு நிமிடம், ஆட்டோக்கள் இன்னும் வேகம் பிடிக்கத் துவங்க, கந்தனும் விடாமல் துரத்தினார்.

அந்த ஆட்டோவின் வேகத்தில், முன்னால் சென்ற சில பைக் சாலையில் இருந்து பதறி, தங்கள் நிலை தடுமாறி, பின்னர்

வாகனத்தை சரியாக செலுத்த, பிரம்மாவின் பொறுமை கரையத் துவங்கியது.

“கந்தன், லெப்ட்ல திருப்பி உள் ரூட்டை பிடித்து, அந்த ஆட்டோவை முன்னால் போய் மடக்குங்க...” அவன் வழி சொல்ல, கந்தன் அவ்வாறே செய்தார்.

ஒரு கட்டத்தில், அந்த சேஸிங் முடிவுக்கு வர, ஒரு ஆட்டோவை வசமாக மடக்கினார்கள். இருக்கையில் இருந்து இறங்கிய மறு நிமிடம், அந்த ஆட்டோக்காரனின் சட்டையை கொத்தாக பற்றியவன், அவன் மூளையே கலங்கிவிடும் அளவுக்கு ஒரு அறை விட, அவன் பொறி கலங்கிப் போனான்.

அறை வாங்கியதை விட, பிரம்மாவின் கையில் சிக்கியதுதான் அந்த ஆட்டோக்காரனுக்கு, பெரும் அதிர்வை கொடுத்தது. பிரம்மா விட்ட அறையில், மயக்கம் போட்டு விழும் நிலைக்கே சென்றவன், “சார், நான் வேண்டாம்னுதான் சொன்னேன். அவன்தான் கேக்காமல் என்னை ரேசுக்கு கூப்டான்.

“அவனை விட அடுத்த ஆட்டோக்காரன் முந்தப் போறான்னு தெரிந்தாலே ஆக்சிடென்ட் பண்ணி விட்டுடுவான். ரேஸ்க்கு வரலைன்னு சொன்னால், எங்க ஆட்டோவை டேமேஜ் பண்ணி விட்டுடுவான். அதுக்கு பயந்தே எல்லாரும் ரேசுக்கு போய்டுவாங்க.

“அவனைப் புடிச்சு உள்ளே போடுங்க சார் உங்களுக்கு புண்ணியமா போகும்” கையெடுத்து கும்பிட்டான்.

பிரம்மாவுக்கோ கோபம் கொஞ்சம் கூட குறையவில்லை. “அவன் அப்படி செய்தால், போலீசில் கம்பிளெயின்ட் பண்ண வேண்டியது தானே, அதை விட்டு, ரேசுக்கு போய், பப்ளிக்கை எல்லாம் தொல்லை பண்ணுவியா?” அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினான்.

“சார், அவன்கிட்டே எல்லாரும் வட்டிக்கு பணம் வாங்கி இருக்கோம், அவனை மீறி எங்களால் எதுவும் செய்ய

முடியலை...” பிரம்மா தன்னை விட்டுவிட வேண்டும் என்பது மட்டுமே அவனது எண்ணமாக இருந்தது.

“கந்தன், இந்த எருமையை தூக்கி உள்ள உக்காத்தி வைங்க, இந்த ஏரியா இன்ஸ்பெக்டரை வரச் சொல்லி, அந்த நாயோட அட்ரஸை வாங்கி, சாயங்காலத்துக்குள்ளே தூக்கி உள்ளே வைக்கச் சொல்லுங்க. இனிமேல் எந்த ஆட்டோவாவது நாப்பதுக்கு மேலே போனால், கேள்வியே கேக்காமல் சீஸ் பண்ணச் சொல்லுங்க...” கட்டளைகள் அடுக்கடுக்காக பிறந்தது.

பழைய பிரம்மா மீண்டு வந்திருப்பதை வியப்பாய் பார்த்துக் கொண்டிருந்தார் கந்தன். “கந்தன், நீங்க இவனை கூட்டி போங்க, நான் காலேஜ் போயிட்டு வர்றேன்...” அவரை அனுப்பி விட்டு ஜீப்பை எடுத்துக் கொண்டு சென்றான்.

ஜீப்பில் ஏறியவுடன் காயத்ரி பற்றிய நினைவு வந்து ஒட்டிக் கொண்டது. காயத்ரியின் பயம், தவிப்பை பார்த்த பிறகு, பிரம்மாவால் சும்மா இருக்க முடியுமா என்ன? முதல் வேலையாக கல்லூரிக்குச் சென்றவன், இந்திராவை சந்தித்தான்.

கல்லூரி வேளையில், காயத்ரி கல்லூரிக்கு வராமல், பிரம்மா தன்னைக் காணவேண்டும் என்று சொன்னதுமே இந்திராவுக்கு சந்தேகம்தான். ‘நிச்சயம் எதுவோ நடந்திருக்கிறது’ அவளது உள்ளுணர்வு எச்சரிக்க, அவனைத் தேடி வந்தாள்.

கண்ணுக்கு கூலிங்கிளாஸ் அணிந்திருந்தவன், ஒரு காலை கீழே ஊன்றி, மறு காலை ஜீப்பில் வைத்தவாறு, இடக்கையால் மீசையை முறுக்கியவாறு நிற்க, அவன் ஏதோ பலமான யோசனையில் இருப்பதை அவளுக்கு உணர்த்தியது.

தான் வந்தது கூட தெரியாமல் அவன் நிற்க, “சார்...” சற்று உரக்க குரல் கொடுத்து அவனைக் கலைத்தாள்.

கண்ணில் இருந்த குளிர்கண்ணாடியை அகற்றியவன், இதழுக்கு எட்டாத ஒரு புன்னகையை அவளுக்கு

வழங்கிவிட்டு, அழுத்தமாக, அவளை ஆராயும் பார்வை பார்த்தான்.

அவன் பார்வையில் இருந்த வித்தியாசம் மனதை தாக்க, ‘இதென்ன இப்படி பாக்கறார்...? என்னவோ குற்றவாளியை பார்க்கும் பார்வை பார்க்கறாரே’ அவள் மனதுக்குள் அதுதான் ஓடியது.

அவள் முகத்தில் சிறு பயம் உதயமாவதைப் பார்த்தவன், அதை விட்டு, “நேத்து காயுவை யாராவது புது ஆள் பாக்க வந்தாங்களா?” கிளாசை மடக்கி ஜீப்பின்மேல் வைத்தவன் அவளை ஏறிட்டான்.

‘இந்த பிசாசு வீட்டில் போய் என்ன சொல்லித் தொலைச்சான்னு தெரியலையே, இவர் வேற என்னமோ நான்தான் அவர் பொண்டாட்டியை அழ வச்சா மாதிரி இங்கே வந்து முறைக்கறார். கல்யாணத்துக்கு முன்னாடி, அவளை கரெக்ட் பண்ணி விடுங்குற மாதிரி முகத்தை வச்சிருப்பார். இப்போ பார்வையைப் பார்...’ மனதுக்குள் அவனை கரித்துக்கொட்டினாள்.

‘பதில் சொல்லலன்னா ஜெயில்ல புடிச்சு போட்டுடுவியோ போயா...’ மனதுக்குள்ளேயே அவனுக்கு பழிப்பு காட்டியவள், அவன் தன்னை குற்றவாளியாகப் பார்ப்பது பிடிக்காமல் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

‘டேய் பிரம்மா..., உன் முறுக்கெல்லாம் மத்தவங்க கிட்டேதான் வேலைக்கு ஆகும்போல, உன் பொண்டாட்டிகூட சேர்ந்த எல்லாம் ஒரு பைசாவுக்கு கூட உன்னை மதிக்க மாட்டேங்குதுக. இந்த இந்துவுக்கு இருக்க கொழுப்பை பாரேன்...’ மனதுக்குள்ளேயே அலுத்துக் கொண்டவன், தன் முறுக்கை சற்று கை விட்டான்.

“உங்க மேரேஜ் லைப் எப்படி போகுது? அவர் யூஎஸ் கிளம்பிட்டாரா? அவர் வந்த உடனே மறக்காமல் எங்க வீட்டுக்கு வாங்க. உங்க மேரேஜுக்கு வர முடியலைன்னு காயு ரொம்ப பீல் பண்ணா” எத்தனை அரசியல்வாதிகளிடம்

அவர்களுக்குத் தக்கன பேசி இருப்பான்? அது இங்கேயும் கை கொடுத்தது.

“என்னது..., மேரேஜுக்கு வர முடியலைன்னு பீல் பண்ணாளா? பொய் சொல்ல ஒரு அளவில்லை? அவ ஒரு போன் கூட பண்ணலையேன்னு அவ மேலே செம கடுப்புல இருக்கேன். நீங்க அவளுக்கு சப்போட்டா?” படபடவென பொரிந்தவள், அவன் தன் கைகளை கட்டிக்கொண்டு அசையாமல் பார்க்கவே, சட்டென பேச்சை நிறுத்தினாள்.

தான் என்ன செய்துவிட்டோம் என்பது அப்பொழுதுதான் புரிய, “ஹி..., ஹி..., மேரேஜ் லைப் ரொம்ப நல்லா போகுது சார். அவர் கிளம்பி ரெண்டு வாரம் ஆகுது. அவர் வர எப்படியும் ரெண்டு மூணு மாசம் ஆகும். வந்த உடனே நாங்க வர்றோம்” ஒரு மாதிரி சமாளித்தாள்.

அதன் பிறகும் அவன் பேசாமலே இருக்க, அப்பொழுதுதான் அவன் முதலில் கேட்ட கேள்வி நினைவுக்கு வர, “சார், நேத்து வருணா காயத்ரியைப் பாக்க வந்திருந்தா. என்ன பேசினாங்கன்னு எனக்குத் தெரியாது” அந்த இடத்தில் அவன் இன்னும் கூர்மையாக அவளை வெறிக்க, சட்டென பார்வையை கீழே பதித்தாள்.

“சாந்தியை இப்போ சமீபத்தில் எங்கேயாவது நீங்க பாத்தீங்களா?” அவன் கேட்க, இதற்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் தடுமாறினாள்.

அவளது தடுமாற்றமே, அவளுக்கு விஷயங்கள் அனைத்தும் தெரியும் என்பதை உறுதிபடுத்த, தன் போலீஸ் கெத்து இங்கே வேலைக்கே ஆகாது என்பதை புரிந்து கொண்டான்.

“இந்து, காயத்ரிக்கு நீ ப்ரண்டை விட ஒரு படி மேலேன்னு எனக்குத் தெரியும். நான் ஒரு போலீஸ் என்பதை மறந்துட்டு, காயத்ரியோட கணவன் என்று மட்டும் என்னைப் பாருங்க...” அவன் சற்று இறங்கிப் பேச, அவனை நேருக்கு நேர் பார்த்தாள்.

“கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்க அப்படியா பேசினீங்க?” அவள் வெடுக்கென கேட்க, தன் வாழ்நாளிலேயே இரண்டாம் முறையாக திகைத்தான். முதல்முறை, காயத்ரி தன்மேல் உரிமையாக ஒட்டிக்கொண்ட பொழுது திகைத்தான், இது இரண்டாம் முறை.

கௌஷிகா அவனிடம் பேசும்பொழுது கூட அதிக கவனத்தோடு பேசுவதுபோல் இருக்கும். அவனை மறுத்து ஒரு வார்த்தை கூட சொல்ல மாட்டாள். அவன் இதை செய் என்றால், ஏன் என்று கூட கேட்க மாட்டாள்.

தன் முகத்துக்கு நேராக கேள்வி கேட்ட அவளைக் காண, சட்டென அவனுக்கு நிவேதாவின் நினைவுதான் வந்தது. ‘வீட்டுக்கு வாண்ணே…’ உரிமையாய் அச்சமின்றி அழைக்கும் அவளது அழைப்பும், ‘கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்க அப்படியா பேசுனீங்க?’ என்ற இவளது கேள்வியும், ஒரு அண்ணன் என்ற உரிமையில் தொடுக்கப் பட்டது என்பது புரிய, நிச்சயம் நெகிழ்ந்தான்.

“சாரி போதுமா…?” சட்டென அவன் இறங்கிவிட, பதறிப் போனாள்.

“ஐயோ அண்ணே…, சாரி, சார்…, நீங்க எதுக்கு என்கிட்டே சாரி எல்லாம் சொல்லிட்டு, அந்த லூசு தான் எல்லாத்தையும் குழப்பி வைக்குது. எல்லா உண்மையையும் உங்ககிட்டே சொல்லச் சொல்லி, நான் அப்போவே சொன்னேன்.

“அவ மனசுக்குள் என்ன நினைக்கறான்னே எனக்குத் தெரியலை. அவ பொதுவாகவே எல்லாத்தையும் மனசுக்குள் வச்சே பழகிட்டா. சில விஷயங்களை சொன்னாலும், பெர்சனல் விஷயங்களை…, சற்று தயங்கியவள், அதைத் தாண்டி என்னால் எதுவும் செய்ய முடியலை. அந்த சாந்தி ரெண்டு மூணு முறை அவளைத் தேடி வந்துட்டா.

“அதுக்கு முன்னாடி, அவளோட அண்ணாவோட ப்ரண்டுன்னு சொல்லிட்டு ஒருத்தன் வந்து, உங்க அண்ணாவோட அக்கவுண்டில் இருக்கும் பணம் எங்களுக்கு சொந்தமானது அதை எடுத்துக் கொடுன்னு கேட்டு ஒரே தொல்லை.

“நீங்க அவ வாழ்க்கையில் வந்த பிறகு, அடிக்கடி இல்லன்னாலும், இப்போ சாந்தி அதையேதான் கேக்கறான்னு சொன்னா. அவளுக்கு, அவங்க அண்ணா பத்தி உங்ககிட்டே எப்படி பேச என்ற தயக்கம் இருக்குன்னு நினைக்கறேன்.

“அதனால்தான் இதையெல்லாம் உங்ககிட்டே சொல்லாமல் மறைக்கறா. ஒரு சில மாசத்துக்கு முன்னாடி கூட, அவங்க அண்ணா வீட்டுக்கு போயிருந்தப்போ, நாலஞ்சுபேர் சுத்தி வளச்சுட்டாங்கன்னு சொன்னா. அப்போ, உங்க போலீஸ்காரர் தான் வந்து அவளை காப்பாத்தினதாகவும் சொன்னா.

“இன்னும் ஒரு வாரத்தில் எங்களுக்கு வைவா, பிராக்டிகல் ஆரம்பிக்குது. அந்த நேரத்தில் எந்த குழப்பமும் வந்துடக் கூடாதே என்பதுதான் என் கவலையே. எக்ஸாம் ஆரம்பிச்சுட்டா, அது இருக்குற அன்னைக்கு மட்டும் தானே, அதை பிறகு பாத்துக்கலாம்.

“எனக்கென்னவோ, அவங்க இதை அப்படியே விட மாட்டாங்கன்னு தோணுது. இந்த லூசு வேற நானே எல்லாம் பாத்துக்கறேன்னு கெத்து காட்டுது. இப்போ உங்ககிட்டே சொன்ன பிறகுதான் நிம்மதியா இருக்கு” அவள் சொன்னவற்றை குறுக்கே எதையும் பேசாமல் கேட்டுக் கொண்டான்.

வெளியே அமைதியாக இருந்தாலும், உள்ளுக்குள் பெரும் கோபம் கிளர்ந்தது. பிரம்மா விசாரித்த வரை, காமேஷ் தன் உதவிக்கு வைத்துக் கொள்ளும் ஆட்களை அவ்வப்பொழுது மாற்றிக் கொண்டே இருப்பான். யாரையும் நிரந்தரமாக வைத்துக் கொள்வது கிடையாது.

அழைத்த வேலை முடிந்துவிட்டால், உடனடியாக அவர்களை செட்டில் செய்து அனுப்பி விடுவான். அப்படி இருக்கையில் அவனது பணத்துக்காக காயத்ரியை ஒருவன் தேடி வந்தான் எனச் சொன்னால், அதை அவனால் நம்ப முடியவில்லை.

‘இதில் நடுவில் விளையாடுவது சாந்தியா? அவளைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது’ அவன் உறுதியாக நம்பினான்.

“என்னை அண்ணான்னே கூப்பிடும்மா…” அனுமதி வழங்கியவன், ஒரு நொடி யோசித்தவன், “இனிமேல் சாந்தியைப் பார்த்தால் எனக்கு உடனே தகவல் கொடும்மா…” தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்துவிட்டு, “எந்த உதவின்னாலும் எப்போ வேண்ணா என்கிட்டே தயங்காமல் கேள்…” தன் கூலிங்கிளாஸ்சை எடுத்து அணிந்தவன் கிளம்பி விட்டான்.

அவனது எண் ஏற்கனவே அவளிடம் இருந்தாலும், அவன் கார்டை கொடுக்கையில் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். அந்த கார்டுக்கு இருக்கும் மதிப்பும், செல்வாக்கும் என்னவென்று அவளுக்குத் தெரியுமே. அவ்வளவு சீக்கிரம் தன் கார்டை யாருக்கும் கொடுக்க மாட்டான் என்று காயத்ரி சொல்லி கேள்விப்பட்டிருக்கிறாள்.

‘இனிமேலாவது எல்லாம் நல்லபடியா நடக்கணும் ஆண்டவா’ மனதுக்குள் எண்ணியவள் தன் வகுப்புக்குச் சென்றாள்.

பிரம்மாவின் மனமோ உலைக்களமாய் தகித்தது. ‘எங்கே வந்து, யாரிடம் விளையாடிப் பார்க்க ஆசைப்படுகிறாய்? உன்னை விட மாட்டேன்…’ சாந்திக்கான திட்டம் மனதுக்குள் தயாராகத் துவங்கியது.

அதே நேரம், காயத்ரியை மடக்க திட்டம் போட்டுக் கொண்டிருந்தாள் சாந்தி. அவளுக்கு இன்னும் காமேஷின் பணம் கைக்கு கிடைக்காததில் அவ்வளவு வருத்தம்.

காமேஷ் இருந்த வரைக்கும் அவள் கையில் தாராளமாக பணம் புழங்கியது.

அவன் சென்ற பிறகு சுத்தமாக கையில் பணம் புழங்கவில்லை. பணத்துக்கு வேண்டி, முன்னர் இரவுகளை எத்தனையோ பணக்கார இளைஞர்களோடு பகிர்ந்தவள்தான். இப்பொழுதும் அதைச் செய்ய அவள் தயார்தான், ஆனால், சில லட்சங்கள் சும்மா கிடைக்கையில் அதை விட்டுவிட அவள் தயாராக இருக்கவில்லை.

சாந்தியின் நடவடிக்கைகளை, அவள் எங்கே இருக்கிறாள் என பிரம்மா ஆராய, அவனது நடவடிக்கைகளை கண்காணிக்கத் துவங்கினாள் சாந்தி. அவளுக்கு காயத்ரியை தனியாக சந்தித்து, அவள் அக்கவுண்டில் இருக்கும் பணத்துக்கு முழுதாக ஒரு செக் போட்டு வாங்க வேண்டி இருந்தது.

அதற்கு முன்பாக, பிரம்மாவை சிக்க வைக்க ஏதாவது தகவல் கிடைக்குமா எனவும் நோட்டம் விடத் துவங்கினாள். பிரம்மாவின் கண்ணில் தான் ஒருமுறை சிக்கிய பிறகும், அவன் சும்மா இருக்கிறான் என்றால், நிச்சயம் ஏதோ திட்டம் தீட்டுகிறான் என நம்பினாள்.

காமேஷ் அவனைப் பற்றி கதை கதையாக சொல்லியிருக்கிறானே. அவன் செய்யும் செயல்களைக் கூட, பிரம்மாவின் கவனத்துக்கு சென்றுவிடாத அளவுக்கு, பெரும் புள்ளிகளையே குறி வைத்து செயல்பட்டவன் அவன். அதற்கு காரணமும் இருந்தது, ஏதாவது சிக்கல் வந்தாலும், தங்கள் பெயரை காப்பாற்றிக் கொள்ள வேண்டியாவது அவர்கள் பணத்தை தண்ணீராக செலவழிப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

காயத்ரியைக் மடக்க சரியான தருணம் பார்த்துக் கொண்டு அவள் காத்திருக்க, சமீப காலமாக தன் வீட்டுக்கு அருகிலும், தன் பின்னாலும் யாரோ பின்தொடர்வதைக் கண்ட பிரம்மா அதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளவே இல்லை.

‘நீ வெளியே வா..., கவனித்துக் கொள்கிறேன்’ அசால்ட்டாகவே இருந்தான்.

அதே நேரம்..., காயத்ரிக்கு கொடுக்கும் சண்டை பயிற்சியை தீவிரப்படுத்தினான். ஏதாவது ஒரு நிலையில், தனியாக அவர்களிடம் அவள் சிக்கிக் கொண்டால், தன்னை தற்காத்துக் கொள்ள அவளுக்கு தெரிந்திருக்க வேண்டும் என எண்ணினான்.

அதே காரணத்துக்காகவே, காயத்ரியும் தன் பயிற்சியை சின்சியராக செய்தாள். ஆனாலும், ஒரு முறை கூட பிரம்மாவை தோற்கடிக்க அவளால் முடிந்ததில்லை. அது அவளுக்கு பெரும் குறையாகவே இருந்தது. ஆனால், அவன் கொடுக்கும் டஃப் போட்டியை அவளால் சம்மாளிக்க முடிந்தது அவ்வளவே.

அன்றும் பயிற்சியில் கடுமையாக ஈடுபட்டிருக்க, ஒருமுறையாவது அவனை தோற்கடிக்க வேண்டும் என்ற வேகத்தில், கடுமையாக அவள் தாக்கத் துவங்கவே, அவள் வேகத்தையும், அதில் இருந்த ஆக்ரோஷத்தையும் கண்ட பிரம்மா, முதல் முறையாக தன் தாக்குதலை சற்று தளர்த்தினான்.

அவன் தன் தாக்குதலை நிறுத்தியதை உணராத காயத்ரி, தன் கையை கத்தியாக வெட்டியும், இடக்கையை முஷ்டியாக்கி, அவன் முகவாயைத் தாக்க, அவன் கொஞ்சமும் நகராத காரணத்தால், அவள் கத்தியாக இறக்கிய கரம் மூக்கை பதம் பார்த்து ரத்தம் குபுக்கென வெளியேறியது.

கூடவே, முஷ்டியாக இறக்கிய கரம் கீழ் தாடையை தாக்க, உதடு பற்களுக்குள் சிக்கி, அவன் நாவு உப்பாக அவன் ரத்தத்தின் சுவையை உணர்ந்த பிறகும், அடுத்து அடுத்ததாக அவள் கொடுத்த அடிகளை அவன் தடுக்கவே இல்லை.

சில நொடிகளுக்குள் பல அடிகளை இறக்கிய பிறகே, அவன் மூக்கில் இருந்து வழியும் ரத்தத்தைப் பார்த்தவள்,

பட்டென தான் அடிப்பதை நிறுத்தினாள்.

பதறியவள், “பீமா..., ஐயோ ரத்தம்...” தன் இடையில் கட்டியிருந்த துப்பட்டாவை உருவியவள், அவன் மூக்கில் வைத்து அழுத்த, வேகமாக அவளை விலக்கியவன், “யூ வின்...” உரைத்தவன், வேகமாக பாத்ரூமுக்குள் சென்று புகுந்தான்.

படிகளில் தடதடவென இறங்கியவள், பிரிட்ஜை திறந்து, ஐஸ்கியூபை எடுத்துக் கொண்டு, தங்கள் அறைக்கு விரைந்தாள். பிரம்மாவோ, சிங்கில் தண்ணீரைப் பிடித்து முகத்தைக் கழுவியவன், வாயில் ஊறிய ரத்தத்தை கொப்பளித்தான்.

‘அம்மா..., என்ன அடி..., அப்படி என்ன கோபம்?’ மனதுக்குள் அவளோடு கேட்டுக் கொண்டான்.

“என்னங்க..., வெளியே வாங்க...” கதவை படபடவென தட்டினாள். அவன் உள் தாழ்ப்பாள் போடாததால் கதவு திறந்துகொள்ள, வேகமாக உள்ளே நுழைந்தவள், அவன் தோள் தொட்டு நிமிர்த்தி, தன் துப்பட்டாவில் சுற்றி வைத்திருந்த ஐஸ் கட்டியை அவன் மூக்கின்மேல் வைத்தாள்.

“ஏன் இப்படி பண்ணீங்க...?” வியர்வையில் தொப்பலாக நனைந்திருந்த அவன் டிஷர்ட் காலரைப் பிடித்து தனக்கு அருகே இழுத்தவள், தன் வேலையைத் தொடர்ந்தாள்.

“நான் என்னடி பண்ணேன்? நீதானே என்னை அடிச்சு ரத்தம் வர வச்ச?” ஒன்றும் தெரியாதவன்போல் அவன் கேட்க, காயத்ரியின் கண்கள் சட்டென கலங்கியது.

அவளுக்கு பயிற்சி கொடுக்கும் நேரத்தில், எந்த காரணத்தாலும் அவள்மேல் ஒரு அடி கூட விழுந்துவிடக் கூடாது என்பதில் அவ்வளவு கவனமாக இருப்பான். அவனைபோய், இப்படி அடித்துவிட்டோமே என அவளே கலங்கிப் போயிருக்க, அவன் இப்படிப் பேசினால் அவளும் என்னதான் செய்வாள்.

“நான் வேணும்னு பண்ணலை...” அழும் குரலில் அவனுக்கு விளக்கம் சொல்ல, இதழ்களுக்குள் சிரித்துக் கொண்டான்.

“வேண்டாம்னுதான் பண்ண..., எனக்குத் தெரியுது..., என்னை வின் பண்ண, இப்படி காட்டு அடி அடிச்சுட்டல்ல...” கண்களால் அவளை கொள்ளையிட்டவன், மெதுவாய் அவள் இடையில் கை கோர்த்து தன்னோடு இறுக்கிக் கொள்ள, அவள் எங்கே அதையெல்லாம் கவனித்தாள்?

“அப்படியெல்லாம் இல்லை..., தெரியாமல்..., நீங்க ஏன் என் அடியை தடுக்கலை? அதனால்தான் இப்படி ஆச்சு...” ரத்தம் வழிவது இன்னும் நிற்காமல் போகவே, அவள் பரிதவித்துப் போனாள். அவள் அனுமதியின்றி அவள் கண்கள் வேறு கலங்கியது.

அதைப் பார்த்தவன், அவளை அப்படியே அலேக்காக தூக்கிக் கொண்டு வெளியே வந்தவன், படுக்கையில் அமர்ந்து, அவளை தன் மடியில் அமர்த்திக் கொண்டான். அப்பொழுதும் அவள் தெளியவில்லை.

“ரொம்ப வலிக்குதா...?” கேட்டவள், இன்னும் அவனை கவனிக்க, “ஆமா, ரொம்ப வலிக்குது...” வேண்டும் என்றே பொய் உரைத்தான்.

“அப்போ வாங்க ஹாஸ்பிடல் போகலாம்...” அவள் எழ முயல,

“புருஷனை அடிச்சுட்டு, ஹாஸ்பிடல் வேற கூட்டு போற பாத்தியா..., நீதான் ஒரிஜினல் பொண்டாட்டி...” அவள் இடையில் தவழ்ந்த கரத்தின் அழுத்தத்தை கூட்ட, அதைவிட, அவன் வார்த்தைகள்தான் அவளை அதிகம் பதற வைத்தது.

“பீமா..., நான் வேணும்னே...” அவள் நடுக்கமும், பயமுமாக உரைக்க முயல, அவள் இதழ்களுக்கு அருகே நெருங்கியவன், “யூ வின்..., என்னோட பனிஷ்மென்ட் என்ன?” கேட்டவன், அவள் கண்களுக்குள் ஊடுருவ, அப்பொழுதுதான் தான் இருக்கும் நிலையை உணர்ந்தாள்.

‘எப்போ அங்கே இருந்து வெளியே வந்தோம்? எப்போ அவர் மடியில் உக்காந்தேன்? என்ன பனிஷ்மென்ட்...?’ எண்ணியவளின் கண்கள், அவன் உரைத்ததன் உள்ளர்த்தம் புரிய, அவள் கண்கள் அதிர்ச்சியில் அழகாய் விரிந்தது.

பொதுவாகவே அவன்தான் ஜெயிப்பான் என்பதால், தோற்ற அவளுக்கு பனிஷ்மென்ட் கொடுக்கிறேன் என அவள் இதழ்களை இம்சிப்பது அவனது வழக்கம். முதலில் கோபமாக இணங்கியவள், பின்னர் ஆவலாக எதிர்பார்க்கும் அளவுக்கு சென்றிருக்க, இப்பொழுது அவளது முறை என அவன் நினைவூட்ட, அவனை எப்படி முத்தமிடுவது என திணறிப் போனாள்.

“பனிஷ்மென்ட்..., அது..., எதுவும்...” அவன் இதழ் நூலளவு இடைவெளியில் இம்சிக்கையில், அவன் மூக்கில் இருந்து வலக்கையை விலக்கியவள், காய்ந்திருந்த தன் இதழ்களை நாவால் மெதுவாக ஈரமாக்க, அவள் இதழ்களையே அசையாமல் பார்த்திருந்தான்.

அவன் மடியில் அமர்ந்து, தன் மார்பு அவன் நெஞ்சோடு ஒட்டிக்கொள்ள, அவ்வளவு நெருக்கத்தில், இடக்கரம் அவனது பின்னந்தலையை தாங்கியிருக்க, அவனது பார்வை அசையாமல் தன் இதழ்களில் பதிய, அவள் இதயம் தடதடத்தது.

“ஐ’ம் வெயிட்டிங்..., என் உதடு கூட காஞ்சு போச்சு...” கண்களை மெல்லமாக சுருக்கி, ‘என் இதழ்களை ஈரமாக்கு...’ என அவன் கோரிக்கை வைக்க, அவள் இதயம் தடதடத்தது. அதை அவனது நெஞ்சும் உணர, “ஒரு குட்டி கிஸ்..., அது அவ்வளவு பெரிய கஷ்டமா என்ன?” இப்பொழுது வெளிப்படையாகவே கேட்டான்.

முதல் இரவின் நெருக்கத்துக்குப் பின்னர், அவளது விலகல் அவனை சற்று காயப்படுத்தியிருக்க, தொடர்ந்த இரவுகளை அவன் தனிமையிலே கழித்தான். ஆனாலும், அவளோடான நெருக்கத்தை மனம் விரும்ப, பல வழிகளில் அதை அவளிடம் வெளிப்படுத்தி விட்டான்.

அவளுக்கோ, அவன் தேவைகள் புரிந்தாலும், வெட்கம் தடுக்க, அவளால் தன் நிலையை, சம்மதத்தை அவனுக்கு தெரிவிக்க முடியவில்லை.

“காயு…” அவளது அமைதி அவனை சற்று வெதும்ப வைக்க, அழுத்தமாகவே அழைத்தான். அவளோ, “ம்ஹும்…” தயக்கமாய் மறுத்தவள், அவனை விட்டு விலகி எழ, அவள் கையைப் பிடித்து தடுத்தான்.

இளமையின் தேவை அவனை தாக்க, தன் தலையை அழுத்தமாக கோதி, தன்னை நிலைநிறுத்திக் கொள்ள போராடியவன், “நான் வேண்டாமா…?” சுள்ளென எழுந்த கோபத்தை அடக்கும் வழி தெரியாமல் திணறிப் போனான்.

“உன் மனசில் என்னதான்டி நினைச்சுட்டு இருக்க? ஒரு நாள் வாழ்க்கை போதுமா? எனக்கு போதாதே…, உன்னை அப்படியே…” தன்னை விட்டு விலகி எழுந்தவளை, கையைப் பிடித்து இழுத்து தன்னோடு இறுக்கிக் கொண்டவன், முரட்டுத்தனமாக அவளை அணைக்க, நிச்சயம் பயந்து போனாள்.

அவள் கண்களில் பயத்தைப் பார்த்தவன், “நானும் மனுஷன்தான். இதுக்கு மேலே உன்கிட்டே எப்படி நடந்துக்கன்னு எனக்கு சுத்தமா தெரியலை. அப்படி என்னடி பயம்…? அப்போ நான் கோபப்பட்டால் என்னை விட்டு விலகியே இருந்துடுவியா? இந்த பிரம்மா இப்படித்தான்…, அது உனக்கு தெரியுமா தெரியாதா? ச்சே…” அவளை உதறிவிட்டு சென்றுவிட்டான்.

முதல்நாள் விலகலுக்கு அவள் எந்த விளக்கமோ, காரணமோ சொல்ல வில்லை. அதை அவன் பெரிதாக நினைக்கவும் இல்லை. ஒரு வேளை தன் நெருக்கம் அவளை அதிகம் கலவரப்படுத்தி இருக்கலாம், கொஞ்ச நாள் போனால் இயல்பாகிவிடுவாள் என அவன் எண்ணியிருக்க, அவள் விலகியே இருக்கும் விதம் அவனை அதிகம் காயப்படுத்தியது.

வார்த்தைகள் தடித்து, அவளை காயப்படுத்திவிடக் கூடாது என்ற கவனம் அதிகம் இருக்க, அதற்காகவே அந்த இடத்தை விட்டு அகன்று இருந்தான். அவளுக்கோ, அவன் தன்னை பிடிவாதமாக நெருங்கியிருந்தால் விலகியிருக்க மாட்டாள்.

ஆனால், தானாக அவனை நெருங்க பெரும் தயக்கமாக இருந்தது. அவன் வாய் திறந்து கேட்கையில் வெட்கம் வந்து தடுத்தது. தான் ஏன் இப்படி இருக்கிறோம் என அவளுக்கே புரியவில்லை. ஆனால், அவன் தன்னை விட்டு விலகிச் செல்கையில் உயிர் வதையை உணர்ந்தாள்.

அடுத்து வந்த நாட்களில், அவளோடு உரையாடினாலும், தன் கோபத்தை அடக்க முடியாமல் திண்டாடினான் என்றே சொல்லலாம். அதை உணர்ந்தவளுக்கு, அவனை எப்படி நெருங்கிச் சென்று சமாதானப் படுத்தவென்றும் தெரியவில்லை.

முதல் இரண்டு நாட்கள் பொறுத்தவளுக்கு, மூன்றாம் நாள், மதியம் சாப்பாட்டு வேளையில், உணவை அவனுக்குப் பரிமாற, அவள் போட்ட குழம்பு சாதத்தை தவிர்த்தவன், ப்ரிட்ஜில் இருந்து தயிரை எடுத்து வந்து போட்டு உண்ண, அவள் கடுப்பானாள்.

அவன் தட்டில் போட்ட தயிர் சாதத்தை அப்படியே கைகளில் கொத்தாக அள்ளியவள், அருகில் இருந்த கிண்ணத்தில் போட்டுவிட்டு, மீண்டுமாக அவனுக்கு சாதம் போட்டு, குழம்பை ஊற்ற, முதல் முறையாக சற்று கோபம் தணிந்தவன், கண்களில் சிறு சுவாரசியம் கூட அவளை ஏறிட்டான்.

தான் செய்ததுக்கு கோபப்படுவான் என அவள் எதிர்பார்க்க, அவன் கண்களில் தெரிந்த அந்த பாவனை..., தன் செய்கையை ரசிக்கும் அவனது முகபாவம் தைரியமளிக்க, “நான் போட்டதை சாப்பிட மாட்டீங்களா? சாப்ட்டுதான் ஆகணும்...” உணவை தன் கையால் பிசைந்தவள், அவன் வாய்க்கருகில் கொண்டு செல்ல, மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.

உணவை இரண்டு வாய் உண்ணும் முன்பே, அவன் கண்கள் கலங்க, வேகமாக தண்ணீரை எடுத்துப் பருகினான்.

அவன் செய்கையைப் பார்த்தவள், “சாப்பாடு காரமா இருக்கா?” கேட்டவள் ஒரு வாய் உண்ண, அது அப்படியொன்றும் காரமாக இருக்கவில்லை. அவள் கரத்தில் மிச்சமிருந்த உணவை தன் வாய்க்குள் போட்டுக் கொண்டவன், ரசித்து சுவைக்க, அவன் கண்களில் வழிந்த பாவத்தில், வேகமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

அவளது பாராமல் பார்க்கும் பார்வையை ரசித்தவாறே, அவளது விரல் ஒவ்வொன்றையும் தன் வாய்க்குள் வைத்து சப்ப, தன் விரல் வழியாக வழிந்த அவன் வாய் சூட்டின் வெம்மையில் உருகிப் போனாள்.

“பீமா…” அவள் வாய் முனக, “ஊட்டுடி…” அவள் கரத்தை பிடித்து இழுத்தான்.

அவன் செய்கைக்கு இசைந்தவள், அவன் அருகே நெருங்கி, “இல்ல வேண்டாம், நீங்க தயிர் சாதமே சாப்பிடுங்க…, உங்களுக்கு சாப்பாடு காரமா இருக்கு போல…” அவன் சட்டைக் காலரைப் பார்த்தவாறே முனகினாள்.

“ஏய்…, இதெல்லாம் ஒரு காரமா? கொஞ்சம் கூட யோசிக்கவே மாட்டியா? அன்னைக்கு அடிச்சு என் வாயையும் பஞ்சர் பண்ணிட்டு…, மூக்குக்கு மருந்து போட்டவ, வாய் காயத்துக்கு மருந்து போட்டியா? இங்கே பார்?” தன் கீழுதட்டை இழுத்து காட்ட, உள்ளே பெரும் வட்டத்தில் ரணமாக உள் உதடு காயப்பட்டுபோய் இருந்தது.

“ஹையோ…, என்ன இது, இப்படி இருக்கு? அதான் கொஞ்சம் காரம் கூட சாப்பிட முடியலையா…?” கேட்டவள், அவன் தட்டில் வெள்ளை சாதத்தை பரிமாற, அவள் கரத்தை தடுத்தான்.

அவள் கேள்வியாக ஏறிடவே, “இப்போ இந்த நாக்கில் இருக்கும் டேஸ்ட் போய்டும் எனக்கு வேண்டாம்…”

உரைத்தவன் இருக்கையில் இருந்து எழ முயல, அவன் தோளை அழுத்தி அமர வைத்தவள், “ரெண்டு வாய் சாப்பாடு எப்படி போதும்? இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்க…” அவனை கட்டாயப்படுத்தினாள்.

“எதுவும் சாப்பிட முடியலை காயு…, எனக்கு போதும். நீ சாப்பிடு…” அவளை அங்கே இருந்த மற்றொரு இருக்கையில் அமர வைத்தான். அவன் குரலில் இருந்த உண்மை சுட, கலங்கிப் போனாள்.

“டாக்டர் கிட்டே போகலாமா…?” அவள் தவிப்பாய் கேட்க,

“வீட்ல இருக்க டாக்டரே மருந்து கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க பிறகு…” மடியில் இருந்த டவ்வலை சேரின் சாய்வில் போட்டுவிட்டு, கை கழுவ எழுந்து சென்றான். அவன் முதுகையே வெறித்தவள், அவன் பேச்சுக்கு பின்னால் இருந்த கோரிக்கை புரிய, அடுத்த நிமிடம் அவன் பின்னால் சென்றாள்.

கை கழுவியவன் திரும்ப, மறு நொடி அவனை தன் பக்கம் இழுத்தவள், அவன் இதழ்களில் தன் மெல்லிய இதழைப் பதித்தாள். அவன் தன் இதழ் தீண்டலை முற்றுகையாக மாற்றுவானா? அவள் காத்திருக்க, அவனோ, அவள் இதழ் தீண்டலை ரசித்துக் கொண்டிருந்தான்.

தன் நாவால்…, மெதுவாக அவன் காயம் கொண்ட உள் உதட்டை தீண்ட, அவள் இடையை அழுத்தமாக வளைத்தவன், அவள் செய்கைக்கு இசைந்து, அவளோடு ஒன்றித்து நின்றிருந்தான்.

முத்தம் மட்டுமே கொடுப்பவருக்கும், பெறுபவருக்கும் இன்பம் தரும் என்பதை அந்த நொடி உணர்ந்து கொண்டான். தான் அவளை முத்தமிடுகையில் உணரும் அதே உணர்வு…, அவன் நரம்புகளை மீட்டிச் செல்ல, அவன் இளமை வேகம் கொண்டது.

சில நொடிகள், நிமிடங்கள் கடந்து, தன் இதழை அவனிடமிருந்து பிரிக்க, அவன் முகம் பார்க்க தயங்கினாலும், அவன் அமைதியாக இருப்பதைப்

பார்த்தவள், அவன் முகம் பார்க்க, இமை மூடி, அவள் தீண்டலில் கரைந்துபோய் நின்றிருந்தவனைக் கண்டவள், அவன் கழுத்தில் தன் முகத்தை அழுத்தமாக புதைத்துக் கொண்டாள்.

“பீமா…” அவன் பின் சட்டையை பிடித்து கசக்கியவள், மெதுவாக அவனைக் கலைக்க, அவனோ, “காயு, இத்தனை நாள் கழிச்சு மருந்து போட்டால் செப்டிக் ஆயிடாது…?” அவள் காதுக்குள் கிசுகிசுக்க, அவன் முதுகிலேயே செல்லமாக குத்தினாள்.

“ப்ராடு…, ப்ராடு…” அவள் முனக, அவளை இறுக தழுவிக் கொண்டவன் “தேங்க்ஸ்…” அவள் காதுக்குள் முனக, “ம்ச்…” மறுப்பாக குரல் கொடுத்தவள், அவன் நெஞ்சுக்குள் புதைய, அவன் கரம் மெல்லியதாக, மெதுவாக இடம் மாறத் துவங்கியது. அது கொடுக்கும் பரவசத்தை ரசித்தவளாய், அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

“காயு…” தாபமாய் அழைத்தவன், அவள் மூக்குத்தியில் மெல்லியதாக இதழ் பதிக்க, அவன் அணைப்பும், அவனது உணர்வும் அவளைத் தாக்க, அதைவிட அவனது தேவை புரிய, அவனுக்கு வாகாக இசைந்தவள், “ஸ்டேஷன் போக வேண்டாமா…?” ‘எனக்கு சம்மதம்’ என்னும் விதத்தில் அவள் கேட்க, உணர்வுக் குவியலானான்.

“என்னை யார் கேள்வி கேட்பது…?” கரங்கள் அவளை கொஞ்சமாய் கொள்ளையிட்டு, இதழ்கள் அவளை மொய்க்கத் துவங்கியது. அதில் அவள் கிறங்கி மயங்க, அவனது அலைபேசி கரடியாய் கத்தி கலைத்தது.

*****

# பகுதி – 43.

நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த அவளோடான அருகாமை. வெகுவாய் ரசித்தவன், அவளோடு இணைந்துவிடத் தவிக்க, அது அவனது அலைபேசிக்கு புரியவே இல்லை. அவன் தன் வேகம் கூட்ட, காயத்ரியோ சொர்க்கத்துக்கு அருகே சென்றுகொண்டிருந்தாள். பிரம்மாவோ, நொடியில் தன் உணர்வுகளை உதறியவன், அவளை விட்டு விலகி நின்றவன், அலைபேசியை எடுத்தான்.

“பிரம்மா…” அழுத்தமாக அவன் குரல்கொடுக்க, அவனை வியப்பாய் ஏறிட்டாள்.

‘இந்த நிலையிலும் அவரால் என்னை விட்டு விலக முடிகிறது என்றால்…?’ எண்ணியவள், அவன் தன் வேலையில் வைத்திருக்கும் ஆத்மார்த்தத்தை உணர்ந்து கொண்டாள்.

அவன் வேலையில் இருக்கும் அவசர நிலைகள் உணர்ந்தவள் என்பதால், அவள் கோபம் எல்லாம் கொள்ளவில்லை. அவனது வேலையின் வேகம் பார்த்து, பிரமித்து அவனை நேசித்தவளாயிற்றே, எனவே, அவனைவிட, அவன் வேலையை அதிகம் விரும்பினாள்.

“ம்…, எங்கே…?” கேட்டவனது கண்கள் ரத்தமென சிவக்க, “பத்தாவது நிமிஷம் அங்கே இருப்பேன்…” அலைபேசியை வைத்தவன், அப்பொழுதுதான் தன் மனைவியின் நினைவு வந்தவனாக, அவள் இடையை அழுத்தமாக பற்றியவன், “நைட் வந்து உன்னை கவனிக்கறேன்…” உரைத்தவன், நொடியில் மாறியிருந்தான்.

“ஏதாவது பிரச்சனையா…?” இதுவரை அவனது வேலை பற்றி எதையும் அவள் கேட்டதில்லை. முதல் முறையாகக் கேட்டாள்.

ஒரு நொடி அவன் முகத்தில் சிறு கோபம் வந்து போக, ‘பிரம்மா, இப்போ உனக்கு கல்யாணம் ஆயிடுச்சு…, அவள்

கேள்விகளுக்கு பதில் கொடுப்பது உன் கடமை...’ தனக்குள் உரைத்தவன் தன் முகத்தை நொடியில் சீராக்கினான்.

பிரம்மாவாக இருந்த வரைக்கும் யாருக்கும் பதில் சொல்லும் நிலையில் அவன் இருந்ததில்லை. அது அவனுக்கு பிடிக்கவும் செய்யாது. முதல் முறையாக தன்னை நோக்கி எழும் கேள்வியை எதிர்கொண்டவன், பிரம்மாவாக கோபம் கொண்டு, பீமாவாக நிதானத்துக்கு வந்தான்.

காயத்ரியோ, அவன் கோபத்தில் இரண்டடி பின்வாங்கியவள், அவனை பயப்பார்வை பார்த்தாள். கூடவே, “சாரி..., தெரியாம...” அவள் தடுமாற, அவளை அருகே இழுத்தவன், “என்னை கேள்வி கேட்கும் உரிமை உனக்கு மட்டும்தான் இருக்கு புரியுதா?” தன்மேல் அவளுக்கு இருக்கும் உரிமையையும் கோபமாகவே வெளிப்படுத்தினான்.

அவனது இந்த முகம் அவளுக்கு புதிது. அவனது கோபத்தை முன்பும் எதிர்கொண்டிருக்கிறாள்தான். ஆனால், இப்பொழுது இருக்கும் அவனது முகபாவம், அடிமனம் ஏனோ சில்லிட்டது.

தான் அவளை சமாதானம் செய்த பிறகும் அவள் தெளியாமல் போகவே, அவன் சற்று சோர்ந்துதான் போனான். அவளோ, “பிரம்மாவா என்கிட்டே பேசாதீங்க..., எனக்கு...” அவன் பார்வையில் கோபம் ஏறவே, வார்த்தையை நிறுத்தி விட்டாள்.

“பிரம்மாதாண்டி நிஜம்...” அவனால், அவள் தன் நினைவுகளை வெறுப்பதை ஏற்க முடியவில்லை. தான் அவசரமாக செல்ல வேண்டும் என்பதை மீறி, அவளிடம் உண்மையை உணர்த்த விரும்பினான்.

அவள் கண்கள் சட்டென வெந்நீரை வடிக்க, அப்படியே தன் கோபத்தை அடக்கிக் கொண்டான். விருட்டென திரும்பி வெளியேற, அவன் பின்னால் கிட்டத்தட்ட ஓடினாள். அவள் பின்னால் வருவது தெரிந்தாலும், ஒரு பார்வை கூட

அவளைப் பார்க்காமல், ஜீப்பை விருட்டென கிளப்பிச் சென்றான்.

அவன் செல்லவே, வாசலிலேயே மடிந்து அமர்ந்தவள், மௌனமாக கண்ணீர் வடித்தாள். ‘அவர் கேட்பதும் நியாயம் தானே..., பிரம்மாதானே நிஜம்’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டவளுக்கு, அதன் பின்னால் இருக்கும் உண்மையை ஏற்கத்தான் முடியவில்லை.

அவன் நினைவுக்கு, காமேஷின் விஷயம் வந்தால், தன்னை எப்படி ஏற்பான் என்ற மிகப்பெரும் வினா எழுந்து பூதாகரமாய் மிரட்ட, அவள் நிம்மதி பறிபோனது என்றே சொல்லலாம்.

எவ்வளவு நேரமோ தெரியாது..., அவள் வாசலில் அமர்ந்து கதறிக் கொண்டிருக்க, “காயத்ரி, என்னம்மா இது? வாசலில் உக்காந்து அழுதுட்டு இருக்க? முதல்ல உள்ளே வா...” கலைவாணியின் குரல் அவளைக் கலைத்தது.

“அத்த...” கேவலாக அழைத்தவள், அவர் தோள் சாய்ந்து விம்ம, “நிவேதா, உள்ளே போய் தண்ணி எடுத்துட்டு வா, போ...” அவளை கைத்தாங்கலாக வீட்டுக்குள் அழைத்து வந்தவர், சோபாவில் அமர வைத்து தானும் அருகே அமர்ந்தார்.

மனமோ, ‘என்ன சொன்னான்னு தெரியலையே..., எதையுமே யோசித்து செய்யவே மாட்டானா?’ அவர் மனம் தவித்தது.

நிவேதா தண்ணீர் கொண்டு வரவே, அதை வாங்கி காயத்ரியின் கரத்தில் கொடுத்தவர், “முதல்ல தண்ணி குடி...” அவளை பருக வைத்தார். நிவேதா கவலையாக காயத்ரியை பார்த்துக் கொண்டிருந்தாள்.

கலைவாணியின் பிடிவாதத்துக்காக தண்ணீரைப் பருகியவள், “அத்த, எனக்கு அவர் இப்படியே வேணும்..., எனக்கு பயம்மா இருக்கு. என்னை அவர் வெறுக்க மாட்டார் தானே...” பரிதவிப்பாய் அவர் முகம் பார்க்க, மகனைப் பற்றி தெரிந்தவரால் பதில் சொல்லத்தான் முடியவில்லை.

ஆனாலும், பதில் சொல்லாமல் இருந்தால் அவள் மேலும் தவிப்பாள் எனப் புரிய, “நீர் அடித்து நீர் விலகாது காயத்ரி. என்ன நடந்தாலும் அவன் உன் கணவன்தான் அதை யாராலும் மாற்ற முடியாது. இப்போ என்ன நடந்தது அதைச் சொல். அவன் உன்னை ஏதாவது சொல்லிட்டானா?” அவர் குரலில் இருந்தது முழு கவலை மட்டுமே.

மறுப்பாக தலை அசைத்தவள், “எனக்குதான் பயமா இருக்கு…” அவனுக்கு நினைவுகள் போய்விட்டது என்பதை, அவனது பெற்ற தாயாகவே இருந்தாலும் அவளால் அதைச் சொல்ல முடியவில்லை.

“பிரம்மா மாறிடுவான்னு பயப்படுறியா?” ஒரு பெண்ணின் மனம் அவருக்குப் புரியாதா என்ன?

‘ஆம்…’ என தலை அசைக்க, “அவனைப்பற்றி நீ புரிஞ்சுகிட்டது இவ்வளவுதானா? அவனோட கடமையில் இருந்து அவன் எக்காரணத்தைக் கொண்டும் தவறுவது கிடையாது. அது இன்னுமா உனக்குத் தெரியலை?” அவள் முகத்தை நிமிர்த்தியவர், ஆறுதலாக பார்த்தார்.

‘கடமையும், காதலும் ஒன்றாகுமா?’ அவள் மனம் ஊமையாக கேள்வி கேட்க, அதை அவள் வெளியே சொல்லவில்லை. அவள் அஞ்சுவதே அவனது அன்பை இழந்துவிடுவோமோ என்றுதானே தவிர, அவன் வாழ்க்கையை விட்டு போகச் சொல்லிவிடுவானோ என அவள் பயப்படவே இல்லையே.

அவள் முகம் இன்னும் தெளியாததைப் பார்த்தவர், “மனசைப் போட்டு குழப்பிக்காதே காயத்ரி. எரிமலையா இருக்கும் மனிதனைக் கூட, காதல் என்னும் ஆயுதம் அடக்கி ஆளும். உன் கழுத்தில் இருக்கும் தாலி பொண்ணுக்கு மட்டும் வேலி இல்லை, ஆம்பளைக்கும் அது கடிவாளம்தான்.

“பொறுப்பில்லாமல் சுற்றும் பையனுக்கே ஒரு கால்கட்டு போடணும்னு பெரியவங்க ஏன் சொல்வாங்க தெரியுமா? தன்னை நம்பி ஒருத்தி வந்துட்டா, அவனுக்கு பொறுப்பு

தானா வந்துடும். தாம்பத்தியம் அவனோட வெளி தொடர்புகளை தவிர்த்து, தனக்கானவளை சுற்ற வைக்கும்.

“முதல்ல அவனைப் பார்த்து பயப்படுவதை நிறுத்து. அவன் கோபப்பட்டால், உன்மேல் தவறு இல்லைன்னா தைரியமா நிமிர்ந்து நில். வேற யாரோ செய்யும் தவறுக்கு நீ பொறுப்பாக முடியாது. கட்டுன புருஷன் மேலே அன்பு வரலாம், பயம் வரக் கூடாது.

“தேவையில்லாமல் அவன் கோபப்பட்டால், அதை அவன்கிட்டே நேரடியா சொல்லிடு. வெளியே அவனுக்கு ஆயிரம் டென்ஷன் இருந்தாலும், வீட்டுக்குள் அவன் உன் கணவன், அவனை அரவணைப்பது உனது கடமை அதை புரிஞ்சு நடந்துக்கோ.

“உன்னோட இந்த பயம் எந்த காலத்திலும் உனக்கு துணை இருக்கப் போவதில்லை. எந்த நேரத்திலும் உன் உரிமையை நீ விட்டுக் கொடுக்க கூடாது. என்ன நான் சொல்றது புரியுதா?

“உன் அம்மா இப்போ உயிரோட இருந்திருந்தால் இதையெல்லாம் உனக்கு சொல்லிக் கொடுத்திருப்பாங்க. நான் இப்போ உன் தாயோட இடத்தில் இருந்துதான் சொல்றேன்…” அவள் முகத்தை நிமிர்த்தியவர், தன் முந்தானையால் அவள் முகம் துடைத்தார்.

அவர் வார்த்தைகள் கொடுத்த தைரியத்தில் முகம் சற்று தெளிய, மெதுவாக புன்னகைக்க முயன்றாள். “இப்படி இருக்காதே…, முதல்ல எழுந்து முகத்தை கழுவு போ…” அவளை எழுப்பியவர், “நிவேதா, அண்ணியை அவங்க ரூமுக்கு கூட்டி போ…, நான் நைட்க்கு ஏதாவது செய்யறேன்.

அவர்களை அனுப்பியவர், கிச்சனுக்குச் சென்று இரவு உணவை தயாரிக்கத் துவங்கினார். காயத்ரியோடு அவள் அறைக்குச் சென்ற நிவேதா, “அண்ணி, அண்ணா ரொம்ப நல்லவங்க. அம்மா மேலே கோபமா இருக்கும்போது கூட, என்னை வெளியே எங்கேயாவது பார்த்தால், கவனிக்காமல் இருக்க மாட்டாங்க.

“அவங்களுக்கு பாசம் காட்ட தெரியாமல் இருக்கலாம். ஆனா, மனசுக்குள் கொள்ளை பாசம் வச்சிருப்பாங்க, எனக்கு நல்லா தெரியும். நீங்க அண்ணாவை நினைச்சு இப்படி அழாதீங்க..., எனக்கு கஷ்டமா இருக்கு. அண்ணா உங்ககிட்டே சொன்னாங்களா இல்லையான்னு எனக்குத் தெரியாது, நான் அம்மாவோட சொந்த பொண்ணு இல்லை.

“அநாதை ஆஷ்ரமத்தில் இருந்து என்னை எடுத்து வளக்கறாங்க. அம்மா வீட்டுக்கு வர்றப்போ எனக்கு அஞ்சு வயசு. நான் அவங்களோட வந்த நாள், எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. அப்போவே எனக்கு ஒரு அண்ணா, அக்கா எல்லாம் இருக்காங்க, அவங்க எல்லாம் உன் சொந்தம்னு சொல்லி சொல்லியே அம்மா என்னை வளத்தாங்க.

“உங்களுக்கும் அம்மா அப்பா இல்லைன்னு தெரிஞ்சது முதல், எனக்கு ரொம்ப கஷ்டமா போச்சு. நான் அம்மாகிட்டே சொன்னப்போ, நாமல்லாம் இருக்கோமே’ன்னு சொன்னாங்க. அனாதையான என்னையவே அண்ணா ஏத்துகிட்ட பிறகு, நீங்க அவங்க வைஃப், உங்களை வெறுக்க மாட்டாங்க” முதிர்ச்சி இல்லாத குழந்தை தனக்கு தெரிந்த விதத்தில் அவளுக்கு ஆறுதல் சொல்ல, தன்னை நினைத்தே நாணினாள்.

அதைவிட, அவள் அநாதை என சொன்ன விதம் மனதை தாக்க, “உனக்கு அக்காவா நான் இருக்கும்போது, இன்னொரு முறை அனாதைன்னு சொல்லாதே நிவேதா. நான் இனிமேல் அழ மாட்டேன் சரியா” அவளை மெல்லியதாக அணைத்துக் கொண்டாள்.

“நான் இப்படின்னு தெரிந்தால் நீங்க என்கிட்டே பேச மாட்டீங்களோன்னு நினைத்தேன். அதுக்கு பயந்துட்டுதான் இத்தனை நாள் உங்ககிட்டே பேசவே வரலை. எனக்கு அண்ணாகிட்டே எல்லாம் பயமே இல்லை. அப்படியே திட்டினாலும், அவங்களுக்கு என்மேல் இல்லாத உரிமையா, எனக்கு அவங்க திட்டினா கூட புடிக்கும்...” அவள் வெள்ளையாக சிரிக்க, அந்த சின்னவளுக்கு இருக்கும்

தைரியம் கூட தனக்கு இல்லையே என எண்ணிக் கொண்டாள்.

“நிவேதா..., அப்படி பேசாதே..., நீ சொல்றமாதிரி வைத்துக் கொண்டாலும், நானும் உன் நிலையில் இருப்பவள்தான். இனிமேல் நீ இப்படி பேசவே கூடாது” உரிமையாய் கடிந்து கொள்ளவே, நிறைவாய் புன்னகைத்தாள் நிவேதா.

காயத்ரி சின்னதாக ஒரு குளியல் போட்டு, உடை மாற்றிக் கொண்டவள், நிவேதாவோடு கீழே இறங்கி வர, அவளைப் பார்த்த கலைவாணி, “ம், இப்போ பார்க்க எவ்வளவு அழகா இருக்க. வா..., வந்து சாப்பிடு...” அவளை அமர்த்தி, உணவு பரிமாற, “நீங்களும் உக்காருங்க அத்தை, நிவேதா நீயும் என்னோடவே சாப்பிடு...” அவர்களையும் கட்டாயப்படுத்தி அமர வைத்தாள்.

உணவு உண்டு முடிக்கவே, “பிரம்மா எப்போ வர்றேன்னு சொன்னனாம்மா?” சாப்பாட்டு பாத்திரங்களை ஒதுக்கியவாறே கேட்க,

“இல்ல அத்தை..., போன் வந்ததுன்னு ரொம்ப அவசரமா கிளம்பிப் போனாங்க” அவன் சென்ற விதம் நினைவுக்கு வர, குரல் மெதுவாக கலங்கியது. அதை வெளியே தெரியாமல் மறைத்தவள், ‘ஆண்டவா, அவர் எந்த கேசா இருந்தாலும் சக்சஸா முடிக்கணும்...’ மனம் கணவனுக்காக வேண்டிக் கொண்டது.

“லேட் ஆகுதே..., நீ தனியா இருப்பியா...?” இத்தனைநாட்க்களில் அவள் தனிமையில் இருந்திருப்பாள் எனத் தெரிந்தாலும், அவளை தனியாய் விட்டுச் செல்ல மனம் விரும்பவில்லை.

“எனக்கென்ன பயம் அத்தை..., அதான் டோனி இருக்கானே. அவனை மீறி இந்த காம்பவுண்டுக்குள்ளேயே யாரும் வர முடியாது. அவர் இல்லன்னா, எங்க ரூமுக்கு வெளியிலேயே உக்காந்து இருக்கும் எங்கேயும் போகாது. சில நேரம் நான் நைட் கொஞ்சம் லேட்டா தூங்க போகையில், ரெஸ்ட்ரூம் போனா கூட, வெளியே வந்து நின்னு எனக்கு காவல்

இருப்பான்” டோனியின்மேல் முன்னர் அவள் கொண்டிருந்த பயம் இப்பொழுது சுத்தமாக இருக்கவில்லை.

அவள் சொன்னதைக் கேட்டவர், மனமே இல்லாமல், “நிவேதாவை வேண்ணா விட்டுட்டு போகவா...?” மகன் வந்தால் எந்த மாதிரி எடுத்துக் கொள்வான் எனத் தெரியாமல் தயக்கமாகவே கேட்டார்.

“ஹையோ அத்தை..., நான் பாத்துக்கறேன். எனக்கு பிராக்டிகல் ஆரம்பிக்கப் போகுது. நைட் கண் முழித்து படிப்பேன், அவளுக்கு டிஸ்டப்பா இருக்கும், நீங்க கூட்டி போங்க...” அவளுக்கும் அதே பயம் இருந்ததால் வேகமாக மறுத்தாள்.

“சரிம்மா பாத்துக்கோ..., நாங்க கிளம்பறோம். டோனியை விட்டுட்டே போறேன்” டோனியின் கூண்டுக்கு சென்று அதை அழைத்து வந்து வீட்டில் விட்டுவிட்டு சென்றார்கள்.

அவள் நினைவுகள் பிரம்மாவை சுற்ற, முயன்று அதை விடுவித்தவள், படிப்பில் கவனம் செலுத்தத் துவங்கினாள்.

அங்கே பிரம்மாவோ நெருப்பு பிழம்பாக நின்று கொண்டிருந்தான். “இந்த ஏரியாவை விட்டு வெளியே செல்லும் எந்த வண்டியா இருந்தாலும் செக் செய்யாமல் அனுப்பக் கூடாது...” உத்தரவிட்டவன், அந்த ஏரியாவுக்கு வெளியே செல்ல இருந்த நான்கு இடங்களை சீல் வைத்து அலசாத குறையாக தேடிக் கொண்டிருந்தான்.

‘இந்த ஏரியாவை விட்டு குழந்தை அதற்குள் வெளியே சென்றிருக்க வாய்ப்பே இல்லை’ அவனது அனுபவ அறிவு அழுத்தமாக உரைக்க, தேடலை முடுக்கினான்.

அவனோடு இருந்த அந்த ஏரியா இன்ஸ்பெக்டர் மாதவன், பதட்டம் நிறைந்த மனதோடு அவன் அருகில் நின்றிருந்தான்.

“மாதவன்..., உங்க ஏரியாவில் இதற்கு முன்னாடி இப்படி நடந்திருக்கா?” விழிகள் நெருப்பை கக்க, அவனை உறுத்து

விழித்தான்.

“சார்..., ரெண்டு மூணு...” எச்சில் விழுங்கியவன் முனக,

“ரெண்டா மூணா...” வெடித்தான்.

“மூணு சார்...” கையை பின்னால் கட்டிக் கொண்டவன், வேகமாக கர்சீப்பை எடுத்து முகத்தில் வழிந்த வியர்வையை துடைத்தான்.

“என்ன நடவடிக்கை எடுத்தீங்க...?” சுவிங்கத்தை மென்றவன், வார்த்தைகளையும் அரைத்தான்.

‘ஹையோ...’ உள்ளுக்குள் உதறிய மாதவன், “தேடினோம் சார்..., ஆனா...” வார்த்தைகளை முடிக்க முடியாமல் எச்சில் கூட்ட,

“இதை சொல்ல வெக்கமா இல்ல. அந்த பெத்தவங்க முகத்தை பாருங்க. மூணு வயசு குழந்தையை மதியம் முதலே காணலைன்னு அவங்க தவிக்கிறது புரியுதா...?” முகம் இரும்பாக இருக்க, நேரம் கரைவதை விரும்பாதவனாக கொதித்தான்.

அவனிடம் சாடியவன், அந்த பெற்றவர்களை நோக்கி நடந்தான். மாதவனிடம் சாடியதற்கு நேர் மாறாக, “உங்க குழந்தையை நிச்சயம் மீட்டுடுவோம். நீங்க இங்கே இருக்க வேண்டாம்..., வீட்டுக்கு போயிட்டு காலையில் வாங்க. தகவல் ஏதாவது கிடைத்தால் முதல்ல உங்களுக்கு தெரியப்படுத்துறேன்” அந்த தாயின் கண்ணீர் முதல் முறையாக அவன் நெஞ்சை சுட்டது.

‘என் தாயும் என்னை தொலைத்துவிட்டு இப்படித்தானே தவித்திருப்பார். கண்ணுக்கு முன்னால் அவரை எவ்வளவு ஏங்க வைத்துவிட்டேன்’ ஒரு நொடி தடுமாறியவன், சட்டென தன்னை மீட்டுக் கொண்டான்.

அந்த குழந்தையின் தாயோ, “சார்..., அஞ்சு வருஷம் குழந்தையே இல்லாமல், தவமிருத்து பெத்த குழந்தை சார். எனக்கு என் பொண்ணு வேணும். அவ உயிரோட இருப்பா

தானே…, அவ கிடைக்கலன்னா நானும் இருக்க மாட்டேன்…” கதறித் தவிக்க, அவள் கணவன் அவளைத் தாங்கினான்.

“சார், நீங்க இந்த கேசில் இன்வால் ஆன பிறகு எனக்கு நம்பிக்கை இருக்கு சார்…, கண்டிப்பா என் பொண்ணு எனக்கு கிடைப்பா…” தைரியமாக காட்டிக் கொண்டாலும், அவன் கண்களிலும் கண்ணீர் வழிய, பிரம்மா அழுத்தமாக தன் தலையை கோதிக் கொண்டான்.

‘இந்த நம்பிக்கையை நான் காப்பாத்தியே ஆகணும்…’ எண்ணியவன், ‘இவங்க குழந்தையை பணத்துக்காக கடத்தலை. அப்படி கடத்தியிருந்தால் போன் வந்திருக்கும். அதைவிட, இவங்க வசதியானவங்க இல்லை…’ ஒவ்வொன்றாக எண்ணியவன், சிறு யோசனைக்குப் பிறகு அவர்களை ஏறிட்டான்.

“நடந்ததை மறுபடியும் சொல்லுங்க…” ஏற்கனவே பலமுறை கேட்ட கேள்விதான். மீண்டும் கேட்டான்.

“சார்…, நாங்க ஆட்டோவில் இருந்து இறங்கினப்போ, திடீர்ன்னு ஒரு பெரியவர் மயக்கம் போட்டு விழுந்தார். அவர் விழவே, என் கைப்பையில் இருந்த தண்ணீரை எடுத்து அவருக்கு மயக்கம் தெளிய வைத்தோம். திரும்பிப் பார்த்தால்…” குழந்தையின் தந்தை இப்பொழுது குரல் அடைக்க நிறுத்திவிட, தலையை அசைத்துக் கொண்டான்.

“கொஞ்சம் என்னோட வர முடியுமா…? சம்பவம் நடந்த இடத்துக்கு இப்போ போறோம். அந்த பெரியவரைப் பார்த்தால் உடனே என்கிட்டே சொல்லுங்க” அவர்களை ஜீப்பில் ஏற்றியவன் அந்த இடத்துக்கு பறந்தான்.

அரைமணிநேர அலசலுக்குப் பிறகு, “சார், அதோ அவர்தான்…, எனக்கு நல்லா தெரியும்…, அதே சாஞ்ச நடை…” குழந்தையின் தாய், அதற்குள்ளாகவே அந்த கிழவனை நோக்கி ஓடத் துவங்கி இருந்தாள்.

“ரம்யா…” குரல் கொடுத்த கணவன் பின்னால் ஓட, அந்த ரங்கநாதன் தெருவுக்குள், இவர்கள் வருவதைப் பார்த்த கிழவன், சட்டென ஓடத் துவங்கினான்.

அதுவரை சிறு நடையில் அவர்களை பின்தொடர்ந்த பிரம்மா, அந்த கிழவன் ஓடத் துவங்கவே, அம்பாய் பாய்ந்தான். அங்கே காவலுக்கு இருந்த காவலர்களிடம் வாக்கிடாக்கியில் தகவல் சொல்லியிருந்ததால், நொடியில் அவர்கள் அலாட் ஆக, இரண்டே நிமிடங்களில் அவர்கள் பிடியில் சிக்கினான் கிழவன்.

அந்த இடத்திலேயே ஓங்கி அறை விட்ட பிரம்மா, “குழந்தையை எங்கே கொண்டு போய் இருக்காங்க..., சொல்லல...” அங்கே இருந்த சந்துக்குள் அவனை இழுத்துச் சென்றவன், அவன் கழுத்தை நெறிக்கத் துவங்கவே, மூச்சுக்கு திணறத் துவங்கினான்.

கண்களில் உயிர் பயம் தெரிய, “எனக்குத் தெரியாது சார்..., என்னை மயக்கம் போட்டு விழச் சொன்னாங்க..., அவ்வளவுதான் தெரியும். பணம் கூட இன்னும் வாங்கலை...” அந்த வார்த்தைகளை உதிர்க்கவே அவனுக்கு பத்து நிமிடம் தேவைப் பட்டது.

ஓங்கி தன் கரத்தை சுவரில் குத்தியவன், “பாஸ்டர்..., ***” இன்னும் சில கெட்ட வார்த்தைகளை உதிர்த்தவன், “பணத்துக்கு வேண்டி உன் பொண்டாட்டி புள்ளையவே கூட்டிக் கொடுப்பீங்களாடா நாய்களா...?” அவன் வயதை கருதி, அதற்குமேல் அவனால் முரட்டுத்தனத்தை காட்ட முடியவில்லை.

“சார்..., இவனை தூக்கிட்டு போய் நம்ம இடத்தில் விசாரித்தால் உண்மை தெரிய வரும்...” ஒரு போலீஸ் உரைக்க, அவனைப் பார்த்த பார்வையில் நெருப்பு பறந்தது.

“கெட் லாஸ்ட்...” அவனிடம் கத்தியவன், “பணம் எப்போ கொடுப்பாங்க” அவனுக்கு கிழவனை கூட்டி போய் விசாரிப்பதை விட, குழந்தை கிடைப்பது மட்டுமே பிரதானமாக இருந்தது.

“நாளைக்கு காலையில்..., ஏதாவது பொட்டலமா கட்டி தூக்கிப் போடுவாங்க. எனக்கு அவங்க யாருன்னு

சத்தியமா தெரியாது சார்...” கிழவன் கெஞ்ச, அவனை அப்படியே தூக்கி கீழே போட்டான்.

“ரமணன்..., இவனை உங்க கண் பார்வையிலேயே வச்சிருங்க. அப்படி தப்பிக்க பாத்தா..., தயவே பாக்காமல் கழுத்தை திருகிப் போடுங்க. பிச்சக்கார நாய்..., எவனும் கேக்க வர மாட்டான். காலையில் வர்றேன்” அங்கிருந்து வெளியேறினான்.

அவர்கள் சந்துக்குள் வந்த அந்த நிமிடம், அதன் வாயிலில் இரண்டு போலீஸ் காவலுக்கு நின்றதால், உள்ளே நடந்தவை எதுவும் பொது மக்களுக்குத் தெரியவில்லை.

“நீங்க வீட்டுக்குப் போங்க..., நான் பாத்துக்கறேன்” பிரம்மா சொல்ல, அவன் கோபம் கண்டு விக்கித்துப் போயிருந்த பெற்றவர்கள் மறு வார்த்தை பேசாமல் கிளம்பி விட்டார்கள்.

இரவு சல்லடையாய் சலித்தும், வாகன வேட்டையில் குழந்தை கிடைக்காமல் போகவே, விடியலில் அந்த கிழவனை கண் பார்வையில் வைத்திருந்தவன் பணம் தர வருபவனுக்காக காத்திருக்கத் துவங்கினான்.

இரவு முழுவதும் உறங்காமல் இருந்தாலும், அதன் தாக்கம் அவனிடம் சிறிதும் இருக்கவில்லை. கண்கள் இரண்டும் லேசர் பீமாக இடத்தை அலச, அங்கே இருக்கும் சில மக்களை அங்குலம் அங்குலமாக அலசினான்.

காலை நேரம் கூட்டம் அவ்வளவாக இல்லாத காரணத்தால், ஆட்களை அலசுவது அவனுக்கு சுலபமாகவே இருந்தது. காலை பத்து மணி வரைக்கும் யாரும் வராமல் போகவே சற்று சோர்ந்தாலும், நம்பிக்கையாக காத்திருந்தான்.

நேரம் கரைய, அங்கேயே இருப்பது சரியாகப் படவில்லை. நேரம் செல்லச் செல்ல, குழந்தை நிலை என்னவாக இருக்கும் என்ற கவலை தோன்றவே, தான் ஏற்கனவே சொல்லியிருந்தவாறு, தேடுதல் வேட்டை எப்படி என ஆராயச் சென்றான்.

தன் கண்காணிப்பை ரமணனிடம் ஒப்படைத்தவன், அவர்கள் ஏரியாவின் நான்கு பக்கம் இருந்தும் காவலர் படையை அனுப்பினான். குழந்தைகளை கடத்தியவர்கள் நிச்சயம் ஏதாவது ஒதுக்குப்புறமான ஏரியாவில்தான் வைத்திருப்பார்கள் எனப் புரிய, அந்த இடங்களில் சல்லடையாக சலித்தார்கள்.

அதற்குள்ளாகவே குழந்தை கடத்தல் விஷயம் மீடியாவுக்குத் தெரிய, கடத்தல் காரர்களுக்கும் அது தெரிய வந்தது.

“இதில் பிரம்மா எப்படிடா உள்ளே வந்தான்? அவனுக்கு யார் சொன்னது? முதல்ல இந்த பிள்ளைகளை இடம் மாத்தணும். போன வாரமே போகலாம்னு சொன்னதை நீங்கதான் கேக்கலை…” அங்கே இருந்த ஒருவன் உரைக்க, மற்றவர்கள் பதட்டம் ஆனார்கள்.

“இப்போ என்ன செய்ய?” ஒருவன் கேட்க, “கோழி கொண்டுபோற வண்டியை எடுத்துட்டு வா…” அவர்கள் கிளம்ப தயாரான அந்த நிமிடம், அவர்களை சுற்றி வளைத்தது பிரம்மாவின் டீம்.

“டேய் போலீஸ்…, ஓடுங்க…” அவர்கள் கலைந்து செல்ல முயல, துப்பாக்கி முனையில் அவர்களை மடக்கியவன், ஓட முயன்ற இருவரை துப்பாக்கியால் சுடவே, மற்றவர்கள் ஓட பயந்தார்கள்.

தன் கையில் இருந்த, அந்த பணம் கொடுக்க சென்றவனை தரையில் வீசியவன், காயம் பட்டவர்களை பெரிய வண்டியில் ஏற்றி மருத்துவமனை அனுப்பிவிட்டு, அங்கே இருந்த குழந்தைகள் அருகில் சென்றான்.

இரண்டு வயது முதல் பன்னிரண்டு வயதுவரை இருந்த ஏழு குழந்தைகளை மீட்டவன், ஒரு குழந்தை இருந்த நிலையைப் பார்த்து திகைத்துப் போனான். ஒரு போலீஸ் படையே வந்திருக்க, பார்த்த அனைவரும் அதிர்ந்து போனார்கள் என்றே சொல்லலாம்.

“எவண்டா இப்படி பண்ணது...?” இடியாய் அவன் முழங்கி, தங்கள் கஸ்டடியில் இருந்த நால்வரையும் அடித்து துவம்சம் செய்தான்.

குழந்தைகளோ..., “அம்மா வேணும்..., அம்மா..., அடிக்காதீங்க..., வலிக்குது. பசிக்குது” ஒவ்வொரு குழந்தையும் ஒன்றைச் சொல்ல, அனைவருக்கும் கண்கள் கலங்கியது.

அந்த பன்னிரண்டு வயது குழந்தையோ..., “ஓ...” வென கதறி, சுவரோடு ஒன்ற, “இந்த குழந்தையை நாசம் பண்ணது யாருடா...?” மீண்டுமாக அவர்களை அடிக்க, அங்கே இருந்த ஒரு பதினேழு வயது சிறுவனை கை காட்டினார்கள்.

அவன் காலில் குண்டடி பட்டிருக்க, வலியால் துடித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவன், “எங்கே இருந்துடா உனக்கு இப்படி ஒரு வக்கிரம் வரும்...?” குண்டடி பட்ட காலை மிதிக்க, அவனது அலறல் அந்த குடவுனையே அதிர வைத்தது.

தன் இடுப்பில் கட்டியிருந்த துப்பாக்கியை எடுத்தவன், எதைப்பற்றியும் கவலைப் படாமல் அவனைச் சுட ஆயத்தமானான்.

பிரம்மாவை யார் அடக்குவது என்றே தெரியவில்லை. விட்டால் அங்கேயே அவனைக் கொன்றுவிடும் வெறியில் அவன் இருக்க, அங்கே வந்த மீடியா மக்கள் அவன் வேகத்தை தடுத்தார்கள்.

“சார் ப்ரெஸ்...” ஒருவன் உரைக்க, சிலபல கெட்டவார்த்தைகளை உதிர்த்துவிட்டு, “இவனுங்களுக்கு யாருடா தகவல் கொடுத்தது?” கத்தினாலும், சட்டென தன்னை மீட்டுக் கொண்டான்.

அடுத்த இரண்டு மணி நேரங்களில், குழந்தைகளை தொலைத்த பெற்றவர்களால் அந்த மருத்துவமனை நிரம்பி வழிய, ஒவ்வொரு பெற்றவர்களின் கண்களில் தெரிந்த நிம்மதியைக் கண்டவனுக்கு ஒரு பக்கம் சிறு சந்தோசம்

என்றால், அந்த ஒரு குழந்தையை எண்ணி கொதித்துக் கொண்டிருந்தான்.

“ரொம்ப தேங்க்ஸ் சார்..., உங்களை நான் சாகுற வரைக்கும் மறக்க மாட்டோம்” ரம்யா அவன் காலிலேயே விழுந்துவிட,

அந்த பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயோ..., “என் குழந்தையை நாசம் செய்ய முன்னாடி நீங்க போயிருக்க கூடாதா...? ஐயோ..., என் குழந்தை..., அவங்க அப்பாவை பாத்தா கூட அலறுறாளே...” அவர் அழுகை அவனை பலமாய் தாக்க, அந்த இடத்தில் அவனால் இருக்கவே முடியவில்லை.

அவனது கோபம் எல்லாம் அந்த குழந்தையை நாசம் செய்தவன் மீது திரும்ப, சூழ்நிலை கருதி தன்னை அடக்கினான். மீடியா வேறு அவனை கேள்விகளால் துளைக்க, மிகப்பெரும் பொறுப்பில் இருக்கும் அவனால் அவர்களை தவிர்க்க முடியவில்லை.

இவன் இங்கே சிக்கியிருக்க, சாந்தியின் பிடியில் இருந்தாள் காயத்ரி.

*****

# பகுதி – 44.

கல்லூரிக்கு அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தாள் காயத்ரி. இன்னும் இரண்டு நாட்களில் பிராக்டிகல் துவங்க இருப்பதால், அதற்கு முன்னர் தனக்கு இருக்கும் சில சந்தேகங்களை லெச்சர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ள விரும்பினாள்.

மனமோ..., செய்திகளில் அடிபட்ட குழந்தைகள் கடத்தல், அதை பிரம்மா கண்டுபிடித்தது என சுழன்று கொண்டிருந்தது. அவன் அந்த கேசை வெற்றிகரமாக முடித்ததில் அவளுக்கு பரம சந்தோசம். அவனுக்கு அலைபேசியில் அழைக்க அவன் அதை ஏற்கவே இல்லை.

அவன் பிசியாக இருப்பான் என்பதை உணர்ந்தவள், “வாழ்த்துக்கள்” என குறுஞ்செய்தி அனுப்ப, அதற்கும் பதில் வரவில்லை. அதையெல்லாம் எண்ணியவாறு, அவள் வீட்டை பூட்ட முயல்கையில் சட்டென மூன்றுபேர் உள்ளே நுழைய அதிர்ந்து போனாள்.

“சாந்தி...” அவளை அந்த நேரம் நிச்சயமாக அவள் எதிர்பார்க்கவில்லை.

சாந்தியோ, பிரம்மா அப்பொழுது வர முடியாது என்பதை அறிந்தே வந்திருந்தாள்.

“காயத்ரி..., எப்படி இருக்க...?” கேட்டவள் சோபாவில் அமர, அவளையே வெறித்தாள். அவள் உடன் வந்திருந்த இருவரை ஏற்கனவே தன் அண்ணன் வீட்டில் வைத்து பார்த்திருந்ததால், அவள் எதற்காக வந்திருக்கிறாள் என புரிந்து போனது.

“எதுக்கு இங்கே வந்திருக்க...?” கொஞ்சம் தைரியமாகவே கேட்டாள்.

“அட பரவாயில்லையே..., நேரா விஷயத்துக்கே வந்துட்ட. நானே உன்கிட்டே எப்படி பேச்சை துவங்குறதுன்னு குழப்பத்திலேயே வந்தேன்” சொன்னவள், உடன்

வந்திருந்தவர்களைப் பார்க்க, அவர்கள் அவளை நெருங்கினார்கள்.

“சாந்தி, முதல்ல இங்கே இருந்து போ..., அவர் எப்போ வேண்ணா வரலாம்” அவள் சொல்ல, சாந்தி அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

“ஊருக்கே தெரிந்த விஷயம் உனக்குத் தெரியலையா...?” ஏளனமாக கேட்க, அவள் ஒரு முடிவோடு வந்திருப்பது தெரிந்து போனது.

“உனக்கு இப்போ என்ன வேணும்?” அங்கே இருந்து தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா என அவள் கண்கள் ஆராய்ந்தன. கூடவே தன் கையில் இருந்த அலைபேசியில் இருந்து பிரம்மாவுக்கு அழைக்கலாமா? என எண்ணியவள் உடனே அந்த நினைப்பை கை விட்டாள்.

‘அவர் வந்தால் என்ன சொல்லி சம்மாளிப்பது?’ அவள் எண்ணம் இதுவாகத்தான் இருந்தது. அதே நேரம், அவளுக்கு எப்பொழுதும் காவலாக இருக்கும் சேகரை அவள் அந்த நேரம் மறந்தே போனாள்.

அவள் செய்ய மறுத்ததை சேகர் செய்தான். அவனிடமிருந்து அழைப்பு வரவே, அந்த அவசரத்திலும் அழைப்பை ஏற்றவன், அமைதியாக இருக்கவே, “சார், அந்த சாந்தி உங்க வீட்டுக்குள்ளே போயிருக்காங்க. நான் இப்போ என்ன செய்யட்டும்?” அவன் குரல் சிறு பட்டத்துக்கு போயிருந்தது.

“நான் வர்ற வரைக்கும் அவங்க வெளியே போகக் கூடாது” உத்தரவிட்டவன், தான் உடனடியாக வீட்டுக்கு செல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான்.

அவன் எவ்வளவுதான் தைரியமானவன் என்றாலும், தன்னவளுக்கு ஒரு ஆபத்து என்றால் அவனால் அப்படி இருக்க முடியவில்லை. அவனுக்கு கடமை முக்கியம் என்றாலும், வாழ்க்கையே இல்லாமல் போகும் சூழல் இருக்கையில் கடமை பின்னுக்கு சென்றது.

“ஓகே சார்...” உரைத்த சேகர் அவர்கள் வீட்டு கேட்டுக்கு அருகில் வந்து நின்றுகொண்டான்.

பிரம்மா அங்கிருந்து செல்ல முடியுமா?’ என சூழலை ஆராய்ந்தவன், “மோகன்...” அவனை அழைக்க, வேகமாக அவன் அருகில் வந்து சலூட் வைத்தான்.

“ஐஜி எப்போ வர்றார்...?” அவர் வருகையில் அவன் அங்கே இருந்தே ஆக வேண்டும்.

“இன்னும் அரைமணி நேரத்தில் வர்றேன்னு சொல்லியிருக்கார் சார்” அவன் உரைக்க, அவன் மனம் நிலையில்லாமல் தவித்தது.

அவன் முகத்தில் முதல் முறையாக பதட்டத்தை பார்த்தவன், “anything சீரியஸ் சார்...?” அவனே பதட்டமானால் விஷயம் பெரிதென்று அவனுக்குத் தோன்றியது.

அதைவிட, தான் செல்ல முடியாத சூழலில் சிக்கியிருக்கும்பொழுது சாந்தி வீட்டுக்கு சென்றிருப்பது அவனது உச்ச கோபத்தை கிளப்ப, தன் கோபத்தை எப்படி கட்டுப்படுத்தினான் என்றே தெரியவில்லை.

‘யாழினியை அனுப்புவோமா?’ சிந்தித்தவன், தன்னவளை கூட தான் காக்கவில்லை என்றால், இத்தனை பெயர், பதவி, புகழ், சாமர்த்தியம் இருந்து என்ன பயன்?’ எண்ணியவன், அங்கிருந்து செல்ல முடிவெடுத்தான்.

“மோகன்..., ஒரு அரைமணிநேரம் நான் இங்கே இல்லை என்பதே தெரியக் கூடாது” உரைத்தவன், அங்கே நின்ற யாழினியைப் பார்க்க, அவன் தன்னை அழைக்கிறான் என்பதை உணர்ந்தவள், வேகமாக அவனை நெருங்கினாள்.

“என்னோட வாங்க..., உங்க ஸ்டேஷன் ஜீப் எங்கே இருக்கு?” கேட்டவன் முன்னால் நடக்க, அவனுக்கு பின்னால் ஓடியவள், “ஹாஸ்பிடலுக்கு சைட்ல நிக்குது சார்...” அவள் சொல்லவே, அந்த பக்கம் நகர்ந்தான்.

அந்த ஜீப்பின் டிரைவர் அருகே நிற்க, பின்னால் ஏறியவன், என் வீட்டுக்கு போங்க. வேகம்...” சீட்டில் சாய்ந்து கொள்ள, முன் இருக்கையில் ஏறிய யாழினி, இந்த அவசரத்திலும் அவன் வீட்டுக்கு செல்கிறான் என்றால், அங்கே ஏதோ ஆபத்து என புரிந்து கொண்டாள்.

தன் இடையில் இருந்த பிஸ்டலை அவள் கையில் எடுத்துக் கொள்ளவே அதைப் பார்த்தவன், “அதை யூஸ் பண்ண வேண்டாம்...” அவன் உரைக்க, ‘இவர் கண்ணுக்கு சிறு அசைவு கூட தப்பாதா...?’ எண்ணியவள், துப்பாக்கியை கைகளிலேயே வைத்துக் கொண்டாள்.

ஜீப் சைரன் ஒலியில் சாலையில் பறந்தது.

வீட்டிலோ..., “சாந்தி, நீயும் ஒரு பொண்ணா...? உன்னால் எப்படி இதையெல்லாம் செய்ய முடிந்தது...?” காயத்ரி கேட்க,

“ஓ..., உண்மை எல்லாம் தெரிஞ்சுடுச்சா? பரவாயில்லை..., வாழ்க்கைக்கு பணம் ரொம்ப அவசியம் காயத்ரி. அது எனக்கும் உன் அண்ணனுக்கும் தெரிந்ததால் தான் சம்பாதித்தோம்...” அவள் அசால்ட்டாக உரைக்க, காயத்ரிக்கு அருவருத்துப் போனது.

முகத்தை திருப்பியவள், “என்கிட்டே நீ தேடி வந்த பணம் இல்லை. அது என்னைக்கோ ஒரு அநாதை ஆஷ்ராமத்துக்கு போய்டுச்சு...” அவள் உரைக்க, வெறியானாள்.

“ஏய்..., என்னடி சொன்ன...? யார் பணத்தை யார் தூக்கி கொடுப்பது? அதில்லன்னா என்ன? உன் புருஷன் பணம் லட்சம் லட்சமா ஊரில் இருந்து வர்றது எனக்குத் தெரியும். அந்த பணத்தில் எனக்கு ஒரு அம்பது லட்சம் கொடு போதும்...” அவள் கேட்க, திகைத்துப் போனாள்.

“அம்பது லட்சமா...?” வாய்விட்டே கேட்டவள், ‘இவளுக்கு காமேஷ் அக்கவுண்டில் எவ்வளவு பணம் இருந்தது என்று கூட தெரியாதா?’ வெறுத்துப் போனது.

“என்கிட்டே அவ்வளவு பணம் கிடையாது…” அவள் உரைக்க, அந்த தடியர்களோ அவள் அருகே நெருங்கினார்கள்.

சற்று பயத்தோடு பின்னால் நகர்ந்தவள், அவர்களை பயப் பார்வை பார்த்தாள். பிரம்மா கற்றுகொடுத்த சண்டை எல்லாம் மூளையில் இருந்து அழிந்து போன உணர்வு.

“இப்போ பணம் வரலைன்னா, உன் உயிர் உன்கிட்டே இருக்காது” அவள் மிரட்ட, அதை காயத்ரி கண்டுகொள்ளவே இல்லை.

“எனக்கு அதைப்பற்றி கவலையே இல்லை. என்கிட்டே பணம் இல்லை அவ்வளவுதான்”.

“நீ அப்படி சொல்லவே முடியாது காயத்ரி. உன்னை வைத்து அந்த பணத்தை எப்படி சம்பாதிப்பது என கூட எனக்குத் தெரியும். வண்டியில் உன்னை தூக்கிப் போட்டு ஜஸ்ட் பெங்களூர் போய்ட்டா போதும், குறைந்தது அஞ்சு லட்சம் லம்பா கிடைக்கும்…” சாந்தி மற்றவன்களுக்கு கண்ணைக் காட்ட, அவள் வாயை அடைக்க கர்சீப்பை எடுத்தார்கள்.

அப்படியே நடுங்கிப் போனாள். சாந்தியைப் பார்த்தால், அவள் எதற்கும் துணிந்தவளாக இருக்க, அவர்கள் கையில் சிக்கக் கூடாது என முடிவெடுத்தாள். உயிருக்கு பயப்படாத அவள், மானத்துக்கு பயந்தாள்.

ஒருவன் கர்ச்சீப்போடு அவளை நெருங்க, மற்றவன் அவள் கரத்தை அழுத்தமாக பிடிக்க முயன்றான். அடுத்த நொடி, பின்னால் நின்றவனின் தாடையில் பின் தலையால் இடித்தவள், எதிரில் வந்தவனது வயிற்றில் தன் பலம் எல்லாம் கூட்டி ஒரு உதை விட்டாள்.

அவளது இந்த தாக்குதலை எதிர்பாராத அவர்கள் ஒரு நொடி தடுமாற, இருவரும் சேர்ந்து அவள்மேல் பாய்ந்தார்கள். கையில் இருந்த கைப்பை, புத்தகம் அனைத்தையும் ஒருவன் முகத்தில் வீசியவள், கை முஷ்டியை பின்னால் இருந்தவனின் முகத்தில் இறக்கினாள்.

கூடவே குனிந்து அவர்களுக்கு நடுவில் இருந்து வெளியேறியவள், இருவருக்கு முன்னால் நிற்க, அவள் பின்னால் இருந்த சாந்தி கொத்தாக அவள் முடியைப் பற்றினாள்.

காயத்ரி அதில் தடுமாற, “காட்டெருமை மாதிரி உடம்பை வச்சுகிட்டு ஒரு பொண்ணை பிடிக்க முடியலை. வந்து குளோரோபாமை அவ முகத்தில் வைத்து அமுக்குடா...” கத்தினாள்.

‘சண்டையில் பெண், ஆண் பேதம் கிடையாது...’ பிரம்மா சொன்னது காதில் ஒலிக்க, கை முழங்கையை இடியென சாந்தியின் வயிற்றில் இறக்கியவள், “நீ பொண்ணே கிடையாது...” மூஞ்சியில் ஒரு குத்து விட்டு அவளை கீழே சாய்த்தாள்.

ஒருத்தனின் கண்ணில் பலமாக குத்தியவள், மற்றவனை ‘குறி’ பார்த்து அங்கே உதைக்க, மறு நிமிடம் அனைவரும் ஆளுக்கொரு திக்கில் அலறி விழுந்தார்கள்.

அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவள் ஓட முயல, கண்ணில் குத்து பட்டவன், அவள் கரத்தை பிடித்து இழுத்து, கன்னத்தில் ஓங்கி அறை விட, அவள் கண்களுக்குள் பொறி பறந்தது.

ஒரு ஆண்மகனின் சரீர பலம் முழுவதும் அவள் கரத்தில் இறங்க, பூமி தட்டாமாலை சுற்ற, மயக்கம் வரும்போல் இருந்தது. ஒருவன் எழுவதை கவனிக்காமல் தப்ப முயன்ற தன் முட்டாள்த்தனத்தை நொந்து கொண்டாள்.

‘எந்த காரணத்தைக் கொண்டும் முகத்தில் அடி படாமல் பாத்துக்கணும்’ பிரம்மா சொன்னது எங்கேயோ ஒலிப்பதுபோல் இருக்க, அதற்குள் மயங்கி சரிந்திருந்தாள்.

“பீமா...” அவள் இதழ்கள் முனக, அவளைத் தூக்க மூவரும் நெருங்க, புயலென உள்ளே நுழைந்திருந்தான் பிரம்மா.

“யாழினி..., முதல்ல அவளை பிடிங்க...” உத்தரவிட்டவன், அந்த இருவரையும், பினங்கழுத்தில் சுண்ட, வேரறுந்த

மரமாக இருவரும் கீழே சரிந்தார்கள்.

யாழினி, சாந்தியை துப்பாக்கி முனையில் மடக்க, உயிர் பயத்தை கண்ணில் தேக்கியவள், அசையாமல் நின்றாள். பாய்ந்து தன் மனைவியின் அருகே நெருங்கியவன், “காயு…” தவிப்பாய் குரல் கொடுத்தான்.

அவள் கன்னத்தில் பதிந்திருந்த விரல்தடம் அவனை புரட்டிப் போட, “யார்மேலே கை வச்ச…? உனக்கு எங்கே இருந்து அந்த தைரியம் வந்தது…?” கேட்டவன், சாந்தியில் அருகே சென்று அவள் தலைமுடியை கொத்தாக பற்றி, அவள் கன்னம் கன்னமாக அறைந்து தள்ளினான்.

யாழினி அவனை தடுக்கவே முனையவில்லை. ஒரு நொடி அவர்கள் தாமதமாக வந்திருந்தாலும், என்ன நேர்ந்திருக்கும் என்ற எண்ணம் ஓட, அசையாமல் நின்றாள்.

“சார், நீங்க அவங்களை பாருங்க. நான் இவளை கவனிக்கறேன்” தோய்ந்து விழுந்த சாந்தியை கைகளில் தாங்கியவள், அவனை அகற்றினாள்.

“இவ இனிமேல் சூரிய உதயத்தையே பாக்கக் கூடாது…” யாழினியிடம் கர்ஜித்தவன், கீழே விழுந்து கிடந்தவன்களையும் காலால் நாலு உதை விட்ட பிறகே மனைவியை கைகளில் அள்ளிக் கொண்டு அறைக்குச் சென்றான்.

அதற்குள் போலீஸ் போர்ஸ் வரவே, அவர்களை கைது செய்து அனுப்பிய யாழினி அங்கேயே தேங்கினாள்.

காயத்ரியை தங்கள் படுக்கையில் கிடத்தியவன், படுக்கைக்கு அருகே இருந்த ஜக்கில் இருந்த தண்ணீரை எடுத்து காயத்ரியின் முகத்தில் தெளித்து, மயக்கம் தெளிய வைத்தான்.

மயக்கம் தெளித்தவள், சோபையாக கண் திறக்க, அவள் கண்டது, தன் அருகே தவிப்பாய் அமர்ந்திருக்கும் பிரம்மாவைத்தான். அவள் கன்னத்தில் தீயை

வைத்தாற்போல் எரிந்தது. கூடவே அவள் கன்னம் வீங்கி இருக்க, அவள் கன்னத்தை மெதுவாக தன் கரத்தால் வருடினான்.

“சொல்றதை கேக்கவே மாட்டியாடி...?” அவன் கலங்கிப்போய் கேட்க, கண் விழித்தவள் அவனைப் பார்த்ததும் முகத்தில் மகிழ்ச்சியை காட்டினாள்.

கூடவே, “பீமா...” அழைத்தவள், அவன் சட்டையைப் பிடித்து இழுத்து, அவன் முகம் முழுக்க முத்தமிட, அவளுக்கு வாகாக சாய்ந்தவன், அவள்மேல் சரிந்தான்.

அவள் முத்தத்தில் அப்படி ஒரு வேகம். “உங்களை இனிமேல் பாக்கவே முடியாதுன்னு பயந்துட்டேன்...” அவள் தேகம் நடுங்க, அவள் முதுகின் அடியில் கை கோர்த்து அழுத்தமாக அணைத்தவன்,

“உன்னை அப்படி விட்டுடுவானாடி இந்த பிரம்மா...? அப்படி விட்டால், இந்த உடம்பில் இருக்கும் யூனிபாமுக்கும், முகத்தில் இருக்கும் மீசைக்கும் என்ன அர்த்தம்?” கேட்டவன், அவள் இதழ்களை வன்மையாய் தண்டிக்க, அவன் பல்த்தடம் கொடுக்கும் வலியையும் சுகமாய் ஏற்றாள்.

அவன் முத்தத்தில் சிறிதும் காமம் இல்லை. மாறாக அதில் தெரிந்தது முழு தவிப்பு மட்டுமே.

அவள் இதழ்களை தண்டித்தவன், “இனிமேல் அப்படி பேசின..., என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது...” தான் காயப்படுத்திய இதழ்களை இப்பொழுது ஒத்தடம் கொடுத்து சரி செய்ய, இமைகளை மூடி, அவன் செய்கைக்கு இசைந்தாள்.

அவள் இதழை விட்டு விலகியவன், வீங்கியிருந்த அவள் கன்னத்தில் மெதுவாக இதழ் பதிக்க, “ஸ்...” அவனது மெதுவான செய்கை கூட அவளுக்கு வலியைக் கொடுக்க, சன்னமாய் முனகினாள்.

“அந்த நாய்களை சும்மா விட மாட்டேண்டி. நான் கூட உன்னை தொட்டு அடித்ததில்லை. அவன்...” அவனது

அணைப்பில், அவன் மனக்கொதிப்பு புரிய, அப்பொழுதுதான் அவர்கள் நினைவே அவளுக்கு வந்தது.

அவனை சற்று விலக்கியவள், அவன் கண்களை சிறு பயமாய் ஏறிட, அவள் பயம் புரிந்தவன், “என்மேல் உள்ள ஏதோ கோபத்தில் உன்னை தொட்டுப் பார்க்க துணிஞ்சு இருக்காங்க. அவங்களை நான் பாத்துக்கறேன்” சொல்லும் வேளையே அவனது அலைபேசி இசைக்க, அவளை விட்டு விலகியவன், அலைபேசியை எடுத்தான்.

“சொல்லுங்க மோகன்…”.

“சார், ஐஜி ஆபீஸ்ல இருந்து கிளம்பிட்டார்…” அவன் சொல்லவே, “பத்து நிமிஷத்தில் அங்கே இருப்பேன்…” அலைபேசியை வைத்தவன், அவள் கன்னத்து காயத்துக்கு ஆயின்மெண்டை தடவினான்.

அவனது பேச்சிலேயே சற்று நிம்மதியானவள், “நீங்க போயிட்டு வாங்க” அவனிடம் உரைத்தாள்.

“உனக்கு துணைக்கு யாழினியை விட்டு போறேன். நான் இப்போ அங்கே இருந்தே ஆகணும்” அவளை விட்டுச் செல்ல வேண்டுமே என வருந்தினான்.

படுக்கையில் இருந்து இறங்கியவள், “டென்ஷன் ஆகாதீங்க…, உங்க ஹெல்த்க்கு அது நல்லதில்லை…” அவன் உடல்நிலையைப் பற்றி கவலை கொண்டாள்.

“நீ கிட்டே இருக்கும்போது மட்டும்தான் நான் டென்ஷன் இல்லாமல் இருக்கறேன். அதுவும், இவ்வளவு கிட்ட…, மூளைக்குள் எதுவுமே ஞாபகம் இருப்பது இல்லை. என் பேர் கூட எனக்கு நினைவுக்கு வராது…” முழு போதையில் உளறியவன், அவள் கண்களை ஏறிட்டான்.

அதில் வழிந்த காதல் அவளை சுருட்டிக் கொள்ள, தன் வெட்கம் சற்று விலக, அவனை அருகே இழுத்தவள், அவன் இதழில் தன் இதழ் பதிக்க, அவள் இடையில் கை கோர்த்து இறுக்கினான்.

ஒரு நிமிடம் தன் உலகம் மறந்தவன், அவள் விலகவே, "ரெஸ்ட் எடு, இந்த கேஸ் முடியிற வரைக்கும் எப்போ வீட்டுக்கு வருவேன்னே தெரியலை. ஒரு சின்ன குழந்தையை சின்னபின்னமாக்கிட்டாங்க..., அவங்களை தண்டிக்காமல் எனக்கு ரெஸ்ட் கிடையாது..." கண்கள் சிவக்க உரைத்தவன், வேகமாக வெளியேறினான்.

கீழே வந்தவன், "யாழினி..., நான் இந்த கேசை முடிக்கிற வரைக்கும் யாராவது ஒருத்தர் அவளோடவே இருங்க. நீங்க போனால், தனுவை வரச் சொல்லுங்க. பாத்துக்கங்க..., பொன்னம்மா வந்தால் அவளுக்கு சாப்பாடு கொண்டுபோய் கொடுக்கச் சொல்லுங்க. நீங்க எதையும் செய்ய வேண்டாம்" உரைத்துவிட்டு வெளியேறினான்.

தன் சொந்த வேலைக்கு யாழினியை பயன்படுத்துகிறோமோ என அவன் தயங்குவது அவளுக்குப் புரிந்தது. எத்தனையோ அதிகாரிகள், மார்க்கெட்டில் காய்கறி வாங்குவது முதல், அவர்கள் வீட்டு நாயை குளிப்பாட்டுவது வரைக்கும் வேலை வாங்க, பிரம்மாவின் மனிதநேயம் கண்டு வியந்தாள்.

ஐஜி வரும் முன்னர் மருத்துவமனைக்கு விரைந்தவன், அவர் வரவே, கடத்தப்பட்ட குழந்தைகள், பெற்றவர்கள் என அழைத்து சென்று காட்டினான். கூடவே அரசியல்வாதிகள், முதலமைச்சரே வர, அவன் நேரம் மின்னலாக கடக்கத் துவங்கியது.

இறுதியாக பாதிக்கப்பட்ட குழந்தைக்கு நீதி கிடைக்க வேண்டும், அதற்கு முதலைமைச்சர் நிதியில் இருந்து ஐந்து லட்சம் ரூபாயை அப்பொழுதே அவர் வழங்க, அந்த பெற்றவர்களில் அழுகையை அவனால் காண முடியவில்லை.

"ஐயா..., அவனை தண்டிக்கணும்..., எங்களுக்கு அது போதும். இந்த பணம் வேண்டாம்..." அவர்கள் அழ, "அவனை சட்டம் பாத்துக்கும்" உரைத்த முதலமைச்சர் கிளம்பவே, ஐஜி அவனை அழைத்தார்.

“அடிபட்ட அக்கியூஸ்ட் எங்கே இருக்காங்க…?” அவர் கேட்கவே, அவரை அழைத்துக் கொண்டு அங்கே சென்றான். அந்த குழந்தையின் மாமாவோ, தங்கள் குழந்தையை நாசம் செய்தவனை கொன்று போடும் வெறியில் சுற்றிக் கொண்டிருந்தார்.

ஐஜி குற்றவாளிகளை பார்த்துவிட்டு, “கேஸ் ஃபயில் பண்ணியாச்சா? நெக்ஸ்ட் மூவ் என்ன…?”

“இவன் டிச்சார்ஜ் ஆன உடனே மேஜிஸ்ட்ரேட் முன்னாடி புரடியூஸ் பண்ணனும்”.

“அந்த குழந்தையோட ரிலேட்டிவ் ரொம்ப வேகமா இருக்காங்க…, சோ பாத்து…” அவனை அழுத்தமாக ஏறிட்டுவிட்டே சென்றார்.

அவரது பார்வைக்கான பொருள் அவனுக்கும் புரிந்தது. ‘அவனை உயிரோடு வை…’ என உத்தரவிட்டதை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவன் முட்டாளா என்ன?

‘அவன் உயிர் இருக்கும் ஆனா…’ எண்ணியவன் தன் கோபத்தை வெளிப்படுத்தவில்லை.

மற்ற குழந்தைகளை பெற்றவர்களிடம் ஒப்படைத்தவன், பாதிக்கப்பட்ட சிறுமியை தேடிச் சென்றான். “ஏன் சார்…, குற்றவாளிக்கு பாதுகாப்பு கொடுப்பதுதான் உங்க சட்டமா? அவனை எங்ககிட்டே விடுங்க, அவனை வெட்டி கொன்னுட்டு நான் ஜெயிலுக்குப் போறேன்” குழந்தையின் மாமா கொதிக்க, அவனை அமைதியாக ஏறிட்டான்.

“தப்பு செய்த அவனுக்கு தண்டனை கொடுக்காமல், விடுதலை கொடுக்கறேன்னு சொல்றீங்களே…” கேட்டவன் அர்த்தம் பொதிந்த ஒரு பார்வையை அவரை நோக்கி வீசிவிட்டு வெளியேறினான்.

அவன் பார்வைக்கான அர்த்தம் புரியாமல் திகைத்தவர், அவன் பின்னால் செல்ல, பிரம்மாவோ, கேண்டீன் சென்றவன், ஒரு டீயை வாங்கிப் பருகத் துவங்கினான்.

அவன் செய்கையை பார்த்தவர், குழப்பமான மனநிலையில் அங்கே இருந்து அகன்றார்.

அதே நேரம் யாழினியிடம் இருந்து அழைப்பு வர, ‘வீட்டில் ஏதும் பிரச்சனையோ என எண்ணியவன் வேகமாக அழைப்பை ஏற்றான்.

அவன் அழைப்பை ஏற்கவே... “சார்... அன்னைக்கு பஸ்ட்டேன்டில் பார்த்தோமே மூணு காலேஜ் பொண்ணுங்க. அந்த பையன் மறுபடியும் அவங்க கிட்டே பிரச்சனை பண்றானாம்.

“போலீஸ் என்ன பெரிய பருப்பா... அவங்க என்ன உனக்கு இருபத்திநாலு மணிநேரமும் காவலுக்கு இருப்பாங்களா? அப்படி இப்படின்னு ரொம்ப டீஸ் பண்றானாம். போனில் ஒரே அழுகை...” அவள் சொல்ல, அப்படியே அந்த நாயை கொன்று புதைக்கும் ஆத்திரம்.

ஏற்கனவே ஒரு சின்னப்பெண் சிதைந்து போயிருக்க, அந்த வெறியே மனதில் இருந்து அடங்காமல் இருக்கையில் இது... அவன்மட்டும் கைக்கு கிடைத்தால் சக்கையாக பிழிந்து போடும் ஆத்திரம்.

“யாழினி, தனுவை உங்க இடத்தை பாக்கச் சொல்லிட்டு, நேரா ஜிஹெச் வாங்க. அதே நேரம் அந்த நாய் வீட்டில் இருக்கான்னு பாக்கச் சொல்லுங்க...” உரைத்தவன் தன்ன அலைபேசியை அணைத்துவிட்டு அவளது வருகைக்காக காத்திருந்தான்.

அதே நேரம், ஜீப்பில் சற்று சாய்ந்தவன், இமைகளை அழுத்தமாக மூடி, இடக்கை நடுவிரலால், இடக்கண் புருவத்தை அழுத்தமாக வருடியவன், ஆழமாக எதையோ சிந்தித்தான். அவன் கண் மணிகள் மூடிய இமைகளுக்குள் உருள, அவன் தீவிர சிந்தையில் இருப்பது கந்தனுக்குத் தெரிந்தது.

அவனது தேடல் ஒரு நிறைவுக்கு வர, சட்டென கரத்தை விலக்கியவன், வேகமாக தன் அலைபேசியை எடுத்து சில எண்களை அழுத்திவிட்டு காத்திருந்தான்.

“சார்...” அந்தப்பக்கம் விறைப்பான, அதே நேரம் சற்று கம்பீரமான ஒரு குரல் கேட்கவே,

“எங்கே இருக்கீங்க?”

“நீங்க கூப்பிடும் தூரத்தில்தான் இருக்கேன் சார்...” அந்த டெடிக்கேஷன் அவனை அசத்த, “பத்து நிமிஷத்தில் ஜிஹெச் வாங்க... உங்களுக்கு ஒரு சின்ன வேலை இருக்கு... செய்வீங்கல்ல?” அவன் ஆழம் பார்த்தான்.

“என் ‘கன்’(gun) ரெடியா இருக்கு சார்...” அவன் சொல்லவே, “அவ்வளவு பெரிய வேலை இல்லை, ஆனா கொஞ்சம் பெரிய வேலை வாங்க” அலைபேசியை வைத்தான்.

யாழினியும், அவனும் வரவே இருவரும் விரைப்புக்கு சென்று தளர, அவனது நேம் பேட்ஜ் ‘கிருஷ்ணா” எனக் காட்டியது.

“கந்தன்...” உரைத்தவன் ஜீப்பில் ஏற, மற்றவர்களும் ஏறிக் கொண்டார்கள். பிரம்மா யாழினியைப் பார்க்கவே, “சார், அந்த மாதவன் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் வீட்டுக்கு போயிருக்கான். இன்னும் வெளியே போகலை.

“வீட்டில் அவனோட அம்மாவும் தங்கச்சியும் இருக்காங்க...” அவள் சொல்ல, “அவங்க இருக்காங்கல்ல... நமக்கு அது போதும். என்ன கிருஷ்ணா... கொஞ்ச நேரம் கோகுல கிருஷ்ணனா மாறணும் முடியுமா?” ரிவர்வியூ வழியாக அவனைப் பார்க்க, “ரெடி சார்...” நெஞ்சை நிமிர்த்த, பிரம்மா அவனை ஆழமாகப் பார்த்தவன் தலை அசைத்தான்.

யாழினியோ, ‘இன்னைக்கு என்னவோ நடக்கப் போகுது...’ தலையசைக்க, அவன் பார்வை சட்டென அவள்மேல் பாய, ‘எனக்கு எதுவுமே தெரியாது...’ வெலவெலத்துப் போனாள்.

“யாழினி, என்ன கேஸ்ன்னு அவனுக்கு சொல்லிடுங்க... அவன் ப்ரிப்பேர் ஆகணுமே” சாதாரணமாக உரைக்க, அவளால் அதை அவ்வளவு சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

அவள் சொல்லி முடிக்கவே, பிரம்மாவுக்கு என்ன வேண்டும் என்பது கிருஷ்ணாவுக்கு நொடியில் புரிந்து போனது. ஜீப் அந்த மாதவனின் வீட்டின் முன்னால் நிற்க, விருட்டென இறங்கி, திறந்திருந்த வீட்டின் உள்ளே வேகமாக நுழைந்தான்.

யாழினி வேகமாக அழைப்புமணியை ஒருமுறை அழுத்திவிட்டு அவன் பின்னால் ஓடினாள். கிருஷ்ணா பிரம்மாவின் பின்னால் சென்றிருந்தான். அந்த வீட்டில் இருந்த மூவருமே, அவன் அழைக்க அவசியமே இன்றி அங்கே குழுமி இருக்க,

சென்ற வேகத்தில், சோபாவில் அமர்ந்திருந்த மாதவனை எட்டி காலால் மிதிக்க, ஒரு நிமிடம் என்ன நடக்கிறது என்றே அங்கே இருந்த யாருக்கும் புரியவில்லை.

“ஏண்டா நாயே… போலீசுன்னா பெரிய பருப்பான்னு கேட்டியாமே… எங்கே இப்போ கேளு பாப்போம்…” அவனை எழ விடாமல், அவன் நெஞ்சிலேயே மிதிக்க, அவன் காலை ஓடிவந்து பிடித்தார் மாதவனின் தாய்.

“கிருஷ்ணா…” சட்டென விலகி நின்றவன் குரல் கொடுக்க, அந்த கிருஷ்ணனோ, மாதவனின் தங்கையை கையைப் பிடித்து இழுத்து, அவளை முதுகோடு திருப்பி அணைக்க, “அம்மா…” அவள் வீறிட்டாள்.

“சார்… நீங்க அராஜகம் பண்றீங்க… அவளை விட்டுடுங்க…” மாதவன் பொங்கியெழ, அவனை அடுத்த அடியில் கீழே சாய்த்தவன்,

“என்னது அராஜகமா…? அப்போ நீ ரதிகிட்டே காட்டுவது என்ன பொது சேவையா? சொல்லுடா…?” அந்த வீடே அதிர கத்தியவன், “கிருஷ்ணா…” அடுத்த அழைப்புக்கு, மாதவனின் தங்கையை அங்கே இருந்த ஒரு அறைக்குள் இழுத்துச் செல்ல முயன்றான்.

அதைப்பார்த்த மாதவனின் தாய்… “ஐயோ… நீங்கல்லாம் யார்…? ஏன் இப்படி பண்றீங்க?” கேட்டவர் பாய்ந்து சென்று தன் மகளை, கிருஷ்ணாவின் கையில் இருந்து பிடுங்கிக்

கொள்ள முயன்றார். அவனது பிடி இரும்பாக இருக்க, அவனை அடித்தார்... அப்பொழுதும் அவன் அசையவே இல்லை.

மாதவன் என்ற சிலைக்கு அப்பொழுதுதான் உயிர்வர, “சார்... இனிமேல் அவ பக்கமே திரும்ப மாட்டேன். என் தங்கையை விட்டுடுங்க” அப்படியே அவன் காலில் விழுந்து விட்டான்.

“கிருஷ்ணா...” அடுத்த குரலுக்கு, “சாரி...” அந்த பெண்ணுக்கு மட்டும் கேட்கும் விதத்தில் முனகியவன் விலகி நிற்க, அவள் தன் தாயை கட்டிக் கொண்டாள். அவள் தேகம் மொத்தமும் நடுங்கிக் கொண்டிருந்தது.

அங்கே என்ன நடக்கிறது என்றே தெரியாமல் அனைவரும் ஸ்தம்பித்து இருக்க, “பேன்க் நிறைய பணம் கொடுத்து பையனை ஊர் மேய வளத்து விட்டிருக்கியா? ஒரு பொண்ணை எப்படி மதிக்கணும்னு சொல்லிக் கொடுக்கல?

“இங்கே நடந்ததுக்கு என்ன அர்த்தம்னு உன் தெருப்பொறுக்கி பையனையே கேள். இன்னொரு முறை அவன் பார்வை அந்த பொண்ணு பக்கம் திரும்புச்சுன்னு அவ சொன்னா... உனக்கு இந்த ஜென்மத்துக்கு கொள்ளி வைக்க பிள்ளை இருக்க மாட்டான்.

“சுண்ணம்புக்காவாயில் வச்சு செதச்சிருவேன். ஒரு எலும்பு கூட மிஞ்சாது புரியுதா?” ஹப்பா... பழைய பிரம்மாவின் ருத்ரதாண்டவம்... யாழினி வெலவலத்து, அதிர்ந்து, ஒதுங்கி நின்றுவிட்டாள்.

இதுவே பழைய பிரம்மாவாக இருந்திருந்தால், கிருஷ்ணாவின் ரோலையும் கொஞ்சம் கூட தயங்காமல் அவனே ஏற்றிருப்பான் என்பது புரிய, மனுஷன் ஒரு கல்யாணத்தில் இப்படி மாறிட்டாரே என எண்ணிக் கொண்டாள்.

அப்படியே வாசலுக்குச் செல்ல திரும்பியவன், தாயின் அணைப்பில் ஒடுங்கி அழுதுகொண்டிருந்த அவளைக்

காணவே, ஆழமாக மூச்செடுத்து தன்னை நிதானத்துக்கு கொண்டு வந்துவிட்டு, அவள் அருகே சென்றான்.

கிருஷ்ணா அங்கிருந்து வெளியேறியிருக்க, அவர்கள் அருகே சென்றவன், "உங்க புள்ளைக்கு வாயால் சொன்னா புரியலை. அதான்..." அவன் இப்படி யாருக்கும் விளக்கம் கொடுத்ததே இல்லை. முதல்முறையாக அதை செய்ய முயல, அது அவனுக்கு வரவும் இல்லை.

யாழினியைப் பார்க்கவே, அவள் விஷயங்களைச் சொல்ல, அம்மாவும் தங்கையும் அவனை அற்ப புழுவைப்போல் பார்க்க, கூனிக் குறுகிப் போனான் மாதவன்.

அவனைப் பார்த்தவாறே... "ஒரு பிடிக்காத ஆம்பளை உன் கையைப் பிடித்து இழுத்தால் எப்படி இருக்குன்னு உன் அண்ணன்கிட்டே நல்லா விலாவரியா விளக்கு... அப்போவாவது அந்த" *** வாயில் வந்த கெட்ட வார்த்தையை அங்கே இருக்கும் பெண்களுக்காக முயன்று அடக்கி,

"அம்மா... இதெல்லாம் வேற வழியே இல்லாமல்... ஒரு கட்டத்துக்கு மேலேயும் முடியாமல் நடந்தது. உங்க புள்ளைக்கு எடுத்துச் சொல்லுங்க... இல்ல..." மாதவனைத் திரும்பி பார்த்த பார்வையில், இதற்கு முன்னர் நான் சொன்னவை அனைத்தும் நடத்தி முடிப்பேன் என்ற செய்தி இருக்க, அங்கிருந்து வெளியேறினான்.

மாதவன் தலையில் கை வைத்து, தரையோடு தரையாக வீழ்ந்து கிடக்க, தங்கையின் முகத்தை அவன் எப்படி ஏறிட்டு பார்ப்பான்? மாதவனின் கண்களில் பழிவெறி இல்லாமல், பெரும் குற்றவுணர்வும், பயமும் தாண்டவமாட, இனிமேல் அவன் இந்தியாவிலேயே இருக்க வாய்ப்பு கம்மி என்பது பிரம்மாவுக்குத் தெரிந்தது.

அவனது தந்தை வெளிநாட்டில் தானே இருக்கிறார்... அங்கே அவரிடம் அவனும் செல்லலாம் என பிரம்மாவின் உள்ளுணர்வு சொன்னது. அவனது உள்ளுணர்வுகள்

என்றும் பொய்ப்பதில்லை என்பதால், அடுத்த வேலையை பார்க்கச் சென்றான்.

ஜீப்பில் ஏறியவன் கிருஷ்ணாவை பார்க்க, “இன்னைக்கு நாம பாக்கவே இல்லை சார்…” அவன் பட்டென உரைக்க, பிரம்மாவின் கண்களில் அப்படி ஒரு மெச்சுதல் பார்வை வந்து போனது.

யாழினியே கூட வியந்து போனாள். இப்படி ஒரு காரியத்துக்கு அவன் கிருஷ்ணாவை அழைத்து வந்தான் என்றால், நிச்சயம் அவனது நம்பிக்கைக்கு பாத்திரமானவன் என்பது புரிய, அவன் செய்ததற்கு அவன்மேல் கோபம் எல்லாம் வரவில்லை.

அதேபோல், தனக்கு கீழே வேலை செய்பவர்களின் முழு வரலாறும் பிரம்மாவுக்கு அத்துப்படி என்பதால், கிருஷ்ணாவால் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு எந்த ஆபத்தும் நேரப்போவதில்லை என்பதையும் அவள் தெளிவாகவே உணர்ந்திருந்தாள்.

ஆனால்… அந்த மாதவனின் தவறை உணர்த்த, அந்த சின்னப்பெண்ணை பயன்படுத்தியதை நினைத்தால் அவளுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், சில சூழ்நிலைகளில், உடனடி ஆக்ஷன் வேண்டும் என்றால், இப்படி விஷப்பரீட்சைகள் வைத்துதான் ஆகவேண்டும் என்பதால், மனதை தேற்றிக் கொண்டாள்.

“யாழினி, ரெண்டு நாள் கழித்து அந்த பொண்ணை மப்டியில் போய் பாத்து பேசிட்டு வாங்க…” அவன் சொல்ல, மயக்கம்போட்டு விடாமல் இருக்க மிகுந்த சிரமப்பட்டாள் யாழினி.

பிரம்மா நடந்து முடிந்த ஒரு கேசுக்கு கவலைப் படுவதா?’ எண்ணினாலும், ‘இந்த பிரம்மா கூட அசத்தல்தான்’ தன்னை மீறி நினைத்துவிட்டு, அமைதியாகிவிட்டாள். ஆனால் இப்பொழுது இந்த பிரம்மாவை அவளால் வெறுக்க முடியவில்லை என்பது மட்டும் உண்மை.

மற்ற குற்றவாளிகளுக்கு வேண்டிய புரொசீஜர் சரியாக நடக்கிறதா என பார்வையிட்டவன், அன்று முழுவதும் பிஸியாகவே இருந்தான். மறுநாள் அந்த குற்றவாளியை மருத்துவமனையில் இருந்து விடுவித்து, கோர்ட்டுக்கு கொண்டு செல்ல வேண்டி இருந்தது.

அதை அறிந்த குழந்தையின் மாமா, பிரம்மாவைத் தேடி வந்தார். “சார்…, அவனை நாளைக்கு ஹாஸ்பிட்டல்ல இருந்து கூட்டி போறீங்களாமே. எங்க பிள்ளை சாகாமல் செத்துட்டு இருக்கு. நீங்க அவனுக்கு உக்கார வச்சு உண்டக்கட்டி சாப்பாடு போடப் போறீங்களா?” கோபமாய் கத்தினார்.

“காலையில் பத்து நிமிஷம் அவன் ரூமுக்கு காவல் இருக்கும் போலீஸ் அங்கே இருக்க மாட்டார். அவன் உயிர் போகக் கூடாது. தண்டனை என்ன கொடுக்கணுமோ கொடுங்க. உங்க பொண்ணை மனசில் நினைச்சுக்கோங்க” உரைத்தவன் சென்றுவிட, திகைத்துப்போய் நின்றார்.

பிரம்மா பேசிய அனைத்தையும் கோர்வையாக எண்ணியவர், அவனுக்கு கொடுக்க வேண்டிய தண்டனை என்னவென்று முடிவெடுத்தார். தக்க தருணம் பார்த்திருந்தவர், அந்த குற்றவாளியின் அறை இருக்கும் தளத்தை நோட்டமிட, பிரம்மாவிடம் இருந்து அழைப்பு வரவே, வெளியே காவலுக்கு இருந்த காவலர் அங்கிருந்து வெளியேறி சென்றார்.

அந்த நேரம் உள்ளே நுழைந்த அவர், அவன் கழுத்தை வெட்டவே முயன்றார். ஆனால், பிரம்மாவின் பேச்சு நினைவுக்கு வர, அந்த குற்றவாளியின் ஆண்மையை துண்டித்தவர், நொடியில் அங்கே இருந்து வெளியேறினார்.

உறக்கத்தில் இருந்த அவனுக்கு, நொடியில் நடந்தவை உரைக்க, அவனது மரண ஓலம் அந்த மருத்துவமனையையே நடுங்க வைத்தது. குழந்தையின் மாமா அறையில் இருந்து வெளியேறியதைப் பார்த்த

காவலர் அவரை கைது செய்ய, சந்தோஷமாகவே அவருக்கு உடன் பட்டார்.

*****

# பகுதி – 45.

நொடியில் மருத்துவமனையில் தீ பற்றிக்கொண்ட உணர்வு. அந்த தளத்தை நோக்கி ஓடிய மருத்துவர்கள், உடனடியாக அவனுக்கு முதலுதவி செய்ய, பிரம்மா அந்த அறையை நோக்கி கிட்டத்தட்ட ஓடினான்.

“என்ன நடந்தது...?” ஏதும் அறியாதவன்போல் வினவ, வெளியே காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த காவலர் நடுங்கிப் போனார்.

“சார், உங்களைப் பாக்க நான் வந்த கேப்ல..., இவன்...” குழந்தையின் மாமாவை அடிக்க முயல, வேகமாக அவனைத் தடுத்தான். கூடவே, “உங்களை தானே நான் வரச் சொன்னேன். இன்னொரு கான்ஸ்டபில் எங்கே?” அவன் கோபத்தில் உயிர் நடுங்கிப் போனான்.

“சார்..., அவன் இன்னைக்கு ஹால்ப் டே லீவ்...” எச்சில் விழுங்க, “அவன் இல்லன்னா நீங்க அக்கியூஸ்ட்டை விட்டுட்டு அப்படியே வருவீங்களா? இப்போ இதுக்கு யார் பதில் சொல்வது...?” மேல் அதிகாரிகளுக்கு அவன்தானே பதில் சொல்லியாக வேண்டும்.

“சார்..., நான் பிள்ளைகுட்டிக் காரன். இந்த வேலை இல்லன்னா முடியாது. வயசான அம்மா அப்பா...?” விட்டால் அங்கேயே அழுதுவிடுவேன் என நின்றிருந்தார்.

அந்த குழந்தையின் மாமாவோ, பிரம்மாவின் திடீர் மாற்றம் புரியாமல் விழித்தாலும், குற்றவாளிக்கு தண்டனை கொடுத்ததில் அவருக்கு அவ்வளவு சந்தோசம். ‘என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும்.’ எண்ணியவர் அசையாமல் நின்றார்.

“இவரை கூட்டி போய் ‘செல்’ல வைங்க..., நான் அவனை பாக்கறேன்” உரைத்தவன், குற்றவாளியின் அறைக்குள் நுழைய, அவனை உடனடியாக ஐசியூக்கு மாற்ற வேண்டி கொண்டு சென்றார்கள்.

இனிமேல் அவனது எதிர்காலம் கேள்விக்குறிதான் என மருத்துவர்கள் உரைக்க, அவன் கண்களில் தெரிந்த விபரீத ஒளியை மற்றவர்கள் கவனிக்கவே இல்லை.

அவனோடு ஐசியூக்குச் சென்றவன், வெளியே அமர, அந்த நேரம், தனக்குத் தெரிந்த ஒருவருக்கு ஹார்ட் ஆப்பரேஷன் முடிந்திருக்கவே, அவரைக் காண வந்த ஷீபா வேகமாக அவனை நெருங்கினார்.

“பிரம்மா..., எல்லாம் ஞாபகம் வந்துடுச்சு போல...?” அவனையே கூர்மையாகப் பார்க்க, தன் இருக்கையில் இருந்து அசையாமல் அவரை ஏறிட்டான்.

“ஒரு உயிரை எடுக்கக் கூடாது..., அது தப்பு. ஆனா பாருங்க..., இங்கே உயிர் போகவே இல்லை. அதோட, இதில் என் பங்கு எதுவுமே இல்லை” அவன் அசால்ட்டாக உரைக்க, கைகளை மார்புக்கு குறுக்காக கட்டியவர், அசையாமல் அவனைப் பார்த்தார்.

அவன் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தவர், “எப்போ பழைய நினைவுகள் திரும்பியது? வேறு ஏதாவது கஷ்டமா இருக்கா...?” அவனிடம் கேட்க, சில நொடிகளை அமைதியில் கழித்தான்.

“ரெண்டு வாரம் ஆச்சு...” அவர் முகத்தை தயங்காமல் ஏறிட்டான்.

“இவ்வளவு வயலெண்ட் அவசியமா...?” இப்பொழுது அவனிடம் பேச முடியும் என அவருக்குத் தோன்றியது. பழைய நினைவுகள் அவனுக்குத் திரும்பி இருந்தாலும், முன்னர் அவன் பார்வையில் வழியும் அலட்சியமும், தெனாவெட்டும் காணாமல் போயிருக்கவே அவனிடம் பேசினார்.

அவர் அப்படிக் கேட்கவே, சட்டென அவன் விழிகளில் கோபம் கவிழ, “வயலெண்ட்..., அவன் என்ன அப்பாவியா...? பிஞ்சிலேயே மனசில் வக்கிரம் சுமந்துட்டு இருப்பவன். அவனை இப்போ அடக்கலன்னா எப்பவும் அடக்க முடியாது...” கை முஷ்டியை இறுக்கினான்.

“சிறுவர் சீர்திருத்தப் பள்ளி ஏன் இருக்கு?” அவனிடம் எதிர் கேள்வி கேட்டார்.

“ஆமா..., அங்கே இவனை தூக்கி வச்சு..., பத்தாயிரம் ரூபாய் பணமும், அவன் பிழைக்க ஒரு தையல் மெஷினும் கொடுத்து அனுப்பணும்னு சொல்றீங்க அதானே?” காட்டமாக வார்த்தைகள் வந்து விழ, ஷீபாவால் பதில் சொல்லவே முடியவில்லை.

“கொஞ்ச நாளைக்கு முன்னாடி, போரூரில் ஒரு இஞ்சினியர்..., ஒரு குழந்தையை நாசம் செய்தானே..., அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தது? மனிதாபிமானம், மண்ணாங்கட்டின்னு சொல்லி வாதாடி அவனை வெளியே விட்டு என்ன ஆச்சு?

“பெத்த அம்மாவையே நகையை கொள்ளையடிச்சுட்டு கொலை பண்ணிட்டு போனான். என்ன செய்ய முடிந்தது? உள்ளே உக்காரவச்சு பிரியாணி வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலைதான் ஆச்சு.

“அவனுக்கே அப்போவே மரண தண்டனைன்னு விதிச்சிருந்தால், இப்போ இன்னொரு யஷ்வந்த் உருவாகி இருப்பானா? தப்பு செய்ய முன்னாடி ஒரு நிமிஷம் மனசில் அந்த பயம் வராது?” வார்த்தைகள் அனைத்தும் இரும்பாய் வெளியேற, அவனையே பார்த்திருந்தார்.

“இப்படிப்பட்டவர்கள் மனசில் பயம் இல்லாததால் தானே இப்படிப்பட்ட தப்பெல்லாம் செய்யறாங்க. இவங்க மனசுக்குள் பயம் வரணும். ஒரு பொண்ணை அவ்வளவு ஈஸியா தொட்டுட்டு தப்பிக்க முடியாதுன்னு பயம் வரணும். வர வைப்பேன்...” வார்த்தைகள் ஒவ்வொன்றும் வேகமாக வந்து விழுந்தாலும், அவன் குரல் சற்றும் உயரவில்லை.

“அவன் சின்ன பையன்...”

“சின்ன பையன் செய்யும் வேலையா அது? பதினேழு வயசு பையன்னுக்கு, பன்னிரண்டு வயசு குழந்தையை, குழந்தையா பாக்க முடியலன்னா, அவன் மனித மிருகம்னு

அர்த்தம். அவன் மனசில் அவ்வளவு அழுக்கும், சாக்கடையும் ஓடுதுன்னு அர்த்தம்.

“அவனை அரஸ்ட் பண்ணிட்டு வந்த பிறகு, அவன் அப்பன் என்ன சொன்னான் தெரியுமா? ‘நாலே மாசத்தில் உன்னை வெளியே கொண்டு வந்துடறேன்’னு கெத்தா சொல்றான். அப்படிப்பட்ட அப்பனோட மகன் திருந்துவான்னு எந்த நம்பிக்கையில் நம்ப சொல்றீங்க?

“பொண்ணு ஆபாசமா உடை உடுத்துறா. உடம்பு தெரியிற மாதிரி ரோட்டில் அலையிறா. அப்படி அலைந்தால் ஆம்பளை கை வைப்பான்னு சொல்றாங்களே... பன்னிரண்டு வயசு பிள்ளையிடம் எது அவனைத் தூண்டியது?

“இதுக்குப் பின்னால் அந்த குழந்தையின் தவறு என்ன இருக்கு? அப்போ அவன் மனசு சாக்கடையா இருக்குன்னு தானே அர்த்தம்? தெரியாமல், உணர்ச்சிவசப்பட்டு செய்யும் தவறுக்குதான் ஜெயிலும், தண்டனை காலமும். அது அவங்க மனசை பக்குவப்படுத்தும், வருத்தப்பட்டு திருந்த வைக்கும்.

“இந்த ஜென்மங்கள் எல்லாம், தன் மன வக்கிரத்தை வளத்துக்கும். வெளியே வந்தால் என்ன தப்பு செய்யலாம்னுதான் சிந்திக்கும். தப்புக்கு தண்டனைதான் தீர்வு என்னும் நிலை வந்தால்தான் இங்கே எல்லாம் மாறும்.

“ஒரு டாக்டர் கையில் கத்தியை கொடுப்பதுக்கும், ஒரு குற்றவாளியின் கையில் அதை கொடுப்பதுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கு. ஒண்ணு உயிரை காக்கும். இன்னொன்று உயிரை எடுக்கும். அதே மாதிரி, இந்த யூனிபாம் குற்றவாளிக்கு சிம்ம சொப்பனமா இருக்கணும். இருக்க வைப்பேன்.

“என் கட்டுப்பாட்டில் இருக்கும் இடம் அதன் போக்கில் இருக்கணும். அதில் கொஞ்சம் மாறினாலும், அதை பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டேன்...”

அவன் பேச்சில் இருந்த நியாயமும், உண்மையும் சுட, அதற்குமேல் அவனிடம் வாதிக்க முடியவில்லை.

“இதற்கு நீங்க அவனை கொன்னிருக்கலாம்...” அவரால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

“மரண தண்டனை அவனுக்கு விடுதலை. இது...” தோளைக் குலுக்க, அவனை அமைதியாக ஏறிட்டார்.

“நான் செய்யிறது தப்பில்லை..., நியாயம். என் கோர்ட் நியாயம். ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாதுன்னு சட்டம் சொல்லலாம். ஆனா..., ஒரு குற்றவாளி கூட தப்பிக்கக் கூடாது என்பதுதான் என் நியாயம்.

“எங்கே நீங்களும் ஒரு பெண் தானே. இந்த குழந்தையோட செய்தி கேள்விப்பட்டு, ஒரு நிமிஷம், அவனை எல்லாம் நிக்க வச்சு ‘அங்கேயே’ சுடணும்னு உங்க ரத்தம் கொதிக்கல?” அவன் அழுத்தமாக அவரை ஏறிட, மௌனமாய் அதை ஆமோதித்தார்.

“உங்க அமைதியே என் வாதம் சரின்னு சொல்லுதே. உங்களால் அதைச் செய்ய முடியாது. செய்தால் சட்டம் உடனே உங்களை தண்டிக்க வரும். நான் செய்தால் ஜஸ்ட் விசாரணை கமிஷன்தான். அதை எப்படி டீல் பண்ணனும்னு எனக்கு நல்லாவே தெரியும்” அவன் சொல்ல,

“ஏது..., விட்டால் என்னையவே உங்களுக்கு சப்போட் பண்ண வச்சுடுவீங்க போல?” சூழ்நிலையின் இறுக்கம் அதிகமாவதை உணர்ந்தவர், அதை தவிர்க்க முயன்றார்.

“ஹா..ஹா..ஹா..., அப்போ இப்போ சப்போட் பண்ணலைன்னு சொல்றீங்களா? இல்லையே..., உங்களோட நிதானம் எனக்கு வேற கதை சொல்லுதே. இல்லைன்னா இந்நேரம் என் காது ஜவ்வு கிழியிற அளவுக்கு சத்தம் போட்டிருக்க மாட்டீங்க?” முன்னர் அவர் கோபம் கொண்டு சாடியதை அவன் சுட்டிக் கட்ட, ஷீபாவின் இதழ்களில் மெல்லிய புன்னகை.

“மேரேஜ் லைப் உங்களை கொஞ்சம் பக்குவப்படுத்தியிருக்கு போல?”.

“பொண்டாட்டி கிட்டே கெஞ்சிகிட்டு நிக்கலாம்னு நீங்கதான் சொன்னதா ஞாபகம். கெஞ்சவே வைத்த பிறகு, நிதானம் எல்லாம் சாதாரணம். அதைவிட, கொஞ்சமே கொஞ்சம் மாறிக்கலாம்னு நினைக்கறேன்” அவன் இதழ்களில் நெளியும் மெல்லிய புன்னகை அவனை புது மனிதனாக அவருக்கு அறிமுகப்படுத்தியது.

பழைய பிரம்மாவுக்கு சிரிப்பு என்றால் என்னவென்றே தெரியாது. சிரிப்பு கிலோ என்ன விலை என்று கேட்பவன். அப்படிப்பட்டவன் வாய்விட்டு புன்னகைத்தால், அவன் மாறியிருக்கிறான் என்பது தானே பொருள்.

“காயத்ரி எப்படி இருக்கா…? உங்க அம்மாகிட்டே பேசிட்டீங்களா?” அவர் கேட்க, ‘இதற்கு என்ன பதில் சொல்வது’ என எண்ணிக் கொண்டிருக்க, அவன் பதில் சொல்ல மறுப்பதைப் பார்த்தவர்,

“தென் ஓகே…, நான் கிளம்பறேன்…” அவர் எழுந்துகொள்ள,

“டாக்டர்…” அவரை அழைத்து தேக்க, அவனை திரும்பி ஏறிட்டார்.

“காயத்ரி என்னை பிரம்மாவா ஏத்துக்க தயங்கறா…, பயப்படுறா…, என் நினைவுகளை வெறுக்கறா…, அதை எப்படி மாற்ற…, எப்படி புரிய வைக்கன்னு தெரியலை…” அவன் தயங்கி இழுக்க, இப்பொழுது அவனை வியப்பாய் ஏறிட்டார்.

“அப்படின்னா நீங்க நல்ல கணவனா அவங்க மனசில் இடம் பிடிக்கலைன்னு அர்த்தம்…” அவர் நெற்றியடியாக உரைக்க, அவன் முகம் நொடியில் சுருங்கிப் போனது.

அதைப் பார்த்தவர், “ஹப்பா…, ஒரு பேச்சுக்கு சொன்னால் முகம் அப்படியே விழுந்துடுச்சு. அவங்க, நீங்க நினைவுகளை மறந்து இருந்திருத்தப்போ உங்க வாழ்க்கையில் வந்தாங்க. அப்போ நீங்க அவங்ககிட்டே

நடந்துக்கற மாதிரியே, பிரம்மாவா மாறிய பிறகும் நடந்துப்பீங்களான்னு சின்ன பயம் அவ்வளவுதான்.

“நீங்க ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நாசூக்கா உண்மையை சொல்லிடுங்க. சிதறு தேங்காய் மாதிரி எதையும் போட்டு உடச்சுடாதீங்க. அவங்க என்ன மனநிலையில் இருக்காங்கன்னு நமக்குத் தெரியாதே” உரைத்தவர், மெதுவாய் முன்னால் நடந்தார்.

சில அடிகள் சென்றவர்..., அவன் பக்கம் திரும்பி, “பிரம்மாவை லவ்வர் பாயா பாக்க கூட நல்லாத்தான் இருக்கு...” அவர் சொல்லவே, அவர் இப்படிச் சொல்வார் என்பதை எதிர்பாராததால், அவன் முகத்தில் சட்டென சிறு தடுமாற்றம் வந்து விரவியது.

அதைப் பார்த்தவர், “யூஸ் கர்ச்சீப்...” சன்னமாய் சிரித்தவர் உரைத்துச் செல்ல,

‘கர்ச்சீப்...’ சிந்தித்தவனுக்கு, அவர் உரைத்து சென்றதின் அர்த்தம் புரிய, ‘அப்படியா வழியறோம்...?’ சிந்தித்தவன், ‘நானா இப்படியெல்லாம் யோசிக்கறேன்?’ தன்னைக் குறித்தே வியந்தான். ஆனாலும், அந்த உணர்வும் பிடித்தது.

உள்ளே சென்றிருந்தவனுக்கு சுய நினைவு திரும்பும் வரைக்கும் அங்கேயே இருந்தவன், அதன் பிறகுதான் வீட்டுக்குத் திரும்பினான். இன்னும் முடிக்க வேண்டிய வேலை இருக்கிறதுதான், ஆனாலும் காயத்ரியைப் பார்த்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டதால் கிளம்பினான்.

இடையில் அவள் கன்னத்தில் வலி குறைந்துவிட்டதா என ஒரு முறை பேசியதோடு சரி. அதன் பிறகு அவனும் பேசவில்லை. அவளும் அழைக்கவில்லை. அவளது புரிதலில் மனம் நெகிழ்ந்து போனான்.

அவள் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால், தன்னால் இப்படி இரவு பகல் பாராமல் வேலையே கதியென இருக்க முடியுமா? அந்த அளவுக்கா என் வேலையையும் என்னையும் நேசிக்கிறாள்?’ அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

‘இந்த பிரம்மாவை இந்த அளவு மாற்றி இருக்கிறாளே…’ ஜீப்புக்கு விரைந்தவன், அதை கிளப்பிக் கொண்டு சென்றான்.

காயத்ரியோ, மனதுக்குள் முழுக்க பிரம்மாவின் நினைவு ஆக்கிரமிக்க, கூடவே மறுநாள் பிராக்டிக்கல் பரீட்சை வேறு இருக்க, அதற்கு முழுதாக படிக்கவும் முடியாமல், சற்று தவித்துக் கொண்டு இருந்தாள்.

அவனை ஒரு நொடியாவது பார்த்துவிட வேண்டும், அவன் அருகாமை வேண்டும் என மனம் தவித்தது. அவன் உடன் இருந்தால் மட்டுமே தன்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியும் என்னும் நிலை. நேரம் பத்தை நெருங்க, இதற்குமேல் தாங்காது என எண்ணியவள், அவன் அலைபேசிக்கு முயன்றாள்.

அலைபேசி ஒலிக்கவே, ஜீப் ஓட்டிக் கொண்டிருந்தவன், ஓரமாக நிறுத்திவிட்டு அழைப்பை ஏற்றான். “சொல்லு காயு…, ஏதாவது முக்கியமான விஷயமா?” இடையில் அழைக்காதவள், இரவில் அழைக்கவே கேட்டான்.

“இன்னைக்கும் வேலை இருக்கா?” அவள் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவனைத் தாக்க, “வீட்டுக்குத்தான் வந்துட்டு இருக்கேன்…, இன்னும் பத்து நிமிஷத்தில் வந்துடுவேன்…” அவன் சொல்ல, “அப்போ வாங்க” உற்சாகமாய் உரைத்தவள், அலைபேசியை வைத்தாள்.

ஜீப்பை வீட்டுக்கு விரட்டியவன், ஐந்தே நிமிடத்தில் வீட்டை அடைந்தான். அவனுக்காக வாசலிலேயே காத்திருந்தவளின் பார்வை அவனை தலைமுதல் கால்வரை பார்வையிட்டது.

“என்ன புதுசா பாக்கற…?” அவன் கேட்க, அவள் கண்கள் அவளை மீறி கலங்கியது.

“நியூஸ் சேனல்ல எல்லாம் உங்களைப் பத்தி ஆகா ஓகோன்னு சொல்றாங்க. ஆனா, என்னால் உங்களை முழுசா பாக்க கூட முடியலை. அதான்…, சாரி…, உங்க வேலை நேரத்தில் கூப்பிட்டு டிஸ்டப் பண்ணிட்டேனா?”

அவள் மெல்லமாய் கலங்க, அவளை அதிகம் தவிக்க விட்டுவிட்டோமோ என கலங்கிப் போனான்.

அவளை மெதுவாக இழுத்து அணைத்தவன், “ஒரு அஞ்சு நிமிஷம், உடனே குளிச்சுட்டு வந்துடறேன்…” அவளை விட்டு விலக முயன்றான்.

“எனக்கு நாளைக்கு பிராக்டிக்கல்ஸ்…, என்னால் உக்காந்து படிக்கவே முடியலை…” அவள் ஒரு மாதிரி தவிக்க, அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

“நான் படிக்கும்போது யாராவது என்னோடவே இருப்பாங்க. ஹாஸ்டல்ல இருந்த வரைக்கும், பக்கத்து பெட்ல யாராவது தூங்கிட்டாவது இருப்பாங்க. இங்கே…” முதல் முறையாக அவளது தனிமை உணர்வை அவனோடு பகிர்ந்து கொண்டாள்.

அவள் பேச்சைக் கேட்டவன், அவளை முழுதாக அணைத்துக் கொண்டான். “நான் உன்னோடவே இருக்கறேன் சரியா…?” அவளுக்கு இப்பொழுது தேவையானது ஆறுதல் என்பதை புரிந்து கொண்டான்.

பொதுவாகவே அவளுக்கு தனிமை பழகிப் போன ஒன்றுதான். ஆனால், எந்த மனிதனும் சில வேளைகளில் தனிமையை உணர்வானே, அப்படி ஒரு நிலையில் இருந்தாள்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் சாந்தியால் ஏற்பட்ட பயம், முழுதாக அவளை விட்டு அகலாமல் இருக்கவே, தனிமை அவளை பூதாகரமாய் மிரட்டியது. அவளுக்குத் துணை இருந்த யாழினியையும், தான் சம்மாளித்துக் கொள்வதாகச் சொல்லி போகச் சொல்லிவிட்டாள்.

சற்று நேரம் அவன் அணைப்பில் ஒடுங்கியவள், “நீங்க போய் குளிச்சுட்டு வாங்க, நான் சாப்பாடு எடுத்து வைக்கறேன்…” அவள் கிச்சனுக்குச் செல்ல, அவன் குளிக்கச் சென்றான்.

அடுத்த பத்தாவது நிமிடம் குளித்துவிட்டு வந்தவன், அவள் கொடுத்த உணவை தானும் உண்டு, அவளையும் உண்ண வைத்தவன், இருவரும் அறைக்குத் திரும்பினார்கள். அவள் அருகாமையும், அவள் நிலையும், அவள் தன்னோடு ஒன்றும் விதமும், அவன் உணர்வுகளைத் தூண்ட, அவள் இடையை வளைத்துக் கொண்டவன், அவள் கழுத்தில் முகம் புதைத்தான்.

கழுத்தில் முகம் புதைத்தவனின் இதழ்கள் மெதுவாக கீழிறங்க, அவன் சிகைக்குள் கரம் கோர்த்தவள், அவன் இதழ்கள் அவள் மேனியில் அழுத்தமாகப் பதிய, மெல்லியதாய் கிளர்ந்தாள். அவன் கொடுக்கும் உணர்வுகளை மென்மையாய் உள்வாங்கியவள், அவன் சிகைக்குள் கரம் கோர்த்து நெரித்தாள்.

“பீமா…” மெதுவாய் முனகியவள், “ஒன்னவர்ல அனுப்பிடுவீங்களா…?” அவன் காதுக்குள் கேட்க, சட்டென அவன் உணர்வுகள் அப்படியே வடிந்து போனது.

“என்ன சொன்ன…? ஒரு மணி நேரமா? புருஷனுக்கே டைம் சொல்றியா? யார் கத்துக் கொடுத்தது…? அந்த நாய் சொல்லிக் கொடுத்தானா…?” தன்னிடமிருந்து அவளை பிய்த்து எடுத்தவன், அவள் தோளை அழுத்தமாகப் பற்றி உலுக்க, புரியாமல் விழித்தாள்.

மறுநாள் பிராக்டிகல் இருக்கிறது, அதற்கு படிக்க வேண்டும் என்பது மனதுக்குள் ஓடிக் கொண்டிருக்க, தன்னை மீறி அவனிடம் கேட்டிருந்தாள். அவள் இதழ்கள் உதிர்த்த வார்த்தைகள், அவள் மூளையை எட்டவே இல்லையே.

அவன் கொடுத்த மயக்கத்தில் இருந்தவளுக்கு, அனிச்சை செயலாக பிராக்டிகல் மட்டுமே நினைவிருந்தது. அப்படி இருக்கையில் அவளுக்கு எப்படி தான் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வரும்?

அவன் தோளைப் பற்றி வெகுவாக உலுக்க, அவன் கைகள் கொடுத்த அழுத்தத்திலும், அவன் உலுக்கிய வேகத்திலும் நினைவுக்குத் திரும்பியவள், மலங்க விழித்தாள். கூடவே,

அவன் பற்றியிருந்த விதம் வலியைக் கொடுக்கவே, “பீமா வலிக்குது...” வாய்விட்டே சொல்லியிருந்தாள்.

அதைவிட, அவன் கேட்ட சொற்கள் செவியில் விழுந்து இதயத்தை தாக்க, கண்கள் சுடுநீரை சட்டென வடித்தது. “பீமா நான்...” அவள் விளக்கம் சொல்ல வர,

பட்டென தன் கரத்தை விலக்கியவன், “என்னை அப்படி கூப்பிடாதடி, அந்த பேரை கேட்டு நான் மயங்கியது போதும். நான்தான் பயித்தியக்காரன் மாதிரி உன்மேல் பித்தாக இருக்கேன் அப்படித்தானே. நீ..., எனக்கு டைம் சொல்றியா? உன்னால் எப்படி முடிந்தது?

“ரெண்டு நாளா தூங்கக் கூட முடியாமல் உன் அருகாமைக்கு வேண்டி நான் வந்தால், நீ என்ன வார்த்தை சொல்லிட்ட? அதானே..., உன் உடம்பில் ஓடுவது யார் ரத்தம்...? நீயும் அப்படித்தானே இருப்ப. அது தெரியாமல்...” அவன் மேலே என்ன சொல்லியிருப்பானோ..., அவன் கொடுத்த வார்த்தைகள் ஏற்படுத்திய பாதிப்பில் கண்கள் செருக, மயங்கி சரிந்தாள்.

அவள் மயக்கமடைந்த பிறகுதான், வார்த்தைகளை தன்னை மீறி அதிகமாக உதிர்த்துவிட்டோம் என்பது புரிய, “காயு..., இங்கே பார்..., ஏய்..., நான் ஏதோ கோபத்தில் சொல்லிட்டேன். என்னைப் பாருடி...” தண்ணீர் ஊற்றியும் அவள் மயக்கம் தெளியாமல் போகவே, சிறு பதட்டத்துக்கு உள்ளானான்.

தன் வேலையில் எந்த நிலையிலும் அசராமல் இருப்பவன்தான். ஆனால், தன்னவளுக்கு என வருகையில், தன் கட்டுப்பாடுகள் அனைத்தும் தூள் தூளாய் நொறுங்குவதை உணர்ந்தவன், அவள்மேல் தான் கொண்டிருக்கும் காதலை அந்த நொடி உணர்ந்து கொண்டான்.

“காயு..., ஐ லவ் யூ டி..., இனிமேல் உன்னை காயப்படுத்த மாட்டேன்..., கண் முழி...” அவள் அருகில் அமர்ந்து பிதற்றினான். சில நிமிடங்கள் மட்டுமே அவன் செயலற்று

அமர்ந்திருந்தான். அடுத்த நொடி, தன் அலைபேசியை எடுத்தவன், வீட்டுக்கு அருகில் இருக்கும் மருத்துவரை அழைத்தான். அவர் அடுத்த ஐந்தாவது நிமிடம் அவளை பரிசோதிக்க அங்கே இருந்தார்.

அவளை பரிசோதித்தவர், "ஜஸ்ட் அதிர்ச்சி மயக்கம்தான். தூங்கி எழுந்தால் சரியாகிடும். என்ன பிரம்மா, உங்க ஜாபில் நீங்க பாக்காத விஷயங்களா? கூல் டவுன். காலையில் அவங்க நார்மல் ஆயிடுவாங்க. உங்க வேலையின் தாக்கத்தை அவங்ககிட்டே காட்டாதீங்க.

"இன்னைக்கு உங்களுக்கு ஏகப்பட்ட டென்ஷன் என எனக்கும் தெரியும். நீங்களும் ரெஸ்ட் எடுங்க. அவங்க நல்லா தூங்க இன்ஜெக்ஷன் போட்டிருக்கேன். பயப்பட எதுவும் இல்லை" அவர் சென்றுவிட, கதவை அடைத்துவிட்டு வந்தவன், அப்பொழுதுதான் படுக்கைமேலே இருந்த புத்தகங்களை கவனித்தான்.

அவ்வளவு நேரமாக அவன் பார்வையில் படாத அவை பட, தன் தலையிலேயே ஓங்கி அடித்துக் கொண்டான். 'ச்சே..., நாளைக்கு பிராக்டிகல், படிக்கணும், என்னோடவே இருங்கன்னு சொன்னாளே. அவள் கேட்டதை செய்யாமல், அவளை தூண்டி விட்டு பிறகு...' மேலும் தன் தலையை அழுத்தமாக கோதியவன், அவள் முகத்தையே சற்று நேரம் பார்த்திருந்தான்.

'படிக்க வேண்டும் என்ற நினைப்பில்தான் அப்படிச் சொன்னாளா? அதை புரிந்து கொள்ளாமல்..., பிரம்மா..., எதையும் ஆராயாமல் பேச மாட்டாயே, இப்பொழுது மட்டும் ஏன்?' தன்னையே கேட்டுக் கொண்டவன், புத்தகங்களை மேஜைமேல் வைத்துவிட்டு, அவள் அருகில் வந்து அணைத்தவாறு படுத்துக் கொண்டான்.

"சாரி காயு..." அவள் நெற்றியில் இதழ் ஒற்றியவன், இமை மூடினான். உறக்கம்தான் வருவேனா என அவனுக்கு போக்கு காட்டியது. தன்னை மீறி உறங்கியவன், காலையில் கண் விழிக்கையில் நேரம் ஒன்பதைக் காட்டியது.

இரண்டு நாட்கள் ஒரு நொடி கூட கண்ணயராதது அவனை வீழ்த்தியதை புரிந்து கொண்டவன், தன் அருகில் பார்க்க, அவள் இருந்த இடம் வெறுமையாக இருந்தது. அவளது கைப்பை, புத்தகங்கள் சில என அதன் இடத்தில் இல்லாததைப் பார்த்தவன், அவள் கல்லூரிக்குச் சென்றுவிட்டதை உணர்ந்து கொண்டான்.

‘பிராக்டிகல் எப்படி செய்வான்னு தெரியலையே..., கோல்ட் மெடல் வாங்குவேன்னு சொல்லிட்டு இருந்தா, இப்போ என்னால் அது முடியாமல் போய்விடுமா?’ வருந்தியவன், வேகமாக அவளுக்கு அழைக்க முயன்றான்.

தன் பேச்சுக்கள் அவளை ஏற்கனவே காயப்படுத்தியிருக்க, இப்பொழுது அவளிடம் பேசினால், அவள் நிச்சயம் மேலும் பதட்டமும், பயமும் அடைவாள் என்பது புரிய, இந்திராவுக்கு அழைத்தான். ஹாஸ்டலில் இருந்தவளது அலைபேசி இசைக்கவே, ‘அம்மா இப்போதானே பேசினாங்க’ யோசனையாய் அலைபேசியை எடுத்து பார்த்தாள்.

‘எஸ்பி சார்., இந்த நேரம்...’ எண்ணியவள் உடனே அழைப்பை ஏற்றாள். “அண்ணே...” அவள் குரல் கொடுக்க, “காயு உன்கூடவா இருக்கா?” அவன் கேட்க, சற்று பயந்து போனாள்.

“காயுவை காணோமா...?” அவள் அதிர்ச்சியில் கத்திவிட்டாள்.

‘ச்சை..., இந்த பொண்ணுங்ககிட்டே பேசவே தெரிய மாட்டேங்குது’ மனதுக்குள் அலுத்தவன், “இல்லம்மா..., நைட் அவளுக்கு பிராக்டிகலுக்கு படிக்க முடியாமல் போய்டுச்சு. ரொம்ப பயந்துட்டே காலேஜ் வந்தாள். அதான் அவ உன் கூட இருந்தால், அவளுக்கு கொஞ்சம் சொல்லிக் கொடுன்னு சொல்லத்தான் கூப்பிட்டேன்...” அவன் வேகமாக உரைக்க,

இப்பொழுது பேச முடியாத ஒரு மாதிரியான அதிர்ச்சியில் அமர்ந்திருந்தாள். அவள் அமைதியை உள்வாங்கிய பிறகுதான், அவளிடம் என்ன பேசிவிட்டோம் என்பது புரிய,

போனை காதில் இருந்து எடுத்தவன், ஒரு மெல்லிய அசடுவாங்கும் சிரிப்பில் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“மடையா..., மடையா...” அவன் சன்னமாக புலம்ப, அதைக் கேட்டவளுக்கு இந்தப்பக்கம் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. அதை அடக்கியவள், “அண்ணா, அவ ஹோால் காலேஜுக்கே பிராக்டிகல் சொல்லிக் கொடுப்பா. அவளுக்கு நான் சொல்லிக் கொடுக்கணுமா? இது உங்களுக்கே ஓவரா இல்ல?

“இல்லன்னா நான் மக்குன்னு உங்ககிட்டே சொல்லியிருந்தாளா? காலையிலேயே போன் போட்டு கலாய்க்கறீங்க? நான் அவகிட்டே டவுட் கேட்டுக்கறேன். அதே மாதிரி என் ப்ரண்ட்டை இல்ல, உங்க பொண்டாட்டியை நான் பாத்துக்கறேன் போதுமா?” அதற்குமேல் அவனை சங்கடப்படுத்த விரும்பாமல் அலைபேசியை வைத்து விட்டாள்.

உடனே கல்லூரிக்கு கிளம்பிச் செல்ல, அங்கே தனிமையில் அமர்ந்திருந்த காயத்ரி, வானத்தை வெறித்திருக்க, ‘வீட்ல சண்டையா...? நாம நினைத்த மாதிரி எதுவும் இல்லையோ...’ எண்ணியவள், அவள் அருகே சென்று அமர்ந்தாள்.

“காயு..., எனக்கு இந்த பிராக்டிகல் எல்லாம் ஒரு முறை சொல்லுடி. எனக்கு பதட்டத்தில் எல்லாம் மறந்துடுச்சு...” அவர்கள் தனிப்பட்ட விஷயங்களை அலசாமல் அவளை திசை திருப்பினாள். அது சரியாக வேலை செய்ய, காயத்ரியின் கவலைகள் அனைத்தும் பின்னால் போக, படிப்பில் திரும்பியது.

தன் வேலைக்கு கிளம்பிய பிரம்மா, தன் தாயை தேடிச் சென்றான். உண்மைகள் அனைத்தும் தெரிந்த உடனேயே அவரைச் சென்று பார்க்க அவன் விரும்பினான். ஆனால், அவனது பேச்சுக்கள், அவரை தவிர்த்த விதம், என அனைத்தும் கண்முன் நிழலாட, அவனால் அவர் முகம் பார்த்து பேச தைரியம் இருக்கவில்லை.

இன்று மனைவியின் தனிமை வாழ்க்கை அவனை உந்த, தன் சொந்தங்களை அவளுக்கு கொடுத்துவிட தயக்கம் மீறி அவர் வீட்டுக்கே வந்துவிட்டான். வாசல் வரைக்கும் வந்துவிட்டவனுக்கு, எப்படி உள்ளே செல்வது என்ற பெரும் போராட்டம்.

‘இப்படியே திரும்பி விடுவோமா?’ அவன் எண்ணிய வேளையில் அறைக்குள் இருந்து வெளியே வந்த மகேஸ்வரன் அவனைப் பார்த்துவிட்டார்.

“பிரம்மா..., வாப்பா..., ஏன் அங்கேயே நின்னுட்ட...? உள்ளே வா” அவர் அழைக்க, முன்னர் அவரைப் பார்க்கும் வேளைகளில் எல்லாம், முகம் திருப்பிச் சென்றது நினைவுக்கு வர, தலை குனிந்தான்.

அவன் மனம் புரிந்தவர், வேகமாக வெளியே வந்து, அவன் கை பிடித்து உள்ளே அழைத்து வந்தார். கிச்சனுக்குள் வேலையாக இருந்த கலைவாணி, கணவனின் பேச்சு காதில் விழ, கையில் இருந்த பாத்திரம் நழுவி கீழே விழ, ஆனந்த கண்ணீர் வடித்தார்.

பள்ளி செல்ல கிளம்பி வந்த நிவேதா அவனைப் பார்த்தவள் துள்ளி குதித்தாள். “அண்ணே..., நீங்க தானே..., நான் கனவு காணலையே. அம்மா, இங்கே பாருங்க..., அண்ணா வந்திருக்காங்க. எங்கம்மா இருக்கீங்க...?” கேட்டவள் கிச்சனுக்குள் நுழைந்தாள்.

அங்கே தாய் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருக்க, “அம்மா, இப்போ எதுக்கும்மா அழுதுட்டு இருக்கீங்க? அதான் அண்ணா வந்துட்டாங்களே. அவங்ககிட்டே வந்து பேசுங்க...” அவள் அழைக்க, அவரால் சட்டென வெளியே வர முடியவில்லை.

மனைவியின் நிலை புரிந்த மகேஸ்வரன், “ஒரு நிமிஷம் தம்பி...” அவனிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்றவர், “நிவேதா, நீ ஸ்கூல்க்கு கிளம்பிட்டியா, வா நாம போகலாம்...” அவர் சொல்ல, தந்தையின் சொல்லைக் கேட்டு அவரோடு கிளம்பி விட்டாள்.

“கலை..., பிள்ளைகிட்டே பேசு...” அவரிடம் உரைத்தவர், “நீங்க பேசிட்டு இருங்க, நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்...” அவர்களுக்கு தனிமை கொடுத்து விலகிச் சென்றார். அவர்கள் உணர்வுகள் இப்பொழுது எப்படி இருக்கும் என அவருக்குத் தெரியாதா என்ன?

அவர் சென்ற பிறகும், கலைவாணியால் வெளியே வர முடியவில்லை. சற்று நேரம் பொறுத்தவன், கிச்சனுக்கு எழுந்து சென்றான். ‘அம்மா...’ மனதுக்குள் அழைத்தவன், அவரை ஏறிட்டான். கலைவாணியோ, அவனை இமைக்காமல் பார்த்தவர், மௌனமாக கண்ணீர் வடித்தார். ஏற்கனவே ஊரில் இருந்து கணக்கப்பிள்ளை அவருக்கு அழைத்து விஷயங்களைச் சொல்லியிருந்தார்.

தன் மகனுக்கு உண்மைகள் அனைத்தும் தெரிந்த பிறகும், தன்னைத் தேடி வரவில்லையே என அந்த தாயுள்ளம் தவித்தது. அவரது பதினைந்து வருட காத்திருப்பே, என்றாவது ஒரு நாள் அவன் தன்னை அம்மா என அழைத்து விட மாட்டானா என்பது தானே.

“அம்மா...” அவன் அழைத்துவிட, “ஓ...” வென கதறியவர், “பிரம்மா..., பிரம்மா..., என் கண்ணே...” ஓடிபோய் அவனை ஆதூரமாக தழுவிக் கொள்ள, தாயை தன் நெஞ்சோடு தாங்கியவன், தானும் மௌனமாக கண்ணீர் வடித்தான்.

கலைவாணியின் கண்ணீர் அவன் நெஞ்சை நனைக்க, “என்னை மன்னிச்சுடுங்கம்மா. மன்னிப்பு கேக்க கூட எனக்கு தகுதி இருக்கா இல்லையான்னு தெரியலை” அவன்தான் வாய் திறந்தான்.

அவரோ, “இப்போதான் நான் அம்மா என்பது தெரிந்ததா...? பெத்தமனம் பித்து, பிள்ளை மனம் கல்லுன்னு நிரூபிச்சுட்டடா. இந்த அம்மாவை பாக்க வர இத்தனை நாள் உனக்கு தேவைப் பட்டதா? உன் வாயில் இருந்து அம்மா என்ற ஒரு வார்த்தையை கேக்கத்தான் நான் இன்னும் உயிரோட இருக்கேன்டா” அவரது கதறலை அவனால் கண் கொண்டு பார்க்க முடியவில்லை.

“நம்மளை பிரித்தவனுக்கு தண்டனை கொடுத்துட்டேம்மா…” அவன் சொல்ல, “எனக்கு என் பிள்ளை மட்டும் போதும்டா…” அவனை விட்டு விலக மறுக்க, தாயின் மனம் புரிந்தவன், அவரை விட்டு விலகவே இல்லை. அவன் முதுகு, தோள், முகம் என வருடியவர், மௌனமாக மீண்டும் அழ, என்ன செய்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை.

“எவ்வளவு வளந்துட்ட…” அவனை விட்டு விலகியவர், அவன் சிகை கலைக்க, அவன் கன்னம் தாங்கி அருகே இழுத்தவர், அவன் நெற்றியில் இதழ் பதித்தார்.

“அம்மா, உன் புள்ளை போலீஸ்ம்மா…” அவர் மன இறுக்கத்தை நெகிழ்வை குறைக்க முயன்றான்.

“நான் கிட்டே இருந்து பாக்க கொடுத்து வைக்கலையே…, என்ன வரம் வாங்கி நான் பொறந்தேன்…? பெத்த பிள்ளைக்கு அம்மாவா இருக்க முடியாமல் போயிட்டேனே. என் பொண்ணுக்கு ஆதரவா இல்லாமல், அவளுக்கு எல்லாம் செஞ்சு பாக்க முடியாமல், ஹையோ…” அவரால் தாள முடியவில்லை.

அவரது பதினைந்து வருட காத்திருப்பு, தவம்…, இழந்த வாழ்க்கை, அழகான தருணங்கள்…, ஒவ்வொன்றும் நினைவுக்கு வர, தன் சித்தப்பனை கொன்று போட்டிருக்க வேண்டுமோ’ என வெறியானான்.

“அம்மா…, உங்க புள்ளைங்க எல்லாம் இன்னும் அப்படியேதான் இருக்கோம். இழந்த வாழ்க்கையை நாம வாழலாம்…” அவருக்கு ஆறுதல் சொன்னவன், இனிமேல் அவரை தனியாக விட கூடாது என முடிவெடுத்தான்.

*****

# பகுதி – 46.

காயத்ரிக்கு பிராக்டிகல் நல்லபடியாக முடிய, அவளது இறுதி செமஸ்டர் தேர்வுகள் ஆரம்பித்தது. அடுத்த ஒரு மாதம், அவளை எதற்கும் தொல்லை செய்யக் கூடாது என எண்ணியவன், அந்த இடைப்பட்ட காலத்தில், தன் வேலையில் கவனம் செலுத்த துவங்கினான்.

குழந்தைகள் கடத்தல் கேஸ் ஒரு பக்கம் நடக்க, சாந்தியின் கேசையும் கவனித்துக் கொண்டு இருந்தான்.

அந்த குழந்தைகள் கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு கீழ் கோர்ட் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்க, இளம் குற்றவாளியோ சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப் பட்டான். அங்கே அவன் தற்கொலை செய்து கொண்டான் என்பதும் ஒரு பக்கம் பரபரப்பானது.

சாந்தி, அவளது கூட்டாளிகளை பெண்களை வைத்து பாலியல் தொழில் செய்யும் கும்பல் என அடையாளம் காட்டப்பட, அவளது கல்லூரியே அதைக் கண்டு அதிர்ந்து போனது. அவளை பெற்றவர்களும், மகள் இப்படியா?' என அதிர்ந்து போனவர்கள் தான்.

அதன் பிறகு தங்கள் சொந்த ஊரை விட்டு எங்கு சென்றார்கள் என்றே தெரியவில்லை. அவளை ஜெயிலில் வந்து இறுதியாக பார்த்தவர்கள், அவள் தங்கள் மகளே இல்லை என தலை முழுகிச் சென்றார்கள்.

அவள் உடன் பிறந்த இரு தங்கைகளும் அவளை காறி உமிழ, தவறை சுலபமாக செய்தவளுக்கு, நிஜத்தை எதிர்கொள்ளும் தைரியம் இருக்கவில்லை.

கூடவே, அவர்கள் ஊரைவிட்டே எங்கோ சென்று மறைந்தார்கள் என்பதை அறிந்த பிறகு, உள்ளுக்குள் செத்தே போனாள். ஜாமீனில் வெளிவரும் வாய்ப்பு இருந்த பிறகும், அதை மறுத்தவள், தண்டனையை அனுபவிக்கத் துவங்கினாள்.

கலைவாணி அவன் வீட்டுக்கு வந்து போவது இயல்பாக நடக்க, காயத்ரியும் அவரோடு ஒட்டிக் கொண்டாள். சமையல் வேலைக்கு வரும் பொன்னம்மா, அவள் வேலைகளை முடித்துச் சென்றாள் என்றால், மேல் வேலைகளை அவரே கவனிக்கத் துவங்கினார்.

பிரம்மா எவ்வளவோ மறுத்தும்,”என் பிள்ளைக்கு இப்பொழுதாவது இதையெல்லாம் செய்து திருப்தி அடைகிறேன்” என அவன் வாயை அடைத்துவிட, அவன் அதற்குமேல் எதையும் மறுக்கவில்லை.

காயத்ரிக்கு பிரம்மாவோடு பேசுவதே சிறு பயத்தை கொடுக்கத் துவங்கி இருந்தது. அது ஏனென்றே அவளுக்குத் தெரியவில்லை. பிரம்மாவோ, அவளிடம் பேச முயன்றாலும், அவள் கண்களில் வழியும் சிறு பயம் அவனை விலக்கி நிறுத்த, அவள் படிப்பு முடியட்டும் என பொறுமை காத்தான்.

சொல்லப்போனால் அவனது அந்த விலகல்தான் அவளை அதிகம் வதைத்தது. ‘அவருக்கு எதுவோ நினைவுக்கு வந்துவிட்டது’ அவள் மனம் உரைக்க, அதை வாய் விட்டு கேட்கவும் தைரியம் இருக்கவில்லை.

இடையில் ஒரு முறை கௌஷி வீட்டுக்கு வந்திருக்க, அவளும் தாயோடு பாச மழையில் நனைந்தாள். அவள் குழந்தையை கீழே விடாமல், நிவேதா கைகளில் வைத்து கொஞ்சிக் கொண்டே இருக்க, தாயும் மகளும் தடையின்றி உறவாடினார்கள்.

அப்பொழுது காயத்ரிக்கு ஸ்டடி ஹாலிடே என்பதால் அவளும் அவர்களோடு இருந்தாள். பிரம்மா தங்கள் அறைக்குள் இருந்தால், அவள் அங்கே செல்வதே இல்லை.

அவனால் அவள் விலைகளை தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றே சொல்லலாம். இரவில் அவன் வரும் முன்பே உறங்கி விடுபவளை, தன் கைகளுக்குள் தூக்கி அணைத்துக் கொள்பவன் சுகமாய் கண் மூடுவான். அவள்

விழித்துவிடும் முன்பே அவளை விட்டு விலகி வேலைக்குச் சென்று விடுவான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை, கீழ அமர்ந்து அனைவரும் உரையாடிக் கொண்டிருக்க, பொதுவாகவே அவன் அனைவரோடும் முழுதாக கலந்து உரையாட மாட்டான் என்பதால், தன் அறையிலேயே இருந்தான். காயத்ரி கிச்சனுக்குள் எதையோ செய்து கொண்டிருக்க, நிவேதா குழந்தையை வெளியே வைத்துக் கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்த கௌஷிகா தன் தாயிடம், “அண்ணா ஒரு தனித் தீவாகவே வாழ்ந்து பழகிட்டாங்க பாத்தீங்களாம்மா? குழந்தையை கூட கொஞ்ச மாட்டேங்கறாங்க. அண்ணி கிட்டே எப்படி நடந்துக்கறாங்கன்னு என்னால் கணிக்கவே முடியலை.

“ரெண்டு பேரும் சந்தோஷமா பேசி சிரித்து கூட நான் பாக்கலை. எனக்கு ரொம்ப கவலையா இருக்கும்மா…” காயத்ரி உள்ளே இருக்கிறாள் என்ற தைரியத்தில் இருவரும் உரையாட, காயத்ரியால் அங்கே நிற்கவே முடியவில்லை.

கலைவாணியோ, “உங்க அண்ணாவோட குணம் அப்படித்தான்னு ஆயிடுச்சு. காயத்ரியாவது அவனை பிடித்து வைத்து பேசுவாள், அவனை மாற்றுவாள்ன்னு எதிர் பார்த்தேன். அவளும் ஒதுங்கி நிக்கறா. எனக்கு எப்பொழுதும் அவங்க கவலைதான்.

“சின்னப் பிள்ளைங்கன்னா புத்தி சொல்லலாம். அவன் ஊருக்கே நியாயம் சொல்றான். இவ இஞ்சினியரிங் கோல்ட் மெடல் வாங்குற அளவுக்கு திறமை சாலியாம். வாழ்க்கை என்றால் ஏதுன்னே தெரியாமல், அவங்க அவங்க தனி தீவா இருந்தால் என்ன செய்ய முடியும்?

“கல்யாணம் என்ற பந்தத்தில் நுழையும் முன்னர் அவங்க எப்படி வேண்ணா இருக்கலாம். ஆனா, ஒரு புள்ளியில் இணைந்த பிறகு, அவங்களோட வழி ஒரே வழியா இருக்கணும்.

“ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கணும். வாழ்க்கையில் சில ரகசியங்கள் இருக்கலாம். இங்கே வாழ்க்கையே ரகசியமா இருந்தால் என்ன செய்ய முடியும்? கணவன் மனைவிக்கு நடுவில் எப்போ ரகசியம் ஒளிஞ்சு இருக்குதோ, அப்போ வாழ்க்கை சூனியமா போய்டும்.

“இவங்களுக்கு நடுவில் அதுதான் நடக்குது. அவனுக்கும் புத்தி சொல்லிட்டேன். அவளுக்கும் சொல்லிட்டேன். ரெண்டுபேரும் எல்லாத்தையும் கேட்டுட்டு அவங்க பாணியிலேயே இருந்தால் என்ன செய்ய முடியும்?

“எல்லாம் அவங்க தலையெழுத்துன்னு வேடிக்கைதான் பாக்கணும். அவன் கல்யாணம் செஞ்சுகிட்டானேன்னு சந்தொஷப்படுறதா? இல்ல வருத்தப்படுறதான்னே தெரியலை…” அவரது பேச்சை இரண்டு திசையில் இருந்தாலும் கேட்டுக் கொண்டிருந்த இளையவர்கள் பெரிதும் கலங்கிப் போனார்கள்.

அவரது பேச்சு இருவரையும் சிந்திக்கவும் வைத்தது. கௌசிகாவின் குழந்தை சிணுங்கவே, அவனை உள்ளே தூக்கி வந்த நிவேதா, “அக்கா, குட்டி அழுதுட்டே இருக்கான். அவனுக்கு பசிக்குது போல…” குழந்தையை அவள் கையில் கொடுத்தாள்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த காயத்ரி, குழந்தைக்கு வைத்திருந்த பாலை சற்று சூடாக்கி எடுத்து வந்தவள், “அண்ணி, நான் குழந்தைக்கு கொடுக்கறேன். நீங்க இருங்க…” சொன்னவள் குழந்தையை வாங்கிக் கொண்டு மாடி ஏறினாள்.

“அம்மா, நீங்க சொன்னதை அண்ணி கேட்டுட்டாங்க போல, முகமே சரியில்லை” தாயிடம் கிசுகிசுக்க,

“அவங்களுக்கு கேக்கட்டும்னுதான் சத்தமா சொன்னேன். அவங்களுக்கு நடுவில் என்னவோ பெருசா இருக்கு. அதை உடைச்சுட்டு வாங்க வெளியே வரணும். குட்டையை குழப்பியிருக்கோம், மீன் சிக்குதான்னு பார்ப்போம்…”

அவரும் அதே குரலில் சொல்ல, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

குழந்தையை தூக்கிக் கொண்டு மாடியேறிய காயத்ரி, படிகளுக்கு அருகில் நின்று, தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கணவனைப் பார்த்து சற்று திடுக்கிட்டாள்.

‘அவங்க பேசியதை கேட்டிருப்பாரோ…?’ அவள் எண்ண, ‘நமக்கு கேக்கணும்னு தானே அவங்க பேசினாங்க” அவன் எண்ணிக் கொண்டான்.

அவள் அறைக்குள் நுழைய, அவள் பின்னால் சென்றவன், குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு, பீடிங் பாட்டிலை அவன் வாயில் வைக்க, குழந்தை தன் கரத்தால் பாட்டிலை பிடித்தவன், பசியாறத் துவங்கினான்.

பிரம்மாவின் கண்களோ, குழந்தையும் தன்னவளையும் ஒருங்கே படம் பிடித்தது. அவனை மெதுவாக நிமிர்ந்து பார்க்க, அவன் பார்வை வீச்சு தாளாமல் வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டு, சுவரைப் பார்த்தாள்.

அவள் தேகத்தில் மெல்லியதாக ஒரு சிலிர்ப்பு ஓட, அதே நேரம் அவள் கரத்தை காலால் உதைத்த குழந்தை, அவள் முகத்தைப் பார்த்து, பொக்கை வாய் திறந்து சிரித்தது.

வாய் நிறைய பாலை வைத்துக் கொண்டு, அவன் தன்னைப் பார்த்து சிரித்தது அவளைக் கொள்ளையிட, குனிந்து அவன் நெற்றியில் முத்தம் பதித்தாள்.

அதைப் பார்த்தவன், “எனக்கும் இதே மாதிரி ஒண்ணு வேணும்” உரைத்தவனது குரல் அவள் செவிக்கு வெகு அருகில், கிசுகிசுப்பாய் கேட்க, குழந்தையை முத்தமிட்டு நிமிர்ந்தவளது முதுகு அவன் பரந்த நெஞ்சில் மோதியது.

அவன் மூச்சுக்காற்று அவள் கழுத்தில் சுட, இதழ்கள் சற்று அழுத்தமாக அங்கே பதிய, அவன் முத்தத்தின் வெம்மையில் உருகிப் போனாள்.

“மடியில் குழந்தை இருக்கான்…” அவன் செய்கையில் குழைந்து, குழந்தையை கீழே போட்டு விடுவோமோ என

இடது கரத்தால் அவனை அழுத்தமாக பற்றிக் கொண்டவள், சிறு மறுப்பாய் உரைத்தாள்.

அவள் மறுப்பை கண்டுகொள்ளாமல், அவள் இடையில் தன் கரத்தை அழுத்தமாக பதித்தவன், அவனுக்குரிய உரிமையில் செல்லமாய் சீண்டல் செய்ய, அவன் கரம் பதிந்த விதத்தில் சிலிர்த்துப் போனாள்.

“பீமா குழந்தை...” அவன் கரத்தை தன் கரத்தால் தடுக்க முடியாமல் அவள் முனக, “எனக்கு வேணும்...” அவன் வலக்கரம் அவள் முன்னகழுத்தை சுற்றிக்கொள்ள, தன்னோடு இறுக்கினான்.

“எ..என்ன வேணும்...” தடுமாறி வினவ,

“நீ அவனுக்கு ஒண்ணு கொடுத்தியே அதுவும்..., இவனை மாதிரி ஒரு பொண்ணும் எனக்கு வேணும்...” அவன் வலக்கரம் மெதுவாய் கீழிறங்க, கிறங்கிப் போனாள். கூடவே அவனது கோரிக்கை வேறு நெஞ்சை தடதடக்க வைக்க, பால் பாட்டிலை குழந்தையின் வாயில் இருந்து எடுத்து கீழே வைத்தவள், அவன் கரத்தை வேகமாய் தடுத்தாள்.

“ங்..கு..ஆ...” குழந்தை அவர்களை கலைக்க, “என் மருமகன் கூட உன்கிட்டே ரெக்கமண்ட் பண்றான்” மூக்கால் அவள் கன்னம் உரசியவன், அவள் இதழ் நோக்கி முன்னேறத் துவங்கினான்.

அவன் எண்ணம் புரிய, “ம்ச்..., குழந்தை முன்னாடி என்ன இது...? முதல்ல விலகுங்க” சற்று திமிறி அவன் பிடியில் இருந்து விலகினாள்.

“ஏய்..., என்னதாண்டி உன் பிரச்சனை...? இதுக்கு மேலே உன்கிட்டே கெஞ்சிகிட்டு நிக்க முடியாது. போனால் போகுதுன்னு இறங்கி வந்தால், ரொம்ப முறுக்கிக்கற...?” அவள் கத்த, அவனது குரல் உச்ச டெசிபலில் ஒலிக்க, குழந்தை வீரிட்டு அழத் துவங்கினான்.

குழந்தையை மார்போடு அணைத்தவள், அவனை தோளில் போட்டு தட்டிக் கொடுத்து சமாதானப் படுத்த, குழந்தையின் அழுகையில் தெளிந்தவன், வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

“சாரி…, குழந்தையை தூக்கிட்டு கீழே போ…” அங்கிருந்து அகன்று பால்க்கனியில் சென்று நின்று கொண்டான். காயத்ரிக்கோ கண்ணீர் முட்டியது. அவளுக்கு மட்டும் ஆசை இல்லையா என்ன? கையில் குழந்தையை வைத்துக் கொண்டு, அவனுக்கு உடன்பட முடியாமல் தானே தவிக்கிறாள்.

அதைப் புரிந்து கொள்ளாமல் கோபம் கொள்கிறானே என்று இருந்தது. கூடவே, நீண்ட நாட்களுக்குப் பிறகு அவ்வளவு கோபம் அவன்மேல் கிளர்ந்து எழுந்தது. முன்பு வாய்க்கு வாய் அவனோடு சண்டை போடுபவள், அவனோடு ஒன்றாக கலந்த பிறகு அதை கைவிட்டிருந்தாள்.

ஆனால் அவள் கோபத்தை அதிகரித்துக் கொண்டிருந்தான் பிரம்மா. அழும் குழந்தையை “ஓ…, ஓ…, ஒண்ணும் இல்லடா செல்லம்…, சும்மா…, சும்மா…” அவனை சமாதனப்படுத்தினாலும், பிரம்மாவின்மேல் எழுந்த கோபம் அடிமனதை தகிக்கச் செய்தது.

‘அன்றைக்கும் அப்படித்தான்…, என்ன சொன்னேன் என்றே எனக்குத் தெரியவில்லை. அப்பொழுதும் அவர் கைக்குள் இருந்து தானே அதைச் சொன்னேன். ஏன் சொன்னேன் என அவரால் புரிந்துகொள்ள முடியாதா? இப்பொழுதும் குழந்தை முன்னால் வேண்டாம் என்றுதானே சொன்னேன்…,

‘அதற்குப்போய்…, என்னவெல்லாம் சொல்லிவிட்டார். ஏன் உங்களுக்கு மட்டும்தான் கோபப்பட தெரியுமா? எனக்கும் தெரியும். இதை நான் இப்படியே விடப் போவதில்லை. பிறகு பார்த்துக் கொள்கிறேன்’ மனதுக்குள் கொதித்தவள், குழந்தையின் அழுகை அடங்க மறுக்கவே, அவனை தூக்கிக் கொண்டு கீழே விரைந்தாள்.

அதன் பிறகு கௌஷிகா ஊருக்கு செல்லும் வரைக்கும், அவனை முறைப்பதும், அவன் அருகில் செல்லாமல் வதைப்பதுமாக நாட்களை கடத்தினாள்.

அதையெல்லாம் எண்ணியவன், ‘என் கோபத்தை குறைக்கணும்’ மனதோடு சொல்லிக் கொண்டான்.

காயத்ரியின் செமஸ்டர் எக்ஸாம் முடிய, சிறியவர்கள் இருவரிடமும் பேச முடிவெடுத்தார் கலைவாணி. காயத்ரி இனிமேல் என்ன செய்யப் போகிறாள்? பிரம்மாவின் முடிவு என்ன என்பதைப் பற்றியெல்லாம் அவருக்கு தெரிய வேண்டி இருந்தது.

அன்று இரவு வீட்டுக்கு வந்தவன், சாப்பிட்டு முடிக்கும் வரைக்கும் அமைதியாக இருந்தவர், அவன் மேலே செல்லப் போகையில் “பிரம்மா, இங்கே வா, உன்கிட்டே பேசணும். காயத்ரி, நீயும் வந்து உக்கார்” அங்கே இருந்த சோபாவில் அமர்ந்தார்.

இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்தவாறு அவருக்கு எதிரே வந்து அமர்ந்தார்கள். “காயத்ரி, உன் படிப்பு முடிஞ்சுடுச்சு..., அடுத்து என்ன செய்யப் போற?” முதலில் அவளிடமே கேட்டார்.

“எனக்கு மேலே படிக்கணும்...” மெதுவாக உரைக்க, அவளை சட்டென திரும்பி பார்த்தான்.

“நீ என்ன நினைத்திருந்தாய் பிரம்மா...? உன் விருப்பம் என்ன?”.

“அதான் அவளே சொல்லிட்டாளே..., பிறகு நான் என்ன சொல்ல?” அவன் சுள்ளென விழ, அவனை கோபமாக ஏறிட்டார்.

“நான் கேட்டதுக்கு பதில் சொல்லு?” கண்டிப்பாய் கேட்டார்.

“சைபர்கிரைம் செக்ஷன்ல அவளை வேலையில் சேர வைக்கலாம் என நினைத்தேன். அதற்கான எக்ஸாம் எழுத ஃபாம் எல்லாம் கூட வாங்கிட்டேன்” அவன் சொல்ல, இப்பொழுது அவனை வியப்பாய் ஏறிட்டாள்.

அவன் அதை கண்டுகொள்ளாமல், “உங்க மருமக நல்ல ஹேக் பண்ணுவா? அது எங்க டிப்பார்ட்மெண்டுக்கு உதவியா இருக்கும்னு நினைத்தேன். அவளுக்கு அதில் விருப்பம் இல்லையென்றால் வேண்டாம். அவ விருப்பத்துக்கே செய்யட்டும்...” அவன் முடித்துக் கொண்டான்.

“நீ இப்படி நினைக்கிறன்னு அவகிட்டே சொன்னியா?” அவர் நிறுத்த,

“அவ எக்ஸாம் முடிந்த உடனே சொல்லிக்கலாம்னு நினைத்தேன்” அதைச் சொல்கையில் அவன் குரல் உள்ளே போய்விட்டது.

“சரி ஒண்ணு கேக்கறேன்..., காயத்ரிக்கு மேலே படிக்கணும், உனக்கு அவ வேலைக்குப் போகணும்..., அடுத்த கட்டத்தை உங்க கண்ணோட்டத்தில் பிளான் பண்ணிட்டீங்க சரி.

“உங்க வாழ்க்கையின், அதாவது கணவன் மனைவியா உங்க வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்னன்னு முடிவு பண்ணிட்டீங்களா? இப்படி தனி தீவாகவே இருப்பதுதான் உங்கள் முடிவுன்னா ஏன் திருமணம் செய்து கொண்டீர்கள்?

“கணவன் மனைவியில் இருந்து, ஒரு அம்மா அப்பா என்ற நிலைக்கு போகணும் என்ற எண்ணம் உங்க ரெண்டுபேருக்குமே இல்லையா?” அவர்களை கூர்மையாக நோக்கினார்.

காயத்ரியின் முகம் மெல்லியதாய் நாணத்தில் சிவக்க, அவனோ, “ஆமா, இங்கே கன்னி கழிந்ததோட சரி, மேலே தொட்டுக்கவே வழியில்லை. இதில் குழந்தையாம்...” சன்னமாக முனக, அது கலைவாணியின் காதில் விழவில்லை என்றாலும், காயத்ரியின் காதில் தெளிவாக விழுந்தது.

‘எப்படி பேசறார் பார்..., நானா அவரை தொட வேண்டாம்னு சொன்னேன்?’ அவள் மனம் கேள்வி கேட்க, அவளுக்கு அந்த மனநிலையை எப்படி வரையறுக்க என்றே

தெரியவில்லை. அவன்மேல் கொஞ்சம் கொஞ்சமாக இருந்த கோபம், அந்த நேரம் பெரும் நிலையை எட்டியது.

அவர்கள் முகங்களில் வந்து போன பாவங்களை அலசியவாறே, “அது அது அந்த நேரத்தில் சரியா நடக்கணும். நீங்க குழந்தை வேண்டாம்னு பிளானிங்கில் இதுவரை இருந்திருந்தால் பரவாயில்லை. இனிமேல் அது வேண்டாம்.

“ஒரு வருஷத்தில் ஒரு பேரனையோ, பேத்தியையோ என் கையில் கொடுத்துட்டு, அதன் பிறகு எதுவாக இருந்தாலும் செய்ங்க. நான் சொன்னது புரிந்ததா…? இப்போ போங்க. நானும் வீட்டுக்கு போய்ட்டு ரெண்டு நாள் கழித்து வர்றேன்…” அவர் கிளம்பிவிட, கதவைப் பூட்டிவிட்டு அவள் மாடி ஏறினாள்.

அவன் அலைபேசியில் எதையோ பேசியவாறு சற்று நேரம் கீழே இருந்தவன், பிறகு தானும் மாடிக்குச் சென்றான். அவன் வருவதற்காகவே காத்திருந்தவள், அவன் உள்ளே வந்து கதவை பூட்ட, “உங்க மனசில் என்னதான் நினைச்சுட்டு இருக்கீங்க…?” அவள் கோபமாக கத்த, நீண்ட நாட்களுக்குப் பிறகு அவள் கோபத்தை எதிர்கொண்டவன், சின்ன சிரிப்போடு அவளை ஏறிட்டான்.

“கீழே என்ன சொன்னீங்க…? கன்னி…” அதை சொல்ல முடியாமல் தடுமாறியவள், சட்டென பேச்சை நிறுத்திவிட, நிதானமாக நடந்து கட்டிலுக்கு அருகே வந்தவன், அமைதியாக படுத்துக் கொண்டான்.

“நான் உண்மையைத் தானே சொன்னேன்…” அவன் உரைக்க, அவளுக்கோ கோபம் தலைக்கேறியது.

“என்ன பொல்லாத உண்மையை சொன்னீங்க? என்னவோ நான் உங்ககிட்டே வேண்டாம்னு சொன்ன மாதிரி பேசுறீங்க. நீங்க கிட்டே வந்து, என்னைக்கு நான் மறுத்திருக்கேன்…?” அவள் பொரிய, இமை மூடி படுத்திருந்தவன், பட்டென விழி திறந்து அவளை வெறித்தான்.

கண்களில் சுவாரசியம் கூட, “அப்போ நானாத்தான் விலகி இருக்கேனா? நீ பேசியதுக்கு எல்லாம் என்ன அர்த்தம்?” அவன் முகத்தில் கோபம் இல்லை என்றாலும், அவன் வார்த்தைகளில் சிறு கோபம் எட்டிப் பார்த்தது.

தன் வார்த்தைகளில் நியாயம் இல்லை என்று அவனுக்குமே தெரியும். ஆனாலும், அவளை வெளிக்கொண்டுவர அவனுக்கு வேறு வழி தெரியவில்லை.

அவன் அவ்வாறு கேட்கவே, அவனை நெருங்கி வந்தவள், “முதல்நாள் என்ன பேசினேன்னு எனக்கு சரியா ஞாபகமே இல்லை. உங்க கோபத்தை பாத்துதான் எதையோ சொல்லிட்டேன்னு தெரிஞ்சது. அன்னைக்கு..., குழந்தை முன்னாடி வேற நான் என்னதான் செய்ய?” சொல்லும் முன்பே அவளுக்கு கண்ணீர் எட்டிப் பார்த்தது.

தன்னை நெருங்கி நின்றவளை கை பிடித்து இழுத்து தன்மேல் போட்டுக் கொள்ள, அவன் செய்கையை எதிர்பார்த்திராதவள், அவன்மேல் பலமாக வந்து விழுந்தாள்.

“அம்மா...” அலறியவள், “பீமா...” கோபமாக கத்தியவள், வலியெடுத்த தன் மார்பை கைகளால் நீவிவிட முயல, விளக்கை அணைத்தவன், அவள் செய்கையை தனதாக்கினான்.

விக்கித்துப் போனவள், “ஹையோ..., என்ன பண்றீங்க...?” அவன் கரத்தை விலக்க முயல, ஒரு இன்ச் கூட அவன் கரத்தை அகற்ற முடியவில்லை. முதலில் வலி போக்கவென இருந்த அவன் செய்கை, சற்று நேரத்தில், மறுபடத் துவங்கவே, “ப்ராடு...” மெதுவாக அவன் உரமேறிய நெஞ்சில் குத்தினாள்.

“நான் போலீஸ்டி...” உரைத்தவன், அவனது அதிரடியை செயல்படுத்த, “ஆண்டவா, ஏன் இவ்வளவு அவசரம்...? மெதுவா...” தன் தடைகளை விலக்கியவன், அவளுக்கு ஆடையாக, இதழ்களை அழுத்தமாக கவ்விக் கொண்டான்.

சற்று முரட்டுத்தனமாய் சுவைத்தவன், அவள் இதழ்தேனில் மூழ்க, அவன் பற்கள் ஏற்படுத்திய காயத்தில் “ஸ்...” சன்னமாய் முனகினாள்.

இதழ்கள் அவள் இதழ்களோடு யுத்தம் புரிய, கரங்களோ, தன்னவளை முழுதாய் உணர்ந்தது. கரங்கள் உணர்த்திய செய்தியில் கிளர்ந்தவன், தன் இதழ் தீண்டலில் வேகம் கூட்ட, ஒற்றை முத்தத்துக்கே துவண்டு போனாள்.

“பீமா..., மெதுவா...” அவனை வலுக்கட்டாயமாக தன் இதழ்களில் இருந்து பிரித்தவள், அவன் காயப்படுத்திய இதழ்களை தன் நாவால் வருட, அதுவோ அவனிடம் சிக்கிக் கொண்டது.

“ம்..., ஸ்...” முனகியவள், முகத்தை திருப்பிக் கொள்ள, அவள் கழுத்தில் இறங்கிய இதழ்கள், அவள் மேனியில் அழுத்தமாக உலா போனது. அவன் இதழ்களால் உயிர்தீண்டும் வித்தையை அறிந்திருக்க, அவன் சிகையை கைகளால் பற்றியவள், தன் உணர்வுகளை அடக்க போராடினாள்.

“கொல்றடா பீமா...” தன் உணர்வுகளின் கனம் தாளாமல் முனக, அவளுக்கு நெருக்கமாக மாறியவன் தன் வேகம் கூட்டினான். “காட்டுமிராண்டி..., மெதுவா..., முரட்டுத்தனமா பண்ணாதடா..., முடியலை...” புலம்பிய அவள் இதழ்கள், அவன் இதழ்களுக்குள் சிறை பட்டது.

அவன் உச்சம் தொடுகையில், அவளும் தன் உச்சம் தொட, அவன் முதுகில் அவள் நகக்கண்கள் ஆழமாய் புதைந்தது. அவளை விட்டுப் பிரிந்தவன், அவளை தன்மேல் போட்டுக் கொள்ள, “முரடா..., முரடா..., இப்படியா பண்ணுவீங்க...?” அவன் நெஞ்சை போலியாக குத்தியவள், அவன் பார்வையில் வீச்சை தாளாமல், சட்டென பார்வையை திருப்பினாள்.

“காயு..., நீ என்னை நேரா பாக்குறதை விட, இப்படி பாக்குற பார்..., சத்தியமா முடியலைடி. நீ இப்படி பாக்குறப்போ எல்லாம்...” அவளை இறுக அணைத்தவன், அவளை என்ன

செய்யத் தோன்றும் என செய்கையால் காட்ட, அடுத்த யுத்தம் துவங்கியது.

அவள் மீண்டும் அவனுக்கு முரடன் பட்டம் வழங்க, “எனக்கு தெரிந்தது இதுதான். நீ எனக்கு மென்மையை கற்றுக்கொடு…” அந்த இரவில் அவளையும் பாடம் சொல்லிக் கொடுக்க வைக்க, தன் உணர்வுகளை கொண்டாடும் அவனை தன் வெட்கம் துறந்து அணைத்துக் கொண்டாள்.

இரவை முழுவதும் அவன் ஆள…, விடியலின் வெளிச்சம் ஜன்னலை தாக்குகையில், முழுதாக சோர்ந்து போனாள். அடுத்து வந்த இரவுகள் ஒவ்வொன்றும் அவனுக்கு மட்டுமே சொந்தமாக, பகல் முழுவதும் தூங்கி வழியும் மருமகளைப் பார்த்து, கலைவாணியின் நெஞ்சம் நிறைந்தது.

மகனது முகத்தில் கலையாமல் இருக்கும் புன்னகையும், அவர்களது சீண்டலும், அன்னியோனியமும் பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது. முரடனாக இருந்த தன் மகனை, ஒரு காதல் கணவனாக மாற்றிய அவள் செய்கையை வியந்தார்.

“என் பிள்ளையை நான் எப்படி பாக்க ஆசைப் பட்டேனோ, அப்படியே எனக்கு மாற்றி கொடுத்திருக்கம்மா…” காயத்ரியின் கரத்தை அவர் பற்றிக் கொள்ள, “இது என் காதலுக்கு இல்லை, உங்க பையனின் காதலால் மட்டுமே சாதிக்க முடிந்தது அத்தை…” தன் கணவனை அவள் தாங்கி உரைக்க, வியந்து போனார்.

அடுத்த மாதத்தில் ஒரு நாள் அவள் தலை சுற்றலில் தள்ளாடி விழப் பார்க்க, அவளைத் தாங்கிய பிரம்மா, “காயு…, என்ன ஆச்சு…? காலையில் ஒழுங்கா சாப்பிடலையா…? ஹாஸ்பிடல் போணுமா…?” அவன் தவிக்க, காயத்ரிக்கு சட்டென பொறி தட்டியது.

அவன் கரத்தை அடுத்து தன் அடிவயிற்றில் அழுத்தியவள், “அன்னைக்கு ஒண்ணு வேணும்னு கேட்டீங்களே…”

நாணத்தால் சிவந்த முகத்தை அவன் தோளில் புதைத்துக் கொண்டாள்.

“காயு..., நிஜமா...?” அவளைத் தூக்கி சுற்றியவன், நொடியில் அவளுக்கு ஆயிரம் முத்தமிட்டவன், அவள் அடிவயிற்றிலும் இதழ் பதிக்க, அவன் பின்னந்தலையை தாங்கியவள்,

“உங்களுக்கு எல்லாம் ஞாபகம் வந்துட்டா எங்களை மறந்துட மாட்டீங்க தானே?” கலங்கிய குரலில் கேட்க, முழுதாக அதிர்ந்து போனான்.

*****

# பகுதி – 47.

பிரம்மாவால் தன் காதில் விழுந்த வார்த்தைகளை நம்பவே முடியவில்லை. ‘என்ன கேட்டாள்...? நான் அவளை மறப்பதா?’ அதிர்ந்து போனவன், வேகமாக எழுந்து நின்றவன் அவளை அதிர்வு குறையாமல் ஏறிட்டான்.

அவளோ, அவனது பதிலை எதிர்பார்த்து, ஏக்கமாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“உன் மனசில் இந்த பயம் ஏன் வந்தது?” அவன் கேள்விக்கு, அவளால் மனம் திறந்து உண்மையைச் சொல்ல முடியவில்லை. அவளிடம் பேசியிருந்த கலைவாணியும் சரி, வருணாவும் சரி. அவன் நல்லவன் என்றாலும், சில தவறுகளை சகித்துக் கொள்ள மாட்டான் என்பதை மீண்டும் மீண்டும் சொல்லியிருக்க, அவளால் வாயைத் திறக்கவே முடியவில்லை.

‘சொல்லுங்களேன்...’ அவள் பார்வை அவனிடம் மௌனமாய் யாசிக்க, அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள்.

அவள் எப்பொழுதும் வாயைத் திறக்கப் போவதில்லை என்ற உண்மை புரிய, சற்று சோர்ந்து போனான்.

“நான் உன்னை மறப்பேன் என்ற சந்தேகம் உனக்கு இருக்குன்னா, நாம வாழ்ந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்? இந்த கட்டிலில் செய்யும் காதல், உடல் தேவையும், இளமையின் தேவையும் தீர்த்துக் கொள்ள என்றா நினைக்கிறாய்?

“உன்னிடம் என் நேசத்தை நான் காட்டவே இல்லையா? சரி, அப்படியே நான் மறந்துவிட்டாலும், எனக்கு உன்னை நினைவூட்டும் கடமை உனக்கு இல்லையா? உனக்கு என்மேல் காதலும் இல்லையா? என் நினைவில் நீ இல்லையென்றால் என்ன செய்வதாக உத்தேசம்...?” அவளை தன்மேல் இருந்து பிய்த்து எடுத்தவன், சுடும் விழிகளால் அவளை நோக்கினான்.

‘அவன்மேல் அவளுக்கு காதல் இல்லையா...?’ மனம் ஊமையாய் கேள்வி கேட்க, அவன் அவளுக்கு யாரும் இல்லாமல் இருக்கையிலேயே அவன்மேல் காதல் கொண்டவள் அவள். இப்பொழுதோ ஆருயிர் கணவன். தன் வயிற்றில் வளரும் குழந்தையின் தந்தை.

“தன்னோடு ஊன் உயிராய் கலந்து விட்டவன். அவன்மேல் கொள்ளை நேசம் கொண்டிருப்பவளைப் பார்த்து இப்படிக் கேட்டால் அவளும் என்னதான் செய்வாள்?

“தெரியலையே...” அவன் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கத்தில் மனதுக்குள் நடுங்கிப் போனவள், தன்னைத் தடுத்த அவன் கரத்தை விலக்கிவிட்டு, அவன் நெஞ்சில் போய் விழுந்து, அவன் இடையோடு கட்டிக் கொண்டாள்.

“உனக்கு என்கிட்டே ஏதாவது சொல்லணுமா?” அப்படியாவது வாயைத் திறக்க மாட்டாளா என அவன் யோசிக்க, அவள் உடம்போ நடுங்கிப் போனது.

“இல்ல..., இல்ல..., உ..உ..ங்..களுக்கு எதுவும்...” அவனுக்கு எதுவும் நினைவுக்கு வரக் கூடாதே என அவள் மனதுக்குள் பெரும் வேண்டுதல் எழ, உடலோடு குரலும் நடுங்கியது.

“இப்போ எனக்கு எல்லாம் ஞாபகத்துக்கு...” அவன் வார்த்தைகளை முடிக்கும் முன்பே, பேயறைந்த முகத்தோடு அவனை விட்டு விலகியவள், உச்ச அதிர்ச்சியை முகத்தில் தேக்கி, முகம் வெளிறிப்போய் அவனை ஏறிட்டாள்.

அவளது அந்த முகமே, தன்னால் எந்த காலத்திலும் அவளிடம் நேரடியாக தனக்கு நினைவுக்கு வந்துவிட்டதை சொல்ல முடியாது என்பது முழுதாக புரிந்து போக, அவளை ஓடிபோய் தாங்கிக் கொண்டான்.

கூடவே..., “ம்ச், காயு..., இங்கே பார்..., நான் எப்பவும் உன்னோட பீமாதான்...” கட்டிலில் அமர்ந்திருந்தவளை தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான்.

‘இதற்கு இன்றைக்கே ஒரு முடிவு கட்ட வேண்டும்...’ எண்ணியவன்,

அதற்கு முன்னர், இந்த சந்தோஷமான விஷயத்தை வீட்டில் இருக்கும் அனைவரிடமும் தெரிவிக்க வேண்டும். தங்கையையும் அழைக்க வேண்டும் என முடிவெடுத்தவன், அவளை அழைத்துக் கொண்டு கீழே வந்தான்.

அவள் தாய்மை அடைந்திருக்கிறாள் என்பதை அறிந்த கலைவாணி சந்தோஷத்தில் துள்ளி குதிக்காத குறைதான். அவளை உச்சி முகர்ந்தவர், “இருங்க இப்போ வர்றேன்...” கிச்சனுக்குள் சென்றவர், நொடியில் கேசரி தயாரித்துவிட்டு வெளியே வந்தார்.

முதலில் காயத்ரிக்கு ஊட்டியவர், பிரம்மாவுக்கும் கொடுக்க, அந்த இனிப்பின் சுவை கூட அவனுக்கு கசந்து வழிந்தது.

“அம்மா, நாங்க ஹாஸ்பிடல் போயிட்டு வர்றோம்...” தாயிடம் உரைத்தவன், ஷீபாவுக்கு அழைத்தான்.

“சொல்லுங்க பிரம்மா...” அவர் வேலைக்கு நடுவில் அழைப்பை ஏற்றிருப்பது அவரது குரலில் வழிந்த பாவத்திலேயே புரிய,

“உங்களுக்குத் தெரிந்த கைனகாலஜிஸ்ட் யாராவது இருக்காங்களா? ரெபர் செய்ய முடியுமா?” அவன் மனைவியை ஓர பார்வை பார்த்தவாறே கேட்டான்.

“வாழ்த்துக்கள் பிரம்மா, இங்கே என் ப்ரண்ட் நதியா இருக்கா. நீங்க வாங்க...” அவர் சொல்லவே,

“தேங்க்ஸ் டாக்டர், இன்னும் பத்து நிமிஷத்தில் அங்கே இருப்போம்...” அலைபேசியை வைத்தவன், தனக்குள் உழன்றுகொண்டிருந்த மனைவியை என்ன செய்வது எனத் தெரியாமல் பார்த்தான்.

தன் வேலையில் நொடிகளுக்குள் ஆயிரம் தீர்வு காணும் அவனால், சொந்த வாழ்க்கையில், தன் மனைவியின் குழப்பத்துக்கு வழி செய்ய முடியவில்லையே என தவித்துப் போனான்.

‘இவ கொஞ்சமாவது தைரியமா இருந்தால் பரவாயில்லை. இப்படி அவளையும் வருத்தி, என்னையும் தவிக்க

வைக்கிறாளே. நாமாவது பேசலாம் என்றால் அதற்கும் இணங்க மாட்டேன் என்கிறாள். இவளை என்ன செய்வது?' அவனுக்கு ஒன்றும் புரியவே இல்லை.

ஷீபாவிடம் ஏதாவது தீர்வு கிடைக்குமா? என அவன் மனம் ஏங்கியது. அவன் வேலையில், உள்ளுக்குள் ஓடும் எண்ணங்களை சாமர்த்தியமாக மறைத்து பழகியிருந்தவன், உள்ளுக்குள் குழம்பும் மனதை முகத்தில் காட்டவே இல்லை.

மருத்துவமனைக்குள் நுழைந்தவன், முதலில் ஷீபாவைத்தான் காணச் சென்றான். "நீ இங்கே உக்கார்..., நான் அவங்களை பாத்துட்டு வர்றேன்" அவன் உள்ளே செல்ல, வெளியே கிடந்த இருக்கையில் அமர்ந்தாள்.

குழந்தை உண்டான சந்தோசம் சுத்தமாக தொலைந்து போயிருக்க, அவள் மனதுக்குள் பயமே வியாபித்து இருந்தது.

ஷீபாவின் அறைக்குள் நுழைந்தவன், சில நிமிடங்களில் மனைவியின் மனநிலையை உரைத்தவன், தன் குழப்பத்தையும் சொல்ல, சில நொடிகள் அமைதியாக இருந்தவர், "முதல்ல அவங்க நதியாவை பாக்கட்டும். பிறகு முடிவெடுக்கலாம்" அவரது அப்பாயின்மென்ட் அனைத்தும் முடிந்திருக்க, அவர்களை அழைத்துக் கொண்டு நதியாவின் அறைக்குச் சென்றார்.

காயத்ரியிடம் வழக்கமான கேள்விகள் அனைத்தையும் கேட்டவர், "எதுக்கும் நாம கன்ஃபாம் பண்ணிக்கலாம். நீங்க பக்கத்தில் இருக்கும் லேபில் இந்த டெஸ்ட் எடுத்துட்டு வாங்க..." உரைத்தவள், செவிலியை அழைத்து, அவளோடு காயத்ரியை அனுப்பினாள்.

தன் மனதுக்குள்ளேயே உழன்றதாலோ என்னவோ, பதுமைபோல் அவர்கள் சொன்னதைச் செய்தாள். அவள் செல்லவே, பிரம்மாவின் பக்கம் திரும்பியவள், "பிரம்மா, அவங்க ஏதோ டிப்ரஷனில் இருக்காங்க. இப்படியே போனால், அது அவங்களுக்கும் நல்லதில்லை, அவங்க

வயிற்றில் வளரும் குழந்தைக்கும் நல்லதில்லை...” நொடியில் தன் மனைவியை கணித்த அவளது புத்திசாலித்தனத்தை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

அவள் அவ்வாறு சொல்லவே, “உன்கிட்டே ஒப்பீனியன் கேக்கத்தான் வந்தேன். இப்போ நீயே சொன்ன பிறகு...” ஒரு நொடி சிந்தித்தவர், “அவளுக்கு இப்போ ஒரு அதிர்ச்சி ஏற்பட்டால் அதை தாங்கிக்கும் சக்தி அவளுக்கு இருக்கா? ஐ மீன்..., அவ வயிற்றில் வளரும் குழந்தைக்கு அதனால் எதுவும் ஆபத்து வருமா?” ஷீபா கேட்க,

“உடல்நிலையை பொறுத்த வரைக்கும் அவங்க ரொம்ப நார்மலா இருக்காங்க. சோ..., அப்படி ஒரு சான்ஸ் ரொம்ப கம்மி. இதே நிலையில் அவங்க இன்னும் கொஞ்ச மாசம் போனால், எதுவும் சொல்வதுக்கு இல்லை” பேனாவை அந்த ஸ்டாண்டில் வைத்தவாறே உரைத்தாள்.

“தேங்க்ஸ்..., நாங்க இப்போ வர்றோம்...” ஷீபா வெளியே வர, பிரம்மா அவருக்கும் பின்னால் வந்தான்.

“பிரம்மா, இதுக்கு மேலே அவ கிட்டே உண்மையை மறைப்பது ஆபத்து. வழக்கமா உங்க டிப்பார்ட்மெண்ட்டில் ஏதாவது டிராமா பண்ணுவீங்களே. அதே மாதிரி ஒரு ஆப்பரேஷன் உங்க மனைவிக்கும் போட வேண்டியதுதான்” அவர் உரைக்க, தலையை அசைத்தான்.

“டாக்டர்..., இன்னும் ஒரு வாரத்தில் நான் இங்கே அட்மிட் ஆகறேன். நான் உண்மையை சொன்னால் அவ எப்படி ரியாக்ட் செய்வான்னே எனக்குத் தெரியலை. நீங்க கொஞ்சம் பக்குவமா எனக்கு பழைய நினைவு எல்லாம் திரும்பிடுச்சுன்னு சொல்லுங்க. மீதியை நான் பாத்துக்கறேன்.

“எனக்கு கம்ப்ளீட் செக்கப் இன்னொரு முறை செய்யணும்னு ரொம்ப நாளா சொல்லிட்டு இருக்கீங்களே. அதையெல்லாம் அப்போ முடிச்சிடுங்க” மனைவி லேபில்

இருந்து வெளியே வரவே, பேச்சை அப்படியே நிறுத்திக் கொண்டான்.

அதன் பிறகு செய்ய வேண்டியது என்ன என்பதை பக்குவமாக திட்டமிடத் துவங்கினான். காயத்ரிக்கு செக்கப் முடித்தவன், அவளை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

வீட்டுக்குள் வந்தவர்களை வரவேற்றது கலைவாணியின் உற்சாக குரலே. “கௌஷி, இதோ அண்ணாவே வந்துட்டான் அவன்கிட்டே பேசு…” அவன் கையில் அலைபேசியை திணிக்க, காயத்ரி கலைவாணியின் மடியில் படுத்துக் கொண்டாள்.

மனைவியை ஒரு பார்வை பார்த்தவன், “கௌஷி…” குரல் கொடுக்க, “கங்கிராட்ஸ் அண்ணா…, எனக்கு ரொம்ப சந்தோசம். அண்ணியை நல்லா பாத்துக்கோங்கண்ணா. உங்க டென்ஷனை எல்லாம் அவங்ககிட்டே காட்டாதீங்க. இப்போ அவங்க சந்தோஷமா இருக்க வேண்டிய நேரம்.

“நான் உடனே அங்கே கிளம்பி வர்றேன். இவர் ஒரு வாரம் டெல்லிக்கு ஏதோ ட்ரெயினிங் போறாங்க. ஒரு வாரமும் நான் அங்கேதான்…” அவளது உற்சாகம் அவனையும் தொற்றிக்கொள்ள, “கண்டிப்பா வாம்மா…” மேலும் அவளது அட்வைஸை கேட்டவன், மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

‘இந்த பொண்ணுங்களுக்கு கல்யாணம் ஆகி, குழந்தை பொறந்த உடனே, எங்கே இருந்துதான் இவ்வளவு பொறுப்பு வருதோ?’ மனதுக்குள் கேட்டுக் கொண்டவன், மேலும் சில நிமிடம் அவளிடம் பேசிவிட்டே அலைபேசியை வைத்தான்.

‘அவள் வருவதும் நல்லதுக்குத்தான்…’ மனதுக்குள் எண்ணியவன், மனைவியை ஒரு பார்வை பார்த்துவிட்டு மாடியேறினான்.

‘உன் மனசுக்குள் அப்படி என்னதான்டி பயம்? உன்னை எப்படி தெளிய வைப்பது என எனக்குத் தெரியும்’

மனதுக்குள் உரையாடியவன், அவளைக் கலைக்காமல் அறைக்குச் சென்றான்.

மறு நாளே கௌஷிகா வீட்டுக்கு வந்துவிட, வீடே களை கட்டியது. வழக்கம்போல் நிவேதா குழந்தையை அள்ளிக்கொண்டு சுற்ற, அவள் செய்கையை முதல் முறையாக வித்தியாசமாகப் பார்த்தாள்.

‘இவ ஏன் என்னோட ஒட்ட மாட்டேங்கறா? அண்ணிகிட்டே கூட நல்லாத்தான் பேசறா. அண்ணாகிட்டேயும் உரிமையா பழகுறா. ஆனா என்னிடம் மட்டும் இந்த ஒதுக்கம் ஏன்? நான் வந்தால், அம்மாகிட்டே கூட சரியா பேச மாட்டேங்கறா.

‘அம்மாவா எதையாவது கேட்டால்தான் பேசுறா. இல்லையா குழந்தையை கவனிக்கறேன் என்ற பேரில் ஒதுங்கிக்கறாளே ஏன்?’ அவளுக்கு புரியவே இல்லை.

அதற்கான விடை அன்று மாலையே கிடைத்தது. காயத்ரியும் கலைவாணியும் கோவிலுக்கு கிளம்பிச் சென்றிருக்க, குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்பதால் கௌஷிகா செல்லாமல் வீட்டிலேயே இருந்தாள்.

அப்பொழுது பள்ளியில் இருந்து வந்த நிவேதா, தாயின் அறைக்குச் சென்று அமர்ந்தவள், உடை மாற்றிவிட்டு வெளியே வர, மகேஸ்வரன் அங்கே வந்தார்.

இரண்டு முறை பிரம்மாவின் வீட்டுக்கு வந்திருந்தாலும், மகேஸ்வரனை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்கு கிடைக்கவே இல்லை. பொதுவாகவே அவர் இங்கே வருவதே இல்லை. நிவேதாவும், கலைவாணியும் இங்கே இரண்டுநாள், அங்கே ஒரு நாள் என மாற்றி மாற்றி இருந்தார்கள்.

“வாங்க…” அவரை அப்பா என அழைக்கவா? இல்லையென்றால் வேறு எப்படி அழைக்க என அவள் தடுமாற, “எப்படிம்மா இருக்க…?” பாசமாக கேட்டவர், அவளை நெருங்கி, மெதுவாக அவள் தலை தடவினார்.

தன் நண்பன் தன்னிடம் கொடுத்த பொறுப்பை சரியாக செய்தேனா? இல்லையா? என்ற கேள்வியும் குற்றவுணர்ச்சியும் அவரிடம் எப்பொழுதும் இருந்ததுண்டு. பிரம்மா அப்பொழுதே சற்று விவரம் தெரிந்தவன் என்பதால், அவரால் அவனை நெருங்க முடிந்ததில்லை.

கௌஷிகாவோ அண்ணன் சொன்ன பேச்சை மீறி எதையுமே செய்ய மாட்டாள். அவர்களிடம் ஒட்டி உறவாடும் வாய்ப்போ, அனுமதியோ அவருக்கு இல்லாமல் இருந்தபொழுதும், அவர்களோடான தன் தொடர்பை எப்பொழுதுமே அவர் முறித்துக் கொண்டதில்லை.

காவல் நிலையத்தில் அவர்களது பாதுகாப்புக்காக எழுதி வாங்கியது முதல், ஒவ்வொரு வாரமும், அவர்கள் என்ன செய்தார்கள்? அங்கே என்ன நடக்கிறது என மனைவியின் மூலம் கேட்டு தெளிவாக அறிந்து கொள்வார்.

அவர்கள் படிப்பு, கல்லூரி வாழ்க்கை, கௌஷிகாவின் திருமணத்தின் பொழுது, முகேஷ் பற்றி கோவைக்கே சென்று விசாரித்து திரும்பிய பிறகுதான், நிம்மதியானார். அதையெல்லாம் எண்ணியவர், “உன் அப்பாவின் வயசுதான் எனக்கும்..., என்னையும் அப்பான்னே கூப்பிடும்மா” அவர் சொல்ல, நெகிழ்ந்து போனாள்.

“பையன் என்ன சொல்றான்? உடம்பு சரியில்லைன்னு கலை சொன்னா, இப்போ எப்படி இருக்கு?” அவர் கேட்க,

“காய்ச்சல் இன்னும் நல்லா விடலை..., அதான் அழுதுட்டே இருக்கான். நீங்க உக்காருங்க. நான் டீ எடுத்துட்டு வர்றேன்...” அவள் கிச்சன் பக்கம் செல்லத் திரும்பினாள்.

“இப்போ எதுவும் வேண்டாம்மா. நான் நிவேதாவை பாக்க வந்தேன்” சொன்னவரின் பார்வை மகளைத் தேடி சுழன்றது.

“அவ ரூம்லதான் இருக்கா..., நீங்க போய் பாருங்க...” அவள் இருக்கும் அறையை கை காட்டியவள், அவர் மறுத்தாலும் டீ தயாரிக்கச் சென்றாள்.

அறைக்குள் வந்த தந்தையைப் பார்த்த நிவேதா, “அப்பா, வாங்கப்பா…, உங்களைப் பாத்து ஒரு வாரம் ஆயிடுச்சு…” குறை பட்டவள், தந்தையின் தோளில் சாய்ந்தாள்.

மகளை அணைத்துக் கொண்டவர், “ஒரு வாரமா நீ அப்பாவை தேடவே இல்லை பாத்தியா? நான்தான் உன்னை பாக்காமல் இருக்க முடியாமல் வந்தேன்” அவர் போலியாக சோகம் காட்ட, பதறிப் போனாள்.

“ஹையோ, சாரிப்பா…, உங்களைப் பாக்கணும்னு எனக்கும் ஆசையாத்தான் இருந்தது. நீங்க இன்னைக்கு வரலைன்னா நானே அங்கே வந்திருப்பேன்…”.

அவள் பதட்டத்தை உணர்ந்தவர், “என் பொண்ணை எனக்குத் தெரியாதாம்மா” அவளை சமாதானம் செய்தவர், அவளோடு உரையாட, சில நிமிடங்கள் அவரிடம் பேசியவள் சட்டென அமைதியானாள்.

அவள் அமைதியைப் பார்த்தவர், “என்னம்மா, ஏதோ கேக்க வந்துட்டு பேசாமல் இருக்க, என்னன்னு கேள்…”.

“அம்மா இனிமேல் நம்மகூட முழுசா இருக்க மாட்டாங்களாப்பா? அண்ணா, அக்கா எல்லாம் வந்துட்டாங்க. நாம மட்டும் தனியா இப்போ?” அவள் பேச்சை கேட்டவர் திடுக்கிட்டார்.

அதே நேரம், அவருக்கு டீ கொண்டு வந்த கௌஷிகாவும் அதைக் கேட்டு திகைத்து நின்றுவிட்டாள். உடனே அவளுக்கு ஒன்று புரிந்தது…, பிரம்மா அன்று இவர்களைப் பற்றியும் யோசிக்க வேண்டும்’ எனச் சொன்னதன் அர்த்தம் முழுதாகப் புரிய, அந்த நேரம் அவள் எப்படி உணர்ந்தாள் என்றே சொல்ல முடியவில்லை.

“நிவேதா, உன்கிட்டே நான் இதை எதிர்பாக்கவே இல்லை. பிரம்மா உன் அண்ணன், கௌஷி உன் அக்கா என்று சொல்லி வளர்த்தது எல்லாம் உனக்கு புரியவே இல்லையா? அவங்க வேற, நீ வேற கிடையாது. ஏன்…, இங்கே யாராவது உன்னை ஏதாவது சொன்னாங்களா?” அவளையே கூர்மையாக பார்த்தார்.

“அப்பா..., என்னை யார் என்ன சொல்லப் போறாங்க? எனக்கு எல்லாரும் ஒண்ணா இருக்கணும்னு ஆசை. ஆனா, இப்போ...” அவள் தயங்கி நிறுத்த, கையில் ஆடை தேங்கிய டீயோடு வெளியே நின்ற கௌஷிகா அங்கிருந்து அசைய முடியாமல் அப்படியே நின்றாள்.

அதே நேரம் பிரம்மா அங்கே வர, தாயின் அறைக்கு அருகில் அசையாமல் நின்ற தங்கையைப் பார்த்தவன், அவள் அருகில் சென்றான்.

அவன் வரவே..., “அண்ணே...” அழைத்தவள், அறையை குறிப்பாய் காட்ட, தங்கையை சிறு கண்டனமாக ஏறிட்டவன், அவள் முகத்தில் இருந்த பரிதவிப்பில் குழம்பிப் போனான்.

“உனக்கு நான் இதையா சொல்லி வளர்த்தேன்? என் மனநிலையை உனக்கு இப்போ சொன்னால் புரியாது. ஆனாலும் சொல்கிறேன். உனக்கு அப்பா இடத்தில் இருந்து அனைத்தையும் பிரம்மா செய்வான். உன் அம்மாவுக்கு, நான் ஒரு பாதுகாப்பு அரண் மட்டுமே.

“அவளை பாதுகாத்து அவன் கையில் ஒப்படைத்து விட்டேன். எனக்கு ரிஷிகேஷ் போக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது என முன்பே சொல்லியிருக்கிறேனா இல்லையா? இனிமேல் இவர்கள்தான் உன் குடும்பம்.

“உன் அம்மா, அண்ணா..., அக்கா..., இதை மனசுக்குள் நன்றாக பதிய வைத்துக்கொள். இனிமேல் இன்னொரு முறை இப்படி நீ பேசக் கூடாது. கலை கேட்டால் எவ்வளவு வருத்தப்படுவாள்?” அவர் சிறு கண்டிப்பும், அறிவுரையுமாக அவளுக்குச் சொல்ல, மெல்லியதாக விசும்பினாள்.

“நீங்க என்னை விட்டு போகப் போறீங்களாப்பா?” அவள் கண் கலங்கி வினவ, அவர் கலங்கினாலும், அதை வெளியே காட்டவில்லை.

மகேஸ்வரனைப் பொறுத்த வரைக்கும் அவர் இன்றுவரை வாழ்வது ஒரு துறவற வாழ்வுதான். கலையின் கழுத்தில் அவர் தாலி கட்டினாலும், அதற்குரிய உரிமையின் இந்த நிமிடம் வரை அவரைத் தீண்டியதோ, பார்த்ததோ இல்லை.

கலையும் அவரிடம் எட்டி இருந்தே வாழ்ந்துவிட்டார். மகேஸ்வரன் கலையை மனைவி என்ற விதத்தில் நெருங்கியிருந்தால் எப்படியோ ஆனால், இருவரும் தங்களுக்கு முன்னர் ஒரு சுவரெழுப்பி அதற்குள் வாழ்ந்துவிட்டார்கள்.

கலை குழந்தைகளை எண்ணி கலங்கியபொழுது, ஒரு குழந்தையை தத்தெடுக்க முடிவெடுத்தாரே தவிர, தங்கள் குழந்தையை உருவாக்க வேண்டும், கலையை தனக்கு மட்டுமாக வைத்துக் கொள்ள வேண்டும் என அவர் எண்ணியதே இல்லை.

பிரம்மா அவர்களை ஏற்றுக் கொண்டால், தான் மனதுக்குள் வாழும் துறவற வாழ்வை, வெளியிலும் வாழ வேண்டும், காசி, ரிஷிகேஷ் என தன் ஆன்மீக பயணத்தை துவங்க வேண்டும் என எப்பொழுதோ முடிவெடுத்து விட்டார்.

அதை நிவேதாவிடமும் கோடிட்டு காட்டியிருந்தார். அப்படி இருக்கையில், நிவேதா இன்னும் தன்னை இந்த வாழ்வில் பிடித்து கட்டிவைக்க முயல்வதை அவரால் சகிக்க முடியவில்லை என்றே சொல்லலாம்.

இதைப்பற்றி அவர் ஏற்கனவே பிரம்மாவிடம் பேசிவிட்டார். கலையிடம் அதைப்பற்றி அவர் சொன்னபொழுது, தன்னை இத்தனை நாள் பாதுகாத்த மனிதனை பிரிவது மட்டுமே அவருக்கு கஷ்டமாக இருந்ததே தவிர, தன் கணவனாக அவரை அவர் பிரிவதாக ஒரு சதவீதம் கூட வருந்தவில்லை.

“நீங்கள் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?” என்பது மட்டுமே கலையின் கேள்வியாக இருந்தது.

“நம் மகளை கண் கலங்காமல் பார்த்துக்கொள்” என அவர் சொல்ல, அழுதே விட்டார்.

“நீங்கள் சொன்னாலும் இல்லையென்றாலும் அவள் என் மகள்தான்” சற்று கோபமாகவே சொல்லிவிட்டார்.

பிரம்மாவிடம் சொன்னபொழுதோ, அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. அவர் கரத்தை ஒரு நிமிடம் அழுத்தமாக பற்றிக் கொண்டவன், “நிவேதா இனிமேல் என் தங்கை இல்லை..., என் மகள்...” அவருக்கு வாக்கு கொடுத்தான்.

இத்தனை வருடங்கள் தன் தாய்க்காக, தங்களுக்காக அவரது சுய வாழ்வான துறவறத்தை அவர் ஏற்காமல் இருந்ததே போதும் என அவனுக்குத் தோன்றியது. முன்னர் அவன் பயந்ததும் இவரையும், நிவேதாவையும் நினைத்துதான்.

ஆனால், அவரே இப்படி ஒரு முடிவில் இருக்கையில், அவர்களை பாதுகாப்பது தன் கடமை என எண்ணினான். தன் நினைவில் இருந்து அகன்றவன், ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல், அறைக்கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்.

“நிவேதா...” அவன் அழைக்க, “அண்ணே...” எழுந்தவள், தந்தை தன்னை விட்டு போகிறேன் எனச் சொன்னதை எண்ணி, அவன் நெஞ்சில் விழுந்து அழுதாள்.

அதைக் காண சகிக்காத மகேஸ்வரன், “பிரம்மா, நீயாவது இவளுக்குப் புரிய வை. என் மனசு நாளுக்கு நாள் இந்த பந்தங்களில் எல்லாம் இருந்து விடுபட்டு போக நினைக்குது. இவள் என்னை கட்டி வைக்க நினைக்கிறாள்.

“இவள் என்னை முழு மனதாக அனுப்பவில்லை என்றால், என்னால் எங்கே போனாலும் நிம்மதியாக இருக்க முடியாது. இவளிடம் சொல்லாமல் போக எனக்கு எத்தனை நொடி ஆகி இருக்கும்?” அவர் கேட்க, விக்கித்து அழுதவள் சமாதானமே ஆகவில்லை.

தன் தோளில் உறங்கிவிட்ட குழந்தையை கட்டிலில் கிடத்தியவள், நிவேதாவின் அருகில் வந்தாள். “ஏன் நிவேதா, என்னைப் பார்த்தால், அம்மாவை உன்னிடமிருந்து பிரிக்கும் வில்லி மாதிரியா இருக்கு? அதனால்தான் நான் இங்கே வந்தால், அம்மாவை எனக்கு

விட்டுக் கொடுத்துவிட்டு, என் குழந்தையை தூக்கிட்டு ஒதுங்கிப் போனியா?

“அப்படி ஒரு நினைப்பு உனக்கு இருந்தால், நான் இனிமேல் இங்கே வரவே இல்லை போதுமா? அம்மா இனிமேல் உனக்கு மட்டும்தான். நான் இங்கே இருந்து போய் விடுகிறேன். இப்படி ஒரு நினைப்பை வைத்துக் கொண்டுதான் என்னிடம் நீ பேசவே இல்லையா?

“அண்ணா உனக்கு அண்ணாவும், அப்பாவுமாக மாறும்போது, நான் உனக்கு அக்காவும் அம்மாவுமாக மாற மாட்டேனா? இத்தனை வருடம் கிடைக்காத தாய் பாசம் கிடைக்கவே கொஞ்சம் அதை அனுபவிக்க ஆசைபட்டேன்தான், அதற்காக, என்னை வில்லி ரேஞ்சுக்கு நினைப்பாயா...?” கௌஷிகா அழ, தானும் சேர்ந்து அழுதாள்.

“அக்கா அப்படியெல்லாம் இல்லை. உங்க அம்மாவை நான் பிரித்து விடுவேன்னு நீங்க நினைத்து விடுவீங்களோ என்று பயந்துதான் ஒதுங்கிப் போனேன். நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. நீங்க எனக்கு எப்பவுமே அக்காதான்...” பிரம்மாவின் நெஞ்சில் இருந்து பிரிந்தவள், தமக்கையை கட்டிக் கொண்டாள்.

பிரம்மாவும், மகேஸ்வரனும் இப்பொழுது பார்வையாளர்கள் ஆனார்கள். பெண்கள் இருவரும் கட்டிக்கொண்டு அழ, “அழுதது போதும் இப்போ என்ன நடந்துடுச்சுன்னு இப்படி அழறீங்க? யாரும் யாரையும் பிரிக்க முடியாது. அவங்க அவங்க இடம், அவங்க அவங்களுக்கு உண்டு.

“நீங்க ரெண்டுபேரும் இப்படி நினைக்கறீங்கன்னு அம்மாவுக்குத் தெரிந்தால் எவ்வளவு வருத்தப்படுவாங்க? அவங்களால் அதன் பிறகு நிம்மதியா ஒரு நாளாவது இருக்க முடியுமா?

“கௌஷி ஊருக்கு போய்ட்டா, நம்மகிட்டே கோபப்பட்டுட்டு போயிட்டாளோன்னு நினைப்பாங்கே. அதே மாதிரி,

சின்னப் பொண்ணை தவிக்க விடுறோமோன்னு கலங்கிடுவாங்க. இத்தனை வருடம் அவங்க வருத்தப்பட்டது போதாதா?

“இன்னும் அவங்களை வருத்தப்பட வைக்கணுமா? அவங்களைப் பொறுத்த வரைக்கும், அவங்களுக்கு மூணு பிள்ளைங்க. அதில் அவங்களுக்கு வேறுபாடே இல்லை. நாமளும் அப்படித்தான் இருக்கணும்.

“அதே மாதிரி..., மகேஸ்வரன் சாரின் உணர்வுகளுக்கும் நாம மதிப்பு கொடுத்தே ஆகணும். இத்தனை வருடம் நமக்காகவே அவர் தன் சொந்த விருப்பு, வெறுப்பை விட்டுட்டு வாழ்ந்துட்டார். இனிமேலும் அவரை நாம் பிடித்து வைப்பது நியாயமே இல்லை.

“ஒரு தாயோட மகனா சுயநலமா யோசிக்கிறானோன்னு நீங்க யாரும் நினைக்க வேண்டாம். அவர் இங்கேயே இருப்பதாக முடிவெடுத்திருந்தால், அவரையும் இதே வீட்டில் ஒண்ணாக வைக்க வேண்டும் என்றுதான் அவர்கிட்டே நான் பேசினேன்.

“அப்போதான் அவரோட எண்ணத்தை சொன்னார்..., என்னால் அதை மறுக்க முடியலை. இப்போ சொல்லு நிவேதா..., அப்பா போகலாமா? இல்ல, உன்னோடவே இன்னும் ஐந்து வருடம் இருக்க வேண்டும் என சொன்னாலும், நான் அவரிடம் பேசறேன்.

“எங்களுக்காக இத்தனை வருடம் பொறுத்தவர், உனக்காக ஒரு ஐந்து வருடம் பொறுக்க மாட்டாரா என்ன?” நீளமாக பேசி முடிக்க, அனைவர் மனமும் ஒரு மாதிரி தெளிந்தது.

நிவேதா தந்தையைப் பார்க்க, அவரோ..., ‘எனக்கு விடை கொடேன்’ என்னும் பார்வை பார்த்தார்.

“நீங்க என்னைக்குப்பா போகணும்?” அவள் கேட்க, முகம் மலர்ந்தவர், “ரெண்டுநாளில் கிளம்பறேன்” அவர் சொல்ல, நம்ப முடியாமல் அவரை ஏறிட்டாள்.

“போக வேண்டும் என நான் எப்பொழுதோ முடிவெடுத்து விட்டேன். எல்லாவற்றையும் திட்டமிட்டு முடித்தாயிற்று. அனைத்தையும் பிரம்மா பார்த்துக் கொள்வான் என்ற முழு நம்பிக்கை இருக்கு. இதற்குமேல் தாமதிக்க என்ன இருக்கிறது?” அவர் கேட்க, நிவேதா கண்களில் கண்ணீர் வழிந்தாலும் சம்மதித்தாள்.

கோவிலுக்குப் போயிருந்த அவர்கள் திரும்பி வரவே, மகேஸ்வரனின் முடிவை கேட்ட கலைவாணி அமைதியாக நின்றிருந்தார். காயத்ரி திகைத்து தன் கணவனை ஏறிட, ‘பிறகு சொல்கிறேன்’ என கண் ஜாடை காட்டவே அமைதியானாள்.

மறுநாள் மகேஸ்வரன் கோவைக்கு கிளம்பிச் சென்றவர், நேராக சென்று பார்த்தது கௌசிகாவின் மாமியார், மாமனாரைதான். அவரோடு பிரம்மாவும் சென்றிருந்தான். அவர்கள் வரப்போவதை, முகேஷ் ஏற்க்கனவே சொல்லியிருந்த காரணத்தால் அவர்களை வரவேற்றவர்கள், அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் எனக் கேட்டார்.

மகேஸ்வரன் முதலில் தன்னை அறிமுகப்படுத்தியவர், கலையைப் பற்றி, அவர் வாழ்வில் தான் அடியெடுத்து வைத்த விதம், அவர்கள் வாழ்க்கை, நிவேதா, என ஒன்றுவிடாமல் அவர்களிடம் உரைக்க, வத்சலாவுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

ஏதோ மர்மப்படம் பார்ப்பதுபோல் கேட்டுக் கொண்டிருந்தவர், அதை வார்த்தைகளிலும் வெளியிட்டார். கணவன் அவரை முறைக்கவே, கப்பென வாயை மூடிக் கொண்டார்.

முகேசின் தந்தை, “கௌஷி எங்க வீட்டு மருமகள், அது எந்த காலத்திலும் மாறப்போவது இல்லை. ஆனாலும், நீங்க இவ்வளவு தூரம் எங்களை தேடி வந்து உண்மையை சொன்னதில் எங்களுக்கு சந்தோசம். அவளை நாங்க நல்லபடியா பாத்துக்கறோம். நீங்க நிம்மதியா போயிட்டு வாங்க.

“என்ன..., இதையெல்லாம் அவங்க கல்யாண டைமிலே சொல்லியிருந்தால், இங்கே நடந்த பல விஷயங்களை தவிர்த்திருக்கலாம்” மனைவியை முறைத்தவாறே சொல்லி முடித்தார்.

“நான் என்ன எனக்காகவா பேசினேன். மகனுக்கு ஒரு மாமியார் வீட்டு உறவு வேணும்னு நான் நினைத்தது என்ன தப்பு?” அப்பொழுதும் அவர் விடுவதாக இல்லை.

‘நீ அது மட்டுமா பேசினாய்...?’ எண்ணியவர், அவர்கள் முன்பு எதையும் வெளிப்படுத்தவில்லை.

மகேஸ்வரனுக்கு இப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. ஆனாலும், தங்களுக்காக அவர் இதையெல்லாம் செய்வது, அவன் மனதில், அவருக்கான மதிப்பு கூடிகொண்டே சென்றது. அதை அறிந்த கௌஷிகாவும் அவரை கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தார்.

மறு நாளே அவர் காசிக்கு கிளம்ப, அவரது அலைபேசி, சொத்து விவரம், அவரது டிராவல்ஸ் என அனைத்தையும் பிரம்மாவின் வசம் ஒப்படைத்தவர் விடைபெற்று சென்றார். காவி உடையில், கழுத்தில் ருத்திராட்சம் மாலையோடு அவரைப் பார்க்கையில், அவர் முகத்தில் வழிந்த சாந்தமும், நிம்மதியும், அனைவரையும் அவர் காலில் விழ வைத்தது.

“இனிமேல் நீங்க வரவே மாட்டீங்களாப்பா...?” நிவேதாதான் கலங்க, அவள் நெற்றியில் இதழ் ஒற்றியவர், மெல்லிய புன்னகை மட்டுமே சிந்தினார். அதுவே அவளுக்கான பதிலை சொல்ல, பிரம்மா அவள் தோளை அழுத்தவே, கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

கலைவாணி தன் கழுத்தில் கிடக்கும் தாலிக்கு என்ன அர்த்தம் என்பதுபோல் பார்க்க, ‘எம்பெருமான் பார்த்துக் கொள்வார்...’ என அவர் கேள்விக்கு பதில் உரைத்தவர் காலில் செருப்பு கூட அணியாமல், ரோட்டில் இறங்கி நடந்து விட்டார்.

பேருந்தில் ஏற்றிவிட வருகிறேன் என பிரம்மா சொல்ல, பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

அவரது வீட்டை நிவேதாவின் பெயருக்கு அவர் மாற்றியிருக்க, வீட்டை காலி செய்தவர்கள் பிரம்மாவின் வீட்டுக்கே வந்துவிட்டார்கள். அங்கே வாடகைக்கு விடப்படும் என போர்டு மாட்டப் பட்டது.

மூன்றே நாட்களில் அனைத்தும் முடிய, அன்று காயத்ரியும், கலை வாணியும் அமர்ந்து நியூஸ் சேனல் பார்த்துக் கொண்டிருக்க, பிளாஷ் நியூஸ்..., ‘எஸ்பி பிரம்மாவை அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று, கோர்ட் வளாகத்தில் வைத்து கட்டையால் தாக்கிவிட்டு தப்பி ஓட்டம்.

“மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் எஸ்பி அனுமதிக்கப் பட்டிருக்கிறார்...” மேலும் அவள் எதையோ சொல்லிக் கொண்டு போக, காது அடைக்க, கண்கள் இருட்ட, நடுங்கிப் போனாள் காயத்ரி.

அதே நேரம் அவளது அலைபேசி இசைக்க, கந்தன் அழைப்பதை பார்த்தவர், “அண்ணே..., அவருக்கு என்ன ஆச்சு...?” அவள் உரக்க பேசியிருந்தாலே அந்த பக்கம் கேட்கும் அளவுக்கு தொண்டை நரம்புகள் தெறிக்க கத்தினாள்.

“ஐயாவுக்கு உயிருக்கு ஆபத்தில்லை. நீங்க செட்டிநாடு ஹாஸ்பிடல் வாங்க. ஷீபா டாக்டர்தான் பாக்கறாங்க...” அவர் அலைபேசியை வைத்துவிட, இருவரும் அடுத்த அரைமணி நேரத்தில் அங்கே இருந்தார்கள்.

உயிரை கையில் தேக்கி அவள் நிற்க, வெளியே வந்த ஷீபா, அவர்களை தன் பின்னால் வருமாறு பணித்தவர், அறைக்கு திரும்பி நடந்தார். அவர் பின்னால் சென்றவள், அவர் சொன்னதைக் கேட்டு, உறைந்தே போனாள்.

“பிரம்மாவுக்கு உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. அவருக்கு பழைய நினைவுகள் திரும்பிவிட்டது என நினைக்கிறேன். ஆனாலும் மயக்கம் தெளிந்தால்தான்

எதையும் உறுதியா சொல்ல முடியும்” அவர் உரைத்த வார்த்தைகளில், காயத்ரியின் உலகம் நின்று போனது.

*****

# பகுதி – 48.

ஷீபா சொன்னவற்றைக் கேட்ட கலைவாணி அமைதியாக இருக்க, காயத்ரிதான் பெரும் அதிர்ச்சியை வெளியிட்டாள். அதைப் பார்த்த ஷீபா இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

“டாக்டர்..., இ..து..., உண்மையா...?” தெளிவுபடுத்திக் கொள்ள கேட்டாள். கூடவே, கலைவாணியின் அமைதி அவளுக்கு வியப்பாக இருக்க, அவரை திரும்பிப் பார்த்தவளது கண்களில் வியப்பு இருந்தது.

“அத்தை..., நீங்க..., உங்களுக்கு...” அதிர்ச்சியாக இல்லையா? எனக் கேட்கவந்து முடியாமல் திணற, அவளை கனிவாய் நோக்கினார்.

“எதுக்கும்மா பயப்படணும்?” கேள்வியை அவளிடம் திருப்பிக் கேட்டார்.

அவருக்கு ஏற்கனவே அவனுக்கு நினைவு திரும்பிவிட்டது என்ற சந்தேகம் இருந்ததால், அவர் அமைதியாக இருந்தார். கூடவே, அவரது சந்தேகத்தை நிவர்த்தி செய்திருந்தது பிரம்மாவின் வார்த்தைகள். ‘எனக்கு சில உண்மைகள் நினைவுக்கு வந்துவிட்டன என்று காயத்ரிக்கு இப்போ தெரிய வேண்டாம்’ என கேட்டுக் கொண்டதால் மட்டுமே அவளிடம் அவர் எதையும் உரைக்கவில்லை.

சில விஷயங்களை அவர்கள் இருவரும் மட்டுமே பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அவரது எண்ணம்.

“அவர் முன்னாடி உங்களை ஒதுக்கி வைத்திருந்தார். உங்களைப் பார்த்தாலே...” “எரிந்து விழுவான். வார்த்தையால் வதைப்பான்..., எல்லாம் சரிதான். ஆயிரம் இருந்தாலும் அவன் என் மகன். அவன் கோபத்தை எப்படி சம்மாளிக்கணும்னு எனக்குத் தெரியும்” உரைத்தவர், மருத்துவரிடம் ஒரு பார்வையை வீசிவிட்டு எழுந்து வெளியே சென்றார்.

அவர் செல்லவே, அவள் பக்கம் திரும்பிய ஷீபா, காயத்ரியை அமைதியாக ஏறிட்டார். காயத்ரியின் மனமோ, ‘இனிமேல் அவரை எப்படி எதிர்கொள்வேன்?’ என்பதில் சுழல, அதை அவள் முகம் எடுத்துக் காட்டியது.

“கணவனுக்கு நினைவு திரும்பியதில் வருத்தப்படும் மனைவியை நான் இப்பொழுதுதான் பார்க்கிறேன்” சிறு எள்ளலாக உரைக்க, தலை கவிழ்ந்தாள்.

அவளைப் பார்த்தவர், “நீ யார்...?” அவளிடம் கேட்க,

குழப்பமாக அவரை ஏறிட்டவள், “காயத்ரி...” பதில் உரைத்தாள்.

“நீ யாருன்னு கேட்ட உடனே, நீ சொன்ன பதில், உன் பெயர். நீ யார்..., என்னவாக இருக்கிறாய்? என்ன செய்கிறாய்? உறவுகள் யார்...? இப்படியான என் கேள்விகளுக்கெல்லாம், உன் மூளையில் பதிந்திருக்கும் நினைவுகளைத் தூண்டி நீ பதில் சொல்வ. அதாவது..., ஒரு மனிதன் யார்ன்னா..., அவனோட நினைவுகள்தான் அவன்.

“அப்படி இருக்கையில், அந்த நினைவுகள் மொத்தமாக அழிந்திருக்கையில் அவன் நிலை என்னவாக இருக்கும்? மூளைக்குள் இருக்கும் ஒரு சூனியம். அதை அவன் எப்படித் தாங்குவான்? இப்போ சட்டுன்னு உன் மூளையில் இருபது எல்லாம் எரேஸ் ஆனால் உனக்கு எப்படி இருக்கும்?” அவர் கேட்க, காயத்ரிக்கு புரிந்ததுதான்.

புரிந்த விஷயத்தை ஏற்றுக் கொள்வதுதான் கடினமாக இருந்தது.

“அவருக்கு என்னை ஞாபகம் இருக்கும் தானே...” இப்பொழுது புதுக் கவலை முளைவிட்டது.

“மறந்துவிட்டாள்..., பிரம்மாவை விட்டு போய்டுவியா?” அவளிடம் சுள்ளென கேட்க, அதிர்ந்து போனாள்.

அவள் அதிர்ச்சியான முகத்தைப் பார்த்தவர், “பிரம்மா இங்கே பேஷண்டா இருந்தப்போ, டிச்சார்ஜ் ஆகி, ஒரு முறை இங்கே செக்கப்புக்கு வந்திருக்கும்போது நான் அவரிடம்

ஒரு விஷயம் சொன்னேன். வாழ்க்கையில் எப்பொழுதுமே விறைப்பாகவே இருக்க முடியாது.

“அதே மாதிரி..., நான் பெரிய எஸ்பி என்ற மிதப்பிலேயும் இருக்க முடியாதுன்னு. கூடவே, வாழ்க்கையில் சில நேரம் கெஞ்சணும், இறங்கிப் போகணும், ஒரு சாதாரண மனுஷனா கூட நடக்க வேண்டி இருக்கும்னு. அதை அவர் கேட்டார்...” குறிப்பாக காயத்ரியின் கழுத்தில் கிடந்த தாலியில் அவர் பார்வை பதிய, அவன் வாழ்வில் தான் வந்ததை குறிப்பிடுகிறார் என அவளுக்குப் புரிந்தது.

“பிரம்மாவை நான் முன்பு பார்க்கும்போது எல்லாம் எங்களுக்குள் பெரும் சண்டையே வந்ததுண்டு. அதை மனசில் வைத்துக் கொண்டு நான் நடந்திருந்தால், அவர் உயிரையே கூட நான் துச்சமாக மதித்திருப்பேன். அவருடனே இருந்த உனக்கு, அவர் நினைவுகள் இல்லாமல் எவ்வளவு கஷ்டபட்டிருப்பார்ன்னு தெரியாதா என்ன?” அவர் கேள்விக்கு, அவன் பட்ட பாடுகள் அவள் நினைவுக்கு வந்தது.

அவள் சிறு தெளிவோடு அவரை ஏறிட, “அவர் வாழ்க்கையில் ஒரு மாதத்துக்குள் நீ வந்தாய் என்றால், அவர்மேல் உனக்கு நேசம் இல்லாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியென்றால், அந்த நேசத்தை நீ கொட்டிக் கொடுக்க வேண்டியது இந்த பிரம்மாவுக்குதான்.

“இப்போ நீ ஒரு உயிர் மட்டும் இல்லை. அவரோட உயிரை நீ வயிற்றில் சுமக்கிறாய். அதில் இருந்தே உன் உரிமையும், உனக்கான இடமும் தெரியலையா? அந்த பிரம்மாவை நேசிப்பதில், உன்னை நேசிக்க வைப்பதில் என்ன திரில் இருக்கு?

“இந்த பிரம்மாவை உன் நேசத்தால் மாற்று..., அதுதானே உன் நேசத்துக்கான உண்மையான வெற்றி. போ..., போய் தைரியமாக அவரை பேஸ் பண்ணு. பிரம்மா ரொம்ப நல்லவர் என்று நான் சொன்னால் அதிகப்படியாக இருக்கும். சோ...” அவளை போகச் சொல்ல, சற்று தைரியம் கொண்டவள் இருக்கையில் இருந்து எழுந்தாள்.

“அவருக்கு எப்போ நினைவு திரும்பும்?” அவள் கேட்க,

“இப்போ கண் விழித்திருப்பார்...” சொல்லவே, உள்ளுக்குள் எழுந்த உதறலை மறைத்தவாறு அவனை தேடிச் சென்றாள்.

அவளுக்கு முன்பாகவே கலைவாணி அவன் அறைக்குள் சென்றிருக்க, செல்லவா வேண்டாமா என்ற குழப்பத்தில் நின்றிருந்தாள். அறைக்குள்ளோ, அவனைப் பார்த்த கலைவாணி, அவன் தலையில் போட்டிருந்த கட்டை மெதுவாக வருட, “இது ஒண்ணும் இல்லம்மா, சும்மா லேசான காயம்தான்...” அவரை சமாதானப் படுத்தினான்.

“என்னப்பா விளையாட்டு இது? அதுவும் காயத்ரி வாயும் வயிறுமா இருக்கும்போது, இப்படி ஒரு விஷப்பரீட்சை அவசியமா?” மகன் ஒன்றை செய்தால் அதில் ஏதாவது காரணம் நிச்சயம் இருக்கும் எனத் தெரிந்தவர் தன்மையாகவே கேட்டார்.

“இந்த பரீட்சையை இப்போ வைக்கலன்னா, நான் வாழ்க்கையில் முழுசா தோத்துப் போயடுவேம்மா. என்னால் அது முடியாது. அவள் மனசுக்குள் இருக்கும் பயம், தவிப்பு எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டத்தான் இந்த நாடகமே.

“உங்ககிட்டே அவளோட அண்ணா பற்றி நான் சொன்னதில்லை இல்ல...” கேட்டவன் சில நிமிடங்கள் செலவழித்து, காமேஷின் விஷயம் துவங்கி, இறுதியாக சாந்தியின் கைது வரைக்கும் உரைக்க, குறுக்கிடாமல் அனைத்தையும் கேட்டுக் கொண்டார்.

“ஏம்ப்பா..., காமேஷை வைத்து நீ அவள்மேல் ஏதாவது கோபம் காட்டினியா? அதனால்தான் உன்கிட்டே விஷயத்தை சொல்ல பயப்படுறாளா?” அவர் கேட்க, அவனிடம் சில நொடிகள் பதில் இல்லை.

அதுவே அவன் கோபமாக எதையோ சொல்லியிருக்கிறான் என்பதை உணர்த்த, “அண்ணன் செய்த தவறுக்கு, இவளை தண்டிப்பது எந்த விதத்தில் நியாயம்?” அவனிடம் சாடினார்.

“அம்மா, அது ஏதோ கோபத்தில் ஒரு முறை, ஒரு வார்த்தைதான் சொன்னேன். அதுக்கே..., சரி விடுங்க, இனிமேல் அவளை எதுவும் சொல்ல மாட்டேன். அவள் என் மனைவி, என்னில் சரி பாதி சோ..., நீங்க சும்மா வேடிக்கை மட்டும் பாருங்க. அவளை உள்ளே அனுப்புங்க. நானா எதுவும் சொல்ல முன்னாடி, நீங்க எதுவும் சொல்லிக்காதீங்க...” உரைக்க அவர் அங்கிருந்து வெளியேறினார்.

அவர் வெளியே செல்லவே மீண்டும் ஒரு முறை அவளிடம் பேசவேண்டிய விதத்தை மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டான். எந்த விதத்திலும் அவள் எதிர்பார்த்து வரும் வகையில் கோபத்தையோ, பாராமுகத்தையோ அவளிடம் காட்டக் கூடாது என மீண்டும் மீண்டுமாக தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவள் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவளிடம் பேசி, அவள் மனதில் இருப்பதை வெளியே கொண்டுவர வேண்டும் என முடிவெடுத்தான். அவள் எந்த விதத்தில் உள்ளே வருவாள் என எதிர்பார்த்து காத்திருக்கத் துவங்கினான்.

வெளியே கையைப் பிசைந்தவாறு நின்ற காயத்ரியைப் பார்த்தவர், “உள்ளே போம்மா...” அவர் சொல்ல, அவரை தவிப்பாய் ஏறிட்டாள்.

“அத்த..., அவர்..., உங்ககிட்டே நல்லா பேசினாரா?” அவர் பதிலுக்காக ஆவலாக நின்றிருந்தாள்.

“கோபமா வெளியே போ’ன்னு சொன்னான் வந்துட்டேன். நீ போ...” மருமகளது தெளிவு மட்டுமே முக்கியம் என எண்ணியவர், தானும் அவன் நாடகத்தில் இணைந்து கொண்டார்.

நடுங்கும் கரங்களால் கதவைத் திறந்தவள், படுக்கையில் அவனைப் பார்க்க, தலையில் சிறு கட்டோடு, விழி மூடி படுத்திருந்தான். அவனை அப்படிப் பாத்த அந்த நொடி, மற்றவை அனைத்தும் மறைந்து போக, ஒரே பாய்ச்சலாக அவனை நெருங்கினாள்.

அவள் ஓடி வரவே, உள்ளுக்குள் அவள் உடல்நிலை கருதி உள்ளுக்குள் பதறினாலும், ஏதும் தெரியாதவனாக விழி மூடி அரை விழிப் பார்வையில் அவளைப் பார்த்தான்.

‘ஹையோ..., எவ்வளவு பெரிய கட்டு. இவருக்கு மட்டும் ஏன் தலையிலேயே அடிபடுது?’ எண்ணியவள், அவன் கட்டை கையால் வருடினாள். சிறிய கட்டாக இருந்தாலும், அந்த நேரம் அவள் பார்வைக்கு அது பெரிதாகவே தோன்றியது. காதல் கொண்ட மனமல்லவா.

“என்னங்க..., ரொம்ப வலிக்குதா...?” அவள் கேட்க, பட்டென விழி திறந்தவன், அவளை அறிமுகமற்ற பார்வை பார்த்தான். அதில் திகைத்தவள், அவனை விட்டு விலகி நிற்க, அவனோ, உள்ளுக்குள் தவித்துப் போனான்.

‘நான் உன் பீமாதாண்டி...’ உள்ளுக்குள் உருகியவன், அதை பார்வையில் வெளிப்படுத்தவில்லை.

அவனது அந்த பார்வையை ஏற்க முடியாமல், “என்னங்க..., நான்..., காயத்ரி...” அவள் திணற, அப்பொழுதும் அவன் பார்வையில் மாற்றம் வந்திருக்கவில்லை.

“காயத்ரின்னா...?” அவன் கேட்க, அதிர்வாய் அவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் பாதிக்கப்பட்டவன், ‘கொஞ்சம் ஓவரா போறோமோ? இப்படி கேட்டிருக்க கூடாதோ? எதையாவது சொல்றாளா பார்? அப்படியே பேயறைஞ்ச மாதிரி நிக்கறா...?’ மனதுக்குள்ளேயே எண்ணியவன், அவளையே ஊடுருவினான்.

“நா..நா..ன்..., யாரா...?” அவன் கண்களில் என்ன கண்டாளோ, ‘இதற்கு என்ன பதில் சொல்வதாம்? உங்கள் மனைவி என்றா? என்னை இவருக்கு யாரென்று அடையாளம் தெரியாதா? காமேஷின் தங்கை என்று தெரியாதா?’ அவள் மனதுக்குள் ஓடிய விஷயம் இதுதான்.

‘இதற்கா நான் இவ்வளவு பயந்தேன்?’ மனதுக்குள் அவ்வளவு நாட்களாக அடைத்திருந்த ஏதோ ஒன்று விடைபெற்றுச் செல்வதுபோல் உணர்ந்தாள். அதே நேரம் அவன்..., “உன்னை எங்கேயோ...” இழுத்தவன், “கேஸ்

விஷயமா…” அவன் இழுக்க, அவள் அடிமனதில் சில பல கலவரம்.

அதோடு இதற்குமேல் இந்த விஷயத்தை இழுத்துச் செல்வதில் அவளுக்கும் விருப்பம் இல்லாமல் போகவே, ஆழமாக மூச்செடுத்தவள், ‘எந்த முடிவு என்றாலும் அவர் எடுக்கட்டும். இந்த டென்ஷனை இதற்குமேல் தாங்க முடியாது’ முடிவெடுத்தாள்.

“பாவை காலேஜ்…, நீங்க என்கவுண்டர் செய்த காமேஷின் தங்கை நான்…” உரைத்தவள், தன் கழுத்தில் கிடந்த தாலியை விரலால் பற்றியவள், “இது நீங்க கட்டியதுதான்…” படபடவென உரைத்துவிட்டு, ரிசல்டை எதிர்பார்க்கும் மாணவியாக அவன் முகம் பார்த்து நின்றிருந்தாள்.

‘ஹப்பா…, என் பொண்டாட்டிக்கு தைரியம் வந்துடுச்சு’ எண்ணியவனுக்கு இப்பொழுதே அவளோடு விளையாடிப் பார்க்கத் தோன்றியது. வீட்டுக்குச் செல்லும் வரைக்கும் தாங்காது என அவனுக்கே தோன்றியதோ?

“உன்னை நான் பிளாக்மெயில் செய்து கல்யாணம் செஞ்சுகிட்டேனா?” அவன் திடுமென கேட்க, அது உண்மை என்றாலும், அவனிடம் அதைச் சொல்ல அவள் விரும்பவில்லை. அவளைப் பொறுத்த வரைக்கும், அவன்மேல் இருந்த காதலால் மட்டுமே அவனை மணக்க சம்மதித்தாள்.

மறுப்பாக தலை அசைத்தவள், விழியில் தேங்கிய நீரோடு அவனை ஏறிட்டாள். “அப்போ…, இன்னைக்கு நான் உன்கிட்டே சண்டை போட்டுட்டு வேலைக்கு போனேனா?” அவன் கேள்வி கேட்க, திருதிருத்தாள்.

அவனிடம் எப்படியான கோபங்களையோ எதிர்பார்த்திருந்தவளுக்கு, அவனது இந்த கேள்விகள் முற்றிலும் புதிதாக இருந்தது. “ஆமாவா?” அவள் விழிக்கவே, உள்ளுக்குள் பொங்கிய சிரிப்பை கட்டுப்படுத்தியவன், வெளியே சீரியசாக கேட்டான்.

“ஹையோ அப்படியெல்லாம் இல்லை...” அவள் பதறிப்போய் குரல்கொடுக்க, ‘ம்..., இது கூட நல்லா இருக்கே...’ அவள் கையைப் பிசைந்து நின்ற விதமும், கண்களில் விரவும் பாவமும், அந்த குண்டு கண்கள் அகல விரிந்து பதறிய விதமும் அவனை அள்ளிக்கொண்டு போனது.

அவளை தாவி அணைத்து தன்மேல் போட்டுக்கொள்ள தவித்த கரங்களை அடக்கியவன், “நமக்குள்ளே எல்லாம் நல்லபடியா தான் இருந்ததா?” அவன் கேட்க, அந்த கேள்விக்கான முழு அர்த்தம் புரியாமல், விழி விரிய அவனைப் பார்த்தாள்.

“பு..பு..ரியலை...” அவள் தடுமாறி, அவனைக் கெஞ்சலாகப் பார்த்தாள்.

அவளது கெஞ்சல் பார்வையில் உள்ளே உருகினாலும், “நாம புருஷன் பொண்டாட்டியாதான் வாழ்ந்துட்டு இருந்தோமான்னு கேட்டேன்...” அவ்வளவு நேரமாக கொஞ்சமாக தலையை மட்டும் நிமிர்த்தி இருந்தவன், தலையணையை எடுத்து நேராக வைத்துவிட்டு, அதில் சாய்ந்து அமர்ந்தான்.

அவன் கேள்வியில் முகம் சிவந்து போக, பார்வையை அவன்மேல் இருந்து லேசாக திருப்பி சுவரைப் பார்த்தவள், ‘எப்படி கேக்கறார் பார்..., விடிய விடிய கொண்டாடிட்டு...’ தன் நினைப்பு போகும் திக்கைக் கண்டு திகைத்தவள், தன் கீழுதட்டை பற்களால் அழுத்தமாக கடித்துக் கொண்டாள்.

அவள் தன்னை நேராக பார்ப்பதை விட, இப்படிப் பார்த்தால் சும்மாவே சிதறிப் போகும் அவன், இப்பொழுதும் வெகுவாய் கிளர்ந்தான்.

“இங்கே வந்து உக்கார்...” அவன் படுக்கையில் தன் அருகே கையால் தட்டி காட்ட, வேகமாக அவன் முகம் நோக்கினாள்.

‘இப்படி ஒரு கேள்வியும் கேட்டுட்டு..., கிட்டே கூப்பிட்டால்?’ அவள் கண்கள் அவனிடம் கேட்க, அது புரிந்தாலும், புரியாதவனாக பாவித்தவன், “அப்போ இதுவரைக்கும்

எதுவும் நடக்கலையா...?” அவன் பட்டென கேட்க, நிச்சயம் இப்பொழுது அவனை முறைத்தாள்.

“நான் இப்போ ரெண்டு மாசம்...” அவள் கை தானாகவே அவள் அடிவயிற்றில் பதிய, அவன் கண்களில் காதலை ஒரு நொடி வழிய விட்டவன், நொடியில் பார்வையை மாற்றினான்.

அவன் முகத்திலேயே கவனமாக இருந்தவளுக்கு, அவன் பார்வை ஒரு நொடி என்றாலும் மாறியது புரிய, அவன் ஏதாவது சொல்வானா என பார்த்திருந்தாள்.

அவனோ, தன் தாடையை வருடியவன், “எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லையே” அவன் நிதானமாக உரைக்க, அவனை இப்பொழுது அதிகமாக முறைத்தாள்.

அவள் பார்வையை கொஞ்சம் கூட கண்டு கொள்ளாதவன் “ஏதாவது ஒன்றை ஞாபகப்படுத்தேன்...” அவன் கோரிக்கையில் விதிர்த்துப் போனாள்.

“எனக்குத் தெரியாது...” அவள் பட்டென உரைக்க,

“ம்ச்..., நான் ‘அந்த’ பாடத்தில் ரொம்ப வீக்கோ..., ஒண்ணுமே கத்துக் கொடுக்காமல் இருந்திருக்கேன்...” அவன் நெற்றியை விரலால் தட்டி சிந்திக்க, அவனை அப்படியே கழுத்தை நெரித்தாள் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.

அதிலும் அவன் ‘அந்த’ என்ற வார்த்தைக்கு கொடுத்த அழுத்தம்..., அவள் பிபியை எகிற வைத்தது. ‘ம்கும்..., ஒண்ணுமே தெரியாத பச்சை புள்ளை’ மனதுக்குள் நொடித்துக் கொண்டாள்.

‘பாவி..., நீ வீக்கா...?’ அவன் நடத்திய காதல் பாடங்கள் கண்முன் விரிய, அவன் முன்னால் நிற்கவே முடியவில்லை.

அப்பொழுதுதான் திடுமென சிறு சந்தேகம் முளைவிட, அவனை ஆராய்ச்சியாக நோக்கினாள். அவள் பார்வையை உணர்ந்தவன், ‘ஐயோ, யோசிக்கறாளே, இவளை யோசிக்க விடுவது ஆபத்து...’ அவன் மனதுக்குள் அலறினான்.

அவளோ..., “உங்களுக்கு நான் காமேஷோட தங்கச்சி என்பதில் கோபம் இல்லையா...?” திக்கித் திணறி ஒரு மாதிரி கேட்டுவிட்டாள்.

“ஒரு விஷயம் நடக்க முன்னாடி யோசிக்கணும்னு நினைப்பவன் நான். அது நடந்து முடிந்த பிறகு ஆராய்வது முட்டாள்த்தனம்” பொட்டிலடித்தாற்போல் உரைக்க, அவனை ஓடிபோய் கட்டிக்கொள்ள அவள் கைகள் பரபரத்தது.

“எப்பொழுதும் இந்த பிரம்மா அப்படிதான் இருந்திருக்கிறான். வேலையிலேயே அப்படி என்றால், என் சொந்த விஷயத்தில் எப்படி இருப்பேன்? அவன் தங்கை என்றாலும், நான் விசாரித்த வரைக்கும், கேஸ் பிச்சரில் ஒரு இடத்தில் கூட நீ இருந்ததில்லை...” மிகவும் தெளிவாக உரைக்க, அவள் மனதில் பெரும் நிம்மதி.

அதைச் செய்ய முடியாமல் ஏதோ ஒன்று தடுக்க, அப்படியே நின்றுவிட்டாள். அவள் தன் அருகே வராமல் போகவே, “உனக்கு என்னைப் பிடிக்காதா? இஷ்டமில்லாமல் கல்யாணம் செஞ்சுகிட்டியா?” அவன் கேட்க,

“அப்படியெல்லாம் இல்லை...” பட்டென பதில் வந்தது. அதை கண்டுகொள்ளாமல்,

“ஒரு வேளை..., உங்க அண்ணனை கொன்னுட்டேன்னு, என்னை பழி வாங்க என்னை கல்யாணம் செஞ்சுகிட்டியா?” அவன் கேள்வியை மாற்ற, அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அதில் இருந்த சிறு உண்மை அவளை தடுமாறச் செய்தது.

அவனை பழிவாங்க எண்ணினாள்தான், ஆனால், தன் கழுத்தில் தாலி ஏறிய பிறகு, ஒரு நாள் கூட அவள் அதைப்பற்றி சிந்தித்தது இல்லையே.

“அப்போ அதுதான் உண்மையா...?” அவன் ஒரு மாதிரி குரலில் கேட்க, அவன் குரலின் வேறுபாட்டில் தவித்துப் போனாள்.

“பிரம்மாவை அப்படியெல்லாம் ஏமாற்ற முடியும்னு நீங்க நம்பறீங்களா?” பந்தை அவன் பக்கம் திருப்ப, அவன் பார்வையில் ஒரு மெச்சுதல் வந்து போனது.

“இல்ல..., என்னை இஷ்டமில்லாமல் கட்டிகலைன்னு சொல்லிட்ட, ஆனா நான் இங்கே வந்து உக்காரச்சொல்லி அஞ்சு நிமிஷமாச்சு, இன்னும் அந்த இடத்தில் இருந்து அசையாமல் இருந்தால் என்ன அர்த்தம்னு புரியலை, அதான் அப்படிக் கேட்டேன்...” அவன் சொல்ல, அவள் கால்கள் மெதுவாக அவன் படுக்கையை நெருங்கியது.

அவன் காட்டிய இடத்தில் தயக்கமாக ஏறி அமர்ந்தவள், தன் கை விரல்களையே பார்த்திருந்தாள். “என்னை உனக்குப் பிடிக்குமா? நாம எங்கே சந்தித்தோம்? எப்படி கல்யாணம் செஞ்சுகிட்டோம்? எப்படி வாழ்த்தோம்? எல்லாம் சொல் பார்ப்போம்.

“கணவன் மனைவி என்றால், சில தனிப்பட்ட பேச்சு, அழைப்பு, செய்கை, அதைவிட சில அந்தரங்க ரகசியங்கள் இருக்கும் தானே. ஏதாவது ஒன்றைச் சொல்..., எனக்கு ஞாபகம் வருகிறதா எனப் பார்ப்போம்...” அவன் கேட்க, அவள் எதைச் சொல்வாளாம்?

அவள் தடுமாறி அமர்ந்திருக்க, தன் இடக்கரத்தால் அவள் மூக்குத்தியை மெதுவாக வருடியவன், “எனக்கு இந்த மூக்குத்தி ரொம்ப பிடிச்சிருக்கு...” கைகளை விலக்காமல் உரைக்க, அவன் செய்கையில் ஒரு நொடி நெகிழ்ந்து போனாள்.

“உ..உங்களுக்கு ஞாபகம் இல்லாமல் இருந்த பொழுது, இந்த மூக்குத்தி தான் முதலில் ஞாபகத்துக்கு வந்ததா சொன்னீங்க. அதை வைத்துதான்...” அவள் இழுத்து நிறுத்தி அவன் முகம் பார்க்க, சுவாரசியமாக கதை கேட்கும் பாவனையே அவன் முகத்தில் இருந்தது.

“அதை வந்து சொன்ன உடனேயே என்னை கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சுட்டியா என்ன? நம்புற மாதிரி இல்லையா...?” அவன் தாடையைத் தேக்க, விழித்தாள்.

‘உங்களை மனதார காதலித்தேன்…’ என சொல்ல முடியாமல் மூச்சு முட்டிப் போனாள். அதைச் சொல்வதற்கு ஒரு பெரும் தயக்கம். அவள் இப்பொழுதாவது தன் காதலைச் சொல்வாளா என எதிர்பார்க்க, தவிப்பாய் அவனை ஏறிட்டாள்.

“எனக்கு…, நான்…, அது…” அவன் பார்வை வெகு கூர்மையாக அவளைத் துளைக்க, வார்த்தைகள் தொண்டைக்குழியில் சிக்கி சிதைந்து போனது.

சரியாக அந்த நேரம், கௌஷிகாவும், நிவேதாவும் அறைக்குள் வர, ஒரு பெரும் விடுதலை உணர்வோடு, வேகமாக படுக்கையில் இருந்து இறங்கி நின்றாள்.

‘வடை போச்சே…’ என்னும் பார்வையோடு அவளைப் பார்த்திருந்தான் பிரம்மா.

*****

# பகுதி – 49.

தங்கைகள் இருவரும் அவனிடம் நலம் விசாரிக்க, எதில் இருந்தோ தப்பிக்கும் விதத்தில், வேகமாக வெளியேறியவள், அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்து ஏனென்றே தெரியாமல் கண்ணீர் வடித்தாள்.

மனம் முழுக்க அவ்வளவு நிம்மதி. அது கொடுத்த இதம், இத்தனை நாட்களாக, எங்கே அவனுக்கு அனைத்தும் நினைவுக்கு வந்துவிட்டால், காமேஷின் தங்கை என்ற ஒரே காரணத்துக்காக தன்னை விலக்கி வைத்துவிடுவானோ என அவள் கொண்டிருந்த பயம்.

தன்னை கீழாக நினைப்பானோ என அவள் தவித்த தவிப்புகள். அவனை ஏமாற்றி அவன் வாழ்வில் நுழைந்துவிட்டேன் என கோபம் கொள்வானோ? என்ற அவளது தவிப்புகள் அனைத்தையும் ஒரு நொடியில் நீக்கிய அவன் செய்கை..., அவளால் அந்த உணர்வை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

சந்தோஷத்தின் உச்சத்தில் நம்மை அறியாமலே கண்களில் கண்ணீர் வழியுமே, அப்படி ஒரு நிலையில் அமர்ந்து தன்னை மீறி கண்ணீர் வடித்தாள். அந்த சந்தோஷத்தில் இருந்தவளுக்கு, இப்பொழுது அவனுக்கு தன்னை நினைவில்லை என்ற விஷயம் பெரிதாகவே தோன்றவில்லை.

தன்னை யாரென தெரியவில்லை என்றாலும்..., ‘நீ யார்...? ஏன் இங்கே வந்தாய்...? வெளியே போ...’ இப்படியாக எதுவும் அவன் உரைக்காததே பெரும் ஆறுதலாக இருந்தது. அதைவிட, தங்கள் உறவுநிலையைப் பற்றிய அவன் கேள்விகள், இதழோரம் சிறு வெட்க புன்னகையை கூட வர வைத்தது.

அறைக்குள் இருந்து வெளியே வந்த காயத்ரி, அழுகையும் சிரிப்புமாக அமர்ந்திருக்க, அவளை நெருங்கி வந்தார் கலைவாணி. “அம்மாடி, பிரம்மா ஏதாவது சொல்லிட்டானா?

ஏன் அழற?" அவள் தோளைத் தொட, அவர் கழுத்தை கட்டிக் கொண்டவள், மீண்டுமாக கண்ணீர் வடித்தாள்.

அவள் அழுகை அவருக்கு சிறு படபடப்பை அளிக்க, "சொல்லும்மா., ஏன் அழற?" அவர் குரலில் சிறு பதட்டத்தை உணர்ந்த பிறகே தன் தவறை உணர்ந்தாள்.

அவரிடமிருந்து விலகியவள், தன் கண்ணீரைத் துடைத்துவிட்டு, "அவர் எதுவும் சொல்லை அத்தை. அந்த சந்தோஷத்தில் தான்..." அவள் நீர் நிறைந்த விழிகளோடு சிரிக்க, அவர் முகத்தில் பெரும் நிம்மதி.

"இப்படி பயம் காட்டிட்டியே. நான்தான் சொன்னேன் இல்ல. அவன் ஒரு விஷயத்தை செய்ய முன்னாடி யோசிப்பான். செய்த பிறகு யோசிக்க மாட்டான். உன்கிட்டே நல்லா பேசினான் தானே. பிறகு எதுக்கு இந்த அழுகை? இப்போ நீ சந்தோஷமா இருக்கணும். போ..., அவனோட போய் இரு.

"நான் டாக்டரை பாத்துட்டு, அவனை எப்போ டிச்சார்ஜ் பண்ணலாம்னு கேட்டுட்டு வர்றேன்..." அவர் எழுந்து செல்லவே, மீண்டும் அறைக்குள் நுழைய போனாள்.

"அம்மா..., சார் எப்படி இருக்கார்...?" கந்தனின் குரல் அவளைத் தேக்கவே, "உள்ளே வந்து பாருங்க..." அவள் அழைக்கவே, "ஐஜி சார் வர்றதா போன் பண்ணார். நான் அவரோடவே சேர்ந்து பாத்துக்கறேன்" மறுத்தார்.

"அவர்மேல் யார் கை வச்சாங்க? எப்பவும் ரொம்ப கவனமா இருப்பாரே..." அவரிடம் கேட்க,

"கோர்ட்ல வேற யாரையோ போட வந்த கும்பல்ம்மா. ஐயா அதைப் பாத்து கவனிச்சுட்டு சட்டுன்னு உள்ளே புகுந்துட்டார். அதில் எதிர்பாராமல் அவர்மேல் அடி விழுந்துடுச்சு. இந்த மீடியாதான் அதை கண்ணு மூக்கு வச்சு பரப்பிட்டாங்க, பெருசா எதுவும் இல்லை.

"அந்த கும்பலை உடனே மடக்கிட்டோம். அதை கூட மீடியா சொல்லலை. எல்லாம் டிஆர்பி செய்யும் வேலை..., நீங்க போங்க..." உரைத்தவர் வெளியிலேயே நின்று கொண்டார்.

எதிர்பாராமல் நடந்த அந்த சம்பவத்தை பிரம்மாவும் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டான்.

அவனை மறு நாளே டிச்சார்ஜ் செய்யலாம் என சொல்லிவிட, காயத்ரியும், கலைவாணியும் அங்கேயே இருக்க, கௌஷிகாவும், நிவேதாவும் குழந்தையை மருத்துவமனையில் வைத்திருக்க முடியாது என்பதால் வீட்டுக்கு கிளம்பி விட்டார்கள்.

ஐஜி வந்து செல்லும் வரைக்கும் பாதுகாப்புக்கு இருந்த போலீஸ், மருத்துவர், செவிலி என அனைவரும் சிறு பரபரப்பாய் இருந்தார்கள். பிரம்மாவுக்கு கொஞ்சம் பிளட் லாஸ் என்பதால், அவன் உடல்நிலையை கருத்தில் கொண்டு, ட்ரிப்ஸ் இறங்கியது.

இரவு உணவை அங்கே இருந்த கேண்டீனில் இருந்து வர வைத்து உண்ண, அது காயத்ரிக்கு ஒத்துக் கொள்ளாமல், உடனே வாந்தி எடுத்தாள். அதைக் கேட்டவன், கொஞ்சம் கூட யோசிக்காமல், தன் கையில் இருந்த வெயின்பிளாண்டை உருவி எறிந்தவன், கையில் சொட்டிய ரத்தத்தை பொருட்படுத்தாமல், பாத்ரூமுக்குள் புகுந்தான்.

“ஏய்…, பாத்து…, இதுக்குதான் உன்னை வீட்டுக்கு போன்னு சொன்னேன். இப்போ பார்…” அவள் தலையை தாங்கிக் கொள்ள, தன் முன்னால் துளித் துளியாய் விழுந்த ரத்தத் துளிகளில், பதறியவள், வேகமாக எழுந்து நின்றாள்.

“என்ன வேலை பண்ணி வச்சிருக்கீங்க? ஏற்கனவே உங்களுக்கு பிளட் லாஸ்ன்னு சொல்லியிருக்காங்க. அதை கேக்காமல்…” தன் விரல்களால் அவன் புறங்கையில் அழுத்தி பிடித்தவள், அவனை அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.

அவனுக்குத் தேவையான மருந்துகளை வாங்கச் சென்றிருந்த கலைவாணி அங்கே இருந்த நிலையைப் பார்த்து தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

அவர்கள் போட்ட சத்தத்தில் உள்ளே வந்த நர்ஸ், “ஹையோ சார்…, இப்படியா பிச்சுப் போடுவீங்க…?” கேட்டவள் உடனே

பிளாஸ்டர் கொண்டு வந்து அவன் கையில் போட்டு விட்டாள்.

“சார், நீங்க ரெஸ்ட் எடுங்க. மறுபடியும் இந்த கையில் ட்ரிப்ஸ் போடவா?” அவள் கேட்க,

“எனக்கு ட்ரிப்ஸ் வேண்டாம். நீங்க போங்க” அவளை அனுப்பியவன், “அம்மா, முதல்ல இவளை வீட்டுக்கு போகச் சொல்லுங்க. இந்த அட்மாஸ்பியர் இவளுக்கு ஒத்துக்கலை. சாப்ட்டதெல்லாம் வாந்தி பண்ணிட்டா” தாயிடம் பொரிந்தான்.

அவரும் சேர்ந்து கொண்டுதான், காயத்ரி இங்கே இருக்கட்டும் எனச் சொன்னார் என்ற கோபம் அவனுக்கு. “டேய், உனக்கு இப்படி இருக்கும்போது அவ எப்படி வீட்டில் நிம்மதியா இருப்பா? புள்ளத்தாச்சி பொண்ணு வாந்தி எடுக்குறது இயற்கை. நீ போய் படு.

“நான் இவளை கவனிக்கறேன்..., அவளுக்கு ஏதாவது ப்ரஷ் ஜூஸ் ஜூஸ் வாங்கி கொடுக்கறேன்...” அவளை அழைத்துச் செல்ல, அவனுக்கோ, மனைவியை கைகளில் பொதிந்துகொள்ளும் வேட்கை.

காயத்ரிக்கும் அந்த நேரம் அவன் கரங்களுக்குள் அடைக்கலமாகவே நெஞ்சம் தவித்தது. ஆனால், அவனுக்கு தன்னை நினைவில்லையே என்ற எண்ணம் கொடுத்த தயக்கத்தில் அவள் நின்றுவிட, அதை உணர்ந்தவன் தன்னை மீட்டுக் கொண்டான்.

காயத்ரியோ, “அத்த, கந்தன் வெளியே இருப்பார்..., அவர் கிட்டே சொல்லி வாங்கிட்டு வரச் சொல்லுங்க. நான் இங்கேயே...” அவர்களது உணர்வை புரிந்துகொண்ட கலைவாணி, வெளியே சென்று மறைந்தார்.

அவர் செல்லவே, பாத்ரூம் சென்று தன் முகம் கழுவி துடைத்தவள் வெளியே வந்தாள். பிரம்மா படுக்கையில் சென்று அமர்ந்திருக்க, அவனைப் பார்க்க, அவன் கண்களில் என்ன கண்டாளோ, தயக்கமாக அவன் அருகே சென்று நின்றாள்.

அவன் அருகே சென்றவள், அவன் புறங்கையில் ஒட்டியிருந்த பிளாஸ்டரை மெதுவாக வருட, தன் அருகே நெருங்கி நின்றவளின் முகத்தையே அசையாமல் பார்த்திருந்தான். அவன் தன்னையே பார்க்கிறான் என்பது புரிந்தாலும், நிமிர்ந்து அவன் முகம் நோக்கவில்லை.

படுக்கை சற்று உயரமாக இருக்கவே, மெதுவாக அவளை நோக்கி குனிய, அவன் நெருங்குவது தெரிந்தாலும் அவள் அசையாமல் நின்றிருந்தாள். இன்னும் நெருங்கியவன், அவள் மூக்குத்தியின்மேல் மென்மையாக இதழ் பதிக்க, அவளுக்குள் என்னவெல்லாமோ தடம் புரளும் உணர்வு. அப்பொழுதும் அவள் அசையவில்லை.

‘சட்டென கதவு திறந்திருந்தால்...?’ என்ற எண்ணம் வர, வேகமாக வேகமாக திரும்பிப் பார்க்க, அவள் திரும்பியதால், அவளது இடக்கன்னம் அவன் அருகில் இருக்க, இப்பொழுது அவள் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்தான்.

அவன் மீண்டுமாக முத்தமிடுவான் என எதிர்பாராதவள் சற்று திகைத்து, சிறு அதிர்வாய் அவனைப் பார்க்க, அவள் அதிர்ச்சியைப் பார்த்தவன், “ஏன்...? நான் உன்னை இதுக்கு முன்னாடி கிஸ் பண்ணது இல்லையா?” உள்ளுக்குள் குறும்பு கூத்தாட, வெளியே புரியாமல் கேட்டான்.

“இன்னொரு முறை இப்படி ஒண்ணுமே தெரியாத பச்ச புள்ள மாதிரி பேசுனீங்க..., என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது...” சிறு கோபமாக பட்டென உரைத்திருந்தாள்.

“அப்படின்னா...?” அவன் இழுக்க, பார்வையோ அவள் முகத்தை விட்டு அசையவே இல்லை. அந்த நேர உணர்வை அவளால் தாங்கிகொள்ளவே முடியவில்லை என்றே சொல்லலாம். அவன் மொத்தமாக தன்னை தழுவிகொண்டால் கூட இப்படி உணர்ந்திருக்க மாட்டாளோ, இப்பொழுது...,

‘இதற்கு என்ன பதில் சொல்வதாம்...?’ எண்ணியவள், மொத்தமாய் சிவந்துவிட்ட தன் முகத்தை அவனுக்கு

காட்டாமல் மறைக்க முயல, அதே நேரம் கதவு லேசாக தட்டப்பட, உள்ளே ஜூஸ் கப்போடு உள்ளே நுழைந்தார் கலைவாணி.

பெரும் விடுதலை உணர்வில் அவள் வேகமாக விலகிச் செல்ல, ‘ம்ச், தப்பிச்சுட்டாளே…’ தனக்குள் முனகிக் கொண்டான்.

உள்ளே வந்த கலைவாணி, காயத்ரியின் கையில் ஜூஸ் கப்பை கொடுத்தவர், “முதல்ல இதை குடி…, ரொம்ப நேரமாச்சு…, படுங்க…” அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, மீண்டும் கதவு தட்டப்பட, உள்ளே நுழைந்தார் ஷீபா.

“பிரம்மா…, உங்க வீரத்தை ட்ரிப் கிட்டே காமிக்காட்டிதான் என்ன? இன்னும் ஒரு வாரம் நீங்க கண்டிப்பா ரெஸ்ட் எடுத்தே ஆகணும். பிறகு டியூட்டியில் ஜாயின்ட் பண்ணுங்க. ஐஜி சார் கிட்டே நான் பேசிட்டேன்” உரைத்தவர், அவனை செக் செய்யத் துவங்கினார்.

“ஒரு வாரமா…? நோ வே…” அவன் பட்டென உரைக்க, அவனை கண்டிப்பாய் நோக்கினார்.

“இங்கே நீங்க எஸ்பி கிடையாது. பேஷன்ட்…, சோ…, நான் சொன்னதை நீங்க கேட்டே ஆகணும். தலையில் இருக்கும் கட்டை பிரிக்கவே ரெண்டு நாள் ஆகும். உங்களுக்கு எல்லாம் தலையிலேயே வந்து விடியுது. அடிக்கடி தலையில் அடிபடுவது நல்லதில்லை பிரம்மா.

“ஒரு நேரம்போல், இன்னொரு நேரம் இருக்காது…” அவர் சொல்ல,

“இனிமேல் ஹெல்மெட் போட்டுக்கறேன்…” அவன் பவ்யமாக உரைக்க, பக்கன சிரித்துவிட்டார்.

“நாட்டி பாய்…, வைப் உங்களை ரொம்பதான் மாத்திட்டாங்க போல. பிரம்மாவுக்கு இப்படியெல்லாம் பேசத் தெரியும்னே எனக்கு இப்போதான் தெரியும்” ஷீபாவின் பார்வை

காயத்ரியின்மேல் பதிய, காயத்ரி தன் கணவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“டியூட்டி நேரம் தவிர, வேற எப்போவாவது நீங்க என்னை பாத்திருக்கீங்களா என்ன?” அவரிடம் திருப்பிக் கேட்க, திகைப்பது அவரது முறை ஆயிற்று.

அவன் கேட்பது சரி தானே..., டியூட்டி நேரம் தவிர, அவனை எங்கும் அவர் பார்த்ததில்லை. அவனது இந்த குறும்பு குணம் தெரிந்த ஒரே ஆள் நிஷா தான். அதனால்தான் அவள் அவனிடம் வெகு இயல்பாக பழகினாள்.

அங்கே இருந்த அனைவரையுமே அவனது பேச்சு ஒவ்வொரு விதத்தில் தாக்கியது. காயத்ரிக்கு, அவன் கோபம் புரிந்தது என்றால், கலைவாணிக்கு, அவனுக்கு உண்மை அனைத்தும் தெரியாததால் மட்டுமே தன்னிடம் கோபம் கொண்டிருந்தான் என்பது புரிந்தது.

“ஓகே..., ஓகே..., டேக் ரெஸ்ட். காலையில் நான் வந்து பார்த்த பிறகு நீங்க வீட்டுக்கு போகலாம்...” சமாதானமாக உரைத்தவர் அறையில் இருந்து வெளியேறினார்.

மறுநாள் வீட்டுக்குச் சென்றவன், அனைவரிடமும் சாதாரணமாக உரையாட, ‘இவருக்கு என்னை மட்டும் தெரியலை, சரியா பேச முடியலை. அவங்களை எல்லாம் நல்லா தெரியுதோ?’ மனைவிக்கே உரிய பொசசிவ் குணம் தலை தூக்கியது.

அன்றைக்கே முகேஷ் டெல்லியில் இருந்து நேராக சென்னை வர, நண்பனை இறுக தழுவிக் கொண்டான். “எப்படிடா இருக்க...?” முகேஷ் கேட்க, “அதான் நீயே பாக்கறியே...” அவனை விட்டு விலகியவன், ‘என்னைப் பார்...’ என்பதுபோல் நின்றான்.

“நீ மிஸ்டர் சென்னை தாண்டா. நான்தான் கொஞ்சம் தொப்பை போட்டுட்டேன். இதுக்கு நான் காரணம் இல்லை. எல்லாம் உன் தங்கை தான்...” அவன் சொல்ல, அவர்களை பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் சிரித்தார்கள்.

காயத்ரியின் கண்கள் தன்னவனைப் பார்க்க, எப்பொழுதும் போல், அவனது தோற்றம் அவளை வசீகரித்தது. அவள் தன்னை பார்ப்பதை உணர்ந்தவன், மற்றவர் அறியாதவாறு, ‘என்ன?’ என புருவம் உயர்த்த, சட்டென பார்வையை திருப்பிக் கொண்டாள்.

‘இதுக்கெல்லாம் குறைச்சல் இல்லை…’ அவள் எண்ண, மற்றவர்கள் கவனம் கொஞ்சம் கலையவே, அவள் அருகே வந்தவன், “வேற எதுக்கு குறைச்சல்? நீதான் எனக்கு எதையுமே ஞாபகப்படுத்த மாட்டேன் என்கிறாய்…” சின்னக் குரலில் அவளைச் சீண்ட, யாராவது பார்க்கிறார்களா என வேகமாக பார்வையை சுழற்றினாள்.

அனைவரின் கவனமும் முகேஷிடம் இருக்க, இவர்களை யாரும் கவனிக்கவில்லை. தங்கள் அறைக்குச் சென்றவன், “காயத்ரி…” அவளை அழைக்கவே, வேகமாக மாடியேறினாள். அவனது ‘காயு’ என்ற அழைப்புக்கு வேண்டி மனம் ஏங்கியது.

“கூப்டீங்களா…?” அவன் அருகே வர, “என் சிகரெட் பாக்கெட் எங்கே? இது நீ சாப்பிடுவதா?” கேட்டவன், கையில் இருந்த சுவிங்க டப்பாவை காட்டினான்.

திகைத்துப் போனவள், “இ..இது…, நீங்க சாப்பிடுவது தான். சிகரெட்…, நீங்க சிகரெட் பிடித்து நான் பார்த்ததில்லை” அவள் உரைக்க, “ஓ…” ஒரு மாதிரி இழுத்தவன் அமைதியாக இருந்தான்.

அவன் அமைதி அவளை வதைக்க, “உங்களுக்கு நிஜமாவே எதுவும்…” அவன் பட்டென நிமிர்ந்து பார்க்கவே, வார்த்தையை நிறுத்தி விட்டாள்.

“எனக்கு எதுவுமே ஞாபகம் வரணும்னு நீ நினைக்கிற மாதிரியே தெரியலையே. கேட்டாலும் சொல்ல மாட்டேங்கற?” அவன் குறைபட, அவள் எதை அவனுக்கு ஞாபகப்படுத்துவதாம்?

“உனக்கு சுவிங்கம் பிடிக்குமா?” அவன் திடுமென கேட்க, அந்த சுவிங்கம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய

மாயங்கள், மயக்கங்களை எண்ணியவள், அசையாமல் நின்றாள். முகமோ, அந்த நினைவுகளில் நெகிழ்ந்து குழைந்து போனது.

“ஏதோ இன்ட்ரெஸ்ட்டா இருக்கும் போல...?” அவன் குரல் வெகு அருகே கேட்க, அவள் தலை நிமிரவே இல்லை.

“அப்போ சொல்ல மாட்ட..., உன்னைப் பார்த்தால், ஏதோ கட்டாயத்துக்கு என்னை கல்யாணம் பண்ணிகிட்ட மாதிரி இருக்கு. நமக்கு நடுவில், நமக்கே நமக்குன்னு ஒரு பேச்சு இல்லை, செல்ல பேர் இல்லை, நினைவுகள் இல்லை. அப்போ, மெஷின் மாதிரி இருந்தோமா? எனக்கு புரியவே இல்லை.. ” சிறு கோபமாக கத்தியவன் கீழே இறங்கிச் சென்றுவிட்டான்.

அவனுக்கு, அவள் தன் நேசத்தை தன்னிடம் சொல்ல மாட்டேன் என்கிறாளே என்ற கோபம். அவளுக்கோ, ‘எனக்கு ஞாபகப்படுத்து’ என அவன் கேட்கும் விஷயங்களை, இடையில் இருந்து செய்ய அவளுக்கு மனமில்லை.

அவள், அவனை கொலை செய்ய முயன்றது முதல், அவர்கள் வாழ்வில் நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் அவனிடம் சொல்லவே அவளுக்கு விருப்பம். அதை அவனிடம் எப்படி துவங்குவது என மட்டுமே தயங்குகிறாளே தவிர, அவனிடம் விஷயங்களை சொல்ல அல்ல.

மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு, அவன் கோபப்படுவது இதுதான் முதல் முறை. அவன் கோபத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ‘அவர் கேட்பதை செய்ய உனக்கு என்ன தயக்கம்?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

அடுத்து வந்த இரண்டு நாட்கள் முகேஷ் அங்கே இருக்க, இரவில் நண்பர்கள் இருவரும் வெகு நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, அவள் உறங்கிவிட்ட பிறகே அறைக்கு வந்தான். அவளோடு தனிமையில் இருப்பதை அவன் தவிர்க்க, வெகுவாக கலங்கிப் போனாள்.

முகேஷும் கௌஷிகாவும் கோவைக்கு கிளம்பிச் செல்ல, பிரம்மாவின் தலைக்கட்டும் பிரிக்கப் பட்டது. அவன் அறையில் இருக்க, அறைக்குச் சென்றவள், அவன் முகம் பார்ப்பதும், எதையோ சொல்ல வருவதும், சொல்ல முடியாமல் தவிப்பதுமாக இருக்க, அதைப் பார்த்தும் பாராமல், தன் மடிக்கணினியை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

தயக்கமாக அவனை நெருங்கியவள், தன் செல்போனை இயக்கி, அதில் இருந்த வீடியோவை ஓடவிட, அன்று அவன் அவளிடம் கொடுத்தனுப்பிய வீடியோ அதில் ஓட, சலனமே இல்லாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் கத்தியால் குத்துவது வரை ஓடி முடிய, “நான்..., நீங்க எங்க அண்ணாவை கொன்னுட்டீங்க என்ற கோபத்தில்...” முகத்தை மூடிக்கொண்டு விம்ம, அவன் முகம் இரும்பாய் இறுகியது.

அலைபேசியை அவள் கரத்தில் எடுத்து கொடுத்தவன், “நான் நம்ம லைஃபை எப்படி தொடர்வது எனக் கேட்டால், நீ அதை முடிப்பதுக்கு காரணம் தேடறியா?” அவன் குரல் இரும்பாய் வெளிவர, விதிர்த்துப் போனாள்.

“ஹையோ..., அப்படியெல்லாம் இல்லை...” பதறினாள்.

“பிறகு இதற்கு என்ன அர்த்தம்? நம்ம வாழ்க்கை எப்படி இருந்தது எனக் கேட்டதுக்கு இதுதான் பதிலா? அப்போ உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு என்ன அர்த்தம்? ஜஸ்ட் இருளின் மறைவில், இரண்டு உடம்பின் சேர்க்கையில் நடந்த விபத்தா அது...?” கண்கள் ரத்தமென சிவக்க, அவனது கத்தலில் பயந்தே போனாள்.

அவள் எதையோ நினைத்து செய்ய இது..., “பீமா...” கிட்டத்தட்ட அலறியவளது தேகம் முற்றாக நடுங்கியது. கைகள் நடுங்க, தன் அலைபேசியை மீண்டும் இயக்கியவள், அதில் தான் முன்னர் சேமித்து வைத்திருந்த வீடியோக்களை அவன் கண்முன் காட்டினாள்.

“என்ன கேட்டீங்க…, இருட்டின் மறைவில்…, உங்களுக்கு வேண்டுமானால் எதுவும் ஞாபகம் இல்லாமல் போகலாம். ஆனா நான்…, மூணு வருஷமா, நீங்க சென்னையில் சார்ஜ் எடுத்த அந்த நாள் முதல், உங்களை மனதில் நினைத்தவள் நான்.

“உங்களோடோ ஒவ்வொரு அசைவும், நடவடிக்கையும்…, அதில் இருக்கும் முழு முரட்டுத்தனத்தையும் சேர்த்தே நேசித்தேன். நீங்க எனக்கு கிடைக்க மாட்டீங்கன்னு தெரிந்தாலும், உங்களை ரசிப்பதையோ, உங்களைப் பற்றி தெரிந்து கொள்வதையோ என்னால் நிறுத்தவே முடியலை…” கண்ணீர் குரலில் உரைத்தவள், வேகமாக தன் சூட்கேசை மேலே ஏறி எடுக்க முயன்றாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், அவளைத் தடுத்துவிட்டு, எட்டி அதை எடுத்துக் கொடுக்க, அதைத் திறந்தவள், உள்ளே இருந்த கவரை எடுத்து, கீழே கொட்ட, அறை முழுவதும் சிதறியது செய்தித்தாள் கட்டிங்கள். அனைத்திலும் இருந்தது அவன் முகமே.

கீழே அமர்ந்து ஒவ்வொன்றையும் பார்க்க, அவனைப் பற்றி சிறு காளமாக வெளிவந்த செய்தி துவங்கி, அவனது பேட்டி, அவனைப் பற்றிய கட்டுரை, அவன் விசாரித்த கேஸ் ஸ்டடி என அனைத்தும் ஒன்று விடாமல் இருந்தது.

‘அடிப்பாவி…, இப்படி மாஞ்சு மாஞ்சு என்னை சைட் அடிச்சு, லவ் பண்ணியிருக்க?’ மனதுக்குள் வியந்து போனான்.

“ஒவ்வொரு நாளும் நான் நியூஸ் பேப்பர் பாப்பதே, உங்களைப் பற்றி ஏதாவது செய்தி இருக்கான்னு தெரிஞ்சுக்கத்தான். நீங்க எனக்கு கிடைக்க மாட்டீங்கன்னு மனசு சொன்னாலும், என்னால் என்னை மாத்திக்க முடியலை. உங்க முன்னாடி வந்து, உங்ககிட்டே காதலைச் சொல்லும் தைரியம் எனக்கு சுத்தமா இருந்தது இல்லை.

“அப்போதான்…, என் அண்ணாவை ஏன் கைது செய்தீங்கன்னே தெரியாமல், அவனை என்கவுண்டர் செய்தப்போ, நீங்களா இப்படி என்ற அதிர்ச்சிதான் அதிகம்

இருந்தது. என் பிரம்மா அப்படி செய்யவே மாட்டார்ன்னு ஒரு மனம் வாதாடினால், இப்படி செஞ்சுட்டீங்களேன்னு நான் அழுததுதான் அதிகம்.

“அந்த கோபத்தில் நான் இருந்தப்போதான், உங்களுக்கு ஆக்சிடென்ட் ஆகி, ஹாஸ்பிடல்ல இருந்தீங்க. அங்கேயே உங்களை கொலை செய்ய வந்தேன். எனக்கு முன்னாடியே சில பேர் வந்தப்போ, அதை தாங்காமல், அவங்களை தடுக்க முயற்சி பண்ணேன்.

“அப்போ, என் கையால் நீங்க சாகணும்னு எனக்கு நானே சமாதானம் செய்தாலும், உங்க மேலே இருந்த காதல்தான் அவங்களை தடுக்க வைத்ததுன்னு எனக்கு தெரிஞ்சப்போ, எனக்கே என்மேல் கோபம்.

“நீங்க என்னை கல்யாணம் செஞ்சுக்க கேட்டப்போ, என்னால் நம்பவே முடியலை. ஒரு பக்கம் அதிர்ச்சின்னா, மறு பக்கம் நம்பவே முடியாத ஆச்சரியம், கோபம். எல்லாத்தையும் தாண்டி, நீங்க என்கிட்டே ஐ லவ் யூன்னு சொன்னப்போ…,

“எஸ்…, அந்த நிமிஷம் இந்த உலகத்தையே ஜெயிச்ச ஒரு பீல் வந்தது. யூ ஆர் மை மேன்…, என்ற வெறித்தனமான ஒரு சந்தோசம்…, எதுவும் எனக்கு ஏன் ஞாபகம் வரலைன்னு நீங்க குழம்பும் போது, உங்களை விட அதிகமா நான் தவிச்சிருக்கேன்.

“இதெல்லாம் எங்க அண்ணா எப்படிப்பட்டவன்னு தெரிய முன்னாடியே நடந்தது. அவனைப் பற்றி தெரிந்த பிறகு…, உங்களை தப்பா நினைச்சுட்டேனேன்னு எத்தனை நாள் தவிச்சிருக்கேன். அதைவிட, உங்களுக்கு அவனைப் பற்றி ஞாபகம் வந்தால், எங்கே என்னை வெறுத்துடுவீங்களோன்னு பயந்திருக்கேன்.

“சமைக்கத் தெரியாமல் நான் ரெண்டு நாள் சமைக்காமல் இருக்க, நீங்களும் அந்த ரெண்டு நாள் சாப்பிடலைன்னு தெரிஞ்சப்போ, எப்படி துடிச்சு போனேன் தெரியுமா? நீ என்ன சாப்ட்டன்னு கேட்டீங்களே, அந்த நிமிஷம்…” ஓடிப்

போனவள், அவன் முகம் பற்றி, முகம் முழுக்க முத்தமிட்டாள்.

“இப்படி கிஸ் பண்ணத்தான் தோணிச்சு...” அவன் கழுத்தை கட்டிக் கொள்ள, அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவனை விட்டு விலகியவள்..., “இதையெல்லாம் புரிஞ்சுக்காமல்..., என்ன வார்த்தை பேசிட்டீங்க...?” அவள் குறைபட, அவன் கண்களில் காதல் பொங்கி வழிந்தது. அவனிடம் அனைத்தையும் கொட்டிவிட முடிவெடுத்தவள், அதை கவனிக்கவே இல்லை.

“அன்னைக்கு நான் ஏதோ கோபத்தில் தெரியாமல் பேசிட, ரெண்டு நாள் வீட்டுக்கு வரவே இல்லை. வந்தப்போ..., உங்க கிட்டே நெருங்க முடியாத அளவுக்கு கோபமா இருந்தீங்க. நான் எவ்வளவோ உங்களை சமாதானப் படுத்த முயற்சி செய்தும், நீங்க என்னை அனுமதிக்கவே இல்லை.

“ஒரு கட்டத்தில் நீங்களா தெளிந்து வந்த பிறகு, ‘எனக்கு நீ வேணும்னு’ கேட்டு நின்னீங்க தெரியுமா? அந்த நிமிஷம், உங்களுக்கு மறுக்க எனக்கு முடியுமா? அப்போ கூட, என் சம்மதத்தை என் வாயாலேயே தெரிந்த பிறகுதான்..., என்னை எடுத்துகிட்டீங்க” அதைச் சொல்கையில் அவள் குரல் குழைந்து கரைய, அவளை அணைக்கத் துடித்த கரத்தை சிரமப்பட்டு அடக்கினான்.

“அப்படிப்பட்ட நம்ம உறவை..., இந்த குழந்தை நம்மளோடோ முழு காதலில் உருவானதுதான். அதைவிட, இந்த படுக்கையில் என் உணர்வுகளை உங்களை விட யாராலும் அவ்வளவு மதிக்க முடியாது” அவள் குரலில் பெருமை நிரம்பி வழிய, ஒரு கணவனாக பெருமை கொண்டான்.

“நாம வாழ்ந்த வாழ்க்கை உங்களுக்கு ஞாபகத்துக்கு வரவே இல்லை என்றாலும் பரவாயில்லை. என் பீமா எப்படி இருந்தார், என்னை எப்படி பாத்துகிட்டார், என் உணர்வுகளை எப்படி மதித்தார்ன்னு நினைச்சுகிட்டே நான் வாழ்ந்துடுவேன்...” அவள் சொல்லிவிட்டு வெளியே செல்ல

முயல, அடுத்த நொடி, அவனது இறுகிய அணைப்புக்குள் இருந்தாள்.

“பீமா...” அவள் அதிர்வாய் அழைக்க, அவள் கன்னம் பற்றி, அவள் இதழ்களில் அழுத்தமாக இதழ் பதிக்க, அவன் விலகிய நொடி, தன் வாய்க்குள் இடறிய சுவிங்கத்தை உணர்ந்து, நம்ப முடியாமல் அவனை வெறித்தாள்.

“முட்டக்கண்ணி..., உன்னை அவ்வளவு சீக்கிரம் போக விடவா கத்தி குத்தெல்லாம் வாங்கி உன்னை கல்யாணம் செய்தேன்...?” கேட்டவன், அவள் இதழ்களை முரட்டுத்தனமாய் சிறை செய்தான்.

அவளை கைகளில் அள்ளியவன், இதழ்களை பிரிக்காமலேயே படுக்கையில் அவள்மேல் சரிய, தன்னை உரிமையாய் தழுவியவனின் செய்கையை நம்பவும் முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல் திணறினாள்.

அதிலும் அவன் கொடுக்கும் இதழ் முத்தம்..., அவளுக்குத் தெரியாததா என்ன? அவனை பிடிவாதமாக விலக்கியவள், “பீமா..., நடிச்சியாடா?” சிறு கோபமாய் வினவ, அவள் கோபத்தை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“ஆமாடி..., என்ன செய்வ...?” கேட்டவன் தன் வேலையில் கவனமாக, அவன் கரத்தை கடும் கோபத்தோடு தடுத்தவள், “என்னை தொடாதீங்க...” சீறினாள்.

“அப்படித்தான் தொடுவேன்...” தன் தடைகளை விலக்க அவன் முயல, அவள் அவனுக்கு ஒத்துழைக்கவே இல்லை. “இல்ல..., முடியாது..., எனக்குப் பிடிக்கலை...” அவள் மறுக்க,

“உனக்கு என்ன பிடிக்கும்னு எனக்குத் தெரியும்” இமை சிமிட்டி அவன் உரைக்க, முகம் சிவந்து, வெட்கம் கவ்வ, “காட்டுமிராண்டி..., விலகுடா...” அவன் நெஞ்சில் கை வைத்து தள்ள முயன்றாள்.

அவளால் அவனை ஒரு இன்ச் கூட அகற்ற முடியவில்லை. அவள் முயற்சியைப் பார்த்தவன், “அதான் சண்டை போட சொல்லிக் கொடுத்தேனே..., என்னை அடிச்சு போட்டுட்டு

விலகு...” உரைத்தவன், அவள் கழுத்தடியில் அழுத்தமாக முகம் புதைக்க, அவளுக்கு தெளிவானது.

அவன் சொல்லிக் கொடுத்த பாடத்தை செயல்படுத்த முடியாமல், “எனக்கு பிடிக்கலை..., வேண்டாம்...” அவள் முனக, அதை அவன் சிறிதும் கண்டுகொள்ளவே இல்லை.

வயிற்றில் இருக்கும் குழந்தையின் நினைவு வேறு அவளை முழு மூச்சாக போராட முடியாமல் தேங்க வைத்தது. “முரடா..., வயித்தில் பாப்பா இருக்கு” அப்படியாவது தன்னை விட்டு விலகிவிட மாட்டானா என அவள் எண்ணினாள்.

அவனோ, “ஒரு வாரத்துக்கு முன்னாடியும் பாப்பா அங்கே இருந்ததா எனக்கு ஞாபகம்...” அவன் சொல்ல, செல்லமாய் அவன் முதுகில் குத்தினாள்.

“பீமா...” அன்றைய நினைவில் அவள் வெட்கமாய் முனக, அவள் நெகிழ்ந்த தருணத்தை சரியாக பயன்படுத்திக் கொண்டான். “அம்மா...” அவன் நெருக்கம் தகிக்க அவள் சன்னமாய் முனக, அவள் இதழ்களை கவ்விக் கொண்டவன், தன் வேகம் கூட்டினான்.

“இதுவும் நீ சொல்லிக் கொடுத்த பாடம்தான்” அவள் இதழ்களுக்குள் அவன் முனக, அவன் இதழ்களை பலமாக கடித்து வைத்தாள்.

“ஸ்..., ஆ.. வலிக்குதுடி...” அவன் அலற, “அப்போ எங்களுக்கு மட்டும் இனிக்குதா என்ன?” அவள் கேட்க, அவள் காதுக்குள் மிக அந்தரங்கமான அவன் கேள்வி அவளை சிவக்கச் செய்ய, பேசும் அவன் இதழ்களை தண்டித்தாள்.

அவன் தன் தேவை தீர்ந்து அவளை விட்டு விலகி, அவளை தன்மேல் போட்டுக் கொள்ள, நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவள், “உங்களுக்கு எதுவுமே மறக்கலை அப்படித்தானே...?” அவள் கேட்க, அவன் மௌனமாய் புன்னகைத்தான்.

அவன் புன்னகையில் இருந்த வித்தியாசம் புரிய, “பீமா, உங்களுக்கு முன்னாடியே எல்லாம் ஞாபகம் வந்துடுச்சா…?” அவள் அதிர,

“அதை இப்போதான் கண்டுபிடிச்சியா முட்டக்கண்ணி…?” அவள் நெற்றியில் முட்டினான்.

“எப்போ…?”

“உன்னை முதல் முதலா எப்போ எடுத்துகிட்டேனோ அன்னைக்கு” அவன் சொல்ல, அவள் எப்படி உணர்ந்தாள் என்றே சொல்ல முடியவில்லை.

“ஏன் என்கிட்டே சொல்லலை…” அவனை விட்டு விலகி, போர்வைக்குள் தன்னை மறைத்துக் கொள்ள, அவள் அருகே எழுந்து அமர்ந்தவன், “எங்கே என்னை சொல்ல விட்ட?” அவளிடமே கேட்டான்.

“அப்படின்னா…?” அவளுக்குப் புரியவில்லை.

“மத்தவங்க சொல்றதை எல்லாம் கேட்டுட்டு, என்னை என்னவோ வில்லன் ரேஞ்சுக்கு நீயா கற்பனை செய்துகிட்டா நான் என்ன செய்ய? அந்த சாந்தியும், வருணாவும் உன்கிட்டே எல்லாத்தையும் உளறி இருப்பாங்கன்னு எனக்குத் தெரியும்.

“நான் எதையாவது சொல்லலாம்னா…, அப்படியே வெளிறிப் போனால் என்ன செய்ய? சரி எல்லாத்தையும் அப்படியே விட்டுடலாம்னா அதுக்கும் நீ விடலை, நீயாவது உண்மையை சொல்வியான்னா…, அதுக்கும் பயம், கடைசியா அன்னைக்கு…, எங்களை மறந்துடுவீங்களான்னு கேட்டியே, அப்போதான் முடிவெடுத்தேன்.

“உன்கிட்டே எல்லா உண்மையையும் சொல்லணும், உன்னை காயப்படுத்தவும் கூடாது, அதே மாதிரி விளையாடியும் பாக்கணும்னு. ஷீபா அதுக்கு சம்மதிச்சாங்க. நான் ஏதாவது பிளான் போட்டு ஹாஸ்பிடல் போறதா இருந்தது.

“அதற்கு அவசியமே இல்லாமல் ஒரு கேங் புண்ணியம் கட்டிகிட்டாங்க” அவன் சொல்ல, தன்னால் முடியுமட்டும் அவனை அடித்தாள்.

அவள் அடிகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டவன் அசையாமல் இருக்க, “அதுக்கு என்னை இப்படி கேள்வி கேட்டு பாடா படுத்தணுமா?” மீண்டும் அடித்தாள்.

“மனசுக்குள்ளே இவ்வளவு காதலை வச்சுட்டு, இப்படி உள்ளுக்குள் உருகினால் நான் என்னதான் செய்ய? எனக்கும் உன் லவ் ஸ்டோரியை கேக்க ஆசை இருக்காதா?

“ஆனா, உனக்கு நான் எப்பவுமே முரடன், முசுடு அப்படித்தானே. மத்தவங்க சொல்றதை கேக்கற..., உன்கிட்டே நான் அப்படியாடி நடந்திருக்கேன்? இப்போ உன் மனசில் கை வைத்து சொல்லுடி..., நான் எப்படிப் பட்டவன்? முரடனா...? அரக்கனா...?” அவள் முகம் நோக்கியவனது கண்களில் அவ்வளவு தீவிரம்.

சட்டென எழுந்து அவனை தாவி அணைத்தவள், “எனக்கு நீங்க பிரம்மாடா..., அதுவும் காதல் பிரம்மா. டிஐஜி பொண்டாட்டி என்கிட்டே, அவர் ஒரு வார்த்தையாவது பேசுவாரா? சரியான மிலிட்டரி மேன்..., மெஷின் அப்படின்னு சொன்னப்போ, என்னால் அதை கொஞ்சம் கூட ஏத்துக்க முடியலை” அவன் விழிகளை நிமிர்ந்து நோக்க, அவன் கண்களில் வியப்பு.

“அப்போவேயா...?” அவன் நம்பாமல் கேட்க,

“நான் அவ்வளவு கோபமா இருக்கேன்னு தெரிந்தும், முதல் நாளே எனக்கு எச்சில் சுவிங்கம் கொடுத்த ஆளை, அப்படி சொன்னால் நான் நம்புவேனா?” அவள் புருவம் இரண்டையும் உயர்த்த, அடுத்த நொடி, அவள் இதழ்கள் அவனுக்கு சொந்தமாகி இருந்தது.

சில நிமிடங்கள் கடந்து அவன் விலக, “என்னைப் பொறுத்த வரைக்கும், நீங்க ஒரு லவ்வர்பாய்..., இந்த வீட்டுக்குள் எப்பவுமே ஒரு பெஸ்ட் காதலன், கணவன். இனிமேல் ஒரு நல்ல அப்பாவா இருப்பீங்க. எனக்கு அந்த நம்பிக்கை

இருக்கு” இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டார்கள்.

*****

# பகுதி – 50.

மூன்று வருடங்களுக்குப் பிறகு...,

காயத்ரி, தன் டிப்பார்ட்மெண்டில் சேர்ந்து, தன்னோடு வேலை பார்க்க வேண்டும் என்ற ஆசை பிரம்மாவுக்கு இருந்தாலும், காயத்ரிக்கு எம்ஈ படிக்க விருப்பம் என்பதால், அவளை அதையே படிக்க வைத்தான்.

அவள் கல்லூரி விரிவுரையாளராக இருக்க, பிரம்மா, தன் வேலையை விரும்பி செய்து கொண்டிருந்தான். எஸ்பி அலுவலகம் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்க, சஞ்சனா, தனு, யாழினி என அனைவருமே அவரவர் வேலையை பார்த்துக் கொண்டிருந்தாலும், பிரம்மாவின் வரவை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு கிரைம் கேஸ் என்றால், பிரம்மாவின் அதிரடிகள், நொடிக்குள் செயல்படும் அவன் தன்மை, ஒற்றை பார்வையில் எதிராளியை வீழ்த்தும் செய்கை என அனைத்துமே அவர்களுக்குத் தெரியும். ஆனால், ஒரு குடும்ப கேஸ் வந்தால் அவன் அதை எப்படி கையாள்வான் என எத்தனையோ நாள் சிந்தித்து இருக்கிறார்கள்.

சில காதல் திருமணம், வீட்டை விட்டு வெளியேறிய காதல் ஜோடி என அவன் ஸ்டேஷனில் தஞ்சம் ஆனாலும், அவர்கள் எந்த ஏரியாவுக்கு உட்பட்ட ஸ்டேஷனுக்கு கீழே வருகிறார்கள் எனப் பார்த்து, அவர்களை அங்கே அனுப்பி விடுவான்.

இப்போதைய அந்த கேசோ, அவன் அப்படி கை காட்டி விட முடியாத அளவுக்கான கேஸ்.

முதல் முறையாக அப்படி ஒரு கேஸ் அவர்கள் அலுவலகப்படியேறி வந்திருக்க, அதை அவன் எப்படி கையாள்வான் என்பதை தெரிந்து கொள்ளவே இவ்வளவு ஆவலாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது ஆவல் தெரியாமல், அன்று நேரம் பத்தை தாண்டியும் அலுவலகம் வரவில்லை பிரம்மா.

அலுவலகத்தில் பலபேர் தன் வரவை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அது தெரிந்தாலும், வீட்டில் தன் சின்ன தேவதையிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான் பிரம்மா.

“அம்முகுட்டி..., அப்பா சொன்னா கேப்பீங்க தானே. அப்பாவுக்கு ஸ்டேஷன் போக டைம் ஆச்சு. அப்பாவோட சட்டையை கொடுப்பீங்களாம், அப்பா போயிட்டு சீக்கிரம் வந்துருவேனாம். சரியா..., தாடா செல்லம்...” கடந்த அரைமணி நேரமாக தன் மகளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

“ம்ஹூம்..., நீ.. பிளாக்... பிறகு வர்ற...” அவன் சட்டையை தன் முதுகுக்கு பின்னால் மறைத்த அந்த பிஞ்சு, அவனுக்கு போக்கு காட்டியது.

“அப்பா நைட் ஆன பிறகு வர்றேன்னு சொல்றியா...? இன்னைக்கு பிளாக் ஆக முன்னாடி வந்துடுறேன். கொடுத்துடு பட்டு...” அவள் உயரத்துக்கு மண்டியிட்டு அமர்ந்து கொஞ்சிக் கொண்டிருந்தான் பிரம்மா. தன் யூனிபாமில் ஒரு சிறு கறையோ அழுக்கோ பட சம்மதிக்காதவன், இன்று காக்கி பேண்ட்டோடு தரையில் மண்டியிட்டிருந்தான்.

“மாத்தேன்..., போ வேணா...” இடது தோளில் வழியும் சட்டையை இடக்கையால் பற்றியவாறு, தங்கள் அறையின் கதவை பூட்டினாள். கதவு திறந்து இருந்தால் தானே அவன் வெளியே செல்வான் என்ற எண்ணம் அவளுக்கு.

தன் மகளின் சின்ன புரிதலை, புத்திசாலித்தனத்தை மனதுக்குள் மெச்சினாலும், வெளியே கெஞ்சலாக முகத்தை வைத்துக் கொண்டிருந்தான்.

“புஜ்ஜி..., இன்னைக்கு மட்டும் போயிட்டு வந்துடுறேன். அங்கே அப்பாவைத் தேடி நிறையப்பேர் காத்துட்டு இருக்காங்க. போன் வேற விடாமல் அடிக்குது பாரேன்...” அலைபேசி ஒலியெழுப்ப, அதை தன் தேவதையின் முகத்துக்கு நேராக நீட்டினான்.

“னா னா…” ‘வேண்டாம்…’ என்னும் பொருளில் கிட்டத்தட்ட வீடே அதிரும் அளவில் கத்த, சவுத் சென்னையை கட்டி ஆளும் பிதாமகன் விழி பிதுங்கினான்.

“னா…, னா…, சொல்லக் கூடாதுடா பொம்மு…, அப்பா சாயங்காலம் சாக்கி வாங்கி வருவேனாம்…” ஆசை காட்ட முயன்றான்.

அவளோ அப்பாவை விட பிடிவாதக்காரியாக இருப்பாள் போல, “சாக்கி னா னா…, அப்பா…” ‘சாக்லேட் வேண்டாம், அப்பா வேண்டும்’ என சொல்ல, சோர்ந்து போனான். ஏற்கனவே தான் செல்லும் நேரத்தை விட, அரைமணிநேரம் தாமதமாகிவிட்டது.

இதற்குமேல் தாமதித்தால் நன்றாக இருக்காது என்பது புரிய,

“காயு…” வழக்கம்போல் தன் மனைவியின் உதவியை நாட, அவ்வளவு நேரமாக படுக்கையில் அமர்ந்து கணவன், மகளின் செல்ல கொஞ்சல் நாடகத்தை கவனித்துக் கொண்டிருந்தவள், உதட்டை வேகமாக சுழித்து, அவனுக்கு பழிப்பு காட்டியவள் முகத்தை பட்டென திருப்பிக் கொண்டாள்.

‘இவ வேற நேரம் பார்த்து காலை வாருவாள்…’ மனைவியின் கோபத்துக்கான காரணமும், அவள் முகம் திருப்பிக் கொள்வதற்கான காரணம் தெரிந்து வைத்திருந்தவன் சற்று சோர்ந்துதான் போனான்.

வழக்கமாக அவள் இப்படி பார்வையை திருப்பிக் கொண்டால், அவன் செய்யும் செய்கைகள் அனைத்தும் மனதில் விரிய, இப்பொழுது தன்னை விட்டு விலகி நிற்கும் கணவனை எண்ணி மனதுக்குள் மறுகினாள் காயத்ரி.

தந்தை தாயை அழைக்கவே, “அம்மா னா…, னா…” வேகமாக குரல் கொடுத்தவள், தந்தையை நோக்கி ஓடி வர, பிரம்மா சிறு கலவரமாக மனைவியைப் பார்த்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, காயத்ரியின் கண்களில் இப்பொழுது கோபத்தின் சாயல் ஏறியிருக்க, பிரம்மா அவளை ‘வேண்டாம்’ என்பதுபோல் பார்வையால் கெஞ்சினான்.

கூடவே, தன்னை நோக்கி ஓடி வந்த மகளை கைகளில் அள்ளியவன், “அம்மாவை அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அம்மாதான் பொம்மு நமக்கு எல்லாம்..., அம்மா கிட்டே சாரி சொல்லு” குழந்தையை தூக்கியவன், காயத்ரியின் அருகில் வந்தான்.

“ம்ஹும்...” குழந்தை மறுப்பாக தலை அசைக்கவே,

“பிருந்தா...” அவன் அழுத்தமாக அழைக்கவே, குழந்தை சட்டென பயந்து போனாள். அவளை எப்பொழுதுமே குட்டிம்மா, புஜ்ஜு, அம்மு, பட்டு, வெல்லம் என கொஞ்சும் அவன், அவள் பெயரைச் சொல்லி அழைத்தாலே அவன் கோபமாக இருக்கிறான் என கண்டு கொள்பவள், உடனே அழுது விடுவாள்.

இப்பொழுதும் அதுவே நடக்க, உதட்டை பிதுக்கி அழுகைக்கு தயாரானாள். “பிருந்தா நோ...” கொஞ்சம் கூட இரங்காமல் அவன் அழைக்க, மேலும் உதடு பிதுக்கி, அழத் தயார் ஆனாள்.

“பொம்மு சாரி சொல்லு...” அழுத்தமாக சொல்லவே, தாயின் தோளில் சலுகையாக சாய்ந்து கொண்டது. அப்பொழுதும் அவன் பொம்மு என அழைத்த பிறகுதான் மனைவியின் தோளில் சாய, தன்னை ஆட்டி வைக்கும் அந்த சின்ன தேவதையை மொத்தமாக வருடினான்.

அதுதான் அவளது சாரி சொல்லும் முறை என்பதால், “குட் கேர்ள்...” பாராட்டியவன், அவள் கைகளில் இருந்து சட்டையை மெதுவாக உருவிக் கொள்ள முயன்றான்.

அவளோ உஷாராக சட்டையை அழுத்தமாக பற்றிக் கொண்டவள், அதை விடவே இல்லை. சோர்ந்து போனான் பிரம்மா. ஊரெல்லாம் முரட்டுத்தனத்தை காட்டும் தன்

கணவன், குழந்தையிடம் கெஞ்சிக் கொண்டு நிற்கும் அழகை நிச்சயம் ரசித்தாள்.

கூடவே மனதின் ஓரம் சிறு பொறாமை எட்டிப் பார்த்தது. முன்னர் ஸ்டேஷனில் இருந்து வந்தவுடன், தன்னை கொஞ்சும் கணவன், இப்பொழுதெல்லாம் குழந்தையை கொஞ்சினால் அவளும் என்னதான் செய்வாள்?

அவள் படுத்துறங்கும் அவனது நெஞ்சின்மேல், குழந்தை உறங்குவதை அவள் எப்படி சகிப்பாள்? அவன் தங்கள் மகளிடம் தன் உயரம் மறந்து, ஒரு சாதாரண அப்பாவாக நடந்து கொள்வது அவளுக்கும் சந்தோஷம்தான். ஆனால், அவள் வந்த பிறகு, தனது முக்கியத்துவம் குறைந்துவிட்டதாக எண்ணினாள்.

“காயு…” மெதுவாக மனைவியின் கரத்தை சுரண்டியவன், ‘வாங்கிக் கொடேன்’ பார்வையால் கெஞ்ச, தயவே இல்லாமல் மறுப்பாக தலை அசைத்தாள்.

“ம்ம்ம் ச்…, செல்லம் இல்ல…” மகள் மனைவியின் தோளில் முகம் புதைத்திருக்க, காயத்ரியின் கன்னத்தில் பட்டென முத்தம் வைத்தவன், சின்னக் குரலில் காயத்ரியை கொஞ்சினான். அவன் முத்தத்தில் நொடியில் மயங்கியவள், சட்டென தெளிந்தாள்.

“அதெல்லாம் முடியாது. முடிஞ்சா வாங்கிக்கோங்க…” அவளும் சின்ன குரலில் உரைத்தவள், அவன் கன்னத்தில் இதழ் பதித்து விலக, அவன் விழிகள் மயக்கத்தை காட்டியது.

“காயு…, பிளீஸ்…” நேரமாவதை உணர்ந்து அவளிடம் மீண்டுமாக கெஞ்சினான்.

“நீங்கதான் என்னை பிளீஸ் பண்ணனும்…” அவன் சட்டையை பிடித்து இழுத்தவள், அவன் கண்களை ஊடுருவினாள். இவர்கள் கொஞ்சிக்கொள்ள துவங்கிய உடனேயே, பிருந்தா, தாயின் தோளில் இருந்து இறங்கியிருந்தாள்.

அவள் பார்வைக்கான காரணம் உணர்ந்தவன், “காயு, நாம அதைப்பற்றி பிறகு பேசலாம். முதல்ல நீ சட்டையை வாங்கிக் கொடு...” இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்க, தாயிடம் இருந்து நழுவிய பிருந்தா, அவர்களை ஒரு பார்வை பார்த்தவள், அவன் சட்டையோடு அறையை விட்டு வெளியேறினாள்.

“வீரம் எல்லாம் வெளியே மட்டும்தானா? குழந்தை கிட்டே இருந்து சட்டையை வாங்க முடியலை?” அவன் மீசையைப் பிடித்து முறுக்க, “ஸ்..., மீசையை இழுக்காதடி வலிக்குது...” மெல்லியதாக கத்தினான்.

அப்பொழுதுதான் குழந்தையின் நினைவு வந்தவர்களாக, “குழந்தை...” இருவரும் ஒரு சேர குரல் கொடுக்க, கதவுக்கு அருகில் இருந்தவள், இவர்களைப் பார்த்து சிரிக்க, இருவரின் முகத்திலும் பெரும் சங்கடமும் வெட்கமும் போட்டி போட்டது.

“அப்பா..., சத்த...” ‘சட்டை...’ என அவனிடம் போக்கு காட்டியவள், ஓட, அவளை விரட்டும் பாவனையில் எழுந்தவனை சட்டென கையைப் பிடித்து தடுத்தாள் காயத்ரி.

அவன் அவள் கரத்தை மீறிச் செல்ல முயல, அவன் பனியனை கொத்தாக பற்றி நிறுத்தியவள், “இன்னும் எத்தனை மாசம் இப்படியே ஓடப் போறீங்க? உங்க பொண்ணே நீங்க நைட் லேட்டா வர்றீங்கன்னு கேக்க ஆரம்பிச்சுட்டா” அவனை இன்று விடவே போவதில்லை என அழுத்தமாக பிடித்துக் கொண்டாள்.

“காயு..., என் வேலையைப் பற்றி உனக்குத் தெரியாதா?” நழுவ முயன்றான்.

“மூணு வருஷத்துக்கு முன்னாடியும் நீங்க இந்த வேலையில்தான் இருந்ததா ஞாபகம். இப்போ மட்டும் புதுசா என்ன?”

“முன்ன எஸ்பி, இப்போ டிஎஸ்பி...” அவன் இழுக்க, அவளது முறைப்பில் அப்படியே வார்த்தைகளை நிறுத்திக்

கொண்டான்.

“என் விருப்பத்துக்கு அவ்வளவுதான் மதிப்பா?” இப்பொழுது அவள் இறங்கி பேச அவனால் அதை எதிர்கொள்ள முடியவில்லை.

“காயு..., நமக்கு பிருந்தா மட்டும் போதும்...” உரைத்தவன், நடுங்கும் கரங்களால் அவளை இறுக அணைத்துக் கொள்ள, அவன் நடுக்கம் உணர்ந்தவள், அவனை தன்னோடு இறுக்கிக் கொண்டாள். அவன் நெஞ்சில் அழுத்தமாக முகத்தை புதைத்தவள், தன் இதழ்களை அவன் நெஞ்சில் அதே அழுத்தத்தில் பதித்தாள்.

“ஊரையே காப்பாத்தும் போலீஸ் அதிகாரி..., ஒரு சின்ன விஷயத்துக்கு இப்படி பயப்படுவாங்களா?” அவனை கடிந்து கொண்டாள். அதைவிட, அவளுக்கு அவனிடம் ஒரு விஷயத்தை சொல்ல வேண்டி இருந்தது. தன்னை விட்டு இரண்டு வருடங்களாக காண்ணாமூச்சி ஆடிய கணவன், இரண்டு மாதத்துக்கு முன்னால் சற்று நெகிழ்ந்ததன் பயன், தன் வயிற்றில் கருவாய் உருவாகி இருப்பதை சொல்லியே ஆக வேண்டும்.

அவன் பிடிவாதமாக இரண்டாவது குழந்தை வேண்டவே வேண்டாம் என மறுக்கையில், அவள் எப்படி அவனிடம் சொல்வதாம்? எனவேதான் ஒரு வாரமாக அவனிடம் பேச திணறிக் கொண்டிருக்கிறாள்.

“எது சின்ன விஷயம்...?” பெரும் கோபமாக வினவியவன், அதற்குமாறாக அவளை இறுக அணைத்துக் கொண்டான். அந்த கோபம் கண்டு கொஞ்சம் கூட அஞ்சவில்லை காயத்ரி. அவனது அந்த கோபம் அவளுக்காக ஆயிற்றே, அவளை இழக்க முடியாத அவனது தவிப்பு தானே இப்படி கோபமாக வெளிப்படுகிறது.

அவன் கோபத்தை கண்டு கொள்ளாமல், “எனக்கு ஒரு குட்டி பிரம்மா வேணும், முடியுமா முடியாதா? நீங்க கேட்ட உடனே, குட்டி காயத்ரி பெத்து கொடுத்தேனா இல்லையா?” அவன்

முகத்தை நிமிர்ந்து பார்த்தவள், அவனிடம் நியாயம் கேட்க அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

பிரம்மாவின் பயத்துக்கு காரணம், காயத்ரியின் முதல் பிரசவம் பெரும் சிக்கலில் முடிந்ததுதான். தொப்புள்கொடி குழந்தையின் கழுத்தில் சிக்கிக் கொள்ள, கர்ப்பவாசலை முட்டிய குழந்தை வெளியே வருகையில், மூச்சு திணறத் துவங்கியது.

சற்று நேரத்தில் உதிரப் போக்கு அதிகரிக்க, தாயா, சேயா என பெரும் வினா அங்கே எழ, தனக்கு மனைவிதான் வேண்டும் என மருத்துவர்களிடம் எழுதிக் கொடுத்தான் பிரம்மா. ஒரு கட்டத்தில் குழந்தை வெளியே வர, காயத்ரிக்கு பிக்ஸ் வந்து கோமாவுக்கே செல்லும் நிலைக்கு ஆளானாள்.

ஒரு வாரம் கழித்து நினைவு திரும்பிய மனைவியின் அருகாமையை விட்டு, அந்த ஒரு வாரமும் பிரம்மா அசையவே இல்லை. ஒரு கட்டத்தில் தாயும், சேயும் நலம் என்றாலும், அந்த ஒரு வாரம் அவன் பட்ட துயரம்..., பிருந்தாவுக்கு இரண்டரை வயது ஆன பிறகும் அவனை விட்டு நீங்கவில்லை.

அந்த பயம்தான், காயத்ரி, இரண்டாவது குழந்தை வேணும் என கேட்கத் துவங்கவே, இரவு தாமதமாக வீட்டுக்கு வரத் துவங்கினான். அவனுடன் மாலையில் தினமும் விளையாடி பழகியிருந்த குழந்தை, அவன் மாலையில் வீட்டுக்கு வராமல் போகவே, தந்தையின் சட்டையை எடுத்து வைத்துக் கொண்டு போக்கு காட்டினாள்.

பிரம்மாவிடம் அந்த ஒரு சட்டை மட்டும்தான் இருக்கிறது என்று இல்லை. ஆனால், அவன் வெளியே செல்கையில், ‘இப்போ போகிறேன், இத்தனை மணிக்குதான் வருவேன்’ என குழந்தையிடம் உண்மையை சொல்லிவிட்டுச் செல்ல வேண்டும் என்பது காயத்ரியின் கட்டளை.

எனவே அதை மீற முடியாமல்தான் குழந்தையிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான். வழக்கமாக அவனுக்கு துணைக்கு

வரும் காயத்ரி, கணவன்மேல் இருந்த கோபத்தால், அவனுக்கு உதவி செய்யாமல் பழி வாங்கிக் கொண்டிருந்தாள்.

“காயு..., சொன்னா கேள்..., நான் சாயங்காலம் சீக்கிரம் வேண்ணா வர்றேன். ஆனா குழந்தை...” அவன் இழுக்க, முகத்தை வெடுக்கென திருப்பிக் கொண்டாள்.

இவ்வளவு சொல்லியும் அவன் மனம் மாறாமல் போகவே, “சரி, எல்லாம் உங்க இஷ்டப்படி தானே செய்வீங்க. அப்படியே செய்ங்க...” அவனிடம் கோபமாக உரைத்தவள், “பிருந்தா..., அப்பா சட்டையை எடுத்துட்டு வா. அப்பாகிட்டே கொடு...” குரல் உயர்த்தி அழைக்கவே, அடுத்த நிமிடம் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு, சட்டையை எடுத்து வந்தாள் பிருந்தா.

அவன் கையில் கோபமாக கொடுத்தவள், தாயின் மடியில் முகம் குப்புற படுத்துக் கொண்டாள். தன் கோபத்தை அவள் அப்படிதான் காட்டுவாள்.

“அப்பா இன்னைக்கு சீக்கிரம் வந்து, உங்களை பீச் கூட்டி போவேனாம் சரியா...?” குழந்தையோடு சேர்த்து, தாயையும் சமாதானம் செய்தவன், சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டான்.

அவன் கிளம்பி வெளியே செல்லவே, குழந்தையோடு வாசல் வரை வந்தவள், அவனுக்கு சிரித்த முகமாகவே விடை கொடுத்தாள். அவன் ஜீப்பில் ஏறப் போகவே, “அண்ணே..., அந்த ரோட் சைட் கார்னர்ல நாலு பசங்க எப்போ பாத்தாலும் என்னை கேலி பண்றாங்க. நீங்க என்னன்னு கேக்கவே மாட்டேங்கறீங்க...” நிவேதா அவனைத் தடுத்தாள்.

“யாரு..., அந்த எட்டாம் கிளாஸ் படிக்கிற பசங்க தானே. வீட்டுக்குள்ளே அவங்க அடிச்ச பாலை தூக்கி கொடுக்காமல் அவங்ககிட்டே சண்டைக்கு போனால், உன்னைப் பாத்தால் கேலி பண்ணாமல் என்ன

செய்வாங்க? அதிலையும், உன்னை அவங்க டீமில் சேத்துக்க வேற சொல்லி இருக்க.

“அப்படி இல்லன்னா, எங்க அண்ணா கிட்டே சொல்லி ஜெயில்ல போட்டுருவேன்னு வேற சொல்லி அவங்களை வெறுப்பேத்தி விட்டிருக்க. இந்த வருஷம் பப்ளிக் எக்ஸாம் இருக்கு. ஒழுங்கா படிச்சு நல்ல மார்க் வாங்குறதை விட்டுட்டு, அந்த சின்ன பசங்க கூட சண்டை.

“இன்னொரு முறை அவங்க ஏதாவது கம்பிளெயின்ட் பண்ணட்டும், உன்னை தூக்கி உள்ளே வைக்கிறேன்...” அவன் சொல்ல, முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள் நிவேதா.

இப்பொழுது பார்த்தால், தன் மகளுக்கும், நிவேதாவுக்கும் கொஞ்சம் கூட அவனுக்கு வித்தியாசம் தெரியவில்லை. நிவேதா ஒரு வளர்ந்த குழந்தையாகவே அவன் கண்களுக்குத் தெரிந்தாள். அவளுக்கு அவன் அப்பாவும் ஆகையால், அவளிடம் தினமும் தனியாக பத்து நிமிடமாவது செலவழிக்காமல் இருக்க மாட்டான்.

கூடவே, விளக்கெண்ணையை குடித்த மாதிரி அவள் முகம் மாற, காயத்ரி வாய்விட்டே சிரிக்க, குழந்தைக்கு என்ன புரிந்ததோ, அதுவும் தன் அரிசி பல்லைக் காட்டி, அவளைப் பார்த்து சிரித்தது.

“ஏய்..., குட்டி வாலு..., என்னைப் பாத்தா சிரிக்கற...?” நிவேதா குழந்தையை அடிக்க முயல, தாயின் கரத்தில் இருந்து இறங்கிய பிருந்தா, தத்தி தத்தி ஓடி, கலை வாணியின் அறைக்குள் சென்று மறைந்தாள்.

அவர்கள் உள்ளே செல்லவே, “வர்றேன்...” மனைவியிடம் உரைத்தவன், கந்தன் தங்களை கவனிக்கிறாரா...? என ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவள் கன்னத்தை மெதுவாக தட்டிவிட்டு கிளம்பினான்.

அவன் செல்லவே, வீட்டுக்குள் வர, பிருந்தா ஓட முடியாமல் ஓட, அவளை பிடிக்க முடியாதவள்போல் நடித்துக் கொண்டு, மகளை விரட்டிக் கொண்டிருந்தாள் நிவேதா. அவர்கள்

நாடகம் வழக்கமாக நடக்கும் ஒன்றுதான் என்பதால், கலைவாணி கண்டுகொள்ளாமல் இருந்து விட்டார்.

“நிவேதா..., அவளோட விளையாடியது போதும்..., போய் மேத்ஸ் புக் எடுத்துட்டு வா, கொஞ்சம் சம்ஸ் போடலாம். அத்த..., குழந்தையை ஒரு ஒன் அவர் பாத்துக்கோங்க...” அவளை அழைக்க, அழுதுவிடுபவள்போல் நின்றாள்.

“அண்ணி..., சம்ஸ் நாளைக்கு போடலாம். இன்னைக்கு பிஸிக்ஸ் படிக்கறேன்” அவள் கெஞ்ச, அதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“நான் சொன்னதை செய்...” அவள், அவர்கள் வழக்கமாக அமர்ந்து படிக்கும் இடத்தில் சென்று அமர்ந்து விட்டாள்.

“அம்மா...” சின்னக் குரலில் தாயை துணைக்கு அழைக்க, கலையோ, “ஒழுங்கா போய் படி..., கணக்கு பாடத்தை மட்டும் ஒளிச்சு வைக்கற. உன் அண்ணிதான் அதை கண்டு பிடிச்சா..., போ...” அவர் இறங்கவே இல்லை.

“உங்ககிட்டே ஹெல்ப் கேட்டேன் பாருங்க...” அலுத்துக் கொண்டவள், தன் புத்தகங்களை எடுக்கச் சென்றாள்.

பிருந்தாவோ..., “னானு., இப்பி..., இப்பி...” நானும் எழுத வேண்டும் என கேட்க, “உனக்கும் பேப்பர் வேணுமா...? வா பாட்டி எடுத்து தர்றேன்” அவளை அள்ளிக் கொண்டவர், மாடியேறத் துவங்கினார்.

அவர்கள் வீட்டில் இப்படித்தான்..., செல்லம் கொடுக்கவும் குறையில்லை, கண்டிப்பிலும் குறையில்லாமல் பார்த்துக் கொண்டார்கள். வாழ்க்கை வண்ணமயமாகத்தான் போய்க்கொண்டு இருந்தது. நாட்கள் ஒவ்வொன்றும் கடக்க, காயத்ரி தவித்துப் போனாள். அவனிடம் உண்மையை மறைப்பது பெரும் அவஸ்தையை அளித்துக் கொண்டிருந்தது.

தன் ஆபீஸ் வந்த பிரம்மா, வேக நடையோடு படிகளில் ஏறினான். இடக்கை தானாகவே மீசையை முறுக்க,

கூலிங்கிளாஸ்ஸுக்கு பின்னால் கண்கள் சுழண்டு அங்கே இருந்தவர்களை அலசியது.

அவனது புயல் போன்ற நடையில், அங்கே இருக்கையில் அமர்ந்திருந்த அனைவரும் வேகமாக எழுந்து நிற்க, யாரையும் அவன் கண்டுகொள்ளவே இல்லை. தன் அலுவலகத்துக்குள் நுழைய, எழுத்தர் துவங்கி, அனைவரும் காலை வணக்கம் உரைக்க, ஒற்றை தலை அசைப்பு மட்டுமே அவர்களுக்கு பதிலாக கிடைத்தது.

தன் அறைக்குள் நுழைந்தவன், தொப்பியை அதன் இடத்தில் வைத்தவன், சுழல் நாற்காலியில் அமர்ந்தவன், மேஜைமேல் இருந்த, மனைவி, குழந்தையின் புகைப்படங்களை ஒரு நொடி வருடினான்.

அவன் அறைக்கதவு தட்டப்பட, அறைக்குள் நுழைந்தாள் யாழினி. “சார், அந்த டிவோஸ் கேஸ்..., உங்களை பாத்துட்டுதான் போவோம்னு இருக்காங்க. இன்னைக்கு அவங்களுக்கு ஒரு முடிவு தெரிந்தே ஆகணுமாம்” அவள் சொல்ல, சுவிங்கத்தை தன் கையில் தட்டி, வாயில் போட்டுக் கொண்டான்.

அவன் அமைதியாக இருக்கவே, ‘அவன் என்ன யோசிக்கிறான்’ என்பதுபோல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் யாழினி.

‘எப்படி இதில் இருந்து எஸ்கேப் ஆகலாம்னு யோசிக்கிறாரோ...?’ அவள் எண்ணிக் கொண்டிருக்க,

“யாழினி, ஒரு பத்து நிமிஷம் கழித்து, அந்த பொண்ணை மட்டும் உள்ளே கூட்டி வாங்க...” உரைத்தவன், தன் முன்னால் இருந்த ஃபயிலை பிரித்து படிக்கத் துவங்கினான்.

அறையை விட்டு வெளியேறும் முன்னர் யாழினி அவனைப் பார்க்க, தன் முன்னால் இருந்த சிசி டிவி பதிவுகளை பார்ப்பது புரிய, “ரெண்டு நாளா அதையே விடாமல் பாக்கறாரே...” யோசித்தவாறே வெளியே சென்றாள்.

பிரம்மாவோ, தன் ஸ்டேஷன் வராண்டாவில், ஒருவருக்கு ஒருவர் முகத்தை திருப்பியவாறு நின்றிருந்த இரண்டு குடும்பங்களையும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான். குற்றம் செய்தவர்களை ஒரு பார்வையில் கணித்துவிடும் அவனால், இரு குடும்பங்களுக்குள், உறவு சிக்கல்களில் சிக்கித் தவிக்கும் அவர்களை எப்படி சம்மாளிக்கவென்று தெரியவில்லை.

ஆனாலும் சம்மாளித்து தானே ஆக வேண்டும்' எண்ணியவன், ஆழமாக மூச்செடுத்து தன்னை நிதானத்துக்கு கொண்டு வந்தான். அவனுக்கே அவனை நினைத்து சிரிப்பாக இருந்தது. 'டேய் பிரம்மா, கல்யாணம் பண்ணி, ஒரு குழந்தைக்கு அப்பாவா ஆனாலும் ஆன, குடும்ப பிரச்னைக்கு எல்லாம் தீர்ப்பு சொல்ல தயார் ஆயிட்ட...' தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

பதினைந்து நிமிடங்கள் கடக்க, அறைக்கதவு தட்டப்படவே, ஒரு பெண்ணோடு உள்ளே நுழைந்தாள் யாழினி. தன் எதிரில் இருந்த இருக்கையை அந்த பெண்ணுக்கு சுட்டிக் காட்டியவன், யாழினியை 'நில்' என்பதுபோல் பார்க்க, அங்கேயே நின்றுகொண்டாள்.

சில நொடிகள் மௌனத்தில் கடக்க, "உங்க பேர்...?" கேட்டவன், கீழே இருந்த பேனாவை எடுத்து விரல்களுக்குள் சுழற்றியவன், 'குறிப்பெடு...' என பார்வையால் யாழினிக்கு உத்தரவிட்டான்.

அவள் கையில் இருந்த பேடை தயார் செய்ய, "ஜானவி..." மெதுவாக உரைத்தாள்.

"நீங்க எதுக்கு இங்கே வந்திருக்கீங்க...?" பேனாவை மேஜைமேல் மெதுவாக தட்ட, ஜானவியிடம் ஒரு அழுத்தமான மௌனம் நிலவியது.

அதைக் கண்டுகொள்ளாமல், உங்க கணவர்கிட்டே இருந்து உங்களுக்கு விவாகரத்து வேணுமா?" அடுத்த கேள்வியை கேட்டான்.

சட்டென அவனை நிமிர்ந்து பார்த்தவளின் கண்கள் லேசாக கலங்கியதே தவிர, அவளிடம் பதில் இருக்கவில்லை. அதை மனதுக்குள் குறித்துக் கொண்டவன், “உங்க கணவர் உங்களை அடித்து கொடுமை படுத்தறாரா?” வெகு நிதானமாக அவன் மீண்டும் கேட்க, ஜானவி சிறு தவிப்பாக அவனை ஏறிட்டாள். யாழினி விழி விரிய அவனைப் பார்த்திருந்தாள்.

தான் குறிப்பெடுக்க வேண்டும் என்ற விஷயமே அவளுக்கு மறந்து போனது. ‘இவருக்கு இப்படியும் பேசத் தெரியுமா?’ அவள் உள்ளத்தில் ஓடிய எண்ணம் முகத்தில் பிரதிபலிக்க, பிரம்மா சட்டென விழியை ஒரு நொடி அவள் பக்கம் திருப்ப, கையில் இருந்த பேனாவை கீழே தவற விட்டு, இறுதி நொடியில் சுதாரித்து பிடித்தாள்.

அவன் பார்வை இப்பொழுது ஜானவியின் பக்கம் இருக்க, ‘இந்த நேரம், ஏதாவது அக்கியூஸ்ட் இருந்திருக்கணும்...? அவன் முழி ரெண்டும் பிதுங்கியிருக்கும்’ அவனது விசாரணை முறை அறிந்தவள் மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

“அவர் ஆண்மை இல்லாதவர்ன்னு...” “சார், பிளீஸ்...” அவன் வார்த்தையை முடிக்கும் முன்பே அவள் வெடித்திருந்தாள்.

“ஜானவி..., நான் கேட்கும் கேள்விகளுக்கு எனக்கு முறையான பதில் வந்தாகணும். உங்க அப்பா அவர்மேல் கம்ப்ளெயின்ட் பண்ணி உள்ளே வைக்கச் சொல்றார். அவங்க என்னன்னா, நீங்க சரியில்லைன்னு ஒரு லிஸ்ட் போடறாங்க.

“கடைசியா பார்த்தால், அவன்கிட்டே இருந்து ஒரு கையெழுத்து மட்டும் வாங்கித் தாங்கன்னு உங்க அப்பா சொல்றார். இதையெல்லாம் நான் மூன்றாவது மனிதன் கேக்கறார்ன்னு செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட உங்க ரெண்டுபேரோட வார்த்தைகள்தான் எனக்கு முக்கியம்...” மிகவும் நிதானமாக, பொறுமையாக அவன் உரைக்க, யாழினி விட்டால் மயக்கம்போட்டு விழும் நிலைக்கே சென்று விட்டாள்.

“உங்களுக்கு அவர்கிட்டே இருந்து விடுதலை வாங்கித் தரச் சொல்லி உங்க அப்பா கேக்கறார். நான் அவர் சொன்னதை செய்யவா? உங்க கணவர் உங்களை அடித்தாராமே...?” கேட்டவனது பார்வை, அவள் கரத்தில் கன்றிப்போன காயத்தில் பதிய, தன் துப்பட்டாவால் கையை வேகமாக மறைத்தாள்.

கூடவே, “அவர்தானே கேட்டார்...”

“அப்படின்னா...?” அவன் நிறுத்த, யாழினி அவன் கேள்விகளையும், அவள் பதிலையும் குறிப்பெடுக்கத் துவங்கினாள்.

“என் கணவர் ரொம்ப நல்லவர். ரெண்டு வருஷம்..., நாங்க எப்படி வாழ்ந்தோம் தெரியுமா?” கேட்டவளது இமைகள் சில நொடிகள் மூடிக் கொள்ள, அவள் அந்த காலத்துக்கே சென்றுவிட்டது தெரிந்தது.

“என் அப்பா என்னை பாத்துகிட்டதை விட, ஒரு படி மேலே பாத்துகிட்டார்” அந்த வார்த்தையில் அவனுக்குப் புரிந்தது, அவள் அவளது கணவன்மேல் கொண்டிருக்கும் நேசம்.

“அப்படியா...? நம்புற மாதிரி இல்லையே...” தாடையை தேய்த்தவன், “யாழினி, இவங்க அப்பா என்ன சொன்னார்...? மருமகன் ஒரு சேடிஸ்ட், மகளை கொடுமை படுத்தறான்..., அட் லாஸ்ட்...” அவன் சொல்லிக்கொண்டே போக, அவள் முகத்தை மூடி அழவே துவங்கிவிட்டாள்.

பிரம்மாவைப் பொறுத்த வரைக்கும், அவள் பேசியே ஆக வேண்டும். இல்லையென்றால் அவனால் எதுவும் செய்ய முடியாது. எனவே அவளை பேச வைக்க முயன்றான்.

“அப்போ..., உங்க அப்பா சொல்வதெல்லாம் பொய்யா...? அவனைத் தூக்கி உள்ளே வைக்கவா? கூப்பிட்டு நாலு தட்டு தட்டினால் உண்மையை தானா சொல்லிடுவான். உங்களை இப்படியெல்லாம் பேச அவன் சொன்னானா? மிரட்டினானா?” அவன் வேகமாக இருக்கையில் இருந்து எழ முயல, பதறிபோய் அவனைத் தடுத்தாள்.

“ஹையோ..., அவர் செய்ததில் தப்பே இல்லை. நான் செய்ததுதான் தப்பு” அவள் முகத்தை மூடி அழ, சில நொடிகள் பொறுமை காத்தான். அவன் யாழினியைப் பார்க்க, அங்கே இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து ஜானவிக்கு குடிக்கக் கொடுத்தாள்.

“கொஞ்சம் தெளிவா சொல்லுங்க...” அவள் சற்று தெளியவே, மீண்டும் விசாரணையைத் துவங்கினான்.

“கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் குழந்தை இல்லையேன்னு அவர் வீட்டில் கேக்க ஆரம்பிச்சாங்க...” விம்மிய அழுகையை அவள் அடக்குவது புரிய, பார்வையை அவள்மேல் இருந்து திருப்பியவன், சில நொடிகள் அவளுக்கு அவகாசம் கொடுத்தான்.

“கோயில் குளம், விரதம், பத்தியம்..., எல்லாம் செய்தேன்...”.

“ஹாஸ்பிடல் போகலையா...?”

“போனேன்..., தனியா...” அவள் தலை கவிழ,

“ஏன்...?” மென்மையாகவே கேட்டான்.

“எனக்கு ஏதாவது பிரச்சனை என்றால் அவரை விட்டு ஒதுங்கிக்கலாம்னு நினைத்தேன். ஆனா...”

“அவர் வரலை..., உங்களுக்கு பிரச்சனை இல்லை. அப்போ..., அவருக்குதான் ப்ராப்ளம்னு நீங்களே முடிவு பண்ணிட்டீங்களா?” அவன் அவளை ஊடுருவினான்.

“அவரும் என்னை மாதிரியே தனியா போய் டெஸ்ட் எடுத்திருக்கிறார். அதையெல்லாம் நான் பாத்தேன்...” அவள் அழுது வெடிக்க, தன் நெற்றியை தேய்த்துக் கொண்டான்.

“கண்ட்ரோல் யுவர் ஸெல்ப்...” இதற்கு முன்னர் எப்படியோ..., ஆனால், தன் தாயின் விஷயமும், காயத்ரியும் தன் வாழ்வில் வந்த பிறகு, ஒரு பெண்ணின் கண்ணீருக்குப் பின்னால் இருக்கும் வலியை அவளால் சற்று உணர

முடிந்ததால், அவள் அழுகையை ஜீரணிக்க சற்று சிரமப்பட்டான்.

“ஓ..., அப்போ..., உங்களுக்கு ப்ராபளம் இல்லை எனத் தெரிந்த உடனே, அதைச் சொல்லி அவர்கிட்டே, அவர் வீட்டுக் காரங்க கிட்டே சண்டை போட்டீங்க அப்படித்தானே...” அவன் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

“நாள் ஆக, ஆக, அவருக்கு வேற கல்யாணம் பண்ணி வைக்கறோம், நீ ஒதுங்கிப் போ’ன்னு சொல்லி என்னை ரொம்ப மனசளவில் துடிக்க வச்சுட்டாங்க. என்னால் அதை தாங்கிக்க முடியலை. அன்னைக்கு வரைக்கும், நான் ரிபோர்ட் பத்தி யார்கிட்டேயும் வாயைத் திறக்கவே இல்லை.

“அவர் இருக்கும்போது ஒரு மாதிரி, அவர் இல்லாதப்போ ஒரு மாதிரின்னு நடந்துக்க ஆரம்பிச்சாங்க...” அவள் அழ,

“நீங்க அவர்கிட்டே சொல்லலையா...?” அவள் மறுப்பாக தலை அசைக்க,

“ஏன்...?”

“அவர் என்னோட இருக்கும் நேரத்தை சந்தோஷமா அனுபவிக்கணும்னு நினைத்தேன். அவருக்கு அவங்க பெத்தவங்க, அக்கா மேலே ரொம்ப பாசம். அவங்களைப் பத்தி, அவர்கிட்டே குறை சொல்ல மனசு வரலை” அவள் சொல்ல, ‘இந்த காதலுக்கு அந்த மடையன் என்ன கைம்மாறு செய்வான்?’ என்றுதான் தோன்றியது.

“பிறகு எப்படி வன்முறை எல்லாம் வந்தது...?” அவள் காயத்தை சுட்டிக் காட்டினான்.

“அவங்க அக்கா பொண்ணு பிறந்த நாளுக்கு அங்கே போயிருந்தோம். அங்கே வச்சு, அவங்க நாத்தனாரை இவருக்கு ரெண்டாம் தாரமா முடிக்கணும்னு பேசினதை என்னால் தாங்க முடியலை. சோ..., கோபமா கத்திட்டேன்.

“அது மட்டும் இல்லை..., அவ அவரை லவ் பண்றேன்னு சொன்ன உடனே என்னால் சகிச்சுக்க முடியலை.

கோபத்தில் அவளை அறஞ்சுட்டேன். அப்போ எதேச்சையா அங்கே வந்த அவர், அவங்க வீட்டில் வந்து அவங்க வீட்டு பொண்ணை எப்படி அடிக்கலாம்னு கேட்டு, தள்ளி விட்டார்.

“அதில் தெரியாமல் அங்கே இருந்த டீபாவில் இடிச்சுகிட்டேன்..., அதுக்குப் பிறகு, அவர் மனசை கலைத்து, என்னை வீட்டை விட்டே விரட்டிட்டாங்க. அந்த கோபம்தான் எங்க அப்பாவுக்கு...” அவள் விம்ம,

“அப்போ உங்க அப்பாவுக்கு ‘உண்மை’ எல்லாம் தெரியாதா?” அவன் கேட்க, அவன் உண்மைக்கு கொடுத்த அழுத்தத்தில் அவள் தலை மறுப்பாக ஆடியது.

“ஏன் அவளை அடிச்சீங்கன்னு அவர் கேக்கலையா...?” அவன் கோபத்தை அடக்கிய குரலில் கேட்க,

“அவங்க அக்கா வாழப்போன வீடு அது. அங்கே வைத்து நான் அப்படி நடந்துகொண்டது தப்பு தானே...” அவள் திருப்பிக் கேட்க, அவனுக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

யாழினியோ, ‘இப்படியுமா ஒருத்தி கணவனை விரும்புவாள்?’ என்றுதான் இருந்தது.

பிரம்மாவுக்கு ஜானவியின் கணவன்மேல் அவ்வளவு ஆத்திரமாக வந்தது. அடுத்த வீட்டில் வைத்து மனைவி இப்படி செய்கிறாள் என்றால் ஒரு நொடி யோசிக்க மாட்டான்?’ கிளர்ந்த கோபத்தை. ஜானவியின் முகத்துக்காக அடக்கினான்.

அவன்மேல் அவள் கொண்டிருக்கும் காதல், இந்த நிலைமையிலும் தன்னவனை விட்டுக் கொடுக்காத பாங்கு..., ‘அவன் இனிமேலும் புரிந்து கொள்ளவில்லை என்றால், நம் பாணியில் கவனிக்கணும்...’ எண்ணிக் கொண்டான்.

கூடவே, ‘தன் வாழ்க்கைக்காக போராடாத இவள் செய்ததும் தவறு. அவனுக்கு எல்லா உண்மையும் தெரிந்திருக்க வேண்டும்’ எண்ணிக் கொண்டான்.

“சரி, இப்போ சொல்லுங்க. உங்களுக்கு அவர்கிட்டே இருந்து விடுதலை வேணுமா இல்ல...” அவன் நிறுத்த,

“எனக்கு அவர் வேணும்...” அவள் முடித்து வைத்தாள்.

தன் மேஜைமேல் இருந்த தொலைபேசியில் இருந்து ஒரு எண்ணை அலுத்தியவன், அங்கே தொலைபேசி எடுக்கப்பட, “தீபேஷை உள்ளே அனுப்புங்க” உரைத்தவன் வைத்து விட்டான்.

ஜானவி அவனை நிமிர்ந்து பார்க்க, “அவர் வேணும்னா, அவர்கிட்டேதான் பேசணும் ரைட்...?” அவளிடம் கேட்க, கொடிய இரு மாதங்களுக்குப் பிறகு, தனிமையில் அவனை சந்திக்கப் போகும் படபடப்பு அவளிடம்.

தீபேஷ் உள்ளே வரவே, தன் இருக்கையில் இருந்து எழுந்த பிரம்மா வெளியே செல்லத் துவங்கவே, ‘யாழினி என்ன நடக்கிறது?’ எனத் தெரியாமல் நின்றிருந்தாள்.

அறைக்குள் வந்த தீபேஷ், ஜானவியின் அருகே சென்றவன், அவள் தோளைத் தொட்டு எழுப்பியவன், அவள் கன்னத்தில் ஒரு அறை விட, யாழினி கொதித்துப் போனாள்.

‘செய்யிறது எல்லாம் செஞ்சுட்டு, எங்க கண்ணு முன்னாடியே அவளை அடிக்கிறியா?’ எண்ணியவள், அவர்கள் அருகே செல்ல முயல, அடுத்த நிமிடம் நடந்ததைப் பார்த்தவள், அறைக்குள் இருந்து தெறித்து வெளியே ஓடினாள்.

அவள் கண்கள் பிரம்மா எங்கே என்று தேட, அவர்கள் அறைக்கு வெளியே, சற்று தூரத்தில் அவன் நின்றிருப்பது தெரிய, வேகமாக அவனை நெருங்கினாள்.

“சார்...” அவள் திணறலாக அழைக்க, வாயில் மென்ற சுவிங்கத்தோடு அவளை ஏறிட்டவன், “நீங்க அவங்க பாதுகாப்புக்கு நிக்கறீங்கன்னு நினைத்தேன்” சிரிப்பை உள்ளடக்கி அவன் உரைக்க, அவனைப் பார்த்து பரிதாபமாக விழித்தாள்.

கூடவே, “சார்…” கெஞ்சலாக அழைக்க, பக்கென சிரித்தவன், “ஹா..ஹா..ஹா…” வாய்விட்டே சிரிக்க, அந்த அறைக்கு அந்தப் பக்கம் இருந்தவர்கள் அனைவரும், பிரம்மாவின் சிரிப்பு சத்தம் கேட்டு, அதிசயமாக வந்து பார்த்தார்கள்.

அங்கிருந்த காவலர்கள் அனைவரும் வந்து பார்த்த பிறகே சட்டென தெளிந்தவன், சிரிப்பை நிறுத்தி சற்று விறைப்பாக, அனைவரின் முகங்களும் அங்கிருந்து அகன்றது.

அவர்களைப்போல் யாழினியால் செல்ல முடியாதே, அவள் சங்கடமாக அங்கே நிற்க, ‘என்ன நடந்தது…?’ அவன் பார்வை அவளிடம் கேட்பதாகத் தோன்றினாலும் அவன் எதுவும் கேட்கவில்லை.

யாழினி சற்று தூரம் போனவள், தன் தலையிலேயே அடித்துக் கொள்ள, இப்பொழுது மனதுக்குள் சிரித்துக் கொண்டான் பிரம்மா. யாழினி அவனிடம் ஏதாவது கேட்டால், அங்கே நடந்ததை எப்படிச் சொல்வாள்?

உள்ளே வந்த தீபேஷ் முதலில் ஜானவியை அடித்தாலும், அவள் அதிர்ந்து நின்ற மறு நொடியே, அவளை இழுத்து அணைத்தவன், அவள் முகம் முழுக்க முத்தமிடத் துவங்கவே, அவள் கதவுக்கு அருகே சென்று திரும்பிப் பார்க்கையில், இருவரின் இதழ்களும், சண்டை போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுத்தான் அப்படி ஓடி வந்தாள்.

இவர்கள் இங்கே தாமதிக்க, தன்னவளை முத்தமழையில் திக்குமுக்காடச் செய்தவன், அவள் நம்ப முடியாமல் தன்னைப் பார்க்கவே, “என்கிட்டே ஏண்டி சொல்லலை? நான் உனக்கு அவ்வளவு அந்நியமா போய்ட்டானா? இல்லன்னா நம்ப மாட்டேன்னு நினைத்தாயா?

“உன்னை விட்டு இன்னொருத்தியை கட்டுன்னு அவங்க சொன்னால், உடனே நான் கேப்பேனா? எப்படி நீ அதை கேக்கலாம்? என்கிட்டே சொல்லணும்னு உனக்கு

தோணவே இல்லையா? உனக்கு பிரச்சனை என்றால், என்னை விட்டு விலகி போயிடுவியா?

“உன்னை அப்படி போக விட்டுடுவேனா நான்? உன் காதல் மட்டும் இல்லை, நான் உன்மேல் கொண்டிருக்கும் நேசமும் பெருசுதான்” சொன்னவன் அவளை கட்டிக் கொள்ள, அவன் பேசுவதை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் வியப்பாக நோக்கவே, “நீ பேசியதை எல்லாம் நானும் கேட்டேன்” அவன் சொல்ல, அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

“ஏன் ஜானு என்கிட்டே சொல்லலை? உன்னை நான்...” அவளை இறுக அணைத்துக் கொள்ள,

“உங்களுக்கு ஒரு குறைன்னு நானே எப்படிச் சொல்வேன்? நான் உங்களோட ரெண்டு வருஷம் வாழ்ந்திருக்கேங்க. குழந்தை பெத்துக்க மட்டும்தான் கல்யாணம் பண்ணிக்கறோமா? என்னைப் பொறுத்த வரைக்கும் குழந்தை நம் வாழ்க்கையில் ஒரு அங்கம் அவ்வளவுதான்.

“அது ஒரு வரம்..., நமக்கு அது இல்லை என்றால், எனக்கு நீங்க குழந்தை, உங்களுக்கு நான் குழந்தையா இருந்துட்டு போகலாம். எதற்காகவும் உங்களை இழக்க நான் தயாராக இல்லை...” ஒரு சதவீதம் கூட தன் குறையை பெரிதாக மதிக்காத அவள்மேல், அவனுக்கு இன்னும் நேசம் பொங்கியது.

மேலும் ஒரு சில மணித்துளிகள் கடந்த பிறகு, பிரம்மாவும் யாழினியும் அங்கே வர, “என்ன முடிவு செய்திருக்கீங்க...?” அவர்களிடம் கேட்டவன், தன் இருக்கையில் அமர்ந்தான்.

“சார், நான் ஏற்கனவே என் வேலையை பெங்களூருக்கு மாத்திட்டேன். ஜானுவை நான் என்னோடவே கூட்டி போகப் போறேன். போக முன்னாடி, எங்களுக்குன்னு ஒரு குழந்தையை நாங்க தத்தெடுத்து வளக்கப் போறோம்...” தீபேஷ் தெளிவாக உரைக்க, அவனை பார்வையாலேயே மெச்சினான்.

“வெளியே உங்க வீட்டு பெரியவங்க நிக்கறாங்க...” அவன் நினைவூட்ட,

“எங்க அப்பாவை நான் சம்மாளிச்சுப்பேன்...” அவள் வேகமாக உரைத்தாள். தீபேஷோ, ஒரு படி மேலே போய்..., “என்னைப் பற்றிய உண்மையை அவங்ககிட்டே சொல்லி, இதை நான் முடிச்சுக்கறேன்” அவன் சொல்ல,

“வேண்டாம்..., அவங்களுக்கு இந்த உண்மை எல்லாம் தெரிய வேண்டாம். மத்தவங்க முன்னாடி நீங்க தலை குனிவது எனக்குப் பிடிக்கலை...” உரைத்தவள், ‘என் கணவன் எனக்கு உசத்தி...’ என செயலால், அவன் கரத்தை கோர்த்துக் கொண்டாள்.

அதைப் பார்த்து மலர்ந்து சிரித்தவன், “மத்தவங்க கிட்டே இல்லன்னாலும், என் அம்மாகிட்டே நான் உண்மையை சொல்லியே ஆகணும். இன்னொரு முறை அவங்க உன்னை ஒரு வார்த்தை பேசுவதையும் நான் அனுமதிக்க முடியாது.

“ஒரு கணவனா அது என்னோட கடமை” அவன் அழுத்தம், திருத்தமாக உரைக்க, நிச்சயம் அவனை நினைத்து பெருமை பட்டாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், இரு குடும்பமும் ஓரளவுக்கு சகஜமாக, அனைவரையும் சந்தோஷமாகவே வழியனுப்பி வைத்தான். அவர்கள் செல்லவே, “சார்...” அவனை அழைத்த யாழினி, அவனிடம் இதை எப்படி கேட்பது என தயங்கி நிறுத்தினாள்.

“சொல்லுங்க...” அவன் அவளைப் பார்க்க,

“இல்ல..., அவங்களுக்குள் பிரச்சனை இல்லைன்னு எப்படி கண்டு பிடிச்சீங்க?” அவள் கேட்க,

“பெரியவங்க மோதிகிட்ட அளவுக்கு சின்னவங்க மோதிக்கலை அவ்வளவுதான். அதை ரெண்டு நாளா கேமராவில் கவனிச்சுட்டுதான் இன்னைக்கு வரச் சொன்னேன்...” உரைத்துவிட்டு சென்றுவிட்டான்.

‘மனுஷன் பிரம்மா தான்யா…’ யாழினி எண்ணிக் கொண்டாள்.

மாலை வரைக்கும் எஸ்பி ஆபீஸில் தன் வேலைகளை கவனித்தவன், ஐந்து மணிக்கு வீட்டுக்குச் சென்றான். மாலையில் அவர்களை பீச்சுக்கு அழைத்துச் செல்கிறேன் என சொல்லியிருந்ததை நிறைவேற்றவே வந்தான்.

அவனது வழக்கமான காக்கி பேண்ட், வெள்ளை டிஷர்ட் அணிந்தவன், கந்தனை அனுப்பிவிட்டு ஜீப்பை தானே செலுத்தினான். காயத்ரி குழந்தையோடு முன்னால் அமர்ந்துகொள்ள, கலைவாணியும், நிவேதாவும் பின் இருக்கையில் அமர்ந்திருந்தார்கள்.

நிவேதா, பிருந்தாவோடு விளையாடிக் கொண்டிருக்க, கலைவாணி அவர்களை கவனித்துக் கொண்டிருந்தார். காயத்ரியும், பிரம்மாவும் ஒரு வாக் போய் வருகிறோம் என உரைத்துவிட்டு, நடக்கச் சென்றுவிட்டார்கள் காயத்ரி அவனிடம் எதையும் உரையாடாமல் அமைதியாக வர, அவள் அமைதியை அவன் கலைக்க விரும்பவில்லை.

அவன் இடக்கரத்தை தன் வலக்கரத்தால் கோர்த்துக் கொண்டவள், தன் தலையை அவன் தோளில் கொஞ்சமாக சாய்த்து நடந்தாள். ‘இவன் என் கணவன்’ அது மட்டும்தான் அவள் நினைப்பாக இருந்தது.

முதல்முறை பீச்சுக்கு வந்து, அவள் தன் கரங்களை கோர்த்த பொழுது, “ஏய், நான் ‘எஸ்பி’டி…, கொஞ்சம் கூட பயமே இல்லாமல் இப்படி உரசிகிட்டு வர்ற?” அவன் கேட்டதற்கு, “இப்போ நீங்க பிரம்மா இல்லை, என் புருஷன்…, அவ்வளவுதான்…’ அவள் சொன்ன பதில் நினைவுக்கு வர சிரித்துக் கொண்டான்.

“காயு, ஏன் இப்படி அமைதியா வர்ற…?” அவன் அவளைக் கலைத்தான். அவனிடம் எப்பொழுது உண்மையைச் சொல்வது என யோசித்துக் கொண்டிருந்தவள் தடுமாறிப் போனாள்.

“ம்..., இல்ல..., அந்த டிஐஜி வைப் சொன்னது எவ்வளவு சரின்னு யோசிச்சுட்டு இருந்தேன்” சட்டென கலைந்தவள், உரைத்து முடித்த பிறகே, தான் என்ன சொன்னோம் என்பதை கவனித்தாள்.

“நீ எதைச் சொல்ற...?” தன் நடையை நிறுத்தியவன், அவளை தோள் தொட்டு நிறுத்தி கேட்டான்.

“எதுவும் இல்லை..., வாங்க..., குழந்தை தேடுவா...” அவன் கரத்தை விலக்கிவிட்டு முன்னால் நடக்கத் துவங்கினாள். கடந்த சில நாட்களாக அவள் இயல்பாக இல்லாதது போன்ற தோற்றம்..., அது உண்மை என்றே அவன் மனம் அடித்துச் சொன்னது.

அதற்கு முழுக் காரணமும் தானாக இருக்கையில், அவனுக்குத் தெரியாதா என்ன? முழுதாக இரண்டு வருடங்கள் அவளைத் தவிர்த்தால் அவளும் என்னதான் செய்வாள்?

‘இல்லையே..., இடையில் ஒரு நாள்...’ எண்ணியவன், அப்பொழுதுதான் மனைவியின் நடத்தையில் இருந்த வித்தியாசத்தைப் பற்றி சிந்தித்தான். ‘ஒரு வேளை...’ சட்டென அவன் மூளை பளிச்சிட, ‘அவ என்னை தேடுவதற்கும், தடுமாறுவதற்கும் காரணம் அதுவா...?’ யோசனை ஓடியது.

அவர்கள் குழந்தையின் அருகே வரவே, “அம்மா..., ஐஸ்..., ஐஸ்...” பிருந்தா கேட்கவே, குழந்தையை தூக்கிக் கொண்டு, நிவேதாவோடு ஐஸ்கிரீம் வாங்கச் சென்றாள்.

அவர்கள் செல்லவே, “தம்பி...” தாய் அழைக்கவே, அவர் அருகில் அமர்ந்தான்.

சில நொடி அமைதிக்குப் பிறகு “தம்பி, கேக்கறேன்னு கோபப்படாதே..., காயத்ரிகிட்டே உனக்கு ஏதாச்சும் கோபமா...? பிள்ளை முகமே கொஞ்ச நாளா சரியில்லை. இப்போ வெளியே வந்த பிறகும் தெளியக் காணோமே. வாழ வேண்டிய வயசில், இந்த பிடிவாதம் எல்லாம்

வேண்டாம்ப்பா..., உனக்கு நான் சொல்ல வேண்டியது இல்லை.

“ஆனாலும், என்னை சொல்ல வைக்கிற. அதுவும் அவ இப்போ வாயும் வயிறுமா இருக்கா, அவளை இப்படி தவிக்க விடலாமா? முதல் பிரசவமே அவ்வளவு பிரச்சனை ஆச்சு. அதை நினைத்து அவ மனசு இப்போ குழம்பிப் போய் இருக்கும். அதை நீ மேலேயும் தவிக்க வைக்கணுமா?” குறைபட்டார்.

‘அடிப்பாவி..., இந்த விஷயத்தை என்கிட்டே சொல்ல முடியாமல்தான் தவிக்கறியா? இன்னும் என்மேல் உள்ள பயம் போகலையா?’ இப்படி எண்ணிய உடனேயே அவன் மனதில் இருந்த பயம் விலகி ஓடியது.

‘எந்த நிலையிலும் அவளுக்குத் துணையாக மட்டுமே இருப்பேன்’ எண்ணியவன் தெளிந்தான்.

“நான் பாத்துக்கறேம்மா...” தாயிடம் உரைத்தவன், காயத்ரி வாங்கி வந்த ஐஸ்கிரீமை அவள் உண்ண, “காயு, எனக்கும் ஒண்ணு வாங்கிட்டு வா” அவன் கேட்கவே, அவனை வியப்பாய் ஏறிட்டாள்.

பிரம்மா பொதுவாக ஐஸ்கிரீம் சாப்பிட மாட்டான். எனவேதான் அந்த வியப்பு. அவனைப் பார்த்தால், வியாபாரம் செய்பவர்கள் ரூபாய் வாங்க மாட்டார்கள் என்பதால், அவன் எதுவும் வாங்கவும் செல்ல மாட்டான்.

அவள் தன் கையில் இருந்த ஐஸ்கிரீமோடு எழுந்து செல்ல முயல, “அதை கொடுத்துட்டு போ...” அவள் கையில் இருந்து வாங்கியவன், அவள் அந்தப் பக்கம் செல்லவே, அதை உண்ணத் துவங்கினான். அவனுக்கு ஐஸ்கிரீம் வாங்கி வந்தவள், அவன் தன் ஐஸ்கிரீமை உண்டு முடித்திருக்க, மற்றவர்கள் முன்னால் எதுவும் கேட்க முடியாமல் அமைதியானாள்.

‘என்ன இது...?’ அவள் பார்வையால் வினவ, நாவால் தன் இதழை வருடியவன், “டேஸ்ட் சூப்பர்...” என இதழசைவில் முனக, புருவம் உயர்த்தினாள்.

வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டாலே, முழு விறைப்போடு இருப்பவன், முதல் முறையாக சில்மிஷம் செய்கிறான். அவ்வளவு நேரமாக இறுக்கத்தில் இருந்த அவள் முகம், மெதுவாக இளக, அவன் மனதுக்குள் பெரும் நிம்மதி குடியேறியது.

‘என் பயத்துக்காக பார்த்து, அவளை ரொம்ப தவிக்க விட்டுவிட்டோமோ?’ மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

இரவு உணவை ஹோட்டலுக்குச் சென்று உண்ண, ஒவ்வொருவருக்கும் தேவையானதை பார்த்து, பார்த்து செய்தான். குழந்தைக்கு அவனே சாப்பாடு ஊட்டினான், மனைவியை தன் அருகிலேயே அமர்த்திக் கொண்டான்.

அவர்கள் இப்படி வெளியே வந்து கிட்டத்தட்ட வருடம் ஆகிவிட்டதால், அந்த தருணத்தை அனைவரும் ரசித்தனர். ஆனால் காயத்ரி, ஒரு படி மேலே, ஆனந்தத்தில் திளைத்தாள். சில நிமிடங்களுக்கு முன்னர், ஜீப்புக்குள் வைத்து அவன் கொடுத்த இதழ் முத்தம், அவள் மன சஞ்சலங்களை விரட்டி இருந்தது.

ஜீப்பை எடுத்துவர என காயத்ரியும் பிரம்மாவும் முன்னால் வந்திருக்கவே, ஜீப்புக்குள் ஏறியவன் குனிந்து எதையோ தேட, “என்ன தேடறீங்க?” அவள் கேட்கவே, “கீ கீழே விழுந்துடுச்சு” அவன் சொல்லவே, அவளும் குனிந்து தேடத் துவங்கினாள்.

அவள் குனிந்தது மட்டுமே அவளுக்குத் தெரியும், அவளை சட்டென தன் மடியில் போட்டவன், அவள் இதழ்களை நொடியில் சுவைத்து விடுவிக்க, பதறி எழுந்து அமர்ந்தாள்.

அவனோ, “எனக்கு சாக்லேட் ப்ளேவர் கொடுத்துட்டு, நீ மட்டும் ஸ்ட்ராபெரி ப்ளேவர் வாங்கி சாப்ட்டியா…?” அவள் இதழை சுவைத்தவன் கேட்க, அவளோ, பார்வையை ஜீப்புக்கு வெளியே பரபரப்பாக சுழற்றிக் கொண்டிருந்தாள்.

“திருடா…” யாரும் தங்களை கவனிக்கவில்லை என்ற பிறகே நிம்மதியாக மூச்சு விட்டவள் முனக, “நான்

போலீஸ்டி...” மீசையை முறுக்கியவனது பார்வையில் சிறு சுவாரசியம் ஏறி இருந்தது.

ஹோட்டலில் அவளுக்கு வேண்டியதை கேட்டு ஆர்டர் செய்தவன், அவள் உண்ணத் துவங்கவே, “காயு, இது பிடிக்கலன்னா, வேற ஏதாவது ஆர்டர் பண்ணிக்கலாம். அதாவது புளிப்பா...” இழுத்தவன், அவளை அசையாமல் பார்க்க, அவளுக்கு உணவு தொண்டைக்குழியில் சிக்கியது.

“பீமா...” தயக்கமாக அவள் அழைக்க, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை. அவள் தவிப்பு அதிகரித்தது. ஆனாலும், அவன் முகத்தில் கோபத்தின் சாயல் இல்லை என்பதை அறிந்து சற்று நிம்மதியானாள்.

‘யார் சொல்லியிருப்பாங்க? அத்தையா...? அவங்களாகத்தான் இருக்கும். வேற யாருக்கும் தெரியாதே...’ எண்ணம் சுழன்றாலும், உணவை உண்ண மறக்கவில்லை.

இரவு உணவை முடித்தவர்கள் வீட்டுக்குத் திரும்ப, குழந்தையும், நிவேதாவும் ஜீப்புக்குள்ளேயே உறங்கி விட்டிருந்தார்கள். குழந்தையை கலைவாணி தூக்கிக் கொள்ள, நிவேதா அரை உறக்கத்திலேயே தங்கள் அறைக்கு சென்று மறைந்தாள்.

“குழந்தை இன்னைக்கு என்னோட இருக்கட்டும்...” கலைவாணி குழந்தையோடு அறைக்குச் செல்லத் திரும்பவே, “அத்த..., நான் தனியா...” சொல்லிக் கொண்டிருந்தவளது வாயை மூடினான் பிரம்மா.

“ஹையோ அத்தை பாக்கப் போறாங்க...” சின்னக் குரலில் அலறியவள் அவனை விட்டு விலக முயல, “அவங்க போய் ஒரு மணி நேரம் ஆச்சு” உரைத்தவன், அவளை கைகளில் அள்ளிக் கொண்டான்.

அவன் படுக்கையை நெருங்கவே, “பீமா, உடம்பெல்லாம் பீச் மணல், குளிக்கணும்...” அவன் கைகளில் திமிர, “இப்போ

குளிக்கணும், அவ்வளவு தானே” கேட்டவன், அவள் கேட்டதை செய்ய, அவன் அடாவடியில் சிவந்து போனாள்.

ஷவருக்கு அடியில் அவனோடு நனைந்தவள், “கோபம் இல்லையா...?” அவன் நீர் வடியும் வெற்று தோளில் முகம் பதித்து, சின்னக் குரலில் கேட்க, “இதுக்கு கோபப்படுவாங்களா? சந்தோஷப்படுவாங்க...” அவள் அடிவயிற்றில் கை வைத்தவன், அவள் காதுக்குள் உரைத்தான்.

“பீமா..., சாரி...” அவனிடம் இத்தனை நாள் சொல்லாதது வருத்தத்தை அளிக்க, அவன் காதில் முனகினாள்.

அவள் முகத்தை நிமிர்த்தியவன், “தேங்க்ஸ்...” அவன் உரைக்க, புரியாமல் ஏறிட்டாள்.

“என்மேல் இவ்வளவு லவ்வாடி...? உனக்கு அப்படி நான் என்ன செய்தேன்? உன்னை அடிக்கடி வெளியே கூட்டி போவதில்லை, ஆசையா எதுவும் வாங்கிக் கொடுத்ததில்லை, உன் பிறந்தநாள் கூட ஞாபகம் இருக்காது. இதில்...” அவன் சொல்லிக்கொண்டே போக, அவன் வாயை தன் கையால் மூடினாள்.

“எல்லாத்தையும் இங்கே வைத்தே சொல்லணுமா...? முதல்ல குளிச்சுட்டு வெளியே போகலாம்...” குளிர் நடுங்கவே, நாடி கிடுகிடுவென ஆட, நடுங்கியவாறு உரைத்தாள்.

“ரொம்ப குளிருதா...? நான் எதுக்கு இருக்கேன்...?” கேட்டவன், அவள் குளிர் போக்க முயன்று, அவளிடம் குளிர் காய்ந்தான் என்பது மட்டும் உண்மை.

இரவை ஆளும் அவளது காதல் பிரம்மா..., அவன் முரட்டுத்தனம், இதழ் தீண்டல் என உருகிக் கொண்டிருந்தாள். அவளொரு கலந்து விலகியவன், அவள் உறங்கிய பிறகும் உறக்கம் வராமல் விழித்துக் கிடந்தான்.

தொடர்ந்த நாட்களில், அவளோடு இருக்கும் நேரத்தை அதிகரித்துக் கொண்டான். அவன் மனதின் பயம் புரிய,

அவனோடு ஒட்டிக்கொண்டே அலைந்தாள். அவளது ஒவ்வொரு செக்கப்புக்கும் உடன் செல்பவன், மருத்துவரிடம் அவள் உடல்நலம் துவங்கி, குழந்தையின் பொசிஷன் சரியாக இருக்கிறதா என கேட்டு அறிந்து கொண்டான்.

நாட்கள் ஓடி மறைய, அவளது பிரசவ நாள் அன்று, ஒரு முக்கியமான கேஸ் விஷயமாக வெளியே சென்றிருந்தவன், கலைவாணி அழைக்கவே அடுத்த நிமிடம் மருத்துவமனையில் இருந்தான்.

பிரசவ அறையில் காயத்ரியின் மெல்லிய கதறல் கேட்க, வெளியே தவித்துப் போனான். அவன் உள்ளே செல்ல முயல, “சார், நீங்க வந்தா உள்ளே விட வேண்டாம்னு சொல்லிட்டுதான் போனாங்க. இதை சொன்னா நீங்க கேட்டுப்பீங்கன்னு வேற சொன்னாங்க…” அவள் சொல்ல, அதற்குமேல் உள்ளே செல்ல முயலவில்லை.

அவனை நெருங்கி வந்த கலைவாணி, “பிரம்மா…, சீக்கிரமே குழந்தை பிறந்துடும்” அவன் தோளை அழுத்த, மௌனமாக அங்கிருந்து விலகினான்.

அவனுடனே வந்திருந்த கந்தன் அவனது நிழல்போல் தொடர்ந்து கொண்டிருந்ததை அவன் கவனித்தாலும், கண்டுகொள்ளும் நிலையில் இல்லை. அவன் மனமோ, அந்த நொடி, அறைக்குள் தன் உயிரை வெளிக்கொண்டுவர துடித்துக் கொண்டிருக்கும் தன் மனைவியை சுற்றி வந்தது.

ஏற்கனவே ஒரு முறை அவள் பட்ட துன்பங்கள் அனைத்தும் கண்முன் விரிய, தன் அருகே இருந்த படியின் கைப்பிடி கம்பியை அவன் கரம் அழுந்த பற்றிக் கொண்டது. அவன் கை நரம்புகள் தெறிக்க, அவன் அழுத்திய வேகத்தில் கம்பிகள் நெளிந்தே போனது.

அவனது வேகத்தைக் கண்டு கந்தன் நிஜமாகவே பயந்து போனார் என்றுதான் சொல்ல வேண்டும். காயத்ரியின் குரல் சட்டென ஒரு கட்டத்தில் அதிகரிக்க, பிரம்மாவின்

கண்கள் கலங்கி, அவன் கட்டுப்பாட்டையும் மீறி ஒரு துளி நீர் அவன் கன்னத்தில் வழிந்தது.

அதைப் பார்த்த கந்தன் திகைத்துப் போனார். ‘பிரம்மா கண்ணில் கண்ணீரா?’ அவர் அதிர்ந்து உறைந்து நிற்கையிலேயே, “சார்..., உங்க மிஸ்ஸஸ் கூப்பிடுறாங்க. உங்களுக்கு பையன் பிறந்திருக்கான்” அவள் சொன்ன மறு நிமிடம் பிரசவ அறைக்குள் பாய்ந்திருந்தான்.

குழந்தை பிறந்த களைப்பை முகத்தில் தாங்கி, சோர்வாக படுத்திருந்த மனைவியின் அருகே அவன் பாய்ந்து சென்று, அவள் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

“ஏண்டி இப்படி பண்ண...?” கோபமாக கேட்க முயன்றாலும் அவன் குரல் கலங்கி வெளிவர, அவன் கண்களில் வழிந்த கண்ணீர் அவள் கன்னத்தில் விழுந்தது.

அவ்வளவுதான், அதைப் பார்த்த காயத்ரி துடித்துப் போனாள்..., “என்னங்க, அழறீங்களா...?” தன் களைப்பு, சோர்வு, வலி அனைத்தையும் மீறி, எழுந்து அமர முயன்றவள், அவன் சட்டையை பிடித்து அருகே இழுத்து அவன் கன்னத்தை அழுத்தமாக துடைத்தாள்.

அவளை அழுத்தி படுக்கையில் கிடத்தியவன், “ம்ச்..., அதை விடு..., ரொம்ப கஷ்டப்பட்டியா?” அவள் வலியை தாங்கிகொள்ளும் வேகம் அவனிடம்.

“நீங்க அழாதீங்க...” அவனுக்காக அவள் துடித்தாள். சென்னை சிட்டியை விரல் நுனியில் ஆட்டி வைக்கும் வல்லமை படைத்தவன். எந்த கேஸ் என்றாலும், துளி கூட தடுமாறாமல் இரும்பின் இதயம் கொண்டு நிமிர்ந்து நிற்பவன், தனக்காக அழுவதா? அவன் காதலில் கரைந்து போனாள்.

அவனை இன்னும் அருகே இழுத்தவள் அவன் ஈரம் தோய்ந்த கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதிக்க, “முட்டக்கண்ணி..., இது லேபர் ரூம், வெளியே வா..., உன்னை கவனிக்கறேன்...” தன் மனம் லேசாக, அவளை மெல்லியதாக கண்டித்தான்.

“சார்..., நீங்க கொஞ்சம் வெளியே இருந்தால், நாங்க அவங்களை ரூமுக்கு மாத்திடுவோம்” உரைக்கவே, அவள் நெற்றியில் அழுத்தமாக இதழ் பதித்துவிட்டே விலகிச் சென்றான்.

***

“பிருந்தா..., தம்பிக்கு ஈவினிங் தான் கேக் கட் பண்றோம். நீ எதுக்கு இப்போவே ட்ரெஸ் போட்டுட்டு நிக்கற...?” நிவேதாவோடு சேர்ந்து கொண்டு, முழு அலங்காரத்தில், புத்தம் புது உடையில் தங்கள் வீட்டை சுற்றி வந்த மகளை கைகளில் அள்ளினாள் காயத்ரி.

“அண்ணி..., நாங்க ரெண்டு பேரும் எப்படி இருக்கோம்...?” நிவேதா அவளே வடிவமைத்த உடையை அணிந்து, பேஷன் மாடலைபோல் வந்து நிற்க, தங்கள் பொறுப்பு கூடியதை உணர்ந்தாள் காயத்ரி.

நிவேதா, பேஷன் டிசைனிங் இரண்டாம் வருட மாணவி. வீட்டில் உள்ளவர்களின் ஆடை வடிவமைப்பாளர் அவள்தான்.

இருவரையும் பார்த்த காயத்ரி, “இப்போவே இப்படி அசத்தினால், ஈவினிங் என்ன பண்ணுவீங்க? அப்படியே என் கண்ணே பட்டுடும் போல” இருவருக்கும் நெட்டி முறித்தவள், அவர்களிடம் கேட்க, “அதுக்கு வேற...” பதில் கொடுத்தவள் பிருந்தா.

“அம்மா...” தூக்கத்துக்கு கண்ணைக் கசக்கியவாறு வந்தான் அவளது செல்வ மகன், ப்ரணவ்.

“ப்ரணவ், பாட்டி கிட்டே தூங்கிக்கறியா...? அம்மாவுக்கு கொஞ்சம் வேலை இருக்குடா செல்லம்...” அவனிடம் கேட்க, சம்மதமாக தலை அசைத்தான்.

அவனை தூக்கிக் கொண்டு கிச்சனுக்கு வந்தவள், “அத்தை, இவனை கொஞ்சம் தூங்க வைங்க. இந்த வேலையை எல்லாம் நான் பாத்துக்கறேன். நீங்க போங்க...” அவரை பிடிவாதமாக அங்கே இருந்து அனுப்பினாள்.

இப்பொழுது வேலைக்கென இரண்டு மூன்றுபேர் இருந்தாலும், அனைத்தையும் அவளே மேற்ப்பார்வை இட்டால்தான் அவளுக்கு திருப்தி. அன்றும் வேலைக்குச் சென்றுவிட்ட கணவனை எண்ணி அவள் கொஞ்சம் கூட வருத்தப்படவே இல்லை.

அவளைப் பொறுத்த வரைக்கும், அவனுக்கு அவன் வேலை எவ்வளவு பிடிக்கும் என்பது அவளுக்குத் தெரியுமே. மாலையில் நிச்சயம் வீட்டுக்கு வந்துவிடுவான் என்பது அவளுக்குத் தெரியும்.

மாலை மூன்று மணிக்கெல்லாம் முதல் ஆளாக அவள் வீட்டுக்கு வந்துவிட்டாள் இந்திரா. இந்திரா அவள்மேல் கோபமாக இருந்தாலும், அவளது கணவன் வெளிநாட்டில் இருந்து வந்தவுடன், மறு நாளே, அவளது வீட்டுக்குச் சென்று, அவர்களை முறைப்படி விருந்துக்கு அழைத்து, அவளது கோபத்தை போக வைத்து விட்டாள் காயத்ரி.

அவள் கையில் இருந்த அவளது நான்கு மாத மகனை தன் கையில் வாங்கியவள், “வாடி..., கொஞ்சமா சாப்பிடுறியா? உனக்கு பிடிச்ச, இடியாப்பம் இருக்கு. குழந்தைக்கு பால் கொடுக்கறியா...?” அவள் கேட்க,

“எதுவா இருந்தாலும் கொடு. இங்கே வர்ற சந்தோஷத்தில் சாப்பிடவே இல்லை. குழந்தை அரை தூக்கத்தில் இருக்கான் தூங்கிடுவான்” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, காயத்ரியின் கரத்தில் தூங்கி வழிந்தான்.

அவனை தன் மகனுக்கு அருகில் உறங்க வைத்தவள், தோழிக்கு உணவு கொடுத்தாள்.

அரை சாப்பாட்டில், “அடியேய்..., என்னை பொறாமைப்பட வைக்கணும்னே புருஷனும் பொண்டாட்டியும் ஏதாச்சும் செய்வீங்களே..., இப்போ என்ன செஞ்சார் அண்ணா...?” அவளிடம் கேட்க, தோழியின் இடுப்பில் நறுக்கென கிள்ளி வைத்தாள் காயத்ரி.

“எரும, பிள்ளைங்க முன்னாடி மானத்தை வாங்காதே…” அடிக்குரலில் அவளை அடக்கினாள்.

“அன்னைக்கு நீங்க பாத்தீங்களா…? நான் ஒரு சின்ன பிள்ளைன்னு கூட பார்க்காமல் சீன் போட்டீங்கல்ல?” அவள் விடுவதாக இல்லை.

“ஹையோ…, அஞ்சு வருஷமா உன்கிட்டே இந்த பாட்டை கேக்கறேண்டி, முடியலை” புலம்பினாலும், முகத்தில் ஒரு அதீத வெட்கம் வந்து கவிழ்ந்தது.

நடந்தது இதுதான், அவர்கள் விருந்துக்கு வந்த அன்று, அவர்கள் கொஞ்சம் ரெப்ரெஸ் ஆக, விருந்தினர் அறையை காட்ட, அவர்கள் உள்ளே சென்றவுடன், காயத்ரியை சட்டென இறுக அணைத்த பிரம்மா, அவள் கன்னத்தில் இதழ் பதிக்க, அப்பொழுது எதையோ கேட்க வெளியே வந்த இந்திரா அதை பார்த்துவிட்டு, தான் கேட்க வந்ததை மறந்து உள்ளே சென்றுவிட்டாள்.

அது மட்டும் இல்லை, மதியை அவர்களுக்கு உணவு பரிமாறியவர்கள், இறுதியாக அப்பளம் மட்டும் பொரிக்க வேண்டி காயத்ரி உள்ளே செல்ல, தானும் தண்ணீர் எடுத்து வருவதாக உள்ளே சென்ற பிரம்மா, அவளை பின்னால் இருந்து அணைத்து, அவள் பின் கழுத்தில் முத்தம் பதிக்க, ஊறுகாய் எடுக்க, ஸ்பூன் கேட்டு உள்ளே வந்த இந்திரா அதைப் பார்த்துவிட்டாள்.

மதிய விருந்து முடிந்து, இரு ஆண்களும் சற்று நேரம் உரையாட, தன் தோழியை பிடித்துக் கொண்ட இந்திரா, தான் பார்த்ததைச் சொல்லி அவளை ஓட்டித் தள்ளிவிட்டாள். கூடவே, “போலீஸ் காரங்க எல்லாம் முரட்டு ஆசாமிங்கன்னு நினைத்தேன். அப்படி இல்லைன்னு தெரிஞ்சுடுச்சு” கண்ணடித்து உரைக்க, தன் கணவனை எண்ணி உருகிப் போனாள்.

இந்திராவின் கணவன், சட்டென அவளை விட்டுக் கொடுத்து விடுவான். ஆனால், பிரம்மா, ஒரு பேச்சுக்காக கூட காயத்ரியை விட்டுக் கொடுக்க மாட்டான்.

அதையெல்லாம் வைத்துதான் காயத்ரியை அவள் கேலி பேசிக் கொண்டிருந்தாள்.

“சரி..., அண்ணா எப்போ வர்றாங்க?” காயத்ரி கேட்க, “உங்க அண்ணாவுக்கு ஆபீஸ்ல தலை போற வேலையாம், வர முடியாது, நீ போயிட்டு வான்னு சொன்னார், அதான்..., எப்படியும் அவர் வரப்போவதில்லை, இங்கே வந்தால் உன்னையாவது ஓட்டலாமேன்னு வந்தேன்...” உணவை உண்டு முடித்தவள், கை கழுவ சென்றாள்.

“அப்போ நீ எனக்கு ஹெல்ப் பண்ண வரலை. என்னை கேலி பண்ணி சிரிக்க அவ்வளவு ஆசை. நல்லா வருவடி...” அவள் முதுகில் ரெண்டு போட்டாள்.

தோழிகளின் கேலி, பேச்சில் நேரம் போனதே தெரியவில்லை. மாலை நெருங்கவே, அழைத்திருந்த விருந்தினர் ஒருவர் ஒருவராக வரத் துவங்கினர். பிரம்மாவின் அலுவலகத்தில் அவனுக்கு கீழே வேலை செய்பவர்கள் அனைவருக்கும் அழைப்பு இருக்க, அனைவரும் வந்தார்கள்.

இறுதியாக வந்தவன் பிரம்மாதான், பத்தே நிமிடங்களில், குளித்து கிளம்பி வந்தவன், ப்ரணவை கைகளில் ஏந்திக் கொண்டான். காயத்ரி, பிருந்தா, நிவேதா மூவரும் ஒரு மெட்டீரியல் கிளாத்தில், வேறு வேறு வகையான உடைகள் அணிந்து அசத்தினார்கள்.

போலீஸ் அனைவரும் கேக் கட் செய்தவுடன், முதலிலேயே உணவை உண்டுவிட்டு கிளம்பிவிட, அங்கே சற்று தேங்கினாள் யாழினி. அதே நேரம் அங்கே வந்து சேர்ந்தாள் நிஷா.

மேடை ஏறிய நிஷா, “பிறந்தநாள் வாழ்த்துக்கள் ப்ரணவ்...” உரைத்தவள், அவன் கரத்தில் தங்கச் செயின் அணிவிக்க, சற்று பதைத்து போனாள். அங்கே அழைத்திருந்த யாரும் பரிசுப்பொருள் கொண்டு வரக் கூடாது என பிரம்மா பிடிவாதமாக சொல்லியிருந்தான், எனவேதான் தடுமாறினாள்.

அதைப் பார்த்த நிஷா, “மேம்..., நீங்க டென்ஷன் ஆகாதீங்க. பிரம்மா சார் என்னை எதுவும் சொல்ல மாட்டார். என்ன சார்...” அவள் கண்ணை சிமிட்ட, டென்ஷன் ஆனாள் காயத்ரி.

அதைப் பார்த்த நிஷா, “முன்ன எல்லாம் சாரை பாத்த உடனே ஓடி வந்து கட்டி புடிச்சுபேன். இப்போ..., நீங்க கோவிச்சுப்பீங்களாமே, நீங்க கிட்டே இல்லன்னா கூட, அண்ட விட மாட்டேங்கறார். பொண்டாட்டி மேலே அவ்வளவு லவ்..., கண் மறைவா கூட உங்களுக்கு பிடிக்காததை செய்ய மாட்டேங்கறார்” அவள் சொல்ல, தன் கணவனை வியப்பாய் பார்த்தாள்.

“இருந்து சாப்ட்டுட்டுதான் போகணும்...” காயத்ரி சொல்ல, மறுக்காமல் கேட்டுக் கொண்டாள்.

வந்திருந்தவர்கள் அனைவரும் வாழ்த்து சொல்லிவிட்டு இறங்கிய பிறகே, காயத்ரி தன் மகனோடு இறங்கி வந்தாள். நிஷா, யாழினி, இந்திரா, காயத்ரி என அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசவே, குழந்தை சிணுங்கத் துவங்கினான்.

அதைப் பார்த்த பிரம்மா, நிவேதாவை அழைத்தவன், “அண்ணிகிட்டே இருந்து ப்ரணவை தூக்கிட்டு வா. அவன் அழறான் பார்...” அவன் சொன்னதைச் செய்யவே, அவள் குழந்தையை வாங்கிச் சென்றவுடன், ஒரு பெருமூச்சை வெளியிட்ட இந்திரா,

“பொண்டாட்டி கஷ்டப்படக் கூடாதாமாம்..., உடனே பையனை வாங்கிட்டார் பாத்தீங்களா? என் வீட்டுக்காரரும் இருக்காரே, அவன் அழாமல் இருந்தா கையில் தா..., இல்லையா தராதேன்னு குதிப்பார்...” பொறாமையாக சொல்வதுபோல் இருந்தாலும், அவள் குரலில் ஒரு நிறைவு இருக்கவே செய்தது.

தன் கணவனை ஓரவிழிப் பார்வையாக காயத்ரி பார்க்க, அவள் பார்ப்பதை உணர்ந்தவன், அங்கே இருந்தே, ‘என்ன...?’ என்பதுபோல் புருவத்தை ஏற்றி இறக்க, அவள்

‘ஒன்றும் இல்லை...’ என தலை அசைத்தவள், அப்பொழுதுதான் தன்னைச் சுற்றி இருப்பவர்களின் நினைவே வர, அவர்களைப் பார்த்தாள்.

சுற்றி இருந்த மூவரும் சிரிக்க, கீழ் உதட்டை கடித்தவள், தன் முகத்தை கையால் மூடிக் கொண்டாள். யாழினியோ, “மேம்..., எங்க சார் இப்படி மாறுவார்ன்னு நான் எதிர்பாக்கவே இல்லை. சிரிப்புன்னா கிலோ என்ன விலைன்னு கேக்கறவர், வாய் விட்டே சிரிக்கறார்.

“இதில் கேலி வேற..., அங்கே இருக்குறவங்க மயக்கம் போடாத குறைதான். அதைவிட, அந்த சுவிங்க டப்பாவில் அப்படி என்னதான் இருக்கோ? ரொம்ப படபடப்பா இருக்கு, ஒரு சுவிங்கம் கேட்டா, மனுஷன் நூறுரூபா நோட்டை கொடுத்தாலும் கொடுப்பாரே தவிர, அதை கொடுக்க மாட்டேங்கறார்...” அவள் சொல்ல, கேட்டுக் கொண்டிருக்கும் அவளுக்கு எப்படி இருக்கிறதாம்?

ஜிவ்வென எதுவோ கிளர்ந்து, மனம் முழுக்க பரவ, அப்படியே அவனை இழுத்து கட்டிக்கொள்ள மனம் பரபரத்தது.

“மேம்..., இதெல்லாம், இந்த மாற்றம் எல்லாம், நீங்க அவர் வாழ்க்கையில் வந்த பிறகுதான் நடந்திருக்கு. அப்படி என்ன சொக்குப்பொடி போட்டீங்க? எங்க சார் இப்படி மாறிட்டார்...?” அவள் கேட்க, காயத்ரியால் பதில் சொல்ல முடியவில்லை.

அவர்கள் கேலியில் திணறி, சிவந்து, பெருமிதம் அடைந்து என உற்சாக பந்தாகவே மாறிப் போனாள். அனைவரும் ஒன்றாக உண்டு, இந்துவை பத்திரமாக அனுப்பி விட்டு, இறுதியாக அங்கே யாரும் இல்லை என்பதை தெளிவுபடுத்தியவள் வீட்டுக்குச் செல்லத் திரும்பினாள்.

அந்த நேரம் கந்தன் அங்கே வர, “அண்ணே..., சாப்ட்டீங்களா? என்ன உங்க சார் லீவ் கொடுத்துட்டார் போல...” அவரை கேலி செய்தாள். கந்தன் இல்லையென்றால், ஜீப்பை, அதுவும் பிரம்மாவின் மனம்

அறிந்து ஓட்ட யாரும் இல்லை என்பதால், அவ்வளவு சீக்கிரம் அவருக்கு விடுப்பு கொடுக்கவே மாட்டான்.

அதுவும் ஏதாவது முக்கியமான கேஸ் என்றால் கேட்கவே வேண்டாம்..., எனவேதான் அவ்வாறு கேட்டாள். “சாரை எதுவும் சொல்லாதீங்கம்மா..., அவர் உங்கமேலே வச்சிருக்கும் பாசத்தை கூடவே இருந்து பாத்தவன் நான். அவருக்கு நினைவு எல்லாம் மறந்து இருந்தப்போவும் சரி, இப்பொழுதும் சரி, அவர் உங்க மேலே எவ்வளவு பாசம் வச்சிருக்கார்ன்னு எனக்குத் தெரியும்.

“நீங்க ரெண்டாவது பிள்ளை உண்டாகி இருந்த காலத்தில், அவரால் ஒரு நாள் கூட நிம்மதியா ஆபீஸ்ல இருக்க முடிந்ததே கிடையாது. அதுவும் நைட் டியூட்டி வந்தால், அவர் உடம்புதான் அங்கே இருக்கும். மனசெல்லாம் இங்கேதான் இருக்கும்.

“அவரோட டென்ஷன் பாத்துட்டு, போன் வேண்ணா பண்ணி பேசுங்கன்னு சொன்னா, ‘அவ நல்லா தூங்கிட்டு இருப்பா, அவளை டிஸ்டப் பண்ண வேண்டாம்னு’ சொல்வார்..., உங்க மேலே அவ்வளவு அக்கறை.

“ஒரு காலத்தில், அவரோட வாழ்க்கையில் ஒரு பொண்ணு வருவாளா? அப்படி வந்தால் அவளை எப்படி பாத்துப்பார்ன்னு ரொம்ப யோசிச்சிருக்கேன். ஆனா இப்போ..., மனைவியை எப்படி பாத்துக்கணும்னு அவரைப் பாத்து கத்துக்கணும்...” அவர் சொல்லச் சொல்ல, கணவனை உடனே காண அவள் கண்கள் ஏங்கியது.

“நீங்க மட்டும் என்ன..., ஒரு சாதாரண மனைவி மாதிரி இல்லாமல், அவரோட வேலையைப் புரிந்து, அவருக்கு எவ்வளவு அனுசரணையா இருக்கீங்க. நீங்க மேட் பார் ஈச் அதர்ன்னுதான் சொல்லணும். நீங்க ரெண்டுபேரும் நூறாயிசு இதே மாதிரி ஒத்துமையா இருக்கணும்” வாழ்த்தியவர் விடைபெற்றுச் செல்ல முயன்றார்.

அவரைத் தடுத்தவள், “அம்மாவுக்கு இதைக் கொடுங்க. கொஞ்சம் சாப்பாடும், கேக்கும் இருக்கு. அவங்க உடம்பை

பாத்துக்க சொல்லுங்க. அவங்களுக்கு பீவர் சரி ஆகலன்னா மறுபடியும் ஹாஸ்பிடல் கூட்டு போங்க.

“உங்க சார் லீவ் தரலைன்னு அவங்களை தனியா அனுப்பாதீங்க” செல்ல கண்டிப்பில் உரைத்தவள், வீட்டுக்குச் சென்றாள். குழந்தைகள் இருவரையும் வெந்நீரில் உடல் கழுவி, கலைவாணியிடம் உறங்க வைத்துவிட்டு அறைக்கு வந்தாள்.

பார்ட்டிக்கு வாங்கியிருந்த பொருட்களை எல்லாம் சரி பார்த்து ரிட்டர்ன் செய்துவிட்டு பிரம்மா அறைக்கு வர, அவனை தாவி அணைத்தவள், முகம் முழுக்க முத்தமிட, “ஏய்..., முட்டக்கண்ணி..., ஒரே கசகசன்னு இருக்கு, குளிச்சுட்டு வர்றேன்...” அவளை விலக்க, அவள் விலகவே இல்லை.

“இந்த முரட்டு ஆசாமியை நாங்க மாத்திட்டோமாம்..., எல்லாரும் சொல்றாங்க. இந்த முரட்டு ஆசாமி எவ்வளவு பெரிய ரோமியோன்னு எனக்கு மட்டும்தானே தெரியும்...” அவள் கண்ணடிக்க, ஒரு அதிர்வெடி சிரிப்போடு அவளை அணைத்துக் கொண்டான்.

“நான் ரோமியோவா...?” அவன் போலியாக அவளை மிரட்ட, “இல்ல, பிரம்மா..., அதுவும் செம காதலன் பிரம்மா..., என் பீமா...” அவன் கழுத்தை கட்டிக் கொள்ள, காதலாய் அவளை கட்டிக் கொண்டான் அந்த காதல் பிரம்மா.

“நான் காதல் பிரம்மாவா...? வெளியே யார்கிட்டேயும் சொல்லிடாதே” அவளை கைகளில் அள்ளிகொண்டான்.

“ஆமா..., நான் சொல்லலன்னா யாருக்குமே தெரியாது பாருங்க” அவன் கழுத்தில் கரத்தை மாலையாகக் கோர்த்தவள், அவன் காதுக்குள் முனகினாள்.

“நான் பிரம்மாடி...” படுக்கையில் அவளைக் கிடத்தியவன், அவள் அருகில் தானும் ஒட்டிக்கொண்டு படுக்க, கண்களில் சிரிப்போடு அவனை ஏறிட்டாள்.

“யாரோ நைட் ஆபீஸ்ல நிறைய வேலை இருக்கு, அக்கியூஸ்டை விசாரிக்கணும்னு சொன்னாங்க...?” இரு புருவத்தையும் மேலே ஏற்றியவள், தன் முட்டைக் கண்ணை உருட்ட, அவள் பார்வையில் வீழ்ந்து போனான்.

“இன்னைக்கு நைட் ஆபீஸ்க்கு லீவ்..., வீட்ல நைட் டியூட்டி இருக்கு...” காதுக்குள் உரைத்தவன், அது என்னவென்று செயலில் காட்ட, அவன் தீண்டலில் தொலையத் துவங்கினாள் காயத்ரி.

**நன்றி.**